
தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.



தொண்டரடிப் பொடியாழ்வார் பாடியது

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே !
ஆயர்தங் கோழுந்தே! யென்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை தரினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே !



ஸ்ரீரங்கநாதர்.




ஸ்ரீரங்கத்தில் சித்திரைமாதத்தில் நடக்கும் தேர் உத்ஸவம். இதற்கு பக்கத்திய கிராமங்களிலிருந்து நாலாஜாதிகளான ஜனங்கள் ஏராளமாய் வந்து கூடும். அந்த ஜனங்களின் பக்திக்கு எல்லையில்லை. 'கோவிந்தா, கோவிந்தா' என்று கத்திக் கொண்டு ஆவேசத்துடன் கூத்தாடுவார்கள். சுமார் 25,000 ஜனங்கள் கூடும்.

ஸ்ரீரங்கம்.

இப்புண்ணிய க்ஷேத்திரம் திருச்சினாப்பள்ளி கோட்டை ரயில் ஸ்டேஷனுக்கு வடக்கே மூன்றுமைல் தூரத்தில் இருக்கிறது. இது பிரதி பக்ஷமும் ஏகாதசியைக் கொண்டாடச் சிறந்த ஸ்தலமாகக் கருதப்படுவதும் "திருவரங்க" மென்றும் வைஷ்ணவர்களால் "கோயில்" என்றும் கொண்டாடப்படுவதுமானது. இது காவேரி நதியின் இருபிரிவுகளுக் கிடையில் உள்ள ஓர் தீவாகும். காவேரி நதியின் இரு கிளைகள் ஒன்று வடக்கிலும் மற்றொன்று தெற்கிலுமாக இத்தீவைச் சூழ்ந்து ஓடுகின்றன.

வைகுண்ட ஏகாதசி விசேஷம்.


வைகுண்ட ஏகாதசி மிகவும் பிரஸித்தமாகக் கொண்டாடப்படும் பெரியகோவில் இத்தீவின் மத்தியிலேயே அழகாக அமைந்திருக்கிறது.



தெற்கு அடையவளஞ்சான் தெருவுக்கும் சித்திரவீதிக்கும் மத்தியிலுள்ள கோபுரவாசல். இதற்கு இரண்டுபக்கத்திலும் கடைகள் இருக்கின்றன. வெளியிலிருந்து வரும்பொழுது இது இரண்டாவது கோபுரம்.

வைகுண்ட ஏகாதசி உத்ஸவம் மேற்படி கோவிலில் பிரதி வருஷமும் நடந்து வருவதுடன் பிரதி கிருஷ்ணபக்ஷ சுக்கிலபக்ஷ ஏகாதசி திதிகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஏகாதசி தேவதை சில அசுரர்களின் மீது பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதற்கே இவ்வாறு செய்வதாகக் கூறுகிறார்கள். மஹா விஷ்ணுவின் அனந்தசயனி, பத்மநாபன், ஸபாநாதனாகிய ரங்கநாதன் முதலிய ஆவிர்ப்பவங்களுள் கடைசியிற் கூறியுள்ள ரங்கநாத மூர்த்தி ஸ்வரூபமே இங்கு கொண்டாடப்பட்டு வருகிறது.

எல்லாக் கோவில்களிலும் இருப்பது போலவே இக்கோவிலிலும் ஸபா மண்டபத்




ஆயிரக்கால் மண்டபத்தின் மீதிருந்து ஸ்ரீரங்கம் விமானக்காட்சி. விமானத்திற்கு பின்புறத்தில் வலதுகையோரத்தில் தெரியும்கோபுரம்தான் ஸ்வர்க்கவாசல் என்று சொல்லப்படும். இதை பிரதி வருஷமும் மார்கழிமாதம் வைகுண்ட ஏகாதசியன்றையதினம்தான் திறப்பார்கள். அன்றுமுதல் பத்து நாளைக்கு ஸ்ரீரங்கநாதர் இதன் வழியாய் எழுந்தருளுவார்.

தில் மஹா விஷ்ணு தமது அனந்தன், சங்கு, சக்கரங்களுடன் இருக்கக் காணலாம்.


ரங்கநாதர் ஆவிர்பவித்தது.

மஹாப் பிரளயத்தில் ஜலத்தில் பள்ளிகொண்டிருந்த மஹாவிஷ்ணு திரும்பவும் ஜகத்தை சிருஷ்டிப்பதற்காகத் தமது நாபிகமலத்தில் பிரம்மாவை சிருஷ்டித்து அவருக்கு ஏகாக்ஷர மந்திரத்தையும் பிரணவத்தையும் உபதேசித்தனராம். இந்த மந்திரங்களின் ஸித்தியாலும் சக்தியாலும் ஜகத்சிருஷ்டியைச் செய்து முடித்த பிரம்மாவுக்கு உபதேசிக்கப்பட்ட ஜோதிஷ சாஸ்திரம் விளங்காததை விளங்கச் செய்யும் பொருட்டு விமானாருடராய் சேஷசாயி ரங்கநாதர் ஆவிர்ப்பவித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த விமானமும் பிரணவ ஸ்வரூபமெனக் கருதப்படுவதுடன் ஸ்வர்க்க லோகத்திலிருந்து பூலோகத்திற்குக் கொண்டு வரப்பட்டதிலிருந்து பவித்திரமானதெனக் கருதப்பட்டு இக்ஷ்வாகு வம்சத்தாசர்களிடம் அயோத்தியில் நெடுங்காலம் இருந்து பிறகு ஸ்ரீராமரால் விபீஷணருக்கு லங்கைக்குக் கொண்டுபோகும்படி கொடுக்கப்பட்டதாம். வீபீஷண



உத்திரவீதியிலிருந்து கோவிலுக்குள் போகும் கோபுரம். இதற்கு நான்முகவாசல் என்று பெயர். இதற்குள் தெரியும் நாலுகால் மண்டபத்தில்தான் உத்ஸவகாலங்களில் பெருமாள் வெளியிலிருந்து வந்ததும் நின்றுகொண்டு தீபாராதனை நடத்தப்படும். இதை சிலர் கம்பன்மண்டபம் என்றும் இதன் ஒருதூணில் தெரியும் விக்கிரஹமானது கம்பன் என்றும் சொல்வார்கள். இதற்குள்ளாக குடியிருப்பு வீடுகள் கிடையாது.




ஸ்ரீரங்கவிமானம். இது பிரணவாகாரமாயிருப்பதாக புராணப்பிரஸித்தி. இதன் சிகரத்திலிருக்கும் நான்கு கலசங்களும் நான்குவேதங்களைக் குறிக்கின்றனவாம். இதன் முன்பக்கத்திலிருக்கும் விக்ரஹம் பரவாஸுதேவரின் மூர்த்தி. அது கால் பக்கத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டு வருவதாகவும் கலியுகமுடிவில் முழுவதும் மறைந்து ஸ்ரீரங்கநாதனையும் கூட்டிக்கொண்டு வைகுண்டத்திற்கு போய்விடுவெரொன்றும் சொல்லுவார்கள். இந்த விமானத்தின்மேல் தங்கத்தகடு ஸமீபத்தில் மதுரகவியென்று ஒருபக்தர் செய்துவைத்த கைங்கர்யம்.

ரும் அதைக் கீழே வைக்காமல் தனது ராஜ்யத்திற்குக் கொண்டுபோக வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தபோதிலும், வேண்டுமென்றே ஒரு வாலிப வடிவத்துடன் அங்கு தோன்றிய விநாயகரிடம் அதைச் சற்று நேரம் கையில் தாங்கியிருக்கும்படி கொடுக்க நேர்ந்ததாம்.

அப்பிள்ளையாரும் குறித்த நேரத்திற்குள் திரும்பிவந்து விமானத்தை வாங்கிக் கொள்ள விபீஷணர் தவறினதால் அதை இவ்விடம் புன்னை விருக்ஷத்தின் அடியிலுள்ள சந்திர புஷ்கரணி தீரத்தில் கீழே வைத்துவிட அது வேர் ஊன்றி எடுக்க முடியாமற்போய் விட்டதாம்!!

திரும்பி வந்த விபீஷணர் கோபாவேசங்கொண்டு துரத்திப்போய் அவ் வாலிப ரூபம்கொண்டிருந்த விநாயகரைத் தலையில் மோத அவரது தலை குழிந்துபோய் விட்டதாம். இந்த ஸம்பவத்தைத் திருச்சிராப்பள்ளியிலிருக்கும் உச்சிப்பிள்ளையார்கோவில் இன்றும் குறிக்கும். அப் பிள்ளையாருக்குத் தலை குழிந்திருப்பதும் காணலாம்.

விபீஷணர் பூஜை.




ராயகோபுரத்தின் மேலிருந்து காணும் ஸ்ரீரங்கத்தின் காக்ஷி.

ஸ்ரீ ராமரால் விபீஷணருக்குக் கொடுக்கப்பட்ட இந்த ரங்கநாத விக்ரஹத்தைப்பற்றி வால்மீகி மகரிஷி அருளிச் செய்த ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விபீஷணர் கொண்டுவந்த இந்த விக்ரஹம் இங்கு வந்ததும் கிளம்பாமல் தங்கிவிட்டதும் விபீஷணர் கவலையுற்று பகவானை வேண்ட, அதற்கு அவர் சோழதேசமாகிய அவ்விடத்திலேயே சோழ ராஜாக்களுக்குக் குலதெய்வமாகத் தாம் தங்கி விடுவதாகவும், வருஷம் ஒருதினம் தன்னை ஆத்மார்த்தமாக விபீஷணர் பூஜை செய்தால் தாம் திருப்தி அடைவதாகவும் தெரிவித்தார். அது பற்றித் தான் இலங்கையைப் பார்த்த மாதிரி இக்கோயில் தெற்குத் திக்கை நோக்கியிருக்கிறது. விபீஷணருக்கும் தனிச் சன்னதி கர்ப்பகிருஹத்தில் ஏற்பட்டிருக்கிறது. வருஷா வருஷம் ஒரு குறிப்பிட்ட தினத்தில் பூஜா திரவியங்களை கர்ப்ப கிருஹத்தில் வைத்துக் கதவு மூடிச்சென்று, மறுதினம் காலையில் கதவு திறந்ததுமவைகள் பகவானுக்கு உபயோகப்பட்டிருக்கும் அதிசயத்தைக் காணலாம். விபீஷணர் ஸப்த சிரஞ்சீவிகளில் ஒருவரென்பதும் மற்றவர்கள் அசுவத்தாமா, மஹாபலி, வியாஸர், ஹனுமான், கிருபாசாரியார், பரசுராமரென்பதும் எல்லோருமறிந்ததே. இவ்வளவு அழகு வாய்ந்த இடத்தில் பகவான் குடிகொண்டிருப்பதுபற்றி இதற்கு பூலோக வைகுண்டமெனப் பெயர் வாய்ந்தது.

ஆழ்வார்கள் பாடிய விவரம்.

வைஷ்ணவக் கோயில்களுள் முக்கியமாகிய நூற்றெட்டுத் திருப்பதிகளெனப்படும்



ஸ்ரீரங்கம் முனிசிபல் ஆஸ்பத்திரி.

திவ்ய தேசங்களுள் 'கோயில்' என்றும் 'திருவரங்கம்' என்றும் கொண்டாடப்படும் இந்த ஒரு ஸ்தலத்தை மட்டும் தான் எல்லா ஆழ்வார்களும் பாடியிருக்கிறார்கள். மற்ற ஸ்தலங்களை இரண்டொருவர் தான் பாடியிருக்கிறார்கள். இதன் விவரங்கள் நாலாயிர பிரபந்தத்தில் விவரிக்கபபட்டிருக்கின்றன.

பொய்கையாழ்வார் வேதங்கள்கூட ஸ்ரீரங்கநாதனது பெருமையை விளக்க முடியாதென்றும், பூதத்தாழ்வார் பகாசுரனை வதைத்த ஸ்ரீ கிருஷ்ணனென்றும், பேயாழ்வார் ஜனங்களைக் காப்பாற்ற வாமனாவதாரமெடுத்து மஹா பலியிடம் யாசித்தவரென்றும், திருமழிசையாழ்வார் பிரளய காலத்தில் பாற்கடலில் மிதப்பவரென்றும், நம்மாழ்வார் தேவர்களுக்கு அமிர்தம் கொடுக்கக் கூர்மாவதாரமெடுத்தவரென்றும், குலசேகராழ்வார் பகவானிடமுள்ள சேஷனது தலையிலுள்ள ரத்தினமே இவ்விடத்தைப் பிரகாசிப்பிக்கிறதென்றும், பெரியாழ்வார் விபீஷணரைக் காப்பாற்ற இவ்விடமிருந்து ராக்ஷஸ பூமியாகிய இலங்கையைப் பார்த்திருக்கும் பகவானென்றும், தொண்டடிப்பொடியார் தனக்கு இவரை தரிசனம் செய்த பெருமையால் மறு ஜன்மம் நேரிடக்கூடா



...த் தம் ...ல பெரியாழ்


ஸ்ரீரங்கம் கீழசித்திர வீதியில் சென்னைஅம்சமாய்த் திடீ மோட்டாரில் வருகை.

பாவித்து கோதை

தென்றும், திருமங்கையார் பிரம்மாவை நாபி கமலத்திலுடையவரென்றும், திருப்பாணுழ்வார் பூலோக வாசிகளைக் காப்பாற்ற இவ்விடத்தில் பிரகாசிப்பவ ரென்றும் பாடி யிருக்கிருர்கள்.

ரங்கநாதர் வெளியிடங்கள் சென்றது.

இவ்வளவு பெருமையை உடைய விக்ரஹத்தை மகம்மதியர்கள் இந்த ஊரைக் கொள்ளையிட வந்ததும் அர்ச்சகர்கள் பயந்து அதை எடுத்துத் திருப்பதி சென்ருர்களாம். இந்த விஷயம் "குருபரம்பராப் பிரபாவம்" எனப்படும் கிரந்தத்தில் சொல்லப் பட்டிருப்பதுமன்றியில், இரண்டாவது பிராகாரம் கீழ் சுவரிலும் இது ஸம்பந்தமான சிலாசாஸனம் இருந்து வருகிறது. இந்த அழகிய மணவாளனை எடுத்துச் செல்லும்போது அவர்கள் மைசூர் ராஜ்யத்திலுள்ள திருநாராயணபுரத்தில் சில காலம் வைத்திருந்து பின்பு திருப்பதியில் சேர்ப்பித்திருந்தனராம். அப்பால் முகம்மதியர் கலகம் நீங்கியதும் விஜயநகர ஸம்ஸ்தானத்தை சேர்ந்த இரண்டாவது கம்பண்ணனுக்குச் செஞ்சியில் மந்திரியாக விருந்த கோப்பண்ண ராயர் சகம் 1293 (கி. பி. 1371—1372)ல் திருப்பதி யிலிருந்து திரும்ப எடுத்து வந்து தனது செஞ்சிக்கு ஸமீபத்திலுள்ள சிங்கவாம் கோயிலில் கொஞ்ச காலம் வைத்திருந்து பின்னர் ஸ்ரீரங்கத்தில் பரீதாபி வருஷம் வைகாசி மாதம் 17-ந்தேதி பிரதிஷ்டை செய்தனராம்.




ஸ்ரீரங்கவிமானம் முன்பார்வை.

திருப்பாணுழ்வார்.

பகவானது ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாய்ப் பிறவாது பிறந்த அதாவது அயோனி


ஜராய் வயலில் உறையூரில் ஒரு கார்த்திகை மாதத்து ரோகணி நக்ஷத்திரத்தில் தோன்றிய திருப்பாணாழ்வார் பாணர் குலத்தவன் ஒருவனால் எடுத்து வளர்க்கப்பட்டாலும், பகவானது பெருமையை எப்பொழுதும் பாடிக்கொண்டேயிருக்க அவரை பகவான் மானிட சரீரத்துடன் தம்மிடம் ஐக்கியம் செய்துகொண்டார்! தனது தாழ்ந்தகுல ஸம்பந்தத்தினால் கோவிலுக்குள் பிரவேசிக்க அதிகாரமில்லாததினால், தினப்படி காவேரியின் தென்கரையில் 'திருமுகத்துறை' க்கெதிரில் வீணையில் பகவானது பெருமையைப் பாடிக்கொண்டு காலம் கழித்து வந்தார். ஒருதினம் இப்படியாக இவர் பாடிக்கொண்டு பகவானிடத்திலேயே மனதைச்செலுத்திக்கொண்டிருக்கையில் லோகசாரங்கனெனப்படும் அர்ச்சகர் தான் அபிஷேக ஜலமெடுத்துப்போகவேண்டி இவரை விலகச் சொல்லியும் இவர் அதைக் கவனியாது மனதை ரங்கநாதரிடம் நிறுத்தி நிற்கப் பல கற்களை எடுத்து இவர்மீது எறிந்தனர். இப்படிச் செய்து கோயிலுக்குள் சென்றதும் கல்லடியால் பகவான் நெற்றியில் ரக்தம் பெருகுவதைக் கண்டு எல்லோரும் கலக்கமுற்றதும் ஜனங்களுக்கு 'பகவத் பிராப்திக்கு ஜாதியில்லை, பிரதானம் பக்தியே' என்று காட்ட இம்மாதிரி செய்து அந்த அர்ச்சகரை (பிராம்மணரையே) திருப்பாணாழ்வாரை அவாது தோளில் தன் சந்நிதிக்கெதிரே எடுத்து வரச்செய்து, அந்த ஸமயம் பகவானது குணங்களை 'அமலனாதி பிரான்' எனப்படும் பத்துப் பாடல்களில் அவர் பாடினதும் அந்தத் திருமேனியோடு அவரை அங்கீகரித்துக் கொண்டார்!!



ஸ்ரீரங்கம் நாச்சியார் கோவில் விமானம்.

ஆண்டாள் சரித்திரம்.

இந்த ரங்கநாதர்தான் பன்னிரு ஆழ்வாராதிகளில் ஒருவராகிய ஆண்டாளைத் தம்மிடம் ஐக்கியம் செய்து கொண்டவர். பாண்டிய தேசத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் பெரியாழ்வார் நந்தவனத்தில் ஒரு ஆடிப்பூர தினத்தில் ஸ்ரீதேவி பூதேவியினது அம்சமாய்த் திடீரென்று பூமியில் தோன்றினாள்! இக்குழந்தையை அவர் தமது மகளாக பாவித்து கோதை



ஆனி மீத்தில் ஸ்ரீரங்கனாதனுக்கு நடக்கும் ஜ்யேஷ்டாபிஷேக (ஆனித்திரு மஞ்சன) உத்ஸவம்.


என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். ஒரு தினம் பகவானுக்குத் தயாரித்து வைத்திருந்த பூமாலையை இவள் தான் அணிந்து கொண்டிருக்கக் கண்ட ஆழ்வார் இவளைக் கோபிக்க பகவான் சொப்பனத்தில் தோன்றி அக்கோதை தம்முடையவளென்றும் அவளைத் தம்மிடத்தில் சேர்ப்பிக்கும்படியும் கட்டளையிட்டார். "இவளும் திருப்பாவை, நாச்சியார் திருமொழி" என்னும் பாடல்களால் பகவானைத் துதி செய்துகொண்டிருந்தாள். ஆழ்வார் இவளை ஸ்ரீரங்கம் அழைத்துப்போக அந்த ஸமயம் அவளை பகவான் ஐக்கியம செய்து கொண்டார். இந்தப் பெருமையை விளக்க மற்றைய எல்லாக் கோயில்களிலும் கூட ஆண்டாள் ஸந்நிதி ஏற்படுத்தி ஜனங்கள் ஆடிப்பூர உத்ஸவம் கொண்டாடுகிறார்கள்.

கோயிலின் பெருமை.

இக்கோயில் சில்ப வேலைகளால் வெகு அருமையாக அமைந்துள்ளது. இது ஸப்த பிராகாரங்களையுடையது. இதிலுள்ள கோபுரங்களைப்பற்றி ஆங்கில சில்ப நிபுணர்கள் அதிசயிக்கிறார்கள். முதல் பிராகாரம் முதலிய முக்கிய கட்டடங்கள் சோழவம்சத்தைச்சேர்ந்த ஆதிசக்ரவர்த்தியாகிய தர்மவர்ம னென்பவரால் கட்டப்பட்டதாகவும் மற்றைய பிராகாரங்கள் பல ராஜாக்களால் கட்டப்பட்டிருந்தாலும் மூன்றாவது பிராகாரம் திருமங்கை ஆழ்வாரால் கட்டப்பட்டது மன்னியில் பிரணவ ஸ்வரூபமானதும் நான்கு வேதங்களும் நான்கு சிகரங்களாகநிற்கும் ஸ்தூபிகளையும் தங்கத்தால் மூடியவரும் இவ்வாழ்வாராம். கர்ப்ப கிருஹ மடங்கிய முதல் பிராகாரம் 240 அடி நீளம் 180 அடி அகலமுள்ளதா யிருக்க, வெளி ஏழாம் பிராகாரம் 3072 அடி. நீள முள்ளதும் 2520 அடி அகலமுள்ளதாயு மிருக்கிறது. பல கோபுரங்கள் இருந்தாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெருமையை உடையதாயிருக்கிறது.


இதில் "வெள்ளைக்கோபுரம்" எனப்படும் கீழ் கோபுரம் 165 அடி உயரமுடையதுடன் 30 அடி உயரமுள்ள பக்க வரிசைக்கு ஒரே கருங்கல்லால் ஏற்படுத்தப்பட்டிருப்பது அதிசயிக்கத்தக்கது.

இரண்டாவது பிராகாரத்திற்குள் கர்ப்ப கிருஹம் அமையப் பெற்றிருக்க, மூன்றுவதில் தந்வந்திரி சந்நிதி, சந்திர புஷ்கரணி திருக்குளம், ராமசாமி கோயில், கருடமண்டபமும், நான்காவதில் பிள்ளை லோகாசாரியார் சந்நிதி, பார்த்தசாரதி கோயில், ராமானுஜர் ஸந்நிதி, திருப்பாணுழ்வார் சந்நிதி, தொண்டரடிப் பொடியார் ஸந்நிதி, கூரத்தாழ்வார் சந்நிதி, உள் ஆண்டார் சந்நிதி, சக்கரத்தாழ்வார் சந்நிதி, வாசுதேவர் சந்நிதி, தாயார் சந்நிதி, ஆயிரக்கால் மண்டபம், சேஷராயர் மண்டபம், இவைகளும், ஐந்தாவது பிராகாரத்தில் உத்தரவீதிகளும், ஆறுவது பிராகாரதநில் சித்திர வீதிகளும், ஏழாவது கடைசி வெளி பிராகாரத்தில் அடையவளைஞ்சான் வீதிகளும் வெளி ஆண்டாள் சந்நிதி, திருக்காளப்பன் சந்நிதியும்



ஆயிரக்கால் மண்டபத்துக்கு முன்பக்கத்திலிருக்கும் சேஷகிரிராயர் மண்டபம். சேஷகிரிராயர் என்பவர் விஜயநகர ஸம்ஸ்தானத்தில் அச்யுதராயர் நாளில் மந்திரியாயிருந்தவர். ஷெஅச்யுதராயர் என்னும் அரசன் தக்ஷிணதேசங்களின் பேரில் படையெடுத்து வந்தபொழுது ஸ்ரீரங்கத்தில் 6 மாஸகாலம் தங்கியிருந்ததாகவும் அச்சமயத்தில் கடைசிபிராகாரத்திலுள்ள ராயகோபுரங்கள் கட்டப்பட்டனவென்றும் தெரிகிறது. அவர் திரும்பிப் போவதற்குள் அவர் மந்திரியான சேஷகிரிராயர் தெற்கு ராயகோபுரத்தைமட்டில் ஒரு அந்தஸ்து பூர்த்திசெய்து இரண்டாவது அந்தஸ்துக்காக இந்த மண்டபத்தை தயாரித்து இப்பொழுதிருக்குமிடத்தில் பூட்டிப்பார்த்தார். அது அப்படியே நின்றுவிட்டது. இந்த ஒரே கல்லான தூண்களிலுள்ள குதிரை முதலிய சிற்பவேலைகளை கவனிக்கவேணும்.

இருந்து வருகின்றன. இவ்வளவு பெரியகோயில் இந்த நாட்டில் ஓரிடத்திலும் கிடையாதென்று சொல்லலாம். மேலும் மலைகளையே காணக்கூடாத சோழ நாட்டு மணல் பிரதேசத்தில் இவ்வளவு கருங்கல் வேலைகளையுடைய பெரிய கோயிலைப் பார்ப்பது அதிசயமல்லவா?




கீழ்பக்கத்தில் சித்திரவீதிக்கும் அடையவளைஞ்சானுக்கும் மத்தியிலுள்ள கோபுரம். இதற்கு தாமோதரன் வாசல் என்றுபெயர். இதற்கு வெளியிலுள்ள கீழாராய கோபுரம் கட்டுவதற்காக நிறுத்தப் பட்டிருக்கும் பெரும் கருங்கல் தூண்கள் படத்தில் காணலாம்.

சிலாசாஸனம்.

இக்கோயிலில் ஏராளமான சிலாசாஸனங்கள் இருந்து வருகின்றன. அவை பல ராஜாக்களது காலத்தில் வரையப்பட்டிருப்பதுடன் 9-வது முதல் 16-வது நூற்றாண்டு வரையில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றன. இதில் சோழ ராஜாக்களது சாஸனம் இக்கோயிலை "அரங்கத்துப் பெருமானடிகள்" என்று கூறுகின்றது. முதலாவது குலோத்துங்கன் காலத்தியதாகிய (கி. பி. 1070, 1118) ஒன்று "திருப்பள்ளியெழுச்சிக்குக் குலசேக ராழ்வார் செய்த திருவாய்மொழி" மூன்று தினத்தில் சொல்ல ஏற்பாடு செய்திருந்ததைக் குறிக்கிறது. மூன்றுவது குலோத்துங்க சோழனது (கி. பி. 1246-1267) ஒன்று குலோத்துங்க சோழ பட்டணத்திய சில வியாபாரிகள் இவ்விடம் காவேரி வண்டலால் மேடிடப்பட்டிருந்த நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வந்ததைப் பற்றி விவரிக்கிறது. ராஜேந்திர தேவன் காலத்தியது (கி. பி. 1052-1064) மேற்படியார் பெயரால் ஒருவீதி நிர்மாணம் செய்யப்பட்டதைக் குறிக்கிறது.

இரண்டாம் பிராகாரம் கீழ்சுவரிலுள்ள கோள தேசத்திய குலசேகர சங்கிராம தீர ராஜனது காலத்தில் தக்ஷிண தேசத்தில் பல விடங்களை ஜயித்தும், தமது குலதெய்வமாகிய ஸ்ரீ ரங்கநாதரை தரிசனம் செய்து ஒரு விக்ரஹம் பிரதிஷ்டை செய்து தன் பெயரால்



இதுதான் இந்தகோவிலிலுள்ள எல்லா கோபுரங்களை காட்டிலும் உயர்ந்தது. இதை வெள்ளைகோபுரம் என்பார்கள். இதுகிழ்பக்கத்தில் உத்தரவீதியிலிருந்து கோவிலுக்குள் போகும்வழி. இதற்கு சேர்ந்தாப்போல் தான் ஒவ்வொருவருஷமும் மார்கழிமாதம் நடக்கும் வைகுண்ட ஏகாதசிக்கு பெருமாள் எழுந்தருளி பத்தி உலாவுவதற்காக பெரும் கொட்டகைபந்தல் போடுவது வழக்கம். இதில் 8வதுபக்கத்தில் பதிப்பித்திருக்கும் காக்ஷிப்படத்தில்கூட இந்த வெள்ளை கோபுரத்துக்கு உட்பக்கமாக கொட்டகை தெரிவதைக் காணலாம். ஆயிரக்கால் மண்டபத்தில் கால்கள் 936 தானிருப்பதால் அதை பூர்த்திசெய்வதற்காக 64கால்கள் வைத்து இக்கொட்டகை போடுகிறார்கள். இது ஆயிரக்கால் மண்டபத்தையும் அதற்கு எதிராக இருக்கும் சேஷகிரிராயர் மண்டபத்தையும் ஒட்டிநிற்கும்.

கோயிலில் தீபம்போடவும் ஏற்பாடு செய்தனராம். நான்காம் பிராகாரம் தென் சுவரிலுள்ள மூன்றாவது ராஜேந்திர சோழன் காலத்திய சாஸனம் மேற்படியார் கங்கை கொண்ட சோழபுரத்தில் வாஸம் செய்ததும், வீர சோமேசுவரனை ஜயித்ததும் சொல்லுகிறது. மற்றைய இரண்டு சாஸனங்கள் சகம் 1400, 1445 இந்த இரண்டு வருஷங்களிலும் "ஸ்ரீராம நவமி" உத்ஸவத்திற்கு பூமி தானம் கொடுத்த விஷயத்தைக் குறிக்கின்றன. கருடாழ்வார் ஸந்நிதியின் பின்புறம் சுவரிலுள்ள விசுவநாத நாயகர் காலத்திய சாஸனம் உத்ஸவ காலங்களில் சுவாமிக்கு மாலை சாத்துபவர்களின் முறை விவரங்களைக் குறிப்பிடுகின்றன. அதே கருடர் ஸந்நிதிச்சுவரில் கோயில் மானேஜர் ஸ்தானம் வஹித்த அப்பணய்யங்கார் என்பவர் கோயிலில் க்ஷாமகாலத்தில் சுவாமிக்குப் பூஜை நைவேத்தியம் குறைந்ததின் நிமித்தம் அதைப் பொறுக்க முடியாமல் ராயர் கோபுரத்தில் ஏறி விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்ட அத்புத விஷயம் கூறப்பட்டிருக்கிறது.

புன்னைமரம்.

இந்தக்கோவிலில் சிலவிசேஷங்கள் காண்கின்றன. சந்திரபுஷ்கரணிக்கரையில் ஒருபெரிய புன்னைவிருக்ஷம் மிகவும் பிராசீனமானதாக இருக்கிறது. அதன் கிளைகளையும் இலைகளையும்

பார்த்தால் அதிகவிசாலமாகவும் மிகப்பருத்ததாகவும் அடிமரம் இருக்கவேணுமென்று தோன்றுகிறது. ஆனால் அடியில் பார்த்தால் மரமேயில்லாமல் பட்டைமாத்திரம்தானிருக்கிறது. மேல்பாரம் தாங்காமல் எந்த நிமிஷம் விழுந்துவிடுமோவென்று பயப்படக்கூடியதாயிருக்கிறது. இந்தமாதிரியே இது ஆதிகாலம்தொட்டு இருந்துவருவதாகத் தெரிகிறது இம்மரம் இந்தக்ஷேத்திரத்திற்கு புராணப்பிரஸித்தமாய் ஏற்பட்டவிருக்ஷம்.

உடையவர்.


இக்கோவிலின் நான்காவது பிராகாரத்தில் ஆக்னேய திக்கில் 'உடையவர்' என்று சொல்லப்படும் ஸ்ரீராமானுஜா ஸன்னிதி இருக்கிறது. இவர் விசிஷ்டாத்வைதமத ப்ரதிஷ்டாபனாசார்ய ரென்பது யாவருமறிந்ததே. இவர் தம்மாயுட் காலத்தில் பெரும்பாகம் இந்தக்ஷேத்திரத்தில் வஸித்து கடைசியில் இங்கேயே ஸித்தியடைந்தார். இவருடைய மஹாஸமாதி தான் இவர் கோவில். மஹாஸமாதியான இடத்திலேயே இவரது மூர்த்தியொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இந்தமூர்த்தியின் திருமேனியில் ஒரு விசேஷமிருக்கிறது. அதாவது இவர் உயிருடனிருந்த பொழுது உபயோகப்படுத்தி வந்த காஷாய வஸ்திரங்களைக் கொண்டே மூர்த்தியின் ஆகிருதிசெய்து ஒவ்வொருவஸ்திரத்துக்கும் இடையில் மிருத்தினால் மெழுகிப்பூசப்பட்டிருக்கிறது. இது கவனிக்கவேண்டிய அதிசயமே.



உடையவர் என்கிற ஸ்ரீ ராமாநுஜாசாரியர்.

தன்வந்தரி.

இவர் வைத்தியதேவதையென்பது தெரிந்தவிஷயம். இவருக்குகோவிலும் இவரது மூர்த்தியும் இவ்வூரில் சந்திரபுஷ்கரணிக்குக் மேற்கேயிருக்கிறது. வேறு இடங்களில் ஒன்றிலும் இவரதுமூர்த்தி காண்பதுஅரிது. இவர் இங்கு இருப்பதற்கு அனுகுணமாக இவ்வூரில் "பிரஸன்னவெங்கடேச ஆயுர்வேதவித்யாவைத்யசாலை" யொன்று ஏற்பட்டிருக்கிறது.




ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல்.

ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல்.

இந்தப் பள்ளிக்கூடமானது சென்ற 1896ஷ வருஷத்தில் லோயர் ஸெகண்டரி பள்ளிக் கூடமாக ஏற்படுத்தப்பட்டு அதுமுதல் மேன்மேலும் விருத்தியாகி சென்ற 1900ஷ வருஷத்தில் ஹைஸ்கூலாக உயர்த்தப்பட்டது. பிறகு 1905ஷ வருஷத்தில் சில பெரிய மனிதர்கள் சேர்ந்து ஒரு கமிட்டியாக ஏற்பட்டு அதை 1911 ஷ வருஷத்தில் ரிஜிஸ்தரும் செய்தார்கள். பிறகு இதன் உபயோகத்தை நன்கறிந்த ஜனங்கள் இதற்கு நல்ல கட்டடம் வேண்டியதென்கிற அவசியத்தை உணர்ந்து பல நண்பர்களுடைய உதவியையும் ஸர்க்காரார் உதவியையும் கொண்டு சுமார் 50,000 ரூபாய்க்கு இப்பொழுதுள்ள கட்டடத்தை கட்டினார்கள். இந்தப் பள்ளிக் கூடத்திற்கு சிருங்கேரி ஸ்ரீ மகாஸ்வமிகளின் அநுக்ரஹமும் அபிமானமும் ஏற்பட்டு 'சிருங்கேரி ஹால்' என்று ஒரு ஹாலும் கட்டப்பட்டிருக்கிறது.

ஸ்ரீவாணிவிலாஸ முத்ராயந்த்ரசாலை.

இப்பெயர்வாய்ந்த ஓர்அச்சுக்கூடம் இவ்வூரில் சென்ற 21 வருஷங்களாக நடைபெற்றுவருகிறது. இதில் நம்முடைய பிராசீனமான அநேக உயர்ந்த கிரந்தங்கள் வெகு நேர்த்தியாயும், மிக சுத்தமாயும் அச்சிடப்பட்டு வெளிவருகின்றன. ஸம்ஸ்கிருதம், தமிழ், இங்கிலீஷ் இந்த மூன்று பாஷைகளிலும் பற்பல சிலாக்கியமான புத்தகங்கள் இதுவரை வெளியாகாமலிருந்து இப்போது இதன் மூலமாய் வெளிவந்திருக்கின்றன. எல்லாவிதத்திலும் மேம்பட்டதான "ஸ்ரீசாங்கர கிரந்தாவளி" யென்று ஸ்ரீ ஆதி சங்கராசார்யாவர்கள் செய்த ஸமஸ்த கிரந்தங்களையும் ஒருங்கே சேர்த்து 20 ஸம்புடங்களாக ஓர்பெட்டியில்வெளி



ஸ்ரீ வாணீ விலாஸ முத்ரா யந்த்ரசாலை.

யாக்கினதிலிருந்து இம்முத்ராசாலைக்கு உலகப் முழுவதும் பெயர் பிரஸித்தியாயிற்று. அதனால் அநேக பெரியோர்களுடையவும், மடாதிபதிகளுடையவும், மஹாராஜாக்களுடையவும் அநுக்ரஹமும் அபிமானமும் இதற்கு ஏற்பட்டது.

இந்த அச்சாபிஸ் வைத்திருக்கும் கட்டடமானது இதற்குமுன்பாக பிரஸித்திபெற்ற விஜயநகரம் ஸம்ஸ்தானத்தைச்சேர்ந்த அரண்மனையாக இருந்தது. சென்ற 16ம் நூற்றாண்டில் விஜயநகரத்திய சக்ரவர்த்தியாயிருந்த அச்சுதராயர் என்பவர் 'திருவடி' என்று பெயர் வழங்கிய அநந்தசயநமகாராஜாவின் பேரில் படையெடுத்து தன்சைன்யங்களுடன், சந்திரகிரி, திருப்பதி, திருவண்ணாமலை மார்க்கமாய் ஸ்ரீரங்கம் வந்ததாயும், இங்கிருந்து தன் மைத்துனனை ஸேனைகளுடன் திருவனந்தபுரத்துக்கு அனுப்பிவிட்டு அவன் அங்கு போய் அந்த ராஜாவை ஜயித்துவிட்டுத் திரும்புமளவும் ஸ்ரீரங்கத்திலேயே தாம் தங்கியிருந்ததாகவும் தெரிகிறது. அச்சமயம் ஏற்பட்ட அரண்மனைதான் இது. அதற்கடையாளமாக அந்த சக்ரவர்த்தி இங்கு தங்கியிருந்த காலத்தில் ஸ்ரீஜயந்தி உத்ஸவம் நேர்ந்தது. அச்சமயம் வீதியில் ஸ்ரீரங்கநாதனும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் எழுந்தருளியகாலத்தில் இந்த சக்ரவர்த்தியானவர் தன் அரண்மனைக்கு முன்பாக அவர்களுக்கு ஒரு உபயம் ஏற்படுத்தி அது சாசுவதமாக நடக்கவேண்டி அதற்கு மூலதனமேற்படுத்தி அதை தேவஸ்தானத்திலேயே ஒப்புவித்துவிட்டார். அந்த உபயம் அதுமுதல் இன்னும் இந்த கட்டடத்தின் வாசலிலேயே நடந்துவருகிறது. இந்த சக்ரவர்த்தி இங்கிருந்தகாலத்தில்தான் ஏழாவது பிராகாரத்தின் நான்கு திக்குகளிலும் நான்கு பெரிய கோபுரங்கள் கட்ட ஆரம்பித்தார். அவைகளுக்கு அவரைக்கொண்டே ராயர் கோபுரங்கள் என்று பெயர் வந்தது. இந்த அரண்மனைக்கு கீழ்பக்கத்தில் சுமார் 700 வருஷங்களுக்கு முன் முளுபாகலுமடத்தில் ஸ்வாமியாகவிருந்த "ஸ்வர்ண வர்ணர்" என்பவரின் ஸமாதி இருக்கிறது. இந்த ஸப்தப்பிராகாரத்துக்குள் இவருடையதும் ஸ்ரீராமாநுஜருடையதும் ஆக இரண்டு ஸமாதிகள் தானுள்ளன.



ஸ்ரீ சாங்கர கிரந்தாவளி.

ஸ்ரீரங்கம் கோயிலில் தேர்த்திருநாள் பங்குனித்திருநாள் நடத்தப்பட்டவிவரம்

(தென் இந்தியா கோயில்கள் 3-வது புஸ்தகம் 149-ம் பக்கத்திலுள்ள
சாஸனத்திலிருந்து வெளிவரும்)

ஸ்வஸ்திஸ்ரீ. புகழ் சூழ்ந்த புணரி அகழ் சூழ்ந்த புவியில் பொன் நேமியளவுஞ் நேமி நடப்ப விளங்கு ஜயமகளை இளங்கோப்பருவத்து சக்கரகோட்டத்து விக்கிரமத் தொழிலால் புதுமணம் புணர்ந்து மதவரையீட்டம் வயிராகரத்து வாரி அயிர்முனைக் கொந்தளவரசர் தந்தளமிரிய வாளுறை கழித்துத் தோள் வலிகாட்டிப் பொர்ப்பரி நடாத்

திக் கீர்த்தியை நிறுத்தி
வடதிசைவாகை சூடித
தென்றிசைத்தே மருக
மலப் பூமகள் பொது
மையும் பொங்கியாடை
நன்நிலப்பாவை தநிமை
யுந்தவிர வந்து புனிதத்
திரு மணிமகுடம் உரி
மையிற் சூடித்தன்நடி
இரண்டும் தடமுடியா
கத் தொங்நில வேந்தர்
சூட முந்தனை மநுவாறு
பெருக கலியாறுவறுப்
பச் செங்கோல் திசை
தொறுஞ்செல்ல வெண்
குடை இநநிலவளாகம்
எங்கணுஙநாது திருநி
மூல் வெண்ணிலாத்திக
ழ ஒருதநி மேருவிற்
புலிவிளையாடவார் கடற்
றீவாஙரத்துப் பூபாலர்
திறெற விடுதஙு கலஞ்
சொரிகளிறு முறைநிற்
ப விலங்கிய தெந்நவங்க




தேர் திருநாள்.

ருஙலை பருஙலைத்திட
த்தந் பொந்நகர் புறத்தி
டைக்கிடக்க இந்நாள்
பிற்குலப் பிறைபோல்
நிற்பிழையெந்நுஞ்சொ
ல்லெநிர் கோடிற்றல்ல
து தந்கை வில்லெநிர்
கொடாவிக்கலந் தாநங்
கிலிதுடங்கி மணலூர
நடுவெநக் துங்கபத்தி
ரையளவுந்தூத்தி எங்
கணுப்பட்ட வெங்களி
றுங் விட்டதந் மாநமுந்
கூறிந வீரமுங்கிடப்ப
எதிநமலை களுமுது
நெளிப்ப இழிஞ நகச
ளும்சுழன்று நறுடைந்
தோட விழுந்த கடல்க
ளுந் தலைகிரித்தலமாக்
குடதிசைத் தந்நாளுக
ஙூ தாநும் தானையும்
பந்நாளிட்ட பலபல மு
துருபயத்தெதிர்மாறிய
ஜயப்பெருந்திருவும் ப

ழியுகஙூ குடுத்த புகழிந் செல்வியும் வாளாரொண் கணமடனந்த யரிட்ட மூமீளாது விட்ட வெங்கரி நிரையும் கங்கமண்டலமும் சிங்கணமெந்நும் பாணி இரண்டும் ஒருவிசைக் கைக்கொண்டின் டீண்டிய புகழொடு பாண்டி மண்டலமும் கொள்ளத் திருவுள்ளத்தடைத்து வெள்ளவரு பரித்தாங்கமும் பொருகரிக்கலங்களும் தனிரவாரியும் உடைத்தாய் வஙூ வடகடல் தெங்கடல் படர்வது போலத்தந் பெருஞ்சேனைஏவிப்பஞ்சவர் ஐய்வருப் பொருத மொய்க்களத்தஞ்சி வெருநொளித்தொடி அரணைனப்புக்க காடறத்துடைத்து

நாடடிப்படுத்து மற்றவர் தம்மை வநசார் திரியும் பொற்றை வெஞ்சுர மேற்பிக கொற்ற
விஜெயஸ்தம்பம் திசைதொறு நிறுத்தி முத்திந சலாபமுமுத்தமிட்டு பொதியிலுமத்த வெங்
கரி படுமைப்பச் சய்யமுங் கங்கியுங் கைக்கொண்...... ..குடமலை நாட்டுள்ள சாவெறெல்
லாம் தநி விசும்பெற மாவெறிய தங்வருதினித் தலைவரைகுறுகலர் குலையக் கொட்டாறுட்
பட நெறி தொறு நிலைகளிட்டருளித்திறைகொள் வீரஸிம்ஹாஸநத்திரிய விட்டருளிப்
போங்கொளிபார 'முந் திருப்புயத்தலங்களும் பொலிய வீரமுந்தியாகமும் விளங்கப்பார்
மிசை மேவலர் வணங்க வீற்றிருந்தருளிய கோவிராஜகேஸரிபந்மாரா சக்ரவர்த்திகள்
ஸ்ரீகொலோத்துங்கசோழதேவற்கு யாண்டு பதினெட்டாவது. ஆழ்வார் திருவரங்க தேவர்


க்கு ஸ்ரீகாரியஞ் செய்
கிற அதிகாரிகள் நிஷ
தராஜர் ஏவல்படியும் ஸ்ரீ
வயிஷ்ணவவாரியம் திரு
வெழுங் நாடுதாஸரும்
வடமதுராப் பிறஞாநம்பி
யும் இராயூராளி நம்பி
யும் ...ர் நாராயணநம்பி
யும் பெருமபற்றப்புலி
யூர் ஸ்ரீ சடகோபதாஸ
ரும் மார்க்கமஙகலத்து
அரிகுலவாரண நம்பியும்
ஸ்ரீபண்டாரவாரியம் ஆ
ரிதந் குருகைகாவலந் ஆ
ராவமுதும் ஆரிதந் திரு
வாய்க்குல முடையாந்
சிராகவநும் ஆரிதந் கே
சுவந்தநி இளஞ்சிங்கமு
ம் பாரதாயந கேசுவந்
அறிவறியாநும் பாரதா
யந் திருவரங்க நாராய
ணந் ஸ்ரீகூரஷ்ணநும் ஆறி
தந் ஆராவமுது சீராம
நும் ஸஹெக்கணக்கு



பங்குனி உத்திர ரதோத்ஸவம்.

அரயந் அம்பல.........
......ரற்றுவப்பிரியநும்
ஸ்ரீவயிஷ்ணவக்கணக்கு தி
ருவேங்கடவந் சோம
நாத பதிநெட்டு நாடுகி
ழவநும் உள்ளிட்ட ஆழ்
வார்கன்மிகளோம் அர
யந் மரு—ஐவாஹநாத
காலிங்கராயர்க்கு நாங்க
ள் ஸம்மதித்துத் திட்
டுக்குடுத்த பரிசாவது.
அப்பிகை தேர்த்திருநா
ளிலும் பங்கூநித்திருநா
ளிலும் தீர்த்தம் பிரஸா
தித்தருளிந அந்றிரா தி
ருப்புந்நைக்கீழ் எழுந்த
ருளி இருந்து தேட்ட
ருஞ்திறல் கேட்டருளும்
போது இற்றை நாளா
ல் திருநாள் ஒன்றுக்கு
அமுது செய்தருளும்
அப்பமுதுநூறுக்குவே
ண்டும் பழவரிசி பதக்
கும் பருப்பு முநாழி
யும் நெய் முந்நாழியும் சற்கரை நூற்றுப்பலமும் மிளகு முழாக்கும் சீரகம் உழாக்
கும் உப்பு முழாக்கும் வாழைப்பழம் ஐம்பதும் தேங்காய் ஐஞ்சும் இளநீரமுது பத்தும்
அடைக்காயமுது நூற்றிருபதும் கற்பூரதயிலம் ஒரு செவிடரையும் தெரி இலைப்பற்று
பதிரண்டும் கற்பூரம் இரண்டு மஞ்சாடியும அப்பமுதுக்கு மாவிடிப்பாரக்கு நீரட்டுவார்க்
கும் விறகிடுவார்க்கும் அப்பமுது சுடுவார்க்கும் குசக்கலத்துக்கும் உள்ளிட்டு மற்றும்
வேண்டுவநவையிற்றுக்குஞ்சந்திராதித்தவல் செல்ல இவர் ஒடிக்கின காசு ஆறேகால்

இக்காசு ஆறேகாலுங்கொண்டு பொலிசையால் இரண்டு திருநாளிலும் இப்படி சேய்பணி ராநித்தவல் அமுதி செய்விக்கக்கடவோமாகவும் இப்படி கல் வெட்டிவித்துக் கொள் ளப்பெ.........வும் இப்படி இசைஞ்ஸம்மதத்திட்டுக்குடுத்தோம் ஆழ்வார் கன்மிகளோம் இது சஞிராதித்தவல் செலுத்துவிக்க கடவோமானோம் திருவரங்கத்து மஹாஸஹை யோம் இது ஸ்ரீவயிஷ்ணவரக்ஷை.



இந்த மண்டபத்திற்கு ரங்கவிலாஸ மண்டப மென்று பெயர். இதில்தான் தேவஸ்தானம் ஆபீஸ் இருக்கிறது. இதில் தான் கவர்னர்கள் வைஸ்ராய்கள் முதலிய பெரியமனிதர்கள் வரும்பொழுது கோவிலிலுள்ள திருவாபரணங்க ளையும் வாகனங்களையும் எடுத்துப்பரப்பிவைத்துக்காண்பிக்கிறது வழக்கம்.

ஆழ்வாராதிகள் பாடிய பாடல்கள்.

திருப்பாணாழ்வார் பாடியது :—

¶ அமலனாதிபிரா னடியார்க்கென்னையாட்படுத்த
விமலன் * விண்ணவர்கோன் விரையார்பொழில்வேங்கடவன் *
நிமலன்நின்மலன்நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான் * திருக்
கமலபாதம வந்தென்கண்ணினுள் ளனவொக்கின்றதே.

உவந்தவுள்ளத்தனா யுலகமளந்தண்டமுற *
நிவந்தநீண்முடிய னன்றுநேர்ந்தநிசாசரரை *
கவர்ந்தவெங்கணைக்காகுத்தன் கடியார்பொழிலரங்கத்தம்மான் * அரைச்
சிவந்தவாடையின்மேல் சென்றதாமெனசிந்தனையே.


மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்யநின்றா னரங்கத்தரவினணையான்
அந்திபோல்நிறத்தாடையு மதன்மேலயனைப்படைத்ததோரெழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே.

சதிரமாமதிள்சூழிலங்கைக்கிறைவன் தலைபத்
துதிரவோட்டி ஓர்வெங்கணையுய்த்தவ னோதவண்ணன்
மதுரமாவண்டுபாடமாமயிலாடரங்கத்தம்மான் திருவயிற்
றுதரபந்தன மென்னுள்ளத்துள்நின் றுலாகின்றதே.

பாரமாய பழவினைபற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றியென் னுள்புகுந்தான்
கோரமாதவம்செய்தனன்கொலறியே னரங்கத்தம்மான் திரு
வாரமார்பதன்றோ அடியேனையாட்கொண்டதே.

துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில்சூ ழரங்கநகர்மேயவப்பன்
அண்டரண்டபகிரண்டத் தொருமாநிலமெழுமால்வரை முற்றும்
உண்டகண்டங்கண்டீ ரடியேனையுய்யக்கொண்டதே.

கையினார் சுரிசங்கனலாழியார் நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார்கமழ்நீண்முடியெம்
ஐயனார் அணியரங்கனா ரரவினணைமிசைமேயமாயனார்
செய்யவாயையோ! என்னைச்சிந்தைகவர்ந்ததுவே.



ஆயிரக்கால் மண்டபத்தின்மேலிருந்து கோபுரங்களின் காக்ஷி.

பரியனாகிவந்த வவுணனுடல்கீண்ட * அமரர்க்
கரியவாதிப்பிரா னரங்கத்தமலன் முகத்து *
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி * நீண்டவப்
பெரியவாயகண்க ளென்னைப்பேதைமைசெய்தனவே.

¶ ஆலமாமரத்தினிலைமே லொருபாலகனாய் *
ஞாலமேழுமுண்டா னரங்கத்தரவினணையான் *
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும்முடிவில்லதோரெழில்
நீலமேனியையோ! நிறைகொண்டதென்நெஞ்சினையே.

¶ கொண்டல்வண்ணனைக் கோவலனாய்வெண்ணெ
யுண்டவாயன் * என்னுள்ளம்கவர்ந்தானை *
அண்டர்கோனணியரங்கன் * என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே.

போய்கையாழ்வார் பாடியது:—1-ம் திருவந்தாதி

ஒன்று மறந்தறியே னோதநீர்வண்ணனைநான்* இன்றுமறப்பனோ வேழைகாள்* அன்று
கருவரங்கத்துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன் * திருவரங்கமேயான்திசை. 6

பூதத்தாழ்வார் பாடியது:—2-ம் திருவந்தாதி

மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான் * மற்றும்
நினைப்பரிய நீளரங்கத்துள்ளான் *—எனைப்பலரும்
தேவாதிதேவனெனப்படுவான் * முன்னொருநாள்
மாவாய் பிளந்த மகன் . 28

பயின்ற தரங்கம் திருக்கோட்டி * பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள் * பயின்ற
தணிதிகழும் சோலையணிநீர் மலையே *
மணிதிகழும் வண்தடக்கை மால் 46

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால் *
தமருள்ளும்தண்பொருப்புவேலை* தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தையென்பரே*
ஏவல்ல வெந்தைக் கிடம். 70



ஸ்ரீரங்கம் தெற்கு ராயகோபுரம்.

¶ பேயாழ்வார் :--3-ம் திருவந்தாதி

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல்
வைகுந்தம் *
கொண்டங் குறைவார்க்கு கோயில்
போல் * வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்
கடிகை *
இளங்குமரன் றன்விண்ணகர். 61

விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர்
வேங்கடம் *
மண்ணகரம் மாமாட வேளுக்கை *
மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம்
தென்கோட்டி *
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு. 62

திருமழிசையாழ்வார் *பாடியது:—*

நான்முகன் திருவந்தாதி.

பாலில் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும் ❋ ஆலில் துயின்றதுவு மாரறிவார் ❋ ஞாலத்
தொருபொருளை வானவர்தம் மெய்ப்பொருளை ❋ அப்பில் அருபொருளை யானறிந்த வாறு 3

அவனென்னை யாளி யரங்கத்து❋ அரங்கில் அவனென்னை யெய்தாமல்காப்பான் ❋ அவனென்ன
துள்ளத்து நின்று ளிருந்தான் கிடக்குமே ❋ வெள்ளத் தரவணையின் மேல். 30

நாகத் தணைக்குடந்தை வெஃகாத் திருவெவ்வுள் ❋ நாகத் தணையரங்கம் பேரன்பில் ❋ நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதிநெடுமால் ❋ அணைப்பார் கருத்தனு வான். 36

ஆள்பார்த் துழிதருவாய் கண்டுகொ ளென்று நின் ❋ தாள்பார்த்த துழிதருவேன் தன்மையை ❋
கேட்பார்க் கரும்பொருளாய் நின்ற வரங்கனே ❋ உன்னை விரும்புவதே விள்ளேன் மனம். 60

திருச்சந்த விருத்தம்.

¶ கொண்டைகொண்டகோதைமீது தேனுலாவுகூனிகூன்
உண்டைகொண்டரங்கவோட்டி யுள்மகிழ்ந்தநாதனூர்
நண்டையுண்டுநாரைபேரவாளைபாய, நீலமே
அண்டைகொண்டுகெண்டைமேயு மந்தணீரரங்கமே. 49

வெண்டிரைக்கருங்கடல் சிவந்துவேவ, முன்னோர்நாள்
திண்டிறல்சிலைக்கைவாளி விட்டவீரர்சேருமூர்
எண்டிசைக்கணங்களு மிறைஞ்சியாடுதீர்த்தநீர்
வண்டிரைத்தசோலைவேலி மன்னுசீரரங்கமே. 50

சரங்களைத்துரந்து வில்வளைத்து, இலங்கைமன்னவன்
சிரங்கள்பத்தறுத்துதிர்த்த செல்வர்மன்னுபொன்னிடம்
பரந்துபொன்நிரந்துநுந்தி வந்தலைக்கும்வார்புனல்
அரங்கமென்பர்நான்முகத் தயன்பணிந்தகோயிலே. 51

பொற்றையுற்றமுற்றல்யானை போரெதிர்ந்துவந்ததை
பற்றியுற்று, மற்றதன் மருப்பொசித்தபாகனூர்
சிற்றெயிற்றுமுற்றல்மூங்கில் மூன்றுதண்டரொன்றினர்
அற்றபற்றர்சுற்றிவாழு மந்தணீரரங்கமே 52

மோடியோடிலச்சையாய சாபமெய்திமுக்கணன்
கூடுசேனைமக்களோடு கொண்டுமண்டிவெஞ்சமத்
தோட ❋ வாணனாயிரம் கரங்கழித்தனவாதிமால்
பீடுகோயில்கூடுநீ ரரங்கமென்றபேரதே. 53

இலைத்தலைச்சரந்துரந் திலங்கைகட்டழித்தவன்
மலைத்தலைப்பிறந்திழிந்து வந்துநுந்துசந்தனம்
குலைத்தலைத்திறுத்தெறிந்த குங்குமக்குழம்பினோடு
அலைத்தொழுகுகாவிரி யரங்கமேயவண்ணலே. 54

மன்னுமாமலர்க்கிழத்தி வையமங்கைமைந்தனாய்
பின்னுமாயர்பின்னைதோள் மணம்புணர்ந்ததன்றியும்
உன்னபாதமென்னசிந்தை மன்னவைத்துநல்கினாய்
பொன்னிசூழரங்கமேயபுண்டரீகனல்லையே. 55



மஹா விஷ்ணு

நம்மாழ்வார் பாடியது:—2-ம் திருவாய்மொழி ; 7-ம் பத்து.

¶ கங்குலும்பகலும்கண்டுயிலறியாள் கண்ணநீர்கைகளாலிறைக்கும்
சங்குசக்கரங்களென்றுகைகூப்பும் தாமரைக்கண்ணென்றேதளரும்
எங்ஙனேதரிக்கோவுன்னைவிட்டென்னு மிருநிலம்கைதுழாவிருக்கும்
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தா யிவள்திறத்தென்செய்கின்றாயே. 1

என்செய்கின்றாயென்தாமரைக்கண்ணாவென்னும் கண்ணீர்மல்கவிருக்கும்
என்செய்கேனெறிநீர்த்திருவரங்கத்தாயென்னும் வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்
முன்செய்தவினையேமுகப்படாயென்னும்முகில்வண்ணா தகுவதோவென்னு
முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாயென்கொலோமுடிகின்றதிவட்கே. 2

வட்கிலளிறையும்மணிவண்ணாவென்னும் வானமேநோக்கும்மையாக்கும்
உட்குடையசுரருயிரெல்லாமுண்ட வொருவனேயென்னுமுள்ளுருகும்
கட்கிலீயுன்னைக்காணுமாறருளாய் காகுத்தாகண்ணனேயென்னும்
திட்கொடிமதிள்சூழ்திருவரங்கத்தா யிவள்திறத்தென்செய்திட்டாயே. 3

இட்டகாலிட்ட கைகளாயிருக்கு மெழுந்துலாய்மயங்கும்கைகூப்பும்
கட்டமேகாதலென்றுமூர்ச்சிக்கும் கடல்வண்ணாகடியைகாணென்னும்
வட்டவாய்நேமிவலங்கையாவென்னும் வந்திடாயென்றென்றேமயங்கும்
சிட்டனேசெழுநீர்த்திருவரங்கத்தா யிவள்திறத்தென்சிந்தித்தாயே. 4

சிந்திக்கும்திசைக்கும்தேறும்கைகூப்பும் திருவரங்கத்துள்ளாயென்னும்
வந்திக்கும்* ஆங்கேமழைக்கண்ணீர்மல்கவந்திடாயென்றென்றேமயங்கும்
அந்திப்போதவுணனுடலிடந்தானே யலைகடல்கடைந்தவாரமுதே
சந்தித்துன்சரணம்சார்வதேவலித்த தையலைமையல்செய்தானே. 5

மையல்செய்தென்னைமனம்கவர்ந்தானேயென்னும்மாமாயனேயென்னும்
செய்யவாய்மணியேயென்னும்தண்புனல் சூழ்திருவரங்கத்துள்ளாயென்னும்
வெய்யவாள்தண்டுசங்குசக்கரம்வில்லேந்தும் விண்ணோர்முதலென்னும்
பைகொள்பாம்பணையாயிவள்திறத்தருளாய் பாவியேன்செய்யற்பாலதுவே. 6

பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய் பற்றிலார்பற்றநின்றானே
காலசக்கரத்தாய்கடலிடங்கொண்ட கடல்வண்ணாகண்ணனேயென்னும்
சேல்கொள்தண்புனல்சூழ்திருவரங்கத்தாயென்னும் என் தீர்த்தனேயென்னும்
கோலமாமழைக்கண்பனிமல்கவிருக்கும் என்னுடைக்கோமளக்கொழுந்தே. 7

கொழுந்துவானவர்கட்கென்னும் குன்றேந்திக்கோநிரைகாத்தவனென்னும்
அழுந்தொழுமாவியனலவெவ்வுயிர்க்கு மஞ்சனவண்ணனேயென்னும்
எழுந்துமேல்நோக்கியிமைப்பிலளிருக்கு மெங்ஙனேநோக்குகேனென்னும்
செழுந்தடம்புனல்சூழ்திருவரங்கத்தாயென் செய்கேனென் திருமகட்கே. 8

¶ என்திருமகள்சேர்மார்வனேயென்னும் என்னுடையாவியேயென்னும்
நின்திருவெயிற்றாலிடந்துநீகொண்டநிலமகள்கேள்வனேயென்னும்
அன்றுருவேழும்தழுவிநீகொண்ட ஆய்மகளன்பனேயென்னும்
தென்திருவரங்கம்கோயில்கொண்டானே தெளிகிலேன்முடிவிவள்தனக்கே. 9

முடிவிவள்தனக்கொன்றறிகிலேனென்னும் மூவுலகாளியேயென்னும்
கடிகமழ்கொன்றைச்சடையனேயென்னும் நான்முகக்கடவுளேயென்னும்

வடிவுடைவானோர்தலைவனேயென்னும் வண்திருவரங்கனேயென்னும்
அடியடையாதாள்போலிவளணுகியடைந்தனள் முகில்வண்ணனடியே. 10

¶ முகில்வண்ணனடியையடைந்தருள்சூடியுய்ந்தவன்மொய்புனல்பொருநல்
துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன் வண்பொழில்சூழ்வண்குருகூர்ச்சடகோபன்
முகில்வண்ணனடிமேல்சொன்ன சொன்மாலையாயிரத்திப்பத்தும்வல்லார்
முகில்வண்ணவானத்திமையவர்சூழவிருப்பர் பேரின்பவெள்ளத்தே. 11

திருவிருத்தம்: தண்ணந்துழாய்வளைகொள்வது யாமிழப்போம் * நடுவே
வண்ணம் துழாவியோர் வாடையுலாவும் * வள்வாயலகால்
புள்ளந்துழாமே பொருநீர்த் திருவரங்காவருளாய்
எண்ணம்துழாவுமிடத்து * உளவோபண்டு மின்னன்னவே.

குலசேகராழ்வார் யருளியது :—பெருமாள் திருமொழி—1-வது திருமொழி.

¶ இருளிரியச்சுடர்மணிகளிமைக்குநெற்றி யினத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த
அரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னும் அணிவிளங்குமுயர்வெள்ளையணையைமேவி
திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளும்
கருவணியைக், கோமளத்தைக்கண்டுகொண்டு-என் கண்ணிணைக ளென்றுகொலோகளிக்கும் நாளே? 1

வாயோரீரைஞ்ஞூறு துதங்களார்ந்த வளையுடம்பினழல்நாகமுமிழ்ந்தசெந்தீ
வீயாதமலர்ச்சென்னிவிதானமேபோல் மேன்மேலும்மிகவெங்கும்பரந்ததன்கீழ்
காயாம்பூமலர்ப்பிறங்கலன்னமாலைக் கடியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும்
மாயோனை, மணத்தூணேபற்றிநின்றென் வாயாரஎன்றுகொலோவாழ்த்துநாளே. 2

எம்மாண்பினயன்நான்குநாவினாலும் எடுத்தேத்தி ஈரிரண்டுமுகமுங்கொண்டு
எம்மாடுமெழிற்கண்களெட்டினோடும் தொழுதேத்தி யினிதிறைஞ்சநின்ற * செம்பொன்
அம்மான்றன்மலர்க்கமலக்கொப்பூழ்தோன்ற அணியரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும்
அம்மான்றனடியிணைக்கீழலர்களிட்டங் கடியவரோடென்றுகொலோவணுகுநாளே. 3

மாவினைவாய்பிளந்துகந்தமாலை வேலை வண்ணனை என்கண்ணனை, வன்குன்றமேந்தி
ஆவினையன்றுய்யக்கொண்டவாயரேற்றை அமரர்கள் தந்தலைவனை அந்தமிழின்பப்
பாவினை * அவ்வடமொழியைப்பற்றற்றார்கள் பயிலரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும்
கோவினை, நாவுறவழுத்தி என்றன்கைகள் கொய்மலர்தூயென்றுகொலோகூப்புநாளே. 4

இணையில்லா வின்னிசையாழ்கெழுமியின்பத் தும்புருவும்நாரதனுமிறைஞ்சியேத்த
துணையில்லாத்தொன்மறைநூல்தோத்திரத்தால் தொன்மலர்க்கணயன்வணங்கியோவாதேத்த
மணிமாடமாளிகைகள்மல்குசெல்வ மதிளரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும்
மணிவண்ணனம்மானைக்கண்டுகொண்டென் மலர்ச்சென்னியென்றுகொலோவணங்குநாளே. 5

அளிமலர்மேலயனரனிந்திரனோடேனை அமரர்கள் தம்குழுவு மரம்பையரும் மற்றும்
தெளிமதிசேர்முனிவர்கள் தம்குழுவுமுந்தித் திசைதிசையில்மலர்தூவிச்சென்றுசேரும்
களிமலர்சேர்பொழிலரங்கத்துரகமேறிக் கண்வளரும்கடல்வண்ணர் கமலக்கண்ணும்
ஒளிமதிசேர்திருமுகமும் கண்டுகொண்டென் னுள்ளமிகவென்றுகொலோவுருகுநாளே. 6

மறம்திகழு மனமொழித்துவஞ்சமாற்றி ஐம்புலன்களடக்கியிடர்ப்பாரத்துன்பம்
துறந்து * இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத் தொன்னெறிக்கண்நிலைநின்றதொண்டரான
அறம்திகழும்மனத்தவர்தம் கதியைப்பொன்னி யணியரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்
நிறம்திகழும்மாயோனைக்கண்டென்கண்கள் நீர்மல்கவென்றுகொலோநிற்குநாளே. 7

கோலார்ந்தநெடுஞ்சார்ங்கம்கூனற்சங்கம் கொலையாழிகொடுந்தண்டு கொற்றவொள்வாள்
காலார்ந்தகதிக்கருடனென்னும் வென்றிக் கடும்பறவையிவையனைத்தும்புறஞ்சூழ்காப்ப
சேலார்ந்தநெடுங்கழனிசோலைசூழ்ந்த திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும்
மாலோனைக், கண்டின்பக்கலவியெய்தி வல்வினையேனென்றுகொலோவாழுநாளே. 8

ஆராதமனக்காதல்தொண்டர்தங்கள்குழாம்குழுமித் திருப்புகழ்கள்பலவும்பாடி
ஆராதமனக்களிப்போடழுதகண்ணீர் மழைசோர நினைந்துருகியேத்தி * நாளும்
சீரார்ந்தமுழவோசைபரவைகாட்டும் திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும்
போராழியம்மானைக்கண்டுதுள்ளிப் பூதலத்திலென்றுகொலோபுரளுநாளே. 9

வன் பெருவானகமுய்யவமருய்ய மண்ணுய்யமண்ணுலகில்மனிதருய்ய
துன் பமிகுதுயரகலஅயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழுந்தொண்டர்வாழ
அன்பொடுதென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கன்திருமுற்றத்துஅடியார்தங்கள்
இன்பமிகுபெருங்குழுவுகண்டு யானும் இசைந்துடனேயென்றுகொலோவிருக்குநாளே. 10

¶ திடர்விளங்குகரைப்பொன்னிநடுவுபாட்டுத் திருவரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும்
கடல்விளங்குகருமேனியம்மான்றன்னைக், கண்ணாரக்கண்டுகக்கும்காதல்தன்னால்
குடைவிளங்குவிறல்தானைக்கொற்றவொள்வாள்கூடலர்கோன்கொடைக்குலசேகரன்சொற்
செய்த * நடைவிளங்குதமிழ்மாலைபத்தும்வல்லார் நலந்திகழ்நாரணனடிகீழ்நண்ணுவாரே. 11

2-வது திருமொழி.

¶ தேட்டருந்திறல்தேனினைத் தென்னரங்கனை * திருமாதுவாழ்
வாட்டமில்வனமாலைமார்வனைவாழ்த்தி மால்கொள்சிந்தையராய்
ஆட்டமேவியலர்ந்தழைத்தயர்வெய்தும்மெய்யடியார்கள்தம்
ஈட்டம்கண்டிடக்கூடுமேலதுகாணும்கண்பயனாவதே. 1

தோடுலாமலர்மங்கை தோளிணைதோய்ந்ததும், சுடர்வாளியால்
நீடுமாமரம்செற்றதும் நிரைமேய்த்ததுமிவையேநினைந்து
ஆடிப்பாடிஅரங்கவோ! என்றழைக்கும் தொண்டரடிப்பொடி
ஆடநாம்பெறில் * கங்கைநீர்குடைந்தாடும் வேட்கை யென்னாவதே? 2

ஏறடர்த்ததும்ஏனமாய்நிலங்கீண்டதும் முன்னிராமனாய்
மாறடர்த்ததும்மண்ணளந்ததும் சொல்லிப்பாடி * வண்பொன்னிப்பே
ராறுபோல்வரும்கண்ணநீர்கொண்டரங்கன்கோயில்திருமுற்றம்
சேறுசெய்தொண்டர்சேவடிச்செழுஞ்சேறென்சென்னிக்கணிவனே. 3

தோய்த்ததண்தயிர்வெண்ணெய்பாலுடனுண்டலும் உடன்றாய்ச்சிகண்டு
ஆர்த்ததோளுடையெம்பிரான் என்னரங்கனுக்கடியார்களாய்
நாத்தழும்பெழநாரணாவென்றழைத்து மெய்தழும்பத்தொழு
தேத்தி * இன்புறும்தொண்டர்சேவடியேத்திவாழ்த்துமென்னெஞ்சமே. 4

பொய்சிலைக்குரலேற்றெருத்தமிறுத்துப் போரவிர்த்தகோன்
செய்சிலைச்சுடர்சூழொளித் திண்ணமாமதிள்தென்னரங்கனாம்
மெய்சிலைக்கருமேகமொன்று தம்நெஞ்சில்நின்றுதிகழப்போய்
மெய்சிலிப்பவர்தம்மையேநினைந்தென்மனம்மெய்சிலிர்க்குமே. 5

ஆதியந்தமனந்தமற்புதமான வானவர்தம்பிரான்
பாதமாமலர்சூடும்பத்தியிலாத பாவிகளுய்ந்திட
தீதில்நன்னெறிகாட்டி எங்கும் திரிந்தரங்கனெம்மானுக்கே
காதல்செய்தொண்டர்க்கெப்பிறப்பிலும் காதல்செய்யுமென்னெஞ்சமே. 6

காரினம்புரைமேனிநற்கதிர் முத்தவெண்ணகைச்செய்யவாய்
ஆரமார்வனரங்கனென்னும் அரும்பெருஞ்சுடரொன்றினை
சேரும்நெஞ்சினராகிச் சேர்ந்துகசிந்திழிந்தகண்ணீர்களால்
வாரநிற்பவர்தாளிணைக்கு ஓர்வாரமாகுமென்னெஞ்சமே. 7

மாலையுற்றகடல்கிடந்தவன் வண்டுகிண்டுநறுந்துழாய்
மாலையுற்றவரைப்பெருந்திருமார்பனை மலர்க்கண்ணனை
மாலையுற்றெழுந்தாடிப்பாடித் திரிந்தரங்கனெம்மானுக்கே
மாலையுற்றிடுந்தொண்டர்வாழ்வுக்கு மாலையுற்றதென்னெஞ்சமே. 8

மொய்த்துக்கண்பனிசோரமெய்கள்சிலிர்ப்ப ஏங்கியிளைத்துநின்று
எய்த்துக்கும்பிடுநட்டமிட்டெழுந்து ஆடிப்பாடியிறைஞ்சி * என்
அத்தனச்சனரங்கனுக்கடியார்களாகி, அவனுக்கே
பித்தராமவர் * பித்தரல்லர்கள் மற்றையார்முற்றும்பித்தரே. 9

¶ அல்லிமாமலர்மங்கைநாத னரங்கன்மெய்யடியார்கள்தம்
எல்லையிலடிமைத்திறத்தினி லென்றுமேவுமனத்தனும்
கொல்லிகாவலன்கூடல்நாயகன் கோழிக்கோன்குலசேகரன்
சொல்லிலின்தமிழ்மாலைவல்லவர் தொண்டர்தொண்டர்களாவரே. 10

3-வது திருமொழி.

¶ மெய்யில்வாழ்க்கையை மெய்யெனக்கொள்ளும் * இவ்வையந்தன்னொடும் கூடுவதில்லையான்
ஐயனே! அரங்காவென்றழைக்கின்றேன் * மையல்கொண்டொழிந்தே னென்றன்மாலுக்கே. 1

நூலினேரிடையார் திறத்தேநிற்கும் * ஞாலந்தன்னொடும் கூடுவதில்லையான்
ஆலியாஅழையா அரங்காவென்று * மாலெழுந்தொழிந்தே னென்றன்மாலுக்கே. 2

மாரனார் வரிவெஞ்சிலைக்காட்செய்யும் * பாரினாரொடும் கூடுவதில்லையான்
ஆரமார்வ னரங்கனநந்தன் * நல் நாரணன் நரகாந்தகன்பித்தனே. 3

உண்டியேயுடையே யுகந்தோடும் * இம் மண்டலத்தொடும் கூடுவதில்லையான்
அண்டவாண னரங்கன், வன்பேய்முலை * உண்டவாயன்ற னுன்மத்தன்காண்மினே. 4

தீதிலநன்னெறிநிற்க, அல்லாதுசெய் * நீதியாரொடும் கூடுவதில்லையான்
ஆதிஆய னரங்கன், அந்தாமரைப் * பேதைமாமணவாளன்றன் பித்தனே. 5

எம்பரத்த ரல்லாரொடும்கூடலன் * உம்பர்வாழ்வை யொன்றாகக்கருதிலன்
தம்பிரானமரர்க்கு-அரங்கநகர் * எம்பிரானுக் கெழுமையும்பித்தனே. 6

எத்திறத்திலும் யாரொடும்கூடும் * அச் சித்தந்தன்னைத் தவிர்த்தனன்செங்கண்மால்
அத்தனே! அரங்காவென்றழைக்கின்றேன் * பித்தனா யொழிந்தேனெம்பிரானுக்கே. 7

பேயரே யெனக்கியாவரும் * யானுமோர் பேயனே யெவர்க்கும் இதுபேசியென்
ஆயனே! அரங்கா! என்றழைக்கின்றேன் * பேயனாயொழிந்தே னெம்பிரானுக்கே. 8

¶ அங்கையாழி யரங்கனடியிணை * தங்குசிந்தைத் தனிப்பெரும்பித்தனாய்
கொங்கர்கோன் குலசேகரன்சொன்னசொல் * இங்குவல்லவர்க் கேதமொன்றில்லையே. 9

பெரியாழ்வார் :— திருமொழி.

கருவுடைமேகங்கள்கண்டால் உன்னைக்கண்டாலொக்கும்கண்கள்
உருவுடையாய் உலகேழுமுண்டாகவந்துபிறந்தாய்
திருவுடையாள்மணவாளா! திருவரங்கத்தேகிடந்தாய்
மருவிமணம்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். 2-7-2

சீமாலிகனவனோடு தோழமைக்கொள்ளவும்வல்லாய்
சாமாறவனைநீயெண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய்
ஆமாறறியும்பிரானே! அணியரங்கததேகிடந்தாய்
ஏமாற்றமென்னைத்தவிர்த்தாய் இருவாட்சிப்பூச்சூட்டவாராய். 2-7-8

வண்டுகளித்திரைக்கும்பொழில்சூழ் வருபுனல்காவிரித்தென்னரங்கன்
பண்டவன்செய்தகிரீடையெல்லாம் பட்டர்பிரான் விட்டுசித்தன்பாடல்
கொண்டிவைபாடிக்குனிக்கவல்லார் கோவிந்தன்தன்னடியார்களாகி
எண்டிசைக்கும்விளக்காகிநிற்பார் இணைபடியென்தலைமேலனவே. 2-9-11

கன்னிநன்மாமதில்சூழ்தரு பூம்பொழிற்காவிரித்தென்னரங்கம்
மன்னியசீர்மதுசூதனா! கேசவா! பாவியேன்வாழ்வுகந்து
உன்னையிளங்கன்றுமேய்க்கச சிறுகாலேயூட்டியொருப்படுத்தேன்
என்னின்மனம்வலியாளொருபெண்ணில்லைஎன்குட்டனே! முத்தந்தா. 3-3-2

¶ மாதவத்தோன்புத்திரன்போய் மறிகடல்வாய்மாண்டானை
ஓதுவித்ததக்கணையா உருவுருவேகொடுத்தானூர்
தோதவத்தித்தூய்மறையோர் துறைபடியத்துளும்பியெங்கும்
போதில்வைத்ததேன்சொரியும் புனலரங்கமென்பதுவே. 4-8-1

பிறப்பகத்தேமாண்டொழிந்த பிள்ளைகளைநால்வரையும்
இறைப்பொழுதிற்கொணர்ந்துகொடுத்து ஒருப்படுத்தவுறைப்பனூர்
மறைப்பெருந்தீவளர்த்திருப்பார் வருவிருந்தையளித்திருப்பார்
சிறப்புடையமறையவர்வாழ் திருவரங்கமென்பதுவே. 2

மருமகன்தன்சந்ததியை உயிர்மீட்டு, மைத்துனன்மார்
உருமுகத்தேவிழாமே குருமுகமாய்க்காத்தானூர்
திருமுகமாய்ச்செங்கமலம் திருநிறமாய்க்கருங்குவளை
பொருமுகமாய்நின்றலரும் புனலரங்கமென்பதுவே. 3

கூன்தொழுத்தைசிதகுரைப்பக் கொடியவள்வாய்க்கடியசொற்கேட்டு
ஈன்றெடுத்ததாயரையும் இராச்சியமுமாங்கொழிய
கான்தொடுத்தநெறிபோகிக் கண்டகரைக்களைந்தானூர்
தேன்தொடுத்தமலர்ச்சோலைத் திருவரங்கமென்பதுவே. 4

பெருவரங்களவைபற்றிப் பிழக்குடையஇராவணனை
உருவரங்கப்பொருதழித்து இவ்வுலகினைக்கண்பெறுத்தானூர்
குரவருமுக்கோங்களரக் குயில்கூவும்குளிர்பொழில்சூழ்
திருவரங்கமென்பதுவே என்திருமால்சேர்விடமே. 5

கீழுலகிலசுரர்களைக் கிழங்கிருந்துகிளராமே
ஆழிவிடுத்தவருடைய கருவழித்தவழிப்பனூர்
தாழைமடலூடுரிஞ்சித் தவளவண்ணப்பொடியணிந்து
யாழினிசைவண்டினங்கள் ஆளம்வைக்குமரங்கமே. 6

கொழுப்புடையசெழுங்குருதி கொழித்திழிந்துகுமிழ்த்தெறிய
பிழக்குடையவசுரர்களைப் பிணம்படுத்தபெருமானூர்
தழுப்பரியசந்தனங்கள் தடவரைவாயீர்த்துக்கொண்டு
தெழிப்புடையகாவிரிவந்து அடிதொழுஞ்சீரரங்கமே. 7

வல்லெயிற்றுக்கேழலுமாய் வாளெயிற்றுச்சீயமுமாய்
எல்லையில்லாத்தரணியையும் அவுணனையுமிடந்தானூர்
எல்லியம்போதிருஞ்சிறைவண்டு எம்பெருமான்குணம்பாடி
மல்லிகைவெண்சங்கூதும் மதிளரங்கமென்பதுவே. 8

குன்றாடுகொழுமுகில்போல் குவளைகள்போல்குரைகடல்போல்
நின்றாடுகணமயில்போல் நிறமுடையநெடுமாலூர்
குன்றூடுபொழில்நுழைந்து கொடியிடையார்முலையணவி
மன்றூடுதென்றலுமாம் மதிளரங்கமென்பதுவே. 9

¶ பருவரங்களவைபற்றிப் படையாலித்தெழுந்தானை
செருவரங்கப்பொருதழித்த திருவாளன்திருப்பதிமேல்
திருவரங்கத்தமிழ்மாலை விட்டுசித்தன்விரித்தனகொண்டு
இருவரங்கமெரித்தானை ஏத்தவல்லாரடியோமே. 10

¶ மரவடியைத்தம்பிக்கு வான்பணயம்வைத்துப்போய்வானோர்வாழ
செருவுடையதிசைக்கருமம் திருத்திவந்துலகாண்டதிருமால்கோயில்
திருவடிதன்திருவுருவும் திருமங்கைமலர்க்கண்ணும்காட்டிநின்று
உருவுடையமலர்நீலம் காற்றாட்டஓ! சலிக்குமொளியரங்கமே. 4-9-1

¶ தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலும்சிதகுரைக்குமேல்
என்னடியாரதுசெய்யார் செய்தாரேல்நன்றுசெய்தாரென்பர்போலும்
மன்னுடையவிபீடணற்காய்மதிளிலங்கைத் திசைநோக்கிமலர்க்கண்வைத்த
என்னுடையதிருவரங்கற்கன்றியும் மற்றொருவர்க்காளாவரே. 2

கருளுடையபொழில்மருதும் கதக்களிறும் பிலம்பனையும் கடியமாவும்
உருளுடையசகடரையும்மல்லரையு முடையவிட்டோசைகேட்டான்
இருளகற்றுமெறிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத்தேணிவாங்கி
அருள்கொடுத்திட்டடியவரை யாட்கொள்வானமருமூரணியரங்கமே. 3

பதினாறாமாயிரவர் தேவிமார்பணிசெய்ய * துவரையென்னு
மதில்நாயகராகி வீற்றிருந்தமணவாளர்மன்னுகோயில்

புதுநாண்மலர்க்கமல மெம்பெருமான்பொன்வயிற்றில்பூவேபோல்வான்
பொதுநாயகம்பாவித்து இறுமாந்து பொன்சாய்க்கும் புனலரங்கமே. 4

ஆமையாய்க்கங்கையாய் ஆழ்கடலா யவனியாயருவரைகளாய்
நான்முகனாய்நான்மறையாய் வேள்வியாய்த்தக்கணையாய்த்தானுமானான்
சேமமுடைநாரதனார் சென்றுசென்றுதுதித்திறைஞ்சக்கிடந்தான்கோயில்
பூமருவிப்புள்ளினங்கள் புள்ளரையன்புகழ்குழறும்புனலரங்கமே 5

மைத்துனன்மார்காதலியைமயிர்முடிப்பித் தவர்களையேமன்னராக்கி
உத்தரைதன்சிறுவனையுமுய்யக்கொண்ட வுயிராளனுறையும்கோயில்
பத்தர்களும்பகவர்களும் பழமொழிவாய்முனிவர்களும்பரந்தநாடும்
சித்தர்களும்தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய்நிற்கின்றதிருவரங்கமே. 6

குறட்பிரமசாரியாய் மாவலியைக்குறும்பதக்கியரசுவாங்கி
இறைப்பொழுதில்பாதாளம்கலவிருக்கை கொடுத்துகந்தவெம்மான்கோயில்
எறிப்புடையமணிவரைமே லிளநாயிறெழுந்தாப்போலரவணையின்வாய்
சிறப்புடையபணங்கள்மிசைச்செழுமணிகள் விட்டெறிக்கும்திருவரங்கமே. 7

உரம்பற்றியிரணியனையுகிர்நுதியா லொள்ளியமார்புறைக்கவூன்றி
சிரம்பற்றிமுடியிடியக்கண்பிதுங்க வாயலரத்தெழித்தான்கோயில்
உரம்பெற்றமலர்க்கமல முலகளந்தசேவடிபோலுயர்ந்துகாட்ட
வரம்புற்றகதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத்தலைவணக்கும்தண்ணரங்கமே 8

தேவுடையமீன்மாயாமைய யேனமாயரியாய்குறளாய்
மூவுருவிலிராமனாய்க் கண்ணனாய்க்கற்கியாய்முடிப்பான்கோயில்
சேவலொடுபெடையன்னம் செங்கமலமலரேறியூசலாடி
பூவணைமேல்துதைந்தெழுசெம்பொடியாடி விளையாடும்புனலரங்கமே. 9

செருவாளும்புள்ளாளன்மண்ணாளன் செருச்செய்யும்நாந்தகமென்னும்
ஒருவாளன் * மறையாளனோடாதபடையாளன்விழுக்கையாளன்
இரவாளன்பகலாளனென்னையாள னேழுலகப்பெரும்புரவாளன்
திருவாளனினிதாகத் திருக்கண்கள்வளர்கின்றதிருவரங்கமே. 10

¶ கைந்நாகத்திடர்கடிந்த கனலாழிப்படையுடையான்கருதும்கோயில்
தென்னாடும்வடநாடும்தொழநின்ற திருவரங்கத்திருப்பதியின்மேல்
மெய்ந்நாவன்மெய்யடியான் விட்டுசித்தன்விரித்ததமிழுரைக்கவல்லார்
எஞ்ஞான்றும்மெம்பெருமானிணையடிக்கீழிணைபிரியாதிருப்பர்தாமே. 11

¶துப்புடையாரையடைவதெல்லாம் சோர்விடத்துத்துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும்நின்னடைந்தே னானைக்குநீயருள்செய்தமையால்
எய்ப்பென்னைவந்துநலியும்போதங்கேதும் நானுன்னைநினைக்கமாட்டேன்
அப்போதைக்கிப்போதேசொல்லிவைத்தே னரங்கத்தரவணைப்பள்ளியானே. 4-10-1

சாமிடத்தென்னைக்குறிக்கொள்கண்டாய் சங்கொடுசக்கரமேந்தினானே!
நாமடித்தென்னையனேகதண்டஞ் செய்வதாநிற்பர்நமன்றமர்கள்
போமிடத்துன்திறத்தெத்தனையும் புகாவண்ணம்நிற்பதோர்மாயைவல்லை,
ஆமிடத்தேயுன்னைச்சொல்லிவைத்தே னரங்கத்தரவணைப்பள்ளியானே. 2

எல்லையில் வாசல்குறுகச்சென்றா லெற்றிநமன்றமர்பற்றும்போது
நில்லுமினென்னுமுபாயமில்லை நேமியும் சங்கமுமேந்தினானே

சொல்லலாம்போதே யுன்நாமமெல்லாம் சொல்லினேனென்னைக் குறிக்கொண்டென்றும்
அல்லற்படாவண்ணங்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. 3

ஒற்றைவிடையனும் நான்முகனு முன்னையறியாப்பெருமையோனே
முற்றவுலகெல்லாம் நீயேயாகி மூன்றெழுத்தாயமுதல்வனேயோ
அற்றதுவாணாளிவற்கென்றெண்ணி யஞ்சநமன்றமர்பற்றலுற்ற
அற்றைக்குநீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. 4

பையரவினணைப் பாற்கடலுள் பள்ளிகொள்கின்ற பரமமூர்த்தி
உய்யவுலகுபடைக்கவேண்டி யுந்தியில் தோற்றினாய் நான்முகனை
வையமனிசரைப்பொய்யென்றெண்ணிக் காலனையுமுடனேபடைத்தாய்
ஐய! இனியென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. 5

தண்ணெனவில்லைநமன்றமர்கள் சாலக்கொடுமைகள் செய்யாநிற்பர்
மண்ணொடுநீருமெரியும்காலும் மற்றுமாகாசமுமாகிநின்றாய்
எண்ணலாம்போதேயுன்நாமமெல்லா மெண்ணினேனென்னைக்குறிக்கொண்டென்றும்
அண்ணலேநீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. 6

செஞ்சொல்மறைப்பொருளாகிநின்ற தேவர்கள் நாயகனே யெம்மானே
எஞ்சலிலென்னுடையின்னமுதே யேழுலகுமுடையாயென்னப்பா
வஞ்சவுருவின்நமன்றமர்கள் வலிந்துநலிந்தென்னைப்பற்றும்போது
அஞ்சலமென்றென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. 7

நானேதுமுன்மாயமொன்றறியேன் நமன்றமர்பற்றிநலிந்திட்டு*இந்த
ஊனேபுகேயென்று மோதும்போதங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன்
வானேய்வானவர்தங்களீசா! மதுரைப்பிறந்தமாமாயனே!* என்
ஆனாய்நீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. 8

குன்றெடுத்தாநிரைகாத்தவாயா கோநிரைமேய்த்தவனே யெம்மானே!
அன்றுமுதலின்றறுதியா ஆதியஞ்சோதிமறந்தறியேன்
நன்றும்கொடியநமன்றமர்கள் நலிந்துவலிந்தென்னைப்பற்றும்போது
அன்றங்குநீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. 9

மாயவனைமதுசூதநனை மாதவனைமறையோர்களேத்தும்
ஆயர்களேற்றினையச்சுதனை யரங்கத்தரவணைப்பள்ளியானை
வேயர்புகழ்வில்லிபுத்தூர்மன் விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும்
தூயமனத்தனராகிவல்லார் தூமணிவண்ணனுக்காளர்தாமே. 10

தொண்டரடிப்பொடியாழ்வார் பாடியது:—திருமாலை.

¶ காவலிற்புலனைவைத்துக் கலிதன்னைக்கடக்கப்பாய்ந்து
நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர்தலைகள்மீதே
மூவுலகுண்டுமிழ்ந்தமுதல்வ! நின்நாமம்கற்ற
ஆவலிப்புடைமைகண்டாய் அரங்கமாநகருளானே! 1

¶ பச்சைமாலைபோல்மேனி பவளவாய்கமலச்செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம்கொழுந்தே! என்னும்
இச்சுவைதவிரயான்போய் இந்திரலோகமாளும்
அச்சுவைபெறினும்வேண்டேன் அரங்கமாநகருளானே! 2

வேதநூற்பிராயம்நூறு மனிசர்தாம்புகுவரேலும்
பாதியுமுறங்கிப்போகும் நின்றதிற்பதினையாண்டு
பேதைபாலகனதாகும் பிணிபசிமூப்புத்துன்பம்
ஆதலால்பிறவிவேண்டேன் அரங்கமாநகருளானே. 3

மொய்த்தவல்வினையுள்நின்று மூன்றெழுத்துடையபேரால்
கத்திரபந்துமன்றே பராங்கதிகண்டுகொண்டான்
இத்தனையடியாரானார்க்கு இரங்கும்நம்மரங்கனாய
பித்தனைப்பெற்றுமந்தோ! பிறவியுட்பிணங்குமாறே. 4

பெண்டிராற்சுகங்களுய்ப்பான் பெரியதோரிடும்பைபூண்டு
உண்டிராக் கிடக்கும்போது உடலுக்கேகரைந்துநைந்து
தண்டுழாய்மாலைமார்பன் தமர்களாய்ப்பாடியாடி
தொண்டுபூண்டமுதமுண்ணாத் தொழும்பர்சோறுகக்குமாறே. 5

மறஞ்சுவர்மதிளெடுத்து மறுமைக்கேவெறுமைபூண்டு
புறஞ்சுவரோட்டைமாடம் புரளும்போதறியமாட்டீர்
அறஞ்சுவராகிநின்ற அரங்கனார்க்காட்செய்யாதே
புறஞ்சுவர்கோலஞ்செய்து புட்கௌவக்கிடக்கின்றீரே. 6

புலையறமாகிநின்ற புத்தொடுசமணமெல்லாம்
கலையறக்கற்றமாந்தர் காண்பரோகேட்பரோதாம்
தலையறுப்புண்டும் சாகேன் சத்தியங்காண்மின்ஐயா !
சிலையினாலிலங்கைசெற்ற தேவனேதேவனாவான். 7

வெறுப்பொடுசமணர்முண்டர் விதியில்சாக்கியர்கள் * நின்பால்
பொறுப்பரியனகள்பேசில் போவதேநோயதாகி
குறிப்பெனக்கடையுமாகில் கூடுமேல், தலையையாங்கே
அறுப்பதேகருமங்கண்டாய் அரங்கமாநகருளானே. 8

மற்றுமோர்தெய்வமுண்டே மதியிலாமானிடங்காள்
உற்றபோதன்றிநீங்கள் ஒருவனென்றுணரமாட்டீர்
அற்றமேலொன்றறியீர் அவனல்லால்தெய்வமில்லை
கற்றினம்மேய்த்தவெந்தை கழலிணைபணிமினீரே. 9

நாட்டினான்தெய்வமெங்கும் நல்லதோரருள்தன்னாலே
காட்டினான்திருவரங்கம் உய்பவர்க்குய்யும்வண்ணம்
கேட்டிரேநம்பிமீர்காள் கெருடவாகனனும்நிற்க
சேட்டைதன்மடியகத்துச் செல்வம்பார்த்திருக்கின்றீரே. 10

ஒருவில்லாலோங்குமுந்நீரடைத்து உலகங்களுய்ய
செருவிலேயரக்கர்கோனைச்செற்ற நம்சேவகனார்
மருவியபெரியகோவில் மதிள்திருவரங்கமென்னா
கருவிலேதிருவிலாதீர் காலத்தைக்கழிக்கின்றீரே. 11

நமனும்முற்கலனும்பேச நரகில்நின்றார்கள்கேட்க
நரகமேசுவர்க்கமாகும் நாமங்களுடையநம்பி
அவனதூரரங்கமென்னாது-அயர்த்துவீழ்ந்தளியமாந்தர்
கவலையுட்படுகின்றாரென்று அதனுக்கேகவல்கின்றேனே. 12

எறியுநீர்வெறிகொள்வேலை மாநிலத்துயிர்களெல்லாம்
வெறிகொள்பூந்துளவமாலை விண்ணவர்கோனையேத்த
அறிவிலாமனிதரெல்லாம் அரங்கமென்றழைப்பராகில்
பொறியில்வாழ்நரகமெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே. 13

¶ வண்டினமுரலும்சோலை மயிலினமாலும்சோலை
கொண்டல்மீதணவும்சோலை குயிலினம்கூவும்சோலை
அண்டர்கோனமரும்சோலை அணிதிருவரங்கமென்னா
மிண்டர்பாய்ந்துண்ணும்சோற்றைவிலக்கி நாய்க்கிடுமினீரே. 14

மெய்யர்க்கேமெய்யனாகும் விதியிலாவென்னைப்போல
பொய்யர்க்கேபொய்யனாகும் புட்கொடியுடையகோமான்
உய்யப்போமுணர்வினார்கட்கு ஒருவனென்றுணர்ந்தபின்னை
ஐயப்பாடறுத்துத்தோன்றும் அழகனூரரங்கமன்றே. 15

சூதனாய்க்கள்வனாகித் தூர்த்தரோடிசைந்தகாலம்
மாதரார்கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனை
போதரேயென்றுசொல்லிப் புந்தியிட்புகுந்து * தன்பால்
ஆதரம்பெருகவைத்த அழகனூரரங்கமன்றே. 16

விரும்பிநின்றேத்தமாட்டேன் விதியிலேன்மதியொன்றில்லை
இரும்புபோல்வலியநெஞ்சம் இறையிறையுருகும்வண்ணம்
சுரும்பமர்சோலைசூழ்ந்த அரங்கமாகோயில்கொண்ட
கரும்பினைக்கண்டுகொண்டென்கண்ணிணைகளிக்குமாறே. 17

இனிதிரைத்திவலைமோத எறியும்தண்பரவைமீதே
தனிகிடந்தரசுசெய்யும் தாமரைக்கண்ணனெம்மான்
கனியிருந்தனையசெவ்வாய்க் கண்ணனைக்கண்டகண்கள்
பனியரும்புதிருமாலோ! என்செய்கேன்பாவியேனே. 18

¶ குடதிசைமுடியைவைத்துக் குணதிசைபாதம்நீட்டி
வடதிசைபின்புகாட்டித் தென்திசையிலங்கைநோக்கி
கடல்நிறக்கடவுளெந்தை அரவணைத்துயிலுமாகண்டு
உடலெனக்குருகுமாலோ என்செய்கேன் உலகத்தீரே. 19

பாயுநீரரங்கந்தன்னுள் பாம்பணைப்பள்ளிகொண்ட
மாயனார்திருநன்மார்வும் மரகதவுருவும்தோளும்
தூயதாமரைக்கண்களும் துவரிதழ்ப்பவளவாயும்
ஆயசீர்முடியும்தேசும் அடியரோர்க்ககலலாமே. 20

பணிவினால்மனமதொன்றிப் பவளவாயரங்கனார்க்கு
துணிவினால்வாழமாட்டாத்தொல்லைநெஞ்சே! நீசொல்லாய்
அணியனார்செம்பொனாய அருவரையனையகோயில்
மணியனார்கிடந்தவாற்றை மனத்தினால்நினைக்கலாமே. 21

பேசிற்றேபேசலல்லால் பெருமையொன்றுணரலாகாது
ஆசற்றார்தங்கட்கல்லால் அறியலாவானுமல்லன்
மாசற்றார்மனத்துளானை வணங்கிநாமிருப்பதல்லால்
பேசத்தானாவதுண்டோ பேதைநெஞ்சே! நீசொல்லாய். 22

கங்கையிற்புனிதமாய காவிரிநடுவுபாட்டு
பொங்குநீர்பரந்துபாயும் பூம்பொழிலரங்கந்தன்னுள்
எங்கள்மாலிறைவனீசன் கிடந்ததோர்கிடக்கைகண்டும்
எங்ஙனம்மறந்துவாழ்கேன் ஏழையேனேழையேனே. 23

வெள்ளநீர்பரந்துபாயும் விரிபொழிலரங்கந்தன்னுள்
கள்வனார்கிடந்தவாறும் கமலநன்முகமும்கண்டும்
உள்ளமே! வலியைபோலும் ஒருவனென்றுணரமாட்டாய்
கள்ளமேகாதல்செய்து உன்கள்ளத்தேகழிக்கின்றாயே. 24

குளித்துமூன்றனலையோம்பும் குறிகொளந்தணமைதன்னை
ஒளித்திட்டேன், என்கணில்லை நின்கணும்பத்தனல்லேன்
களிப்பதென்கொண்டு நம்பி! கடல்வண்ணா! கதறுகின்றேன்
அளித்தெனக்கருள்செய்கண்டாய் அரங்கமானகருளானே! 25

போதெல்லாம்போதுகொண்டு உன்பொன்னடிபுனையமாட்டேன்
தீதிலாமொழிகள்கொண்டு உன்திருக்குணம்செப்பமாட்டேன்
காதலால்நெஞ்சமன்பு கலந்திலேன், அதுதன்னாலே
ஏதிலேனரங்கற்குஎல்லே! என்செய்வான்தோன்றினேனே. 26

குரங்குகள்மலையைநூக்கக் குளித்துத்தாம்புரண்டிட்டோடி
தரங்கநீரடைக்கலுற்ற சலமிலாவணிலம்போலேன்
மரங்கள்போல்வலியநெஞ்சம் வஞ்சனேன், நெஞ்சுதன்னால்
அரங்கனார்க்காட்செய்யாதே அளியத்தேனயர்க்கின்றேனே. 27

உம்பராலறியலாகா ஒளியுளார், ஆனைக்காகி
செம்புலாலுண்டுவாழும் முதலைமேல்சீறிவந்தார்
நம்பரமாயதுண்டே நாய்களோம் சிறுமையோரா
எம்பிராற்காட்செய்யாதே என்செய்வான்தோன்றினேனே. 28

ஊரிலேன்காணியில்லை உறவுமற்றொருவரில்லை
பாரில்நின்பாதமூலம் பற்றிலேன்பரமமூர்த்தி!
காரொளிவண்ணனே! கண்ணனே! கதறுகின்றேன்
ஆருளர் களைகணம்மா! அரங்கமாநகருளானே! 29

மனத்திலோர்தூய்மையில்லை வாயிலோரின்சொலில்லை
சினத்தினால்செற்றம்நோக்கித் தீவிளிவிளிவன்வாளா
புனத்துழாய்மாலையானே! பொன்னிசூழ்திருவரங்கா!
எனக்கினிக்கதியென்சொல்லாய் என்னையாளுடையகோவே! 30

தவத்துளார்தம்மிலல்லேன் தனம்படைத்தாரிலல்லேன்
உவர்த்தநீர்போல என் தனுற்றவர்க்கொன்றுமல்லேன்
துவர்த்தசெவ்வாயினார்க்கே துவக்கறத்துரிசனானேன்
அவத்தமேபிறவிதந்தாய் அரங்கமாநகருளானே! 31

ஆர்த்துவண்டலம்புஞ்சோலை அணிதிருவரங்கந்தன்னுள்
கார்த்திரளனையமேனிக் கண்ணனே! உன்னைக்காணும்
மார்க்கமொன்றறியமாட்டா மனிசரில் துரிசனாய
மூர்க்கனேன்வந்துநின்றேன் மூர்க்கனேன்மூர்க்கனேனே 32

மெய்யெல்லாம்போகவிட்டு விரிகுழலாரிற்பட்டு
பொய்யெல்லாம்பொதிந்துகொண்ட போட்க்கனேன் வந்துநின்றேன்
ஐயனே! அரங்கனே! உன்னருளென்னுமாசைதன்னால்
பொய்யனேன் வந்துநின்றேன் பொய்யனேன்பொய்யனேனே 33

உள்ளத்தேயுறையும்மாலை உள்ளுவானுணர்வொன்றில்லா
கள்ளத்தேன்நானும்தொண்டாய்த் தொண்டுக்கேகோலம் பூண்டேன்
உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிதியென்று
வெள்கிப்போயென்னுள்ளேநான் விலவறச்சிரித்திட்டேனே. 34

தாவியென்றுலகமெல்லாம் தலைவிளார்க்கொண்டவெந்தாய்
சேவியேனுன்னையல்லால் சிக்கெனச்செங்கண்மாலே!
ஆவியே! அமுதே! என் தனாருயிரனையவெந்தாய்!
பாவியேனுன்னையல்லால் பாவியேன்பாவியேனே. 35

மழைக்கன்றுவரைமுனேந்தும் மைந்தனே! மதுரவாறே!
உழைக்கன்றேபோல நோக்கமுடையர்வலையுட்பட்டு
உழைக்கின்றேற்கு என்னைநோக்காதொழிவதே, உன்னையன்றே
அழைக்கின்றேன் ஆதிமூர்த்தி! அரங்கமாநகருளானே! 36

தெளிவிலாக்கலங்கல்நீர்சூழ் திருவரங்கத்துள்ளோங்கும்
ஒளியுளார்தாமேயன்றே தந்தையும்தாயுமாவார்
எளியதோரருளுமன்றே என்திறத்தெம்பிரானார்
அளியன்நம்பையல்என்னார் அம்மவோ! கொடியவாறே. 37

¶ மேம்பொருள்போகவிட்டு மெய்ம்மையைமிகவுணர்ந்து
ஆம்பரிசறிந்துகொண்டு ஐம்புலனகத்தடக்கி
காம்பறத்தலைசிரைத்து உன்கடைத்தலையிருந்து * வாழும்
சோம்பரையுகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே. 38

அடிமையிற்குடிமையில்லா அயல்சதுப்பேதிமார்கள்
குடிமையில்கடமைபட்ட குக்கரில்பிறப்பரேலும்
முடியினில்துளபம்வைத்தாய் மொய்கழற்கன்புசெய்யும்
அடியரையுகத்திபோலும் அரங்கமாநகருளானே. 39

திருமறுமார்வ! நின்னைச்சிந்தையுள்திகழவைத்து
மருவியமனத்தராகில் மாநிலத்துயிர்களெல்லாம்
வெருவுறக்கொன்றுசுட்டிட்டீட்டியவினையரேலும்
அருவினைப்பயனதுய்யார் அரங்கமாநகருளானே. 40

வானுளாரறியலாகா வானவா! என்பராகில்
தேனுலாம்துளபமாலைச் சென்னியா! என்பராகில்
ஊனமாயினகள்செய்யும் ஊனகாரகர்களேலும்
போனகம்செய்தசேடம் தருவரேல்புனிதமன்றே. 41

பழுதிலாவொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேலும் எம்மடியார்களாகில்
தொழுமினீர்கொடுமின்கொண்மின் என்று நின்னோடுமொக்க
வழிபடவருளினாய்போல் மதிள்திருவரங்கத்தானே! 42

அமரவோரங்கமாறும் வேதமோர்நான்குமோதி
தமர்களில்தலைவராய சாதியந்தணர்களேலும்
நுமர்களைப்பழிப்பராகில் நொடிப்பதோரளவில் * ஆங்கே
அவர்கள்தாம்புலையர்போலும் அரங்கமாநகருளானே! 43

¶ பெண்ணுலாம்சடையினானும் பிரமனுமுன்னைக்காண்பான்
எண்ணிலாவூழியூழி தவஞ்செய்தார்வெள்கிநிற்ப
விண்ணுளார்வியப்பவந்து ஆனைக்கன்றருளையீந்த
கண்ணறா * உன்னையென்னோ களைகணாக்கருதுமாறே. 44

¶ வளவெழும்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள்
கவளமால்யானைகொன்ற கண்ணனை அரங்கமாலை
துளவத்தொண்டாயதொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல்
இளையபுன்கவிதையேலும் எம்பிராற்கினியவாறே. 45

திருப்பள்ளியெழுச்சி.

¶ கதிரவன் குணதிசைச்சிகரம் வந்தணைந்தான் கனவிருளகன்றது காலையம்பொழுதாய்
மதுவிரிந்தொழுகினமாமலரெல்லாம் வானவரரசர்கள் வந்துவந்தீண்டி
எதிர்திசைநிறைந்தனரிவரொடும்புகுந்த இருங்களிற்றீட்டமும்பிடியொடுமுரசும்
அதிர்தலிலலைகடல்போன்றுளதெங்கும் அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 1

கொழுங்கொடிமுல்லையின் கொழுமலரணவிக்கூர்ந்ததுகுணதிசைமாருதமிதுவோ
எழுந்தனமலரணைப்பள்ளிகொள்ளன்னம் ஈன்பனிநனைந்ததமிருஞ்சிறகுதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரைபேழ்வாய் வெள்ளெயிறுறவதன்விடத்தினுக்கனுங்கி
அழுங்கியவானையினருந்துயர்கெடுத்த அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 2

சுடரொளிபரந்தனசூழ்திசையெல்லாம் துன்னியதாரகைமின்னொளிசுருங்கி
படரொளிபசுத்தனன் பனிமதியிவனோ பாயிருளகன்றது பைம்பொழில்கமுகின்
மடலிடைக்கீறிவண்பாளைகள்நாற வைகறைகூர்ந்தது மாருதமிதுவோ
அடலொளிதிகழ்தருதிகிரியந்தடக்கை அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 3

மோட்டிளமேதிகள் தளைவிடுமாயர்கள் வேய்ங்குழலோசையும் விடைமணிக்குரலும்
ஈட்டியவிசைதிசைபரந்தனவயலுள் இரிந்தனசுரும்பினம், இலங்கையர் குலத்தை
வாட்டியவரிசிலைவானவரேறே! மாமுனிவேள்வியைக்காத்து - அவபிரதம்
ஆட்டியவடுதிறலயோத்தியெம்மரசே! அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 4

புலம்பினபுட்களும் பூம்பொழில்களின்வாய் போயிற்றுக்கங்குல்புகுந்ததுபுலரி
கலந்ததுகுணதிசைக் கனைகடலரவம் களிவண்டுமிழற்றியகலம்பகம்புனைந்த
அலங்கலந்தொடையல்கொண்டடியிணைபணிவான் அமரர்கள் புகுந்தனராதலிலம்மா!
இலங்கையர்கோன்வழிபாடுசெய்கோயில் எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே. 5

இரவியர்மணிநெடுந்தேரொடுமிவரோ இறையவர் பதினொருவிடையருமிவரோ
மருவியமயிலினனறுமுகனிவனோ மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி
புரவியோடாடலும் பாடலும் தேரும் குமரதண்டம் புகுந்தீண்டியவெள்ளம்
அருவரையனையநின்கோயில்முன்னிவரோ அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 6

அந்தரத்தமரர்கள் கூட்டங்களிவையோ அருந்தவமுனிவரும் மருதருமிவரோ
இந்திரனானையும் தானும் வந்திவனோ எம்பெருமானுனகோயிலின்வாசல்
சுந்தரர்நெருக்கவிச்சாதரர்நூக்க இயக்கரும் மயங்கினர் திருவடித்தொழுவான்
அந்தரம்பாரிடமில்லை மற்றிதுவோ அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 7

வம்பவிழ்வானவர் வாயுறைவழங்க மாநிதிகபிலையொண்கண்ணாடிமுதலா
எம்பெருமான்படிமெய்க்கலம் காண்டற்கு ஏற்பனவாயினகொண்டுநன்முனிவர்
தும்புருநாரதர் புகுந்தனரிவரோ தோன்றினனிரவியும் துலங்கொளிபரப்பி
அம்பரதலத்தில்நின்ற கல்கின்றதிருள்போய் அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 8

¶ஏதமில்தண்ணுமையெக்கம்மத்தளி யாழ்குழல்முழவமோடிசைதிசைகெழுமி
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள் கந்தருவரவர்கங்குலுளெல்லாம்
மாதவர் வானவர் சாரணரியக்கர் சித்தரும் மயங்கினர் திருவடித்தொழுவான்
ஆதலிலவர்க்கு நாளோலக்கமருள அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 9

¶கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தனவிவையோ கதிரவன்கனைகடல் முளைத்தனனிவனோ
துடியிடையார் சுரிகுழல்பிழிந்துதறித் துகிலுடுத்தேறினர்சூழ் புனலரங்கா!
தொடையொத்ததுளவமுங்கூடையும்பொலிந்துதோன்றியதோள்தொண்டரடிப்பொடிஎன்னு
மடியனை * அளியனென்றருளியுன்னடியார்க் காட்படுத்தாய் பள்ளியெழுந்தருளாயே. 10

திருமங்கையாழ்வார் பாடியது:—பெரியதிருமொழி.

¶ பள்ளியாவதுபாற்கடலரங்கம் இரங்கவன்பேய்முலை
பிள்ளையாயுயிருண்டவெந்தை பிரானவன்பெருகுமிடம்
வெள்ளியான்கரியான் மணிநிறவண்ணனென்றெண்ணி * நாடொறும்
தெள்ளியார்வணங்கும்மலைத் திருவேங்கடமடைநெஞ்சமே. 1-8-2

¶ உந்திமேல்நான்முகனைப்படைத்தான் உலகுண்டவ
னெந்தைபெம்மான் * இமையோர்கள் தாதைக்கிடமென்பரால்

சந்திரனொடுமணியுங்கொழிக்கும் புனற்காவிரி
அந்திபோலும்நிறத்தார்வயல்சூழ் தென்னரங்கமே. 5-4-1

வையமுண்டாலிலைமேவுமாயன் * மணிநீண்முடிப்
பைகொள்நாகத்தணையான் பயிலுமிடமென்பரால்
தையல்நல்லார்குழல்மாலையும் மற்றவர் தடமுலை
செய்யசாந்தும்கலந்திழிபுனல்சூழ் தென்னரங்கமே. 2

பண்டிவ்வையமளப்பான்சென்று மாவலிகையில்நீர்
கொண்ட * ஆழித்தடக்கைக் குறளனிடமென்பரால்
வண்டுபாடும்மதுவார்புனல் வந்திழிகாவிரி
அண்டநாறும்பொழில்சூழ்ந்தழகார்தென்னரங்கமே.

விளைத்தவெம்போர் விறல்வாளரக்கன்நகர்பாழ்பட
வளைத்தவல்வில்தடக்கையவனுக்கிடமென்பரால்
துளைக்கையானைமருப்புமகிலுங்கொணர்ந்துந்தி * முன்,
திளைக்குஞ்செல்வப்புனல்காவிரிசூழ் தென்னரங்கமே.

வம்புலாம்கூந்தல்மண்டோதரிகாதலன் வான்புக
அம்புதன்னால்முனிந்த வழகனிடமென்பரால்
உம்பர்கோனுமுலகேழும் வந்தீண்டிவணங்கும் * நல்
செம்பொனாரும்மதிள்சூழ்ந்தழகார்தெனனரங்கமே.

கலையுடுத்தவகலல்குல்வனபேய்மகள்தாயென
முலைகொடுத்தாளுயிருண்டவன் வாழுமிடமென்பரால்
குலையெடுத்தகதலிப் பொழிலூடும் வந்துந்தி * முன்
அலையெடுக்கும்புனற்காவிரிசூழ் தென்னரங்கமே. 6

கஞ்சன்நெஞ்சும்கடுமல்லரும் சகடமும்காலினால்
துஞ்சவென்றசுடராழியான் வாழுமிடமென்பரால்
மஞ்சுசேர்மாளிகை நீடகில்புகையும் * மறையோர்
செஞ்சொல்வேள்விப்புகையுங்கமழும் தென்னரங்கமே. 7

ஏனமீனாமையோடு அரியும்சிறுகுறளுமாய்
தானுமாய தரணித்தலைவனிடமென்பரால்
வானும்மண்ணும்நிறையப்புகுந்தீண்டிவணங்கும் * நல்
தேனும்பாலும்கலந்தன்னவர்சேர் தென்னரங்கமே. 8

சேயனென்றும்மிகப்பெரியன் நுண்நேர்மையினாயவிம்
மாயையை * ஆருமறியாவகையானிடமென்பரால்
வேயின்முத்தும்மணியுங்கொணர்ந்தார்புனற்காவிரி
ஆய்பொன்மாமதிள்சூழ்ந்தழகார்தென்னரங்கமே. 9

¶ அல்லிமாதரமரும் திருமார்வனரங்கத்தை
கல்லின்மன்னுமதிள் மங்கையர்கோன்கலிகன்றிசொல்

நல்லிசைமாலைகள் நாலிரண்டுமிரண்டுமுடன்
வல்லவர்தாமுலகாண்டு பின்வானுலகாள்வரே. 9

¶வெருவாதாள்வாய்வெருவி வேங்கடமே யென்கின்றாளால்
மருவாளாலென்குடங்கால் வாணெடுங்கண் துயில்மறந்தாள்*வண்டார்கொண்ட
லுருவாளன் வானவர் தமுயிராள னொலிதிரைநீர்ப்பௌவங்கொண்ட
திருவாளன் * என்மகளைச்செய்தனகளெங்ஙனம் நான் சிந்திக்கேனே. 5-5-1

கலையாளாவகலல்குல்கனவளையும் கையாளாவென்செய்கேன் நான்
விலையாளாவடியேனை வேண்டுதியோவேண்டாயோவென்னும் * மெய்ய
மலையாளன் வானவர்தம்தலையாளன் மராமரமேழெய்தவென்றிச்
சிலையாளன் * என்மகளைச்செய்தனக ளெங்ஙனம் நான் சிந்திக்கேனே. 2

மானாயமென்னோக்கி வாணெடுங்கண் நீர்மல்கும் வளையும் சோரும்
தேனாயநறுந்துழா யலங்கலின் திறம்பேசியுறங்காள் காண்மின்
கானாயன், கடிமனையில் தயிருண்டு நெய்பருகநந்தன்பெற்ற
ஆனாயன் * என்மகளைச்செய்தனக ளம்மனைமீரறிகிலேனே. 3

தாய்வாயில் சொற்கேளான் தன்னாயத்தோடணையாள், தடமென்கொங்கையே
ஆரச்சாந்தணியா ளெம்பெருமான் திருவரங்கமெங்கேயென்னும்
பேய்மாயமுலையுண்டிவ்வுலகுண்ட பெருவயிற்றன் பேசில்நங்காய்
மாமாயனென்மகளைச்செய்தனகள் மங்கைமீர்மதிக்கிலேனே. 4

பூண்முலைமேல் சாந்தணியாள் பொருகயல் கண்மையெழுதாள் பூவைபேணாள்
ஏணறியாளெத்தனையும் எம்பெருமான் திருவரங்கமெங்கேயென்னும்
நாண்மலராள்நாயகனாய் நாமறியவாய்ப்பாடிவளர்ந்தநம்பி
ஆண்மகனாயென்மகளைச்செய்தனக ளம்மனைமீரறிகிலேனே. 5

தாதாடுவனமாலை தாரானோவென்றென்றே தளர்ந்தாள் காண்மின்
யாதானுமொன்றுரைக்கி லெம்பெருமான் திருவரங்கமென்னும் * பூமேல்
மாதாளன், குடமாடி, மதுசூதன், மன்னர்க்காய்முன்னம்சென்ற
தூதாளன் * என்மகளைச்செய்தனக ளெங்ஙனம் நான் சொல்லுகேனே. 6

வாராளுமிளங்கொங்கை வண்ணம்வேறாயினவாறெண்ணாள் * எண்ணில்
பேராளன் பேரல்லால் பேசாள் இப்பெண்பெற்றேனென்செய்கேன்நான்
தாராளன் தண்குடந்தைநகராளன் ஐவர்க்காயமரிலுய்த்த
தேராளன் * என்மகளைச் செய்தனக ளெங்ஙனம் நான் செப்புகேனே. 7

உறவாதுமிலளென்றென் றொழியாது பலரேசுமலராயிற்றால்
மறவாதேயெப்பொழுதும் மாயவனே மாதவனே யென்கின்றாளால்
பிறவாதபேராளன் பெண்ணாளன்மண்ணாளன் விண்ணோர்தங்கள்
அறவாளன் * என்மகளைச்செய்தனக ளமனை மீரறிகிலேனே. 8

பந்தோடுகழல்மருவாள்பைங்கிளியும் பாலூட்டாள் பாவைபேணாள்
வந்தானோ திருவரங்கன் வாரானோவென்றென்றேவளையும் சோரும்
சந்தோகன்பௌழியன் ஐந்தழலோம்பு தைத்திரியன் சாமவேதி
அந்தோவந்தென்மகளைச் செய்தனக ளம்மனைமீரறிகிலேனே. 9

¶சேலுகளும் வயல்புடைசூழ்திருவரங்கத்தம்மானைச் சிந்தைசெய்த
நீலமலர்க்கண்மடவாள்நிறைவழிவைத் தாய்மொழிந்தவதனை * நேரார்

காலவேல்பரகாலன் கலிகன்றியொலிமாலைகற்றுவல்லார்
மாலைசேர்வெண்குடைக்கீழ் மன்னவராய்ப்பொன்னுலகில்வாழ்வர்தாமே. 10

¶ கைம்மானமழகளிற்றைக் கடற்கிடந்தகருமணியை
மைம்மானமரதகத்தை மறையுரைத்திருமாலை
எம்மானைஎனக்கென்றுமினியானைப், பனிகாத்த
அம்மானை * யான்கண்டதணிநீர்த்தென்னரங்கத்தே. 5-6-1

¶ பேரானைக்குறுங்குடியெம்பெருமானை * திருத்தண்கா
லூரானைக்கரம்பனூருத்தமனை * முத்திலங்கு
காரார்திண்கடலேழு மலையேழிவ்வுலகேழுண்டும்
ஆராதென்றிருந்தானைக் கண்டதுதென்னரங்கத்தே. 2

ஏனாகியுலகிடந்தன்றிருநிலனும்பெருவிசும்பும்
தானாயபெருமானைத் தன்னடியார்மனத்தென்றும்
தேனாகியமுதாகித் திகழ்ந்தானை, மகிழ்ந்தொருகால்
ஆனாயனானானை * கண்டதுதென்னரங்கத்தே 3

வளர்ந்தவனைத் தடங்கடலுள், வலியுருவில் திரிசகடம்
தளர்ந்துதிரவுதைத்தவனைத், தரியாதன்றிரணியனைப்
பிளந்தவனை * பெருநிலமீரடிநீட்டிப்பண்டொருநாள்
அளந்தவனை * யான்கண்டதணிநீர்த்தென்னரங்கத்தே 4

நீரழலாய் நெடுநிலனாய் நின்றானை * அன்றரக்க
னூரழலாலுண்டானைக் கண்டார் பின்காணாமே
பேரழலாய்ப்பெருவிசும்பாய்ப் பின்மறையோர் மந்திரத்தின்
ஆரழலாலுண்டானைக் கண்டதுதென்னரங்கத்தே. 5

தஞ்சினத்தைத்தவிர்த்தடைந்தார் தவநெறியை * தரியாது
கஞ்சனைக்கொன்றன்றுலகமுண்டுமிழ்ந்தகற்பகத்தை
வெஞ்சினத்தகொடுந்தொழிலோன் விசையுருவையசைவித்த
அஞ்சிறைப்புட்பாகனை, யான்கண்டதுதென்னரங்கத்தே. 6

சிந்தனையைத்தவநெறியைத் திருமாலை * பிரியாது
வந்தெனதுமனத்திருந்த வடமலையை * வரிவண்டார்
கொந்தணைந்தபொழில்கோவலுலகளப்பானடிநிமிர்த்த
அந்தணனை * யான்கண்டதணிநீர்த்தென்னரங்கத்தே. 7

துவரித்தவுடையவர்க்கும் தூய்மையில்லாச்சமணர்க்கும்
அவர்கட்கங்கருளில்லாவருளானை * தன்னடைந்த
எமர்கட்குமடியேற்குமெம்மாற்குமெம்மனைக்கும்
அமரர்க்கும்பிரானாரைக், கண்டதுதென்னரங்கத்தே 8

பொய்வண்ணம்மனத் தகற்றிப் புலனைந்தும்செலவைத்து
மெய்வண்ணம்நினைந்தவர்க்கு மெய்நின்றவித்தகனை

மைவண்ணமகருமுகில்போல் திகழ்வண்ணமரதகத்தின்
அவ்வண்ணவண்ணனை, யான்கண்டதுதென்னரங்கத்தே. 9

¶ ஆமருவிநிரைமேய்த்த அணியரங்கத்தம்மானை
காமருசீர்க்கலிகன்றி யொலிசெய்தமலிபுகழ்சேர்
நாமருவுதமிழ்மாலை நாலிரண்டோடிரண்டினையும்
தாமருவிவல்லார்மேல் சாராதீ வினைதானே. 10

பண்டைநான்மறையும்வேள்வியும் கேள்விப்பதங்களும்பதங்களின்பொருளும்
பிண்டமாய்விரிந்தபிறங்கொளியனலும் பெருகியபுனலொடுநிலனும்
கொண்டல்மாருதமும்குரைகடலேழு மேழுமாமலைகளும் விசும்பும்
அண்டமும்தானாய்நின்றவெம்பெருமா னரங்கமாநகரமர்ந்தானே. 5-7-1

இந்திரன்பிரமனீசனென்றிவர்களெண்ணில்பல்குணங்களேயியற்ற
தந்தையும்தாயும்மக்களும் மிக்கசுற்றமும்சுற்றிநின்றகலாப்
பந்தமும் * பந்தமறுப்பதோர்மருந்தும்பான்மையும் பல்லுயிர்க்கெல்லாம்
அந்தமும்வாழ்வுமாயவெம்பெருமா னரங்கமாநகரமர்ந்தானே. 2

மன்னுமாநிலனும்மலைகளும்கடலும் வானமும்தானவருலகும்
துன்னுமாயிருளாய்த்துலங்கொளிசுருங்கித் தொல்லைநான்மறைகளும்மறைய
பின்னும்வானவர்க்கும்முனிவர்க்கும்நல்கிப் பிறங்கிருள்நிறங்கெட * ஒருநாள்
அன்னமாயன்றங்கருமறைபயந்தா னரங்கமாநகரமர்ந்தானே. 3

மாயிருங்குன்றமொன்றுமத்தாக மாசுணமதனொடுமளவி
பாயிரும்பௌவம் பகடுவிண்டலறப் படுதிரைவிசும்பிடைப்படர
சேயிருவிசும்பும்திங்களும்சுடரும் தேவரும்தாமுடன்திசைப்ப
ஆயிரந்தோளாலலைகடல்கடைந்தா னரங்கமாநகரமர்ந்தானே. 4

எங்ஙனே யுய்வர் தானவர்நினைந்தா லிரணியனிலங்குபூணகலம்
பொங்குவெங்குருதிபொன்மலைபிளந்து பொழிதருமருவியொத்திழிய
வெங்கண்வாளெயிற்றோர்வெள்ளிமாவிலங்கல் விண்ணுறக்கனல்விழித்தெழுந்தது
அங்ஙனேயொக்கவரியுருவானா னரங்கமாநகரமர்ந்தானே. 5

ஆயிரம்குன்றம் சென்றுதொக்கனைய அடல்புரையெழில்திகழ்திரடோள்
ஆயிரந்துணியவடல்மழுப்பற்றி மற்றவனகல்விசும்பணைய
ஆயிரம்பெயராலமரர்சென்றிறைஞ்ச அறிதுயிலலைகடல்நடுவே
ஆயிரம்சுடர்வாயரவணைத்துயின்றா னரங்கமாநகரமர்ந்தானே. 6

சுரிகுழல்கனிவாய்த்திருவினைப்பிரித்த கொடுமையில்கடுவிசையரக்கன்
எரிவிழித்திலங்குமணிமுடிபொடிசெய் திலங்கைபாழ்படுப்பதற்கெண்ணி
வரிசிலைவளையவடுசரந்துரந்து மறிகடல்நெறிபட * மலையால்
அரிகுலம்பணிகொண்டலைகடலடைத்தா னரங்கமாநகரமர்ந்தானே. 7

ஊழியாயோமத்துச்சியா யொருகாலுடையதேரொருவனாய் உலகில்
சூழிமால்யானைத்துயர்கெடுத்திலங்கை மலங்கவன் றடுசரந்துரந்து

பாழியால்மிக்கபார்த்தனுக்கருளிப் பகலவனொளிகெட பகலே
ஆழியாலன்றங்காழியைமறைத்தா னரங்கமாநகரமர்ந்தானே. 8

பேயினார்முலையூண்பிள்ளையாயொருகால் பெருநிலம்விழுங்கியதுமிழ்ந்த
வாயனாய் * மாலாயாலிலைவளர்ந்து மணிமுடிவானவர்தமக்குச்
சேயனாய் * அடியோர்க்கணியனாய்வந்தென் சிந்தையுள்வெந்துயரறுக்கும்
ஆயனாயன்றுகுன்றமொன்றெடுத்தா னரங்கமாநகரமர்ந்தானே. 9

¶ பொன்னுமாமணியும்முத்தமும்சுமந்துபொருதிரைமாநதிபுடைசூழ்ந்து
அன்னம்மாடுலவுமலைபுனல்சூழ்ந்த வரங்கமாநகரமர்ந்தானை
மன்னுமாமாடமங்கையர்தலைவன் மானவேற்கலிபன்வாயொலிகள்
பன்னியபனுவல்பாடுவார்நாளும் பல்வினைபற்றறுப்பாரே. 10

¶ ஏழையேதலன்கீழ்மகனென்னா திரங்கி மற்றவர்க்கின்னருள்சுரந்து
மாழைமான்மடநோக்கியுன்தோழியும்பியெம்பியென்றொழிந்திலை * உகந்து
தோழன்நீயெனக்கிங்கொழியென்ற சொற்கள்வந் தடியேன்மனத்திருந்திட
ஆழிவண்ண! நின்னடியிணையடைந்தேன் அணிபொழில்திருவரங்கத்தம்மானே. 5-8-1

வாதமாமகன்மற்கடம்விலங்கு மற்றோர்சாதியென்றொழிந்திலை * உகந்து
காதலாதரம்கடலினும்பெருகச்செய் தகவினுக்கில்லைகைம்மாறென்று
கோதில்வாய்மையினாயொடுமுடனே யுண்பனானென்றவொண்பொருள் * எனக்கு
மாதல்வேண்டுமென்றடியிணையடைந்தேன் அணிபொழில்திருவரங்கத்தம்மானே. 2

கடிகொள்பூம்பொழில்காமருபொய்கை வைகு தாமரைவாங்கியவேழம்
முடியும்வண்ணமோர்முழுவலிமுதலை பற்ற மற்றதுநின்சரண்நினைப்ப
கொடியவாய்விலங்கினுயிர்மலங்கக் கொண்டசீற்றமொன்றுண்டுளதறிந்து * உன்
அடியனேனும்வந்தடியிணையடைந்தேன் அணிபொழில்திருவரங்கத்தம்மானே. 3

நஞ்சுசோர்வதோர்வெஞ்சினவரவம் வெருவிவந்துநின்சரணெனச்சரணாய்
நெஞ்சிற்கொண்டு நின்னஞ்சிறைப்பறவைக் கடைக்கலம்கொடுத்தருள்செய்ததறிந்து
வெஞ்சொலாளர்கள்நமன்றமர்கடியர் கொடியசெய்வனவுள * அதற்கடியேன்
அஞ்சிவந்துநின்னடியிணையடைந்தேன் அணிபொழில்திருவரங்கத்தம்மானே. 4

மாகமாநிலம்முழுதும்வந்திறைஞ்சும் மலரடிக்கண்டமாமறையாளன்
தோகைமாமயிலன்னவரின்பம் துற்றிலாமையிலத்த இங்கொழிந்து
போகம்நீயெய்திப்பின்னும்நம்மிடைக்கே போதுவாயென்றபொன்னருள் * எனக்கும்
ஆகவேண்டுமென்றடியிணையடைந்தேன் அணிபொழில்திருவரங்கத்தம்மானே!
மன்னுநான்மறைமாமுனிபெற்ற மைந்தனை மதியாதவெங்கூற்றந் 5
தன்னையஞ்சி * நின்சரணெனச்சரணாய்த் தகவில்காலனையுகமுனிந்தொழியா
பின்னையென்றும்நின் திருவடிப்பிரியாவண்ணம் எண்ணியபேருள் * எனக்கும்
அன்னதாகுமென்றடியிணையடைந்தேன் அணிபொழில்திருவரங்கத்தம்மானே.
ஓதுவாய்மையும்உவனியப்பிறப்பும் உனக்குமுன்தந்தவந்தணனொருவன் 6
காதலென்மகன்புகலிடங்காணேன் கண்டுநீதருவாயெனக்கென்று
கோதில்வாய்மையினானுனைவேண்டிய குறைமுடித்தவன்சிறுவனைக்கொடுத்தாய்
ஆதலால்வந்துன்னடியிணையடைந்தேன் அணிபொழில்திருவரங்கத்தம்மானே !
வேதவாய்மொழியந்தணனொருவன் எந்தைநின்சரணென்னுடையமனைவி 7
காதல்மக்களைப்பயத்தலும்காணாள் கடியதோர்தெய்வங்கொண்டொளிக்குமென்றழைப்ப

ஏதலார்முன்னேயின்னருளவற்குச்செய்து உன்மக்கள்மற்றிவரென்றுகொடுத்தாய்
ஆதலால்வந்துன்னடியிணையடைந்தேன் அணிபொழில்திருவரங்கத்தம்மானே! 8

¶ துளங்குநீண்முடியரசர்தம்குரிசில் தொண்டைமன்னவன்திண்டிறலொருவற்கு
உளங்கொளன்பினோடின்னருள்சுரந்து அங்கோடுநாழிகையேழுடனிருப்ப
வளங்கொள்மந்திரம்மற்றவற்கருளிச் செய்தவாறடியேனறிந்து * உலக
மளந்தபொன்னடியேயடைந்துய்ந்தேன் அணிபொழில்திருவரங்கத்தம்மானே! 9

¶ மாடமாளிகைசூழ்திருமங்கை மன்னன் ஒன்னலர்தங்களைவெல்லும்
ஆடல்மாவலவன்கலிகன்றி அணிபொழில்திருவரங்கத்தம்மானை
நீடுதொல்புகழாழிவல்லானை எந்தையைநெடுமாலைநினைந்த
பாடல்பத்திவைபாடுமின்தொண்டீர் பாட நும்மிடைப்பாவம்நில்லாவே. 10

உரங்களாலியன்றமன்னர்மாளப் பாரதத்தொருதேரைவர்க்காய்ச்சென்று
இரங்கியூர்ந்தவர்க்கின்னருள்செய்யும் எம்பிரானை, வம்பார்புனல்காவிரி
அரங்கமாளியென்னாளிவிண்ணாளி ஆழிசூழிலங்கைமலங்கச்சென்று
சரங்களாண்டதண்டாமரைக்கண்ணனுக் கன்றி யென்மனம்தாழ்ந்துநில்லாதே. 7-3-4

தாங்கநீர்பேசிலும் தன்மதிகாயினும் * இரங்குமோஎத்தனை நாளிருந்தெள்கினாள்
தூங்கம்வாய்கீண்டுகந்தானது தொன்மை*ஊர் அரங்கமேயென்பதிவள்தனக்காசையே. 8-2-7

¶ புனைவளர்பூம்பொழிலார் பொன்னிசூழரங்கநகருள்
முனைவனை * மூவுலகும்படைத்த முதல்மூர்த்திதன்னை
சினைவளர்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்றான்
கனைகழல்காணுங்கொலோ கயற்கண்ணியெம்காரிகையே. 9-9-2

கண்ணன்மனத்துள்ளே நிற்கவும் * கைவளைகள் என்னோகழன்ற இவையென்னமாயங்கள்
பெண்ணானோம்பெண்மையோம்நிற்க* அவன்மேய அண்ணல்மலையுமரங்கமும்பாடோமே. 11-3-7

¶ அணியார்பொழில்சூழரங்கநகரப்பா * துணியேனினி நின்னருளல்லதெனக்கு
மணியேமணிமாணிக்கமே மதுசூதா * பணியாயெனக்குய்யும்வகை பரஞ்சோதீ. 11-8-8

திருக்குறுந்தாண்டகம்.

இம்மையைமறுமைதன்னை யெமக்குவீடாகிநின்ற
மெய்ம்மையைவிரிந்தசோலை வியன்திருவரங்கம்மேய
செம்மையைக்கருமைதன்னைத் திருமலையொருமையானை
தன்மையைநினைவாரென்றன் தலைமிசைமன்னுவாரே. 7

ஆவியையரங்கமாலை யழுக்குடம்பெச்சில்வாயால்
தூய்மையில்தொண்டனேன்நான் சொல்லினேன்தொல்லைநாமம்
பாவியேன்பிழைத்தவாறென் றஞ்சினேற்கஞ்சலென்று
காவிபோல்வண்ணர்வந்தென் கண்ணுளேதோன்றினாரே. 12

இரும்புநன்றுண்டநீரும் போதரும்கொள்க * என்றன்
அரும்பிணிபாவமெல்லா மகன்றனவென்னைவிட்டு
சுரும்பமர்சோலைசூழ்ந்தவரங்கமாகோயில்கொண்ட
கரும்பினைக்கண்டுகொண்டென் கண்ணிணைகளிக்குமாறே. 13

¶ பிண்டியார்மண்டையேந்திப் பிறர்மனைதிரிதந்துண்ணும்
உண்டியான்சாபம்தீர்த்தவொருவனூர் * உலகமேத்தும்

கண்டியூரரங்கம்மெய்யம் கச்சிபேர்மல்லையென்று
மண்டினார், உய்யிலல்லால்மற்றையார்க்குய்யலாமே. 19

திருநெடுந்தாண்டகம்.

பட்டுடுக்குமயர்த்திரங்கும்பாவைபேணாள் பனிநெடுங்கண்ணீர்ததும்பப்பள்ளிகொள்ளாள்
எட்டனைப்போதென்குடங்காலிருக்ககில்லாள் எம்பெருமான்திருவரங்கமெங்கேயென்னும்
மட்டுவிக்கிமணிவண்டுமுரலும்கூந்தல் மடமானையிதுசெய்தார்தம்மை * மெய்யே
கட்டுவிச்சிசொல்லென்னச்சொன்னாள்நங்காய் கடல்வண்ணனிதுசெய்தார்காப்பாராரே. 11

நெஞ்சுருகிக்கண்பனிப்பநிற்கும்சோரும் நெடிதுயிர்க்குமுண்டறியாளுறக்கம்பேணாள்
நஞ்சரவில்துயிலமர்ந்தநம்பீயென்னும் வம்பார்பூம்வயலாலிமைந்தாவென்னும்
அஞ்சிறையபுட்கொடியேயாடும்பாடும் அணியரங்கமாடுதுமோதோழீயென்னும்
என்சிறகின்கீழடங்காப்பெண்ணைப்பெற்றேன் இருநிலத்தோர்பழிபடைத்தேன்ஏபாவமே. 12

முளைக்கதிரைக்குறுங்குடியுள்முகிலைமூவா மூவுலகும்கடந்தப்பால்முதலாய்நின்ற
அளப்பரியவாரமுதையரங்கமேய வந்தணனை யந்தணர்தம்சிந்தையானை
விளக்கொளியைமரதகத்தைத்திருத்தண்காவில் வெஃகாவில்திருமாலைப்பாடக்கேட்டு
வளர்த்ததனால்பயன்பெற்றேன்வருகவென்று மடக்கிளியைக்கைகூப்பிவணங்கினாளே. 14

கார்வண்ணம் திருமேனி கண்ணும் வாயும் கைத்தலமுமடியிணையும் கமலவண்ணம்
பார்வண்ணமடமங்கைபத்தர்பித்தர் பனிமலர்மேல்பாவைக்குப் பாவம்செய்தேன்
ஏர்வண்ணவென்பேதை யென்சொல்கேளாள் எம்பெருமான்திருவரங்க மெங்கேயென்னும்
நீர்வண்ணன்நீர்மலைக்கே போவேனென்னும் இதுவன்றோநிறைவழிந்தார் நிற்குமாறே. 18

முற்றாராவனமுலையாள்பாவைமாயன் மொய்யகலத்துள்ளிருப்பாளஃதும்கண்டு
அற்றாள் * தன்நிறைவழிந்தாளாவிக்கின்றாள் அணியரங்கமாடுதுமோதோழீயென்னும்
பெற்றேன்வாய்ச்சொல்லிறையும்பேசக்கேளாள் பேர்பாடித்தண்குடந்தைநகரும்பாடி
பொற்றாமரைக்கயம்நீராடப்போனாள் பொருவற்றாளென்மகளும் பொன்னுமஃதே. 19

கைவளமொன்றாயா நம்மைநோக்கா நாணினார்போலிறையேநயங்கள்பின்னும்
செய்வளவிலென்மனமும்கண்ணுமோடி யெம்பெருமான்திருவடிக்கீழணைய * இப்பால்
கைவளையும்மேகலையும்காணேன் கண்டேன் கனமகரக்குழையிரண்டும் நான்குதோளும்
எவ்வளவுண்டெம்பெருமான்கோயிலென்றேற்கு இதுவன்றோவெழிலாலியென்றார்தாமே. 22

உள்ளூரும்சிந்தைநோயெனக்கேதந்தென்னொளிவளையும்மாநிறமும்கொண்டாரிங்கே
தெள்ளூருமிளம்தெங்கின்தேறல்மாந்திச்சேலுகளும் திருவரங்கம்நம்மூரென்ற
கள்ளூரும்பைந்துழாய்மாலையானைக்கனவிடத்தில்யான்காண்பன் கண்டபோது
புள்ளூரும்கள்வாநீபோகேலென்பன் என்றாலுமிதுநமக்கோர் புலவிதானே. 23

இருகையில்சங்கிவைநில்லாவெல்லேபாவம் இலங்கொலிநீர்பெரும்பௌவம்மண்டிபுண்ட
பெருவயிற்றகருமுகிலேயொப்பர்வண்ணம் பெருந்தவத்தராருந்தவத்துமுனிவர்சூழ
ஒருகையில்சங் கொருகைமற்றாழியேந்தி உலகுண்டபெருவாயரிங்கேவந்து-என்
பொருகயல்கண்ணீரரும்பப்புலவிதந்து புனலரங்கமூரென்றுபோயினாரே. 24

மின்னிலங்குதிருவுருவும்பெரியதோளும் கரிமுனிந்தகைத்தலமும் கண்ணும்வாயும்
தன்னலர்ந்தநறுந்துழாய் மலரின்கீழே தாழ்ந்திலங்குமகரம்சேர்குழையும்காட்டி
என்னலனுமென்னிறைவுமென்சிந்தையும் என்வளையும்கொண் டென்னையாளும்கொண்டு
பொன்னலர்ந்தநறும்செருந்திப்பொழிலினூடே புனலரங்கமூரென்றுபோயினாரே. 25

ஆண்டாள் பாடியது:—நாச்சியார் திருமொழி.

¶ தாமுகக்கும்தம்பிகையில் சங்கமேபோலாவோ
யாமுகக்குமென்கையில் சங்கமுமேந்திழையீர்
தீமுகத்துநாகணைமேல் சேருந்திருவரங்கர்
ஆமுகத்தைநோக்காரால் அம்மனே! அம்மனே! 11-1

எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத்தின்னமுதர்
குழலழகர்வாயழகர் கண்ணழகர் * கொப்பூழில்
எழுகமலப்பூவழக ரெம்மானார் * என்னுடைய
கழல்வளையைத் தாமும்கழல்வளையேயாக்கினரே. 2

¶ பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும்விண்ணுலகும் அங்காதுஞ்சோராமே ஆள்கின்றவெம் பெருமான்
செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார் எங்கோல்வளையாலிடர்தீர்வராகாதே. 3

மச்சணிமாட மதிளரங்கர்வாமனனார் பச்சைப்பசுந்தேவர் தாம்பண்டுநீரேற்ற
பிச்சைக்குறையாகி என்னுடையபெய்வளைமேலிச்சையுடையரேலித்தெருவேபோதாரே.

பொல்லாக்குறளுருவாய்ப் பொற்கையில்நீரேற்று
எல்லாவுலகுமளந்துகொண்டஎம்பெருமான்
நல்லார்கள்வாழும் நளிரரங்கநாகணையான்
இல்லாதோம்கைப்பொருளும் எய்துவானொத்துளனே. 5

கைப்பொருள்கள்முன்னமே கைக்கொண்டார் * காவிரிநீர்
செய்ப்புரளவோடும் திருவரங்கச்செல்வனார்
எப்பொருட்கும்நின்றார்க்குமெய்தாது * நான்மறையின்
சொற்பொருளாய்நின்றாரென்மெய்ப்பொருளும்கொண்டாரே. 6

உண்ணாதுறங்காது ஒலிகடலையூடறுத்து பெண்ணாக்கையாப் புண்டுதாமுற்றபேதெல்லாம்
திண்ணார்மதிள்சூழ் திருவரங்கச்செல்வனார் எண்ணாதே தம்முடையநன்மைகளேயெண் ணுவரே. 7

¶ பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்கு * பண்டொருநாள் மாசுடம்பில் நீர்வாரா மான மிலாப்பன்றியாம்
தேசுடையதேவர் திருவரங்கச்செல்வனார் பேசியிருப்பனகள் பேர்க்கவும்பேராவே. 8


கண்ணாலங்கோடித்துக் கன்னிதன்னைக்கைப்பிடிப்பான் திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
அண்ணாந்திருக்கவே யாங்கவளைக்கைப்பிடித்த பெண்ணாளன்பேணுமூர் பேருமரங்கமே.

¶ செம்மையுடைய திருவரங்கர்தாம்பணித்த
மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர்கேட்டிருப்பர்
தம்மையுகப்பாரைத் தாமுகப்பரென்னுஞ்சொல்
தம்மிடையேபொய்யானால் சாதிப்பாரினியே ? 10


துலுக்கநாச்சியார்.

இதற்கு முன் டில்லிசக்ரவர்த்தியாயிருந்த துலுக்கவரசன் ப்ரதாபருத்ரனை ஜயித்து தொண்டைமண்டலம், சோழமண்டலம் முதலிய தக்ஷிணதேசங்களில் வ்யாபித்து ஸ்ரீரங்கத்திற்கு வந்து இந்தக்கோயிலைக்கொள்ளையிட்டு உத்ஸவவிக்ரஹத்தையும் கைப்பற்றிக்கொண்டு திரும்பி டில்லிக்குப்போய் அவ்விடத்தில் ஆரண்மனை உக்ராணத்தில் இன்னுமனேக விக்ரஹங்களுடனிதையும் போட்டுவிட்டான். அந்தடில்லிசக்ரவர்த்தியின் குமாரத்தியானவள் அங்குள்ள இந்தவிக்ரஹத்தைக்கண்டு தனக்குவிளையாடவேண்டுமென்றுசொல்லி இதையெடுத்து தன் சயனக்ருஹத்தில் வைத்துக்கொண்டாள். அவ்விடத்தில் இந்த அழகிய மணவாளப்பெருமாளும் பகலில் அர்ச்சாவிக்ரஹமாயும் ராத்திரியில் விபவாவதாரமாயும்ஸகலஸப்ரமத்துடனும் அந்த துலுக்கராஜகுமாரத்தியுடன் விஹரித்துக்கொண்டிருந்தார். இச்சமயத்தில் இவ்வூர்ஸ்தலத்தார்களெல்லாம் பெருமாளைத்தேடிக்கொண்டு டில்லிக்குப்போய் தங்கள் நாட்டியத்தினாலே அந்ததுலுக்கசக்கரவர்த்தியை ஸந்தோஷப்படுத்தித்தங்களுக்குப்பரிசாக இந்த ரங்கநாதவிக்ரஹத்தைக்கேட்டார்கள். அந்தசக்ரவர்த்தியும் அனுமதிகொடுக்க, அவர்குமாரத்தியிடமிருந்து விக்ரஹத்தை எடுத்துக்கொண்டு திரும்பிவிட்டார்கள். உடனே அவ்விராஜகுமாரி விரஹத்தால் மூர்ச்சித்து அவள் பிராணனுக்கே அபாயம் வரும்படியான அவஸ்தையை அடைய அந்த சக்ரவர்த்தியானவர் பல ஸைந்யங்களுடன் தன் குமாரத்தியையும் சேர்த்து இந்த விக்ரஹத்தைத்திருப்பிக்கொண்டு வரும்படியனுப்பினர். இவர்கள் தொடர்ந்துவருவதைத்தெரிந்துகொண்ட இவ்வூர்ஸ்தலத்தார்கள் இந்தவிக்ரஹத்துடன் வழியில் ஒருவருக்கும் தெரியாமல் தாமதித்து விட்டார்கள். அந்த துலுக்கராஜகுமாரத்தி இங்கு வந்து பெருமாளைக்காணாமையால் மூர்ச்சித்து இங்கேயே ஐக்கியமாய் விட்டாள். அவளுக்கு இன்னமும் இந்த கோவில் இரண்டாம்பிராகாரத்தில் ஈசான்யமூலையில் 'துலுக்சநாச்சியார் கோவில்' என்று ஒரு கோவில்கட்டி அதில் தினம் காலையில் ரொட்டிவெண்ணெய் நேவேத்யமாகிறது. இந்த விஷயம் 'கோயிலொழுகு' என்னும் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.


இந்த கோவிலுக்கு நவாபு நாளில் 57 கிராமங்கள் ஜாகீராக இருந்ததாகத்தெரிகிறது. பிறகு நவாபுகள் நாளிலேயே அதை கவுலுக்கு வாங்கிக்கொண்டு வருஷம் 1 க்கு 50,000 ரூபாய் கொடுத்துவந்ததாயும் பிறகு அதை 42,000 ரூபாயாகக்குறைத்துவிட்டதாயும் இப்பால் வெள்ளைக்காரர்கள் நாளில் இந்த மோஹினிப்பணத்தை 35,000 ரூபாயாகக்குறைத்துவிட்டதாகவும் கோவிலிலுள்ள ரிகார்டுகளால் தெரிகிறது.








ஸ்ரீ நடராஜர்.



சிதம்பரம்.

ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் பிரதி வருஷமும் செல்லும் தென் இந்தியாவின் மஹா க்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய இந்தப் புண்ணிய பூமி வடக்கில் சுவேத நதியென ஸம்ஸ்கிருதத்தில் புகழப்பெற்ற வெள்ளாற்றை எல்லையாகவும், கிழக்கில் மஹோததியை (வங்காளாக்குடாக்கடலை) எல்லையாகவும், தெற்கில் காவிரிமா நதியின் கிளை நதியாகிய கொள்ளிடத்தை எல்லையாகவும், நான்காவது திக்காகிய மேற்கில் வியவஸாய ஸாதகமான வீராணத்தேரியை எல்லையாகவும் பெற்றிருக்கிறது. இந்த க்ஷேத்திரம் தென் இந்தியா இருப்புப் பாதையில் சென்னப்பட்டணத்திலிருந்து 154 மைல் தெற்கே உள்ளது.




சிதம்பரம் கோவிலின்

"கோயில்" என்று சொல்லப்படும் சிதம்பர க்ஷேத்திரம் தில்லைவனம், பெரும்பற்றப்புலியூர், புண்டரீகபுரம், வியாக்ரபுரம், தஹராகாசம், பூலோக கைலாஸம் எனப் பல பெயரால் வழங்கப்படுகிறது.

கோவிலுக்குள் சித் சபையின் கிழக்கில் பரமானந்த கூபம் எனப்படும் கிணறும், வடக்கே சிவகங்கைக் குளமும், கோயிலின் வெளியில் தெற்கே புலி மடுவும், திருப்புலீச்சுரத்துக்கு எதிரே வியாக்ரபாத தீர்த்தமெனப்படும் இளமைநாயனூர் குளமும், அனந்தேச்வரத்திற்கு முன்னே அனந்த தீர்த்தமும், இதற்கு மேற்கே நாகசேரியும், திருக்களாஞ்சேரியில் பிரம்ம தீர்த்தமும், பிரம்மசாமுண்டிசோவிலின் முன்னே சிவப்பிரியையும், இதற்குத் தென் கிழக்கே திருப்பாற் கடலும், கீழ் சமுத்திரத்தில் பாசமறுத்த துறையில் குய்ய தீர்த்தமும் ஆகிய பத்து முக்கிய தீர்த்தங்களையுடையது.

இவ்விடத்தில் தான் மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்றதும், ஒரு ஊமைப் பெண்ணைப் பேச வைத்ததும், "திருச்சிற்றம்பலக் கோவை" பாடிச் சைவத்தை



னும் சிவகங்கை குளமும்.

நிலை நிறுத்திப் பெருமை பெற்றதும்! உபமந்யு முனிவருக்குப் பாற்கடல் அளித்ததும் இங்கேதான். அபயகுலசேகர சோழராஜன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியால் தேவாரப்பதிகங்கள் கண்டெடுக்கப்பட்டதும் இவ்விடத்தில்தான். இந்த ஸ்தானம் தற்காலம் மேலண்டைப் பிராகாரத்தின் வடமேற்கு திக்கிலிருக்கிறது. அவ்வறையை அக்காலத்தில் காட்டிய விநாயகர் மேல் கோபுர வாசலைப் பார்த்த மாதிரி இருந்துவருகிறார். இவருக்குத் "திருமறைகாட்டிப்பிள்ளையார்" என்று பெயர்.

பிந்தி அநபாய சோழராஜன் காலத்தில் சேக்கிழார் நாயனார் "பெரியபுராணம்" பாடியது இக்கோயிலினுள்ளிருக்கும் ஆயிரக்கால் மண்டபத்தில். கோயிலின் வெளியில் தெற்கிலிருக்கும் ஞானப்ரகாசக்குளக்கரையில் சேக்கிழார் பிம்பமடங்கிய ஒருசிறுகோயில் இருக்கிறது.


சேரமான் பெருமாணாயனார் "போன் வண்ணத் தந்தாதி" பாடி ஸ்ரீ நடராஜனை அந்தரங்க பூஜைசெய்து பகவானது சிலம்பொலி கேட்டது இவ்விடத்தில் தான்!



பதஞ்ஜலி மஹரிஷியும் வ்யாக்ரபாத மஹரிஷியும்.

திருக்கோவலூரிலிருந்த மெய்ப்பொருளுயனர் தாம் உயிர் துறக்கும் காலத்தில் ஸ்ரீ நடராஜரை தரிசிக்க விரும்ப அந்தப்படி நடராஜர் காக்ஷிகொடுத்து அனுக்ரஹித்தார்.


உமாபதிசிவாசாரியார் தாம் ஜாதியில் உயர்ந்தவரென்ற பெருமை பாராட்டாமல் பெற்றான் சாம்பனுருக்கும் முள்ளிச் செடிக்கும் முக்தியளித்த ஸ்தலம் கோயிலுக்கு தென் கிழக்கே ரயில் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள "கொற்றவன்குடி" என்னுமிடத்தில் இப்




சிதம்பரம் கோவிலின் காக்ஷி.

பொழுதும் உமாபதிசிவாசாரியார் பிம்பமடங்கிய ஒரு சிறு கோயில் இருக்கிறது. இரண்யவர்மன் காலமுதல் சோழ ராஜாக்கள் இவ்விடம் தங்கியிருந்த அரண்மனை முதலிய கட்டிடங்கள் இந்தக் கொற்றவன்குடியில்தான் இருந்திருக்கவேணுமென்று ஊஹிக்கப்படு கிறது. சமீப காலத்தில் கூட இக்குடியிருப்பிலுள்ள குளத்தங்கரையில் சில ஸ்தலங்களை வெட்டுகையில் சிலா பிம்பங்கள் முதலியன கிடைத்தனவாம்.

நடராஜ மூர்த்தி வருஷத்தில் ஆறு தடவைதான் சித் சபையாகிய கர்ப்பக்கிருஹத் திலிருந்து வெளியில் கொண்டு வரப்பட்டு அபிஷேகம் செய்து வைக்கப்படுவார். அவை யாவன: சித்திரை திருவோணம், ஆனி உத்திரம், ஆவணி பூர்வ சதுர்த்தசி, புரட்டாசி பூர்வ சதுர்த்தசி, மார்கழி திருவாதிரை, மாசி பூர்வ சதுர்த்தசி. இந்த ஆறு தினங்களிலும் கூட ஆனி, மார்கழி இரண்டுந்தான் விசேஷ உத்ஸவமாகக்கொண்டாடப்படுகிறது. இந்தஇரண்டு தினங்களில் மட்டும் ஆயிரக்கால் மண்டபத்தில் அபிஷேகம் செய்யப்படுவார். மற்றைய நான்கு தினங்களிலும் சித்சபையின் முன்னிலுள்ள கனக சபையிலேயே அபிஷேகம் நடத்தப்படும். "ஆனித் திருமஞ்சனம்", "மார்கழித் திருவாதிரை" இந்த இரண்டிலும் பிந்தியதாகிய மார்கழி திருவாதிரை விசேஷதினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த தினத் தில்தான் சேந்தனுருக்கு பகவான் களி சாப்பிட்டு தரிசனம் கொடுத்தபடியால் அன்றைய தினம் ஸ்திரீகள் விசேஷமாய் களி நிவேதனம் செய்து நடராஜரை தரிசனம் செய்கிருர்கள். மேலே குறிப்பிட்ட ஆறு அபிஷேகங்கள் தவிர அந்தந்த கோயிலில் பிரம்மோத்ஸவத்தின் கடைசி தினமாகிய "தீர்த்தவாரி" யன்றும் நடராஜருக்கு அபிஷேகம் உத்ஸவம் நடத்த வேண்டுமென்று ஆகமங்கள் விளக்குகின்றன.



ஆருத்ரா தர்சனம்.




கனகஸபை (நந்திகேச்வரர் மண்டபம்.)

இந்த ஸ்தலத்திலுள்ள கோயில் தாண்டவ மூர்த்தியாகிய நடராஜமூர்த்தி அபார சக்திக்குப் பெயர் பெற்றது. இந்த மூர்த்திக்கு வலதுபக்கத்தில் சிதம்பர "ரஹஸ்யம்" அடங்கியுளது. அவ்விடத்தில் ஸுவர்ண வில்வதளங்கள் தொங்கவிடப்பட்டுத் திரையால் எப்பொழுதும் ரஹஸ்யமெனப்படும் ஸ்தலம் மறைக்கப்பட்டிருக்கும். பூஜாகாலங்களில் பூஜை செய்யும் தீக்ஷிதர்கள் அத்திரையை மூன்றுதரம் தூக்கி ஜனங்களுக்கு தரிசனம் செய்துவைப்பார்கள்.

சிவனுடைய பல முகூர்த்தங்களில் நடராஜர் முக்யமானதினால் தான் மற்றைய கோவில்களிலும் அதைக் கொண்டாடுகிறார்கள். இதர கோயில்களிலுள்ள கலைகள் அர்த்தயாமம் ஆனதும் அடங்கிச் சிதம்பரத்தில் ஐக்கியமாவதாகவும் காலையில் அவ்வவ்விடத்திற்குத் திரும்புவதாகவும் ஐதிஹ்யம். ஆத்மகலைகள் ஜாக்ரதகாலத்தில் தன்னிடத்திலிருந்து கண் முதலான த்வாரங்கள் வாயிலாக வெளியே சென்று, ஸுஷுப்திதசையில் (நன்றாய்த் தூங்கும் ஸமயத்தில்) ஆத்மாவானிடத்தில் (தன்னிடத்தில்) ஒடுங்குவதுபோல இச்சிதம்பர க்ஷேத்திரத்தில் ரஹஸ்ய ரூபமாகிய ஆத்மா, காலையில் வெளியே சென்று, பிறகு அர்த்தஜாமத்தில் தன்னிடத்திலேயே லயிக்கிறது.

நடராஜ விக்கிரஹமும் அம்பாள் சிவகாமஸுந்தரியினது விக்கிரஹமும் ரஹஸ்யமும் அடங்கியுள்ள கர்ப்பக் கிரஹத்தினுட் செல்ல வெள்ளித் தகடுகளால் ஆகிய ஐந்து படிகள் உண்டு. இந்தப்படிகளுக்கு "பஞ்சாக்ஷரப்படிகள்" எனப் பெயர். ஐந்தெழுத்தால் ஆகிய மஹா மந்திரம் காரணம்பற்றி ஏற்பட்ட படிகள். பஞ்சாக்ஷர ஜபஸித்தி இல்லாமல் நடராஜ மூர்த்தியை அடைய முடியாதென்பதை இந்தப் படிகள் ஒருவாறு குறிக்கின்றன.




சிதம்பரம் ஆலயம் மேற்கு கோபுரமும் தெற்கு கோபுரமும் நடராஜரின் சித்ஸபை கனகஸபை தேவஸபை முதலியவைகளும் கோவிந்தராஜப்பெருமாள் கோவிலும் அடங்கிய காக்ஷி.

புராண வரலாறு.


நடராஜமூர்த்தி ஏற்பட்டவிதம்.

முன்னொரு காலத்தில் கைலாஸத்திலிருக்கும் பரமேசுவரனைப் பார்ப்பதற்காக ஸ்ரீ மகாவிஷ்ணு அங்கு சென்ற ஸமயத்தில் ஈசுவரனானவர் தமது ஸபையின் நடுவிலிருந்து பரபரப்புடன் ஸ்ரீ மகாவிஷ்ணுவை ஆதரவாய் வரவேற்று உபசரித்து தமது ஆஸனத்திலேயே அவரையும் உட்காரவைத்துக்கொண்டு அவரோடு ரஹஸ்யமாக ஸல்லாபம் செய்துகொண்டிருந்தார். இதைக்கண்டு ஸபையோரெல்லோரும இன்னதென்று தெரியாமல் வியந்துகொண்டிருக்கும் தருவாயில் ஜகத்பிதாக்களான இவ்விருவர்களும் திடீரென்று ஸபையை கலைத்துவிட்டு ஒருவரோடொருவர் கைகோர்த்தபடியே பேசிக்கொண்டு கைலாஸத்தைவிட்டு கீழே இறங்கிவந்தார்கள். வரும்பொழுது ஈசுவரனானவர் தேவதாரு வநத்தில் அநேக மஹரிஷிகள் ரொம்பவும் கர்மடர்களாயிருந்துகொண்டு தபஸ் செய்துகொண்டு ஸாதுக்களாயிருக்கிறார்கள்; ஆனால் கர்மாவே எல்லாவற்றிற்கும் மேம்பட்டது, அதுவே ஸரிவர நடத்தப்பட்டால் எல்லா பலன்களையும் கொடுத்துவிடும்; அதுகளைத் தவிர பலத்தைக் கொடுப்பதற்கென்று ஈசுவரனொருவன் கிடையாது என்று அநீசுவரவாதிகளாய் அதனால் அவர்கள் மிகவும் மமதையுடனிருக்கிறார்களாதலால் அவர்களுக்கு புத்தி வரும்படியாகச் செய்ய வேண்டுமென்றும் அதற்காகத் தாம் மிகவும் ஸுந்தரமான ஒரு புருஷவேஷம் தரித்துக்




சிதம்பரம் கோவில் வடக்கு கோபுரவாசலும் சிவகங்கை குளமும் அதற்கு இரு பக்கமுமுள்ள காக்ஷிகளும். குளத்திற்கு மேல்பக்கத்தில் சிவகாமசுந்தரி அம்மன் கோவில் தெரிகிறது.

கொள்ளப்போவதாகவும் தமக்கு உதவியாக ஸ்ரீ மகாவிஷ்ணுவும் மிகவும் ரூபலாவண்யமுள்ள ஒரு ஸ்திரீவேஷம் தரித்துக்கொண்டு தன்னோடு வரவேண்டுமென்றும் மகாவிஷ்ணுவிடம் சொன்னார். அவரும் அதற்கிணங்கி ஈசுவரன் முன்னதாகச் சென்றால் தாம் மோஹினிரூபம் தரித்துக்கொண்டு பின்னாடி வருவதாகக் கூறினார். உடனே ஈசுவரனானவ உலகத்தில் யாருமதுவரையில் கண்டறியாத அவ்வளவு அழகிய வடிவத்தை எடுத்துக்கொண்டு கால்களில் சிலம்புத்தண்டைகள் ஒலிக்க ஜில்ஜில் என்று நடந்துகொண்டு கையில் உடுக்கொன்றை யேந்திக்கொண்டு தேவதாருவனம் சென்று அங்குள்ள ஒவ்வொரு ரிஷிகளின் ஆசிரமத்தின் வாசலிலும் நின்று பிக்ஷை கேட்டார். உள்ளிருந்த ரிஷிபத்னிகள் பிக்ஷை கொண்டுவரும்பொழுது இவருடைய ரூபத்தைப் பார்த்து மயங்கி ஒன்றும் தோன்றாதவர்களாய் அவர் பின்பாகவே சென்றார்கள். இவ்வாறு ஈசுவரனானவர் வீடு வீடாய் பிக்ஷாடனஞ் செய்து ரிஷிபத்னிகளையெல்லாம் மயக்கித் தன் பின்னோடு கூட்டிச் செல்கையில் ஆச்ரமங்களுக்குள்ளிருந்த மஹரிஷிகள் தங்கள் அக்னிஹோத்ர கிருஹங்களிலிருந்து பத்னிகளை கூப்பிட்டும் ஒருவரையும் காணாமையால் எழுந்திருந்து வெளியில் வந்து என்ன காரணமென்று பார்க்கையில் ஈசுவரனைப் பின்தொடர்ந்து எல்லா ஸ்திரீகளும் போவதைக் கண்டு கோபித்தார்கள். அத்தருணத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் ஜகத்தை மோஹிக்கச் செய்யக்கூடிய மோஹினி அவதாரத்தை எடுத்துக்கொண்டு மிகவும் உல்லாஸமாய் ஹம்ஸகதியுடன் நடந்துவருவதைக்கண்டு எல்லா மஹர்ஷிகளும் இதென்ன ஆச்சர்யம் இப்படி




சிவகாமஸுந்தரி அம்மன் கோவில்

யும் ஒரு ஸ்திரீவ்யக்தி உண்டாவென்று மயங்கி ஒன்றும் தோன்றாமல் தங்கள் கர்மாக்களை யெல்லாம் மறந்து அந்த மோஹினி அவதாரத்துடன் கூடத் தொடர்ந்து சென்றார்கள். இவ்வாறு நேர்ந்ததைக்கண்டு சில கிழட்டு மஹர்ஷிகள், இதென்ன இப்படி விபரீதம் ஏற்பட்டுவிட்டது ; இந்த பிக்ஷாடனம் செய்பவன் நமது தர்மபத்னிகளின் மனதையெல்லாம் கொள்ளை கொண்டுவிட்டான் ; அவனுடைய பத்னிபோல் தோன்றுகிற இந்த மோஹினியோ நமக்குள் யௌவனஸ்தர்களாயுள்ள ரிஷிகளின் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டாள்; இதை நாம் பெரியோர்களாயிருந்து சும்மா பார்த்திருந்தால் ரொம்பவும் கெடுதலாய் முடியும்; ஆதலால் இந்த பிக்ஷாடனம் செப்பவனுக்கு எவ்விதத்தாலும் கெடுதல் செய்ய வேண்டும் ; அவன் யாரூயிருந்தாலும்ஸரி ; அவனை ஸம்ஹரிப்பதற்குத் தக்கப்படி ஆபிசார ஹோமம் செப்பவேண்டுமென்று சொல்லிக்கொண்டு பெரிய அக்னிகுண்டத்தை ஏற்படுத்தி அதில் அக்னியைவளர்த்து கொடூரமான ஆபிசாரஹோமங்களை செய்யவாரம்பித்தார்கள். இதைக் கண்டதும் ஈசுவரனும் மகாவிஷ்ணுவும் புன்சிரிப்பு செய்துகொண்டு வேடிக்கை பார்ப்பவர்கள்போல் எதிரில் வந்து நின்றார்கள். பயமின்றி எதிரில் நிற்கும் பிக்ஷாடனரைக் கண்டதும் கர்மாவினாலேயே ஸமஸ்த கார்யங்களையும் முடிக்கலாமென்று கர்வங்கொண்டிருக்கும் அந்த மஹர்ஷிகள் இன்னும் கோபபரவசர்களாய் வெகு உக்ரமாக ஹோமம் செய்தார்கள். அதன் பலனாய் அந்த ஹோமகுண்டத்திலிருந்து அந்த ரிஷிகளின் அஹங்காரமே உருவெடுத்து வந்ததோவென்று சொல்லும்படி ஒரு பயங்கரமான புலி ஒன்று நெருப்புத்தணல்போன்ற கண்களுடன் கிளம்பிற்று. அதை அந்த மஹர்ஷிகள் உடனே ஈசுவரனை நோக்கி ஏவினார்கள். அது பயங்கரமாக ஸமீபத்தில் வரும்வரையில்




தென்பிராகாரத்திலுள்ள நந்திகேச்வரர் மண்டபம்.

மந்தஹாஸத்துடனிருந்த ஈசுவரன் அதை ஒரே குத்தாய் குத்திக் கொன்று அந்தக்ஷணத்திலேயே அதன் தோலை உரித்து தன்னிடுப்பில் வஸ்திரமாகக் கட்டிக்கொண்டுவிட்டார். இதைக்கண்ட மஹர்ஷிகள் ஆச்சரியப்பட்டு முன்னிலுமதிகமான வேகத்துடன் விஷத்திரவியங்களால் ஹோமம் செய்து மிகவும் கோரமான விஷத்தைக் கக்கிக்கொண்டுவரும் ஒரு ஸர்ப்பத்தை அந்த ஹோமகுண்டத்திலிருந்து உண்டாக்கி அதை ஈசுவரனைக் குறித்து ஏவினார்கள். ஹாலாஹல விஷத்தையே சாப்பிட்ட ஈசுவரனுக்கு இது ஒரு பெரிதா? அவர் அந்த ஸர்ப்பத்தைப் பிடித்துத் தமது கையில் ஒரு கங்கணமாகக் கட்டிவிட்டார். இதைக் கண்ட மஹர்ஷிகள் தங்களது ஸாமர்த்தியத்தையெல்லாம் உபயோகப்படுத்தி மிகவும கோரரூபமாயுள்ள ஒரு பூதத்தை அந்த குண்டத்திலிருந்து உண்டாக்கி அதை ஈசுவரனிடத்தில் பிரயோகித்தார்கள். அது மிக அட்டஹாஸம் செய்துகொண்டு வரும்ஸமயத்தில் ஈசுவரனும் தமது சக்தியை இவர்கள் இன்னுமறியவில்லையேயென்று தாமும் அட்டஹாஸத்துடன் கிளம்பி அந்த பூதத்தை ஒரே மிதியாய் மிதித்து தமது பாதத்துக்கு பீடமாய் போட்டுக்கொண்டு விட்டார். இதற்குப் பின்னும் புத்திவராத அந்த மஹர்ஷிகள் மறுபடியும் தங்களுக்குத் தெரிந்த மந்திரங்களையெல்லாம பிரயோகம் செய்து அவைகளையே ஈசுவரனிடம் ஏவினார்கள். இந்த மந்திரங்களெல்லாம் தங்களுக்கு உத்பத்தி ஸ்தானமாயிருக்கும் ஈசுவரனிடம் என்ன செய்யக்கூடும்? அவரிடம் செல்லவும் அவர் தமது இடதுகாலை குஞ்சிதபாதமாகத் தூக்கினதும் அவைகளெல்லாம் அப்பாதத்தை சுற்றிலும் பாதஸரமாக அமர்ந்துகொண்டு அவரை சரணமடைந்துவிட்டன. உடனே ஈசுவரனும் தாண்டவத்துக்கு ஆரம்பிக்கவே கால்களிலுள்ள சிலம்புகளிலிருந்து வேதகோஷங்கள் உண்டாயின.



முக்குருணிவிநாயகர் கோவில் (பக்கத்து காக்ஷி).


இதைக்கண்ட மஹர்ஷிகளுக்கு ஒன்றும் தோன்றாமல் தாங்கள்செய்த ஹோமகுண்டத்தி லுள்ள அக்னியை வாரியெடுத்து ஈசுவரனை நோக்கி அவர் முகத்திலெறிந்தார்கள். அதை ஈசுவரன் தமது கையிலேந்திக்கொண்டு இந்த ரிஷிகளுக்கு இன்னும் ஸரியான புத்தி வாராமையால் சினங்கொண்டு உக்ரமான தாண்டவத்தை நடனம் செய்யவாரம் பித்தனர். அதைக் கண்ணேக்க சக்தியற்றவர்களாய் மகர்ஷிகளெல்லாம் மூர்ச்சித்துத் தரையில் விழுந்தனர். அந்த அத்புதமான தாண்டவத்தின் வேகத்தால் பூமாதேவியே நடுங்கினள். மோஹினிரூபமாய் எதிரில் நின்றுகொண்டிருந்த மஹாவிஷ்ணுவும் இது என்னமாக முடியுமோ வென்று சித்தம் கலங்கவாரம்பித்தனர். அச்சமயம் ஸாக்ஷாத் தாண்டவமூர்த்தியாகிய பரமேசுவரன் அம்பாளை மனதில் நினைக்கவும் பராதேவதையும் எல்லா கணங்களுடனும் உடனே அங்குவந்து தாண்டவமாடிக் கொண்டிருக்கும் ஈசுவர னுக்குப்பக்கத்தில் அமர்ந்தனள். உடனே தாண்டவத்தின் வேகத்தையும் சற்று மட்டுப் படுத்தி ஸௌம்யமாய், மஹாவிஷ்ணுவையும் நிஜரூபத்தை யெடுத்துக்கொள்ளச் செய்து, ஈசுவரனுனவர் மந்தஹாஸத்துடன் தேவதாருவனத்து மஹர்ஷிகளை மூர்ச்சை தெளிந் தெழுந்திருக்கச்செய்து அவர்களையும் கருணையுடன் அனுக்ரஹித்து அவர்களுக்கு திவ்யமய மான ஞானக்கண்களை கொடுத்து தமது ஆநந்தத் தாண்டவ மஹிமையை தர்சிக்கும்படி காக்ஷிகொடுத்தார். இவ்வாறு அவர்களுடைய அஹங்காரமும் அக்ஞானமும் விலகிய பிறகு தாண்டவரூபத்திலேயே தம்மை ஸதா பூஜிக்கும்படி அவர்களுக்கு ஆக்ஞை செய்து விட்டு எல்லாருடனும் அந்தர்த்தானமாயினர். இதுதான் நடராஜ மூர்த்தி ஏற்பட்டவிதம்.



முக்குறுணி விநாயகர் கோவில் (நேர் காக்ஷி).

வியாக்ரபாதரின்கதை.


மத்யந்தினரென்ற ஒருமஹர்ஷிக்கு மிகவும் ஸத்புத்திரனாய் ஒரு குமாரர் பிறந்தார். அவருக்கு வயது வந்ததும் உபநயனம் முதலான ஸம்ஸ்காரங்களை செய்வித்து நல்ல குருவையாவது அல்லது ஆதிகுருமூர்த்தியான ஸாக்ஷாதீசுவரனையாவது அடைந்து அவர் மனம் ஸந்தோஷிக்கும்படி ஸேவை செய்துவரும்படியும் அதனால் எல்லாவித சிரேயஸ்ஸையும் அடையலாமென்றும பலவிதமான புத்திவாதங்கள் சொல்லி எல்லா க்ஷேத்ரங்களுக்கும் மேம்பட்டதான தில்லவனத்துக்குப் போகும்படியனுப்பினார். அக்குமாரரும் வெகுதூரம் அலைந்து திரிந்து கடைசியில் தில்லவனம் சேர்ந்து அங்குள்ள சிவகங்கை குளத்தில் ஸ்நானம் செய்து அருகாமையிலிருந்த ஸ்ரீமூலநாதரை தரிசனம் செய்து அவரைப்பூஜிப்பதே தனக்கு முக்கியகார்யமென்று கருதி இராப்பகலாக அதேகார்யமாக இருந்தார். தாம் செய்யும் பூஜைக்காக பற்பலகாடுகளிலும் முள்ளுகளிலும் கல்லுகளிலும் போய் பூச்சிகள் பத்திரங்களையும் புஷ்பங்களையும் அரிக்க ஆரம்பிப்பதற்கு முன்னதாக இருட்டாயிருக்கும் பொழுதே அவைகளை கொணர்ந்து கொண்டுவா வேண்டியிருப்பதால் தமக்கு மரங்களில் ஏறும்பொழுது வழுக்காதிருக்கவேண்டிய நிமித்தம் கைகளும் கால்களும் புலியைப்போல் வலிமையான நகப்பற்றுள்ளவைகளாயிருக்கவேண்டுமென்றும், விடியற்கால இருட்டுவேளைகளில் புஷ்பங்களை தோஷங்களில்லாததாக கவனித்து பரிக்கவேண்டிய நிமித்தம் தமது கண்கள் மிகுந்த பிரகாசத்துடன் கூடினவைபாக இருக்கவேண்டுமென்றும் ஈசுவரனைப்பிரார்த்தித்தார். ஸ்ரீ மூலநாதரும் அவருடைய பக்தியிலீடுபட்டு அப்படியே அவருக்கு வரம் கொடுக்க அதனால் அவருக்கு அதுமுதல் வியாக்ரபாதர் என்று பெயர் பிரஸித்தியாயிற்று.



ராஜஸபை என்று சொல்லப்படும் ஆயிரக்கால் மண்டபம்.

திருப்பாற்கடல்.

இவ்வாறு வியாக்ரபாதர் ஸ்ரீமூலநாதரை வெகுபக்தியுடன் பூஜைசெய்து வருங்காலத்தில் ஒருநாள் இவர் தகப்பனாகிய மத்தியந்தின மஹர்ஷியானவர் அங்கு வந்து தமது குமாரரின் சரிதையைப்பார்த்து மிகவும் ஸந்தோஷித்து, அவருக்கு கிருஹஸ்தாசிரமத்தின் பெருமையை யெடுத்துக்கூறி, அவரைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்ட அவரும், அதற்கிணங்க, உடனே வஸிஷ்டமஹர்ஷியினுடைய தங்கையை வியாக்ரபாதருக்குக் கல்யாணம் செய்து வைத்தார். பிறகு வியாக்ரபாதர் தர்மபத்தினியுடன் ஈசுவரபூஜை செய்து வருகையில் அவருக்கு ஒரு புத்திரப்பேறு உண்டாயிற்று. உடனே வஸிஷ்டமஹர்ஷி வந்து தமது மருமகனுக்கு உபமந்யுவென்று நாமகரணம் செய்வித்துக் குழந்தையை தம்முடன் தமதாசிரமத்திற்கு கூட்டிக்கொண்டு போய்விட்டார். அங்கு காமதேனுவின் பாலைக்குடித்துக்கொண்டு அக்குழந்தையும் மிகவும் ஸௌக்யமாய் வளர்ந்தது. வயதான பிறகு பிதாவான வியாக்ரபாதர் உபமன்யுவை வஸிஷ்டாசிரமத்திலிருந்து தமதாசிரமத்திற்குக் கூட்டிவரவே அந்த உபமன்யுவானவர் தமது மாமாகிருஹத்தில் சாப்பிட்ட காமதேனுவின் பாலின்பழக்கத்தால் இங்கும் அந்தமாதிரியான பால்வேண்டுமென்று பிடிவாதம் செய்யவே வியாக்ரபாதர் இதற்கென்னசெய்வதென்று வியாகுலத்துடன் ஸ்ரீமூலநாதரிடம் போய் விஷயத்தை தெரிவித்தார். உடனே ஈசுவரனும் தமது பக்தனுடைய பிரார்த்தனைக்கிணங்கி கருணையுடன் திருப்பாற்கடலை அங்கு தருவித்து அதை உபமந்யுவுக்கு கொடுக்கச்சொல்லி அனுக்கிரஹித்தார். பிறகு வியாக்ரபாதர் உக்ரமாக ஈசுவரனைக்குறித்து தபஸ்செய்த பொழுது தேவதாருவனத்தில் ஆனந்தத்தாண்டவம் செய்த நடராஜ மூர்த்தியின் தர்சனம் அவர்




ஆயிரக்கால் மண்டபம் ஏறும் வழி. இந்த மண்டபத்தில் தான் பதஞ்சலி மஹர்ஷி ஒரு திரைக்குள்ளிருந்துகொண்டு தமது நிஜரூபமாகிய ஆதிசேஷனுடைய ரூபத்தை யெடுத்துக்கொண்டு தமது ஆயிரம் சிஷ்யர்களுக்கும் ஒரே ஸமயத்தில் தமது ஆயிரம் முகங்களினுலும் வியாகரண மஹாபாஷ்யம் சொல்லிக் கொடுத்ததாக சொல்லப்படுகிறது.

ஞானக்கண்ணுக்கு ஏகதேசம் தோன்றிற்று. உடனே தம்மை தேவதாருவனத்துக்கு அனுப்பாமல் தமது பிதா தில்வவனத்துக் கனுப்பினுரேயென்று சற்று கலங்கினுராயினும் தமது பிதா தமக்கு எல்லா சிரேயஸ்ஸும் இங்கு கிடைக்குமென்று சொன்னவாக்யம் பொய்யாகாதென்று அந்த க்ஷணத்திலேயே நிச்சயப்படுத்திக்கொண்டு மறுபடி சஞ்சலமில்லாத மனதுடன் ஏகாக்ர சித்தராய் தபஸ்ஸிலமர்ந்தார். அப்பொழுது தில்வவனத்திலேயே ஆனந்தத்தாண்டவதர்சனம் அவருக்கு கிடைக்குமென்றும், அந்த தர்சனத்திற்காகவே இன்னெருமஹானும் அவருடன் வந்துசேருவாரென்றும் ஒரு ஸ்புரணம் உண்டாயிற்று. அதனுல் ஸந்தோஷமடைந்தவருய் காலத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்.

பதஞ்சலியின் கதை.

முன்தேவதாருவனத்தில் தாம் கண்டகாக்ஷியை ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் ஆதிசேஷனிடம் பகரவே அவரும் அந்த அத்புதக்காக்ஷியைக் காண்பதற்குத் தனக்கு மிகுந்த அவா விருப்பதாகத்தெறிவிக்க ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர், "அப்படியாளுல் உம்முடைய புத்திரனை நமக்குப்படுக்கையாக அமர்த்திவிட்டு நீர்போய் ஈசுவரனைக் குறித்து தபஸ்




சிவகங்கை குளம் இன்னொரு காக்ஷி.

செய்யும்'' என்று சொல்லி அவரை அனுப்பினர். அவ்வாறே அவரும் தபஸ் செய்கையில் ஈசுவரன் கருணைகூர்ந்து அவருக்கு முன்வந்து என்ன வேண்டுமென்று கேட்டார். அதற்கவர் தமது அவாவைத்தெறிவிக்கவே ஈசுவரனும் மகிழ்ந்து அவரை பதஞ்சலிரூபத்தையெடுத்துக்கொண்டு தில்வவனத்திற்குச்சென்று அங்கு எற்கனவே காத்திருக்கும் வியாக்ரபாத மஹர்ஷியுடன் காத்திருந்தால் அவ்விடத்தில் தை மாதத்தில் குருவாரம் புஷ்யநக்ஷத்திரத்தில் விருஷபலக்னத்தில் தாம் ஆநந்தத்தாண்டவத்தின் காக்ஷியளிப்பதாக அருள் புரிந்தார். உடனே மிகுந்தஸந்தோஷத்துடன் ஆதிசேஷனும் தமது ரூபத்தை மறைத்து பதஞ்சலியாக மாறி தில்வவனம் சென்று அங்கு வியாக்ரபாதரைக்கண்டு இருவருமாக சங்கதிகளை ஒருவரோடொருவர் சொல்லிமகிழ்ந்து ஈசுவரனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

ஆநந்தத்தாண்டவதர்சனம்.


இவ்வாறு இவர்களிருக்கையில், ஆநந்தத்தாண்டவ தர்சனத்தில் மிகுந்த இச்சையுள்ள த்ரிஸஹஸ்ர (3000) முனிவர்களும் இவர்களிடம்வந்து தங்களது அபிலாஷையைத் தெரிவித்துக்கொண்டதும் அவர்களையும் அங்கேதானே குறிப்பிட்டகாலத்தை எதிர்பார்தது காத்துக்கொண்டிருக்கச் சொன்னார்கள். பிறகு ஈசுவரனால் குறிக்கப்பட்டதினம் உதயமாச்சுது. 'இன்றையதினம் அபாரகருணாநிதியாகிய ஆண்டவன் வந்து நர்த்தனஞ் செய்வார். நாமெல்லோரும் கண்குளிரப் பார்த்து அளவிலடங்காத ஆனந்தத்தையடையலாம்' என்று எல்லோரும் கொந்தளித்துக் கொண்டிருந்தார்கள். ஸூர்யபகவானும்




நூற்றுக்கால் மண்டபம்.

மிகுந்த பிரகாசத்துடன் ஆகாயத்தின் மத்தியில் வந்துநின்றனன்.

அதைக்கண்ட பதஞ்ஜலி வியாக்கிரபாதர் இருவரும் தங்கள் ஆசிரமங்களிலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் வந்து பகவானுடைய வரவை எதிர்பார்த்திருக்கும்போது பிரணவாத்மாவாயும் ஜகத்குருவாயுமுள்ள நடராஜபதி வந்தாரென்று தாளத்வனியோடு கலந்த சாஹளமுதலிய வாத்தியத்வனிகள் உயர்ந்து கேட்வும், மிருதங்கம் சங்கம் பணவம் கொம்பு குழல் முதலிய வாத்யங்கள் சப்திக்கவும், சகல வாத்யங்களுக்கும் மேலாய் சப்திக்கின்ற தாளத்வனிக்கு முன்னே கணேசுவரர்களான ஆயிரமுகங்களையுடைய பானுகம்பனும் பர்வதம்போன்ற ஸஹஸ்ரசிருங்கனும் ஆனந்த மோகிதர்களாய் வேகத்துடன் பூமியை அடைந்தார்கள். அவர்களில் பானுகம்பன் சந்திரமண்டலத்துக்குச் சமானமான வெண்மையுள்ள பெருத்த சங்கங்களை ஆயிரமுகங்களிலும் வைத்து அண்டம் பிளக்கும்படி பிரணவத்வனி உச்சரிக்கும்படி கோஷித்தனன். பரமசிவப்பிரஸாதத்தால் காந்தர்வவேதத்தில் மிகுந்த வல்லமையுள்ள சக்கிர சிருங்கனென்று பேர்பெற்ற பாணாசுரன் ஆயிரம் கரங்




சிவகங்கை குளம் வடபாகம்.




சிதம்பரம் கோவில் வடக்கு மேற்கு கோபுரங்களும், சிவகங்கை குளமும், அ

களால் அடிக்கின்ற சுத்தமத்தளத்வனியானது கடலோசையடங்க சப்திக்கவும், தோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி கண்டக்கருவியென்னும் ஐவகை நாதங்களும் நான்கு வேதங்களின் கோஷங்களும் பரமேசுவருடைய சரணாரவிந்தங்களை விட்டு நீங்கா ஸ்ரீநூபுரங்களின் சப்தமும் தேவர்களுடைய இனிமையுள்ள கானங்களும் ஏககாலத்திற் கேட்டவுடனே தேவர்களால் வர்ஷிக்கும் பாரிஜாத முதலிய வாஸனையுள்ள மலர்களைக்கண்டு பதஞ்சலிவியாக்ரபாதர் இருவரும் அந்த திக்கைநோக்கி நமஸ்கரித்து அஞ்ஜலிபந்தனஞ்செய்து 'ஓ பார்வதிநாதனே! நடராஜதெய்வமே! எங்களை அனுக்ரகிக்கவேண்டும். தேவரீரது பாதாம்புஜத்தை தர்சிப்பிக்கவேண்டும்.' என்று புளகாங்கிதவிக்ரகர்களாய் துதித்துக்கொண்டிருக்கையில் கருணாநிதியான பரமேசுவரர் பதஞ்சலிக்கும் வியாக்ரபாதருக்கும் ஞானதிருஷ்டியைக் கொடுத்து மோகத்தின் மாதாவாயும் ஜகத்தை ஸம்ஹாரஞ் செய்கின்றவளாயுமிருக்கிற மஹாமாயையாகிய திரையை நீக்கியருளலும் உடனே ஆயிரம் சூரியர்கள் உதித்ததுபோன்றதாயும் இவ்வளவென்றறிய முடியாததாயும் சர்மநேத்திரங்களால் கிரகிக்கத்தகாததாயும் யோகிகளுடைய ஹிருதயத்தில் விளங்குவதாயுமுள்ள ஒரு தேஜோவிசேஷம் ஞானமயமானசித்ஸபையில் ஆவிர்ப்பவித்தலும், அந்த தேஜஸின் நடுவே அசைவற்று ஓர் சரணத்தை ஊன்றியும் மற்றொரு சரணத்தைக் குஞ்சிதமாகத் தூக்கியும், அத்திருவடிகளிற் சாத்திய மாணிக்கமயமான திருச்சிலம்புகளும், அழகிய அரையில் அணிந்த புலித்தோலுடையும், படத்தின் ரத்தினங்களால் விளங்குகின்ற ஸர்ப்பக்கடிஸூத்ரமும், நவரத்தினங்களிழைத்த உதரபந்தனமும், யக்ஞோப




கோவிலும், சித்ஸபை, கனகஸபை, தேவஸபைகளும் அடங்கிய காக்ஷி.

வீதம் பொருந்திய திருமார்பும், வளைத்து வீசியருளிய வாமகரமும், பணிகங்கணந்தரித்த அபயஹஸ்தமும், அசைகின்ற டமருகமும் ஜவலிக்கின்ற அக்கினியும் ஏந்திய இருகைகளும், காளகூடத்தாலழகிய திருக்கழுத்தும், திருத்தோடும் சங்கக்குழையும் பொருந்திய செவிகளும், திருவாய்ப்பவளத்தில் பிரகாசிக்கின்ற புன்னகையும், மலர்ந்த பங்கஜத்தின் அழகுபோன்ற திருமுகப்பிரஸன்னமும், பார்வதி தேவியைப்பார்த்தருளுகின்ற திருநயனங்களின் கடாக்ஷவிளக்கமும், புருவமாகிய இளங்கொடியில் விளங்குகின்ற நெற்றியாகிய சந்திரனும், கங்கை ஸர்ப்பம் சந்திரன் கொன்றை வெள்ளெருக்கு கொக்கிறகு மத்தம் தும்பை இவைகளால் அழகிய ஜடாபாரமும், கபாலமாலையும், ஆபாதமஸ்தகபர்யந்தஞ் சாத்திய திருவெண்ணீறும், அசைகின்ற சிவந்த ஜடாபாரமும் பொருந்தி விளங்குகிற அத்புதமான ஆனந்தத்தாண்டவரூபத்தை புனிதர்களான பதஞ்சலிவியாக்ரபாதர் இருவரும் கண்டு அதற்கு இடதுபக்கத்தில் இருண்ட மேகம்போற் குழலிலே மின்னல்போன்ற செந்தாமரைமாலையும், அழகிய நெற்றியும், அதிற்பொருந்திய சிந்தூரதிலகமும், ஸௌந்தர்யப்பிரவாகத்தின் அலைகள் போன்ற இரண்டு புருவங்களும்; தாமரைமலர்போன்ற கண்களும், அணிகளணிந்த திருக்காதும், சம்பகமலர்போன்ற நாசியும், பவழத்தை வென்ற இதழும், முத்துக்கள்போன்ற பல் வரிசையும், கன்னிக்கமுகு போன்ற கழுத்தில் விளங்குகின்ற நித்தியமாகிய பொலிவினையுடைய திவ்யமங்களபூஷணமும், இளம் மூங்கிலைப்போன்ற இருபாஹுக்களும், கரகமலத்திலேந்திய செங்கழுநீர்மலரும், பெருத்துயர்ந்த ஸ்தனப்பிரதேசத்தில் விளங்குகிற முத்துவடமும், ஸௌந்தர்



நர்த்தனஸபை. இது நடராஜர் நர்த்தனத்துக்காக வரும்பொழுது ஏறிக்கொண்டு வந்த ரதமென்று சொல்லுகிறார்கள். அதனால்தான் இதற்கு சக்கிரம்கூட போட்டிருக்கிறது. இங்குள்ள தூண்கள் மிகுந்த வேலைப்பாடுடனிருக்கின்றன.

யப் பிரவாஹத்தின் சுழிபோன்ற அழகிய நாபியும், பீதாம்பரந்தரித்த அழகிய இடையும், அதில் தரித்த ஒட்டியாணமும், நவரத்னமிழைத்த மேகலாபரணமும், மன்மதனுடைய உத்யானவனத்தில் இருக்கின்ற வாழைபோன்ற அழகிய தொடைகளும், கருடப்பச்சைபோன்ற முழந்தாள்களும், காமராஜனுடைய காஹளவாத்தியம்போன்ற இருஜங்கைகளும், செந்தாமரை மலர் போன்ற கால்களில் விளங்குகின்ற நவரத்ன நூபுரங்களும், பசுமையுள்ள திருமேனியும், அழகிய ஆனந்தமான புன்னகையும் பொருந்தி, அக்னியை விட்டு நீங்காத உஷ்ணம்போல அந்நடராஜமூர்த்தியைவிட்டு அகலாது நடனதரிசனத்தை நோக்கி நிற்கும் சிவகாமசுந்தரியென்னும் தேவியை தரிசித்து பதஞ்சலி வியாக்ரபாதர் இருவரும் க்ஷணநேரம் தன்னைமறந்து ஒன்றுந்தோன்றாமலிருக்கையில் தயாளுவாகிய பரமேசுவரருடைய கிருபாதிருஷ்டியால் தெளிவையடைந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து கையை சிரஸின்மேல் தூக்கி அஞ்ஜலிபந்தனஞ்செய்து கண்ணில் ஆனந்தநீர் பெருக மேனிமுழுதும் மயிர்கூச்செறிந்து சொல்லற்கரிய ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கி ஸ்தோத்திரஞ்செய்தார்கள். உடனே பிர்ம்மா விஷ்ணு இந்திரன்முதலிய தேவர்கள் மகாதேவனைப்பார்த்து 'நாதனே நாங்களும் தேவரீரது ஜோதிர்மயமான சிதம்பரஸபையையும் அதில் நடிக்கும் ஆனந்தத்தாண்டவத்தையும் தரிசிக்கும்படி கிருபை செய்தல் வேண்டும்' என்று பிரார்த்திக்கவும் சித்ஸபேசன் புன்சிரிப்புடன் அருகில் அமர்ந்தருளுஞ் சிற்சக்தியாகிய சிவகாமசுந்தரியின் முகாம்புஜத்தை வீக்ஷித்து ஸகல இச்சைகளின் பலன்



நிருத்தஸபை (இன்னொரு காக்ஷி). இவ்விடத்தில்தான் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியிருக்கிறது.


களை அளிப்பதாயும் ஸகலமான தேவர்களுக்குக்கூட துர்லபமாயும் மோக்ஷத்தைக் கொடுப்பதாயுமுள்ள ஆனந்தத்தாண்டவ தரிசனத்தால் எல்லோருஞ் ஸுகிகளாகவும் பாபத்தை விலக்கினவர்களாகவும் பிறப்பைப் பயனுள்ளதாகச்செய்தவர்களாகவும் முக்தர்களாகவும் ஆகவேண்டுமென்று திருவுளத்தெண்ணிக் கிடைப்பதற்கரிய ஆனந்தத்தாண்டவத்தை எல்லோரும் பார்க்கும்படி நடித்தருளினர்.

இந்த அத்புதமான நர்த்தனம் முடிந்ததும் ஸ்ரீநடராஜரானவர் லோகத்தை உஜ்ஜீவிக்க செய்யும் பொருட்டு தமது கையிலிருந்த உடுக்கை பதினான்குதரம் அடித்தார். அதிலிருந்து பதினான்கு ஸூத்ரங்கள் மாஹேசுவரஸூத்ரங்கள் என்று சொல்லப்பட்டவைகள் உண்டாயின. இதிலிருந்துதான் வியாகரணசாஸ்திரம் முழுமையுமுண்டாச்சுது. இதையேதான் நந்திகேசுவாரும் அடியில் கண்டசுலோகத்தால் சொல்லுகிறார்.

नृत्तावसाने नटराजराजः ननाद ढक्कां नवपञ्चवारम् ।
उद्धर्तुकामः सनकादिसिद्धानेतद्विमर्शे शिवसूत्रजालम् ॥


சிதம்பரம்.

சித் என்றால் ஞானம், அம்பரம் என்றால் ஆகாசம்; சிதம்பரம் என்றால் ஞானாகாசம் என்று அர்த்தம். வெளிரூபமாகிய ஜடஆகாசத்தை விலக்கவேண்டி சித் என்ற விசேஷணம். ஆகாசம் என்றால் தன்னையும் மற்றதையும் பிரகாசிக்கச்செய்யும் பேரொளி. அப்பேரொ



சித்ஸபையும் கனகஸபையும், இவைகளைச் சுற்றியுள்ள முதல் பிராகாரமும். சித்ஸபைக்கு பக்கத்தில் சண்டிகேச்வரர் கோயிலும் கனகஸபைக்கு பக்கத்தில் கல்யாண மண்டபமும் காண்கின்றன.

ளியே ஸ்ரீமந்நடராஜமூர்த்தியாதலால்தான் அவருக்கு சிதம்பரேசுவரர் என்று பெயர். இந்த சிதம்பரமானது ஆகாசரூபமாயுள்ளதால்தான் ஒருவருடையவும் சர்மசக்ஷுஸ்ஸுக்குப் புலப்படுகிறதில்லை. ஆகாசம்தான் முதன் முதலில் பிரம்மத்தினிடத்திலிருந்து வெளித்தோற்றத்துக்கு உண்டானதாக तस्माद्वा एतस्मादात्मन आकाशः संभूतः என்கிற தைத்திரீய உபநிஷத் முதலான வேதவாக்யங்களால் சொல்லப்படுகிறது. இதனாலேயே எல்லாக்ஷேத்ரங்களுள்ளும் சிதம்பரக்ஷேத்ரமே முதலில் உண்டாக்கப்பட்டதாக ஸந்தேகமின்றிக்கூறலாம். இந்த சிதம்பரமானது பூமியின் ஹிருதயத்தின் மத்தியிலிருக்கிறதென்று चिदम्बरं तु हृन्मध्ये என்கிற ஸ்ரீஜாபாலதர்சனோபநிஷத்தால் தெரிகிறது. இத்தகைய ஆகாசத்தின் நடுவிலிருக்கிறபடியால்தான் அங்குள்ள பரமாத்மாவான சித்ஸபேசரை சிரமப்பட்டுத்தேடிக் கண்டுபிடித்து அந்த நிரதிசயமான ஆநந்தத்தை அனுபவிக்கவேண்டியது ஸர்வேந்திரியநிக்ரஹம் செய்தமுனிகளுக்கும் மிகவும் அவச்யமென்று உபநிஷத்துக்கள் கதறுகின்றன. சாந்தோக்யோபநிஷத்தில் குருவானவர் சிஷ்யனை நோக்கி சொல்லுகிறார்: अथ यदिदमस्मिन्ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म दहरोऽस्मिन्नन्तराकाशस्तस्मिन्यदन्तस्तदन्वेष्टव्यं तद्वाव विजिज्ञासितव्यमिति । ஸாக்ஷாத்பரப்பிரம்மமே இங்கு இருக்கிறபடியால் இதற்கு பிரம்மபுரம் என்று பெயர். இந்தபிரம்மபுரத்தில் தஹரமான அதாவது அல்பமான அல்லது சிறிதான புண்டரீகம் அதாவது தாமரைபோலொத்த ஹிருதயத்தையே இருப்பிடமாகக்கொண்டு அதற்குள்ளிருக்கும் ஆகாசம் (அதாவது பிரம்மபுரமென்றும், புண்டரீகபுரமென்றும், தஹ



தேவ ஸபை. இதில் உத்ஸவ மூர்த்தி இருக்கிறது.

ராகாசமென்றும் சொல்லப்படும் சிதம்பரம்) அதற்குள்ளிருக்கும் வஸ்து எதுவோ அதைத்தான் தேடவேண்டுமென்றும், நன்றாய்த்தெரிந்துகொள்ளவேண்டுமென்றும் மேற்கூறிய உபநிஷத்தின் தாத்பர்யம். இதன் பேரில் இவ்வளவு அல்பமாயிருக்கும் தஹரபுண்டரீக ஆகாசத்துக்குள் என்னவிருக்கிறதென்று கேட்கும் சிஷ்யன் கேள்விக்கு குரு சொல்லுகிறார்:—यावान्वा अयमाकाशस्तावानेषोऽन्तर्हृदय आकाश उभे अस्मिन्द्यावापृथिवी अन्तरेव समाहिते उभावग्निश्च वायुश्च सूर्याचन्द्रमसावुभौ विद्युन्नक्षत्राणि यच्चास्येहास्ति यच्च नास्ति सर्वं तदस्मिन्समाहितमिति ॥ அதாவது இந்தலோகத்தில் உள்ளது இல்லாதது எல்லாம் இந்த தஹராகாசத்தில் அடங்கியுள்ளதென்று குரு சொல்லவும் சிஷ்யனானவன் அப்படியானால் இந்த பிரம்மபுரமானது ஜரை முதலிய அவஸ்தைகளாலாவது த்வம்ஸத்தினாலாவது விகாரத்தையோ நாசத்தையோ அடைந்தால் அப்பொழுது உள்ளிருக்கும் வஸ்துவில் என்ன பாக்கியுள்ளது என்று கேட்டான். அதற்கு குரு சொல்லுகிறார். नास्य जरयैतज्जीर्यति न वधेनास्य हन्यत एतत्सत्यं ब्रह्मपुरमस्मिन्कामाः समाहिता एष आत्मापहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसंकल्पो यथा ह्येवेह प्रजा अन्वाविशन्ति यथानुशासनं यं यमन्तमभिकामा भवन्ति यं जनपदं यं क्षेत्रभागं तं तमेवोपजीवन्ति ॥ இந்த பிரம்மபுரமானது ஜரை முதலிய அவஸ்தைகளால் விகாரமடைவதில்லை, ஒருநாளும் நாசமடைவதில்லை, எப்பொழுதும் ஸத்யமாய் உள்ளது. அதற்குள்ளிருக்கும் பரமாத்மாவானவர் பாபரஹிதர், அதாவது தர்மம் அதர்மம் இரண்டுக்கும் மேம்பட்டவர், ஜரையில்லாதவர், நாசமில்லாதவர், சோகமில்லாதவர், பசியில்லாதவர், தாஹமில்லாதவர், ஸத்யகாமர், ஸத்யஸங்கல்பர். இத்தகைய குணங்களோடு கூடியவர் தான் அறியப்படவேண்டியவர்.

இதையேதான் நாராயணோபநிஷத்திலும் दहं विपापं परमेश्मभूतं यत्पुण्डरीकं पुरमध्यसंस्थम् तत्रापि दहं गगनं विशोकस्तस्मिन्यदन्तस्तदुपासितव्यम् । என்று சொல்லியிருக்கிறது.

கைவல்யோபநிஷத்திலும் பரமஹம்ஸபரிவ்ராஜகர்களாயிருக்கும் ஸந்யாஸிகள் த்யானத்தால் தேடிக்கண்டுபிடித்தறியவேண்டிய வஸ்துவைச்சொல்லும்பொழுது विविक्तदेशे च सुखासनस्थः शुचिः समग्रीवशिरः शरीरः । अन्त्याश्रमस्थः सकलेन्द्रियाणि निरुध्य भक्त्या स्वगुरुं प्रणम्य । हृत्पुण्डरीकं विरजं विशुद्धं विचिन्त्य मध्ये विषदं विशोकम् । अचिन्त्यमव्यक्तमनन्तरूपं शिवं प्रशान्तममृतं ब्रह्मयोनिम् । तमादिमध्यान्तविहीनमेकं विभुं चिदानन्दमरूपमद्भुतम् । उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं प्रशान्तम् । ध्यात्वा मुनिर्गच्छति भूतयोनिं समस्तसाक्षिं तमसः परस्तात् । स ब्रह्मा स शिवः सेन्द्रः सोऽक्षरः परमः स्वराट् । स एव विष्णुः स प्राणः स कालोऽग्निः स चन्द्रमाः । स एव सर्वं यद्भूतं यच्च



வடக்கு கோபுரம், சிதம்பரம்.

भव्यं सनातनम। ज्ञात्वा तं मृत्युमत्येति नान्यः पन्था विमुक्तये ॥ என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குகிறது.

இது விஷயத்தை விரிக்கினால் மிகவும் பெருகுமாதலால் இத்துடன் நிறுத்தினோம். மேற்கூறிய உபநிஷத்துக்களைப் பார்த்தால் இந்த சிதம்பரத்தின் மகிமை நன்கு விளங்கும்.


நடராஜமூர்த்தி.

நடராஜர் என்றால் ஸபாநாயகர் என்று பொருள். இதன் தாத்பர்யம் யாதெனில், இந்த உலகம் முழுமையும் ஒரு நாடகஸபை—அதாவது எங்கும் நிறைந்தும் அதிர்ஷ்டாயுமுள்ள ஸபேசரான ஆத்மா அல்லது கடவுளுடைய சக்தியால் ஸர்வத்தையும், சேதனமுள்ளதாயும் உத்ஸாஹமுள்ளதாயும் காண்பிக்கும் ஒரு பொம்மையாட்டம். நடிப்பிவித்தால் யார்தான் நடிக்கமாட்டார்கள்; பாடும்படி செய்வித்தால் யார்தான் பாடமாட்டார்கள் என்பதாய் தத்வஞான ஓர்கவி கூறுகின்றார். ஆனால் அந்தர்யாமியான ஆத்மாவுக்கு ஸமஸ்தஜகத்தும் கேவலம் ஜடமாக இருக்கும்.

மனதுக்கு நிஜமான குரு ஆத்மா அல்லது தானேயானபடியால் நடராஜர் அந்த குருவைக்குறிக்கிறார். குருவில் இருவகையுண்டு. பிரத்யக்ஷகுரு, அப்ரத்யக்ஷகுரு. பிரத்யக்ஷகுருவாவது சிஷ்யனுக்கு உபதேசம்செய்து அவனை ஸரியான வழிக்குக்கொண்டுவருகிறவர். குருவென்னும் பதத்துக்கு ஸாதாரணமாக இப்படித்தான் அர்த்தம் செய்கின்றார்கள். ஆனால் யதார்த்தத்தில் எல்லா உபதேசமும் தனக்குள்ளேயிருந்தே வருகிறது. இதனால் ஆத்மா அல்லது கடவுளானவர் பிரத்யக்ஷகுருவை வியாஜமாகக்கொண்டிருக்கிறார் என்பதுமட்டுமல்ல. எப்பொழுதும் விருத்தி தனக்குள்ளிருந்து உண்டாகவேண்டுமென்பதே. உதாரணமாக, செடியானது தனக்குள்ளிருந்தே முளைக்கிறது; எரு, ஜலம், முதலியவைகளெல்லாம் அதன் விருத்திக்கு உபகாரணமாயுள்ளன. இதே மாதிரியாக மனதும் வெளியிலிருந்து கிடைக்கும் உபதேசங்களைப்பரிபக்குவம் செய்துகொண்டு தனக்குள்ளிருந்தேதான் விருத்தியாகவேண்டும். அந்த யதார்த்த குருவை மூர்த்திமானாகக் காண்பித்தால் நடராஜராகிறது. ஒரு குருவின் வேலைகளுள் மிகவும் முக்கியமானது யாதெனில் தான் செய்யும் உபதேசங்களின்படி தானே நடந்து காண்பிப்பது. நடராஜர் சின்னத்துக்கு இதுதான் முக்கிய கருத்து.


வலது கைகளில் ஒன்றிலுள்ள சிறு உடுக்கானது, சப்தநிஷ்டம் ஜகத் என்னும் சுருதிவாக்கியப்படிக்கு இந்த ஜகத்துக்கெல்லாம் காரணபூதமாயுள்ள சப்தத்தை குருவாகிய கடவுள் கையிலடக்கி யிருக்கிறாரென்பதைக் குறிக்கிறது. அதாவது ஸமஸ்த

உலகமும் அவர் கைக்குள்ளிருக்கிறது. அவருக்கு இஷ்டமிருந்தால் பிரகாசப்படுத்தலாம்; இல்லாவிடில் இல்லை. ஞானிக்கு அவன் பிரியப்பட்டால் உலகம் ஸத்தாகிறது. இல்லாவிட்டால் அஸத்தாய்ப்போய்விடுகிறது. ஒருபக்கத்திலிருக்கும் மான்தான் மனது. எப்படி மானானது யதேச்சையாய் துள்ளிக்குதிக்கிறதோ அதே பிரகாரம் மனதானது ஒரு வஸ்துவிலிருந்து மற்றொரு வஸ்துவினிடம் அதி சீக்கிரத்தில் பாய்கிறது. ஆத்மாவானது இந்த மான்போலொத்த மனதுக்கு எட்டாமல் வெகுதூரத்திலிருக்கிறது. ஆகையால்தான் விக்ரஹத்திலும் மானைக் காலுக்கு ஸமீபத்தில் வைத்திருக்கிறது. தானே கொன்ற ஒரு புலித்தோல்தான் நடராஜருக்கு வஸ்திரமாயிருக்கிறது. அகங்காரம் அல்லது அகம்பாவம் தான் அந்தப்புலி. அதை எதிர்த்தால் அது மிக்க குரூரமாயும், உக்ரமாயும் பயங்கரமாயும் சண்டை செய்கிறது. ஆனால் அதைக்கொன்றேதீரவேண்டும். அதை குருவாகிய நடராஜர்தான் கொல்லலாம். அவர் சிரஸில் கங்கையையும் சந்திரனையும் தரிக்கிறார். கங்கை தான் மிகவும் குளிர்ந்ததும், ஆசுவாஸகரமாயுள்ளதுமான சித்சக்தி அல்லது ஞானம். சந்திரன், ஆத்மாவின் பரஞ்ஜோதிர்மயத்வத்தையும் ஆநந்தமயத்வத்தையும் குறிக்கிறது. ஒரு பாதத்தை, பிறப்பு இறப்புக்குக் காரணமாயுள்ள முடிவில்லாமலிருக்கும் மஹாமாயையைக் குறிக்கும் முஸலகன் என்னும் ராக்ஷஸன் மேல் வைத்து அவனை நசுக்கிக்கொண்டிருக்கிறார். மற்றொரு பாதத்தை உயரத் தூக்கிக்கொண்டிருக்கிறார். அது ஜகன்மாயை, மனசு, இவைகளை அதிக்கிரமித்ததாயும் ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தியாகிற மூன்றவஸ்தைகளுக்கும் மேலானதாயுமுள்ள துரீயாவஸ்தையை காண்பிக்கிறது. ஆனந்தபாவத்தைக் காண்பிக்கும் இரண்டாவது வலது கையானது ஞானத்தின் மிகச்சிறந்த அதிகாரமான ஸகஜமான சாந்தியைக்குறிக்கின்றது. இடது கையில் ஒன்றில் அக்னிவைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது குருவானவர் தன்னுடைய உபதேசத்தின் பிராமாண்யத்தை ஸ்தாபிக்க ஆத்மாவின் ஜ்யோதிஸ்ஸைக் கொண்டுவருகிறார். இதன் பாவார்த்தம் யாதெனில் குருவின் உபதேசம் ஸ்வானுபவத்தில்தான் நன்றாக அறியலாமென்பது. அவர் நர்த்தனம் செய்யும் இடத்தை தில்லைவனம் என்று சொல்லுகிறார்கள். தில்லைவனமாவது பலவஸ்துக்களின் ஸமூகத்தால் வனம் அல்லது காடு என்று சொல்லப்படும் மனுஷ்யனுடையவும், உலகத்தினுடையவும் சரீரமே. அந்த இடத்திலுள்ள அவர் நடிக்கும் ஸபையானது ச்மசானம். அதாவது உலகமாகிற தோற்றத்துக்குக் காரணபூதமாயிருக்கும் நாமரூபங்கள், ராகத்வேஷாதிகள் முதலியவைகளை எரித்த இடம்; சுத்த சித்ஸ்வரூபமாய் வெளியில் ஒன்றினிடத்திலும், பற்றுதலில்லாமலும் மாயாரஹிதமாயுமுள்ளது.



கிழக்கு கோபுரம், சிதம்பரம்.

மேல் சொன்னவைகள் நடராஜ சின்னத்துக்குச் சில முக்கியமான லக்ஷணங்கள். குரு




சித்ஸபை. ஒருவன் ஈசான்யத்தில் தலைவைத்துப் படுத்தால் அவனது ஹிருதயம் அவனது தேகத்தில் எங்கிருக்குமோ அதுபோன்ற மானிட தேகத்திற்கு ஒப்பிட்டிருக்கும் இக்கோவிலில் ஹிருதயம் உள்ள ஸ்தானத்தில் இந்த ஸபை அமைக்கப்பெற்றுளது.

வின் உபதேசங்களாவன. மாயை அல்லது அக்ஞானத்தைக் கீழே நசுக்கவேண்டும். உலகத்தை நமக்குள் ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் உலகத்துக்கு வசப்படக்கூடாது. மான்போலொத்த மனதைப் பிந்தித் தள்ளவேண்டும். அகங்காரத்தை நாசம்செய்யவேண்டும்; சுத்தமாயும் உபாதிரஹிதமாயும் இருக்கும் ஞானத்தை அடையவேண்டும். ராகத்வேஷம், அகம் முதலியவைகள் இல்லாமல் ஆத்மாவுக்கு ஸ்வயமாயுள்ள ஆனந்தம், தேஜஸ், ஸத்யம் முதலியவைகளை அனுபவிக்கவேண்டும். இப்படிப்பட்ட தத்வார்த்தத்தைத்தெரிந்துகொண்டு நடராஜ விக்கிரஹத்தை தரிசனம் செய்தால் அது ஒரு கல்லாகவும், தாம்ரமாகவும், ஸ்வர்ணமாகவும் தோன்றுமல் உத்ஸாஹப்படுத்துகிறதும், உத்கர்ஷமாக்குகிறதும், அதிமேன்மையான உபதேசத்தைச் செய்கிறதுமான ஒரு சின்னமாய் விளங்கும்.

இவ்வளவு மஹிமை வாய்ந்த இந்த சிதம்பரக்ஷேத்திரத்தில் இத்துணைபெருமைவாய்ந்த நடராஜமூர்த்தியை தர்சனம் பண்ணக்காத்திருந்து கிருதார்த்தர்களான மேற்கூறிய பதஞ்சலி வியாக்ரபாத மஹர்ஷிகளைத் தவிர இன்னும் அனேகம் பெரியோர்கள் மிகுந்த அவாவுடனிருந்து இங்குவந்து தர்சிப்பதால் தங்கள் ஜன்மம் கடைத்தேறுவதாகக் கருதி அவ்வாறு செய்திருக்கிறுர்கள். அவர்களிற் சிலரைக்குறித்து இங்கு சொல்வோம்.


ஹிரண்யவர்மன்.



பாண்டியநாயகம் ஸுப்ரமண்யஸ்வாமி கோயில்.

முக்காலத்திலேயே வடதேசங்களில் அரசனாயிருந்த ஸிம்ஹவர்மன் என்பவன் தனது ராஜ்யத்தைத்துறந்து வெகுதூரம்வந்து கடைசியில் இந்தக்ஷேத்ரத்தையடைந்து பதஞ்சலி வியாக்ரபாதர்களைக்கண்டு வணங்கி அவர்களின் கிருபையால் சிவகங்கையில் ஸ்நானம்செய்து ஸ்ரீநடராஜரின் ஆநந்தத் தாண்டவத்தை தர்சனம் செய்தான். உடனே ஈசுவரனின் அனுக்ரஹத்தால் அவ்வரசன் சரீரமுழுமையும் ஸ்வர்ணவர்ணமாய் மாறிவிட்டதால் அவ்வரசனுக்கு அது முதல் ஹிரண்யவர்மன் என்று பிரஸித்தியுண்டாயிற்று. பிறகு அவன் தனது ராஜ்யத்தையடைந்து அங்கிருந்து திரும்பி ஸமஸ்தவிபவத்துடன் வந்து ஸ்ரீநடராஜரின் கர்ப்பகிருஹம் முதலிய கோவிலைக்கட்டி அவைகளுக்கெல்லாம் ஸ்வர்ணத்தகடுகள் போட்டுவைத்ததாகவும் உத்ஸவங்களெல்லாம் ஏற்படுத்தினதாகவும் சிதம்பர மாஹாத்மியத்தில் சொல்லுகிறது.

ஜைமினி மஹர்ஷி.



ஜைமினி, வியாக்ரபாதர், பதஞ்ஜலி மஹர்ஷிகள்.

இவர் பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தை இயற்றியவர். இவர் தமது சாஸ்திரத்தில் ஈசுவரனைப்பற்றிப் புகழ்ந்து சொல்லாததால் அதனால் தமக்கு ஏற்பட்ட தோஷத்தை விலக்கக் கருதி இந்த க்ஷேத்திரத்தில் வந்து பதஞ்ஜலி வியாக்ரபாதர் முதலிய மஹர்ஷிகளுடன் சேர்ந்து ஆநந்தத் தாண்டவ தர்சனஞ்செய்து வெகுகாலம் ஈசுவரனைப் பூஜித்து “ வேதபாதஸ்தவம்” முதலிய அத்புதஸ்தோத்ரங்களால் நடராஜரை ஸ்தோத்ரம் செய்து கிருதார்த்தரானார்.

அப்பய்யதீக்ஷிதர்.

இவர் மிகப்பிரஸித்திபெற்ற ஸம்ஸ்கிருதவித்வான். 16-வது நூற்றாண்டிலிருந்தவர். இவர் எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவர். 104 கிரந்தங்களுக்குமேல் ஸம்ஸ்கிருதத்தில் எழுதியிருக்கிறார். உலகம் முழுமையுமே இவரை மிக்க கௌரவமாகக்கொண்டாடுகிறார்கள். பெ



மேற்கு கோபுரம், சிதம்பரம்.

யரைச் சொல்லாமல் "தீக்ஷிதர்" என்றுமட்டில் சொன்னாலும் இவரைத்தான் குறிக்கும். இவ்வளவு பெருமை வாய்ந்த ஞானவான் காஞ்சிபுரத்துக்கு ஸமீபத்திலுள்ள அடையப்பள்ளம் என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவராயினும் தமது முதிர்ந்த வயதில் இந்த சிதம்பர க்ஷேத்ரம் வந்து நடராஜதர்சனம் செய்யவேண்டுமென்று ரொம்பவும் அவாகொண்டு கடைசியில் இவ்வூருக்கு வந்து சேர்ந்தார். இவர் முதன்முதலில் கோவிலுக்கு தர்சனத்துக்குப்போனபொழுது ஈசுவரனுக்கு சந்தனாபிஷேகம் ஆய்க்கொண்டிருந்தது. அதை தர்சித்ததும் தீக்ஷிதர் சொன்ன சுலோகம்:

मौलौ गङ्गाशशाङ्कौ करचरणतले शीतलाङ्गा भुजङ्गाः
वामे भागे दयार्द्रा हिमगिरितनया चन्दनं सर्वगात्रे ।
इत्थं शीतं प्रभूतं तव कनकसभानाथ वोढुं क्व शक्तिः
चित्ते निर्वेदतप्ते यदि भवति न ते नित्यवासोऽस्मदीये ॥

மற்றொரு நாள் தர்சனத்துக்குப்போகும்பொழுது கோவிந்தராஜப்பெருமாள் ஸந்நிதிக்கு நேராக வந்ததும் ஒரு கண்ணுக்கு பெருமாளும் ஒரு கண்ணுக்கு ஈசுவரனும் புலப்பட்டது. அப்பொழுது சொன்ன சுலோகமாவது:

मारमणमुमारमणं फणधरतल्पं फणाधराकल्पम् । मुरमथनं पुरमथनं वन्दे बाणारिमसमबाणारिम् ॥

இதைத்தாண்டி உள்ளே நடராஜர் ஸந்நிதிக்குச் சென்றதும் சொன்ன சுலோகமாவது:

संपत्तेरवटं कुटीकृतवटं विश्वावने लम्पटं दिक्कल्याणपटं सरित्पदसटं शान्तिः स्रवन्तीतटम् ।
धीरात्मप्रकटं धनंजयभटं दूरप्रभाकर्कटं चिन्माधुर्यघटं चिदम्बरनटं पश्याम्यपर्णाविटम् ॥

இவ்வாறு ஈசுவரனை ஸ்தோத்ரம் செய்துகொண்டு ஆநந்தபரிதராயிருக்கையில் ஒருநாள் காலையில் 10-மணி சுமாருக்கு கோவிலில் இரண்டாங்காலம் தர்சனம் செய்துவிட்டு தமது கிருஹத்துக்குச் சென்றார். அங்கு தமது பத்னியை மாத்யான்ஹிகத்துக்கு தீர்த்தம் கொண்டுவரச் சொல்லிவிட்டு தாம் திண்ணையிலுட்கார்ந்தார். உட்கார்ந்ததும் அடியில் கண்ட சுலோகத்தைச் சொன்னார்.

चिदम्बरमिदं पुरं प्रथितमेव पुण्यस्थलं सुताश्च विनयोज्ज्वलाः सुकृतयश्च काश्चित्कृताः ।
वयांसि मम सप्ततेरुपरि नैव भोगे स्पृहा न किंचिदहमर्थये शिवपदं दिदृक्षे परम् ॥
आभाति हाटकसभानटपादपद्मज्योतिर्मयो मनसि मे तरुणारुणोऽयम् ।

இந்த பாதிசுலோகம் சொல்லிமுடிந்ததும் அப்படியே சாய்ந்துவிட்டார். அதே சமயத்தில் கோவிலுக்குள் பூஜைசெய்துகொண்டிருந்தவர்கள் தீக்ஷிதாவர்கள் மிக வேகமாய் வந்து கனகஸபையைத்தாண்டி பஞ்சாக்ஷரப்படிகளேறி சித்ஸபைக்குள் நடராஜரிடம் செல்வதைக்கண்டு பின்தொடர்ந்து ஓடிப்போய் பார்க்கையில் அங்கு அவரைக்காணாமையால் ஈசுவரனோடு ஐக்யமானதாக அறிந்தார்கள்.


மாணிக்கவாசகர்.



திருவாதவூரார் என்னும்
மாணிக்கவாசகர்.

இவர் பாண்டிய நாட்டிலே வாதபுரி யென்னும் ஊரிலே ஒரு பிராமணகுலத்தில் பிறந்த பிராமணோத்தமர். இவர் மிகவும் ஆஸ்திகராயிருந்து பாண்டிய அரசனுக்கு மந்திரியாய் தனக்கு ஞானோபதேசம் பெறவேண்டி குருவைத்தேடி நிற்கையில் ஈசுவரனே இவருடைய தபோமகிமையிலீடுபட்டு இவருக்கு ஞானோபதேசம் செய்வித்து கடைசியில் இவரை சிதம்பரத்துக்கு வரும்படி ஆக்ஞாபித்துச் சென்றார். இவரும் அப்படியே சிதம்பரம் வந்து ஆநந்தத்தாண்டவ தர்சனம் செய்துகொண்டு ஸ்வஸ்தமாயிருந்தார். அச்சமயத்தில் ஒரு நடராஜபக்தர் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு ஈழதேசத்துக்குச்சென்று அங்கு சிதம்பரத்தின் மகிமையைப் பலவாறாக எடுத்துச் சொன்னார். அதைக்கேள்வியுற்ற அவ்வரசன் அவரை தமது ஸபைக்குத் தருவித்தான். அவர் வந்து உட்காரும்பொழுது 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்தார். அவர் அவ்வாறு உட்கார்ந்ததன் காரணத்தைக்கேட்க அவர் சிதம்பரத்தைக் குறித்தும் நடராஜரைக் குறித்தும் சரமாரியாய் பிரஸங்கித்தார். இதைக் கேட்ட அரசனுக்குப் பக்கத்திலிருந்த புத்தகுருவானவன் வெகு கோபத்துடன் அவ்வரசனோடும் பரிவாரங்களோடும் உடனே புறப்பட்டு தில்லைக்கு வந்து அவ்விடத்தில் புத்தஸமயத்தினுயர்வைப்பத்தி பிரஸங்கிக்க ஆரம்பித்தான். இதையறிந்த தில்லை மூவாயிரத்தவர் மனம் கலங்கியஸமயத்தில் "மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வெல்லுவர்" என்று நடராஜர் ஸ்வப்னத்தில் சொன்னதைக்கேட்டு மனம் தேறி எல்லோருமாகச் சென்று மாணிக்கவாசகரை கூட்டிவந்து புத்தகுருவின் பிரஸங்கத்துக்குச் சென்றார்கள். மாணிக்கவாசகரும் புத்தகுருவின் பிரஸங்கத்தை சாஸ்திரபூர்வமாய் கண்டித்து சைவத்தின் பெருமையை நன்கெடுத்துக்கூறி அந்த புத்தரின் கொடுஞ்சொற்களைக்கேட்டு துக்கித்து நாமகளைசினந்து புத்தரின் நாவைவிட்டகலுமாறு செய்தனர். பிறகு அவ்வரசன் பிரார்த்தனைக்கிணங்கி அவன் ஊமைப்பெண்ணைப் பேசவைத்து அவளைக்கொண்டே புத்தர்கேட்ட அக்கிரமவினாக்களுக்கு விடையளிக்கும்படிசெய்து அரசனைசந்தோஷிப்பித்தனர். அந்தவினாக்களையும் விடைகளையும் "திருச்சாழல்" என்பதாக செய்தனர். பிறகு ஒருநாள் ஸபாநாயகர் ஒரு வேதியருருக்கொண்டு இவர் முன்வந்து நின்றனர். மாணிக்கவாசகரும் அவரையுபசரித்து அவர் வந்த காரணத்தை வினவினர். அதற்கு "யான் பாண்டிய நாட்டிலுள்ளவன். தங்களை சிவன் ஆண்டுகொண்டவண்ணமும், தங்களுக்காக திருவிளையாடல்கள் செய்தவிதமும், தாங்கள் பிறகு ஸ்தலயாத்திரை செய்து இத்


தில்லைக்கு வந்து புத்தரைவென்றவரலாறும் அறிந்து மகிழ்ந்தவன். தாங்கள் பாடிய பாடல்களனைத்தையும் "தங்களிடமே கேட்க விருப்பமுடையவனாகி இங்கு வந்தேன்" என்றார். இதைக் கேட்ட மாணிககவாசகர் மகிழ்ந்து தாம் பாடிய பாடல்களனைத்தையும் தெளிவாகச்சொல்லிவந்தார். வேதியரும் கையில் எடுபிடித்து ஒன்றேனும் விடாது எழுதித் தீர்ந்தவுடன் ஸபாநாயகரை பாட்டின் தலைவனாகவைத்து ஒரு திருக்கோவை பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே மாணிக்கவாசகரும் பாட அந்தக்கோவை முடிந்ததும் வேதியர் ஏட்டை சுருட்டிக்கொண்டு மின்னல் போல் மறைந்துவிட்டார். மாணிக்கவாசகர் அவரை திடீரென்று காணாதவராய் வருந்தி வந்தவர் ஈசுவரனேயென்று தெரிந்துகொண்டு மனதை ஸமாதானப்படுத்திக்கொண்டார். ஈசுவரனும் அந்த ஓலையையெடுத்துக்கொண்டு கோவிலில் சித்ஸபைக்குள் போகும்ஸமயத்தில் அங்குவந்திருந்த தேவர்களுக்கதன் பெருமையை எடுத்துரைத்து "திருவாதவூரார் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்து" என்று திருக்கோவை முடிந்த இடத்தில் எழுதி, மைக்காப்புஞ்செய்து உலகமெல்லாமறியட்டுமென்னும் கருணையுடன் வாசப்படியில் வைத்துவிட்டு உள்ளே தம்மிருப்பிடம் சென்றனர். காலையில் பூஜைசெய்யவந்த தில்லைமூவாயிரத்தவர்கள் இதைக்கண்டு ஆச்சர்யப்பட்டு ஏட்டை எடுத்துப்பார்த்து உண்மையறிந்து அத்திருக்கோவையின் பொருளுணருமாறு எல்லோரும் கூடி மாணிக்கவாசகரிடம்சென்று ஏடுகண்டவிதத்தை சொல்லி அதற்கு பொருள்கூறுமாறு வேண்டினர். மாணிக்கவாசகரும் முதல்நாள் நடந்த செய்தியை சொல்லி மனமகிழ்ந்து அவர்களுடன் கனகஸபைக்குசென்று ஸாக்ஷாத் சிதம்பரேசனை சுட்டிக்காட்டி இத்தமிழ்நூலுக்குப்பொருள் இவர்தாமென்று சொல்லி ஸபையில் எல்லோரும் காண நடராஜர் ஜோதிஸ்ஸோடு மறைந்தார்.



தெற்கு கோபுரம், சிதம்பரம்.

நந்தனார்.

இவர் ஆதனூர் என்னும் கிராமத்திலே பறச்சேரியில் அந்த்யஜகுலத்தில் பிறந்தவர். நீசஜாதியில் பிறந்தபோதிலும் ஜன்மாந்தரவாஸனையால் இவருக்கு ஈசுவரபக்தி மிகவும் ஜாஸ்தியாகவிருந்தது. எப்பொழுதும் ஈசுவரபக்தி செய்கிறதும் பறச்சேரியிலுள்ள மைத்தவர்களையும் கூட்டி ஈசுவரபஜனம் செய்கிறதும் குளம் வெட்டுகிறது



நந்தனார்.

முதலான ஈசுவரகைங்கர்யங்களை செய்கிறதுமாய் காலத்தை கழித்தனர். தாழ்ந்தஜாதியில் பிறந்துவிட்டதால் ஈசுவரனுடைய கோவிலுக்குள் போய் தர்சனம் செய்கிறதற்கில்லையே என்று மிகுந்தமனவருத்தப்படுவார். திருப்பன்கூர் என்னும் க்ஷேத்ரத்தில் இவருக்காக ஈசுவரன்கூட மனமிரங்கி தமது நந்தியை இவருக்கு தர்சனம்கிடைக்கவேண்டி சற்று விலகி யிருக்கும்படி ஆக்ஞாபித்தார். இத்தகைய சிவபக்தருக்கு காலக்கிரமத்தில் சிதம்பரத்தை தர்சிக்கவேண்டுமென்ற அவா உண்டாச்சுது. ஆனால் அங்குபோய்வர அவருடைய யஜமானாகிய அந்தணர் உத்தரவு கொடுக்கவில்லை. அதனால் அதேசிந்தையுடையவராய் பைத்தியம் பிடித்தவர்போலாய் தனதுவியவஸாயவேலைகளையெல்லாம் ஒன்றும் கவனியாமல் நடராஜரையே ஸதா த்யானம் செய்துகொண்டிருந்தார். வேலைகள் குந்தகமானதைப்பற்றி யஜமான் கோபித்துக்கொண்டால் உடனே இவர் ஈசுவரனை பிரார்த்திக்கிறதும் அவர் அதிசீக்கிரத்தில் அவ்வேலைகளை முடித்துக்கொடுக்கிறதுமாயிருந்தது. இவர் ஒவ்வொருநாளும் சிதம்பரத்துக்கு "நாளைப்போவேன்; நாளைப்போவேன்" என்று சொல்லிவந்தபடியால் இவருக்கு "திருநாளைப்போவார்" என்ற பெயருண்டாயிற்று. கடைசியாய் நந்தனார் யஜமானனை ரொம்பவும் மன்றாடிக்கேட்கிறார்:

பாம்பும் புலியும் மெய்ப் பாடுபட்டுத் தேடிப் பார்த்துப் பயிரிட்டது,
பார் அளந்த திருமாலும் வேதனும் பார்த்துக் களித்ததுண்டு,
பார்வதி என்றொரு சிமாட்டி அதில் பாதியைத் தின்றதுண்டு,
பாதி யிருக்குது பறையா நீயும் போய்ப் பாரென் றுத்தாரம் தாரும்

என்று கெஞ்சினார். பிராமணரும் மனமிரங்கி உத்திரவு கொடுத்தார். உடனே அவருக்குண்டான ஸந்தோஷத்துக்கு ஓர்எல்லையில்லை. சிதம்பரத்துக்கு ஓடிவந்தார். இராப்பகலாய் ஓயாமல்கோவிலை சுற்றிவந்தார். ஒருசமயம் தேகவருத்தத்தினால் மயங்கி சோர்ந்து நித்திரையடைந்தார். அச்சமயத்தில் ஸ்ரீநடராஜர் அவர்முன்பாக ஸ்வபனத்தில் வந்து அவரது பக்தியைப்புகழ்ந்து "நமதுபக்தர்களான பிராமணர்களை உன்னிடம் வரச்சொல்லுகிறோம்; அவர்கள்முன் நீ இந்தப்பிறப்பு நீங்கும்படி நெருப்பிலே முழ்கியெழுந்து அவர்களோடு நமது ஸபைக்கு வந்துசேருவாய்" என்றுசொல்லிவிட்டு அந்தர்த்தானமாயினார். உடனே நந்தனார் விழித்தெழுந்து முன்னிலும் பதின்மடங்கு அதிக ஸந்தோஷத்துடன் குதித்துக்கொண்டிருந்தார். ஈசுவரனும் அன்றிரவே தில்லை மூவாயிரத்தவர்களுக்கும் கனவிலேதோன்றி தமக்கு மிகவும் பக்தனான நந்தன் தம்மை தர்சிக்கவேண்டி தெற்கு கோபுரவாசலுக்கு வெளியில் வந்து காத்துக்கொண்டிருப்பதாகவும், தான் நீசஜாதியில் பிறந்தவனாதலால் உள்ளேவருகிறதற்குத் தயங்குகிறானென்றும், அவனைப்பரிசுத்தம் செய்யவேண்டி அவனுக்கு அக்னிப்பிரவேசம் செய்வித்து தம்முடையஸந்நிதிக்கு கூட்டிவரும்படிக்கும் ஆக்ஞாபித்தார். உடனேமறுநாட்காலையில் ஈசுவரனுடைய ஆக்ஞைப்பிரகாரம் பிராமணர்களெல்லோரும் தெற்குகோபுரவாசலுக்கு வெளியில்வந்து அக்னிகுண்டம் வளர்த்து நந்தனாரைக் கண்டு தங்களுக்குஏற்பட்ட ஆக்ஞையை தெரிவித்தார்கள். உடனே நந்தனார் அளவிலடங்காத ஆனந்தத்துடன் ஸ்ரீநடராஜனது திவ்யசரணாரவிந்தங்களை தியானித்துக்கொண்டு அந்த அக்னிகுண்டத்திலிறங்கவே அதிலிருந்து பழையசண்டாளதேகம்போய் அதி உத்தமமான பிராமணசரீரத்துடன் விபூதிருத்ராக்ஷதாரியாய் நடராஜரை சாமரியாய் ஸ்தோத்திரம் செய்துகொண்டு வெளியேவந்தனர். உடனே எல்லோரும் அவரை நமஸ்

கரித்து அவருடன் கனகஸபைக்குசென்றூர்கள். அங்கு எல்லோருக்கும் முன்னிலையில் ஸ்ரீநடராஜமூர்த்தியின் ஆநந்தத்தாண்டவதர்சனம் செய்து பரவசராய் ஈசுவரனின் குஞ்சித பாதத்தையடைந்தார்.

திருநீலகண்டநாயனூர்.

இவர் சிதம்பரத்திலேயே குயவர் குலத்தில் பிறந்தவர். இவரும் இவரது பத்னியும் மிகவும் ஈசுவரபக்தர்களாக இருந்தார்கள். இவர் தமது தொழிற்செய்யும் நேரங்கள்போக பாக்கிஸமயங்களிலேல்லாம் நடராஜர் கோவிலிலேயே ஈசுவரனை தர்சனம் செய்வதும் ஸ்தோத்ரம் செய்வதுமாக காலத்தை கழித்தார். ஒருநாள் இவர் ஒருவேசியின் வீடுசென்று வந்ததை இவர்பத்னி அறிந்து இவரை கோபித்துக்கொண்டு இனி தம்மிடம வந்தால் ஈசுவரன்மேலாணையென்றூள். இதனூல் மிகவும்மனவருத்தமுற்றவராய் அதுமுதல் தன் பத்னியிடம் ஸம்போகமில்லாமலேயிருந்தார். மேலும் தம்மிடமென்று அவள் பன்மையாகக்கூறியபடியால் ஸ்திரீஜாதிஸமூகத்தையே அவள் எண்ணிச்சொன்னதாகக்கருதி அதுமுதல் ஒருஸ்திரீயுடனுமே ஸம்போகம செய்யாமலிருந்தார். மைத்தபபடி தம்பதிகளிருவரும் மிகவும் ஸகஜமாயிருந்துகொண்டு ஈசுவரனுக்கு ஸதா தொண்டு செய்துகொண்டிருந்தனர். வயதும் முதிர்ந்துவிட்டது. ஈசுவரனும் இவர்களுடைய பக்திக்கு ஈடுபட்டு இவர்களிடம் கருணைகூர்ந்து ஒருநாள் ஒருபிராமணவேடம் பூண்டு இவரிடம் வந்து ஒரு பழைய ஓட்டைக்கொடுத்து அதைஜாக்ரதையாக வைத்துவைக்கவேண்டுமென்றும் பிறகு தாம் வந்துகேட்கும்பொழுது கொடுக்கவேண்டுமென்றும் சொல்லிப்போனூர். பிறகு கொஞ்சநாட்கள் கழித்து திரும்பிவந்து அந்தஓட்டைக்கேட்டார். வீடுமுழுவதும் தேடிப்பார்த்தும் அந்த ஓடுஅகப்படவில்லை. வேறுபுதியதாக நல்ல ஓடாய்க்கொடுப்பதாக சொன்னூல் வந்தபிராமணர் உடன்படவில்லை. இதனூல் மனம் வருந்திநிற்கையில் அந்த பிராமணர் இவரை 'பழைய ஓட்டை நான் அபகரிக்கவில்லை' யென்று ஸத்யம் செய்துகொடுக்க சொல்லி கூப்பிட்டார். அதற்கு திருநீலகண்டநாயனூரும் உடன்படவே அவர் பத்னியை கையைப்பிடித்துக்கொண்டு ஸ்நானம் செய்து எழுந்திருந்து தான் எடுக்கவில்லையென்று சொல்லவேண்டுமென்றூர். தான் செய்திருக்கும் சபதத்தால் தான் பத்னியுடன் சேர்ந்தாப்போல் கையைப்பிடித்துக்கொண்டு ஸ்நானம் செய்யமுடியாமலிருப்பதை எவ்வளவுதூரமெடுத்து சொல்லியும் அந்த பிராமணர் கேட்காததால் திருநீலகண்டநாயனூர் எல்லோருடனும் ஒருகுளத்துக்குப்போய் அதில் தானும் தனதுபத்னியுமாக ஒருகுச்சியின் இருபக்கங்களையும் பிடித்துக்கொண்டு அந்தபிராமணர் முதலிய எல்லோருடைய முன்னிலையிலும் ஸ்நானம் செய்தனர். ஸ்நானம் செய்து எழுந்திருந்ததும் எதிரிலிருந்த பிராமணரைக்காணவில்லை. அவருக்கு பதிலாக ஸாக்ஷாத் ஈசுவரனே ரிஷபாரூடராய் நேரில்வந்து நின்றூர். இந்த தம்பதிகளும் வயது முதிர்ந்தவர்களாயில்லாமல் மிகவும் யௌவனஸ்தர்களாக மாறிவிட்டார்கள். அதுமுதல் இவருக்கு இளமைநாயனூர் என்றும் இவர் ஸ்நானம்செய்த குளத்துக்கு இளமைநாயனூர்குளமென்றும் பெயர்வந்தது.

சேக்கிழார்.

பெரியபுராணம் எனப்படும் சைவத்தின் பெருமைவிளக்கும் நாயன்மார் மஹான்களது சரித்திரத்தைச்சொல்லும் இந்நூல் தொண்டைமண்டலம்சேர்ந்த 24 கோட்டங்களுள்

ஒன்ருகிய புலியூர்க்கோட்டத்திலடங்கிய குன்றத்தூரில் சேக்கிழாரெனப்படும் வேளாளகுலத்திலுதித்தவரொருவரால் இயற்றப்பட்டது. இவருக்குப்பெயர் அருண்மொழித்தேவர். அநபாயசோழனெனப்படும் இரண்டாவது குலோத்துங்கசோழமஹாராஜா (கி. பி. 1123—1146) இவரது திறமையைவியந்து இவருக்கு "உத்தமச்சோழப்பல்லவன்" எனப்பட்டம் கொடுத்து இவரை கும்பகோணத்திற்கு ஸமீபத்திலுள்ள திருநாகேசுவரத்தில் தமது சோழதேசமந்திரியாக நியமித்தனர். அக்காலத்தில் இளமைப் பருவத்திலிருந்த அநபாயன்எனப்பட்ட இவ்வரசன் ஜைனமதநூலாகிய 'சீவகசிந்தாமணி'யை சிறந்ததெனக் கருதியிருந்ததைப்பார்த்து, சேக்கிழார் வியசனமுற்று திருத்தொண்டத்தொகை, அந்தாதி இவைகளின்பெருமையை எடுத்துக்காட்ட அரசன் அந்நூல்களைவிரித்து காவியமாக எழுத இவரைவேண்டினன். அந்தப்படிசெய்ய சம்மதித்து, சேக்கிழார் சிதம்பரம்வந்துசேர்ந்தனர். இவ்விதம்செய்து சிதம்பரம்கோயிலிலுள்ள நடராஜமூர்த்தியை பிரார்த்தித்து ஆயிரக்கால் மண்டபத்தில் தினப்படி பகவானைத்யானம் செய்து புராணமெழுத ஆரம்பித்தனர். அது முடிவுபெற்றதைத்தெரிந்துகொண்ட சோழமன்னர் தாமேநேரில்போய் அதை அரங்கேற்றி வைக்கவேண்டி சிதம்பரம்போயினர். இப்பெரியபுராணத்திற்கே விசேஷமாய் பிரகாசிக்கும் ஸம்பந்தர் தேவியிடம் ஞானப்பால்பெற்ற சித்திரைமாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தன்றையதினம் ஆரம்பித்து அடுத்தவருஷம் அதேமாதம் நக்ஷத்திரத்தில் இதை ராஜாமுதலியோர் ஸன்னிதியில் அரங்கேற்றினர். பின்னர் யானையின்மீது ராஜா சேக்கிழார்சகிதம் இப்புராணத்தை ஊர்வலம்எடுத்துவந்தனர். பின்னர் இவருக்கு "தொண்டர்சீர்பரவுவார்" என்று பட்டமும் கொடுக்கப்பட்டது. இவருக்கு தற்காலம் சிதம்பரம் க்ஷேத்திரத்தில் தெற்கு மாடவீதியின் பின்னுள்ள 'ஞானவாபி' என்னும் குளத்தங்கரையில் ஒரு சந்நிதி விளங்கி வருகிறது.

சிலாசாஸன விசேஷம்.

இக்கோவிலின் வடக்கு கோபுரம் தனது வெற்றிகளில் ஒன்றைக் கொண்டாட விஜய நகரத்தரசனுகிய கிருஷ்ணதேவ ராயனுல் கட்டிவைக்கப்பட்டதாம்.

வடக்கு கோபுர வாயிலில் மேல் பக்கத்தில் விஜய நகரத்தரசனுகிய கிருஷ்ண தேவன் கோபுரம் கட்டிவைத்த நிமித்தம் மேற்படி ராஜாவின் சிலை ஒரு பிரையில் வைக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு கோபுரவாயிலின் கீழ் பாரிசத்தில் வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மஹாராயர் என்ற அரசர் ஸிம்ஹாத்திரி அரசன்மீது படையெடுத்துச் சென்று திரும்பினதும் கடவுளைப் பூசித்து வடக்குகோபுரம் கட்டிவைத்த விஷயமும் கூறப்பட்டிருக்கக் காணலாம்.

மேற்கூறிய இடத்திலேயே கிழக்கு, மேற்கு, தெற்கு கோபுரங்கள் மகுடமன்னர்களால் கட்டி முடிவு பெற்றனவென்றும், ஆனல் வடக்கு கோபுரம் மாத்திரம் கடவுளாலேயே எற்படுத்தப் பட்டதென்றும் கூறப்பட்டிருக்கிறது. பிற்கூறியதின் தாத்பர்யம் நான்காவதான வடக்கு கோபுரம் நான்கிலும் சிறந்ததெனக் கொள்ளவேண்டுமெனக் கூறப்பட்டுள்ள தெனக்கொள்ளல் வேண்டுமென்பது சிலர் கருத்து.

தெற்கு கோபுரம் பெருஞ்சிங்கதேவர் என்ற பல்லவ அரசன் ஒருவனுல் ஏற்படுத்தப்பட்டதெனக் கூறுகின்றனர். "சொக்கச்சியன்" என்னும் பெயருடைய இத்தெற்கு

கோபுரத்தை ஏழுநிலையுடன் கட்ட செங்கல்பட்டுக்கு சமீபத்திலுள்ள ஆத்தூரில் 364 வேலி நிலம் விட்டதாக சாஸனம் இருக்கிறது.

இக்கோவிலில் முதல் வெளிப் பிராகாரத்தில் கிழக்கில் குலோத்துங்க சோழன் பாண்டிய, கோள அரசர்கள் மீதுகொண்ட ஜயத்தையும் அதனால் அவர் ஸஹ்யாத்திரி மலைச்சிகரத்தில் ஜயஸ்தம்பம் கட்டி வைத்த விஷயத்தையும் பற்றி ஸம்ஸ்கிருத சுலோகங்கள் இரண்டில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி பிராகாரத்தின் வடக்கில் கோராஜகேசரிவர்மன் செய்த புராதனமான மாசிமக தினத்தன்று "திருத்தொண்டத் தொகை" என்பதைக் கூறி முடிக்க ஏற்பட்ட கொடையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

முதல் பிராகாரத்தின் வெளிப்புறத்தில் வடக்கில் முதலாவது குலோத்துங்க சோழன் என்ற இரண்டாம் ராஜேந்திர சோழதேவன் கோவிலுக்கெதிராக உள்ள சபையில் ஓர் கல் அமைத்த விஷயம் கூறப்பட்டுள்ளது.

பிடாரியார் கோவில் ஒன்றைக் கட்டி முடிக்க சோழக்கோனார் என்பவருக்கு ஸகல புவன சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்கதேவர் என்ற பெயர் வாய்ந்த பல்லவ அரசர் நிலம் கிரயம் செய்து கொடுத்த விஷயம் தமிழில் பைரவர் கோவில் வடசுவரில் காட்டப்பட்டிருக்கிறது.

இரண்டாவது பிராகாரத்தின் வடசுவரில் ஸகல புவன சக்கரவர்த்தி அவனியாளப் பிறந்தான் என்ற பல்லவ அரசன், சாலிய வர்த்தகர்கள் ஸ்வாமிக்கும் அம்மனுக்கும் வஸ்திரம் கொடுத்து வரவேண்டும் என்ற நிபந்தனையின் மேல் வீடு கட்டிக் கொள்ளக் காலி நிவேசனம் கொடுக்கத் தீர்மானித்த விஷயம் தமிழில் காட்டப்பட்டுளது.

இரண்டாவது பிராகாரத்தின் மேற்கு வாயிலில் இடது புறத்திலுள்ள ஓர் தூணில் மஹா ராஜஸிம்ஹன் என்ற ஓர் அரசன் கோவிலின் கீழ் கோபுரத்தைக் கட்டிவைத்தான் என்ற விஷயம் காட்ட.ப்பட் டிருக்கிறது. கீழ் கோபுர வாயிலின் வலது பார்சத்தில் சோழ குலவல்லி என்றவள் நாயன்மார்களது "பாமாலை" என்ற துதியைச சொல்லிவைக்க ஏற்பாடுசெய்த விஷயம் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்கு கோபுர வாசலின் வலது புறத்தில் அம்மனது ஐப்பசி பூரத்திருநாள்களின் கொண்டாட்டத்தில் ஒருநாள் செலவைக் கொடுப்பதற்கு ஓர் கிராமம் மானியம் விடப்பட்ட விஷயம் கூறப்பட்டுளது.

மற்றக் கோவில்கள் அமைக்கப்பட்டிருப்பதுபோல் இக்கோவில் கிழக்கு மேற்கில் நீண்டு அமைக்கப்பட்டிராது, தென் வடக்கில் நீளமாக அமைக்கப்பெற்றிருப்பது இங்கு ஒரு சிற்ப விசேஷம்.

இக்கோவிலுக்கு நான்கு பிராகாரங்கள் உண்டு. இவைகளுள் மூன்றாவதில் "ஆயிரக்கால் மண்டபம்" என்ற மண்டபம் அமைக்கப்பெற்றிருக்கிறது. இங்கிருந்து பார்த்தால் இக்கோயிலுக்குள் உள்ள மற்றைய சிறிய ஸந்நிதிகள் தென்படும்.

இரண்டாவது பிராகாரத்தில் தான் சிவன் கோவிலும், மற்ற தேவதைகளின் கோவில்களும் இருக்கின்றன. தங்க ஓடுகளால் போர்த்தப்பட்டுள்ள 'கனகஸபை' தான் நட

ராஜமூர்த்தியினது நடனஸபை என்பார்கள். இம்மாதிரி ஸபையின் பெருமையைக் காட்டும் இடம் ஐந்து. அவையாவன:—1 கனகசபை (பொன்னம்பலம்) எனப்படும் இச்சிதம்பரம், 2 ரஜதசபை (வெள்ளியம்பலம்) எனப்படும் மதுரை, 3 தாமிரசபை எனப்படும் திருநெல்வேலி, 4 சித்திரஸபை எனப்படும் திருக்குற்றாலம், 5 இரத்தினசபை எனப்படும் திருவாலங்காடு.

எல்லா வெளி கோபுரங்களிலும் பிரைகளில் அமைக்கப்பெற்றிருக்கும் அழகிய சிலைகள் ஜனங்களுக்கு வியப்பைத்தரும்படி ஏற்பட்டிருக்கக் காணலாம். மேற்கு கோபுரத்திலுள்ள சிலைகளுக்குப் பெயர்கள்கூட வெட்டப்பட்டிருக்கின்றன.

பாண்டியநாயகம் என்ற சுப்பிரமணியர் கோவிலும் முக்குறுணி அரிசிப் பிள்ளையார் கோவிலும், சிவகாமி அம்மன் கோவிலும், கோவிந்தராஜப் பெருமாள்கோவிலும் இக்கோவிலுக்குள் அடங்கியுள்ளன.

முக்குறுணி அரிசிப் பிள்ளையார் கோவில் மூன்றும் பிராகாரத்தின் தென்மேற்கிலிருக்கிறது. முதற் பிராகாரத்தில் தென் மேற்கில் நடராஜ மூர்த்தியினது நடனத்தைத் தரிசனம் செய்ததாகக் கூறப் பட்டுள்ள கோவிந்தராஜப் பெருமாள் கோவில் அமைக்கப்பெற்றிருக்கிறது. இங்குள்ள சண்டிகேசர் கோவிலும் மூர்த்தியும் விசேஷ மஹிமை பெற்றவைகள்.

சிதம்பராலயபரிபாலனம்.

இத்தென்னாட்டிலுள்ள மற்றைய தேவஸ்தானங்களைப் போலல்லாமல் இந்த தேவஸ்தானமட்டும் "தில்லைவாழ் அந்தணர்" என்று வழங்குகிற தீக்ஷிதர்களால் பரிபாலித்து வரப்பெறுகின்றது. இந்ததீக்ஷிதர்கள் நடராஜர் வரும் பொழுதே கூடவந்தவர்களென்றும் நடராஜர் உள்பட இவர்கள் மூவாயிரம் பேர்கள் வந்ததால் இவர்களுக்கு தில்லை மூவாயிரத்தவர்கள் என்று பெயர் வந்ததாகவும் தெரிகிறது. இவர்களிலும் கிருஹஸ்தாசிரமத்தில் இருக்கப்பட்ட எல்லோருக்கும் தர்மகர்த்தா பூஜை முதலிய ஸர்வஸ்வதந்தர பாத்தியங்கள் ஸமமாய் உண்டு. நீண்டகாலங்களில் நடக்கவேண்டிய கார்யங்களுக்கும், அந்தந்த சமயங்களில் நடக்கவேண்டிய கார்யங்களுக்கும், அவ்வப்பொழுது ஒன்று கூடி நிர்ணயஞ்செய்து அதற்கேற்றவாறு நடத்தி வருகிறார்கள். இந்ததேவஸ்தானத்துக்கு எவ்வித வரவு செலவு கணக்குகள் இல்லாமலும், மூலதனம் முதலிய பொருள் இல்லாமலும், ஸர்க்கார் மோஹினி முதலிய வரும்படி இல்லாமலும் அநாதி காலமாகத் தொடங்கப்பட்ட ஆறுகால நித்ய பூஜாகாலங்களிலும், பிர்ம்மோத்ஸவம்முதலிய உத்ஸவ காலங்களிலும் பக்தர்களால் அபிமானத்தோடு கொடுக்கப்பட்ட பொருள்களைக்கொண்டு வெகுவிமரிசையாக நடந்து வருவது மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. கோவிலில் நீண்டகாலமாய் இருந்து வருகிற ஆபாணம் தங்கம், வெள்ளிப்பாத்திரங்கள் முதலியவற்றை மிகவும் சிரத்தையோடு காபாற்றிவருகிறார்கள். வேதசாஸ்திர ஞானத்தாலும், ஒழுக்கத்தாலும் அநாதிகாலமாக மேற்கண்ட தீக்ஷிதர்கள் எல்லோராலும் விசேஷமாகப் போற்றப்படுகின்றார்கள். நித்யபூஜைகளும், உத்ஸவங்களும் வைதிகமுறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன.

திருஞானஸம்பந்தர் திருவாய்மலர்ந்தருளியது:—

கோயில் முதல்திருமுறை—பண்-குறிஞ்சி.

கற்றாங் கெரியோம்பிக் கலியைவாராமே, செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே, பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ், சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை, மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே. 2

மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக், கையாற்பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுட்
பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச், செய்யானுறைகோயில் சிற்றம் பலந்தானே. 3

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப், பிறைவந் திறைதாக்கும் பேரம்பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய, விறைவன் கழலேத்து மின்ப மின்பமே. 4

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச், செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய, செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 5

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந், திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய
கருமா னுரியாடைக் கறைசேர் கண்டத்தெம், பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. 6

அலையார் புனல்சூடி யாகத் தொருபாக, மலையான் மகளோடு மகிழ்ந்தா னுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத், தலையால் வணங்குவார் தலையா னார்களே. 7

கூர்வா ளரக்கன்றன் வலியைக் குறைவித்துச், சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்த லேத்துவார், தீரா நோயெல்லாந் தீர்த றிண்ணமே. 8

கோணா கணையானுங் குளிர்தாமரை யானுங், காணார் கழலேத்தக் கனலா யோங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த, மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடு, முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய, நட்டப்பெருமானைநாளுந் தொழுவோமே. 10

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன், சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை, கோலத் தாற் பாடவல்லார் நல்லாரே. 11

கோயில் மூன்றாம்திருமுறை—பண்—-காந்தாரபஞ்சமம்.

ஆடினாய் நறுநெய்யொடு பாறயி ரந்தணர் பிரியாத சிற்றம்பல
நாடினா யிடமாநறுங் கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடுபல் கீதமும் பல்சடைப் பனிகால்கதிர் வெண்டிங்கள்
சூடினா யருளாய் சுருங்கவெந் தொல் வினையே. 1

கொட்டமே கமழுங்குழ லாளொடு கூடினாயெரு தேறினாய் நுதல்
பட்டமே புனைவாயிசை பாடுவ பாரிடமா
நட்டமே நவில்வாய் மறையோர் தில்லை நல்லவர் பிரியாத சிற்றம்பல
மிட்டமா யுறைவா யிவைமேவிய தென்னை கொலோ. 2

நீலத் தார்கரிய மிடற்றார் நல்ல நெற்றி மேலுறை கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார்
சீலத் தார்தொழு தேத்து சிற்றம்பலஞ் சேர்தலாற் கழற் சேவடி கைதொழக்
கோலத் தாயரு ளாயுன காரணங் கூறுதுமே. 3

கொம்ப லைத்தழ கெய்திய நுண்ணிடைக் கோலவாண் மதி போல முகத்திரண்
டம்ப லைத்தகண் ணான்முலை மேவிய வார்சடையான்
கம்ப லைத்தெழு காமுரு காளையர் காத லாற்கழற் சேவடி கைதொழ
வம்ப லத்துறை வான டியார்க்கடை யாவினையே. 4

தொல்லை யாரமு துண்ணநஞ் சுண்டதோர் தூம ணிமிட றுபகு வாயதோர்
பல்லை யார்தலையிற்பலி யேற்றுழல் பண்டரங்கா
தில்லை யார்தொழு தேத்துசிற் றம்பலஞ் சேர்த லாற்கழற் சேவடி கைதொழ
வில்லை யாம்வினை தானெரி யம்மதி லெய்தவனே. 5

ஆகந் தோயணி கொன்றை யாயன லங்கை யாயம ரர்க்கம ராவுமை
பாகந் தோய்பக வாபலி யேற்றுழல் பண்டரங்கா
மாகந் தோய்பொழின் மல்குசிற் றம்பல மன்னி னாய்மழு வாளி னாயழ
னாகந் தோயரை யாயடி யாரை நண்ணா வினையே. 6

சாதி யார்பளிங் கின்னொடு வெள்ளிய சங்க வார் குழை யாய்திக ழப்படும்
வேதி யாவிகிர் தாவிழ வாரணி தில்லை தன்னு
ளாதி யார்க்கிட மாயசிற் றம்பல மங்கை யாற்றொழ வல்லடி யார்களை
வாதி யாதகலுங்கலி யாமலி தீவினையே. 7

வேயி னார்பணைத் தோளியோ டாடலை வேண்டி னாய்விகிர் தாவுயிர் கட்கமு
தாயி னாயிடு காட்டெரி யாட லமர்ந்தவனே
தீயி னார்கணை யாற்புர மூன்றெய்த செம்மை யாய்திகழ் கின்றசிற் றம்பல
மேயி னாய்கழ லேதொழு தெய்துது மேலுலகே. 8

தாரி னார்விரி கொன்றை யாய்மதி தாங்கு நீள்சடை யாய்தலைவாநல்ல
தேரி னார்மறு கிற்றிரு வாரணி தில்லைதன்னுட்
சீரி னால்வழி பாடொழி யாததோர் செம்மை யாயழ காயசிற் றம்பல
மேரினா லமர்ந் தாயுன சீரடி யேத்துதுமே. 9

வெற்ற ரைழறல் வார்துவ ராடையர் வேடத் தாரவர் கள்ளுரை கொள்ளன்மின்
மற்றவ ருலகின் னவலம் மவைமாற்றகில்லார்
கற்றவர் தொழுதேத்துசிற் றம்பலங் காத லாற்கழற் சேவடிகைதொழ
வுற்ற வருலகின் னுறுதி கொளவல் லவரே. 10

நாறு பூம்பொழி னண்ணிய காழியு ளான்மறை வல்ல ஞான சம்பந்த
னூறு மின்றமி ழாலுயர்ந் தாருறை தில்லைதன்னு
ளேறுதொல்புக ழேந்துசிற் றம்பலத் தீசனை யிசையாற் சொன்ன பத்திவை
கூறு மாறுவல் லாருயர்ந் தாரொடுங் கூடுவரே. 11

அப்பர் என்கிற திருநாவுக்கரசு சுவாமிகள். திருவாய்மலர்ந்தருளியது :

நான்காந்திருமுறை—கோயிற்றிருநேரிசை—பண்-கொல்லி

செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலா வெறிக்குஞ் சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவநாறு
மஞ்சடை சோலைதில்லை மல்குசிற் றம்பலத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துலங்கெளி யாடுமாறே. 1

ஏறனா றேறுதம்பா விளநில வெறிக்குஞ் சென்னி
யாறனா ராறுசூடி யாயிழை யாளோர்பாகர்
நாறுபூஞ் சோலைத்தில்லை நவின்றசிற் றம்பலத்தே
நீறுமெய்ப் பூசிநின்று நீண்டெரி யாடுமாறே. 2

சடையனார் சாந்தநீற்றர்: தனிநிலா வெறிக்குஞ் சென்னி
யுடையனா ருடைதலையி லுண்பதும் பிச்சையேற்றுக்
கடிகொள்பூந் தில்லைதன்னுட் கருதுஞ்சிற் றம்பலத்தே
யடிகழ லார்க்கநின்று வனலெரி யாடுமாறே. 3

பையரா வசைத்தவல்குற் பனிநிலா வெறிக்குஞ் சென்னி
மையரிக்: கண்ணியாளு மாலுமோர் பாகமாகிச்
செய்யெரி தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
கையெரி வீசிநின்று கனலெரி யாடுமாறே. 4

ஓதினார் வேதம்வாயா லொளிநிலா வெறிக்குஞ் சென்னிப்
பூதனார் பூதஞ்சூழப் புலியுரி யதளனார்தா
நாதனார் தில்லைதன்னு ணவின்றசிற் றம்பலத்தே
காதில்வெண் குழைகடாழக் கனலெரியாடுமாறே. 5

ஓருடம் பிருவராகி யொளிநிலா வெறிக்குஞ் சென்னிப்
பாரிடம் பாணிசெய்யப் பயின்றவெம் பரமமூர்த்தி
காரிடந் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
பேரிடம் பெறுகநின்று பிறங்கெரி யாடுமாறே. 6

முதற்றனிச் சடையைமூழ்க முகிழ்நிலா வெரிக்குஞ் சென்னி
மதக்களிற் றுரிவைபோர்த்த மைந்தரைக் காணலாகு
மதத்துவண் டறையுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
கதத்ததோ ரரவமாடக் கனலெரி யாடுமாறே. 7

மறையனார் மழுவொன்றேந்தி மணிநிலா வெறிக்குஞ் சென்னி
யிறைவனா ரெம்பிரானா ரேத்துவா ரிடர்க டீர்ப்பார்
சிறைகொணீர்த் தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
யறைகழ லார்க்கநின்று வனலெரி யாடுமாறே. 8

விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா வெரிக்குஞ் சென்னி
நிருத்தனார் நிருத்தஞ்செய்ய நீண்டபுன் சடைகடாழக்
கருத்தனார் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
யருத்தமா மேனிதன்னோ டனலெரி யாடுமாறே. 9

பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா வெறிக்குஞ் சென்னி
காலனைக் காலாற்காய்ந்த கடவுளார் விடையொன்றேறி
ஞாலமாந் தில்லைதன்னு ணவின்றசிற் றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனார்தா நீண்டெரி யாடுமாறே. 10

மதியிலா வரக்கனோடி மாமலை யெடுக்கநோக்கி
நெதியன்றோ ணெரியவூன்றி நீடிரும் பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய் தில்லைதன்னுள் மல்குசிற் றம்பலத்தே
யதிசயம் போலநின்று வனலெரி யாடுமாறே. 11

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
யெத்தினாற் பத்திசெய்கே னென்னை நீ யிகழ வேண்டாம்
முத்தனே முதல் வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தா வுன் னாடல் காண்பா னடியனேன் வந்தவாறே. 1

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளிபங்கா
வொருத்தரா லறிய வொண்ணாத் திருவுரு வுடைய சோதீ
திருத்தமாந் தில்லை தன்னுட்டி கழ்ந்த சிற்றம்பலத்தே
நிருத்தநான் காணவேண்டி நேர்பட வந்தவாறே. 2

கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகின்
காட்டினே னின்றன்பாத நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர் வாளைபாயு மல்கு சிற் றம்பலத்தே
கூட்டமாங் குவிமுலையாள் கூட நீ யாடுமாறே. 3

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை யடிமைசெய்ய
எந்தை நீ யருளிச் செய்யா யாது நான் செய்வதென்னே
செந்தியார் வேள் வியோவாத் தில்லைச் சிற் றம் பலத்தே
யந்தியும் பகலுமாட வடியிணை யலசுங்கொல்லோ. 4

கண்டவா திரிந்துநாளுங் கருத்தினா னின்றன்பாதங்
கொண்டிருந் தாடிப்பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டுபண் பாடுஞ்சோலை மல்கு சிற் றம் பலத்தே
யெண்டிசை யோருமேத்த விறைவ நீயாடுமாறே. 5

பார்த்திருந் தடியனேனான் பரவுவன் பாடியாடி
மூர்த்தியே யென்பனுன்னை மூவரில் முதல்வனென்பன்
ஏத்துவா ரிடர்கடீர்ப்பாய் தில்லைச்சிற் றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூடநான் வந்தவாறே. 6

பொய்யினைத் தவிரவிட்டுப் புறமலா வடிமைசெய்ய
ஐயநீ யருளிச்செய்யா யாதியே யாதிமூர்த்தி
வையகந் தன்னின்மிக்க மல்குசிற் றம்பலத்தே
பையறன் னாடல்காண்பான் பரம நான் வந்தவாறே. 7

மனத்தினாற் றிகைத்துநாளு மாண்பலா நெறிகண்மேலே
கனைப்பாரா லென்செய் கேனோ கறையணி கண்டத்தானே
தினைத்தனை வேதங்குன்றாத் தில்லைச்சிற் றம்பலத்தே
யனைத்துநின் னிலயங்காண்பா னடியனேன் வந்தவாறே. 8

நெஞ்சினைத் தூய்மைசெய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவ னேநீ
மஞ்சடைச் சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
யஞ்சொலாள் காணநின்று வழகநீ யாடுமாறே. 9

மண்ணுண்ட மாலவனு மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காணமாட்டார்

தின்னுண்ட திருவேமிக்க தில்லைச்சிற் றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பாமரீ யாடுமாறே. 10

கோயிற்றிருவிருத்தம்—பண்—கொல்லி.

பாளையுடைக் கமுகோங்கிப்பன்மாட நெருங்கியெங்கும்
வாளையுடைப் புனல்வந்தெறி வாழ்வயற் றில்லைதன்னுள்
ஆளவுடைக் கழற்சிற்றம் பலத்தா னாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற்பின்னைப் போய்த் தொண்டர் காண்பதென்னே 1

பொருவிடை யொன்றுடைப் புண்ணியமூர்த்திபுலி யதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாளனுலகுக்கெல்லாந்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே 2

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப்பொழுதும்
அடுத்து வணங்கு மயனொடு மாலுக்குங் காண்பரியான்
பொடிக் கொண் டணிந்து பொன்னா கியதில்லைச் சிற்றம்பலவன்
உடுத்த துகில் கண் டகண்கொண்டுமற்றினிக் காண்பதென்னே. 3

வைச்ச பொருணமக் காகுமென்றெண்ணி நமச்சிவாய
அச்சமொழிந்தேனணி தில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர் நந்தி யுந் தியின் மேலசைத்த
கச்சின ழகுகண்டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே 4

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்றதில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 5

ஊனத்தை நீக்கி யுலகறிவென்னை யாட்கொண்டவன்
றேனைத் தெனக்கினி யான்தில்லைச் சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை யுண்டகண் டத்திலங்கும்
ஏனத்தெ யிறுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 6

தெரித்த கணையாற் றிருபுர மூன்றும்செந் தீயின்மூழ்க
வெரித்த விறைவ னிமையவர் கோமா னிணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 7

சுற்றுமமரர் சுரர்பதி நின்றிருப் பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்பப் பரவையு ணஞ்சையுண்டான்
செற்றங் கனங்கனைத் தீவிழித் தான் றில்லையம்பலவ
னெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 8

சித்தத்தெழுந்த செழுங்கமலத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கிய தூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 9

தருக்கி யிருத்துத்தன் றோள்வலி யுன்னித் தடவரையை
வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப மலைமகள் கோன்சிரித்தவ
வரக்கன் மணிமுடி பத்து மணிதில்லை யம்பலவன்
நெருக்கிமிதித்தவிரல்கண்ட கண்கொண்டுகாண்பதென்னே. 10

கோயில் திருவிருத்தம்—பண்—கோல்லி.

கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல்லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே. 1

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடந்தா னடியவர்க்காச்
சென்று தொழுமின்க டில்லையுட்சிற் றம்பலத்துநட்டம்
என்றுவந் தாயெனு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே. 2

கன்மன வீர்கழி யுங்கருத் தேசொல்லிக் காண்பதென்னே
நன்மன வர்நவி றில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலையில் வெள்ளிக் குன்றது போலப்பொலிந்திலங்கி
யென்மனமேயொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே 3

குனித்த புருவமுங்கொவ்வைச் செவ்வாயிற்குமிண்சிரிப்பும்,
பனித்தசடையும் பவளம் போன்மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே. 4

வாய்த்தது நந்தமக் கீதோ பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப்பாசுபதமருள் செய்தவன்பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான் றில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங்கூழைமையே. 5

பூத்தன பொற்சடை பொன் போன்மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன பல்குறட் பூதகணந்
தேத்தென வென்றிசை வண்டுகள் பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல்லாருளரோ வென்றன் கோல்வளைக்கே. 6

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி னோக்கு முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந்துதைந்த வெண்ணீறுஞ்சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலுமென்பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக்கூத்தன்குரைகழலே. 7

படைக்கல மாகவுன் னாமத்தெழுத்தஞ்செ னாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் பும்முனக் காட்செய்கின்றேன்
றுடைக்கினும் போகேன் றொழுது வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தவனே. 8

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீ றணிந்து புரிசடைக்கண்
மின்னொத் திலங்கப் பலிதேர்ந் துழலும் விடங்கர்வேடச்

சின்னத்தி னான்மலி தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்னத்த னாடல்கண் டின்புற்ற தாலிவ் விருநிலமே. 9

சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை நாரண னான்முகனுந்
தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன் றோநம்மை யாட்கொண்டதே. 10

ஐந்தாம்திருமுறை—திருக்குறுந்தொகை.

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம், பொன்னம் பாலிக்கு மேலுமிப்பூ மிசை
யென்னம் பாலிக்கு மாறுகண் டின்புற வின்னம், பாலிக்கு மோவிப் பிறவியே. 1

அரும்பற் றப்பட வாய்மலர் கொண்டுநீர், சுரும்பற் றப்படத்தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன், பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே. 2

அருச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீ, ரிரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப் படாமுன்னந், திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. 3

அல்ல லென்செயு மருவினை யென்செயுந், தொல்லை வல்வினைத் தொண்டந்தா னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க் கெல்லை, யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 4

ஊனி லாவி யுயிர்க்கும் பொழுதெலா, நானிலாவியிருப்பனென்னாதனைத்
தேனி லாவிய சிற்றம் பலவனார், வானி லாவி யிருக்கவும் வைப்பரே. 5

சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ், சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச், சிட்டர் பாலணு கான்செறு காலனே. 6

ஒருத்த னாருல கங்கட் கொருசுடர், திருத்தனார் தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னாரிளை யார்விட முண்டவெம், அருத்த னாடி யாரை யறிவரே. 7

விண்ணி றைந்ததோர் வெவ்வழ லின்னுரு, வெண்ணி றைந்த விருவர்க் கறிவொணாக்
கண்ணி றைந்த கடிபொழி லம்பலத் துண்ணி, றைந்து நின் றாடு மொருவனே. 8

வில்லை வட்டப்பட வாங்கி யவுணர்தம், வல்லை வட்டம் மதிண் மூன் றுடன் மாய்த்தவன்
றில்லை வட்டத்திசை கைதொழு வார்வினை, யொல்லை வட்டங்கடந் தோடுத லுண்மையே. 9

நாடி நாரணனான்முக னென்றிவர், தேடியுந் திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத், தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே. 10

மதுர வாய்மொழி மங்கை யோர் பங்கினன், சதுரன் சிற்றம் பலவன் றிருமலை
யதிர வார்த்தெடுத் தான்முடி பத்திற, மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11

பனைக்கைமும்மத வேழ முரித்தவ, னினைப்ப வர்மனங்கோயிலாக் கொண்டவ
னனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத், தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. 12

தீர்த்தனைச் சிவனைச் சிவலோகனை, மூர்த்தியை முதலாய வொருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக், கூத் தனைக்கொடி யேன்மறந் துய்வனோ. 13

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி, யிட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை, யெட்ட னைப்பொழு தும்மறந் துய்வனோ. 14

மாணி பால்கறந் தாட்டி வழிபட, நீணு லகெலா மாளக் கொடுத்தவ
னாணியைச் செம்பொனம் பலத்துண்ணின்ற, தாணுவைத்த மியேன் மறந்துய் வனோ. 15

பித்தனைப்பெருங் காடரங் காவுடை, முத்தனை முளை வெண் மதி சூடியைச்
சித் தனைச்செம் பொனம்பலத் துண்ணின்ற, வத்த னையடி யேன் மறந் துய்வனோ. 16

நீதியை நிறைவை மறைநான்குட, னோதியையொருவர்க்கு மறிவொணாச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனி னம்பலத் தாதியை யடியேன் மறந்துய்வனோ. 17

மைகொள் கண்டனெண் டோளன் முக் கண்ணினன், பைகொள் பாம்பரை யார்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம் பலத்தெங்க, ளைய னையடி யேன் மறந் துய்வனோ. 18

முழுதும் வானுலகத் துள தேவர்கள் தொழுது போற்றியுந் ய செம் தூபொன்னினு
லெழுதி மேய்ந்த சிற் றம்பலக் கூத்தனை, யிழுதை யேன் மறந் தெங்ஙன முய்வனோ. 19

காரு லா மலர்க் கொன்றையந் தாரனை, வாரு லாமுலை மங்கை மணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை, யார்கிலா வமுதை மறந்துய்வனோ. 20

ஓங்கு மால் வரை யேந்த லுற்றான் சிரம், வீங்கி விம்முற வூன்றிய தாளினான்
றேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப், பாங்கிலாத் தொண்ட னேன் மறந் துய்வனோ. 21

ஆறாந்திருமுறை—பெரியதிருத்தாண்டகம்.

அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை யருமறையி னகத்தானையணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப்,பாலைத் திகழொளியைத் தேவர் கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே 1

கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக் காவிரிசூழ் வலஞ் சுழியுங்கருதினானை
யற்றானையலர்ந்தார்க்கு மருள்செய்வானை யாரூரும் புகுவானை யறிந்தோமன்றே
மற்றாருந் தன்னொப்பா ரில்லாதானை வானவர்க ளெப்பொழுதும் வணங்கி யேத்தப்
பெற்றானைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 2

கருமானி னுரியதளே யுடையா வீக்கிக் கனைகழல்கள் கலந் தொலிப்ப வனல் கையேந்தி
வருமானத் திரடோள்கள் மட்டித் தாட வளர்மதியுஞ் சடைக் கணிந்து மானேர் நோக்கி
யருமான வாண் முகத்தா ளமர்ந்துகாண வமரர்கணமுடி வணங்க வாடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப்பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 3

அருந்தவர்க டொழுதேத்து மப்பன்றன்னை யமரர்கடம் பெருமானை யரனைமூவா
மருந்தமரர்க் கருள் புரிந்த மைந்தன்றன்னை மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொளிய தாரகையுந் திசைகளெட்டுந் திரிசுடர்க ளோரிரண்டும் பிறவுமாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவா நாளே. 4

அருந்துணையையடியார் தம்மல்லறீர்க்கு மருமருந்தையகன் ஞாலத்தகத்துட்டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு வான்புலன் களகத் தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும் பயனைப்போகமாற்றிப்பொதுநீக்கித்தனை நினையவல்லோர்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே 5

கரும்பமரு மொழிமடவாள் பங்கன்றன்னைக் கனவயிரக் குன்றதனைக் காட்சி யானை
யரும்பமரும் பூங்கொன்றைத்தாரான்றன்னை யருமறையோடாறங்க மாயினானைச்
சுரும்பமருங்கடி பொழில்கள் சூழ்தென்னாரூர்ச் சுடர்க்கொழுந்தைத்துளக்கிலாவிளக்கைமிக்க
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 6

வரும்பயனை யெழுநரம் பிஞோசையானை வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
யரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த வம்மானை யலைகடனஞ் சயின்றான் றன்னைச்

சுரும்பவிழுங் குழன் மடவார் கடைக்கணோக்கிற் றுளங்காத சிந்தையராய்த் துறந்தோருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே 7

காரானையீருரிவைப் போர்வையானைக் காமரு பூங்கச்சியே கம்பன் றன்னை
யாரேனு மடியவர்கட் கணியான் றன்னை யமரர்களுக்கரிவரிய வளவி லானைப்
பாரோரும் விண்ணோரும் பணியநட்டம் பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனையெண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாதநாளெல்லாம் பிறவா நாளே. 8

முற்றாத பான் மதியஞ் சூடினானை மூவுலகுந்தானாய முதல்வன் றன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான்றன்னைத் திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் றன்னைக் கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றார்கள் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 9

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங் கடிக்கமலத் திருந்தயனுங் காணாவண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத் திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு மேழுல குங்கடந் தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 10

புக்கதிருத்தாண்டகம்.

மங்குன் மதிதவழுமாடவீதி மயிலாப்பிலுள்ளார் மருகலுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றாலத்தார் குடமூக்கிலுள்ளார் போய்க்கொள்ளம்பூதூர்
தங்குமிடமறியார் சாலநாளார் தருமபுரத்துள்ளார் தக்களூரார்
பொங்கு வெண்ணீறணிந்து பூதஞ்சூழப்புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 1

நாகமரைக்கசைத்த நம்பரிந்நாள் நனிபள்ளியுள்ளார் போய் நல்லூர்த் தங்கிப்
பாகம் பொழுதெல்லாம் பாசூர்த்தங்கிப் பருதிநியமத்தார் பன்னிருநாள்
வேதமும் வேள்விப்புகையுமோ வாவிரிநீர் மிழலை யெழுநாட்டங்கி
போகமும் பொய்யாப் பொருளுமானார் புலியூர்ச்சிற்றம்பலமே புக்கார்தாமே. 2

துறங்காட்டி யெல்லாம் விரித்தார் போலுந் தூமதியும் பாம்புமுடையார் போலு
மறங்காட்டி மும்மதிலுமெய்தார் போலு மந்திரமுந்தந்திரமும் தாமே போலும்
அறங்காட்டி யந்தணர்க்கன்றால நீழ லற மருளிச் செய்தவரானிந்நாட்
புறங்காட்டெரியாடிப் பூதஞ்சூழப் புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 3

வாரேறு வனமுலையாள் பாகமாக மழுவாள் கையேந்தி மயானத்தாடிச்
சீரேறு தண்வயல் சூழோத வேலி திருவாஞ்சியத்தார் திருநள்ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த கண்விளக்குநெற்றியார் கடனஞ்சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ்சூழப் புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 4

காரார் கமழக் கொன்றைக் கண்ணி சூடிக் கபாலங்கையேந்திக் கணங்கள் பாட
ஆராரிடும் பிச்சை கொண்டுழலு முத்தமராய் நின்றவொருவனார்தாஞ்
சீரார்கழல் வணங்குந் தேவ தேவா திருவாரூர்த் திருமூலத்தானமேயார்
போரார் விடையேறிப் பூதஞ்சூழப் புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 5

காதார்குழையினர் கட்டங்கத்தார் கயிலாயமாமலையார் காரோணத்தார்
மூதாயர் மூதாதையில்லார் போலு முதலு மிறுதியுந்தாமே போலு
மாதாய மாதர் மகிழவன்று மன்மதவேள் தன்னுடலங்காய்ந்தாரிந்நாட்
போதார்சடைதாழப்பூதஞ்சூழப் புலியூர்ச்சிற்றம்பலமே புக்கார்தாமே. 6

இறந்தார்க்கு மென்று மிறவாதர்க்கு மிமையவர்க்கு மேகமாய் நின்றுசென்று
பிறந்தார்க்கு மென்றும் பிறவாதர்க்கும் பெரியான்றன் பெருமையே பேசிநின்று
மறந்தார்மனத் தென்று மருவார்போலு மறைக்காட் டுறையுமழு வாட்செல்வர்
புறந்தாழ் சடைதாழப் பூதஞ்சூழப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே. 7

குலாவெண் ணெடுமாலை யென்புபூண்டு குளிர்கொன்றைத் தாரணிந்துகொல் லேறேறிக்
கலாவெண் களிற்றுரிவைப் போர்வை மூடிக்கை யோடனலேந்திக் காடுறைவார்
நிலாவெண் மதியுரிஞ்ச நீண்டமாட நிறைவயல் சூழ்நெய்த்தான மேயசெல்வர்
புலால்வெண் டலையேந்திப் பூதஞ்சூழப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே. 8

சந்தித்த கோவணத்தர் வெண்ணூன்மார்பர் சங்கரனைக் கண்டீரோ கண்டோமிந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாயவேறிப் படுதலையி லென்கொலோ வேந்திக்கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமுமெல்லா மணியாரூர் நின்றந்தி கொள்ளக்கொள்ளப்
பொன்றிமணி விளக்குப் பூதம்பற்றப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே. 9

பாதங்க ணல்லார் பரவியேத்திப் பத்திமையாற் பணிசெய்யுந் தொண்டர்தங்கள்
ஏதங்க டீர விருந்தார்போலு மெழுபிறப்பு மாளுடைய வீசனார்தாம்
வேதங்களோதி யோர்வீணை யேந்திவிடை யொன்றுதா மேறி வேதகீதர்
பூதங்கள்சூழப் புலிதோல் வீக்கிப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே. 10

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப் பகவனார் பாரிடங்கள் சூழநட்டஞ்
சிட்டாய்த் தீயேந்திச் செல்வார்தம்மைத் தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோ மிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே யோதுவதும் வேதமே வீணையுண்டே
கட்டங்கங்கை யதேசென்று காணீர் கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே. 11

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாய்மலர்தருளியது :—

ஏழாந்திருமுறை—பண்-குறிஞ்சி.

மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனேநீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடுங் கரதலத்திற் றமருகமு மெரியகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடும் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 1

பேராது காமத்திற் சென்றார்போலன்றியே பிரியா துள்கிச்
சீரார்ந்த வன்பாய்ச் சென்றுமுன் னடிவீழுந் திருவி னாரை
யோராது தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 2

நரியார்கங் கள்ளத்தாற் பக்கானபரி சொழிந்து நாளு மூழ்கிப்
பிரியாத வன்பாய்ச் சென்றுமுன் னடிவீழுஞ் சிந்தை யாரைத்
தரியாது தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 3

கருமையார் தருமனார் தமர்நம்மைக் கட்டியகட் டறுப்பிப் பானை
யருமையாந் தன்னுலகந் தருவானை மன்னுலகங் காவல் பூண்ட
வுரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே 4

கருமானி னுரியாடைச் செஞ்சடைமேல் வெண்மதியக் கண்ணி யானை
யுருமன்ன கூற்றத்தை யுருண்டோட வுதைத்து கந்தலவா வின்பந்
தருவானைத் தருமனார் தமர்செக்கி விடும்போது தடுத்தாட் கொள்வான்
பெருமானார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பேற்றா மன்றே. 5

உய்த்தாடித் திரியாதே யுள்ளமே யொழிகண் டாயூன் கணோட்ட
மெத்தாலுங் குறைவில்லை யென்பர் காணெஞ்ச மேநம்மை நாளும்
பைத்தாடு மரவினன் படர்சடையன் பரஞ்சோதி பாவந் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 6

முட்டாத முச்சந்தி மூவா யிரவர்க்கு மூர்த்தி யென்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார் பாவமும் வினையும் போக
விட்டானை மலையெடுத்த விராவணனைத் தலைபத்து நெரியக் காலாற்
றொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பேற்றா மன்றே. 7

கற்றானுங் குழையுமா றன்றியே கருமா கருத கிற்றார்க்
கெற்றாதுங் குறைவில்லை யென்பர்கா ணுள்ளமே நம்மை நாளுஞ்
செற்றாட்டித் தருமனார் தமர்செக்கி விடும்போது தடுத்தாட் கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 8

காடுடைய நாதன்பா னன்றென்று செய்மனமே நம்மை நாளுந்
தாடுடைய தருமனார் தமர்செக்கி விடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கு முடையுடைய சாக்கியர்க்கு மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 9

பாரூரு மாவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்கணேற்ற
னூரான் றருமனார் தமர்செக்கி விடும்போது தடுத்தாட் கொள்வா
னூரான் றம்பாரா னூரான் மீகோங்கி லணிகாஞ்சி வாய்ப்
பேரூர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றா மன்றே. 10

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது:—

கோயின்மூத்த திருப்பதிகம்.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே. 1

முன்னின் றாண்டா யெனைமுன்ன மியானு மதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
யென்னின் றருளி வரநின்று போந்தி டென்னா விடிலடியா
ருன்னின் றிவனா ரென்னாரோ பொன்னம் பலக்கூத் துகந்தானே. 2

உகந்தா னேயன் புடையடிமைக் குருகா வுள்ளத் துணர்விலியேன்
சகந்தா னறிய முறையிட்டாற் றக்க வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தா யடியேற்குன்
முகந்தான் றாரா விடின்முடிவேன் பொன்னம் பலத்தெம் முழுமுதலே. 3

முழுமுத லேயைம் புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள் வான்குழுமிக்
கெழுமுத லேயரு டந்திருக்க விரங்குங் கொல்லோவென்
றழுமது வேயன்றி மற்றென் செய்கேன் பொன்னம் பலத்தரசே. 4

அரைசே பொன்னம் பலத்தாடு மமுதே யென்றுன் னருணோக்கி
யிரைதேர் கொக்கொத் திரவுபக லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன் னடியேன்பாற்
பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ. 5

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்றானும் பேணா நிற்பே னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே. 6

இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்பேனை
யருங்கற் பனைகற் பித்தாண்டா யாள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கு மடியார் களுநீயு நின்று நிலாவி விளையாடு
மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வே வாவென் றருளாயே. 7

அருளா தொழிந்தா லடியேனை யஞ்சே லென்பா ராரிங்குப்
பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்து வேனை வாவென்றுன்
றெருளார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனாற் சிரியாரோ. 8

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் றிருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ நம்பி யினித்தா னல்காயே. 9

நல்கா தொழியா னமக்கென்றுன் னாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தா னினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
யொல்கா நிற்கு முயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே. 10

திருமாளிகைத்தேவர் திருவாய்மலர்ந்தருளியது :—

திருப்பதிகம்—பண் - பஞ்சமம்.

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந் தூயநற் சோதியுட் சோதீ
யடல்விடைப் பாகா வம்பலக்கூத்தா வயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத் தொண்டனேன் பணியுமா பணியே. 2

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா சாமகண் டாவண்ட வாணா
நற்பெரும் பொருளா யுரைகலந் துன்னை யென்னுடை நாவினா னவில்வா
னற்பனென் னுள்ளத் தளவிலா வுன்னைத் தந்தபொன் னம்பலத் தாடி
கற்பமா யுலகா யல்லையா னாயைத் தொண்டனேன் கருதுமா கருதே. 3

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாயென் பிறப்பிறப் பறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணா ளிமவான் மகளுமை யவள்களை கண்ணே
யருமையின் மறைநான் கோலமிட் டரற்று மப்பனே யம்பலத் தமுதே
யொருமையிற் பலபுக் குருவினின் றாயைத் தொண்டனே னுரைக்குமா றுரையே. 4

கோலமே மேலை வானவர் கோவே குணங்குறி யிறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா வெங்கள் காலகா லாகாம நாசா
வாலமே யமுதுண்டம் பலஞ்செம் பொற்கோயில் கொண்டாட வல்லானே
ஞாலமே தமியேனற் றவத்தாயைத் தொண்டனே னணுகுமா றணுகே. 5

நீறணி பவளக்குன் றமே நின்ற நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக வெள்ளமே மேருவில் வீரா
வாறணி சடையெம்மற் புதக்கூத்தா வம்பொன் செயம்பலத் தரசே
யேறணி கொடியெம் மீசனே யுன்னைத் தொண்டனே னிசையுமா றிசையே. 6

தனதனற் றோழா சங்கரா சூல பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே கண்கண்மூன் றுடையதோர் கரும்பே
யனகனே குமர விநாயக சனக வம்பலத் தமரசே கரனே
யுனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத் தொண்டனே னுகருமா றுகரே. 7

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னு மின்னு நிறைந்தசே வடிக்கீழ் நிகழ்வித்த நிகரிலா மணியே
யறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசா யாலின்கீ ழிருந்தவம் பலவா
புறஞ்சமண் புத்தப் பொய்கள்கண் டாயைத் தொண்டனேன் புணருமா புணரே. 8

தக்கனற் றலையு மெச்சன்வன் றலையுந் தாமரை நான்முகன் றலையு
மொக்கவிண் டுருள வொண்டிருப் புருவ நெறித் தரு ளியவுருத் திரனே
யக்கணி புலித்தோ லாடைமே லாட வாடப் பொன்னம்பலத் தாடுஞ்
சொக்கனே யெவர்க்குந் தொடர்வரி யாயைத் தொண்டனேன் றொடருமா தொடரே. 9

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக் கருள்புரி வள்ளலே மருளா
ரிடங்கொண்முப் புரம்வெந் தவியவை திகத்தே ரேறிய வேறுசே வகனே
யடங்கவல் லரக்க னருட்டிரு வரைக்கீ ழடர்த்தபொன் னம்பலத் தரசே
விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே யுன்னைத் தொண்டனேன் விரும்புமா விரும்பே. 10

மறைகளு மமரர் கூட்டமு மாட்டா தயன்றிரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர்வரி யாயை மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிக
ளறைகழ லான்சீ ரறிவிலா வெறுமைச் சிறுமையிற் பொறுக்குமம் பலத்து
ணிறைதரு கருணா நிலயமே யுன்னைத் தொண்டனே னினையுமா நினையே. 11

பண்—பஞ்சமம்.

உயர்கொடி யாடை மிடைபட லத்தி னோமதூ மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத் தகிற்புகைப் படலம் பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிக ணிரந்துசேர் கனக நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயர்வறு மமரர் மகுடந்தோய் மலர்ச்சே வடிகளென் மனத்துவைத் தருளே. 1

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக் கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சா லெழின்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியந் திரண்டசிற் றம்பலக் கூத்தா
வுருவள ரின்பச் சிலம்பொலி யலம்பு முன்னடிக் கீழதென் னுயிரே. 2

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலங் கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப் பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புணர் முடிவா னவரடி முறையா லிறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா
நிரந்தா முனிவர் நினைதிருக் கலைக்கா ணினைந்துநின் றொழிந்ததென் னெஞ்சே. 3

தேர்மலி விழவிற் குழலொலி தெருவிற் கூத்தொலி யேத்தொலி யோத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப் பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில விலயத் திருநடத் தியல்பிற் றிகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா
வார்மலி முலையாள் வருடிய திரண்மா மணிக்குறங் கடைந்ததென் மதியே. 4

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங் கிளங்கமு குளங்கொணீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதண முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொணீர்த் தரளத் திரள்கொணீத் திலத்த செம்பொற்சிற் றம்பலக் கூத்தா
பொறையணி நிதம்பப் புலியத ளாடைக் கச்சநூல் புகுந்ததென் புகலே. 5

அதுமதி யிதுவென் றலந்தலை நூல்கற் றழைப்பொழிந் தருமறை யறிந்து
பிதுமதி வழிநின் றொழிவிலா வேள்விப் பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணுந் தேரருஞ் சேராச் செல்வச்சிற் றம்பலக் கூத்தா
மதுமதி வெள்ளத் திருவயிற் றுந்தி வளைப்புண்டென் னுண்மகிழ்ந் ததுவே. 6

பொருவரைப் புயத்தின்மீ மிசைப் புலித்தோல் பொடியணி பூணுநூ லகலம்
பெருவரை புரைதிண் டோளுடன் காணப் பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு வுதரத் தார்திசை மிடைப்ப நடஞ்செய்சிற் றம்பலக் கூத்தா
வுருமரு வுதரத் தனிவடந் தொடர்ந்து கிடந்ததென் னுணர்வுணர்ந் துணர்ந்தே. 7

கணியெரி விசிறு கரந்துடி விடவாய்க் கங்கணஞ் செங்கைமற் றபயம்
பிணிகெட விவைகண் டுன்பெரு நடத்திற் பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்தென் னமுதே சீர்கொள்சிற் றம்பலக் கூத்தா
வணிமணி முறுவற் பவளவாய்ச் செய்ய சோதியு ளடங்கிற்றென் னறிவே. 8

திருநெடு மாலிந் திரனயன் வானோர் திருக்கடைக் காவலி னெருக்கிப்
பெருமுடி மோதி யுகுமணி முன்றிற் பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரந்தீ விரித்தசிற் றம்பலக் கூத்தா
கருவடி குழைக்கா தமலச்செங் கமல மலர்முகங் கலந்ததென் கருத்தே. 9

ஏர்கொள்கற் பகமொத் திருசிலைப் புருவம் பெருந்தடங் கண்கண்மூன் றுடையுன்
பேர்களா யிரநூ றாயிரம் பிதற்றும் பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகுங் கொன்றையுந் துன்று சென்னிச்சிற் றம்பலக் கூத்தா
நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்த நிகழ்ந்தவென் சிந்தையு ணிறைந்தே. 10

காமனக் காலன் றக்கன்மிக் கெச்சன் படக்கடைக் கணித்தவ னல்லாப்
பேய்மனம் பிறிந்த வப்பெருந் தொண்டர் தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண் டாண்ட செல்வச்சிற் றம்பலக் கூத்தா
பூமல ரடிக்கீழ்ப் புராணபூ தங்கள் பொறுப்பரொன் புன்சொலின் பொருளே. 11

பண்—பஞ்சமம்.

உறவாகிய யோகமும் போகமுமா யுயிராளி யென்னுமென்பொன் னொருநாட்
சிறவாதவர் புரஞ்செற்ற கொற்றச் சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவாவென்னும் மணிநீரருவி மகேந்திர மாமலை மேலுறையுங்
குறவாவென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 1

காடாடு பல்கணஞ் சூழக்கேழற் கடும்பின் னெடும்பகற் கானடந்த
வேடா மகேந்திர வெற்பாவென்னும் வினையேன் மடந்தைவிம் மாவெருவுஞ்
சேடாவென்னுஞ் செல்வர்மூ வாயிரஞ் செழுஞ்சோதி யந்தணர்செங் கைதொழுங்
கோடாவென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 2

கானேவரு முரணேன மெய்தகளி யார்புளின நற்காளா யென்னும்
வானேதட வுநெடுங் குடுமி மகேந்திர மாமலை மேலிருந்த
தேனேயென்னுந் தெய்வவாய் மொழியார் திருவாளர் மூவாயிரவர் தெய்வக்
கோனேயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 3

வெறியேறு பன்றிப்பின் சென்றொருநாள் விசயற்கருள் செய்தவேந் தேயென்னு
மறியேறு சாரன்ம கேந்திரமா மலைமே லிருந்தமருந் தேயென்னு
நெறியேயென்னு நெறிநின்ற வர்க ணினைக்கின்ற நீதிவே தாந்தநிலைக்
குறியேயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 4

செழுந்தென்ற லன்றிலித் திங்கள்கங்கு லிரைவீரை தீங்குழல் சேவின்மணி
யெழுந்தின்றென் மேற்பகை யாடவாடு மெனைநீ நலிவதென் னேயென்னு
மழுந்தாம கேந்திரத் தந்தரப்புட் கரசுக் கரசே யமரர்தனிக்
கொழுந்தேயென்னுங் குணக்குன் றேயென்னும் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 5

வண்டார்குழ லுமைநங்கை முன்னே மகேந்திரச் சாரல்வராகத் தின்பின்
கண்டார்கவல வில்லாடிவேடர் கடிநாயுடன் கைவளைந்தா யென்னும்
பண்டாயமலரயன்றக்கனெச்சன் பகலோன்றலை பற்பசுங்கண்
கொண்டாயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே 6

கடுப்பாய்ப்பறைகறங்கக்கடுவெஞ்சிலையுங் கணையுங்கவ ணுங்கைக்கொண்
டுடுப்பாய்தோல்செருப்புச்சுரிகை வராகமுன்னோடிவிளியுளைப்ப
நடப்பாய்மகேந்திரநாதநாதாந்தத் தரையாவென்பார்க்குநாதாந்தபதங்
கொடுப்பாயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 7

சேவேந்துவெல்கொடியானேயென்னுஞ் சிவனேயென்சேமத் துணையேயென்னு
மாவேந்துசாரன்மகேந்திரத்தில் வளர்நாயகா விங்கேவாராயென்னும்
பூவேந்திமூவாயிரவர்தொழப் புகழேந்துமன்றுபொலியநின்ற
கோவேயென்னுங் குணக்குன் றேயென்னும் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 8

தரவார்புனஞ்சுனைதாழருவித் தடங்கல்லுறையுமடங்கலமர்
மாவார்பொழிலெழில்வேங்கையெங்கு மழைசூழ்மகேந்திரமாமலைமேற்
சுராவாவென்னுஞ்சுடர்நீண்முடிமாலய னிந்திரன்முதற்றேவர்க்கெல்லாங்
குரவாவென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 9

திருநீறிடாவுருத்தீண்டேனென்னுந் திருநீறுமெய்த்திருமுண்டத்திட்டுப்
பெருநீலகண்டன்றிறங்கொண்டிவள் பிதற்றிப்பெருந்தெருவேதிரியும்

வருநீருவிமகேந்திரப்பொன் மலையின்மலைமகளுக்கருளுங்
குருநீயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 10

உற்றாயென்னுமுன்னையன்றிமற்றொன் றுணரேனென்னுமுணர்வுகள்கலக்கப்
பெற்றாயவைந்தெழுத்தும்பிதற்றிப் பிணிதீரவெண்ணீறிடப்பெற்றேனென்னுஞ்
சுற்றாயசோதிமகேந்திரஞ்சூழ மனத்திருள்வாங்கிச்சூழாதநெஞ்சிற்
குற்றாயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 11

வேறாகவுள்ளத்துவகைவிளைத் தவனிச்சிவலோகவேதவென்றி
மாறாதமூவாயிரவரையுமெனையும் மகிழ்ந்தாளவல்லாயென்னு
மாறார்சிகாமகேந்திரத்துன் னடியார்பிழைபொறுப்பாய்மாதோர்
கூறாயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 12

பண்—காந்தாரம்.

இணங்கிலாவீசனேசத்திருந்தசித்தத்தனேற்கு
மணங்கொள்சீர்த்தில்லைவாணன்மணவடியார்கள்வண்மைக்
குணங்களைக்கூறாவீறிற்கோறைவாய்ப்பீறற்பிண்டப்
பிணங்களைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 1

எட்டுருவிரவியென்னையாண்டவனீண்டுசோதி
விட்டிலங்கலங்கற்றில்லைவேந்தனைச்சேர்ந்திலாத
துட்டரைத்தூர்த்தவார்த்தைத்தொழும்பரைப்பிழம்புபேசும்
பிட்டரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 2

அருட்டிரட்செம்பொற்சோதியம்பலத்தாடுகின்ற
விருட்டிரட்கண்டத்தெம்மானின்பருக்கன்புசெய்யா
வரட்டரையரட்டுப்பேசுமழுக்கரைக்கழுக்களாய
பிரட்டரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 3

துணுக்கெனவயனுமாலுந்தொடர்வருஞ்சுடராயிப்பா
லணுக்கருக்கணியசெம்பொனம்பலத்தாடிக்கல்லாச்
சிணுக்கரைச்செத்தற்கொத்தைச்சிதம்பரைச்சீத்தையூத்தைப்
பிணுக்கரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 4

திசைக்குமிக்குலவுசீர்த்தித்தில்லைக்கூத்துகந்துதீய
நசிக்கவெண்ணீறதாடுநமர்களைநணுகாநாய்க
ளசிக்கவாரியங்களோதுமாதரைப்பேதவாதப்
பிசுக்கரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 5

ஆடரவாடவாடுமம்பலத்தமிர்தேயென்னுஞ்
சேடர்சேவடிகள்சூடத்திருவிலாவுருவினாரைச்
சாடரைச்சாட்கைமோடச்சழக்கரைப்பிழக்கப்பிட்கப்
பேடரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 6

உருக்கியென்னுள்ளத்துள்ளேயூறலந்தேறன்மாறாத்
திருக்குறிப்பருளுந்தில்லைச்செல்வன்பாற்செல்லுஞ்செல்வி
லருக்கரையள்ளல்வாயகள்ளரையவியாப்பாவப்
பெருக்கரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 7

செக்கரொத்திரவிநூறுயிரத்திரளொப்பார்தில்லைச்
சொக்கரம்பலவனென்னுஞ்சுருதியைக்கருதமாட்டா
வெக்கரைக்குண்டமிண்டவெத்தரைப்புத்தாதிப்
பொக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. 8

எச்சனைத்தலையைக்கொண்டுசெண்டடித்திடபமேறி
யச்சங்கொண்டமரரோடநின்றவம்பலவற்கல்லாக்
கச்சரைக்கல்லாப்பொல்லாக்கயவரைப்பசுநூல்கற்கும்
பிச்சரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. 9

விண்ணவர்மகுடகோடிமிடைந்தொளிர்மணிகள்வீசு
மண்ணலம்பலவன்கொற்றவரசனுக்காசையில்லாத்
தெண்ணரைத்தெருளாவுள்ளத்திருளரைத்திட்டைமுட்டைப்
பெண்ணரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. 10

சிறப்புடையடியார்தில்லைச்செம்பொனம்பலவற்காளா
முறைப்புடையடியார்கீழ்க்கீழுறைப்பர்சேவடிநீறுடா
ரிறப்பொடுபிறப்பினுக்கேயினியாராய்மீண்டுமீண்டும்
பிறப்பரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. 11

கருவூர்த்தேவர் திருவாய்மலர்ந்தருளியது:—

பண்—புறநீர்மை.

கணம்விரிகுடுமிச்செம்மணிக்கவைநாக் கறையணற்கட்செவிப்பகுவாய்ப்
பணம்விரிதுத்திப்பொறிகொள்வெள்ளெயிற்றுப் பாம்பணிபரமர்தங்கோயின்
மணம்விரிதருதேமாம்பொழின்மொழுப்பின் மழைதவழ்வளரிளங்கமுகந்
திணர்நிரையரும்புபெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 1

இவ்வரும்பிறவிப்பௌவநீர்நீந்து மேழையேற்கென்னுடன்பிறந்த
வைவரும்பகையேயார்துணையென்று லஞ்சலென்றருள்செய்வான்கோயில்
கைவரும்பழனங்குழைத்தசெஞ்சாலிக் கடைசியர்களைதருநீலஞ்
செய்வரம்பரும்புபெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 2

தாயினேரிரங்குந்தலைவவோவென்றுந் தமியனேன்றுணைவவோவென்று
நாயினேனிருந்துபுலம்பினுலிரங்கி நலம்புரிபரமர்தங்கோயில்
வாயினேரரும்புமணிமுருக்கலர வளரிளஞ்சோலைமாந்தளிர்செந்
தீயினேரரும்புபெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 3

துந்துபிகுழல்யாழ்மொந்தைவானியம்பத் தொடர்ந்திருடியர்கணந்துதிப்ப
நந்திகைமுழவமுகிலெனமுழங்க நடம்புரிபரமர்தங்கோயி
லந்தியின்மறைநான்காரணம்பொதிந்த வரும்பெறன்மறைப்பொருண்மறையோர்
சிந்தையிலரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 4

கண்பனியரும்பக்கைகண்மொட்டித்தென் களைகணேயோலமென்றோலிட்
டென்பெலாமுருகுமன்பர்தங்கூட்டத் தென்னையும்புணர்ப்பவன்கோயில்
பண்டலதெளிதேன்பாடிநின்றூடப் பனிமலர்ச்சோலைசூழ்மொழுப்பிற்
செண்பகமரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 5

நெஞ்சிடரகலவகம்புகுந்தொடுங்கு நிலைமையோடிருள்கிழித்தெழுந்த
வெஞ்சுடர்சுடர்வபோன்றொளிதுளும்பும் விரிசடையடிகடங்கோயி
லஞ்சுடர்ப்புரிசையாழிசூழ்வட்டத் தகம்படிமணிநிரைபரந்த
செஞ்சுடரரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 6

நீத்திரளுருவஞ்செங்கதிர்விரியாப் புந்தியில்வந்தமால்விடையோன்
றாத்திரட்பளிங்கிற்றோன்றியதோற்றந் தோன்றநின்றவன்வளர்கோயி
னுத்திரண்மறையோர்ந்தோமகுண்டத்து நறுநெயான்மறையவர்வளர்த்த
தீத்திரளரும்புபெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 7

சீர்த்ததிண்புவனமுழுவதுமேனைத் திசைகளோடண்டங்களனைத்தும்
போர்த்ததம்பெருமைசிறுமைபுக்கொடுங்கும் புணர்ப்புடையடிகடங்கோயி
லார்த்துவந்தமரித்தமரரும்பிறரு மலைகடலிடுதிரைபுனிதத்
தீர்த்தநீரரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே 8

பின்னுசெஞ்சடையும்பிறைதவழ்மொழுப்பும் பெரியதங்கருணையுங்காட்டி
யன்னதேன்கலந்தின்னமுதுகந்தளித்தாங் கருள்புரிபரமர்தங்கோயில்
புன்னைதேன்சொரியும்பொழிலகங்குடைந்து பொறிவரிவண்டினம்பாடுந்
தென்னதேனரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 9

உம்பர்நாடிம்பர்விளங்கியாங்கெங்கு மொளிவளர்திருமணிச்சுடர்கான்
றெம்பிரானடஞ்செய்சூழலங்கெல்லா மிருட்பிழம்பறவெறிகோயில்
வம்புலாங்கோயில்கோபுரங்கூடம் வளர்நிலைமாடமாளிகைகள்
செம்பொனலரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர் திருச்சிற்றம்பலமே. 10

இருந்திரைத்தாளப்பரவைசூழகலத் தெண்ணிலங்கண்ணில்புன்மாக்க
டிருந்துயிர்ப்பருவத்தறிவுறுகருவூர்த் துறைவளர்தீந்தமிழ்மாலை
பொருந்தருங்கருணைப்பரமர்தங்கோயிற் பொழிலகங்குடைந்துவண்டுறங்கச்
செருந்திநின்றரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 11

பூந்துருத்தி நம்பிகாடநம்பி திருவாய்மலர்ந்தருளியது :—

பண்—சாளரபாணி.

முத்துவயிரமணிமாணிக்கமாலைகண்மேற், றொத்துமிளிர்வனபோற்றூண்டுவிளக்கேய்ப்ப
வெத்திசையும்வானவர்களேத்துமெழிற்றில்லை, யத்தனுக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. 1

கடியார்கணம்புல்லர்கண்ணப்பரென்று, னடியாரமருலகமானநீயாளாதே
முடியாமுத்தீவேள்விமூவாயிரவரொடுங், குடிவாழ்க்கைகொண்டுநீகுலாவிக்கூத்தாடினையே. 2

அல்லியம்பூம்பழனத்தாமூர்நாவுக்கரசைச், செல்லநெறிவகுத்தசேவகனேதென்றில்லைக்
கொல்லைவிடையேறிக்கூத்தாடரங்காகச், செல்வநிறைந்தசிற்றம்பலமேசேர்ந்தனையே. 3

எம்பந்தவல்வினைநோய்தீர்த்திட்டெமையாளுஞ், சம்பந்தன்காழியர்கோன்றன்னையுமாட்கொ
ண்டருளி
யம்புந்துகண்ணாளுந்தானுமணிதில்லைச், செம்பொன்செயம்பலமேசேர்ந்திருக்கையாயிற்றே. 4

கலையாவுடலோடுசேரமானாரூரன், விலையாமதமாருவெள்ளானைமேல்கொள்ள
முளையாமதிசூடிமூவாயிரவரொடு, மலையாவிளையாடுமம்பலநின்னாடரங்கே. 5

அகலோகமெல்லாமடியவர்கடற்சூழப், புகலோகமுண்டென்றுபுகுமிடநீதேடாதே
புவலோகநெறிபடைத்தபுண்ணியங்கண்ணியசீர்ச், சிவலோகமாவதுவுந்தில்லைச்சிற்றம்
பலமே. 6

களகமணிமாடஞ்சூளிகைசூழ்மாளிகைமே, லளகமதிநுதலாராயிழையார்போற்றிசைப்ப
வொளிகொண்டமாமணிகளோங்கிருளையாங்ககற்றுந், தெளிகொண்டதில்லைச்சிற்றம்பலமே
சேர்ந்தனையே. 7

பாடகமுநூபுரமும்பல்சிலம்பும்பேர்ந்தொலிப்பச், சூடகக்கைநல்லார்தொழுதேத்தத்தொல்
லுலகி
னாடகத்தின்கூத்தைநவிற்றுமவர்நாடோறு, மாடகத்தான்மேய்ந்தமைந்தவம்பலநின்னாடரங்கே.

உருவத்தெரியுருவாயூழிதோறெத்தனையும், பாவிக்கிடந்தயனுமாலும்பணிந்தேத்த
விரவிக்குநேராகியேய்ந்திலங்குமாளிகைசூழ்ந் தாவிக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. 9

சேடருறைதில்லைச்சிற்றம்பலத்தான்ற, னாடலதிசயத்தையாங்கறிந்தபூந்துருத்திக்
காடன்றமிழ்மாலைபத்துங்கருத்தறிந்து, பாடுமிவைவல்லார்பற்றுநிலைபற்றுவரே. 10

கண்டராதித்தர் திருவாய்மலர்ந்தருளியது:—

பண்—பஞ்சமம்.

மின்னாருருவமேல்விளங்கவெண்கொடிமாளிகைசூழப்
பொன்னார்குன்றமொன்றுவந்துநின்றதுபோலுமென்னாத்
தென்னாவென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்து
ளென்னாரமுதையெங்கள்கோவையென்றுகொலெய்துவதே. 1

ஓவாமுத்தீயஞ்சுவேள்வியாறங்கநான்மறையோ
ராவேபடுப்பாரந்தணாளராகுதிவேட்டுயர்வார்
மூவாயிரவர்தங்களோடுமுன்னரங்கேறிநின்ற
கோவேயுன்றன்கூத்துக்காணக்கூடுவதென்றுகொலோ. 2

முத்தீயாளர்நான்மறையர்மூவாயிரவர்நின்னோ
டொத்தேவாழுந்தன்மையாளரோதியநான்மறையைத்
தெத்தேயென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்
துளத்தாவுன்றனாடல்காணவணைவதுமென்றுகொலோ. 3

மானைப்புரையுமடமென்னோக்கிமாமலையாளோடு
மானைஞ்சாடுஞ்சென்னிமேலோரம்புலிசூடுமரன்
றேனைப்பாலைத்தில்லைமல்குசெம்பொனினம்பலத்துக்
கோனைஞானக்கொழுந்துதன்னைக்கூடுவதென்றுகொலோ. 4

களிவானுலகிற்கங்கைநங்கைகாதலனேயருளென்
றொளிமான்முன்னேவரங்கிடக்கவுன்னடியார்க்கருளுந்
தெளிவாரமுதேதில்லைமல்குசெம்பொனினம்பலத்து
ளொளிவான்சுடரேயுன்னைநாயேனுறுவதுமென்றுகொலோ. 5

பாரார்முழுதும்வந்திறைஞ்சப்பதஞ்சலிக்காட்டுகந்தான்
வாரார்முலையாண்மங்கைபங்கன்மாமறையோர்வணங்கச்

சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடுகின்ற
காரார்மிடற்றெங்கண்டனாரைக்காண்பதுமென்றுகொலோ. 6

இலையார்கதிர்வேலிலங்கைவேந்தனிருபதுதோளுமிற
மலைதானெடுத்தமற்றவற்குவாளொடுநாள்கொடுத்தான்
சிலையாற்புரமூன்றெய்தவில்லிசெம்பொனினம்பலத்துக்
கலையார்மறிபொற்கையினானைக்காண்பதுமென்றுகொலோ. 7

வெங்கோல்வேந்தன்றென்னனாடுமீழமுங்கொண்டதிறற்
செங்கோற்சோழன்கோழிவேந்தன்செம்பியன்பொன்னணிந்த
வங்கோல்வளையார்பாடியாடுமணிதில்லையம்பலத்து
ளெங்கோனீசனெம்மிறையையென்றுகொலெய்துவதே. 8

நெடியானோடுநான்முகனும்வானவருநெருங்கி
முடியான்முடிகண்மோதியுக்கமுழுமணியின்றிரளை
யடியாரலகினாற்றிரட்டுமணிதில்லையம்பலத்துக்
கடியார்கொன்றைமாலையானைக்காண்பதுமென்றுகொலோ. 9

சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடிதன்னைக்
காரார்சோலைக்கோழிவேந்தன்றஞ்சையர்கோன்கலந்த
வாராவின்சொற்கண்டராதித்தனருந்தமிழ்மாலைவல்லார்
பேராவுலகிற்பெருமையோடும்பேரின்பமெய்துவரே. 10

வேணாட்டடிகள் திருவாய்மலர்ந்தருளியது :—

பண்—புறநீர்மை.

துச்சானசெய்திடினும்பொறுப்பான்றேயாளுகப்பார்
கைச்சாலுஞ்சிறுகதலியிலைவேம்புங்கறிகொள்வா
ரெச்சார்வுமில்லாமைநீயறிந்துமெனதுபணி
நச்சாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 1

தம்பானைசாய்ப்பற்றாரென்னுமுதுசொல்லு
மெம்போல்வார்க்கில்லாமையென்னளவேயறிந்தொழிந்தே
வம்பானார்பணியுகத்திவழியடியேன்றொழிலிறையு
நம்பாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 2

பொசியாதோகீழ்க்கொம்புநிறைகுளமென்றதுபோலத்
திசைநோக்கிப்பேழ்கணித்துச்சிவபெருமானேயெனினு
மிசையானாலென்றிறத்துமெனையுடையாளுரையாடா
ணசையானேன்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 3

ஆயாதசமயங்களவரவர்கண்முன்பென்னை
நோயோடுபிணிநலியவிருக்கின்றவதனாலே
பேயாவித்தொழும்பனைத்தம்பிரானிகழுமென்பித்தாய்
நாயேனைத்திருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 4

நின்றுநினைந்திருந்துகிடந்தெழுந்துதொழுந்தொழும்பனே
னொன்றியொருகாலினையாதிருந்தாலுமிருக்கவொட்டாய்

கன்றுபிரிகற்றாப்போற்கதறுவித்திவரவுநில்லாய்
நன்றிதுவோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 5

படுமதமுமிடவயிறுமுடையகளிறுடையபிரா
னடியறியவுணர்த்துவதுமகத்தியனுக்கோத்தன்றே
யிடுவதுபுல்லோரெருதுக்கொன்றினுக்குவையிடுத
னடுவிதுவோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 6

மண்ணோடுவிண்ணளவுமனிதரொடுவானவர்க்குங்
கண்ணாவாய்கண்ணாகாதொழிதலுநான்மிகக்கலங்கி
யண்ணாவோவென்றண்ணார்தலமந்துவிளித்தாலு
நண்ணாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 7

வாடாவாய்நாப்பிதற்றியுனைநினைந்துநெஞ்சுருகி
வீடாஞ்செய்குற்றேவலெற்றேமற்றிதுபொய்யிற்
கூடாமேகைவந்துகுறுகுமாறியானுன்னை
நாடாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 8

வாளாமாலயன்வீழ்ந்துகாண்பரியமான்பிதனைத்
தோளாரக்கையாரத்துணையாரத்தொழுதாலு
மாளாநீயுடையதுவுமடியேனுன்றாள்சேரு
நாளேதோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே 9

பாவார்ந்ததமிழ்மாலைபத்தரடித்தொண்டனெடுத்
தோவாதேயழைக்கின்றானென்றருளிநன்றுமிகத்
தேவேதென்றிருத்தில்லைக்கூத்தாடிநாயடியேன்
சாவாயுநினைக்காண்டலினியுனக்குத்தடுப்பரிதே. 10

திருவாலியமுதனார் திருவாய்மலர்ந்தருளியது :—

பாதாதிகேசம். பண்—பஞ்சமம்.

மையன்மாதொருகூறன்மால்விடை யேறிமான்மறியேந்தியதடங்
கையன்கார்புரையுங்கறைக் கண்டன்கனன்மழுவா
ளையனழலாடுவானணி நீர்வயற்றில்லையம்பலத்தான்
செய்யபாதம்வந்தென் சிந்தையுள்ளிடங்கொண்டனவே. 1

சலம்பொற்றாமரைதாழ்ந்தெழுந்த தடமுந்தடம்புனல்வாய்மலர்தழீஇ
யலம்பிவண்டறையுமணி யார்தில்லையம்பலவன்
புலம்பிவானவர்தானவர்புகழ்ந் தேத்தவாடுபொற்கூத்தனார்கழற்
சிலம்புகிங்கிணியென் சிந்தையுள்ளிடங்கொண்டனவே. 2

குருண்டவார்குழற்கோதைமார்குயில் போன்மிழற்றியகோலமாளிகை
திரண்டதில்லைதன்னுட் டிருமல்குசிற்றம்பலவன்
மருண்டுமாமலையான்மகடொழ வாடுங்கூத்தன்மணிபுரைதரு
திரண்டவான்குறங்கென் சிந்தையுள்ளிடங்கொண்டனவே. 3

போழ்ந்தியானைதன்னைப்பொருப்பன் மகளுமையச்சங்கண்டவன்
றாழ்ந்ததண்புனல்சூழ் தடமல்குசிற்றம்பலவன்

சூழ்ந்தபாய்புலித்தோன்மிசைத்தொடுத்து வீக்கும்பொன்னூறன்னினொடு
தாழ்ந்தகச்சதன்றே தமியேனைத்தளர்வித்ததே. 4

பந்தபாசமெலாமறப்பசு பாசநீக்கியயன்முனிவரோ
டந்தணர்வணங்கு மணியார்தில்லையம்பலவன்
செந்தழல்புரைமேனியுந்திக ழுந்திருவயிறும்வயிற்றினு
ளுந்திவான்சுழியென்னுள்ளத் துள்ளிடங்கொண்டனவே. 5

குதிரைமாவொடுதேர்பலகுவிந் திண்டுதில்லையுட்கொம்பனாரொடு
மதுரவாய்மொழியார் மகிழ்ந்தேத்துசிற்றம்பலவ
னதிரவார்கழல்வீசிநின்றழகாநடம்பயில்கூத்தன்மேற்
றிகழுதரபந்தனமென் னுள்ளத்துள்ளிடங்கொண்டனவே. 6

படங்கொள்பாம்பணையானொடுபிரமன்பரம்பரமாவருளென்று
தடங்கையாற்றொழவுந் தழலாடுசிற்றம்பலவன்
றடங்கைநான்குமத்தோள்களுந்தட மார்பினிற்பூண்கண்மேற்றிசை
விடங்கொள்கண்டமன்றே வினையேனைமெலிவித்ததே. 7

செய்யகோடுடன்கமலமலர்சூழ்தரு தில்லைமாமறையோர்கடாந்தொழ
வையமுய்யநின்று மகிழ்ந்தாடுசிற்றம்பலவன்
செய்யவாயின்முறுவலுந்திகழுந் திருக்காதுங்காதினின்மாத்திரைகளோ
டையதோடுமன்றே யடியேனையாட்கொண்டனவே. 8

செற்றுவன்புரந்தீயெழச்சிலை கோலியாரழலூட்டினானவ
னெற்றிமாமணிக ளெறிநீர்த்தில்லையம்பலவன்
மற்றைநாட்டமிரண்டொடு மலருந்திருமுகமுமுகத்தினு
ணெற்றிநாட்டமன்றே நெஞ்சுளேதிளைக்கின்றனவே. 9

தொறுக்களவான்கமலமலருழக்கக் கரும்புநற்சாறுபாய்தா
மறுக்கமாய்க்கயல்கண் மடைபாய்தில்லையம்பலவன்
முறுக்குவாசிகைதன்னொடுமுகிழ்த்தவவ் வகத்திமொட்டொடுமத்தமும்
பிறைக்கொள்சென்னியன்றே பிரியாதென்னுணின்றனவே. 10

தூவிநீரொடுபூவவைதொழு தேத்துகையினராகிமிக்கதோ
ராவியுண்ணிறுத்தி யமர்ந்தூறியவன்பினராய்த்
தேவர்தாந்தொழவாடியதில்லைக் கூத்தனைத்திருவாலிசொல்லிவை
மேவவல்லவர்கள் விடையானடிமேவுவரே. 11

பண்—நட்டராகம்.

பவளமால்வரையைப்பனிபடர்ந்தனையதோர் படரொளிதருதிருநீறுங்
குவளைமாமலர்க்கண்ணியுங்கொன்றையுந் துன்றுபொற்குழற்றிருச்சடையுந்
திவளமாளிகைசூழ்தருதில்லையுட் டிருநடம்புரிகின்ற
தவளவண்ணனைநினைதொறுமென்மனந் தழன்மெழுகொக்கின்றதே. 1

ஒக்கவோட்டந்தவந்தியுமதியமு மலைகடலொலியோடு
நெக்குவீழ்தருநெஞ்சினைப்பாய்தலு நிறையழிந்திருப்பேனைச்
செக்கர்மாளிகைசூழ்தருதில்லையுட் டிருநடம்வகையாலே
பக்கமோட்டந்தமன்மதன்மலர்க்கணை படுந்தொறலந்தேனே. 2

அலந்துபோயினேனம்பலக்கூத்தனே யணிதில்லைநகராளீ
சிலந்தியையரசாள்கவென்றருள்செய்த தேவதேவீசனே
யுலந்தமார்க்கண்டிக்காகியக்காலனை யுயிர்செகவுதைகொண்ட
மலர்ந்தபாதங்கள்வனமுலைமேலொற்ற வந்தருள்செய்யாயே. 3

அருள்செய்தாடுநல்லம்பலக்கூத்தனே யணிதில்லைநகராளீ
மருள்செய்தென்றனைவனமுலைபொன்பயப்பிப்பதுவழக்காமோ
திரளுநீண்மணிக்கங்கையைத்திருச்சடைச் சேர்த்தியச்செய்யாளுக்
குருவம்பாகமுமீந்துநல்லந்தியை யொண்ணுதல்வைத்தோனே. 4

வைத்தபாதங்கண்மாலவன்காண்கிலன் மலரவன்முடிதேடி
யெய்த்துவந்திழிந்தின்னமுந்துதிக்கின்ற னெழின்மறையவற்றாலே
செய்த்தலைக்கமலம்மலர்ந்தோங்கிய தில்லையம்பலத்தானைப்
பத்தியாற்சென்றுகண்டிடவென்மனம் பதைபதைப்பொழியாதே. 5

தேய்ந்துமெய்வெளுத்தகம்வளைந்தரவினை யஞ்சித்தானிருந்தேயுங்
காய்ந்துவந்துவந்தென்றனைவலிசெய்து கதிர்நிலாவெரிதூவு
மாய்ந்தநான்மறையந்தணர்தில்லையு ளம்பலத்தானுடல்
வாய்ந்தமாமலர்ப்பாதங்கள்காண்பதோர் மனத்தினையுடையேற்கே. 6

உடையும்பாய்புலித்தோலுநல்லரவுமு முண்பதும்பலிதேர்ந்து
விடையதூர்வதுமேவிடங்கொடுவரை யாகினுமென்னெஞ்ச
மடைகொள்வாளைகள்குதிகொளும்வயற்றில்லை யம்பலத்தனலாடு
முடையகோவினையன்றிமற்றாரையு முள்ளுவதறியேனே. 7

அறிவுமிக்கநன்னாணமுநிறைமையு மாசையுமிங்குள்ள
வுறவும்பெற்றநற்றாயொடுதந்தையு முடன்பிறந்தவரோடும்
பிரியவிட்டுனையடைந்தனனேன்றுகொள் பெரும்பற்றப்புலியூரின்
மறைகணான்குங்கொண்டந்தணரேத்தநன் மாநடமகிழ்வானே. 8

வானநாடுடைமைந்தனேயோவென்பன் வந்தருளாயென்பன்
பானெய்யைந்துடனாடியபடர்சடைப் பால்வண்ணனேயென்பன்
றேனமாபொழில்சூழ்தருதில்லையுட் டிருநடம்புரிகின்ற
வேனமாமணிப்பூணணிமார்பனே யெனக்கருள்புரிவாயே. 9

புரியும்பொன்மதில்சூழ்தருதில்லையுட் பூசுரர்பலர்போற்ற
வெரியதாடுமெம்மீசனைக்காதலித் தினையவண்மொழியாக
வரைசெய்மாமதின்மயிலையர்மன்னவன் மறைவலதிருவாலி
பரவல்பத்திவைவல்லவர்பரமன தடியிணைபணிவாரே. 10

பண்—இந்தளம்.

அல்லாய்ப்பகலாயருவாயுருவாயாராவமுதமாய்க்
கல்லானிழலாய்கயிலைமலையாய்காணவருளென்று
பல்லாயிரம்பேர்பதஞ்சலிகள்பரவவெளிப்பட்டுச்
செல்வாய்மதிற்றில்லைக்கருளித்தேவனாடுமே. 1

அன்னநடையாரமுதமொழியாரவர்கள்பயிறில்லை
தென்னன்றமிழுமிசையுங்கலந்தசிற்றம்பலந்தன்னுட்

பொன்னுமணியுநிரந்ததலத்துப்புலித்தோல்பியற்கிட்டு
மின்னினிடையாளுமையாள்காணவிகிர்தனாடுமே. 2

இளமென்முலையாரெழின்மைந்தரொடுமோராமளிமேற்
றிளையுமாடத்திருவார்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
வளர்பொன்மலையுள்வயிரமலைபோல்வலக்கைகவித்துநின்
றளவில்பெருமையமரர்போற்றவழகனாடுமே. 3

சந்துமகிலுந்தழைப்பீலிகளுஞ்சாதிபலவுங்கொண்
டுந்திழியுநிவவின்கரைமேலுயர்ந்தமதிற்றில்லைச்
சிந்திப்பரியதெய்வப்பதியுட்சிற்றம்பலந்தன்னு
ளந்திமுழவங்கொட்டநட்டநாதனாடுமே. 4

ஓமப்புகையுமகிலின்புகையுமுயர்ந்துமுகிலோயத்
தீமெய்த்தொழிலார்மறையோர்மல்குசிற்றம்பலந்தன்னுள்
வாமத்தெழிலாரெடுத்தபாதமழலைச்சிலம்பார்க்கத்
தீமெய்ச்சடைமேற்றிங்கள்சூடித்தேவனாடுமே. 5

குரவங்கோங்கங்குளிர்புன்னைகைதைகுவிந்தகரைகண்மேற்
றிரைவந்துலவுந்தில்லைமல்குசிற்றம்பலந்தன்னுள்
வரைபோன்மலிந்தமணிமண்டபத்துமறையோர்மகிழ்ந்தேத்த
வரவமாடவனல்கையேந்தியழகனாடுமே. 6

சித்தர்தேவரியக்கர்முனிவர்தேனார்பொழிற்றில்லை
யத்தாவருளாயணியம்பலவாவென்றென்றவரேத்த
முத்துமணியுநிரந்ததலத்துண்முளைவெண்மதிசூடிக்
கொத்தார்சடைகடாழநட்டங்குழகனாடுமே. 5

அதித்தவரக்கனெரியவிரலாலடர்த்தாயருளென்று
துதித்துமறையோர்வணங்குந்தில்லைச்சிற்றம்பலந்தன்னு
ளுதித்தபோழ்திலிரவிக்கதிர்போலொளிர்மாமணியெங்கும்
பதித்ததலத்துப்பவளமேனிப்பரமனாடுமே. 7

மாலோடயனுமமரர்பதியும்வந்துவணங்கிநின்
றாலகண்டாவரனேயருளாயென்றென்றவரேத்தச்
சேலாடும்வயற்றில்லைமல்குசிற்றம்பலந்தன்னுட்
பாலாடுமுடிச்சடைகடாழப்பரமனாடுமே. 9

நெடியசமணுமறைசாக்கியருநிரம்பாப்பல்கோடிச்
செடியுந்தவத்தோரடையாத்தில்லைச்சிற்றம்பலந்தன்னு
ளடிகளவரையாரூர்நம்பியவர்களிசைபாடக்
கொடியும்விடையுமுடையகோலக்குழகனாடுமே. 10

வானோர்பணியமண்ணோரேத்தமன்னிநடமாடுந்
தேனார்பொழில்சூழ்தில்லைமல்குசிற்றம்பலத்தானைத்
தூநான்மறையானமுதவாவிசொன்னதமிழ்மாலைப்
பானேர்பாடல்பத்தும்பாடப்பாவநாசமே 11

கோலமலர்நெடுங்கட்கொவ்வைவாய்க்கொடியேரிடையீர்
பாலினையின்னமுதைப்பரமாயபரஞ்சுடரைச்
சேலுகளும்வயல்சூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தேல்வுடையெம்மிறையையென்றுகொல்காண்பதுவே. 1

காண்பதியானென்றுகொல்கதிர்மாமணியைக்கனலை
யாண்பெண்ணருவுருவென்றறிதற்கரிதாயவனைச்
சேண்பணைமாளிகைசூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பல
மாண்புடைமாடஞ்செய்மறையோன்மலர்ப்பாதங்களே. 2

கள்ளவிழ்தாமரைமேற்கண்டயனொடுமால்பணிய
வொள்ளெரியின்னடுவேயுருவாய்ப்பரந்தோங்கியசீர்த்
தெள்ளியதண்பொழில்சூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
துள்ளெரியாடுகின்றவொருவனையுணர்வரிதே. 3

அரிவையோர்கூறுகந்தானழகன்னெழின்மால்கரியின்
னுரிவைநல்லுத்தரியமுகந்தானும்பரார்தம்பிரான்
புரிபவர்க்கின்னருள்செய்புலியூர்த்திருச்சிற்றம்பலத்
தெரிமகிழ்ந்தாடுகின்றவெம்பிரானென்னிறையவனே. 4

இறைவனையென்கதியையென்னுளேயுயிர்ப்பாகிநின்ற
மறைவனைமண்ணும்விண்ணுமலிவான்சுடராய்மலிந்த
சிறையணிவண்டறையுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பல
நிறையணியாமிறையைநினைத்தேனினிப்போக்குவனே. 5

நினைத்தேனினிப்போக்குவனோநிமலத்திரளைநினைப்பார்
மனத்தினுளேயிருந்தமணியைமணிமாணிக்கத்தைக்
கனைத்திழியுங்கழனிக்கனகங்கதிரொண்பவளஞ்
சினத்தொடுவந்தெறியுந்தில்லைமாநகர்க்கூத்தனையே. 6

கூத்தனைவானவர்தங்கொழுந்தைக்கொழுந்தாயெழுந்த
மூத்தனைமூவுருவின்முதலைமுதலாகிநின்ற
வாத்தனைத்தான்படிக்குமந்தணர்தில்லையம்பலத்து
ளேத்தநின்றாடுகின்றவெம்பிரானடிசேர்வன்கொலோ. 7

சேர்வன்கொலோவன்னைமீர்திகழும்மலர்ப்பாதங்களை
யார்வங்கொளத்தழுவியணிநீறென்முலைக்கணியச்
சீர்வங்கம்வந்தணவுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தேர்வங்கைமான்மறியனெம்பிரானென்போநேசனையே. 8

நேசமுடையவர்கணெஞ்சுளேயிடங்கொண்டிருந்த
காய்சினமால்விடையூர்கண்ணுதலைக்காமருசீர்த்
தேசமிகுபுகழோர்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தீசனையெவ்வுயிர்க்குமெம்மிறைவனென்றேத்துவனே. 9

இறைவனையேத்துகின்றவிளையாண்மொழியின்றமிழான்
மறைவலநாவலர்கண்மகிழ்ந்தேத்துசிற்றம்பலத்தை
யறைசெந்நெல்வான்கரும்பினணியாலைகள்சூழ்மயிலை
மறைவலவாலிசொல்லைமகிழ்ந்தேத்துகவானெளிதே. 10

புருடோத்தமநம்பி திருவாய்மலர்ந்தருளியது:—

பண்—பஞ்சமம்.

வாரணிநறுமலர்வண்டுகெண்டுபஞ்சமஞ்செண்பகமாலைமாலை
வாரணிவனமுலைமெலியும்வண்ணம்வந்துவந்திவைநம்மைமயக்குமாலோ
சீரணிமணிதிகழ்மாடமோங்குதில்லையம்பலத்தெங்கள்செல்வன்வாரா
னாரெனையருள்புரிந்தஞ்சலென்பாராவியின்பரமென்றனாதரவே. 1

ஆவியின்பரமென்றனாதரவுமருவினையேனைவிட்டம்மவம்ம
பாவிவன்மனமிதுபையவேபோய்ப் பனிமதிச்சடையான்பாலதாலோ
நீவியுநெகிழ்ச்சியுநிறையழிவுநெஞ்சமுந்தஞ்சமிலாமையாலே
யாவியின்வருத்தமிதாரறிவாரம்பலத்தருநடமாடுவானே. 2

அம்பலத்தருநடமாடவேயுமியாதுகொல்விளைவதென்றஞ்சிநெஞ்ச
மும்பர்கள்வன்பழியாளர்முன்னேயூட்டினர்நஞ்சையென்றேயுமுய்யேன்
வன்பலபடையுடைப்பூதஞ்சூழவானவர்கணங்களைமாற்றியாங்கே
யென்பெரும்பயலைமைதீரும்வண்ணமெழுந்தருளாயெங்கள்வீதியூடே. 3

எழுந்தருளாயெங்கள்வீதியூடேயேதமின்முனிவரோடெழுந்தஞானக்
கொழுந்ததுவாகியகூத்தனேநின்குழையணிகாதினின்மாத்திரையுஞ்
செழுந்தடமலர்புரைகண்கண்மூன்றுஞ்செங்கனிவாயுமென்சிந்தைவௌவ
வழுந்துமென்னாருயிர்க்கென்செய்கேனோவரும்புனலலமருஞ்சடையினானே.

அரும்புனலலமருஞ்சடையினானேயமரர்களடிபணிந்தரற்றவந்நாட்
பெரும்புரமெரிசெய்தசிலையின்வார்த்தைபேசவுநையுமென்பேதைநெஞ்சங்
கருந்தடமலர்புரைகண்டவண்டார்காரிகையார்முன்பென்பெண்மைதோற்றேன்
திருந்தியமலரடிநசையினாலேதில்லையம்பலத்தெங்கடேவதேவே. 5

தில்லையம்பலத்தெங்கடேவதேவேதேறியவந்தணர்சிந்தைசெய்யு
மெல்லையதாகியவெழில்கொள்சோதியென்னுயிர்காவல்கொண்டிருந்தவெந்தாய்
பல்லையார்பசுந்தலையோடிடறிப்பாதமென்மலரடிநோவநீபோ
யல்லினிலருநடமாடிலெங்களாருயிர்காவலிங்கரிதுதானே. 6

ஆருயிர்காவலிங்கருமையாலேயந்தணர்மதலைநின்னடிபணியக்
கூர்நுனைவேற்படைக்கூற்றஞ்சாயக்குரைகழல்பணிகொளமலைந்ததென்றா
லாரினிமமரர்கள்குறைவிலாதாரவரவர்படுதுயர்களையநின்ற
சீருயிரேயெங்கடில்லைவாணாசேயிழையார்க்கினிவாழ்வரிதே. 7

சேயிழையார்க்கினிவாழ்வரிதுதிருச்சிற்றம்பலத்தெங்கள்செல்வனேநீ
தாயினுமிகநல்லையென்றடைந்தேன்றனிமையைநினைகிலைசங்கராவுன்
பாயிரும்புலியதளின்னுடையும்பையமேலெடுத்தபொற்பாதமுங்கண்
டேயிவளிழந்ததுசங்கமாவாவெங்களையாளுடையீசனேயோ. 8

எங்களையாளுடையீசனேயோவிளமுலைமுகநெகமுயங்கிநின்பொற்
பங்கயம்புரைமுகநோக்கிநோக்கிப்பனிமதிநிலவதென்மேற்படாச்
செங்கயல்புரைகண்ணிமார்கண்முன்னேதிருச்சிற்றம்பலமுடனேபுகுந்து
வங்குணபணிபலசெய்துநாளுமருள்பெறினகலிடத்திலிருக்கலாமே. 9

அருள்பெறினகலிடத்திருக்கலாமென்றமரர்கடலைவனுமயனுமாலு
மிருவருமறிவுடையாரின்மிக்காரேத்துகின்றாரின்னமெங்கள்கூத்தை

மருள்படுமழலைமென்மொழியுமையாள்கணவனை வல்வினையாட்டியேன்
னருள்பெறவலமருநெஞ்சமாவாவாசையையளவறுத்தாரிங்காரே. 10

ஆசையையளவறுத்தாரிங்காரேயம்பலத்தருநடமாடுவானை
வாசநன்மலரணிகுழன்மடவார்வைகலுங்கலந்தெழுமாலைப்பூசன்
மாசிலாமறைபலவோதுநாவன்வண்புருடோத்தமன்கண்டுரைத்த
வாசகமலர்கள்கொண்டேத்தவல்லார்மலைமகள்கணவனையணைவர்தாமே. 11

பண்—பஞ்சமம்.

வானவர்கள்வேண்டவளர்நஞ்சையுண்டார்தா,மூன மிலாவென்கையொளிவளைகள்கொள்வாரோ
தேனல்வரிவண்டறையுந்தில்லைச்சிற்றம்பலவர், கானமரோவென்றுதேநாடகமேயாடுவரே. 1

ஆடிவருங்காரரவுமைம்மதியும்பைங்கொன்றை, சூடிவருமாகண்டேன்றோள்வளைகடோற்றாலுந்
தேடியிமையோர்பரவுந்தில்லைச்சிற்றம்பலவ, ரசடிவரும்போதருகேநிற்கவுமோவொட்டாரே. 2

ஒட்டாவகையவுணர்முப்புரங்களோரம்பாற், பட்டாங்கழல்விழுங்கவெய்துகந்தபண்பினார்
சிட்டார்மறையோவாத்தில்லைச்சிற்றம்பலவர், கொட்டாநடமாடிக்கோல்வளைகள்கொள்வாரே.

ஆரேயிவைபடுவாரையங்கொளவந்து, போரேடியென்றுபுருவமிடுகின்றார்
தேரார்விழவோவாத்தில்லைச்சிற்றம்பலவர், தீராநோய்செய்வாரையொக்கின்றார்காணீரே. 4

காணீரேயென்னுடையகைவளைகள்கொண்டார்தாஞ், சேணார்மணிமாடத்தில்லைச்சிற்றம்பலவர்
பூணார்வனமுலைமேற்பூவம்பாற்காமவே, ளாணுடுகின்றவாகண்டுமருளாரே. 5

ஏயிவரேவானவர்க்கும்வானவரேயென்பாராற், றாயிவரேயெல்லார்க்குந்தந்தையுமாமென்பாராற்
றேய்மதியஞ்சூடியதில்லைச்சிற்றம்பலவர், வாயினகேட்டறிவார்வையகத்தாராவாரே. 6

ஆவாவிவர்தந்திருவடிகொண்டந்தகன்றன், மூவாவுடலவியக்கொன்றுகந்தமுக்கண்ணர்
தேவாமறைபயிலுந்தில்லைச்சிற்றம்பலவர், கோவாவினவளைகள்கொள்வாரோவென்னையே 7

என்னைவலியாரொன்றவிலங்கையர்கோன், மன்னுமுடிகணெரித்தமணவாளர்
செந்நெல்விளைகழனித்தில்லைச்சிற்றம்பலவர், முன்னந்தான்கண்டறிவாரொவ்வாரிம்முத்தரே.

முத்தர்முதுபகலேவந்தென்றனில்புகுந்து, பத்தர்பலியிடுகவென்றெங்கும்பார்க்கின்றார்
சித்தர்கணம்பயிலுந்தில்லைச்சிற்றம்பலவர், கைத்தலங்கள்வீசிநின்றாடுங்காணேக்காரே, 9

நோக்காததன்மையானோக்கிலோமியாமென்று, மாற்காழியீந்துமலரோனைநிந்தித்துச்
சேக்காதலித்தேறுந்தில்லைச்சிற்றம்பலவ, ரூர்க்கேவந்தென்வளைகள்கொள்வாரோவொண்
ணுதலீர். 10

ஒண்ணுதலிகாரணமாவும்பர்தொழுதேத்துங்,கண்ணுதலான்றன்னைப்புருடோத்தமன்சொன்ன
பண்ணுதலைப்பத்தும்பயின்றாடிப்பாடினா, ரெண்ணுதலைப்பட்டங்கினிதாவிருப்பாரே. 11

சேதிராயர் திருவாய்மலர்ந்தருளியது :—

பண்—பஞ்சமம்.

சேலுலாம்வயற்றில்லையுளீருமைச், சாலநாளயன்சார்வதினாலிவள்
வேலையார்விடமுண்டுகந்தீரென்று, மாலதாகுமென்வாணுதலே. 1

வாணுதற்கொடிமாலதுவாய்மிக, நாணமற்றனணறியேனினிச்
சேணுதற்பொலிதில்லையுளீருமைக், காணிலெய்ப்பிலள்காரிகையே. 2

காரிகைக்கருளீர்கருமால்கரி, யீருரித்தெழுபோர்வையினீர்மிகு
சீரியற்றில்லையாய்சிவனேயென்று, வேரிநற்குழலாளிவள்விம்முமே. 3

விம்மிவிம்மியேவெய்துயிர்த்தாளென, வும்மையேநினைந்தேத்துமொன்றுகிலள்
செம்மலோர்பயிறில்லையுளீரெங்க, ளம்மலோதியயர்வுறுமே. 4

அயர்வுற்றஞ்சலிகூப்பியந்தோவெனை, யுயவுன்கொன்றையந்தாருளாயெனுஞ்
செயலுற்றார்மதிற்றில்லையுளீரிவண், மயலுற்றாளென்றன்மாதிவளே. 5

மாதொர்கூறன்வண்டார்கொன்றைமார்பனென், றோதிலுய்வனென்பைங்கிளியேயெனுஞ்
சேதித்தீர்சிரநான்முகனைத்தில்லை, வாதித்தீரென்மடக்கொடியையே. 6

கொடியைக்கோமளச்சாதியைக்கொம்பிளம், பிடியையென்செய்திட்டீர்பகைத்தார்புர
மிடியச்செஞ்சிலைகால்வளைத்தீரென்று, முடியுநீர்செய்தமூச்சறவே. 7

அறவனேயன்றுபன்றிப்பினேகிய, மறவனேயெனைவாதைசெய்யேலெனுஞ்
சிறைவண்டார்பொழிற்றில்லையுளீரெனும், பிறைகுலாநுதற்பெய்வளையே. 8

அன்றருக்கனைப்பல்லிறுத்தானையைக், கொன்றுகாலனைக்கோளிழைத்தீரெனுந்
தென்றலார்பொழிற்றில்லையுளீரிவ, ளொன்றுமாகிலளும்பொருட்டே. 9

ஏயுமாறெழிற்சேதிபர்கோன்றில்லை, நாயனாரைநயந்துரைசெய்தன
தூயவாறுரைப்பார்துறக்கத்திடை, யேயவின்பமெய்தியிருப்பரே. 10

சேந்தனாரருளிச்செய்த திருப்பல்லாண்டு:—

பண்—பஞ்சமம்.

மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள் வஞ்சகர்போயகலப்
பொன்னிற்செய்மண்டபத்துள்ளேபுகுந்து புவனியெல்லாம்விளங்க
வன்னநடைமடவாளுமைகோனடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப் பல்லாண்டுகூறுதுமே. 1

மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட் செய்மின்குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருளளவில்லதோ ரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றே பல்லாண்டுகூறுதுமே. 2

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்ட நிகரிலாவண்ணங்களுஞ்
சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந் திறங்களுமேசிந்தித்
தட்டமூர்த்திக்கென்னகநெகவூறு மமிர்தினுக்காலநிழற்
பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 3

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்த தூமனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர் சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரண்மேருவில்விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 4

புரந்தரன்மாலயன்பூசலிட்டோலமிட் டின்னம்புகலரிதா
யிரந்திரந்தழைப்பவென்னுயிராண்டகோவினுக் கென்செயவல்லமென்றுங்
கரந்துங்கரவாதகற்பகனாகிக் கரையில்கருணைக்கடல்
பரந்துநிரந்தும்வரம்பிலாப்பாங்கற்கே பல்லாண்டுகூறுதுமே. 5

சேவிக்கவந்தயனிந்திரன்செங்கண்மா லெங்குந்திசைதிசையன
கூவிக்கவர்ந்துநெருங்கிக்குழாங்குழா மாய்நின்றுகூத்தாடு
மாவிக்கமுதையென்னார்வத்தனத்தினை யப்பனையொப்பமரர்
பாவிக்கும்பாவகத்தப்புறத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 6

சீருந்திருவும்பொலியச்சிவலோக நாயகன்சேவடிக்கீ
ழாரும்பெருதவறிவுபெற்றேன் பெற்றதார்பெறுவாருலகி
லூருமுலகுங்கழறவுழறி யுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம் பல்லாண்டுகூறுதுமே. 7

சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணாரிளங் கொங்கையிற்செங்குங்குமம்
போலும்பொடியணிமார்பிலங்குமென்று புண்ணியர்போற்றிசைப்ப
மாலுமயனுமறியாநெறிதந்து வந்தென்மனத்தகத்தே
பாலுமமுதமுமொத்துநின்றானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 8

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன் மன்னியதில்லைதன்னு
ளாலிக்குமந்தனர்வாழ்கின்றசிற்றம் பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 9

தாதையைத்தாளறவீசியசண்டிக்கு மண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணிமுடித்தாமமுநாமமுந் தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 10


குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங்குழாம்பெருகி
விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மி மிகுதிருவாரூரின்
மழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த
பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 11

ஆரார்வந்தாரமரர்குழாத்தி லணியுடையாதிரைநா
ணாராயணனொடுநான்முகனங்கி யிரவியுமிந்திரனுந்
தேரார்வீதியிற்றேவர்குழாங்க டிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ்பாடியுமாடியும் பல்லாண்டுகூறுதுமே. 12

எந்தையெந்தாய்சுற்றமுற்று மெமக்கமுதாமெம்பிரானென்றென்று
சிந்தைசெயுஞ்சிவன்சீரடியாரடிநாய் செப்புறை
யந்தமிலானந்தச்சேந்தனெனைப்புகுந் தாண்டுகொண்டாருயிர்மேற்
பந்தம்பிரியப்பரிந்தவனேயென்று பல்லாண்டுகூறுதுமே. 13

பெரியபுராணம்.

ஆதியாய்நடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி. 3



கோவிந்தராஜப்பெருமாள்.

சித்திரகூடம்.

'சித்திரகூடம்' எனப் பெயர் வாய்ந்துள்ள கோவிந்தராஜப்பெருமாள் சந்நிதி ஸ்ரீ நடராஜர் கோவிலுக்குள் சித்ஸபையின் ஸமீபத்தில் தென்மேற்கிலுள்ளது. இப்பெருமாள் சந்நிதி வைஷ்ணவ நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. ஆழ்வார்களில் குலசேகராழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார் மூவர்களும் இப்பெருமாளைத் தங்கள் பிரபந்தங்களில் பாடியிருக்கிறார்கள்.

விசேஷமாய் குலசேகராழ்வார் இந்த கோவிந்தராஜனைப் பற்றிப்புகழ்ந்து பாடியிருப்பதில் அயோத்தியைச் சிறப்பித்த ஸ்ரீ ராமனைப்பாடியிருக்கிறார். ஆனது பற்றியே இவ்விடத்தை தென் சித்ரகூடமென்று தெரிவித்திருக்கிறார். மேலும் அவரது காலத்தில் தில்லை மூவாயிரர்களென வழங்கும் தீக்ஷிதர்களே இந்தப்பெருமாளையும் பூஜை செய்ததாக எற்படுகிறது. பெரியாழ்வாரும் ஸ்ரீராமனைப் பாடியிருக்கிறார். ஆனால் திருமங்கையார் பல்லவ ராஜாக்கள் கோயிலை புதுப்பித்ததாகவும் ஆதிசேஷன் பேரில் சயனித்திருப்பதாகவும் பாடியிருப்பதிலிருந்து பிந்தியவாகிய இவர் காலத்தில் ஸ்ரீராமராக பூஜிக்கப்பட்டது ஒரு ஸமயம் யாது காரணம்பற்றியோ எடுபட்டுப் பிந்தி பள்ளிகொண்ட பெருமாளைப் பிரதிஷ்டை செய்திருக்கலாமென்று தெரியவருகிறது. ஆனாலும் இவர் காலத்திலும் கூட தீக்ஷிதர்களே பெருமாளை பூஜை செய்ததாகத் தெரியவருகிறது.

சிலாசாஸனம்.

நடராஜர் கோவில் முதல் பிராகாரக் கிழக்குச்சுவற்றில் வாயிலின் இடது பக்கத்தில் மஹா மண்டலேசுவர ஸ்ரீரங்காரயர் என்ற விஜயநகர அரசர் திருச்சித்திரகூடத்தில்

தில்லை கோவிந்தராஜஸ்வாமி கோவிலுக்கு தெற்காகவுள்ள பெரிய மண்டபத்தைப் பழுது பார்த்த விஷயமும், புண்டரீகவல்லி நாச்சியார், சூடிக்கொடுத்தநாச்சியார் இவர்களது விமானங்களையும் திருவாலி ஆழ்வார் ஸந்நிதானத்திலுள்ள மண்டபத்தையும் பழுது பார்த்த விஷயமும் கூறப்பட்டுள்ளன.

மேற் கூறிய பிராகாரத்தின் தென் சுவற்றில் வைகானஸ ஸூத்ர ஸம்ஸ்கார விதிப்படி பெரும்பெற்றப் புலியூர் என்னுமிடத்தில் தில்லை கோவிந்தராஜப் பெருமானை ஸ்தாபனம் செய்ய உத்திரவு அளித்த விஷயம் கூறப்பட்டுள்ளது.

வித்யாலயங்கள்.

இச்சிதம்பரக்ஷேத்ரத்தில் ஆதியில் பாணினிமஹரிஷி 'அஷ்டாத்யாயி' என்ற வியாகரணத்தை வெளியிட்டார். பதஞ்ஜலி மஹரிஷி மஹாபாஷ்யத்தையும யோகஸூத்ரத்தையும் வைத்ய சாஸ்திரத்தையும் வெளியிட்டார்.

"தேவார" மூலப்பிரதிகள் ஸ்ரீநடராஜர் கோயில் இரண்டாம் பிராகார வடமேற்கு மூலையிலிருந்து நம்பியாண்டார் நம்பியால் வெளிப்படுத்தப்பட்டன. 'பெரியபுராணம்' எனப்படும் அறுபத்துமூன்று நாயன்மார்களது சரித்திரம் சேக்கிழாரெனப்படும் சோழ ராஜாவின் மந்திரியாகிய பெரியாரால் இவ்விடம் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு வருஷகாலத்தில் எழுதப்பட்டு ஸ்ரீநடராஜர் சந்நிதியில் அரங்கேற்றப்பட்டது. தீக்ஷிதர்களில் ஒருவராகிய உமாபதிசிவாசாரியாரால் சைவமத சித்தாந்த நூல்கள் வெளியிடப்பட்டன. கவிசக்ரவர்த்தியெனப்படும் கம்பர் தமது இராமாயணகாவ்யத்தை இவ்விடத்தில் அரங்கேற்றினர்.

காஞ்சீபுரம் பச்சையப்பமுதலியார் இவ்விடத்தில் ஒரு ஆங்கிலகலாசாலையை ஏற்படுத்தியுளர். ராமசுவாமிசெட்டியார் இதேமாதிரி ஹைஸ்கூலையும் ஸ்தாபித்துளர். கனம் ஸர் அண்ணாமலைசெட்டியார் அவர்கள் மீனாக்ஷிகாலேஜ் என்னும் ஆங்கில உயர்தர கலாசாலை, ஸம்ஸ்கிருத சிரோமணி கலாசாலை, தமிழ்வித்வான் கலாசாலை, உபாத்தியாய கலாசாலைகள் இவைகளை சமீபத்தில் ஸ்தாபித்து இவைகளெல்லாம் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டுவருகின்றன.



கோவிந்தராஜப் பெருமாள்கோவில்.

இவைகள் நீங்கலாக வேதபாடசாலையும் நாவலர் தமிழ் கலாசாலையும இருந்துவருகின்றன. ஆகையால் இவ்வூரில் சிறுவர்களுக்கு எல்லாவிதமான கலாசாலைகளும் அவரவர்களது நோக்கத்திற்கேற்றவாறு அப்யஸித்துவர இடமிருப்பது ஒரு பெரிய விசேஷம்.

குலசேகராழ்வாரருளிச்செய்த பெருமாள்திருமொழி—10 வது திருமொழி:—

¶ அங்கணெடுமதிள்புடைசூழயோத்தியென்னும் அணிநகரத்துலகனைத்தும்விளக்குஞ்சோதி
வெங்கதிரோன்குலத்துக்கோர்விளக்காய்த்தோன்றி விண்முழுதுமுயக்கொண்டவீரன்தன்னை
செங்கணெடுங்கருமுகிலையிராமன்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எங்கள்தனிமுதல்வனையெம்பெருமான்றன்னை என்றுகொலோ கண்குளிரக்காணும்நாளே. 1

வந்தெதிர்ந்ததாடகைதனுரத்தைக்கீறி வருகுருதிபொழிதரவன்கணையொன்றேவி
மந்திரங்கொள்மறைமுனிவன்வேள்விகாத்து வல்லரக்கருயிருண்டமைந்தன்காண்மின்
செந்தளிர்வாய்மலர்நகைசேர்செழுந்தண்சோலைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
அந்தணர்களொருமூவாயிரவரேத்த அணிமணியாசனத்திருந்தஅம்மான்தானே. 2

செவ்வரிநற்கருநெடுங்கண்சீதைக்காகிச் சினவிடையோன்சிலையிறுத்துமழுவாளேந்தி
வெவ்வரிநற்சிலைவாங்கிவென்றிகொண்டு வேல்வேந்தர்பகைதடிந்தவீரன்தன்னை
தெவ்வரஞ்சுநெடும்புரிசையுயர்ந்தபாங்கர்த் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எவ்வரிவெஞ்சிலைத்தடக்கையிராமன்தன்னை இறைஞ்சுவாரிணையடியேயிறைஞ்சினேனே. 3

தொத்தலர்பூஞ்சுரிகுழற்கைகேசிசொல்லால் தொன்னகரந்துறந்து * துறைக்கங்கைதன்னைப்
பத்தியுடைக்குகன்கடத்தவனம்போய்ப்புக்குப் பரதனுக்குப்பாதுகமுமரசுமீந்து
சித்திரகூடத்திருந்தான்தன்னை இன்று தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எத்தனையும்கண்குளிரக்காணப்பெற்ற இருநிலத்தார்க்கு இமையவர்நேரொவ்வார்தாமே. 4

வலிவணக்குவரைநெடுந்தோள்விராதைக்கொன்று வண்தமிழ்மாமுனிகொடுத்தவரிவில்வாங்கி
கலைவணக்குநோக்கரக்கிமூக்கைநீக்கிக் கரனோடுதூடணன்தனுயிரைவாங்கி
சிலைவணக்கிமான்மறியவெய்தான்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
தலைவணக்கிக்கைகூப்பியேத்தவல்லார் திரிதலால் தவமுடைத்துத்தரணிதானே. 5

தனமருவுவைதேகிபிரியலுற்றுத் தளர்வெய்திச்சடாயுவைவைகுந்தத்தேற்றி
வனமருவுகவியரசன்காதல்கொண்டு வாலியைக்கொன்றிலங்கைநகரரக்கர்கோமான்
சினமடங்கமாருதியாற்சுடுவித்தானைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
இனிதமர்ந்தவம்மானையிராமன்தன்னை ஏத்துவாரிணையடியேயேத்தினேனே. 6

குரைகடலையடலம்பால்மறுகவெய்து குலைகட்டிமறுகரையையதனாலேறி
எரிநெடுவேலரக்கரொடுமிலங்கைவேந்தன் இன்னுயிர்கொண்டவன்தம்பிக்கரசுமீந்து
திருமகளோடினிதமர்ந்தசெல்வன்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
அரசமர்ந்தானடிசூடுமரசையல்லால் அரசுஆகவெண்ணேன்மற்றரசுதானே. 7

அம்பொனெடுமணிமாடவயோத்தியெய்தி அரசெய்தி அகத்தியன்வாய்த்தான்முன்கொன்றான்
தன் * பெருந்தொல்கதைகேட்டுமிதிலைச்செல்வி உலகுய்யத்திருவயிறுவாய்த்தமக்கள்
செம்பவளத்திரள்வாய்த்தன்சரிதைகேட்டான் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எம்பெருமான்தன்சரிதைசெவியால்கண்ணால் பருகுவோம் இன்னமுதம் மதியோமன்றே. 8

செறிதவச்சம்புகன்றன்னைச்சென்றுகொன்று செழுமறையோனுயிர்மீட்டு * தவத்தோனீந்த
நிறைமணிப்பூணணியுங்கொண்டு இலவணன்தன்னைத் தம்பியால்வானேற்றி முனிவன்வேண்ட
திறல்விளங்குமிலக்குமனைப்பிரிந்தான்றன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
உறைவானை * மறவாதவுள்ளந்தன்னை யுடையோம் மற்றுறுதுயரமடையோமன்றே. 9

¶ அன்றுசராசரங்களைவைகுந்தத்தேற்றி அடலரவப்பகையேறியசுரர்தம்மை
வென்று * இலங்குமணிநெடுந்தோள்நான்கும்தோன்ற விண்முழுதுமெதிர்வரத்தன்தாமமேவி

சென்றினிதுவீற்றிருந்தஅம்மான்றன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
என்றும்நின்றானவனிவனென்றேத்தி நாளு மிறைஞ்சுமினோஎப்பொழுதும்தொண்டீர் நீரே. 10

¶ தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் திறல்விளங்குமாருதியோடமர்ந்தான்தன்னை
எல்லையில்சீர்த்தயரதன்தன்மகனாய்த்தோன்றிற்று அதுமுதலாத் தன்னுலகம்புக்கதீறு
கொல்லியலும்படைத்தானைக்கொற்றவொள்வாள் கோழியர்கோன்குடைக்குலசேகரன்சொற்
செய்த
நல்லியலின்தமிழ்மாலைபத்தும்வல்லார் நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. 11

திருமங்கையாழ்வாரருளிச்செய்த பெரியதிருமொழி:—

¶ ஊன்வாடவுண்ணாதுயிர்காவலிட்டு உடலிற்பிரியாப்புலனைந்தும்நொந்து
தாம்வாடவாடத்தவஞ்செய்யவேண்டா தமதாவிமையோருலகாளகிற்பீர்!
கானாடமஞ்ஞைக்கணமாட மாடே கயலாடுகானீர்ப்பழனம்புடைபோய்
தேனாடமாடக்கொடியாடு தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 3-2-1

காயோடுநீடுகனியுண்டு வீசு கடுங்கால்நுகர்ந்து, நெடுங்காலம் * ஐந்து
தீயோடுநின்றுதவஞ்செய்யவேண்டா திருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்பீர்!
வாயோதுவேதம்மலிகின்றதொல்சீர் மறையாளர்நாளும் முறையால்வளர்த்த
தீயோங்கவோங்கப்புகழோங்கு தில்லைத்திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 2

வெம்புஞ்சினத்துப்புனக்கேழலொன்றாய் விரிநீர்முதுவெள்ளமுள்புக்கழுந்த
வம்புண்பொழில்சூழுலகன்றெடுத்தான் அடிப்போதணைவான்விருப்போடிருப்பீர்!
பைம்பொன்னுமுத்தும்மணியுங்கொணர்ந்து படைமன்னவன்பல்லவர்கோன்பணிந்த
செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்த தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 3

அருமாநிலமன்றளப்பான்குறளாய்அவுணன்பெருவேள்வியிற்சென்றிரந்த
பெருமான்திருநாமம்பிதற்றி நுந்தம் பிறவித்துயர்நீங்குதுமென்னகிற்பீர்
கருமாகடலுட்கிடந்தானுவந்து கவைநாவரவினணைப்பள்ளியின்மேற்
திருமால்திருமங்கையோடாடு தில்லைத்திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 4

கோமங்கவங்கக்கடல்வையமுய்யக் குலமன்னரங்கம்மழுவில்துணிய
தாமங்கமருட்படைதொட்ட வென்றித் தவமாமுனியைத்தமக்காக்ககிற்பீர் !
பூமங்கைதங்கிப்புலமங்கைமன்னிப் புகழ்மங்கையெங்கும்திகழ * புகழ்சேர்
சேமங்கொள்பைம்பூம்பொழில்சூழ்ந்த தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 5

நெய்வாயழலம்புதுரந்து முந்நீர் துணியப்பணிகொண்டுஅணியார்ந்து * இலங்கு
மையார்மணிவண்ணனையெண்ணி நுந்தம் மனத்தேயிருத்தும்படிவாழவல்லீர் !
அவ்வாயிளமங்கையர்பேசவுந்தான் அருமாமறையந்தணர்சிந்தைபுக
செவ்வாய்க்கிளிநான்மறைபாடு தில்லைத்திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 6

மௌவற்குழலாய்ச்சிமென்தோள்நயந்து மகரஞ்சுழலச்சுழல்நீர்பயந்த
தெய்வத்திருமாமலர்மங்கைதங்கு திருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்பீர்
கௌவைக்களிற்றின்மருப்பும் பொருப்பிற் கமழ்சந்தும்உந்திநிவாவலங்கொள்
தெய்வப்புனல்சூழ்ந்தழகாய தில்லைத்திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 7

மாவாயினங்கம்மதியாதுகீறி மழைமாமுதுகுன்றெடுத்து * ஆயர்தங்கள்
கோவாய்நிரைமேய்த்து உலகுண்டமாயன் குரைமாகழல்கூடுங்குறிப்புடையீர் !

மூவாயிரநான்மறையாளர் நாளும் முறையால்வணங்க அணங்காயசோதி
தேவாதிதேவன்திகழ்கின்ற தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 8

செருநீலவேற்கண்மடவார்திறத்துச் சினத்தோடுநின்றுமனத்தால்வளர்க்கும்
அருநீலபாவமகலப் புகழ்சேர் அமரர்க்குமெய்தாதவண்டத்திருப்பீர்!
பெருநீர்நிவாவுந்தி முத்தங்கொணர்ந்து எங்கும்வித்தும்வயலுள்கயல்பாய்ந்துகள
திருநீலம்நின்றுதிகழ்கின்ற தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 9

¶ சீரார்பொழில்சூழ்ந்துஅழகாய தில்லைத் திருச்சித்ரகூடத்துறைசெங்கண்மாலுக்கு
ஆராதவுள்ளத்தவர்கேட்டுஉவப்ப அலைநீருலகுக்கருளேபுரியும்
காரார்புயற்கைக்கலிகன்றி குன்றாவொலிமாலை ஒரொன்பதோடொன்றும்வல்லார்
பாராருலகமளந்தானடிக்கீழ்ப் பலகாலம்நிற்கும்படிவாழ்வர்தாமே. 10

¶ வாடமருதிடைபோகி மல்லரைக்கொன்றொக்கலித்திட்டு
ஆடல்நன்மாவுடைத்து ஆயராநிரைக்கன்றிடர்தீர்ப்பான்
கூடியமாமழைகாத்த கூத்தனெனவருகின்றான்
சேடுயர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே 3-3-1

பேய்மகள்கொங்கைநஞ்சுண்ட பிள்ளைபரிசிதுவென்றால்
மாநிலமாமகள்மாதர்கேள்வனிவனென்றும் * வண்டுண்
பூமகள்நாயகனென்றும் புலங்கழுகோவியர்பாடி
தேமலர்தூவவருவான் சித்திரகூடத்துள்ளானே. 2

பண்டிவன்வெண்ணெயுண்டானென்று ஆய்ச்சியர்கூடியிழிப்ப
எண்டிசையோரும்வணங்க இணைமருதூடுநடந்திட்டு
அண்டரும்வானத்தவரும் ஆயிரநாமங்களோடு
திண்திறல்பாடவருவான் சித்திரகூடத்துள்ளானே. 3

வளைக்கைநெடுங்கண்மடவார் ஆய்ச்சியரஞ்சியழைப்ப
தளைத்தவிழ்தாமரைப்பொய்கைத் தண்தடம்புக்கண்டர்காண
முளைத்தவெயிற்றழல்நாகத்து உச்சியில்நின்று அதுவாட
திளைத்தமர்செய்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. 4

பருவக்கருமுகிலொத்து முத்துடைமாகடலொத்து
அருவித்திரள்திகழ்கின்ற ஆயிரம்பொன்மலையொத்து
உருவக்கருங்குழலாய்ச்சிதிறத்து இனமால்விடைசெற்று
தெருவில்திளைத்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. 5

¶ எய்யச்சிதைந்ததிலங்கைமலங்க வருமழைகாப்பான்
உய்யப்பருவரைதாங்கி ஆநிரைகாத்தானென்றேத்தி
வையத்தெவரும்வணங்க அணங்கெழுமாமலைபோலே
தெய்வப்புள்ளேறிவருவான் சித்திரகூடத்துள்ளானே. 6

ஆவர் இவைசெய்தறிவார் அஞ்சனமாமலைபோலே
மேவுசினத்தடல்வேழம் வீழமுனிந்து * அழகாய
காவிமலர்நெடுங்கண்ணார் கைதொழவீதிவருவான்
தேவர்வணங்குதண்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. 7

பொங்கியமரிலொருகால்பொன்பெயரோனைவெருவ
அங்கவனாகமளைந்திட்டு ஆயிரம்தோளெழுந்தாட
பைங்கணிரண்டெரிகான்ற நீண்டவயிற்றொடுபேழ்வாய்
சிங்கவுருவின்வருவான் சித்திரகூடத்துள்ளானே. 8

கருமுகில்போல்வதோர்மேனி கையனவாழியுஞ்சங்கும்
பெருவிறல்வானவர்சூழ ஏழுலகுந்தொழுதேத்த
ஒருமகளாயர்மடந்தை யொருத்திநிலமகள் * மற்றைத்
திருமகளோடும்வருவான் சித்திரகூடத்துள்ளானே. 9


¶ தேனமர்பூம்பொழில் தில்லைச்சித்திரகூடமமர்ந்த
வானவர்தங்கள்பிரானை மங்கையர்கோன்மருவார்
ஊனமர்வேல்கலிகன்றி ஒன்தமிழொன்பதோடொன்றும்
தானிவைகற்றுவல்லார்மேல் சாராதீவினைதானே. 10

பெரியாழ்வாரருளிச்செய்த திருமொழி :—

பொற்றிகழ் சித்திரகூடப்பொருப்பினில்
உற்றவடிவில் ஒருகண்ணும்கொண்ட * அக்
கற்றைக்குழலன் கடியன்விரைந்து உன்னை
மற்றைக்கண்கொள்ளாமேகோல்கொண்டுவா
மணிவண்ணநம்பிக்கோர்கோல்கொண்டுவா. 2-6-7

சித்திரகூடத்திருப்பச் சிறுகாக்கைமுலைதீண்ட
அத்திரமேகொண்டெறிய அனைத்துலகும்திரிந்தோடி
வித்தகனே ! இராமா ! ஓ ! நின்னபயம்என்றழைப்ப
அத்திரமேயதன்கண்ணை அறுத்ததுமோரடையாளம். 3-10-6





திருவானைக்காவல் ஸ்வாமிகோவில் விமானமும் ஜம்பு விருக்ஷமும்.

திருவானைக்காவல்.

(ஜம்புகேசுவரம்)

இந்த ஸ்தலம் பஞ்ச பூத ஸ்தலங்களில் ஒன்றான அப்பு ஸ்தலமெனக் கீர்த்தி வாய்ந்தது. "திருவானைக்காவல்" என்று இது தமிழில் வழங்குகிறது. இது திருச்சிராப்பள்ளிக்கு வடக்கில் இரண்டு மைல் தூரத்தில் காவேரிநதிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையிலுள்ள அழகு வாய்ந்ததும் மிகச் செழிப்புள்ளதுமான ஒரு தீவில் அமைந்துள்ளது. இதற்கு ஞானக்ஷேத்திரமென்றும் பெயருண்டு. இவ்விடத்தில் ஒன்பது முக்கிய தீர்த்தங்களுண்டு. அவைகளில் தைமாதம் பூர்ணிமையில் ஸ்நாநம் செய்தால் விசேஷ பலன்களை அடையலாம். இது ஸ்தலம், தீர்த்தம், மூர்த்தி மூன்றிலும் விசேஷ மஹிமையுடையது. பார்வதிதேவியே தீர்த்தத்தைத் திரட்டி லிங்கமாக பகவானைப் பூஜித்து அவரது உபதேசம் பெற்ற இடம்.

அப்புலிங்கம்.

இங்குள்ள அப்புலிங்க மூர்த்தி இறைக்க இறைக்க வற்றாத ஜலத்தின் மத்தியில் விளங்குகிறார். இவ்வூருக்கு "ஜம்புகேசுவரம்" என்ற பெயர் வந்ததற்குக் காரணம் ஒருக்கால் இங்கு நாகமரம் (ஜம்புமரம்) அடர்ந்த காடுகள் சூழ்ந்திருந்ததே யெனக் கூறுகிறார்கள்.




திருவானைக்காவல் கோவிலுக்குள் நுழையும் முதல் கோபுரம். இதைச் சேர்ந்தாப் போலிருக்கும் மதிள் தான் நீறிட்டான் மதிள். இதற்கு வெளியிலிருக்கும் வீதிதான், ஐந்தாவதான விபூதி பிராகாரம்.

கோயில் கட்டிடம்.

இப்பெரியகோயில் சுமார் 2400 அடி நீளமும் சுமார் 1500 அடி அகலமுமுள்ளது. பஞ்சப்பிராகாரங்களையுடையது. இதில் சில்ப வேலையில் திறமையுடைய கல் தூண்க

ளுள்ள ஆயிரக்கால் மண்டபமுண்டு. அம்மன் கோயில் முன்னுள்ள மண்டபத்தூண் களிலும் சில விசேஷ பிம்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஒன்று, இவ்விடத்து ஸ்தலபுராண ரீதியாய் ஏற்பட்டுள்ளபடி அம்பாள மூல லிங்கத்தை பூஜை செய்கிற மாதிரியாயுள்ளது; மற்றொன்றில் "ஏகபாததிருமூர்த்தி" பிம்பமுள்ளது. இதில் ஒரு பாதத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவன் இம்மூன்று சுவாமிகளும் தங்கள் தங்களது வாகனங்களாகிய அன்னம், கருடன், விருஷபம் இவைகளுடன் விளங்கி வருகின்றனர்.

இங்கு அம்மன் கோவில் கிழக்கு முகமாகவும் ஸ்வாமி கோவில் மேற்கு முகமாகவு



ம் இருக்கிறது.


அகிலாண்டேசுவரி அம்மன் கோவில் விமானம்.

இக்கோயிலுக்கு வெளியிலுள்ள ராஜராஜேசுவரர் கோயிலில் வெகு நேர்த்தியாய் அமைக்கப்பட்டுள்ள லிங்கம் ஐந்துமுகங்களுடன் இருந்து வருகிறது. இவ்வைந்து முகங்களாகிய ஸத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், அகோரம், ஈசானம் ஐந்துள் முறையே நான்கு நாலுபுறத்திலும் ஐந்தாவது மேல்புறமாய் ஆகாயத்தை நோக்கியும் அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு விசேஷ வேலைப்பாடுள்ள லிங்கம்.

இவ்வூர் சமீபத்திலுள்ள திருவாசி என்னுமிடத்தில் நடராஜர் விக்ரஹம் ஜடாமுடியுடன் விளங்குவதுடன்னியில், இமமூர்த்தி முயலகன் மீது நில்லாமல் அவ்வசுரன் சமீபத்தில் நின்று கொண்டிருக்கிற மாதிரியாக அபூர்வமான விதமாய் அமைக்கப்பட்டுள்ளது.

மற்றைய கோவில்கள்.


இத்திருவாசி எனப்படும் ஸ்தலத்திற்கு திருப்பாச்சிலாச்சிராமம் எனப்பெயர் மு



திருவானைக்காவல் தேர் உத்ஸவம்.

ன்னர் வழங்கி வந்தது. இது திருவானைக்காவுக்கு வடமேற்கில் 3 மைல் தூரத்திலுள்ளது. இவ்விடத்தில் ஸுந்தரமூர்த்தி நாயனர் பொன் வேண்டி ஸ்வாமி முதலில் கொடாமலிருக்க "இவரலாதில்லையோ பிரானா" என்று பாடி பொன்னைப் பெற்ற பெருமை வாய்ந்த இடம் இவ்விடம் நடராஜமூர்த்தி பாதத்தின் கீழ் முயலகனிராததற்கு ஒரு கதையுளது. அக்காலத்திய கொல்லிமழவன என்ற மன்னவனது புத்திரியாருக்கு நேர்ந்த முயலக


நோயை சம்பந்தர் பதிகம்பாடித் தீர்த்தருளினர். இந்த நோய்க்கு மூலமான முயலகன் நடராஜப்பெருமானது திருவடியின் கீழ்க் கிடத்தலால் சம்பந்தர் பாடலுக்கு விஷயமான அவனது உருவம் மறைந்து போயிற்று. முயலக நோய் பெண்ணை விட்டு நீங்கியது போல அந்த நோய்க்கு அதிஷ்டானமாகிய முயலகன் நடராஜர் திருவடியை விட்டு விலகிப் போயினன் எனவே, அவ்வூர்க் கோயிலிலிருந்த நடராஜர் திருவடியின் கீழ்க் கிடந்த முயல



திருவானைக்காவலில் ஆயிரக்கால் மண்டபத்துக்கு முன்னிருக்கும் ஸஹஸ்ரதீர்த்த தெப்பக்குளம்.

கன் திடீரென்று காணமற் போயினன். அது கண்ட அரசன் முதலானோர் அதிசயமடைந்து, காரணம் அறியாதவர்களாய்ப் புதிய நடராஜ முகூர்த்தம் ஒன்று முயலகனோடு அமைப்பதற்கு முயன்றார்கள். சிற்பிகள் நடராஜ வடிவத்தை முயலகனுடன் முதலில் கருக்கட்டி அமைத்துக் கொண்டு பஞ்சலோகங்களை ஒன்று சேர்த்து உருக்கி வார்த்


தார்கள். பின்னர் குகையை உடைத்துப் பார்க்கையில் முயலகன் இல்லை! நடராஜர் மட்டும் விளங்கினர். இந்த அதிசயத்தைக் கண்டு மறுபடியும் வார்த்தார்கள். அப்பொழுதும் முயலக னின்றி அமைந்தது! திரும்பவும் ஒரு முறை வார்ததார்கள். முன் போலக் கருக்கட்டி, உலையிலே லோகத்தை ஏற்றி உருக்கிக் கொண்டிருந்த சிற்பி மிகவும் கவலையுடனும் அச்சத்துடனும் இறக்க வேண்டிய சமயத்தை எதிர் நோக்கியிருந்தான்.



ஜம்பு விருக்ஷம்.


அப்பொழுது ஒரு அசந்தர்ப்பததால் சிறிது வெளியே செல்ல நேர்ந்தது. அச்சமயம் தில்லை நடராஜப்பெருமான் அந்தச் சிற்பியைபபோல உள்ளே சென்று உலையிலிருந்த சரக்கை யெடுத்துக் குகையில் வார்த்தனர். உடனே வெளியே சென்றிருந்த சிற்பி வந்து பார்க்க சரக்கைக் குகையில் ஊற்றியிருக்கக்கண்டு, 'யார் இது செய்தவர்' என்று கோபத்துடன் அங்கிருந்தவர்களைக் கேட்டான். அவர்கள் அதிசயத்துடன் சிற்பியைப் பார்தது 'முன் ஒரு சிற்பி இங்கே வந்து இந்தக் காரியஞ் செய்தார். வெளியே போயிருந்த நீர்தானென்று நாங்கள் கருதியிருந்தோம். நீர் திரும்பி வந்ததும் இப்பொழுது அவரை இங்கே காணோம்' என்று சொன்னார்கள். இதனைக் கேட்ட சிற்பி ஒன்றுந் தோன்றமல் குகையை உடைத்துப் பார்ப்போமென்று யாவரும் பார்க்கும்படி சோதித்தான். அப்பொழுது முயலகன் இன்றியே சடையினைக் கிரீடம் போற் சுற்றிக்கொண்டு, (முயலகன் பிடித்திருந்த) சர்ப்பத்தின் மேல் நடனம் புரியும் திருக்கோலத்துடன் எம்பெருமான் தோன்றினார்! அவ்வத்

புதக் காட்சியை அரசன் முதலாயினோர் கண்டு அதன் உண்மை தெரியாமல் கலங்கித்திருவருளைப் போற்றி நின்றார்கள். அப்பொழுது எம்பெருமான் அசரீரியாக, "அரசனே, சம்பந்தன் உனது வேண்டுகோளால் உனது மகளுக்கு ஏற்பட்டிருந்த முயலக நோயைத் தீர்த்தபொழுது அந்த நோய்க்கு அதிஷ்டானமாகிய எனது காலின் கீழ் இருந்த முயல



கிழக்கு கோபுரமும் அதற்குள்ளிருக்கும் ஜம்புதீர்த்தக் குளமும் தோப்பும்.

கனை மறைந்திடச் செய்தேன். முயலகன் இப்பொழுது எனது காலடியில் இல்லை. அவன் முக்தியடைந்து விட்டான். ஆதலால் இந்தத் தலத்தில் முயலகன் உருவம் மறைந்து விட்டது. நூதன விக்ரஹம் அமைக்க வேண்டி நீயும் மற்றவரும் பலமுறை முயன்றும், உங்கள் விருப்பம் நிறைவேறுவண்ணம் நானே சிற்பியாக வந்து சம்பந்தன் புகழை



மைசூர் கர்த்தர் மண்டபம், திருவானைக்காவல். ஸமீபத்தில் நடந்த திருப்பணி வேலையில் இம்மண்டபத்தை பிரித்துவிட்டார்கள்.

நிறுத்தினேன்" என்று திருவாய்மலர்ந்தருளினர். இவ்வத்புத வாக்கைக் கேட்ட மன்னனும் சிற்பியும் மற்றவர்களும் பெரு மகிழ்ச்சி யடைந்தார்கள். இப்பொழுதும் அந்த க்ஷேத்திரத்தில் நடராஜப் பெருமான் முயலகனின்றியே எழுந்தருளியிருக்கிறார். "முயலக தீர்த்தம்" என்று ஒரு தீர்த்தம் இருக்கிறது. அதில் நீராடினால், நோய்களும் பேய்களும் நீங்கிச் சுகவாழ்வுண்டாம்.

ஜம்பு விருக்ஷத்தினடியில் லிங்கம் ஏற்பட்ட காரணம்.

ஒரு ஸமயம் ஒரு ரிஷி இங்கிருந்து ஒரு நாகப்பழத்தைக் கைலாஸ பர்வதத்திற்க்கொண்டு சென்று அங்கு ஈசுவரனுக்கு அதை அர்ப்பணம் செய்த பிறகு புசிக்க, அக்கனி அவரது வயிற்றில் முளைத்து மரமாகித் தலைவழியாகக் கிளம்பிற்றாம். இதனால் ஆச்சரியமடைந்த அந்த ரிஷி தான் நாகப்பழம் கொண்டுவந்த ஜம்புகேசுவரத்தில் அம்மரத்தின் கீழ் கடவுள் எழுந்தருளி யிருக்குமாறு வேண்டிக்கொண்டனராம். இதனால் இநத ஸ்தலத்திற்கு மஹிமை ஏற்பட்டுளது. இப்பொழுதும் இம்மாம் ஸ்தலவிருக்ஷமாக கர்ப்ப கிருஹத்தின் வெளியில் இருந்து வருகிறது.

அம்மன் பூஜித்தது.

இங்குள்ள அம்மனுக்கு "அகிலாண்டேசுவரி" என்று பெயர். ஒரு ஸமயம் கைலாஸத்திலிருந்து பூலோகம் வந்து ஈசுவரனிடத்தில் ஞானோபதேசம் பெற ஈசுவரி இவ்விடத்திலுள்ள மூர்த்தியைப் பூஜித்ததாக ஐதிஹ்யம். இந்த மாதிரி சில அம்பாள் ஸந்நிதியின்



அகிலாணடேச்ரி அம்மன் ஜம்புலிங்கத்தை பூஜை செய்தல். இது கோவிலில் சிலாரூபமாக இருக்கிறது.

முன்னுள்ள மண்டபத்திலுள்ள கல் தூணில் செதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் உச்சிகாலப் பூஜை செய்யக் குருக்கள் ஸ்திரீ மாதிரியாக ஆடையுடுத்து மூலலிங்கத்தைப் பூஜிப்பது வழக்கம்.

இவ்விடத்திலுள்ள அம்மன் வெகு உக்ரகலையுடனிருந்து பிரதிதினமும் காலையில் கோயில் கதவைத் திறப்பவர்களை பாதித்ததாகத் தெரியவர, ஆதி சங்கராசாரிய சுவாமிகள் அம்மன் காதுகளில் ஸ்ரீசக்ரயந்திரத்தைத் தாடங்கமாகச் சாத்தி அந்த உக்ர கலையை சாந்தப் படுத்தியதுமன்னியில் அம்மன் எதிரில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்தால் அந்த உக்ர வீக்ஷண்யம் விநாயகரிடம் செல்லுமென்ற காரணததால் பிறகு அவ்வாறு உக்ரத்தைக் காட்டமாட்டாளென்று விநாயகர் ஸந்நிதியைப் பிரதிஷ்டை செய்தார். இப்பொழுதும் இந்த ஸந்நிதி அம்மனுக்கு எதிரில் இருந்து வருகிறது.

யானை, சிலந்தி, பூஜித்தது.

இங்குள்ள மூர்த்தியை அருகில் வடமேற்குத் திசையில் பத்மகுண்டலி என்னும் தீர்த்தத்தையுடைய சுவேதகிரி மலையின் சமீபத்திலுள்ள காட்டில் வஸித்த யானை ஒன்று துதிக்கையில் ஜலம் கொண்டு வந்து அபிஷேகம் செய்து பூஜித்து வரச் சிலந்தி ஒன்று லிங்கத்தின் மீது மரத்திலிருந்து இலைகள் விழாது தடுக்க வலை கட்டித் தனது பக்தியைக் காட்டிற்றாம்.


ஒரு நாள் யானை சிலந்தி கட்டியிருந்த வலையை அநுசிதமென்று கருதிக் கலைக்கச் சிலந்தி கோபங்கொண்டு அதன் துதிக்கைக்குள் சென்று அதைக் கடித்துச் சாகும்படி செய்ய அது சாகும்தருணத்தில் துதிக்கையைக் கீழே அடித்துச் சிலந்தியைக் கொன்று விட்டு இறந்ததாம். இவ்விரு பிராணிகளின் பக்தியால் மகிழ்ச்சி யடைந்த சிவபிரான் அவ்விரண்டிற்கும் இங்கு முக்தி அளித்தனர் என்பது புராணக்கதை. இறந்த சிலந்தி சோழ அரசர்கள் ஒருவருக்குக் குழந்தையாகப் பிறந்ததாகவும் அக்குழந்தைக்குக் கோச் செங்கண்ணனெனப் பெயர் ஏற்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

"சிலந்தியு மானைக்காவிற் திருநிழற் பந்தர் செய்து
உலந்த வணிறந்த போதே கோச் செங்கணானுமாகக்
கலந்த நீர்க்காவிரிசூழ் சோணாட்டுச்சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே."

அரசன் மாலை ஆண்டவனுக்கு அர்ப்பணமானது.

இவ்வூரின் ஸமீபத்திலுள்ள உறையூரில் அரசு செலுத்திய ஒரு சோழராஜன் தான் காவேரியில் பக்தியுடன் ஸ்நானம் செய்கையில் அவனது பத்னியின் கழுத்தில் தரித்திருந்த

முத்துஹாரம் நழுவிவிட்டது. அரசன் கவலைகொள்ளாது ஈசனுக்கு அர்ப்பணமென்று சொல்லி ஸ்நானம் செய்து விட்டுக் கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்யப்போனதும் மூலலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் ஸமயம் அந்த ஹாரம் ஜலத்திலிருந்து சுவாமியின் பேரில் விழுந்த பெருமையைக்கண்டான். இந்த விஷயத்தை சுந்தரர் பாடியிருக்கிறார்.




ஸ்வாமி கோயிலுக்குப் பின்பக்க முள்ள சண்டிகேசுவரர்கோயில்.

நீறிட்டான் மதில்

கோச்செங்கட் சோழநாயனாராலே வெகு பக்தியுடன் கட்டப்பட்ட இக்கோயிலின் வெளிமதிள் கட்டுகையில் ஈசுவரனே ஒரு சித்தர் வடிவமாக வந்து வேலை செய்யும் ஆட்களுக்குக் கூலியாக விபூதிப் பொட்டலத்தை அன்றன்று மாலையில் கொடுத்தனுப்ப அவர்கள் வீடு சென்று அதனை அவிழ்த்ததும் அவரவர்கள் செய்த வேலைக்குத் தக்க கூலி

அதில் அடங்கி யிருக்கும் பெருமையைக் கண்டார்களாம்! அதுபற்றியே அந்த வெளி மதிலுக்குத் "திருநீற்றுமதில்" என்றும் "நீறிட்டான் மதில்" என்றும் பெயர் ஏற்பட்டதாம். இதைப் பிரதக்ஷிணம் செய்வதால் மகப்பேறு, ஜயம், செல்வம், இன்பம் இவைகளை அடையலாமென்பது கொள்கை.



அம்மன் கோவிலுக்கு எதிராக உள்ள த்வஜஸ்தம்பமும், ஆதி ஸ்ரீசங்காராசாரியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்னேசுவரர் கோவிலும்.

ஸ்ரீராமர் பூஜை செய்தது.

ஸ்ரீராமர் இலங்கையில் இராவணாதிகளை ஸம்ஹாரம் செய்து ஸீதாதேவியுடன் திரும்புகையில் இராவணனைக் கொன்ற பாபம் நீங்க இராமேசுவரத்தில் லிங்கப்பிரதிஷ்டை செய்தும் பின்னர் கும்பகர்ணனுடைய சாயை தன்னை பாதிக்க இவ்விடம் வந்ததும் அந்த

பிதி நீங்கப்பெற்றனர். அதைக்கண்டு ஸந்தோஷமடைந்த ஸ்ரீராமர் பின்னரும் இப்புண்ணிய க்ஷேத்திரத்தை விட்டு நீங்கினதும் அந்த உபாதை வராவண்ணம் இவ்விடம் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ய உத்தேசம்கொண்டு அங்கதனைக்கொண்டு நர்மதாதீரத்திலிருந்து ஒரு பாணலிங்கம் தருவித்து அதைக் கோயிலில் மேல்புரமுள்ள குளத்தின் கரையில் பிரதிஷ்டை செய்தார்.

பராசரர் பூஜித்தது.

ஹரிச்சந்திர மஹாராஜா சத்தியம் தவறுமையினால் வஸிஷ்டருக்கும் விசுவாமித்திருக்கும் விரோதமுண்டாகி அதன் காரணமாக விசுவாமித்திரரால் ஏவப்பட்ட பூதம் வசிஷ்டரது குமாரன் சக்தியை அகாரணமாய்க் கொன்று விட்டது. அக்காலத்தில் சக்தியின் மனைவி கர்ப்பவதியாயிருந்தவள் பராசரரைப் பெற்றனள். இப்பராசரர் தமது பிதா அகாலமரணத்தை அடைந்ததன் நிமித்தம் இந்த ஸ்தலம் வந்து பூஜித்துப் பிதாவினது பிரேதத்திற்கு தர்ப்பணாதிகளைச் செய்து திருப்தி செய்வித்து தமது பிதாவைக் கொன்ற அரக்கர்களை ஒழிக்க எண்ணிக்கோயிலின் வடகிழக்கு எல்லையில் ஒரு குண்டத்தை இயற்றி ஆபிசாரஹோமத்தைச் செய்தனர். பின்னர் நிருருதியின் வேண்டுகோளினால் அதை நிறுத்தி மூலலிங்கத்தைப் பூஜித்து மஹிமை பெற்றனர்.

கௌதமர் பூஜித்தது.

கௌதமர் தமது தர்மபத்நியாகிய அஹல்யையை சபித்தபின்னர் அவளைப் பிரிந்த கவலையால் இவ்விடம் வந்து ஈச்வரனைப் பூஜித்துவந்தனர். இவ்விதம் செய்து வருகையில் தமது பத்னி சாபம் ஸ்ரீராமரால் நீங்கப் பெற்று அவள் சீக்கிரம் அவரை இவ்விடம வந்து அடைவள் என்று அசரீரியால் தெரிந்து கொண்டனர். இவ்விதமே அஹல்யை தமது சாபம் நீங்கினதும் இவ்விடம்வந்து அவரை அடையப் பின்னர் இருவரும் தமது இருப்பிடம் சென்றனர்கள் என்பதாக இவ்வூர் ஸ்தலபுராணம்.



ஏகபாத திருமூர்த்தி ஜம்புகேச்வரம்.

குபேரன் புஷ்பக விமானத்தைத் திரும்பப் பெற்றது.

இராவணனால் தமது புஷ்பகவிமானம் பிடுங்கிக்கொண்டு போகப்பட்டதன் நிமித்தம் கவலை கொண்ட குபேரன் இவ்விடம் வந்து கோயிலில் தமது பெயரால் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்து அதைப் பூஜித்து வந்ததின் காரணமாக இராவணன் வதமானதும் ஸ்ரீராமரால் அவர் அயோத்தி வந்ததும் இந்த விமானம் இவனிடம் வரப்பெற்று ஸந்தோஷமடைந்து தமது இருப்பிடம் சென்றனன்.

கோச்செங்கண்ணன்.

சிதம்பர க்ஷேத்திரத்தில் சுபதேவன் என்னும் சோழமஹாராஜன் தனது பத்னியாகிய

கமலவதியுடன் வாழ்ந்து வரும் நாளில் கமலவதி கர்ப்ப முற்றனள். மேலே குறித்த சிலந்தி இறந்ததும் இவள் வயிற்றில் கருவுண்டாயிற்றும். பிரசவ வலி ஏற்பட்டதும் அரண்மனை ஜோசியர்கள் ஒரு நாழிகை கழித்துப் பிரசவமானல் அக்குழந்தை வெகு கியாதியுடன் அரசாளுமென்று சொல்ல அவ்வாறே தனக்குப் புத்திரன் பிறக்கவேண்டித் தன்னைத் தலைகீழாகக் கட்டிவைக்கும்படி அரசி வேண்டிக்கொண்டாள். இதன் நிமித்தம் பிரசவம் தாமதித்ததின் காரணமாகக் குழந்தை பிறந்ததும் கண்கள் சிவந்திருக்க அவருக்குக் "கோச்செங்கண்ணன்" என்று பெயரிட்டார்கள். அவர் வெகு கியாதியுடன் அரசாண்டு பல கோயில்களைக் கட்டி வைத்து அதனல் நாயன்மார் திருக்கூட்டத்தில் சேர்ந்து பெருமைபெற்றார்.

சிலா சாஸனம்.

இங்குள்ள கோவிலின் மூன்றாவது பிராகாரத்திய வடக்குச் சுவரில் வீரஸோமேசுர தேவன் என்ற அரசன் விக்கிரமபுரி என்ற கண்ணனூரில் விக்கிரக ஸ்தாபனம் செய்ததும் ஜம்புகேசுரத்தில் தனது மனைவி, தகப்பனர், பாட்டனர், பாட்டி இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி நான்கு சிலா விக்கிரக ஸ்தாபனங்கள் செய்ததும் வரைந்து வைக்கப்பட்டிருக்கக் காணலாம். இரண்டாவது பிராகாரத்தின் மேற்குச்சுவரில் பாண்டிய அரசன் குலசேகரதேவன் காலத்தில் சிலந்தி சோழராஜனக மாறியதால் காட்டப்பட்ட கடவுளது மஹிமைக்கு அறிகுறியாக ஏற்படுத்தப்பட்ட விதியைப் பற்றிய விவரம் கூறப்பட்டுளது.

முதலாவது குலோத்துங்கசோழராஜனது காலத்தில் வில்லவராயன் என்பவர் இக்கோயிலில் விருஷபவாகன மூர்த்தியையும் அம்மனையும் ஏற்படுத்தியதுமன்னியில் அம்மூர்த்திகளுக்குப் பூஜை நிவேத்தியம் ஸரிவர நடந்துவர பூமியும் வாங்கி ஏற்பாடு செய்வித்த விவரம் சிலாலிகிதத்தில் அடியில் கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தடியில் மூலத்தானம் ஆதிகாலம் தொட்டு இருந்ததென்கிற விவரம் "தென் இந்தியா சாஸனங்கள்" 3-வது புஸ்தகம் 170 பக்கம் பதிப்பித்திருக்கும் சாஸனத்தால் வெளிவரும்:—

ஸ்வஸ்திஸ்ரீ புகழ் சூழ்ந்த புணரிபகழ் சூழ்ந்த புவியில் பொங்நேமி யளவுந்தங்நேமி நடப்ப விளங்கு சயமகளை யிளங்கொப்பருவத்து சக்கரகோட்டத்து விக்கிரமத்தொழிலால் புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம் வயிராகரத்து வாரி அயிர் மூனைக் கொந்தளவரசர் தந்தளமிரிய வாளுறை கழித்து தோள்வலி காட்டிப் போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகை சூடித் தெந்திசைத் தேமருகமலப்பூமகள் பொதுமையும் பொந்நியாடை நன்நிலப்பாவையுந் தனிமையுந் தவிரப் புனிதத் திருமணி மகுடம் உரிமையிற் சூடித்தந்நடி யிரண்டுந் தடமுடியாகத் தொந்நில வேந்தர் சூட முந்நை மனுவாறு பெருக கலியாறு வறுப்ப செங்கோல் திசை தொறுஞ் செல்ல வெண் குடை யிருநில வளாகம் எங்கணுந்தனது திருநிழல் விண்ணிலாத்திகழ் ஒரு தனி மேருவில் புலி விளையாட கடற்றீவாந் தரத்துப் பூபாலர் திறை விடு தந்த கலஞ் சொரி களிறு முறை நிற்ப விலங்கிய தெந்நவந் கருந்தலை பருந்தலைத் திடத்தந் பொந்நகர்ப் புறத்திடைக் கிடப்பவிராள் பிற்குலப்பிறை

போல் நிற்பிழை எந்நுஞ் சொல்லெதிர் கொடிற்றல்லது தங்கை வில்லது கொடாவெழுகுலத் தாசர் அளத்திலிட்ட களற்றின நீட்டமும் பட்டவெம்பரியும் விட்ட தந்மானமும் கூறிந வீரமும் கிடப்ப ஏறின மலைகளு முதுகு நெளிப்ப யழிந்த நதிகளுஞ் சுழன்றுடைந்தோட விழுஞ கடல்களுந் தலைவிரித்தலமாக் குடதிசைத் தந்நாளுகந்து தானும் தானையும் பந்நா ளிட்ட பலபல முதுகும் பயந்தெதிர் மாறின ஜயப்பெருந்திருவும் பழியுகந்து குடுத்த புகழிந்செல்வியும் வாளாரொண்கண் மடவையரீட்டமும் மீளாது குடுத்த வெங்கரி நிரையும் கங்கமண்டலமும் சிங்கணமெந்நும் பாணியிரண்டும் ஒரு விசைக் கைக்கொண்டீண்டிய புகழொடு பாண்டிமண்டலங்கொள்ளத் திருவுளத்தடைத்து வெள்ளவரு பரித்தாங்கமும் பொரு பரிக்சலங்களும் தந்திர வாரியு முடைத்தாய் வந்து வடகடல் தெங்கடல் படர்வது போலத்தந் பெருஞ்சேனையையேவிப் பஞ்சவர் ஐவரும் பொருத போர்களத்தஞ்சி வெரு நெளித்தோடி அரணெநப்புக்க காடறத்துடைத்து நாட்டடிப்படுத்து மற்றவர் தம்மை வன சார் திரியும் பொச்சை வெஞ்சுரமேற்றி கொற்ற விஜயஸ்தம்பந்திசை தொறு நிறுத்தி முத்திந் சலாபமும் முத்தமிட் பொதியிலு மத்தவெங்கரிபடு மய்யச் சய்யமுங் கந்நியுங் கைக்கொண்டு புநிதத்தெந்நாட்டெல்லை காட்டிக் குடமலை நாட்டுள்ள சாவேறெல்லாந் தநி விசும்பெற மாவெறிய தந்வருதினித் தலைவரைக் குறுகலர் குலையக் கொட்டாறுட்பட நெறிதொறும் நிலைகளிட்டருளித்திறல் கொள் வீரஸிம்ஹாஸனந் திரியவிட்டருளிப் பொங்கொளியாரமுந்திருப்புயத்தலங்களும் போல் வீரமுந்தியாகமும் விளங்கப்பார்தொழச் சிவநிடத் துமை யெநத்தியாகவல்லி உலகுடையாளிருப்ப அவளுடந் கங்கை வீற்றிருந்த மங்கையர் திலதம் எழிசைவல்லபி ஏழுலகமுடையாள் வாழி மலர்ந்திநி திருப்ப ஊழியுந்திருமாலாகத்துப் பிரியாதெந்று திருமகளிருந்தென வீரஸிம்ஹாஸனத்து உலகுமுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேஸரி வந்மாந திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு ௪௰௭ ஆவது பாண்டிகுலாசநி வளநாட்டு மீகொழை தேவதாந ப்ரஹ்மதேயம் திருவானைக்காவில் திருவெண்ணாவல் கீழிநிதமர்ந்தருளிய ஸ்ரீ ஜம்புவனபதிக்கு மூலஸ்தாநமாகிய அண்ணுவூரந் ஆதேயம் ஜயசிங்ககுல காலவள நாட்டு மீசெங்கிளி நாட்டு வளம்பகுடி அரயமகந் முனையந் அருமொழி தேவநான வில்லவாரயனுக்கு நாம் விற்றுக் குடுத்த நிலமாவது உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமாந் தேவதாநம் தெங்கரை ஊர்களில் பாண்டிகுலாசநி வளநாட்டு மீகோழை ஆளிகுடியில் இவனுக்கு விற்றுக்குடுத்த நிலத்துக் கிசைந்த கீழ் பார்க் கெல்லை பிள்ளைகொள்ளி வாய்க்காலுக்கு மேற்கும் தெந் பார்க் கெல்லை களத்தில் வடக்கில் கைய்வாய்க்காலுக்கு வடக்கும் மீபார்க்கெல்லை உத்தம சிலிச்சருப்பேதிமங்கலத்து தெந் பிடாகை புதுக்குடி எல்லைக்கு கிழக்கும் வட பார்க் கெல்லை தெந்நாற்றங்கரைப் பெருவழிக்கு தெற்கு ஆக இவ்விசைந்த பெருநாந் கெல்லையுள் பட்ட நிலம் ௪௯

இந்நிலம் நாலே முக்காலும் இத் தேவர்க்கு யாண்டு நாற்பத் தேழாவது வரை பயிரிலி புந்செய்யாய்க் குட்டமு மண்ணுமிட்டுக் கிடந்தமை யிலந்நிலம் முனையந் அருமொழி தேவநான வில்லவாரயனுக்கு விற்றுக்குடுத்துக் கொள்வதாக எம்மிலிசைந்த விலை பொருள் அந்றாடு நற்காசு ௪௰௨

இக்காசு நாலே மாகாணியுங்கைக் கொண்டு திருவானைக்காவுடைய எம்பெருமாந் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்கி முனையந் அருமொழி தேவனை வில்லவாரயனுக்கு விற்றுக்குடுத்து

இவந் உடையார் திருவாணைக்காவுடைய எம்பெருமாந் கோயிலில் இடங்கை நாயகரெந்து எழுந்தருளுவித்த இஷபவாஹன தேவர்க்கும் நம்பிராட்டியார்க்கு திருமஞ்சநங்களுக்கு திருவமிர்து படிக்கு இரண்டு திருநாளிலும் இரண்டு நாள் திருவிழா எழுந்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டும் நிமந்தங்களுக்கு இந்நில சஷ கல்லித்திருத்தி ஸ்ரீ பண்டாரத்து புந்செய் வரிசையால் வேலி ஒந்றுக்கு நெல் ஐங்கலமாக ராஜகேஸரி மாக்காலால் இந்நிலம் நாலே முக்காலுக்கும் அளப்பதாந நெல் உம்நளவுங

இந்நெல் இரு பத்து முக்கலநே இருதூணிக் குறுணியும் அளக்குமிடத்தில் கார் பாதி பசாநம் பாதி அளப்பதாகவும்

இதில் மிகுதி கொண்டு இவந் இடங்கை நாயகரெந்று எழுந்தருளுவித்த இஷபவாஹநதேவர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருமஞ்சன படிகளுக்கும் திருவமுது படிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டு நாளெழுந்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டு நிமந்தங்களுக்கு நிமந்தஞ் செய்து குடுத்தோம்.

மூனயன் அருமொழி தேவநான வில்லவராயநுக்கு திருவானைக்காவுடைய எம்பெருமானுக்கு மூலஸ்தானமாகிய அனைஸ்வரந் உள்ளிட்ட கந்மிகளோம்.

இது பந்மாஹேஸ்வரரகைக்ஷ.

தேவாரப் பாடல்கள்.

ஸம்பந்தர் திருவாய்மலர்ந்தருளியது:—

இரண்டாம் திருமுறை.—பண்—இந்தளம்.

மழையார் மிடறு மழுவாளுடையாய், உழையார் கரவா வுமையாள் கணவா
விழவாரும் வெண்ணாவலின் மேவிய வெம், அழகாவெனுமாயிழை யாளவளே. 1

கொலையார் கரியின்னுரி மூடியனே, மலையார் சிலையா வளைவித்தவனே
விலையா லெனையாளும் வெண்ணாவலுளாய், நிலையாவருளா யெனு நேரிழையே. 2

காலாலுயிர் காலனை வீடு செய்தாய், பாலோடு நெய்யாடிய பால்வண்ணனே
வேலாடு கையா யெம் வெண்ணாவலுளாய், ஆலார் நிழலா யெனுமாயிழையே. 3

சுறவக் கொடி கொண்டவனீற துவாய், உற நெற்றி விழித்த வெமுத்தமனே
விறன் மிக்க கரிக்கருள் செய்தவனே, அறமிக்கது வென்னுமெனுயிழையே. 4

செங்கட் பெயர் கொண்டவன் செம்பியர் கோன், அங்கட் கருணை பெரிதாயவனே
வெங்கண் விடையாயெம் வெண்ணாவலுளாய், அங்கத்தயர்வாயினளாயிழையே. 5

குன்றேயமர்வாய் கொலையார் புலியின், தன்றோலுடையாய் சடையாய் பிறையாய்
வென்றாய் புரமூன்றை வெண்ணாவலுளே, நின்றாயருளாயெனு நேரிழையே. 6

மலையன்றெடுத்த வரக்கன் முடிதோள், தொலையவ் விரலாலூன்றிய தூமழுவா
விலையில்லெனையாளும் வெண்ணாவலுளாய், அலசா மனல்கா யெனுமாயிழையே. 7

திருவார் தரு நாரணனுன் முகனும், மருவா வொருவா வழலாய் நிமிர்ந்தாய்
விரையாரும் வெண்ணாவலுண் மேவிய வெம், அரவா வெனு மாயிழையாளவளே. 8

புத்தர் பலரோட மண் பொய்த்தவர்கள், ஒத்தவ்வுரை சொல்லிவை யோரகிலார்
மெய்த் தேவர் வணங்கும் வெண்ணுவலுளாய், அத்தாவருளாயெனு மாயிழையே. 9

வெண்ணுவலமர்ந்துறை வேதியனைக், கண்ணார் கமழ் காழியர் தந்தலைவன்
பண்ணோடி வைபாடிய பத்தும் வல்லார், விண்ணோரவ ரேத்தவிரும்புவரே. 10

மூன்றும்திருமுறை—திருவிராகம்—பண்—கௌசிகம்.

வானைக்காவல் வெண்மதிமல் குபுல்குவார் சடைத்
தேனைக்காவிலின் மொழித் தேவிபாகமாயினன்
ஆனைக்காவிலண்ணலைய பயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவர்க்கேது மேதமில்லையே. 1

சேறுபட்ட தண்வயற் சென்று சென்று சேணுலா
வாறுபட்ட நுண்டுறை யானைக்காவிலண்ணலார்
நீறு பட்ட மேனியார் நிகரில் பாத மேத்துவார்
வேறு பட்ட சிந்தையார் விண்ணிலென்ன வல்லரே. 2

தாரமாய மாதராடா னோர் பாக மாயினன்
ஈரமாய புன் சடை யேற்ற திங்கள் சூடினன்
ஆரமாய மார்புடை யானைக்காவிலண்ணலை
வாரமாய் வணங்குவார் வல் வினைகண் மாயுமே. 3

விண்ணினண்ணு புல்கிய வீரமாய மால்விடைச்
சுண்ண வெண்ணீறாடினன் சூலமேந்து கையினன்
அண்ணல் கண்ணோர் மூன்றினனானைக்காவு கைதொழ
எண்ணும் வண்ணம் வல்லவர்க் கேதமொன்றுமில்லையே. 4

வெய்ய பாவங்கைவிட வேண்டுவீர்களாண்ட சீர்
மைகொள் கண்டன் வெய்ய தீ மாலையாடு காதலான்
கொய்ய விண்ட நான் மலர்க்கொன்றை துன்று சென்னியெம்
ஐயன் மேய பொய்கை சூழானைக்காவு சேர்மினே. 5

நாணு மோர்வு சார்வு முன்னகையுமுட்கு நன்மையும்
பேணுறாத செல்வமும் பேச நின்ற பெற்றியான்
ஆணும் பெண்ணுமாகிய வானைக்காவிலண்ணலார்
காணுங்கண்ணு மூன்றுடைக் கறை மிடறனல்லனே. 6

கூரும்மாலை நன்பகற் கூடிவல்ல தொண்டர்கள்
பேருமூருஞ் செல்வமும் பேசநின்ற பெற்றியான்
பாரும் விண்ணுங்கை தொழப் பாயுங்கங்கை செஞ்சடை
ஆரநீரொடேந்தினனானைக்காவு சேர்மினே. 7

பொன்னமல்கு தாமரைப் போது தாது வண்டினம்
அன்னமல்கு தண்டுறை யானைக்காவிலண்ணலைப்
பன்ன வல்ல நான் மறை பாடவல்லதன்மையோர்
முன்னவல்லர் மொய் கழறுன்னவல்லர்விண்ணையே. 8

ஊனொடுண்டனன் றென வூனொடுண்டதீதென
ஆனதொண்டரன் பினாற் பேசநின்றதன்மையான்
வானொடொன்று சூடினான் வாய்மையாக மன்னி நின்
றானொடஞ்சு மாடினா னானைக்காவு சேர்மினே. 9

கையிலுண் ணுங்கை யருங்கடுக்கடின் கழுக்களும்
மெய்யைப் போர்க்கும் பொய்யரும் வேத நெறியை யறிகிலார்
தையல் பாகமாயினான் றழலதுருவத் தானெங்கள்
ஐயன் மேய பொய்கை சூழானைக்காவு சேர்மினே. 10

ஊழி யூழி வையகத்துயிர்கடோற்றும் வானொடும்
ஆழியானுங் காண்கிலா வானைக் காவிலண்ணலைக்
காழி ஞான ஸம்பந்தன் கருதிச் சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினை கண் மாயுமே. 11

திருக்கயிலாயமுந் திருவானைக்காவுந் திருமயேந்திரமுந் திருவாரூருங் கூடச் சதுக்கம்.

மண்ணதுவுண்டரி மலரோன் காணா, வெண்ணாவல் விரும்பு மயேந்திரும்
கண்ணது வோங்கியரி கயிலையாரும், அண்ணலாரூராதி யானைக்காவே. 1

வந்து மாலயனவர் காண்பரியார், வெந்த வெண்ணீரணி மயேந்திரும்
கந்தவார் சடையுடைக் கயிலையாரும், அந்தணாரூராதி யானைக்காவே. 2

மாலயன் றேடியம யேந்திரும் காலனையுயிர் கொண்ட கயிலையாரும்
வேலைய தோங்கும் வெண்ணாவலாரும், ஆலையாரூராதி யானைக்காவே. 3

கருடனை யேறரியய னோர் காணார், வெருள்விடையேறியமயேந்திரும்
கருடரு கண்டத் தெங்கயிலையாரும், அருளனாரூ ராதியானைக்காவே. 4

மதுசூதனனான் முகன் வணங்கரியார், மதியதுசொல்லிய மயேந்திரும்
கதிர் முலைபுல்கிய கயிலையாரும், அதியனா ரூராதியானைக்காவே. 5

சக்கரம் வேண்டுமால் பிரமன்காணா, மிக்கவர்கயிலை மயேந்திரும்
தக்கனைத்த லையரிதழலுருவ ரக்கணியவாரூராதி யானைக்காவே. 6

கண்ணனு நான்முகன் காண்பரியார், வெண்ணாவல் விரும்பு மயேந்திரும்
கண்ணப்பர்க்கருள் செய்த கயிலை யெங்கள், அண்ணலாரூராதி யானைக்காவே. 7

கடல் வண்ண னான்முகன் காண்பரியார், தடவரை யாக்கனைத் தலை நெரித்தார்
விட மதுவுண்ட வெம் மயேந்திரும், அடல் விடையாரூராதியானைக்காவே. 8

ஆதி மாலயனவர் காண்பரியார், வேதங்கடுதி செயு மயேந்திரும்
காதிலோர் குழையுடைக் கயிலையாரும், ஆதியாரூரெந்தை யானைக்காவே. 9

அறிவில மண் புத்தரறிவு கொள்ளேல், வெறிய மான் கரத்தாரூர் மயேந்திரும்
மறி கடலோனயன் றேடத்தானும், அறிவறிய கயிலையோனானைக்காவே. 10

என மாலயனவர் காண்பரியார், கானமார் கயிலை நன் மயேந்திரும்
ஆனமாரூராதி யானைக்காவை, ஞான சம்பந்தன் றமிழ் சொல்லுமே. 11

அப்பர் என்கிற திருநாவுக்கரசு சுவாமிகளருளிச் செய்தது:—

ஆறாந் திருமுறை—திருத்தாண்டகம்.

முன்னானைத்தோல்போர்த்த மூர்த்திதன்னை மூவாதசிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி யேறினானைச் சார்தற்கரியானை தாதைதன்னை
யென்னானைக் கன்றினையென் னீசன்றன்னை யெறிநீர்த் திரையுகளுங் காவிரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச் செழுநீர்த் திரளைச்சென்றாடினேனே. 1

மருந்தானை மந்திரிப்பார் மனத்துளானை வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தென்னுள்ளத்
திருந்தானை யிறப்பிலியைப் பிறப்பிலானை யிமையவர்தம் பெருமானை யுமையாளஞ்சக்
கருந்தான மதகளிற்றி னுரிபோர்த்தானைக்கனமழுவாட்படையானைப் பலிகொண்டூர்
திரிந்தானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 2

முற்றாத வெண்டிங்கட் கண்ணியானை முந்நீர்நஞ்சுண்டிமையோர்க்கமுதநல்கு
முற்றானைப் பல்லுயிர்க்குந் துணையானானை யோங்காரத் துட்பொருளை யுலகமெல்லாம்
பெற்றானைப் பின்னிரக்கஞ் செய்வான்றன்னைப் பிரானென்றுபோற்றாதார் புரங்கண்மூன்றுஞ்
செற்றானைத்திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே. 3

காராரு மணிமிடற்றெம் பெருமான்றன்னைக் காதில்வெண்குழையானைக்கமழ் பூங்கொன்றைத்
தாரானைப் புலியதளி னுடையானைத் தானன்றி வேறொன்று மில்லாஞானப்
பேரானைமணியார மார்பினானைப் பிஞ்ஞகனைத் தெய்வநான் மறைகள் பூண்ட
தேரானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த் திரளைச்சென் றாடினேனே. 4

பொய்யேதுமில்லாத மெய்யன்றன்னைப் புண்ணியனை நண்ணாதார் புரநீறாக
எய்தானைச்செய்தவத்தின்மிக்கான்றன்னை யேறமரும் பெருமானையிடமானேந்துங்
கையானைக்கங்காளவேடத்தானைக் கட்டங்கக்கொடியானைக்கனல்போன்மேனிச்
செய்யானைத் திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே. 5

கலையானைப்பாசுபதபாணியானைக்கனவயிரத்திரளானைமணிமாணிக்க
மலையானையென்றலையினுச்சியானைவார்தருபுன்சடையானைமயானமன்னு
நிலையானைவரியரவுநாணாக்கோத்துநினையாதார்புரமெரியவளைத்தமேருச்
சிலையானைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 6

ஆதியனையெறிமணியினோசையானையண்டத்தார்க்கறிவொண்ணாதப்பாண்மிக்க
சோதியனைத் தூமறையின்பொருளான்றன்னைச் சுரும்பமருமலர்க்கொன்றைத் தொன்னூல்
பூண்ட
வேதியனை யறமுரைத்த பட்டன்றன்னை விளங்குமலரயன்சிரங்களைந்திலொன்றைச்
சேதியனைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 7

மகிழ்ந்தானைக் கச்சியேகம்பன்றன்னை மறவாதுகழனினைந்து வாழ்த்தியேத்திப்
புகழ்ந்தாரைப்பொன்னுலகம் ஆள்விப்பானைப்பூதகணப் படையானைப்புறங்காட்டாட
லுகந்தானைப்பிச்சையேயிச்சிப்பானை யொண்பவளத்திரளையென்னுள்ளத்துள்ளே
திகழ்ந்தானைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 8

நசையானைநால்வேதத்தப்பாலானை நல்குரவுந்தீப்பிணிநோய்காப்பான்றன்னை
யிசையானையெண்ணிறந்தகுணத்தான்றன்னை யிடைமருதுமீங்கோயுநீங்காதேற்றின்
மிசையானைவிரிகடலுமண்ணும்விண்ணுமிகுதீயும்புனலெறிகாற்றாகியெட்டு
திசையானைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 9

பார்த்தானைக்காமனுடல்பொடியாய்வீழப் பண்டயன்மாலிருவர்க்குமறியாவண்ணஞ்
சீர்த்தானைச்செந்தழல்போலுருவினானைத் தேவர்கடம்பெருமானைத்திறமுனாதே
யார்த்தோடிமலையெடுத்தவிலங்கைவேந்த னாண்மையெலாங்கெடுத்தவன்றனிடரப்போதே
தீர்த்தானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 1

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது:—

ஏழாந்திருமுறை —பண்— காந்தாரம்.

மறைகளாயினநான்குமற்றுளபொருள்களுமெல்லாந்
துறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுநன்மையுமாய
வறையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிறைவனென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. 1

வங்கமேவியவேலைநஞ்செழவஞ்சர்கள்கூடித்
தங்கண்மேலடராமையுண்ணெனவுண்டிருள்கண்ட
னங்கமோதியவானைக்காவுடையாதியைநாளு
மெங்களீசனென்பார்களெம்மையுமாளுடையாரே. 2

நீலவண்டறைகொன்றைநேரிழைமங்கையோர்திங்கள்
சாலவாளரவங்கடங்கியசெஞ்சடையெந்தை
யாலநீழலுளானைக்காவுடையாதியை நாளும்
ஏலுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே. 3

தந்தையாயுலகுக்கோர்தத்துவன்மெய்த்தவத்தோர்க்குப்
பந்தமாயினபெருமான்பரிசுடையவர்திருவடிக
ளந்தண்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மெந்தையென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. 4

கணைசெந்தீயரவந்நாண்கல்வளையுஞ்சிலையாகத்
துணைசெய்மும்மதின்மூன்றுஞ்சுட்டவனேயுலகுய்ய
வணையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிணைகொள்சேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. 5

விண்ணின் மாமதிசூடிவிலையிலிகலனணிவிமலன்
பண்ணினேர்மொழிமங்கைபங்கினன்பசுவுகந்தேறி
யண்ணலாகியவானைக்காவுடையாதியைநாளு
மெண்ணுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே. 6

தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுத்து
நீரினின்றடிபோற்றிநின்மலகொள்ளெனவாங்கே
யாரங்கொண்டவெம்மானைக்காவுடையாதியைநாளு
மீரமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே. 7

உரவமுள்ளதோருழையின்னுரிபுலியதளுடையானை
விரைகொள்கொன்றையினானைவிரிசடைமேற்பிறையானை
யரவம்வீக்கியவானைக்காவுடையாதியைநாளு
மிரவுமெல்லியும்பகலுமேத்துவரெம்மையுமாளுடையாரே. 8

வலங்கொள்வாரவர்தங்கள்வல்வினை தீர்க்குமருந்து
கலங்கக்காலனைக்காலாற்காமனைக் கண்சிவப்பானை
யலங்கனீர்பெருமானைக்காவுடையாதியையாளு
மிலங்குசேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. 9


ஆழியாற்கருளானைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணாகநின்றருள்கூரநினைந்து
வாழவல்லவன்றொண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போ
யேழுமாபிறப்பற்றுவெம்மையுமாளுடையாரே. 10

தாயுமானவர் பாடியது:—

வடமிட்டொளிர் பிராணவாயுவெனு நிகளமோடு கமனஞ்செயு
மனமெனும்பெரிய மத்தயானையையென் வசமடக்கிடின் முமண்டலத்
திட்டமுற்றவளராஜ யோகமிவண் யோக மென்றறிஞர் புகழவே
யேழை யேனுலகினீடுவாழ்வன்; இனி யங்கிதற்கு மனு மானமோ?

பட்டவர்த்தனர் பராவு சக்ரதர பாக்யமான சுகயோகமும்,
பாரகாவிய கவித்வநான்மறை பாராயணஞ் செய்மதியூகமு,
மட்டசித்தியு நலன்பருக்கருள விருது கட்டிய பொனன்னமே!
அண்டகோடி புகழ் காவை வாழுமகி லாண்டநாயகி யெனம்மையே!





திருவானைக்காவல் ஆடிப்பூர தெப்போத்ஸவம் நடக்கும் குளம்.

அப்பர்சுவாமிகள் பாடியது:—

ஆறாம்திருமுறை—திருத்தாண்டகம்.

எத்தாயரெத்தந்தையெச்சுற்றத்தா ரெம்மாடு சும்மாடாமேவர்நல்லார்
செத்தால்வந்துதவுவாரொருவரில்லைச்சிறுவிறகாற் றீமூட்டிச்செல்லாநிற்பர்
சித்தாயவேடத்தாய் நீடுபொன்னித் திருவானைக்காவுடைய செல்வாவென்ற
னத்தாவுன்பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங் கொண்டடியேனென்செய்கேனே. 1

ஊனாகியுயிராகியதனுணின்றவுணர்வாகிப் பிறவனைத்துநீயாய்நின்றாய்
நானேதுமறியாமேயென்னுள்வந்துநல்லனவுந்தீயனவுங்காட்டாநின்றாய்
தேனாருங் கொன்றையனேநின்றியூராய் திருவானைக்காவிலுறை சிவனேஞான
மானாயுன் பொற்பாதமடையப் பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென் செய்கேனே. 2

ஒப்பாயிவ்வுலகத்தோடொட்டிவாழ்வா னொன்றலாத்தவத்தாரோடுடனேநின்று
துப்பாருங்குறையடிசிறுற்றினத்துன்றிறமறந்து திரிவேனைக்காத்துநீவந்
தெப்பாலுநுண்ணுணர்வேயாக்கி யென்னையாண்டவனேயெழிலானைக்காவாவானோ
ரப்பாவுன்பொற்பாதமடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. 3

நினைத்தவர்க ணெஞ்சுளாய்வஞ்சக்கள்வாநிறைமதியஞ் சடைவைத்தாயடையாதுன்பான்
முனைத்தவர்கள்புரமூன்றுமெரியச்செற்றாய் முன்னானைத்தோல்போர்த்தமுதல்வாவென்றுங்
கனைத்துவருமெருதேறுங் காளகண்டாகயிலாயமலையாநின்கழலேசேர்ந்தே
னனைத்துலகும் ஆள்வானேயானைக்காவா லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. 4

இம்மாயப்பிறப்பென்னுங் கடலாந்துன்பத் திடைச்சுழிப்பட்டிளைப்பேனை யிளையாவண்ணங்
கைம்மாள மனத்துதவிக் கருணைசெய்து காதலருளவைவைத்தாய் காணநில்லாய்
வெம்மானமதகரியி னுரிவைபோர்த்த வேதியனே தென்னானைக் காவுண்மேய
வம்மானின் பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. 5


உரையாரும் புகழானே யொற்றியூரா கச்சியேகம்பனே காரோணத்தாய்
விரையாருமலர்தூவி வணங்குவார்பான் மிக்கானேயக்கரவ மாரம்பூண்டாய்
திரையாரும் புனர்பொன்னித் தீர்த்தமல்கு திருவானைக் காவிலுறைதேனேவானோ
ரரையாவுன் பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. 6

மையாரு மணிமிடற்றாய் மாதோர்கூறாய் மான்மறியு மாமழுவு மனலுமேந்துங்
கையானே காலனுடல் மாளச்செற்ற கங்காளாமுன்கோளும் விளைவுமானாய்
செய்யானே திருமேனி யரியாய்தேவர் குலக்கொழுந்தே தென்னானைக் காவுண்மேய
வையாவுன் பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. 7

இலையாருஞ் சூலத்தா யெண்டோளானே யெவ்விடத்து நீயலா தில்லை யென்று
தலையாரக்கும்பிடுவார் தன்மையானே தழன்மடுத்தமாமேருக்கையில்வைத்த
சிலையானே திருவானைக் காவுண்மேய தீயாடீசிறுநோயால் நலிவுண்டுள்ள
மலையாதே நின்னடியே யடையப்பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 8

விண்ணாரும் புனல்பொதி செஞ்சடையாய்வேத நெறியானே யெறிகடலினஞ்சமுண்டா
யெண்ணாரும் புகழானே யுன்னையெம்மானென்றென்றேநாவினிலெப் பொழுதுமுன்னிக்
கண்ணாரக் கண்டிருக்கக் களித்தெப்போதுங்கடிபொழில்சூழ் தென்னானைக் காவுண்மேய
வண்ணாநின்பொற்பாதமடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. 9

கொடியேயும் வெள்ளேற்றாய் கூளிபாடக் குறட்பூதங் கூத்தாட நீயுமாடி
வடிவேயுமங்கைதனை வைத்தமைந்தா மதிலானைக்காவுளாய் மாகாளத் தாய்
படியேயுங் கடலிலங்கைக் கோமான்றன்னைப் பருமுடியுந் திரடோளுமடர்த்துகந்த
வடியேவந் தடைந்தடிமை யாகப்பெற்றா லல்லகண்டங் கொண்டடியேனென்செய்கேனே. 10




திருச்சிராப்பள்ளி மலையின்மேலிருக்கும் உச்சிப்பிள்ளையார் கோயில்.

திரிச்சிராப்பள்ளி.

ஒரு ஸமயம் வாயுபகவானுக்கும் ஆதிசேஷனுக்கும் மேரு மலையில் உண்டான சண்டையில் அப்பொழுது அவ்விட மிருந்து வெளியாகிய மேருவின் மூன்று சிகரங்களுள் ஒன்று "தக்ஷிண கைலாஸம்" என்ற திருச்சிராப்பள்ளியில் விழுந்தது. இவ்வூர் சென்னையிலிருந்து தனுஷ்கோடி போகும் தென் இந்தியா இருப்புப் பாதையில் உள்ளது.

"திரிசிரன்" என்ற மூன்று தலை வாய்ந்த அசுரன் ஒருவன் இங்கு ஈசுவரனைத் துதித்துத் தான் கோரிய வரமெல்லாம் பெற்றதனால் இத்தலத்திற்கு இப்பெயர் வந்ததெனக் கூறுகிறார்கள். இவ்வூருக்குச்சிலாலிகிதங்களில் சிற்றம்பர் என்றும், இந்நாட்டிற்குப் பத்து, பதினொன்றாவது நூற்றாண்டுகளில் சோழதேசத்தை அக்காலத்தில் வெகு கியாதியுடன் ஆண்டுவந்த முதலாவது ராஜராஜன் பட்டப்பெயர்களைக்கொண்டு பாண்டிகுலாசனி நாடு, தென்கரை கோளாந்தகவளநாடு என்றும் அதன் பின்னர் ராஜகம்பீரவள நாடு என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன.




திருச்சிராப்பள்ளி மலை முன்பக்கம். 100 வருஷங்களுக்கு முன் எடுத்த படம்.

வரகுணபாண்டிய மன்னனாகிய மாறஞ்சடையன் மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் பிரவேசித்த காலத்தில் இவ்வூரில் தனது பெயரால் ஒரு தடாகத்தை 'வரகுணனேரி' என்று வெட்டிவைத்தனராம். அது பின்னர் வரகனேரி என்று பெயர் வழங்கலாயிற்று. தற்காலம் அது தூர்க்கப்பட்டு இந்நகரின் ஒரு பாகமாகிய பேட்டையாய் அமைந்திருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

பதினாறும் நூற்றாண்டில் முகம்மதியர்கள் கலகம் அதிகப்பட மலைக்கோயிலை பந்தோபஸ்து செய்ய அப்பொழுது இவ்வூர் விஜயநகர சம்ஸ்தானப்பிரதிநிதியாக ஆண்டுவந்த விசுவநாதநாயகர்கள் சுவர் எடுப்பித்தனர். மலையடியிலும் இரட்டைச்சுவர்களால் மதில்கள் ஒன்றுக்கொன்று முப்பகஜ தூரத்தில் கட்டிவைத்தனர். வெளிமதிலைச்சுற்றி அகழியும் ஏற்படுத்தி அதற்கு நீர் பாயக்காவேரியிலிருந்து பூமிக்



திருச்சிராப்பள்ளி மலையின்மேலேறும் வாசற்படி. சென்னை கவர்னர் பென்ட்லண்டு பிரபுவும் அவர் சீமாட்டியும் நிற்கிறார்கள்.




திருச்சிராப்பள்ளி தெப்பக்குளமும் அதன் தென்கரையிலுள்ள எஸ். பி. ஜி. காலேஜும்.

குள்ளாகக் கால்வாயும் வெட்டி வைத்தனர். தற்காலம் அழகுடன் விளங்கும் தெப்பக்குளமும் அவரது காலத்தில் உண்டானதுதான்.


அப்பு ஸ்தலமான திருவானைக்காவும், பெயர் பெற்ற விஷ்ணுஸ்தலமான ஸ்ரீரங்கமும் இதனை அடுத்துத்தான் இருக்கின்றன.

மலையின் பெருமை.

இங்குள்ள உன்னதமான பாறை இவ்வூரில் எங்கிருந்து பார்த்தாலும் நன்கு தெரியக்கூடியது. இப்பாறை மேற்கண்ட விவரப்படி கைலாய கிரியின் ஓர் பாகமே என்பது அனேகர் அபிப்பிராயம். இவ்வூரின் வழியாக ஓடும் காவேரி நதியினருகில் நின்று பார்த்தால் இப்பாறை மிகவும் நன்றாகத் தெரியும். இம்மலையிலுள்ள மூர்த்தியை பிரம்மா, இந்திரன், நாககன்னியர், ஸ்ரீராமர், ஹனுமான் முதலியோர் பூஜித்திருக்கிறார்களாம். ஹனுமார் பூஜித்த குறி இன்னும் காணப்படுகிறது.



திருச்சிராப்பள்ளி மலை முழுமையும் மின்னல் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் ராத்திரி ஸமயத்தில் நமது சிற்பியால் வரையப்பட்டது.



திருச்சிராப்பள்ளி மலையின் பின்பக்கமும் தெப்பக்குளமும்.


சுவாமி மேற்கு பார்த்திருப்பதின் காரணம்.

இந்த ஊர்ப் பக்கத்திலிருக்கும் உறையூர் சோழ ராஜாக்களுக்கு ராஜதானியாக இருந்ததென்பது மாத்திரமேயல்லாமல், மதுரை நாயக்க அரசர்களும் கூட இப்பாறைக் கருகில் தங்களது அரண்மனையை ஏற்படுத்திக் கொண்டு இவ்வூரை ராஜதானியாகக் கொண்டிருந்தார்களாம்.

சாரமாரிஷி பாதாளத்திலிருந்து கொண்டு வந்து பயிர்செய்த செவ்வந்திப்புஷ்பத்தை உறையூரிலிருந்த பராந்தகச் சோழராஜன் தன் தேவிக்குக் கொடுத்தான். மகரிஷி தடுத்தும் கேளாமல் கர்வத்தினால் ஈசுவரனுக்கு அர்ப்பணஞ் செய்யவேண்டிய புஷ்பத்தை அரசன் பட்டமகிஷிக்குக் கொடுத்தான். ஈசுவரன் கோபமடைந்து மேற்கு முகம் திரும்பி அவ்வரசனது ராஜதானியாகிய உறையூரை மண்மாரி பெய்வித்து அழித்து விட்டாராம். ஆனாலும் நந்திகேசுவரர் முதலிய மற்றைய பரிவார தேவதைகள் கிழக்கு பார்த்தபடியே இருந்து வருகிறார்கள்.

ஈசுவரன் மருத்துவஞ் செய்த அத்புதம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாஸம் செய்த ரத்தினகுப்தன் என்பவன் புத்திரப்பேறு




திருச்சினுப்பள்ளி மலையின் பின்பக்கமும் தெப்பக்குளமும். (மற்ருெரு காக்ஷி)

வேண்டித் தவம் செய்ய அவனுக்கு ஒரு பெண் உண்டாக அக் குழந்தையைத் திரிசிரபுர தனகுப்தன் என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்தான். அப்பெண் வெகு பக்தியுடன் பிரதி வெள்ளிக்கிழமையும் சிவபிரானைத் தரிசனம் செய்து வந்தாள். தகப்பன் இறந்தபிறகு அந்தப் பெண் கர்ப்பவதியானுள். பிரசவகாலத்திற்கு அவள் தாய் பிரசவ மருந்துகளுடன் வந்து காவேரி வெள்ளத்தினுல் ஆற்றைத் தாண்ட முடியாமல் தயங்கினுள். அந்த ஸமயம் கர்ப்பவதியாகிய பெண்ணைக் காப்பாற்ற ஈசுவான் அவள் தாய் உருவத்துடன் வந்து மருத்துவம் பார்த்துவரக் காவிரிப்பிரவாஹம் வடிந்ததும் தாயாரும் வந்து சேர்ந்தாள். அந்த ஸமயம் இருவரில் எவர் தன் தாயாரென்று அறிந்து கொள்ள அந்தப் பெண் யத்தனிக்கையில் மாறு வடிவம் கொண்டிருந்த ஈசுவான் மறைந்து விட்டார். அது முதல் சுவாமிக்குத் "தாயுமானவர்" என்று பெயருண்டாயிற்று.

உச்சிப்பிள்ளையார்.

இம்மலையின்பேரில் தனி சந்நிதியுடன் விளங்கும் பிள்ளையாருக்கு 'உச்சிப்பிள்ளையார்' என்று பெயர். ஆதிகாலம் முதல் ஏற்பட்டதற்கு ஒரு கதை உளது. அதாவது ஸ்ரீராம பட்டாபிஷேக மகோத்ஸவகாலத்தில் தமக்கு இராவண யுத்தத்தில் உதவிபுரிந்தவர்களுக்கு பரிசளித்த காலத்தில் ஸ்ரீராமர் விபீஷணருக்கு தம்முடைய குலதெய்வமாகிய ஸ்ரீரெங்கநாத விக்கிரஹத்தைக்கொடுத்தனர். அதை அவர் எடுத்து தமது தேசம் திருப்புகையில் காவிரியின் நடுவில் வந்து தங்கினதும் அதை ஒருவரிடம் கொடுத்து தமது தேக சுத்தியை செய்துகொள்ள விரும்பினவர் அந்த ஸமயத்தில் ஒரு பிரம்மசாரியைக்கண்டார். உடனே




திருச்சிராப்பள்ளி மலையில் உள்ள குகை.

அந்த விக்ரஹத்தை இந்த பிரம்மசாரியிடம் கொடுத்து தான் தனது அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு திரும்பும் வரையில் வைத்திருக்கவேண்டி அந்தப்படி வைத்துக்கொள்ள சம்மதித்தாலும் தான் மூன்று தடவை கூப்பிடுவதற்குள் விபீஷணர் வந்து அதை வாங்கிக் கொள்ளாவிட்டால் பூமியில் வைத்துவிட்டுப் போய்விடுவதாகச் சொன்னார். சரீரசுத்தி செய்துகொண்டு விபீஷணர் திரும்புமுன்னர் மூன்று தடவை கூப்பிட்டும் அவர் வராததால் அந்த பிரம்மசாரி அந்த விக்ரஹத்தை அவ்விடம அதாவது இப்பொழுது ஸ்ரீரங்கம் கோயிலாயிருக்குமிடத்தில் வைத்துவிட்டு இந்த பிரம்மசாரி போய்விட்டார். இப்படிப்போய் இவர் திருச்சிராப்பள்ளி மலையின் மீது ஏறும் சமயத்தில் விபீஷணர் இந்தபிரம்மசாரியை தண்டிப்பதற்காக ஓடி வந்து அவர் தலையிற் குட்டினர். இப்படிச்செய்ததும் இந்த பிரம்மசாரி தமது நிஜரூபமாகிய விநாய




மலைமேலிருந்து மேற்குப் பக்கமாக உள்ள திருச்சிராப் பள்ளியின் காக்ஷி.



திருச்சிராப்பள்ளி மலையில் உள்ள மற்றொரு குகை.

கர் உருவத்தைக் காட்டினார். இப்படி விநாயகர் மாறுவேடம் பூண்டு ஸ்ரீரங்கநாதர் விக்கிரஹத்தை ஸ்ரீரங்கத்தில் நிலைநாட்டினது பகவானின் ஆக்ஞைப்படி சோழதேசத்திலே பக்தர்களின் வேண்டுகோளுக்காக அவர்களுக்கு தர்சனம்கொடுக்க வேண்டியே. இப்பொழுதும் இந்த உச்சிப் பிள்ளையாருக்கு விபிஷணார் குட்டிய அடையாளமாக தலையில் பள்ளமிருக்கிறது.



திருச்சிராப்பள்ளியில் யாத்திரிகர்கள் வந்தால் தங்குவதற்காக சின்னையாபிள்ளையால் கட்டப்பட்டிருக்கும் சத்திரம்.

தாயுமான சுவாமி சரித்திரம்.


தாயுமானவர் சோழ தேசத்திலுள்ள திருமறைக்காடெனப்படும் வேதாரண்யத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவரது தகப்பனாராகிய கேடிலியப்ப பிள்ளை திருச்சிராப்பள்ளியில் விஜயநகர ராஜாங்கத்தாரின் பிரதிநிதியாகிய சொக்கநாத நாயக்கரிடம மந்திரியாக இருந்தார். தமது மோட்சத்தைக் கருதி அவ்விடம்




திரிச்சிராப்பள்ளி மலையிலுள்ள குகையிலிருக்கும் சிலாவிக்கிரகங்கள்.

மலையிலுள்ள தாயுமானவரைப் பிரார்த்தித்ததன் காரணமாக பிறந்த இக்குழந்தைக்கு அந்த ஈசுவரன் பெயரையிட்டார். காலாகாலத்தில் வித்தியாரம்பம் செய்விக்கப்பட்ட இவர் எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவரானார். இவரது தகப்பனார் காலமானதும் ராஜாவின் ஆக்ஞைப்படி தமது தகப்பனார் ஸ்தானத்தை வகித்தார். இவ்வாறு லௌகிகமுறையிலிருந்த போதிலும் தெய்வபக்திமிகுதியால் பல க்ஷேத்திரங்கள் சென்று கடைசியாகச் சிதம்பரம் போய்த் திருச்சினாப்பள்ளிக்குத் திரும்பினார்.

இப்படித் திரும்பிவந்து மலையில் சென்று தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் நிஷ்டையிலிருக்கையில் பகவான் அனுக்கிரகம் பெற்றார். ஆனாலும் பகவான் ஆக்ஞைப்படி சிலகாலம் மந்திரி உத்தியோகத்தை நடத்தி ராஜாவுக்கும் உபதேசம் செய்தார். ராஜா காலமானதும் ராஜபத்னி இவரது திவ்ய சரீரத்தைப்பார்த்து மோஹித்துத் தனக்குப் புத்திரன் இல்லாமையால்




திருவானைக்காவலிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குப் போகும் வழியிலுள்ள காவேரிப்பாலம்.



திருச்சிராப்பள்ளி மலையும் அதற்குமேல் பக்கமிருக்கும் வீடுகளும் தெப்பக்குளமும்.

இவரையே தனது ராஜ்யத்திற்கு அதிபதியாக்க எண்ணங்கொண்டாள். இதை அறிந்த இவர் அவளுக்கு சன்மார்க்கத்தைப் போதித்து அதன் பிறகு அங்கு தங்குவது தனது பெருமைக்குக் குறைவென்று தீர்மானித்துத்தேவையப்பதி சென்றார். அந்த ஸமயம் இவரது பந்துக்கள் இவரைக் கலியாணம் செய்து கொள்ள வேண்ட தமது ஜன்ம பூமியாகிய வேதாரண்யத்திலுள்ள ஒரு கன்னிகையை மணந்து ஒரு ஆண் குழந்தையைப் பெற்றார். பின்னர் சில காலத்திற்கெல்லாம் குடும்பத்தை விட்டு விலகி மோக்ஷம



திருச்சிராப்பள்ளி மலை. ராத்திரி காலத்தில் தீபங்களால் அலங்காரமும் வாணவேடிக்கையும்.

டைய வெண்டித் திருவாரூர், திருவண்ணாமலை, காஞ்சீபுரம் முதலிய ஸ்தலங்கள் சென்று திருப்பரங்குன்றம் மார்க்கம் ராமேசுவரம் போனார். அவ்விடத்தில் அந்த ஸமயம் மழை யில்லாமல் படும் கஷ்டத்தை ஸகிக்கமுடியாமல் பதிகம் பாடி மழை பெய்யச் செய்தார்.

இவரது அருமையான பாடல்களைப் படியாத தமிழர் கிடையாது. இவர் காலம் அநேகமாய்த் திருச்சிராப்பள்ளியில் சென்றதினாலும், இவருக்கு அவ்வூர் மூர்த்தியின் பெயரிடப்பட்டு அவராலேயே உபதேசம் செய்யப்பட்டதாலும் அவ்வூருக்கு இவராலும் ஒரு பெருமை ஏற்பட்டிருக்கிறது.

சிலாசாஸனம்.

பாறைக் குகைக்கு வெளியில் உள்ள கல்தூண் ஒன்றில் "சித்திரை உத்ஸவம்" ஒன்பது நாட்களிலும் பிராமணர்களுக்கு அன்னமளிக்க ஐந்து களஞ்சு தரிசு நிலம் பயிர் செய்யும் பாத்தியதையை அளித்து ஒருவருக்குச் சோழராஜா ராஜராஜகேஸரி வர்மன் கிரயம் செய்து கொடுத்த விஷயம் வரையப்பட்டுள்ளது. இங்குள்ள பாறையின் மீதுள்ள ஓர் குகையின் இடது பக்கத்துதூண் ஒன்றில் பல்லவ அரசன் முதலாவது மஹேந்திரவர்மன் மலையின் மீது கோயிலைக் கட்டி லிங்கப் பிரதிஷ்டை செய்வித்த விஷயம் கூறப்பட்டுள்ளது.

இம் மஹேந்திரவர்ம மஹாராஜா ஏழாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் காஞ்சீபுரத்தில் அரசு செலுத்தியவர். முதல் முதலில் இவர்தான் மலையைக் குடைந்து குகைக் கோயில்களை நிர்மாணம் செய்யும் பெருமையைப் பெற்றவர். சுண்ணாம்பு, கல் முதலியவைகளால் கட்டப்பட்ட கோயில்கள் வெகுகாலம் நீடித்திராததினால், நிலையாக மலையிலேயே குகை குடைந்து கோயிலை உற்பத்தி செய்தார். இப்படிச் செய்த விவரம் விழுப்புரம் ஸமீபத்திலுள்ள மண்டகப்பட்டு என்னுமிடத்தில் சிலாசாஸனத்தில் வெட்டியிருக்கிறது.

இவர் தான் இம்மலையிலுள்ள குகையில் தான் லிங்கப் பிரதிஷ்டை செய்த விவரத்தையும் சோழ தேசத்திலுள்ள காவேரி நதியின் பெருமையையும் கல் வெட்டில் தெரிவித்திருக்கிறார்.

தேவாரப் பாடல்கள்.

திருஞானஸம்பந்தர் பாடியது:—

முதல் திருமுறை—பண்—குறிஞ்சி.

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே. 1

கைம்மகவேந்திக் கடுவனோடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே. 2

மந்தம்முழவம் மழலைததும்ப வரைநீழல்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம்மடிக ளடியார்க்கல்ல லில்லையே. 3

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே. 4

கொலைவரையாத கொள்கையர்தங்கண் மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரைநாளுந் தலைவரல்லாமை யுரைப்பீர்காள்
நிலவரைநீல முண்டதும்வெள்ளை நிறமாமே. 5

வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேவிய செல்வனார்
தையலோர்பாக மகிழ்வர்நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங்கொள்வ ராரிவர்செய்கை யறிவாரே. 6

வேயுயர்சாரற் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேவிய செல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்தாட றிருக்குறிப்பாயிற் றாகாதே. 7

மலைமல்குதோளான் வலிகெடவூன்றி மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவலவேதஞ் சொல்வலகீதஞ் சொல்லுங்கால்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே. 8

அரப்பள்ளியானு மலருறைவானு மறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீரும்மை யேதிலர்கண்டாலிகழாரே. 9

நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி நாட்காலே
ஊணாப்பகலுண் டோதுவோர்களு முரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமெம்பீரெம் பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே. 10

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்த னலமிகுபாட லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே. 11

அப்பர்சுவாமிகள் பாடியது:—

ஐந்தாம் திருமுறை—திருக்குறுந்தொகை.

மட்டுவார்குழலாளொடுமால்விடை, இட்டமாவுகந்தேறுமிறைவனார்
கட்டுநீத்தவர்க்கின்னருளேசெயும், சிட்டர்போலுஞ்சிராப்பள்ளிச்செல்வரே. 1

அரியயன்றலைவெட்டிவட்டாடினார், அரியயன்றொழுதேத்துமரும்பொருள்
பெரியவன்சிராப்பள்ளியைப்பேணுவார், அரியயன்றொழவிருப்பார்களே. 2

அரிச்சிராப்பகலைவராலாட்டுண்டு, சுரிசிராதநெஞ்சேயொன்றசொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளியென்றலுந்தீவினை, நரிச்சிராதுநடக்குநடக்குமே. 3


தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப், பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய, நாயனாரெனநம்வினைநாசமே. 4

தாயுமானவர் பாடியது:—


தந்தை தாயுநீ யெனதுயிர்த்துணையுநீ சஞ்சலமது தீர்க்க
வந்ததே சிகவடிவுநீ யுனையலால் மற்றொரு துணை காணேன்
அந்தமாதியு மளப்பருஞ் சோதியே ஆதியே யடியார்தம்
சிந்தைமேவிய தாயுமா னவனென்னும் சிரகிரிப் பெருமானே.

எடுத்த தேகம் பொருளாவி மூன்று நீ யெனக்கொன் றில்லையென மோனநன்னெறி
கொடுத்தபோது கொடுத்தன்றோ பினும் குளறிநானென்று கூத்தாட மாயையை
விடுத்தவாறுங்கண் ணீரொடு கம்பலை விலகுமாறுமென் வேட்கை ப்ரவாகத்தைத்
தடுத்தவாறும் புகலாய் சிரகிரித் தாயுமான தயாபரமூர்த்தியே.

நோயும் வெங்கலிப் பேயுந் தொடரநின் நூலிற்சொன்ன முறையிய மாதிநான்
தோயும் வண்ண மெனக்காக்குங் காவலும் தொழும்புகொள்ளுஞ் சுவாமியு நீ கண்டாய்
ஓயுஞ்சன்ம மினியஞ்சலஞ் சலென்று உலகங்கண்டு தொழவோருருவிலே
தாயுந்தந்தையு மானேய் சிரகிரித் தாயுமான தயாபர மூர்த்தியே.



திரிசிரபுரம் மலை தீபங்களால் அலங்கரிக்கப்பட்டது.



உய்யக்கொண்டான் திருமலையிலிருக்கும் உஜ்ஜீவனநாதசுவாமிகோவில்.

உய்யக்கொண்டான் திருமலை

(கற்குடி)

உய்யக்கொண்டான் திருமலை எனப்படும் க்ஷேத்திரம் தேவாரகாலத்தில் "திருக்கற்குடி" என வழங்கி வந்தது. இது திருச்சிராப்பள்ளிக்குத் தென் மேற்கில் மூன்று மைல் தூரத்திலுள்ளது. கோயில் ஒரு சிறிய மலையின் மேல் குடமுருட்டி ஆற்றின் மேற்கிலுள்ளது.

ஈழநாட்டரசன் பூஜித்தது.

இலங்கை மன்னன் ஒருவன் உச்சிகாலத்தில் வந்து இவ்விடமுள்ள மூலலிங்கத்தை பூஜித்து தனது மனோபீஷ்டங்களை அடையப் பெற்றனன். இதன் விவரம் அடியில் கண்ட பாடலால் விளங்கி வரும்.

"செய்யார் மேனியனே திருநீலமிடற்றினனே
மையார் கண்ணி பங்கா மதயானை யுரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்கற்குடி மன்னி நின்ற
ஐயா எம்பெருமான் அடியேனையுமஞ்ச லென்னே."

ஸ்தலத்தின் பெயர் மாறியது.

இவ்வூருக்கு உய்யக்கொண்டான் திருமலை என்று பெயர் பின்னர் உண்டானது. இப்பொழுது அவ்விடமுள்ள உய்யக்கொண்டான் வாய்க்காலிலிருந்து நேரிட்டிருக்கவே

ண்டும். 'உய்யக்கொண்டான்' என்னும் பதத்திற்கு 'தவறாமல் குடித்தான்' எனப்பொருள். இப்படிப் பெயரிடப்பட்டது ஒரு காரணம் பற்றி யென்று அது ஸம்பந்தமான கதையிலிருந்து வெளியாகிறது.

திருச்சிராப்பள்ளியின் மேற்குபக்கத்தில் கரூருக்குப்போகும் ரஸ்தாவில் பேட்டவாய்தலை என்னுமிடத்திலிருந்து இந்த உய்யக்கொண்டான் வாய்க்கால் ஆரம்பமாகிறது. தஞ்சைமாநகரை ஒரு ஸமயம் ஆண்ட சோழமன்னன் ஒருவன் தனது பிரஜைகள் தண்ணீரின்றி வருந்துவதைப் பார்க்க மனம் சகியாமல் தமது குலதெய்வமாகிய காமாக்ஷி அம்மனைப் பிரார்த்தித்தனன். சொப்பனத்தில் தேவி இந்த மன்னருக்குத் தெரிவித்ததாவது— 'ஒரு பாம்பு தென்பட்டு அது தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு அகண்டகாவேரி செல்லும். அது சென்ற பாதையை ஒட்டி ஒரு வாய்க்கால் வெட்டினால் உமது நாட்டிற்கு ஏராளமான ஜலம் கிடைக்கும்.' அந்தப்படி அரசன் பாம்பு ஓடுவதைக்கண்டு வாய்க்கால் வெட்டிக் கொண்டு போக அது மறைந்த இடமாகிய குளித்தலை தாலூகாவிலுள்ள மாயனூர் சமீபத்திலிருந்து இவ்வாய்க்காலுக்கு ஜலம் ஆரம்பமாகி ஓடிவந்தது. இது சுமார் பதினான்கு மைல் தூரம் திருக்கற்குடி வந்ததும் மலையால் தடுக்கப்பட்டு ஜலம் முழுமையும் மறைந்து போயிற்று! பின்னர் அரசன் கவலைகொண்டு இம்மலைக்கோவில் சுவாமியை பிரார்த்தித்ததும் ஜலம் நெடுகப்போகலாயிற்றாம். இதற்கு 'ஸர்ப்பநதி' என்று பெயருண்டானதுமன்றியில் இதற்கு வயது ஆயிரம் வருஷமென்றும் அது படிப்படியாக வாலினது கோடியிலிருந்து வால் வரைக்கும் மறைந்து போகுமென்றும், பிறகு உடல் வரைக்கும் மறையுமென்றும், கடைசியாக தலைவரைக்கும் மறைந்து போகுமென்றும் அசரீரிவாக்கு அக்காலத்தில் ஏற்பட்டதாம்.

அதன்படியே இப்பொழுது தஞ்சாவூரிலிருந்து திருச்சிராப்பள்ளி வரையிலுள்ள இந்த வாய்க்கால் மறைந்து போயிற்றாம்!

சிலாசாஸன விஷயம்.

இவ்வூர்க்கோயிலிலுள்ள சில சிலாசாஸனங்களிலிருந்து இவ்வூர் சிலகாலம் நந்திவர்மமங்கலம் எனப்பெயர் வழங்கி வந்திருந்தது. இப்படி நேரிட்டது பல்லவமன்னர்களில் ஒருவராகிய ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்த நந்திவர்மன் என்பவர் இவ்வூர்க்கோயிலுக்கும் பல தானங்கள் கொடுத்து அக்கிரகாரத்தையும் ஏற்படுத்தியிருந்ததிலிருந்தும் உண்டாயிருக்கலாம்.

முதலாவது ராஜராஜசோழனும் அவ்விதமே இக்கோயிலுக்கு ஏராளமான கொடை அளித்ததிலிருந்து இவ்வூருக்கு அவரது காலத்தில் ராஜாஸ்ரய சதுர்வேதி மங்கலம் என்றும் பெயர் வழங்கிவந்தது. இக்கோயில் கர்ப்பகிருஹம் தென்சுவரில் ராஜராஜதேவர் இவ்விடம் உத்ஸவாதிகளுக்கு தனமளித்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முதல் பிராகாரம் கிழ்ச்சுவரிலுள்ள சாஸனத்திலிருந்து வீரராஜேந்திர சோழ மஹாராஜன் தாம் திருவானைக்காவலில் 'அபிமானராமன்' எனப்படும் தமது அரண்மனை

யிலிருந்த காலத்தில் இக்கோயில் உத்ஸவாதிகளுக்குத் தனமளித்த விவரம் எழுதப்பட்டிருக்கிறது. சந்நியாசிகளுக்கு மலை அடிவாரத்தில் சாப்பாடு செய்துவைக்க வேண்டித் தனம் ஏற்படுத்தினராம்.

உள் கோபுரம் வடக்கு கிழக்கு இவ்விரு சுவரிலுமுள்ள குலோத்துங்க சோழன் சிலாசாஸனம் ஒரு முக்கிய விஷயத்தைக் காட்டுகிறது. அக்காலத்தில் மிச்ர ஜாதியாகிய அநுலோமர், பிரதிலோமர் இவர்களில் அநுலோமர்களைச்சேர்ந்த ரதகாரரெனப்படுவர்களின் தொழில் முறைகளைக் குறிப்பிடுவதாவது:—சில்பம், ரதம் செய்தல், கோபுரநிர்மாணம், மண்டபம் கட்டுவித்தல் இவைகளை க்ஷத்திரிய தகப்பனுருக்கும் வைசிய தாயாருக்கும் பிறந்த மாஹிஷ்யனுக்கும், வைசியதகப்பனுருக்கும் சூத்திர தாயாருக்கும் உண்டான காணிஸ்தரிக்கும பிறக்கும் ரதகாரர்கள் நடத்தலாமென்னும் விவரம்.

தேவாரப்பாடல்கள்.

திருஞானஸம்பந்தசுவாமிகள் பாடியது:—

முதல் திருமுறை—பண்—தக்கராகம்.

வடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாகமதித்துத்
தடந்திரைசேர்புனல் மாதைத்தாழ்சடைவைத்தசதுரர்
இடந்திகழ்முப்புரிநூலர்துன்பமோடின்பமதெல்லாம்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. 1

அங்கமோராறுமேருடைவேள்வியானவருமறை நான்கும்
பங்கமில்பாடலோடாடல்பாணிபயின்றபடிறர்
சங்கமதார்குறமாதர்தங்கையில்மைந்தர்கடாவிக்
கங்குலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. 2

நீரகலந்தருசென்னிநீடியமத்தமும்வைத்துத்
தாரகையின்னொளிசூழ்ந்ததண்மதிசூடியசைவர்
போரகலந்தருவேடர்புனத்திடையிட்டவிறகிற்
காரகிலின்புகைவிம்முங்கற்குடிமாமலையாரே. 3

ஒருங்களிநீயிறைவாவென்றும்பர்களோலமிடக்கண்
டிருங்களமாரவிடத்தையின்னமுதுண்ணியவீசர்
மருங்களியார்பிடிவாயில்வாழ்வெதிரின்முளைவாரிக்
கருங்களியானைகொடுக்குங்கற்குடிமாமலையாரே. 4

போர்மலிதிண்சிலைகொண்டுபூதகணம்புடைசூழப்
பார்மலிவேடுருவாகிப்பண்டொருவர்க்கருள்செய்தார்
ஏர்மலிகேழல்கிளைத்தவின்னொளியாமணியெங்கும்
கார்மலிவேடர்குவிக்குங்கற்குடிமாமலையாரே. 5

உலந்தவரென்பதணிந்தேயூரிடுபிச்சையராகி
விலங்கல்வில்வெங்கனலாலேமூவெயில்வேவமுனிந்தார்

நலந்தருசிந்தையராகிநாமலிமாலையினாலே
கலந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே 6

மானிடமார்தருகையர்மாமழுவாரும்வலத்தா
ஊனிடையார்தலையோட்டி லுண்கலனாகவுகந்தார்
தேனிடையார்தருசந்தின் றிண்சிறையார் நீழ விச்சிக்
கானிடைவேடர்விளக்குங்கற்குடிமாமலையாரே. 7

வாளமர்வீரநினைந்தவிராவணன்மாமலையின்கீழ்த்
தோளமர்வன்றலைகுன்றத்தொல்விரலூன்றுதுணைவர்
தாளமர்வேய்தலைப்பற்றித்தாழ்கரிவிட்டவிசைபோய்க்
காளமதார்முகில்கீறுங்கற்குடிமாமலையாரே. 8

தண்டமர்தாமரையானுந்தாவியிம்மண்ணையளந்து
கொண்டவனும்மறிவொண்ணாக்கொள்கையர்வெள்விடையூர்வர்
வண்டிசையாயினபாடநீடியவார்பொழினீழற்
கண்டமர்மாமயிலாடுங்கற்குடிமாமலையாரே. 9

மூத்துவராடையினாருமூசுகருப்பொடியாரும்
நாத்துவர்பொய்ம்மொழியார்கணயமிலராமதிவைத்தார்
ஏத்துயர்பத்தர்கள்சித்தரிறைஞ்சவவரிடரெல்லாங்
காத்தவர்காமருசோலைக்கற்குடிமாமலையாரே. 10

காமருவார்பொழில்சூழுங்கற்குடிமாமலையாரை
நாமருவண்புகழ்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே. 11

அப்பர் சுவாமிகள் பாடியது:—

திருத்தாண்டகம்

மூத்தவனை வானவர்க்கு மூவாமேனி முதல்வனைத்திருவரையின்மூக்கப்பாம்பொன்
றார்த்தவனையக்கரவ மாரமாக வணிந்தவனைப் பணிந்தடியாரடைந்தவன்போ
டேத்தவனை யிறுவரையிற் றேனை யேனோர்க் கின்னமுதமளித்தவனை யிடரையெல்லாம்
காத்தவனைக்கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 1

செய்யானை வெளியானைக் கரியான் றன்னைத் திசைமுகனைத் திசையெட்டுஞ் செறிந்தான் றன்னை
ஐயானை நெய்யானைச் சீரியானை யணியானைச் சேயானை யானஞ்சாடு
மெய்யானைப் பொய்யாது மிலாதான் றன்னை விடையானைச் சடையானை வெறித்தமான்கொள்
கையானைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே. 2

மண்ணதனி லைந்தைமா நீரினான்கை வயங்கெரியின் மூன்றைமா ருதத்திரண்டை
விண்ணதனி லொன்றை விரிகதிரைத் தண்மதியைத் தாரகைகடம்மின்மிக்க
எண்ணதனி லெழுத்தை யேழிசையைக் காமனெழிலழியவெரியுமிழ்ந்த விமையாநெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில்விழுமியானைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. 3

நற்றவனைப் புற்றரவநாணினானை நாணாதுநகுதலையூ ணயந்தான்றன்னை
முற்றவனைமூவாத மேனியானை முந்நீரினஞ்சமுகந் துண்டான்றன்னைப்
பற்றவனைப் பற்றார்தம் பதிகள்செற்ற படையானை யடைவார்தம் பாபம்போக்கக்
கற்றவனைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேனானே. 4

சங்கைதனைத் தவிர்த்தாண்ட தலைவன்றன்னைச் சங்கரனைத் தழலுறு தாண் மழுவாடாங்கு
மங்கையனை யங்கமணி யாகத்தானை யாகத்தோர்பாகத்தே யமரவைத்த
மங்கையனை மதியொடுமா சுணமுந்தம்மின் மருவவிரி சடைமுடிமேல் வைத்தவானீர்க்
கங்கையனைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 5

பெண்ணவனை யாணவனைப் பேடானானைப் பிறப்பிலியை யிறப்பிலியைப் பேரவாணி
விண்ணவனை விண்ணவர்க்கு மேலானானை வேதியனை வேதத்தின் கீதம் பாடும்
பண்ணவனைப் பண்ணில்வரு பயனானானைப் பாரவனைப் பாரில்வா ழுயிர்கட்கெல்லாம்
கண்ணவனைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 6

பண்டானைப் பரந்தானைக் குவிந்தான்றன்னைப் பாரானை விண்ணாயிவ்வுலகமெல்லா
முண்டானை யுமிழ்ந்தானை யுடையான்றன்னை யொருவருந்தன் பெருமைதனை யறியவொண்ணா
விண்டானை விண்டார்தம் புரங்கண் மூன்றும் வெவ்வழலில் வெந்துபொடி யாகி வீழக்
கண்டானைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 7

வானவனைவானவர்க்கு மேலானானை வணங்குமடியார் மனத்துண் மருவிப்புக்க
தேனவனைத் தேவர்தொழுங் கழலான்றன்னைச் செய்குணங்கள் பலவாகி நின்றவென்றிக்
கோனவனைக் கொல்லைவிடை யேற்றினானைக் குழன்முழவமியம்பக் கூத்தாடவல்ல
கானவனைக் கற்குடியில் விழுமியானை கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 8

கொலையானை யுரிபோர்த்த கொள்கையானைக் கோளரியைக் கூரம்பாவரைமேற்கோத்த
சிலையானைச் செம்மைதரு பொருளான்றன்னைத் திரிபுரத்தோர்மூவர்க்குச் செம்மைசெய்த
தலையானைத் தத்துவங்க ளானான்றன்னைத் தையலோர் பங்கினனைத் தன்கையேந்து
கலையானைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே. 9

பொழிலானைப் பொழிலாரும் புன்கூரானைப் புறம்பய னையறம்புரிந்த புகலூரானை
எழிலானை யிடைமருதி னிடங்கொண்டானை யீங்கோய் நீங்காதுறையு மிறைவன்றன்னை
அழலாடு மேனியனை யன்றுசென்று குன்றெடுத்த வரக்கன்றோ ணெரியவூன்றுங்
கழலானைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே. 10

சுந்தரமூர்த்திசுவாமிகள் பாடியது:—

ஏழாம் திருமுறை—பண்—நட்டராகம்.

விடையாருங்கொடியாய்வெறியார்மலர்க்கொன்றையினாய்
படையார்வெண்மழுவாய்பரமாயபரம்பரனே
கடியார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அடிகேளெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. 1

மறையோர்வானவருந்தொழுதேத்திவணங்கநின்ற
விறைவாவெம்பெருமானெனக்கின்னமுதாயவனே
கறையார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அறவாவங்கணனேயடியேனையுமஞ்சலென்னே. 2

சிலையால்முப்புரங்கள்பொடியாகச்சிதைத்தவனே
மலைமேல்மாமருந்தேமடமாதிடங்கொண்டவனே
கலைசேர்கையினனே திருக்கந்குடிமன்னிநின்ற
அலைசேர்செஞ்சடையாயடியேனையுமஞ்சலென்னே. 3

செய்யார்மேனியனே திருநீலமிடற்றினனே
மையார்கண்ணிபங்காமதயானையுரித்தவனே
கையார்சூலத்தினாய்திருக்கற்குடிமன்னிநின்ற
ஐயாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. 4

சந்தார்வெண்குழையாய்சரிகோவணவாடையனே
பந்தாரும்விரலாளொருபாகமமர்ந்தவனே
கந்தார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
எந்தாயெம்பெருமானடியேனையுமேன்றுகொள்ளே. 5

அரையார்கீளொடுகோவணமுமரைக்கசைத்து
விரையார்கொன்றையுடன்விளங்கும்பிறைமேலுடையாய்
கரையாரும்வயல்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அரையாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. 6


பாரோர்விண்ணவரும்பரவிப்பணிந்தேத்தநின்ற
சீரார்மேனியனே திகழ்நீலமிடற்றினனே
காரார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
ஆராவின்னமுதேயடியேனையுமஞ்சலென்னே. 7

நிலனேநீர்வளிதீநெடுவானகமாகிநின்ற
புலனேபுண்டரிகத்தயன்மாலவன்போற்றிசெய்யும்
கனலேகற்பகமேதிருக்கற்குடிமன்னிநின்ற
அனல்சேர்கையினனேயடியேனையுமஞ்சலென்னே. 8


வருங்காலன்னுயிரைமடியத்திருமெல்விரலாற்
பெரும்பாலன்றனக்காய்ப்பிரிவித்தபெருந்தகையே
கரும்பாரும்வயல்சூழ்த்திருக்கற்குடிமன்னிநின்ற
விரும்பாவெம்பெருமானடியேனையும் வேண்டுதியே. 9

அலையார்தண்புனல்சூழ்ந்தழகாகிவிழவமரும்
கலையார்மாதவர்சேர்திருக்கற்குடிக்கற்பகத்தைச்
சிலையார்வாணுதலாள்நல்லசிங்கடியப்பனுரை
விலையார்மாலைவல்லார்வியன்மூவுலகாள்பவரே. 10





கருவூர் கோயிலின் முன் மண்டபமும் த்வஜஸ்தம்பமும்.




கருவூர் பசுபதீசுவரர் கோயில்.

கருவூர்.

கருவூர் என்றும் ஆநிலை என்றும் பெயர்வழங்கும் இப்புண்ணியஸ்தலம் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் 45 மைல் தூரத்தில் திருச்சியிலிருந்து ஈரோடு போகும் தென் இந்தியன் ரயில்வே கிளைப்பாதையிலுள்ளது. இது கொங்கு தேசமன்னனாகிய புகழ்ச்சோழனது ராஜதானியாய் விளங்கிற்று. இவ்வரசன் விசேஷ சிவபக்தனாயிருந்து பின்னர் நாயன்மார்கள் கூட்டத்தில் ஈடுபட்டவர். இவ்வூர் பசுபதீசுவரர் கோயிலில் அம்மனுக்கு இரண்டு சந்நிதிகள் இருந்துவருகின்றன—கிருபாநாயகி, சௌந்தரியநாயகி. இவ்வூர் அமராவதி நதியின் கரையிலுள்ளது. இது சேரமன்னர்களது ராஜதானியாயிருந்த காலத்தில் இதற்கு வஞ்சி என்றும் பெயர்வழங்கிவந்தது. அக்காலத்தில் இவ்விடம் கோட்டை மதில்களில் யந்திரங்கள் அமைக்கப்பட்டு எதிரிகளின்மேல் கல், எரி எண்ணை இவைகள் கொட்டவேண்டிய நிமித்தியம் வைக்கப்பட்டிருந்ததாக தமிழ் பிராசீன கிரந்தங்கள் தெரிவிக்கின்றன.

காமதேனு பூஜித்தது.

இவ்வூர் ஈசனை சூரியபகவான் பூஜித்ததிலிருந்து இதற்கு பாஸ்கரபுரமெனவும் பெயருண்டு. ஒருகாலத்தில் காமதேனு இவ்விடம் மூர்த்தியை பூஜித்து பிரம்மாவைப்போல்



கருவூர் கோயில் உள்புரம்.

தானும் உலகத்தை சிருஷ்டிக்கும் மஹிமையைப் பெற்றனள். இந்த வைபவத்திலிருந்தே இதற்கு ஆநிலை என்ற பெயர் உண்டாயிற்று. மேலும் இந்தப்பெருமையை விளக்க இக் கருவூருக்கு வடதிசையிலே வெண்ணெய் மலை என்று ஏற்பட்டுளது.

நாயன்மார்கள் சரித்திரம்.

நாயன்மார்களில் பெருமை வாய்ந்துள்ள புகழ்ச்சோழர், எறிபத்தர் இருவர்களுக்கும் இவ்வூருடன் ஸம்பந்தம் உண்டு. சோழராஜதானியாகிய உறையூரில் சிதம்பரம் மாடவீதிகளை சிறப்பித்த இரண்டாவது குலோத்துங்கசோழ மஹாராஜனெனப்படும் அநபாயனது குலத்தலைவராய் விளங்கிய புகழ்ச் சோழர் ஆண்டு வரும் காலத்தில் அம்மன்னன் தமது ராஜதானியைச் சேர்ந்த கருவூருக்கு கொங்கு குடகு நாட்டிலுள்ள தமது சிற்றரசர்களிடமிருந்து திறைகளை வாங்க வேண்டிச் சென்றிருந்தனர். இவ்வரசர் விசேஷ சிவபக்தர். கருவூரில் தங்கியிருக்கையில் அவரது பட்டத்து யானை நவராத்திரி அஷ்டமி தினத்தில் நந்தவனத்திலிருந்து புஷ்பங்களை கூடையில் எடுத்து கோயிலுக்குச் சென்ற சிவகாமியாண்டார் என்பவரை எதிர்த்து புஷ்பங்களை பூமியில் சிதறவிட்டது. இதைக் கேட்டு மனம் சகியாத எறிபத்தர் உடனே தமது கையிலிருந்த மழுவால் அந்த யானையையும் அதைப்பின் தொடர்ந்த ஐந்து பாகர்களையும் கொன்றனர். அரசனிடம் இவ்விஷயம் தெரிவிக்கப்பட்டதும் தான் நேரிட ஸ்தலம் போனதும் எறிபத்தர் விசேஷபக்தனென்பதையும் தமது யானை செய்த குற்றத்தையும் கண்டு வியசனமடைந்து எறிபத்தரை புகழ்ந்தே திரும்பினர்.

இக்கருவூரில் தமது சிற்றரசர்களிடமிருந்து கப்பங்களைப் பெற்ற புகழ்ச் சோழர் மலை நாட்டைச் சேர்ந்த அதிகன் என்பவன் மட்டும் தவரின விஷயம் தெரிந்து கொண்டு தமது சைனியத்தை அவனது நாட்டிற்கு அனுப்பினர். அவ்விடம் சென்ற சைனியம்

அதிகனைக் காட்டிற்கு ஓடச் செய்து அவனது சைனியத்தை தோற்கடித்து பொக்கிஷத்துடன் கருவூர் திரும்பினர். இப்படிச் சென்றதும் அதிகனுடையவும் அவனது சிப்பந்திகளுடையவும் விசெஷ சிவபக்தியைத் தெரிந்து கொண்ட புகழ்ச் சோழர் இவ்விதம் நேரிட்டசம்பவங்களுக்கு மனம் தளர்ந்து தமது ராஜ்யத்தை புத்திரனிடம் ஒப்பிவைக்கச் செய்து தான் உலகத்தைத் துறந்தான்.

கருவூர்த்தேவர் மஹிமை.

சிவன்பேரில் இனிய பாடல்களாகிய திருவிசைப்பாவைப் பாடிய கருவூர்த்தேவர் என்னும் மஹானும் இவ்வூரில் ஜனித்து இவ்விடத்திலேயே முக்தி அடைந்தவர். இவருக்கு இவ்விடம் கோயில் வெளிப்பிராகாரத்தில் ஈசான்யதிசையில் ஒரு ஸந்நிதி இருந்துவருகிறது. இவர் பிராம்மணகுலத்தில் உதித்து சைவராயினும் பாண்டிநாட்டிலுள்ள திருக்குருகூரை அடைந்ததும் அவ்வூர் விஷ்ணு மூர்த்தி தமது பக்தர்கள் கனவில் தோன்றி இவரை ஆராதிக்கச் செய்தனர். பல அற்புதச் செயல்களைச் செய்தனர். வன்னிமரத்தை மீன் மழை பொழியச் செய்தனர்! பின்னர் பொதியமலை சென்று அகஸ்தியரைத் தொழுது கொண்டிருக்கையில் தஞ்சைப் பெரியகோயிலைக்கட்டிய ராஜராஜதேவர் தனக்கு அக்கோயில் லிங்கத்திற்கு அஷ்டபந்தனம் சாத்த இவரை வரவழைக்கும்படி ஒரு அசரீரி வாக்கு மூலியமாய்த் தெரிவிக்க அந்தப்படி செய்தனர். பின்னர் பல ஜனங்களுக்கு தயாரிக்கப்பட்டிருந்த ஆகாரத்தை தானே உண்டு எல்லோரது வயிறும் நிரம்பும்படிச் செய்தனர்! ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதரைத் தொழுது மாணிக்கமாலையைப் பெற்றனர். இவரது மஹிமையை யறியாத பிராம்மணர்கள் இவரது மதாசாரம் குறைவாயிருப்பது பற்றி இவரை தூஷிக்க ஈச்வரன் இவரைக் காப்பாற்றி தமது பக்தனென்று விளக்கச் செய்தனர்.

சிலாசாஸன விசேஷம்.

சிலாசாஸனங்கள் பல இவ்வூர்க் கோயிலிலுள்ளன. அவைகளில் இவ்வூரை முடிவழங்குசோழபுரமெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது அக்காலத்தில் வேங்கால நாட்டைச் சேர்ந்திருந்தது. பல சண்டைகளைப்பற்றிய சோழமன்னர்களது சிலாசாஸனங்கள் இங்கிருந்து வருகின்றன. வீரராஜேந்திரசோழமன்னர் கங்கைகொண்டசோழபுரத்திலிருந்தபடியே இவ்வூர்க் கோயிலுக்கு ஒரு கிராமமளித்ததை அடியில்கண்ட சாஸனம் வெளியிடுகிறது—

தென் இந்திய சாஸனம், 3—ம் புத்தகம், பக்கம் 33.

"ஸ்வஸ்திஸ்ரீ திருவளர திரள்புயத் திருநில வலையந்தன் மணிப்பூணெனத்தங்கிப் பன்மணிக் கொற்ற வெண்குடை நிழற்குவலை யத்துயிர்களைப் பெற்ற தாயினும் பொமற்றுள்ளவறை கழலரசர் தன்னடியினிலொதுங்கவுறை பிலத்துடைய கலியது வோதுங்க முறைமையிலரும் பெறல் தமையனை முன் வந்தானையிரும் புவிபுகழ் இராஜராஜ னென்றெளிர் மணிமுடி சூட்டி தன் திருமைந்தனாகிய கங்கைகொண்டசோழனை எழுயரியானைச் சேனைச் சோழபாண்டிய னென்றுண்டுயர் மணிமுடிப் பாண்டிமண்டலங்குடுத்தருளிய்

வாட்கை வடிகொண்ட கதிர் வேல் முடிகொண்டசோழனைச் சுந்தர சோழனெனச் சுடர்
முடி சூட்டியந்தமில் பெருஞ்சிறப்பருளித்தன் கிளைவருலகத்தவற்குரிய வகலிடம் வேறு
வேறனி இகல் விளை விருதொடு மலைக்கும் விக்கலன்றன்னொடும் வெஞ்சிலைத்தடக்கை
மாசாமந்தரைக் கங்கபாடிக் களித்திடை னின்று துங்கபத்திரைக்கரை புகத்துரந்து அங்க
வர் வேங்கை நாட்டிடை மீண்டவர் விட்ட தாங்கரும் பெருவலித் தண்டு கெடத்தாக்கி
மாதண்ட நாயக்கன் சாமுண்டராஜனைச் செற்றவன் சிரத்தினை யறுத்து மற்றவனொரு மக
ளாகிய விருகயக் தேவி நாகலை யென்னுந் தோகையம் சாயலை முகத்தோடு மூக்கு வே
றுக்கி பகைத்தெதிர் மூன்றும் விசையினும் மென்றெதிர் பொருது பரிமவந் தீர்வதெனக்
கருதிப் பொருபுனல் கூடல் சங்கமத்தாகவமல்லன் மகனாகிய விக்கலன் சிங்கணனென்றி
வர் தம்மொடும் மெண்ணில் சாமந்தரை வேன்றடு தாக்கி முன்விட்டுத் தன்றனை மன்ன
நந்தானும் பின்னடைக்கிருந்து வடச —லெல்ன வருத்து வந்தானையை கடகளிறுன்றல்
கலக்கியுடல் புரிக் கோசலை சிங்கனைக் கொடிப்படை மன்னரைத் தூசி வெண்களிற்றுன்
துணித்து கேசவதண்டநாயக்கன் கெத்தாசன் திண்டிறல் மாரயன் சிறற் பொத்த யனிகல்
செய்ய பொற் கோதை மூவேந்தி யென்றார் தடுத்துப் பிலனெக சாமந்தரைச் சின்னபின்
னஞ் செய்க பின்னை முதலியாரிய மகாவண நோட விரித்ததலையோடு விக்கலனைடைச் செ
ருக் கெழிலழிந்த சிங்கணனோட அண்ணல முதலிகளனைவருமமர் பொற் பண்ணின பக
டிழிந்தோட னண்ணிய ஆகவமல்லனுமவர்க்கு முன்னோட தன் வேகவெங்களிற்றினை
விலக்கிவாகை கொண்டங்கவர் தாரமும்மவர் குலதனமும் சங்குமுன் தொங்கலுந்தாரையும்
பேரியும் மேகடம்பமும் வெண்சாமரையும் காக்கைக் கொடியும் மகர தோரணமும் புட்ப
கப்பிடி போர்க்களிறீட்டமும் பாயமரித் தோரையோடும் பறித்து செய்யொளிர் விசைய
மணி மகுடம் மிசை பொருந் திசை கொறும் சினப்புலி செலுத்திக்குசை கொளுத்தும் புர
விப் பொத்தப்பி வேந்தனை வாரனை வன் கழற் கோளன்றன்னை ஜனநாதன் றம்பியைப்
போர்களத்தலங்கல் சூழ்ப் பசுந்தலை யரிந்து பொலங்கழல்த் தென்னனை ஸ்ரீவல்லபன்
மகன் சிறுவனை மின்னவில் மணிமுடி வீரகேசரியை கதகடகளிற்றாலுதைத்திட்டு மத
கொடு செயித்த வரப்பாகாச் செங்கோல் செலுத்தி வேத நீதியை விளக்கி மீதுயர் வீரத்
தனிக் கொடிக் தியாகக் கொடியோடும் எற்பவர் வருகென்று நிற்ப போர்த்தொழிலுரிமை
யிலெய்தி அரிசு வீற்றிருந்து மெவரு மனுநெறி விளங்கிடக் கோ இராசகேசரிபன்மரான
உடையார் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவற்கு

கெங்கைகொண்டசோழபுரத்துக் கோயிலுள்ளால் திருமஞ்சன சாலையில் எ
ழுந்தருளியிருந்து உதகம் பண்ணியருளின அதிராஜராஜமண்டலத்து வேங்காலநாட்
டுப் பாக்கூர் வெள்ளான் வகையிலிறை முதல் தவிர்த்து யாண்டு ௩-வது கெதி
ராவது முதல் இவ்வூர் இறையிலி தேவதானம் திருநாமத்துக்காணியாக இறைபுறவு
சிற்றாயம் எலவை யுகவை மன்றுபாடு தெண்ட குற்றம் உடும் பொடி ஆமை தவழி புற்றும்
எழுவன முளைப்பன கற்றுப்புற் பெக்காமுற் கூட்டும்.

இவ்வூர் இறை கட்டின காணிக்கடன் பொன் முன்னூற்று முக்கழஞ்சரையே
மஞ்சாடி அரைமாவும் நெல்லு முவ்வாயிரத்து அனூற்று முப்பத்தொரு கலனே தூணியும்

இன்னாட்டுக் கருவூர்த் திருவாநிலை ஊதா தேவற்கு இறுப்பதாக யாண்டு முதல் இறையிலி தேவதானம் திருநாமத்துக்காணியாக வரிலிடத் திருவாய்மொழிந்தருளினபடிக்கு

திருவாய்மொழிந்தருளினரென்று திருமந்திர ஓலை க்ஷத்திரியசிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு நெர்வாயிலுடையான் தாழி திருப்பனங்காடுடையான் வானவன் பல்லவரையனெழுதினாலும் திருமந்திர ஓலைநாயகம் அச்சுதன் இராஜராஜனை தொண்டைமானும் ஊரன் உத்தம சோழனை இராஜராஜ ப்ரஹ்மாதிராயனும் அரையன் இராஜராஜனை வீரராஜேந்திர முரிநாடாழ்வானும் வீரராஜேந்திர மங்கலப் பேரரையனும் இவர்களுடன் ஒப்பிட்டுப் புகுந்த கேழ்விப்படியே நம் வரியிலிட்டுக் கொள்கவென்ன வீரபத்திரன் தில்லை விடங்கனை வில்லவராஜராஜன் ஏவ இவன் ஏவினபடியே உடன் கூட்டத்து அதிகாரிகள் க்ஷத்திரியசிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு ஜயங்கொண்ட சோழநல்லூருடையான் உதைய திவாகரன் கூத்தாடுவானை வீரராஜேந்திர மூவராயரும் வீரராஜேந்திர ப்ரஹ்மாதிராயரும் அருமொழிதேவ வளநாட்டு னென்மலி நாட்டு பெரியகுடையூர் அரங்கன் திருச்சிற்றம்பலமுடையான் னை வானவன் மூவேந்திர வேளானும் அதிராசராசவளநாட்டு தேவூர்நாட்டு பனைக்குடியுடையான் காடன் வீதிவிடங்கனை ஜயங்கொண்டசோழ விழுப்பரையரும் விசைய ராஜேந்திரவளநாட்டு புலியூர் நாட்டுப் பூண்டியுடையான் அத்தாணிச் சியாரூரன் முடிவிழுப்பரையனும்.........இராஜேந்திர பட்டரும் இராஜராஜப்பாண்டி குலவளநாட்டு உத்தமசோழவளநாட்டு முள்ளிநாட்டு நிகரிலிசோழநாட்டு மதிமங்கலத்து கொச்சாக்காற்புறத்து விண்ணவநாராயண பட்டனும் விடையில் அதிகாரிகள் உய்யக் கொண்டானும இப்படி.........திருவாய்மொழிந்தருளின படிக்கு நம் வரியிலார்வரியிலே இட்டு இறையிலி தேவதானம் திருநாமத்துக் காணியாகத் திருவாநிலை மஹாதேவற்கு அவி பலி அற்சனை போகத்துக்குச் சேம்பிலும் கல்லிலும் வெட்டிக்கொள்க.........

மற்றொரு சாஸனம் (தென் இந்திய சாஸனம், 3ம் புத்தகம், 47ம் பக்கம்) இவ்வூர் கம்மாளர்களுக்கு அரசன் கொடுத்த அதிகாரங்களைக்குறிப்பிடுகிறது:—

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸகலபுவனச்சக்ரவர்த்திகள் ஸ்ரீ கோநேரின்மை கொண்டான் வெங்கால நாட்டுக் கண்மாளற்கு யிரு வது ஆடி மாதம் முதல் தங்களுக்கு நன்மை தின்மைகளுக்கு இரட்டைச் சங்கும் ஊதி பேரிகை உள்ளிட்டவை கொட்டுவித்துக் கொள்ளவும். தாங்கள் புறப்படவேண்டும் இடங்களுக்கு பாதரக்ஷை கோத்துக்கொள்ளவும். தங்கள் வீடுகளுக்குச் சாந்து இட்டுக் கொள்ளவும் சொந்நோம்.

இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரை செல்வதாகத் தங்களுக்கு வேண்டின இடங்களிலே கல்லிலும் செய்பிலும் வெட்டிக் கொள்க.

இவை விழுப்பாதராயன் எழுத்து.

இக்கருவூரே ஆதியில் சேரமன்னர்களது ராஜதானியாயிருந்தது. தென்னிந்தியா பண்டையகாலந்துவக்கி சேர, சோழ, பாண்டியமன்னர்களுக்குள் அடங்கியிருந்தது மன்னியில் அது மேனாடு, கீழ்நாடு, தென்னாடு எனவும் மலைநாடு, நீர்நாடு, கடல்நாடு எனவும், முறையே வழங்கப்பட்டுவந்தது. இம்மூன்றுநாடுகளிலுமேசெந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு அடங்கியுள்ளது. இவ்விரண்டுள் செந்தமிழ்நிலம் ஒன்று கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டு. முன்னதாகிய செந்தமிழ் வழங்கியது வையையாற்றின்வடக்கும் கருவூரின்கிழக்கும் மருதயாற்றின் தெற்கும், மருவூரின்மேற்குமே. பின்னதாகிய கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டும் இச்செந்தமிழ்நிலத்தைச் சூழ்ந்திருந்தன. அவையாவன: பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை. இக்கொடுந்தமிழ் நிலத்தை சூழ்ந்திருந்த நாடுகளாவன:—சிங்களம், பழந்தீவு, கொல்லம், கூபம், கொங்கணம், துளுவம், குடகம், கருநடம், கூடம், வருகம், தெலுங்கு, கலிங்கம்.

சேரமன்னனது கொடுந்தமிழ் நாட்டைச்சேர்ந்த குட்டநாடு, குடநாடு, பூழிநாடு மலைநாடு. ஆனதுபற்றியே இவருக்கு 'குட்டுவன்', 'குடவர்கோமான்', 'பூழியர் கோமான்', 'மலையன்', 'மலையமான்' என தமிழ்நூல்களில் சொல்லப்பட்டுள்ளன.

நாட்டைப்போலவே மலைகளும் அவரவர்களுக்கு தனிமையில் குறிப்பிடப்பட்டிருந்தன. கொல்லி சேரனுதாகவும், நேரி சோழருதாகவும், பொதியம் பாண்டியனுதாகவும் விவரிக்கப்பட்டுளது. இச்சேரரது தலைநகராயுள்ள இக்கவூருக்கு வஞ்சி எனப்பெயர் ஏற்பட்டிருந்தது. ஏனெனில் இவ்வூருள்ளவிடம் வஞ்சிவன மெனவும், வஞ்சுளாரணிய மெனவும் வழங்கப்பட்டதின் நிமித்தியம். ஸம்ஸ்கிருதத்தில் இவ்வஞ்சிமரத்தையே வேதஸம், வாநீரம் எனச்சொல்லுகிறார்கள்.

பாண்டியனுக்கு வையாநதியும், சோழனுக்கு காவிரியும்போல் இச்சேரனுக்குப் பெருமை உண்டாக்கும் நதி பொருநையே. இப்படியே மதுரைமாநகர் பாண்டியனுக்கும், உரையூர் சோழனுக்கும் கருவூர் சேரனுக்கும். இவ்விடங்களில் அக்காலத்தில் வழங்கிவந்த விழாவாவன : மதுரையில் ஆவணிபவிட்டமும், உறையூரில்பங்குனியுத்திரமும், இக்கருவூரில் உள்ளிவிழாவுமே. உள்ளிவிழாவாவது : கொங்காமணியை அரையில் கட்டிக்கொண்டு தெருவில் ஆடுதல். இப்படியே சேரர்க்கு வீரமுரசு, சோழர்க்கு தியாகமுரசு, பாண்டியர்க்கு நியாய முரசும். கொடியோவெனில் சேரர்க்கு வில், சோழர்க்கு புலி, பாண்டியனுக்கு மீன்.

குழித்தலைக்கு மேற்கில் பன்னிரண்டுமைல் தூரத்திலுள்ள மதுக்கரையிலுள்ள செல்லியம்மன் கோயிலே சேரருக்கும் சோழனுக்கும் எல்லையாயுள்ள விடத்தைக்குறிப்பிட்டது. இவ்விடம் மாரியம்மன் கோயில் இப்பொழுதும் விசேஷமகிமையுடையது. இவ்விடத்திலிருந்து தெற்கில் ஒருகறையும் எல்லைக்கறையாக ஏற்பட்டிருந்தது. கருவூருக்கு பன்னிரண்டுமைல் வடமேற்கிலுள்ள வேட்டைமங்கல மெனப்படும் ஊரே அக்காலத்தில் சேர

மன்னர்களுக்கு வேட்டையாடும் ஸ்தலமாக குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் வெகுகாலம் சென்றுதான் சேரர்கள் கருவூரைவிட்டு மேற்கு சமுத்திரக்கரையிலுள்ள திருவஞ்சைக் களத்திற்குச் சென்றனர்.

கரபுரம், வீரசோழபுரம் எனப்பட்டதின் விவரம்

திரிசிரன் திரிசிரபுரத்தை தன் பெயரால் உண்டாக்கி ஆண்டகாலத்தில் அதன்பக்கம் ஐம்பதுமைல் தூரத்திலுள்ள இக்கருவூரை கரன் கைப்பற்றிக்கொண்டதுபற்றி இதற்கு கரபுரமென பெயர் ஏற்பட்டது. இதன் விவரம் கருவூர்ஸ்தலபுராணம், சூளாமணி இவைகளில் தெரிவிக்கப்பட்டுளது.

"கஞ்சனெண்ணுதி புரங் கரபுரம் பாற்கரபுரம்வீரசோழபுரம்
வஞ்சுளாரணியம் வஞ்சிதாயூர்சண்மங்கள க்ஷேத்திரங்கருவூர்
விஞ்சுறுகருப்பபுரிமுதனுமம் விளங்குதொல்பதியின்வீற்றிருக்கும்
செஞ்சுடப் பொருளினிருபதமேனைத்தேவர் பொன்முடிக்கனிகலனே.

(கருர் ஸ்தலபுராணம்.)

மழைக்கரும்புங் கொடிமுல்லைமருங்கேறவரம்பனைந்துதடாவி நீண்ட
கழைக்கரும்பு கண்ணீனுங் கரபுரத்தார் கோமாளிக்கதிர்வேற்காளை
தழைக்கரும்பு மிளமுலையா யெரிக்கக்கதிரோன் வழிமருகனி வனீரீர்ந்தண்
தழைக்கரும்பின் முருகுயிர்க்குந்தாரகலஞ் சார்ந்தவர்கடவஞ்சாரே.

(சூளாமணி.)

ஸ்தலபுராணச்செய்யுளில் ஆதிபுரம் எனச் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து கரன் இவ்விடம்வருவதற்கு முன்னர் அப்பெயராலேயே இவ்வூர் வழங்கிவந்திருக்க வேண்டும். பின்னர் வீரசோழன் ஆண்டகாலம் துவக்கி வீரசோழபுரம் என்றழைக்கப்பட்டிருக்கலாம்.

அருணகிரிநாதர் பாடியது

கோவூர், ஆனூர், கோநகர், திருநகர் எனப்பலபெயர்களால் காமதேனுவால் சுவாமி பூஜிக்கப்பட்டதைக் கொண்டு அழைக்கப்பட்ட இவ்வூர் ஈசுவரியை இவர் "கோகுலசக்தி" எனக்குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

"வெற்றிப்பொடியணிமேனியர் கோதல
சத்திக்கிடமருள்தாதகி வேணியர்
வெற்புப் புரமது நீறெழல் காணிய—ருள்பாலா
வெற்புத்தட முலையாள் வலிநாயகி
சித்தத்தமர்குமாரா வெமையாள்கொள
வெற்றிப்புகழ் கருவூர்தனின்மேவிய பெருமாளே.

தேவாரப் பாடல்கள்.

திருஞானசம்பந்தர் பாடியது :—

பண்—இந்தளம்

தொண்டெலாமலர் தூவியேத்த நஞ், சுண்டலாருயிராய தன்மையர்
கண்டனார் கருவூருளானிலை, அண்டனா ரருளீயுமன்பரே. 1

நீதியார் நினைந்தாய் நான்மறை, ஓதியாரொடுங் கூடிலார் குழைக்
காதினார் கருவூருளானிலை, ஆதியாரடியார் தமன்பரே. 2

விண்ணுலா மதி சூடி வேதமே, பண்ணுளார் பரமாய பண்பினர்
கண்ணுளார் கருவூருளானிலை, அண்ணலாரடியார்க்கு நல்லரே. 3

முடியர் மும்மதயானை யீருரி, பொடியர் பூங்கணை வேளைச்செற்றவர்
கடியுளார் கருவூருளானிலை, அடிகள் யாவையுமாய வீசரே. 4

பங்கயம் மலர்ப்பாதர் பாதியோர், மங்கையர் மணி நீலகண்டர் வான்
கங்கையர் கருவூருளானிலை, அங்கையோடரவத்தமண்ணலே. 5

தேவர் திங்களும் பாம்புஞ் சென்னியில், மேவர்மும்மதிலெய்த வில்லியர்
காவலர் கருவூருளானிலை, மூவராகிய மொய்ம்பரல்லரே. 6

பண்ணினார் படியேற்றர் நீற்றர் மெய்ப், பெண்ணினார் பிறை தாங்கு நெற்றியர்
கண்ணினார் கருவூருளானிலை, நண்ணினார் நமையாளு நாதரே. 7

கடுத்த வாளரக்கன் கயிலையைய், எடுத்தவன்றலை தோளுந் தாளினால்
அடர்த்தவன் கருவூருளானிலை, கொடுத்தவன்னருள் கூத்தனல்லனே. 8


உழுதுமாநிலத்தேன மாகிமால், தொழுது மாமலரோனுங்காண்கிலார்
கழுநினான் கருவூருளானிலை, முழுதுமாகிய மூர்த்தி பாதமே. 9

புத்தர் புன்சமணாதர் பொய்யுரைப், பித்தர் பேசிய பேச்சை விட்டு மெய்ப்
பத்தர் சேர் கருவூருளானிலை, அத்தர் பாதமடைந்து வாழ்மினே. 10

கந்தமார் பொழிற் காழி ஞானசம், பந்தன் சேர் கருவூருளானிலை
எந்தையைச் சொன்ன பத்தும் வல்லவர், சிந்தையிற்றுயராய தீர்வரே. 11


நெரூர்.

இது கரூருக்கு வடமேற்கில் 7 மைல் தூரத்தில் காவேரியின் தென்கரையிலுள்ளஒரு அழகிய அக்கிரஹாரம். இந்த இடத்தில் தான் தென்னிந்தியாவின் மிகக்கியாதிபெற்ற ராஜயோகியாயும் ஸித்தபுருஷராயுமிருந்த ஸதாசிவ பிரம்மத்தின் ஸமாதி இருக்கிறது. இந்த ஸதாசிவேந்திரர் பூர்வாசிரமத்தில் திருவிசநல்லூர் கிராமத்தைச்சேர்ந்தவர். பால்யத்திலிருந்தேரொம்பவும் விரக்தராயிருந்தவர். கல்யாணமாகுமுன்னமேயே இல்லறம் துறந்து வெளிக்கிளம்பினர். பரமசிவேந்திரஸரஸ்வதியென்னும் பெரியவரிடம் ஸன்யாஸம் பெற்றனர். எப்பொழுதும் பிரம்மத்தினிடத்திலே லயித்து ஆநந்தத்தில் மூழ்கினவராய்ச் சரீரத்தையே மறந்து ஸ்வேச்சையாய் திரிந்தனர். இவர் சுமார் 150 வருஷங்களுக்கு முந்தித்தானிருந்தவராதலால் இவரது அத்புத செயல்களனேகம் பரம்பரையய் வெளிவந்திருக்கின்றன. இவர் ஒரே ஸமயத்தில் பலவிடங்களில் பலருக்கு தர்சனம் கொடுத்தனர். ஒரு ஸமயம் இவர் ஸ்வேச்சையாய் மெய்மறந்து திரிகையில் ஒரு துலுக்கனின் அந்தப்புரம் இறங்கியிருந்த கூடாரத்துக்குள் நுழைந்துவிட்டார். உடனே அத்துலுக்கன் கோபபாவசனாய் தன் கத்தியை உருவி இம்மஹானது கையில் ஒன்றை வெட்டிவிட்டான். கை துண்டாய் கீழே விழுந்தும் கூட அதை கொஞ்சமேனும் லக்ஷ்யம் செய்யாமல் இவர் ஆனந்தமாகப் பாடிக்கொண்டு சென்றார். இதைக்க




ஸ்ரீ ஸதாசிவ பிரும்மேந்திராளின் ஸமாதி.

ண்டதும் அத்துலுக்கனுக்குண்டான ஆச்சர்யத்துக்கு ஓர் எல்லையில்லை. இவர் யாரோ பெரிய மஹானென்று தெரிந்துகொண்டு கீழே கிடந்த இவரது கையையும் எடுத்துக்கொண்டு இவர் பின்னாடியே ஏழுநாள் இராப்பகலாய் தொடர்ந்தான். ஏழாவதுநாள் ஸதாசிவேந்திரர் அத்துலுக்கனைத் திரும்பிப் பார்த்து என் பின் தொடருகிறாயென்று கேட்க அதற்கவன் பெரிய அபராதம் செய்துவிட்டேன். க்ஷமித்தருளவேண்டுமென்றான். அப்பொழுதும் என்ன அபராதம் செய்தாயென்று கேட்டார். கையை வெட்டிவிட்டேனென்று சொன்னதும் யாருடைய கையையென்றார். இது அவனுக்கு இன்னுமாச்சரியத்தைக்கொடுத்தது. தங்களுடையதுதானென்றதும் அந்த கையை மறுபடி சேர்த்துவைக்கச்சொல்லி தமது மற்றொரு கரத்தால் தடவிக்கொடுத்தார். உடனே கை முன்போலாய்விட்டது. இதைக்கண்ட துலுக்கன் அவர் காலில் விழுந்து அதை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தன்னை உஜ்ஜீவிக்கச்செய்யவேண்டுமென்று மன்றாடினான். பிறகு அவனை அநுக்ரஹித்துவிட்டுச்சென்றார். இம்மாதிரி இவரது மஹிமைகள் கணக்கிலடங்கா. புதுக்கோட்டை தொண்டமான் மஹாராஜாவும் இவரநுக்ரஹத்தால்தான் ராஜ்யம் பெற்றனர். ஆதலால்தான் நெரூரிலுள்ள இவர் ஸமாதிக்கு பூஜை முதலியவைகளின் செலவுக்கு புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்திலிருந்தே இன்றைக்கும் கொடுக்கிறார்கள். புதுக்கோட்டை அரண்மனை பூஜையிலும் இவர் பிம்பம்தானுளது. இம்மஹானின் ஸமாதி இருப்பதால் இவ்வூருக்கு பல பெரியவர்கள் வருகிறார்கள். இதற்கு முன் சிருங்ககிரி பீடத்தை அலங்கரித்த ஸ்ரீஸச்சிதானந்த சிவாபிநவ நிருஸிம்ஹ பாரதீஸ்வாமிகளுக்கு இம்மஹானிடத்தில் அதிகமான கௌரவபுத்தி உண்டு. அவர்கள் இரண்டு தடவை இவ்விடத்திற்கு வந்து இவர் ஸமாதியை தர்சனம் செய்திருக்கிறார்கள். இவர்களது உருவப் படத்தையும் இவர்கள் ஸமாதியின் படத்தையும் இதில் பதிப்பித்திருக்கிறோம்.



ஸ்ரீ ஸதாசிவ பிரம்மேந்திராள்.




திருமழவாடி கோயில் கோபுரமும், மண்டபமும்.

திருமழவாடி.

இந்த ஸ்தலம் திருவையாற்றிலிருந்து வடமேற்கில் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இவ்விடத்தில் கொள்ளிட நதி உத்தரவாகினியாய்ச் செல்லுகிறது. எப்பொழுதும் புண்ணிய நதிகள் ஒரு திக்கிலிருந்து மற்றொரு திக்கில் மாறிச் செல்லுமிடத்திற்கு விசேஷம் அதிகம். அநேகமாய் அவ்விடத்தில் அந்த நதியில் ஸ்நாநம் செய்வது விசேஷ பலனை அளிக்கும். முக்கியமாய் அவ்விடங்களிலுள்ள மூர்த்தியின் பெருமையும் அதிகமே.

பலர் பூஜித்தது.

இவ்விடத்தில் அக்னி பகவானை ஈச்வரன் நிருத்தம் செய்யச் சொல்லி அந்தப்படி அவர் செய்தது பற்றி மழுவாடி எனப்பட்டது பின்னர் மழபாடி என்று ஏற்பட்டது. நந்திகேச்வரர் இவ்விடத்தில்தான் ஸுயசாதேவியை விவாஹம் செய்து கொண்டது. இப்பொழுதும் பங்குனி மாதத்தில் இத்திருக்கல்யாணம் நடைபெறுகிறது. விஷ்ணுவும் இந்திரனும் கூட இவ்விடமுள்ள ஈச்வரனைப் பூஜித்துள்ளார்கள். இவ்விடம் கோயிலிலுள்ள ஸோமாஸ்கந்த மூர்த்தி சிலா மூர்த்தமாய் ஏற்பட்டிருப்பது ஒரு விசேஷம். ஸ்தலவிருக்ஷமான பனை கோயில் பிராகாரத்திலிருந்துவருகிறது.



திருமழவாடி கோயில் பிரகாரமும், மண்டபமும்.

ஸ்தலத்தின் விசேஷம்.

ஸ்தலபுராணப்படி பிரளயகாலத்தில் சிவபெருமான் காசி, சிதம்பரம், தாலவனம் எனப்படும் திருமழுவாடி இம் மூன்று ஸ்தலங்களையும் தாங்கி ரக்ஷிக்கிறார். இவ்விடமுள்ள ஸ்வயம்பு வச்சிரலிங்கம் சிறந்ததுமன்னியில் காவேரி நதியில் இவ்விடம் ஸ்நானம் விசேஷமானது. வேதவியாஸர் தனக்கு நேரிட்டிருந்த வாதநோய் இவ்விடம் வந்து நீங்கப் பெற்றனர். முன்னொரு காலத்தில் இவ்விடம் கோயில் பலிபீடத்தில் போடப் பட்டிருந்த பலியை ஒரு கழுகு வந்து சாப்பிட யத்தனிக்கையில் அதை ஒரு வேடன் அம்பினால் எய்ய அது இறந்ததும் ஈச்வரன் அதற்கு மோக்ஷமளித்தார். இன்னும் அக்கழுகின் பரம்பரை கோயில் கோபுரத்தில் வசித்து வருகிறது! புருஷாமிருக முனிவர் பிரம்மாவினுடைய ஆத்ம பூஜையிலிருந்த வச்சிரலிங்கத்தைப் பெற்று அதை இவ்விடத்தில் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்வித்தார். மார்க்கண்டேயர் ஒரு விசாக பௌர்ணமி அன்றையதினம் இவ்விடம் வந்து மழுவின் நடனத்தை தெரிசித்தனர். பாண்டிய நாட்டின் கண்ணுள்ள சோழவந்தான் கிராமத்திலுள்ள லம்படரென்னும் பிராம்மணரின் புத்திரரான சுஷேணன் மஹாபாதகங்களைச் செய்தாலும் இவ்விடம் கோயிலிலுள்ள சிவகங்கையில் ஸ்நானத்தால் மோக்ஷ மடைந்தான். சந்திரன் தக்ஷனால் க்ஷயமடையுமாறு பெற்ற சாபத்தை இவ்விடம் வந்து பதினைந்து தினம் அனுபவித்து அதன் பிறகு பதினைந்து தினமும் நாளுக்கு நாள் கிரமமாக விருத்தி அடையப்பெற்றதின் நிமித்தயம் சுவாமிக்கு வைத்யநாதரென்று பெயருண்டாயிற்று. சூரியபகவான் மற்றைய ஜனங்களில் பாபிகளும தன்னை தரிசித்து பாபத்தைத் தீர்த்துக்கொண்டு அதனால் தனக்கு நேரிட்ட உபத்திரவத்தை இவ்விடம் பகவானை தரிசித்து நீக்கிக் கொண்டனர். லக்ஷ்மி ஒரு ஸமயம் நாராயண

னைப் பிரிந்து லாலுகுடி என்றும் திருத்தவத்துறையில் சிவனைக் குறித்து யோகத்தில் அமர்ந் திருக்கையில் விஷ்ணு தானும் சிவனும் ஒன்றே என்பதைக் காட்டவேண்டி அவரை இந்த ஸ்தலத்தில் பூஜித்துத் தனது சரீரத்தின் வலது பாதியை அவருக்கு அளித்து இவ்விரண்டு சரீரமும் ஒன்றாகிய சங்கரநாராயணரை இந்த ஸ்தலத்திற்கு ஆக்கினேய திக்கில் ஆறேகால் குரோச தூரத்திலுள்ள தஞ்சை சிவகங்கை தீர்த்தக்கரையில் எப்பொழுதும் பிரசன்னமாகி ஜனங்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற உத்தேசம் கொண்டனர். பார்க்கவமுனிவரால் நேரிட்ட சாபத்தை அக்னிபகவான் இவ்விடம் மூர்த்தியைப் பூஜித்து நிவிர்த்தித்துக் கொண்டனர்.

நந்திகேச்வரர் பெருமை.

சிலாதகர் திருவையாற்றில் தமது தவ மகிமையால் நந்திகேச்வரரைப் புத்திரராய்ப் பெற்றவர் இவ்வூரில் வஸிஷ்டருக்கும் அருந்ததிக்கும் உண்டான ஊர்மிளா தேவியை மீனமாஸம் சுக்லபக்ஷம் சுக்கிரவாரம் புனர்வஸு நக்ஷத்திரத்தில் மணந்தார். இப்பொழுதும் வருஷாவருஷம் இந்தத் திருக்கலியாணத்தைக் கொண்டாடத் திருவையாற்றிலிருந்து நந்திகேச்வரர் இவ்விடம் போகிற ஐதிஹ்யம் கொண்டாடப்படுகிறது.

சிலா சாஸன விசேஷம்.

சிலாசாஸனங்கள் இக்கோயிலில் பல உள்ளன. அவைகளின்படி இவ்வூர் பொய்கை நாட்டைச் சேர்ந்திருந்தது. இதற்கு ஜனசிந்தாமணிநல்லூர் எனப் பெயர் ஏற்பட்டிருந்தது. முதலாவது ராஜராஜசோழன் காலத்தில் (கி-பி-985-1013) கர்ப்பகிருஹம் புதுப்பிக்கப்பட்டதுமன்னியில் பின்னர் அவனது மகன் ராஜேந்திரசோழன் காலத்தில் (1012-1053) இந்த கர்ப்ப கிருஹத்தின் மேலுள்ள விமானம் வேலை செய்யப்பட்டதுமன்னியில் ஏற்கனவே அதிலிருந்த சிலாலிகிதங்களும் புஸ்தகத்தில் குறிக்கப்பட்டுப் பின்னரும் வரையப்பட்டது. ஹொய்சலமன்னர் நரஸிம்மனிடம் அதிகாரம் வகித்த வல்லயர் என்பவர் இவ்விடத்தில் ஒரு ஸந்நிதி ஏற்படுத்தினர். திருவாதிரைக் காலத்தில் ஜனங்களுக்குப் போஜனமளிக்கவும் அவல் நிவேதனம் செய்யவும் நிதி வைக்கப்பட்டது. தினப்படி காவேரி நதியிலிருந்து சுவாமிக்கு அபிஷேகஜலம் கொண்டுவர பூமிதானமளிக்கப்பட்டது. மலைமண்டலத்தைச்சேர்ந்த ஏரானபுரத்திலுள்ள ஒரு வியாபாரி மூன்றாவது பிராகாரத் தெற்கு கோபுரவாசலில் கிணர் இறக்கித் தண்ணீரைத் தொட்டியில் கட்டி கோயிலுக்குள் செல்லும் ஜனங்களை கால் அலம்பிக் கொள்ள நிலம் வாங்கிவைத்தனர். சகம் 1412ல் ராஜாகண்ட கோனேரி ராயன் ஒரு மண்டபம் கட்டி வைத்தனர். பாண்டியமன்னர் குலசேகரர் காலத்தில் நாற்பத்தெண்ணுபிரநம்பி எனப்படும் நெற்குப்பை உடையான் ஆராவமுது பெரியாாயன் பிக்ஷாடன மூர்த்தியை பிரதிஷ்டை செய்து வைத்தனன். ராஜேந்திரசோழன் காலத்தில் மாசி சஷ்டியிலும் ஆனி அஷ்டமியிலும் சந்தர்ப்பணம் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ராஜராஜதேவன் காலத்தில் எதிரிலிச்சோழ மூவேந்தாயர் இக்கோயிலைக் காத்துவர நியமிக்கப்பட்டவர் கோயிலை விஸ்தரித்து சில மண்டபங்களையும் கட்டிவைத்தனர். வீரபாண்டிய தேவமஹாராஜன் காலத்தில் விரைநாடு ஜனங்கள் பெரியநட்டான் திருமதிலை

யும், சில மண்டபம், பிராகாரங்களையும் புதுப்பித்தார்கள். அடியில் சண்ட விக்கிர சோழ தேவர் சாசனம் அவரது இரண்டு பட்டமஹிஷிகளின் பெயரையும் அவர் சிம்பாசனமேறினதையும் குறிப்பிடுகிறது—

தென் இந்திய சிலாசாஸனங்கள். 3-ம் புத்தகம் பக்கம் 182—184

ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாலை மிடைந்து பொன்மாலை திகழப் பாமாலை மலிந்த பருமணித்திரள் புயத் திருநில மடந்தையோடு ஜெயமகளிருப்பதக் கனவரை மார்வந் தநதெநப் பெற்றுத் திருமகளொரு தநியிருப்பக் கலைமகள் சொற்றிறம் புணர்ந்த கற்பினளாகி விருப்பொடு நாவகத் திருப்ப திசை தொறுந் திகிரியொடு செங்கோல் நடப்ப அகில புவனமுங் களிப்ப தோர் புதுமதி போல் வெண்குடை மீமிசை நிழற்ற கருங்கலியொளித்து வந்நிலத்திடை கிடப்பக் குளத்திடைத் தெலுங்க வீமன் விலங்கல் மிசை யேறவுங் கலிங்க பூமியைக் கநரி பருகவும் ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும் வேங்கை மண்டலத் தாங்கிதி திருந்து வடதிசை வடிப்படுத்தருளி தெந் திசைத் தருமமுந் தவமுந் தானமுந் தழைப்ப வேதமும் மெய்மையுமாதியுகம் போலத் தலைத்தலைச் சிறப்ப வந்தருளி வெலற்கரும் போற்புலியாணை பார்த்திவர்சூட நிறை மணி மகுடம் முறைமையிற் சூடி மன்னுயிர்க்கெல் லாமின்னுயிர்த்தாய் போலத் தன்னளி பரப்பித் தனித்தனி பார்த்து மண்முழுதுங் களிப்ப மநுநெறி வளர்த்து தங் கோயிற் கொற்ற வாசல் புறத்து மணி நாவொடுங்க முரசுகள் முழங்க விசையமும் புகழும் மென்மேலோங்க வாழி வாழி இம்மாநிலங் காக்கத் திருமணி பொற்ரேட்டெழுது பத்தாண்டு வருமுறை முந்நே மந்நவர் சுமந்து திறை நிரைத்துச் சொரிந்த செம்பொற் குவையால் தங்குல நாயகந் தாண்டவம் பயிலுஞ் செம்பொந் நம்ப லஞ் சூழ் திருமாளிகையும் கோபுரவாசல் கூடசாலைகளும் உலகு வலங்கொண்டொளி விளங்கு நேமிக்குலவரை உகைய குன்றமோடு நின்றெனப் பசும் பொந் மேய்ந்து பலி வளர் பீடமும் விசும்பொளி தழைப்ப விளங்கு பொந் மேய்ந்து இருநிலந்தழைப்ப இமையவர்களிப்ப பெரிய திருநாள் பெரும்பியர் விழா வெறும் உயர் புரட்டாதி உத்திரட்டாதியில் அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர் இந்பர் வாழ எழுந்தருளுவதற்குத் திருத்தேர்க்கோயில் செம்பொன் மேய்ந்து பருந்திரள் முத்தின் பயில்வடம் பரப்பி நிறைமணி மாளிகை நெடுந்திருவீதி தந திருவளர் பியரால்ச் செய்து சமைத்தருளி பைம்பொற்குழித்த பரிகல முதலால் செம்பொற் கற்பகத்தோடு பரிச்சின்நமும் அளவிளாதநவொளி பெற வமைத்துப் பததாமாண்டில் சித்திரைத்திங்கள் அத்தம் பெற்ற ஆதித்தவாரத்துத் திருவளர் மதியின் தூயொளிப் பக்கத்து இந்ந பலவும் இநிது சமைத்தருளி ஒரு குடை நிழற் கீழ் தல முழுதுங் களிப்பச் சேழியர் வெஞ்சுரம் புக சேரலர் கடல் புக அழிதரு சிங்களர் அஞ்சி நெஞ்சலமர கங்கர் திரையிடக் கந்நடர் வெந்நிட கொங்கரொதுங்க கொங்கணர் சாயமற் றெத்திசை மந்நருந்தந்தமக்கரணென திருமலர்ச் சேவடி உரிமையிலிறைஞ்ச ஆங்கவந் மகிமுந் கந்கையொப்பாகிய தெரிவையர் திலதந் தநீாகபதாகை புரிகுழல் மடப்பிடி புனிதகுணவநிதை திரிபுவனமுழுதுடையாள் அவந் திருவுளத்தருள் முழுதுமுடையாளெனவுட நிருப்ப ஊழியுந் நெடுமாலாகத்துப் பிரியாதென்றுந் திருமகளிருந்ததென மாதர்மடமயில் பூதலத்தருந்ததி அரணிய கற்பிற் தரணிமுழுதுடையாளவந் திருமார்வத்தருளொடு மிருப்

பச்செம்பொர் வீரஸிம்ஹாஸநத்து திரிபுவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேஸரிவர்மரான திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரமசோழதேவற்கு யாண்டு ௰௫ ஆவது திரிபுவனமுழுதுடைவளநாட்டுப் பொய்கைநாட்டு உடையார் திருமழுவாடி உடையார் கோயிலில் ஆதிசண்டேஸ்வரதேவர் ஆதேசம் அருளால் இக்கோயிலில் ஸ்ரீமாஹேஸ்வரரோமும் ஸ்ரீகாரியஞ் செய்வாரும் இக்கோயில் கணக்கு நெல்குப்பையுடையானும் உள்ளிட்ட ஸ்தாநத்தோம் எழுத்து........

தேவாரப் பாடல்கள்.

திருஞானஸம்பந்தர் பாடியது:—

இரண்டாம் திருமுறை—பண்—இந்தளம்.

களையும்வல்வினையஞ்சனெஞ்சேகருதார்புர முளையும்பூசல்செய்தானுயர்மால்வரைநல்விலா
வளையவெஞ்சரம்வாங்கியெய்தான்மதுத்தும்பிவண்டலையுங்கொன்றையந்தார்மழபாடியுளண்ணலே. 1

காச்சிலாதபொன்னோக்குங்கனவயிரத்திர ளாச்சிலாதபளிங்கினனஞ்சுமுனாடினான்
பேச்சினாலுமக்காவதென்பேதைகாள்பேணுமின் வாச்சமாளிகைசூழ்மழபாடியைவாழ்த்துமே. 2

உரங்கெடுப்பவனும்பர்களாயவர்தங்களைப் பரங்கெடுப்பவனஞ்சையுண்டுபகலோன்றனை
முரண்கெடுப்பவன்முப்புரந்தீயெழச்செற்றுமுன்வரங்கொடுப்பவன்மாமழபாடியுள்வள்ளலே. 3

பள்ளமார்சடையிற்புடையேபடையப்புனல் வெள்ளமாதரித்தான்விடையேறியவேதியன்
வள்ளன்மாமழபாடியுண்மேயமருந்தினை யுள்ளமாதரிமின்வினையாயினவோயவே. 4

தேனுலாமலர்கொண்டுமெய்த்தேவர்கள்சித்தர்கள் பானேயஞ்சுடனாட்டமுன்னாடியபால்வணன்
வானநாடர்கள்கைதொழுமாமழபாடியெங்கோனைநாடொறுங்கும்பிடவேகுறிகூடுமே. 5

தெரிந்தவன்புரமூன்றுடன்மாட்டியசேவகன் பரிந்துகைதொழுவாரவர்தம்மனம்பாவினான்
வரிந்தவெஞ்சிலையொன்றுடையான்மழபாடியைப்புரிந்துகைதொழுமின்வினையாயினபோகுமே. 6

கந்தவார்குழலாளுமைதன்னொருகூறுடை யெந்தையானிமையாதமுக்கண்ணினனெம்பிரான்
மைந்தன்வார்பொழில்சூழ்மழபாடிமருந்தினைச் சிந்தியாவெழுவார்வினையாயினதேயுமே. 7

இரக்கமொன்றுமிலானிறையான்றிருமாமலை யுரக்கையாலெடுத்தான்றனதோண்முடிபத்திற
விரற்றலைந்நிறுவியுமையாளொடுமேயவன் வரத்தையேகொடுக்கும்மழபாடியுள்வள்ளலே. 8

ஆலமுண்டமுதமமரர்க்கருளண்ணலார்காலனாருயிர்வீட்டியமாமணிகண்டனார்
சாலநல்லடியார்தவத்தார்களுஞ்சார்விட மாலயன்வணங்குமழபாடியெம்மைந்தனே. 9

கலியின்வல்லமணுங்கருஞ்சாக்கியப்பேய்களு நலியுநாள்கெடுத்தாண்டவென்னாதனார்வாழ்பதி
பலியும்பாட்டொடுபண்முழவும்பலவோசையு மலியுமாமழபாடியைவாழ்த்திவணங்குமே. 10

மலியுமாளிகைசூழ்மழபாடியுள்வள்ளலைக் கலிசெய்மாமதில்சூழ்கடற்காழிக்கவுணியன். 11

மூன்றாம் திருமுறை—பண்—கொல்லி.

காலையார்வண்டினங்கிண்டியகாருறு, சோலையார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலையார்விடமணிவேதியன்விரும்பிட, மாலையார்மதிதவழ்மாமழபாடியே. 1

கறையணிமிடறுடைக்கண்ணுதனண்ணிய, பிறையணிசெஞ்சடைப்பின்னகன்பேணுமூர்
துறையணிகுருகினந்தாமலர்துதையவே, மறையணிநாவினான்மாமழபாடியே. 2

அந்தணர்வேள்வியுமருமறைத்துழனியுஞ், செந்தமிழ்க்கீதமுஞ்சீரினால்வளர்தரப்
பந்தணைமெல்விரலாளொடும்பயில்விட, மந்தம்வந்துலவுசீர்மாமழபாடியே. 3

அத்தியினுரிதனையழகுறப்போர்த்தவன், முத்தியாய்மூவரின்முதல்வனாய்நின்றவன்
பத்தியாற்பாடிடப்பரிந்தவர்க்கருள்செயு, மத்தனாருறைவிடமணிமழபாடியே. 4

கங்கையார்சடையிடைக்கதிர்மதியணிந்தவன், வெங்கண்வாளரவுடைவேதியன்றீதிலாச்
செங்கயற்கண்ணுமையாளொடுஞ்சேர்விட, மங்கைமார்நடம்பயின்மாமழபாடியே. 5

பாலனாராருயிர்பாங்கினாலுணவருங், காலனாருயிர்செகக்காலினாற்சாடினான்
சேலினார்கண்ணினாடன்னொடுஞ்சேர்விட, மாலினார்வழிபடுமாமழபாடியே. 6

விண்ணிலாரிமையவர்மெய்ம்மகிழ்ந்தேத்தவே, யெண்ணிலார்முப்புரமெரியுணநகைசெய்தார்
கண்ணினாற்காமனைக்கனலெழக்காய்ந்தவெம், மண்ணலாருறைவிடமணிமழபாடியே. 7

கரத்தினாற்கயிலையையெடுத்தகாரரக்கன, சிரத்தினையூன்றலுஞ்சிவனடிசரணெனா
இரத்தினாற்கைந்நரம்பெடுத்திசைபாடலும், வரத்தினான்மருவிடமாமழபாடியே. 8

ஏடுலாமலர்மிசையயனெழின்மாலுமாய், நாடினார்க்கரியசீர்நாதனாருறைவிடம்
பாடெலாம்பெண்ணையின்பழம்விழப்பைம்பொழின் மாடெலாமல்குசீர்மாமழபாடியே. 9

உறிபிடித்தூத்தைவாய்ச்சமணொடுசாக்கியர், நெறிபிடித்தறிவிலாநீசர்சொற்கொள்ளன்மின்
பொறிபிடித்தரவினம்பூணெனக்கொண்டுமான், மறிபிடித்தானிடமாமழபாடியே. 10

ஞாலத்தாராதிரைநாளினானாடொறுஞ், சீலத்தான்மேவியதிருமழபாடியை
ஞாலத்தான்மிக்கசீர்ஞானசம்பந்தன்சொற், கோலத்தார்பாடுவார்குற்றமற்றார்களே. 11

மூன்றாம் திருமுறை—பண்—கொல்லி.

அங்கையாரழலன்னழகார்சடைக், கங்கையான்கடவுள்ளிடமேவிய
மங்கையானுறையும்மழபாடியைத், தங்கையாற்றொழுவார்தகவாளரே. 1

விதியுமாம்விளைவாமொழியார்ந்ததோர் கதியுமாங்கசிவாம்வசியாற்றமா
மதியுமாம்வலியாமழபாடியுள், நதியந்தோய்சடைநாதனற்பாதமே. 2

முழவினான்முதுகாடுறைபேய்க்கணக், குழுவினான்குலவுங்கையிலேந்திய
மழுவினானுறையும்மழபாடியைத், தொழுமினுந்துயரானவைதீரவே. 3

கலையினான்மறையான்கதியாகிய, மலையினான்மருவார்புரமூன்றெய்த
சிலையினான்சேர்திருமழபாடியைத், தலையினால்வணங்கத்தவமாகுமே. 4

நல்வினைப்பயனான்மறையின்பொருள், கல்வியாயகருத்தனுருத்திரன்
செல்வன்மேயதிருமழபாடியைப், புல்கியேத்துமதுபுகழாகுமே. 5

நீடினாருலகுக்குயிராய்நின்று, ஆடினானெரிகானிடைமாநடம்
பாடினாரிசைமாமழபாடியை, நாடினார்க்கில்லைநல்குரவானவே. 6

மின்னினாரிடையாளொருபாகமாய், மன்னினானுறைமாமழபாடியை
பன்னினாரிசையால்வழிபாடுசெய், துன்னினார்வினையாயினவோயுமே. 7

தென்னிலங்கையர்மன்னன்செழுவரை, தின்னிலங்கவடர்த்தருள்செய்தவன்
மன்னிலங்கியமாமழபாடியை, யுன்னிலங்கவுறுபிணியில்லையே. 8

திருவினாயகனுஞ்செழுந்தாமரை, மருவினானுந்தொழத்தழன்மாண்பம
ருருவினானுறையும்மழபாடியைப், பரவினார்வினைப்பற்றறுப்பார்களே. 9

நலியுநன்றறியாச்சமண்சாக்கியர், வலியசொல்லினுமாமழபாடியு
ளொலிசெய்வார்கழலான்றிறமுள்கவே, மெலியுநம்முடன்மேல்வினையானவே. 10

மந்தமுந்துபொழின்மழபாடியு, ளெந்தைசந்தமினிதுகந்தேத்துவான்
கந்தமார்கடற்காழியுண்ஞானசம், பந்தன்மாலைவல்லார்க்கில்லைபாவமே. 11

அப்பர் என்கிற திருநாவுக்கரசுசுவாமிகள் பாடியது:—

ஆறாம் திருமுறை—திருத்தாண்டகம்.

நீறேறுதிருமேனியுடையான்கண்டாய் நெற்றிமேலொற்றைக்கணிறைந்தான்கண்டாய்
கூறாகவுமைபாகங்கொண்டான்கண்டாய் கொடியவிடமுண்டிருண்டகண்டன்கண்டா
யேறேறியெங்குந்திரிவான்கண்டாயேழுலகுமேழ்மலையுமானான்கண்டாய்
மாறானார்தம்மரணமட்டான்கண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 1

கொக்கிறகுசென்னியுடையான்கண்டாய் கொல்லைவிடையேறுகூத்தன்கண்டா
யக்கரைமேலாடலுடையான்கண்டா யனலங்கையேந்தியவாதிகண்டா
யக்கொடரவமணிந்தான்கண்டாயடியார்கட்காரமுதமானான்கண்டாய்
மற்றிருந்தகங்கைச்சடையான்கண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 2

நெற்றித்தனிக்கண்ணுடையான்கண்டாய்நேரிழையோர்பாகமாய்நின்றான்கண்டாய்
பற்றிப்பாம்பாட்டும்படிறன்கண்டாய்பல்லூர்பலிதேர்பரமன்கண்டாய்
செற்றார்புரமூன்றுஞ்செற்றான்கண்டாய்செழுமாமதிசென்னிவைத்தான்கண்டாய்
மற்றொருகுற்றமிலாதான்கண்டாய் மழபாடிமன்னுமணாளன்றானே. 3

அலையார்ந்தபுனற்கங்கைச்சடையான்கண்டா யண்டத்துக்கப்பாலாய்நின்றான்கண்டாய்
கொலையானகூற்றங்குமைத்தான்கண்டாய்கொல்வேங்கைத்தோலொன்றுடுத்தான்கண்டாய்
சிலையாற்றிரிபுரங்கள்செற்றான்கண்டாய் செழுமாமதிசென்னிவைத்தான்கண்டாய்
மலையார் மடந்தைமணாளன்கண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 4

உலந்தார்தமங்கமணிந்தான்கண்டாயுவகையோடின்னருள்கள்செய்தான்கண்டாய்
நலந்திகழுங்கொன்றைச்சடையான்கண்டாய்நால்வேதமாறங்கமானான்கண்டா
யுலர்ந்தார்தலைகலனாக்கொண்டான்கண்டாயும்பரார்தங்கள்பெருமான்கண்டாய்
மலர்ந்தார்திருவடியென்றலைமேல் வைத்தமழபாடிமன்னுமணாளன்றானே. 5

தாமரையான்றன்றலையைச்சாய்த்தான்கண்டாய்தகவுடையார்நெஞ்சிருக்கைகொண்டான்கண்டாய்
பூமலரானேத்தும்புனிதன்கண்டாய் புணர்ச்சிப்பொருளாகிநின்றான்கண்டா
யேமருவுவெஞ்சிலையொன்றேந்திகண்டா யிருளார்ந்தகண்டத்திறைவன்கண்டாய்
மாமருவுங் கலைகையிலேந்திகண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 6

நீராகிநெடுவரைகளானான்கண்டாய்நிழலாகிநீள்விசும்புமானான்கண்டாய்
பாராகிப்பௌவமேழானான்கண்டாய்பகலாகிவானாகிநின்றான்கண்டா

யாரேனுந் தன்னடியர்க்கன்பன்கண்டாயனுவாகியாதியாய்நின்றான்கண்டாய்
வாரார்ந்தவனமுலையாள்பங்கன்கண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 7

பொன்னியலுந்திருமேனியுடையான்கண்டாய் பூங்கொன்றைத்தாரொன் றணிந்தான்கண்டாய்
மின்னியலும்வார்சடை யெம்பெருமான்கண்டாய்வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தான்கண்டாய்
தன்னியல்பார்மற்றொருருவரில்லான்கண்டாய் தாங்கரியசிவந்தானாய் நின்றான்கண்டாய்
மன்னிய மங்கை யோர்கூறன்கண்டாய் மழபாடிமன்னு மணாளன்றானே. 8

ஆலாலமுண்டுகந்த வாதிகண்டா யடையலர்தம்புரமூன்று மெய்தான்கண்டாய்
காலாலக்காலனையுங் காய்ந்தான்கண்டாய் கண்ணப்பர்க் கருள்செய்த காளைகண்டாய்
பாலாருமொழிமடவாள் பாகன்கண்டாய் பசுவேறிப்பலிதிரியும் பண்பன்கண்டாய்
மாலாலுமறிவரிய மைந்தன்கண்டாய் மழபாடிமன்னு மணாளன்றானே. 9

ஒருசுடராயுலகேழு மானான்கண்டா யோங்காரத் துட்பொருளாய் நின்றான்கண்டாய்
விரிசுடராய்விளங்கொளியாய் நின்றான்கண்டாய்விழவொலியும் வேள்வொலியு மானான்கண்டா
யிருசுடர்மீதோடா விலங்கைக்கோனை யீடழியவிருபதுதோ ளிறுத்தான்கண்டாய்
மருசுடரின்மாணிக்கக்குன்றுகண்டாய் மழபாடிமன்னு மணாளன்றானே. 10

ஆறாம் திருமுறை—திருத்தாண்டகம்

அலையடுத்தபெருங்கடனஞ்சமுதாவுண்டு அமரர்கடந்தலைகாததவையர்செம்பொற்
சிலையெடுத்துமாநாகநெருப்புக்கோத்துத்திரிபுரங்கடீயிட்டசெல்வர்போலு
நிலையடுத்தபசும்பொன்னான்முத்தானீண்ட நிரைவயிரப்பலகையாற்குவையார்த்துற்ற
மலையடுத்தமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 1

அறைகலந்தகுழன்மொந்தைவீணையாழுமந்தரத்திற்கந்தருவரமரரேத்த
மறைகலந்தமந்திரமுநீருங்கொண்டுவழிபட்டார்வானாளக்கொடுத்தியன்றே
கறைகலந்தபொழிற்கச்சிக்கம்பமேயகனவயிரத்திரடூணேகலிசூழ்மாட
மறைகலந்தமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 2

உரங்கொடுக்கு மிருண்மெய்யர்மூர்க்கர்பொல்லாவூத்தைவாய்ச்சமணர்தமையுறவாக்கொண்ட
பரங்கெடுத்திங்கடியேனையாண்டுகொண்டபவளத்தின்றிரடூணேபசும்பொன்முத்தே
புரங்கெடுத்துப்பொல்லாதகாமனாகம் பொடியாகவிழித்தருளிப் புவியோர்க்கென்றும்
வரங்கொடுக்கு மழபாடிவயிரத்தூணே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 3

ஊனிகந்தூணுறிகையர்குண்டர்பொல்லாவூத்தைவாய்ச்சமணருறவாகக்கொண்டு
ஞானகஞ்சேர்ந்துள்ள வயிரத்தைநண்ணாநாயேனைப் பொருளாகவாண்டுக்கொண்ட
மீனகஞ்சேர் வெள்ளநீர்விதியாற்சூடும்வேந்தனே விண்ணவர்தம்பெருமான்மேக
வானகஞ்சேர்மழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 4

சிரமேற்ற நான்முகன்றன் றலையுமற்றைத் திருமால்தன்செழுதலையும்பொன்றச்சிந்தி
யுரமேற்றவிரவிபற்றகர்த்துச்சோமனொளிர்கலைகள்படவுழக்கியுயிரைநல்கி
நரையேற்றவிடையேறிநாகம் பூண்டநம்பியையேமறைநான்குமோலமிட்டு
வரமேற்குமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 5

சினத்திருத்துஞ்சிறுபெறியார்குண்டர்தங்கள்செதுமதியார்தீவினைக்கேவிழுந்தேன்றேடிப்
புனத்திருத்தும்பொல்லாத பிண்டிபேணும் பொறியிலிபேன்றன்னைப்பொருளாவாண்டுக்கொண்டு

தனந்திருத்துமவர்திறத்தையொழியப்பாற்றித்தயாமூலதன்மவழியெனக்குநல்கி
மனந்திருத்துமழபாடிவயிரத்தூணே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 6

சுழித்துணையாம்பிறவிவழித்துக்கநீக்குஞ்சுருள்சடையெம்பெருமானேதூயதெண்ணீ
ரிழிப்பரியபசுபாசப்பிறப்பைநீக்குமென்றுணையே யென்னுடையபெம்மான்றம்மான்
பழிப்பரியதிருமாலுமயனுங்காணாப்பரிதியேசுருதிமுடிக்கணியாய்வாய்த்த
வழித்துணையாமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 7

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியது :—

ஏழாம் திருமுறை—பண்—நட்டராகம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுள்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. 1

கீளார்கோவணமுந்திருநீறுமெய்பூசியுன்றன்
றாளேவந்தடைந்தேன்றலைவாவெனையேன்றுகொணீ
வாளார்கண்ணிபங்காமழபாடியுள்மாணிக்கமே
கேளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 2

எம்மானெம்மனையென்றெனக்கெட்டனைச்சார்வாக
ரிம்மாயப்பிறவிப்பிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாம்பூம்பொழில்சூழ்மழபாடியுள்மாணிக்கமே
யெம்மானின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 3

பண்டேநின்னடி யேனடியாரடியார்கட் கெல்லாம்
தொண்டேபூண் டொழிந்தேன் றொடராமைத்துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடி யுள்மாணிக்கமே
அண்டாநின்னையல்லாலினியாரை நினைக்கேனே. 4

கண்ணாயேழுலகுங்கருத்தாயஅருத்தமுமாய்ப்
பண்ணாரின்தமிழாய்ப்பரமாயபரஞ்சுடரே
மண்ணார்பூம்பொழில்சூழ்மழபாடியுள்மாணிக்கமே
யண்ணாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 5


நாளார்வந்தணுகிநலியாமுனநின்றனக்கே
யாளாவந்தடைந்தேனடியேனையுமேன்றுகொணீ
மாளாநாளருளுமழபாடியுள்மாணிக்கமே
யாளாநுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. 6

சந்தாருங்குழையாய்சடைமேற்பிறைதாங்கிநல்ல
வெந்தார்வெண்பொடியாய்விடையேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ்மழபாடியுள்மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 7

வெய்யவிரிசுடரோன்மிகுதேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிடமிகுசெம்மையுள்நின்றவனே
மையார்பூம்பொழில்சூழ்மழபாடியுள்மாணிக்கமே
யையாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 8

நெறியேநின்மலனேநெடுமாலயன்போற்றிசெய்யுங்
குறியேநீர்மையனேகொடியேரிடையாள்தலைவா
மறிசேரங்கையனேமழபாடியுள்மாணிக்கமே
யறியேநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 9

ஏரார்முப்புரமுமெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன்மழபாடியுள்மேயவனைச்
சீரார்நாவலர்கோனூரனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. 10



கங்கைகொண்டசோழபுரம்.

முன்னொரு காலத்தில் சோழ ராஜாக்களின் ராஜதானியாயிருந்து பிரஸித்திபெற்றிருந்த இந்நகரம் தற்காலம் ஒரு சிறு கிராமமாய்த் திரிச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சேர்ந்ததாயும் தென் இந்தியா ரயில்வேயிலுள்ள ஆடுதுறை ஸ்டேஷனிலிருந்து போகக்கூடிய இடமாயுமிருக்கிறது. ஆடுதுறையிலிருந்து வடமேற்கில் பதினைந்து மைலுக்கு அப்பாலுள்ளது. கும்பகோணத்திலிருந்து வடக்கில் 24 மைல் தூரமுள்ளது. இவ்விருபாதையும் அணைக்கரை (Lower Anicut) மார்க்கமாய்ச் செல்லுகிறது.

இதற்கு இப் பெயர் உண்டானது கி. பி. 1012-ல் முதலாவது ராஜேந்திர சோழன் வடக்கில் கங்காநதி தீரம் வரை படை எடுத்துச்சென்று அவ்விடமிருந்து ஜலத்தை எடுத்து வந்து இந்த ஊரின் கோயிலிலுள்ள சிங்கக் கிணற்றில் விட்டதுபற்றி என்று சொல்லலாம். இவன் இதன் நிமித்தமே "கங்கைகொண்டான்" என்று பட்டப் பெயரையும் வகித்தான். அதற்கு முன் "முடிகொண்ட சோழபுரம்" என்று இவ்வூருக்குப் பெயர் வழங்கியிருந்ததாகச் சிலாசாஸனங்களிலிருந்து தெரியவருகிறது. "முடிகொண்ட சோழன்" என்றும் இந்த ராஜேந்திரசோழனுக்குப் பட்டப்பெயருண்டு.

ஜல வஸதி.

இந் நகரத்திற்கு ஜல ஸௌகரியத்திற்கு மேற்கில் 16-மைல் நீளமுள்ள பொன்னேரி என்று ஒரு பெரிய தடாகமுண்டு. அதற்கு ஜலம் பாய்ச்சக் கால்வாய்கள் கொள்ளிடநதியிலிருந்தும் வெள்ளாற்றிலிருந்தும் கருங்கல்லால் கட்டப்பட்டிருந்தன. அவைகள்

அழிந்து போனாலும் இன்னும் சில சின்னங்கள் அங்குமிங்கும் தற்காலத்தில் வெட்டிப் பார்த்தால் தெரியவருகின்றன.


கோயில் விவரம்.

இப்பொழுது இருக்கும் கோயில் ராஜேந்திர சோழராஜனால் கி. பி. 1012–42ல் கட்டப்பட்டது. விமானம் கர்ப்பகிருஹம் முழுமையும தஞ்சாவூர்க் கோயிலைப்போல் கருங்கல்லாலேயே கட்டப்பட்டு மேலே சுதையால் பூசப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒரு பிராகாரம் மட்டுந் தான் இருந்து வருகிறது.

அம்பாள் ஸந்நிதி ஏற்கனவே 'பள்ளிவாடி' என்ற இடத்தில் வடக்கே ஒரு மைல் தூரத்தில் இருந்ததாகவும் பிறகு துலுக்கர் காலத்தில் மந்திரியாயிருந்த ஆவுடைப்பிள்ளை உத்திரகைலாசமென்று சொல்லப்படும ஸந்நிதியிலுள்ள விசுவநாதர் விசாலாக்ஷி ஸ்தானத்தில் அந்த அம்மனைக்கொண்டுவந்து பிரதிஷ்டை செய்ததாகவும் சொல்லுகிறார்கள். இதே மாதிரி தென் பிராகாரத்திலுள்ள தக்ஷிண கைலாஸ ஸந்நிதியில் ராமநாதசுவாமி பர்வதவர்த்தினி அம்மன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இந்த முதல் பிராகாரத்தில் ஈசான்ய திக்கிலுள்ள 'சிவகங்கை' யெனப்படும் சிங்ககிணற்றின் உள்ளே செல்லப் பல படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிங்க உருவம இந்தக் கிணற்றின் முகத்திற்கு ஏற்பட்டமை சோழர்களுக்கு உரித்தான சிங்கக்கொடிபற்றியிருக்கலாம்.


இக்கோயில் தேவாரத்தில் சம்பந்தப்படாவிட்டாலும் கருவூர்த்தேவரால் திருவிசைப்பாவில் பாடப்பட்டுளது. மூல லிங்கம் மிகப் பெரியது. இதன் ஆவுடையார் சுமார் 70 முழம் சுற்றளவுடையது. கர்ப்பகிருஹ சமீபத்தில் இரண்டு குகைத்துவாரங்கள் மூடப்பட்டிருக்கின்றன.

இங்கு முக்கிய உத்ஸவம் பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திரத் தன்றையதினம் நடைபெறுகிறது. முற்காலங்களில் பிரம்மோத்ஸவம் எப்பொழுது நடத்தப்பட்டதென்ற விஷயம் தெரியவில்லை. இந்த லிங்கம் பாணாசுரனுக்கு அவனது ஆயிரம் கைகளினாலும் பூசிக்கவேண்டி ஈசுவரனால் கொடுக்கப்பட்டதென்றும் அதை எடுத்துச் செல்லுகையில் இவ்விடம் வைத்ததும் இந்த இடத்திலேயே அது ஸ்தாபிதமானதாகவும் அதன் நிமித்தம இவ்விடம் கோயில் கட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது. ஒரு சோழராஜா இவ்விடத்திலுள்ள லிங்கத்தில் ஆவிர்ப்பவித் திருக்கும் மூர்த்தி தன்னுடன் பேசவேண்டுமென்று வேண்ட, அந்தப்படி அம்மூர்த்தியைச் செய்யவேண்டுமானால் அந்த லிங்கத்தின் ஆக்ருதிக்குத் தக்கபடி விமானம் மற்றைய பரிவார சிலா முகூர்த்தங்கள் ஏற்படவேண்டுமென்று கோயில் குருக்கள் தெரிவித்தாராம். அவ்விதம் ராஜா செய்வித்ததின்பேரில் அந்த ராஜாவுடன் குருக்கள் எதிரில் லிங்கத்திலுள்ள மூர்த்தி பேசினதாகவும், இதை மறுபடியும் அதிகமாக விஸ்தரித்துப் பரவச் செய்யாமலிருக்கும்படியாக அந்த க்ஷணமே அக்குருக்களை ஊமையாக ஈசுவரன் செய்துவிட்டதாகவும் பிறகு அவரது ஸந்ததிக்குக் கூட "ஊமைக் குருக்கள்" வம்சமென்று வழங்கினதாகவும் தெரியவருகிறது.



கங்கைகொண்ட சோழபுரம் விமானம்.

தற்காலமுள்ள பிராகாரத்தின் சுவர் மதிலில் எல்லாத் திக்குகளிலும், (கோயில் பார்க்கும் கிழக்கு தவிர) கோணங்களிலும் பெரிய பீரங்கிகள் ஆதி காலத்தில் வைத்திருந்திருக்கவேண்டும். ஏனெனில் இப்பொழுதும் சில சில பாகங்களில் 25--அடி உயரமும் 50—அடி சுற்றளவுமுள்ள கருங்கல்லால் கட்டப்பட்ட வட்டமான பீரங்கி மேடைகளிருந்து வருகின்றன. கி. பி. 1838—ம் வருஷத்தில் கொள்ளிட நதிக்குப் பாலம் கட்ட இந்த பீரங்கி மேடைகள், உப்பரிகைகள் இவைகளிலுள்ள கருங்கற்களை இடித்து நமது ஆங்கில



கங்கைகொண்ட சோழபுரம் கோயிலின் கர்ப்ப கிருஹத்தின் தெற்குப்பக்கத்தியபடிகள்.

கவர்ண்மெண்டார் எடுத்துப்போன தாகக் கோயிலாரிடம் தஸ்தாவேஜி கள் இருந்துவருகின்றன.

காப்பக்கிருஹ விமானம் சுமார் 175 அடி உயரமுள்ளது. இது முழுமையும் கருங்கல்லாற் கட்டப்பட்டது. விமானத்திலுள்ள சிலா பிம்பங்கள் கூடக் கருங்கல்லில் செயயப்பட்டவை. இவை அபூர்வமான வேலைப்பாடுடையன.

அபூர்வ சிலைகள்.

கர்ப்பகிருகத்திலும் அதன் முன்னுள்ள மண்டபத்திலும வெளிச்சுவர்களில் ஸப்தரிஷி, ஈசுவாரின் பல லீலா பிமபங்கள் வெகு அழகாய்ச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் சண்டேசுவர நாயனருக்கு ஈசுவரன் பார்வதி ஸமேதராய்த் தன்னுடைய நிர்மால்யமாலையை முடிசூட்டும் பிம்பம் எவரும் கண்டு களிப்படையக்கூடியது.

இந்த முதல் பிராகாரம் 600 அடி நீளம் 400-அடி அகலத்தின் வெளியில் ஏற்கனவே இந்த சுவர் கோட்டைச் சுவர் மாதிரியாக பீரங்கி வைக்க மேடைகளுடன் இருந்துவந்தன. அதன் சின்னத்தை இப்பொழுதும் தென்கிழக்கு மேற்கு ஸ்தானங்களில் காணலாம்.

ஏற்கனவே இருந்த தேர்முட்டி இப்பொழுது "மண்மேடு" என்னும் ஸ்தானத்தில் கிழக்கே ஒருமைல் தூரத்திலிருக்கிறது. இதற்குத் தக்கவாறு கோயில் நான்கு திக்குகளிலும் 'கரைமேடு' என்று பல மேடுகளிருந்துவருகின்றன.

நவக்கிரக பிம்பம்.

இக்கோயிலிலுள்ள நவக்கிரக பிம்பம்அபூர்வமானது. இம்மாதிரி இத் தென்னிந்தியாவில் நாம் காணமாட்டோம். ஒரே கல்லில் தேர் மாதிரியாகச் செதுக்கப்பட்டு நான்கு சக்கரங்களுடனும் ஏழு குதிரைகள் பூட்டியதாய் மேற்கு திக்கு நோக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சூரியன் மட்டும் பத்மதளமாய் மண்டலாகாரமாய் மேலிருக்க சனி பகவான் குதிரைகளை சாரதியாக நடத்துகிறார். மற்றைய ஏழு கிரகங்களும் தேரின் மூலைகளில்

இருந்து வருகிறார்கள். இது ஒவ்வொருவரும் பார்த்து அதிசயிக்கத் தக்கது.


இதன் சமீபத்தில் விசேஷ சில்பவேலைப் பாடுள்ள மஹிஷாஸுரமர்த்தனி அம்மன் சிலை அமையப்பெற்றுளது.



மஹிஷாஸுரமர்த்தனி

அரண்மனை.


அரண்மனை கோயிலுக்குத் தென்மேற்கில் ஒரு மைல் தூரமுள்ள "மாளிகை மேடு" என்னும் ஸ்தானத்தில் இருந்திருக்கவேண்டும். இந்த அரண்மனைத் திடலில் உள்ள விநாயகருக்குக் "கணக்குப் பிள்ளையார்" என்று பெயர். இம்மூர்த்தி கோயில் கட்டிவரும் ஸமயம் கணக்கு எழுதும் ராஜ சிப்பந்திகளின் சிரமத்தைக் குறைத்தனராம். இதன் வடக்கில் ஒரு மைலில் "உட்கோட்டை" இருந்ததாகத் தெரிய வருகிறது கிழக்கில் மெய்காவல் தெரு என்று (இப்பொழுதும் பெயர் வழங்கி வரும்) ஸ்தானம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் இப்பொழுது யுத்த பள்ளம், ஆயுதக்களம், இடைக்கட்டு, சுண்ணாம்புக்குழி, தொட்டிக் குளம், கழுநீர்க் குளம், வண்ணாங்குழி, கட்டியக்காரன் குளம், வீரசோழம் என்னும் பெயர்கள் பல்பல ஸ்தலங்களுக்கு இடப்பட்டிருப்பதிலிருந்து அந்த ஸ்தானத்தில் அரண்மனை பிரபலமாயிருந்த காலத்தில் அந்தத் தொழிலாளிகள் வஸித்திருக்கவேண்டுமென்று திண்ணமாய்ச் சொல்லலாம்.



கங்கைகொண்ட சோழபுரம் கர்ப்பக்கிருஹத்தின் வடபக்கம்

சிலாசாஸனம்.

இவ்விடம் அரண்மனையிலிருந்து இராஜேந்திரசோழன் தஞ்சைக்கோயில் பூஜை செய்பவருக்கு தானம் கொடுத்த விஷயம் தஞ்சை கோயிலிலுள்ள "தென்இந்தியா சாஸனங்கள்" 2ம் புத்தகம் 106 பக்கத்திய சாஸனத்தால் வெளியாகிறது:—



கங்கைகொண்ட சோழபுரத்தின் கோட்டை பீரங்கிமேடை.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநிலமடந்தையும் பொற்சயப்பாவையும சீர்த்தனிச் செல்வியுந்தன் பெருந்தேவியாகி இன்புற நெடிதியல் ஊழியுள் இடைதுறை நாடும் தொடர்வன வேலிப்படர் வனவாசியும் சுள்ளிச் சூழ்மதிள் கொள்ளிப் பாக்கையும் நண்ணற்கருமுரண் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழத்தரை சர்தமுடியும் ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திர னாரமும் தெண்டிரை ஈழமண்டலமுழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுக்குல தனமாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர்மாலையும் சங்கதிர் வேலைத் தொல் பெருங்காவற் பல பழந்தீவும் செருவிற் சினவி இருபத்தொருகாலரசுகளை கட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திமத்தீவரண் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடும் பீடியல் இரட்ட பாடி ஏழரை இலக்கமும் நவநெதிக்குலப்பெருமலைகளும் விக்கிரமவீரர் சக்கரகோட்ட முதிரபடவல்லை மதுரமண்டலமும் காமிடைவள நாமணைக்கோணையும் வெஞ்சினவீரர் பஞ்சப்பள்ளியும் பாசடைப்பழனமாசுணிதேசமும் அயர்வில்வண்கீர்த்தி ஆதிநகரவையில் சந்திரன் றொல்குலத்திந்திரரதனை விளை அமர்க்களத்துக்கிளையொடும் பிடித்துப்பலதனத் தொடு நிறைகுலதனக்குவையும் கிட்டருஞ்செறிமிளை ஒட்டவிஷயமும் பூசுரர்சேர் நற் கோசலைநாடும் தருமபாலனை வெம்முனையழித்து வண்டுறைசோலைத் தண்டபுத்தியும் இரண சூரனை முரணுகத்தாக்கித் திக்கணைக்கீர்த்தித் தக்கணலாடமும் கோவிந்தசந்தன் மாவிழிந் தோடத் தங்காதசால் வங்காளதேசமும் தொடுகழற் சங்குவொட்டல் மயிபாலனை வெஞ் சமர்விளாகத் தஞ்சுவித்தருளி யொண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்திரலாடமும் வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல் கங்கையும் அலைகடல் நடுவுட

பலகலஞ் செலுத்திச் சங்கிராம விசையோத்துங்க வர்மனாகிய கடாரத் தரைசனை வாகயம் பொருகடல் கும்பக்கரியொடு மகப்படுத்துரிமையில் பிறக்கிய பெருநெதி பெருக்கமும் ஆர்த்தவனகனகர் போர்த்தொழில் வாசலில் விச்சாதிரத் தோரணமும் மொய்த்தொளிர் புனை மணிப்புதவமும் கனமணிக்கதவமும் நிறைசீர் விசையமும்துறைநீர்ப்பன்னையும் வன்மலையூ ரெயிற் றொன்மலையூரும் ஆழ்கடலகழ்சூழ் மாயிருடிங்கமும் கலங்காவல்வினை இலங்காசோ கமும் காப்புறுநிறைபுனல் மாப்பப்பாளமும் காவலம்புரிசை மேவிலிம்பங்கமும் விளைப்பந் தூறுடை வளைப்பந்தூறும் கலைத்தக்கோர் புகழ் தலைத்தக் கோலமும் திதமாமல் வினை மாத மாலிங்கமும் கலாமுதிர்க்கடுந்திறல் இலாமுரிதேசமும் தேனக்கவார்பொழில் மானக்கவார மும் தொடுகடல்க் காவல்க் கடுமுரட்கடாரமும் மாப்பொருதண்டாற்கொண்ட கோப்பர கேஸரி வர்மரான உடையார் ஸ்ரீராஜேந்த்ரசோழதேவர்க்கி யாண்டு ௰௯ ஆவது நாள் இருநூற்று நாற்பத்தியண்டினுல் உடையார் ஸ்ரீராஜேந்த்ரசோழதேவர் கங்கைகோண்ட சோழபுரத்துக்கோயிலினுள்ளால் முடிகொண்டசோழன் திருமாளிகையில் வடபக்கத்து ஷேவாரத்துச் சுற்றுக்கல்லூரியில் தானஞ்செய்தருளா இருந்து உடையார் ஸ்ரீராஜராஜ ஈஸ்வர முடையார் கோயிலில் ஸ்ரீவாயஷ்ஹோமம் நம் உடையார் ஸர்வசிவவணிதசைவ்வா வாயஷ்ர்க்கும் இவ்வுடையார் ஸிஷ்யரும் ப்ரஸிஷ்யரும் ஆய் ஆயஷ்தெஸத்து ஆயஷ் தெஸத்துத்தான் மௌடதேஸத்துத்தான் உள்ளாராய் யோக்யராயிருப்பார்க்கே ஆட் டாண்டு தோறும் இதேவர் கோயிலில் ஆடவல்லானென்னும் மரக்காலால் உள்ளூர்ப்பண் டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரக்கல நெல்லு ஆட்டாண்டு தோறும் அசந்தித்த வல் பெறத்திருவாய் மொழிந்தருளத்திருமந்த்ர ஓலை செம்பியன் விழுப்பரையன் எழுத்தி னுல்......த்திருவாய்க்கேழ்விப்படி கல்லில் வெட்டித்து இது இவ்வாழூத்துள்ள சைப்வ ஆசாயஷ்ர்களே இத்தன்மம் ரக்ஷிக்க உ.

ராஜேந்திரசோழன் சரித்திரம்.

ராஜேந்திரசோழன், கங்கைகொண்டசோழன் எனப்பெயருடன் பதினோராம் நூற் றாண்டின் துவக்கத்தில் சோழ ராஜபட்டம் பெற்றவன் முதலாவது ராஜேந்திரன். இவர் முதலாவது ராஜராஜன் மகன். தகப்பன் காலத்திலேயே சண்டையில் முக்கிய ஸ்தானம் வகித்து கியாதி பெற்ற இவர். ஆருத்திரை நக்ஷத்திரத்தில் பிறந்தவராகையால் அத்தினத் தில் மார்கழியில் தமது பெயரால் "ராஜேந்திர சோழன் திருநாள்" என்னும் உத்ஸவத் தைக் கொண்டாட சென்னைக்குச் சமீபத்திலுள்ள திருவொற்றியூர், திருச்சிக்குச் சமீபத் திலுள்ள உய்யக் கொண்டான் திருமலை, திருச்சி ஜில்லா காமரசவல்லி க்ஷேத்திரத்தில் அத் தினத்திலும் வைகாசி திருவாதிரையிலும் "சாக்கைக் கூத்து" விளையாடவும் ஏற்பாடு செய்வித்தனர்.

இவர் பட்டம் பெற்றதும் வடக்கே கங்கவம்சம், கிழச் சாளுக்கிய வம்சம் இந்த இர ண்டு ராஜ்யத்தின் மன்னர்கள் சண்டை செய்யத் துவங்க அவர்களை எதிர்த்து ஜயம் பெற் றனர். இப்படிச் செய்ததும் தெற்கே சென்று பாண்டியர்களை ஜயிக்கவேண்டி நேரிட்டது.

ஏற்கனவே இவரது முன்னோர்கள் பாண்டியநாடு சென்று பாண்டியர்களை ஜயித்து அந் நாட்டை தமது கைவசப் படுத்திக் கொண்டிருந்தாலும் அடிக்கடி அவர்கள் தொந்தரவு கொடுப்பதை நிவர்த்திக்க எண்ணம் கொண்ட இவர், பாண்டியர்களை நாட்டினின்றும் விரட்டி தமது மகனையே அவ்விடத்தில் 'சோழபாண்டியன்' என்னும் பெயருடன் ஸ்தாபித்தனர். இச்சமயத்தில் மதுரைமா நகரில் இவர் ஒரு அரண்மனையும் கட்டிவைத்தனராம். இவ்விஷயம் புதுச்சேரி (பிரெஞ்சுக்காரர் இலாகா) திருவாண்டார் கோயிலிலுள்ள சிலா விக்ரகத்தினால் வெளியாகிறது. இவ்விதமே கேரளதேசம் சென்று அந் நாட்டையும் தன் வசப்படுத்திக்கொண்டு அதையும் தமது மகன் சோழபாண்டியன் ஆண்டுவரும்படிச் செய்தனர். இப்படியாக பாண்டிய சேர மன்னர்களை ஜயித்ததும், தமது சோழ தேசத்துடன் இவ்விரண்டு தேசங்களும் தம் வசமானதும் "மும்முடிச்சோழன்" என்னும் பட்டமும் பெற்றனர்.

பின்னர் வடஇந்தியாவில் கங்கை, வங்காளம், கோசலம் முதலிய நாடுகளுக்கு தமது படைகளை நடத்திச்சென்று அவ்விடங்களில் ஜயம் பெற்றனர். அப்பொழுதே பர்மாதேசத்திலுள்ள கடாரத்துக்கும் போய் ஜயம் பெற்றனர்.

> களிறு கங்கை நீருண்ண மண்ணையிற் காய்சினத் தொடே கலவு செம்பியன்
> குளிறு தெண்டிரைக்குரை கடாரமுங்கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்
>
> [கலிங்கத்துப்பரணி]

கடாரம் என்பது பர்மாதேசத்தில் ஆற்கான் கடற்கரையிலுள்ள ஒரு துறைமுகப் பட்டினம். இவ்விதம் கடாரம் முக்கிய நகரமாய் பர்மா ராஜ்யத்திற்கு விளங்கினதுபற்றி கடாரம் என்பது சிலா சாசனங்களில் அத் தேசத்திற்கே பெயராய் விளங்கப்பட்டது.

கங்காப் பிரதேசங்களை ஜயித்ததும் தமது சோழதேசம் போய் அவ்விடத்திலும் தமது பெயரால் ஒரு ராஜதானி ஏற்படுத்த உத்தேசம் கொண்டு திரும்புகையில் கஞ்சம் ஜில்லாவிலுள்ள மஹேந்திர கிரியில் ஜயஸ்தம்பம் நாட்டினர். இப்படிச்செய்து சோழ தேசம் திரும்பினதும் கங்கை கொண்டசோழபுரம் என்று பெயரிட்டு ராஜதானியை அரண்மனை கோயிலுடன் கட்டிவைத்து அதைப் புண்ணிய பூமியாகச் செய்யக்கருதி தான் கங்காஜலம் ஏராளமாய்க் கொண்டுவந்ததை கோயிலுக்குள் 'சிங்கக் கிணறு' என்பதில் விட்டு அதை விசேஷதீர்த்தமாகச் செய்தனர். தமது தகப்பனார் ராஜ ராஜன் தஞ்சையில் கட்டி வைத்ததுபோல் தமது ராஜதானியாகிய இக் கங்கைகொண்ட சோழபுரத்திலும் கோயில் சிற்பமூர்த்திகளை அதைப்போலவே அமைப்பித்தனர். இது இரண்டும் எவ்விஷயங்களிலும் ஒத்திருப்பதை இப்பொழுதும் கவனிக்கலாம்.

இவை நீங்க இந்துமஹா சமுத்திரம் முதலிய இடங்களிலுள்ள தீவுகளையும் தமது கப்பற் படைகளைக்கொண்டு தமது கைவசம் செய்துகொண்டனர். தற்காலத்திலும் ஜாவா, சுமத்திரா முதலிய தீபகற்பங்களில் இந்துக்களது சில்பம் முதலிய சிலா விக்ரஹங்கள், கட்டிடங்கள் முதலியவைகள் காணப்படுவதைக்கொண்டே இவரது காலத்தில் அவ்விடங்களும் இவரது ஆளுகைக்கு உட்பட்டிருந்ததென்பது நன்கு வெளியாகலாம். நாடுகளை

ஜயிப்பதிலுமன்னியில், தமிழ்பாஷையிலும் இவருக்கு பாண்டித்தியம் அதிகமேற்பட்டதிலிருந்து இவருக்கு 'பண்டிதசோழன்' என்னும் பட்டமும் ஏற்பட்டது. தஞ்சைக் கோயில் சிலாசாசனம் இதை விவரிக்கிறது.

இவருக்கு மூன்று பட்ட மஹிஷிகளிருந்தனர். அவர்களாவன:—திருபுவன மஹாதேவி, வானவன் மஹாதேவி, முக்கோக்கிழா நடிகள். இவரது புத்திரர்கள்—முதலாவது ராஜாதிராஜன் எனப்படும ஜயங்கொண்டசோழன், ராஜேந்திரசோழன் (இரண்டாவது), வீரராஜேந்திரன், என்பவர்களும் ஒரு புத்திரி அம்மங்கதேவியென்பவருமாவார்கள். இவருக்கு தமது தகப்பனருடன் பிறந்த அத்தையாகிய குந்தவைப் பிராட்டியாரிடம் அதிக விசுவாசம். இமமாது சிரோமணி பழையாறு என்னுமிடத்தில் ஒரு அரண்மனை கட்டிக்கொண்டு சிலகாலம் வாசம் செய்தபொழுது அவளுடனேயே நமது ராஜேந்திர சோழமஹாராஜர் தங்கியிருந்தனர். இப்படியாக தமது ஆட்சியில் மூன்றும் ஆண்டில் ஒரு தினம இந்த அரண்மனை திருமஞ்சனசாலையில் தான் இருக்கையில் பக்கத்திய ஜில்லாக்களின் கோயில்களில் அக்கிரமம் நடந்துவந்ததைக்கேட்ட இவ்வாசன் அக்கோயில்களின் வரும்படிகளைச் சீர்திருத்திச் செலவை நிர்த்தாரணம் செய்து கோயில் காரியங்கள் சரிவர நடந்துவா அவ்வவ்விடத்திய பிரமுகர்களைச் சபைகூட்டி அவர்கள் விசாரணையில் கோயில் காரியங்கள் நன்கு நடந்து வர ஏற்பாடு செய்வித்தனர். இதன் விஷயங்கள் காஞ்சி, காட்டுமன்னார்கோயில் இவ்விடங்களிலுள்ள சிலா சாசனங்களால் புலப்படுகிறது.

இவரது அத்தையாகிய குந்தவைப்பிராட்டியார் தஞ்சைமாநகரில் தர்ம வைத்திய சாலை ஏற்படுத்தினள். இதற்கு 'சுந்திர சோழ விண்ணகர் ஆதுலசாலை' எனப்பெயர். தமது தகப்பனர் பேராலேயே கிட்டமிட்டது இந்துக்கள் தமது பெற்றோர்களை போற்றுவிக்கும் வழக்கத்தைக் காட்டுகிறது இது நேரிட்டது 1015 கி. பி. யில். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இரத ஆதுலசாலையில் இடம் போதாததுபற்றி இன்னும் கொஞ்சம் பூமியை அத்துடன் வாங்கிச்சேர்த்தனர். அதை மேம்பார்வை வகிக்கச் சவர்ணன், அறபன், மதுராந்தகன் என்பவர்களை நியமித்தார். பரம்பரையாய் அவ்வம்சத்தினர் அதை சரிவர பரிபாலிக்க ஏற்பாடு செய்தனர். இப்படியாக பரம்பரையாய் தர்மசொத்தை பாதுகாத்து வரச்சொன்னல் தர்மம் அழியாமல் விசுவாசத்துடன் ஒருவரது சந்ததியார் அதை நன்கு கவனிக்கவேண்டுமென்னும் எண்ணம் மூல புருஷனது உத்தேசம். இது தற்காலம் மறைவுபட்டு வருவது இக்காலத்தின் கொடுமை.

இவரது காலத்தில் திருவாரூர் தியாகராஜர் சந்நிதிக்கு தங்க ஓடும் மற்றைய முக்கிய சந்நிதிகளுக்கு செப்பு ஓடும் அடுக்கி பரவை நங்கையார் என்பவரால் போட்டுவைக்கப்பட்டது. இவ்வோடுகளின் நிறை முதலிய விவரங்கள் கூட தற்காலத்தில் தெரிந்து கொள்ள சிலாசாசனத்தில் வெட்டிவைத்தனர். மேலும், அக்காலத்தில் நமது ராஜேந்திரசோழ மஹா ராஜாவும் இத் திருப்பணி செய்துவைத்த நங்கையாரும் நின்று ஸ்ரீதியாக ராஜமூர்த்தியைப் பணிந்த இடத்தில் தீபம் எரியவும் ஏற்பாடு செய்வித்தனர். ஸ்ரீதியாக ராஜமூர்த்தி கர்ப்பகிருஹத்திற்குப் பொன்னல் கூறை ஏற்பட்டதால் அதற்கு 'பொன்

னின் திருமண்டபம்' எனப்பெயரிடப்பட்டது. இதற்கு செலவான பொன்னின் நிறை 'ராஜராஜன் காசுநிறை' என்பதால் அளவிடப்பட்டுள்ளது. மேலும், முத்து பவழம் முதலிய நவரத்தினங்களால் கோர்க்கப்பட்ட மாலைகளும் அந்த சந்நதியில் தொங்கவிடப்பட்டன.

கும்பகோணம் சமீபத்திலுள்ள திருநாகேசுவரம் கோயிலுக்கு இவரது தகப்பன் ராஜராஜன் காலத்தில் ராணுவத் தலைவராயிருந்து, தஞ்சை கோயில் பிராகாரத்தைக் கட்டி வைத்த கிருஷ்ணன் ராமன் என்பவர் ஏராளமான தானம் செய்தது மன்னியில் அதை "ராஜேந்திரசோழன் காசு" என்னும் நாணயத்தால் குறிப்பிட்டிருப்பதிலிருந்து இவரது காலத்தில் தனி நாணயம் வெட்டிவைத்தது புலப்படுகிறது. தென் ஆற்காடு ஜில்லா எண்ணாயிரம் என்னுமிடத்தில் வேத சாஸ்திரம் படிக்க கலாசாலை எற்பாடு செய்து அதில் படிப்பவர்களுக்கு போஜனசாலையும் எற்படுத்தி விசேஷகௌரவம் பெற்றவர் நமது ராஜேந்திர சோழ மன்னர் இவ்வூருக்கு ராஜராஜசதுர்வேதிமங்கலம் எனவும் பெயரிடப்பட்டதிலிருந்து இவரது தகப்பன் ராஜராஜன் காலத்தில் இது எற்பட்டிருக்கவேண்டும். அல்லது இவர் தமது தகப்பன் பெயரால் அதை எற்படுத்தியிருக்கவேண்டும்.

அக்காலங்களில் கோயில்கள் வித்தியாஸ்தானமாகி விளங்கினது கவனிக்கத்தக்கது. திருவாய்மொழி கற்பிக்க நான்கு பெயர் எற்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கு தினப்படி முக்குறுணி நெல்லு கொடுபட திட்டம் செய்யப்பட்டது. இவ்விடம் 'கங்கை கொண்ட சோழன்' மண்டபத்தில் ரிக்வேதம், யஜுர்வேதம் படிக்க 75 பிள்ளைகளும், சந்தோகசாமவேதம் படிக்க 20 பேர்களும், தளவகார சாமவேதம் படிக்க 20 பேர்களும், வாஜசநேயம் படிக்க 20 பேர்களும், அதர்வண வேதம் படிக்க 10 பேர்களும் பௌதாயனீய கிருஹ்யகல்பம், கணம் இவைகள் படிக்க 10 பேர்களும் ஆக 230 பிரம்மசாரிப்பிள்ளைகளும், ரூபாவதாரம் படிக்க 40 பேர்களுமாக 270 பேர்களும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் தினப்படி 6நாழி நெல் கொடுக்கவும் விதிக்கப்பட்டது. இவ்விதம் 270 முக்கிய பிள்ளைகள் தவிர இதராள் வியாகரணம் கேட்பார் 25 பேரும், பிரபாகரம் கேட்பார் 25 பேர்களும், வேதாந்தம் கேட்பார்கள் 20 பேர்களும் ஆக 70 பேர்களும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் தினப்படி ஒரு குறுணி இரண்டு நாழி நெல்லும் கொடுக்கும்படி நிர்மாணிக்கப்பட்டது. வியாகரணம் கற்பித்த நம்பிக்கு ஒரு கலமும், பிரபாகரம் கற்பித்தவருக்கு ஒரு கலமும், வேதாந்தம் சொல்லிவைத்தவருக்கு ஒரு கலமும் ஒரு தூணியும் நிர்மாணம் செய்யப்பட்டது. ரிக்வேதம் கற்பிக்க மூன்று வித்வானும், யஜுசுக்கு மூன்று பேர்களும், சந்தோகத்திற்கு ஒருவரும், தளவகாரசாமத்திற்கு ஒருவரும், வாஜசநேயத்திற்கு ஒருவரும் பௌதாயனிய கிருஹ்யகல்பம், காடகம் இவைகள் கற்பிப்பார் 1, ஆக 10 வித்வான்களும் நியமிக்கப்பட்டனர். ரூபாவதாரம் கற்பித்தவருக்கு தினப்படி மூன்று குறுணி நெல்வீதம் கொடுக்கப்பட்டது. ஆக தினப்படி இவர்களுக்கு 30 கலம் வீதம் நெல் 'ராஜராஜன் மரக்காலால்' வருஷாவருஷம் 10506 கலம் நெல் செலவிடப்பட்டது. இப்படி நெல் தானியம் தவிர $61\frac{1}{2}$ கழஞ்சு பொன்னும் பட்டுவாடா செய்யப்பட்டது. இவை நீங்கலாக இதர பிராமணாள் வேதம் படித்தவர்கள் 506 பேர்வழிகள் இவ்விடம்

போஜனம் செய்யவும் கிருஷ்ணஜயந்தி தினத்தில் மூன்று வேதம் படித்த வல்லபருக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கபுஷ்பம், தங்கமோதிரம் அளிக்க ஏற்பாடும் செய்யப்பட்டது. இவரது காலத்தில் வேதவித்தைக்கு எவ்வளவு மஹிமை வைத்திருந்தனரென்பது நன்கு விளங்குகிறது.

திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயில் கர்ப்பக்கிருஹம் இவரது காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. கருங்கற்களால் இவைகளை முன்னிருந்த மாதிரி இவரது காலத்தில் புதிதாய்க் கட்டிவைத்தது விசேஷமானது. மூன்று அந்தஸ்துடன் கூடிய இவ்விடத்திய கர்ப்பக்கிருஹம் கொஞ்சமேனும் குற்றமற்ற கருப்புக் கற்களால் ரவி எனப்படும் வீர சோழ தக்ஷன் என்னும் சில்பியால் சரணம், கூடம், கோஷ்டம், நீவம் இவைகளுடனும் சிம்ம முகம், நாசிகம் இவைகளுடனும் கட்டிவைக்கப்பட்டதாம். மேலும் இவ்விடம் கோயிலில் கணக்குகளில் நேரிட்டிருந்த கெடுதல்களை அரசனின் உத்தியோகஸ்தனுன ராஜேந்திர சிங்க மூவேந்த வேளான் என்பவர் 'வக்காணிக்கும்' மண்டபத்தில் கச்சேரி செய்து விசாரணை செய்து அவைகளைச் சீர்திருத்தினன். இவரது காலத்தில் வடக்கிலிருந்து, ஆரியதேசம், விராடதேசம் இவ்விடங்களிலிருந்து வந்த ஜனங்கள் இவ்வூரில் சாசுவதமாய்த் தங்கி பூமி முதலிய வாங்கினதும், அப்படிப்பட்ட பூமிகளுக்கு வரி முதலியவைகளை ராஜா நீக்கிவிட்டதும் அறியக்கூடியது. இவ்விடம் கோயிலிலுள்ள "வியாகரண தான வியாக்கியான மண்டப"த்தில் ஸம்ஸ்கிருத இலக்கணம் படித்த பிள்ளைகளுக்கும் அதைக்கற்பித்த உபாத்தியாயர்களுக்கும் தங்குவதற்கு இடம் ஏற்படுத்தப்பட்டதாம். இம் மண்டபத்திலேயே பாணினி மஹரிஷிக்கு 14 தினம் இலக்கணத்தின் சூத்திரங்களை கற்பிக்க பகவான் (வியாகரண தானப் பெருமாள்) தோன்றினதாகத் தெரிவிக்கப்பட்டுளது.

திருவிசைப்பா பாடல்கள்.

கருவூர்த்தேவர் பாடியது:—

பண்—பஞ்சமம்.

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட அங்கனே பெரிய நீ சிறிய
என்னையாள்விரும்பி யென்மனம்புகுந்த எளிமையை என்றுநான் மறக்கேன்
முன்னமால் அறியா ஒருவனும் இருவா! முக்கணா! நாற்பெருந் தடந்தோட்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கைகொண்டசோ ளேச்சரத் தானே! 1

உண்ணெகிழ்ந்துடல நெக்கு முக்கண்ணாவோலமென் றோலமிட்டொரு நாள்
மண்ணினின் றலறேன் வழிமொழி மாலைமழலையஞ் சிலம்படி முடிமேற்
பண்ணிநின் றுருகேன் பணிசெயே னெனினும் பாவியேனாவியுள் புகுந்தென்
கண்ணினின் றகலானென்கொலோ கங்கைகொண்ட சோளேச்சரத் தானே. 2

அற்புதத்தெய்வ மிதனின்மற்றுண்டே யன்பொடுதன்னையஞ் செழுத்தின்
சொற்பதத்துள் வைத்துள்ள மள்ளூறுந் தொண்டருக் கெண்டிசைக் கனகம்

பற்பதக்குவையும் பைம்பொன் மாளிகையும் பவளவாயவர் பணைமுலையுங்
கற்பகப்பொழிலு முழுதுமாங் கங்கைகொண்ட சோளேச்சரத் தானே. 3

ஐயபொட்டிட்ட வழகுவாணு தலுமழகிய விழியும் வெண்ணீறுஞ்
சைவம் விட்டிட்ட சடைகளுஞ்சடைமேற்றரங்கமுஞ்சதங்கையுஞ்சிலம்பு
மொய்கொளெண்டிக்குங்கண்டநின்றொண்டர்முகமலர்ந்திருகணீரரும்பக்
கைகண்மொட்டிக்கு மென்கொலோ கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 4

சுருதிலானவனாந்திருநெடுமாலாஞ்சுந்தரவிசும்பினிந்திரனும்
பருதிவானவனும் படர் சடை முக்கட்பகவனுமகவுயிர்க்கமுதா
மெருதுவாகனனுமெயில்கண்மூன்றெரித்தவேறு சேவகனுமாம்பின்னுங்
கருதுவார் கருது முருவமாங் கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 5

அண்டமோரணுவாம் பெருமைகொண்டணுவோரண்டமாஞ்சிறுமைகொண்டடியே
னுண்டவூணுனக்காம் வகையெனதுள்ள முள்கலந்தெழுபரஞ்சோதி
கொண்டநாண்பாம்பாம்பெருவரைவில்லிற்குறுகலர்புரங்கண்மூன்றெரித்த
கண்டனே நீலகண்டனே கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 6

மோதலைப்பட்டகடல் வயிறுதித்தமுழுமணித்திரள முதாங்கே
தாய்தலைப்பட்டங்குருகியொன்றாய தன்மையிலென்னை முன்னின்ற
நீ தலைப்பட்டாலியானுமவ்வகையே நிசிசரிருவரோடொருவர்
காதலிற்பட்ட கருணையாய் கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 7

தத்தையங்கனையார் தங்கண்மேல் வைத்ததயாவை நூறாயிரங்கூறிட்
டத்திலங்கொரு கூறுன் கண்வைத்தவருக்கமருலகளிக்கு நின்பெருமை
பித்தனென்றொருகாற் பேசுவரேனும் பிழைத்தவை பொறுத்தருள்செய்யுங்
கைத்தலமடியேன் சென்னிவைத்த கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 8

பண்ணிய தழல்காய் பாலளாநீர்போற்பாவமுன்பறைந்து பாலனைய
புண்ணியம் பின்சென்றறிவினுக்கரியப்புகுந்ததோர் யோகினிற்பொலிந்து
நுண்ணியையெனினுநம்பநின்பெருமைநுன்னிடையொடுங்க நீவந்தென்
கண்ணினுண்மணியிற்கலந்தனை கங்கைகொண்ட சோளேச்சரத்தானே. 9

அங்கைகொண்டமரர் மலர் மழை பொழிய வடிச்சிலம்பலம்வந்தொருநா
ளுங்கைகொண்டடியேன் சென்னிவைத்தென்னையுய்யக்கொண்டருளினைமருங்கிற்
கொங்கைகொண்டனுங்குங்கொடியிடைகாணிற்கொடியளென்றவிர்சடைமுடிமேற்
கங்கைகொண்டிருந்த கடவுளே கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 10

மங்கையோடிருந்தேயோகு செய்வானை வளரிளந்திங்களை முடிமேற்
கங்கையோடணியுங்கடவுளைக் கங்கைகொண்டசோளேச்சரத்தானை
யங்கையோடேந்திப்பரிதிரிகருவூரறைந்த சொன்மாலையாலாழிச்
செங்கையோடுலகிலரசு வீற்றிருந்து திளைப்பதுஞ்சிவனருட்கடலே. 11

குருகைக்காவலப்பன் கோயில்.

இவ்வூர், கங்கைகொண்டசோழபுரத்திற்கு வட மேற்கில் சுமார் ஒரு மைல் தூரத்தி லுள்ளது. இவ்வூர் ஒரு விசேஷ விஷ்ணு க்ஷேத்திரம். இது ஆழ்வார்களால் பாடப்படாத தாணுலும் புராண ஸ்தலங்களுள் ஒன்று. வீர நாராயணப் பெருமாள் சந்நிதி முன்னுள்ள துவாரபாலக பிம்பங்கள் வெகு அருமையான சிற்ப லக்ஷணங்களுடன் பொருந்தியுள்ளது. இவ்விடம் கோயிலிலுள்ள ஸ்ரீராமர் சந்நிதி வெகு விசேஷமானது.

ஸ்ரீராமர் சந்நிதி.

ஸ்ரீராமர், ஸீதை, லக்ஷ்மணர், ஹனுமார் விக்ரஹங்கள் சிலையாலல்லாமல் தாரு (மரத் தால்) செய்யப்பட்டனவுமன்னியில் வெகு அழகாய் விளங்கிவருகின்றன. இங்குள்ள ஹனுமார் மற்றைய இடங்களிலுள்ளதுபோல் அஞ்சலி பந்தத்திலில்லாமல் ஒருவரைக் குறிப்பிடுக் காட்டும் பாவனையில் ஒரு கையைக் கீழாகவும் மற்றொன்றை அதற்கு மேலா கவும் சுட்டிக்காட்டும் பாவனையில் அமைக்கப்பெற்றிருக்கிற விசேஷத்தை உடையதா யுளது. இதற்கு ஸ்தல புராணத்தில் ஆதாரமுண்டு.

இவ்விடம் பார்கவ புஷ்கரணியில் ஒரு தாமரைப் புஷ்பத்தில் வாசம் செய்து கொண்டிருந்த மரகதவல்லித்தாயார் ஸ்ரீராமபிரான் முன்னிலையில் வீர நாராயணப் பெருமா ளுக்கு விவாஹம் செய்துவைக்கப்பட்டனளாம. ஹனுமாரை மரகதவல்லியிருப்பதைப் பார்த்துவரச்சொன்ன ஸ்ரீராமரிடம அவர் வந்து அத்தாயாரின் அளவு முதலிய விவரங் களைத் தெரிவித்தமாதிரியாக ஹனுமாரின் கைகளின் குறிப்பு ஏற்பட்டுள்ளதாம். இம மரகதவல்லி கங்கைகொண்டசோழபுரத்தை ஒரு ஸமயம் அரசு செலுத்திய ஜிமஹன சக்ர வர்த்தியால், ஜனக மஹாராஜனுல் ஸீதாதேவி புத்திரியாக ஸ்வீகரிக்கப்பட்டதுபோல், அங்கிகாரம் செய்யப்பட்டவளாம்.

ஆளவந்தார் சரித்திரமும் இவ்வூர் பெயர் ஏற்பட்டதின் காரணமும்.

இக்கோயிலில் ஆளவந்தார் ஸந்நிதி விசேஷமுள்ளது. இவருடைய பாட்டனுரான நாதமுனி சுவாமிகள் தன்னுடைய பல சிஷ்யர்களுக்குள் ஒருவரான குருகாவலப்பன் என் பவரை தனக்குப் பிறக்கப்போகும் பௌத்திரனை ஆளவந்தாரெனப்படும் யாமுனசாரியா ருக்கு ஸம்பிரதாய உபதேசம் செய்யும்படி நியமித்துப் போனுரென்றும், அவர் இந்த சந்நிதியிலேயே யோகத்திலிருந்து கொண்டிருந்து கங்கைகொண்டசோழபுரத்திலுள்ள சோழமன்னர் ஆண்பனையில் ராஜ்யசுகம் அனுபவித்துக் கொண்டிருந்த ஆளவந்தார் பிரௌடரான பின்னர் சில தந்திரங்களினுல் அவரை மயக்கி தமது குருவின்கட்டளைப்படி உபதேசம் செய்து பரமவைஷ்ணவ பாகவதராகச் செய்தனராம். இக் குருகாவலப்பன் பெயரைக் கொண்டே இவ்வூருக்கும் பெயர் ஏற்பட்டது ஒரு விசேஷம்.



அன்பில்.

அன்பில் என்பது பிரேமபுரி என்னும் வடமொழியின் திரிபு. பிரேமை என்ருல் அன்பு; புரி என்ருல் ஊர். அன்பு குடிகொண்டிருக்கும் ஊர் என்பது இதன் பொருள். இது நூற்றெட்டுத் திருப்பதிகளிலொன்று. இவ்வண்ணமே இதனருகேயுள்ள அன்பிலாலந்துறை யென்பதும் ஆயிரத்தெட்டு சிவஸ்தலங்களிலொன்ருகும். இவ்விரண்டனுள் சற்று மேற்கேயுள்ள விஷ்ணுஸ்தலத்திற்கு மேலன்பிலென்றும், அதற்குக் கால்நாழிகை வழி கிழக்கேயுள்ள சிவஸ்தலத்திற்குக் கீழன்பிலென்றும் பெயர். இவையிரண்டும் கோயிலென்றே வழங்கப்படுகின்ற மஹாக்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கத்துக்

குப் பதினைன்கு மைல் கிழக்கே வடதிருக்காவேரியாற்றின் வடகரையில் இராஜமார்க்கத்திலிருக்கின்றன. தற்சமயம் திருச்சியிலிருந்து விழுப்புரம் போக ஏற்படும் ரயில் மார்க்கத்தில் லாலுகுடிக்கு 4 மைல் தூரத்தில்தானிருப்பதால் அடியார்கள் அங்கு எளிதிற்சென்று கண்டுகளித்து வந்தனை வழிபாடுகளை நியமத்துடன் அழகுபெறச்செய்து இன்புற்றுப் பாகதிக்கு வேண்டும் சாதனங்களையெல்லாம் குறைவறப்பெற்றுவரலாம்.

இவ்விரண்டு ஸ்தலங்களும் பாண்டவர் காலத்திற்கும் முன்னமேயே உண்டான பாடல் பெற்ற ஸ்தலங்களேயன்றி ஸாதாரணமான ஊர்களல்லனவாம். இக்காலரீதியின் படி பார்ப்பின், கிறிஸ்து பிறப்பதற்கு 4202 வருஷங்களுக்குமுன்னே அவதரித்தவரும் ஆழ்வார்கள் பதின்மருள் பழமையும், நான்காவதானவருமான (மழிசைவந்தசோதி) என்னும் திருமழிசைப்பிரானால் பாடல் பெற்றதுமாதல்பற்றி, திருவன்பிலென்னும் திருப்பதி 6105 வருஷங்களுக்கு முன்பே உண்டாயிருக்கவேண்டுமென்று சொல்லவேண்டும். இவ்வண்ணமே கீழன்பிலென்னும் சிவஸ்தலமும், விஷ்ணுஸ்தலமாகிய மேலன்பிலினும் சற்று முற்பட்டதாக இருக்கவேண்டுமேயல்லாது, அதனை அதற்குப்பின்னிட்டதென்று சொல்லவொண்ணாது.

இவ்வாறாக இவ்விரண்டு க்ஷேத்திரங்களும் பண்டைக்காலந்தொட்டு பிரஸித்திபெற்றவளநகர்களெனலாம். இந்தச் சோழமண்டலத்தில் ஆதிகாலந்தொட்டே இவ்விரண்டு நகரங்களிலும் அப்போழ்தைக்கப்போழ்து அரசாண்ட சோழன் முதலான மன்னர்களால் அவ்வாலயங்களின் கல்வரிகளிலும், ஸ்தம்பங்களிலும், மதில்களிலும் எழுதிவைக்கப்பட்டிருக்கின்ற சிலாசாசனங்களாலும இவை பூர்வீகமானவையேயென்னலாம். அன்பிலாலந்துறையைப் பற்றித் திருஞானசம்பந்தமூர்த்தி பதிகம் பாடியிருக்கின்றார்:—ஒருகாலவிசேஷத்தில் ஆற்று வெள்ளப் பெருக்கால் நதியைக்கடந்து செல்லமாட்டாமல் இவர் சடையார்கோவிலிலிருந்தபடியே பதிகம் பாடியதை அதன் எதிரே காவிரியாற்றின் இக்கரையிலிருந்த விநாயகக் கடவுள் உற்றுக்கேட்டதனால் அவருக்குச் செவிசாய்த்த விநாயகரென்னும் பெயர் இன்றைக்கும் வழங்கிவருவதைக் காணலாம். இவ்விநாயகர் இன்றைக்கும் தென்பக்கமாய்ச் செவியைச் சாய்த்துக் கொண்டு அப்பதிகத்தை ஆவலோடு உற்றுக்கேட்டுக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். இங்குள்ளார் அன்பிலாலந்துறையை தக்ஷிண கயையெனக்கொண்டே, கயைக்குப் போகிறவர்கள் அங்கு சிராத்தஞ்செய்யும் வண்ணமே இங்கேயும் சிராத்தஞ்செய்துவருகிறதை யாருங்காணலாம்.

இந்த க்ஷேத்திரங்களின் தெற்கே காவேரியென்னும் பொன்னிமாநதியும், அருகே ஸாவித்திரிநதியும், சற்று வடக்கே (பல்குனி) பங்குனிநதியும் ஆகிய இம்மூன்று நதிகளுமிருக்கின்றன. இவற்றுள் பிற்கூறிய இரண்டு புண்ணியநதிகளும் இந்த ஸ்தலங்களின் அருகே காவிரியாற்றில் வந்து ஸங்கமமாகின்றதனால், இந்த இரண்டு க்ஷேத்திரங்களையும் ஒன்றாகப்பாவித்து பிரேமபுரியை திருமுக்கூடல் (திருவேணி) என்று பொதுப்படச்சொல்லுகிறார்கள்.

சின்னாட்களுக்குமுன்னே தஞ்சைமாநகரிலிருந்த சரபோஜிமகாராஜாவானவர், தாம் காசியாத்திரை செய்துவிட்டுத் திரும்பிவருகையில் இவ்விடத்திலும் தமது பிதிருக்களை

யுத்தேசித்து சிராத்தஞ்செய்ததுமுண்டு. முற்காலத்திலுள்ளோர், இக்காலத்தவரைப் போல வீணே சைவம் வைஷ்ணவமென்ற பேதம் பாராட்டி எப்போதும் எலியும்பூனையுமாய்ச் சண்டையிடுவதுபோல இருந்திராரென்பதற்கு இங்குள்ள மண்டுகபுஷ்கரணியானது இவ்விரண்டு ஆலயங்களுக்கும் பொதுவாயிருப்பதே சிறந்த சான்றாகும். இவ்வாறே அன்பில் (பிரேமபுரி) என்னும் பேர் இவ்விரண்டிற்குமே பொதுவாக இடப்பட்டிருக்கின்றதையும் காணலாம்.

சில நாட்களுக்குமுன்னே கீழன்பில் சிவாலயத்திலிருந்த சிலாசாசனங்கள் பலவற்றுள் எடுக்கக்கூடிய சிலவற்றை மட்டும் எடுத்துப் பார்த்ததில், இது நெடுங்காலமாக வுள்ளதென்றே நிச்சயமாகக் காணலாம். கிறிஸ்து பிறந்த 1070-வது வருஷத்தில் அரசாண்ட இராஜகேசரிபான், குலோத்துங்கசோழதேவன் மேலன்பில் சுந்தரராஜப்பெருமாளுக்குக் காணி பூமிகளை விட்டதாக அங்குள்ள சிலாசாசனங்களுள் ஒன்றினால் அறியலாம். 1063-75 இந்த வருஷங்களுக்கு இடையே அரசாண்ட வீரராஜேந்திரனென்பவனும் சுந்தரராஜப்பெருமாள் ஆலயத்திருப்பணிசெய்ததாகவுந் தெரியவருகின்றது. 1224-வது வருஷத்தில் துங்கபத்திரைநதிதீரத்திலுள்ள விஜயநகரத்தில் அரசாண்டிருந்த கீர்த்திபெற்ற கிருஷ்ணராஜதேவராயர், அன்பில் சுந்தரராஜப் பெருமாளுக்கு பூமிதானஞ்செய்தாரென்று அங்குள்ளவோர் சிலாசாசனத்தால் தெரியவருகிறது. கீழன்பில் பிரேமபுரீசுவரருக்கு 1268-வது வருஷத்தில் அரசாண்ட பாண்டியராஜாவாகிய குலசேகரன் என்பவன் பூமிதானஞ் செய்திருக்கிறான். இவ்விரண்டு ஸ்தலங்களும் பாடல் பெற்றனவாதல்பற்றி, இவை இந்தச் சிலாசாஸனங்களேற்பட்ட காலத்துக்கு முன்பே கட்டப்பட்டிருக்க வேண்டுமென்பதும் நிச்சயமேயாம்.

மேலும் இத்தலத்தில் ஸாமவேதவிநாயகர் ஸத்யவாசகவிநாயகர் எனப்பெயர் பெற்ற விநாயகர் கோவில்கள் இருக்கின்றன தீர்த்தத்திற்கு பிரேமபுஷ்கரணி அல்லது மண்டுகபுஷ்கரணி என்றும் அதின் கரையிலுள்ள ஈசனுக்கு பிரேம புரீசுவரர் என்றும், அம்பாளுக்கு பிரேமவல்லி யென்றும் விமானத்துக்கு புண்ணியாங்குர விமானமென்றும் பெயர்கள் வழங்குகின்றன. வடவிருக்ஷநிழலில் இருப்பதால் வடமூலநாதரென சுவாமிக்கு மற்றொரு நாமமுமுண்டு.

இங்குள்ள சிவலிங்கம், ருத்திராக்ஷத் திருமேனி; கண்ணிற்குப் புலப்படாத துவாரங்கள் இதில் எண்ணிறந்தன. நுண்ணிய ஈர்க்குகளை நுழைத்தால் எளிதில் உள்ளே சென்று மறையும். காசியிலிருப்பது போலவே, விச்வேசர், பிந்துமாதவர், டுண்டிவிநாயகர், தண்டபாணி, பைரவர், ஆகிய எல்லாருமிருக்கிறார்கள். கயையிலிருப்பது போலவே இங்குள்ள வடவிருக்ஷத்திலும் விழுது விடாதிருப்பது ஆச்சரியம்.

ஒரு ஸமயம் ஐந்து முகங்களுடன் கூடிய பிருமமா தனது வாஹனத்திலேறிக் கொண்டு, பார்வதிதேவி தோழிகளுடன் மலர் கொய்து விளையாடும் சோலையினருகில் செல்ல, வாகனமேறி ஈசன் ஒருவரைத் தவிர்த்து ஏனையோர் இவ்விடம் வாரார் எனக்கருதிய தோழிமார்கள், பவானியை நோக்கி "ஓ தேவி! பஞ்சமுகத்தினாகிய உனது நாதர்

உன்னைப் பார்க்க விரும்பி இதோ வருகிறார் பார், என்று கூறவே சம்புப்பிரியையும் எழுந்து நாணமெய்தி நோக்க, வருகிறவர் ப்ருமமா என அறிந்து கோபம் கொண்டு 'நீ யாது காரணத்தால் ஐந்து முகங்களுடன் வாகனத்திலுமேறி சிவஸாம்யத்தை அடைந்து எனக்கு ப்ரமத்தை விளைத்தனையோ, அக்காரணததாலே உனது தலைகளிலொன்றை இழக்கக்கடவாய்' எனவும் பஞ்சமுகப்பிரம்மா, அதுமுதல் சதுர்முகப்பிரம்மாவாக மாறினர். தேவிக்குச் செய்த அபராதத்தை உத்தேசித்து அததலத்திலேயே தவமியற்றி உமாஸஹாயரின் கிருபை கிடைக்கப் பெற்று, டுண்டிவினாயகர் என்னும் நாமரூபம் பெற்று, கோயில் கொண்டு விளங்குவதையும இத்தலத்தில் காணலாம். மற்றுமித்தலத்தை சூரியன் அடைந்து மகா தேவனை பூஜித்து தன் பேரால் சூரியபுஷ்கரணியை உண்டாக்கினான். இது மிகவும புண்ணியதீர்த்தம். மற்றும சந்திரன், வாசுகி, வால்மீகிமுனிவர், வசிஷ்டர், காசியபர், பரதமுனிவர், வியாஸர், அளகக்கராசன், காவேரியம்மன், சுக்கிரீவன், ஸ்ரீராமன் முதலியோர்கள், பிரேமபுரீசனைப் பூஜித்து பேறுபெற்ற பல திருவிளையாடல்கள் இத்தல மாகாத்மியத்தில் காணலாம்.

முன்னொரு காலத்தில் இந்தப் பிரேமபுரியில் மிகவும் தர்மிஷ்டனும் சிவபக்தனும் பிரேமன் என்னும் பேருடைய ஓர் இடையன் இருந்தான். அவன் வெகு சிரத்தையுடன் கோவில் பசுக்களுக்கு புல்லையும், அன்னத்தையும் அளித்து பாதுகாத்து வந்ததுமன்னியில், அப்பசுக்கள் தரும் பாலையெல்லாம் குடங்களில் நிறைத்து பிரேமலிங்கததின் அபிஷேகத்திற்கு பக்தியுடன் கொடுத்துவந்தான். தவிரவும் வயதானமாடுகளையும், மலட்டுமாடுகளையும், காளைமாடுகளையும், விற்றுக் கிடைத்தபணத்தையும் ஒரு காசேனும் தான் இச்சிக்காமல் கோவிலுக்குச் சேர்த்து விடுவன். சிவசொத்து என்ற பயத்தினால் கொஞ்சமேனும் தான் திருடுகிறதில்லை. இவனது புத்திரர்களும் பௌத்திரர்களும் இவனைப் போலவே பயபக்தியுடன் இருந்தார்கள். இவ்வாறு நிகழுமஒரு ஸமயத்தில் எல்லாப் பசுக்களுக்கும் அதிகாரியாயும், கணக்கனும், தனத்தில் பேராசையுள்ளவனுமாயிருந்த வசி என்பவன் இந்தப் பிரேமனை தனியே தருவித்து "நீ எவ்வுபாயத்தினாலாவது எனக்கு பணம் கொடாத வரையில் நான் உன்பேரில் மேலதிகாரிகளுக்கு கோளுரை சொல்லி உனக்குப் பெரிய அனர்த்தததை விளைவிப்பேன்" என்றான். ஆனால் பிரேமன் ஈச்வரனுக்கு பயந்து அதற்கு உடன்படவில்லை. வசியும அவனைப் பலவிதமாய் அதட்டியும் பயமுறுத்தியும் பார்த்தான். பிரேமனுக்கு இருந்த அளவிலடங்காத சிவபக்தியானது, சிவசொத்தி லிருந்து லஞ்சம் கொடுதது சிவனுக்கு துரோகம் செய்வதற்கு அவன் மனதில் கொஞ்சமேனும் இடம் கொடுககாமல் தடுத்துவிட்டது. இதனால் கணக்கனாகிய வசிக்கு மிகவும் கோபம் உண்டாய் அவன் மேலதிகாரியினிடததில் இப்பிரேமன் கோவில் எருது, பால் தயிர் இவைகளை விற்று வெகு திரவியங்களைத்திருடி அதனால் தனவானாயிருப்பதால் இவனை தண்டிக்கவேண்டும் என்னும் பொய் வார்த்தைகளைச் சொல்லி அவ்வதிகாரிக்கு பிரேமன் பேரில் மிகவும் கெட்ட அபிப்பிராயம் ஏற்படும்படி செய்து பிரேமனுக்கு கடுமையான தண்டனையை விதிப்பித்தான். உடனே வசியும் பிரேமனுக்குக் கால்களில் விலங்கிட்டு சிறைச்சாலையில் அடைத்துப் பலவாறாக ஹிம்ஸித்தான். இவ்வாறு சிறைச் சாலையில் இடையன் பிரேமன் ராத்திரியில் தனியே வருந்தி பிரேமபுரீசுவரரை நினைத்து

நினைத்து "நிரபராதியாயிருக்கும் படியான என்னை இந்த வசியென்பவன் மிகவும் ஹிம்ஸிக்கிருனே; ஏ, தீனபந்தோ! ஸர்வஸாக்ஷியாயிருக்கும் படியான உனக்குக்கூடவா நான் நிரபராதி என்று தெரியவில்லை. உன்னைத்தவிர வேறு தெய்வத்தை நான் கண்டிலேனே! என்னை உபத்திரவப்படுத்தும் இந்த பாபியை நீ கேட்கலாகாதா? பக்தவத்ஸலன் என்னும் பெயர் உனக்குத்தகாதா? காலை முதல் இவனுடைய ஹிம்ஸைகளால் சரீரமும் மனதும் நொந்து போய் பசியால் வருந்துகிறேனே. கடைக் கண்ணுல் சற்றுப் பார்க்கலாகாதா. ஹா வடமூலநாதா" என்று மனங்கலங்கி துதித்துக்கண்ணீர் ததும்பப்புலம்பி மூர்ச்சை போய் தரையில் வீழ்ந்தனன். உடனே பிரேமபுரீசுவரராகிய அந்த வடமூலநாதரும் தமது பக்தன் பேரில் மனதிரங்கி இனி தாமதிப்பது சரியல்ல என்று அறிந்து அந்த அர்த்தராத்திரியில் ஓர் ஸ்வர்ணகிண்ணத்தில் பால் அன்னத்தை தாமே எடுத்துக் கொண்டு அச்சிறைச் சாலையின் கதவின் அருகில் வந்து 'பிரேமா, பிரேமா' என்றழைத்தார். அது கேட்டு திடீரென்று மூர்ச்சை தெளிந்தெழுந்த பிரேமனும் வந்திருப்பவன் கணக்கன் வசி என்று பயந்து "ஓ கணக்கனே! நீ அர்த்தராத்திரியிலும் கூட என்னை வருத்த அழைக்கின்றுயே சற்றேனும் குற்றமற்ற என்னை இப்படி ஹிம்ஸிக்கலாமா? உனக்கு இது ஈச்வரசம்மதமாகுமா" என்றுன். உடனே தயாநிதியாகிய பரமேச்வரனும் "ஓ பிரேமனே, நான் கணக்கனுகிய வசியல்லேன், நீ சதா சர்வகாலமும் சிந்தனை செய்யும் பிரேமலிங்கமே நான். நீ பசியால் வருந்தாமல் இருக்கும் பொருட்டு அன்னம் கொண்டுவந்திருக்கிறேன். கதவைத் திறப்பாய்" என்ருர். இதைக்கேட்டதும் பிரேமனுக்கு சந்தோஷமுண்டாயிற்றென்ருலும் பூர்ணநம்பிக்கைவாராததால் கதவிடுக்கினுல் பார்த்தும் சந்தேகம் தீராமையால் வந்திருப்பவர் பிரேமபுரீசிவரரேயானுல் தனது காலில் போட்டிருக்கும் விலங்கு முறிபட்டுப்போகட்டும் என்றுரைக்க அவ்வாறு அந்த விலங்குகள் முறிவுபட உடனே மிகுந்த சந்தோஷத்துடன் கதவைத்திறந்து சிவபெருமானைத் தரிசித்து அஞ்சலிபந்தம் செய்து வணங்கி ஆனந்தப் பெருக்கால் மெய்மறந்து நிற்கும் ஸமயத்தில் ஈச்வரன் அவனை தான் கொண்டுவந்த அன்னத்தை சாப்பிடச்சொல்ல அவனும் அவ்வாறே சாப்பிட்டான். பிறகு ஈச்வரன் பிரேமனை அவன் வீட்டிற்குப் போகச் சொல்ல அதற்கு அவ்விடையன் "ஓ, ஈச்வரா, காலையில் அந்த குரூர புத்தியுள்ள வசியானவன் என்னைப் பிடித்து இழுத்து அடிப்பானே, என்ன செய்வேன்" என்று கதற அதற்கு ஈச்வரன் "கொஞ்சமேனும் பயப்படாதே, காலையில் அந்த வசி உன்னிடம் வந்தால் நீ ஒன்றையும் திருடவில்லை என்பதற்கு பிரேமலிங்கமே சாக்ஷி, அவரைக் கேட்டால் உண்மை வெளியாகும் என்று சொல்லு. நானும் உனக்கு நிச்சயம் சாக்ஷிசொல்லுகிறேன்" என்று கூறி அவன் மனதைத் தேற்றி அந்தர்த்தானமாயினுர். பொழுது விடிந்ததும் பிரேமன் காராகிருஹத்தை விட்டு தப்பித்து விடு போய்விட்டான் என்ற சமாசாரம் கேட்டதும் வசி மிகவும் கோபம் கொண்டவனுய் சவுக்கை கையிலேந்திக் கொண்டு பிரேமனை நோக்கி வரும் போது பிரேமன் அங்கிருந்த எல்லோருடைய முன்னிலையிலும் தான் சற்றேனும் குற்றமற்றவன் என்றும் அதற்கு பிரேமமஹாலிங்கமே சாக்ஷியென்றும் தன்னை வசி அன்னியாயமாய் பிடிக்கிருனென்றும் உரைத்தான். இதைக் கேட்ட வசி நீ பிரேமலிங்கத்தைக் கொண்டு சாக்ஷி சொல்லுவிப்பாயானுல் உன்னை தண்டிக்கவில்லை என்று பரிஹஸித்தான். உடனே எல்லோரும் பிரேமபுரீசுவரர் ஸன்னிதிக்குச் சென்ருர்கள்.

அங்கே பிரேமன் தனது இருகரங்களையும் தலைமேல் தூக்கிக் கொண்டு ஈச்வரனை நோக்கி "ஹே தீனபந்தோ, நீ எல்லாவற்றிற்கும் சாக்ஷியாதலின் உமது பசுக்களின் பால், தயிர், நெய் முதலியவற்றை சிறிதும் நான் கவரவில்லை என்னும் என்னுரையை உண்மையென்று இச் சனக் கூட்டத்தில் எல்லோரும் கேட்க தேவரீர் என்பக்கம் சாக்ஷி சொல்லி என்னைக் காத்தருளவேண்டும்'' என்று கதற பிரேமவல்லபராகிய பகவான் லிங்கத்தின் உள்ளிருந்தபடியே "இப்பிரேமன் என் திரவியத்தை சிறிதும் கவரவில்லை, இதற்கு நானே சாக்ஷி, ஆதலால் நீ இவனை விலங்கு தெறித்துவிட்டுவிடு, கொஞ்சமும் வருந்தாதே வருந்தாதே'' என்று மயிர்க்கூச்சல் உண்டாகும்படி கம்பீரமாக உரைத்தருளிய வசனத்தைக் கேட்டு அங்குள்ள எல்லோரும் ஆச்சரியம் கொண்டார்கள். ஆனால் துர்புத்தியுள்ள வசியானவன் 'நீ இந்திரஜாலவித்தை செய்கின்றாய்' என்று சொல்லிக்கொண்டு நிரபராதியான பிரேமனை சவுக்கால் ஓர் அடி அடித்தான். உடனே காலாக்கினி ருத்ரனாகிய மகாதேவனுக்கு அளவிலடங்காத கோபம் உண்டாய் அவ் வசியை தண்டிப்பதற்காகத் தனது கையிலேந்திய மழுவை விடுக்க, ஜ்வாலையோடும், பொறியோடும் பயங்கரமாக வரும் அம்மழுவைக் கண்டு அதற்கு எதிரில் இருந்த பலிபீடமானது பயந்து தென்புறத்தில் ஒதுங்கிற்று. வசியும் அவனால் முடிந்தமட்டில் ஓட்டம் பிடித்தான். ஆனால் அம்மழுவானது அவனைத் தொடர்ந்து கணப்பொழுதில் அவனைச் சாமபலாக்கிற்று. அம்மழு சென்ற வேகத்தில் காதவழி தூரம் கிழக்கே சென்று திருவையாற்றுக்கு எதிர்த்துறையில் கொள்ளிடக் கரையோரமாய் உள்ள ஸ்தலத்தில் நர்த்தனமாடியடங்கியதால் அக்காரணம் பற்றி அந்த ஸ்தலததிற்கு திருமழுவாடி என்ற பெயர் இடப் பெற்றிருக்கின்றது. பிறகு கருணாநிதியாகிய பிரேமபுரீச்வரர் தேவர்கள் துதிக்க, ரிஷபாரூடராய்த் தோன்றி தனது பக்தனாகிய பிரேமனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்து அனுக்கிரகித்தனர். இந்த ஸ்தலத்தில் பலிபீடமானது இபபொழுதும் தெற்கு பக்கத்தில் ஒதுங்கியிருப்பதை எல்லோரும் கவனிக்கலாம்.

மேலன்பிலில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் வடிவழகிய, நம்பிஸுந்தரராஜப்பெருமாள். தாயார் சுந்தரவல்லி யென்னும் அழகியவல்லி. தாரகவிமானம், மண்டுக புஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், போகசயனம், பிரம்மாவுக்கும் வால்மீகி மகரிஷிக்கும் பிரத்தியக்ஷம், திருமழிசைப்பிரான் மங்களாசாஸனம். இந்த திவ்வியதேசம் மிகவும் ஏகாந்தமானது. முற்றுந்துறந்த முனிவர்கள் தங்கி வசிப்பதற்கேற்ற இடம்.

திருவன்பில் திருப்பதியானது சோணாட்டில் தொன்று தொட்டு மாப்பெருஞ்செல் வமுள்ள வளநகரென்பதற்கு மற்றுமோர் உதாரணமென்னவெனின், ஒருகாலத்தில் கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பர் அன்பிலுக்குச் சென்றதில், அக்காலத்தில் அங்கிருந்த தாசியான சிலம்பியென்பாள், அவரால் தானுமோர் பாடல் பெற விரும்பி அவரைக் கண்டு வணங்கித் தன் மீதோர் பாட்டைப் பாடவேண்டுமென்று அவரை வேண்டிக் கொள்ள, அதற்கு அவர் தாம் பாடும் பாட்டொன்றுக்கு ஆயிரம்பொன் பரிசாகக் கொடுத்தாலன்றிப் பாட மாட்டோமென்ன, அவள் தன்னிடம் ஐந்நூறு பொன்தான் இருக்கிறதென்றும், அதற்கு மட்டுமாவது பாதிப்பாட்டைப் பாடித்தரவேண்டுமென வருந்திக் கேட்க அவர்

"தண்ணீருங் காவேரி தார்வேந்தனுஞ் சோழன்
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே--பெண்ணாவாள்"

என்று பாதிப்பாட்டை மட்டும் பாடிக்கொடுத்துவிட்டுச் சென்றார். பின்பு வெகுநாட்கழித்து ஒருநாள் அவளது அதிர்ஷ்டவசத்தால், உலகம் புகழும் ஔவையார் அன்பிலுக்குச்சென்று அங்கே பட்டினியாயிருக்கையில், ஔவையின் பெருமையைச் சிறிதுமறியாதவளும் தன்னிடமிருந்த பொருளையெல்லாங் கம்பரிடங் கொட்டிக் கொடுத்துவிட்டு வறுமையுற்றிருந்தவளுமான அந்தச் சிலம்பி யென்னும் தாசி எப்பொழுதுமே இயல்பாக யாரிடத்தும் அன்பு உடையவளாதலின், தனது பிறவிக்குணமாகிய ஈகைத் தன்மையால் கட்டுண்டு அவளது பசியினை யாற்றுவிக்குமாறு நகைமுகங்கொண்டு அவளுக்குச் சிறிது கூழை வார்க்கவே, அவளும் அஃதனால் தன் பசியை யாற்றிக் கருணை கூர்ந்து, அவளுடைய வீட்டின் சுவற்றில் எழுதப்பட்டிருந்த அந்த அரைப்பாட்டைக் கண்டானந்தங் கொண்டு, அதனோடு:—

"அன்பிற் சிலம்பி யாவிந்தத் தாளடியாள்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

என்று தான் மறுபாதியைப் பாடி அந்தப்பாடலைப் பூர்த்தி செய்தாள். இக்காரணம்பற்றித்தான் ஔவையாருக்குக் கூழுக்குப்பாடினவளென்னுங் காரணப் பேரொன்று அன்று தொட்டு எங்கும் வழங்கத் தலைப்பட்டது.

இவ்வாறாகப் பிரேமபுரி யென்னும் அன்பில் க்ஷேத்திரம், ஸ்ரீய:பதியினாலும், உமாபதியினாலும் ஒன்று சேர்ந்து நித்தியவாஸஞ் செய்யப்படுகின்றதும, பண்டைக்காலத்துப் பக்தர்களைப் புனிதமாக்கினதுமான மூதூர் என்பதற்கு இது போன்ற இன்னும் பல காரணங்களுமுள.

மேலன்பில் ஸுந்தரராஜப்பெருமாள்கோயில் மூலஸ்தானத்தின் பின்புரம் மதிளில் வெட்டப்பட்டிருக்கிற சாஸனமானது கி. பி. 1063—வருஷத்துக்கும் 1075—ம் வருஷத்துக்கும் இடையே ஆண்ட முதலாவது சோழனான வீரராஜேந்திரன் காலத்தில் என்றிருப்பதனாலும், அக்காலத்தில் அரசர்களுக்குள்ள வழக்கப்படி வித்வான்களால் பாடப்பெற்ற அவ்வவ்வரசனின் மெய்க்கீர்த்தியினுள் 'திருவளர் என்று தொடங்கிவருவது அவ்வரசனுக்குரியதாதலாலும், அவன் காலத்திலே அக்கோயிலில் முதலிலே அந்தச் சிலாசாசனமெழுதப் பட்டதாகவேண்டும். மெய்க்கீர்த்தியென்றால், இன்னதென்று யார்க்குமெளிதிற்புலப்படுமாறு அந்தந்த அரசனின்பெருமையெல்லாம் யாரும் அறியும்படி விரித்துக் காட்டப்பட்டிருப்பது என்பதற்கு அதன் முதலிலுள்ள சிறிது அடிகளை மட்டும் இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றது:—

வீரராஜேந்திரதேவன்.

"திருவளர் திரள்புயத் திருநில வலயந் தன்மணிப் பூணெனத் தாங்கப் பன்மணிக் கொற்றவெண் குடைநிழல் குவலயத் துயிர்களைப் பெற்ற தாயினும் பேணி மற்றுள வலய

கழ லரையர்த னடிநிழ லொதுங்க வுறைபிலத் துடைகலி ஒதுங்க முறைசெய்து விரைம லர்த்தெரியல் விக்கலன் றன்னொடு வரிசிலைத் தடக்கை மாசா மந்தரைக் கங்க பாடிக் களத்திடை நின்றுந் துங்கபத் திரிபுகத் துரத்தி யாங்கவர் வேங்கைநன் னாட்டிடை மீட்டு மவர் விட்ட தாங்கரும் பெருவலித் தண்டுகெடத் தாக்கி மாதண்ட நாயகன் சாமுண்டரா யனைச் செற்றவன் சிரத்தினை யறுத்து மற்றவ னொருமக ளாகிய இருகையன் றேவி நாகவை யென்னுந தோகையஞ் சாயலை முகத்தொடு மூக்குமே வரிக்கிப பகைத்தெதிர் மூன்றும் விசையினு மேனறெதிர் பொருது பரிபவந் தீர்வன எனக் கருதிப் பொருபுனல் கூடல் சங்கமத் தாகவ மல்லன் மக்க ளாகிய விக்கலன் சிங்கண னென்றிவர் தமமொடு மெண்ணில்சா மந்தரை''

இந்த முதல் சாசனத்தின் துவக்கத்தில்,

"அன்ன வயல் சூழ் அன்பிவர்கள் நீடி யழகெய்தி முப்பொழுதுங் கண்டு போற்ற மன்னு மழகிய பெருமாள இளையகோவை மலர்மகளை மாருதியை யெழுந்தருளுவித்தோங் கன்னய குடைத் தடக்கைப்பட் டருணநிதி காண்டகுசீர்க் கிளைதாங்கிக் கலைகள் ஓதிச் செந்நெல் வயல்சூழ் வீரசிங்கம் எங்கள் சீர்க்குருகூர் நம்பியெனுஞ் செழுமறையோன் தானே.''

என்றதனுள், "அழகியபெருமாள்'', "இளையகோவை'', "மலர்மகளை'' "மாருதியை'' என் றிருப்பதைக் காண்கையில், இக்கோயில் ஸ்ரீராமபிரானுக்குரியதென்று நிச்சயிக்கவேண் டும். ஆனால், இங்கேயுள்ள விக்கிரகங்களெல்லாம வேறாகவிருக்கின்றன. சற்று ஊன் றிப் பார்ப்பின், அன்பிலுக்கும், கீழனபிலுக்கும் சுமார் மூன்றுமைல் கிழக்கே காவிரிக்க ரையோரமாகவுள்ள 'நததம்' என்னும் சிற்றூரிலுள்ள புராதனமான ஆலயத்தில் இந்த விக்கிரகங்கள் நான்கும் அழகாய் அமைத்துவைக்கப் படடிருப்பதைக் காண்கையில் இவை தாம் அவையேயென்று ஐயுறும்படியாகின்றது. அங்குள்ள கள்ளஜாதியார் இந்தக் கோயிலைக் கண்ணை யிமைகாப்பது போல் நெடுங்காலமாகக் காப்பாற்றி வருகிறார்கள். இதன் உண்மை நன்கு புலப்படவில்லை. அங்குள்ள சிலாசாசனங்களைப் பார்த்தால் என் னாகுமோ வென்று இன்னுந் தெரியவில்லை. ஒருவேளை அன்பிலில் ஆதியிலே ஏற்பட்டி ருந்த விக்கிரகங்கள் நத்தத்திற்கு கொண்டுபோகப்பட்டிருப்பினுமிருக்கலாம்.

ஸுந்தரராஜப்பெருமாள் மண்டபத்தின் வடவண்டைச் சுவரிலுள்ளது சகாப்தம் ஆண்டு 4408 (1446)ல் எழுதப்பட்டது. அது ஸாளுவமகாராஜா ஆண்டகாலம். அப் பொழுது பிர்மமதேசம் அன்பில் ஜலசயனப்பெருமாளுக்கு ஸ்ரீஜயந்தி புண்ணியகாலத் திலே திருவிடையாட்டமாக சந்திராதித்தியர்வரையும், செய்யாமங்கலம் எல்லைவரையில், பார்க்கவ கோத்திரம், ஜாயிமினிஸூத்திரம, புன்னமங்கை அருளாளபட்டர் ஸர்வமானி யஞ்செய்திருக்கிறாரென்று கண்டிருக்கிறது. இதுதான் ராயர் அப்பாச்சி ஆண்ட கா லம் (1445).

அன்பிலிலுள்ள மாரியம்மன்கோயிலானது சோழநாட்டிலுள்ள மற்றெல்லா மாரி யம்மன் கோயில்களுக்கும் முற்பட்டதென்பதற்கு அங்கே பூச்சொரிந்து திருநாள் நடந்த

பின்னரே சமயபுரம் மாரியம்மனுக்குத் திருவிழாத் தொடங்கி வருவதே போதுமானது. இந்த மாரியம்மன கோயில் திருவிழா ஐம்பது வருஷங்களுக்கு முன்னே முற்றுமே வேருகவிருந்தது. அக்காலத்தில், இளஙகாடு, துவாகுடி, கிளியூர், மேட்டுப்பட்டி முதலான பதினெட்டுப் பட்டிக்கள்ளர்களும் அநதக் கோயில் குடிகளாதல்பற்றி அந்த ஊர்முழுமையும் ஒன்றுசேர்ந்து கொம்பு தப்பட்டைகளின் பேரொலி முழங்க கத்தியுங் கேடயமுமேந்தித் தடியுங்கையுமாகச் செல்லுகையில் பார்த்தால் பார்ப்பதற்கே அச்சமாயிருக்கும். கோயில் வலம் வருமுறைகளில் வழக்கத்துக்கு விரோதமாய் ஏதேனும சிறிது மாறின் உடனே அது அமர்க்களமாய்ப் பிணக்காடாய் ரக்தவெள்ளமாய்ப் பனங்காய்கள் போலத் தலைகள் வெட்டுண்டு கீழே புரளுவதுமுண்டு. இப்பொழுதும் இநத அமளி அடங்கினபாடில்லை. ஆதலால் போலீஸாரும், மாஜிஸ்திரேட்டாரும் உத்ஸவகாலங்களில் ஆயுதபாணிகளாய் ஸர்வஜாக்கிரதையாயிருப்பதைக் காணலாம்.

அன்பில் ஏழூர் சேர்ந்ததாதல் பற்றி இவ்வேழூர்களுக்கும் கிராமதேவதை ஒன்றேயாம். "ஓண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை யோட்டிவிட்டது" என்ற பழமொழி இவ்வூரிலேதான் பிறந்தது. ஆதியில் அன்பிலிலிருந்தது ஊமைப்பிடாரி; அது இப்பொழுது கேட்பாரற்றுக் கீழன்பில் மாரியம்மன்கோயிலினருகே ஓர் மாத்தடி நிழலின்கீழ் நிற்க நிழலுமற்றுத் தள்ளுண்டு கிடக்கிறது:—ஓர் காலவிசேஷத்தில் காவேரியாற்றில் பெரிதான பிரவாகமொன்று வர, அதில் முன் திருவாசியிலிருந்த அம்மன், தன் கோயில் இருந்தவிடந்தெரியாமல் வெள்ளத்தில் அடித்துக்கொண்டுபோகப்பட்டுக் குளிரக்குளிரத் தானும் கட்டைபோல மிதந்துவந்து அன்பில் அம்மனிடம் அடைக்கலம்புக, அது அன்பிலிலுள்ளதாதலால் அனபு கூர்ந்து, அதற்கு இடங்கொடுக்கப்போக, வந்த பிடாரியாகிய ஆச்சிராமவல்லி அதனை அப்படி ஓட்டிவிட்டதென்று அங்குள்ளோர் கர்ணபரம்பரையாய்ச் சொல்லிக்கொள்ளுகிருர்கள். இது ரஸ்தாவின் தென்புரமாயிருக்கிற பெரிதான பனந்தோப்பிற்குள்ளே இருக்கிறது. மண்ணச்சநல்லூர் எண்ணெய்வாணியர்முதலான பலர் இதன் குடிகள். சிறிதுகாலத்துக்கு முன்னே லக்ஷம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவிட்டு இதற்கென்று அழகான ஓர் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு பூஸ்திதியும் அவர்களால் வாங்கிவிடப்பட்டிருக்கிறது.

திருமழிசையாழ்வார் பாடியது:—

நாகத்தணைக்குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்
நாகத்தணையரங்கம் பேரன்பில் *—நாகத்
தணைப்பாற்கடல்கிடக்கும் ஆதிநெடுமால்
அணைப்பார் கருத்தனுவான். 36

தேவாரப்பாடல்கள்.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்தது:—

முதல் திருமுறை—பன்—தக்கராகம்.

கணைநீடெரிமாலரவம் வரைவில்லா, விணையாவெயின் மூன்றுமெரித்தவிறைவர்
பிணையாமயிலுங்குயில் சேர்மடவன்ன, மணையும்பொழிலன் பிலாலந்துறையாரே. 1

சடையார்சதிரன் முதிராமதிசூடி, விடையார்கொடியொன்றுடை யெந்தைவிமலன்
கிடையாரொலியோத் தரவத்திசைக்கிள்ளை, யடையார்பொழிலன் பிலாலந்துறையாரே. 2

ஊரும்மரவஞ்சடை மேலுறவைத்துப், பாரும்பலிகொண்டொலி பாடும்பரமர்
நீருண்கயலும் வயல்வாளைவராலோ, டாரும்புனலன் பிலாலந்துறையாரே. 3

பிறையும்மரவுமுறவைத்த முடிமேல், நறையுண்டெழு வன்னியுமன்னுசடையார்
மறையும்பலவேதியரோத வொலிசென், றறையும்புனலன் பிலாலந்துறையாரே. 4

நீடும்புனற்கங்கையுந் தங்கமுடிமேற், கூடும்மலையாளொரு பாகமமர்ந்தார்
மாடும்முழவமதிரம் மடமாத, ராடும்பதியன் பிலாலந்துறையாரே. 5

நீரூர்திருமேனியருன மிலார்பா, லூரூர்சுவையாகியவும்பர் பெருமான்
வேரூரகிலும் மிகுசந்தனமுந்தி, யாரூர்வயலன் பிலாலந்துறையாரே. 6

செடியார்தலையிற் பலிகொண்டினிதுண்ட, படியார்பரமன் பரமேட்டிதன்சீரைக்
கடியார்மலரும்புனல் தூவிநின்றேத்து, மடியார்தொழுமன் பிலாலந்துறையாரே. 7

விடத்தார்திகழு மிடற்றன்னடமாடி, படத்தாரரவம் விரவுஞ்சடையாதி
கொடித்தேரிலங்கைக்குலக் கோன்வரையார, வடர்த்தாருளன் பிலாலந்துறையாரே. 8

வணங்கிம்மலர்மேலயனு நெடுமாலும், பிணங்கியறிகின்றிலர் மற்றும்பெருமை
சுணங்கும்முகத்தம் முலையாளொருபாக, மணங்குந்திகழன் பிலாலந்துறையாரே. 9

தறியார்துகில்போர்த்துழல்வார் சமண்கையர் நெறியாவுணராநிலை கேடினர்நித்தல்
வெறியார்மலர் கொண்டடிவீழுமவரை, யறிவாராவரன் பிலாலந்துறையாரே. 10

அரவார்புனலன் பிலாலந்துறைதன்மேற், கரவாதவர்காழியர் ஞானசம்பந்தன்
பரவார்தமிழ்பத்திசைபாட வல்லார்போய், விரவாகுவர்வானிடை வீடெளிதாமே. 11

திருநாவுக்கரசுசுவாமிகளருளிசெய்தது:—

ஐந்தாம் திருமுறை—திருக்குறுந்தொகை.

வானஞ்சேர்மதி சூடியமைந்தனை, நீநெஞ்சேகெடுவாய் நினைகிற்கிலை
யானஞ்சாடியையன் பிலாலந்துறைக், கோனெஞ்செல்வனைக் கூறிடக்கிற்றியே. 1

சாரணத்தர் கருத்தர் கபாலியார், வாரணத்துரிபோர்த் தமணாளனார்
ஆரணப்பொருளான் பிலாலந்துறை, நாரணற்கரியா னொருநம்பியே. 2

அன்பினானஞ் சமைந்துடனாடிய, வெண்பிலானையுரித்துக் களைந்தவன்
அன்பிலானை யம்மானையள்ளூறிய, அன்பினால்நினைந்தார றிந்தார்களே. 3

சங்கையுள்ளதுஞ் சாவதுமெய்யுமை, பங்கனாரடிபாவியேனுனைய
அங்கணனெந்தையன் பிலாலந்துறைச், செங்கணாரடிச் சேரவும்வல்லரே. 4

கொக்கிறகர்குளிர்மதிச் சென்னியர், மிக்கரக்கர்புர மெரிசெய்தவர்
அக்கரையினரன் பிலாலந்துறை, நக்குருவருநம்மையறிவரே. 5

வெள்ளமுள்ள விரிசடைநந்தியைக், கள்ளமுள்ளமனத்தவர் காண்கிலர்
அள்ளலார்வயலன் பிலாலந்துறை, யுள்ளவாறறியார் சிலருமரே. 6

பிறவிமாயப் பிணக்கிலழுந்தினும், உறவெலாஞ் சிந்தித்துன்னியுகவாதே
யறவனெம்பிரானன் பிலாலந்துறை, மறவாதேதொழு தேத்திவணங்குமே. 7

நுணங்குநூலயன் மாலுமிருவரும், பிணங்கியெங்குந்திரிந் தெய்த்துங்காண்கிலர்
அணங்கனெம்பிரானன் பிலாலந்துறை, வணங்குநும் வினைமாய்ந்தரும்வண்ணமே. 8

பொய்யெலாமுறைக் குஞ்சமண்சாக்கியர், கையன்மாருரை கேளாதெழுமினோ
ஐயனெம்பிரானன் பிலாலந்துறை, மெய்யன்சேவடி யேத்துவார்மெய்யரே. 9

இலங்கைவேந்தனிருபது தோளிற்று, மலங்கமாமலைமேல் விரல்வைத்தவ
னலங்கலெம்பிரானன் பிலாலந்துறை, வலங்கொள்வாரைவானோர் வலங்கொள்வரே. 10

தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.




5 & 6


மதுரை.

தமிழ் புத்தகங்கள்.


	ரூ.	அ.	ப.
தேன் இந்தியா க்ஷேத்திரங்கள்:			
1. ஸ்ரீரங்கம் ...	0	10	0
2. சிதம்பரம் ...	1	0	0
3. திருவானைக்காவல், திருச்சிறைப்பள்ளி, உய்யக்கொண்டான் திருமலை	0	10	0
4. கரூர், நெரூர், கங்கைகொண்ட சோழபுரம், அன்பில் ...	0	10	0
5 & 6. மதுரை ...	1	8	0
திருவானைக்காபுராணம் ...	2	0	0
கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் ...	1	8	0
ஸ்ரீ சங்கரபகவத்பாதர் சரித்திரம் ...	1	0	0
ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்தசிவாபிநவநரஸிம்ஹபாரதீஸ்வாமிகள் திவ்யசரித்திரம் ...	3	0	0
ஸ்ரீமத்பகவத்கீதாரஹஸ்யம் முதற்பாகம் ...	1	4	0
பகவத்கீதை வெண்பா ஷட்கம்—1 ...	0	6	0
ஷட்கம்—2 ...	0	6	0
ஷட்கம்—3 ...	0	6	0
தேவீ கீர்த்தனைகள் ...	0	2	0
ஸத்குருஸ்துதி ...	0	2	0
ஹரிஸ்துதி ...	0	2	0
ஸுப்ரமண்யஸ்வாமி ஸ்தோத்ரங்கள்	0	5	0
சிருங்கேரி ஸ்வாமிகள் கொடுமுடியில் செய்த உபன்யாஸம் ...	0	2	0
சுண்ணாம்பு, சாந்து, சிமெண்டு, காங்கிரீட் தளவரிசை இவைகளைப்பற்றிய நூல் ...	0	4	0
சித்தாதரன் ...	0	2	0
காங்கிரஸ் மஹாஸபை ...	0	4	0
தேவபோகம் ...	1	0	0
நாற்பது லக்ஷம் ரூபாய் ...	0	3	0
தாதாவின் தந்திரம் ...	0	2	0
ஓர் இரவின் ஸம்பவங்கள் ...	0	6	0
ஹேமந்தகுமாரி ...	0	2	0
ஹென்றி பெஸ்டலோஸி ...	0	2	0
ஹிரண்மயி ...	0	2	0
கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறைநூல்	1	0	0
இந்தியாவும் சுய ஆட்சியும் ...	1	8	0
இந்திரா ...	0	2	0
கொடியாலம் வாசுதேவ அய்யங்கார்	0	2	0
காவடிச்சிந்து ...	0	2	0
லஜ்ஜாவதி ..	0	2	0
மாலதீ ...	0	3	0
பெருமுடிச்சோழன் ...	0	6	0
அன்பின் வலிமை ...	0	10	0

	ரூ.	அ.	ப.
பிருதுலை ...	0	8	0
இராதாராணி ...	0	2	0
ஸத்குரு கீதை ...	0	8	0
வீரமாதேவன் ...	0	4	0
வித்யாரண்ய நகரம் ...	0	8	0
வியாபாரநீதி ...	0	8	0
ஸ்ரீ வாணீ விலாஸினி தனிச்சஞ்சிகை	0	8	0
,, இரட்டைச் சஞ்சிகை 1க்கு	1	0	0
,, 6 நம்பர்கள் அடங்கிய பயிண்டு செய்த வால்யம் ஒன்றுக்கு ...	3	4	0
குணசீல ஸ்தலபுராணம் ...	0	8	0
ஹனுமான்சிங் ...	0	12	0
மெய்யறிவு ...	0	8	0
சர்கா ...	0	8	0
சுந்தரி ...	1	0	0
திருமுருகாற்றுப்படை ...	0	12	0
பத்மினி ...	0	3	0
ரகுநாதன் ..	0	12	0
குணசீலதிருத்தேர் திருப்பணி அகவல் ...	0	2	0
விவேகசந்திரிகை ...	0	8	0
வஸந்தஸமுத்ரம் ...	0	12	0
மங்களாம்பாள் ...	0	8	0
ஜினேந்திரன் ...	1	8	0
பொன்னுசாமித்தேவர் கொலை ...	0	14	0
ஸ்ரீ வாமன சரித்திரம் ..	0	2	0
மூன்று வைரங்கள் ...	0	6	0
தாக்ஷாயிணி ...	0	6	0
கலாசுந்தரி ...	0	12	0
மதுசூதனன் ..	0	8	0
சிவகுமாரன் ...	1	0	0
நற்குலதெய்வம் ...	0	8	0
மதனமனோஹரி ...	0	8	0
நவநீதரம்பை ...	1	0	0
சோமளவல்லி ...	0	8	0
காமேந்திரன் ஞானலோசனி ...	1	0	0
கஜபதி ..	3	10	0
துயராழன்கதை ...	0	12	0
பூர்ன வல்லிகதை ...	0	6	0
கோமளம் காஞ்சியாத்திரை ...	0	8	0
சாரசநேத்ரி ...	0	12	0
காட்டுராஜன் ...	0	3	0
திலோத்தமா ...	0	8	0
மாதவி ...	0	10	0
விக்டோரியா மெய்கீர்த்தி ...	0	12	0










மதுரை மீனாக்ஷியம்மன் கோவில் வாசல்.


மதுரை.

மதுராபுரி என்று சொல்லப்படும் ஹாலாஸ்ய க்ஷேத்திரமானது இந்த புண்ய பூமியாகிய பரதகண்டத்துக்குள் விளங்கிவரும் பற்பல க்ஷேத்ரங்களுள் மிகச் சிறந்தது. இவ்வுலகத்தினுள் நமது மாதிரு பூமியாகிய இந்தியாவையே புண்ய பூமியென்று சொல்லுகிறார்கள். இவ்விந்தியாவிலோ அநேக புண்ய க்ஷேத்ரங்களுள்ளன. அவைகள் வைஷ்ணவ க்ஷேத்ரங்களெனவும் சைவக்ஷேத்ரங்களெனவும் இருவகைப்படும். வைஷ்ணவ க்ஷேத்ரங்களை நூற்றெட்டு திவ்ய தேசங்களெனவும், சைவக்ஷேத்ரங்களை ஆயிரத்தெட்டு சிவாலயங்களெனவும் பிரித்திருக்கிறார்கள். இந்த ஆயிரத்தெட்டு சிவக்ஷேத்ரங்களுள்ளும் கைலாஸம் முதலிய பதினாறு க்ஷேத்ரங்கள் மிகச் சிறந்தவை. பதினாறுக்குள்ளும் நான்கு க்ஷேத்ரங்கள் மிகவும் முக்கிமானவை. அவையாவன:—வடக்கேயுள்ள காசி க்ஷேத்ரம், தக்ஷிண கைலாஸமென்று சொல்லப்படும் ஸ்ரீகாளஹஸ்தி, புண்டரீகபுரமென்று சொல்லப்படும சிதம்பரம், ஹாலாஸ்யமென்று சொல்லப்படும் மதுரை, இந்த நான்கு க்ஷேத்ரங்களுமே. இவைகளுள்ளும் எவ்விதத்திலும் சிறப்புற்று விளங்குவது யாதெனில் இந்த ஹாலாஸ்ய க்ஷேத்ரமே. இத்




ஹேமபத்மாகரம் என்னும் பொத்தாமரைக் குளம்.

துணை சிறப்புற்றோங்கி விளங்குவதற்குக் காரணம் இங்குள்ள ஸர்வேசுவரனான பரசிவ மூர்த்தியாகிய ஸோமசுந்தரேசுவரர் இவ்விடத்திலருளிச் செய்த திருவிளையாடல்களே. வேறு ஒரு இடத்திலும் ஈசுவரன் இம்மாதிரி தமது லீலைகளை நடத்திக்காட்டவில்லை. சிதம்பரத்தில் ஆநந்தத்தாண்டவம் ஒன்றுமட்டும் செய்து காட்டினாரென்றாலும், அதையும் அத்துடன் மாறுகாலாட்டத்தையும், மற்றுமனேக லீலைகளையும் இந்த க்ஷேத்ரத்தில் செய்து காண்பித்திருக்கிறார். காசியில் மரணமடைந்தால் முக்தியென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த க்ஷேத்ரத்திலோ வஸிப்பதாலேயே ஜீவன் முக்தியென்று சொல்லியிருக்கிறது. அதனாலேயே இந்த க்ஷேத்ரத்துக்கு ஜீவன்முக்திபுரமென்றும் ஒரு பெயர் உண்டு. இவ்விடத்தில்தான் தேவேந்திரனுக்கு விருத்திராஸுரனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்கிற்று. மேலும் விராட் புருஷனுடைய சரீரமயமாகிய இந்த பிரமமாண்டத்தில் இடுப்புக்கு கீழ்பாகத்தில் ஏழு பாதாளலோகங்களுமிருக்கின்றன இடுப்புக்கு மேலுள்ள பாகத்தில் பூலோகம் முதலான ஏழுலகங்களுமுள்ளன. அவைகளுள் மூலாதாரம் முதலான ஆதாரஸ்தானங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முக்கியமான க்ஷேத்ரமும ஈசுவர ஸாந்நித்யமும இருந்துவருகிறது. விராட் புருஷனுடைய மூலாதார ஸ்தானம்தான் கமலாலய க்ஷேத்ரமாகிய திருவாரூர். இவ்விடத்தில் ஈசுவரன் பிருதிவி லிங்கரூபமாய் இருக்கிறார். ஸ்வாதிஷ்டானஸ்தானம்தான் கஜாரண்ய க்ஷேத்ரமாகிய ஜம்புகேசுவரம். இங்கு ஈசுவரன் அப்புலிங்க ரூபமாயிருக்கிறார். மணிபூரஸ்தானம்தான் அருணசல க்ஷேத்ரமாகிய திருவண்ணாமலை. இந்த க்ஷேத்ரத்தில் ஈசுவரன் தேஜோலிங்கரூபமாக விளங்குகிறார். அநாஹதஸ்தானமாகிய ஹ்ருதய புண்டரீகத்திலதான் சிதம்




மதுரை கோயிலில் சித்திர சில்ப வேலைகள் செய்த மண்டபம்.

பர க்ஷேத்ரம் விளங்குகிறது. இங்கே ஈசுவரன் ஆகாசலிங்கரூபமாய் ஆநந்தத்தாண்டவம் செய்துகொண்டு பிரகாசிக்கிறார். விசுத்திஸ்தானத்தில்தான் தக்ஷிண கைலாஸமாகிய ஸ்ரீகாளஹஸ்தி க்ஷேத்ரம். இங்கே ஈசுவரன் வாயுலிங்கரூபமாய் பக்தர்களை அநுக்ரஹிக்கி



மதுரை வண்டேர் தெப்பக்குளம் அதன் மத்தியிலுள்ள மண்டபமும் தோ


றார். ஆக்ஞாஸ்தானம்தான் வாராணஸீ க்ஷேத்ரமாகிய ஸ்ரீ காசி. இவ்விடத்தில் ஈசுவரன் விசுவேசுவரலிங்கரூபமாக தர்சனமளிக்கிறார். விராட் புருஷனின் பிரம்பரந்திரஸ்தானம் தான் ஸ்ரீ கைலாஸ க்ஷேத்ரம். இவ்விடத்தில் ஈசுவரன் ஸ்ரீ கண்டபரமேசுவரரூபராய் வஸிக்கிறார். இந்த ஆதாரஸ்தானங்களுக்கெல்லாம் அதீதமாயும், அவ்யக்தமாயும் உள்ள தான த்வாதசாந்தமென்று சொல்லப்படுவதுதான் ஹாலாஸ்ய க்ஷேத்ரம். இவ்விடத்தில் தான் ஈசுவரனானவர் ஜகத்துக்கெல்லாம் மூலகாரணமாயுள்ள ஸ்வயம்புலிங்க ரூபத்துடன் ஸோமசுந்தரேசுவரராக விளங்குகிறார். ஆதலால் பலவாற்றானும் இந்த க்ஷேத்ரம் மிகவும் மேம்பட்டது. இது தற்காலம் சென்னப்பட்டணமிருந்து 350 மைல்தூரத்தில் ராமேசுவரம் போகும் இருப்புப்பாதையிலுள்ளது. இந்த மதுராபுரிக்குப் பலவித பெயர்கள் பல காரணங்களால் ஏற்பட்டுள்ளன. அவையாவன :—மதுரை, ஹாலாஸ்யம், ஸமஷ்டிவித்யாநகரி, பூலோக சிவலோகம், ஜீவன்முக்திபுரம், கன்யகாபுரம, கதம்பவனம், த்வாதசாந்தம், சதுஷ்




ம். இது மதுரைகோயிலைப்போலவே 75 ஏகர் விஸ்தீர்ணமுள்ளது.

கூடம், திருவாலவாய் என்பன. இந்த மதுரையென்னும் பெயருடனேயே வட இந்தியாவில் ஒரு க்ஷேத்ரம் இருக்கிறது. அதில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா செய்த லீலைகளால் அந்த க்ஷேத்ரத்துக்கு பெருமை ஏற்பட்டது. அதேமாதிரி இந்த மதுரைக்கும் ஸாக்ஷாத் ஸோமசுந்தரேசுவரர் செய்த லீலைகளால் பெருமையேற்பட்டது.


இத்தகைய மஹிமைவாய்ந்துள்ள க்ஷேத்ரமானது ஆதிகாலத்தில் கதம்பவிருக்ஷங்களாலும் வில்வ விருக்ஷங்களாலும் அடர்ந்த காடாயிருந்தது. அதனாலேயே இந்த க்ஷேத்ரத்துக்குக்கதம்பவனமென்று பெயர். இந்தக் காட்டின் நடுவில் எல்லா சிவ க்ஷேத்ரங்களிலுமுள்ள சிவலிங்கங்களின் ஸமஷ்டிரூபமாக மூலபூதமாயுள்ள ஸ்வயம்புலிங்கம் ஒன்று ஆவிர்ப்பாவமாயிருந்தது. இந்த லிங்கம் விசுவம் முழுமையும் வியாபித்திருக்கும் தன்மையுடைத்தாயிருந்ததால் ஈசுவரன் புட்டுக்கு மண் சுமந்த காலத்தில் பிரம்பால் அடிவிழுந்த



மதுரை கோவில் திருவாபரணங்கள்.



மதுரை கோயில் யானை வாகனம்.




மதுரை கிளிக்கூட்டு மண்டபம்.


ஸமயத்தில் ஜகத்திலுள்ள எல்லோருக்கும் அடிவிழுந்ததாகத் தோன்றியது. ஆதலால் இந்த லிங்கத்தை தர்சனம் செய்து பூஜித்தால் எல்லா லிங்கத்தையும் பூஜித்த பலன் ஏற்படுகிறது. ஆகையால்தான் அநேகம் ஸ்தலங்களில் மீனாக்ஷிசுந்தரேசுவரருக்கு தனி கோயில்கள் ஏற்பட்டு பூஜைகள் நடந்துவருகின்றன. இந்த பரமபொருளுக்கெல்லாம் பரமாயிருக்கும்படியான கமேசுவர காமேசுவரி ரூபர்களான ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரர் தமது பக்தர்களை அநுக்கிரஹித்தற்பொருட்டு அறுபத்திநான்கு லீலைகளை செய்தருளியிருக்கிறார். அவைகளில் பதிநாறு கிருதயுகத்திலும், பதிநாறு திரேதாயுகத்திலும், பதிநாறு துவாபரயுகத்திலும், பதிநாறு கலியுகத்திலும் நடந்தது. இவைகளின் விவரம் பின்வருமாறு :—

1. இந்திரனுக்கேற்பட்ட பிர்ம்மஹத்தியை நிவர்த்தித்தது.

முன்னொருகாலத்தில் கிருதயுகத்தில் தேவலோகத்தில் தேவேந்திரனானவன் தனது ஸபையாகிய "ஸுதர்மா" என்னும் இந்திரஸபையில் எல்லா தேவர்களுடனும ரத்னஸிம்ஹாஸனத்திலுட்கார்ந்துகொண்டு ரம்பை முதலான அப்ஸரஸ்திரீகள் கானம் செய்ய திலோத்தமை மிகவுமத்புதமாக லாஸ்ய நர்த்தனம் செய்ய அதைக் கண்ணுற்று அந்த விஷயானந்தத்தில் மூழ்கியிருக்கையில் அச்சபைக்கு பிரஹஸ்பதி பகவான் வந்துசேர்ந்தார். இந்த நர்த்தன அமளியில் தேவேந்திரன் தனது குருவின் வரவை கவனிக்காமல் அவரைத் தகுந்தபடி வரவேற்று உபசரிக்காமலிருந்துவிட்டான். இதைக்கண்டு வருத்தமுற்ற பிரஹஸ்பதியும் உடனே தேவதைகள் ஒருவர் கண்ணிலும் படாமல் மறைந்துவிட்டார். அச




மதுரை கோயில் ரதம்.




மதுரை—கம்பத்தடி மண்டபத்தின் தூண்களிலுள்ள சில்பவேலைகள்.

சபை கலைந்ததும் தேவேந்திரனுக்குத் தன் ஞாபகம் வந்தது. உடனே குருவை தான் வரவேற்காத குற்றத்தையறிந்து மிகவும் வருந்தி மனம் நொந்து அந்த தோஷத்தாலேயே வரவர தனது தேஜஸும் பலமும் குன்றிப்போய் அஸுரர்களிடம் அபஜயமடைய ஆரம்பித்தான். உடனே எல்லா தேவர்களுடனும் பிரம்மாவிடத்தில் போய் அவரை துதித்து அஸுரர்களை ஜயிப்பதற்கு உபாயம் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவரும் குருவை அவமதித்த பாபத்தால் இவ்வாறு நேர்ந்ததென்றும் பிரஹஸ்பதியானவர் அவனிடம் வருத்தத்தால் மறைந்திருப்பதால் தற்சமயம் அவனுக்கு அவர் உதவமாட்டாரென்றும், குருவில்லாமல் ஒரு கார்யமும் நடவாததலால் தற்காலத்திற்கு த்வஷ்டாவின் புத்ரனாகிய விசுவரூபனை குருவாக அடையும்படிக்கும் அவனுக்குச் சொன்னார். தேவேந்திரனும் அவ்வாறே விசுவரூபனை குருவாக அடைந்து அவனால் சிவகவசம் கொடுக்கப்பெற்று, நாளுக்குநாள் பலம் விருத்தியடைந்து அஸுரர்களை ஜயித்து ஸுகமாய் இருந்தான். இச்சமயம் அஸுரர்களுக்கு மருமகனும் த்வஷ்டாவின் புத்திரனும், மூன்று தலைகளையுடையவனுமான விசுவரூபனென்பவன் ப்ரத்யக்ஷத்தில் தேவதைகளுக்கு ஹவிர்ப்பாகத்தைக் கொடுக்கிறதும் பரோக்ஷத்தில் அஸுரர்களுக்குக் கொடுப்பதுமாய் இந்திரனை வஞ்சித்து வந்தான். இதை ஞானதிருஷ்டியால் அறிந்த தேவேந்திரன் கோபம்கொண்டு தனது வஜ்ராயுதத்தால் விசுவரூபனின் மூன்று சிரஸுகளையும் வெட்டிவிட்டான். அவைகள் மூன்று பக்ஷிகளாய் பறந்து போய்விட்டன. ஆனால் விசுவரூபனைக் கொன்ற ஹத்தி தோஷமானது இந்திரனைத் தொடர்ந்தது. உடனே தேவதைகளின் ஸகாயத்தால் தேவேந்திரன் அந்த பிரம்மஹத்தியை நான்காகப் பிளந்து அந்த நான்கு பாகங்களையும் பூமி, ஜலம், ஸ்திரீ, விருக்ஷம் ஆகிய இந்த




மதுரை—கம்பத்தடி மண்டபத்திலுள்ள த்வஜஸ்தம்பம்.

நான்கினிடத்திலும் சேர்ப்பித்துவிட்டான். இவ்வாறு தனக்கு நேர்ந்த பிரம்மஹத்தி தோஷத்தைத் தீர்த்துக்கொண்டு வரவர விருத்தியடைகிறான் என்பதைத் தெரிந்துகொண்ட விசுவரூபனின் தகப்பனாகிய த்வஷ்டாவானவன் தனது புத்ரனைக் கொன்ற கோபத்தால் இந்திரனுக்கு சத்துரு ஏற்படவேண்டுமென்று பலமான யாகத்தைச் செய்து விருத்திராசுரனை யுண்டாக்கினான். அந்த விருத்திராசுரனும் அஸுர சைன்யங்களுடன் இந்திரனை யெதிர்த்த காலத்தில் அவனை ஜயிக்கமுடியாமல் இந்திரன் முதலிய தேவர்கள் பிரமாவிடம் செல்ல அவர் எல்லோரையும் கூட்டிக்கொண்டு மகாவிஷ்ணுவிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்தார். மஹா விஷ்ணுவும் இந்திரனிடமுள்ள ஆயுதங்கள் ஸாமர்த்திய மற்றவையென்றும் புதிதாக மிகக் கெட்டியானதான ஒரு வஜ்ராயுதம் செய்துகொள்ள வேண்டுமென்றும், அதற்கு ததீசிமஹரிஷியின் முதுகெலும்புதான் ஸரியான ஸாதனமென்றும், அம்மஹரிஷியை யாசித்தால் அவர் தமதெலும்பை உலகத்தின் க்ஷேமத்திற்காகக் கொடுப்பாரென்றும், அதிலிருந்து வஜ்ராயுதம் ஒன்று செய்துகொண்டு விருத்திராசுரனை எதிர்த்தால் அவனை ஜயித்து விடலாமென்றும் உபாயம் சொல்லிக்கொடுத்தார். அங்ஙனமே தேவர்களெல்லாம் ததீசி மஹரிஷியிடம் போய் யாசிக்க அவர் தமது முதுகெலும்பைக் கொடுத்துவிட்டார். அதைக்கொண்டு விசுவகர்மாவால் ஒரு வஜ்ராயுதம் செய்வித்து அதை யெடுத்துக்கொண்டு விருத்திராசுரனுடன் இந்திரன் யுத்தத்துக்குச் சென்றான். விருத்திராசுரன் எவ்வளவு எதிர்த்து போர்புரிந்தும் ஜயிக்க முடியாமையைக் கண்டு ஸமுத்திரத்திலிறங்கி தண்ணீருக்குள்ளே நடுவில் சென்றுவிட்டான். இந்திரன் அவனை அங்கு பின்தொடரமுடியாமையால் தேவதைகளெல்லாம் மறுபடியும் பிரம்மாவினிடம் போய்



மதுரை கோயிலாபரணங்கள்.




மதுரை கோயிலாபரணங்கள்.




மதுரை கோயில் சுவரிலுள்ள 64 லீலைகளின் சித்திரப்படங்கள்.

முறையிட அவர் அகஸ்தியமஹரிஷியைப் போய் வேண்டிக்கொண்டால் அவர் ஸமுத்திரத்தை வற்றடிப்பர். அதன் பிறகு விருத்திராசுரனைக் கண்டு பிடித்துக் கொல்லலாம் என்றார். அவ்வாறே அகஸ்தியரிடம் போய் பிரார்த்திக்க அவரும் ஸமுத்திரஜலம் முழுமையையும் உள்ளங்கையிலேந்தி ஆசமநம் செய்துவிட்டார். உடனே தேவேந்திரன் தனது சைன்யங்களுடன் ஸமுத்திரத்தின் தரையிலிறங்கிச்செல்ல அங்கு ஒரு மலையினுச்சியில் விருத்திராசுரன் பத்மாசனத்திலுட்கார்ந்துகொண்டு கல்லுப்போல் அசைவற்றவனாய் இந்திரியங்களையெல்லாம் அடக்கி மநஸை ஏகாக்ரசித்தனாக பரப்பிரம்மத்தினிடத்தில் வைத்து தியானத்திலமர்ந்திருந்தான். அவனைக் கண்டதும் தேவேந்திரன் தனது வஜ்ராயுதத்தால் அவனுடைய சிரஸை துண்டித்துவிட்டான். உடனே அவனைக்கொன்ற பிரம்மஹத்திதோஷமானது இந்திரனைப் பலமாகப் பிடித்துக் கொண்டுவிட்டது. அது எங்குப் பார்த்தாலும் இவனை பயங்கரமான ரூபத்துடன் பின் தொடர்ந்தது. அதற்கு பயந்து இந்திரனும் ஈசான்யதிக்கிலுள்ள ருத்ரலோகத்துக்கு ஓடி அங்குள்ள ஓர் தாமரைக்குளத்தில் தாமரைத்தண்டினுள்ளிருக்கும் தாமரைநூலில் ஒளிந்துகொண்டு ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் வெகுகாலம் வஸித்தான். அங்கிருந்தபடியே தனக்கு இவ்வித ஆபத்துக்களெல்லாம் நேர்ந்ததற்கு காரணம் தான் தனது குருவாகிய பிரஹஸ்பதிக்குச் செய்த அபராதம்தானென்பதை யுணர்ந்து அவரைப் பலவாறாகத் துதித்து தன்னை மன்னித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். பிரஹஸ்பதி பகவானும் இவனிடம் மனமிரங்கி இவன் முன் தோன்றினர். உடனே அவர் கால்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தான் செய்த குற்றங்களையெல்லாம் க்ஷமித்து தன்னை எவ்வாற்றானும் காப்பாற்ற வேண்டுமென்று மன்றாடினான். அவரும தயவால் இளகிய மனத்தினராய் அவனுக்கு விருத்திராசுரவதத்தால்




திருமலைநாயக்கன் மால் என்னும் அரண்மனை.

ஏற்பட்ட பிரம்மஹத்திதோஷம் நீங்க உபாயம் சொன்னார். மகாபாதகங்களெல்லாம் போகவேண்டுமானால் சிவபூஜை செய்து சிவனின் அனுக்கிரகம் கிடைத்தால்தான் போகும் ஆதலால் இப்புண்ய பூமியிலுள்ள கைலாசம் முதலிய பற்பல சிவக்ஷேத்ரங்களுக்குச்




வண்டூர் தெப்பக்குளமும் அதன் மத்தியிலுள்ள கோயிலும் தோட்டமும்—
ஒரு மூலையிலிருந்து எடுத்த காக்ஷி.

சென்று அங்குள்ள புண்யதீர்த்தங்களில் ஸ்நாநம் செய்து ஈசுவரமூர்த்திகளைப் பூஜை செய்து வந்தால் அவைகளுள் ஸர்வோத்தமமானதும் மிகச்சிறந்ததுமான க்ஷேத்திரத்தை யடைந்ததும் பிரம்மஹத்தி தானாகவே விலகிவிடுமென்று சொல்லி அபயப்பிரதானம் செய்தார். உடனே தேவேந்திரனும் குருவார்த்தைக்கிணங்கி எல்லா பரிவார தேவதைகளுடனும் பூலோகத்திற்கு வந்து கைலாசம் முதலான ஒவ்வொரு சிவ க்ஷேத்ரங்களுக்கும் சென்று அங்குள்ள புண்யதீர்த்தங்களில் ஸ்நானம் செய்து ஈசுவரனைப் பூஜித்துவந்தான். அங்குள்ள காடுகளிலெல்லாம் ராஜதருமப்படி வேட்டையாடி வந்தான். இவ்வாறு அநேக க்ஷேத்திரங்கள் கடந்து இந்த ஹாலாஸ்யக்ஷேத்திரத்தினெல்லைக்கு ஸமீபத்தில் வரும்பொழுதே அவனுக்கு வேட்டையில் மனம் ருசிக்கவில்லை. அது பிராணிஹிம்ஸையென்று தோன்றி வேட்டையிலிருந்தும் நீங்கினான். இந்த இடத்தில் தன் மனதுக்கு சாந்தி ஏற்படுகிறதென்றும் அதனால் இவ்விடத்தில் ஏதோ விசேஷமிருக்கிறதென்றும் தன்னுடன் வந்த தேவதைகளிடம் சொன்னான். இந்தப் பிரகாரம் சொல்லிக்கொண்டே கதம்பவன க்ஷேத்திரத்தின் எல்லையைத் தாண்டி அதனுள் பிரவேசித்தான். அச்சமயத்தில் அவனை விடாமல் பின்தொடர்ந்த பிரம்மஹத்தியானது அந்த க்ஷேத்திரத்தின் மஹிமையால் அதன் எல்லைக்கு வெளியிலேயே நின்று விட்டது. இதைக்கண்டதும் பயம் தெளிந்தவனாய் தன்னுடன் வந்த பிரஹஸ்பதி முதலிய தேவர்களை நோக்கி ஆனந்த பாவசனாய் "விடுபட்டேன், விடுபட்டேன், பிரம்மஹத்தியிலிருந்தும் விடுபட்டேன்" என்று உரக்கக் கதறினான். உடனே எல்லா தேவர்களும் "இவ்விடத்திலேதோ விசேஷமிருக்கிறதென்று நீங்




திருமலைநாயக்கன் மால் என்னும் அரண்மனை.

கள் சொன்னது ஸரியாகி விட்டது. இந்த கதம்பவிருக்ஷங்களடர்ந்த காட்டில் சிம்மங்களும் யானைகளும், கருடனும் பாம்பும், புலியும் மானும், இன்னுமிவைபோன்ற பரஸ்பரம் ஸஹஜமான விரோதமுள்ள பிராணிகளெல்லாம் மிகவும் ஸ்நேகத்துடன் ஸஞ்சரிப்பதால் இந்த ஸ்தலத்தில் அத்யந்த நிர்மலமான ஸாத்விகவஸ்து ஏதோ ஒன்று இருக்கிறது அதைத் தேடிப்பார்த்து கண்டுபிடிப்போம்" என்று சொல்லிக்கொண்டு நாலாபக்கமும் சென்றார்கள். இவ்வாறு தேடிச் செல்கையில் ஓரிடத்தில் தெளிவான தீர்த்தத்துடன் கூடிய ஒரு தடாகத்தைக் கண்டார்கள். அதிலுள்ள நிர்மலமான நீரையருந்தித் தங்களது சிரமத்தைப் பரிஹாரம் செய்துகொண்டு கரையிலுட்கார்ந்து நாலாபக்கமும் தோன்றிய வடர்ந்த காட்டைக் கண்ணுற்றார்கள். அச்சமயம் அக்குளத்துக்கு வாயவ்ய திக்கிலுள்ள கதம்பவிருக்ஷங்கள் வில்வவிருக்ஷங்கள் இவைகளின் மீது வெகு நேர்த்தியான பஞ்சவர்ணக்கிளிகள் உட்கார்ந்து கொண்டு அடியிற்கண்ட நாமாவளிகளை மனோகரமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தன. "சிவ சம்போ மஹாதேவ பரமேசுவர சங்கர, சந்த்ரசேகர பூதேச ஸாம்ப ஸ்ரீகண்ட சாசுவத". இதைக் கேட்டதும் ஆச்சரியமடைந்தவர்களாய் அக்கிளிகளிருந்த திக்கை நோக்கிச் சென்று நாலாபக்கமும் கவனித்துப் பார்க்கையில் அங்கு கதம்பவிருக்ஷத்தினடியில் அமிருதமயமான ஸ்வயம்புலிங்கமாகிய ஸுந்தரேசுவரரைக் கண்டார்கள். உடனே தேவேந்திரனிடம் சென்று தாங்கள் கண்ட விந்தையைத் தெரிவித்தார்கள். உடனே தேவேந்திரனும் எல்லோருடனும் அவ்விடத்திற்கு வந்து பிரஹஸ்பதி பகவானின் ஆக்ஞைப்படி அங்குள்ள புண்யதீர்த்தமாகிய குளத்தில் விதிப்படி ஸ்நாநம்



மதுரை—ஸுந்தரேசுவரர் கோயில் உள்பிரகாரம்.


செய்து நித்தியாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு தன்னுடன் வந்த பரிவாரங்களை ஈசுவரபூஜைக்காக புஷ்பங்கள் கொண்டுவரும்படி கட்டளையிட்டுவிட்டு தான் ஆதிலிங்கமாகிய ஸுந்தரேசுவரரை தர்சிக்கச் சென்றான். அந்த மஹாலிங்கத்தை இவன் தர்சித்த அந்த க்ஷணத்திலேயே இவன் பாபங்களெல்லாம் தொலைந்து கதம்பவனத்தினெல்லையில் தங்கியிருந்த விருத்திராசுரனின் பிரம்மஹத்தியும் நசித்துவிட்டது. புஷ்பம் கொண்டுவாச் சென்றவர்கள் புஷ்பங்களொன்றும் கிடைக்கவில்லை யென்று திரும்பிவர அதைக் கேட்டு மனவருத்தமுற்று உடனே எல்லா தேவர்களையும் தேவலோகத்திற்குச் சென்று அங்கிருந்து ஏராளமான புஷ்பங்களையும் இன்னும் இதர பூஜா திரவியங்களையும் ஸ்வர்ணபாத்திரங்களையும் அதிசீக்கிரத்தில் கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தான். விசுவகர்மாவை வரவழைத்து ஸ்ரீ ஸோமசுந்தரேசுவரருக்கு திவ்யமயமான ஒரு விமானம் உடனே நிர்மாணஞ்செய்யும்படி உத்தரவு செய்து விட்டு புஷ்பங்களைத்தேடிக்கொண்டு காட்டினுள் சென்றான். பலவிடங்களிலலைந்தும் புஷ்பம் கிடைக்காதவனாய் களைத்து அங்கு குளத்தங்கரையில் வந்துட்கார்ந்து கொண்டு சுந்தரேசுவரனையே தியானித்துக்கொண்டு ஆத்மபூஜை செய்வதற்கு புஷ்பங்கள் கிடைக்கவில்லையே என்று மிகவும் வருந்திக்கொண்டிருந்தான். அச்சமயம் ஈசுவரனானவர் இவனுடைய தாபத்தைக்கண்டு மனமிரங்கி அந்தக் குளம் முழுமையும் ஸ்வர்ணத்தாமரைகளை உண்டாக்கினார். அவைகளைக் கண்டு தேவேந்திரன் மிகவும் ஆச்சரியம் கொண்டவனாய் அப்புஷ்பங்களை ஈசுவரனுக்கு அர்ச்சிக்கவேண்டுமென்று தன் கைகளினாலேயே கொய்து கொண்டு அந்தத்தடாகத்துக்கும் "ஹேமபத்மாகாம்" "பொத்தாமரைக்குளம்" என்று பெயரி



மதுரை—மீனாக்ஷி நாயகர் மண்டபம்.


ட்டு அங்கிருந்து புறப்பட்டு ஈசுவரனிடம் சென்றான். அவன் அந்த லிங்கத்தின் ஸமீபத்தில் வருகிறதற்குள் விசுவகர்மாவானவன் எட்டு திக்கஜங்களால் தூக்கப்பட்டதான மிகவும் அத்புதமான ஒரு விமானத்தை நிர்மாணம் செய்து கொண்டுவந்தான். தேவலோகத்திற்குப் போன தேவதைகளும் ஏராளமான புஷ்பங்களுடனும் பூஜாதிரவியங்களுடனும் வந்து சேர்ந்தார்கள். உடனே தேவேந்திரன் அந்த விமானத்தை பிரஹஸ்பதியின் உத்தரவுப் படி அந்த லிங்கமிருக்குமிடத்தில் வைத்து சாஸ்திரவிதிப்படி பிரதிஷ்டை செய்தான் பின்னும் விசுவகர்மாவைக்கொண்டு இந்த விமானத்தைச் சுற்றிலும் ஐந்து பிராகாரங்களும், அம்பாள் ஆலயமும், பரிவார தேவதைகளின் ஆலயங்களும், பிம்பங்களும, கோபுரங்களும் நிர்மாணம செய்யும்படி உத்தரவு செய்துவிட்டு தான் பிரஹஸ்பதிபகவானுடைய ஆக்ஞையை யநுஸரித்து ஈசுவரனின் பூஜையை செய்ய ஆரம்பித்தான். தேவர்களெல்லாம் வேதகோஷங்கள் முழக்க, கணங்களெல்லாம் வாத்தியங்கள் வாசிக்க, ரிஷீசுவரர்களெல்லாம் ஸ்தோத்திரங்கள் செய்ய நிரம்ப மேன்மையாய் பூஜையை செய்து முடித்து கடைசியில் ஈசுவரனை

एकं ब्रह्माद्वितीयं च परिपूर्णं परात्परम् । इति यो गीयते वेदैस्तं वन्दे सोमसुन्दरम् ॥
ज्ञातृज्ञानज्ञेयरूपं विश्वं व्याप्य व्यवस्थितम् । स्वयं सर्वैरदृश्यो यस्तं वन्दे सोमसुन्दरम् ॥



மதுரை கோயில் மாடியிலிரு

என்பது முதலான அநேக சுலோகங்களால் ஸ்தோத்ரம் செய்து பக்தியால் மன முருகி தண்டம் போல் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து ஆநந்தக்கண்ணீர் சொரிந்து சிரஸின்மேல் கரங்களைத் தூக்கி அஞ்சலிபத்தனாய் நின்றான். ஈசுவரனும அவன் செய்த பூஜையால் ஸந்தோஷமடைந்து அவனுக்கு அனுக்கிரகம் செய்யக்கருதி அவன்முன் தோன்றி கம்பீரமான த்வனியுடன் அவனை "பயப் படாதே உனக்கு வேண்டிய வரனைக்கேள்" என்றுரைத்தார். அதைக் கேட்ட தேவேந்திரன் தான் ஈசுவரனை தர்சனம் செய்த தத்க்ஷணமே தன் பாபங்களெல்லாம தொலைந்து தன்னைப பிடித்திருந்த விருத்திராசுரவதத்தாலுண்டான பிரம்மஹத்தியும நசித்துப்போய் விட்டது. இனி வேறொன்றும தனக்கு ஆகவேண்டியதில்லை. ஈசுவரசரணாரவிந்தங்களில் அசஞ்சலமான பக்தியிருக்கும்படி அநுக்ரஹிக்கவேண்டுமென்றான். ஈசுவரனவர் திரும்பவும் அவனை வரம் கேட்கச் சொல்லி நிர்ப்பந்தித்தார். அதற்கு இந்திரன் தனக்கு பிரதிதினமும் கதம்பவனக்ஷேத்திரத்திற்கு வந்து ஸௌந்தரேசுவரரைப் பூஜிக்கவேணுமென்னுமிச்சை மேலிட்டிருப்பதால் அதற்கு அநுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டான். இதைச் செவியுற்ற ஈசுவரன் மிகவும் ஸந்தோஷமடைந்து "உன் பக்தியை மிகவும் மெச்சினோம். நீ செய்துவைத்திருக்கும் இந்த அழகான விமானமானது எப்பொழுதும் உன் பெயராலேயே "இந்திரவிமானம்" என்று பிரசித்தி அடையட்டும். நீ வருஷத்துக்கு ஒரு தடவை சைத்ர மாஸம் பௌர்ணமியாகிய சித்ராபௌர்ணமியன்று இங்கு வந்து




காண்கும் கோபுரங்களின் காக்ஷி.


நம்மை பூஜித்தாயேயானுல் வருஷம் முழுவதும் பூஜை செய்த பலனை உனக்குத் தருகிறோம். ஸுகமாகப் போய் வா" என்று சொல்லிவிட்டு மறைந்தார். உடனே இந்திரன் பிரஹஸ்பதி முதலிய எல்லா தேவர்களும் ஆனந்தஸாகரத்தில் மூழ்கினவர்களாய் பலவாருக ஸோமஸுந்தரரை ஸ்தோத்தரித்து ப்ரதக்ஷிணநமஸ்காரங்கள் செய்து தேவலோகம் போய்ச் சேர்ந்தார்கள். இதனுல் தான் மதுரையில் இப்பொழுதும் சித்ராபௌர்ணமிஉத்ஸவம் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

2. ஐராவதத்திற்கு துர்வாஸர் சாபம் நீக்கியது.

முன்னொருகாலத்தில் தேவேந்திரன் அஸுரர்களை ஜயித்து விட்டு அந்த ஜயத்தாலுண்டான ஸந்தோஷகோலாஹலத்துடன் தனது வாஹனமாகிய ஐராவதமெனப்படும் வெள்ளையானையின் மீதேறிக்கொண்டு தேவர்களால் சூழப்பட்டவனுய் தனது ராஜதானியாகிய அமராவதிக்குத் திரும்பி வருகையில் வழியில் துர்வாஸமுனிவரை சந்தித்தான். அவர் தேசஸஞ்சாரங்கள் செய்துவிட்டு ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தில் ஈசுவரனை பூஜித்துவிட்டு அவர் பிரஸாதமாகிய ஒரு உத்பலபுஷ்பத்தை கையிலெடுத்துக்கொண்டு வந்தார். இந்திரனைக்கண்டதும் அவனை அநுக்ரஹிக்கவேண்டி ஈசுவரப்பிரஸாதமாகிய அந்த புஷ்பத்தை கையில் கொடுத்தார். அவன் ஜயலக்ஷ்மியால் மதம் கொண்டிருந்தமையால் அந்த புஷ்பத்தை ஒரு கையால் வாங்கி ஆனையின் மஸ்தகத்தில் வைத்தான். அந்த ஐராவதமும்




மதுரை கோயிலாபரணங்கள்.




திருமலை நாயக்கன் மால் என்னும் அரண்மனை.

தனது தலையை யசைத்ததால் கீழே விழுந்த அந்த புஷ்பத்தை காலால் மிதித்துவிட்டது. உடனே துர்வாஸருக்கு கோபம் வந்துவிட்டது. மஹேந்திரன் கஜேந்திரன் இருவரையும் சபித்துவிட்டார். தன்னை ஸாமாந்யராக நினைத்துத் தான் கொடுத்த புஷ்பத்தை சிரஸில் தரித்துக்கொள்ளாமல் கர்வத்தால் ஆனையின் மஸ்தகத்தில் வைத்து அவமதித்ததால் அவன் சிரஸை முதலில் அடிப்பவன் பாண்டியராஜாவாக ஏற்படுவனென்று இந்திரனையும் ஐராவதமானது மதத்தால் புஷ்பத்தைக் கீழே தள்ளிக் காலால் மிதித்ததால் அது ஸாமான்யமான கருப்பு யானையாக பூலோகத்தில் காடுகளில் ஸஞ்சரிக்கக்கடவதென்று ஐராவதத்தையும் சபித்தார். உடனே தேவர்களெல்லோரும் அவர் கால்களில் வணங்கி தேவேந்திரன் செய்த தவருதலை க்ஷமித்தருள வேண்டுமென்று நிரம்பவும் மன்றாடிக் கேட்டுக்



பொத்தாமரைக் குளம்.

கொண்டதின் பேரில் துர்வாஸரானவர் தான் சொன்ன சாபம் வியர்த்தமாகப் போகாது. இந்திரனுக்குத் தலையடிபடுவதற்குப் பதிலாக அவனுடைய கிரீடமடிபடட்டும். ஐராவதமும் நூறு வருஷகாலம் பூலோகத்தில் திரிந்துவிட்டுப் பிறகு அங்குள்ள ஹாலாஸ்யக்ஷேத்ரமாகிய மதுரையையடைந்து அங்குள்ள புண்யதீர்த்தமாகிய ஹேமபத்ம புஷ்கரணியில் ஸ்நாநம் செய்துவிட்டு மூலலிங்கமாகிய ஸ்ரீஸுந்தரேசுவரைப் பூஜை செய்வதால் சாபவிமோசனமாகும் என்று சொல்லிப்போய்விட்டார். அவ்வாறே உடனே ஐராவதத்திற்கு நிறம் மாறி அதன் நான்கு தந்தங்கள் இரண்டாகஆகி ஸாதாரணயானையைப்போல் பூலோகத்திற்குப்போய் ஸஞ்சரிக்கவாரம்பித்தது. நூறு வருஷம் சென்றபிறகு தற்செயலாய் ஹாலாஸ்யக்ஷேத்திரத்தை அடைந்து அங்குள்ள பொத்தாமரைக்குளத்தில் ஸ்நானம் செய்து ஸோமஸுந்தரரை தர்சித்ததும் அதற்கேற்பட்ட சாபம் நீங்கி முன்போல் ஸ்வசரீரத்தையடைந்தது. பிறகு அது ஸுந்தரேசுவரருக்குப் பலவிதமாக பூஜைகளும் ஸேவைகளும் செய்து நமஸ்கரித்துத் தனது வம்சஸ்தர்களான திக்கஜங்களுக்கு ஈசுவரனின் விமானத்தை எட்டு திக்குகளிலும் சுமந்துகொண்டு நிற்கும் பாக்யம் எப்படி கிடைத்ததோ அவ்வாறே தானும் அந்த விமானத்தை சுமந்துகொண்டு எப்பொழுதும் ஸுந்தரேசுவரரின் ஸேவையைச் செய்துகொண்டிருக்கவேண்டுமென்று ஈசுவரனைப் பிரார்த்தித்தது. ஈசுவரனும் ஸந்துஷ்டசித்தராய் அதன் முன் தோன்றி "என்னுடைய பக்தனுகிய தேவேந்திரனுக்கு எப்பொழுதும் நீ ஸேவைசெய்துகொண்டிருந்தால் எனக்கு செய்ததாக ஆகும். ஆதலால் நீ இந்திரலோகம் சென்று முன்போல் இந்திரனிடமிரு" என்று சொல்லிவிட்டு அந்தர்த்தானமானுர். ஐராவதமும் அங்கிருந்து புறப்பட்டு மேற்குமுகமாகப் போய் அங்கு தனது கால்களரல் ஒரு குளத்தை வெட்டி அதற்கு "கஜபுஷ்கரணி" என்று பெயரிட்டு அதன் கரையில் ஒரு மஹாகணபதியையும் ஐராவதேசுவரர் என்று ஒரு லிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து அதை பூஜித்துக்கொண்டிருந்தது. தேவேந்திரன் ஐராவதமில்லாமல் வருந்தினவனுய் அதற்கு சாபவிமோசனமாய்விட்ட செய்தியறிந்து அதை கூட்டிவரும்




மதுரை கீழகோபுர வாசல்கள்.

படி தூதர்களை யனுப்பினான். அவர்கள் வந்து சொன்னதும் ஐராவதமும் உடனே புறப்பட்டு கிழக்கே கொஞ்சதூரம் சென்று அங்கு தனது யஜமானாகிய தேவேந்திரன் பேரால் இந்திரேசுவரர் என்று ஒரு லிங்கம் பிரதிஷ்டை செய்து அதைச் சிறிதுகாலம் பூஜை செய்துவிட்டு மறுபடியும் இந்திரன் கூப்பிட்டனுப்ப தேவலோகம சென்று ஸௌக்கியமாயிருந்தது.

3. மதுராபுரி நிர்மாணம் செய்வித்தது.

தேவேந்திரன் வந்து இந்திர விமானத்தை பிரதிஷ்டைசெய்து ஸோமஸுந்தரரை பூஜைசெய்தது முதல் தேவர்களெல்லோரும் இந்த மூர்த்தியின் பூஜை மிகவும் விசேஷமென்பதை யறிந்துகொண்டு பிரதிஸோமவாரமும் இந்த கதம்பவனத்துக்கு வந்து ஹேமபத்மாகரத்தில் ஸ்நானம் செய்து இந்த மஹாலிங்கத்தை பூஜை செய்துபோவது வழக்கமாயிருந்துவந்தது. ஒரு ஸமயத்தில் கல்யாணபுரம் என்று வழங்கிவந்த பாண்டிய ராஜதானியில் வஸித்த ஒரு தனிகனான வைசியன் தனஞ்ஜயன் என்பவன் வியாபாரார்த்தம் புறப்பட்டு மேற்கு திக்கை நோக்கி வெகுதூரம் சென்று பற்பல வியாபாரங்கள் செய்துவிட்டு திரும்பிவருங்காலையில் இந்த அடர்ந்த கதம்பவனத்துக்கு ஸமீபத்தில் ஸூர்யாஸ்தமனமாய்விட்டது. அன்று ஸோமவாரமாயுமிருந்தது. அந்த வைசியனோ பெரிய சிவபக்தன். சிவ விரதங்களை அனுஷ்டிப்பதிலும், சிவபூஜை செய்வதிலும், சிவத்யானம் பண்ணுவதிலும் மிகுந்த சிரத்தையுடன் கூடினவன். அன்று ஸோமவார விரதமிருந்ததால் ஏற்கனவே களைத்திருந்தான். அத்துடன் இந்த அடர்ந்த காட்டில் இருட்டில் அகப்பட்டுக் கொண்டதும் வழி தெரியாமல் அங்குமிங்குமாகத் திரிந்து சோர்வடைந்து கடைசியில் பொத்தாமரைக் குளத்தையடைந்து அதன் கரையில் களைப்பார உட்கார்ந்து அயர்ந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அன்று ஸோமவாரமானதால் சுந்தரேசுவரர் பூஜைக்காக தேவர்க



மதுரை கிளிக்கூட்டு மண்டபம் (மற்றொருகாக்ஷி)

ளெல்லோரும் அங்குவந்து தேவ கோஷங்களுடன் ஹேமபத்மாகரத்தில் ஸ்நானம் செய்தார்கள். அச்சமயத்தில் ஈசுவரனும் தமது பக்தனிடம் மனமிறங்கி அவனுக்கு திவ்யசக்ஷுஸை அனுக்கிரஹம் செய்தார். அதனால் அவன் அந்த தேவர்களெல்லோரையும் தர்சித்து அவர்கள் செய்ததையெல்லாம் கண்டு ஆச்சர்யம் கொண்டிருந்தான். அவர்கள் ஸ்நானமான பிறகு ஸுந்தரேசுவரர் பூஜைக்கு சென்றபொழுது இந்த வைசியனும் அவர்களை பின்தொடர்ந்து அவர்கள் ஈசுவரனுக்குச் செய்த திவ்யமயமான பூஜையைக் கண்ணுற்று ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவனாய் தானும் அந்த லிங்கத்தை மிகுந்த பக்தியுடன் பூஜைசெய்தான். பூஜை முடிந்து ஸ்தோத்ரநமஸ்காரங்களானபிறகு தேவர்களெல்லோரும புறப்பட்டுப் போய்விட்டார்கள். உடனே இந்த வைசயனுக்கு அனுக்ரஹித்திருந்த திவ்ய சக்ஷுஸை யும் ஈசுவரன் மறைத்துவிட்டார். அவன் வழக்கம்போல் தூங்கிவிட்டு ஸூர்யோதய மான பிறகு எழுந்திருந்து பார்த்ததும் அங்கு அடர்ந்த காட்டில் இந்திர விமானமும் ஸுந்தரேசலிங்கமும் மட்டுமிருப்பதைக் கண்டான். ராத்திரி தான் கண்டதெல்லாம் கனவோ வென்று நினைப்பதற்கில்லாமல் அங்கு தேவர்கள் அர்ச்சித்த புஷ்பம் முதலிய பூஜாதிரவியங்களிருந்தன. இதைக்கண்டு வியந்து தனது ஊராகிய கல்யாணபுரிக்குச் சென்று தனது அரசனிடம் தெரிவிக்கவேணுமென்று ஆவல்கொண்டன். இக்காலத்தில் கல்யாணபுரத்தில் சந்திரவம்சத்திலுதித்த குலசேகரபாண்டியன் நீதிநெறிதவராமல் அரசு செலுத்திவந்தான். இவ்வரசன் மிகவும் ஆஸ்திகன். நிரம்ப தெய்வபக்தியுள்ளவன். அதிலும் பரமசிவனிடம் அத்யந்த ஆஸக்தியுள்ளவனாயிருந்தான். ஆதலால் அந்த வைசியன் தனஞ்ஜயனானவன் தான் கண்ட காக்ஷிகளையெல்லாம் விஸ்தாரமாக மஹாராஜாவிடம்

தெரிவித்ததும் அரசனுக்குண்டான உத்ஸாகத்துக்கு ஓர் எல்லையில்லை. அந்த ஈசுவரனை தர்சிக்கவேண்டுமென்று அவா அதிகமாக உண்டாயிற்று. தனஞ்செயனிடம் தான் கேட்ட பூஜா ப்ரஸங்களையெல்லாம் நினைத்து நினைத்து அந்த ஈசுவரத்தியானத்திலேயே ஆழ்ந்திருந்தான். அன்றிரவு ஈசுவரன் ஒரு ஸித்தபுருஷர் மாதிரியாக அவனுக்கு முன் ஸ்வப்னத்தில் தோன்றி கதம்பவனத்தை ஓர் மிகச் சிறந்த பட்டணமாக நிர்மாணம் செய்து அதை அவனது ராஜதானியாக செய்துகொள்ளும்படி சொல்லி மறைந்தார். பொழுதுவிடிந்ததும் அவன் தான் கண்ட ஸ்வப்னத்தைத் தனது மந்திரிகளிடம் சொல்லி அவர்களையும் கூட்டிக்கொண்டு கதம்பவனத்துக்கு வந்து அங்குள்ள பொத்தாமரையில் ஸ்நானம் செய்து ஈசுவரனை தர்சனம் செய்ததும் இவனுக்கு முதல் நாள் தோன்றியமாதிரியான ஸித்தர் ரூபமாகவே ஈசுவரர் இவனுடைய கண்களில் பட்டு இவனை அநுக்ரஹித்து ஏற்படுத்தவேண்டிய மதுராபுரி பட்டணத்தின் எல்லைகளைக் குறிப்பிட்டுக் காண்பித்துப் போனார். அதைக் கண்டு மிகவுமாச்சர்யமடைந்து அவ்வரசன் உடனே தனது வேலைக்காரர்களைக்கொண்டு அந்தக் காட்டையழித்து அங்கு ஓர் அதிரம்யமான நகரத்தை நிர்மாணம் செய்து அநேகவீதிகள், பிராஸாதங்கள், தோட்டங்கள், நந்தவனங்கள், குளங்கள் முதலியன ஏற்படுத்தி,




புதுமண்டபத்திலுள்ள திருமலை நாயக்கர் சிலை.

ஈசுவரனுடைய கோவிலையும் வெகுவாக விஸ்தாரப்படுத்தி பிராகாரங்களும் கோபுரங்களும் கட்டுவித்து, அநேக ஜனங்களை அங்கு குடியேத்தி அதை தனது பாண்டியதேசத்துக்கு முக்கிய ராஜதானியாக ஆக்கிக்கொண்டான். இவ்விதமாக காட்டிலுண்டாக்கிய இந்தப் பட்டணத்தை யார் சுத்தி செய்வார்கள் யார் ரக்ஷிப்பார்கள் என்று அவ்வரசன் மனதிலுண்டான எண்ணத்தை யறிந்த ஸாக்ஷாதீசுவரன் தமது ஜடையிலுள்ள கங்கா ஜலத்தை மழை வியாஜத்தாலே அந்த நகரம் முழுமையும் புரோக்ஷித்து அதை சுத்தமாக்கினார். அசரீர வாக்காக கிழக்குத் திக்கில் சாஸ்தாவையும், தெற்கு திக்கில் ஸப்தமாதிருக்களையும், மேற்கு திக்கில் மஹாவிஷ்ணுவையும், வடக்கு திக்கில் காளியையும் பிரதிஷ்டை செய்தால் அவர்கள் இந்நகரத்தை ரக்ஷிப்பார்கள் என்று ஆக்ஞை செய்தார். அந்தப்படியே அவ்வரசனும் செய்வித்தான். அதன்பிறகு சாஸ்திர விதிப்படி ஈசுவரனுக்கு பூஜை முதலியதுகள் தினப்படி செய்துவந்தான். பிறகு அந்த ஈசுவரனுடைய அனுக்கிரஹத்தால் எல்லா சத்ருக்களையும் ஜயித்து அந்த குலசேகரபாண்டியனெனவன் ஸார்வபௌமபதவியையடைந்தான். அவனுக்கு மலயத்வஜபாண்டியனென்று ஒரு புதல்வன் உண்டானான். இவ்வாறு வெகு விபவத்துடன் பல ஆண்டுகள் பூமியை ஆண்டுவிட்டு தனது புத்திரனுக்கு பட்டாபிஷேகம்




காமதேனு வாகனம்.



செய்வித்தபிறகு கதம்பவனநாதனாகிய ஸுந்தரேசுவரருடைய சரணாரவிந்தங்களில் இடைவிடாமல் பக்தி செய்வதைத் தவிர இஹபர சிரேயஸுக்கு வேறு ஸாதனம் கிடையாது என்பதை தன் புத்ரனுக்கு நன்கு வற்புறுத்திய பிறகு தான் ஸாக்ஷாத் ஈசுவரனுடைய கர்ப்பகிரஹத்திற்குள் நுழைந்து பரமாத்மாவை பிரதக்ஷிணம் செய்து ஸசரீரியாய் ஈசுவர ஸாயுஜ்யத்தை யடைந்துவிட்டான். பிறகு மலயத்வஜபாண்டியன் சற்றேனும் ராஜநீதி தவறாமல் பிதிருவாக்கியப்படி அனவரதமும் ஈசுவர பக்தி செய்துகொண்டு ராஜ்யபாரத்தை வஹித்துவந்தான்.


4. மீனாக்ஷியம்பாளினவதாரம் செய்வித்தது.

இவ்வாறு மநுநீதிதவறாமல் மலயத்வஜபாண்டியன் ராஜ்யம் வஹித்து வரும் நாளில் ஸூர்யவம்சத்தரசனாகிய சூரஸேன மஹாராஜாவினுடைய பெண்ணாகிய காஞ்சனமாலையை மணம் புரிந்துகொண்டான். இந்த காஞ்சனமாலையானவள் பூர்வஜன்மத்தில் வித்யாதரராஜனாகிய விசுவாவஸு என்பவனின் புத்திரியாக வித்யாவதி என்ற பெயருடன் கூடினவள். இந்த வித்யாவதியானவள் பால்யம் முதலே நிரம்பவும் விரக்தையாய் எப்பொழுதும் விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு ஈசுவராராதனம் செய்வதும் ஸாக்ஷாத் பரதேவதையை ஸ்ரீவித்யா முதலான மந்த்ரங்களால் புரஸ்காரம் செய்வதுமாயிருந்தாள். ஒரு ஸமயம் தனது பிதாவாகிய விசுவாவஸுவிடம் போய் எல்லா க்ஷேத்ரங்களுள்ளும் பரதேவதை மிகப் பிரஸன்னமாக இருக்கும் ஸாரதரமான க்ஷேத்ரம் எது என்று கேட்டாள். அதற்கவன் "இந்த கர்மபூமியில் எல்லா க்ஷேத்ரங்களுக்குள்ளும் எவ்வாற்றானும் சிலாக்கியமானது ஹாலாஸ்ய க்ஷேத்ரமே. அவ்விடத்தில்தான் ஆதியந்தமிரண்டுமற்றவளாயும் ஜகன்மாதாவாயும் ஸச்சிதானந்தரூபிணியாயும் நினைத்தமாத்திரத்தில் எவ்வித பாபங்களையும் போக்கக்கூடியவளாயும் எவ்வித ஐசுவர்யத்தையும் கொடுக்கக்கூடியவளாயும் எல்லா வஸ்துக்களுக்கும் மேம்பட்ட வஸ்துவாயும் உள்ள ஸாக்ஷாத் பராசக்திஸ்வரூபமாயுள்ள மீனாக்ஷியானவள் பரிபூர்ணமான கலையுடன் பிரகாசிக்கிறாள். அநேகங்களாயுள்ள தேவீ பீடங்களுக்குள் 64 பீடங்கள் மிகச் சிறந்தவை. அவைகளுள்ளும் கதம்பவன பீடமானது அதி சிலாக்கியமானது. அவ்விடத்தில் ஈச்வரியை பூஜை செய்து நமது முன்னோர்கள் பலர் ஸித்தியடைந்திருக்கிறார்கள்" என்றான். இதைக்கேட்டதும் வித்யாவதியானவள் தானும் அக்கதம்பவனம் சென்று அங்குள்ள தேவதையை பூஜித்து ஸித்தி பெறவேணுமாதலால் தனக்கதற்கனுமதி கொடுக்கவேண்டுமென்று விசுவாவஸுவைப்பிரார்த்தித்து அவனது அனுமதியின்பேரில் இந்த கதம்பவனத்திலுள்ள ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தை ஸங்கராந்தியன்றையதின




மதுரை ஆனை மலையிலுள்ள குகை.

மடைந்து முதல் ஒருவருஷகாலம் ஸம்வத்ஸர மஹாவிருதமென்று சொல்லப்படும் கடுமையானவிருதத்தை யனுஷ்டிக்கவாம்பித்தாள். பிரதிதினமும் இந்த கந்தர்வராஜ புத்திரியானவள் பொத்தாமரைக் குளத்தில் ஸ்நானம் செய்து விக்னேசுவரரை பூஜித்துவிட்டு மீனாக்ஷி ஸுந்தரேசுவரர்களை நமஸ்கரித்து தனது தபஸ்ஸித்தியாகும்படி பிரார்த்தித்துக் கொண்டு பரதேவதையின் ஸந்நிதியையடைந்து, அம்பாளை ஏகாக்ரசித்தையாய் தியானம் செய்து அந்தர்யாக விதானத்தால் ஆராதனை செய்து 108 புண்யதீர்த்தம் நிரம்பிய கும்பங்களால் மீனாக்ஷிதேவிக்கு நன்கு அபிஷேகம் செய்வித்து திவ்யமயமான ஆடையாபரணங்களாலும் பரிமளகந்தங்களாலும் அலங்கரித்து 1008 நீலோத்பல புஷ்பங்களால் அழகான மாலையிட்டு ஸஹஸ்ரநாமம் முதலிய அநேக ஸ்தோத்ரங்களால் துதித்துப் பூஜை செய்துவந்தாள். இவ்வாறு புருஷர்களால்கூட அனுஷ்டிக்க முடியாத கடுமையான ஸம்வத்ஸர மஹாவிருதத்தை மிகுந்த பக்திசிரத்தையுடன் நிறைவேற்றி பன்னிரண்டாவது மாஸம் முழுமையும் ஒருவித ஆஹாரமுமில்லாமல் நிர்ஜலவிருதத்துடன் விருதத்தை பூர்த்திசெய்து பதிமூன்றுவது மாஸம் ஆரம்பதினத்தில் வழக்கம்போல் காலவேளையில் பொத்தாமரைக்குளத்தில் ஸ்நானம் செய்துவிட்டு நிர்மலசித்தத்துடன் வித்யாவதியானவள் அம்பாள் கோவிலுக்குள் பிரவேசித்ததும் அங்குள்ள பரதேவதையானவள் மூன்று வயதுள்ள பாலையாக ரூபமெடுத்துக்கொண்டு ஸர்வாங்கஸுந்தரியாகவும் ஸர்வாபரணபூஷிதையாகவும் புன்சிரிப்புடன் கூடினவளாய் "வேண்டின வரத்தைக்கேள், வரத்தைக்கேள்" என்று சொல்லிக்கொண்டே கர்ப்பகிருஹத்துக்குள்ளிருந்து வெளியேவந்தாள். அக்காக்ஷியைக் கண்டதும் வித்யாவதியானவள் ஆநந்தபரவசையாய் பூமியில் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து மந்திரரூபமான பன்னிரண்டு சுலோகங்களால் அம்பாளை ஸ்தோத்திரம் செய்தாள் பிறகு எழுந்திருந்து அஞ்சலிபத்தையாய் நின்றுகொண்டு "என்னுடைய மனதானது எப்பொழுதும் உன்னுடைய பாதாரவிந்தங்களில் சஞ்சலமின்றி லயித்திருக்கவேண்டும். இதைக்காட்டிலும் வேறென்ன வேண்டியிருக்கிறது" என்றாள். இதைக்கேட்ட பாலரூபி மீனாக்ஷியானவள் ஸந்தோஷித்து "அவ்வாறே உனது மனது ஸ்தைர்யத்தையடையும். என்னுடைய ரூபத்தை ஸதா தியானம் செய்வாய். உன்னுடைய விருதானுஷ்டானத்தால் மிகவும் ஸந்தோஷமடைந்துள்ளேன். ஆதலால் பிறரால் அடையக்கூடாததாயும் உத்தமமாயுமுள்ள வரன் ஒன்றைக்கேள்" என்று பகர்ந்தாள். உடனேவித்தியாவதியும் இப்பொழுது என்முன்தோன்றியிருக்கும் இந்த மனோஹரமான ரூபத்துடன் நீ எனக்குப் புத்திரியாக வந்து பிரதிதினமும் கட்டியணைத்து முத்தமிடுதல்முதலிய லாலனங்களால் எனக்கு ஸந்தோஷத்தை விளைவித்துக் கடைசியில் எனக்கு முக்தியருளவேணும்" என்று பிரார்த்தித்தாள். இதைக்கேட்டதும் பரதேவதையானவள் "உன்னுடைய அடுத்த ஜன்மத்தில் நீ சந்திரவம்




தங்கப் பல்லக்கு வாகனம்.



திருமலை நாயக்கன் மால்.

சத்தாசனாகிய மலயத்துவஜ பாண்டியனைப் பதியாகவடைந்து வெகுகாலம் அவனுடன் ஸுகமாக வாழ்ந்து பிறகு புத்ரகாமேஷ்டி யாகம் செய்து அச்சமயம் அக்கினியிலிருந்து என்னை புத்திரியாக அடைந்து கடைசியில் பர்த்தாவுடன் கைவல்யமடைவாய்" என்று அநுக்ரஹித்துவிட்டு மறுபடியும் கர்ப்பகிருஹத்துக்குள் சென்று அந்தர்த்தானமாய்விட்டாள். அம்பாளால் கொடுக்கப்பட்ட இந்த வரத்துக்கனுகுணமாய்த்தான் வித்யாவதியானவள் மறுஜன்மத்தில் காஞ்சனமாலையாகப்பிறந்து மலயத்வஜபாண்டியனை மணம்புரிந்தாள். மணம்புரிந்தும் வெகுகாலம வரையில் புத்ரபாக்கியம் கிட்டாததால் தங்களது குலகுருவாகிய அகஸ்தியமஹரிஷியை வரவழைத்து இவ்விராஜதம்பதிகள் அவரை யுபசரித்துத்தங்களுக்கு மக்கட்பேருகிடைக்கும்படி அநுக்ரஹிக்கவேணுமாய் பிரார்த்தித்தார்கள். அவரும் ஞான திருஷ்டியால் காஞ்சனமாலையின் பூர்வஜன்மவிருத்தாந்தங்களையெல்லாமறிந்து அவற்றையெல்லாம் அந்ததம்பதிகளுக்குத்தெரிவித்து "ஆதலால் ஸாக்ஷாத்பரதேவதையே உங்களுக்குப் புத்திரியாகவந்து உதயமாவள். ஆனால் கர்மத்தாலேற்பட்டிருக்கும் பிரதிபந்தங்களை விலக்குவதற்கு யாகாதிகள் செய்யவேண்டும்" என்றார். உடனே அவ்வரசனும் அதற்கு வேண்டிய கார்யங்களைச் செய்துவைக்கவேண்டுமென்று அம்மஹரிஷியையே பிரார்த்தித்து அவர் உத்திரவுப்படி அசுவமேதயாகம் செய்வதற்கு வேண்டிய யத்னங்கள் செய்தான். பிறகு சாஸ்திரவிதிப்படி அசுவமேதயாகம் முடிந்ததும் அகஸ்தியர் முதலிய மஹரிஷிகளின் ஆக்ஞைப்படி புத்ரகாமேஷ்டியாகம் செய்யவாரம்பித்தான். உடனே ஸுந்தரேசுவரரும் தனது பத்னியாகிய மீனாக்ஷியை நோக்கி "நீ இந்த புத்ரகாமேஷ்டியாகத்தில் வைதானிகாக்னியில் போய் உத்பவிப்பாயாக" என்று அநுமதிகொடுத்தார். உடனே அந்த யாகத்திலுள்ள வைதானிகாக்னியானது ஸுவர்ணவர்ணமான ஜ்வாலையுடன் பிரகாசித்தது. அதிலிருந்துவந்த தூமமானது தாமரைவாஸனை பொருந்தியிருந்தது. பிறகு அகஸ்தியமஹரிஷியானவர் ஹோமம் செய்யவேண்டிய ஹவிஸில் சைவதேஜஸை த்யானம் செய்துகொண்டு யஜமானனாகிய அவ்வரசனுடன் வடக்குமுகமாக நின்றுகொண்டு ஜ்வலித்துக்கொண்டிருக்கும் வைதானிகாக்னியில் ஆஜ்யாஹுதிசெய்ததும் அதனால் மிகவும் விருத்தியடைந்த அந்த ஜ்வாலையின் மத்தியில் அதிலாவண்யமுள்ள மூன்றுவயதளவுள்ள கன்யகை ஒருவள் தோன்றினாள். அவளுடைய ஸௌந்தர்யமானது ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனாலும் சொல்லவொண்ணாததாயிருந்தது. ஆனால் லோகவிலக்ஷணமாக மூன்று குசங்களுடன் கூடினவளாய் காணப்பட்டாள். இவ்வத்புதரூபமுள்ள பெண்ணானவள் அக்கினியிலிருந்து வெளியில் வந்ததும் "அம்மா அம்மா" என்று தன்னுடைய மதுரமானவாக்கால் கூப்பிட்டுக்கொண்டு அவ்வரசனது பத்னியாகிய காஞ்சனமாலையின் மடியில் போய் உட்கார்ந்தாள். அந்த காஞ்சனமாலையின் பாக்கியமே பாக்கியம். வேதத்துக்கெல்லாம எட்டாத அந்த பரம்பொருள் தானாகவே "அம்மா" என்று கூப்பிட்டுக்கொண்டு மடியில் வந்துட்காருகிறதென்றால் இந்த பாக்கியம் யாருக்குக்கிடைக்கும்? தனது பூர்வஜன்மதபஸ்ஸுக்கு பலன் கிடைத்து விட்டதென்று ஆநந்தஸாகரத்தில் மூழ்கினாள். பிரதிக்ஷணமும் அக்குழந்தையை கட்டியணைத்து முத்தமிட்டாள். உச்சி முகர்ந்தாள். முககமலத்தை இடைவிடாமல் பார்த்தாள். அதன் மந்தஸ்மிதத்தால் மதிமயங்கினாள். அவளுக்கு உண்டான ஸுகத்துக்கு ஓர் அளவில்லை. மூன்றுலகங்களுக்கும் தாயாரான அந்த குமாரியை மடியில் அணைத்து




ரதோத்ஸவம், மதுரை.

கட்டிக்கொண்டதும் அந்த மலயத்வஜனின் பிரியையான காஞ்சனமாலைக்கு அவளது ஸ்தனங்களிலிருந்து பால்பெருக வாரம்பித்தது. அவ்வரசனுக்கோ அக்குழந்தையைக் கண்டதுமுதல் கைவல்ய பதவியில் கூட லக்ஷ்யமில்லாமலாய் விட்டது இவ்வாறு இந்த ராஜதம்பதிகள் ஆனந்தக்கண்ணீர் பெருக ஒன்றும் செய்யத் தோன்றாதவர்களாய் அக்குழந்தையையே பார்த்துப் பார்த்துப் பரவசர்களாயிருந்தார்கள். அப்பொழுது அக்குழந்தைக்கு லோகவிலக்ஷணமாய் மூன்றுகுசங்கள் இருப்பதைக் கண்டதும் மனஸில் சற்று வியாகுலமுற்றார்கள். உடனே அடியில் கண்டவாறு அசரீரி வாக்கு கம்பீரமாய் உண்டாயிற்று. "ஓ அரசனே, யோஜிக்கவேண்டாம். உங்களிருவருடைய புண்யபரிபாகத்தாலும் ஜகத்தின் க்ஷேமார்த்தமாகவும், ஸாக்ஷாத் ஜகன்மாதாவான பரமேசுவரியானவள் உங்களுடைய புத்திரியாக அவதரித்திருக்கிறாள். அவளுக்குத் தடாதகையென்று பெயரிட்டு வளர்த்து வந்தால் அவளை விவாஹம் செய்துகொள்ள அவள் புருஷன் வரும் காலத்தில் அவனைக்கண்டதும் இந்த மூன்றாவது குசமண்டலம் தானாகவே மறைந்துவிடும்." இதைக் கேட்டதும் அவ்விராஜதம்பதிகளுக்கு மிகுந்தஸந்தோஷமுண்டாய் உடனே அந்த யாகத்தில் பாக்கியாயிருந்ததை பூர்த்திசெய்து விட்டு இந்தக்குழந்தைக்கும் ஜாதகர்மம் முதலான ஸம்ஸ்காரங்களை செய்து விட்டு அந்தக் குழந்தையையும் கையில் பிடித்துக்கொண்டு தங்களது குலகுருவாகிய அகஸ்தியருக்கு நமஸ்காரம் செய்தார்கள். அவரால் வெகுவாக ஆசீர்வதிக்கப் பெற்று அக்குழந்தையை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். அக்குழந்தைக்குத் தகுந்தவயது வந்ததும் அதையே தனது புத்ரனாகவும் பாவித்து அதற்கு எல்லாவித வித்யைகளையும் கற்பித்துக் கொடுத்து, அவ்வரசன் தனது கடைசி காலத்தில் அக்குழந்தைக்கே பட்டாபிஷேகம செய்வித்து அவள் ராஜ்யபாரம் செய்வதைக்கண்டு ஸந்தோஷித்துப் பிறகு ஸ்வர்க்கலோகம் போய்ச் சேர்ந்தான். அந்த தடாதகையும் அதிஸாமர்த்தியத்துடன் நீதிநெறி தவறாமல் ராஜ்யபாரம் செய்து எல்லா சத்ருக்களையும் ஜயித்து எல்லா தேசங்களின் ஆதிபத்யத்தையுமடைந்து அந்த கன்யகாபுரியில் ஸுந்தரேசுவரரை ஆராதித்துக் கொண்டு ஸுகமாக காலம் கழித்து வந்தாள்.

5. மீனாக்ஷியை விவாஹம் செய்துகொண்டது.


இவ்வாறு தடாதகையானவள் சற்றேனும் ராஜநீதிதவறாமல் ராஜ்யபரிபாலனம் செய்துவருகையில் அவளுக்கு மேன்மேலும் யௌவனம் விருத்தியடைந்தது. அச்சமயம் ஒருநாள் அவள் தனதுதாயாராகிய காஞ்சனமாலையுடன் பின்வருமாறு ஆலோசிக்கலானாள்.

அம்மா, எனக்கு வயதோ வந்துவிட்டதே. எப்பொழுது எனக்கு பர்த்தா கிடைக்கப்போகிருர்; எப்பொழுது என்னுடைய இந்த மூன்ருவது ஸ்தனம் மறையும். எனக்கு இதே கவலையாயிருக்கிறது. நான் இந்த ராஜதானியிலேயே உட்கார்ந்திருந்தால் நமதிஷ்டம் ஒருநாளும் கைகூடாது. ஆதலால் நான் திக்விஜயம் என்னும் வியாஜத்தை வைத்துக் கொண்டு இதரதேசஙகளில் சுற்றினல்தான் எனக்குத் தகுந்த மணவாளன் ஏற்படுவன்'' என்ருள். இது ஸரியான யோசனைதானென்று காஞ்சனமாலையும்




மதுரை புதுமண்டபம் முன்பக்கம்.

ஆமோதிக்கவே, தடாதகையானவள் உடனே தனது மந்திரிகளை வரவழைத்து விஜயயாத்திரையாகத்தான் புறப்பட உத்தேசித்திருப்பதைத் தெரிவித்து அதற்கு ஆகவேண்டிய காரியங்களை ஸநநத்தம செய்யச்சொல்லி உத்தரவு கொடுத்தாள். அதற்கு மந்திரியாகிய ஸுமதியென்பவர் உலகத்திலுள்ள எல்லா ராஜாக்களும் தடாதகைக்குக்கீழ்ப்படிந்தே இருப்பதாகவும், படைகொண்டுபோய் ஜயிக்கப்பட வேண்டியவர்கள் ஒருவருமில்லையென்றும் தெரிவித்தார். "அப்படியாஞல் ஊர்களையெல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு கடைசியில் எட்டு திக்குகளிலுமுள்ள திக்பாலகர்கள் எண்மரையும் ஜயித்துவிட்டு வருவோம்'' என்ருள் தடாதகை. இந்த உத்தரவுக் கிணங்க உடனே மந்திரியானவர் ரதகஜதுரகபதாதிகளையெல்லாம் தயாரித்து ரதத்தில் மீன்கொடியை நாட்டி அரண்மனை வாசலில் கொண்டுவந்து நிறுத்திப் புறப்படலாமென்று தெரிவித்தார். தடாதகையும் தனதுதாயாரையும் குலகுருவையும் நமஸ்கரித்து அவர்களால் விடைகொடுக்கப்பெற்று குலகுருவாகிய அகஸ்தியமகரிஷியால் இந்த ஜயயாத்திரையில் அவச்யம் நீ பர்த்தாவை யடைவாய் என்று ஆசீர்வதிக்கப்பெற்று நல்ல ஜயமுகூர்த்தத்தில் வாத்திய கோஷங்கள் முழங்க விஜயயாத்திரை புறப்பட்டாள். இப்மாதிரி திக்ஜயத்துக்காக தடாதகை தேவியானவள் புறப்பட்டிருக்கிருள் என்கிற ஸமாசாரம் இதரதேசங்களில் பரவியவுடன் அந்தந்ததேசத்து அரசர்களெல்லாம் தாம் தாமாகவே பற்பல விதமான உயர்ந்த நஜர்களையெடுத்துக் கொண்டு தடாதகையை வந்துநமஸ்கரித்து சரணமடைந்தார்கள். தடாதகையும் அவர்களுக்கெல்லாம் அபயப்ரதானம் செய்துவிட்டு முன்சென்ருள். இவ்வாறு அநேகதேசங்களைக் கடந்து சென்று இமயமலையை யடைந்து அவ்விடத்தில் பாகீரதியை தர்சனம் செய்து அதில் ஸ்நானம்செய்து அதனுல் தன்னை பரிசுத்தமாக்கிக் கொண்டாள். பிறகு மேருவை பிரதக்ஷிணம் செய்துகொண்டு திக்பாலர்களை ஜயிக்க உத்தேசம் கொண்டவளாய்முதலில் கிழக்குதிக்கில் இந்திரனை நோக்கிச்சென்ருள். ஆகாயமார்க்கம் செல்லவேண்டியநிமித்தம் தனது ஸைந்யங்களுக்கெல்லாம் திவ்யமந்திரங்களை உபதேசம் செய்வித்து தனது சக்திமஹிமையால் திவ்யதிருஷ்டியையும் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் திறமையையும்



விழுதுகளுடன் கூடிய ஒரே ஆலமரம், மதுரை தெப்பக்குளத்துக்கு ஸமீபத்திலுள்ளது.


அருளினாள். இவ்வாறு தேவேந்திரனுடைய ராஜதானியாகிய அமராவதியை முற்றுகை போட்டதும் அங்குள்ள தேவஸைன்யங்கள் யுத்தத்துக்குவந்தார்கள். அவர்களைத்தோற்கடித்து நாலாபக்கங்களிலும் ஓடும்படி செய்து விட்டாள். உடனே தேவேந்திரன் பயந்தவனாய் வஜ்ராயுதத்தையும் வாஹனத்தையும் விட்டு தடாதகையினிடம் ஓடிவந்து அவளை நமஸ்கரித்து காமதேனுகல்பகவிருக்ஷம் சிந்தாமணிமாலை இவைகளைக்கப்பமாக ஸமர்ப்பித்தான். அவைகளை அங்கீகரித்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு அக்னிதிக்கை நோக்கிச் சென்றாள். அவ்விடம் சென்றதும் அக்னியிலிருந்து தானுண்டானவளாதலால் தடாதகையானவள் அக்னியை தனது தகப்பனாராகப் பாவித்து ஸைன்யங்களையெல்லாம் ஆரவாரமில்லாமல் அமைதியாய் நடக்கும்படி மந்திரிக்கு ஆக்ஞாபித்தாள். இதையறிந்த அக்னிபகவானானவர் தனது குமாரியைப்பார்க்க ஆவல்கொன்டு மங்களபதார்த்தங்களை காணிக்கையாக எடுத்துக்கொண்டு அவள் ஸமீபத்திற்கு வந்தார். உடனே தடாதகையும் ரதத்தை விட்டிறங்கி அவரை நமஸ்கரித்து அவர் கொண்டு வந்தவைகளை அங்கீகரித்து அவரால் ஆசீர்வதிக்கப்பெற்று "உன்னுடைய பாணிக்ரஹண ஸமயத்தில் நான்ஸாக்ஷியாயிருக்கும் தன்மையை அபேக்ஷிக்கிறேன்" என்று கேட்டுக் கொள்ளப்பட்டாள். இதைக்கேட்ட தடாதகை புன்னகை கொண்டு அந்ததிக்கைவிட்டு அடுத்ததிக்காகிய தக்ஷிணத்திற்கேகினாள். அவ்விடத்தில் யமகிங்கார்கள் "மதுராபுரிவாஸிகள் முன்பாக போகாதேயுங்கள்" என்று தர்மராஜாவால் கொடுக்கப்பட்டிருக்குமாக்ஞையையனுஸரித்து இச்சைன்யத்துக்கு முன்



மீனாக்ஷி ஸுந்தரேச்வரர் கோயில் கும்பாபிஷேகம்.


நில்லாமல் மறைந்துவிட்டார்கள். தடாதகை வருவதைக்கண்டு யமதர்மராஜாவும் தூரத்திலேயே அஞ்சலிபந்தனாய் நின்றான். மந்திரியாகிய ஸுமதியால் அனுமதிகொடுக்கப்பட்டவனாய் ஸமீபத்தில் வந்து தன்கையிலேந்தியிருந்த கதையையே கப்பமாகக்கொடுத்து நமஸ்கரித்தான். அதைக்கண்டு ஸந்தோஷித்து அதற்குமுன்பாக புறப்பட்டாள் தடாதகை. இவ்வாறு நிர்ருதிதிக்கு, மேற்குதிக்கு வாயுதிக்கு, வடக்குதிக்கு இவைகளுக்கெல்லாம் சென்று அங்குள்ளநிர்ருதி, வருணன், வாயு, குபேரன் இவர்களை ஜயித்துவிட்டு கடைசியாக ஈசான்யதிக்கையடைந்தாள். அந்ததிக்குக்கு அதிபதியாகிய பரமேசுவரனுக்கு முக்கியஸ்தானமாகிய கைலாஸத்தையடைந்து அதை முற்றுகைபோட்டு அதன் வாசலில் தனதுகொடியை நாட்டி ஸிம்ஹநாதம் செய்வித்தாள். அங்குவாசலில் காவலிருந்த நந்திகேசுவரர் இதைக்கேட்டு ஆச்சரியமடைந்து சிவகணங்களையெல்லாம் திரட்டிக்கொண்டு தடாதகையுடன் எதிர்த்துப்போர்செய்ய வந்தார். ஆனால் தடாதகையானவள் க்ஷணப்பொழுதில் அந்தசிவகணங்களையெல்லாம் சின்னாபின்னமாகப்பாந்து ஓடும்படிசெய்துவிட்டாள். இதைக்கண்டுநந்திகேசுவரர் விபந்து ஒன்றும்செய்யத்தோன்றாதவராய் ஸாக்ஷாத்பரமேசுவரனிடம் ஓடோடியும் வந்து "ஸ்வாமின், யாரோ ஒருபாலையானவள் விலக்ஷணமாக மூன்றுஸ்தனங்களுடன் வந்து நமது ஸைன்யங்களையெல்லாம் ஹதம்செய்துவிட்டாள். நாதபிரம்ஹத்தின்ஸ்வபாவம் தெரிந்தவளாக நாதானுஸந்தானம் செய்கிறாள். அவளுடன் எப்படியாவது தாங்கள்ஸமாதானம் செய்துகொண்டால் தேவலை. இல்லாவிடில் பெரும் அனர்த்தம் விளையும் போலிருக்கிறது" என்று பரபரப்புடன் சொன்னார்.

மதுராபுரியிலிருந்து தடாதகையானவள் எந்தமுகூர்த்தத்தில் விஜயயாத்திரைக்காக வெளிப்புறப்பட்டாளோ அதேமுகூர்த்தத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் அம்சரூபமாக



திருமலைநாயக்கர் குடும்ப ஸகிதம்.

லிங்கத்திலிருந்து வெளிக்கிளம்பி தடாதகைக்கும் அவளுடையஸைன்யங்களுக்கும் காணாமல் மறைவாகவே தடாதகையோடு கூடவே நெடுகிலும் சென்றுகொண்டிருந்தார். அவள் கைலாஸம் வந்தவுடன் தமதூருக்குவந்து விட்டாளென்ற ஸந்தோஷத்துடன் ஒருவருக்கும் தெரியாமலே தமது ஆஸ்தானத்தில் போய் அமர்ந்திருந்தார். நந்திகேசுவரர் மேற்கூறியாவாறு வந்துமொழிந்தவுடன் புன்னகைசெய்துகொண்டு தாமே நேரில்வந்து ஆகவேண்டியதைச் செய்கிறதாகவும் ஒருவிதத்திலும் கவலைப்படவேண்டாமென்றும் சொல்லி நந்திகேசுவரரைத் தேர்த்திவிட்டு மஹாஸுந்தர ரூபத்துடன் கூடிய ஒருயௌவன புருஷராக ரூபமெடுத்துக்கொண்டு பிணாகபாணியாகத் தானே தடாதகைக்கு முன்பாக எதிரில் வந்து மந்தஹாஸத்துடன்நின்றார். அவரைக்கண்டதும் தடாதகைக்கு மனதில்காமவிகாரம் தோன்றி திகைத்து நின்றாள். கையில்பிடித்திருந்த தனுஸை மெதுவாக நழுவவிட்டாள். மார்பில் விலக்ஷணமாகவிருந்த மூன்றாவது ஸ்தனமானது உள்ளே மறைந்து விட்டது. தேகம் முழுமையும் மயிர் சிலிர்த்தது. இன்னதுசெய்வதென்று தெரியாமல் வெட்கத்தால் தலைகுனிந்தாள். மூன்றாவதுஸ்தனம் மறைந்ததைகவனித்த மந்திரியான ஸுமதியானவர் மெதுவாக ஸமீபத்தில்வந்து "அம்மா, இவர்தான் தங்களது பர்த்தா" என்று ரஹஸ்யமாகச்சொன்னார். அவ்வார்த்தைகள் அவளுக்கு மிகஇனிமையாயிருந்ததால் புன்னகைகொண்டு சித்திரத்திலெழுதியபதுமை போலசைவற்றுநின்றாள். அப்பொழுது ஈசுவரனானவர் அவள் ஸமீபத்தில் வந்து அவளைபாணிக்கிரஹணம் செய்துகொள்வதற்கு இச்சைப்படுவதாகச் சொன்னார். அதற்கு தடாதகையானவள் தான் மதுராபுரியெனவும் அவ்விடத்தில் தனது தாயார் இருப்பதாகவும் அவளைக்கேட்டு அவள் உத்தரவின் பேரில் தான் செய்துகொள்ள வேண்டுமென்றும் விடைபகர்ந்தாள். "அப்படியே செய்யலாம். இன்றைக்கு எட்டாவது நாளாகிய ஸோமவாரதினம் நான் மதுராபுரிக்குவந்து உன்தாயார் அனுமதிபெற்று உன்னை மணந்து கொள்ளுகிறேன், நீஇப்பொழுது ஸௌகர்யமாய் ஊருக்குப்போய்வா" என்று சொல்லிவிட்டு ஈசுவரன் அந்தர்த்தானமாயினர். உடனே தடாதகையானவள் வெகுஸந்தோஷத்துடன் மந்திரியுடனும் ஸைன்யங்களுடனும் வேகமாகத்திரும்பி மதுராபுரிக்கு வந்து தன்தாயாரிடம் எல்லாவிருத்தாந்தங்களையும் சொன்னாள். அவளும் அவைகளைக்கேட்டு ஆனந்தபரவசையாய் தன்பெண்ணை கட்டியணைத்து உச்சிமுகர்ந்தாள். உடனே மறு திங்கட்கிழமை நடக்கப்போகிற விவாஹ மஹோத்ஸவத்துக்காக ஊர்முழுமையும் அலங்கரிக்கும்படியும் மற்றுமாகவேண்டிய எல்லாகார்யங்களையும் வேகமாய் செய்யும்படியும் அக்ஞையிடப்பட்டது. அவ்வாறே நொடிப்பொழுதில் மதுராபுரியானது இந்திரலோகமாக மாறிவிட்டது. நவரதனங்களால் அலங்கரிக்கப்பட்டு பார்ப்பவர் கண்களைக்கவரும்படி



மாரியம்மன் கோவில், மதுரை.

யான கல்யாணமண்டபமும் மிகவத்புதமாய் நிர்மாணம் செய்யப்பட்டது. அரசர்கள் எல்லோருக்கும் கல்யாணப் பத்திரிகைகளனுப்பப்பட்டு அவர்கள் ஒவ்வொருவராய் வந்து சேர்ந்தார்கள். எல்லாம் ஸஜ்ஜமாயிருந்தன. முகூர்த்த தினமாகிய ஸோமவாரம் ஸூர்யோதயமாயிற்று. மதுராபுரியில் எங்கு பார்த்தாலும் நானுவித மங்கள வாத்தியங்கள் முழங்கவாரம்பித்தன. தேவதைகளெல்லாம் ஒவ்வொருவராய் வர ஆரம்பித்தார்கள். பிரம்மாவானவர் அநேக முனிகணங்களோடும் ஸரஸ்வதி தேவியோடும் வந்துசேர்ந்தார். மஹா விஷ்ணுவானவர் ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவியுடனும் தமது கணங்களுடனும் வந்து சேர்ந்தார். தேவேந்திரன் சசிதேவியுடனும தமது பரிவாரங்களுடனும் முப்பத்திமுக்கோடி தேவர்களுடனும் வந்துசேர்ந்தான். வஸிஷ்டர் அருந்ததி முதலான மஹரிஷிகளெல்லோரும் அகஸ்தியமஹரிஷிக்கு கொடுதத வாக்குப்படி தக்ஷிண திக்கில் மதுராபுரியில் மீளவும் ஸாக்ஷாத் பரமேசுவரன் மணவாளத்திருக்கோலம் புரிவதைக்கண்ணுற்று கிருதார்த்தர்களாக வேண்டுமென்று ஓடோடியும் வந்து சேர்ந்தார்கள். இவ்வாறு நகரம் முழுமையும் ஆநந்த கோலாஹலமாய் ஆரவாரிக்க முகூர்த்தலக்னம் கிட்டிற்று. அச்சமயத்தில் ஹாலாஸ்ய நாதனுகிய ஸுந்தரேசுவரர் கோடி மன்மதன் ஒரேஸமயத்தில் உருவெடுத்து வந்தாற்போல் மிகுந்த வழகிய உருவத்தோடு கூடினவராய் கல்யாணத்திற்கனுகுணமான ஆடையாபரண அலங்காரத்துடன் ஜ்வலித்துக்கொண்டு மஹத்தான ரிஷபவாகனத்திலேறிக்கொண்டு, தமது கணங்கள் முன்செல்ல குண்டோதரன் பின்னுல் அதபுதமான வெண்குடைபிடிக்க, ஆகாசத்திலிருந்து புஷ்பவர்ஷங்கள் வர்ஷிக்க அப்ஸரகணங்கள் நர்த்தனம் செய்ய, தேவகன்னிகைகள் கானம் செய்துகொண்டு ஸுவர்ணபாத்திரங்களிலிருந்து ரத்னுக்ஷதைகளை வாரியிறைக்க முனிக்கூட்டங்களும் ரிஷிக்கூட்டங்களும் வேதகோஷங்களுடன் சூழ்ந்துவர மதுராபுரி வந்துசேர்ந்தனர். உடனே பிரம்மாவிஷ்ணு முதலானதேவர்களும் அகஸ்தியர் முதலான மகர்ஷிகளும் எதிர்கொண்டு வந்து மங்களவாத்தியங்களுடன் கல்யாணமண்டபத்துக்கு அழைத்துச் சென்றதும் முதன் முதலில் ஸாக்ஷாத்லக்ஷ்மீ தேவியும் ஸரஸ்வதீதேவியுமாக அரண்மனைக்குட் சென்று காஞ்சனமாலையைக் கூட்டிவந்தார்கள். காஞ்சனமாலையும் பரபரப்புடன் வந்து ஈசுவரனுடைய சரணுரவிந்தங்களை புஷ்பங்களால் அர்ச்சித்து நமஸ்கரித்து தனது புத்திரியாகிய தடாதகையை கிருபைசெய்து பாணிக்கிரஹணம் செய்துகொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தாள். ஈசுவரனும் மந்தஹாஸத்துடனதையங்கீகரித்து எல்லோருடனும் உள்ளேசென்று கல்யாணமேடையிலமர்ந்தார். உடனே லக்ஷ்மீதேவியும் ஸரஸ்வதீதேவியுமாக உள்ளேசென்று காஞ்சனமாலையைப்பார்த்து "அம்மா, எங்களுக்கும் எல்லாஜகத்துக்கும் தாயாரான உங்கள் பெண்ணெங்கே" என்று

கேட்டு கல்யாணப்பெண்ணை அழைத்து வந்து ஈசுவரனுக்குப் பக்கத்தில் மேடையிலுட்
காரவைத்தார்கள். பாண்டிய அரசர்களுக்கு குலபுரோஹிதர் அகஸ்தியராயிருந்தபோதி
லும் அவருக்குகைலாஸத்தில் நடந்த பார்வதீகல்யாணத்தைதர்சனம் செய்து வைப்பதாக
முன்னமேயே வரமளிக்கப்பட்டிருப்பதால் அவரை இப்பொழுது எல்லா வைபவத்தையும்
கண்குளிரப் பார்த்துக்கொண்டிருக்க சொல்லி விட்டு பிரம்மதேவனானவர் தாமே பௌரோ
ஹித்யத்துக்கு உட்கார்ந்தார். தடாதகையின் தகப்பனாகிய மலையத்வஜபாண்டியர்
காலஞ்சென்று விட்டதால் அரசர்களெல்லாம் விஷ்ணுவின் அம்சம் என்பதாக சொல்
லிக்கொண்டு மஹாவிஷ்ணுவானவர் தாமேபெண்ணை கன்யகாதானம் செய்ய ஏற்பட்டார்.



அம்மன் கோயில் வாசல்புரத்
தின்மேல் இருக்கும் ஷண்
முகரின் சிலை.

இப்படி யேற்பட்டதில் இவருக்கு ஒரு உத்தேசம்
உண்டு. முன்னொருகாலத்தில் ஈசுவரன் விசுவரூபியாயி
ருந்த ஸமயம் தாமும் பிரம்மாவுமாக ஈசுவரனுடைய
பாதத்தையும் சிரசையும் கண்டுபிடிப்பதாக பிரதிக்ஞை
யேற்படுத்திக்கொண்டு தாம் வராஹாவதாரம் எடுத்து
கீழ் லோகங்கள் எவ்வளவுதூரம் போயும் முடியாமல்
திரும்பிவந்தது முதல் எப்படியாவது இந்த ஈசுவரனு
டைய பாதத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற அவா
மிகவும் ஜாஸ்தியாயிருந்தது. இக்கல்யாண ஸந்தர்ப்
பத்தில் தாம் பெண்ணின் தகப்பனார் ஸ்தானத்தில்
தாரை வார்க்கிறவராக ஏற்பட்டால் மாப்பிள்ளையை நல்
வரவேற்று பாதப்பிரக்ஷாளனம் செய்விக்கும் ஸமயத்
தில் அந்த அருமையான சரணாரவிந்தங்களை கண்டுபிடி
த்து விடலாமென்னுமெண்ணத்துடனேயே அவ்வித
மேற்பட்டனர் போலும்! மேலும் பரம்பொருளாகிய
பராசக்தியை மடியில் உட்கார்த்திவைத்துக் கொள்கிற
தென்றால் அது லேசான காரியமா. அந்த பாக்கியம்
எல்லாருக்கும் கிடைக்கக்கூடியதா. த்ரிலோக ஸம்ரக்ஷ
கரான ஸாக்ஷாத் பரமாத்வாகிய மஹாவிஷ்ணுகூட தம
து யோக நித்ரையைவிட்டு இந்தபாக்கியத்தை ஆவலு
டன் அபேக்ஷித்து வந்து பிரார்த்தித்து நின்றாரென்றால்
அதன் பெருமையை எடுத்துரைக்கலாகுமோ? இதுமட்
டுமா. மூன்றுலகங்களிலும் "ஈசுவரன்" என்றால் நிர்வி
வாதமாய் பரமசிவனைக்குறிக்குமேயொழிய வேறொருவரும் அந்த சப்தத்திற்கு வாச்யராக
மாட்டார்கள். இம்மாதிரி ஐசுவர்யத்துக்கெல்லாம் ஒரே இருப்பிடமாயும், ஈசுவர சப்தத்
திற்கு ஒரேலக்ஷ்யமாயும் உள்ள ஸாக்ஷாத்பரமேசுவரன் கூட பாணிக்கிரஹணஸமயத்தில்
தமது கையைமல்லாத்தி ஏந்தி பரதேவதையின் கையை அதன்மேல் வைத்துக்கொண்டு
தாங்கினார் என்றால் அந்த அம்பிகையின் ஹஸ்தங்களின் கௌரவாதிசயத்தைச்சொல்ல
வும் வேண்டுமோ? இன்னுமோர் விசேஷம் யாதெனில் ஈசுவரனானவர் மஹாவிஷ்ணுவிட

மிருந்து அம்பாளைகிரஹித்துக் கொண்டதும் அக்னிபகவானை பிரதக்ஷிணம் வந்து ஸப்தப நிக்காக அம்பாளுடைய காலை கையால் பிடித்துக்கொண்டார். இந்த அத்புதக்காக்ஷியா னது உலகத்திலுள்ளவர்களுக் கெல்லாம் அவர்கள் எவ்வளவு மஹிமைபொருந்தியவர் களாயிருந்தாலும் ஸாக்ஷாத் பரதேவதையாகிய பராசக்தியின் பாதபத்மங்களை யடைந்து அவைகளை கெட்டியாகப்பிடித்துக் கொள்வதைத்தவிர வேறுகதியில்லை யென்பதை வற்பு றுத்திக்காட்டுவது போலிருந்தது. மூன்றுலகங்களுக்கும் சரண்யாயிருக்கும் ஈசுவரன் கையில் அம்பாளின் சரணாவிந்தமிருந்ததைப் பார்த்தால் உலகத்திலுள்ள மானுஷாநந்தம் முதல் பிரம்மாநந்தம் வரையுள்ள எல்லா ஆநந்தங்களையுமளிக்கக்கூடியது மழிவில்லாதது மான ஸதாசிவாநந்தமுள்ள ஐசுவர்யம் அந்தசரணாரவிந்தங்களிலிருந்துமே உண்டாகின்ற தென்பதை நன்கு விளக்குவது போலிருந்தது. இவ்வாறு ஆதிசேஷனாலும் வர்ணிக்க வொண்ணாத மஹிமையுடனும் விபவத்துடனும் மீனாக்ஷிஸுந்தரேசுவாருடைய விவாஹ மங்கள மஹோத்ஸவமானது முடிந்ததும் வந்திருந்த தேவதைகளையெல்லாம் அவரவர்களுக் குத் தக்கவாறு ஸம்மானம் செய்து உத்தரவுகொடுத்தனுப்பி விட்டு ஈசுவரனனவர் விவாஹ மண்டபத்தினின்றும் புறப்பட்டு தனிமையில் போயுட்கார்ந்து கொண்டு மீனாக்ஷீ தேவியு டன் பரிஹாஸமாக ஸல்லாபம் செய்துகொண்டிருந்தார்.

6. பதஞ்சலி மஹர்ஷிக்கு தாண்டவதர்சனம் கொடுத்தது

தடாதகையின் கல்யாணமஹோத்ஸவம் முடிந்த சற்று நேரத்துக்கெல்லாம் மாத்தியன்ஹிககாலம் வந்து விட்டதால் கல்யாணத்திற்கு வந்திருந்தவர்களெல்லோரும் பொத்தாமரைக்குளத்திற்குப்போய் ஸ்நானம் செய்து மாத்யான்ஹிகவிதிகளை செய்து முடித்துக்கொண்டு கோவிலுக்குச்சென்று ஸ்ரீமீனாக்ஷி ஸுந்தரேசுவார்களைத்தர்சனம்செய் து விட்டுத்திரும்பி வந்ததும் அரண்மனையில் போஜனத்துக்கழைக்கப்பட்டார்கள். அச்ச மயம் பதஞ்சலி வியாக்ரபாதமஹர்ஷிகள் தயங்கிநின்று ஸுந்தரேசுவார் ஸமீபத்தில் போய் பின்வருமாறு தெரியப்படுத்திக்கொண்டார்கள் "ஸ்வாமின், தாங்கள் தஹரபுண்டரீகமாகிய சிதம்பர க்ஷேத்ரத்தில் எங்களிடம் பரமகிருபையுடன் அருளிச்செய்த தாண்டவதர்சனம் என்று எங்களுக்குக் கிடைத்ததோ அன்றுமுதல் பிரதிதினமும் அவ்விடத்தில் தங்களு டைய தாண்டவதர்சனத்தை மத்தியான வேளையில் தர்சனம் செய்து விட்டுத்தான் ஆகா ரம் செய்வது என்ற நியமத்துடனிருந்துவருகிறோம். ஆதலால் இப்பொழுது சிதம்பரம் போக எங்களுக்கு ஆக்ஞை கொடுக்கவேண்டும் அல்லது வேறு எவ்வித ஆக்ஞை கொடுத் தாலும் அவ்வாறு நடக்கசித்தமாயிருக்கிறோம்" என்றார்கள். இதைக்கேட்ட ஈசுவரனன வர் அவர்களுடைய நியமத்தினால் மகிழ்ந்து, "ஹேமஹர்ஷிகளே, நீங்கள் கவலைப்படவேண் டாம். உங்களுடைய நியமத்துக்கு பங்கம் வரவேண்டாம். சிதம்பரக்ஷேத்ரமானது விராட் புருஷனுடைய ஹிருதயஸ்தானமாகிறது. இந்தஹாலாஸ்யமோ த்வாதசாந்தஸ்தானமா யுள்ளது. ஆதலால் சிதம்பரத்தைக்காட்டிலும் இது விசேஷமான க்ஷேத்ரம். இந்தக்ஷேத் ரத்திலேயே உங்களுக்கு தாண்டவதர்சனம் கொடுத்தருளுகிறோம். கோவிலுக்குப் போங் கள்" என்று கூறினர். உடனே ஈசுவரன் தாண்டவதர்சனமளிக்கப் போகிறார் என்கிற செய்தி எங்கு பார்த்தாலும் பரவவே திரளான ஜனங்கள் கோவிலில் கூடினார்கள். அவ்வி

டத்தில் கர்ப்பகிருஹமாகிய இந்திரவிமானத்துக்கு முன்பாகக்கீழ்பக்கத்தில் ரத்தினங்களாலலங்கரிக்கப்பட்ட மிகவும் ஜ்யோதிர்மயமானரஜதஸபை யொன்று நொடிப்பொழுதில் தோன்றிற்று. அதில் சிவகணங்களெல்லாம் சிதம்பரத்திலுள்ளபடி அவரவர்களுக்கேற்பட்ட வாத்யங்களுடன் தோன்றினார்கள். அந்தஸபையின் நடுவில் ஒருமணிபீடம் போடப்பட்டிருந்தது. அதில் அபஸ்மாரஸுரனைக்குப்புறப்போட்டுத் தமது வலதுகாலால் அழுத்திக்கொண்டுத்தமது இடது காலைக்குஞ்சிதபாதமாகத் தூக்கிக்கொண்டு பத்துக்கைகளிலும் பத்துவிதமான ஆயுதங்களை தரித்துக்கொண்டு ஸாக்ஷாத் பரமேசுவரனனவர் அவ்யாஜகருணாமூர்த்தியானதால் எல்லோருக்கும் ஆநந்தத்தாண்டவக் காக்ஷியைக் கொடுத்தருளினார். அந்த அத்புதமானகாக்ஷியைக்கண்டு ஆநந்தபரவசராகப் பதஞ்சலிமஹர்ஷியானவர் பின்வருமாறு ஸ்தோத்ரம் செய்தார்.

सुवर्णपद्मिनीतटान्तदिव्यहर्म्यवासिने सुपर्णवाहनप्रियाय सूर्यकोटितेजसे ।
अपर्णया विहारिणे फणाधरेन्द्रधारिणे सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ १ ॥

सुतुङ्गभङ्गजह्नुजासुधांशुखण्डमौलये पतङ्गपङ्कजासुहृत्कृपीटयोनिचक्षुषे ।
भुजङ्गराजकुण्डलाय पुण्यशालिबन्धवे सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ २ ॥

चतुर्मुखाननारविन्दवेदगीतभूतये चतुर्भुजानुजाशरीरशोभमानमूर्तये ।
चतुर्विधार्थदानशौण्डताण्डवस्वरूपिणे सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ३ ॥

शरन्निशाकरप्रकाशमन्दहासमञ्जुलाधरप्रवालभासमानवक्त्रमण्डलश्रिये ।
करस्फुरत्कपालमुक्तविष्णुरक्तपायिने सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ४ ॥

सहस्रपुण्डरीकपूजनैकशून्यदर्शनासहस्रनेत्रकल्पितार्चनाच्युताय भक्तितः ।
सहस्रभानुमण्डलप्रकाशचक्रदायिने सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ५ ॥

रसारथाय रम्यपत्रभृद्रथाङ्गपाणये रसाधरेन्द्रचापशिञ्जिनीकृतानिलाशिने ।
स्वसारथीकृताजनुन्नवेदरूपवाजिने सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ६ ॥

अतिप्रगल्भवीरभद्रसिंहनादगर्जितश्रुतिप्रभीतदक्षयागभोगिनाकसद्मनाम् ।
गतिप्रदाय गर्जिताखिलप्रपञ्चसाक्षिणे सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ७ ॥

मृकण्डुसूनुरक्षणावधूतदण्डपाणये सुगण्डमण्डलस्फुरत्प्रभाजितामृतांशवे ।
अखण्डभोगसंपदर्थिलोकभावितात्मने सदा नमः शिवाय ते सदाशिवाय शंभवे ॥ ८ ॥

मधुरिपुविधिशक्रमुख्यदेवैरपि नियमार्चितपादपङ्कजाय ।
कनकगिरिशरासनाय तुभ्यं रजतसभापतये नमः शिवाय ॥ ९ ॥

हालास्यनाथाय महेश्वराय हालाहलालंकृतकन्धराय ।
मीनेक्षणायाः पतये शिवाय नमो नमः सुन्दरताण्डवाय ॥ १० ॥

இவ்வாறு தாண்டவமூர்த்தியை ஸ்தோத்ரம் செய்து நமஸ்கரித்து இம்மாதிரியாகவே எப்பொழுதும் இந்த த்வாதசாந்த க்ஷேத்திரத்தில் பிரதிதினமும் மத்யானவேளையில் ரஜதஸபையில் தாண்டவதர்சனம் கொடுத்து ஜனங்களை உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார். அவ்வண்ணமே செய்வதாக அவருக்கு அநுக்ரஹம் செய்துவிட்டு ஈசுவரனவர் திரும்பவும் அரண்மனைக்கு தடாதகையிடம் சென்றார். உடனே எல்லோரும் போஜனத்துக்குச் சென்றார்கள்.

7. குண்டோதரனுக்கன்னமளித்தது.

அத்புதமான ஆநந்தத் தாண்டவதர்சனம் செய்து கொண்டு மஹர்ஷிகள் முதலிய எல்லோரும் திரும்பி அரண்மனைக்கு வந்ததும் அவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. எல்லோரும் மிகுந்த உத்ஸாகத்துடனும் கோலாகலத்துடனும் போஜனம் செய்தார்கள். ஆனால் எவ்வளவு பேர்கள் சாப்பிட்டபோதிலும் உள்ளே தயாரிக்கப்பட்டிருந்த அன்னம் சாகம் பக்ஷணம் வகைகள் குறைந்தபாடில்லை. ஸாக்ஷாத் ஈசுவரன் மாப்பிளையாக வருவதால் அவர் பின்னோடு ஏராளமான கணங்கள் வருமென்று நினைத்து காஞ்சனமாலையானவள் எல்லா பதார்த்தங்களையும் திரள்திரளாய் சேகரித்து மலைபோல் குவித்து வைத்திருந்தாள். சிவகணங்கள் ஒன்றுவது சாப்பாட்டுக்கு வராமையால் எல்லாபதார்த்தங்களும் அப்படியே மிஞ்சிப்போய்விட்டது. இது விஷயத்தை வேலைக்காரர்கள் காஞ்சனமாலையிடம் தெரிவிக்க காஞ்சனமாலை தனது பெண்ணிடம் சொன்னாள். தடாதகையும் மெதுவாக தனது பர்த்தாவிடம் தெரிவித்தாள். ஈசுவரனவர் காஞ்சனமாலைக்கேற்பட்டிருக்கும் கர்வத்தையறிந்து புன்னகை செய்துகொண்டு தடாதகையைநோக்கி "நீ எல்லாதேசங்களையுமடக்கி ஏகசக்ராதிபத்யத்திலிருந்து எட்டுதிக்பாலகர்களையும் வசப்படுத்தியாளும்பொழுது எல்லாருமுனது பிரஜைகளேயொழிய எனக்குத்தனியாக மனுஷ்யாளேது. இருந்தாலும் என்னோடு கொடை பிடித்துவந்த இந்த குண்டோதரன் ஒருவன்தான் என்னைவிடாமல் இருக்கிறான். அவனைக் கூட்டிக்கொண்டுபோய் அவனுக்கு அன்னமளித்தால் பிறகு பார்ப்போம்" என்று சொல்லி குண்டோதரனைப் பார்த்து அவன் வயற்றிலுள்ள வைசுவாநராக்னியை தூண்டிவிட்டு விட்டார். உடனே அகோரமான பசியால் வருந்திக்கொண்டு தடாதகையுடன் குண்டோதரன் உள்ளேசென்றான். இவன் ஒருவனைகூட்டிக் கொண்டு தடாதகைதிரும்பி வருவதைக்கண்டு காஞ்சனமாலை "மாப்பிளை மனுஷ்யனிவன் ஒருவன்தானோ" என்று பரிஹாஸம் செய்து கொண்டு அவனை போஜனசாலைக்குள் அழைத்துச்சென்றாள். அங்கே பதார்த்தங்களைப் பரிமாறுவதற்குள் மிகவும் அவஸரப்பட்டுக்கொண்டு குண்டோதரன் எதிரில்வைக்கப்பட்ட ஸமஸ்தஸாமான்களையும் ஒருங்கே திரட்டி ஒரு பிராணாஹுதியாக செய்துவிட்டு திரும்பவும் பசி பசியென்று பறந்தான். அதைக்கண்டு அங்குள்ள எல்லா வேலைக்காரர்களையும மிகவேகமாக மேன்மேலும் பதார்த்தங்களைக் கொண்டுவந்து போடச் சொன்னாள். அவை முழுமையையும் சாப்பிட்டுவிட்டு மீளவும் மிகப்பசியால் வருந்தினவனாய் பாகசாலைக்குள்ளேயே நுழைந்து அங்கிருந்த பக்குவமாகாத பதார்த்தங்கள் யாவற்றையும் பாக்கியன்னியில் விழுங்கிவிட்டான். அப்படியும் அவனுக்குப் பசி தணியவில்லை. காஞ்சனமாலையைப் பார்த்து இவ்வளவுதானா நீசேகரித்து வைத்த பதார்த்தங்கள் என்று

கேட்டான். அவள் வெட்கத்துடன் தலை குனிந்துகொண்டு பெண் தடாதகையிடம் விருத்தாந்தத்தைச் சொன்னாள். தடாதகையும் தனது பர்த்தாவிடம் சென்றாள். அவளைக் கண்டதும் ஈசுவரனானவர் "நான் அனுப்பிய குண்டோதரனுக்கு அன்னமளித்தாயிற்று. இன்னும் பாக்கியிருக்கிறதா, இன்னுமொருகணத்தை யனுப்பட்டுமா" என்று கேட்டார். உடனே தடாதகையானவள் "ஸ்வாமி தங்களுடைய லீலாவிபவத்தால் குண்டோதரனுக்கே இன்னும் பசிதீர ஆகாரம்போடமுடியவில்லை. சேகரித்து வைக்கப்பட்டிருந்தபதார்த்தங்கள் முழுமையும் பக்வமானது, ஆய்க்கொண்டிருந்தது, ஆகாதது எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டான். இன்னும் அவனுக்குப் பசியடங்கவில்லை. எனது தாயாருக்கும் கர்வபங்கமாய் விட்டது. தாங்கள்தான் கிருபைசெய்யவேண்டும்" என்றாள். இதைக்கேட்டதும் ஈசுவரன் புன்சிரிப்புக்கொண்டு "நீ நாணத்தால் என்னுடன் ஸரியாகப் பேசாமலிருந்ததால் உன்னைப்பரபரப்புடன் பேசும்படி செய்வதற்காக இப்படிச்செய்தேன். கவலைப்பட வேண்டாம்" என்றார். இதற்குள் குண்டோதரனும் ஓடோடியும் வந்து ஈசுவரனுடைய சரணாவிந்தங்களில் விழுந்து அகோரபசியால் வருந்துவதாகக் கதறினான். உடனே ஈசுவரன் மீனாக்ஷியைநோக்க ஸாக்ஷாத் பராதேவதையும் தமது அன்னபூர்ண சக்தியால் நான்கு அக்ஷயமான அன்னகுண்டங்களை உண்டாக்கி அவைகளை சாப்பிடச் சொல்லி குண்டோதரனுக்கு ஆக்ஞையிட்டாள். அவனும் மிகுந்தபரபரப்புடன் அந்த நான்கு குழிகளிலிருந்தும் சாப்பிடவே அவனுடையபசி ஒருவாறு சமனமாச்சுது. இந்த நன்கு அன்னகுண்டங்களும் இன்னும் அந்த கோயிலில் காணப்படுகின்றன.

8. வேகவதியை வரவழைத்தது.

இவ்வாறு குண்டோதரனுடைய பசியானது ஒருவாறு தீர்ந்ததும் அவனுக்குண்டான தாகத்துக்கு ஓர் எல்லையில்லை. அந்த ஊரிலுள்ள கிணறுகள் குளங்கள் எல்லாவற்றையும் வற்றடித்துவிட்டான். திரும்பவும் ஈசுவரனிடம் வந்து தாஹம் என்று தபித்தான். உடனே கருணாமூர்த்தியான ஈசுவரனவர் தமது சிரஸிலிருந்த கங்கையை சற்று கீழே வரும்படி ஆக்ஞாபித்தார். உடனே மிகவும் வேகத்துடன் கங்காதேவியானவள் நதிரூபமாக வந்தாள். அந்தஜலத்தைக் குடிக்கச்சொல்லி குண்டோதரனுக்கு ஆக்ஞையிடவே அவனும் அப்படியே அந்தநதியை குறுக்கேதடுத்து தன்வாய்க்குள் விட்டான். மணல் முதலிய எல்லாமுள்ளே போயும் அவன் தாஹத்தால் குடித்துக் கொண்டேயிருந்தான். மீனாக்ஷியானவள் மிக்க மனமிறங்கினவளாய் ஈசுவரனைப்பார்த்து அவனது தாஹத்தை சமனம் செய்யும்படி பிரார்த்தித்தாள். ஈசுவரனும் தாம் தூண்டிவிட்டிருந்த குண்டோதரன் வயற்றிலுள்ள வைசுவானராக்னியைத் தணித்தார். உடனே அவன் முன்போலாய் பசிதாகமடங்கினவனாய் ஜகத்பிதாக்களான மீனாக்ஷிஸுந்தரேசுவரர் முன்பாகவந்து அவர்களின் சரணங்களில் நமஸ்கரித்து எழுந்திருந்து அஞ்சலி பத்தனாய் ஸ்தோத்ரம் செய்தான். அதனால் ஸந்தோஷசித்தமுடையவராய் ஈசுவரனவர் அவனை இந்த க்ஷேத்ரத்தில் தமது கணங்களுள் முதன்மையானவனாக இருக்கும்படி அநுக்ரஹித்துவிட்டு மீனாக்ஷியை நோக்கி "இனி இது முதல் கங்கையானவள் இந்த க்ஷேத்ரத்தில் வேகவதி என்னும் பெயருடன் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருப்பாள். இந்த வேகவதியில் ஸ்நானம் செய்கிறவர்கள் எல்

லா பாபங்களினின்றும் விடுபடுவார்கள்'' என்று பகர்ந்தார். இந்த வேகவதிதான் இப்பொழுது வைகையென்று சொல்லப்படும் நதி.

9. ஏழுகடலையும் வரவழைத்தது.

இத்தகைய விபவத்துடன் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவாருடைய விவாஹ மஹோத்ஸவம் நடந்தேறியதும் அந்த தேசத்திலுள்ள எல்லோருடையவும் பிரார்த்தனைக்கிணங்க அங்கு வந்திருந்த மஹர்ஷிகளால் ஈசுவரனானவர் ஸுந்தரேசபாண்டியர் என்கிற பெயரோடு அந்த பாண்டியராஜ்யத்தின் அதிபதியாக பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பெற்றார். அதுமுதல் அந்தராஜ்யத்தை மிகவும் சிறப்புற்று விளங்கும்படி ஆண்டுவந்தார். இச்சமயம் ஒருநாள் தமது பத்னியாகிய மீனாக்ஷீ தேவியானவள் முகம்வாடியிருப்பதைக் கண்டு அதற்குக் காரணமென்னவென்று கேட்டார். அதற்கவள் தனது தாயார் புண்யம் ஸம்பாதிக்கவேண்டி தீர்த்தயாத்திரையாக ஸமுத்திர ஸ்நானத்திற்காக மறுநாள் புறப்பட உத்தேசித்திருப்பதாகவும் அதனால் தான் கவலை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தாள். இதைக்கேட்டதும் ஈசுவரனானவர் "அதற்காக நீ கவலைப்படுவானேன். உனது தாயார் ஒரு ஸமுத்ரத்திலல்லவா ஸ்நானம் செய்ய உத்தேசித்தாள். இதோ ஏழுஸமுத்திரங்களையும் இங்கு வரவழைக்கிறேன். இங்கேயே அவள் ஸ்நானம் செய்து கிருதார்த்தையாகலாம்'' என்று சொல்லி ஸ்மரித்தமாத்திரத்தில் ஸப்த ஸமுத்திரங்களும் புருஷரூபமாக ஈசுவரனின் முன்பாக தோன்றி வணங்கி நின்றன. ஈசுவரன் அவைகளை நோக்கி "நீங்கள் ஏழுவரும் இந்நகரமது கோயிலுக்குக் கிழ்புரமாயுள்ளகுளத்தில் ஆவிர்ப்பவிக்க வேண்டும்'' என்று உத்தரவுகொடுத்தார். உடனே அவைகளின் புருஷரூபங்கள் மாறி அலைகளுடன் கொந்தளித்துக்கொண்டு ஏழுஸமுத்திரங்களும் குறிப்பிட்டகுளத்தில் வந்து சேர்ந்தன. இந்த அத்புதக்காக்ஷியைக் கண்டு எல்லோரும் பிரமித்து ஏழுகடல்குளமென்று அந்தக்குளத்துக்குப் பெயர் கொடுத்து அதில் ஸ்நானம்செய்து கிருதார்த்தர்களானார்கள்.

10. மலையத்வஜனை யழைத்தது.

இவ்வாறு ஏழுகடல்களும் மதுரையிலேயே ஒருகுளத்தில் வந்துவிட்டதை யறிந்த காஞ்சனமாலையானவள் மிகவும் ஸந்தோஷத்துடன் மஹர்ஷிகளையழைத்து தனக்குவிதிப்படி ஸமுத்ரஸ்நானம் செய்துவைக்கும்படி பிரார்த்தித்தாள். அதற்கு அகஸ்தியமஹர்ஷியானவர் காஞ்சனமாலைக்கு ஸமுத்ரஸ்நான விதியையெல்லாம் எடுத்துச்சொல்லி ஆனால் பர்த்தாவுடனாவது புத்திரனுடனாவது சேர்ந்து ஸ்நானம் செய்தால்தான் புண்யபலன் கிடைக்குமென்றும் இல்லாவிடில் பிரயோஜனமில்லையென்றும் சொன்னார். இதைக்கேட்டதும் காஞ்சனமாலைக்கு அதிகவருத்தமுண்டாயிற்று. தனக்குப்புருஷனுமில்லை, புத்ரபாக்யமுமில்லையேயென்று நொந்துகொண்டாள். தனது புத்ரியாகிய தடாதகையிடம் இதைச் சொல்லி என்ன செய்வதென்று கேட்டாள். உடனே தடாதகையும் தனது நாயகனாகிய ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் போய் விஷயத்தைத் தெரியப்படுத்த அவரும் தமது மனதால் இந்திரனுடன் கூட தேவலோகத்திலிருந்த மலையத்வஜபாண்டியனை ஸ்மரித்தார். ஸ்மரித்த மாத்திரத்தில் மலையத்வஜபாண்டியனும் ஈசுவரனை தர்சனம் செய்வதற்காக ஓடோடியும் வந்

தான். ஈசுவரனும் அவனைத் தமது மாமனாரென்ற காரணத்தால் எதிர்கொண்டு சென்று மரியாதையுடன் வரவேற்று அவனை காஞ்சனமாலையுடன் ஸமுத்திரஸ்நானஞ் செய்யச் சொன்னார். அவ்வாறே மலையத்வஜனும் தனது புத்திரியாகிய தடாதகையைக் கண்டு ஸந்தோஷித்துத் தனது பிரியபத்னியாகிய காஞ்சனமாலையைக் கண்டு தழுவிக்கொண்டு விதிப்படி எழு கடல் குளத்தில் ஸமுத்திரஸ்நானம் செய்தான். உடனே அவ்வரச தம்பதிகளுக்கு திவ்யமயமான சரீரமுண்டாயிற்று. ஆகாயத்தில் புஷ்பகவிமானம் தோன்றிற்று. தம்பதிகளிருவரும் கரையிலேறி ஸுந்தரேசுவரரை நமஸ்கரித்து அவ்விமானத்திலேறிக்கொண்டு சிவஸாயுஜ்யத்தை யடைந்தார்கள். இவ்வாச்சர்யத்தைக்கண்டு எல்லோரும் அகமகிழ்ந்தார்கள்.

11. உக்ரபாண்டியனவதாரம் செய்தது.

பிறகு ஸுந்தரபாண்டியனும் மீனாக்ஷியும் ஸுகமாக ராஜ்யபாரம் வஹித்துவருகையில் வெகுநாளாயும் தனக்கு புத்ரஸந்தானமில்லாமையால் மீனாக்ஷி மனம்வருந்துவதையறிந்த ஸுந்தரேசுவரரானவர் அவளை கர்ப்பவதியாகச் செய்தார். அந்த கர்ப்பமும் நாளுக்குநாள் விருத்தியாயிற்று. சாஸ்திரவிதிப்படி பும்ஸவனம் ஸீமந்தம் முதலானவை நடத்தப்பட்டன. பத்துமாஸங்கள் நிறைந்ததும் ஸோமவாரம் ஆருத்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பிரஹஸ்பதியானவர் கேந்திரத்திலிருக்கும் ஸமயத்தில் மீனாக்ஷியானவள் நல்ல புத்ரனைப் பெற்றாள். உடனே கிரமப்படி அக்குழந்தைக்கு ஜாதகர்மா நாமகரணம் முதலியன செய்வித்தார்கள். உக்ரபாண்டியனென்று பெயரிட்டார்கள். ஊர்முழுமையும் உத்ஸவமாகக் கொண்டாடினார்கள். பிறகு அக்குழந்தைக்கு நான்காவது மாதத்தில் சந்திரதர்சனமும், ஆறாவது மாதத்தில் அன்னப்பிராசனமும், மூன்றாவதுவயதில் சௌளமும், ஐந்தாவது வயதுமுடிந்ததும் உபநயனமும் விதிப்படி செய்வித்தார்கள். அதுமுதல் அதிசீக்கிரத்தில் அரசர்களுக்குரிய எல்லாவித்யைகளையும் கற்றுக்கொண்டு எட்டாவது வயது பூர்த்தியாவதற்குள்ளாகவே எல்லாவித்யைகளிலும் நிகரில்லாதவனாகி ஆய்விட்டான். பிறகு யௌவனபருவம் வந்ததும் அவனுக்கு முதலில் விவாஹத்தை நடத்திப் பிறகு ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து வைக்கவேணுமென்ற எண்ணத்துடன் ஸுந்தரபாண்டியனானவர் தனது மந்திரிகளுடன் ஆலோசிக்கலானார்.

12. உக்ரபாண்டியனுக்கு ராஜசின்னங்கள் கொடுத்தது.

அரசனிவ்வாறு ஆலோசித்துக் கொண்டிருக்கும் காலத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவரரானவர் கல்யாணபுரத்தரசனாகிய ஸூர்யவம்சத்திலுதித்த ஸோமசேகரனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி அவனது குமாரத்தியாகிய காந்திமதீ யென்னும் பெண்ணை மதுராபுரிவேந்தனாகிய ஸுந்தரபாண்டியன் குமாரனான உக்ரபாண்டியனுக்கு விவாஹம் செய்துகொடுக்கும்படி கட்டளையிட்டு அந்தர்த்தானமானார். அந்த ஸோமசேகரராஜனும் மிகவும் சிவபக்தனானதால் ஈசுவரனால் கொடுக்கப்பட்ட ஆக்ஞையை வெகு ஸந்தோஷத்துடன் சிரஸா கிரஹித்து உடனே தனது பரிவாரங்களுடனும் புத்திரியுடனும் புறப்பட்டு மதுராபுரிக்குச் சென்றனன். அவனது வருகையைக் கேள்விப்பட்டதும் ஸுந்தரபாண்டியனும் எதிர்கொண்டுபோய் அவனை மரியாதைகளுடன் வரவேற்று யோகக்ஷேமங்களை பரஸ்பரம் விசா

ரித்த பிறகு அவ்வரசன் வந்த கார்யத்தைத் தெரிந்துகொண்டு ஸௌந்தரபாண்டியனும் மிகுந்த உத்ஸாஹத்துடன் ஜோஸ்யர்களைக்கொண்டு ஜாதகங்கள் ஒத்திருக்கிற விஷயம றிந்து ப்ரஹஸ்பதிபகவானைக்கொண்டு பெண்ணுக்கு ஸகலஸாமுத்ரிகாலக்ஷணங்களும் பொருந்தியிருப்பதையும் தெரிந்துகொண்டு உடனே கல்யாணத்துக்கு ஆகவேண்டிய ஏற் பாடுகளையெல்லாம் செய்வித்தான். சுபமுகூர்த்தத்தில் உக்ரபாண்டியனுக்கும் காந்திமதிக் கும் விவாஹமஹோத்ஸவம் நடந்தேறியது. கல்யாணகோலத்துடன் வதூவரர்களுக்கு ஊர்வலம் செய்வித்து குலத்து வழக்கப்படி கோயிலுக்குச் சென்று ஸ்ரீ மீனாக்ஷிஸௌந்தரே சுவரரை தர்சனம் செய்து பூஜை செய்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பிவந்து உடனே உக்ரபாண்டியனை ராஜஸிம்ஹாஸநத்தில் ஏற்றிவைத்து ராஜசின்னங்களால் அலங்கரிப்பித்து மற்றுமுள்ள சத்ர, சாமராதிகளையெல்லாம் சேர்ப்பித்து மஹர்ஷிகளைக் கொண்டு பட்டாபி ஷேகம் செய்வித்தான் ஸௌந்தரபாண்டியன். இச்சமயத்தில் ஸௌந்தரேசுவரர் உக்ரபாண் டியனுக்கு மூன்று ஆயுதங்களைக் கொடுத்தார். அவையாவன— வலயம், சக்தி (வேல்), சண்டாயுதம். இவைகளைக் கொடுத்து "இவைகள் பின்னொருகாலத்தில் உனக்கு உபயோ கப்படும். இந்திரன் ஒரு ஸமயம் உனக்குப் பகைவனாவான். அக்காலத்தில் அவன் முடி சிதற இந்த வலயத்தாலடி. கடலானது உன்னை ஒருஸமயம் த்வேஷிக்கும். அச்சமயம் இந்த வேலால் அதை வற்றடி. மஹாமேரு ஒரு ஸமயம் கர்வமடையும். அச்சமயத்தில் இந்த சண்டாயுதத்தால் அதன் செருக்கை யடக்கு" என்று சொன்னார். உக்ரபாண்டிய னும் மிகுந்த வணக்கத்துடன் இந்த மூன்று ஆயுதங்களையும் பெற்றுக்கொண்டு ஸாக்ஷாத் ஈசுவராவதாரமான தனது தகப்பனாரை வணங்கிநின்றான். உடனே ஸௌந்தரபாண்டியனும் தடாதகையும் தங்களது புத்ரனைத் தழுவியணைத்து உச்சிமுகர்ந்து நீதிநெறி தவராமல் ராஜ் யம் வஹிக்குமாறு புத்திசொல்லிவிட்டு ஆலயத்தினுள் சென்று ஸாக்ஷாத் மீனாக்ஷிசுந்தரே சுவரருடன் ஐக்கியமானார்கள்.

13. உக்ரபாண்டியனால் கடலை வற்றடித்தது.

தகப்பனார் சொல்லுக்கிணங்கி உக்ரபாண்டியன் மநுநீதி தவறாமல் ராஜ்யபாரம் செய்துவருகையில் மாதம் மும்மாரி மழை பெய்து தேசமெங்கும் ஸௌபிக்ஷமாக ஜனங்க ளெல்லாம் ஸந்தோஷமாயிருந்தார்கள். உக்ரபாண்டியனும் ராஜதர்மத்தையனுஸரித்து 96 அசுவமேதயாகம் செய்து முடித்தான். இதைக்கண்ட தேவேந்திரனவன் இவ்வரச னிடம் பயமும் அஸூயையும் கொண்டவனாய் ஸமுத்ரராஜனாகிய வருணபகவானையழைப் பித்து ஸமுத்ரத்தைப் பொங்கச்செய்து மதுரைநாட்டையழிக்கும்படி கட்டளையிட்டனன். தேவராஜனுக்கு பயந்து ஸமுத்ரராஜனுமதற்கிணங்கி உடனே மிகுந்த ஆரவாரத்துடன் யுகாந்தப்பிரளயம் போல் பொங்கி மதுரை நாட்டை நோக்கி அர்த்தராத்திரியில் வெகு ஆ டம்பரமாய் வந்தான். ஜனங்களெல்லாம் பிரமித்து நடுங்கவாரம்பித்தார்கள். ஒருவருக் கும் இன்னது செய்வதென்று தோன்றவில்லை. அச்சமயத்தில் கோயிலில் மூலலிங்கத்தி னின்றும் ஸ்ரீ ஸௌந்தரேசுவரர் வெளிக்கிளம்பி அரண்மனையில் நித்திரையிலிருந்த உக்ர பாண்டியனுக்கு ஸ்வப்னத்தில் ஒரு ஸித்தர் மாதிரி ரூபத்துடன் தோன்றி "நீ அரசு செ லுத்துவது மிகவும் நேர்த்தியாயிருக்கிறது! ஸமுத்திரம் கரைபுரண்டு கொந்தளித்துக்

கொண்டு உனது நாட்டையே மூழ்க்கி த்வம்ஸம் செய்யவெண்ணங்கொண்டு யுகாந்தப் பிரளயம் மாதிரி ஊருக்கு ஸமீபத்தில் வந்துவிட்டது. ஜனங்களெல்லாம் பதறுகிறார்கள். ஜனங்களை எவ்வித ஆபத்திலிருந்தும் ரக்ஷிக்கவேண்டியது க்ஷத்திரியனாகிய ராஜாவின் கடமையாயிருக்க நீ ஸ்வஸ்தமாய் தூங்குவது மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. உடனே எழுந்திருந்து போய் நான் கொடுத்திருக்கும் சக்தியாயுதத்தை அந்த ஸமுத்திரத்தின் பேரில் பிரயோகம் செய். உடனே அதன் கர்வமடங்கும்'' என்று சொல்லி மறைந்தார். உடனே உக்ரபாண்டியனும் பரபரப்புடன் எழுந்திருந்து தனது மந்திரிகளையும் கூட்டிக்கொண்டு ஸமுத்ரம் பொங்கி வந்துகொண்டிருக்கும் திக்கை நோக்கிச் சென்றான். அங்கு அதன் கொந்தளிப்பைக் கண்டதும் பிரமித்து நின்றான். உடனே ஸ்ரீஸுந்தரேசுவரரானவர் மறுபடி அவன் முன்பாக ஸ்வப்நத்தில் தோன்றிய ஸித்தர் மாதிரியாகவே ரூபமெடுத்துக் கொண்டுவந்து உடனே வேகமாக சக்தியாயுதத்தை பிரயோகிக்கச் சொன்னார். உக்ரபாண்டியனும் அவரை வணங்கி அவர் சொன்னமாதிரியே அச்சமுத்திரத்தை நோக்கி சக்தியை விட்டெறிந்தான். அந்த வேலின் முனை ஸமுத்திரத்தில் பட்டவுடனே வடவாக்னிபட்டது போல் ஸமுத்ரஜலம் முழுமையும் "உஸ்'' என்ற சத்தத்துடன் வற்றிப் போயிற்று. கூடியிருந்த எல்லா ஜனங்களும் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள். உக்ரபாண்டியனும் அந்த ஸித்தரை வெகுவாகக் கொண்டாடினான். அரசனை அநுக்ரஹித்து விட்டு அந்த ஸித்தரும கோயிலுக்குள் சென்று மூலலிங்கத்தில் தேஜோரூபமாய் மறைந்தார். இந்த ஸித்தருக்கு தனி ஸந்நிதி ஸ்வாமி கர்ப்பகிருஹத்தின் வடக்கில் முதல் பிராகாரத்திலிருந்துவருகிறது.

14. இந்திரனின் கர்வபங்கம் செய்வித்தது.

ஒருகாலத்தில் சேரசோழபாண்டிய ராஜ்யங்கள் மூன்றிலும் மழையென்ற பேச்சேயில்லாமல் ஆறுகள் குளங்கள் கிணறுகளெல்லாம்கூட வற்றிப்போய் புல்பூண்டுகள் முதல் உலர்ந்துபோய் ஜனங்கள் முதலிய ஸகல ஜீவஜந்துக்களும் அன்னபானாதிகளுக்கு மார்க்கமில்லாமல் வருந்தினதைக் கண்ட மேற்சொன்ன மூன்றுதேசத்து மன்னர்களும் ஒருங்கு கூடி யோசித்துக் கடைசியில் பாண்டியராஜனின் குலகுருவாகிய அகஸ்தியரிடம் போய் முறையிட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து மூவருமாக மலய பர்வதத்துக்குச் சென்றார்கள். அங்கே அகஸ்திய மஹர்ஷியைக் கண்டு வணங்கி தங்கள் தேசங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைத் தெரியப்படுத்தி அதை நிவர்த்திக்க மார்க்கம் சொல்லித்தர வேண்டுமென்று யாசித்தார்கள். அம்மகரிஷியும் சற்றுநேரம் தியானத்திலிருந்துவிட்டு அம்மன்னர்களை நோக்கி "ஏ, அரசர்களே உங்களுடைய தேசங்களுக்கு வந்திருக்கும் அநர்த்தம் ஸ்வல்பமானதல்ல. நவக்கிரகங்களின் கதி வித்யாஸத்தால் இத்தீங்கு நேர்ந்திருக்கிறது. அங்காரகனும், சூரியனும் முன் சென்றுகொண்டு பின்னாடி சுக்கிரன் வக்கிரித்திருப்பதால் இன்னும் பன்னிரண்டு வருஷகாலம் உங்கள் ராஜ்யங்களில் மழையே கிடையாது. துவாதச வருஷக்ஷாமம் இப்பொழுதுதான் கோரமாய் ஆரம்பித்திருக்கிறது. இதை பரிஹரித்துக்கொள்ள ஒரே ஒரு உபாயந்தான் உள்ளது. அதாவது மதுராபுரியிலுள்ள காலகாலனை ஹாலாஸ்யநாதனை பூஜித்து அவருடைய கிருபாகடாக்ஷமாரி பொழியும்படி செய்தால், இந்த துர்பிக்ஷம் நொடிப்பொழுதில் விலகிவிடும். அவர் பக்தவத்ஸலரானதால்

நீங்கள் போய் அங்குள்ள ஹேமபத்மாகரத்தில் ஸ்நாநம் செய்து அவரை பக்தியுடன் பூஜித்து ஏகாக்ரசித்தர்களாய் தியானித்து உங்கள் தேசங்களுக்கேற்பட்டிருக்கும் கஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டுமென்று உருக்கத்துடன் பிரார்த்தித்துக்கொண்டீர்களானால் உங்களுக்கு அவர் கட்டாயம் அனுக்ரஹம் செய்வார்" என்று சொன்னார். இதைக்கேட்ட அவ்வரசர்கள் ஹாலாஸ்யநாதரை ஆராதிக்கவேண்டிய விதத்தைத் தங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று வேண்ட அகஸ்தியரும் அவர்களுக்கு ஸோமவார விருதத்தின் கிரமத்தை நன்கெடுத்துரைத்து அவ்விதிப்படி ஸோமஸுந்தரரை ஆராதியுங்கள் என்று சொல்லியனுப்பி விட்டார். அவர்களும் அவ்வண்ணமே மதுராபுரியையடைந்து, ஸோமவார விருதத்தை அனுஸரித்து ஸோமஸுந்தரரை வெகுவாக ஆராதித்தார்கள். அவ்வாராதனையில் ஈடுபட்டு ஸுந்தரேசுவரரும் மனமிரங்கி இந்திரனுடைய கர்வத்தை அடக்க இதுதான் தருணமென்றெண்ணி அசரீர வாக்கு மூலமாய் அவ்வரசர்களுக்குச் சொன்னதாவது. "உங்கள் ராஜ்யங்களில் மழைவேண்டுமானால், மேகங்களுக்கதிபதியாகிய இந்திரனை நீங்கள் பிரார்த்திக்க வேண்டும். அவனைப் பிரார்த்தித்தீர்களேயானால் அவன் உங்களுக்கு வேண்டியதைக் கொடுப்பான். என்னை ஆராதித்ததற்குப்பலனாக ஸ்வர்க்கலோகத்திலுள்ள இந்திரனிடம் போவதற்கு வேண்டிய சக்தியை யான் தருகிறேன்" என்றார். இதைக்கேட்ட அவ்வரசர்களும் உடனே இந்திரலோகம்போகப் புறப்பட்டார்கள். ஆனால் பாண்டியதேசத்தரசனாகிய உக்ரபாண்டியனுக்குமட்டும தனது குலகுருவாகிய அகஸ்தியரையும், தனது குலதெய்வமாகிய ஹாலாஸ்யநாதரையும் தவிர்த்து மற்றொருவரைப்போய்ப் பிரார்த்திப்பதில் இஷ்டமில்லாமலிருந்தது. ஆனாலும் ஸுந்தரேசுவரர் அசரீர வாக்காய்க் கொடுத்த உத்தரவுக்கிணங்க சேரசோழமன்னர்களுடன் இநதிரலோகம் போய்ச்சேர்ந்தான். இவர்களுடைய வரவைத் தெரிந்துகொண்ட தேவேந்திரன் தனது ஆஸனத்திற்குக் கீழாக மூன்றாஸனங்களை போட்டுவித்து அவ்வரசர்கள் மூவரையும் ஸபைக்குள் அழைத்துவரச் சொன்னான். சேர சோழமன்னர்கள் இருவரும் முன்னதாக வந்து இந்திரனை நமஸ்கரித்து அவர்களுக்காகப் போடப்பட்டிருந்த ஆஸனத்தில் அமர்ந்தார்கள். உக்ரபாண்டியனோவெனில் நேராக வந்து இந்திரனுடனொன்றும பேசாமலேயே, அவனுடைய உயர்ந்த ஆஸனத்திலேயே அமர்ந்தான். தேவேந்திரனும் அவர்கள் வந்த கார்யத்தை வினவ சேரசோழமன்னர்கள் தங்கள் தேசங்கள் துர்பிக்ஷததால் வருந்துவதாயும், தயவுசெய்து மழை கொடுத்தருள வேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள். பாண்டியனோ வாயைத்திறக்கவில்லை. தேவேந்திரனும் அப்படியே ஆகட்டுமென்று அவர்களுக்குச் சொல்லிவிட்டு சேரசோழமன்னர்களுக்கு இரண்டு சின்ன ஹாரங்களை ஸம்மானமாக ஸமர்ப்பித்தான். பாண்டியனிடத்தில் இந்திரனுக்கு மிக்க கோபமும் அஸூயையும் ஏற்பட்டிருந்ததென்றாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனை அவமானப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் அவனுக்கு எல்லாரையும்விட சிறந்த மரியாதை செய்யும் பாவனையாய் ஒரு மனுஷனாலும் தூக்கமுடியாத அவ்வளவு பாரமாயுள்ள ஓர் ரத்தினஹாரத்தை அவன் கழுத்தில் போட்டான். ஆனால் உக்ரபாண்டியனோ தன் பிதாவாகிய ஸுந்தரேசுவரரின் அனுக்கிரஹத்தால், அந்த ஹாரத்தைச் சற்றேனும் லக்ஷியம் செய்யாமல் அதி சுலபமாய் தரித்தான். இதைக்கண்டு இந்திரனும் வியப்படைந்து தன் உத்தேசம் கைகூடாததைக் குறித்து வியசனமுற்று அவ்வரசர்

களுக்கு விடைகொடுத்தனுப்பினன். அவர்களும் தத்தம் ராஜ்யம்போய்ச் சேர்ந்தார்கள். சேரசோழ ராஜ்யங்களில் யதேஷ்டமாக மழைபெய்து சுபிக்ஷம் ஏற்பட்டுவிட்டது. பாண்டியராஜ்யத்திலோ க்ஷாமத்தின் கொடுமை வரவர அதிகரித்தது. உக்ரபாண்டியனும் பிரதிதினமும் கோயிலில் ஹாலாஸ்யநாதரைப் பிரார்த்தித்தான். ஒருநாள் வேட்டைக்காக இவன் மலயபர்வதத்திற்குப் போயிருந்த சமயத்தில் அவ்விடத்தில் புஷ்களம், ஆவர்த்தகம் முதலிய நான்கு மேகங்கள் தங்கியிருப்பதைக் கண்டான். வர்ஷிக்காமல் அங்கிருப்பதைக்கண்டு கோபங்கொண்டவனாய், அந்த நான்கையும் பிடித்துவந்து தன் ராஜ்யத்திலுள்ள காராக்ருஹத்தில் அடைத்துவிட்டான். இதைக் கேள்வியுற்ற தேவேந்திரன் மிகவும் கோபாக்கிராந்தனாய் உக்ரபாண்டியனுடன் யுத்தத்திற்கு வந்தான். உக்ரபாண்டியனும் கோவிலுக்குச் சென்று ஸுந்தரேசுவரரைப் பூஜித்து பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, இந்திரனுடன் யுத்தத்திற்குச் செல்ல அனுமதிகேட்டான். ஸுந்தரேசுவரரும் தாமவனுக்குக் கொடுத்த வலயாயுதத்தை எடுத்துச செல்லும்படிக்கும், அதைக் கடைசியில் உபயோகப்படுத்தும்படிககும், அவனுக்கு ஜயம் உண்டாகுமென்றும சொல்லியனுப்பினர். உடனே உக்ரபாண்டியனுக்கும் தேவேந்திரனுக்கும் மஹத்தான யுத்தம் ஆரம்பித்தது. சஸ்திரயுத்தம், அஸ்திரயுத்தம், மல்லயுத்தம் எல்லாம் நடந்தன. எல்லாவற்றிலும் உக்ரபாண்டியனே ஜயமடைந்தான். இதைக்கண்டு மிக்க மனவருத்தம்கொண்ட தேவேந்திரன் ஒரே அடியால் உக்ரபாண்டியனை தொலைக்க வெண்ணி கடைசியில் தன் வஜ்ராயுதத்தைப் பிரயோகித்தான். உடனே உக்ரபாண்டியனும் ஸாக்ஷாத் ஈசுவரனின் வார்த்தையை ஸ்மரித்துக்கொண்டு அவரால் அனுக்ரஹிக்கப்பட்ட வலயாயுதத்தை மிக வேகமாய் சுழற்றியெறிந்தனன். அவ்வலயாயுதமானது எதிரில் வந்த வஜ்ராயுதத்தைத் தவிடுபொடியாக அடித்துவிட்டு தேவேந்திரனின் சிரஸிலிருந்த கிரீடத்தைத் தாக்கி அதைக் கீழே தள்ளிச் சிதறவடித்தது. இவ்வாறு தனது முடியிழந்ததும் தேவேந்திரன் மிக வெட்கப்பட்டுக்கொண்டு ஒருவரிடமும் சொல்லாமல் திரும்பி தனதூருக்கு ஓடிவிட்டான், உக்ரபாண்டியனும் கோயிலுக்குச் சென்று ஈசுவரனிடம் நடந்தவற்றைச் சொல்லி நமஸ்கரித்துவிட்டு அரண்மனை போய்ச்சேர்ந்தான். தேவேந்திரனும் தனதூரிலிருந்து ஒரு கடிதமெழுதி உக்ரபாண்டியனுக்கனுப்பினன். அதில் தான் செய்தது பிசகென்றும் ஸாக்ஷாத் பரமேசுவராகிய ஸுந்தரேசுவரரின் புத்திரன் உக்ரபாண்டியனென்பதைத்தான் மறந்துவிட்டதாகவும், பாண்டியராஜ்யத்தில் யதேஷ்டமாக மழைபொழிய உடனே செய்விப்பதாயும், தயவு செய்து சிறையிலடைத்து வைத்திருக்கும் நான்கு மேகங்களையும் விடுவிக்கப் பிரார்த்திப்பதாயும், எழுதியிருந்தான். இதைப் பார்த்ததும் உக்ரபாண்டியன் மழை பெய்வதற்கு யார் பாத்தியமென்று கேட்க இந்திரனுக்குப் பிரியனான ஸப்தக்கிராமாதிபதியாகிய சிறந்த சிவபக்தனான ஏகவீரனென்பவன் தான பாத்தியமென்றுரைக்க உடனே நான்கு மேகங்களையும் சிறையினின்றும் விடுவித்தனன். அதுமுதல் பாண்டியராஜ்யத்தில் ஏராளமான மழை பெய்து மிகவும் சுபிக்ஷமாகவிருந்தது.

15. மேருவின் கர்வத்தையடக்கி ஸ்வர்ண நிதியை எடுத்துவந்தது.

இவ்வாறு உக்ரபாண்டியன் பிரதிதினமும் தவறாது மீனாக்ஷி ஸுந்தரேசுவரரைப்

பூஜை செய்து ஆராதித்து வரும் நாளில் அவனுக்கு ஒரு புத்ரோத்ஸவமுண்டாயிற்று. அப்புத்ரனுக்கு வீரபாண்டியனென்று பெயரிட்டார்கள். சிறிதுகாலம் சென்றதும் ஒரு ஸமயம் நாடெங்கும் அநாவிருஷ்டியால வருந்திற்ற. அரசனும் ஜோஸ்யர்களைத் தருவித்து அதற்குக் காரணம் கேட்டதில் நவக்ரஹங்களின் வக்ரத்தாலிது நேர்ந்திருக்கிறதென்றும் இன்னும் கொஞ்சகாலம் அப்படித்தானிருக்குமென்றும் தெரிவித்தார்கள். ஊரிலுள்ள பிராம்மணர்களெல்லாம் ஜீவனத்துக்கு யாதொரு மார்க்கமுமில்லாததால் அயலூர்களுக்குச் செல்ல ராஜாவின் உத்திரவை நாடினர்கள். இதைக்கண்ட அரசன் மிகவும் மனவருத்தமுற்று மந்திரிகளுடன் ஆலோசித்தும் ஒன்றும் தோன்றாதவனுய் கோயிலுக்குச்சென்று ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரரைப் பூஜை செய்து பிரார்த்தித்து மன்றாடினான். எப்பொழுதும் இதே விசாரமாய் உருகினான். ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் ஸித்தர் ரூபமாக அரசனுக்கு ஸ்வப்நத்தில் தோன்றி "இந்த அநாவிருஷ்டியானது இன்னும் ஒருவருஷமிப்படித்தானிருக்கும். பிறகு ஏராளமாக விருஷ்டியேற்படும். ஆதலால் அதுவரையில் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கு வேண்டிய தனத்தை நீ வெளியிலிருந்துதான் கொண்டுவந்தாகவேண்டும். நான் உனக்குக் கொடுத்திருக்கும் சண்டாயுதத்தை எடுத்துக்கொண்டு வடக்கேயுள்ள மேருபர்வதத்தையடைந்து அதை அந்த சண்டாயுதத்தால் தாக்கினுயேயானல் அது உன்னிடம் பயந்து உனக்கு இடம் கொடுக்கும். அதன் மத்தியில் ஏராளமான தனம் புதையலாக இருக்கிறது. அதிலிருந்து உனக்கு வேண்டியதை எடுத்துவந்து பிரஜைகளுக்கும் கொடுத்து நீயும் வைத்துக்கொண்டு இந்த ஒருவருஷகாலத்தைத் தள்ளிவிடலாம்" என்று சொன்னார். அவ்வார்த்தைக்கிணங்கி உடனே உக்ரபாண்டியனும் சண்டாயுதத்தையெடுத்துக்கொண்டு ஏராளமான ஸேனைகளையும் திரட்டிக்கொண்டு மேருவை நோக்கிச் சென்றனன். மேருபர்வதத்தையடைந்ததும் அதைப் பிரதக்ஷிணம் செய்து அதற்கு முன்பாக நின்றுகொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரர் சொல்படி அதை சண்டாயுதத்தாலடித்தான். உடனே அந்த மேருபர்வதமானது ஒரு பந்துபோல சுற்றவாரம்பித்தது. தனக்கு இன்னது நேர்ந்ததென்று தெரியாததாய் அந்த பர்வதமானது பயந்துகொண்டு புருஷாகாரமாய் உக்ரபாண்டியனுக்கு முன்பாக வந்துநின்று தன்னை யடித்ததற்கு யாதுகாரணமென்று கேட்டது. அதற்கு உக்ரபாண்டியன் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் தனக்குச் சொன்னதைச் சொல்லி அம்மலையிலுள்ள தனத்தை யபஹரித்துச் செல்லுவதற்காகத்தான் வந்திருப்பதாகச் சொன்னான். இதைக்கேட்டதும் அந்தப் புருஷரூபியான பர்வதம் சொன்னதாவது— "எனக்கு ஜங்கமரூபமென்றும் ஸ்தாவரரூப மென்றும் இரண்டு ரூபங்களுண்டு. அதில் ஜங்கமரூபத்தோடு நான் பிரதிதினமும் மதுராபுரிக்குச் சென்று ஹாலாஸ்யநாதரைப் பூஜை செய்து நியமத்துடன் ஆராதித்து வருவேன். இப்பொழுது கொஞ்சகாலமாய் எனக்கு ஏற்பட்ட மதச்செருக்கால் நான் அவ்வாறு செய்யாமல் தவறியிருந்துவிட்டேன். ஆதலால் என் மதத்தை யடக்கவேண்டி ஸ்ரீ ஸுந்தரேசுவரரிந்தமாதிரி செய்திருக்கிறார். நீ அவருடைய புத்ரனைதால் உன்னுடைய வீர்ய பராக்ரமங்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. நான் செய்த அபராதத்திற்கு இப்பொழுது நான் பட்ட அடிபோதாது. நீ அபேக்ஷிக்கிறபடி வேண்டியதனத்தை யெடுத்துச்செல்லு" என்று சொல்லி ஸ்வர்ணப்புதையல் இருக்குமிடத்தையும் காண்பித்துவிட்டு மறைந்தது. உடனே உக்ர

பாண்டியனும் தனது ஆள்களை விட்டு அங்குள்ள மலைக்கல்களைப் பெயர்த்து உள்ளிருந்த புதையலிலிருந்து தனக்கு வேண்டியமட்டில் ஏராளமான ஸுவர்ணக்குவியல்களை மூட்டை மூட்டையாய் எடுத்து ஆனைகள்பேரிலும் ஒட்டகைகள்பேரிலும் குதிரைகள் பேரிலும் ஏற்றிக்கொண்டு திரும்பவும் அப்புதையலை கல்பாறைகளைப் போட்டு மூடி அதில் தனது ராஜாங்க முத்திரையையிட்டு ஊருக்குத் திரும்பி வந்து தனது பிரஜைகளுக்கெல்லாம் ஒருவருஷ ஜீவனத்துக்குவேண்டிய அளவு தனம் கொடுத்துத்தானும் மீதியாயுள்ள தனத்தைக்கொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரருக்கு கோபுரங்கள் பிராகாரங்கள் முதலியன கட்டுவித்தான். நாட்டிலுள்ள பிரஜைகளும் யாகாதிகள் முதலிய விருஷ்டிஸாதனமான காரியங்களைச் செய்தார்கள். உடனே மழை பெய்ய ஆரம்பித்தது. ஊர் முழுமையும் ஸௌக்யமுண்டாயிற்று. சிறிதுகாலம் சென்றதும் தனது புத்ரனாகிய வீர பாண்டியனுக்கு ராஜ்பத்தில் பட்டாபிஷேகம் செய்துவைத்து உக்ரபாண்டியனும் காந்திமதியும் சிவஸாயுஜ்யத்தையடைந்தார்கள்.

16. வேதார்த்தோபதேசம் செய்தது.

முன்னொருகாலத்தில் கண்வர் முதலான மஹர்ஷிகளெல்லாம் வேதங்கள் முழுமையையும் ஸாங்கோபாங்கமாக அத்யயனம் செய்துவிட்டு அதற்கு அர்த்தம் தெரியாமல் வருந்துகையில் ஈசுவரனவர் சிவபக்தனை ஒரு கிழட்டு பிராமணரூபத்துடன் விபூதிருத்ராக்ஷங்கள் தரித்துக்கொண்டு அவர்கள் முன்பாகத் தோன்றி அவர்கள் படும் வருத்தத்திற்குக் காரணத்தையறிந்து அவர்களை ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவராலயத்திலுள்ள தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதியில் போய் அவரை நன்கு உபாஸித்தால் அவர் வேதார்த்த உபதேசம் செய்வார் என்று சொல்லிப்போனார். அவ்வாறே அம்மஹர்ஷிகளும் ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தையடைந்து அங்குள்ள பொத்தாமரைக்குளத்தில ஸ்நானம் செய்து தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதிக்குச் சென்று ஒரு கார்த்திகை பௌர்ணமி முதல் மறு கார்த்திகை பௌர்ணமிவரையில் ஒரு ஸம்வத்ஸரகாலம் வெகு நியமத்துடன் ஈசுவரனை பூஜை தபஸ் முதலியவற்றால் திருப்தி செய்வித்தார்கள். ஈசுவரனும் திருப்தியடைந்த மனத்தினராய் பதினாறு வயதுள்ள யுவாவாகக் கோடிஸூர்யப் பிரகாசமான தேஜஸுடன் விபூதிருத்ராக்ஷமணிந்து மந்தஹாஸத்துடன் அந்த ரிஷிகளுக்கு முன்வந்து அவர்கள் படும்துயரத்தையறிந்து அவர்களை ஸ்ரீ ஸுந்தரேசுவரர் ஸந்நிதிக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு வேதார்த்தம் முழுமையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்கிக் காட்டினார்.

17. ரத்னவியாபாரம் செய்தது.

வீரபாண்டியனுக்கு அநேகம் போகஸ்திரீகளிருந்தார்கள். அவர்களிடத்தில் அநேகம் குமாரர்கள் அவனுக்கு உண்டாயிருந்தார்கள். ஆனால் தர்மபத்னியிடம் ஒரு புத்ரன் கூட பிறக்கவில்லை. இதனால் வியாகுலமுற்றவனாய் ஸ்ரீ ஸுந்தரேசுவரரை பலவாற்றானும் பூஜித்து ராஜ்யத்துக்குப் பட்டத்துக்கு உபயோகப்படும்படியான ஒரு புத்ரனை யாசித்தான். ஈசுவரனும் மனமிரங்கி அவனுக்கு அனுக்ரஹம் செய்தார். உடனே அவனுடைய பட்டமஹிஷிக்கு ஒரு புத்ரன் பிறந்தான். அவனை மிகவும் செல்வமாக வளர்த்துவந்தார்கள். அக்குழந்

தைக்கு ஐந்தாம் வயது நடக்கும்பொழுது வீரபாண்டியனுனவன் ஒருநாள் வேட்டையாடப்போனவிடத்தில் ஒரு புலியால் கொல்லப்பட்டான். இது செய்தி கேட்டதும் அவனுடைய போகஸ்திரீகளின் குமாரர்கள் அரண்மனையின் கஜானுவிலுள்ள விலையுயர்ந்த ரத்னங்கள் ஆடைகள் ஆபரணங்கள் முதலியவத்றையெல்லாம் அபஹரித்துக்கொண்டு மூலைக்கு ஒருவராய் ஓடிவிட்டார்கள். மந்திரிகள் இக்குழந்தையைக் கொண்டு வீரபாண்டியனுக்கு உத்தரகிரியைகளையெல்லாம் செய்வித்து பிறகு ராஜாவின்றி ராஜ்யமானது அராஜகமாயிருந்தால் சீக்கிரத்தில் நாசமாய் விடுமென்ற கவலையுடன் இந்த ஐந்து வயது குழந்தைக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்க யத்னம் செய்தார்கள். அரண்மனை கஜானுவில் போய்ப் பார்த்ததும் அங்கு ஒரு ஆபரணமாவது காணவில்லை. கிரீடத்தைக்கூடக் காணும். கிரீடமில்லாமல் பட்டாபிஷேகம் எவ்விதம் செய்விக்கிறது. புதிதாக செய்விக்கிறதென்றுலும் அதற்குத் தகுந்த சிரேஷ்டமான ரத்னங்கள் உடனே எங்கு கிடைக்கும். தாமதமானுல் ராஜா இல்லாத ராஜ்யம் பாழாய்விடுமே என்று மிகவருந்தி எல்லாவற்றிற்கும் ஸ்ரீ ஸௌந்தரேசுவரர் தான் கதி. அவரை சரணமடைந்து அவர் விட்டவழி செல்வோமென்றெண்ணி இந்த ராஜ குமாரனையுமழைத்துக்கொண்டு ஆலயம் சென்று அங்கு ஸ்ரீ மீனுக்ஷிஸௌந்தரேசுவரரை நன்கு பூஜித்து தங்களது மனோபீஷ்டங்களைத் தெரிவித்துத் தாங்கள் செய்யவேண்டியது யாது என்பதை உத்தரவு கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்து நின்ருர்கள். சற்று நேரமானபிறகு கோயிலுக்குள்ளிருந்தும் வெளியே வந்து கோபுரவாசலில் ஸ்ரீ ஸௌந்தரேசுவரரின் உத்தரவை யெதிர்பார்த்துக்கொண்டு அந்த ராஜகுமாரனுடன் காத்திருந்தார்கள். அச்சமயத்தில் கோயிலுக்குள்ளிருந்து ஒரு வைசியவியாபாரி இடுப்பில் ஒரு பெட்டியுடனும் தோளில் ஒரு பையுடனும் கம்பளியுடனும் அவ்வழியாக வந்து மந்திரிமார்களையும் ராஜகுமாரனையும் கண்டு எதற்காக அவர்கள் முகம்வாடி யங்கு நிற்கிருர்களென்று விசாரித்தான். அவர்கள் விஷயத்தைச் சொல்ல உடனே அந்த வைசியன் தான் ஒரு ரத்னவியாபாரியென்றும் தன்னிடத்தில் மிகவும் சிரேஷ்டமான விலையுயர்ந்த நவரத்னங்களிருப்பதாயும், அவைகளை உடனே எடுத்துக் காண்பிப்பதாயும் சொல்லி அங்கேயே ஒரு பக்கத்தில் தனது தோளிலிருந்த கம்பளியை விரித்து அதன்மேல் தன் பையிலிருந்தும் பெட்டியிலிருந்தும் பார்ப்பவர்கள் கண்களைக் கவரும்படியான அதிசிலாக்கியமான ரத்னங்களையெடுத்துப் பரத்தினுன். எவ்வளவோ ரத்னங்களை பார்த்திருக்கும் அந்த மந்திரிகள் இந்த ரத்னங்களைக் கண்டதும் பிரமித்து வியப்படைந்தார்களென்ருல் அவைகளின் வனப்பை வர்ணிக்கவும் வேண்டுமோ. ரத்னங்களையெல்லாம் பரத்தியானபிறகு அந்த வியாபாரியானவன் "இந்த ரத்னங்களெல்லாம் வலாஸுரன் தேஹத்திலிருந்துமுண்டானவைகளாதலால் மிகச் சிறந்தவைகள்" என்ருன். அதென்ன விபரமென்று மந்திரிகள் கேட்டதற்கு வியாபாரி சொன்னதாவது "முன்னொருகாலத்தில் வலாஸுரனென்றொரு அஸுரனிருந்தான். அவன் சிறந்த சிவபக்தன். ஈசுவரனைக் குறித்து ஸதா கடுமையான தபஸ் செய்து அவர் பிரஸந்நமாகப் பெற்ருன். உடனே அவரிடம் இரண்டு வரங்கள் யாசித்தான். அதாவது தன்னை யுத்தத்திலொருவரும் எதிர்த்துக் கொல்லமுடியாமலிருக்கவேண்டுமென்றும் தான் வேறு காரணத்தால் இறந்தால் தனது சரீரத்திலுள்ள எலும்பு தோல் சதை ரத்தம் முதலிய ஸமஸ்தமும் நிகரில்லாத அதி சிரேஷ்டமான ரத்னங்களாக மாறிவிடவேண்டுமென்

றும் வரம் பெற்றான். இவ்வரத்திற்கிணங்க இவனை இந்திரனால் யுத்தத்தில் ஜயிக்கமுடியாமல் போகவே தேவதைகளெல்லாம் கூடி இவனை எவ்வுபாயத்தால் கொல்லலாமென்று ஆலோசித்தார்கள். பிறகு எல்லோருமாக தேவேந்திரனுடன்கூட வலாஸுரனிடம் சென்று அவனை வெகுவாக ஸ்தோத்ரித்து "உன்னுடைய குணங்களிலும் சிவபக்தியிலும் ஈடுபட்டோம். உனக்குவேண்டிய வரங்களை கேட்டால் கொடுக்க ஸித்தமாயிருக்கிறோம்" என்றார்கள். அதற்கு அந்த அஸுரன் தேவர்களை யுத்தத்தில் ஜயித்த கர்வத்தால் மதோன்மத்தனாயிருந்ததால் "நீங்கள் அல்பர்கள்; உங்களிடம் எனக்கு வரம்வேண்டியது ஒன்றுமில்லை. உங்களுக்கு ஏதாவது வேண்டியிருந்தால் கேளுங்கள். எதுவாயிருந்தாலும் நான் கொடுக்கிறேன்" என்றான். இதைக்கேட்ட தேவர்கள் இதுதான் ஸமயமென்றெண்ணி "தேவேந்திரன் ஒரு யாகம் செய்கிறார். அதில் தாங்கள் புருஷபசுவாக வந்து எங்கள் யாகத்தை பூர்த்திசெய்து வைக்கவேண்டும்." என்று கேட்டார்கள். உடனே அந்த அஸுரன் தான் வார்த்தையால் அகப்பட்டுக்கொண்டதை யறிந்து சிவபக்தனானதலால் சொன்னசொல் தவறக்கூடாதென்ற எண்ணத்துடன் தான் அப்படியே செய்வதாக அவர்களுக்கு சொல்லிவிட்டு தனது குமாரனுக்கு ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்துவைத்துப் பிறகு தேவர்களுடன் யாகசாலைக்குச் சென்றான். அங்கே அவனை பசுவாக யூபஸ்தம்பத்தில் கட்டி தேவர்கள் யாகத்தை நடத்தி அவனைக் கொன்றார்கள். உடனே அவனுக்கு திவ்யமயமான சரீரம் கிடைத்தது அவன் ஸ்வர்க்கலோகம் சென்றான். அவனுடைய ஸ்தூல சரீரத்தைச் சேர்ந்த ஸமஸ்த வஸ்துக்களும் ஈசுவரன் கொடுத்த வரத்துக்கேற்ப விலைமதிக்கவொண்ணாத நவரத்னங்களாக மாறின. அவ்விரத்னங்களாக்குமிவைகள்." என்று சொல்லி நவரத்னங்களின் குணதுணங்களையும் அவைகளைப் பரிக்ஷிக்கும் விதங்களையும் அவைகளின் ஜாதிபேதங்களையும், அவைகளை தரிக்கும் தினங்களையும்பற்றி விஸ்தாரமாக எடுத்துப் பிரஸங்கித்தான் அந்த வியாபாரி. இதையெல்லாம் கேட்டு மந்திரிகள் வியந்தார்கள். உடனே அந்த வியாபாரி "இந்த ரத்னங்களை யெடுத்துச்சென்று ஒரு கிரீடம் தயாரித்து உடனே இக்குழந்தைக்கு அபிஷேகபாண்டியனென்னும் நாமத்துடன் பட்டாபிஷேகம் செய்வியுங்கள். குழந்தையும் ஈசுவர கிருபையால் மேன்மேலும் விருத்தியடைந்து க்ஷேமமாயிருக்கும்" என்றான். ரத்னங்களின் விலையை விசாரித்ததற்கு பட்டாபிஷேகம் ஆனபிறகு தனக்கு அவைகளின் கிரயத்தைக் கொடுக்கலாமென்று சொல்லி அந்த நவரத்னங்களை விதிப்படி பூஜித்து ஈசுவரனை நோக்கி பிரார்த்தித்துவிட்டு அவ்விராஜகுமாரன் கையில் கொடுத்தான். அக்குழந்தை அவைகளை வாங்கிக்கொண்டதும் அந்த வியாபாரி கோயிலுக்குள் சென்றான். சற்றுதூரம் சென்றதும் வியாபாரி மறைந்து ரிஷபாரூடராய் ஈசுவரன் உள்ளே செல்வதைக்கண்ட மந்திரிகள் ஒன்றும் தோன்றாதவர்களாய்ப் பிரமித்து ஈசுவரனே ரத்னவியாபாரியாக வந்து நவரத்னங்களைக் கொடுத்துப்போனதாக அறிந்து ஆச்சர்யத்துடன் அரண்மனை சென்று ஓர் புதுக்கிரீடம் அந்த ரத்னங்களால் நிர்மித்து அதனால் அவ்விராஜகுமாரனுக்கு ஈசுவரன் சொல்படி அபிஷேகபாண்டியனென்ற நாமத்துடன் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள்.

18. மேகங்களால் ஸமுத்திரத்தைக் குடிக்கச்செய்தது.

அபிஷேகபாண்டியனனவன் பால்யத்திலேயே ஸுந்தரேசுவரர் மஹிமையையறிந்

னுதலாலும் தனக்கு ஹிதம் சொல்லக்கூடிய பெரியவராக தகப்பனரில்லாததாலும் இத ற்கு முன்னிருந்த எல்லா வரசர்களைக் காட்டிலும் மிகச் சிறந்த பக்தியுடன் ஸதா ஸர்வகால மும் ஸுந்தரேசுவரரைப் பூஜிக்கிறதும் ஒவ்வொரு கார்யத்துக்கும் அவரை யனுமதிகேட்டு நடத்துவதுமாயிருந்தான். தன் பெயருக்கேற்ப பிரதிதினமும் பற்பல திரவியங்களால் மூல லிங்கத்துக்கு அபிஷேகம் செய்துவைத்து வந்தான். ஒருநாள் கர்ப்பூரத்தால் மூலலிங் கத்தின் உடம்பு முழுமையும் கவசம் மாதிரி சாத்தி அதை தர்சனம் செய்து அச்சமயம் ஈசுவரனை கர்ப்பூரஸுந்தரர் என்று பெயரிட்டழைத்தான். இவ்வாறு விதம் விதமாகப் பூஜைசெய்து வரும்நாளில் ஒரு ஸமயம் சித்ரா பௌர்ணமியன்று ஏராளமான திரவியங்க ளைச் சேகரித்து மிகவும் விசேஷமாகப் பூஜித்தான். அந்த பூஜையானது முடிவுபெற அதிக நேரம் சென்றது. அன்றையதினம் தேவேந்திரன் பூஜை செய்யும் தினமானதால் அதற் காக இந்திரன் வந்து வெகுநேரமாய் காத்திருந்தும் பாண்டியன் பூஜை நடந்துகொண்டி ருந்ததால் அவகாசம் ஏற்படவில்லை. கடைசியில் பாண்டியன் பூஜை முடிந்ததும் அதன் விபவத்தையும் சிரத்தையையும் கண்டு ஆச்சர்யத்துடன் தான் வழக்கமாய் செய்துவருகிற பிரகாரம் ஸ்வர்ணத்தாமரைகளால் அர்ச்சித்துச் சென்றனன். அவன் தேவலோகம் போன தும் வருணபகவான் அவனைக் காணவந்தார். அவன் சோர்ந்திருந்ததைக் கண்டு யாது காரணமென்று கேட்டார். அதற்கிந்திரன் தான் ஹாலாஸ்யநாதரைப் பூஜிக்க மதுராபுரி சென்றதும் அங்கு பாண்டயராஜாவின் பூஜை நடந்துகொண்டிருந்ததால் காத்திருந்து பிற கு பூஜையை முடித்துக்கொண்டுவந்த சிரமத்தால் சோர்வடைந்திருப்பதாகச் சொல்லி ஸ்ரீ ஹாலாஸ்யநாதரின் மஹிமையின் பெருமையை வெகுவாக எடுத்துரைத்தான். தனக்கு விருத்திராஸுரனைக் கொன்ற பிரம்மஹத்தி அங்குதான் நிவர்த்தியாயிற்றென்றான். அதைக் கேட்ட வருணன் அவ்வளவு மஹிமை பொருந்தியவராயிருந்தால் அந்த ஹாலாஸ்யநாதர் தனக்குள்ள ஜலோதரவியாதியைத் தீர்த்துவைப்பாராவென்றான். அதற்கிந்திரன் அவரைப் பூஜித்தால் அவசியமது நிவர்த்தியாகுமென்றும் அந்த ஈசுவரனின் சக்தியை வருணனே நே ரிலறிந்து கொள்ளலாமென்றும் சொன்னான். உடனே வருணன் திருமபிச் சென்று புத்திக் குறைவால் ஸ்ரீ ஸுந்தரேசுவரரின் சக்தியைத் தானே சோதிக்கவெண்ணி கடலைக் கூப்பிட் டு உடனே பொங்கிப்பொய் மதுராபுரியை மூழ்கவடிக்கும்படி ஆக்ஞாபித்தான். கடலும் இதற்குமுன் தனக்கு நேர்ந்த ஆபத்தை மறந்து வருணன் கட்டளைக்கிணங்கி உடனே கொந்தளிப்புடன் பிரளயகாலத்தையொப்ப அலைகளை வீசிக்கொண்டு மதுரையை நோக்கி வர அங்குள்ள ஜனங்கள் மயங்கி நடுங்க அரசனாகிய அபிஷேகபாண்டியன் பயந்து ஸ்ரீ ஸோமஸுந்தரர் பாதமே கதியென்று நிச்சயித்து ஸமுத்ரத்திற்றோன்றின விஷத்தைக் கண்டு அஞ்சின விஷ்ணுவைப்போலவும், யமனைக்கண்டஞ்சிய மார்க்கண்டனைப்போலவும் கலங்கி ஈசுவரனின் சரணாரவிந்தங்களில் விழுந்து பலமாக முறையிட்டான். உடனே ஈசு வரனும் மனமிரங்கி புன்னகை செய்துகொண்டு அபிஷேகபாண்டியனுக்கு அபயப்பிரதா னம் செய்து தனது தலையிலுள்ள ஜடையிலிருந்து நான்கு மயிர்களைப் பிடுங்கி ஆகாயத் தில் நான்கு திக்குகளிலும் விட்டெறிய அவை நான்கு மேகங்களாக மாறி ஆரவாரத் துடன் வந்த கடல் முழுமையையும் உறுஞ்சிக் குடித்துவிட்டன. இவ்வதிசயத்தைக் கண்ட எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

19. அதிவிருஷ்டியிலிருந்தும் தேசத்தைக்காப்பாற்றியது.

இவ்வாறு தான் அனுப்பிய சமுத்திரத்தின் ஜல முழுமையும் குடிக்கப்பட்டுப்போனதைக் கண்ட வருணனானவன் ஈசுவரன் மஹிமையிலீடுபடுவதற்கு பதிலாக, மிகுந்த அஹங்காரம் கொண்டவனாய் கோபபரவசனாய் அதிக பரபரப்புடன் புஷ்களம், ஆவர்த்தகம் முதலிய நான்கு முக்கிய மேகங்களையும் வரவழைத்து பாண்டியநாடு முழுமையும் அகோரமான மழையை வர்ஷித்து ஹதம் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டான். அதைக் கேட்டதும் அம்மேகங்களுக்கு ஏற்கனவே பாண்டியதேசத்தரசனால் தாங்கள் காராகிருஹத்தில் அடைக்கப்பட்ட வருத்தம் மனதிற்குள்ளிருந்ததால் உடனே மிகவும் உத்ஸாஹத்துடன் அப்படியே செய்கிறோமென்று சொல்லி அதிவேகமாய்க் கிளம்பி பாண்டியநாடெங்குமே பரவி காடாந்தகாரமாயிருட்டிக்கொண்டு மின்னலும் இடியுமாய் ஆர்ப்பாடம் செய்துகொண்டு ஜனங்களெல்லாம் நடுங்கும்வண்ணம் ஆலங்கட்டி மழையாக, ஸந்தததாரையாய் மிகுந்த சப்தத்துடன் ஓயாமல் வர்ஷிக்க ஆரம்பித்தது. இதைக்கண்டு ஜனங்கள் மிகவும் பயந்து, தங்களுடைய அரசனாகிய அபிஷேகபாண்டியனுடன் ஆலயம் சென்று ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை, இந்த ஆபத்தினின்றும் தங்களைக் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்திக்க அவ்யாஜகருணாமூர்த்தியாகிய ஈசுவரனும் உடனே இதற்கு முந்திய லீலையில் தான் அனுப்பிய நான்கு மேகங்களையும கூடாரங்கள்போல் ஒன்றுசேர்ந்து பாண்டியநாட்டிற்குமேல் ஆவரணமாக நின்றுகொண்டு உள்ளே மழை துளியேனும் விழாமல் காக்கும்படி கட்டளையிட காமரூபிகளான ஈசுவரன் ஜடைமயிர்களான அந்த மேகங்களும் உடனே நான்கு கூடங்களாக (கூடாரங்களாக) மாறி ஒன்றுசேர்ந்து பாண்டியதேசம் பூமுழுமையுமே ஒரு துளிகூட மழை விழாமல் ஆவரணமாகக் குடைபோல் மூடிக்கொண்டன. இதனால் பக்கங்களில் எவ்வளவு அதிகமாக மழை பெய்தபோதிலும் பாண்டிய தேசத்திலுள்ளவர்கள் மழை என்கிற விசாரமே இல்லாமல் ஸ்வஸ்தமாகக் காலம் கழித்தார்கள். இவ்வதிசயத்தைக் கண்ட வருணபகவான் மிகவும் வெட்கமடைந்து புத்தி வந்தவனாய் தனது அஹங்காரத்தை நொந்துகொண்டு தான் ஏவிய மேகங்களை திருப்பிக்கூப்பிட்டு அவைகளை தங்கள் தங்கள் ஸ்தானங்களுக்குப் போகும்படி அனுப்பிவிட்டான். மழை நின்றுவிட்டதையறிந்த ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் உடனே தாம் அனுப்பியிருந்த நான்கு மேகங்களையும் வெளிவாங்கி தம்மிடம் முன்போல் வந்துவிடும்படி ஆக்ஞாபித்தார். பிறகு வருணபகவானும் மிகத் தாழ்மையுடன் ஹாலாஸ்ய க்ஷேத்திரம் வந்து ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை ஆராதிக்க எண்ணங்கொண்டு பொத்தாமரைக்குளத்தில் தனது ஜலோதர வியாதி தீரவேண்டுமென்னு விதிபூர்வகமாய் ஸங்கல்பித்துக்கொண்டு ஸ்நானம் செய்து, சுத்தவஸ்திரம் விபூதிருத்ராக்ஷங்களை தரித்துக்கொண்டு ஆலயத்தினுட் சென்றான். கோபுர வாசல் தாண்டியவுடனே தன்னுடைய ஜலோதர வியாதி தன்னைவிட்டு நீங்கியதையறிந்து அளவிலடங்காத ஸந்தோஷங்கொண்டு மிகுந்த வணக்கத்துடன் இந்திரவிமானத்தையடைந்து ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை அதிக பக்தி சிரத்தையுடன் பூஜித்து பிரதக்ஷிணநமஸ்காரம் செய்து ஸ்தோத்ரிக்கலானான்.

कल्याणशैलपरिकल्पितकार्मुकाय मौर्वीकृताखिलमहोरगनायकाय ।
पृथ्वीरथाय कमलापतिसायकाय हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ १ ॥

भक्तार्तिभञ्जनपराय परात्पराय कालाभ्रकान्तिगरलाङ्कितकन्धराय ।
भूतेश्वराय भुवनत्रयकारणाय हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ २ ॥
भूदारमूर्तिहरिमृग्यपदाम्बुजाय हंसाब्जसंभवसुदूरसुमस्तकाय ।
ज्योतिर्मयस्फुरितदिव्यवपुर्धराय हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ३ ॥
कादम्बकानननिवासकुतूहलाय कान्तार्धभागकमनीयकलेवराय ।
कालान्तकाय करुणामृतसागराय हालास्यमध्यानिलयाय नमः शिवाय ॥ ४ ॥
विश्वेश्वराय विबुधेश्वरपूजिताय विद्याविशिष्टविदितात्मसुवैभवाय ।
विद्याप्रदाय विमलेन्द्रविमानगाय हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ५ ॥
संपत्प्रदाय सकलागममस्तकेषु संघोषितात्मविभवाय सदाशिवाय ।
सर्वात्मने सकलदुःखसमूलहन्त्रे हालास्यमध्यानिलयाय नमः शिवाय ॥ ६ ॥
गङ्गाधराय गरुडध्वजवन्दिताय गन्धस्फुरद्भुजगकुण्डलमण्डिताय ।
गन्धर्वकिन्नरसुगीतगुणाधिकाय हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ७ ॥
पाणिं प्रगृह्य मलयध्वजभूपपुत्र्याः पाण्ड्येश्वरः स्वयमभूत्परमेश्वरो यः ।
तस्मै जगत्प्रथितसुन्दरपाण्ड्यनाम्ने हालास्यमध्यनिलयाय नमः शिवाय ॥ ८ ॥
गीर्वाणदेशिकगिरामपि दूरगं यद्वक्तुं महत्त्वमिह को भवतः प्रवीणः ।
शंभो क्षमस्व भगवच्चरणारविन्दभक्त्या कृतां स्तुतिमिमां मम सुन्दरेश ॥ ९ ॥

இவ்வாறு ஸ்தோத்ரம் செய்ததும் ஈசுவரன் ஸந்தோஷமடைந்து வருணனுக்குப் பிரஸன்னராகி என்ன வரம்வேண்டுமென்று கேட்டார். அதற்கு வருணன் தனக்கு இந்திரன் சொல்லிய வரலாற்றையும் தான் கர்வமடைந்து ஸமுத்திரத்தையும், மேகங்களையும் மதுரையை அழிக்க ஏவிவிட்டதையும் சொல்லி தான் புத்திக்குறைவால் செய்தகுற்றங்களை மன்னிக்கும்படி பிரார்த்தித்தான். ஈசுவரன் "அவைகளைப் பொறுத்தோம். உனக்கு ஆகவேண்டியதைக்கேள்" என்றார். அதற்கு வருணன் தனக்கு ஜலோதர வியாதிதான் தீரவேண்டியதென்றும், அது கோபுரவாயில் நுழையும்பொழுதே தீர்ந்துவிட்டதென்றும் வேறுதனக்கு ஆகவேண்டியதொன்றுமில்லையென்றும், ஈசுவரனிடம் தனக்கு எப்பொழுதும் பக்தியிருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டுமென்றும் சொன்னான். ஈசுவரனும் அவ்விதமே அவனை அனுக்ரஹித்து, அவன் செய்த ஸ்தோத்திரமாகிய ஹாலாஸ்யாஷ்டகத்தை எவர் பாராயணம் செய்தபோதிலும் அவர் பீடையெல்லாம் தொலைந்து ஸர்வஸம்பத்தையும் அடைவார்கள் என்று சொல்லிமறைந்தார். ஈசுவரன் விடுத்த நான்கு மேகங்களும் நான்கு கூடமாக (கூடாரமாக) மதுரையைக் காத்ததால் மதுரைக்கு அதுமுதல் சதுஷ்கூடம் (நான்மாடக்கூடல்) என்று பெயர் ஏற்பட்டது.

20. எல்லாம் வல்ல ஸித்தராய் வந்தது.

அபிஷேகபாண்டியன் ராஜ்யபாரம் வஹித்துவரும் நாளில் ஒரு ஸமயம் அவனை அனுக்ரஹிப்பதற்காகவும் ஜனங்களுக்கு க்ஷேமத்தையும் ஐசுவர்யத்தையும் கொடுப்பதற்

காகவும் ஸ்ரீ ஹாலாஸ்யநாதரானவர் 16 வயதுள்ள ஸித்தர்மாதிரியாக ரூபமெடுத்துக் கொண்டு உடம்பு முழுமையும் விபூதியைப்பூசிக்கொண்டு ருத்ராக்ஷமாலையை யணிந்து தலையிலுள்ள ஜடையை ஓர் ஸர்ப்பத்தால் கட்டி கையில் யோகதண்டமும் ஸ்வர்ணமாத்ரைக்கோலும் எடுத்துக்கொண்டு மனோஹரமான ரூபத்துடன் புன்னகை செய்துகொண்டு மதுராபுரியில் எல்லோருக்கும் முன்பாகத் தோன்றினர். அவர் ரூபத்தைக்கண்டதும் அதிலேயேமயங்கி அநேக ஜனங்களவரையணுகினார்கள். அவர் காண்பிவித்த விநோதங்களுக்கு ஓரளவில்லை. கிழவர்களைக் குமரர்களாக்கினர், குமரர்களை கிழவர்களாக்கினர். ஆணைப் பெண்ணாகச்செய்தார், பெண்ணை ஆணாகச்செய்தர். தூரத்திலுள்ளமலையை ஸமீபத்தில் வரச்செய்தார், ஸமீபத்திலுள்ளதை தூரப்போகச்செய்தார். மலடியை பிள்ளை பெறச்செய்தார். இரும்பு செம்புகளை தங்கமாக்கினர். கூன், செவிடு, குருடு, ஊமை, முடம் முதலிய குறையுள்ளவர்களை குறையற்றவர்களாகச் செய்தார். எட்டிமாத்தில் மாங்கனிபழுக்கச் செய்தார். எளியவர்கள் வீட்டில் ஏராளமான தனக்குவியல்களைக் கொடுத்தார். மாங்கள் பட்சிகள், மிருகங்கள் முதலியவற்றை தனது மாத்ரைக்கோலால் தொட்டு ஒன்றை ஒன்றாகமாறும்படி செய்தார். இராக்கலாத்தில் பகலையும், பகலில் இரவையும் தருவித்தார். அக்னிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம் முதலிய விநோதங்களெல்லாம் செய்துகாண்பித்து ஜனங்களைப் பிரமிக்கச்செய்தார். வைகையில் தீடிரென்று பிரவாஹம் வரவழைத்தார். வந்த பிரவாஹத்தை க்ஷணப்பொழுதில் வற்றச்செய்தார். கீழுலகங்களிலும் மேலுலகங்களிலும் உள்ள பொருள்களை யெல்லாம் மதுரையில் வரச்செய்தார். எல்லோர் முன்னிலும் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே திடீரென்று மறைந்து தனது சப்தம் மட்டும் அவர்கள் காதில்விழும்படிச் செய்தார். எதிர்பார்க்காதிருக்கும்போது திடீரென்று கூட்டத்தின் மத்தியில் தோன்றினர். சுருங்கச்சொல்லுங்கால் எல்லாஜனங்களுடயவும் எல்லாப்பிணிகளையும் தீர்த்தார். இவருடைய அதிசயச்செயல்களை யெல்லாம் கண்டு வியந்தஜனங்கள் ஓடோடியும் தங்கள் அரசனிடம் சென்று அவைகளைச் சொல்ல உடனே அபிஷேகபாண்டியனும் தனது வேலைக்காரர்களிற் சிலரை அவரைக் கூட்டிவரும்படி அனுப்பினன். அந்த வேலையாட்கள் அவரிடம் சென்றதும் அவர் செய்த அத்புதகிருத்யங்களைக் கண்டு பிரமித்து தாங்கள் வந்தகாரியத்தை மறந்து ஒன்றும் சொல்லத் தோன்றாமல் தயங்கிநின்றார்கள். போனவர்கள் வாராமையைக்கண்டு அரசனானவன் மந்திரிகளை அழைத்து "நீங்களே நேரில்சென்று அந்த ஸித்தரைக் கூட்டிவாருங்கள்" என்று அனுப்பினன். அவ்வாறே மந்திரிகளும் ஸித்தரிடம் சென்று அவரைவணங்கி ராஜஸபைக்கு தயவு செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அதற்கவர் "உங்கள் அரசனாலே எமக்கு என்ன பிரயோஜனம், எமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை, அதனால் நாம் வரமாட்டோம்" என்று மறுத்துவிட்டார். மந்திரிகளும் திரும்பி அரசனிடம் சென்று ஸித்தர் கூறியதைத்தெரிவிக்க அவ்வரசன் "இஹபரங்களை வெறுத்து அணிமாத்யஷ்டஸித்திகளையும் பெற்ற மஹாயோகிகள் மும்மூர்த்திகளையுமே லக்ஷ்யம் செய்யமாட்டார்களென்றால் என்னைப்போலொத்த அல்பனையாமதிப்பார். நான் அவரை அரண்மனைக்கு வரும்படி சொல்லியனுப்பியது தவறு. நானாகவே அவர் இருக்குமிடத்தில் போய் தர்சிக்கவேண்டும்" என்று ஆலோசித்துக்கொண்டு மறுநாள் ஸித்தரிடம் சென்று அபராதக்ஷமாபனம் செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்தான்.

21. கல்யானையைக் கரும்பருந்தச் செய்தது.

மறுநாள் மகரஸங்கராந்தி தினமாயிருந்ததால் அன்றையதினம் அபிஷேகபாண்டியனானவன் தனது காலைக்கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரரை தர்சித்து பூஜை செய்வதற்காக கோயிலுக்குப் பரிவாரங்களுடன் புறப்பட்டான். கோயிலுக்குள் கர்ப்பக்கிருஹத்திற்குச் சுற்றியுள்ள பிராகாரத்தில் வாயவ்யதிக்கில் இந்திரவிமானத்தைச் சுமந்துகொண்டிருக்கும் திக்கஜத்திற்கு எதிராக அந்த ஸித்தர் த்யானத்தில் உட்கார்ந்திருந்தார். அதற்கு ஸமீபத்தில் அபிஷேகபாண்டியன் வரும்பொழுது முந்திச்சென்ற ராஜகிங்கரர்கள் அந்த ஸித்தரிடம் சென்று அரசன் அந்தவழி வருவதாயும் உடனே எழுந்திருந்து பக்கத்தில் செல்லவேண்டுமென்றும் அதட்டினார்கள். ஸித்தரோ அவர்கள் வார்தனையை சற்றேனும் மதிக்காமல் புன்சிரிப்புடன் அசைவற்றிருந்தார். இதற்குள் அரசனும் ஸமீபித்துவிடவே இந்த ஸித்தரைக்கண்டு வியப்படைந்து பின்வருமாறு வினவினன் "ஹே ஸ்வாமின், தாங்கள் யார், எந்த ஊர், இங்கு எதற்காக வந்தீர்கள், என்ன வித்யை தங்களுக்குத தெரியும், என்ன சக்திகள் அப்யாஸம் செய்திருக்கிறீர்கள்? எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்றான். இதைக்கேட்ட ஸித்தர் சொன்னதாவது "நான் ஒரு ஸித்தன், எனக்கு ஊர் கிடையாது, இஷ்டப்படி ஸஞ்சரிப்பவன், பிக்ஷை வாங்கி சாப்பிடுகிறவன், இதற்கு முந்தி காஷ்மீரத்திலிருந்தேன், அங்கிருந்து காசி க்ஷேத்ரத்திற்கு வந்து பிறகு சிவக்ஷேத்திரங்களையெல்லாம் தர்சனம் செய்துகொண்டு காலக்ரமேண இந்த ஹாலாஸ்யத்திற்கு வந்துசேர்ந்தேன். இங்கு ஸ்ரீ ஹாலாஸ்யநாதரை தர்சனம் செய்து இங்குள்ள ஜனங்களுக்கு எனது அத்புதச்செயல்களைக் காண்பித்து அவர்கள் அபேக்ஷிப்பவைகளையெல்லாம் அவர்களுக்கு கொடுப்பதற்கு இங்கு தங்கியிருக்கிறேன். எனக்குத் தெரியாத வித்யைகள் கிடையாது. என்னிடம் இல்லாத சக்திகள் கிடையாது. எனக்கு ஆக்ஞாஸித்தன் என்று பெயர். உனக்கு ஏதாவது ஆகவேண்டியிருந்தால் சொல்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசன் இவர் ஒன்றையும் லக்ஷியம் செய்யாமலிருப்பதைக்கண்டு வியந்து இவரைப் பரீக்ஷிக்கக் கருதி அப்பொழுதுதான் மஹாராஜாவைக் காணவந்த ஒரு குடியானவன் கொண்டுவந்திருந்த மிகப் பருத்த நீண்ட ஒரு செங்கரும்பை தன் கையில் வாங்கி ஸித்தரை நோக்கி "தங்களுக்கு எல்லா ஸித்தியும் இருக்கிறது நிஜமாயிருந்தால் எதிரில் தோன்றும் இந்திரவிமானத்தைச் சுமந்துகொண்டிருக்கும் கல்யானையை இந்தக் கரும்பை சாப்பிடச் செய்வீர்களேயானால் நான் தங்கள் இஷ்டம் யாவற்றையும் பூர்த்தி செய்விக்கிறதுமன்னியில் தங்களையும நாதனாக ஏற்றுக் கொள்கிறேன்" என்றான். இதைக் கேட்டு ஸித்தரும் மந்தஹாஸம் செய்துகொண்டு, "ஹே ராஜனே, உனக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறேன் என்று நீ சொல்லும் வார்த்தைகளுக்கு அர்த்தமில்லை. என்னுடைய சக்திகளால் எனக்கில்லாத ஐசுவர்யம் உன்னிடம் ஒன்றுமில்லை. நான் அபேக்ஷிக்கிறதெல்லாம் என்னிடமிருக்கின்றன. இருந்தாலும் என்னுடைய சக்தியை உனக்கு காண்பிக்கிறேன். பார்" என்று சொல்லி தன் கண்களால் எதிரிலிருந்த கல்யானைக்கு ஜாடை காண்பிக்கவே அக்கல்யானையும் உயிருள்ள யானைபோல் உடனே தன் துமபிக்கையை நீட்டி அரசன் கையிலிருந்த கரும்பைப் பிடுங்கித் தின்றுவிட்டது. அத்துடன் நிற்காமல் அரசன்கழுத்தில் போட்

டிருந்த ஹாரங்களை தாமரைத் தண்டுகளோ என்கிற சங்கையினால் தும்பிக்கையால் இழுக்கவாரம்பித்தது. அரசன் பக்கத்திலிருந்தவர்கள் ஹா ஹா என்று தடுத்தும் ஸித்தருடைய ஆக்ஞையானதால் அந்த யானையானது கம்பீரமாக கர்ஜித்துக்கொண்டு அரசனின் கழுத்திலிருந்த மாலைகளையிழுத்து சாப்பிட்டுவிட்டது. உடனே அரசனுக்கும் அவன் பரிவாரங்களுக்கும் மிகக்கோபமுண்டாய் அவ்விராஜகிங்கரர்கள் சிவந்த கண்களுடனும் ஓங்கின கைகளுடனும் அந்த ஸித்தரையடிப்பதற்காக அவரை நெருங்கியதும் அவர் சற்றேனும் திகைக்காமல் தன்னுடைய சக்தியால் அவர்களை அப்படியே அசைவற்று கல்போல் நிற்கச் செய்துவிட்டார். இதைக்கண்ட அரசன் கோபம் தெளிந்தவனாய் பயமுற்று ஸித்தரை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தான் செய்த அபராதத்தை க்ஷமிக்கவேண்டுமென்று திரும்பத்திரும்ப மன்றாடிப் பிரார்த்தித்துக் கொண்டு பாவசனாக கல்தூண் போல் அசைவற்று நின்றான். இவ்வாறு பக்தியோடும் பயத்தோடும் நிற்கும் அரசனைக்கண்டு வேண்டிய வரத்தைக் கேட்கும்படி ஸித்தர் சொன்னார். உடனே அரசன் மறுபடி ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அஞ்சலிபத்தனாய் தனக்கு எல்லா குணங்களும் பொருந்திய ஒரு புத்ரன் வேண்டுமென யாசித்தான். அவ்வாறே கொடுத்தோம் என்று சொல்லி ஸித்தரானவர் அந்தக் கல்யானையின் வாயில் தனது கையை விட்டு அரசனது ஹாரங்களை எடுத்து அவனிடம் கொடுத்து அவனை ஆசிர்வதித்து தனது கைகளால் அவனை தடவிக்கொடுத்து உடனே அந்தர்த்தானமானார். இதைக்கண்ட அபிஷேகபாண்டியனும் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் தான் இம்மாதிரி திருவிளையாடல் செய்திருக்கிறார் என்று நிச்சயித்துக்கொண்டு கர்ப்பக்கிருஹத்திற்குள் சென்று மூலலிங்கத்தை தர்சித்துப் பின்வருமாறு ஸ்தோத்ரம் செய்தான்.

परिपूर्णपरानन्द परचित्सत्यविग्रह । सुन्दरेश्वर सर्वज्ञ त्राहि मामपराधिनम् ॥ १ ॥

फालाक्षिजातज्वलन परिलीढमनोभव । जीवन्मुक्तिपुरीनाथ त्राहि मामपराधिनम् ॥ २ ॥

पारिजातगुणातीतपादपङ्कजवैभव । कदम्बकाननाध्यक्ष त्राहि मामपराधिनम् ॥ ३ ॥

भक्तप्रार्थितसर्वार्थकामधेनो पुरान्तक । करुणावरुणावास त्राहि मामपराधिनम् ॥ ४ ॥

कैवल्यदाननिरत कालकूटभयापह । कन्यकानगरीनाथ त्राहि मामपराधिनम् ॥ ५ ॥

कमलापतिवागीशशचीशप्रमुखामरैः । परिपूजितपादाब्ज त्राहि मामपराधिनम् ॥ ६ ॥

पञ्चास्य पन्नगाङ्काङ्ग परानन्दप्रदायक । पर्वताधीशजामातस्त्राहि मामपराधिनम् ॥ ७ ॥

परात्परपदाम्भोजपरिध्यानरतात्मनाम् । काङ्क्षितार्थप्रदस्त्वं हि त्राहि मामपराधिनम् ॥ ८ ॥

अपराधाष्टकस्तोत्रं यः पठेत्तव संनिधौ । तस्यानन्तापराधं च क्षमस्व करुणानिधे ॥ ९ ॥

இவ்வாறு ஸ்ரீ ஸுந்தரேசுவரரை ஆராதித்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான். பிறகு நாளடைவில் அந்த ஸித்தர் வாக்கப்படி விக்ரமபாண்டியனென்று ஒரு புத்ரன் பிறந்தான். அப்புத்ரனுக்கு வயது வந்ததும் அவனிடம் ராஜ்யத்தை ஒப்பிவித்துவிட்டு அபிஷேகபாண்டியனும் கைவல்யபதவியை அடைந்தான்.

22. சமணர்கள் அனுப்பிய யானையைக் கொன்றது.

தன்னுடைய பெயருக்கேற்ப மிகுந்த பராக்ரமத்துடன் நீதிநெறி தவறாமல் ஸதா ஸர்வகாலமும் சிறந்த ஈசுவரபக்தியுடன் விக்ரமபாண்டியன் தனது நாட்டையாண்டுவந்தான். கோயிலில் மூலப்ராகாரத்தில் வாயவ்யதிக்கில் ஓர் ஸந்நிதியுண்டாக்கி அங்கு ஆக்ஞாஸித்தரை பிரதிஷ்டைசெய்து அவருக்கு மஹத்தான பூஜைகளைச் செய்து ஆராதித்து வந்தான். இச்சமயத்தில் காஞ்சீபுரம் தேசத்திலுள்ள சோழராஜனானவன் விக்ரமபாண்டியனின் பராக்ரமத்தையும் அவன் நாட்டின் செழிப்பையும் கேள்விப்பட்டு அவனை நேராக எதிர்த்து யுத்தத்தில் ஜயிக்கமுடியாதென்பதை நன்கறிந்து வேறு எந்த உபாயத்தால் அவனை ஜயிக்கலாமென்று பலவாறு ஆலோசித்தான். கடைசியில மந்திரம் தெரிந்தவர்களைக்கொண்டு அவன் மேல் மந்திரப்ரயோகங்கள் செய்யச்சொல்லி அதனால்தான் அவனை ஜயிக்கவேண்டுமென்று நிச்சயித்து அதற்காக மந்திரசாஸ்திரத்தில் மிகவும தேர்ந்தவர்களான சமணர்களை நாலாபக்கங்களிலிருந்தும் தருவித்து, அவர்களிடம் தனது அபிலாஷையைத் தெரிவித்தான். அவர்களும் உடனே அதற்காகவேண்டிய ஸாமக்ரியைகளையெல்லாம் சேகரிதது ஒரு கோரமான ஆபிசாரஹோமம் செய்யவாரம்பித்தார்கள். அந்த ஹோமகுண்டத்தினின்றும் ஒரு மஹத்தான மதம்பிடித்த யானை யொன்று பூதத்தை யொப்ப பயங்கரமானதாய் வெளிக்கிளம்பிற்று. அதை மதுராபுரிக்குச் சென்று அந்நகரை யழிக்கும்படி ஏவினார்கள். அதுவும் அவ்வாறே தெற்கே சென்றது. இது ஸங்கதியைச் செவியுற்ற விக்ரமபாண்டியன் உடனே கருணாநிதியாயும் தனக்கு நாதனுயுமுள்ள ஸோமஸுந்தரரிடம் சென்று பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து ஸ்தோத்ரித்து அஞ்சலிபத்தனாய் "ஹே தீனபந்தோ, சமணர்களால் ஆபிசாரமந்திரங்களால் உண்டுபண்ணப்பட்ட மதம்பிடித்த யானையானது மலைபோலாகிருதியுடன் மதுராபுரியை யழிக்க வெண்ணங்கொண்டு ஈசான்யதிக்கில் வந்துகொண்டிருக்கிறது. இதற்கு நான் என்ன செய்யவேண்டியது. என்னை இந்த ஆபத்தினின்றும் நொடிப்பொழுதில் காத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். தயாநிதியான ஸுந்தரேசுவரரும் அசரீரவாக்கு மூலமாய் விக்ரமபாண்டியனுக்குச் சொன்னதாவது: "நீ சற்றேனும் பயப்படவேண்டாம். வெளிப்பிராகாரத்துக்கு ஸமீபத்தில் கிழக்குதிக்கில் ஓர் உயர்ந்தஸ்தானத்தில் அட்டாலமண்டபம் என்று சொல்லப்படும் 16 கால் மண்டபம் ஒன்று உடனே கட்டுவித்தயேயானால் நாம் அங்கு தனுஷ்பாணியாய் வந்து அந்த யானையைக் கொல்வோம்" என்றார். இதைக்கேட்ட பாண்டியனும் மிகக்களிப்புடன் அவ்வாறே பூர்வதிக்கில் உயர்ந்தவிடத்தில் ஒரு பதினாறுகால் மண்டபம் நொடிப்பொழுதில் கட்டிமுடித்தான். அதை வெகுவாக சிங்காரித்து அதன் மத்தியில் ஒரு மேடையும் போட்டுவித்து அதை தங்கத்தகடுகளால் மூடினான். உடனே ஸ்ரீ ஹாலாஸ்யநாதரும் ஒரு வேடன் மாதிரியான வேஷத்தை தரித்துக்கொண்டு வில்லும் கையுமாய் அந்த மண்டபத்தின் நடுவில் தோன்றி அங்கிருந்தபடியே பத்துமைல் தூரத்தில் வந்துகொண்டிருந்த அந்தயானையின் பேரில் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நாஸிம்ஹாஸ்திரத்தை ப்ரயோகம் செய்தார். அந்த அஸ்திரமும் அந்த யானையின் பிராணனை யபஹரிதது விட்டு அதை யானைமலையென்று சொல்லப்படும் கல்மயமாகச செய்து அதனடிவாரத்திலேயே ஈசுவரனின் உத்தரவுப்படி நாஸிம்ஹரூபத்தை தரித்துக்கொண்டு இன்றைக்கும் மஹா

ஸாந்நித்யத்துடன் விளங்கிவருகிறது. ரோமசமஹர்ஷியும் அங்கு தன் பெயரால் ஒரு குளத்தையுண்டாக்கி அதில் ஸ்நானம் செய்து தபஸ் செய்து அநேகஸித்திகளைப் பெற்றார். விக்ரமபாண்டியனுமங்கு சென்று மலைபோல வந்தயானையானது யானைமலையாக மாறிவிட்டதைக்கண்டு ஸந்தோஷித்து அங்கிருந்த நரஸிம்ஹரை நமஸ்கரித்துவிட்டுத்திரும்பி வந்து அட்டால மண்டபத்தின் நடுவிலிருந்த கிராதகவீரனை ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப்பின் வருமாறு ஸ்தோத்ரம் செய்தான்—

कल्याणाचलकोदण्डकान्तदोर्दण्डमण्डितम् । कलम्बीकृतकंसारिं कलयेऽट्टालसुन्दरम् ॥ १ ॥

कालकूटप्रभाजालकलंकीकृतकन्धरम । कलाधरकलामौलिं कलयेऽट्टालसुन्दरम् ॥ २ ॥

कालकालं कलातीतं कलावन्तं च निष्कलम । कमलापतिसंस्तुत्यं कलयेऽट्टालसुन्दरम् ॥ ३ ॥

कान्तार्धकमनीयाङ्गं करुणामृतसागरम । कलिकल्मषदोषघ्नं कलयेऽट्टालसुन्दरम् ॥ ४ ॥

कदम्बकाननाधीशं काङ्क्षितार्थसुरद्रुमम् । कामशासनमीशानं कलयेऽट्टालसुन्दरम ॥ ५ ॥

सृष्टानि मायया येन ब्रह्माण्डानि बहूनि च । रक्षितानि हृतान्यन्ते कलयेऽट्टालसुन्दरम् ॥ ६ ॥

स्वभक्तजनसंतापपापापद्भङ्गतत्परम् । कारणं सर्वजगतां कलयेऽट्टालसुन्दरम् ॥ ७ ॥

कुलशेखरवंशोत्थभूपानां कुलदैवतम् । परिपूर्णचिदानन्दं कलयेऽट्टालसुन्दरम् ॥ ८ ॥

अट्टालवीरश्रीशंभोरष्टकं परमिष्टदम् । पठतां शृण्वतां सद्यस्तनोति परमां श्रियम् ॥ ९ ॥

பிறகு அந்தமண்டபத்திலந்தரூபத்துடனேயே எப்பொழுதும் பிரஸன்னராயிருக்கும்படி அரசன் வேண்ட அதற்கு இணங்கி அவனை அநுக்ரஹித்து விட்டு ஈசுவரன் அந்தர்த்தானமானார். கொஞ்சகாலமானபின் விக்ரமபாண்டியனுக்கு ராஜசேகரபாண்டியனென்று ஒரு புத்ரன் பிறந்தான். அவனுடன் வெகுகாலம் ஸுகமாக ராஜ்யபாரம் செய்து கடைசியில் அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு சிவலோகமடைந்தான்.

23. பிராம்மணப் பெண்ணின் கஷ்டத்தை நிவர்த்தித்தது.

மதுராபுரியில் விரூபாக்ஷனென்று ஒரு பிராமணனிருந்தான். அவன் மிகச்சிறந்த சிவபக்தன். எப்பொழுதும் ஈசுவரனை தியானம் செய்துகொண்டிருந்தான். அவனுக்கு ஈசுவரனுடைய அநுக்ரஹத்தால் ஒரு பெண்குழந்தை பிறந்தது. அதற்கு கௌரீயென்று பெயரிட்டு மிகச் செல்வமாய் வளர்த்து வந்தான். அக்குழந்தையும் பால்யம் முதலே மிகவும் பக்தியுடன் கூடியிருந்தது. அதன் ஐந்தாவது வயதில் ஒருநாள் அப்பெண்குழந்தையானது தனது தகப்பனாரிடம் சென்று தனக்கு கௌரீமந்திரம் உபதேசம் செய்யவேண்டுமென்று கேட்டது. இதைக்கண்டு மிகவுமாச்சர்யம்கொண்டவனாய் விரூபாக்ஷனவன் அந்தச்சிறு குழந்தைக்கு எல்லா பலனையும் கொடுக்கக்கூடிய ஸாக்ஷாத்பராதேவதையினுடைய மந்த்ரமாகிய ஏகாக்ஷரத்தை விதிப்படி ஸாங்கோபாங்கமாக உபதேசித்து அம்பாளை த்யானம் செய்யும் வழியையும சொல்லிக்கொடுத்தான். அவ்வழியையே அப்பெண்ணும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஸதா ஏகாக்ஷரமந்திரத்தை ஜபிக்கிறதும் அம்பாளை த்யானம் செய்வதுமாயிருந்தாள். அதிசீக்கிரத்தில் அந்த மந்திரமும் அவளுக்கு ஸித்தியாய்விட்டது. பெண்ணு

க்கு வயது எட்டானதும் கன்யாதானம் செய்துகொடுக்கவேண்டியது பிதாவின் கடமையாதலால் அந்த விரூபாக்ஷன் தனது தபஸ்ஸைவிட்டு இப்பெண்ணுக்கு வரன்தேடிக்கொண்டு வெளிகளில்போக மனமில்லாதவனாய் தன் கிருஹத்திற்கு பிக்ஷைக்கு வருகிற பிரம்மசாரிப் பையன்களுள் புத்திசாலியாயும் வர்ச்சஸ்வியாயும் வேதாத்யயனம் செய்தவனாயுமுள்ளவனுக்குக் கொடுத்துவிடுவதாகத் தீர்மானித்தான். அதே மாதிரி ஒருநாள் ஒரு பிரம்மசாரி பையன் ஸர்வலக்ஷணமும் கூடினவனாய் வேதம் சொல்லிக்கொண்டு பிக்ஷைக்கு வந்தான். உடனே விரூபாக்ஷன் அந்தப்பையனுக்குத் தன்பெண் கௌரியைக் கல்யாணம் செய்துகொடுத்துவிட்டான். பிறகு அவன் குலம் கோத்ரம் விசாரித்ததில் எலலாம் நல்லதாகவே இருந்த போதிலும் பையன் வைஷ்ணவப்பையனாகவிருந்தான். இருந்தபோதிலும் அவனிடம் பலகுணங்களிருந்தமையால் இந்த ஒன்றை கவனிக்காமல் கல்யாணம் யதோக்தமாய் முடிந்தது. சிறிது நாள் சென்றதும் அந்த வைஷ்ணவப்பையன் கௌரியையுமழைத்துக் கொண்டு தன்னூருக்குச் சென்றான். அங்கு அவனுடைய பெற்றோர்கள் அவன் கல்யாணம் செய்துவந்த பெண்ணின் ரூபலாவண்யத்தையும் சீரையும் கண்டு மெச்சினார்களென்றாலும் பெண் எப்பொழுதும் அம்பாள் மந்திரம் ஜபிப்பதிலும் சைவகுலம் என்பதிலும் நிரம்பவும் வருத்தப்பட்டார்கள். அப்பெண்ணை தங்கள் கிருஹத்தில் ஒன்றையும் தொடக்கூடாதென்று தனியாக ஓரிடத்தில் இருக்கச் செய்தார்கள். இது அப்பெண்ணுக்கு மிகச் சந்தோஷத்தையே உண்டாக்கிற்று. ஏனெனில் எப்பொழுதும் தான் தனிமையில் ஸாக்ஷாத்பரதேவதையை தியானம் செய்வதற்கும், பூஜை ஜபம் முதலானவை செய்வதற்கும் அது மிகவுமனுகூலமாயிருந்தது. ஆனால் விபூதிருத்ராக்ஷம் தரித்தவர்கள் முகத்தையே பார்ப்பதற்கில்லாமலும் ஈசுவரன் கோவிலுக்குப் போவதற்கில்லாமலும் இருக்கிறதேயென்று அதிக வருத்தத்துடன் காலம் கழித்தாள். ஒரு ஸமயம் இப்பெண்ணை அந்த வீட்டில் தனிமையில் விட்டுவிட்டு இவள் மாமியார் மாமனார் பர்த்தா முதலியவர்கள் அயலூருக்கு ஒரு கல்யாணத்திற்காகப் போயிருந்தார்கள். அச்சமயம் ஈசுவரனானவர் கிழப்பிராமண வேஷம் பூண்டு விபூதிருத்ராக்ஷதாரியாய் கையில் தடியூன்றிக்கொண்டு சிவசிவ என்று ஜபித்துக்கொண்டு அவ்வீட்டிற்கு வந்தார். இந்த சிவநாமஜபம் கேட்டதும் கௌரிக்கு உண்டான ஸந்தோஷத்துக்கு அளவில்லை. ஓடோடியும் வந்து அக்கிழவரை நமஸ்கரித்து அர்க்யபாத்யாதிகள் கொடுத்து "தாதா, என்னவேண்டும்" என்று கேட்டாள். அக்கிழவர் தனக்கு அதிகப் பசியாயிருக்கிறதென்றார். அரிசிபருப்பு முதலியன வைத்திருக்கும் உக்கிராண உள்ளை தனது மாமியார் பூட்டித் திறவுகோலைக் கொண்டுபோய்விட்டாளே என் செய்வேன் என்று வருத்தப்பட்டாள் அப்பெண். "பாதகமில்லை. நீ ஸமீபத்தில் போனதுமே கதவுகள் திறந்துகொள்ளும்" என்றார் கிழவர். அம்மாதிரியே கௌரியைக் கண்டதும் கதவுகளெல்லாம் திறந்துகொண்டன. உடனே மிகவும் உத்ஸாஹத்துடனும் பரபரப்புடனும் கௌரியானவள், க்ஷணப்பொழுதில் சமையலெல்லாம் செய்துமுடித்து வாசல் கதவைசாத்தி உள்தாப்பாளிட்டு கிழவருக்கு இலைபோட்டு சாப்பாடு செய்து வைத்தாள். சாப்பிட்டு முடிந்ததும் கிழவராயிருந்த பிராமணர் நல்ல யௌவன புருஷராக அழகிய வடிவத்துடன் மாறி வெற்றிலை பாக்கு கேட்டார். இதைக்கண்ட கௌரீ பயந்து ஒதுங்கி நின்றாள். இச்சமயத்தில் வாசலில் கௌரியின் மாமியும் மாமனாரும் வந்து கதவை தட்ட

வாரம்பித்தார்கள். அப்பொழுது கௌரியின் மனநிலையிருந்த விதத்தை சொல்ல வொண்ணாது. ஒன்றும் செய்யத் தோன்றாமல் திகைத்து நின்றாள். வாசலில் மாமியார் தனக்கு உடனே கதவைத் திறக்கவில்லையென்று மிகுந்த கோபம்கொண்டவளாய் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்தாள். அச்சமயம் யௌவன புருஷனாக விருந்த ஈசுவரனவர் மிகச் சிறுகுழந்தையாக மாறி படுத்தவண்ணமே தனது இருகைகளாலும் கால் கட்டவிரலை வாயில் வைத்துக்கொண்டு கௌரியைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தார். அக்குழந்தையைப்பார்த்ததும் மாமியார் "இது யாருடையகுழந்தை" என்றாள். கௌரிக்கு இன்னது சொல்வதென்று தெரியாமல் "தேவதத்தனின் குழந்தையிது. அவனும் அவன் பத்தினியும் எங்கேயோ போய் வரவேண்டுமென்றும் தாங்கள்வரும் வரையில் இக்குழந்தையை சற்று பார்த்துக்கொள் என்றும் சொல்லி இங்கு விட்டுப்போனார்கள்'' என்றாள். இதைக் கேட்டதும் அடக்கமுடியாத கோபத்துடன் அந்த மாமியார் "ஊரார் பிள்ளையைப்பார்த்துக்கொண்டிருக்கிறதற்குத்தானா நீ இங்குவந்திருக்கிறாய். இந்தக்குழந்தையையும் தூக்கிக்கொண்டு ஓடிப்போ நீ வெளியே'' என்று அதட்டி அவளை அக்குழந்தையுடன் வெளியே தள்ளி விரட்டிவிட்டாள். கௌரியும் அக்குழந்தையை கட்டியணைத்துக்கொண்டு நடுவீதியில் நின்று செய்வதின்னதென்று தெரியாமல் தவிக்கையில் அவள் கையிலிருந்த குழந்தை ஸாக்ஷாத் ஈசுவரனாக மாறி ரிஷபாரூடராக அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கெல்லாம் தர்சனம் கொடுத்து கௌரியையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு அந்தர்த்தானமானார்.

24. கால்மாறி அத்புதத்தாண்டவமாடியது.

ராஜசேகரபாண்டியன் வெகுகாலம் பாண்டிய நாட்டை யரசாண்டுவரும் நாளில் அவன் 64 கலைகளுள் 63ல் தேர்ந்தவனாய் பாதநாட்டியம் மட்டும் கற்றுக்கொள்ளாமலிருந்தான். ஏனெனில் வெள்ளியம்பலத்தில் ஸாக்ஷாத் ஈசுவரன் செய்யும் நர்த்தனத்தைத் தான் செய்வது ஸரியல்ல வென்றிருந்தான். ஒருஸமயம் சோழநாட்டிலிருந்து வந்த ஒரு வித்வான் ராஜசேகரபாண்டியனை நோக்கி "எங்களரசனாகிய கரிகாலச்சோழனுக்கு 64 கலைகளிலும் பூர்ணமான ஞானம் இருக்கிறதே. தங்களுக்கு 63 தானே தெரியும். ஆதலால் ஞானத்தில் தாங்கள் எங்களரசனுக்குத் தாழ்ந்தவர்தானே'' என்றான். இதைக்கேட்டதும் ராஜசேகரனுக்கு மிகவும் வெட்கமும் ரோஷமும் உண்டாச்சுது. உடனே அக்குறையை நிவர்த்தித்துக்கொள்ள யத்தனித்தான். பாதநாட்யத்தில் தேர்ந்த அநேக வித்வான்களைத் தருவித்து அதை அப்யஸிக்கவாரம்பித்தான். ஆனால் அதைச் சற்று அப்யாஸம் செய்வதற்குள்ளேயே ஒருகாலில் நிற்பதால் அவனுக்கு மிகுந்தசிரமம் உண்டாயிற்று. சிறந்த ஈசுவரபக்தனாதலால் பின்வருமாறு ஆலோசிக்கலானான். "சற்றுநேரம் நடனம் செய்வதற்குள்ளாக ஒருகாலில் சரீரபாரத்தை முழுவதும் சுமத்துவதால் நமக்கு இத்துணை வலியுண்டாயிற்றே, ஈசுவரனோ ஓயாமல் ஸதாஸர்வகாலமும் ஒரு காலாலேயே நர்த்தனம் செய்கிறாரே. அவருக்கு எவ்வளவு வலியிருக்காது. அவருடைய பக்தனாயிருந்துகொண்டு நாம் அதைப்பார்த்துக்கொண்டிருக்கலாமா'' என்று எண்ணி சிவராத்ரியன்றையதினம் அர்த்தராத்திரியில் கோயிலுக்குள்ளிருக்கும் ரஜதஸபைக்குச்சென்று ஈசுவரன் செய்யும் ஆநந்தத்தாண்டவத்தை தர்சனம் செய்து சற்று நேரத்துக்கெல்லாம் ஆநந்தக்கண்ணீர்

பெருக்கிக்கொண்டு ஈசுவரனைநோக்கி "ஹே, ஸ்வாமின், தாங்கள் எப்பொழுது பார்த்தா லும் இடதுகாலையே தூக்கிக்கொண்டு வலதுகாலையே ஊன்றிக்கொண்டு ந்ர்த்தனம் செய் கிறீர்களே. தங்களுக்குக் கால் எவ்வளவு வலியுடனிருக்கும். இப்பொழுது நான் பரதநாட் டியம் அப்யஸிக்கவாரம்பித்த பிறகுதான் இது விஷயம் தெரிந்தது. நான் தங்கள் சிரமத் தைக் காணப்பொருத்திரேன். ஆதலால் தாங்கள் சற்று சிரமபரிஹாரமாக இடதுகாலை யூன்றி வலதுகாலைத் தூக்கி யாடவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன். இல்லையேல் என் சிரஸை வெட்டிவிடுவேன்" என்று சொல்லி தனது பட்டாகத்தியை உருவி ஈசுவரன் பாதத்தில் வை த்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். அரசனின் பக்தியையும் அவனது மன உறுதியை யும் கண்ட நடராஜமூர்த்தியானவர் அவன் நமஸ்கரித்து எழுந்திருப்பதற்குள்ளாக காலை மாற்றித் தாண்டவமாடவாரம்பித்தார். அரசன் எழுந்திருந்து இந்த அத்புதக் காக்ஷியைக் கண்டு வியந்து ஈசுவரனை வெகுவாக ஸ்தோத்ரம் செய்து மதுரையில் வெள்ளியம்பலத்தில் எப்பொழுதும் இம்மாதிரியே தர்சனம் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்ப டியே ஈசுவரனால் அனுக்ரஹிக்கப்பெற்று அரசன் அரண்மனை போய்ச்சேர்ந்தான். பிறகு அவனுக்கு குலோத்துங்கபாண்டியனென்று ஒரு புத்ரன் பிறந்தான். அவனுக்கு வயது வந்ததும் அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து ராஜசேகரன் சிவலோகம் சென்றான்.

25. பிராமணபத்நீ இறந்தவிதத்தைக் காண்பித்தது.

குலோத்துங்கபாண்டியன் ராஜ்யமாண்டுவரும் நாளில் ஒருஸமயம் திருப்புத்தூரி லிருந்து ஒரு பிராமணன் தன் மனைவியுடனே கைக்குழந்தையையுமெடுத்துக்கொண்டு காடுகடந்து மாமனிருக்கிற மதுராபுரியை நோக்கி வரும்பொழுது வழியிலே தாகத்துக்கு நீர் வேண்டுமென்று வருந்திய மனைவியை குழந்தையுடன் ஒரு பெரிய ஆலமரத்தின் நிழ லிலே களைப்பாரப் படுத்திருக்கச் செய்து தான் நீர்தேடிச் சென்றான். அடர்ந்த இலைகளை யுடைய அந்த ஆலமரத்தில் வெகுநாளைக்கு முன்பு ஒருவனெய்த அம்பு இலைகளில் தைத்தி ருந்தது. அன்றயதினம் அந்தப் பிராமணப்பெண் அதனடியில் வந்து படுத்து சிரமத்தால் கண்ணயர்ந்ததும் ஒரு காற்றுலைக்கப்பட்டு அவ்வம்பானது அவ்விலைகளினின்றும் விடு பட்டு கீழே அதற்கு நேராகப் படுத்திருந்த பிராமணப் பெண்ணின் மார்பில் தைத்து அத னால் அவள் பிராணனையிழக்கும்படி நேர்ந்தது. அதே சமயத்தில் அம்புகோத்த வில்லை யுடைய ஒருவேடன் வெயிலுக்கொதுங்க நிழல்தேடிவந்து அந்த மரத்தின் நிழலிலே ஒரு பக்கத்திலிளைப்பாற நின்றான். தண்ணீர் கொண்டுவரப்போன பிராமணன் குளங்கண்டு தண் ணீரெடுத்துக்கொண்டு அந்த ஆலமரத்தடியில் வந்து தன் மனைவியைப் பார்த்ததும் அவள் இறந்துகிடப்பதைக்கண்டு கதறி யாதுகாரணத்தாலிறந்தாளென்று கவனிக்கையில் கூர்மை யான அம்புதைத்து இறந்திருப்பதையறிந்து யார் அம்பு எய்திருப்பார்களென்று சுற்று முற்றும் பார்க்கையில் அங்கு நிழலுக்காக ஒதுங்கியிருக்கும் வேடனைக்கண்டு அவன்தான் செய்திருக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு அவனைப்பிடித்து இழுத்து அடித்துக் கேட்டான். அதற்கு அவன் இறந்துகிடக்கும் பெண்ணைப் பார்த்து மிகவுமாச்சர்யமடை ந்து தான் ஒருபாவமுமறியேனென்று எவ்வளவு சொல்லியும் அந்த பிராமணன் கேளாமல் அவனையுமிழுத்துக்கொண்டு தன் பத்னியின் சவத்தையும் கைக்குழந்தையையும் எடுத்துக்

கொண்டு மதுரைக்கு அரசனின் அரண்மனைக்குச் சென்றான். அரசனிடம் எல்லா விபரத்தையும் சொல்லவே அரசனும் பலவாறாக அவ்வேடனைக் கேட்டும் அவன் தான் நிரபராதி யென்றும் தான் நிழலுக்காக அங்குவந்து ஒதுங்கியவனென்றும் தானச்சமயம் ஒரு அம்பாவது போடவில்லையென்றும் தான் சொல்வதெல்லாம் நிஜமென்றும் ஒரேவிதமாய் சொன்னான். இதைக்கேட்ட மந்திரிகள் அவன் கிராதகனாதலால் நிஜம் சொல்லமாட்டான். அவனை ஸரியானபடி தண்டித்து நிஜத்தை சொல்லும்படி செய்யவேண்டுமென்றார்கள். அதற்கரசன் "அவன் முகத்தைப் பார்த்தால் குற்றவாளியாகவோ பொய்சொல்லுகிறவனாகவோ தோன்றவில்லை. நீங்கள் அவன்மேல் சட்டப்படி நடவடிக்கை நடத்துங்கள்" என்று சொல்லிவிட்டு அந்த பிராமணனை நோக்கி "இனி நீர் மனைவி காலஞ்சென்றதைக் குறித்து வருத்தப்படுவதில் பிரயோஜனமில்லை. இந்த சவத்துக்கு மேலாகவேண்டிய காரியங்களையெல்லாம் செய்துவிட்டுவாரும். அதற்குள் நாமும் இதன் உண்மையைக் கண்டுபிடிக்கிறோம்" என்று சொல்லி அந்த பிராமணனுடைய குழந்தைக்கு போஷணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய உத்தரவுகொடுத்தனுப்பினான். எல்லோரும் சென்றதும் அரசன் தனிமையில் மிக மனவருத்தமுற்றவனாய் ஸ்ரீ ஸுந்தரேசுவரரை தியானித்துத் தனக்கு இதனுண்மையை விளங்கச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். உடனே ஈசுவரனும் அசரீரவாக்கால் அவனுக்குச் சொன்னதாவது. "இந்தப் பட்டணத்துக்கு வெளியில் ஒருபுறத்துள்ள செட்டித்தெருவில் இன்றிரவு ஒரு கல்யாணம் நடக்கிறது. அங்கே நீ அந்த பிராமணனையும் கூட்டிச் சென்றால் எல்லாவற்றையும் உனக்கு தெளியச் செய்கிறோம்" என்றார். அவ்வண்ணமே அன்றிரவு அந்த பிராமணனுடன் மாறுவேடம் பூண்டு அரசனனவன் ஊருக்கு வெளியிலுள்ள கல்யாணவீட்டிற்குச் சென்றான். அங்கே இவர்களுக்குமுன் இரண்டு யமதூதர்கள் வந்து காத்திருந்தார்கள். ஈசுவரனின் அருளால் இவ்விருவர் கண்களுக்குமட்டில் அந்த யமதூதர்கள் தென்பட்டார்கள். அதுவுமன்றி அவர்கள் பேசிக்கொள்வதும் இவ்வரசனுக்கும் பிராமணனுக்கும் காதில் பட்டது. இவர்களிருவரும் ஒருபுறமாயிருந்து அந்தயமதூதர்கள் பேசிக்கொள்வதைக் கவனித்தார்கள். ஒருதூதன் மற்றொருவனைப்பார்த்து தங்களது அரசனாகிய தர்மராஜா இன்றயதினமே இவனுயிரைக்கொண்டு வாருங்களென்றவுத்திரவின்படி உடம்பிலே யாதொருவியாதியுமில்லாதிருக்கிற இந்த மாப்பிள்ளையினுயிரை எவ்விதத்தில் கொண்டுபோவதென்று கேட்க, அதற்கு மற்றொருவன் வழிநடந்த சிரமத்தினால் நிழலுக்கொதுங்கி யிருந்த பிராமணஸ்திரீயை எக்காலத்திலோ மரத்தினிலையில் தைத்துக்கிடந்த அம்பைக்காற்றினால் விழச்செய்து அதைவ்யாஜமாக வைத்து எப்படி அவளுயிரை இன்று காலமே கொண்டுபோனோமோ அதுபோல இக்கல்யாணத்திலே கொட்டுகிற மேளவாத்தியங்களுக்கு மருண்டு கன்றீன்ற பசு கட்டியிருக்கும் கயிற்றை அறுத்துக்கொண்டுபோய் இவன்மேல் பாயச்செய்து இவனுயிரைக்கொண்டுபோவோமென்றான். இவ்வார்த்தைகளைக்கேட்ட அரசனுக்கும் பிராமணனுக்கும் பிராமணஸ்திரீ இறந்த காரணத்தின் உண்மை நன்றாய்த் தெரிந்துவிட்டதென்றாலும் இக்கல்யாணவீட்டில் அந்த தூதர்கள் சொன்னபடி நடக்கிறதாவென்று பார்ப்பதற்காக சற்று தங்கியிருந்தார்கள். சொன்னது சொன்னபடியேநடந்தது. கல்யாணக் கோலமெல்லாம் விபரீதக்கோலமாக மாறிவிட்டது. உடனே அரசன்திரும்பி அரண்மனைக்குச்

சென்று அந்த பிராமணனுக்கு மறுபடிவிவாஹம் செய்துகொண்டு ஸுகமாயிருப்பதற்காக ஏராளமான தனத்தைக்கொடுத்தனுப்பிவிட்டு அந்த வேடனையும் சிறையிலிருந்து விடுவித்து அவனுக்கும் வேண்டியதிரவியம் கொடுத்தனுப்பினன்.

26. பிராம்மணனின் மஹாபாதகங்களைத் தீர்த்தது.

அவந்திதேசத்திலுள்ள ஒரு பிராமணன் மனதை நடுங்கச்செய்யும்படியான மாதிருகமனம் பிதிருஹத்தி முதலிய மஹாபாதகங்களையெல்லாம் செய்துவிட்டு அதன் பலனாக உடுக்கத் துணியில்லாமல் உண்கச் சோறு இல்லாமல் பிரும்மஹத்தி பின்தொடர ஊரூராய் திரியும் காலத்தில் ஏதோ ஜன்மாந்த்ர அதிர்ஷ்டவசத்தால் ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தை அடைந்தான். அங்கே கோபுரவாயிலிலேயே ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரர் வேடவேஷம்பூண்டு ஸல்லாபித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் அந்த பிராமணனுக்கு பாபவிமோசனகாலம் வந்துவிட்டதால் அவர்களிடம் தான் செய்த பாபங்களையெல்லாம் சொல்லி தனக்கு கதி கல்பிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். ஈசுவரனும் மனமிரங்கி அவனுக்கு நல்லகதிக்கு வேறு மார்க்கமில்லையென்றும் ஸுந்தரேசுவரரை மூன்றுவருஷகாலம் விடாமல் ஆராதித்து வந்தால் கடைசியில் அவர் கிருபை செய்வாரென்றும் சொல்லி மறைந்தார். அவ்வண்ணமே மூன்றுவருஷகாலம் ஹாலாஸ்யநாதரை அல்லும் பகலுமாய் ஆராதித்து கடைசியில் சிவலோகமடைந்தான்.

27. குருத்ரோஹியை தண்டித்தது.

ஒருஸமயம் சஸ்திரவித்யையில் மிகவும் தேர்ந்தவரும் மிகச்சிறந்த சிவபக்தருமான ஒரு விருத்தர் பத்னியுடன் மதுரைக்கு வந்து அங்கு ஒரு வித்யாசாலையேற்படுத்தி அதில் அநேகம் பையன்களுக்கு பலவித ஆயுதங்களின் பயிற்சியை கற்றுக்கொடுத்தார். அவரிடம் வாசித்த பையன்களுள் ஸித்தன் என்ற ஒருவன் துர்ப்புத்தி பிடித்து ஆயுதப்பயிற்சியில் தான் நிரம்பத் தேர்ந்தவனாக கர்வங்கொண்டு ஊருக்கு வெளிப்புறத்தில் அவருக்கு போட்டியாய் தான் ஒரு வித்யாசாலையை ஏற்படுத்தி அங்கு அநேகம் பையன்களைச் சேர்த்துக்கொண்டு அவரிடமுள்ள பையன்களையும் கலைக்கவாரம்பித்தான். இதை சிலபையன்கள் அக்கிழவரிடம் போய்சொல்லியும் அவர் மிகவும் ஸத்வகுணமுடையவராதலால் அதை நம்பாமல் தான் வழக்கம்போல் பையன்களுக்கு சிறிதுநேரம் ஆயுதப்பயிற்சி கற்றுக்கொடுப்பதும் மீதியாயுள்ள நேரம் முழுமையும் கோயிலுக்குச்சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரை பிரதக்ஷிண நமஸ்காரங்களால் ஆராதிப்பதுமாக காலத்தைக் கழித்துவந்தார். சிறிதுநாளில் அந்தஸித்தன் என்பவனுக்கு மதம் அதிகரித்து தனதுகுருவின் பத்னியை இச்சிக்கவாரம்பித்தான். பிரதிதினமும் குருவீட்டிற்குபோய் அவர் பத்னியைக்கண்டு தனக்கு அன்று அவகாசம் அகப்படுமா இல்லையாவென்று கேட்பான். அவள் பரமஸாதுவானதால் இவனுடையகெட்டஎண்ணத்தை அறிந்துகொள்ளாமல் தனக்கு தெரியாதென்று பதில் சொல்லிவந்தாள். ஒருதினம் கிழவர் வீட்டிலில்லாத ஸமயத்தில் ஸித்தன் வந்து அந்தம்மாளை கையைப்பிடித்திழுக்கவாரம்பித்தான். உடனே அந்த அம்மாள் சப்தம் செய்து இவனை விரட்டிவிட்டு ஸங்கோசத்தால் பர்த்தாவிடம் இதுவிஷயத்தைச் சொல்லத் தயங்கி

மிகப் பதிவ்ரதையானதால் ஸ்ரீ ஹாலாஸ்யநாதரை தியானித்து அவரிடம் முறையிட்டாள். உடனே ஸ்ரீ ஹலாஸ்யநாதரும் பக்தவத்ஸலரானபடியால் அந்தக் கிழவர் மாதிரியாக உருவமெடுத்துக்கொண்டு அந்த ஸித்தன் இருக்கும் வித்யாசாலைக்குப்போய் அவனைத் தன்னுடன் யுத்தத்திற்கழைத்தார். அவனும் குருவானதால் அவருடன் யுத்தம் செய்யக்கூடாதென்று முதலில் நடித்தானென்றாலும் அந்தரங்கத்தில் அவரைக் கொன்றுவிட்டால் அவருடைய பத்னியை யதேச்சமாய் அனுபவிக்கலாமென்ற கெட்ட எண்ணத்துடன் நிர்ப்பந்தத்தால் ஸம்மதிப்பவன்போல ஸம்மதித்தான். உடனே இருவரும் கத்தியை உருவிக்கொண்டு யுத்தத்திற்கு ஆரம்பித்தார்கள். அங்குள்ள பையன்களெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றார்கள். சிறிது நேரத்தில் அந்தக் கிழவரானவர் அந்தப் பதிவ்ரதா சிரோமணியை பிடித்து இழுத்த கை இதுதானே என்று அவன் கையை வெட்டினர். அவளை கூப்பிட்ட நாக்கு இதுதானே என்று நாக்கை நறுக்கினர். இன்னும் பலவாறாக அவனை சித்ரவதை செய்து கடைசியாக அவன் கழுத்தை அறுத்துவிட்டு திடீரென்று அந்தர்த்தானமானர். இதையெல்லாம் பார்த்திருந்த பையன்கள் மிகவாச்சர்யங்கொண்டு கிழவர் வீட்டிற்கு ஓடிவந்து அவர் எங்கே என்று அவர் பத்னியைக் கேட்டார்கள். அவர் கோயிலுக்கு ஸ்வாமிதர்சனத்திற்கு போயிருக்கிறார் என்று அந்தம்மாள் சொல்ல அவர் வரும்வரையில் காத்திருந்து அவர் வந்ததும் ஸித்தன் வீட்டில் நடந்தவற்றையெல்லாம் சொன்னர்கள். அதைக்கேட்டதும் அவருக்கு ஒன்றும் விஷயம் தெரியாமல் திகைத்து நிற்கையில அவர் பத்னியானவள் ஸித்தனின் கெட்ட எண்ணங்களையெல்லாம் வியக்தமாகச் சொன்னள். மிகவும் ஆச்சரியமடைந்து எல்லாம் ஈசுவரன் செயல், அநாதனுக்கு அவர்தான் பந்து என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்துகொண்டு தன் பத்னியுடன் ஆலயத்துக்குச் சென்று ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை வெகுவாக ஸ்தோத்ரம் செய்து நமஸ்கரித்தார். இதையெல்லாம் செவியுற்ற பாண்டியராஜனும் கோயிலுக்குச் சென்று ஈசுவரனை நமஸ்கரித்துவிட்டு அந்தக் கிழவரை மிகப் பூஜித்து அவருக்கு பலவாறான ஸம்மானங்கள் செய்து உபசரித்தான்.

28. சமணர்கள் அனுப்பிய பாம்பைக் கொன்றது.

குலோத்துங்கபாண்டியனுக்குப் பிறகு அவனுடைய புத்ரனான அநந்தகுணபாண்டியன் அரசாண்டுவரும் நாளில் சமணர்கள் அவனிடம் த்வேஷங்கொண்டு முன்போல் எல்லோரும் ஒருங்குசேர்ந்து மஹத்தான ஆபிசாரஹோமம் செய்தார்கள். அந்தஹோமகுண்டத்திலிருந்து கோரமான ஒரு அஸுரனுண்டானன். அவனை பயங்கரமான ஸர்ப்பரூபமெடுத்துக்கொண்டு மதுராபுரிக்குப்போய்த் தனது விஷத்தால் அந்நகரையழிக்கும்படி ஏவிவிட்டார்கள். அவ்வாறே அந்தஸர்ப்பமானது மிகப்பெரிதான உருவெடுத்துக்கொண்டு மதுரையின் ஸமீபத்தில் வரும்பொழுதே அரசனின் ஸைன்யங்கள்சென்று அதையெதிர்த்து ஹிம்ஸித்தார்கள். உடனே அந்தப்பாம்பானது தன்முகத்தின்வழியாய் ஏராளமான கொடியவிஷத்தைக்கக்கிற்று. அதன்வேகம் பொறுக்கமாட்டாமல் ஜனங்களெல்லாம் அரசனிடம்முறையிட்டு அவனையும் கூட்டிக் கோயிலுக்குச் சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பிரார்த்தித்தார்கள். அவரும் மூலலிங்கத்திலிருந்து வெளிக்கிளம்பி வந்து அந்தப் பாம்பைக் கொன்று கல்லாகச்செய்து தனது ஜடையிலிருந்த சந்திரகிரணங்களை அமிருதம்

வர்ஷிக்கச் செய்து அந்தகோரமான விஷத்தை மதுரமாகச் செய்துவிட்டு அந்தர்த்தானமானார். ஊர் முழுவதும் பரவியிருந்த விஷத்தை மதுரமாகச் செய்ததால் அவ்வூருக்கு அது முதல் மதுராபுரியென்று பெயர் ஏற்பட்டது. கல்லாகப்போன அப்பாம்பையும் நாகமலையென்று இப்பொழுதும் காணலாம்

29. சமணர்கள் அனுப்பிய பசுவை பசுமலையாகச் செய்தது.

இவ்வாறு தங்கள் முயற்சி வீணாகப்போய்விட்டதைக்கண்ட சமணர்கள் மனம் தளராமல் திரும்பவும் ஆபிசாரஹோமம் செய்து இன்னுமொரு அஸுரனையுண்டாக்கி அவனை பசுவின்ரூபத்தையெடுத்துச் சென்று மதுரையையழிக்கும்படி ஏவினார்கள். அவ்வாறே அந்தப் பசுவும் மஹத்தான ரூபமெடுத்துக்கொண்டு தன் கொம்புகளாலும் குளம்புகளாலும் எல்லாவற்றையும் த்வம்ஸம் செய்துகொண்டுவரும் ஸமயத்தில் பாண்டியவரசன் ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பிரார்த்திக்க அவர் தமக்கு முன்னிலையில் படுத்திருக்கும் விருஷபராஜனை அப்பசுவினிடம் போய்வரும்படி யனுப்பினர். உடனே விருஷபராஜனும் ஆகாயத்தையளாவிய பெரிய ரூபத்தையெடுத்துக்கொண்டு அட்டஹாஸத்துடன் அப்பசுவிற்கு எதிரில் வந்ததும் அதைக்கண்டதும் அப்பசுவுக்குக் காமவிகாரம் உண்டாய் ஒன்றும் செய்யாமல் அசைவற்று விருஷபராஜாவைப் பார்த்தவண்ணமே நின்றது. சற்று நேரத்துக்கெல்லாம் அதன் வீர்யம் முழுமையும் தானாகவே வெளிவந்து சோர்ந்து கீழே விழுந்து பிராணனைவிட்டது. உடனே கல்லாக பசுமலையாகமாறிவிட்டது. விருஷபராஜாவும் திரும்பிச்சென்று தனது ஜயத்துக்கு அறிகுறியாக மதுரைக்கு வடபாகத்தில் தனது ஸ்தூலதேகத்தால் விருஷாத்ரி என்னும் மலையை ஜயஸ்தம்பமாதிரி ஏற்படுத்திவிட்டு ஸூக்ஷ்மசரீரத்துடன் திரும்பவும் முன்போல் ஸ்ரீ ஸுந்தரேசுவரருக்கு முன்பாகச் சென்று படுத்துக்கொண்டுவிட்டது.

30. பக்தனுக்காக ஸைந்யங்கள் காட்டியது.

அநந்த குணபாண்டியனுக்குப் பிறகு அவனுடைய புத்ரனான குணபூஷணபாண்டியன் அரசுசெலுத்திவரும் நாளில் அவனுக்கு மிகச்சிறந்த சிவபக்தனாகிய ஸுந்தரஸாமந்தன் என்று பெயருள்ள ஒரு ஸேனாபதி இருந்தான். இந்த ஸேனாபதியினுடைய சிவபக்தியை வர்ணிக்கவொண்ணாது. அவனுக்கு எப்பொழுதும் ஈசுவரன் பிரத்யக்ஷமாக இருந்தார். ஒருஸமயம் காட்டரசன் ஒருவன் மதுராபுரியின்பேரில் படையெடுத்து வருகிறானென்று தெரிந்து குணபூஷணபாண்டியன் ஸேனாதிபதியைக் கூப்பிட்டு கஜானாவிலிருந்து வேண்டிய திரவியத்தை யெடுத்துச் சென்று நல்ல பலிஷ்டர்களாயும் சூரர்களாயுமுள்ள ஜனங்களைப் பலவிடங்களிலிருந்தும் சேகரித்துக்கொண்டுவந்து மிகப்பெரிதான ஒரு ஸேனை தயார்செய்யும்படி ஆக்ஞாபித்தான். ஸுந்தரஸாமந்தனும் அவ்வாறே செய்வதாகச் சொல்லி கஜானாவிலுள்ள திரவியத்தை முழுமையுமெடுத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் தனக்கு அரசன் கொடுத்த ஆக்ஞையைச் சொல்லி தான் அந்தப்பணம் யாவற்றையும் ஈசுவரனை யாராதிப்பதிலும் ஏழையாயுள்ள சிவபக்தர்களின் தாரித்ரியத்தைப் போக்குவதிலும் ஈசுவரனுடைய ஆலயத்தில் ஜீர்ணமான பாகங்களைப் புதுப்பிப்பதிலும் செலவு

ழிக்கப்போவதாகவும் கடைசியில் வேண்டிய சமயத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் தாம் ஸைந்யங்களைக் கொண்டுவந்து சத்ருக்களை ஸம்ஹரிக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்தான். அதற்கு ஈசுவரனும் அனுமதிகொடுக்க அவன் அவ்வாறே திரவியம் முழுமையையும் செலவழித்துவிட்டான். மந்திரிகள் கேட்டதற்கு பலவிடங்களுக்கு மனுஷ்யாள் அனுப்பியிருப்பதாயும் ஸேனைகள் சீக்கிரம் வந்துவிடுமென்றும் சொன்னான். ஆறுமாதகாலமான பிறகு ஒருநாள் அரசன் ஸேனாபதியை வரவழைத்து ஸேனை சேகரித்தாய்விட்டதா என்று கேட்டதற்கு தயாராயிருக்கிறதென்று பதிலுரைத்தான். மறுநாள் அந்த ஸேனையைத்தான் பார்க்கவருவதாக சொல்லி ராஜா ஸேனாபதிக்கு விடைகொடுத்தான். உடனே ஸேனாபதியும் ஆலயத்தினுள் சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரிடம் விருத்தாந்தத்தை சொல்லி அவரால் அபயப்பிரதானம் செய்யப்பட்டவனாய் வீட்டுக்குத் திரும்பினான். மறுநாள் ஸுந்தரஸாமந்தன் ஸூர்யோதயத்திற்கெல்லாம் ஸ்நாநம் ஜபம் பூஜை முதலியவைகளை முடித்துக்கொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரரை த்யானம் செய்துகொண்டு தன்பரிவாரங்களுடன் மெதுவாகத் தன் கிருஹத்திலிருந்து புறப்பட்டு அரண்மனைக்குச் செல்லுகையில் நடுவழியில் அரசனுக்குத்தான் என்ன சொல்வதென்று தயங்கி நிற்கையில் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் கொடுத்த ஆக்ஞையை அனுஸரித்து நந்தி பிருங்கி முதலிய சிவகணங்கள் மஹத்தான ஸைன்யமாய் மாறி பற்பல ஆயுதங்களுடன் பதாதிகளாகவும், குதிரைப்பட்டாளங்களாகவும், யானைப்பட்டாளங்களாகவும் வருவதைக் கண்டு மிகக்களிப்புடன் அரண்மனைசென்று அரசனிடம் ஸைன்யங்களைப் பார்க்கவாலாமென்று தெரிவித்தான். அரசனும் அவ்விதமே வந்துபார்த்து மிகவும் ஆச்சர்யமடைந்து தன் ஸேனாபதியை வெகுவாக மெச்சினான். அச்சைன்யத்தில் நானாதேசத்திய ஜனங்களுமிருந்தார்கள். ஒவ்வொருவரும் மிகவர்ச்சஸ்வியாயும் பராக்ரமசாலியாயுமிருந்தார்கள். அக்குதிரைகளின் வனப்பைசொல்லிமுடியாது. இந்த மஹத்தானஸைந்யத்தின் நடுவில் அவைகளுக்கு நாயகனாக ஒருவன் கம்பீரமான ஒரு குதிரையிலுட்கார்ந்துகொண்டு முக்கியஸ்தர்களாகக் காணப்பட்ட பலர் அவனை சூழ்ந்துகொண்டு நிற்கக்கண்டானரசன். உடனே ஸாமந்தனைக் கூப்பிட்டு அதுயார் என்றுகேட்க ஸாமந்தன், "ஸ்வாமின் இவ்வளவு பெரியஸைந்யம் எங்கிருந்து வந்ததென்றாவது அங்கு மத்தியில் காணப்படுகிறவர் யாரென்றாவது எனக்குத் தெரியாது. எல்லாம் ஸ்ரீ ஸுந்தரேசுவரர்செயல்" என்றான். அரசனும் ஸேனையின் மத்தியில் தோன்றிய மஹாபுருஷனைத்தருவித்து அவரை வெகுவாகஸம்மானித்தான். அவர் திரும்பி ஸேனைக்கு நடுவில் பிரவேசித்ததும் அந்தர்த்தானமாய்விட்டார். அதைக்கண்டு எல்லோரும் திகைத்து நிற்கையில் ஒருதூதன் ஓடிவந்து பாண்டியராஜாவை எதிர்த்துவந்த காட்டுராஜாவை ஒரு ஸிம்ஹம் கொன்று தின்றுவிட்டதென்றான். இதைக் கேட்டதும் குலபூஷணன் மிக ஸந்தோஷத்துடன் ஸாமந்தனை நோக்கி. "நீ சேகரித்த ஸைந்யங்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அவைகள் வந்ததும் நமக்கு ஜயம் வந்துவிட்டது. அவைகளை இனி திருப்பியனுப்பிவிடலாம்" என்றான். உடனே ஸாமந்தன் அச்சைன்யங்களைப்பார்த்து "நீங்கள் யதாஸ்தானம் போய்விடலாம்" என்றுசொல்லவே அவ்வளவு ஸைன்யமும் இருந்தபடியே மறைந்துவிட்டது. இதைக்கண்டு அரசன் ஸாமந்தனின் பக்தியை வேகுவாகக் கொண்டாடி அவனுக்கு ஸர்வாதிபத்யத்தைக் கொடுத்து அவனுடன் கோயிலுக்குச் சென்று ஈசுவரனைப் பலவாறாகத்துதிசெய்து அரண்மனைக்குத்திரும்பினான்.

31. குலபூஷண பாண்டியனுக்கு அக்ஷயமான பணப்பை கொடுத்தது.

முந்திய லீலையில் சொன்னபடி ஸேனாபதியான ஸாமந்தன் கஜானாவிலிருந்த திரவியத்தையெல்லாம் ஒழித்துவிடவே ராஜ்யபாரம் செய்வதற்கும் பிராம்மணர்களைக்கொண்டு யக்ஞயாகாதிகள் நடத்திவைப்பதற்கும் திரவியமில்லாமல் அதனால் காலாகாலங்களில் மழையில்லாமல் ராஜ்யத்தில் துர்பிக்ஷம் ஏற்பட்டது. தேசத்திலுள்ள பிராமணர்கள் ராஜாவின் ஆதரவு குறைந்தமையால் அயலூருக்குச் சென்றார்கள். இதனால் மிகுந்த வியாகுலமுற்றவனாய் குலபூஷண பாண்டியன் கோயிலுக்குச்சென்று ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரரை வெகுவாக பூஜித்து தேசத்திலுண்டாயிருக்கும துர்பிக்ஷத்தை விலக்க வழியேற்படுத்தவேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்தான். அரண்மனைக்குத் திரும்பிவந்து அன்ன ஆகாரமில்லாமல் அதே விசாரமாய் சோர்ந்து தரையில் விழுந்து அயர்ந்தான். அவனுடைய ஸ்வப்னத்தில் ஸ்ரீ ஸுந்தரேசுவரர் பிரஸன்னராகவந்து அவனுக்கு சொன்னதாவது "நீ சிறிதுகாலமாய் பிராம்மணர்களிடத்தில் ஔதாஸீன்யம் வைத்தமையால் இந்த துர்பிக்ஷம் ஏற்பட்டது. இனி அப்படி இல்லாமல் அவர்களை நன்கு ஆராதித்துவா. அதனால் தேசத்துக்கு துர்பிக்ஷம் போய் உனக்கும் ஆயுஸ் ஆரோக்யம் முதலிய எல்லாஸம்பத்தும் உண்டாகும். அதற்காக வேண்டியளவு தனம் இந்தப் பையில் இருக்கிறது. இது அக்ஷயமான பை. எவ்வளவு நீ எடுத்து செலவழித்தாலும இதில் குறைவு ஏற்படாது" என்றுசொல்லி அவனுடைய நெற்றியில் விபூதியைத் தடவி அவனுடைய கையில் ஸ்வர்ணத்திரவியமடங்கிய பையைகொடுத்துச்சென்றார். உடனே அரசன் எழுந்திருந்துகையில் இருந்த பையினால் கனவில்கண்டதெல்லாம் உண்மையென்றுதெரிந்து அந்தப் பையை தலையின்மேல் வைத்துக்கொண்டு ஆநந்தக்கூத்தாடினான். பொழுதுவிடிந்ததும் மந்திரிகளிடம் நடந்தவாலாற்றைச் சொல்லி அந்தப் பையை ஸிம்மாஸனத்தில் வைத்து பூஜை முதலியது செய்து அதிலிருந்து ஏராளமான தனமெடுத்து பிராமணர்களுக்குகொடுத்து தாரித்ரியத்தைத் தலைகாட்டவொண்ணாமல் செய்து தேசத்தை ஸுபிக்ஷமாக்கினான்.

32. வளையல் விற்றது

இதற்கு முந்தி சிதம்பரக்ஷேத்ரவர்ணனையில் சொல்லியபிரகாரம் ஸாக்ஷாத் ஈசுவரனானவர் மூவுலகங்களையும் மோஹிக்கச்செய்யக்கூடிய பிக்ஷாடனர் ரூபத்தையெடுத்துக்கொண்டு தாருகாவனத்தில் ரிஷிகள் ஆசிரமங்களில் பிக்ஷையெடுத்தபொழுது அங்குள்ள ரிஷிபத்னிகளெல்லாம் அவருடைய ரூபலாவண்யத்தைக்கண்டுமயங்கி அவரைப்பிடித்துக்கட்டி யணைக்கப்பிரயத்தனப்படுகையில் அவர் தனது மாயையால் அந்த ஸ்திரீகளின்கையிலகப்படாமல் சென்றதும் அந்த ரிஷிபத்னிகள் மிக ஏமாந்து தத்தம் கிருஹத்திற்குத்திரும்பிவந்தார்கள். அங்குள்ள ரிஷிகள் அவர்களை பரபுருஷனை இச்சித்துச்சென்றதற்காக வைசியர்குலங்களில் ஜனிக்கும்படி சபித்தார்கள். உடனே அவர்கள் ரிஷிகளின் கால்களில் விழுந்து தங்களை க்ஷமித்துத்தங்களுக்கு சாபவிமோசனம் கல்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ரிஷிகள் சொன்னதாவது, "ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திலுள்ள வைசியர்களின் குலங்களில் நீங்கள் பெண்களாகப்பிறந்து இப்பொழுது நீங்கள் அபேக்ஷித்த ஈசுவரனின் அங்கஸ்பர்சம் ஏற்பட்டு மனோரதம பூர்த்தியான பிறகு இங்கு திரும்பி வாருங்கள்"

என்றார்கள். அவ்வண்ணமே எல்லா ரிஷிபத்னிகளும் மதுராபுரியில் வைசிய கன்னிகைக ளாக வந்து ஜனித்தார்கள். மிகரூபலாவண்யத்துடன் பார்ப்பவர்கள் வியக்கும்படி அவர்கள் வளர்ந்து வருகையில் ஸ்ரீ ஸுந்தரேசுவரரானவர் தாருகாவனத்தின் ரிஷிகளின் வார்த்தைக் கிணங்கதமது அங்கஸ்பர்சம் அந்த ஸ்திரீகளுக்கு கிடைக்குமாறு தாம் அதிஸுந்தரமான ஒரு வைசியவளையல்வியாபாரி ரூபமெடுத்துக்கொண்டு தோளில் நானாவிதமான வளையல்க ளைச் சுமந்துகொண்டு வைசியர்தெருவழியாக வளையல் விற்றுக்கொண்டுவந்தார். அங்குள்ள வைசியப்பெண்டீர்களெல்லாம் அந்த வியாபாரியின் ரூபத்தைக்கண்டு மோஹித்து எவ்வி தத்திலாவது அவன் ஸ்பர்சம் ஏற்படவேண்டுமென்ற ஆசையுடன் ஒவ்வொருவரும் அந்த வியாபாரியைக்கூப்பிட்டு ஏற்கனவே தங்கள் கைகளில் வளைகள் இருந்தபோதிலும் அவை களை உடைத்துவிட்டு தங்களுக்கு வளையல் போடும்படி கேட்டார்கள். வியாபாரி ரூபமாக வந்த ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் அவர்களுடன் மிகவும் வேடிக்கையானவார்த்தைகள் பேசிக் கொண்டு ஒவ்வொருவர் கைகளையும் தனது கையால் தொட்டுப்பிடித்து வளையடுக்கினர். இவ்வாறு அங்குள்ள எல்லாஸ்திரீகளுக்கும் அடுக்கியானதும் அவர்கள் கொடுக்கவந்த கிர யத்தைதாம் பிறகு வாங்கிக்கொள்வதாகச்சொல்லி மறைந்துவிட்டார். அந்த ஸ்திரீகளும் ஈசுவரனின் அங்கஸ்பர்சத்தால் மிகவும் ஆனந்தபரிதர்களாய் ஸமஸ்தபாக்கியத்தையும் அடைந்து கடைசியில் சாச்வதமான சிவபதவியை அடைந்தார்கள்.

33. யக்ஷஸ்திரீகளின் சாபத்தைத் தீர்த்தது.

முன்னொருகாலத்தில் கைலாஸத்தில் ஈசுவரனுனவர் தக்ஷிணாமூர்த்தி ரூபியாய் ஆலமரத்தினடியிலுட்கார்ந்துகொண்டு சிவதர்மங்களையும் எல்லா ஆகம சாஸ்திரங்களையும் தத்துவஞானத்தையும் நந்தி பிருங்கி முதலிய கணங்களை வியாஜமாகவைத்து ஸநகஸநந்த நாதி மஹரிஷிகளுக்கு எடுத்துச்சொல்லிவரும் ஸமயத்தில் குமாரக்கடவுளுக்கு தாய்களாகப் பாவிக்கப்பட்டுவந்த ஆறுயக்ஷஸ்திரீகள் அங்குவந்து ஈசுவரனை நமஸ்கரித்து தங்களுக்கு அஷ்டஸித்தியை உபதேசிக்கும்படி வேண்டினார்கள். பரமதயாளுவான ஈசுவரனும் அவ் விதமே அவர்களுக்கு அஷ்டஸித்திகளின் ஸ்வரூபத்தையும் அவைகளை அடையும் வழியை யும் உபதேசித்தார். ஆனால் ப்ராரப்த கர்மவசத்தால் அந்த யக்ஷஸ்திரீகள் அதை ஸாவதான த்துடன் கவனியாமல் அஜாக்கிரதையாக இருந்துவிட்டார்கள். இதையறிந்த ஈசுவரன் அவர்களை பூலோகத்தில்போய் கல்லாக ஆகும்படி சபித்துவிட்டார்கள். உடனே மிகவும் நடு நடுங்கினவர்களாய் அந்த ஸ்திரீகள் ஈசுவரனின் பாதங்களில் வீழ்ந்து வெகுவாக துதி செய்து தங்களுக்கு எப்பொழுது இந்தசாபம் விடுபடும், அதுவரையில் எந்ததேசத்தில் தாங்கள் கல்லாக இருக்கவேண்டுமென்றுகேட்டார்கள். அதற்கு ஈசுவரன் பாண்டிய தேசத்தில் மிகப்பெரிதான ஒரு ஆலமரமிருப்பதாயும் அதனடியிற்சென்று அவர்கள் கற்க ளாகக்கிடந்தால் ஆயிரம் வருஷம் கழித்து தாம் அங்குவந்து அவர்களுக்கு அஷ்டஸித்தி யையும் உபதேசம்செய்து சாபத்தினின்றும் விடுவிப்பதாகச் சொன்னார். அவ்விதமே அவர்கள் அவ்வாலமரத்தினடியில் கல்லாகக் கிடந்தார்கள். குணபூஷணபாண்டியன் நா ளில் அந்த ஆயிரம்வருஷம் பூர்த்தியாகிவிட்டபடியால் தாம் சொன்னபடி ஈசுவரனுனவர் தக்ஷிணாமூர்த்திரூபியாக நந்தீசுவரர் முதலிய கணங்களோடும் அகஸ்தியர் முதலிய மஹரி

ஷிகளோடும் அந்த ஆலமரத்தடிக்குவந்து கல்லாகவிருந்த ஆறுபேர்களையும் யக்ஷஸ்தீரிகளாகமாற்றி அவர்களுக்கு அஷ்டஸித்திகளையும் உபதேசித்தார். அவர்களும் மிகுவும் ஸாவதானத்துடன் கேட்டு அந்த ஸித்திகளையெல்லாம் அடைந்தவர்களாய் அதன் பிரபாவத்தாலேயே ஆகாசமார்க்கமாக தாருகாவனம் சென்றார்கள். ஈசுவரனும் மதுரையிலுள்ள மூலலிங்கத்திற்குள் அந்தர்த்தானமானார்.

34. சோழராஜாவுக்கு தர்சனம் கொடுத்தது.

சோழநாட்டுக்குத் தலைநகராயுள்ள காஞ்சிபுரத்தில் காடுவெட்டிச்சோழன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் மிகச்சிறந்தசிவபக்தன். ஸதாஸர்வகாலமும் பஞ்சாக்ஷரம் ஜபிப்பதிலும் ஈசுவரனைத்யானம் செய்வதிலும் சிவபக்தர்களை உபசரிப்பதிலும் காலம் கழித்துவந்தான். காஞ்சீபுரம் காமாக்ஷியம்மன் மூலஸ்தானத்துக்கு சுற்றிலுமிருந்த காடுகளையெல்லாம் அழித்து அவ்விடத்தில் திவ்யமான அம்பாள் ஆலயமும் கட்டுவித்ததால் அவனுக்கு காடுவெட்டிச்சோழன் என்றுபெயர் பிரஸித்தியாயிற்று. ஒருநாள் அவனிடம் சிலசிவபக்தர்கள்வந்து ஹாலாஸ்யநாதரின் பெருமையையும் அவருடைய லீலாவிபவங்களையும் குறித்து வெகுவாகப்புகழ்ந்தார்கள். அதைக்கேட்டதும் இந்த சோழராஜனுக்கு ஹாலாஸ்யநாதரை தர்சனம் பண்ணி தான் கிருதார்த்தனாகவேண்டுமென்று அவா மிகவும் அதிகமாயுண்டாயிற்று. ஆனால் சோழராஜவுக்கும் பாண்டியராஜவுக்கும் பகையாதலால் எவ்விதம் தான் பாண்டியதேசத்துக்குள் போவதென்று மிகுந்தசிந்தையுடன் ஒன்றும் செய்யத்தோன்றாதவனாய் நாளுக்குநாள் உருகினான். இவனது பக்தியைக்கண்ட ஸ்ரீ ஸுந்தரேசுவரர் ஒருஸமயம் இவனுக்கு ஸ்வப்நத்தில் தோன்றி “நீ தனிமையில் உடனேபுறப்பட்டு மதுரைக்குவா. நாம் உனக்குவழிகாண்பித்துக் கூட்டிப்போய் ஹாலாஸ்யநாதரை தர்சனம் செய்துவைக்கிறோம்” என்றுசொன்னார். இதைக்கேட்டு சோழராஜன் அளவிலடங்காத ஆனந்தங்கொண்டு உடனே மாறுவேடம் போட்டுக்கொண்டு மதுரையைநோக்கிப்புறப்பட்டான். ஈசுவரனுடைய அநுக்ரஹத்தால் வழியெல்லாம் கடந்து மதுரைக்கு ஸமீபத்தில் வைகையாற்றங்கரைக்கு ஸாயங்கால நேரத்தில் வந்துசேர்ந்தான். வைகையாற்றிலோ பிரவாஹம் மிகவதிகமாகவிருந்தது. அதையெப்படி தாண்டிச்செல்வதென்று வருத்தமுற்று தயங்கிநின்றான். ராத்திரி வெகுநேரமாயும் வழியொன்றும் தென்படவில்லை. காஞ்சீபுரமிருந்து இவ்வளவுதூரம் நடந்துவந்தும், மதுரை இவ்வளவு ஸமீபத்திலிருந்தும், தனக்கு ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரர் தர்சனபாக்கியம் கிடைக்காமலிருக்கிறதேயென்று வெகுவாக நொந்துகொண்டான். 'அர்த்தராத்திரியாகப்போகிறதே. பொழுதுவிடியுமுன் தான் திரும்பிவிடவேண்டுமே. இல்லாவிடில் வெளிச்சத்தில் தன்னை பாண்டியவரசன் கண்டுகொண்டால் அனர்த்தம் விளையுமே, இதற்கு என்னசெய்வது என்று பலவாறாக வருந்தினான். பக்தன் வருந்துவதைக்கண்ட ஸ்ரீ ஸோமஸுந்திரரானவர் கோயிலில் அர்த்தஜாமம் ஆய் அதிகாரிகள் கதவுகளுக்கெல்லாம் பாண்டியராஜமுத்திரை வைத்துவிட்டு சென்றபிறகு மூலலிங்கத்தைவிட்டு ஸித்தர்மாதிரியாகப் புறப்பட்டு மாத்ரைக்கோலுங்கையுமாக வடக்குவாசல் வந்து அந்தக் கதவைத்தொடவே அது தானாகவேதிறந்துகொண்டது. உடனே வெளியில்வந்து வைகையாற்றங்கரைபோய் மாத்ரைக்கோலால் தொட்ட

மாத்திரத்தில் வைகையிலுள்ள பிரவாஹமானது அடங்கி மணல்தெரிந்தது. உடனே காடு வெட்டிச்சோழனும் வைகையைக்கடந்து தான் ஸ்வப்நத்தில் கண்டமாதிரியிருந்த ஸித்தரைநமஸ்கரித்து தனக்கு எவ்விதத்திலாவது ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரரை தர்சனம் செய்துவைக்கும்படி மன்றாடினான். அந்த ஸித்தரும் சோழனைக் கூட்டிக்கொண்டு கோயிலுக்கு ஸமீபத்தில் வரும்பொழுதே அவனுக்கு கோபுரங்கள், விமானங்கள் எல்லாம் கண்ணுக்குப் புலப்படும்படி அர்த்தராத்ரியில் ஸூர்யபிரகாசத்தையுண்டாக்கி அவனுக்கவைகளின் விவரங்களைச் சொல்லி வடக்குவாசல் வழியாக உள்ளே சென்றதும் பொத்தாமரைக் குளத்தில் ஸ்நானம் செய்வித்து ஸ்ரீ மீனாக்ஷியையும் மூலலிங்கத்தையும் தர்சனம் செய்து வைத்து அவனுக்கு திருப்தியுண்டாக்கி திரும்பவும் வடக்குவாசல் வழியாகவே அவனை வெளியில் கூட்டிப்போய் அவன் நெற்றியில் விபூதியிட்டு விடியுமுன் பாண்டியநாட்டை விட்டகலும்படி சொல்லியனுப்பிவிட்டு தாம் வடக்குவாசலை முன்போல சாத்தி அதில் பாண்டியராஜாவின் முத்திரைக்குப் பதிலாக தம்முடைய விருஷப முத்திரையை வைத்துவிட்டுமூலலிங்கத்துக்குள் சென்றார். மறுநாள்காலையில் கோயிலதிகாரிகள்வந்து கோயில் கதவுகளைத் திறக்குமுன் முத்திரைகள் ஸரியாயிருக்கிறதாவென்று கவனிக்கையில் வடக்கு வாசலில்மட்டும ராஜமுத்திரைக்குப் பதிலாக விருஷப முத்திரையிருக்கக்கண்டு உடனே பாண்டியவரசனாகிய குலபூஷணனுக்குத் தெரிவித்தார்கள். அரசனும் வந்துபார்த்து விஷயம் ஒன்றும் தெரியாமல் கதவுகளைத் திறந்து உள்ளே பார்த்தபொழுது ஒன்றும் திருட்டுப் போகாமலிருந்ததைக்கண்டு இது திருடன் செய்தகார்யமல்லவென்று நிச்சயித்து உண்மையறியவேண்டுமென்று மிக அவாகொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப்பிரார்த்தித்து நின்றனன். ஈசுவரனும் அசரீரவாக்கு மூலமாய் தாம்தான் முதல்நாள் ராத்ரி சோழராஜனுக்கு தர்சனம் செய்துவைக்கவேண்டி அம்மாதிரி செய்ததாக சொல்ல அரசனும் மற்றுமுள்ளோர்களும் ஈசுவரனின் பக்தவாத்ஸல்யத்தைப் புகழ்ந்து வீடுபோய்ச்சேர்ந்தார்கள்.

35. தண்ணீர்ப்பந்தல் வைத்தது.

குணபூஷணபாண்டியனின் புத்ரனான ராஜேந்திரன் மிக தெய்வபக்தியுடன் ராஜ்ய பாரம் செய்யும்பொழுது சோழராஜாவானவன் அவனை ஸ்நேகம் செய்துகொள்ளக் கருதி தன்னுடைய பெண்ணை ராஜேந்திரன் விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று சொல்லியனுப்பினான். ராஜேந்திரனும் அதற்கிணங்க இருவரும் ஸ்நேகமாக இருந்தார்கள். இச்சமயத்தில் ராஜேந்திரனின் தம்பியாகிய ராஜஸிம்ஹனென்பவன் சோழராஜாவின் பெண்ணினழகைக் கேள்விப்பட்டு அப்பெண்ணைத் தான் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸைநயங்களுடன் சோழராஜாவை யெதிர்த்துக் காஞ்சீபுரத்துக்குச்சென்றான். இருவருடைய பலாபலத்தையறிந்த சோழராஜா இவனுடன் ஸமாதானம் செய்துகொள்வதே ஸரியென்று கருதி ராஜஸிம்ஹனுக்கே தனது புத்ரியைக்கொடுப்பதாகச் சொல்லி அவனை யெதிர்கொண்டழைத்துச்சென்று அவனுக்குத்தன் புத்ரியையும் விவாஹம் செய்துவைத்தான். சிறிது காலத்துக்கெல்லாம் ராஜஸிம்ஹனானவன் தனது மாமனாராகிய சோழராஜனுடன் சேர்ந்து பாண்டியநாட்டைப் படையெடுத்து ராஜேந்திரனைக்கொன்று அவன் ராஜ்யத்தையுமபஹரிக்கவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்

துடன் சோழராஜாவின் ஸைந்யத்துடன் தன் மாமனாரையும் கூட்டிக்கொண்டு பாண்டிய தேசத்தின்மேல் படையெடுத்துவந்தான். இதையறிந்து ராஜேந்திரன் ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் முறையிட அவர் பயப்படவேண்டாமென்று சொல்லி அவனை ஸைந்யங்களுடன் எதிர்த்துப் போகும்படிக்கும் அவனுக்கு ஜயம் உண்டாகுமென்றும் சொல்லியனுப்பினார். உடனே இரண்டு ஸைன்யங்களுக்கும் மஹத்தான யுத்தம் நடந்தது. நல்ல கடுமையான கோடைகாலமானதால் வெயிலின் உஷ்ணம் தாங்கமுடியாமல் இரண்டு ஸைந்யங்களும் மிகத் தவித்தன. மத்யானம் 12 மணி வேளையில் எல்லோரும் மிகச் சோர்ந்துவிட்டதால் சற்று யுத்தம் நிறுத்தப்பட்டது. அச்சமயம் பாண்டியவரசனின் ஸைந்யமிருந்தவிடத்தில் ஈசுவரனவர் ஒரு கூடாரத்தை யுண்டுபண்ணி அதில் தானே ஜடாதாரியான ஒரு பிராமணனாக வந்து அநேக பானைகளில் நல்ல தீர்த்தத்தை நிரப்பிவைத்துக்கொண்டு ஸேனைகள் முழுமைக்கும் தீர்த்தம் கொடுத்து ஆசுவாஸப்படுத்தினார். ஈசுவரனுக்கு அஸாத்தியமொன்றுண்டா. பாண்டய ஸைந்யமிருந்தவிடம் முழுமையும் தன் ஜடையிலுள்ள கங்காஜலத்தால் குளிரவடித்தார். உடனே பாண்டிய ஸைந்யமானது ஆசுவாஸமடைந்தவைகளாய் மீளவும் யுத்தத்துக்குப் புறப்பட்டது. ஆனால் சோழ ஸைந்யமோ தாகத்தால் நாவுலர்ந்து பேசக்கூட முடியாமல் சுருண்டு கிடந்தது. பாண்டிய ஸைந்யம் திரும்பவும் யுத்தத்துக்கு வருவதைக் கண்டதும் எல்லோரும் ஓட்டம் பிடித்தார்கள். சோழராஜாவும் ராஜஸிம்ஹனும் மட்டும் தனிமையில் கைது செய்யப்பட்டார்கள். அவர்களைப் பிடித்துக்கொண்டு திரும்புகையில் தண்ணீர்ப்பந்தலையும் அதை வைத்திருந்த பிராம்மணரையும் காணவில்லை. உடனே கோயிலுக்குவந்து ஸ்ரீ ஸுந்தரேசுவரரை நமஸ்கரித்து அந்த இரண்டு கைதிகளையும் ராஜேந்திரன் அவரிடம் ஒப்புவித்தான். பிறகு அவரது ஆக்ஞைப்படி சோழராஜனை அவன் ஸைந்யத்துடன் விடுவித்து ஊருக்கு அனுப்பிவிட்டான். கெட்ட எண்ணமுள்ள தம்பியை மிகத் தாழ்ந்த வேலைகளில் அமர்த்தினன். தான் வழக்கம்போல் ஸ்ரீஸுந்தரேசர் ஸேவையிலேயே கருத்துடன் ராஜ்யம் வஹித்து வந்தான்.

36. ரஸவாதம் செய்தது.

மதுரைக்கு ஸமீபத்தில் புஷ்பவனம் (திருப்பூவனம்) என்று ஒருஊர் இருக்கிறது. அவ்விடத்தில் ஹேமநாயகியென்று ஒரு தாஸியிருந்தாள். அவள்சிறந்த சிவபக்தை. தனது தொழிலினால் ஸம்பாதிக்கும் பணத்தையெல்லாம் சிவனடியார்களுக்கு அன்னமளித்து உபசரிப்பதில் செலவழித்து வந்தாள். ஒருநாள் அவள் அந்த ஊர்கோயிலுக்குச்சென்று புஷ்பவனேசுவரரை தர்சனம்செய்து கொண்டிருக்கும்பொழுது அந்தக்கோயிலுக்கு ஒரு உத்ஸவவிக்ரஹம் செய்துவைக்கவேண்டுமென்று அவளுக்கு புத்தியுண்டாயிற்று. அதற்காக அவள் எவ்வளவு பிரயத்தனப்பட்டும் அதற்குவேண்டிய தனம் அவளிடம் சேரவில்லை. தினப்படி ஸம்பாத்யம் சிவனடியார்களின் சாப்பாட்டிற்கே ஸரியாய்ப்போய்விடுகிறது. இதனால் மிகமனவருத்தமுடையவளாய் அவள் ஸ்ரீ ஸுந்தரேசுவரரைதியானித்து பிரார்த்தித்தாள். உடனே ஸுந்தரரும் தம்பிரான் ரூபமெடுத்துக்கொண்டு அவள் வீட்டுவாசலில் சாப்பாட்டுக்குவந்திருக்கும் சிவனடியார்களுக்கு மத்தியில் போயுட்கார்ந்தார். அவரை வேலைக்காரிகள் சாப்பிடவழைத்தபொழுது அவர்கள் யஜமானியை யழைத்துவரும்படி

சொன்னர். உடனே ஹேமநாயகியும் வெகு பக்திசிரத்தையுடன் அவரிடம் வந்து அவரை யுபசரித்தாள். அவர் அவளை நோக்கி "உன்னைப் பார்த்தால் கவலையுடனிருக்கிறவளாகக் காண்கிறது. என்ன காரணம்" என்றுகேட்டார். அதற்கு அவள் தனது மனதிலுள்ளதைச் சொல்ல அவர் தனக்கு ரஸவாதம் தெரியுமென்றும் அவள் வீட்டிலுள்ள பித்தளை இரும்பு முதலிய ஸகலலோஹங்களையும் கொண்டுவந்தால் தான் அவைகளை ஸுவர்ணமாக மாற்றிக்கொடுப்பதாயும் அதைக்கொண்டு அவள் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொள்ளலாமென்றும் சொன்னர். உடனே அந்ததாஸியும் தன் வீட்டிலுள்ள எல்லா லோஹங்களையும் அவர் முன்பாக கொண்டுவந்து குவித்தாள். அவரும் அவை யெல்லாவற்றின்பேரிலும் தமது கையிலிருந்த பஸ்மத்தைத் தூவி மந்திரித்து அவைகளைக்கொண்டு போய் இரவுமுழுதும் அக்னியில் புடம்போட்டால் பொழுதுவிடிந்ததும் அவ்வளவும் ஸ்வர்ணமாக இருக்குமென்று சொன்னர். உடனே அந்த தாஸி அவரை போஜனமருந்தி இரவு அங்கே தங்கிவிட்டுப் போகும்படி வெகுதூரம் மன்ருடியும் அவர் கேளாமல் தாம் மதுரைஸித்தரென்றும் தமக்கு அங்கு ஒருத்தி காத்திருப்பளென்றும் சொல்லி இருந்தபடியே அந்தர்த்தானமானர். ஹேமநாயகியும் ஸந்தோஷத்துடனும் வருத்தத்துடனும் மறுநாள் காலையில் புடம்போடப்பட்ட லோஹங்களெல்லாம் தங்கமாக இருக்கக்கண்டு உடனே ஸுவர்ணத்தில் புஷ்பவனேசுவரரின் உத்ஸவ விக்ரஹம் வார்க்க ஏற்பாடு செய்தாள். அந்த விக்ரஹம் வார்த்து வந்ததும் அது வர்ணிக்கவொண்ணுதபடி மிகவுமழகாயிருந்ததைக்கண்டு அந்த ஹேமநாயகியானவள் தன் கைகளால் அதன் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அதை உச்சிமுகர்ந்து முத்தமிட்டாள். இதனுல் அந்தவிக்ரஹத்துக்கு கன்னத்தில் ஏற்பட்ட நகக்காயமானது இன்றும் காணப்படுகிறது.

37. சோழராஜாவை அகிழில் வீழ்த்தியது.

பாண்டியவாசனுகிய ராஜேந்திரனுக்குப் பிறகு அவனுடைய வம்சத்தில் ஸுந்தரேசபாதசேகரன் என்றுஒரு அரசனிருந்தான். அவன் மிகவும் பக்திசிரத்தையுடன் ஸுந்தரேசுவரரை பூஜித்து வந்தான். தன் ராஜ்யத்தில் பலவாற்ருலும் செலவுகளை மட்டுப்படுத்தி மீதியாகும் திரவியத்தையெல்லாம் ஈசுவரகைங்கர்யத்தில் உபயோகப்படுத்தினன். அவ்வாறே தனது ஸேனைகளையும் எவ்வளவு குறைக்கலாமோ அவ்வளவு குறைத்து அந்தப் பணத்தையும் ஈசுவரார்ப்பணம் செய்தான். இவன் ஸைன்யம மிகவும் ஸ்வல்பமாக இருப்பதையும் கஜானுவிலும் அதிக திரவியமில்லாதிருப்பதையும் கேள்விப்பட்டு சோழதேசத்து அரசன் இவன்மேல் ஏராளமான ஸைந்யங்களுடன் படையெடுத்து வந்தான். இதையறிந்த ஸுந்தரேசபாதசேகரன் கோயிலுக்குச் சென்று ஈசுவரனைப் பிரார்த்தித்தான். ஈசுவரனும் அசரீரவாணி மூலமாய் அவனுக்குத் தேர்தல் சொல்லி அவனிடமுள்ள ஸைந்யத்துடன் யுத்தத்துக்குச் செல்லும்படிக்கும தாம் வந்து ஜயம் உண்டாகும்படி செய்வதாயும் கூறினர். உடனே பாண்டியவாசனும் ஸைந்யங்களுடன் சோழராஜாவை எதிர்த்துச் சென்ருன். இவன் ஸைந்யம் ஸ்வல்பமாகவே இருந்தபோதிலும் ஈசுவரனின் மாயையால் ஏராளமாயிருப்பதாக எதிரிகளுக்குத் தோன்றிற்று. அதைக்கண்டு சோழ ஸைந்யங்கள் திரும்பி ஓடயத்தனிக்கையில் சோழராஜாவானவன் அவைகளை ஆசுவாஸப்படுத்தி ஒரே ஸமயத்தில்

தான் ஆயிரம்பேர்களைக் கொல்வேனென்று ஆர்ப்பாடம் செய்துகொண்டு ஸைந்யங்களை நடத்திக்கொண்டு முன்பாக வந்தான். அச்சமயம் பாண்டிய ஸைந்யத்தின் நடுவிலிருந்து மிகவும் கம்பீரமான ஒரு புருஷன் உயர்ந்த குதிரையிலேறிக்கொண்டு ராணுவ உடையைத் தரித்தவராய் கையில் வேலை சுழற்றிக்கொண்டு எத்தனைபேர்கள் வந்தாலும் ஒரே ஸமயத்தில் கொல்வேன் என்று ஆர்ப்பாடம் செய்துகொண்டு முன் வந்தார். அவரைக் கண்டதும் சோழராஜா பயந்து நடுநடுங்கி ஓட்டம் பிடித்தான். உடனே பாண்டியவரசனும் அவனைப பின்தொடர்ந்து வெகுதூரம் சென்றான். கொஞ்சதூரம் போனதும் சோழராஜா பின் திரும்பிப்பார்த்துத் தன்னைத் தொடர்ந்துவருகிறவன் பாண்டியவரசன்தான், அந்த கம்பீரபுருஷர் அல்லவென்பதைக் கண்டதும் தான் ஓடுவதை நிறுத்தித் தன் ஸைந்யங்களுடன் திரும்பிப் போர் செய்யவாரம்பித்தான். உடனே பாண்டியவரசன் தன் ஸைன்யங்களுடன் திரும்பி மதுரையை நோக்கி ஓடிவந்தான். சோழராஜாவும் வேகமாக அவனைப் பின்தொடர்ந்து அவனை மதுரை சேருவதற்குள்ளாகப் பிடிக்கப் பார்த்தான். பாண்டியவரசனே ஓடோடியும் வந்து மதுரைக்கு மேற்குப்பக்கத்திலுள்ள அகிழில் தன் ஸைந்யத்துடன் குதித்து ஸ்ரீ ஸோமஸுந்தாரினனுக்கிரஹத்தால் உள்பக்கமாக கரையேறிவிட்டான். பின்தொடர்ந்துவந்த சோழராஜாவும் தன் ஸைந்யங்களுடன் அந்த அகிழில் குதிக்கவே ஈசுவரனுடைய லீலையால் அவர்கள் எல்லோரும் அந்த அகிழ் மடுவில் முழுகிப்போய்விட்டார்கள். பாண்டியவாசனும் ஈசுவரனை வெகுவாக துதித்து சத்துருக்களிடமிருந்து அபஹரித்த திரவியத்தைக்கொண்டு ஈசுவரனுக்கு மேன்மேலும் ஸேவை செய்தான்.

38. சூத்ரனுக்கு விரைக்கோட்டை கொடுத்தது.

மதுராபுரியில் மிகவும் ஈசுவரபக்தனை ஒரு சூத்ரன் இருந்தான். அவன் வியவஸாயம் செய்து அதனல் கிடைக்கும் தான்யத்தையெல்லாம் சிவபக்தர்களை அன்னமிட்டு போஷிப்பதில் உபயோகித்துவந்தான். ஒரு ஸமயம் அவன் நிலங்களில் ஸரியானபடி வெள்ளாமை விளையாததால் கஷ்டப்படும்படி நேர்ந்தது. அப்பொழுதும் சிவபக்தர்களுக்கு அன்னம் போடுவதை நிறுத்தாமல் கடன்வாங்கி யதைச்செய்தான். அவனுக்குக் கடனும் அதிகமாய், விளைச்சலுமில்லாமல், கடன் கொடுப்பவர்களுமில்லாமல் நிர்ப்பந்தம் ஜாஸ்தியாக ஆனதும் அவன் கோயிலுக்குச்சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் தனது குறையையெல்லாம சொல்லி தான் சிவனடியார்களை உபசரிக்க முடியாமல் வியர்த்தமாக பூமிக்கு பாரமாக இருப்பதைக்காட்டிலும் உயிரை விட்டுவிடுவதே நலமென்று தீர்மானித்திருப்பதாகத்தெரிவித்தான். உடனே ஈசுவரன் அவனிடம் கிருபையுடன் அசரீர வாக்கு மூலமாய் அவனுக்குச்சொன்னதாவது: "உன்பக்தியிலீடுபட்டோம். நீ கவலைப்படவேண்டாம். நீ உன் வீட்டுக்குப்போனல் அங்கு ஒரு விரைக்கோட்டையைக்காண்பாய். அது அக்ஷயமாய் இருக்கும். அதிலிருந்து நீ எவ்வளவெடுத்தாலும் அது குறையாது. அதைக் கொண்டு வழக்கம்போல் அன்னதானம் செய்துகொண்டு ஸுகமாய் இரு" என்று சொன்ஞர். உடனே அந்த சூத்ரனும் வீட்டுக்குச்சென்று அவ்வாறே அங்கு விரைக்கோட்டையிருக்கக்கண்டு அதை பூஜித்து முன்போல சிவபக்தர்களை யாராதித்துக்கொண்டு ஸுகமாக இருந்தான்.

39. மாமனாகவந்து தாயாதிகளை ஜயித்தது.

மதுராபுரியில் அர்த்தபதியென்ற ஒரு வைசியன் சிறந்த சிவபக்தனாகவிருந்தான். அவனுக்கு வெகுகாலமாயும் பிள்ளை யில்லாமலிருந்தது. தன்னுடைய தங்கை பிள்ளையை தன் பிள்ளையாகபாவித்து வளர்த்து வந்தான். ஒரு ஸமயம் அவன் தங்கைக்கும் ஸம்ஸாரத்துக்கும் ஏதோ சச்சரவு நேர்ந்தபொழுது தங்கையானவள் "இந்தமலடிக்கு என்ன இவ்வளவு. என் பிள்ளையைக்கொண்டு பிள்ளையுள்ளவளாக ஆன இவளுக்கு இத்துணை வாயா" என்றாள். இது அந்த வைசியனுக்கு வருத்தத்தையுண்டாக்கி மறு ஜன்மத்திலாவது தங்களுக்கு புத்ரபாக்யம் உண்டாகும்படி ஈசுவரனைக்குறித்து தபஸ் செய்வோமென்று சொல்லி தன் ஸொத்து முழுமையும் தங்கை பிள்ளைக்கே கொடுத்துவிட்டு தன் ஸம்ஸாரத்தையும் கூட்டிக்கொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரரை பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து விட்டு காட்டை நோக்கிச்சென்றான். கொஞ்சகாலமாயும் அவன் திரும்பி வாராததைக்கண்டு அவனுடைய தாயாதிகளெல்லாம் அவனுடைய தங்கை பிள்ளைக்கு யாதொருபாத்தியமுமில்லையென்று கச்சேரிகளில் வழக்காடி ஸொத்து முழுமையையும் பலாத்காரமாய் அபஹரித்துக்கொண்டுவிட்டார்கள். இதைக்கண்ட தங்கையானவள் அநாதர்களுக்கு ஸுந்தரேசனே நாதனென்றெண்ணி தன் பையனுடன் கோயிலுக்குச்சென்று ஈசுவரனிடம் முறையிட்டாள். ஈசுவரனும் அவளிடம் மனமிரங்கி அசரீரவாணி மூலமாக அவளை பயப்படவேண்டாமென்றும் அவள் அந்த தாயாதிகளை யெல்லாம் மறுபடி நியாயஸ்தலத்திற்கு வழக்காடியிழுததால் தாம் வந்து அவளுக்கு எல்லா ஸொத்தையும் திருப்பி வாங்கிக்கொடுப்பதாகவும் சொன்னார். மறுதினமே அந்த தங்கையானவள் அந்த தாயாதிகளிடம் சென்று அவர்களுடன் சண்டைசெய்து அவர்களை நியாயஸ்தலத்துக்கு இழுத்துவந்தாள். அங்கு எல்லோரும் கூடியிருக்கையில் ஈசுவரனானவர் அந்த அர்த்தபதிசெட்டி மாதிரியாகவே ரூபமெடுத்துக்கொண்டு அங்குவந்து அவன் தங்கையையும் தங்கை பிள்ளையையும் கண்டு விஷயங்களையெல்லாம் விசாரித்துக்கொண்டு நியாயாதிபதிகளைப் பார்த்துத்திரும்பினார். அவரைக் கண்டதும் தாயாதிகளெல்லாம் பிரமித்து இவன் அர்த்தபதி செட்டியல்லவென்று கத்தினார்கள். உடனே ஈசுவரன் மிகக்கோபமுள்ளவர் மாதிரியாக அதிகபாபப்புடன் அந்தசெட்டிகளின் குடிப்பேர், பட்டப்பேர், காணிப்பேர், தந்தைபேர், தாய்பேர், மாமன்பேர், மாமிபேர், பங்காளிகள்பேர், அவர்களைப் பெற்றவர்கள்பேர், பிள்ளைகள்பேர், உடன் பிறந்தார், பெண்டாட்டிகள், உறவினர், குணம், நடக்கை, அடையாளங்கள் முதலிய ஸகலத்தையும் சற்றேனும் தளராமற்சொல்லி தான் தங்கைபிள்ளையைத் தன் பிள்ளையாக எடுத்துக்கொண்டு தன் ஸொத்து எல்லாவற்றையுமவனுக்குக்கொடுத்தாகவும் சொன்னார். இதைக்கேட்ட சபையோர் எல்லோரும் இவர் அர்த்தபதி செட்டியாரென்பது நிச்சயம் தானென்றும அவர் ஸொத்து முழுமையையும் அவர் தாயாதிகள் உடனே திருப்பி தங்கை பிள்ளைக்குகொடுத்து விடவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். நியாய ஸபையும் கலைந்தது. ஈசுவரனும் மறைந்தார்.

40. வரகுணபாண்டியனுக்கு மதுரையில் சிவலோகம் காண்பித்தது.

ஸுந்தரேசபாதசேகரனுக்குப் பிறகு அவன் புத்ரன் வரகுணபாண்டியன் பாண்டிய நாட்டுக்கு அரசனாகவிருந்தான். இவனுக்கு வேட்டையில் அதிகப் பிரியமிருந்தது.

ஒருநாள் ராத்திரி வேளையில் வேட்டையிலிருந்து குதிரைமேலேறிக்கொண்டு திரும்பி வருகையில் வழிப்பாதையில் படுத்திருந்த ஒரு பிராமணனைக் கவனியாமல் அவனை மிதித்துக் கொண்டு குதிரை போய்விட்டது. அதனால் அந்தப் பிராமணன் உயிரிழந்தான். அந்தப் பிரம்மஹத்திதோஷம் அரசனைச் சூழ்ந்துகொண்டது. இதையறிந்த அரசனும் எவ்வளவோ சாந்திகள், தானங்கள் முதலியன செய்தும் மனதுக்குஸமாதானம் ஏற்படாதவனாய் ஸ்ரீ ஸுந்தரேசுவரரை அல்லும் பகலுமாகத் தனக்கு அந்த தோஷத்தை நிவர்த்திக்கும்படி பிரார்த்தித்தான். ஈசுவரனும் அவனுக்கு ஸ்வப்னத்தில்தோன்றி "நீ இந்த ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திலேயே பாபம் செய்துவிட்டபடியால் இங்கு அதற்குமோசனம் கிடையாது. வேறு எந்தவிடத்தில் செய்தாலும் இங்கு வந்தால் தத்க்ஷணமே எல்லா பாபமும் தொலைந்துவிடும். ஆனால் இங்கு செய்கிறபுண்யமாகட்டும் பாபமாகட்டும் முடிவில்லாமல் விருத்தியாகிவிடுகிறது. ஆதலால் உனக்கு இங்கேமோசனம் கிடையாது. இருந்தாலும் உன்னிடமுள்ள பிரேமையால் உனக்கு இந்தபாபம் நீங்க ஒரு உபாயம் சொல்லுகிறோம். இன்னும் சிறிதுநாளில் சோழராஜா உன்மேல் படையெடுத்துவருவன். அப்பொழுது அவனை யெதிர்த்து ஜயித்து அவனை விரட்டிக்கொண்டு நீ பின்தொடர்ந்து செல்லுகையில் வழியில் காவேரிதீரத்தில் அர்ஜுன விருக்ஷத்தினடியில் நாம் மஹத்தான ஒரு லிங்கரூபமாக இருக்கிறோம். அங்கு சென்றதும் காவேரியில் ஸ்நாநம் செய்து அந்தலிங்கத்தை பூஜைசெய்தாயேயானல் இந்த பிரம்மஹத்தியிலிருந்தும் விடுபடுவாய்'' என்று சொன்னார். அவ்வாறே சிறிது காலத்திற்கெல்லாம் சோழராஜனை ஜயித்து அவனை விரட்டிக்கொண்டு போகையில் மத்தியார்ஜுன க்ஷேத்திரத்தை யடைந்ததும் வரகுணபண்டியன் காவேரியில் ஸ்நானம்செய்து மஹாலிங்கத்தின் தர்சனத்திற்காக கோயிலுக்குள் கீழ கோபுரவாசல் வழியாய் போகும்பொழுது அந்த கோபுரவாசலிலேயே பிரம்மஹத்தி தங்கிவிட்டது. உள்ளேபோய் ஸ்வாமிதர்சனம் செய்துவிட்டு மேலவாசல் வழியாக திரும்பி வேகமாக மதுரையையடைந்து கோயிலுக்குச்சென்று தன் குலதெய்வமாகிய ஹாலாஸ்ய நாதனை வெகுவாகத் துதிசெய்து தனக்கு பிரம்மஹத்திதோஷம் தொலைந்துவிட்டபடியால் சிவலோக தர்சனம் செய்துவைக்கும்படி பிரார்த்தித்தான். ஈசுவரனும் தயவுடன் சிவலோகத்தை அவ்விடத்திலேயே அவனுக்குக் காண்பிப்பதாகச்சொல்லி அவனுக்கு ஞானக்கண்ணையருளினர். உடனே வரகுணபாண்டியனும் சிவலோகத்திலுள்ள அத்புதக் காக்ஷிகளையும் ஆநந்தங்களையும் கண்டு பிரமித்து நிற்கையில் நந்திகேசுவரர் வந்து அவனை கூட்டிச்சென்று அங்குள்ள பார்வதி பரமேசுவரர்களை தர்சனம் செய்துவைத்தார். அவர்களை நமஸ்கரித்துத் துதிசெய்து முடிந்ததும் ஈசுவரன் ஞானக்கண்ணை மறைத்துவிட்டதால் முன்போல் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரர் முன்பாக நிற்கக்கண்டான். மதுரையிலேயே சிவலோகம் கண்டதால் அதுமுதல் மதுரைக்கு பூலோகசிவலோகமென்று பெயர் ஏற்பட்டது.

41. விறகு விற்றது.

வரகுணபாண்டியன் காலத்தில் அயலூரிலிருந்து சிறந்த ஓர் ஸங்கீதவித்வன் அவனரண்மனைக்கு வந்து மிகவத்புதமாய் வீணாகானம் செய்தான். அதைச் செவியுற்றவரசன் நிரம்பவுமாநந்தம் கொண்டவனாய் அவனை வெகுவாக ஸம்மானித்து அவனை சிறிதுகாலம்

அவ்வூரில் தங்கியிருக்கும்படிக்கும், சமீபத்தில் தான் அரண்மனையில் சபைகூட்டி அரண்மனை வித்வான்களையும் தருவித்து அச்சபையில் அவனுடைய ஸங்கீத கச்சேரியைவைத்து எல்லோருக்கும் பிரஸித்தப் படுத்துவதாகவும் சொல்லியனுப்பினான். அவ்வாறே அந்த வித்வானும் அவனுக்காக ஏற்படுத்திய வீட்டில் போய்த்தங்கினான். அவனுடன் வந்த அவனுடைய சிஷ்யர்கள் அவ்வூரில் நாலாபக்கத்திலும அவனுடைய சாமர்த்தியத்தைப் பற்றி மிகப்புகழ்ந்து பேசி, தாங்களும் பாடிக்காண்பித்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தார்கள். வரகுண பாண்டியனும் தனதரண்மனை ஸங்கீத வித்வானாகிய பாண்பத்ரன் என்பவனுக்கு ஆளனுப்பித் தருவித்து அவனிடம் புதிதாக வந்திருக்கும் வித்வானைப்பற்றிச் சொல்லி அவனை ஜயிக்கமுடியுமாவென்று கேட்டான். அதற்கு பாணபத்ரனும் சற்றேனும் தயங்காமல் ஸௌந்திரேசுவர் கிருபையால் கட்டாயம் ஜயிப்பேனென்றான். உடனே ராஜாவிடம் விடைபெற்றுக்கொண்டு அந்த பாணபத்ரனானவன் பரமசிவபக்தனானதால் கோயிலுக்குச் சென்றான். வழியில் புதிதாக வந்த வித்வானின் சிஷ்யர்கள் கடைத்தெருவுகளில் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டு அதிக வியப்படைந்து சிஷ்யர்களே இவ்வளவு திறமாகப்பாடினால், குரு எவ்வளவு ஸாமர்த்தியசாலியாக விருக்கமாட்டார், அவரை எவ்விதம் ஜயிப்பது என்று பயம் கொண்டவனாய் ஸ்ரீ ஸௌந்தரேசுவரர் ஸந்நிதிக்குப் போய் அவரிடம் விஷயத்தைத் தெரிவித்து தன்னை மானபங்கமில்லாமல் எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தான். ஈசுவரனும மனமிரங்கி அவனுக்கு அபயப்பிரதானம் செய்தனுப்பிவிட்டு மறுநாள் கிழவுருவமெடுத்துக்கொண்டு காட்டுக்குள் சென்று விறகுகளை வெட்டித் தலையில் சுமையாகத் தூக்கிக்கொண்டு கழுத்தில் கோடாலியுடன் மதுரை வீதிகளின் வழியாக விறகு விற்றுக்கொண்டு அந்திப்பொழுதில் நூதன ஸங்கீதவித்வான் இறங்கியிருந்த வீட்டு வாயிலண்டைவந்து விறகு சுமையையிறக்கிவைத்து சிரமத்துடன் அத்திண்ணையிலுட்கார்ந்து உல்லாஸமாக தேவகாந்தாரி இராகத்தில் பாடவாரம்பித்தார். அந்த ஸங்கீதத்தின் மாதுர்யத்தைக் கேட்டு உள்ளிருந்த புதிய வித்வான் வெளியேவந்து அவரை நீ யாரென்று வினவ அவர் தாம் ஒரு விருத்தனான விறகுவெட்டியென்றும் அவ்வூர் மஹாவித்வானாகிய பாணபத்ரனின் சிஷ்யனென்றும சொல்லி விறகு சுமையைத் தூக்கிக்கொண்டு மறைந்துவிட்டார். இதைக் கேட்டதும் அந்த புதிய வித்வானுக்குண்டான பயத்திற்கோரெல்லையில்லை. கிழவனாயிருக்கும் இந்த சிஷ்யனே இவ்விதம் பாடினால் அந்த பாணபத்ரர் எவ்வளவு ஞானத்துடனிருக்கமாட்டார். அவரை ஒருவராலும் ஒருக்காலும் ஜயிக்க முடியாது. இனித் தாமதித்தால் நிச்சயமாக அவமானப்படவேண்டியதுதான் என்று தீர்மானித்துத் தன்னுடன் வந்தவர்களைக் கூட்டிக்கொண்டு ஒருவரிடமும் சொல்லாமல் அன்றிரவே ஊரைவிட்டு ஓடிவிட்டான். ஸோமஸௌந்திரேசுவரரும் அன்றிரவிலேயே பாணபத்திரனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி தான் செய்த விருத்தாந்தங்களையும் அப்புதிய வித்வான் ஊரைவிட்டு ஓடிப்போனதையும் சொல்லிச் சென்றார். பாணபத்திரனும் அதிக ஸந்தோஷத்துடன் மறுநாள் பொழுதுவிடிந்ததும் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று ஸ்ரீ ஸௌந்திரேசுவருக்கு பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்துவிட்டு அரண்மனைக்குப்போய் அப்புதிய வித்வானைக் கூப்பிட்டு உடனே சபை கூட்டும்படி அரசனிடம் கம்பீரமாய்ச் சொன்னான்.

அரசனும் தூதர்களையனுப்ப அவர்கள் புதிய வித்வானிறங்கியிருந்த வீட்டிற்குச்சென்று அவனைக் காணுமையால் அக்கம் பக்கங்களில் விசாரித்து முதல்நாள் ஸாயங்காலமும் இராத்திரியும் நடந்த விஷயங்களையறிந்து அவைகளை அரசனிடம் வந்து சொல்ல அரசன் மிக வாச்சர்யம் கொண்டு பாணபத்ரரை நோக்கி அந்த விருத்தனை சிஷ்யன் யாரென்று கேட்டான். அதற்கவர் தனக்கு ஸ்வப்னத்தில் ஈச்வரன் வந்து சொன்னதைத் தெரிவித்தார். அதைக் கேட்டவரசன் அவரை வெகுவாகப் புகழ்ந்து அவருக்கு ஏராளமான ஸம்மானங்கள் செய்து வீட்டிற்கனுப்பினன்.

42. சேரனுக்கு ஸ்ரீமுகம் கொடுத்தனுப்பியது.

முன் லீலையில்சொன்ன பாணபத்ரனென்பவன் ஒரு ஸமயம் தாரித்ரியத்தால் வருந்தும்நாளில் பிரதிதினமும் அவன் கோயிலுக்கு தர்சனத்துக்கு வரும்காலததில் ஈசுவரனைவர் அவன் புன்னிலையில் ஏதாவது திரவியங்களைவைத்து அவனை அதை யெடுத்துப் போய் காலக்ஷேபம் செய்யச்சொல்லியனுப்புவது வழக்கமாயிருந்தது. இப்படி சிலகாலம் சென்றபின் பாணபத்ரன் கோயிலுக்குச் சென்றபொழுது ஈசுவரன் ஒன்றும் கொடுக்கவில்லை. அதனுல் அவன் மிக வறுமையிலடிபட்டு சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டான். ஆனுல் பிரதிதினமும் கோயிலுக்குச்சென்று ஈசுவரனை பிரார்த்திப்பதில் சற்றேனும் தவறவில்லை. அவனுடைய துர்த்தசையைக்கண்டு ஈசுவரன் மனமிரங்கி ஒருநாள் அவனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி அதுவரையில் அவனுக்குத் தாம் கொடுத்துவந்த திரவியமெல்லாம் அரண்மனை கஜானுவிலிருந்து கொண்டுவந்தவைகளென்றும் கஜானுவதிகாரிகள் அவைகள் கெட்டுப்போனதையறிந்து இப்பொழுது அதிக ஜாக்கிரதையுடனிருப்பதாகவும் இனி அங்கிருந்து முன்போல அவனுக்குக் கொண்டுவந்து கொடுத்தால் அதை அவ்வதிகாரிகள் கண்டு பிடித்தால் அவனை தண்டித்துவிடுவார்களாதலால் இனி தாம் அங்கிருந்து கொண்டுவரமுடியாதென்றும் தாம் சேரமஹாராஜாவுக்கு ஒரு ஸ்ரீமுகம் கொடுப்பதாகவும் அதைக் கொண்டுபோய் கொடுத்து அவனிடமிருந்து வேண்டிய திரவியங்கள் வாங்கி வரும்படிக்கும சொன்னுர். பாணபத்திரனே தான் எவ்வளவு வறுமையால் கஷ்டப்பட்டபோதிலும் அவரை விட்டுப்பிரியமாட்டேனென்று எவ்வளவு சொல்லியும் ஈசுவரன் கேளாமல் தமது ஆக்ஞையை மறுத்தால் அவனுக்குப் பாபம் ஸம்பவிக்குமென்று சொல்லி ஸ்ரீமுகத்தையும் கொடுத்துச் சென்றுர். உடனே பாணபத்ரனும் அந்த ஸ்ரீமுகத்தை யெடுத்துக்கொண்டு சேரதேசம் சென்று அங்கு ஒரு தண்ணீர்ப்பந்தலில் தங்கினன். முதல் நாளிரவு அந்த சேரமஹாராஜனுக்கு ஸ்ரீ ஸுந்தரேசுவரர் ஸ்வப்னத்தில் தோன்றி தாம் தமது பக்தனொருவனை மதுரையிலிருந்து ஸ்ரீமுகத்துடனவனிடமனுப்பியிருப்பதாகவும் அவனுக்கு ஏராளமான திரவியம்கொடுத்து உபசரித்தனுப்பும்படியும் சொன்னுர். மறுநாள் அதன்படி சேரவரசனும் தனது தேசத்தில் புதிதாக மதுரையிலிருந்து வந்திருக்கும் சிவபக்தன் யாரென்று தேடச்சொல்லி யாட்களை நாலாபக்கத்திலும் அனுப்பினன். அவர்கள் இந்த பாணபத்ரனை தண்ணீர்ப்பந்தலில் கண்டு அரசனிடம் போய் தெரிவிக்க அவன் தானே நேரில்வந்து அவனை வெகுவாக உபசரித்து அவன் கொடுத்த ஸ்ரீமுகத்தை வாசித்து சிரஸ்மேல் வைத்துக்கொண்டு அவனை யரண்மனைக்குக்

கூட்டிச்சென்று அவனுக்கு மிக ஏராளமான திரவியங்கள் கொடுத்து அவைகளின் பந்தோபஸ்துக்காக காவலாளர்களையும் அனுப்பி அதிக மரியாதைகளுடன் ஊருக்கு அனுப்பினன். அவைகளுடன் பாணபத்ரனும் மதுரைவந்து எல்லாவற்றையும் ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் ஒப்புவித்து அவரை யநுதினமும் ஆராதித்து ஸுகமாக விருந்தான்.

43. பாணபத்ரனுக்குப் பலகை கொடுத்தது.

ஸங்கீத வித்வானுகிய பாணபத்ரன் பிரதிதினமும் ஆறுகாலத்திலும் கோயிலுக்குச் சென்று வீணுகானம் செய்து ஈசுவரனை நியமமாய் ஆராதித்துவருகையில் அவனுடைய உறுதியை சோதிக்கவேண்டி ஈசுவரனுனவர் ஒருநாள் கோயிலில் அர்த்தஜாமம் நடக்கும் ஸமயத்தில் ஸந்ததாரையாக மழை கொட்டும்படி செய்தார். ஒருவராவது வீட்டை விட்டு அசைய முடியாமல் அவ்வளவு வேகமாயும் பலமாயும் மழையடித்தது. பாணபத்ரனேவெனின் அதைக் கொஞ்சமேனும் லக்ஷ்யம் செய்யாமல் வழக்கம்போல் கோயிலுக்குச்சென்று நந்திக்கு ஸமீபத்திலுட்கார்ந்துகொண்டு வீணையை வாசித்தான். மழையின் வேகத்தால் அவனுட்கார்ந்திருந்த விடமெல்லாம் ஜலமாய் விட்டது. அவன் ஏகாக்ரசித்தனுய் ஈசுவரனிடம் மனதைசெலுத்தி கானம்செய்து கொண்டிருந்ததால் கீழே ஜலம்வந்தது அவனுக்குத் தெரியவேயில்லை. ஈசுவரன் அவன் பக்தியைக்கண்டு வியந்து அவன் ஜலமில்லாமலுட்காரும்படி ஒரு பலகையை அவனடியில் போட்டார். அதிலுட்கார்ந்து கொண்டு பாடி முடிந்தபிறகு ஈசுவரனை நமஸ்காரம் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பும் பொழுதுதான் தனக்கு உட்காருவதற்கு பலகை போட்டிருப்பதைக்கண்டான். அதைக் கொண்டுவந்து போட்டவர்கள் பக்கத்திலுள்ளவர் களல்லவென்று தெரிந்துகொண்டு ஈசுவரனுகத்தானிருக்கவேண்டுமென்று நிச்சயித்து அந்தப் பலகையை கவனிக்கையில் அது ரத்னங்களிழைத்த ஸ்வர்ணப்பலகையாக விருக்கக்கண்டு ஈசுவரனை வெகுவாகத்துதி செய்து பலகையுடன் வீட்டுக்குச்சென்றுன்.

44. பாணபத்ரன் மனைவியின் கௌரவத்தைக் காப்பாற்றியது.

வரகுணபாண்டியனுக்குப் பிறகு அவனுடைய புத்ரன் ராஜராஜபாண்டியன் ஆண்டுவருகையில் பாணபத்ரனின் ஸம்ஸாரம் பர்த்தாவைப்போலவே ஈசுவரபக்தியிலும் ஸங்கீதத்திலும் மிகக் கீர்த்திபெற்று ஒருநாள் அரண்மனைக்குச்சென்று அங்கு அந்தப்புரத்திலுள்ள ராஜஸ்திரீகளை பேட்டிகண்டாள். அங்குள்ள போகஸ்திரீகளுள் ஒருவளுக்கும் பாணபத்ரன் பத்நிக்கும் ஸங்கீதத்தில் இருவர்களுள் யார் தேர்ந்தவர் என்று தகரார் ஏற்பட்டுவிட்டது. உடனே அந்த ராஜஸ்திரீயானவள் தனது காமவலையிலீடுபட்டிருக்கும் அரசனை எவ்விதத்திலாவது பாணபத்ரன் பத்னியை ஸங்கீதவித்யையில் அவமானப்படுத்த வேண்டுமென்று சொன்னுள். அதற்கு அரசனும் சம்மதித்து த்வீபாந்தரத்திற்கு ஆள்களையனுப்பி கானததில் மிகப்பிரஸித்திபெற்ற ஒரு ஸ்திரீயைத்தருவித்தான். அவளை தனிமையில் அரண்மனைக்கு அழைத்து எவ்விதத்திலாவது ஸங்கீதத்தில் பாணபத்ரனின் மனைவிக்கு அபஜயம் உண்டாக்க வேண்டுமென்றும் வெளியில் தான் நிஷ்பக்ஷபாதமாக காண்பித்தாலும் அந்தரங்கத்தில் அவள் சார்பாகவிருப்பதாகவும் சொல்லியனுப்பிவிட்டு பாணபத்ர

னின் மனைவியைத் தருவித்து புதிதாக வந்திருக்கும் ஸங்கீதவிதுஷிக்காக மறுநாள் ஸபை கூட்டப்போவதாகவும் அதில் அவள் புதிதாக வந்தவளை ஜயிக்கவேண்டுமென்றும் சொல்லியனுப்பினான். அப்படியே செய்வதாக்ச்சொல்லி அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு பாணபத்ரன் மனைவி கோயிலுக்குச்சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவாரை பிரார்த்தித்துவிட்டு வீடுவந்து சேர்ந்தாள். மறுநாள் ராஜாவின் உத்தரவின்படி அரண்மனைக்குச்செல்ல அங்கு ஒரு பெரிய ஸங்கீதவித்வான்கள் ஸபை கூடியிருந்தது. த்வீபாந்தரத்திலிருந்து புதிதாக வந்தவளும் அங்கு காணப்பட்டாள். அரசன் வந்து உட்கார்ந்ததும் ஸபை ஆரம்பித்தது. இருவர்களுள் யார் ஜயிக்கிறார்களோ அவள் எஜமானி என்றும் அபஜயம் அடைபவள் வேலைக்காரி என்றும் பந்தயம் வைக்கப்பட்டது. உடனே புதிதாக வந்தவள் தன்னுடைய கானஸாமர்த்தியம் முழுமையும் காண்பித்தாள். அரசன் அதை வெகுவாக மெச்சினான். உடனே அவனை அனுசரித்து அங்குள்ள வித்வான்களும் வெகுவாக புகழ்ந்தார்கள். பிறகு பாணபத்ரன் மனைவி பாடினாள். அது நிரம்பவும் திறமாயிருந்ததென்றாலும் அரசன் பக்ஷபாதத்தால் அதைப் புகழவில்லை. அரசன் பேசாமலிருந்ததால் இதர வித்வான்களும் பேசாமலிருந்துவிட்டார்கள். கடைசியில் அரசன் பக்ஷபாதம் இல்லாதவன்போல் காண்பிக்கவேண்டி இன்று ஒருநாளில் முடிவு சொல்லக்கூடாது. மூன்று நாள் பார்ப்போம் என்ற மறுநாள் எல்லோரையும் வரச்சொல்லி ஸபையைக் கலைத்தான். உடனே பாணபத்ரனின் பத்னீ கோயிலுக்குச் சென்று ராஜாவின் பக்ஷபாதத்தைக் குறித்து ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் முறையிட்டாள். ஈச்வரனும் தயவுடன் அவளுக்கு அபயப்பிரதானம செய்து அவளைக் காப்பதாக வாக்களித்தனுப்பினார். மறுநாளும் அரண்மனையில் ஸபை நடந்தது. முதல்நாளைப்போலவே அரசனும் வித்வான்களும் நடந்தார்கள். உடனே பாணபத்ரனின் பத்னியானவள் அந்த ஸபையானது அரண்மனையில் நடப்பதால் அரசனுக்கு பயந்து கூடியிருக்கும் வித்வான்களெல்லாம் தன் பாட்டுக்கு பேசாமலிருந்துவிடுகிறார்களென்றும் ஆனதால் கோயிலில் ஸ்ரீ ஸுந்தரேசுவார் முன்னிலையில் ஸபை கூட்டினால் தெய்வத்துக்குப் பயந்து வித்வான்கள் நிஜத்தைச் சரியாகச் சொல்லுவார்களென்றும் அரசனிடம் பரபரப்புடன் சொன்னாள். அரசனும் அதற்கிணங்கி மறுநாள் கோயிலில் ஸபை கூடுவதாகச் சொல்லி எல்லோரையும் அனுப்பிவிட்டான். அன்றும் பாணபத்ரனின் பத்னீ கோயிலுக்குச் சென்று நடந்தவற்றை ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் தெரிவித்து மறுநாள் தன்னை எவ்விதத்திலும் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்தித்து வீடு சென்றாள். மறுநாள் கோயிலில் ஸபை கூடிற்று. அங்கு அரசன் உட்கார்ந்திருக்கும் ஸிம்மாஸனத்தின் பின்பக்கம் வித்வான்களுக்கு நடுவில் ஸ்ரீ ஸுந்தரேசுவாரும ஒரு வித்வான் மாதிரியாக வந்து உட்கார்ந்திருந்தார். புதிய ஸ்திரீயின் பாட்டு முடிந்ததும் அரசன் முதலிய எல்லோரும் வழக்கம்போல் புகழ்ந்தார்கள். பாணபத்ரையின் பத்னீ பாடிமுடிந்ததும் ஸ்ரீ ஸுந்தரேசுவாராகிய வித்வான் மிகக் களிப்புடன் “பேஷ், இதற்கு ஸமானமில்லை, வெகு திறமாயிருக்கிறது, இதற்கு முந்தி பாடியது இதற்கு உரைபோடக்காணாது” என்று சொல்லவே அரசன் முதலிய மைத்த வித்வான்கள் எல்லோரும் அவர்களை யறியாமலே “பேஷ் பேஷ்” என்று மிகவும் சிலாகித்தார்கள். அது மூன்றும் நாளானதால் பாணபத்ரனின் பத்னீ ஜெயித்துவிட்டதாகச் சொன்னார்கள். உடனே பாணபத்ரனின் பத்னீ புதிதாக வந்

தவளின் தோளில் ஏறி உட்கார்ந்துகொண்டு அச்சபையை ஒருதடவை சுற்றிவரும்படி செய்தாள். உடனே அரசனும் அவளுக்கு பலவித ஸம்மானங்கள் செய்து புதிதாக வந்தவனையும் ஊருக்கு அனுப்பிவிட்டு தான் மனதினுள் செய்திருந்த தீர்மானத்திற்கு விரோதமாக தன்னையறியாமல் பாணபத்ரனின் பத்னியை சிலாகிக்கும்படி செய்த வித்வானைப் பார்க்க அவரைக் காணமையால் அது ஸ்ரீ ஸுந்தரேசுவரரின் செயல் என்றறிந்து ஈசுவரனைத் துதிசெய்து பாணபத்ரன் பத்னியின் பக்தியைக் கொண்டாடி அரண்மனை போய்ச் சேர்ந்தான்.

45. பன்றிக்குட்டிகளுக்குப் பால்கொடுத்தது.

மதுரைக்கு ஸமீபத்தில் வைகையாற்றங்கரையில் குருதீர்த்தம் என்று ஒரு ஸ்தலமிருக்கிறது. அவ்விடத்தில் மிகவும் ஸாத்விகர்களான ஒரு சூத்ர தம்பதிகளிருந்தார்கள். அவர்கள் சிறந்த சிவபக்தர்கள். தர்மத்திலாஸ்தையுள்ளவர்கள். அவர்களுக்கு பன்னிரண்டு பிள்ளைகள் ஜனித்தார்கள். அப்பையன்களையெல்லாம் ஸரியானபடி சிக்ஷிக்காமல் செல்வமாய் அவர்களிஷ்டப்படி விட்டுவிட்டார்கள். அதனால் அவர்களுக்கு புண்யத்திலாஸக்தியுமில்லை. பாபத்தில் பயமுமில்லை. அவர்களுக்கு யௌவன பருவம் வந்ததும் அவர்கள் தந்தையர்களிறந்துவிட்டார்கள். பிறகு அவர்கள் யதேச்சையாய் திரிந்துகொண்டிருக்கையில் ஒருநாள் காட்டிற்கு வேட்டைக்காகச் சென்று அங்கு ஒரு முனீசுவரர் தபஸ் செய்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். உடனே அவரைப் பரிஹாஸம் செய்துகொண்டு கைகொட்டிச் சிறித்து, சிறு கல்களாலும், மண்ணாங்கட்டிகளாலும் அவரை அடித்தார்கள். அதனால் தபஸ் கலைந்து அவர் கண்விழித்துப் பார்த்ததும் அந்தப் பையன்களுடைய சேஷ்டைகளைக் கண்டு கோபங்கொண்டவராய் அவர்களை பன்றிக்குட்டிகளாகப் பிறக்கும்படிக்கும், பிறந்தவுடன் பெற்றோர்களிறந்து பாலுக்குத் தவிக்கும்படிக்கும் சபித்தார். அந்த சாபத்தைக் கேட்டதும் அந்தப் பையன்கள் மிகுந்த பயம்கொண்டு அம்முனிவரை நமஸ்கரித்து தாங்கள் செய்தது தவறென்றும், தெரியாத்தனத்தால் செய்துவிட்டதாயும், அதைப் பொருத்தருளவேண்டுமென்றும், தங்களுக்கு சாபவிமோசனம் செய்யவேண்டுமென்றும் வெகுவாக மன்றாடினார்கள். அந்த முனீசுவரரும் அவன்களிடத்தில் மனமிரங்கி அவன்கள் பன்றிக்குட்டியாகப் பிறந்து தந்தையர்களிறந்ததும் ஸாக்ஷாத் ஸுந்தரேசுவரரே பன்றிரூபமாக வந்து அவர்களுக்குப் பால்கொடுத்து வளர்த்து பிறகு இஹலோகத்திலும் ஆமுஷ்மிகத்திலும் ஸுகத்தைக் கொடுப்பாரென்றும் சொன்னார். அந்த சாபத்தின் பலனாக அந்தப் பையன்கள் பன்னிருவரும் அவ்வண்ணமே அடுத்த காட்டிலுள்ள பன்றியாசனுக்கு பன்னிரண்டு குட்டிகளாய்ப் பிறந்தார்கள். அவர்கள் பிறந்த சிறிது நாட்களுக்குள் பாண்டியவாசனாகிய ராஜராஜன் வேட்டைக்கு வந்து அந்த பன்றியாசனையும் அதன் பத்னியையும் கொன்றுவிட்டான். ஒரு சாபவசத்தால் அந்த ஜன்மத்தையடைந்திருந்த பன்றியாசதம்பதிகள் உடனே வித்யாதர ரூபத்தையெடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ச் சென்றுவிட்டன. அந்தப் பன்றியாசனின் சரீரமானது கல்லாக மாறி இன்றும் பன்றிமலையென்று வழங்கிவருகிறது. பாண்டியவாசன் வேட்டை முடிந்து ஊருக்குத் திரும்பி வந்தபிறகு ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரர் உல்லாஸமாய் அந்தக் காட்டின் வழியாய் ஒருநாள் உலாவும் ஸமயத்தில் அந்த பன்றிக்குட்டிகள் தவிப்பதைக்கண்டு மீனாக்ஷிதேவியானவள் மனமிரங்கி

ஈசுவரனைப் பார்த்து அவைகளை ரக்ஷிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொண்டாள். ஈசுவரனும் அவ்வார்த்தைக்கிணங்கி தாமே அந்தக் குட்டிகளின் தாயார் வேஷத்தைத் தரித்துக்கொண்டு அவைகளுக்குப் பால்கொடுத்து அவைகளை ஜாக்ரதையாக அந்தப் பன்றிமலையில் ஒரு குகையில் வைத்து வளரும்படி செய்தார்.

46. பன்றிக்குட்டிகளை மந்திரியாகச் செய்தது.

எப்பொழுது அந்தப் பன்றிக்குட்டிகளுக்கு ஈசுவரன் தாம் பால் கொடுத்து ரக்ஷிக்கத் தலைப்பட்டாரோ அப்பொழுது அவைகள் வரவர சிறந்த ஞானத்துடன் கூடினவைகளாய் முகம் மட்டில் பன்றிமாதிரியிருந்துகொண்டு மைத்த சரீர முழுமையும் மனுஷ்யாகிருதியாக வளர்ந்து யௌவனமடைந்தார்கள். எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவர்களானார்கள். இப்படியிருக்கையில் ஒருநாள் ஸ்ரீ ஸௌந்தரேசுவரர் ராஜராஜபாண்டியனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றி "உன்னால் கொல்லப்பட்ட பன்றிராஜன்தான் இப்பொழுது பன்றிமலையாக இருக்கிறது. அம்மலையின் குகையில் அதன் குட்டிகள் பன்னிரண்டும் அவைகளுக்குப் பூர்வஜன்மத்தில் ஏற்பட்ட முனி சாபத்திலிருந்தும் எம்மால் விடுவிக்கப்பட்டு எம்மிடம் பால்குடித்ததால் சிறந்த ஞானத்தையுமடைந்து மனுஷ்யரூபத்துடன் வளர்ந்துவருகிறார்கள். அவர்களை நீ கூட்டிவந்து உனக்கு மந்திரியாக வைத்துக்கொண்டால் எல்லா க்ஷேமமுமுண்டாகும்" என்று சொன்னார். உடனே ராஜராஜனும் அவ்வண்ணமே அவர்களை அக்குகையிலிருந்து அழைத்துவந்து மந்திரி பதவிகளிலமர்த்தி அவர்களுக்குக் கல்யாணமும் செய்துவைத்தான். அவனுடைய ராஜயம் ஸுபிக்ஷமாய் மேன்மேலும் விருத்தியடைந்தது. ஐசுவர்யங்களெல்லாம் பொங்கிற்று. கடைசியில் பன்னிரண்டு மந்திரிகளுடன் ராஜராஜனும் சிவஸாயுஜ்யத்தையடைந்தான்.

47. பரத்வாஜ பக்ஷிக்கு மந்திரோபதேசம் செய்தது.

உலகத்திலுள்ள எல்லா பக்ஷிஜாதிகளுள்ளும் கஞ்ஜரீடம் என்று சொல்லப்படும் பரத்வாஜ பக்ஷியானது மிக அல்பமான பலமுள்ளது. அதனாலேயே கூர்மையான மூக்குள்ள இதரபக்ஷிகள் அதைக்கண்டால் குத்தி மிக ஹிம்ஸைசெய்வது வழக்கமாயிருந்தது. அதற்காக பயந்துகொண்டு பரத்வாஜபக்ஷிகள் எப்பொழுதும் மரப்பொந்துகளிலேயே தங்கிக்கொண்டு வெளியில் அதிகமாக ஸஞ்சரிக்காமலிருக்கும். ஒரு ஸமயம் பூர்வஜன்மத்தில் எவ்வளவோ தர்மங்கள் செய்த ஒரு புண்யவான் ஏதோ ஒரு பாபவிசேஷத்தால் இந்த பரத்வாஜபக்ஷியாகவந்து பிறந்தார். அவர் அந்த பக்ஷிவர்க்கத்தின் துர்ப்பலததைப் பார்த்து மிக்க மனவருத்தமுற்று அதை எப்படியாவது நிவர்த்திக்கவெண்ணங்கொண்டு பூர்வஜன்மவாஸனையால் எப்பொழுதும் ஈசுவரனை தியானம் செய்துகொண்டு ஒரு மரத்திலுட்கார்ந்திருந்தார். அச்சமயம் அம்மரத்தின் கீழ் ஒரு பிராமணர் ஹாலாஸ்யக்ஷேத்திரத்தினுடையவும், ஹேமபத்மாகர தீர்த்தத்தினுடையவும், ஸ்ரீ ஸௌந்தரேசுவரருடையவும் மஹிமைகளை வெகுவாக எடுத்து உரக்கச் சொல்லிக்கொண்டு போனார். அதைக்கேட்டதும் அம்மரத்திலிருந்த பரத்வாஜ பக்ஷியானது உடனே மதுரைக்குச் சென்று பொத்தாமரையில் ஸ்நானம் செய்து ஸ்ரீ ஸௌந்தரேசுவரரைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தது. இவ்வாறே பிரதி

தினமும் மூன்று வேளையிலும் செய்துவருகையில் ஈசுவரனுக்கு அதனிடத்தில் இரக்கமுண்டாய் அதற்கு பிரஸன்னராகி மூன்று அக்ஷரங்களுள்ள மிருத்யுஞ்ஜய மந்திரத்தை அதற்கு உபதேசம் செய்து இதை நீ பிரதிதினமும் காலைவேளையில் விடியுமுன் ஜபித்துவந்தால் உனக்கு நல்ல பலமுண்டாகும், அதற்குப் பிறகு உன்னிடம இதர பக்ஷிகள் வந்து ஹிம்ஸிக்காது. கடைசியில் உனக்கும் நல்லகதியுண்டாகும். இதை உன்னினத்தாருக்கும் நீ உபதேசிக்கலாம்'' என்று சொன்னார். அதைக்கேட்டானந்தித்து அந்த பரத்வாஜபக்ஷி அவ்வாறே அந்த மிருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்து ஸித்தியடைந்து நல்ல வலுவுடனும் தீக்ஷ்ணமான மூக்குடனும் கூடினதாக ஆய்விட்டது. அதுமுதல் அதனிடத்தில் பயந்துகொண்டு இதர பக்ஷிகள் நெருங்குவதில்லை. அதுவும் தன்னினத்தாருக்கெல்லாம் அந்த மந்திரத்தை உபதேசம் செய்துவிட்டது. அவைகளின் வலுவினால் அவைகளுக்கு அதுமுதல் "வலியன் குருவி'' என்று பெயருண்டாயிற்று. இப்பவும் காலைவேலைகளில் இந்த வலியன் குருவிகள் கத்துவதை கவனித்தால் மிருத்யுஞ்ஜய மந்திரத்தின் அக்ஷரங்கள் மாதிரி கேட்கும்.

48. நாரைக்கு முக்தி கொடுத்தது.

மதுரைக்கு ஸமீபத்தில் ஓர் குளத்தில் ஒரு நாரை வஸித்தது. காலக்கொடுமையினால் குளத்தின் ஜலம் வற்றிப்போகவே அந்த நாரைக்கு ஆகாரத்துக்கு மீன்களகப்படாமல் அடுத்த காட்டுக்குச் சென்றது. அக்காட்டில் அநேகம் தபோதனர்கள் வஸித்ததால் அங்கு சென்றதுமே அந்த நாரைக்கு நல்லபுத்தியுண்டாயிற்று. அங்குள்ள குளத்தில் பிரதிதினமும் மூன்றுவேளையும் அந்த தபோதனர்கள் வந்து ஸ்நானத்துக்காக கழுத்தளவு ஜலத்தில் இறங்குவதையும அவர்கள் தலைகளிலும் ஜடையிலும் மீன்கள் துள்ளி விளையாடுவதையும் கண்டு அவைகளின் பாக்கியத்தை மெச்சிக்கொண்டு பக்கத்திலிருந்த வேறொரு குளத்துக்குச் சென்றது. அங்கு மத்தியிலிருந்த நீராழிமண்டபத்தில் அந்த தபோதனர்கள் மத்தியான வேளைகளில் வந்து உட்கார்ந்து புராணம் வாசிப்பதையும் அதில் சொல்லியிருக்கும் ஹாலாஸ்ய மாஹாத்மியத்தையும் செவியுற்றது. உடனே அந்த நாரையானது மதுரையையடைந்து பொத்தாமரையில் ஸ்நானம் செய்தது. அதிலுள்ள மீன்களைப் பார்த்ததும் ஆகாரமாக உட்கொள்ள எண்ணங்கொண்டது. ஆனால் உடனே அவ்வெண்ணத்தைத் தடுத்து ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை பிரதக்ஷிணம் செய்து துதிசெய்தது. ஸ்ரீ ஸுந்தரேசரும பிரஸன்னராகி அது கேட்டுக்கொண்டபடி பொத்தாமரையில் அதுமுதல் மீன்முதலிய ஜலஜந்துக்கள் இல்லாமலிருக்கும்படி வரம் கொடுத்து அந்நாரைக்கு முக்தியும் கொடுத்தருளினார்.

49. ஹாலாஸ்ய நகரத்தைத் திரும்பவும் நிர்மாணம் செய்வித்தது.

ராஜாராஜபாண்டியனுக்குப்பிறகு இருபத்திரண்டு பாண்டியராஜாக்கள் அரசுசெலுத்தியபின் கீர்த்தி விபூஷணன் என்னும் பாண்டியன் அரசனானான். அவன் காலத்தில் ஸமுத்திரம் கரைகடந்து பொங்கி யுகாந்தப்பிரளயம் உண்டாய் உலகமெல்லாம் அழிந்துபோய்விட்டது. ஆனால் அச்சமயத்திலும் ஸ்ரீமீனாக்ஷிஸுந்தரேசுவராலயமும் ஹேமபத்மாகர தீர்த்தமும் நாசமடையவில்லை. பிறகு ஈசுவரனனவர் தமது கருணையால் மீளவும் முன்போல் பூமியில்

பிராணிகளை ஸ்ருஷ்டித்து சேரசோழபாண்டிய வம்சங்களையும் உண்டாக்கினர். அந்த பாண்டியவம்சத்திலுதித்த வம்சசேகரபாண்டியனென்பவன் மதுரையை ஆளுங்காலத்தில் அவனுக்கு அந்நகரை பிரளயகாலத்துக்கு முன்னிருந்ததுபோல் கட்டவேணுமென்ற புத்திதோன்றி ஸ்ரீ ஸுந்தரேசுவரரை நகரத்தின் முந்திய எல்லையை தனக்கு காண்பிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க ஈசுவரனும் தமக்கு ஆபரணமாயிருந்த ஒரு ஸர்ப்பத்தை அந்நகரத்தின் பழய எல்லையைக் காண்பிக்கும்படி ஆக்ஞாபித்தார். உடனே அந்த ஸர்ப்பமானது கிழக்கு முகமாக ஒரு யோஜனைதூரம் சென்று அங்குள்ள திருப்பூவன க்ஷேத்ரத்தில் தன் வாலை வைத்து பிரதக்ஷிணமாக தெற்கே திருப்பரங்குன்று வழியாகச் சென்று மேற்கே ஸ்ரீபத்ரிகாபுரம் எனப்படும் திருவேடகத்தைக் கடந்து வடக்கே விருஷபாத்ரி மூலமாய்த் திரும்பி தனது முகத்தை கிழக்கேயுள்ள தன் வாலினிடமே கொண்டுவந்தது. இவ்வாறு நான்கு எல்லைகளையும் வம்சசேகரபாண்டியனுக்குத் காண்பித்துவிட்டு முன்போல் ஈசுவரனிடம் சென்று நமஸ்கரித்து புதிதாக நிர்மாணம் செய்யப்படும் நகரத்துக்குத் தன் பெயர் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்க ஈசுவரனும் அப்படியே ஆகலாமென்றுரைக்க முன்போல ஈசுவரனுடைய புஜங்களுக்கு அலங்காரமாகப்பொருந்திவிட்டது. வம்சசேகரபாண்டியனும் மதுரா நகரத்தை குறிப்பிடப்பட்ட நான்கெல்லைக்குள் விஸ்தாரமாக நிர்மாணம் செய்து அதற்கு ஈசுவரன் ஆக்ஞைப்படி "ஹாலாஸ்யம்" (ஹாலம் என்றால் விஷம், ஆஸ்யம் என்றால் முகம்; ஹாலாஸ்யம் என்றால் விஷத்தையுடைய முகம் அல்லது ஸர்ப்பம் என்று பொருள்) என்று பெயரிட்டு அங்கே நெடுநாள் ராஜ்யபாரம்செய்தான். ஹாலாஸ்யம் என்னும் ஸம்ஸ்கிருதபதத்தின் தமிழ்தான் திருஆலவாய் எனப்படுகிறது.

50. சோழராஜாவின்பேரில் அம்பு எய்தது.

மதுராபுரியில் வம்சசேகரராஜன் ஆண்டு வருகையில் சோழதேசத்தரசனாகிய விக்ரமசோழனென்பவன் திடீரென்று பாண்டியநாட்டின்பேரில் படையெடுத்து வந்தான். எதிர்பார்க்காத ஸமயத்தில் படையெடுத்துவந்த சோழனை எவ்வாறு ஜயிப்பது என்று மிகவும் மனத்தளர்ச்சியடைந்தவனாய் பாண்டியவரசன் ஸ்ரீஸுந்தரேசுவரர் ஸன்னதிக்குச் சென்று அவரைப் பலவாறாகத் துதிசெய்து பாண்டியராஜ்யம் முழுமையும் அவருடையதென்றும் அவர் தான் ராஜாவென்றும் தான் அவருடைய ஸேவகனென்றும் ஆனதால் அவர் தான் எவ்விதத்திலாவது படையெடுத்து வந்திருக்கிற சோழஸைன்யத்தை ஜயிக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்தான். ஈசுவரனும் அவனுக்கு தேர்தல் சொல்லி ஸைன்யங்களுடன் சோழராஜாவை எதிர்த்துச் செல்லும்படிக்கும் அவனுக்கு ஜயம் உண்டாகுமென்றும் அநுக்ரஹித்து அனுப்பினர். அவ்வாறே அவன் ஸைன்யங்களுடன் எதிர்த்துச்சென்றதும் இரு ஸைன்யங்களுக்கும் மஹத்தான யுத்தம் நடந்தது. அப்பொழுது ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் ஒருயுத்தவீரன் மாதிரி ரூபமெடுத்துக்கொண்டு பாண்டியஸைன்யங்களுக்கு மத்தியில் எதிரிகளின்பேரில் பாணங்களைவிட்டார். அந்த பாணங்கள் ஒவ்வொன்றும் எதிரி ஸைன்யங்களை ஆயிரக்கணக்காக நாசம்செய்தன. இதைக்கண்ட சோழராஜன் அந்தபாணங்களை எடுத்துப் பார்க்கும்பொழுது அது ஒவ்வொன்றிலும் ஸுந்தரர்என்று பெயர் வெட்டியிருப்பதைப் பார்த்து மிகவாச்சரியங்கொண்டு பக்தவத்ஸலரான ஸ்ரீஸுந்தரேசுவரரே

பாண்டியசைன்யத்தில் வந்திருக்கிறதாகவும் அவர்போடும் அம்புகளில்தான் அம்மாதிரி பெயர் வெட்டப்பட்டிருக்கின்றன வென்றும் நிச்சயம்செய்துகொண்டு இனி தான் ஜயிக்க முடியாதென்று தன்னிடம் கூடவந்திருந்த சிற்றரசர்களையும் யுத்தத்தை நிறுத்தச் சொல்லி கட்டளையிட்டு தானும் ஸ்ரீஸுந்தரேசுவரரை துதிசெய்துகொண்டு திருமபினன். உடனே வம்சசேகரபாண்டியனும் தன் ஸைன்யங்களுடன் ஊர்வந்து சேர்ந்து ஈசுவரனை நமஸ்கரித்துச்சென்றான்.

51. சங்கவித்வான்களுக்கு சங்கப்பலகை கொடுத்தது.

முன்னொருகாலத்தில் பிர்ம்மதேவனனவர் காசி க்ஷேத்ரத்தில் விச்வேசுவரர் ஸன்னதியில் பத்து அச்வமேதயாகங்கள் செய்து கங்கை நதிக்கரையில் தசாச்வமேத கட்டத்தில் பிரதி அசுவமேதயாகம் முடிந்ததும் அவபிருதஸ்நானம் செய்துவந்தார். பத்தாவது யாகம் முடிந்து ஸ்நானத்திற்காக போகும்பொழுது அவருடைய பத்னிகளான காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதி என்னும் மூவர்களுள் ஸரஸ்வதி தேவியானவள் வழியில் வித்யாதரர்கள் பாடியகானத்தில் ஈடுபட்டு தாமதித்து விட்டாள். பிர்ம்மதேவனும் ஸ்நானகட்டம் போய்ச்சேர்ந்தும் சற்று காத்திருந்தும் ஸரஸ்வதி வாராமையைக்கண்டு காயத்ரீ ஸாவித்ரீ தேவதைகளுடன் பத்தாவது அவபிருதஸ் நானத்தைச் செய்து முடித்தார். பின்பு ஸரஸ்வதீதேவியானவள் வந்து தான் வருவதற்குள் என்ன அவஸரமென்று பிரம்மாவைக் கோபித்துக்கொண்டாள். வழியில் தாமதித்த பிசகோடு அனுவசியமாக கோபித்துக்கொள்வதும் சேர்ந்தவுடன் பிரம்மாவுக்கு கோபம் உண்டாய் அவளை நாற்பத்தெட்டு ஜன்மம் பூலோகத்திற்கு போகும்படி சபித்துவிட்டார். உடனே ஸரஸ்வதிதேவியானவள் பயந்து "ஹே நாதா, தவருதலை க்ஷமிக்கவேண்டும். அஜாயுள்ள (பிறப்பு என்பது இல்லாதவரான) தங்களுக்கு பத்னியான பிறகு என்னை பூலோகத்தில் பிறக்கச் சொல்வது தர்மமா. ஆதலால் எனக்கு கொடுத்த சாபத்திற்கு வேறுவழி காண்பிக்கவேண்டும்" என்று வெகுவாக மன்றாடினுள். பிர்ம்மாவும் மனமிரங்கி "நீ அக்ஷரரூபியானதால் உன்னுடைய ரூபங்களான 'அ' முதல் 'ஸ' வரையிலுள்ள நாற்பத்தெட்டு அக்ஷரங்களும் பூலோகத்தில் நாற்பத்தெட்டு கவிகளாக ஜன்மமெடுத்து ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தையடைந்து அங்குள்ள மூலலிங்கமாகிய ஸ்ரீ ஸுந்தரேசுவரரை தர்சித்து ஹகாரரூபியாகிய அந்த ஈசுவரனும் இக்கவிகளுக்கெல்லாம் அத்யக்ஷராக ஏற்பட்டு அங்கே சிறப்போடு விளங்கட்டும்" என்று சொன்னுர். அவ்வாறே நாற்பத்தெட்டு அக்ஷரங்களும் பூலோகத்தில் தாம்ரபர்ணீ தீரத்தில் நக்கீரர், கபிலர், பரணர் முதலான நாற்பத்தெட்டு கவிகளாக ஜனித்தன. காலாந்தரத்தில் அந்த நாற்பத்தெட்டு கவிகளும் ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தை அடைந்தார்கள். அங்கு வம்சசேகரபாண்டியனைக் கண்டு தங்களுடைய பாண்டித்யத்தைக் காண்பித்தார்கள். அவ்வரசனும அவர்களுடைய தேஜஸ்ஸையும் பாண்டித்யத்தையும் கண்டு மெச்சி அவர்களுக்கு கோயிலிலேயே ஒரு மண்டபம் தனியாக கட்டுவித்து அதிலிருந்துகொண்டு எப்பொழுதும் ஈசுவரனை தர்சனம் செய்வதும் கவிகள் செய்வதுமாகவிருக்கும்படி ஏற்படுத்தினன். இதைக்கண்டதும் ராஜஸதஸ்ஸில் ஏற்கனவே விளங்கிவந்த வித்வான்களுக்கெல்லாம் பொருமையுண்டாகி இந்த நாற்பத்தெட்டு பேர்களையும பலவாருக இகழவாரம்பித்தார்கள். புதிய வித்வான்களும் அவர்களை ஞானத்தில் வென்றூர்கள் என்றாலும பிரதிதினமும் அவர்களால் செய்யப்படும்

உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஸ்ரீஸுந்தரேசுவரரிடம் சென்று விஷயத்தைச் சொல்லி தங்களுக்கு உயர்வைக் காண்பிக்கும்படியாக ஒரு ஆஸனம் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். உடனே ஈசுவரனும் தானே ஹகாரரூபியான வித்வானாக லிங்கத்திலிருந்து ஆவிர்ப்பவித்து ஒருமுழம் சதுரமுள்ள அக்ஷரரூபியான ஒரு பலகையை அப்புலவர்களுக்குக் கொடுத்து "இதைக் கொண்டுபோய் உங்களுடைய மண்டபத்தில் நடுவில் போட்டுக்கொண்டு அதில் ஒவ்வொருவராய் உட்காருங்கள். உங்கள் நாற்பத்தெட்டு பேருக்கும் இடம் கொடுக்கும். அதற்குமேல் உங்களுக்கு ஸமமான ஞானமில்லாத எவர் வந்தாலும் இடம் கொடுக்காது. அதனால் உங்களுடைய உயர்வு வெளியாகும்" என்று சொல்லி மறைந்தார். உடனே அந்த சங்கப்புலவர்களும் மிகவும் ஸந்தோஷமனத்தினர்களாய் அப்பலகையை எடுத்து வந்து தங்களுடைய மண்டபத்தின் நடுவில் போட்டு பூஜித்து உபசரித்து தங்களுக்குள் முதல்வரான நக்கீரரை முதன்முதலில் அதில் உட்கார்த்திவைத்தார்கள். உடனே அந்தப்பலகை இன்னும் ஒரு முழநீளம் வளர்ந்தது. பிறகு அதில் கபிலர் உட்கார்ந்தார். மறுபடி ஒரு முழம் வளர்ந்தது. அதில் பாணர் உட்கார்ந்தார். இம்மாதிரியே ஒவ்வொரு முழமாக பலகை வளர வளர ஒவ்வொரு கவியாக அதில் உட்கார்ந்து நாற்பத்தெட்டு கவிகளும் உட்கார்ந்ததும் பலகை வளருவது நின்றது. வேறு ஒரு வித்வான்களுக்கும் அந்தப்பலகை இடம் கொடுக்கவில்லை. இதைக் கண்டு எல்லோரும் வியந்து இந்தப் புலவர்களை கௌரவித்தார்கள். இவ்விதம் சிறிது காலம் சென்றபின் இந்த நாற்பத்தெட்டு கவிகளும் செய்த பாடல்களையெல்லாம் ஒன்றாக குவிக்கப்பட்டிருந்தவைகளை எடுத்துப் பிரித்துப் பார்க்கும் ஸமயத்தில் இன்னார் செய்தது இன்னது என்று தெரியாமல் அவர்களுக்குள் அது விஷயமாய் கலகம் ஏற்பட்டது. உடனே ஈசுவரன் முன் போலவே கவிரூபமாகவந்து அவர்கள் முன் தோன்றி கலகத்திற்குக் காரணமென்னவென்று கேட்க அவர்கள் விஷயத்தைச் சொன்னார்கள். ஈசுவரனும் அந்தப் பாடல்களை யெல்லாம் எடுத்து ஒவ்வொருவர் செய்ததையும் தனித்தனியாகப் பிரித்து அவரவரிடம் கொடுத்துவிட்டார். இதைக்கண்டு வியப்படைந்து அச்சங்கப் புலவர்கள் அந்தக் கவியாக வந்த ஈசுவரனை தங்களுக்கெல்லாம் மேம்பட்ட முதல் கவியாகவிருக்கவேண்டுமென்றும் தங்களுக்கு நடுவில் உட்காரவேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள். உடனே அந்த சங்கப்பலகையின் நடுவில் தங்கமயமான ஒரு ஆஸனம் தோன்ற அதில் ஈசுவரன் அமர்ந்தார். இதனால் அந்தப் புலவர்களுக்கு மேன்மேலும் பிரஸித்தியுண்டாயிற்று. பிறகு ஈசுவரனும் அந்தப் புலவர்களுடன் பலவிதமான ஸம்வாதங்கள் செய்துவிட்டு தாம் ஈச்வரன் என்பதை அசரீரிவாக்கு மூலமாய் அவர்களுக்கு தெரிவித்துவிட்டு அந்தர்த்தானமானார்.

52. ஸுந்தரநாதனுக்கு தங்க முடிப்புக் கொடுத்தது.

வம்சசேகர பாண்டியனுக்குப்பிறகு வம்சசூடாமணி பாண்டியனென்று ஒரு அரசனிருந்தான். அவன் எப்பொழுதும் ஸ்ரீஸுந்தரேசுவரரை சம்பக புஷ்பங்களால் பூஜை செய்து சம்பக ஸுந்தரரென்று ஸ்தோத்திரமும் செய்துவந்ததால் அவனுக்கு சம்பகபாண்டியனென்று பெயருண்டாயிற்று. ஒரு நாள் அவ்வரசன் அரன்மனையில் அந்தப்புரத்தில்

தனது மஹிஷிகளுடனுட்கார்ந்திருக்கையில் ஒரு ஸ்திரீயின் தலைமயிரை அவிழ்த்து விட்டதும் மிகவும் அதிசயமான ஸுகந்தம் வீசியது. அதை யுணர்ந்து அரசன் மிகவும் வியந்து அவளுடைய சிரஸில் புஷ்பங்கள் ஒன்றுமில்லாதிருக்கக்கண்டு இந்த அதிமதுரமான வாஸனை எந்த புஷ்பத்தினுடையது எங்கிருந்து வீசுகிறது என்று யோசித்துத்தனது மனதிலுள்ள எண்ணத்தைப பாடல் மூலமாக தெரிவிக்கிறவருக்கு ஆயிரம் பொன் கொடுப்பதாகச்சொல்லி அந்த ஆயிரம் பொன்னையும் ஒரு முடிப்பாகக்கட்டி சங்கப்புலவர்கள் மண்டபத்தில் தொங்கவிட்டான். உடனே அந்த சங்கப்புலவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடல்செய்து அரசனிடம் சென்று வாசித்தார்கள். அரசன் அதையெல்லாம் தன் எண்ணத்தை வெளியிடவில்லையென்று மறுத்துவிட்டான். இச்சமயத்தில் மிகவும சிவபக்தியுள்ள குருக்கள் வம்சத்திலுதித்த ஒரு ஏழை பிரம்மச்சாரி ஸுந்தரநாதன் என்று பெயருள்ளவன் ஸ்ரீஸுந்தரேசுவரரிடம் வந்து தனது வறுமையால்தான் விவாஹம்செய்துகொள்ள முடியாமலிருக்கிறதென்றும் அதனால் ஈசுவரனது லிங்கத்தைத் தொட்டு அபிஷேகம் பூஜைமுதலியது செய்யமுடியாமலிருக்கிறதென்றும் தற்சமயம் அரசன் கட்டித் தொங்கவிட்டிருக்கும் ஆயிரம் பொன்னையும் தான் எடுத்துக்கொள்ளும்படி அந்தப் பாட்டை தனக்கு எழுதிக் கொடுத்துவிட்டால் தான் அதைக்கொண்டு விவாகம் செய்துகொண்டுவந்து ஈசுவரனையாராதிப்பதற்கு அனுகூலமாயிருக்குமென்றும் அவ்விதம் ஈசுவரன் தனக்கு மனமிரங்கி கிருபைசெய்யவேண்டுமென்றும் வெகுவாக மன்றாடினான். ஈசுவரனும் அவனது பக்திக்கிணங்கி கவிரூபமெடுத்து வெளிவந்து அவனுக்கு அடியில் கண்ட ஆர்யாசுலோகத்தையெழுதிக்கொடுத்தார்.

जानासि पुष्पगन्धान्भ्रमर त्वं ब्रूहि तत्त्वतो मेऽद्य ।
देव्याः केशकलापे तुल्यो गन्धेन किं गन्धः ॥

உடனே அந்த பிரம்மசாரி அதையெடுத்து சங்கப்புலவர்களிடம சென்று அவர்களுக்குக் காண்பித்தான். அவர்கள் அதை மிக சிலாகித்து எல்லோருமாக அரசனிடம் சென்றார்கள். அரசனும் அந்த சுலோகத்தைக்கேட்டு தனது அபிப்ராயத்தை அது வெளியாக்கிவிட்டதாகமெச்சி அது யார் செய்ததென்று கேட்டான். எல்லோரும் பிரம்மசாரி பையனைக் காண்பிக்க அவனைப்புகழ்ந்து அந்தப் பொன்முடிப்பை அவனை யெடுத்துக்கொள்ளும்படி சொன்னான். அவ்வாறே அந்த பிரம்மசாரியும் அப்பொன் முடிப்பை யெடுக்கப்போகையில் மாத்ஸர்யத்தால் நக்கீரர் என்னும் கவியானவர் அவன் சொன்ன சுலோகத்தில் தப்பு இருப்பதாகவும் அந்த முடிப்பை எடுக்கக் கூடாதென்றும் தடுத்தார். உடனே அந்த ஸுந்தரநாதன் ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் சென்று முறையிட்டான். ஈசுவரனும் கவிரூபமெடுத்துக்கொண்டு ஸுந்தரநாதனுடன் சங்கப்புலவர்கள் மண்டபம் வந்து தன் சிஷ்யன் வசம் தான் கொடுத்தனுப்பிய பாட்டுக்கு யார் என்ன குற்றம் சொல்லுகிறதென்று கேட்டார். அதற்கு நக்கீரர் எழுந்து தான்தான் சொல்வதாகவும் அந்த சுலோகத்தில் அர்த்தத்தில் தப்பிருப்பதாகவும் ஸ்திரீகளின் தலை மயிர்களுக்கு செயற்கைவாஸனையேயொழிய இயற்கைவாஸனை கிடையாதென்றும் அவ்வாறு இருப்பதாக சொன்னது தப்பென்றும் சொன்னார். பத்மினி முதலான உத்தமஜாதிப் பெண்களுக்குக்கூட இயற்கைவாஸனை கிடையாதோவென்று ஈசுவரன் கேட்டதற்கு கிடையாதென்று நக்கீரர் உரைத்தார். தேவ

ஸ்தீரீகளுக்கு இயற்கைவாஸனை கிடையாதாவென்றார் ஈசுவரன். அவர்களுக்கு தேவபுஷ்பங்களான பாரிஜாதம முதலியவைகளின் செயற்கையால்தான் வாஸனையென்றார் நற்கீரர். ஸாக்ஷாத் பரதேவதையான கௌரீக்கும் அப்படித்தானேவென்று ஈசுவரன் சினந்து கேட்டதற்கும் அப்படித்தானென்று நற்கீரர் பதிலுரைக்கவே ஈசுவரனுக்குக் கோபமுண்டாய் நெற்றிக்கண்ணைக் கொஞ்சம் திறந்தார். இதைக்கண்ட கவிகளெல்லாம் அவர் பரமசிவன் என்பதையறிந்து பயந்து ஓடினார்கள். நற்கீரரோவெனின் கர்வம்பிடித்தவராய் எதிரில் நின்றுகொண்டு தான் சொன்னதையே பிடிவாதமாகச் சொன்னார். உடனே ஈசுவரனுடைய நெற்றிக் கண்ணினக்னியால் தஹிக்கப்படவாரம்பிக்கவே அதைப் பொறுக்கமாட்டாமல் தண்ணீர் தண்ணீர் என்று கதறிக்கொண்டு பொத்தாமரைக்குளத்தில் போய் குதித்தார். ஈசுவரனும் அந்தர்த்தானமானார்.

53. நற்கீரரைக் கரையேற்றியது.

நற்கீரருக்கு நேர்ந்த கதியைக்கண்டு இதர சங்கப்புலவர்களெல்லாம் மிகவும் மனவருத்தமுற்று ஸ்ரீஸுந்தரேசுவரரிடம் சென்று அவரை வெகுவாகத் துதிசெய்து நற்கீரர் செய்தது பெரியதவறென்றும் அதை எவ்வாற்றானும் பொருத்தருளவேண்டுமென்றும் அவரும் பொத்தாமரைக்குளத்திலிருந்தபடியே தன் பிசகை யறிந்தவராய் ஈசுவரனையெப்பொழுதும் துதிசெய்தவண்ணமாயிருக்கிறாரென்றும் அவரைக் காப்பாற்றித் தங்களை யனுக்ரஹிக்கவேண்டுமென்றும் திரும்பத்திரும்பப் பிரார்த்தித்தார்கள். ஈசுவரனும் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி அம்பாளுடன்கூட பொத்தாமரையின் கரைக்கு வந்து நற்கீரர் செய்த ஸ்தோத்ரத்தைக் கேட்டு ஸந்தோஷித்து அவரைத்தாமே கைகொடுத்துக் கரையேற்றினார். உடனே எல்லோரும் ஸ்ரீமீனாக்ஷிஸுந்தரேசுவரரைப் பலவாறாக ஸ்தோத்ரம் செய்ய அவர் அந்தர்த்தானமானார்.

54. நற்கீரருக்கு தமிழிலக்கண ஸூத்ரங்களுபதேசம் செய்வித்தது.

ஈசுவரனுடைய நெற்றிக்கண் ஜ்வாலைபட்டுத்தான் மன்மதன் மாதிரியாக எறிந்து சாம்பலாகப்போகாமல் தப்பித்தது அந்த பொத்தாமரைக்குளத்தீர்த்தத்தின் மஹிமையென்று தெரிந்துகொண்ட நற்கீரர் அன்றுமுதல் பிரதிதினமும் மூன்று வேளையும் அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதும் ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பூஜிப்பதுமாக நியமமாக இருந்து வந்தார். அவருடைய பூஜையில் ஸந்தோஷமடைந்து ஈசுவரனவர் அவருக்குத் தமிழில் இலக்கண ஞானமில்லாமையால்தான் அவர் பிறரிடம் பொறாமைப் படுகிறாரென்று அவருக்குத் தமிழிலக்கணஸூத்ரங்களை நன்று கற்றுக்கொடுக்கும்படி அகஸ்தி மஹர்ஷியையேவினார். அவரும் அவ்வாறே நற்கீரருக்கு தமிழிலக்கண சாஸ்திரத்தில் நல்ல ஞானத்தைக் கல்பித்தார். இலக்கண பண்டிதரானபிறகு நற்கீரர் தான் முந்திசெய்த பாடல்களிலிருந்த தப்புகளையெல்லாம் திருத்திக்கொண்டு மேன்மேலும் ஈசுவரனை புதிய இனிமையான கவிகளால் துதிசெய்துகொண்டு காலம் கழித்துவந்தார்.

55. சங்கப்புலவர்களுக்குள் ஏற்பட்ட கலகத்தைத்தீர்த்தது.

அகஸ்தியமஹரிஷியிடம் நற்கீரர் கற்றுவந்த இலக்கண ஸூத்ரங்களுக்கு சங்கப்புலவர்கள் ஒவ்வொருவரும் விருத்திசெய்தார்கள். செய்துமுடித்ததும ஒவ்வொருவரும் தான்

செய்ததுதான் மேம்பட்டது, எல்லாவற்றையும்விட ரம்யமாயுள்ளது என்று சொன்னார்கள். இதனால் அவர்களுள் கலகம் ஏற்பட்டது. உடனே எல்லோருமாக ஸ்ரீஸுந்தரேசுவரரிடம்சென்று அவரை தங்கள் கலகத்தை தீர்த்துவைக்கும்படி பிரார்த்தித்தார்கள். ஈசுவரனும் அவர்கள்முன் தோன்றி அவ்வூரில் சிறந்த சிவபக்தர்களான ஒரு வைசிய தம்பதிகள் இருப்பதாகவும் அவர்களுக்கு ஸ்கந்தருடைய அம்சமான ஒரு புத்ரன் இருப்பதாகவும் அவன் ஊமையென்றும் ஆனால் மஹா ஞானியென்றும் அவனிடம்போய் விருத்திகளையெல்லாம் வாசித்துக்காண்பித்தால் அவன் எதை சிலாக்கிக்கிறானோ அதுவே திறமானது என்றும் சொன்னார். அவன் ஊமையானதால் எவ்வாறு சொல்லுவன் என்று புலவர்கள் கேட்டதற்கு ஈசுவரன் "நீங்கள் வாசிக்கும்பொழுது யாருடைய விருத்தியில் அவனுடைய சரீரம் மயிர்க்கூச்செரிந்து கண்களில் ஆனந்தக் கண்ணீர்பெருகுகின்றதோ அந்த விருத்தியே திறம் என்று அறியுங்கள்'' என்று சொல்லி மறைந்தார். அவ்வண்ணமே சங்கப்புலவர்களும் அந்த ஊமையைக் கண்டுபிடித்து அவனை கோயிலிலுள்ள தங்கள் மண்டபத்திற்கு அழைத்துவந்து உபசரித்து உட்காரவைத்து தங்கள் விருத்திகளையெல்லாம் ஒவ்வொன்றாக வாசித்துக்காண்பித்தார்கள். அவைகளில் நக்கீரர், கபிலர், பாணர், இவர்கள் மூவரும் செய்த விருத்திகளை வாசிக்கும்பொழுது அந்த ஊமையின் சரீரம் புளகாங்கிதமாய் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. உடனே அவைகள் தான் திறமானவைகள் என்று தெரிந்துகொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம்போய் அவரை நமஸ்கரித்து தங்களுடைய கலகத்தை ஒழித்துக்கொண்டார்கள்.

56. சங்கப்புலவர்களுடன் வடமதுரைசென்றது.

சம்பகபாண்டியனுக்குப் பிறகு அனேக அரசர்கள் ஆண்டார்கள். அந்த வம்சத்தில் குலேச்வர பாண்டியன் என்றொருவன் அரசனாகவந்தான். அவன் மிகச்சிறந்த வித்வானாகயிருந்ததால் அவனுக்குச் சங்கப்பலகையில் இடம் கிடைத்தது. அவனும் சங்கப்புலவர்களுள் ஒருவராக விளங்கிவரும் நாளில் ஒருசமயம் இடைக்காட்டுஸித்தர் என்ற ஒரு மஹா வித்வான் மதுரைக்குவந்து ஹாலாஸ்யநாதரைப் பூஜித்து அவரனுக்கிரஹம் பெற்று சங்கப்புலவர்களுள் முக்கியரான கபிலருக்கு ஸ்நேகிதராய் அவருடன் குலேச்வர ராஜாவிடம் சென்று சில கவிகள் சொன்னார். அரசனோவெனின் அவரை உதாஸீனம் செய்து அவர் சொன்னபாடல்களில் தோஷங்களைக்கூறி அவரை அவமானப் படுத்திவிட்டான். உடனே அந்த இடைக்காட்டுஸித்தரும் சங்கப்புலவர்களுடன் கூட ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம்போய் முறையிட்டார். ஈச்வரனும் அரசன்செய்தது தவறு என்று உணர்ந்து அவ்வரசனுக்கு புத்தி கல்பிக்கவேண்டிய நிமித்தம் மீனாக்ஷிதேவியுடனும் சங்கப்புலவர்களுடனும் தாம் மதுரையை விட்டகன்று வடக்கே வைகையாற்றின் தென்கரையிலுள்ள வடமதுரை (உத்தர ஹாலாஸ்யம்) என்று சொல்லப்படும் க்ஷேத்திரத்துக்குச் சென்று அங்கு புதிதாக ஒரு கோயிலை நிர்மாணம்செய்துகொண்டு தங்கிவிட்டார். மதுரையில் மறுநாள் காலையில் குருக்கள் கோயிலுக்கு பூஜைக்குப்போய்ப் பார்க்கையில் அங்கு ஸ்ரீ ஸுந்தரேசுவரர் மூலலிங்கத்தைக் காணாமையால் மிகவும் பயந்து ஓடோடியும் சென்று அரசனிடம் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் அரசனும் திடுக்கிட்டு மூர்ச்

சித்து கீழேவிழுந்தான். மூர்ச்சைதெளிந்து எழுந்ததும் தான் செய்த குற்றம் இன்னதென்று தெரியாதவனாய்த் தவித்துக் கதறும்பொழுது சில பிராம்மணர்கள் வந்து வடமதுரையில் இதுவரையில் காணாத ஒரு அத்புதக்கோயில் நூதனமாகக்காணப்படுகிறதென்றும் அங்கு ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரரும் சங்கப்புலவர்களும் இருப்பதாகவும் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் குலேச்வர பாண்டியன் பரபரப்புடன் ஓடோடியும் வடமதுரை சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரைக்கண்டு அவர்முன்பாக தண்டம்போல் விழுந்து கண்களில் நீர் சொரிய வாய்விட்டலறி தான் செய்த அபராதங்கள் என்னவாயிருந்தபோதிலும் க்ஷமிக்கவேண்டுமென்று மன்றாடி எழுந்து கைகூப்பி பின்வருமாறு துதி செய்தான்.

महानीपारण्यान्तरकनकपद्माकरतटीमहेन्द्रानीताष्टद्विपधृतविमानोदवसितम् ।
महालीलाभूतिप्रकटितविशिष्टात्मविभवं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १ ॥

महामातङ्गासृग्धरवसनमद्रीन्द्रतनयामहाभाग्यं मत्तान्धककरटिकण्ठीरववरम् ।
महाभोगीन्द्रोद्यत्फणमणिगणालंकृततनुं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ २ ॥

महादुग्धाम्भोधौ मथनजवसंभूतमसितं महाहालं कण्ठे सकलभयभङ्गाय दधतम् ।
महाकारुण्याब्धिं मधुमथनदृग्दूरचरणं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ३ ॥

नमन्नालीकाक्षाम्बुजभवशुनासीरमकुटीलसन्माणिक्यांशुस्फुरदरुणपादाब्जयुगलम् ।
अमन्दानन्दाब्धिं हरिनयनपद्मार्चितपदं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ४ ॥

समीराहारेन्द्राङ्गदमखिललोकैकजनकं समीराहारात्मप्रवणजनहृत्पद्मनिलयम् ।
सुमीनाक्षीवक्त्राम्बुजतरुणसूर्यं सुमनसं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ५ ॥

नताघौघारण्यानलमनिलभुङ्नाथवलयं सुधांशोरर्धांशं शिरसि दधतं जह्नुसुतया ।
वदान्यानामाद्यं वरविबुधवन्द्यं वरगुणं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ६ ॥

दशास्याहंकारद्रुमकुलिशिताङ्गुष्ठनखरं निशानाथश्रीजिन्निजवदनबिम्बं निरवधिम् ।
विशालाक्षं विश्वप्रभवभरणापायकरणं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ७ ॥

अनाकारं हारीकृतभुजङ्गराजं पुरहरं सनाथं शर्वाण्या सरसिरुहपत्रायतदृशम् ।
दिनारम्भादित्यायुतशतनिभानन्दवपुषं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ८ ॥

उमापीनोत्तुङ्गस्तनतटलसत्कुङ्कुमरजःसमाहारात्यन्तारुणविपुलदोरन्तरतलम् ।
रमावाणीन्द्राणीरतिविरचिताराधनविधिं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ९ ॥

धरापाथःस्वाहासहचरजगत्प्राणशशभृत्सुराद्ध्वाहर्नाथाध्वरकरशरीरं शशिधरम् ।
सुराहारास्वादातिशयिनिजवाचं सुखकरं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १० ॥

धरापीठं धाराधरकलशमाकाशवपुषं धराभृद्दोर्दण्डं तपनशशिवैश्वानरदृशम् ।
विराजन्नक्षत्रप्रसवमुदरीभूतजलधिं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ ११ ॥

सुपर्णाङ्काम्भोजासनदृगतिदूराङ्घ्रिशिरसं सुपर्णाहारस्रक्सुरविटपिशाखायतभुजम् ।
अपर्णापादाब्जाहतिचलितचन्द्रार्धमकुटं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १२ ॥

मखाराति मन्दस्मितमधुरबिम्बाधरलसन्मुखाम्भोजं मुग्धामृतकिरणचूडामणिधरम् ।
नखाकृष्टेभत्वक्परिवृतशरीरं पशुपतिं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १३ ॥

सहस्राब्जैकोने निजनयनमुद्धृत्य यजते सहस्राख्यापूर्त्यै सरसिजकुशे येन कृपया ।
सहस्रारं दत्तं तपननियुताभं रथपदं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम ॥ १४ ॥

रथावन्याम्नायाश्वमजरथकारं रणपटुं रथाङ्गादित्येन्दुं रथपदधरास्त्रं रथिवरम् ।
रथाधारेष्वासं रथधरगुणं रम्यफलदं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १५ ॥

धराकर्षापास्ताप्रचुरभुजकण्डूयनजलं धराहार्यद्वैधीकरणहृतलोकत्रयभयम् ।
स्मराकाराहाराकलनपटुफालानलकणं महादेवं वन्दे मधुरशफराक्षीसहचरम् ॥ १६ ॥

ஈசுவரனும் இந்த ஸ்தோத்திரத்தில் ஈடுபட்டவராய் அவ்வரசனுக்கு பிரஸன்னராகி அசரீரவாக்கு மூலமாய் சொன்னதாவது "நீ காரணமில்லாமல் வித்யாகர்வத்தால் நமது பக்தனை இடைக்காட்டுஸித்தரை அவமானப்படுத்தியதால் நாம் சினங்கொண்டு இவ்வாறு இங்கு வந்தோம். நாம் ஹாலாஸ்யக்ஷேத்ரத்தையும் அங்குள்ள மூலலிங்கத்தையும் ஒருக்காலும் விட்டகலமாட்டோம் என்பது உனக்குத் தெரியும். இருந்தபோதிலும் உனக்கு புத்தி கல்பிக்கவேண்டி இதைச் செய்தோம். இப்பொழுது உனது ஸ்தோத்திரத்தால் பிரீதியடைந்தோம். திரும்பவும் முன்போல் மதுரை வருகிறோம்" என்று சொல்லி மறைந்தார். உடனே அவ்வரசனும் இடைக்காட்டுஸித்தரையும சங்கப்புலவர்களையும் வெகுவாக உபசரித்து தான் செய்தகுற்றங்களையெல்லாம் மன்னிக்கும்படி மிகவும் பிரார்த்தித்தான். ஈசுவரனும் முன்போலவே சங்கப்புலவர்களையும் இடைக்காட்டுஸித்தருடன் கூட்டிக்கொண்டு மதுரை வந்துசேர்ந்தார்.

57. செம்படவனைகச்சென்று வலையை வீசியது.

ஒருஸமயம ஸ்ரீ ஸுந்தரேசர் வேதாந்த தத்துவ விசாரத்தை எடுத்துப் பிரஸங்கித்து வருகையில் ஸ்ரீ மீனாக்ஷி தேவியானவள் அதை ஸாவதானமாய்க் கவனித்துக் கேளாமல் இருந்து விட்டதால் ஈசுவரன் கோபமகொண்டு அவளை தாழ்ந்த ஜாதியான செம்படவன் ஜாதியில் பிறக்கும்படி சபித்தார. உடனே ஸமீபத்திலிருந்த விநாயகரும் ஸுப்பிரமணியரும தாயாருக்காகப் பரிந்துகொண்டு அங்குள்ள சாஸ்திர புஸ்தகங்களையெல்லாம் விநாயகர் தனது துதிக்கையால் தூக்கி சமுததிரத்தில் வீசி யெறிந்துவிட்டார். ஸுப்பிரமணியர் வேதாந்த விசாரம செய்யும்பொழுது எவருக்கும் உங்களுடைய மாயையால் ஆலஸ்யம் உண்டாவது ஸகஜம் தானே ; இதற்காக ஏன் இவ்வளவு கோபம் என்று சொல்லி ஈசுவரன் கையிலிருந்த புஸ்தகத்தைப் பிடித்தெறிந்தார. ஈச்வரனும் கோபத்தால் ஸுப்பிரமணியரை வைசியகுலத்தில் ஊமையாகப் பிறக்கக்கடவாய் என்று சபித்தார். இவ்வாறு ஈச்வரன் எல்லோரிடத்திலும் கோபித்துககொண்டிருக்கும் ஸமயத்தில் நந்திகேசுவரர் எதிரில்வந்து நின்றார். அவரைக் கண்டதும் அவரிடமும் கோபம்கொண்டு அவரை ஸமுத்திரத்தில் ஒரு பெரிய மீனைகப்போகும்படி சபித்தார். அவ்வாறே நந்திகேசுவரர் ஸமுத்திரத்தில் ஒரு பெரிய மீனைப் பிறந்து விக்னேச்வரரால் எறியப்பட்ட புஸ்தகங்களை

எல்லாம் விழுங்கி வயிற்றுக்குள் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு சாபவிமோசன காலத்தை எதிர்பார்த்து ஈசுவரனை தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். ஸுப்பிரமணியரும் முந்திய லீலையில் சொல்லியபடி வைசியகுலத்தில் ஊமைப்பிள்ளையாகப் பிறந்தார். அம்பாளும் செம்படவர் குலத்தில் உண்டாவதற்காகச் சென்றாள். தார்மிகனென செம்படவத்தலைவனொருவன் ஸமுத்திரத்தில் வலைவீசி மீன் பிடித்த ஸமயத்தில் மீன்களுடன் ஒரு வலம்புரிசங்கம் இருக்கக்கண்டான். அதைக் கையில் எடுத்ததும் அது ஒரு பெண் குழந்தையாக மாறிவிட்டது. அதை வெகு ஸந்தோஷத்துடன் தன் பத்தினியிடம் கொண்டுபோய்க் கொடுத்து அத்தம்பதிகள் தங்களுக்கு மக்கட்பேறு யில்லாமையால் ஈசுவரனால் கொடுக்கப்பட்ட பாக்கியம் அதென்று எண்ணி அதை நிரம்ப செல்வமாக வளர்த்து வந்தார்கள். அக்குழந்தைக்கு கன்னிப்பருவம் வந்ததும் அது ஸ்ரீ மீனாக்ஷிதேவியின் அம்சமானதால் அதை விவாகம் செய்துகொள்வதற்காக ஸ்ரீ ஸுந்தரேசர் அதிஸுந்தரமான செம்படவரூபம் எடுத்துக்கொண்டு பெரிய வலையொன்றை தோளில் சுமந்துகொண்டு அச்செமபடவத் தலைவனிடம வந்து அவன் பெண்ணை தனக்குக்கொடுக்கும்படிக் கேட்டார். அதற்கவன் நீயார் எந்தவூர் என்று விசாரிக்க செம்படவரூபியாகிய ஈசுவரன் தான் மதுராபுரியென்றும் தான் செம்படவத்தொழிலில் மிகவும் ஸமர்த்தனென்றும் தான் வீசும் வலையில் ஜகத்தை முழுவதும் பிடித்து இழுக்க சக்தியுள்ளவனென்றும் சொல்லி தன் ஸாமர்த்தியத்தை வெகுவாகப் புகழ்ந்தார். இதைக்கேட்ட அச்செம்படவத்தலைவன் "நீ அவ்வளவு ஸாமர்த்தியமுள்ளவனானால் இந்த ஸமுத்திரத்தில் மிகப்பெரிதான ஒரு மீன் இருக்கிறது; கப்பல்களை யெல்லாம் கவிழ்த்து விடுகிறது; அதை எங்களால் பிடிக்கமுடியவில்லை; நீ அதைப் பிடித்தாயேயானால் உனக்குப் பெண்ணைக்கொடுக்கிறேன்" என்றான். உடனே ஈசுவரனும் அவன் குறிப்பிட்டுக் காண்பித்த இடத்தில் ஸமுத்திரத்தில் வலையை வீச மிகப் பெரிய மத்ஸ்யரூபமாயிருந்த நந்திகேசுவரர் அந்த வலையில் அகப்பட்டார். அம்மீனைக் கரையிலிழுத்து ஈசுவரன் தனது கையால் தடவிக்கொடுக்கவே அம்மீன்ரூபம் மாறி நந்திகேசுவரர் ஈசுவரனை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து எதிரில்வந்து தான் வைத்திருந்த சாஸ்திர புஸ்தகங்களையெல்லாம் ஈசுவரனிடம் ஸமர்ப்பித்துவிட்டு நின்றார். இதைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள். உடனே அந்த செம்படவத்தலைவனின் பெண்ணாயிருந்த மீனாக்ஷிக்கும் ஈசுவரனுக்கு விவாஹம் நடந்தது. உடனே ஈசுவரன் அம்பாளுடன் விருஷபாரூடராக எல்லோருக்கும் தர்சனம் கொடுத்து அச்செம்படவத் தலைவனுக்கும் அவன் பத்னிக்கும் ஸாரூப்யபதவியைக் கொடுத்து கைலாஸத்திற்கு அனுப்பினர். பிறகு ஈசுவரன் அம்பாளுடன் உத்தரகோசம் என்று சொல்லப்படும் க்ஷேத்திரத்துக்கு சென்று அவ்விடத்தில் வேதாந்தத்தையெல்லாம் அம்பாளுக்கும் இதரர்களுக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிக் காட்டிக்கொண்டு சிறிதுகாலம் அங்கு தங்கிவிட்டு பிறகு ஹாலாஸ்யக்ஷேத்ரம் வந்துசேர்ந்தார்.

58. வாதபுரீசருக்கு ஞானதீக்ஷை செய்தது.

மதுரைக்கு ஸமீபத்திலுள்ள வாதபுரியென்னும் க்ஷேத்ரத்தில் மிகவும் தர்மிஷ்டனையும் சிவபக்தநாயுமுள்ள ஸுந்தரநாதனென்னும் ஒரு பிராமணனுக்கு வாதபுரீசர் என்று

ஒரு புத்ரனுண்டானுர். அவர் பிறந்தது முதலே ஈசுவரனிடம் அதிகபக்தியுள்ளவராய் ஸதாஸர்வகாலமும் ஈசுவரனை தியானம் செய்துகொண்டு அதிபால்யத்திலேயே ஸமஸ்த சாஸ்திரங்களிலும் நிபுணராக ஆய்விட்டார். அவருக்கு வயதுவந்ததும எல்லாசாஸ்திரங் களிலும் எல்லா கலைகளிலும் அவருக்கு ஸமமான ஞானவானில்லையென்று சொல்லும் படியிருந்தது. இதைச் செவியுற்ற பாண்டியநாட்டரசனுகிய அரிமர்த்தன பாண்டியன் அவரை வரவழைத்து தனது மந்திரியாக நியமித்துக்கொண்டான். அவர் மந்திரியாக ஏற் பட்டது முதல் அரசனுக்கு எல்லா ஸம்பத்துக்களும் விருத்தியடைந்தன. அவரும் ஸதா ஸ்ரீஸுந்தரேசுவரரை தியானம்செய்வதிலும பூஜைசெய்வதிலும் சிவபக்தர்களுக்குப் பலவாறு உபசாரம்செய்வதிலும் ஊக்கமுள்ளவராகவிருந்தார். இப்படியிருந்துவருகையில் ஒருநாள் அரசனின் அசுவசாலை உத்தியோகஸ்தர்கள் வந்து அசுவசாலையில் குதிரைகள் மிகவும் குறைந்தும் மெலிந்தும் போய்விட்டனவென்றும் வேறு நல்ல குதிரைகள் வாங்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். இதைக்கேட்ட அரசனும் தனது மந்திரிகளுள் வாத புரீசர் அசுவசாஸ்திரம் நன்ருகத் தெரிந்தவராதலால் அவரை உடனே கஜானுவிலிருந்து வேண்டிய திரவியங்களெடுத்துக்கொண்டுபோய் நல்லஜாதிக் குதிரைகளாகப் பொறுக்கி வாங்கி வரும்படி ஆக்ஞாபித்தான். வாதபுரீசரும் அவ்வண்ணமே கஜானுவிலிருந்து ஏராள மான திரவியத்தை யெடுத்துக்கொண்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரர் கோயிலுக்குச்சென்று அவ ரை பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்துவிட்டுத் தான் கஜானுவிலிருந்து எடுத்து வந்த திரவி யத்தை குதிரை வாங்குவதில் துலுக்கர்களுக்குக்கொடுத்து செலவிடப்போவதில்லையென் றும் எல்லாவற்றையும் ஈசுவரன் விஷயத்திலும் அவர் பக்தர்கள் விஷயத்திலும் செலவிடப் போவதாகவும் ஈசுவரன் தன்னை ராஜநிந்தைக்குள்ளாகாமல் எவ்வாற்ருனும் காப்பாற்ற வேண்டுமென்றும் தனக்கு எவ்வளவோ சாஸ்திரங்கள் தெரிந்திருந்தும் கிரமமாக ஞானே பதேசமாகாததால் ஈசுவரனே உபதேசம் செய்தருளவேண்டுமென்றும் பிரார்த்தித்தார். அச்சமயம் மூலலிங்கத்தினிடமிருந்து ஒரு பிராமணர்வந்து அவர்கையில் வீபூதியைக்கொ டுத்தார். அதையே ஈசுவரனின் அநுக்ரஹமாக பாவித்து தரித்துக்கொண்டு திரவியத்து டனும பரிவாரங்களுடனும் கிழக்கு முகமாகச்சென்ருர். திருப்பெருந்துறை யென்று சொல்லப்படும் ஆளுடையார் கோயில் சேர்ந்ததும் அவர் மனதுக்கு ஏதோ அதுவரையிலில் லாத உபசாந்தி ஏற்பட்டு உருக்கமாயிருந்தது. உடனே அங்குள்ள குளத்தில் ஸ்நானம் செய்து கோயிலிலுள்ள ஜனவன்நாதரை (ஆளுடையாரை—இதைத் தான் ஆவடையார் கோயிலென்று ஜனங்கள் வழங்குயது) தர்சித்துவிட்டு பிரதக்ஷிணம் வருகையில் பிராகாரத் தில் குந்தவிருக்ஷத்தினடியில் குருமூர்த்தி ரூபமாய் ஸ்ரீ ஸுந்தரேசர் அனேக சிஷ்யர்களு டன் வீற்றிருப்பதைக்கண்டார். அந்த குருமூர்த்தியும் வாதபுரீசரைத் தமது நேத்ரங்க ளால் கடாக்ஷித்ததும் இவர் மிகுந்த பயபக்தியுடன் அவரையணுகி பிரதக்ஷிணம்செய்து நமஸ்கரித்து நிற்கையில் பரமகிருபாளுவான ஈசுவரன் இவரை ஸமீபத்திலுட்காரவைத்து இவருக்கு ஞானேபதேசம் செய்வித்து இவரைச் சிறிதுகாலம் அங்கேயே தங்கியிருக்கும் படி சொல்லிவிட்டு மறைந்தார். உடனே பரமஸந்தோஷம் கொண்டவராய் வாதபுரீசரும் தன்னுடன் வந்த பரிவாரங்களையெல்லாம், ஆடிமாதத்தில் பலவிடங்களிலிருந்து அந்த ஊருக்குக் குதிரைகள் வருமென்றும் அவைகளுள் நல்லதாய் தான் பார்த்து வாங்கிவருவ

தாயும், அவர்களெல்லாம் திரும்பி ஊருக்குப்போகலாமென்றும் சொல்லி அவர்களை மதுரைக்கு அனுப்பிவிட்டுத் தான் மட்டிலந்த ஊரிலேயேயிருந்துகொண்டு எப்பொழுதும் ஈசுவரனை தர்சனம் செய்கிறதும் பக்தர்களை யுபசரிப்பதும் கோயிலைப்பழுதில்லாமல் கட்டுகிறதுமாய் காலம்கழித்தார். கையில் கொண்டுவந்த திரவியம் முழுமையும் பாக்கியன்னியில் செலவழித்துவிட்டார். ஆடிமாஸம்சென்றதும் அரசன் குதிரைகளுடன் அவரையும் கூட்டிவரும்படி ஸேவகர்களையனுப்பினன். அவர்கள் சொன்னதைக் கேட்டதும் வாதபுரீசர் ஆளுடையார் ஸந்நிதிக்குச்சென்று "தீனபந்தோ, அரசன் குதிரைகளைக்கொண்டு வரும்படி சொல்லியனுப்பிருக்கிறான். நானே கொண்டுவந்த திரவியம் முழுமையும் தங்கள் விஷயத்தில் செலவழித்து விட்டேன். தாங்கள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும். அரசனுக்கு என்னபதில் சொல்லுகிறதென்று தெரியவில்லை" என்று பிரார்த்தித்தார். ஈசுவரனும் மனமிரங்கி அசரீரவாக்கு மூலமாய் "நீ பயப்படவேண்டாம், இன்னும் நாலைந்து தினங்களுக்குள் குதிரைகளுடன் ஊர்வந்து சேருவதாக சொல்லியனுப்பு" என்றார். உடனே அவ்வாறே அந்த ஸேவகர்களை சொல்லியனுப்பிவிட்டுத் தானும் இரண்டு நாட்களுக்கெல்லாம் ஈசுவரனிடம் விடைபெற்றுக்கொண்டு ஊர் போய்ச்சேர்ந்தார்.

59. நரிகளைப் பரிகளாக்கியது.

வாதபுரீசர் மதுரைவந்ததும் அரிமர்த்தன பாண்டியவரசனைக்கண்டு இன்னும் இரண்டு அல்லது மூன்று தினத்தில் குதிரைகள்வந்து விடுமென்றும் அதற்காக வேண்டிய லாயங்களெல்லாம் தயாரித்து ஊரையும் அலங்கரிக்க வேணுமென்றும் சொன்னார். அரசனும் எவ்வளவு குதிரைகள் வாங்கப்பட்டன, என்னகிரயம் என்பது முதலான விவரங்கள் கேட்டதற்கு அவையெல்லாம் குதிரைகள் வந்தபிறகு சொல்வதாகச் சொல்லிவிட்டு அரண்மனையிலிருந்து ஆலயத்தினுட்சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் தான் செய்த விருத்தாந்தங்களையெல்லாம் உரைத்து அவர்தான் தன்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று வேண்டினர். ஈசுவரனும் அசரீரவாக்கு மூலமாய் அவரை பயப்படவேண்டாமென்று சொல்ல வாதபுரீசர் அங்கிருந்து வீடுசென்றார். குறிப்பிட்ட இரண்டு மூன்று நாட்களாயும் குதிரைகள் வாராமையால் அரசன் வாதபுரீசரைக்கேட்க அதற்கவர் மறுநாளாவது அதற்கு மறுநாளாவது வந்து விடுமென்று சொன்னார். பிரதி வேளையும் ஆலயத்துக்குச்சென்று ஈசுவரனைப் வெகுவாகப் பிரார்த்தித்தார். மறு இரண்டு தினத்திலும்கூட குதிரைகள் வரவில்லை. அரசனுக்குப் பக்கத்திலுள்ளவர்கள் வாதபுரீசர் சொல்லுவது பொய்யென்றும் அவர் கொண்டுபோன திரவியத்தை யெல்லாம் ஆளுடையார் கோயிலில் செலவழித்து விட்டதால் குதிரைகளை வாங்கப்பட வில்லையென்றும் சொன்னார்கள். அதைக்கேட்டு மிகக்கோபம் கொண்டவனாய் அரசன் வாதபுரீசரை வரவழைத்துக் கண்டித்துக் கேட்கும்பொழுது அவர் சீக்கிரம்வந்து விடுமென்று சொன்ன பதிலில் நம்பிக்கையில்லாமல் அவரை காராகிருஹத்திலடைத்து நிர்ப்பந்தம் செய்யச்சொல்லி வேலையாட்களுக்கு உத்தரவிட்டான். அவ்வாறே அவர்களும் அவரை நிரம்பவும் நிர்ப்பந்தம் செய்தார்கள். அவர்களின் ஹிம்ஸை பொறுக்கமாட்டாமல் வாதபுரீசர் ஈசுவரனைத் துதித்து தன்னைக் காத்தருளும்படி மன்றாடினர். மறுநாள் காலையில் வாதபுரீசரை திரும்பவும் அர

சனிடம் கூட்டிவருகையில் வழியில் சிலர் ஓடோடியும் வந்து குதிரைகள் வந்துகொண்டிருக்கின்றனவென்று சொன்னார்கள். இதைக்கேட்டு வாதபுரீசரும் அரசனிடம் அவ்விதமே சொன்னார். அரசனும் அவருடன் குதிரைகளின் வரவை யெதிர்பார்த்து வெகுநேரம் காத்திருந்தும் வாராமையால் மறுபடியும் வாதபுரீசரை சிக்ஷிக்கும்படி சொன்னான். வேலையாட்கள் அவரை ஹிம்ஸித்தார்கள். இதற்குள் ஈசுவரனானவர் தமது பக்தன் படும கஷ்டத்தைப் பொறுக்காதவராய் தம்முடைய கணங்களைக் கூப்பிட்டு காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பிடித்துப் பரிகளாக்கி அவைகளின்மேல் கணங்களை மனுஷ்யரூபமாய் ஏறிவரும்படி ஆக்ஞாபித்தார். உடனே எல்லா கணங்களும் ஆயிரக்கணக்காக நரிகளைப்பிடித்து உயர்ந்த ஜாதிக்குதிரைகளாக அவைகளை மாற்றி அவைகளிலேறிக்கொண்டு மதுரைக்கு வேகமாக வந்தார்கள். ஈசுவரனும் வேதமாகிற குதிரையிலேறிக்கொண்டு எல்லோரையும் நடத்திக் கொண்டுவந்தார். அவைகள் வரும் சப்தம் கேட்டதும் அரசன் வாதபுரீசரை ஹிம்ஸிப்பதை நிறுத்தி அக்குதிரைகள் வரும் காம்பீர்யத்தைக்கண்டு திகைத்து நின்றான். குதிரைகளெல்லாம் வந்ததும் ஈசுவரனானவர் அரசனிடம வந்து "ஏ அரசனே, நீ வாதபுரீசரிடம கொடுததனுப்பிய திரவியத்தை யெல்லாம் அவர் நம்மிடம் கொடுத்துவிட்டார். நாம் குதிரைகளைக்கொண்டு வருவதற்குள் அவரை ரொம்பவும் ஹிம்ஸித்து விட்டாய். அவர் உன் ஸொத்தில் ஸவல்பம்கூட அபஹரிக்கவில்லை. இதோ குதிரைகள் வந்திருக்கின்றன. உனக்கு இஷ்டமானவைகளைப் பொறுக்கி யெடுத்துக்கொள். ஒன்றும் பிடிக்காவிடில் உன்னுடைய பணத்தை இரண்டுபங்காகக்செய்து இதோ கொண்டுவந்திருக்கிறோம். எடுத்துக்கொள். வாதபுரீசரை ஹிம்ஸிக்காதே" என்றார். உடனே அரசன அவரை யுபசரித்து தான் வாதபுரீசரை நமபாதது பிசகென்றும் வந்திருக்கும் குதிரைகள் மிகவத்புதமா யிருக்கின்றனவென்றும், அவைகளின்ஜாதி லக்ஷணம் முதலியவைகளை அவரே தனக்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். உடனே அக்குதிரை வியாபாரியாக வந்திருந்த ஈசுவரனும் மறுநாள் இருக்காது (ந ச்வ: அஸ்தி) என்னும் காரணத்தால்தான் குதிரைகளுக்கு அசுவம் என்று பெயரென்று சொல்லி அவைகளின் ஜாதி லக்ஷணங்களைக் குறித்து விஸ்தாரமாய் பிரஸங்கித்து வந்திருக்கும் குதிரைகளையும் தனித்தனியே அரசனுக்குக் காண்பிவித்தார். அரசனும் அதிக ஸந்தோஷத்துடன் குதிரைகளையெல்லாம் அசுவசாலையில் கொண்டுபோய் கட்டும்படி கட்டளையிட்டான். அந்த வியாபாரிக்கும் பலவித மரியாதைகள் செய்தனுப்பினான். பிறகு வாதபுரீசரையும் வெகுவாகப் புகழ்ந்து அவருக்கு விசித்ரமான ஸம்மானங்கள் கொடுத்தனுப்பினான். அவரும் கோயிலுக்குச் சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரை துதி செய்து வீட்டுக்குச் சென்றார்.

60. வேகவதியில் பிரவாஹம் வரச்செய்தது.

அரிமர்த்தன பாண்டியனானவன் அன்று முழுவதும் அக்குதிரைகளின் வனப்பையும் காம்பீர்யத்தையும் வர்ணிப்பதிலும் வாதபுரீசரைக்கொண்டாடுவதிலுமாக காலம் கழித்தான். அன்றிரவு அர்த்தராத்ரியில் அக்குதிரைகளெல்லாம் தங்களுடைய பழைய ஸ்திதியான நரிகளாகமாறி ஊளையிட்டுக்கொண்டு ஊர் முழுவதும் ஓடித்திரிந்து கோட்டை வாசல்களெல்லாம் சாத்தப்பட்டிருந்ததால் வெளியில் போக மார்க்கமில்லாமல் ஊரார்களை

மிகவும் ஹிம்ஸித்தன. ஊரில் அமளி அதிகரித்தது. அவைகளின் ஹிம்ஸை பொறுக்காமல் காவலாலர்கள் கோட்டைவாசல் கதவுகளை திறந்துவிட்டார்கள். உடனே எல்லா நரிகளும் காட்டுக்கு ஓடிப்போய்விட்டன. அசுவசாலையில் ஏற்கனவே இருந்த பழைய குதிரைகளும் இந்த நரிகள்செய்த ஆரவாரத்தில் மொண்டு வெளிகளில் ஓடிப்போய்விட்டன. பொழுது விடிந்ததும அச்சம்பவங்களையெல்லாம் அரசன் கேள்விப்பட்டு கோப பாவசனுயிருந்தான். அச்சமயம் அங்கு வாதபுரீசர் வந்து சேர்ந்தார். அவரைக்கண்டதும் அரசன் அதிவேசமாக "என்னிடம் என்ன ஜாலவித்யை செய்கிறீரா" என்று அதட்டினன். அதற்கவர் "ஏ அரசனே, இக்குதிரை வியாபாரத்தில் எனக்கு யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. நேற்று அந்த வியாபாரியிடம் தாங்களே நேரில் எல்லாம் பேசித்தெரிந்துகொண்டு பிறகு வாங்கினீர்கள். அந்த வியாபாரியோ குதிரைகளுக்கு மறுநாளைக்கு இருக்காது என்பதினுலேயேதான் அசுவமென்று பெயர் என்று வியக்தமாக சொன்னுன். அதனுலேயே அந்த வியாபாரியும் குதிரைகளும் ஸாமான்யமானவைகளல்லவென்று தெரியவில்லையா? தாங்கள் சிறந்த ஈசுவரபக்தரானதால் ஸ்ரீ ஸுந்தரேசர் தங்களுக்கு நேரில் குதிரைவியாபாரிமாதிரி தர்சனம்கொடுத்து இந்த லீலை செய்திருக்கிறுர். தங்களது பாககியமே பாக்கியம். என்னைக் குற்றம் சொல்வதற்குக்கொஞ்சமேனும் இடமில்லை. நேற்றே அந்தவியாபாரி தங்களுக்கு குதிரைகள் பிடிக்காவிட்டால் திரவியத்தை இரண்டு பங்காக திருப்பிக்கொடுத்துவிடுவதாகச் சொன்னுன். தாங்கள் தான் அதுவேண்டாமென்று குதிரைகளை வாங்கினீர்கள். ஆதலால் எனக்கு ஒரு ஸம்பந்தமுமில்லை" என்றுர். அரசன் மனது அவமானத்தாலும் கோபத்தாலும் மூடப்பட்டிருந்ததால் அவனுக்கு பகுத்தறிவு சரியானபடி யுண்டாகாமல் வேலையாட்களை வாதபுரீசரை திருமபவும் விலங்கிட்டு சிறையிலடைத்து ஹிம்ஸிக்கும்படி உத்தரவு செய்தான். வேலையாட்களும் அரசனுக்கிணங்க அவரை யணுகினுர்கள். அவரோ ஈசுவரத்யானத்திலாழ்ந்திருந்தார். அச்சமயத்தில் திடீரென்று ஊர் முழுமையும் ஓரேசப்தமாக ஹாஹா என்று ஜனங்கள் அங்கு மிங்கு மோடத் தலைப்பட்டார்கள். சிலர் அரண்மனைக்கு ஓடிவந்து அரசனிடம் வைகையாற்றில் அஸாத்யமாக பிரவாஹம் வருவதாகவும் அது கரைகளையெல்லாம் உடைத்து வருவதாயும இன்னுமகி சீக்கிரத்தில் ஊர் முழுகிப்போய் விடுமென்றும் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் அங்கிருந்த வேலையாட்களெல்லாம் அவனவன் வீடுகளுக்கு பிள்ளை குட்டிகளைக் காப்பாற்றுவதற்காக சொல்லாமல் ஓடிப்போய்விட்டார்கள். அரசனும் நதிக்கரைக்கு பிரவாஹத்தை நேரில் பார்ப்பதற்காகச்சென்றுன். வாதபுரீசரை இந்த பரபரப்பில் ஒருவரும் கவனிக்கவில்லை. அவரும் உடனே கோயிலுக்குச்சென்று அமைதியான மனதுடன் ஸ்ரீ மீனுக்ஷி ஸுந்தரேசரைத் துதிசெய்து நின்றுகொண்டிருந்தார்.

61. பிட்டுக்கு மண் சுமந்தது.

இவ்விதம் எதிர்பாராத ஸமயத்தில் வைகையாற்றில் மஹாப்பிரவாஹம் வந்து கரைகளையெல்லாம உடைத்துக்கொண்டு ஊர் முழுமையும் முழுகிப்போய்விடும்போலானதைக் கண்டு ஜனங்கள் பயந்து தவிக்கையில் அரிமர்த்தனபாண்டியனவன் தனது அதிகாரிகளை விட்டு ஊரிலுள்ள எல்லா வீட்டுக்காரர்களுக்கும் அந்த நதியின்கரையில் அளந்து பங்கு

விதம்போட்டு அந்தந்த பங்கை அவ்வவ்வீட்டுக்காரர்கள் அடைத்தே தீரவேண்டுமென்று நியமிக்கும்படி கட்டளையிட்டான். அவ்வாறே எல்லா வீட்டுக்காரர்களுக்கும் பங்குவீதம் போட்டுக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தாங்களும் இன்னும கூலியாட்களையும் கொண்டு மண்வெட்டிக்கொண்டுபோய் கரையை அடைத்து உயர்த்தி கெட்டி செய்தார்கள். அந்த மதுரையில் ஒருவீட்டில் ஒரு கிழவி தனியேயிருந்தாள். அக்கிழவிக்கு வேறு வேண்டியவர்கள் ஒருவரும் கிடையாது. அவள் சிறந்த ஈசுவரபக்தியுள்ளவள். பிட்டு அப்பம் முதலிய பக்ஷணங்கள் செய்து முதலில் ஈசுவரனுக்கு நிவேதனம் செய்துபிறகு அதை விற்று ஜீவனம் செய்கிறவள். அவளுக்கு வீடிருந்தமையால் அவளுக்கும் நதிக்கரையடைப்பதில் பங்குவீதமேற்படுத்தப்பட்டது. அவளை அந்த பங்குவீதப்படி கரையை அடைக்கச் சொல்லி அதிகாரிகள் வந்து சொன்னதும அவள் "நான் கிழவியாக தள்ளாதவயதிலிருக்கிறேன். என்னால் மண்கூடை சுமக்கமுடியாதே. எனக்குவேண்டிய ஜனங்களும் ஒருவருமில்லையே. கூலியாட்கள் நியமிப்பதென்றாலும் இந்த அமளியில் எல்லோரும் ஏற்கனவே அமர்ந்துவிட்டார்களே, நான் என்ன செய்வேன். ஸ்ரீ ஸுந்தரேசரைத்தான் சரணமடைய வேண்டும" என்று சொல்லி கோயிலுக்குச் சென்று ஈசுவரனிடம் முறையிட்டுத் தன்னை அரசனின் ஆக்ஞைக்குத் தப்பிவிக்கவேண்டுமென்று வேண்டினாள். அவளைக் கவலைப்பட வேண்டாமென்று அசரீரவாக்கு உண்டாயிற்று. அதைக்கேட்டு ஸந்தோஷித்து அவள் திரும்பி கோயிலுக்கு வெளியே வரும்பொழுது வீதியில் ஈசுவரனனவர் நல்ல யுவாவாக தலையில் ஒரு கூடையும் தோளில் ஒரு மண்வெட்டியுமாக எடுத்துக்கொண்டு அவள் முன்னிலையில் வந்து "அம்மா உனக்கு என்ன ஆகவேண்டும்" என்று கேட்டார். அக்கிழவியும் "வைகையாற்றின் கரையில் தன் பங்குக்கரையை அடைத்துயர்த்தவேண்டும். உன்னைப் பார்த்தால் நல்ல பையனாக இருக்கிறாய். நீ போய் அந்தக் காரியத்தை முடித்துவந்தாயேயானால் உனக்கு சுடச்சுட பிட்டுதருகிறேன்" என்றாள். அதற்கு அந்தப்பையன் "பாட்டி, உன்னைப்பார்த்தால் எனக்கு என் அம்மாபோல் தோணுகிறது. உன் காரியத்தை நொடிப்பொழுதில் முடித்துக்கொடுக்கிறேன். அரசன் உன்னிடம் ஸந்தோஷிக்கும்படி செய்கிறேன். இப்பொழுது பசியாயிருப்பதால் நீ உன்னிடம் தயாராகவிருக்கும் பழம்பிட்டாகவிருந்தாலும் அதைக்கொடு, அதைச் சாப்பிட்டுவிட்டு உடனே வேலைக்குப்போகிறேன்" என்றான். உடனே அக்கிழவியும் மிகவும் ஸந்தோஷத்துடன் தன்னிடம் இருக்கும் பிட்டுகளைக் கொடுத்தாள். அதை வாங்கிக்கொண்டு அந்தப் பையனும் நதிக்கரை சென்று அங்குள்ள கணக்குப்பிள்ளையிடம் தான் அந்த கிழவியின் பாகத்தை அடைக்கவந்த ஆள் என்று பதியவைத்துவிட்டு தனக்கு பங்கிட்டுக்கொடுத்திருக்கும இடத்திற்குச் சென்று அங்கே உட்கார்ந்து பிட்டைத் தின்றுகொண்டு இதர வேலையாட்களுடன் பரிஹாஸமாகப் பேசி சிரித்துக்கொண்டு காலத்தைப் போக்கினான். மத்தியானம் உணவுக்காக விடப்பட்டபோது அக்கிழவியிடமசென்று வேலையெல்லாம் ஆய்விட்டது என்று சொல்லி நல்ல சூடாக அவளிடமிருந்த பிட்டை வாங்கிக்கொண்டு திரும்பவும வேலையிடத்திற்கு வந்து பிட்டை தானும் சாப்பிட்டு இதார்களுக்கும் கொடுத்து முன்போலவே பரிஹாஸ வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தான். சாயங்காலமானதும் ராஜஸேவகர்கள் வந்து பார்க்கும்பொழுது எல்லாருடைய பங்கும் அடைபட்டு இந்தப் பையனுடைய பங்குமட்டில் கொஞ்சமேனும்

அடைபடாமலிருப்பதைக்கண்டு கோபம்கொண்டவர்களாய் அப்பையனைக் கண்டிக்க அவன் அதை சற்றேனும் லக்ஷியம் செய்யாமல் உதாஸீனமாயிருந்ததால் அவனை அடிக்கச் சென்றபொழுது அவனுடைய ரூபத்தின் ஸௌந்தர்யாதிசயத்தைக் கண்டு வியந்து அடிக்கத் தோன்றாமல் அரசனிடம்போய் விஷயத்தைத் தெரிவித்தார்கள். அரசனும் உடனே அவ்விடத்திற்கு வந்து பார்க்கையில் அப்பொழுதுதான் அந்தப்பையன் ஸ்வல்ப மண்ணை கூடையில் எடுத்துக்கொண்டு உல்லாஸமாய்ப் பாடிக்கொண்டு மெதுவாய் செல்வதையும் அவன் பாகம் கரை அடைபடாமையால் அதுவழியாக பிரவாஹமானது பக்கங்களையும் அறுத்துக்கொண்டு வேகமாக உள்ளே செல்வதையும் கண்டு கோபபரவசனாய் தன் கையிலிருந்த பிரம்பால் அந்தப்பையனை பின்புறத்தில் ஓர் அடி அடித்தான். அடித்ததுதான் தாமதம்! அவ்வரசனுக்கும் மற்றும் அங்குள்ள எல்லோருக்கும் அவ்வூராருக்கும் உலகிலுள்ள எல்லா ஜீவஜந்துக்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தத்தம் முதுகில் பளீர் என்றடி விழுந்தாற்போல் வலியுண்டாயிற்று. அந்தப்பையனோவெனின் தலையிலிருந்த மண்ணை அவனுடைய பங்குக் கரையில் கொட்டிவிட்டு அப்படியே மறைந்துவிட்டான். அங்குள்ள அரசன் முதலியவர்கள் அடியின் வலி கொஞ்சம் தணிந்து பார்த்தபொழுது அந்தக்கரை ஸரியாக உயர்த்தப்பட்டிருப்பதையும் அப்பையன் காணாமல் மறைந்துபோனதையும் கண்டு மிகவாச்சரியமடைந்து அக்கிழவியிடம்போய் அந்தப்பையன் யார் என்று கேட்பதற்காக அங்கே சென்றார்கள். அவர்கள் வருவதை கண்ணுற்ற அக்கிழவியானவள் விஷயம் தெரியாததால் தன்னுடைய பங்கு இன்னும் அடைபடாமலிருக்கிறதோ என்னவோ அதனால் தன்னை ராஜா தண்டிக்கவருகிறானோவென பயந்து ஸ்ரீ ஸுந்தரேசுவரரை தியானித்து தன்னைக் காப்பாற்றவேண்டுமெனப் பிரார்த்தித்தாள். ஈச்வரனும் அம்பாளுடன் ரிஷபாருடராய் அங்குவந்து அரசன் முதலியவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அக்கிழவியை ஒரு விமானத்திலேற்றி கைலாஸத்திற்கனுப்பினார். இந்த அத்புதக்காக்ஷியைக்கண்ட அரசன் முதலிய ஜனங்கள் ஈச்வரனை ஸ்தோத்ரம் செய்தார்கள். அந்த ஸ்தோத்ரத்தை நீலகண்ட தீக்ஷிதர் பின்வருமாறு சமத்காரமாக சொல்லியிருக்கிறார்.

चूडाबद्धभुजंगपुंगवशिरोविन्यस्तपृथ्वीभरप्रान्तप्रस्खलितैः कणैः कतिपयैरीषत्करे पूरणे ।
मिथ्यारोपितयत्नगौरवकथाविज्ञापनाचातुरीसंमुह्यज्जरतीगृहीतशिथिलापूपाय तुभ्यं नमः ॥ १ ॥

योगक्षेमभरः समस्तजगतां न्यस्तस्तवाङ्घ्रिद्वये कुक्षौ त्रीणि जगन्ति मूर्ध्नि शशभृद्गङ्गाकपालस्रजः ।
वोढव्यस्तदुपर्ययं यदि मृदां भारोऽपि गौरीपते कस्ते मद्भरणे श्रमः क इव मे त्रासस्तदभ्यर्थने ॥

हे सन्तः शृणुताधुनैव मिलितैरस्माभिरेतच्छिवे वाच्यं वेत्रहतिं विभज्य न वयं भोक्तुं समर्था इति ।
नो चेत्पादहतिः शिलाप्रहरणं कोदण्डदण्डाहतिर्गण्डूषोदकसेक इत्यपि भवेत्सर्वं विभाज्यं हि नः ॥

ध्यायंध्यायमुपायकोटिभिरहं त्वत्प्राप्त्युपायं चिरं निर्विण्णो निरचैषमेकमधुना हालास्यचूडामणे ।
दिष्ट्या वेगवतीतटे यदि पतेदेतद्वपुर्मामकं संरोहेदपि जातु तत्तटमृदा साकं त्वदीयं शिरः ॥ ४ ॥

धूलीधूसरितं शशाङ्कशकलं जम्बालिता जाह्नवी भग्नं ब्रह्मकपालदाम फणिनो भूषोचिताः क्लेशिताः ।
मृद्भारोद्वहनं कुतोऽभ्युपगतं को वा गुणः पिष्टके सा दुष्टा जरती किमौषधमदात्तत्रेति न ज्ञायते ॥

प्रहृतं प्रहृतमिति त्वं पाण्ड्य विषीदसि किमम्बिकारमणे ।
प्रहृतं यदि साधु कृतं पाशुपतं गणय सिद्धमस्त्रं तत् ॥ २० ॥

पाण्ड्येन प्रहृतोऽसि वेत्रलतया पार्थेन गाण्डीवतः पादेनापि किरातकेन वटुना केनापि च प्रस्तरैः ।
तत्तत्प्रत्युत तेषु तेषु तप इत्यग्राहि मत्पूजने त्वागांस्येव पदे पदे गणयसे दैवं ममैवंविधम् ॥ २१ ॥

இவ்வாறு ஸ்தோத்திரஞ்செய்து முடிந்ததும் ஈசுவரனானவர் அரசனை நோக்கி "நீ நமது பக்தனான வாதபுரீசனை அனாவசியமாக ஹிம்ஸை செய்தாய். உன்னுடைய திரவியங்களையெல்லாம் அவன் நம்விஷயத்தில் செலவழித்து அதனால் உனக்கு அதிகமான புண்யத்தையும் ஐச்வரியஸம்ருத்தியையும் ஸம்பாதித்து வைத்தான். நீ அதை அறியாமல் அவனை ஹிம்ஸித்தாய். அதனாலேயே நாம் நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி கொண்டு வந்து விட்டோம். அப்பொழுதும் வாதபுரீசனின் மஹிமையைத் தெரிந்துகொள்ளாமல் அக்குதிரைகள் நரிகளான பிறகு மீளவும் நீ அவனை ஹிம்ஸித்தாய். அதற்காகத்தான் வேகவதியில் இந்த மஹா பிரவாஹத்தைத் தருவித்தோம். நமது பக்தையான இந்தக் கிழவிக்கு மோக்ஷம் கொடுக்கவேண்டி அவனிடம் பிட்டுவாங்கி சாப்பிட்டு மண் சுமந்தோம். நம்முடைய பரமாத்மத்வத்தையும், ஸர்வாந்தர்யாமித்வத்தையும் காண்பிப்பதற்காக உன் கையால் அடிபட்டோம். இனியாவது நமது பக்தனான வாதபுரீசனின் மஹிமை உனக்குத் தெரியலாம். உன் அரண்மனை கஜானாவில் இப்பொழுது ஐச்வர்யம் நிறைந்திருக்கிறது. அச்வசாலையிலும் அச்வங்கள் நிறைந்திருக்கின்றன. இனி வாதபுரீசனை நாம் உன்னிடம் வைக்கப்போகிறதில்லை. நமக்கு முக்கிய க்ஷேத்ரங்களுள் ஒன்றாகிய சிதம்பரத்திற்கு அனுப்புகிறோம். அவன் இப்பொழுது கோயிலில் இருக்கிறான். நீ உடனே அங்கு சென்று அவனிடத்தில் மன்னிப்பு கேட்டுக்கொண்டு அவனை வெகுவாக உபசரித்து சிதம்பரத்திற்கு வழிகொண்டு அனுப்பு" என்றுசொல்லி அந்தர்த்தானமானார். உடனே அரிமர்த்தன பாண்டியனும் ஓடோடியும் கோயிலுக்குவந்து வாதபுரீசரைக்கண்டு அவரைப் பிரதக்ஷிணம் செய்து அவர் முன்பாக ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தான்செய்த குற்றத்தையெல்லாம் பொறுத்து தன்னை க்ஷமித்தருளவேண்டுமென்று மிகவும் வேண்டினான். வாதபுரீசரும் புன்சிரிப்புடன் அவனை அனுக்ரஹிக்க அரசன் அவரை பலவாறாக உபசரித்த பிறகு அவரும் ஸ்ரீ ஸுந்தரேசுவரரிடம் விடைபெற்று சிதம்பரத்திற்குப் புறப்படவுடன் அரசனும் கூடப்பின் தொடர்ந்து கொஞ்சதூரம் வழிநடந்து அனுப்பிவிட்டு திரும்பி ஊர் வந்து சேர்ந்தனன். இந்த வாதபுரீசர்தான் மாணிக்கவாசகர் என்று பிரஸித்திபெற்றவர்.

62. குப்ஜபாண்டியனின் ஜ்வரத்தை நிவர்த்திப்பித்தது.

அரிமர்த்தன பாண்டியனுக்குப் பிறகு அவன் வம்சத்தில் அநேகம் அரசர்கள் காலஞ்சென்றதும் குப்ஜ பாண்டியனென்பவன் அரசனாக ஏற்பட்டான். அவன் மிகவும் பராக்ரமசாலியாகவிருந்ததால் இதரவரசர்களையெல்லாம் தனக்குள்ளடக்கியாண்டுவந்தான். சோழதேசத்து மன்னன் தன் பெண்ணாகிய வநிதேசுவரியை இவனுக்குக் கல்யாணம் செய்துகொடுத்து ஏராளமான திரவியமும் கப்பமாக ஸமர்ப்பித்து இவனுடன் ஸமாதான

மாக இருந்தான். அந்த வநிதேசுவரியின் கூடவே சோழதேசத்திலிருந்து அங்கு மந்திரியாயிருந்த குலபந்தனன் என்பவனும் மதுரைக்குவந்து அங்கு குப்ஜபாண்டியனிடம் மந்திரி வேலையிலமர்ந்தான். இந்த வநிதேசுவரியாகிய ராணியும் குலபந்தனை மந்திரியும் பாமசிவபக்தர்கள். பிரதிதினமும் சிவபூஜை செய்யாமல் சாப்பிடுகிறதில்லை. கோயிலுக்குப்போய் சிவதர்சனம் செய்யாமலிருக்கிறதில்லை. ஆனால் அந்த குப்ஜபாண்டியனின் ஜன்மாந்தா பாபத்தால் தற்சமயம் சிவபக்தியில்லாதவனாய் சமணர்களிடமீடுபட்டு அவர்களுடைய மதத்தை யவலம்பித்துக்கொண்டு விபூதி ருத்ராக்ஷம் தரித்தவர்கள் தன் முன் வரக்கூடாதென்று உத்தரவிட்டிருந்தான். இந்த ராஜஆக்ஞைக்கு பயந்து ராணியும் மந்திரியும இரஹஸ்யமாய் அரசனுக்குத்தெரியாமல் விபூதி ருத்ராக்ஷங்களையணிந்து கொண்டு சிவபூஜைசெய்வதும் கோயிலுக்குப்போய் ஸ்ரீ ஸுந்தரேசுவராை தர்சனம்செய்வதும் அரசனுக்கு நல்லபுத்தி கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திப்பதுமாயிருந்தார்கள். இவ்வாறு நடந்து வருகையில் ஒருநாள் கோயிலில் இவர்களிருவரும் ஸ்வாமி தர்சனத்துக்குப்போயிருந்த ஸமயத்தில் சோழதேசத்திலிருந்து ஒரு கிழப்பிராமணரங்கு வந்திருந்தார். அவரை அத்தேசத்திலென்ன விசெஷமென்று இவர்கள் கேட்க அவர் "சோழதேசத்திலொரு அத்புதமுண்டாயிருக்கிறது. பிரம்மபுரம் என்று சொல்லப்படும் சீர்காழியில் சிவபாதாப்ஜஹ்ருதயர் என்னும் ஒரு பிராம்மணோத்தமருக்கு ஈசுவரன் கட்டளைப்படி ஸுப்ரம்மண்யஸ்வாமி உலகக்ஷேமார்த்தம் புத்ரனாக உண்டாயிருக்கிறார். அப்பையனுக்கு கருணைக்கடலான பார்வதீதேவியே ஸ்தன்யபானம் செய்வித்தாள். அந்த ஸ்தன்யத்தைக்குடித்த மாத்திரத்திலேயே அவர் மிகவும் சிறந்த ஞானவானாக ஆய்விட்டார். மூன்றுவது வயதிலேயே நிகரில்லாத வித்வானாகி அவர் ஞானஸம்பந்தர் என்று அர்த்தத்தோடு கூடிய பெயரையுமடைந்தார். அவர் இப்பொழுது பற்பல சிவக்ஷேத்ரங்களுக்குச் சென்று ஈசுவரனை தர்சனம் செய்து பதிகங்கள் பாடிக்கொண்டு அங்கங்குள்ள வேததூஷகங்களான இதா மதங்களை கண்டித்து தொலைத்துக்கொண்டு வருகிறார். இந்த ஹாலாஸ்யக்ஷேத்ரத்தில் மூலலிங்கத்தை தர்சிப்பதற்கும் சமணர்களை நாசம் செய்வதற்கும் சீக்கிரத்தில் இங்கு வருவார்" என்றார். இதைக்கேட்டதும் ராணியும் மந்திரியும் மிகவும் ஸந்தோஷமடைந்து உடனே ஹாலாஸ்ய க்ஷேத்திரத்திற்குப் புறப்பட்டு வரவேண்டுமென்று ஞானஸம்பந்தருக்கு ஒரு கடிதமெழுதி அதை அந்த பிராம்மணரிடம்கொடுத்து அவரை அக்கடிதத்துடன் விரைவில் ஞானஸம்பந்தரிடம்சென்று அதைக்காண்பித்து அவரை உடனே மதுரைக்குக் கூட்டிவரும்படி மிகவும் பிரார்த்தித்தனுப்பினார்கள். அந்த பிராமணர் அக்கடிதத்தைகொண்டுவந்து ஞானஸம்பந்தரிடம் கொடுக்கும் ஸமயமானது அவராகவே மதுரைக்குச்சென்று ஹாலாஸ்யநாதரை தர்சனம்செய்து சமணர்களை தொலைக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்த ஸமயமாகவிருந்தது. இக்கடிதத்தைக் கண்டதும் ஞானஸம்பந்தர் உடனே புறப்பட்டு அனேக ஆயிரம் சிஷ்யர்கள் சூழ முத்துப்பல்லக்கிலேறிக்கொண்டு வந்திகள் சப்தமும் வாத்யங்கள் கோஷமும் முழங்க மதுராபுரி வந்துசேர்ந்தார். அங்கு பொத்தாமரையில் ஸ்நானம் செய்து ஸ்ரீமீனாக்ஷிஸுந்தரேசுவரரை தர்சனம் செய்து ஆனந்தபரவசராய், ஏகாக்ரசித்தராய் பதிகங்கள் பாடிக்கொண்டு நின்றார். அவர் பாடிமுடிந்து திரும்பியதும் ராணியும் மந்திரியும் வந்து அவரை நமஸ்கரித்து எவ்விதத்திலாவது தங்க

ளது அரசனுக்கு நல்ல புத்தி யுண்டாகும்படி செய்து சமணர்களையும் நாசம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ்விதமே செய்வதாக அவர்களுக்கு வாக்குக்கொடுத்து அவ்வூரிலுள்ள வாகீசர் மடத்துக்குச்சென்று அங்கு தங்கினார். இவர் வந்த ஆர்ப்பாடத்தைக்கண்டதும் சமணர்கள் மனம் கலங்கிற்று. எவ்விதத்திலாவது இவரைக்கொன்றுவிடவெண்ணங்கொண்டு சமணர்களுள் ஆசாரியர்களாயுள்ளவர்கள் ஒன்றுகூடி மஹத்தானவோர் ஆபிசாரஹோமம் செய்து, அந்த அக்னியை ஞானஸம்பந்தர் மேலேவிவிட்டார்கள். அதை வேடிக்கை பார்க்க அந்த அக்னியின் பின் சமணசிஷ்யர்களும் வந்தார்கள். அந்த அக்னியானது வாகீசர் மடத்துக்கு ஸமீபத்தில் வரவே அதன் வேகமெல்லாம் அடங்கி சமனமாய்விட்டது. அதைக்கண்ட சமணசிஷ்யர்கள் மிக வாச்சரியங்கொண்டு தங்கள் கைகளால் அந்த அக்னியை எடுத்து ஞானஸம்பந்தர் இறங்கியிருந்த மடத்தின் நாலாபக்கத்திலும் கூரையில் வைத்தார்கள். அந்த அக்னியின் ஜ்வாலையானது மேலே தெரிந்ததேயொழிய அந்த மடத்தின் கட்டடத்தையணுகவில்லை. இதுவிஷயத்தை உள்ளே சிரமத்துடன் படுத்திருந்த ஞானஸம்பந்தரிடம் அவர் சிஷ்யர்கள் தெரிவிக்கவே அவர் பதிகம்பாடி அந்த அக்னியை மெதுவாகச்சென்று அரசனை ஜ்வரரூபமாக தஹிக்கும்படி ஏவிவிட்டார். அந்தப் பிரகாரமே அந்த அக்னியானது அரண்மனைக்கு அரசனிடம் சென்றுவிட்டது. அரசனும் கடுமையான ஜ்வரத்தால் மிகவும் வருந்தினான். உடனே அரசன் சமண ஆசார்யர்களைக் கூப்பிட்டு ஜ்வரத்திற்கு சிகித்ஸைகள் செய்யச்சொன்னான். அவர்கள் என்ன செய்தும் ஜ்வரம் தணியவில்லை. அரசனுக்கோ தாபம் பொறுக்கமுடியவில்லை. மூர்ச்சைபோய் தரையில் விழுந்து புரண்டான். அச்சமயம் ராணியும் மந்திரியும் அரசனிடம்வந்து அவனை சற்று ஆசுவாஸப்படுத்தி எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவரான ஞானஸம்பந்தர் என்றொருவர் மதுரைக்கு வந்திருப்பதாயும் அவரைத் தருவித்தால் நொடிப்பொழுதில் ஜ்வரத்தைத் தணித்து விடுவாரென்றும் சொன்னார்கள். அதற்கரசன் அவர் தனது மதத்துக்கு விரோதியான சைவராயிற்றே. அவர் பஸ்மத்தைத் தடவுவரே. அவரிடம் எப்படி வைத்யம் செய்துகொள்வதென்று மறுக்க மந்திரியும் ராணியும்சொன்னதாவது: "இச்சமயம் நமக்கு எவ்விதத்திலாவது சரீரம் ஸௌக்யமாகவேண்டியதுதான் முக்யம். அவர் யாராயிருந்தாலும் அதை இச்சமயம் கவனிக்கக்கூடாது. இந்த சமண ஆசார்யர்களால் எவ்வளவு முயன்றும் ஸௌக்யப்படுத்த முடியவில்லை. ஆதலால் அவரையும் அழைத்து அவரிடத்தில் சரீரத்தின் ஒரு பாகத்தையும் சமண ஆசார்யர்களிடத்தில் மற்றொரு பாகத்தையும் ஒப்புவித்து யார் ஸ்வஸ்தப்படுத்துகிறார்களோ அவரை யனுஸரிப்போம்" என்றார்கள். அரசனும் அதற்கிணங்கவே சமண ஆசார்யர்களுக்கு ஆட்களையனுப்பிவிட்டு தாங்களே நேரில்சென்று ஞானஸம்பந்தரை யழைத்து வந்தார்கள். அரசனும் முன்சொன்னபடியே வலது பக்கத்தை ஞானஸம்பந்தரிடமும் இடது பக்கத்தை சமண ஆசார்யர்களிடமும் ஒப்புவித்து யார் தனது வியாதியை ஸ்வஸ்தப்படுத்துகிறார்களோ அவரைத்தான் அனுஸரிப்பதாகச்சொன்னான். உடனே சமணர்கள் மருந்தில்லாமல் மந்திரத்தாலேயே ஸௌக்யப்படுத்தவேண்டுமென்றார்கள். ஞானஸம்பந்தரும் அதற்கிணங்கி விபூதியையெடுத்தார். சமணர்களதைத் தடுத்து அந்த விபூதியில் மருந்துகள் கலந்திருப்பாய், வேறு பஸ்மம் இங்கிருந்து எடுத்து வரவேண்டுமென, ஞானஸம்பந்தர் அரசனின் வேலையாட்களை கோயிலுக்

குச்சென்று மடப்பள்ளியிலிருந்தும் சாம்பலைக்கொண்டுவரச் சொல்லியனுப்பினர். அவர்களும் அவ்வாறே கொண்டுவர அந்த சாம்பலை ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசுவரரை தியானம் செய்துகொண்டு அரசன் வலதுபக்கத்தில் தனது கையால் தடவினர். உடனே ஜ்வரம் நீங்கிற்று. ஆனால் இடதுபக்கத்தில் முன்னிலும் இரண்டு பங்கதிகமாக தாக்கிற்று. சமணர்கள் மயில் தோகையால் எவ்வளவு அடித்தும், கமண்டுலுவிலிருந்து எவ்வளவு ஜலம் புரோக்ஷித்தும் வரவர அதிக உபாதியேற்பட்டதே யொழிய சற்றேனும் தணியவில்லை. சமணர்கள் கடைசியில் வலதுபக்கம் அமிருதமுள்ள பக்கமானதால் சிக்கிரமாக ஸௌக்யமாய்விட்டதென்றும் இடதுபக்கம் விஷமுள்ள பக்கமானதால் தாமதப்படுகிறதென்றும் ஞானஸம்பந்தரானவர் இடதுபக்கத்தையும் அந்தமாதிரி சிக்கிரமாக ஸௌக்யப்படுத்தினால் தாங்கள் ஒத்துக்கொள்வதாகவும் சொன்னார்கள். உடனே அரசன் ஞானஸம்பந்தரை மிகவும் வேண்ட அவர் இடதுபக்கத்தையும் அந்த பஸ்மத்தால் தடவ உடனே ஸௌக்யமாய் அரசன் முன்னிலும் அதிக வலுவுள்ளவனாக ஆய்விட்டான். சமணர்கள் வெட்கமடைந்து தங்களிருப்பிடம்சென்றார்கள். அரசனும் ஞானஸம்பந்தரை வெகுவாக நமஸ்கரித்து இனித் தான் அவர் சிஷ்யனென்றும் தன்னை எவ்விதத்திலாவது நல்லகதிக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் மன்றாடினான். ஞானஸம்பந்தரும் அவனைத் தனது கடாக்ஷத்தாலனுக்ரஹித்தமாத்திரத்தில் அவனுடைய கூன் நீங்கி மன்மதாகிருதியாக எதிரில் நின்றான். எல்லோரும் கண்டு வியந்தார்கள். அவனுக்கு பஞ்சாக்ஷரம் முதலிய உபதேசங்கள் செய்வித்து ஸுந்தரபாண்டியன் என்று பெயருமளித்து அவனைப்பெரும் சிவபக்தனாகச்செய்து விட்டு அவனால் வெகுவாக உபசரிக்கப்பட்டு தனது மடம் சென்றார்.

63. சமணர்களைக் கழுவிலேற்றினது.

மறுநாள் காலையில் ஞானஸம்பந்தரிடம் மங்கையர்க்கரசியும் குலபந்தன மந்திரியும்வந்து நமஸ்கரித்து அரசனை வைதிகமதத்திற்குத் திருப்பியாய்விட்டதென்று எண்ணி அவர் உடனே ஊரைவிட்டுப் போய்விடக்கூடாதென்றும், சமணர்கள் 8000 பேர்கள் பக்கங்களிலுள்ள எட்டு மலைகளிலுமிருப்பதாகவும், அவர்கள் செய்யும் அக்கிரமங்கள் கணக்கிலடங்காவென்றும் அரசன் யதேச்சனாயிருக்கப்பட்டவனாதலால் அவர்களையடக்க அவனை நம்பக்கூடாதென்றும், சமணர்கள் மிகவும் அயோக்யர்களாகவும் வஞ்சகர்களாகவும் இருப்பதால் வேறொருவராலும் அவர்களை ஜயிக்கமுடியாதென்றும், ஒருமாதகாலம் ஞானஸம்பந்தர் அவ்வூரில் தங்கி அவர்களைவென்று 8000 பேரையும் வேரோடு நாசம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள் அவரும் அப்படியே செய்வதாக அங்கீகரித்து கோயிலுக்குச்சென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பிரார்த்தித்தார். ஈசுவரனும் அசரீரவாக்குமூலமாய் ஞானஸம்பந்தருக்கு ஜயமுண்டாகுமென்று சொல்லி சமணர்களை நாசம்செய்ய அநுமதிகொடுக்க உடனே அரண்மனைசென்று தனது இஷ்டத்தை அரசனிடம் தெரிவித்தார். அரசனும் அதற்கிணங்கி மறுநாள் சமண ஆசார்யர்களை ஞானஸம்பந்தருடன் வாதத்துக்குத் தருவிப்பதாகச்சொன்னான். இதற்குள் அரசன் ஜ்வரத்தைத்தணிக்க முடியாமல் அவமானமடைந்து தம்தம் இருப்பிடம்சென்ற சமணர்கள் தங்கள் பத்னிகளால் இகழ்வாகப் பேசப்பட்டவர்களாய் எல்லொரும் ஒருங்குசேர்ந்து மறுநாள் எவ்விதத்தி

லாவது அக்னிஸ்தம்பம் ஜலஸ்தம்பம் முதலிய மந்திரங்களால் ஸம்பந்தரை ஜயிப்பதாகத் தீர்மானித்து மறுநாள் காலையில் அரசனிடம்சென்று ஸம்பந்தரோடு வாதம்செய்ய அநுமதி கேட்கப் புறப்பட்டார்கள். புறப்படும்பொழுது அவர்கள் பத்னிகள் முதலிரவில் தாங்கள் மிகவும் க்ரூரமான கெட்டஸ்வப்நங்கள் கண்டதாகவும் அன்றையதினம் அரண்மனைக்குப்போக வேண்டாமென்றும் தடுத்தார்கள். சகுனங்களும் ஸரியானதாக ஆகவில்லை. ஆனாலும் சமணர்கள் காலம் கிட்டிவிட்டதால் ஒன்றையும் கவனியாமல் ஒரே பிடிவாதமாய் அரண்மனைசென்று அரசனை ஸம்பந்தரோடு வாதுசெய்ய அநுமதி கேட்டார்கள். அரசனும் ஏற்கனவே அன்றயதினம் வாதத்துக்கு ஏற்பாடு செய்வதாக ஸம்பந்தரிடம் சொல்லியிருந்தபடியால் உடனே அநுமதிகொடுத்தான். ராணியும் மந்திரியும்சென்று ஞானஸம்பந்தரை உபசரித்து அழைத்து வந்தார்கள். அவர் அரசனால் உபசரிக்கப்பட்டு உட்கார்ந்ததும் சமணர்கள் அவரைப்பார்த்து "நீர் அரசன் ஜ்வரத்தைத் தீர்த்தது உம்முடைய மந்திர சக்தியென்று எண்ணவேண்டாம். ஏதோ காக்காய் ஏறினதும் பனம்பழம் விழுந்ததும் என்ற நியாயமாய் ஜ்வரம் ஸௌக்யமாயிற்று. ஆதலால் அதை ஒரு பொருட்டாக மதிக்கக்கூடாது. இப்பொழுது நாங்களெல்லோரும் எங்கள் மந்திரங்களை ஓலைகளிலெழுதி அக்னியில் போடுகிறோம். நீரும் உம்முடைய மந்திரத்தை எழுதி அக்னியில் போடும். எது எரிந்துபோகாமலிருக்கிறதோ அதுவே உயர்ந்தது. இதற்கு ஸம்மதமா" என்றார்கள். ஞானஸம்பந்தரும் அதற்கு ஸம்மதித்து அங்கேயே அரசனுக்கு முன்னிலையில் அக்னிகுண்டம் வளர்க்கச்சென்றார். அதற்கு சமணர்கள் அந்தவிடம் சிவனுக்குப் பிரியமான விடமாதலால் அங்கே கூடாதென்றும் மதுரைக்குப் பத்துமைலுக்கு வெளியிலே மைதானத்துக்குப்போய் அக்னிகுண்டம் வளர்க்கவேண்டுமென்றும் சொன்னார்கள் உடனே எல்லோருமாக சமணர்கள் காட்டிய விடத்திற்குச் சென்றார்கள். கன்றின் பின்னோடு தாய் செல்வதுபோல் ஞானஸம்பந்தர் பின்னோடு ஒருவருக்கும் தெரியாமல் ஸ்ரீ ஸுந்தரேசரும்சென்றார். அவ்விடத்தில் அக்னிகுண்டம் வளர்த்தானதும் சமணர்கள் ஒவ்வொருவரும் மந்திரங்கள் எழுதிய ஏட்டை அக்னியில் போட்டார்கள். ஞானஸம்பந்தரும் தன்னுடைய கையிலிருந்த புத்தகத்திலிருந்து ஒரு ஏட்டையெடுத்து நெருப்பிலிட்டார். சமணர்களேடுகளெல்லாம் நொடிப்பொழுதில் சாம்பலாய் விட்டது. ஸம்பந்தர் ஏடோவெனின் சற்றேனும் அக்னியினால் பாதிக்கப்படாமல் அந்த ஜ்வாலையில் தனியாக நின்றது. இதைக்கண்டு எல்லோரும் மிகவுமாச்சர்யமடைந்தார்கள். சமணர்களுக்கும் மனதிற்குள் பயமுண்டாயிற்றென்றாலும் லஜ்ஜையில்லாதவர்களாதலால் திரும்பவும் ஸம்பந்தரைப்பார்த்து "உமக்கு அக்னிஸ்தம்பவித்யை தெரியும்போலிருக்கிறது. அன்றயதினம் நீர் தங்கியிருக்கும் மடத்தை யெரிக்கும்படி நாங்களனுப்பிய அக்னியானது அவ்விதம் எரிக்காமலிருந்ததனாலேயே எங்களுக்குத்தெரிந்தது. ஆதலால் இது பிரயோஜனமில்லை. நம்மிருவர்களுடைய மந்திரங்களையும் முன்போலவே ஏடுகளில் எழுதி வைகையாற்றின் பிரவாஹத்திலெறியுவோம். அதில் எது ஆற்றை யெதிர்நோக்கிச்செல்கின்றதோ அதுவே ஜயமடைந்தது ஆற்றோடுசெல்வது தோல்வியுற்றது. ஜயிப்பவருக்கு தோல்வியுற்றவர் வேலையாளாக அமர்ந்துவிடுகிறது என்ற பந்தயமும் ஏற்படுதிக்கொள்வோம்" என்றார்கள். இதைக்கேட்ட ஞானஸம்பந்தர் "நீங்கள் 8000 பேரிருக்கிறீர்கள். ஸ்ரீ

ஸௌந்தரேசரின் கிருபையால் நான் ஜயமடைந்தால் வேதசூன்யர்களான உங்கள் 8000 பேரையும் வேலையில் வைத்துக்கொள்ள எனக்குப் பிரியமில்லை. ஆதலால் நீங்கள் தோல்வியடைந்தால் உங்களைக்கழுவில் ஏற்றிவிடுகிறது. இதற்கு நீங்கள் அரசனின் முன்னிலையில் ஸம்மதித்தால் நீங்கள் சொல்லுகிறபடியே செய்வோம்'' என்றார். சமணர்களும் அவர்களுக்கு முடிவுகாலம் கிட்டிவிட்டதால் அதற்கு ஸம்மதித்தார்கள். உடனே அரசனும் 8000 கழுவு தயார் செய்யச்சொல்லி உத்தரவுகொடுத்தான். எல்லோரும் வைகையாற்றங்கரைசென்றார்கள். முன்போலவே ஒவ்வொருவரும் தம் தம் மந்திரங்கள் எழுதிய ஏட்டை நதியின் பிரவாஹத்திலெறிந்தார்கள். சமணர்களும் தங்களுக்குத்தெரிந்த ஜலஸ்தம்ப மந்திரத்தால் நதியின் பிரவாஹத்தை எவ்வளவோ தடுத்துப்பார்த்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. அவர்களுடைய ஏடுகளெல்லாம் நொடிப்பொழுதில் ஸமுத்ரம் போய்ச்சேர்ந்தன. ஞானஸம்பந்தரின் ஏடோவெனின் பிரவாஹத்தை யெதிர்த்துச்சென்றது. குலபந்தன மந்திரியானவர் அதைப்பின் தொடர்ந்துசென்று திருவேடகம் என்று சொல்லப்படு மிடத்தில் ஒரு பிராம்மணரூபமாய் வந்த ஈசுவரனால் எடுத்துக் கொடுக்கப்பெற்று அவ்வேட்டைத் திருப்பிக்கொண்டுவந்தார். அப்பொழுது ஞானஸம்பந்தர் அச்சமணர்களை நோக்கி "இப்பொழுதாவது நீங்கள் வேத நிந்தையை ஒழித்து விபூதி ருத்ராக்ஷமணிந்து பஞ்சாக்ஷர ஜபம் செய்வீர்களானால் உங்களை விட்டுவிடுகிறேன். இல்லாவிடில் கழுவிலேற வேண்டியது தான்'' என்றார். சமணர்களுள் முக்கியமானவர்கள் அவர் வார்த்தையைக் கேளாமையால் அரசனின் வேலையாட்களால் கழுவிலேற்றப்பட்டார்கள். உயிருக்குப் பயந்தவர்களெல்லாம் உடனே உடம்பு முழுமையும் விபூதியைப் பூசிக்கொண்டு ஞானஸம்பந்தரை சரணம் புகுந்தார்கள். இவ்வாறு சமணர்கள் பூண்டை வேரோடொழித்து விட்டு அரசனால் வெகுவாக ஸம்மானிக்கப்பட்டு எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு ஞானஸம்பந்தர் மதுரையை விட்டகன்று இதர க்ஷேத்ரங்களுக்குச்சென்றார். இந்த குப்ஜ பாண்டியன்தான் நெடுமாறநாயனார்; குலபந்தன மந்திரிதான் குலச்சிறைநாயனார்.

64. ஸாக்ஷியாகவிருந்த கிணறு, விருக்ஷம், லிங்கம் மூன்றையும் வரவழைத்தது.

காவேரிப்பட்டணம் என்னும் ஊரில் சிறந்த சிவபக்தனான ஒரு வைசியன் இருந்தான். அவனுக்கு ஏராளமான ஸம்பத்திருந்தது. ஆனால் புத்ரபாக்யமில்லை. அநேகம் தானம் முதலியவைகள்செய்து கடைசியாக ஒரு புத்ரியைப்பெற்றான். அதை மிகவும் செல்வமாக வளர்த்துவந்தான். அப்புத்ரி பிறந்தது முதலே அவளையும் தனது ஆஸ்தி முழுமையையும் மதுரையில் தனது மருமகனுக்குக்கொடுப்பதாக ஸமீபத்திலுள்ள தனது பந்துக்களிடமெல்லாம் சொல்லிவந்தான். ஆனால் அப்பெண்ணுக்கு கல்யாணம் செய்வதற்கு முந்தியே அந்த வைசியனும் அவன் பத்னியும் காலகதி யடைந்துவிட்டார்கள். உடனே அங்குள்ளவர்கள் மதுரையிலிருந்த அவன் மருமகனுக்குக் கடிதமனுப்பி அவனைத் தருவித்து அந்த வைசியன் வெகுநாளாய் சொல்லிக்கொண்டிருந்ததை அவனிடம் சொல்லி அவனை அந்தப்பெண்ணையும் அந்த ஸொத்துக்களையும் எடுத்துப்போகும்படி சொன்னார்கள். அந்த மருமகனும் ஸொத்தையெல்லாம் எடுத்து தன் மனுஷ்யர்கள் மூலமாக மதுரைக்கு அனுப்பிவிட்டு தானும் அந்தப்பெண்ணும இன்னும் சிலருமாக தினம் கொஞ்ச

ாரமாக நடந்து வந்தார்கள். வழியில் திருப்படிப்பயம் என்னும் க்ஷேத்திரத்தில் தங்கி ஸ்வாமி தர்சனம்செய்து அங்கு கோயிலிலிருந்த வன்னிமரத்தடியில் சமைத்து சாப்பிட்டு விட்டு அஸ்தமித்ததும் கோபுரவாசல் திண்ணையில் மருமகனும் உள் மண்டபத்தில் அந்தப் பெண்ணுமாகப் படுத்து நித்திரைசெய்தார்கள். அர்த்த ராத்திரியில் அந்த மருமகனை ஸர்ப்பம் தீண்டி அவன் இறந்துவிட்டான். உடனே அந்தப்பெண்ணும் கூட இருந்தவர்களும் கதறிக்கொண்டு அவ்வூரில் ஸர்ப்பத்தின் விஷத்தைப்போக்கடிக்க மந்திரம் தெரிந்தவர்கள் யாராகிலும் இருக்கிறார்களாவென்று கத்திக்கொண்டு அக்ரஹாரத்திற்கு வந்தார்கள். அப் பெண்ணினதிர்ஷ்டவசத்தால் அன்றயதினம் அந்த க்ஷேத்ரத்திற்கு ஞானஸம்பந்தர் ஸ்வாமிதர்சனத்திற்கு வந்திருந்தார். இவர்கள் அழுகைக்குரலைக் கேட்டதும் அவர் வெளியேவந்து விஷயத்தைத் தெரிந்துகொண்டு கோபுரவாயிலையடைந்து இறந்துகிடந்த அந்த மருமகன் சரீரம் முழுமையும் தனது கையால் விபூதியை யெடுத்துத்தடவி ஈசுவரன் பேரில் பதிகம்பாடினார். உடனே அப்பையன் தூங்கி யெழுந்திருந்தவன்போல எழுந்தான். அவனைச் சேர்ந்தவர்களெல்லாம் ஸந்தோஷததால் அவனைக்கட்டியணைத்து ஆனந்தமடைந்தபொழுது அப்பெண் மட்டும் அவனைத்தொடவில்லை. அதென்ன விபரமென்று ஞானஸம்பந்தர் கேட்க அம்மருமகன் தனது மாமன் விருத்தாந்தத்தை சொல்லி தான் மதுரைபோய் பந்துக்கள் முன்னிலையில் அப்பெண்ணை பாணிக்ரஹணம்செய்து கொள்ள வெண்டுமென்றிருப்பதால் இன்னும் அப்பெண்ணைத் தொடவில்லையென்று சொன்னான். இதைக்கேட்ட ஞானஸம்பந்தர் அவனை அப்பெண்ணை உடனே அவ்வூரிலேயே விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்றுசொல்ல அம்மருமகன் அவர் சொல்வதைத்தான் தட்டக் கூடாதென்றும் ஆனால் அங்கேயே கல்யாணம் செய்துகொண்டால் ஊருக்குச்சென்றதும் கல்யாணத்துக்கு ஒருவரும் ஸாக்ஷி யில்லாததால் பின்னாடி விவாதங்களுக்கு இடமுண்டாகுமென்றும் அதற்காகத்தான் தயங்குவதாயும் சொன்னான். ஞானஸம்பந்தர் "நீ அதற்காகத் தயங்கவேண்டுவதில்லை. உனக்கு உயிர்ப் பிச்சைகொடுத்த இந்த க்ஷேத்ரத்திலுள்ள ஈசுவர லிங்கமும், வன்னிமரமும், இக்கிணறும், எப்பொழுது வேண்டுமானாலும் உனக்கு ஸாக்ஷிசொல்லும். நானிருக்கிறேன், என் முன்பாக விவாஹம் செய்துகொள்" என்றார். உடனே அவர் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அந்த மருமகன் அப்பெண்ணை அவ்வூரிலேயே விவாஹம் செய்துகொண்டு ஞானஸம்பந்தரால் ஆசீர்வதிக்கப்பெற்று அவரிடம் விடைபெற்றுக்கொண்டு மதுரைவந்து சேர்ந்தான். அவனுக்கு இதற்கு முன்னதாகவே ஒரு ஸம்ஸாரம் உண்டு. ஒருஸமயம் இந்த இரண்டு ஸம்ஸாரத்திற்கும் பிறந்த குழந்தைகளுக்குள் சச்சரவு ஏற்பட்டது. அப்பொழுது மூத்தவள் இளையவளைப்பார்த்து இளையவள் வேசியென்றும் அக்னிஸாக்ஷியாகக் கல்யாணமாகாதவளென்றும் ஏசினாள். இளையவள் தனக்குக் கல்யாணம் நடந்த விவரத்தையெல்லாம் சொல்லி ஈசுவரலிங்கமும், வன்னிமரமும், கிணறும் தனக்கு ஸாக்ஷியென்றும் ஞானஸம்பந்தர் முன்னிலையில்தான் நடந்ததென்றும் என்னசொல்லியும் மூத்தவள் அதை நம்பாமல் பொய்யென்று மறுத்து விட்டாள். இளையவள் மிகவும் மனவருத்தம் கொண்டவளாய் அன்றிரவு தனது கணவனிடம் முறையிட்டாள். அவன் ஒன்றும் தோன்றாமல் பேசாமலிருந்தான். மறுநாட் காலையில் அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு கோயிலுக்குப்போய் பொத்தாமரையில் ஸ்நா

னம் செய்துவிட்டு ஸ்ரீ ஸுந்தரேசுவரர் கோயிலுக்குச்சென்று மூத்தாளால் தனக்கு நேர்ந்த அவமானங்களை யெல்லாம் ஈசுவரனிடம் முறையிட்டு ஞானஸம்பந்தர் சொன்ன வாக்குப் பிரகாரம் அந்த மூன்று ஸாக்ஷிகளையும் உடனே மதுரைக்கு வரவழைத்து மூத்தாளுக்கும் இதரர்களுக்கும் தன் வார்த்தையை மெய்ப்பித்து தனது கணவனுக்கு தன்னை தர்மபத்னியாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்றும் இல்லாவிடில் தான் அங்கேயே பிராணனை யிழந்து விடுவதாகவும் ஈசுவரனிடம் தெரிவித்தாள். ஈசுவரனும் அவளிடம் மனமிரங்கி ஞானஸம்பந்தர் மாதிரியாகவே அவள் முன்வந்து இந்திர விமானத்துக்கு ஈசான்யதிக்கில் அந்தக்கிணறு, வன்னிமரம், ஈசுவரலிங்கம் மூன்றையும் தருவித்து எல்லோருக்கும் திருப்புறம்பயத்தில் நடந்த விஷயத்தையெல்லாம் எடுத்துச் சொல்லி மூத்தாளை யாவரும் நிந்திக்கும்படியாகச்செய்து விட்டு எல்லோரையும் அனுக்ரஹித்துவிட்டு அந்தர்த்தானமானார். இந்த அதிசயத்தைக் கண்டு மகிழாதவர்களில்லை. அந்த வைசிய மருமகனும் மூத்தாளை ஒதுக்கி வைத்துவிட்டு இளையாளுடன் ஸுகமாக இருந்தான். அந்த ஸாக்ஷிக்கிணறும், மரமும், ஸாக்ஷிநாதர் என்று சொல்லப்படும் லிங்கமும் இன்றும் மதுரை கோயில் பிராகாரத்தின் ஈசான்ய பாகத்தில் காணலாம்.

திருவிளையாடல் படங்கள்.

கோயிலின் உள்ளே அமைந்த பொற்றாமரைக் குளத்தைச் சுற்றிலுமுள்ள மண்டபங்களின் சுவர்களில் சுந்தரேசுவரர் செய்த இந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களின் சித்திரங்களும் வரையப்பட்டிருக்கக் காணலாம். 224-வது பக்கத்தில் இந்த சித்திரங்களின் ஒரு பாகத்தைப் படமெடுத்துப் பதிப்பித்திருக்கிறோம்.

சங்கம்.

வெகுகாலந் தொட்டு, இந்த ஊர் தமிழ்ப் பாஷையில் பாண்டித்தியம் வாய்ந்தவர்கள் சங்கம் கூடு மிடமெனப் பெயர் பெற்றிருந்தது. மதுரைத் தமிழ்ச் சங்கம் என்பதைக் கேள்விப்படாதவர்கள் மிகச்சிலரே. இச்சங்கத்தாருள் முக்யஸ்தர்களாகிய நக்கீரர், கபிலர், பரணர் இவர்கள் நாயன்மார்களில் பொய்யடிமை இல்லாத புலவர்களைச் சேர்ந்தவர்கள். இக்கூட்டத்தில் 51-வது லீலையில் சொல்லியபடி ஸ்ரீ ஸுந்தரேசுவரரும் ஒருவராகத் திருவிளையாடல் செய்தனர்.

கோயில் கட்டடங்கள்—ஆயிரக்கால் மண்டபம்.

சாஸ்திரோக்தமாய் அமைக்கப்பட்டுள்ள அழகிய ஆயிரக்கால் மண்டபமும் இங்கு விசேஷமானதெனக்கூறலாம். தஞ்சாவூரிலிருந்த வீரப்ப நாயகர் என்பவர் இங்கு வாதுங்கன், ஸ்ரீ வல்லபர்கள் ஆளுகையில் இங்குள்ள அழகிய கல்தூண் மண்டபத்தை கட்டி வைத்தது மாத்திரமேயன்றி, மீனாட்சியம்மனுக்கும் கற்கள் இழைத்த தங்கக் கவசம் செய்து அணிவித்தார் என்ற விஷயம் தெரிகிறது.

புது மண்டபம்.

ஸுந்தரேசுவரரது கோயிலுக்கு எதிராக நூற்றுஐந்தடி நீளமும் முப்பத்துமூன்று அடி அகலமு முள்ளதோர் மண்டபம் அமைக்கப்பட்டுளது. அம்மண்டபத்திற்குப் புது மண்டபமென்று பெயர். இது அழகிய சிற்ப வேலைகளைக் கொண்டது. மற்றக் கட்டடங் களுக்குப் பிறகு அமைக்கப்பட்டதிலிருந்து இதற்குப் புதுமண்டபமென்ற பெயர் வாய்ந் ததுமன்னியில் வஸந்த காலத்தில் ஸ்வாமியும் அம்மனும் அங்குபோவதிலிருந்து அதற்கு 'வஸந்தமண்டபம்' என்ற பெயரும் இடப்பட்டிருக்கிறது. இந்த மண்டபத்தின் தூண் வரிசைகளுள் மத்தியிலுள்ள வரிசையில் பத்து மதுரை நாயக்க அரசர்களது உருவமும், அவர்களது மனைவிகளின் உருவங்களுடன் செதுக்கிவைக்கப்பட்டிருப்பது காணப்படும். இதில்தான் வெகு கியாதியுடன் இவ்வூரை ஆண்ட திருமலைநாயகருடைய சிலையும் இருந்து வருகிறது. வெளிவரிசைத் தூண்களில் சிவபிரானது பற்பல உருவங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அதில் ஒன்று ஸுந்திரேசுவரர் ஒரு தாய்ப்பன்றி உருவமாக மாறிப் பல பன்றிக்குட்டிகளைப் பால்கொடுத்துக் காப்பாற்றியது. இது ஈசுவரன் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள் ஒன்று.

அஷ்டலக்ஷ்மி மண்டபம்.

அஷ்டலக்ஷ்மிகளையும் குறிக்கும் "அஷ்ட லக்ஷ்மி மண்டபம்" என்ற மண்டபம் இங்கு ஏற்பட்டிருத்தல் இன்னொரு விசேஷம் எனக் கூறலாம். இது ஸ்ரீ மீனாக்ஷியம்மன் ஸந்நிதி கோபுரவாசலில் உள்ளது.

காரைக்காலம்மை.

தனது உத்கிருஷ்டமான சிவபக்தியாலும் தவத்தினாலும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான காரைக்கால் அம்மையது விசேஷ சிலை ஒன்றும் இங்குள் ளது. இவ்விடத்தில் தான் இவரது புருஷன் இவரிடம் மாம்பழம் பெற்ற அதிசயத்தி னால் இவரை நமஸ்கரித்ததும் அவ்வம்மை பின்னர் தமது அழகு வாய்ந்த மாம்ஸதே கத்தை வைத்திருப்பது அழகல்லவென்று ஸ்ரீ ஸுந்தரேசுவரரைப் பிரார்த்தித்ததும் தனது தேகத்திலுள்ள மாம்ஸம் நீங்கப்பெற்று எலும்புடன் பேய் வடிவையடைந்தனர்.

மூர்த்தி நாயனர்.

இவ்விடத்திலிருந்த மூர்திநாயனர் என்னும் வைசியர் ஸுந்தரேசுவரருக்கு தினப்படி சந்தனக்காப்பு சாத்த சந்தனம் அறைத்துக் கொடுக்கும் தொண்டு செய்துவருகையில் கர் நாடகதேச அரசன் மதுரையை ஜயித்துத் தனது ஆளுகையில் ஜைன மதத்தைப் பரவச் செய்து இவரது கைங்கர்யத்திற்குச் சந்தனக்கட்டை கிடைக்காமலிருக்கச் செய்ததின் நிமித்தம் தனது வெருங்கையை அறைத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்தது கண்ட ஈஸ்வரன் அக்கர்நாடக ராஜன் திடீரென்று இறக்கவும், பட்டத்துயானை இவரையே அரச னாக்கி இவரால் சைவம் தழைந்தோங்கவும் செய்தார்.

நெடுமாற நாயனுர்.

கூன்பாண்டிய னென்னும் பெயருடன் சோழ ராஜாவின் பெண்ணுகிய மங்கையர்க்கரசியை மணந்திருந்த பாண்டிய ராஜன் ஜைனமதத்தார் வசப்பட்டதும் ஸம்பந்தர் அவ்விடம் சென்று பல அற்புதச் செயல்களைச்செய்து இவரைத் திரும்பவும் சைவ மதத்திற்குத் திருப்பினர். இவர் தான் திருநெல்வேலி சென்று பல்லவராஜனுடன் சண்டை செய்து ஜயமடைந்தவர். இப் பல்லவராஜன் தான் வாதாபியைச் சிறுத்தொண்டர் உதவியால் வென்றதாகவும் பின்னர் இப்பாண்டியவரசனுல் திருநெல்வேலியில் தோல்வி அடைந்ததாகவும் தெரிய வருகிறது. இந்தக் கூன்பாண்டியன் தான் நெடுமாற நாயனர் என்று வழங்குவது.

வண்டியூர்த் தேப்பக்குளம்.

கோயிலுக்குக் கிழக்கில் சுமார் மூன்றுமைல் தூரத்தில் ஆயிரம் அடி சதுரமுள்ள ஓர் அழகிய குளமும் அதன் மத்தியில் ஒரு சதுரமான தீவில் ஒரு சிறிய கோயிலும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு வண்டியூர்த் தெப்பக்குளமென்று பெயர். இக்குளம் வைகை நதிக்கருகிலிருப்பதுடன் ஓர் கால்வாயினுல் அந்நதியுடன் சேர்க்கவும் பட்டிருக்கிறது. இக்குளத்திற்கு மஹிமை ஏற்பட்டதற்குக் காரணம் திருமலைநாயக்கன் அரண்மனை கட்ட மண்தோண்டிய இவ்விடத்தில் தற்காலம் கோயிலுக்குள் இருக்கும் பெரிய விநாயகரது சிலை கண்டெடுக்கப்பட்டதாம். அச்சிலை அகப்பட்ட அவ்விடத்தில் மேற்கூறியுள்ள திருக்குளம் அமைத்து அதில் தெப்ப உத்ஸவம் நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் படம் 210, 214, 215, 226 பக்கங்களில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

கூடல் அழகர் கோயில்.

இங்குள்ள விஷ்ணு கோயிலுக்குக் கூடல் அழகர் கோயிலென்று பெயர். கூடல் என்பது மதுரைமா நகருக்குப் புராதனப் பெயர். இவ்விடத்தில் மீனுட்சி அம்மனுக்கும் ஸுந்தரேசுவரருக்கும் பாணிக்கிரகணம் பங்குனி உத்தரத் தன்று செய்யப்பட்டதால் தாரைவார்க்க மஹாவிஷ்ணுவும் அந்த ஸமயம் தோன்றலாயினர். இக்கூடலழகர் கோயில் எல்லா ஸ்தலங்களிலும் விஷ்ணு கோயில் ஏற்படுவதுபோல் இவ்வூரில் மேற்குத்திக்கில் அமையப்பெற்றிருக்கிறது. இக்கோயிலின் விமானத்திற்கு அஷ்டாங்க விமானமென்று பெயர். இது அழகான சில்ப வேலைப்பாடுடையது.

ஆனை மலை.

தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு யானையினது உருவம்போல் அமையப்பெற்றிருக்கும் பெருமை வாய்ந்த இந்த மலை மதுரையின் வடகிழக்கில் ஆறுமைல் தூரத்தில் இருக்கிறது. இம்மலை இம்மாதிரி யானை உருவமாய் இவ்விடம் ஏற்பட்டிருப்பது திருவிளையாடல்களுள் ஒன்று (22). காஞ்சியிலிருந்துவந்து பாண்டிய ராஜனை எதிர்த்த ஜைன மதத்தினனை பல்லவராஜன் ஒரு யானையை அனுப்பி மதுரையை அழிக்கவிட அதனை ஸ்ரீ ஸுந்தரேசுவரர் நரஸிம்மரூபம்கொண்ட பாணம்விட்டுக்கொன்று கல்லாகத் தோன்றச்

செய்தார். இப்பொழுதும் இதன் நிமித்தம் இம்மலை வடக்கில் குகைக்கோயில் ஏற்பட்டு அதில் நரஸிம்மசுவாமி பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பூசிக்கப்பட்டு வருகிறார். இம்மூர்த்தி கலியுகம் 3873 (கி. பி. 700-ல்) ஏற்படுத்தப்பட்டதாக சிலாசாஸனம் இருந்துவருகிறது. மேலும் இக்கோயிலிலுள்ள முதலாவது பராந்தகன் காலத்தில் அதாவது (கி. பி. 907-ல்) ஏற்பட்ட சாஸனத்திலிருந்து இந்த கிராமத்திற்கு அப்பொழுதே நரசிங்கம் எனப் பெயர் ஏற்பட்டிருந்ததாகத் ;தெரியவருவது மன்னியில்கலியனேரி என்னும் குளமும் அப்பொழுது வெட்டப்பட்டதாம்.

நீலகண்டதீக்ஷிதர்.

இவர் மிகவும் பிரஸித்திபெற்ற அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் சகோதரரான ஆச்சா தீக்ஷிதரின் பேரன். பதினேழாம் நூற்றுண்டின் முற்பாகத்தில் இருந்தார். இவரும் ஒரு பெரிய வித்வான். அநேகம் கிரந்தங்கள் எழுதியிருக்கிறார். இவர் மதுரையில் திருமலை நாயக்கனிடத்தில் வெகுகாலம் மந்திரியாக இருந்தார். அப்பொழுது ஒருஸமயம் திருமலை நாயக்கன் தன்னைப்போலவும், தன்னுடைய பத்னியைப்போலவும் இரண்டு சிலை உருவங்கள்செய்து கையில் தீபம் ஏந்திக்கொண்டிருக்கும் மாதிரியாக ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரர் ஸன்னதியில் வைக்கவேண்டுமென்று நீலகண்டதீக்ஷிதரிடம் சொன்னான். உடனே நீலகண்டதீக்ஷிதரும் சில்பவேலைக்காரனைத் தருவித்து அந்த மாதிரியே இரண்டு சிலைரூபங்கள் செய்யும்படி உத்திரவிட்டார். சில்பவேலைக்காரனும் திருமலை நாயக்கனின் சிலையை சீக்கிரத்தில் செய்துவிட்டான். அவன் பத்னியின் சிலை செய்யும்பொழுது அந்த உருவத்தின் அடித்துடையில் ஒரு பள்ளம் ஏற்பட்டுவிட்டது. உடனே அதைத் தள்ளிவிட்டு வேறொரு சிலை எடுத்து உருவம் செய்தான். அதிலும் அவ்வாறே பள்ளம் ஏற்பட்டுவிட்டது. மறுபடியும் வேறொரு கல் எடுத்தான். இந்த மாதிரியாக எவ்வளவு கற்கள் எடுத்து செய்த போதிலும், ஒவ்வொன்றிலும் அந்தப் பள்ளம் காணப்பட்டது. அதனால் அந்த சில்பவேலைக்காரன் ஒன்றும் தோன்றாதவனாய் இன்னது செய்வது என்று தெரியாமல் தவித்து நின்றான். ஒருநாள் திருமலைநாயக்கன் தீக்ஷிதரைக் கூப்பிட்டு சிலை உருவங்கள் ஆய்விட்டனவா என்று கேட்க, தீக்ஷிதரும் போய்ப் பார்த்து வருவதாகச்சொல்லி சில்பவேலைக்காரன் வீட்டுக்குச்சென்றார். இவரைக் கண்டதும் சில்பவேலைக்காரன் பிரதக்ஷிணம் பண்ணி நமஸ்காரம் செய்து "ஸ்வாமின், நாயகருடைய சிலை மிகவும் நன்றாக அமைந்துவிட்டது. அவர் பத்னியின் சிலையை எவ்வளவுதரம் செய்தபோதிலும் அடித்துடையில் ஒரு பள்ளம்விழுகிறது. அதனால் எனக்கு என்னசெய்வது என்று தோன்றவில்லை. தாங்கள் எப்படி உத்திரவுகொடுக்கிறீர்களோ அப்படி செய்கிறேன்" என்று சொல்லி தான்செய்த உருவங்களையெல்லாம் காண்பித்தான். அவைகளை எல்லாம் பார்த்துவிட்டு தீக்ஷிதர் சற்றுநேரம் தியானத்திலிருந்தார். உடனே அந்த சில்பவேலைக்காரனை நோக்கி "அப்பா, நீ ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம், அந்த அம்மாளுக்கு அடித்துடையில் அப்படித் தானிருக்கிறது; ஆதலால் அதைப்பற்றி நீ கவனியாமல், நீ செய்திருக்கிற உருவங்களில் நல்லதாக எடுத்து வைத்துவிடு. நாளை பிரதிஷ்டை செய்துவிடலாம்" என்று சொல்லிவிட்டு திருமலைநாயக்கனிடம்போய் உருவங்கள் தயாராய் இருக்கின்றனவென்றும்

மறுநாள் பிரதிஷ்டைசெய்து விடலாமென்றும் சொன்னார். அவ்வாறே மறுநாள் அச்சிலை உருவங்கள் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டன திருமலைநாயக்கனும் அவன் பத்னியைக் கூட்டிக்கொண்டு கோயிலுக்குசசென்று அவ்வுருவங்களை நன்ருக கவனித்துப் பார்த்தான். தனது பத்னியின் அடித்துடையில் பள்ளமிருப்பதைக் கண்டதும் அந்த சில்ப வேலைக்காரனைக் கூட்டிவரச்சொல்லி கோபித்துக்கொண்டான். அதற்கவன தான் அனேக உருவங்கள் செய்ததாகவும், எல்லாவற்றிலும் அந்தப் பள்ளம் காணப்பட்டதாகவும் பிறகு நீலகண்ட தீக்ஷிதர் வந்து அந்த அம்மாளுக்கு அப்படியே இருக்கிறதாகவும் அதனல் அந்த சிலையையே வைக்கும்படி உத்திரவு கொடுததனின் பேரில் தான அப்படிச் செய்ததாகவும சொன்னன. இதைக்கேட்ட திருமலைநாயக்கன் தனது பத்னியை நோக்க அவள் தனக்கு அதுமாதிரியே இருப்பதாக ஒப்புக்கொண்டாள். உடனே அது நீலகண்ட தீக்ஷிதருக்கு எவ்வாறு தெரிந்ததென்று தீக்ஷிதரிடம் கோபங்கொண்டவனாய் தனது வேலையாட்களைக் கூப்பிட்டு உடனே போய் தீக்ஷிதரின் கண்களைப் பிடுங்கிவிட்டு வரும்படி கட்டளையிட்டான். அவ்வேலையாட்கள் தீக்ஷிதரின் வீட்டிற்கு வருமபோழுது தீக்ஷிதர் பூஜையிலிருந்தார். இவ்வாறு வேலையாட்கள் வாசலில் வந்திருக்கிறதாக தீக்ஷிதரிடம் தெரிவிக்கவே அவர் ஞானதிருஷ்டியால் அவன்கள் வந்திருக்கும் காரியத்தை தெரிந்துகொண்டு ஈசுவரனுக்கு பூஜை முடிந்து கர்பபூரஹார்த்தி ஆனவுடன் அவ்வெரிந்துகொண்டிருக்கும் கர்ப்பூரத்தை தானே தன் கண்களில் போட்டுக்கொண்டு தனது திருஷ்டியைப் போக்கிக்கொண்டார். பிறகு பூஜையிலிருந்து வாசலில்வந்து அவ்வாட்களைக் கண்டு "உங்கள் நாயக்கன் உங்களிடம் சொல்லி அனுப்பிய காரியததை நாமே முடித்துக்கொண்டுவிட்டோம். நமது கண்களைப் போக்கிக்கொண்டோம். இதை அந்த அவிவேகியிடம் போய் தெரிவித்துவிடுங்கள். இனி நாம் அவனைப் பார்க்கமாட்டோம்" என்று சொல்லி மடிசஞ்சிகையை எடுத்துக்கொண்டு பத்னியை அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்ருர். அங்கே மீனுக்ஷியம்மன் ஸன்னிதியில் நின்றுகொண்டு "ஆனந்தஸாகரஸதவம்" என்று சொல்லப்படும் மிக அத்புதமான ஸ்தோத்ரத்தைச் சொன்ஞர். அதில் அமபாளைப்பார்த்து "அம்மா, நான் ஸதாஸர்வகாலமும் உன்னை தியானம செய்வதிலும் உன்னுடைய திவ்ய ரூபத்தை கண்குளிர பார்ப்பதிலும் உன்னை ஸ்தோத்திரம் செயவதிலும் இது முதலான ஆனந்தக் கடலில் மூழ்கினவனாய் இவ்வளவு நாள் ஆயிற்றென்பது தோணுமல் முப்பது வருஷமாகக் காலங்கழித்து வந்தேன். இந்த முட்டாளான திருமலைநாயக்கவாசன் விவேகமின்மையால் என்னிடம் ஸந்தேகம்கொண்டு என் கண்களைப் பிடுங்க யத்தனித்தான். நான் உன்னைத்தவிர வேறொருவனுக்கும் கட்டுப்பட்டவனில்லாமையால் நானுகவே என் கண்களைப் போக்கிக்கொண்டுவிட்டேன். இனி எந்தக் கண்களால் உன்னுடைய திவ்ய ரூபத்தை தரிசிப்பேன்" என்று உருக்கமாகச்சொன்னதும் அம்பாள் பரமகருணையுடன் அவருக்குப் பிரஸன்னையாகி அவருக்கு திருஷ்டியைககொடுத்து அனுக்ரஹித்தாள். பிறகு மிகவும் நேர்த்தியாக அம்பாளை ஸ்தோத்தரித்துவிட்டு ஸ்ரீஸுந்தரேசுவரரையும் தர்சனம பண்ணி ஸ்தோத்ரம் செய்துவிட்டு ஸம்ஸாரத்துடன் தனது ஊரை நோக்கித் திருமபினர். இவ்வத்புதங்களை எல்லாம் கேள்விப்பட்டு திருமலைநாயக்கன் இவரிடம்வந்து நமஸ்கரித்து தான் செய்ததெல்லாம் தவறு என்றும் அவர் மதுரையை விட்டுப்போகாமல் தன்னிடமே இருக்

கவேண்டுமென்றும் எவ்வளவு சொல்லியும் கேளாமல், அவனை நிக்கரித்துவிட்டு தனது ஊர்போய்ச் சேர்ந்தார்.

சிலாசாஸனம்.

இவ்விடத்திலுள்ள சிலாசாஸனங்களிலிருந்து பல விஷயங்கள் வெளியாகின்றன. சகம் 1501-ல் ராமநாதபுரம் சீமையிலிருந்து அரண்மனைக்கு முதலில் வெற்றிலைபாக்கு கொண்டுவரும் சேடர்களுக்குத் தீர்வை வஜா செய்யப்பட்டது, வரி நீக்கிய கிராமங்களிலிருந்து தீர்வை கேட்டதற்காகக் கோயில் பட்டர்கள் சகம் 1632-ல் விஜயரங்க சொக்கநாதர் ஆக்ஷியில் கீழண்டை கோபுரத்திலிருந்து விழுந்து உயிரைவிட யத்தனித்தது, கம்பத்தடி மண்டபம் சகம் 1505-ல் வீரப்ப நாயக்கன் காலத்தில் கட்டப்பட்ட விவரம், கூடல் அழகர் விஷ்ணுகோயில் கர்ப்பகிருஹம் அர்த்த மண்டபம் இவைகளுக்குக் கருங்கல் கந்தாடை கோனம்மனால் எல்லப்ப நாயக்கன் காலத்தில் சேகரிக்கப்பட்டது, ஆனைமலையில் நரசிங்கப் பெருமாள் கோயில் சமீபத்தில் கலியனேரி என்னும் குளம் சோழராஜாவாகிய முதலாவது பராந்தகன் (கி. பி. 906-947) 33-வது வருஷ ஆளுகையில் வெட்டப்பட்டது.

தேவாரப் பாடல்கள்.

திருஞானஸம்பந்தஸ்வாமிகளருளிச்செய்தது:—

முதல் திருமுறை—திருவிருக்குக்குறள்—பண்—குறிஞ்சி.

நீலமாமிடற், றாலவாயிலான், பாலதாயினார், ஞாலமாள்வரே. 1
ஞாலமேழுமா, மாலவாயிலார், சீலமேசொலீர், காலன்வீடவே. 2
ஆலநீழலா, ராலவாயிலார், காலகாலனார், பாலதாமினே. 3
அந்தமில்புக, ழெந்தையாலவாய், பந்தியார்கழல், சிந்தைசெய்மினே. 4
ஆடலேற்றினான், கூடலாலவாய், பாடியேமனம், நாடிவாழ்மினே. 5
அண்ணலாலவாய், நண்ணினான்றனை, யெண்ணியேதொழத், திண்ணமின்பமே. 6
அம்பொனாலவாய், நம்பொனார்கழல், நம்பிவாழ்பவர், துன்பம்வீடுமே. 7
அரக்கனார்வலி, நெருக்கனாலவா, புரைக்குமுள்ளத்தார்க், கிரக்கமுண்மையே. 8
அருவனாலவாய், மருவினான்றனை, யிருவரேத்தநின், றுருவமோங்குமே. 9
ஆரநாகமாஞ், சீரனாலவாய்த், தேரமண்செற்ற, வீரனென்பரே. 10
அடிகளாலவாய்ப், படிகொள்சம்பந்தன், முடிவிலின்றமிழ், செடிகணீக்குமே. 11

இரண்டாம் திருமுறை—திருநீற்றுப்பதிகம்

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயான் றிருநீறே. 1
வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான் றிருநீறே. 2
முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு சித்திதருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே. 3
காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு சேணந்தருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே 4
பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகொடுப்பதுநீறு வந்தமதாவதுநீறு தேசம்புகழ்வதுநீறு திருவாலவாயான் றிருநீறே 5

அருத்தமதாவதுநீறு வவலமறுப்பதுநீறு வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்
றிருநீறே. 6

எயிலதுவட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு வயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்றிருநீறே. 7

இரவணன்மேலதுநீறு வெண்ணத்தகுவதுநீறு பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு வராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. 8

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு வாலமுதுண்டமிடற்றெம்மாலவாயான்றிருநீறே. 9

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடாக் கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு வண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்றிரு
நீறே. 10

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப் போற்றிப்புகலிநிலாவுபூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச் சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்
தாமே. 11

மூன்றாம் திருமுறை—பண்—கோல்லி.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 1

ஆகமத்தொடுமந்திரங்களமைத்தசங்கதபங்கமாப்
பாகதத்தொடிரைத்துரைத்தசனங்கள்வெட்குறுபக்கமா
மாகதக்கரிபோற்றிரிந்துபுரிந்துநின்றுணுமாசுசே
ராகதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 2

அத்தகுபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்க்கச்சமா
வொத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகவிப்பெயர்ச்
சத்திரத்தின்மடிந்தொடிந்துசனங்கள்வெட்குறநக்கமே
சித்திரர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 3

சந்துசேனனுமிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 4

கூட்டினார்கிளியின்விருத்தமுரைத்ததோரொலியின்றொழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறங்
காட்டியேவருமாடெலாங்கவர்கையரைக்கசிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 5

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா

வனகநந்தியர்மதுபொழிந்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 6

பந்தணம்மவையொன்றிலம்பரிவொன்றிலமெனவாசக
மந்தணம்பலபேசிமாசறுசீர்மையின்றியநாயமே
யந்தணம்மருகந்தணம்மதுபுத்தணம்மதுசித்தணச்
சிந்தணர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 7

மேலெனக்கெதிரில்லையென்றவரக்கனார்மிகைசெற்றதீப்
போலியைப்பணியக்கிலாதொருபொய்த்தவங்கொடுகுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடுக்கிநடுக்கியேபிறர்பின்செலுஞ்
சீலிகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 8

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியனடிபோற்றிலார்
சாமவத்தையினார்கள்போரலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டிவாயசகதிக்குநே
ராமவர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 9

தங்களுக்குமச்சாக்கியர்க்குந்தரிப்பொணாதநற்சேவடி
யெங்கணாயகனேத்தொழிந்திடுக்கேமடுத்தொருபொய்த்தவம்
பொங்குநூல்வழியன்றியேபுலவோர்களைப்பழிக்கும்பொலா
வங்கதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. 10

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்கும்முடித்தென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே. 11

மூன்றும் திருமுறை—பண்—கௌசிகம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துட, னாட்டமூன்றுடையாயுரைசெய்வநான்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை, யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. 1

மத்தயானையினீருரிமூடிய, வத்தனேயணியாலவாயாய்பணி
பொய்த்தவன்றவவேடத்தராஞ்சமண், சித்தரையழிக்கத்திருவுள்ளமே. 2

மண்ணகத்திலும்வானிலுமெங்குமாந், திண்ணகத்திருவாலவாயாயருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியபேயமண், டெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. 3

ஓதியோத்தறியாவமணாதரை, வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
யாதியேதிருவாலவாயண்ணலே, நீதியாகநினைத்தருள்செய்திடே. 4

வையமார்புகழாயடியார்தொழுஞ், செய்கையார்திருவாலவாயாய்செப்பாய்
கையிலுண்டுழலுமமண்கையரைப், பையவாதுசெயத்திருவுள்ளமே. 5

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய, தேரலார்திருவாலவாயாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச், சீறிவாதுசெயத்திருவுள்ளமே. 6

பண்டடித்தவத்தார்பயில்வாற்றெழுந், தொண்டருக்கெளியாய்திருவாலவா
யண்டனேயமண்கபரைவாதினிற், செண்டடித்துழறத்திருவுள்ளமே. 7

அரக்கன்றன்கிரியேற்றவன்றன்முடிச், செருக்கினைத்தவிர்த்தாய்திருவாலவாய்
பரக்குமாண்புடையாயமண்பாவரைக், கரக்கவாதுசெயத்திருவுள்ளமே. 8

மாலுநான்முகனும்மறியாநெறி, யாலவாயுறையுமண்ணலேபணி
மேலவீடுணராவெற்றரையரை, சாலவாதுசெயத்திருவுள்ளமே. 9

கழிக்கரைப்படுமீன்கவர்வாரம, ணழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய், மழுப்படையுடைமைந்தனேநல்கிடே. 10

செந்தெனாமுரலுந்திருவாலவாய், மைந்தனேயென்றவல்லமணாசறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம், பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. 11

பண்—கௌசிகம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய, வையனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர், பையவேசென்றுபாண்டியற்காகவே. 1

சித்தனேதிருவாலவாய்மேவிய, வத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெத்தராமமணர்கொளுவுஞ்சுடர், பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. 2

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்ச், சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெக்கராமமணர்கொளுவுஞ்சுடர், பக்கமேசென்றுபாண்டியற்காகவே. 3

சிட்டனேதிருவாலவாய்மேவிய, வட்டமூர்த்தியனேயஞ்சலென்றருள்
துட்டராமமணர்கொளுவுஞ்சுடர், பட்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. 4

நண்ணலார்புரமூன்றெரியாலவா, யண்ணலேயஞ்சலென்றருள்செய்யெனை
எண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர், பண்ணியற்றமிழ்ப்பாண்டியற்காகவே. 5

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையு, மஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர், பஞ்சவன்றென்னன்பாண்டியற்காகவே. 6

செங்கண்வெள்விடையார்திருவாலவா, யங்கணாவஞ்சலென்றருள்செய்யெனைக்
கங்குலாரமண்கையரிடுங்கனல், பங்கமிறென்னன்பாண்டியற்காகவே. 7

தூர்த்தன்வீயந்தொலைத்தருளாலவா, யார்த்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யேத்திலாவமணர்கொளுவுஞ்சுடர், பார்த்திபன்றென்னன்பாண்டியற்காகவே. 8

தாவினானயன்றானறியாவகை, மேவினாய்திருவாலவாயாயரு
டூவிலாவமணர்கொளுவுஞ்சுடர், பாவினன்றென்னன்பாண்டியற்காகவே. 9

எண்டிசைக்கெழிலாலவாய்மேவிய, வண்டனேயஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராமமணர்கொளுவுஞ்சுடர், பண்டிமன்றென்னன்பாண்டியற்காகவே 10

அப்பனாலவாயாதியருளினால், வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுரைபத்துஞ், செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. 11

திருவிராகம்—பண்—கௌசிகம்,

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற், பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற், கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. 1

பட்டிசைத்தவல்குலாள்பாவையாளோர்பாகமா, வொட்டிசைந்ததன்றியுமுச்சியாளொ
ருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலா, யெட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே 2

குற்றநீ குணங்களுநீ கூடலாலவாயிலாய், சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீ யருத்தமின்பமென்றிவை, முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகமனே. 3

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வநீ முழங்கழ, லதிரவீசியாடுவாயழகனீ புயங்கனீ
மதுரநீ மணாளனீ மதுரையாலவாயிலாய், சதுரனீசதுமுகன்கபாலமேந்துசம்புவே. 4

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய், பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனே நின்னையன்றி நித்தலுஞ், சீலமாயசிந்தையிற்றேர்வதில்லை தேவரே. 5

பொன்றயங்கிலங்கொளிர்நலங்குளிர்ந்தபுன்சடை, பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய், நின்றையங்கியாடலேநினைப்பதென்னியமமே. 6

ஆதியந்தமாயினாயாலவாயிலண்ணலே, சோதியந்தமாயினாய்சோதியுள்ளோர்சோதியாய்
ஓதம்வந்தவாய்மையாற்கிளர்தருக்கினார்க்கலா, லோதிவந்தவாய்மையாலுணர்ந்துரைக்கலாகுமே 7

கறையிலங்குகண்டனே கருத்திலாக்கருங்கடற், றுரையிலங்கைமன்னனைத்தோளடாவூன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய், நிறையிலங்குநெஞ்சினானினைப்பதேநியமமே. 8

தாவணவ்விடையினாய்தலைமையாகநாடொறும், கோவணவ்வுடையினாய்கூடலாலவாயிலாய்
தீவணம்மலர்மிசைத்திசைமுகனுமாலுநின், றூவணமளக்கிலார்துளக்கமெய்துவார்களே. 9

தேற்றமில்வினைத்தொழிற்றேரருஞ்சமணரும், போற்றிசைத்துநின்கழற்புகழ்ந்துபுண்ணியங்கொளார்
கூற்றுதைத்ததாளினாய்கூடலாலவாயிலாய், நாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்ன
நன்மையே. 10

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான், பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினா
யாலசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத், தீயதீரவெண்ணுவார்கள்சிந்தையாய
தேவரே. 11

திருப்பாசுரம்—பண்—கௌசிகம்.

வாழ்கவந்தணர்வானவரானினம், வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே, சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. 1

அரியகாட்சியராய்த்தமதங்கைசே, ரெரியரேறுகந்தேறவர்கண்டமுங்
கரியர்காடுறைவாழ்க்கையராயினும், பெரியராரறிவாரவர்பெற்றியே. 2

வெந்தசாம்பல்விரையெனப்பூசியே, தந்தையாரொடுதாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரா, லெந்தையாரவரெவ்வகையார்கொலோ. 3

ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்பும், கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெந்தை, தாட்பால்வணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார். 4

ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச், சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின், சாதுக்கள்மிக்கீரிறையேவந்துசார்மின்களே. 5

ஆடும்மெனவும்மருங்கூற்றமுதைத்துவேதம், பாடும்மெனவும்புகழல்லதுபாவநீங்கக்
கேடும்பிறப்பும்மறுக்கும்மெனக்கேட்டிராகி, லோடுந்திறத்தார்க்கருளல்லதுகாட்டலாமே 6

கடிசேர்ந்தபோதுமலரானகைக்கொண்டுநல்ல,படிசேர்ந்தபால்கொண்டங்காட்டிடத்தாதைபண்டு
முடிசேர்ந்தகாலையறவெட்டிடமுக்கண்மூர்த்தி, யடிசேர்ந்தவண்ணம்மறிவார்சொலக்கேட்டு
மன்றே.

வேதம்முதல்வன்முதலாகவிளங்கிவையம், மேதப்படாமேயுலகத்தவரேத்தல்செய்யப்
பூதமுதல்வன்முதலேமுதலாப்பொலிந்த, சூதன்னொலிமாலையென்றேகலிக்கோவைசொல்லே. 8

பாராழிவட்டம்பகையானலிந்தாட்டவாடிப், போராழியானதிடர்கண்டருள்செய்தல்பேணி
நீராழிவிட்டேறிநெஞ்சிடங்கொண்டவர்க்குப், போராழியீந்தபுகழும்புகழுற்றதன்றே. 9

மாலாயவனும்மறைவல்லநான்முகனும், பாலாயதேவர்பகரில்லமுதூட்டல்பேணிக்
காலாயமுந்நீர்கடைந்தார்க்கரிதாயெழுந்த, வாலாலமுண்டங்கமரர்க்கருள்செய்ததாமே. 10

அற்றன்றியந்தண்மதுரைத்தொகையாக்கினானூர், தெற்றென்றுதெய்வந்தெளியார்கரைக்
கோலைதெண்ணீர்ப்
பற்றின்றிப்பாங்கெதிர்விரவும்பண்புநோக்கிற், பெற்றென்றுயர்த்தபெருமான்பெருமானு
மன்றே. 11

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல, வெல்லார்களும்பரவுமீசனையேத்துபாடல்
பல்லார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும், வல்லார்கள்வானோருலகாளவும்வல்லரன்றே 12

ஈரடிமேல்வைப்பு.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ, லாதமில்லியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே, பாதிமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 1

வைதிகத்தின்வழியொழுகாதவக், கைதவமுடைக்காரமண்டேரரை
யெய்திவாதுசெயத்திருவுள்ளமே, மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 2

மறைவழக்கமிலாதமாபாவிகள், பறிதலைக்கையர்பாயுடுப்பார்களை
முறியவாதுசெயத்திருவுள்ளமே, மறியுலாங்கையின்மாமழுவாளனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 3

அறுத்தவங்கமாறாயினநீர்மையைக், கறுத்தவாழமண்கையர்கடம்மொடுஞ்
செறுத்துவாதுசெயத்திருவுள்ளமே, முறித்தவான்மதிக்கண்ணிமுதல்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 4

அந்தணாளர்புரியுமருமறை, சிந்தைசெய்யாவருகர்திரங்களைச்
சிந்தவாதுசெய த்திருவுள்ளமே, வெந்தநீறதணியும்விகிர்தனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 5

வேட்டுவேள்விசெயும்பொருளைவிளி, மூட்டுச்சிந்தைமுருட்டமண்குண்டரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே, காட்டிலானையுரித்தவெங்கள்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 6

அழலதோம்புமருமறையோர்திறம், விழலதென்னும்மருகர்திறத்திறங்
கழலவாதுசெயத்திருவுள்ளமே, தழலிலங்குதிருவுருச்சைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 7

நீற்றுமேனியராயினர்மேலுற்ற, காற்றுக்கொள்ளவுநில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே, யாற்றவாளரக்கர்க்குமருளினாய்
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 8

நீலமேனியமணர்திறத்துநின், சீலம்வாதுசெயத்திருவுள்ளமே
மாலுநான்முகனுங்காண்பரியதோர், கோலமேனியதாகியகுன்றமே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 9

அன்றுமுப்புரஞ்செற்றவழகநின், துன்றுபொற்கழல்பேணாவருகரைத்
தென்றவாதுசெயத்திருவுள்ளமே, கன்றுசாக்கியர்காணாத்தலைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென், னாலவாயிலுறையுமெம்மாதியே. 10

கூடலாலவாய்க்கோனைவிடைகொண்டு, வாடன்மேனியமணரைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன்மதித்தவிப், பாடல்வல்லவர்பாக்கியவாளரே. 11

பண்—திருஇயமகம்.

ஆலநீழலுகந்ததிருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
யாலநஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே. 1

பாதியாயுடன்கொண்டதுமாலையேபாம்புதார்மலர்க்கொன்றைநன்மாலையே
கோதினீறதுபூசிமோகனேகொண்டநற்கையின்மானிடமாகனே
நாதநாடொறுமாடுவதானையேநாடியன்றுரிசெய்ததுமானையே
வேதநூல்பயில்கின்றதுவாயிலேவிகிர்தனூர்திருவாலநல்வாயிலே. 2

காடுநீடதுறப்பலகத்தனேகாதலானினைவார்தமக்கத்தனே
பாடுபேயொடுபூதமசிக்கவேபல்பிணத்தசைநாடியசிக்கவே
நீடுமாநடமாடவிருப்பனேநின்னடித்தொழநாளுமிருப்பனே
யாடநீள்சடைமேவியவப்பனேயாலவாயினின்மேவியவப்பனே. 3

பண்டயன்றலையொன்றுமறுத்தியேபாதமோதினர்பாவமறுத்தியே
துண்டவெண்பிறைசென்னியிருத்தியேதூயவெள்ளெருதேறியிருத்தியே
கண்டுகாமனைவேவவிழித்தியேகாதலில்லவர்தம்மையிழித்தியே
பண்டநாயகனேமிகுகண்டனேயாலவாயினின்மேவியகண்டனே. 4

சென்றுதாதையுகுத்தனன்பாலையேசீறியன்புசெகுத்தனன்பாலையே
வென்றிசேர்மழுக்கொண்டுமுன்காலையேவீடவெட்டிடக்கண்டுமுன்காலையே
நின்றமாணியையோடினகங்கையானிலவமல்கியுதித்தனகங்கையா
லன்றுநின்னுருவாகத்தடவியேயாலவாயரனாகத்தடவியே. 5

நக்கமேகுவர்நாடுமோரூருமேநாதன்மேனியின்மாசுணமூருமே
தக்கபூமனைசுத்தக்கருளொடேதாரமுய்த்ததுபாணற்கருளொடே
மிக்கதென்னவன்றேவிக்கணியையேமெல்லநல்கியதொண்டர்க்கணியையே
யக்கினாமுதுண்கலனோடுமேயாலவாயரனாருமையோடுமே. 6

வெய்யவன்பல்லுகுத்ததுகுட்டியேவெங்கண்மாசுணங்கையதுகுட்டியே
ஐயனேயனலாடியமெய்யனேயன்பினானினைவார்க்கருண்மெய்யனே
வையமுய்யவன்றுண்டதுகாளமேவள்ளல்கையதுமேவுகங்காளமே
ஐயமேற்பதுரைப்பதுவீணையேயாலவாயான்கையதுவீணையே. 7

தோள்கள்பத்தொடுபத்துமயக்கியேதொக்கதேவர்செருக்கையமைக்கியே
வாளரக்கனிலத்துகளித்துமேவந்தமால்வரைகண்டுகளித்துமே
நீள்பொருப்பையெடுத்தவுன்மத்தனேநின்விரற்றலையான்மதமத்தனே
யாளுமாதிமுறித்ததுமெய்கொலோவாலவாயரனுய்த்ததுமெய்கொலோ. 8

பங்கயத்துளநான்முகன்மாலொடேபாதநீண்முடிநேடிடமாலொடே
துங்கநற்றழலின்னுருவாயுமேதூயபாடல்பயின்றதுவாயுமே
செங்கயற்கணினாரிடுபிச்சையேசென்றுகொண்டுரைசெய்வதுபிச்சையே
யங்கியைத்திகழ்விப்பதிடக்கையேயாலவாயரனாரிடக்கையே. 9

தேரரோடமணர்க்குநல்காளையேதேவர்நாடொறுஞ்சேர்வதுகாளையே
கோரமட்டதுபுண்டரிகத்தையேகொண்டநீள்கழல்புண்டரிகத்தையே
நேரிலூர்களழித்ததுநாகமேநீள்சடைத்திகழ்கின்றவுநாகமே
யாரமாகவுகந்ததுமென்பதேயாலவாயரனாரிடமென்பதே. 10

ஈனஞானிகடம்மொடுவிரகனேயேறுபல்பொருண்முத்தமிழ்விரகனே
யானகாழியுண்ஞானஸம்பந்தனேயாலவாயினின்மேயசம்பந்தனே
யானவானவர்வாயிலுளத்தனேயன்பரானவர்வாயிலுளத்தனே
நானுரைத்தனசெந்தமிழ்பத்துமேவல்லவர்க்கிவைநற்றமிழ்பத்துமே. 11

பண்—புறநீர்மை.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. 1

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையையொழிந்திட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. 2

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடைநிலவுஞ்
சந்தமார்தரளம்பரம்புநீர்மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 3

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற்
குணங்கொடுபணியுங்குலச்சிறைகுலாவுங்கோபுரஞ்சூழ்மணிக்கோயின்
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவன்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 4

செய்யதாமரைமேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த
வையனுருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 5

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவுங்

கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட
னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 6

முத்தின்றாள்வடமுஞ்சந்தனக்குழப்புநீறுதன்மார்பினின்முயங்கப்
பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போ
லத்தனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 7

நாவணங்கியல்வாமஞ்செழுத்தோதிநல்லராய்நல்லியல்வாகுங்
கோவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற
வேவணங்கியல்வாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
யாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. 8

மண்ணெலாநிகழமன்னனாய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவிபாங்கினாற்பணிசெய்துபரவ
விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம்வகைநின்ற
வண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. 9

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந்தொழுதுதன்குணத்தினைக்குலாவக்
கண்டுநாடோறுமின்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்தக்
குண்டராயுள்ளார்சாக்கியர்தங்கள்குறியின்கணெறியிடைவாரா
வண்டநாயகன்றானமர்ந்துவீற்றிருந்தவாலவாயாவதுமிதுவே. 10

பன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மன்னலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுள்ஞானஸம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. 11

திருநாவுக்கரசுசுவாமிகளருளிச்செய்தது:—

நான்காந்திருமுறை—திருநேரிசை.

வேதியாவேதகீதாவிண்ணவரண்ணாவென்றென்
றோதியேமலர்கடூவியொருங்கிநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடும்
ஆதியேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 1

நம்பனேநான்முகத்தாய்நாதனேஞானமூர்த்தி
யென்பொனேயீசாவென்றென்றேத்திநானேசற்றென்றும்
பின்பினேதிரிந்துநாயேன்பேர்த்தினிப்பிறவாவண்ணம்
அன்பனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 2

ஒருமருந்தாகியுள்ளாயும்பரோடுலகுக்கெல்லாம்
பெருமருந்தாகிநின்றாய்பேரமுதின்சுவையாய்க்
கருமருந்தாகியுள்ளாயாளும்வல்வினைகடீர்க்கும்
அருமருந்தாலவாயிலப்பனேயருள்செயாயே. 3

செய்யநின்கமலபாதஞ்சேருமாதேவர்தேவே
மையணிகண்டத்தானேமான்மறிமழுவொன்றேந்துஞ்

சைவனேசாலஞானங்கற்றறிவிலாதநாயேன்
ஐயனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 4

வெண்டலைகையிலேந்திமிகவுமூர்பலிகொண்டென்று
முண்டதுமில்லைசொல்லிலுண்டதுநஞ்சுதன்னைப்
பண்டுனைநினையமாட்டாப்பளகனேனுளமதார
அண்டனேயாலவாயிலப்பனேஅருள்செயாயே. 5

எஞ்சலில்புகலிதென்றென்றேத்திநானேசற்றென்றும்
வஞ்சகமொன்றுமின்றிமலரடிகாணும்வண்ண
நஞ்சினைமிடற்றில்வைத்தநற்பொருட்பதமேநாயேற்
கஞ்சலென்றாலவாயிலப்பனேயருள்செயாயே. 6

வழுவிலாதுன்னைவாழ்த்திவழிபடுந்தொண்டனேனுன்
செழுமலர்ப்பாதங்காணத்தெண்டிரைநஞ்சமுண்ட
குழகனேகோலவில்லிகூத்தனேமாத்தாயுள்ள
அழகனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 7

நறுமலர்நீருங்கொண்டுநாடொறுமேத்திவாழ்த்திச்
செறிவனசித்தம்வைத்துத்திருவடிசேரும்வண்ண
மறிகடல்வண்ணன்பாகாமாமறையங்கமாறும்
அறிவனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 8

நலந்திகழ்வாயினூலாற்சருகிலைப்பந்தர்செய்த
சிலந்தியையரசதாளவருளினாயென்றுதிண்ணங்
கலந்துடன்வந்துநின்றாள்கருதிநான்காண்பதாக
அலந்தனனாலவாயிலப்பனேயருள்செயாயே. 9

பொடிக்கொடுபூசிப்பொல்லாக்குரம்பையிற்புக்கியொன்றிப்
பிடித்துநின்றாள்களென்றும்பிதற்றிநானிருக்கமாட்டே
னெடுப்பனென்றிலங்கைக்கோன்வந்தெடுத்தலுமிருபதுதோள்
அடர்த்தனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. 10

ஆறாம் திருமுறை—திருத்தாண்டகம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றிமுதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும் வரைசிலையாவாசுகிமாநாணுக்கோத்துத்
துளைத்தானைசுடுசரத்தாற்றுவளநீறாத் தூமுத்தவெண்முறுவலுமையோடாடித்,
திளைத்தானைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 1

விண்ணுலகின்மேலார்கண்மேலான்றன்னை மேலாடுபுரமூன்றும்பொடிசெய்தானைப்
பண்ணிலவுபைம்பொழில்சூழ்பழனத்தானைப் பசும்பொன்னிறத்தானைப்பானீற்றானை
யுண்ணிலவுசடைக்கற்றைக்கங்கையாளைக்கரந்துமையோடுடனாகியிருந்தான்றன்னைத்
தெண்ணிலவுதென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 2

நீர்த்திரளைநீள்சடைமேனிறைவித்தானை நிலமருவிநீரோடக்கண்டான்றன்னைப்
பாற்றிரளைப்பயின்றாடவல்லான்றன்னைப் பதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தான்றன்னைக்
காற்றிரளாய்மேகத்தினுள்ளேநின்று கடுங்குரலாயிடிப்பானைக் கண்ணோர்நெற்றித்
தீத்திரளைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 3

வானமிதுவெல்லாமுடையான்றன்னை வரியரவக்கச்சானைவன்போய்சூழக்
கானமதினடமாடவல்லான்றன்னைக்கடைக்கணான்மங்கையுமைநோக்காவென்மேல்
ஊனமதுவெல்லாமொழிந்தான்றன்னை யுணர்வாகியடியேனதுள்ளேநின்ற
தேனமுதைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 4

ஊரானையுலகேழாய்நின்றான்றன்னை யொற்றைவெண்பிறையானையுமையோடென்றும்
பேரானைப்பிறர்க்கென்றுமரியான்றன்னை பிணக்காட்டினடமாடல்பேயோடென்றும்
ஆரானையமரர்களுக்கமுதீந்தானை யருமறையானான்முகனுமாலும்போற்றுஞ்
சீரானைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 5

மூவானைமூர்த்தியைமூவாமேனியுடையானைமூவுலகுந்தானேயெங்கும்
பாவானைப்பாவமறுப்பான்றன்னைப்படியெழுதலாகாதமங்கையோடு
மேவானைவிண்ணோர்நடுங்கக்கண்டுவிரிகடலினஞ்சுண்டமுதமீந்த
தேவானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 6

துறந்தார்க்குத்தூநெறியாய்நின்றான்வன்னைத் துன்பந்துடைத்தாளவல்லான்றன்னை
யிறந்தார்களென்பே யணிந்தான்றன்னை யெல்லினடமாட வல்லான்றன்னை
மறந்தார்மதின்மூன்று மாய்த்தான்றன்னை மற்றொருபற்றில்லாவடியார்க்கென்றுஞ்
சிறந்தானைத் தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. 7

வாயானைமனத்தானை மனத்துணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான்றன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான்றன்னைச் சுடர்திங்கட்சடையானைத் தொடர்ந்துநின்றென்
றாயானைத்தவமாய தன்மையானைத்தலையாயதேவாதி தேவர்க்கென்றுஞ்
சேயானைத்தென்கூடற் றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. 8

பகைச்சுடராய்ப்பாவ மறுப்பான்றன்னைப் பழியிலியாய்நஞ்சமுண்டமிர்தீந்தானை
வகைச்சுடராய்வல்லசுரர் புரமாட்டானை வனையிலியா யெல்லார்க்கு மருள்செய்வானை
மிகைச்சுடராய்விண்ணவர்கண் மேலைப்பாலை மேலாயதேவாதிதேவர்க்கென்றுந்
திகைச்சுடரைத்தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. 9

மலையானைமாமேருமன்னினானைவளர்புன்சடையானைவானோர்தங்கள்
தலையானையென்றலையினுச்சியென்றுந்தாபித்திருந்தானைத்தானேயெங்குந்
துலையாகவொருவரையுமில்லாதானைத்தோன்றாதார்மதில்மூன்றுந்துளாவெய்
சிலையானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. 10

தூர்த்தனைத்தோண்முடிபத்திறுத்தான்றன்னைத்தொன்னரம்பினின்னிசைகேட்டருள்செய்தானைப்
பார்த்தனைப்பணிகண்டு பரிந்தான்றன்னைப்பரிந்தவற்குப்பாசுபத மீந்தான்றன்னை
யார்த்தனையடியேனுக்கன்பன்றன்னை யளவிலாப்பல்லூழி கண்டுநின்ற
தீர்த்தனைத்தென்கூடற் றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப் பெற்றேனானே. 11

பட்டினத்துப்பிள்ளையார் பாடல்:—

"விடப்படுமோவிப்பிரபஞ்சவாழ்க்கையை? விட்டுமனந்
திடப்படுமோ? நின்னருளின்றியேதினமேயலையக்
கடப்படுமோ? வற்பர்வாயிலிற்சென்றுகண்ணீர்ததும்பிப்
படப்படுமோ? சொக்கநாதா! சவுந்தரபாண்டியனே!

	ரூ.	அ.	ப.		ரூ.	அ.	ப.
மாணிக்கவாசகர் ...	0	10	0	கமலசுந்தரி ...	0	4	0
கமலபவனம் ...	0	10	0	சந்திரஹாஸன் ..	0	3	0
காதலா கருணையா ...	0	14	0	பவழக்கொடி ...	0	8	0
பாதாளவாஸி ...	0	6	0	காயத்கண்ணி ...	0	12	0
சந்திரகுப்தன் ...	0	8	0	ராஜாத்தி ...	0	12	0
மங்கம்மாள் ...	1	8	0	சிறுமணிச்சுடர் ...	0	1	0
ஞானசுந்தரன் ...	0	12	0	அர்ஜுன ஸந்யாஸி ...	0	12	0
கமலநாதன் ...	1	8	0	கதாகதம்பம் ...	0	2	0
அமிர்த ஸஞ்சீவினி ...	1	2	0	குசேல வெண்பா ...	0	8	0
மதுராம்பாள் ...	0	12	0	பகீரதன் ...	0	1	0
வஜ்ரலேகை ...	1	4	0	பாலவிநோதினி ...	0	2	0
தயாபரஸுந்தரி ...	0	12	0	ஔவையார் ...	0	12	0
மீனலோசனி ...	0	6	0	ஸாவித்திரி சரித்திரம் ...	0	4	0
தீனதயாளு ...	0	12	0	ஜியார்ஜ்மன்னன் சரித்திரம் ...	0	1	6
பாய்பரமானந்தன் ...	1	0	0	வள்ளியம்மை சரித்திரம் ...	0	8	0
ஸோமசுந்தரன் ...	1	0	0	பாலகங்காதர திலகர் ...	0	4	0
யமகாதகன் ...	0	8	0	திரிலோக மோஹனாங்கி ...	1	0	0
அமரநாதன் ...	1	4	0	ஆர்ய சரித்திரம் ...	0	8	0
குணஸுந்தரன் ...	1	4	0	ராமனும் ஸீதையும் ...	0	1	6
கோமளம் குமரியானது ...	0	12	0	ஜீவகன் ...	1	0	0
குலசேகரன் ...	1	0	0	ஸ்ரீராமசந்திரன் ...	0	3	0
நாகபூஷணம் ...	0	12	0	ஸுபோத பாரிஜாதம் ...	5	0	0
பீமராவ் ...	0	10	0	தனபாலன் ...	2	0	0
விஷதாரி ...	1	4	0	பாடல் திரட்டு ...	0	8	0
தாரா ...	0	10	0	திருவஹீந்திரபுரமான்மியம் ...	0	4	0
உபநிஷத் பஞ்சகம் ...	0	5	0	கற்பசுந்தரி ...	2	12	0
பாத்திரமறிந்து பிச்சையெடு ...	0	1	0	சுந்தர்சிங் ...	1	4	0
மகாத்மா காந்தி ...	0	1	0	ஆயிரம் தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி	1	0	0
ராஜராஜேச்வரி ...	1	8	0	பாலசுந்தரம் ...	1	0	0
கல்பலதா ...	1	4	0	அம்பலவாணன் ...	1	4	0
கோமளா ...	0	12	0	ருக்மணி ...	1	0	0
சித்ரரேகை ...	1	8	0	சரோஜனி ...	2	0	0
மாயாவதி ...	0	8	0	அஞ்சனாவதி ...	1	4	0
விச்ரமோர் வசீயம் ...	0	8	0	லலிதாதேவி ...	0	12	0
ராஜபுத்ர வீரன் ...	0	8	0	நீலோத்பலவிசாலாக்ஷி ...	1	8	0
அழகு சுந்தரி ...	0	8	0	ஜெயசாந்தகாந்தா ...	1	0	0
உத்தரராமாயண கதைகள் ...	0	4	0	திருக்கழுக்குன்றத்துக்கொலை ...	1	8	0
மரகதவல்லி ...	0	6	0	கோஹினூர் ...	0	9	0
சத்ருஜித் ..	0	12	0	பவானந்தர் ...	0	8	0
ஆஸ்திகோபாக்யானம் ...	0	5	0	ஞானானந்தன் ...	0	11	0
சிறுத்தொண்டர் ...	0	8	0	கோவிந்தன் ...	0	10	0
ஸ்ரீமதி ...	0	2	0	மதனசிங்கர் ...	1	4	0
வீரவல்லி ...	0	12	0	மாணிக்கவல்லி ...	1	0	0
பாயிரவிருத்தி ..	1	0	0	இரட்டைப்புலவர் சரிதம் ...	0	6	0
மனோன்மணி ...	0	12	0	அண்டப்புளுகன் ...	0	8	0
மனோன்மணி கதை ...	0	8	0	மர்மமுகி ...	0	12	0
செல்வராஜன் ...	0	12	0	ரதிமதனன் ...	0	12	0

மானேஜர்,

ஸ்ரீ வாணீ விலாஸ புத்தகசாலை,


ஸ்ரீரங்கம்.




ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,


ஸ்ரீரங்கம்.




B.S



ராமநாதஸ்வாமி கோயில் விமானம்.



ராமேசுவரம் கோயிலில் மூன்றுவது பிராகாரமாகிய சொக்கட்டான் மண்டபம்.


ராமேசுவரம்.

ராமேசுவர மென்பது நமது இந்தியாவின் ஆக்னேய பாகத்தில் வங்காளக் குடக்கடலிலுள்ள ஒரு தீவு. இந்தியாவுக்கும் அத்தீவுக்கும் இடையில் நான்குமைலகலம் ஸமுத்திரமுளது. இந்த இடையிலுள்ள ஸமுத்திரத்திற்கு பாம்பன் கால்வாய் என்று பெயர். சென்னப்பட்டணமிருந்து ரயில் மார்க்கமாக இத்தீவு சுமார் 450மைல் தூரமுள்ளது. பாம்பன் கால்வாய்க்குப் பாலம் போடப்பட்டு ரெயிலானது இப்பொழுது நேராக ராமேசுவரத்துக்குச்சென்று அத்தீவின் தெற்குக் கடைசியிலுள்ள தனுஷ்கோடி வரையில் போகிறது.

இந்த ராமேசுவரமானது பரதகண்டம் முழுமையிலும் பிரஸித்திபெற்ற க்ஷேத்ரம். எல்லா வர்ணத்தார்களும் எல்லா மதஸ்தர்களும் இந்த க்ஷேத்ரத்தை மிகவும் விசேஷமானதாகக் கொண்டாடுகிறார்கள். இங்குவரும் யாத்திரைக்காரர்களுக்கு ஓர் கணக்கில்லை. எப்பொழுதும் இந்தியாவிலுள்ள பற்பல விடங்களினின்றும் ஜனங்களை இங்கு காணலாம். பிரதிதினமும் இங்குள்ள ஈசுவரனாகிய ஸ்ரீ ராமனாதருக்கு காசியிலிருந்து யாத்தி

ரைக்காரர்களால் கொண்டுவரப்பட்ட கங்கையானது அபிஷேகமாகிறதென்றால் நமது தேசத்திலுள்ள ஜனங்களுக்கு இந்த க்ஷேத்ரத்தினிடத்துள்ள பக்திக்கும் சிரத்தைக்கும் அளவு கூறுவது ஸத்தியமாகுமோ? இங்குள்ள ஈசுவரனாகிய ஸ்ரீ ராமநாதாது லிங்கமானது புண்ய பூமியாகிய நமது பரதகண்டத்திலுள்ள பன்னிரண்டு ஜ்யோதிர் லிங்கங்களுள் ஒன்று. நமது தென்இந்தியாவில் இந்த ஒரு ஜ்யோதிர் லிங்கம் தான் உள்ளது. நமது ஆதி ஆசார்யர்களான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாவர்கள் இந்த லிங்கத்தைக் குறித்துப் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள்.

श्रीताम्रपर्णीजलराशियोगे निबद्ध्य सेतुं निशि बिल्वपत्रैः ।
श्रीरामचन्द्रेण समर्चितं तं रामेश्वराख्यं सततं नमामि ॥




அசோகவனத்தில் ஸீதை ராக்ஷஸிகளின் காவலில் இருத்தல்.

அவர்களால் அத்வைதமதத்தைப் பரவச்செய்வதற்காக பரதகண்டத்தின் நான்கு திக்குகளிலும் ஸ்தாபிக்கப்பட்ட நான்கு மடங்களுள் முககியமானதும் தக்ஷிணாம்நாயம் என்று சொல்லப்படுவதுமான ஸ்ரீ சிருங்ககிரி மடத்துக்கு இந்த ராமேசுவரத்தையே தீர்த்தமாக ஏற்படுத்தியிருக்கிறார்களென்றால அதன் மஹிமையை சொல்லவும் வேண்டுமோ. அதனால் தான் சிருங்ககிரி மடாதிபதிகள் ஒவ்வொருவரும் தாங்கள் விஜய யாத்திரையாகப் புறப்படும் பொழுது இந்த க்ஷேத்ரத்துக்கு தவறாமல் வந்து செல்கிறார்கள். க்ஷேத்ரத்தாலும் மூர்த்தியாலும், தீர்த்தத்தாலும் மிகவும் சிறப்புற்று விளங்கும் இந்த ராமேசுவரமானது கந்தமாதன பர்வதத்தின் சிகரத்தில் ஸ்ரீ ராமபத்ரனால் லங்கைக்குச் செல்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸேது என்று சொல்லப்படும் அணையின் ஆரம்பத்தில் இருக்கிறது.


ஸேது ஏற்பட்ட காரணம்.

அதர்மத்தைப் போக்குவதற்காகவும் தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகவும் பிரதியுகமும் தாம் அவதாரம் செய்வதாக வாக்களித்த பகவான் திரேதாயுகத்தில் ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியாக தசரதமஹாராஜாவிடம் அவதரித்து பிதுர்வாக்ய பரிபாலனமே முக்யதர்ம

மெனக்கொண்டு தனக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகத்துக்கு எல்லாம் தயாராயிருந்த ஸமயத்தில் பதிநான்குவருஷம் காட்டுக்குச்சென்று அங்கு வஸிக்கவேண்டுமென்று தசரதர் சொன்ன வார்த்தையைக்கேட்டு உடனே தனது தம்பியாகிய லக்ஷ்மணனுடனும் பத்னியாகிய ஸீதாதேவியுடனும் காட்டுக்குச்சென்றனர். அங்கு தண்டகாரண்யத்தில் ஸஞ்சரிக்கும் காலத்தில் லங்கைக்கு அதிபதியாகிய தசகண்டனாகிய ராவணனானவன் ஸீதையினழகைக்கண்டு அவள்மேல் மோஹங்கொண்டு அவள் தனிமையாக இருந்த ஸமயத்தில் கபடமாக ஸந்யாஸிவேஷம் தரித்துக்கொண்டு அவளிடம் நெருங்கி அவளை அபஹரித்துக்கொண்டு லங்கைக்குச்சென்று அங்கு அசோகவனத்தில் அவளை ராக்ஷஸிகளின் காவலில் வைத்துவிட்டான். உடனே ஸ்ரீராமரும் லக்ஷ்மணனும் ஸீதையைத் தேடிக்கொண்டு பலவிடங்களுக்குச் சென்று வானரங்களுக்கு அரசனாகிய ஸுக்ரீவனுடன் ஸ்நேகம் செய்துகொண்டு அவனுடைய வானரஸைந்யங்களை நாலாபக்கங்களிலும்சென்று ஸீதை இருக்குமிடம் தேடிவரும்படி ஆக்ஞாபித்தார். அவ்வாறு சென்ற வானரங்களுள் முக்கியமான ஹநுமார் தெற்குதிக்கை நோக்கிச் சென்று ஸமுத்திரத்தைத்தாவி லங்கையையடைந்து அங்கு அசோகவநத்தில் ஸீதாதேவியைக்கண்டு அவள் ராவணனின் நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாமல் தற்கொலை செய்துகொள்ளப் பிரயத்தனப்பட்டவளைத் தடுத்து ஆசுவாஸப்படுத்தி ஸ்ரீராமனின் கணையாழி மோதிரத்தை அவளுக்கு அடையாளமாகக்காட்டி சீக்கிரத்தில் ஸ்ரீராமரையும் லக்ஷ்மணனையும் கூட்டிவந்து அவளை அங்கிருந்து அழைத்துப்போவதாக அவளுக்குத் தேர்தல் சொல்லி பிறகு அசோகவனத்தை அழித்து அதனால் ராவணனிடம் கொண்டுவரப்பட்டு அங்கு அவனுக்கு ஸமானமாக இருக்கவேண்டி அவனுடைய ஸிம்ஹாஸனத்தின் உயரத்திற்கு அதிகமாகவே தனது வாலை ஆஸனமாக சுருட்டி அதன்மேல் உட்கார்ந்துகொண்டு அவனுக்குப் பலவாற்றுலும் புத்திமதிகள் சொல்லியும் அவன் காமக்குரோதாதிகளால் புத்தி கெட்டவனாய் இவர் வார்த்தைகளைக்கேளாமல் இவரைக்கொல்லும்படி கட்டளையிட்டான். உடனே அவனுடைய தம்பியாகிய விபீஷணன் தர்மசிந்தையுள்ளவனானதலால் தூதனைக்கொல்லுவது தர்மமல்ல வென்பதை அவனுக்கு வெகுவாக எடுத்துச்சொல்லி ஏதாவது ஒரு அங்கத்தை பங்கம்செய்து அனுப்பி விடும்படி




ஹநுமார் ஸீதைக்கு கணையாழி மோதிரம் காண்பித்தல்.



ஸுக்ரீவர், ஸீதை, ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஹநுமார். ஹநுமார் இரண்டு கைகளிலும் இரண்டு லிங்கங்களை வைத்துக்கொண்டிருப்பதை கவனிக்கவும்.

வேண்ட ராவணனும் அவ்வாறே ஹநுமாரின் வாலில் துணிகளைச்சுற்றி அக்னியால் கொளுத்திவிட்டு அனுப்பிவிடும்படி உத்தரவிட்டான். அவ்விதமே வால் கொளுத்தப்பட்டதும் ஹநுமாரானவர் ஸீதாதேவியின் பிரபாவத்தால் கொஞ்சமேனும் உஷ்ணம் தாக்கப்படாதவாய் அந்த நெருப்பைக்கொண்டே லங்கை முழுமையும் கொளுத்திவிட்டுத் திரும்பி ஸமுத்திரத்தைத் தாவித்தாண்டி ஸ்ரீராமரிடம் வந்து ஸீதையைக்கண்ட விவரத்தைத் தெரிவித்தார். உடனே ஸ்ரீராம லக்ஷ்மணர்களும் ஸுக்கிரீவனுடனும் வானர ஸைந்யங்களுடனும் தெற்கு மஹா ஸமுத்திரத்தையடைந்து ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்கு உபாயம் தேடி நின்றார்கள். அச்சமயம் ஸ்ரீராமரானவர் தர்ப்பசயனம் என்னும் க்ஷேத்ரத்தில் தர்ப்பத்தின்பேரில் சயனித்துக்கொண்டு ஸமுத்திர ராஜனை தியானித்து அழைத்தும் அவன் வாராமையால் மிகவும் கோபம்கொண்டு தனது ஒரு பாணத்தால் ஸமுத்திரம் முழுமையையும் வற்றடித்து விடுவதாக ஆரம்பிக்கவே ஸமுத்ர ராஜன் பயந்து நடுங்கி தனது பத்னிகளுடன் ஓடோடியும் வந்து ஸ்ரீராமரை வணங்கிநின்றான். ஸ்ரீராமரும் தானும் தனது ஸைன்யங்களும் லங்கைக்குச் செல்வதற்காக ஸமுத்ரத்தில் அணை கட்டுவதற்கு இடம் கொடுக்கும்படி ஆக்ஞாபிக்க அவ்வண்ணமே ஸமுத்ரராஜனும் உடனே இடம் கொடுத்தான். விசுவகர்மாவின் புத்ரனாகிய நளன் என்பவனைக்கொண்டு உடனே ஸமுத்ரத்தில் 10 யோஜனை அகலமும் 100 யோஜனை நீளமுமுள்ள அணையானது கட்டப்பட்டது. பிறகு உப்பூரிலுள்ள விநாயகரை பூஜை செய்துவிட்டு தேவிப்பட்டணம் அல்லது நவபாஷாணம் என்று சொல்




ராமேசுவரம் அம்மன் கோயிலுக்கு முன்னதாகவிருக்கும் கல்யாண மண்டபம்.

லப்படுமிடத்தில் ஒன்பது கல்லுகளில் நவக்கிரஹங்களைப் பிரதிஷ்டைசெய்து பூஜித்துவிட்டு ஸ்ரீராமானவர் புதிதாகக் கட்டப்பட்ட ஸேதுவழியாக ஸைந்யங்களுடன் புறப்பட்டு இப்பொழுது ராமேசுவரம் இருக்கும் கந்தமாதன பர்வதத்தின் சிகரம் வந்ததும் அங்கு ஏற்கனவே இருந்த மஹாதேவனாகிய ஈசுவரனைப் பூஜைசெய்து அவருடைய அநுக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்துலங்கைசென்று ராவணனுடன் யுத்தம்செய்து அவனுடைய ஸைந்யங்களை யெல்லாம் த்வமஸம செய்துவிட்டு அவன் புத்ரர்கள், தம்பியாகிய கும்பகர்ணன், இவர்களைக்கொன்ற பிறகு தசகண்டனையும் யுத்தத்தில் கொன்று ஸீதாதேவியை அழைத்துக் கொண்டு எல்லோருடனும் புஷ்பகவிமானத்திலேறி லங்கையிலிருந்து திருப்பி அயோத்யைக்குப் போகும் மார்க்கத்தில் மீளவும் இந்த ராமேசுவரக்ஷேத்ரத்திற்கு வந்து சேர்ந்தார். தான் லங்கைக்குப போகும்பொழுது ஸீதை தன்னுடனில்லாததாலும் இப்பொழுதுதான் அவள் முதன்முதலில் இந்தக்ஷேத்ரத்திற்கு வந்திருப்பதாலும் ஸ்ரீராமரானவர் ஸீதைக்கு இந்த க்ஷேத்ரததினுடையவும் தீர்த்தத்தினுடையவும் மூர்த்தியினுடையவும் மஹிமையைப் பின்வரும் சுலோகங்களால் எடுத்துக் கூறுகிறார்.

एतत्तु दृश्यते तीर्थं सागरस्य महात्मनः । सेतुबन्ध इति ख्यातं त्रैलोक्येनाभिपूजितम् ॥
एतत्पवित्रं परमं महापातकनाशनम् । अत्र पूर्वं महादेवः प्रसादमकरोत्प्रभुः ॥

இதனால் ஸ்ரீராமர் அங்கு வரும்பொழுது ஏற்கனவே அங்கே ஈசுவரனானவர் மஹாதேவமூர்த்தியாக இருந்து ஸ்ரீராமனை அநுக்ரஹம் செய்திருக்கிறார் என்பது நன்கு விளங்குகிறது.




ராமேசுவரம் கோயில் மூன்றாவது பிராகாரத்திலிருக்கும் மாதவதீர்த்தக்குளம்.

ஸ்ரீராமர் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தது.

இவ்வாறு தசகண்டனான ராவணனை ஸம்ஹாரம் செய்துவிட்டு ஸீதாதேவியுடன் ஸ்ரீராமரானவர் கந்தமாதனபர்வதத்தில் வந்திருக்கிறார் என்கிற செய்தி தெரிந்தவுடன் தண்டகாரண்யவாஸிகளான மஹர்ஷிகளெல்லாரும் ஸ்ரீராமரையும் அவரால் கட்டப்பட்ட ஸேதுவையும் தர்சிப்பதற்காக இங்கு வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீராமரைக்கண்டதும் வெகுவாக ஸ்தோத்ரித்து நமஸ்கரித்தார்கள். ஸ்ரீராமரும் அவர்களை மிகவும் ஆதரவுடன் வரவேற்று உபசரித்துத்தான் மஹாப்பிராமணனான ராவணனை ஸம்ஹாரம் செய்ததால் தனக்கு ஏற்பட்டிருக்கும் தோஷத்தை நிவர்த்தி செய்துகொள்ள உபாயம் சொல்லவேண்டுமென்று கேட்டார். அதற்கு அம்மஹர்ஷிகள் "ஹே ராமா, தர்மத்தை அனுஷ்டித்துக் காட்டுவதற்காகவே உருவெடுத்து வந்த தாங்கள் பிராம்மணனைக் கொன்ற தோஷத்தைப்போக்குவதற்காக பிராயச்சித்தம் செய்து காட்டவேண்டுவது மிகவும் ஸரியானதே. இத்தகைய மஹாபாபங்களெல்லாம் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பூஜிப்பதால்தான் போகும் என்று சர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. சிவலிங்கப்பிரதிஷ்டை செய்வதற்கு இந்த க்ஷேத்ரம் மிகவும் சிலாக்யமானது. இதன் மஹிமையைக்குறித்து சுருதியிலேயே பின்வருமாறு கூறியிருக்கின்றது.

द्वौ समुद्रौ विततावजूर्यौ पर्यावर्तेते जठरेव पादाः । तयोः पश्यन्तोऽतियन्त्यन्यमपश्यन्तः सेतुनातियन्त्यन्यम् ।

விசாலமுமழிவற்றதுமான இரண்டு ஸமுத்ரங்களும் தாயின் வயிற்றில் குழந்தையின் கால்கள் புரளுவது போல் புரளுகின்றன. இவைகளுக்கு நடுவிலிருக்கின்ற ஸேதுவை தர்சிக்கிறவர்கள் ஸம்ஸாரத்தைத்தாண்டுகிறார்கள். அதைத்தர்சிக்காதவர்கள் ஸம்ஸாரத்தைத் தாண்டுவதில்லை. ஆதலால் இந்த மஹாக்ஷேத்ரத்தில் நல்லமுகூர்த்தத்தில் தாங்களும் சிவ




ராமேசுவரம் கோயில் கீழ
கோபுரவாசல்.

லிங்கப்பிரதிஷ்டை செய்தால் அது தங்கள் பெயராலேயே ராமநாதர், ராமேசுவரர், ராமலிங்கம் என்ற பெயர்களுடன் ஆசந்திர தாரம் மிகப் பிரஸித்தியடைந்து விளங்கும்" என்றார்கள். இதைக்கேட்ட ஸ்ரீராமர் மிக்க உத்ஸாஹத்துடன் தனது பிரிய தூதனான ஹநுமாரை அழைப்பித்து உடனே கைலாஸத்துக்கு வேகமாகச் சென்று குறிப்பிடப்பட்ட நல்ல முகூர்த்தத்திற்குள் சிவலிங்கம் ஒன்று கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார். இவ்விதம் ஆக்ஞாபிக்கபபட்டதும், ஹநுமானவர் தனது புஜங்களைத் தட்டிக்கொண்டு எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையில் கந்தமாதன பர்வதத்தை நடுங்கச்செய்து உயரக்கிளம்பி ஆகாசமார்க்கத்தைக் கடந்து கைலாஸபர்வதம் வந்து சேர்ந்தும் அங்கு லிங்கரூபியான ஈசுவரனைக் காணாததால் லிங்கத்தை அடைவதற்காக பரமசிவனைக் குறித்து உக்ரமாக தபஸ் செய்யவாரம்பித்தார். உடனே பரமசிவனும் அவருக்குப் பிரஸன்னராகி திவ்யமான லிங்கத்தைக் கொடுத்தருளினார். அதையெடுத்துக்கொண்டு குறிப்பிட்ட நல்ல முகூர்த்தம் ஆய்விடப்போகிறதேயென்று கவலையுடன் அதிவேகமாக ஹநுமார் திரும்பி வருகையில் வழியில் நாரதரைக்கண்டார். இவ்வளவு அவஸரமாகப் போகும் கார்யம் என்னவென்று நாரதர் கேட்க ஹநுமார் விஷயத்தையெல்லாம் சொன்னார். உடனே நாரதர் "மிகவும் யுக்தமான கார்யம். ஆனால் ஸ்ரீராமர் மாதிரியாகவே நீயும்தானே லங்கையில் யுத்தத்தில் அநேகம் பேர்களைக் கொன்றிருக்கிறாய். ஆதலால் நீயும் ஒரு சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தால் உன் பாபங்களும் தொலைந்துவிடுமே. இனி திரும்பவும் கைலாஸம் சென்று வருவதானால் காலதாமதாய்விடும். இங்கு ஸமீபத்திலுள்ள நர்மதாதீரத்திலிருந்து நல்லதாக ஒரு லிங்கம் எடுத்துக்கொண்டுபோய் நீயும் அந்த நல்ல முகூர்த்தத்தில் அதை பிரதிஷ்டை செய்து விடுவது மிகவும் சிரேயஸ்காம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார். ஹநுமாரும் நாரதர் வார்த்தையிலீடுபட்டு நர்மதாதீரம் சென்று இன்னுமொரு லிங்கத்தையும் எடுத்துக்கொண்டு அதிவேகமாககந்தமாதனபர்வதத்திற்கு வந்துசேர்ந்தார். இதற்குள்ளாக குறிப்பிடப்பட்டிருந்த சுபமுகூர்த்தம் போய் விடுகிறதென்று மஹர்ஷிகள் அவசரப்பட்டார்கள். சுபமுகூர்த்தம் இன்னும் அதிஸ்வல்பம்தான் மிச்சமிருப்பதை




ராமலிங்கஸ்வாமி பிரதிஷ்டை.



ராமநாதஸ்வாமி கைலாஸவாஹன உத்ஸவம்.


யும், ஹநுமார் இன்னும் வாராமலிருப்பதையும் கண்டு மஹர்ஷிகள் ஸ்ரீராமரைப் பார்த்து "ஹநுமாரை எதிர்பார்த்துக்கொண்டு இனி தாமஸிப்பது உசிதமல்ல; ஸீதாதேவியானவள் லீலையாக ஒரு ஸைகதலிங்கம் பிடித்து வைத்திருக்கிறாள். அதை உடனே லக்னம் போவதற்குள் பிரதிஷ்டை செய்துவிடவேண்டும்" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட ஸ்ரீராமர் உடனே ஸீதாதேவியுடன் பத்தகங்கணராய் ஆனிமீ சுக்லபக்ஷம் தசமிதிதி புதவாரம் ஹஸ்தநக்ஷத்ரம் காஜாகரணம் வ்யதீபாதம் கன்னியில் சந்திரன் விருஷபததில் ஸூர்யன் கூடிய சுபமுகூர்த்தத்தில் கந்தமாதனபர்வதசிகரத்தில் நளஸேதுவின் மத்தியில் ஸீதாதேவியால் உண்டாக்கப்பட்ட ஸர்வசிரேஷ்டமான ஸைகதலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து அந்த ஈசுவரனைப் பலவாறு பூஜித்தார். இந்த ஈசுவரனுடைய அம்பாளுக்குத்தான் பர்வதவர்த்தனியென்று பெயர்.

இவ்வாறு ஸ்ரீராமரானவர் ஈசுவரனைப் பூஜித்துக்கொண்டிருக்கும் ஸமயத்தில் ஹநுமார் கைலாஸத்திலிருந்து லிங்கத்துடன் ஓடோடியும் வந்தார். வந்ததும் இவ்விடத்தில் பிரதிஷ்டை முடிந்து பூஜை நடந்துகொண்டிருந்ததைக்கண்டதும் அவருக்கு உண்டான துக்கத்தை எடுத்துரைக்க வொண்ணாது. அவருக்கு எல்லோர் முன்னிலையிலும் ஸ்ரீராமர் தன்னை அவமானப்படுததியதாகத் தோன்றிவிட்டது. ஸ்ரீராமரை நோக்கிப்பின் வருமாறு வாய்விட்டலறினார். "ஹே, ராம, இவ்வுலகத்தில் துக்கத்தை அனுபவிப்பதற்காகவே என்ஜன்மம் ஏற்பட்டிருக்கிறது. எனனைப்போலொரு புத்திரனை ஒரு ஸ்திரீயும் பெறலாகாது. முதலில் ஸேவகாவிருத்தியால் எண்ணிறந்த துக்கங்களையனுபவித்தேன். பிறகு ராக்ஷஸர்களிடம் மிகக்கஷ்டப்பட்டேன். பிறகு யுத்தத்தில் இதைப்பார்க்கிலுமதிக துக்கம். இப்பொழுது தாங்கள் என்னை அவமதித்ததாலுண்டான துக்கத்துக்கு எல்லையே இல்லை.



பர்வத வர்த்தனி அம்பாள் தங்கப்பல்லக்கு உத்ஸவம்.


ஸுக்ரீவன் பார்யையை யடையும்பொருட்டும், விபீஷணன் ராஜ்யமடையும் பொருட்டும் தங்களை யடைந்து ஸேவித்தார்கள். நானோவெனின் யாதொரு காரணமுமின்றி நிஷ்காமனாய் பிரதிபலன் யாதொன்றையுமிச் சிக்காதவனாய் தங்களை ஆச்ரயித்திருக்கிறேன். அநேகம் வானரர்களிருக்கையில் கைலாஸ பர்வதத்துக்குச்சென்று சிரேஷ்டமான லிங்கத்தைக் கொண்டுவரும்படி தாங்கள் என்னை ஆக்ஞாபிக்கும்படி யான்பாக்யத்தை இன்றுபெற்றேன். அந்த ஆக்ஞையை சிரஸாவஹித்தது ஓடோடியும்சென்று கைலாஸத்தை யடைந்தேன். ஆனால் அங்கே பரமசிவனைக்காணவில்லை. உடனே உக்ரமான தபஸ்ஸைச்செய்து ஈசுவரனை திருப்தி செய்தேன். அவர் பிரஸன்னராய் லிங்கத்தைக்கொடுத்ததும் வாங்கிக் கொண்டு திரும்பி வருவதற்குள் தாங்கள் இங்கு வேறு மணல் லிங்கத்தை பிரதிஷ்டை செய்து என்னை அவமானம் செய்துவிட்டீர்கள். என் பிரயாஸமெல்லாம் வீணாகப் போய்விட்டது. இந்த துக்கம் என்னால் ஸகிக்கமுடியவில்லை. துர்பாக்கியனான என்னுடைய சரீரம் பூபாரமேயொழிய வேறில்லை. நான் என்னசெய்வேன். எங்கு செல்வேன். எனக்கோ தங்களைத்தவிர வேறு கதிகிடையாது. தங்களாலேயே இவ்வாறு அவமதிக்கப் பட்டபடியால் என் சரீரத்தை இனிவைத்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் விட்டுவிடுவதே நலமென்று தீர்மானித்துவிட்டேன்'' என்று பலவாறாகப் புலம்பிககொண்டு துக்கத்தால் மனக்கலக்கமுற்று ஸ்ரீராமருடைய சரணாவிந்தங்களில் தண்டம்போல் விழுந்து நமஸ்கரித்தார். இதைக்கண்ட ஸ்ரீராமர் பலவாறாக அவருக்கு ஸமாதானங்கள் சொல்லித்தேற்றினார். "நீசெய்தது நான்செய்தது, நான்செப்தது நீசெய்தது தான். நான்செய்த லிங்கப்பிரதிஷ்டை நீசெய்த லிங்கப்பிரதிஷ்டைதான். குறிப்பிட்டலக்னம் தவறிவிடுவதாயிருந்தபடியால் ஸீதை செய்திருந்த ஸைகதலிங்கத்தை மஹர்ஷிகளின் வாக்யத்தை யனுஸரித்துப் பிரதிஷ்டை செய்தேன். அதனால் உனக்குக்கோபமும் வேண்டாம், துக்கமும்






ராமநாதஸ்வாமி கோயில் மேற்கு கோபுரவாசல்.

வேண்டாம். கைலாஸத்திலிருந்து வந்திருக்கும் லிங்கத்தை இந்த சுபதினத்தில் நீ பிரதிஷ்டைசெய். அந்தலிங்கம் மூவுலகங்களிலும் உன்பெயரால் பிரஸித்தியடையட்டும். எல்லோரும் முதலில் ஹநுமதீசுவரனை தர்சித்துவிட்டுப் பிறகு ராமேசுவரனை தர்சிக்கட்டும். நீயும் பிரம்மகுலத்தில் பிறந்த அநேக ராக்ஷஸக்கூட்டங்களை வதம்செய்திருப்பதால் உனக்கு அதனாலுண்டான தோஷம் இந்த லிங்கப்பிரதிஷ்டையால் நிவர்த்தியாகட்டும்.'' என்றுசொல்லி ஆசுவாஸப்படுத்தினர். ஆனால் ஹநுமாருக்கு ஸமாதானமாகவில்லை. அதையறிந்த ஸ்ரீராமர் அவருக்கு புத்தி புகட்டவேண்டி கடைசியாக சொன்னதாவது: "உனக்கு நான் இவ்வளவு சொல்லியும் மனஸ்ஸமாதானப் படாவிட்டால் இதோ ஸீதையால் பிடிக்கப்பட்டு நான் பிரதிஷ்டை செய்திருக்கும் இந்த மணலிங்கத்தை பிடுங்கியெறிந்து விட்டாயேயானால் நீ கொண்டுவந்த லிங்கத்தை உடனே ஸ்தாபித்து விடுகிறேன். உனக்கு மனஸ்தாபம் வேண்டாம்" என்றார். உடனே ஹநுமார் கர்வத்தால் தான் செய்யப்போகும் கார்யத்தின் உசிதத்தப்பைக் கவனியாமல் நொடிப்பொழுதில் அந்த மணல் லிங்கத்தை பிடுங்கியெறிந்து விடலாமென்று நினைத்து ஸமஸ்த தேவர்கள், மஹர்ஷிகள், ராக்ஷஸர்கள், ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஸீதை முதலிய எல்லோர் முன்னிலையிலும் மிகவும் அலக்ஷ்யமாய் தனது ஒருகையால் அந்த லிங்கத்தை பிடுங்கப்பார்த்தார். அது அசையவில்லை. பிறகு இரண்டு கைகளாலும் அதை கெட்டியாய் பிடித்துக்கொண்டு தன்னால் இயன்றமட்டில் முழுபலத்தோடும் அசைத்துப்பார்த்தார்; சற்றேனும் அசையவில்லை. பிறகு அந்த லிங்கத்தை தனது வாலால் சுற்றி கைகளை பூமியிலூன்றிக்கொண்டு மூச்சை யடக்கி இழுத்தார். அப்பொழுது அந்தலிங்கம் அசையவில்லை, ஆனால் ஹநுமாரானவர் வாலறுந்து ஒரு குரோசத்துக்கப்பால் ரத்ததைக்கக்கிக்கொண்டு படபடவென்று துடித்துக்கொண்டு பூமி நடுங்கும்படி சப்தித்துக்கொண்டு பூமியில் மூர்ச்சித்து விழுந்தார். அவருடைய கண்கள் முதலிய நவத்வாரங்களிலிருந்தும் பீரிட்டடித்தரத்தம் ஒரு தடாகம்போல் ஆயிற்று. அப்பொழுது எல்லோரும் அவரிடம் ஓடிவந்து அவர் விழுந்து கிடந்ததைக்



அஷ்டலக்ஷ்மீ மண்டபமும் அதில் த்வஜஸ்தம்பமும், ஸேதுபதிகளின் சிலைகளும்.

கண்டு துக்கித்தபொழுது ஸ்ரீராமரும் ஸீதாதேவியும் தங்களது கைகளால் அவர் சரீரத்தைத் தடவிக்கொடுத்து ஆசுவாஸப்படுத்தி எழுப்பினார்கள். மூர்ச்சை தெளிந்தெழுந்த ஹநுமாரானவர் தனது புத்திக்குறவையறிந்து வெகுவாக ஸ்ரீராமரையும் ஸீதையையும் ஸ்தோத்ரித்து தன் முறட்டுத்தனத்தை க்ஷமிக்கும்படி பிரார்த்தித்தார். அவ்வாறே ஸ்ரீராமரும் கருணையுடன் அவரைநோக்கி "ஹே வானரசிரேஷ்ட, அறியாமையால் உன்னால் இந்த முறட்டுத்தனம் செய்யப்பட்டது. ஸீதை பிடித்து நான் பிரதிஷ்டை செய்த இந்தலிங்கத்தை எவராலும் பிடுங்குவது ஸத்தியமாக மாட்டாது. சிவாபராதத்தால் தான் நீ இன்று மூர்ச்சித்து விழுந்தாய். இனி இவ்வண்ணம செய்யாதே. நீ விழுந்த இந்த இடமானது இன்றுமுதல் மூவுலகங்களிலேயும் உன்பெயராலேயே ஹநுமத்குண்டம் என்று பிரஸித்தியடையட்டும. இந்த தீர்த்தத்தில் ஸ்நானம செய்வதால் பிரயாகையில் த்ரிவேணியில் ஸ்நானம் செய்தபலனுண்டாகட்டும்" என்றார். இவ்விதம ஸ்ரீராமரால் அநுக்ரஹம் செய்யபபட்ட ஹநுமார் தான் கொண்டுவந்த லிங்கத்தை ஸ்ரீராமருடைய ஆக்ஞைப்படி ஸ்ரீராமநாதருக்கு வடபாகததில் உத்ஸாகத்துடன் பிரதிஷ்டைசெய்தார். அந்தலிங்கம் இப்பொழுது விசுவேசுவரரென்று சொல்லப்படுகிறது. இதை தர்சனம் செய்துவிட்டுத்தான் ஸ்ரீராமநாதரை தர்சிக்க வேண்டும். பிறகு ஸ்ரீராமனுதருடைய ஸந்நிதிக்கு முன்பக்கத்தில் கிழக்கு கோபுரவாசலுக்கு வெளி



சொக்கட்டான்மண்டபத்தில் ராமநாதபுரம்
ஸேதுபதிகளின் சிலைகள்.


யில் வடபுறத்தில் தனக்காக ஒரு கோயில் ஏறபடுத்திக்கொண்டு அதற்குள்ளேயே மேல் பக்கத்தில் தான் நர்மதையிலிருந்து கொண்டுவந்த லிங்கத்தைபிரதிஷ்டைசெய்து அங்கேயே ஸ்ரீராமரை தியானம்செய்துகொண்டு இன்றும் காணப்படுகிறார். ஹநுமார் வாலால் சுற்றிய மூன்று சுற்றின் வடுவையும் ஸ்ரீராமநாதர் இன்றும் தரித்துக்கொண்டிருப்பது யாரும் காணலாம்.



ஸீதை ஸ்ரீ ராமர் லக்ஷ்மணர்

விசேஷதீர்த்தங்கள்.


ஸ்ரீ ராமராக்ஞைப்படி விசுவகர்மாவின் புத்ரனாகிய நளனால் கட்டப்பட்ட இந்த ஸேதுவில் அநேக புண்யதீர்தங்கள் இருக்கின்றன. அவைகளுள் இருபத்தினான்கு தீர்த்தங்கள் மிகவும் முக்கியமானவை. அவையாவன—சக்ரதீர்த்தம், வேதாளவாததீர்த்தம் பாபவிநாசதீர்த்தம், ஸீதாஸரஸ், மங்களதீர்த்தம, அமிருதவாபிகா, பிர்மகுண்டம், ஹநுமத்குண்டம், அகஸ்திய தீர்த்தம், ராமதீர்த்தம், லக்ஷ்மணதீர்த்தம், ஜடாதீர்த்தம், லக்ஷ்மீதீர்த்தம், அக்னிதீர்த்தம், சக்ரதீர்த்தம், சிவதீர்த்தம், சங்கதீர்த்தம, யமுனாதீர்த்தம், கங்காதீர்த்தம், கயாதீர்த்தம், கோடிதீர்த்தம், ஸாத்யாமிருததீர்த்தம், ஸர்வதீர்த்தம், தனுஷ்கோடி தீர்த்தம்—ஆக 24.



இந்தியாவிலிருந்து ராமேசுவரம்போகும் வழியிலுள்ள பாம்பன்கால்வாய்க்கு ஏற்பட்டிருக்கும் ரயில்பாலம். இதன்பேரில் ரயில்வரும்பொழுது எடுக்கப்பட்டது இந்த படம். கப்பல்கள் பாம்பன் கால்வாயில் செல்லும்பொழுது இப்பாலத்தை நடுவில் இரண்டாக பிளந்து இரண்டுபக்கத்திலும் தூக்கிவிடலாம்.

சக்ரதீர்த்தம்.

இது ஸேது மூலத்தில்உள்ளது. ஸேது மூலம் அதாவது ஸேது கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட பிரதேசம் என்பது நவபாஷாணம என்று சொல்லப்படும் தேவீபட்டணத்துக்கும் தர்ப்பசயனத்துக்கும் மத்தியபாகம். இந்த தீர்த்தமானது இவ்வளவு விஸ்தாரமாக ஆதிகாலத்திலிருந்தது. பிறகு தேவேந்திரனனவன் பர்வதங்களின் இறகுகளை சேதித்தபொழுது அந்த பர்வதங்கள் இந்த தீர்த்தத்தின் மத்தியில் வந்து விழுந்தமையால் நடுபாகங்களில் தூர்ந்துபோய் இப்பொழுது தேவிபட்டணத்திலும் தர்பசயனத்திலும் மட்டில் இந்த சக்ரதீர்த்தம் காணப்படுகிறது. இதற்கு முதலில் தர்மபுஷ்கர்ணி என்று பெயர். இதன் கரையில் காலவமஹரிஷி விஷ்ணுவை குறித்து தபஸ்செய்து அவரை ஸந்தோஷப்படுத்தி அவரிடமிருந்து அநேகவரன்களை பெற்றார். ஒருஸமயம் இவர் தர்மபுஷ்கரணிக்கரையில் விஷ்ணுவை பூஜித்து அவரையேத்யானம்செய்துகொண்டிருக்கையில் ஒரு ராக்ஷஸனனவன் இவரை விழுங்கிவிடுவதற்காக நெருங்கி இவரை கிரஹித்தபொழுது ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் தமது பக்தனுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தை விலக்கக்கருதித் தமது சக்ராயுதத்தை அந்த ராக்ஷஸனைக் கொன்றுவிட்டு வரும்படி ஆக்ஞாபித்தார். அவ்விதமே அந்த திவ்யமயமான ஸுதர்சன சக்ரமானது அந்த ராக்ஷஸனின் தலையை ஒரு நொடிப்பொழுதில் அறுத்துவிட்டது. உடனே காலவமஹர்ஷியானவர் அந்த சக்ரத்தை




பாம்பன்கால்வாய்பாலம் கப்பல்வருவதற்காக நடுவில் தூக்கப்பட்டிருக்கிறது. புகைக் கப்பல் போவதைக்காணலாம்.

பலவாருகத் துதிசெய்து தர்மபுஷ்கரணியிலேயே ஸதா தங்கியிருக்கும்படி பிரார்த்திக்க அதுவும் அதற்கிணங்கிற்று. அதுமுதல் அதற்கு சக்ரதீர்த்தமென்று பெயர்.

தேவீபட்டணம் என்னும் நவபாஷாணம்.

முன்னொருகாலத்தில் தேவதைகளையெல்லாம் ஹிம்ஸைசெய்த மஹிஷாஸுரனைக்கொல்வதற்காக எல்லாதேவதைகளுடைய தேஜஸ்ஸுடனும் ஆவிர்பவித்த ஸாக்ஷாத் பராதேவதையானவள் மஹிஷாஸுரனுடன் யுத்தம்செய்து அவனுடைய ஸைன்யங்களையெல்லாம் நாசம்செய்து கடைசியில் அவனையும் விரட்டும்பொழுது அவன் ஓடோடியும் சென்று மஹோததியின் கரையிலிருந்த இந்த சக்ரதீர்த்தமானது விஸ்தாரமாக இருந்ததால் அதற்குள்ளிறங்கி ஒளிந்துகொண்டான். துர்க்காதேவியானவள் அங்குவந்து அவன் ஜலத்தில் ஒளிந்துகொண்டிருப்பதை யறிந்து தமது வாஹனமாகிய ஸிம்ஹத்தை அந்த ஜலம் முழுமையும் குடித்துவிடும்படி கட்டளையிட்டாள். அவ்வாறே அந்த ஸிம்ஹம் செய்ததும் அந்த அசுரன் வெளிக்கிளம்பினன். உடனே தேவியானவள் அவனை ஸம்ஹரித்தாள். பிறகு அந்த சக்ரதீர்த்தத்தில் தன்கையிலுள்ள அமிருதகலசத்திலிருந்து அமிருதத்தை விட்டு பூர்த்திசெய்து அந்தவிடத்தில் தன் பெயரால் ஒருபட்டணம் நிர்மாணம்செய்யும்படி தேவியானவள் ஏற்பாடுசெய்தாள். அப்படியே ஏற்பட்டபட்டணம்தான் தேவீபட்டணம். பிறகு ஸ்ரீராமர் லங்கைக்குச் செல்லுவதற்காக ஸேது கட்டியபொழுது இவ்விடத்தில் ஒன்பது கல்லுகளில் ஒன்பது நவக்கிரஹங்களையும் பிரதிஷ்டைசெய்து பூஜித்தார். இந்த ஒன்




ராமேசுவரம்கோயில் புதிதாககட்டுவதற்காக இடிக்கப்பட்டிருந்தஸமயத்தில் எடுத்த படம். பெரிதாகவிருக்கும் விமானம்தான் ஸ்ரீராமநாதர்கோவில். சிரியவிமானம்தான் ஹநுமார் பிரதிஷ்டைசெய்த விசுவேசார்கோவில். இதற்குஇடதுபக்கத்தில் ஜனங்கள் கூட்டமாய் ஸ்நானம்செய்யுமிடம்தான் கோடிதீர்த்தம் இதைசுற்றிலும் இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன.

பது கல்லுகளும் இன்றும் அந்த ஸமுத்திரத்தில் காணப்படுகிறது. இதனுல்தான் இதற்கு நவபாஷாணம் என்று பெயர்வந்தது.

கோடிதீர்த்தம்.


ஸ்ரீ ராமசானவர் ராமனுதஸ்வாமியை பிரதிஷ்டைசெய்தபிறகு பிரதிதினமும் அவருக்கு பூஜை செய்வதற்காக அபிஷேகத்திற்கு தீர்த்தம் வேண்டியிருக்குமாதலால் தமது வில்லின் கோடி (நுனி)யால் ராமநாதருக்கு வடபாகத்தில் பூமியில் குத்தி ஒரு தீர்த்தம் உண்டாக்கினுர். அதுதான் கோடிதீர்த்தம் என்று வழங்குவது. இது மிகவும் விசேஷமான தீர்த்தமென்று யாத்திரைக்காரர்களெல்லாம் இதிலிருந்துதான் தீர்த்தம் எடுத்துச் செல்லுவது வழக்கம். இந்தராமேசுவா க்ஷேத்திரத்திலுள்ள அநேக தீர்த்தங்களுள் எதில் ஸ்நானம் செய்தாலும் செய்யாவிட்டாலும் இதில் ஜனங்கள் கட்டாயம் ஸ்நானம்செய்வார்கள். ஆதலால் இதை நான்குபக்கங்களிலும் இரும்புக்கம்பிகள்போட்டு பந்தோபஸ்து செய்து அந்த கோவில் பண்டாக்கள் தங்கள்வசத்தில் வைத்துக்கோண்டு தாங்கள்தான் அதிலிருந்து தீர்த்தம் எடுத்துக் கொடுக்கவேண்டுமென்று ஒருபாத்தியம் கொண்டாடுகிறுர்கள். இந்த பண்டாக்களெல்லாம் ஆரியாள் என்று சொல்லப்படும் ஒரு மஹாராஷ்டிரவகுப்பினர்.



ஸர்வதீர்த்தம்.


ஸர்வதீர்த்தம்.

இந்த தீர்த்தமானது ஸ்ரீராமனாதரது ஸந்நிதிக்கு முன்பாகத்தில் வலதுபக்கத்திலிருக்கிறது. முன்னொருகாலத்தில் ஸுசரிதர் என்ற ஒரு மஹர்ஷி மிகவும் விருத்தாப்பியராய் கண்களின் பார்வையெல்லாம் கெட்டுப்போய் அதிக அசக்தராயிருந்தார். ஆனால் அவருக்கு இந்த பாதகண்டத்திலுள்ள எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்யவேண்டுமென்று அவா அதிகமாகவிருந்தது. அதற்காக அவர் கந்தமாதன பர்வதத்திற்குச்சென்று அங்கு ஈசுவரனைக்குறித்து தபஸ் செய்தார். ஈசுவரனும் பிரஸன்னராய் என்னவேண்டுமென்று கேட்டபொழுது தனது அவாவைத்தெரிவித்தார். உடனே ஈசுவரன் எல்லா தீர்த்தங்களையும் தாம் அங்கேயே தருவித்து விடுவதாகவும் அதில் ஸ்நானஞ்செய்து எல்லா தீர்த்தங்களின் ஸ்நானபலனையுமவர் அடையலாமென்றும் சொல்லி உடனே இந்த ஸர்வதீர்த்தத்தை யுண்டாக்கினர். அதில் ஸ்நானம் செய்ததும் ஸுசரித மஹர்ஷிக்கு கிழட்டுத்தனம் தள்ளாமை கண் தெரியாமை முதலிய எல்லாம் நிவர்த்தியாய் அரோகத்ருடகாத்திரமுள்ள யுவாவாக மாறிவிட்டார்.




ராமேசுவரம் கோயில் கிழக்கு கோபுரவாசலுக்கு வெளியிலிருக்கும் ஹநுமார் கோயில்.

இந்த ஸர்வதீர்த்தம் இதற்கு முன் சொல்லிய கோடிதீர்த்தம் இவை இரண்டையுப்பற்றி ஒரு விசேஷமுள்ளது. சென்ற 1838ஞூத்தில் சிருங்ககிரி வியாக்யான ஸிம்ஹாஸனத்தை யலங்கரித்திருந்த ஸ்ரீ நரஸிம்ஹபாரதீஸ்வாமிகள் விஜயயாத்திரையாகப் புறப்பட்டு விளம்பி வருஷத்தில் முதல்தடவை ராமேசுவரத்திற்கு விஜயம் செய்தார்கள். அச்சமயம் ஸ்ரீ மஹாஸ்வாமிகளவர்கள் எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்துகொண்டு கோடிதீர்த்தம் வந்ததும் அங்குள்ள ஆர்யவகுப்பினரான




ராமேசுவரம் கோயில் தெற்கு கோபுரவாசல். பூர்த்தியாகாமலிருக்கிறது. பக்கத்திலிருந்தெடுத்த படம்.

பண்டாக்கள் தாங்கள் தான் அதிலிருந்து ஜலம் எடுத்துக்கொடுப்போமென்றூர்கள். ஸ்ரீ மஹாஸ்வாமிகள் எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. உடனே ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யாமலே அதை விட்டுத்திரும்பி இந்த ஸர்வதீர்த்தத்திற்கு வந்து கோடிதீர்த்தத்தையுமடக்கிக்கொண்டிருக்கிற இந்த தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தால் எல்லா தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்தபலம் ஒரேகாலத்தில் வருவதாயிருப்பதால் இதுமுதல் எல்லாரும் ஸர்வதீர்த்தஸ்நானமே செய்யவேண்டியது என்று ஆக்ஞை செய்துவிட்டு தானும் ஸர்வதீர்த்தத்தில் ஸ்நானம் செய்துகொண்டு ஸ்ரீமடத்துக்கு வந்தார்கள். இந்தப்பிரகாரம் ஸ்ரீ மஹாஸ்வாமிகளால் செய்யப்பட்ட உத்தரவு சுமார் நாற்பது வருஷகாலம் வரை எல்லா ஜனங்களும் அனுஸரித்து அனுஷ்டானத்திலிருந்து கோடி-தீர்த்தமே திரிஸ்கரிக்கப்பட்டது. இதனுல் அந்த ஆர்யவகுப்பு ஜனங்கள் பலவித நிந்தனைகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளானூர்கள். இவர்களுக்கு ஸ்ரீ ஜக்தகுருக்களின் சாபம்



ராமேசுவரம் கோயில் தெற்கு கோபுரவாசல். எதிரிலிருந்தெடுத்த படம்




ராமேசுவரம் கோயில் மேலகோபுரவாசல். இதன் இருபுறத்திலும் வடக்கே மஹாகண பதி கோயிலும் தெற்கே பாலஸுப்ரஹ்மண்யர் கோயிலும் இருக்கிறது.

ஏற்பட்டுவிட்டதென்று இவர்களுடன் எல்லோரும் ஸம்வியவஹாரத்தைக் குறைத்துக் கொண்டார்கள். அவர்கள் புரோகிதம் செய்து வந்தவிடங்களிலும் அவர்களை விலக்கவாரம்பித்தார்கள். கோடிதீர்த்த வரும்படி தொலைந்ததுமல்லாமல் கோடிதீர்த்தமும் புழுபூச்சிகள் அடைந்து கெட்டுப்போய் உபயோகமற்ற நிலைமையில் வந்துவிட்டது. இப்படி வெகுகாலம் நடந்துவந்த பிறகு இரண்டாவது தடவை ஸ்ரீ மஹாஸ்வாமிகள் தக்ஷிணதேசயாத்திரையில் மதுரையில் இருக்கும் பொழுதே ராமேசுவர ஆர்ய சங்கத்தியவர் மதுரைக்குவந்து ஸ்ரீ ஸ்வாமிகளை வணங்கி தாங்கள் செய்த அபராதத்தினல் தங்களுக்குண்டான கஷ்டநஷ்டங்களைத் தெரிவித்துக்கொண்டு தாங்கள் செய்த குற்றத்திற்கு தாங்கள் இதுவரையில் அனுபவித்த துஷ்டபலன் போதும், இனிமேலாவது தங்களை யனுக்ரஹித்துக் காப்பாற்ற வேண்டுமென்று வெகுவாய் வேண்டிக்கொண்டார்கள். ஸ்ரீ மஹாஸ்வாமிகளும் கருணையுடன் அவர்களுக்கு அபயம் கொடுத்து (1873ம் வரு) ஸ்ரீமுக வருஷத்தில் இராமேசுவாத்துக்கு விஜயம் செய்தார்கள். தனுஷ்கோடி ஸ்நானம்செய்து முடித்து ஸ்ரீ ராமநாதருக்கு பூஜையும் கிரமமாய் ஸ்ரீ மஹாஸ்வாமிகளால் நடத்தப்பட்டபிறகு மற்ற தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து ஸர்வதீர்த்த ஸ்நானமும் செய்துகொண்டு ஸர்வதீர்த்தத்திலிருந்து தம் கமண்டுலுவில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு ஏற்கனவேஇரைத்து சுத்தப்படுத்திவைக்கப்பட்டிருந்த கோடிதீர்த்தத்துக்கு வந்து தம் கமண்டுலு தீர்த்தத்தை கோடிதீர்த்தத்தில் சேர்ப்பித்து இன்றுமுதல் இது ஸர்வ தீர்த்தமாகவே ஆய்விட்டது என்று தம் வாக்கினல் உச்சரித்து கோடிதீர்த்தத்திலிருந்து தம் பரிஜனங்களைக்கொண்டு தீர்த்தத்தை எடுப்பித்து தாம் ஸ்நானம்செய்து சிஷ்யஜனங்களையும் ஸ்நானம் செய்யும்படி ஆக்ஞை செய்தார்கள். அதுமுதல் இந்த கோடிதீர்த்தத்திற்கு முன்னிலும் அதிகமான மஹிமை உண்டாயிற்று.

அக்னிதீர்த்தம்.

லங்கையில் ராவணனை ஸம்ஹாரம் செய்துவிட்டு ஸீதையையுமழைத்துக்கொண்டு

எல்லோருடனும் திரும்பி ஸ்ரீராமானவர் கந்தமாதன பர்வதத்துக்கு வந்ததும் அவரை தர்சிக்கவந்த தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகளால் ராவணனைக் கொன்ற பிரம்மஹத்திதோஷ நிவாரணார்த்தம் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யும்படி சொல்லப்பட்டபொழுது அக்கார்யத்தைச் செய்வதற்கு முன் ஸீதாதேவிக்கு ராக்ஷஸகிருஹத்தில் வெகு நாட்கள் தனிமையில் வஸித்ததால் எற்பட்டிருக்கும் தோஷத்தை நிவர்த்தித்து அவளை ஸஹதர்மசாரிணியாக கிரஹித்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாதலால் அவளை அக்னிபரிசுத்தையாகும்படி பிரேரணை செய்தார். அதற்காக அழைக்கப்பட்ட அக்னிபகவான் நேரில் வந்துஸீதாதேவி மிகவும் பரிசுத்தையானவளென்றும் அவளுடைய பதிவிரதா மாஹாத்மியத்தால்தான் ராவணாஸுரனை ஸ்ரீராமரால் வதம் செய்யமுடிந்ததென்றும் சொல்லி ஸீதையை ஸ்ரீராமரிடம் தானே கொடுத்துவிட்டு திரும்பவும் தான் வந்தவழியாகவே ஸ்ரீராமனுதர் ஸந்நிதியின் எதிர்பக்கத்தில் ஸமுத்திரத்திலிறங்கி மறைந்துவிட்டார். இவ்வாறு அக்னிபகவான் வந்து மறைந்தவிடம்தான் அக்னிதீர்த்தமென்று சொல்லப்படுவது.



அக்னிதீர்த்தம்

ஏகாந்த ராமேசுவரம்.

இது பாம்பனிலிருந்து ராமேசுவரத்துக்குப் போகும்வழியில் மங்களதீர்த்தத்துக்கு ஸமீபத்திலுள்ளது. வானரர்களால் ஸேதுவானது கட்டப்படுகையில் ஸ்ரீராமானவர் லக்ஷ்மணர் ஸுக்ரீவன் விபீஷணன் முதலியவர்களுடன் ராவணவதோபாயத்தைக் குறித்து ஏகாந்தத்தில் யோசனைசெய்வதற்காக இந்தவிடத்தில் வந்து உட்கார்ந்தார். யோசனை செய்யும்பொழுது பக்கத்திலுள்ள ஸமுத்திரத்தினுரவாரத்தால் ஒருவர் பேச்சு மற்றொருவருக்கு காதில்படாமல் போகவே அதைக்கண்டு சினங்கொண்டவராய் ஸ்ரீராமர் புருவத்தை நெறித்தார். ஏற்கனவே சூடுபட்டவனுதலால் ஸமுத்ராராஜன் இதைக்கண்டு பயந்து அந்த பிரதேசத்தில் தனது அலைகளைகளையெல்லாம் அடக்கி சப்தமில்லாமலிருந்தான். பிறகு இவர்கள் சப்தமில்லாமல் தனிமையில் யோசனைகளை செய்துமுடித்தார்கள். அதனுல்தான் இதற்கு ஏகாந்த ராமேசுவரமென்று பெயர். இன்றும் இந்த பிரதேசத்தில் ஸமுத்திரத்தின் கொந்தளிப்பு மிகவும் ஸ்வல்பமாகவே காணப்படுகிறது. இந்தவிடத்திலுள்ள கோயில் தற்காலம் மிகவும் ஜீர்ணமாயிருக்கிறது.

அமிருதவாபிகா.

இந்த ஏகாந்த ராமேசுவரத்திலுள்ள கோவிலுக்குள் ஒரு கிணறு இருக்கிறது.



ஏகாந்த ராமேசுவரத்துக்கு சமீபத்திலுள்ள வில்லூர்ணி.


அதுதான் அமிருதவாபிகையென்று சொல்லப்படும் தீர்த்தம். இதில் முன்னாளில் ஈசுவரன் சொல்படி அகஸ்தியமஹர்ஷியுடைய ஸஹோதரர் மூன்றுவருஷகாலம் ஸ்நானம் செய்து அதனால் முக்தியடைந்ததாக புராணங்களில் சொல்லப்படுகிறது. இந்த ஏகாந்த ராமேசுவரத்துக்கு ஸமீபத்திலுள்ள ஸமுத்திரக்கரையில் வில்லூர்ணியென்று ஒரு அதிசயம் இன்றும் காணப்படுகிறது. அதாவது நல்ல சுத்தமான தீர்த்தத்தை அபேக்ஷித்து ஸ்ரீராமரானவர் இங்கு ஸமுத்திரக்கரையில் அலைகளடிக்குமிடத்தில் தனது வில்லை பூமியில் ஊன்றினார். அதிலிருந்து ஒரு ஊத்து, உப்பில்லாத மதுரமான தீர்த்தம், பீரிட்டுக்கொண்டு வெளியிலடித்தது. இது இன்றும் அப்படியே காண்கிறது. ஸமுத்திரத்தின் அலைகளுக்கு நடுவில் இந்த ஒரு இடத்தில் மட்டும் நல்ல தீர்த்தம் ஒரு குழாய்க்குள்ளிருந்து வருவதுபோல் வருகிறது.

ஸ்ரீராமநாதர் கோயில் நந்தி.

இந்த நந்தியானது மிகப்பெரிதான ஆகிருதியுள்ளதாய் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு ஸ்ரீராமநாதர் தென்படாமல் மறைத்துக்கொண்டிருக்கிறது. இதற்கு இவ்வூரில் ஒரு ஐதிஹ்யம் சொல்லுகிறார்கள். முன்காலத்தில் ஒரு துலுக்க அரசன் பலாத்காரமாக கோயிலுக்குள் வந்ததாகவும் அப்பொழுது எவ்வளவு தடுத்தும் அவன் கேளாமல் நந்திக்கு ஸமீபத்தில் வரும்பொழுது நந்தியானது சிறிதாகவிருந்தது பெரிதாக வளர்ந்து ஸ்வாமியை அவனுக்குத் தெரியாமல் மறைத்துக்கொண்டதாகவும் அதைக்கண்டு அவன் சற்று தயங்கி இது கல்லு நந்திதானேயென்று கேட்க அங்குள்ளவர்கள் அது கல்லல்ல உயிருடன்கூடிய நந்தியென்று சொன்னதாகவும் அப்படியானால் தான் கொடுக்கும் புல்லை அது சாப்பிடுமாவென்று சொல்லி கொஞ்சம் புல்லை தருவித்து அதற்கு கொடுத்ததாகவும் நந்தியும் உடனே அதை சாப்பிட்டதாகவும் அதைக்கண்டு பயந்து அவ்வரசன் திரும்பிச் சென்றுவிட்டதாகவும் சொல்லுகிறார்கள். இன்றும் இந்த நந்தியின் வாயில் புல்லு காணப்படுகிறது. இந்த நந்திக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு கற்சிலைகள் காண்கின்றன. அவை



ராமேசுவரம் கோயில் நந்திக்கு இருபக்கத்திலுமிருக்கும் ரத்னாகரம் மஹோததிகளின் சிலைகளில் ஒன்று.




ராமேசுவரம் கோயில் நந்தி.

கள் தாம் ரத்னாகரமும், மஹோததியும். இந்த இரண்டு ஸமுத்ரங்களும் புருஷாகிருதியாய் வந்து இங்கு ஸ்ரீராமநாதரை தர்சிக்கிறார்கள்.

ஸேது மாதவர்.


முன்னொருகாலத்தில் பாண்டியநாட்டை குணநிதி யென்னுமோரரசன் ஆண்டுவந்தான். வயதான பிறகு அவன் தனது புத்ரனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு தான் ஸம்ஸாரத்துடனும் பரிவாரத்துடனும் புறப்பட்டு ஒவ்வொரு க்ஷேத்ரமாகச்சென்று அங்கங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து ஈசுவரனைப் பூஜித்து வந்தான். இவ்வாறு தேசஸஞ்சாரம் செய்துவருகையில் ராமேசுவரம் வந்ததும் அங்கு அவனுக்கு மனதுக்கு ஆஹ்லாதகாமாயிருந்தமையால் அங்கேயே ஸ்திரமாய் வஸித்துக்கொண்டு தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துகொண்டு ஸ்ரீராமநாதரை பிரதிதினமும் தர்சித்துவந்தான். ஒருஸமயம் இவ்வர




ஸேதுமாதவர் கோயில்.

சன் மஹாவிஷ்ணுவைக்குறித்து யாகம்செய்தான். மஹாவிஷ்ணுவும் அவனிடம் மனமிரங்கி அவனை அநுக்ரஹிக்கவெண்ணங்கொண்டு லக்ஷ்மீதேவியுடன் பிரணயகலஹம் செய்தார். அவளும் மாஹாவிஷ்ணுவினுடைய மனதை யறிந்தவளாய் அக்கலஹத்தை ஒரு விபாஜமாகக்கொண்டு பூமியில் மிகவும் ரூபலாவண்யமுள்ள எட்டுவயதுப் பெண்ணாக அவதரித்து தனுஷ்கோடியில் ஸமுத்ரக்கரையோரமாக மணலிலுட்கார்ந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அச்சமயம் அந்த குணநிதியென்னும் அரசன் பத்னியுடன் அங்குவந்து ஸ்நானாதிகளை முடித்துக்கொண்டு கரையில் மணலில் விளையாடிக்கொண்டிருந்த பெண்ணைக் கண்டு அவளை நெருங்கி "நீயார், உனது பெற்றோர்கள் யார், நீ ஏன் இங்கு தனிமையிலிருக்கிறாய்" என்று கேட்டான். அதற்கு அப்பெண் "எனக்கு தாய்தகப்பனில்லை. நான் தனிமையிலிருக்கிறேன்" என்றாள். இதைக்கேட்டவரசன் மிகவும் வியந்து "அப்படியானால் நீ எங்கள் பின்னோடுவா. நாங்கள் உன்னை எங்களுடைய அருமைப்புதல்வியாக பாவித்து வளர்க்கிறோம்" என்றான். அதற்கு அப்பெண் "அப்படியே செய்கிறேன். ஆனால் ஒருவிஷயம். நான் எனக்கு இஷ்டமானவரைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன். அப்படிக்கில்லாமல் யாராவது என்னை பலாத்காரம் செய்தால் அவரை நீங்கள் தகுந்தபடி சிக்ஷிப்பதாயிருந்தால் நான் உங்களுடன் வருகிறேன்" என்றாள். அப்படியே செய்வதாக சொல்லி அவ்வரசன் அப்பெண்ணையுமழைத்துக்கொண்டு தன் பதனியுடனும் பரிவாரங்களுடனும் ராமேசுவரம்வந்து சேர்ந்தான். இவ்வாறு சிலகாலம் சென்றதும் ஸ்ரீ மாஹாவிஷ்ணுவானவர் லக்ஷ்மீதேவியின் பிரிவைப் பொருக்கமாட்டாதவராய அவளைத்தேடிக்கொண்டு ஒவ்வொரு தேசமாய் ஸஞ்சரிக்கவாரம்பித்தார். கடைசியில் ராமேசுவரம்வந்து குணநிதி அரசனின் அரண்மனைத்தோட்டத்தில் லக்ஷ்மியானவள் புஷ்பம் பரித்துக்கொண்

டிருப்பதைக்கண்டார். உடனே தான் ஒரு வடதேசத்து பிராமணனாக உருமாறி விபூதிருத்ராக்ஷம் தரித்து கழுத்தில் ஒரு காவடியைத்தூக்கிக்கொண்டு அதன் இருபக்கத்திலும் இரண்டு பாத்திரங்களில் கங்காதிர்த்தத்தை நிரப்பிக்கொண்டு அத்தோட்டத்திற்குள் நுழைந்து அப்பெண்ணை கையைப் பிடித்திழுத்தார். அப்பெண்ணும் கூக்குரலிடவே உள்ளிருந்து அரசன் முதலியவர்கள் வந்து என்னவென்று கேட்க அப்பெண் அங்குள்ள வடதேசத்து பிராமணனைக்காட்டி அவன் தன் கையைப் பிடித்திழுத்ததாகச் சொன்னாள். உடனே அரசன் அந்தப்பிராமணனைப் பிடித்துவரச்சொல்லி விசாரித்ததில் தான் காசிவாஸியான மாதவனென்றும் ஸ்ரீராமநாதருக்கு அபிஷேகத்துக்காக காவடியில் கங்காதீர்த்தம் கொண்டுவந்ததாகவும் வழியில் இந்தப் பெண்ணைக் கண்டதும் அவள் தன் பத்னிமாதிரியாகத் தோன்றியதால் அவள் கையைப்பிடித்தழைத்ததாகவும் சொன்னார். இதைக்கேட்டதும் அவ்வரசன் மிகச்சினங்கொண்டு அந்தபிராமணனை ஸ்ரீராமநாதர்கோயிலிலேயே பின்பக்கத்தில் ஓர்மண்டபத்தில் விலங்கிட்டுக் கட்டிவிட்டான். அன்றிரவு அவ்வரசனுக்கு ஸ்வப்னத்தில் தான்விலங்கிட்ட பிராமணன் ஸ்ரீமஹாவிஷ்ணுவென்றும் தனது பெண்ணாக வளர்த்துவருபவள் ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவியென்றும் வியக்தமாக தென்பட்டது. உடனே எழுந்திருந்து வந்தபெண்ணைப் பார்த்தான். அவள் நிஜமாகவே லக்ஷ்மிதேவியின் சின்னங்களுடன் காணப்பட்டாள். உடனே அவளையுமழைத்துக்கொண்டு கோவிலுக்குச்சென்று அந்த வடதேசத்து பிராமணனைப் பார்த்தான். அவன் சங்குசக்ர கதாபாணியாய் ஆனால் கழுத்தில் காவடியும் காலில்விலங்குமாகக் காணப்பட்டான். இதைக்கண்டதும் அரசனானவன் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். தெரியாத்தன்மையால் செய்த அபராதத்தை க்ஷமித்துத் தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று பிரார்தித்தான். ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் மந்தஹாஸத்துடன் அவனுக்கு அபயங்கொடுத்து தாமும் லக்ஷ்மியுமாகச்சேர்ந்து அவனை அநுக்ரஹிப்பதற்காகவே அப்படி செய்ததாகவும், தாம் அந்த வேஷத்துடனேயே அவ்வூரில் ஸேதுமாதவர் என்று பெயருடன் தங்கியிருப்பதாகவும் எவரும் தம்மை தர்சித்துச் சென்றால்தான் அவர்களுக்குச்ஸேது யாத்ராபலன் வருமென்றும் அவ்வரசனுக்கு எல்லா



ராமேசுவரம் கோயில் வெள்ளிரதம்.




தனுஷ்கோடி கரைமுகம்—ஸிலோன் தீவிலிருந்துவந்த கப்பலொன்றும் ஷெ தீவுக்குப் போகும் கப்பலொன்றும் இருபக்கங்களிலும் காண்கின்றன.

சிரேயஸ்ஸுமுண்டாகுமென்றும் சொல்லி அந்தர்தியானமானார். லக்ஷ்மியும் அவ்வரசன் தன்னை அன்புடன் வளர்த்ததில் தான் மிகவும் ஈடுபட்டிருப்பதாகவும் அதனால் 'அவனை தான் எப்பொழுதும் கடாக்ஷிப்பதாகவும் சொல்லி தனதிருப்பிடமாகிய ஸேதுமாதவரின் வக்ஷஸ்தலத்தையடைந்தாள். அரசனும் தனதிருப்பிடம்சென்றான். இந்த ஸேதுமாதவர் ஸந்நிதி மிகவும் முக்கியமானது. இதை தர்சிக்காமல்சென்றால் யாத்திரையின்பலன் கிடையாதாகையால் எல்லோரும் கடைசியில் இவரை தர்சித்து பூஜித்துக்கொண்டுதான் புறப்படுவார்கள்.

தனுஷ்கோடி தீர்த்தம்.

ராவணவதமாய் திரும்பிய பிறகு விபீஷணரானவர் தனது ராஜ்யமாகிய லங்கைக்கு ஸ்ரீ ராமரால் ஸேதுவேற்பட்டுவிட்டதால் யாரும் இனி அங்கு ஸுலபமாய் வரக்கூடுமென்றும் லங்கையிலிருந்து ராக்ஷஸர்களும் ஸுலபமாய் இந்த பக்கம் பரதகண்டத்திற்கு வரக்கூடுமென்றும் அதனால் பரஸ்பரம் அதிக தொந்தரவுகள் ஏற்படுமாகையால் ஸேதுவை அழித்துவிட வேண்டுமென்றும் ஸ்ரீராமரைப் பிரார்த்தித்தார். ஸ்ரீராமரும் அதற்கிணங்கி தமது தனுஸ்ஸின் கோடியால் அந்த ஸேதுவை குறுக்கே கீறிப்பிளந்துவிட்டார். அதனால் தான் இந்த தீர்த்தத்திற்கு தனுஷ்கோடி தீர்த்தமென்று பெயர். இதையே தான் ஸம்ஸ்கிருதத்திலும்.

रामेण या कृता रेखा धनुषा क्षीरसागरे । मुक्तिस्तद्दर्शनादेव न जाने स्नानजं फलम् ॥



கந்தமாதன பர்வதத்தில் ஸ்ரீராமரின் பாதங்களிருக்கும் மண்டபம்.


என்று சொல்லுகிறார்கள். இதனால் அதுமுதல் லங்கைக்கு போக்குவரத்து இல்லாமல் போய்விட்டது. இந்த தீர்த்தத்தின் மஹிமையைப்பற்றி எற்கனேவே சொல்லியிருக்கிறோம். இவ்விடத்தில் பர்வகாலங்களில் தான் ஸ்நானம் செய்யலாமென்ற நிர்ப்பந்தமில்லாமல் எப்பொழுதும் ஸ்நானம் செய்யலாம். இங்கிருந்து தான் ஸிலோன் தீவுக்கு பிரதி தினமும் கப்பல்கள் போய் வருகின்றன. கப்பல் துறைமுகமும் கப்பல்களும் படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

சிலாசாஸனம்.

இக்கோயிலில் பல சிலாசாஸனங்கள் சுவரில் வரையப்பட்டிருக்கின்றன. சகம் 1530–ல் விநாயகர் சந்நிதி, விசுவபூபதி காலத்தில் ராமநாதன் என்பவரால் பழுது பார்க்கப்பட்டதாம். பள்ளியறையிலுள்ள வெள்ளிக் கட்டில் விஜயரகுநாத சேதுபதி காத்த தேவரால் செய்து வைக்கப்பட்டதாம். த்வஜஸ்தம்பம் பர்வதவர்த்தினி அம்மன் ஸந்நிதியிலுள்ளது. சகம் 1300–ல் செய்து வைக்கப்பட்டது. முதல் பிராகாரம் சகம் 1545-ல் கட்டி வைக்கப்பட்டதாம். மதுரை சமஸ்தான வீரப்ப நாயக்கரால் சகம் 1530 (கி-பி. 1609, 23)ல் ராமநாதர் ஸந்நிதி புதுப்பிக்கப்பட்டதாம். செப்புப் பட்டய சாசனங்களிலிருந்து சகம் 1635-ல் முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் ஹிரண்ய கர்ப்பாதானம் செய்து அத்தனத்தைக்கொண்டு 14 பிராம்மணர்களுக்கு அத்தியுட்டு கிராமத்தை பங்கிட்டுக் கொடுத்தாராம். நவராத்திரி உத்ஸவம் செய்துவைக்க சகம் 1580-ல் சங்கர குருக்கள் முதலியவர்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டது.

கோயிலின் பெருமை.

இங்குள்ள கோயிலுக்கு ஐந்து பிராகாரங்கள் உண்டு. முன் சுண்ணாம்புக் கற்களி




கந்தமதான பர்வதத்தில் ஸ்ரீராமரின் பாதங்களிருக்கும் மண்டபம்.
சமீபத்திலிருந்து எடுத்த படம்.

ஞல் கட்டப்பட்டிருந்த சுவர்கள் இப்பொழுது கறுப்புக் கற்களைக்கொண்டு புதிப்பிக்கப் பட்டிருக்கக் காணலாம். ஸ்ரீராமநாதசுவாமி கர்ப்பக்கிருஹத்தின் மேலுள்ள விமானம் முழுமையும் கருங்கல்லால் செய்விக்கப்பட்டு வெளிப்புறமுள்ள பிம்பங்கள் சுதையால் மூடப்பட்டிருக்கின்றன.

இவ்விடத்தில் முன்னரே கூறியுள்ளவாறு ஸ்ரீராமரும் ஹநுமாரும் மாத்திரமேயன்றி, ஸீதாதேவி, லக்ஷ்மணர், சுக்கிரீவன், "ஸேது" வென்ற அணையைக் கட்டிமுடித்த நளன், அங்கதன், நீலன், ஜாம்பவான், விபீஷணர் முதலானோர்கள் கூட சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

இங்கு மிகவும் விசேஷமானது அழகிய நீண்ட கல்தூண் மண்டபங்களே. தவிர கோயில் கட்டியோ அல்லது மானியம் முதலியன ஏற்படுத்தியோ உதவிபுரிந்த பற்பல ஸேதுபதிகளது சிலைகளும் இங்கு வைக்கப்பட்டிருத்தல் இன்னொரு விசேஷம். கோயிலுக்கு மஹிமையே "சொக்கட்டான்" எனப்படும் இம்மண்டபங்களால். இவைகள் சுமார் நாலாயிரம் அடி நீளமும், பதினேழு முதல் இருபத்தொரு அடிவரையில் அகலமும், முப்பதடி உயரமும் ஏற்பட்டிருக்கின்றன. நிருருதிமூலையில் இந்தப்பிராகாரத்தில்தான் சிருங்ககிரி ஸ்வாமிகளுக்கு இவ்வூருக்கு விஜயம் செய்யும்பொழுதெல்லாம் ஜாகையேற்படுத்துகிற வழக்கம். பிராகாரச் சுவர்களிலும், மண்டபங்களின் தூண்களிலும் ஏற்பட்டிருக்கும் ஸேதுபதிகள் என்ற ராமநாதபுர ராஜாக்களின் சிலைகள் திருப்பணி செய்வித்தவர்களுடையனவே.



கந்தமாதன பர்வதத்தில் காணப்படும் அரண்மனையிருந்த சின்னங்கள்.

சரித்திர ஸம்பந்தமான விஷயம்.

பாண்டிநாட்டின் இராஜ்யாதிபத்தியத்தைப்பற்றிப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் குலசேகரபாண்டியனுக்கும், பராக்கிரம பாண்டியனுக்கும் பலத்த விவாதம் நேரிட்டது. இது காரணமாக குலசேகரன் பராக்கிரமனை மதுரையில் படைகூட்டி போர் தொடுத்தனன். பராக்கிரமன் தனக்குள்ள படைக்குறைவையும், துணைக்குறைவையும் குறித்து தனக்கு மிக்க ஆப்தனான சிங்கள தேசமன்னனான பராக்கிரம பாகுவுக்குத் தூதுபோக்கி படைத்துணை யனுப்புமாறு வேண்டினன். அம்மன்னன் தனது தளகர்த்தனான இலங்காபுர தண்டநாயகனை பாண்டிநாடு வரைசென்று பராக்கிரமனுக்குப் படைத்துணையாயிருந்து சௌரியங்காட்டி வெற்றிக் கொடி நாட்டுமாறு அனுப்பினான். அங்ஙனம் அத்தளகர்த்தன் இலங்கையினின்றும் மதுரை வருமுன்னரே பராக்கிரமன் குலசேகரனால் போர்க்களத்தில் அவன் மனைவிமாருடன் கொல்லப்பட்டு பராக்கிரமனது மதுரையும் அவனது சிம்மாசனமும் கைப்பற்றப்பட்டன. இதையறிந்த இலங்கை தண்டநாயகன் மிகவருந்தி தனது அரசனுக்கு இவ்விவரங்களை தெளிவுபட அறிவித்தனன். அஃதறிந்த சிங்கள மன்னன் மிகச்சினந்து தனது தண்டநாயகனுக்கு, குலசேகரனை விடாது உனது முழுபலத்தையும், போர்த்திறமையையுங்காட்டி வென்று சிறைசெய்து அவன் கைப்பற்றிய மதுரைநாட்டையும் அரியாசனத்தையும் மீட்டு வெற்றி புரியுமாறு கண்டிப்பான ஆணையிட்டனன். அவ்வுத்திரவுபெற்ற தண்டநாயகன் குலசேகரன் மீது மிகக்கோபித்து அவனை வெற்றிபுரியும் வகைக்கான எற்பாடுகளையெல்லாம் திறமையாகச் செய்துகொண்டு குலசேகரனுக்குரிய இராமேசுவரத்தை முதலில் பிடித்துக்கொண்டனன்.

அல்லாமல், இராமேச்சுரத்திலிருந்து நான்கு குரோச தூரத்திலுள்ள "குந்துகாலம்"(?) எனப்படும் ஊரையும் கைப்பற்றி அவ்விடத்தில் கொல்லப்பட்ட மதுரை மன்னன் பராக்கிரமன் பெயரால் "பாரிக்கிரமபுரம்"(?) எனப்பெயரிட்டு அவ்விடத்தில் அடையாளத்திற்காக ஓர் கோட்டையும் கட்டச்செய்தனன். இச்செய்தி "மீகாவமிசம்" எனப்ப

டும் சிங்கள தேசசரித்திரத்தில் காணப்படுகிறது. இங்ஙனம் பகைவனுய் இராமேச்சுரமும், குந்துகாலமும் பிடிபட்டதை யுணர்ந்த குலசேகரன் கோபித்தெழுந்து திரண்ட படை திரட்டி தனது இருபுதல்வர்களை போர் புரியுமாறு அனுப்பினன். கடும்போர் நிகழ்ந்தது. முடிவில் இலங்கை தண்டநாயகனுல் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பின்னர் தானே தனது சைந்நியங்களுடன் போர்க்கெழுந்து மாற்றுனது போர்வன்மைக் காற்ருது புறமுதுகாட்டி இடமறியாது மறைந்தோடினன்.

இச்சமயத்தில் தான் தேவிபட்டணமும் நாசம் செய்யப்பட்டது. இங்ஙனம் குலசேகரனுக்குரிய பலவூர்களையும் தண்டநாயகன் கைப்பற்றிக்கொண்டு கடைசியாக மதுரைவந்து சேர்ந்தனன். தனது தகப்பன் பாராக்கிரம பாண்டியன் பகைவரால் கொல்லப்பட்டபின் அந்நாட்டிலிருக்கப் பயந்து "மலைய தேசம்" சென்றிருந்த வீரபாண்டியனை பயமின்றி மதுரை வருமாறுசெய்து அவனுக்கு அவனது தந்தை பாரிக்கிரம பாண்டியனது திருமுடிசூடி அரியாசனத்தில் எழுந்தருளுவித்தனன். அவ்வளவில் அந்நன்றி பாராட்டி இலங்கை தண்டநாயகனுக்கு மிகமரியாதைச்செய்து அன்பு காட்டினன்.

இங்ஙனம் நிகழ்ந்த செய்தியை ஓடிப்போன குலசேகரன் உணர்ந்து மீண்டும் போர்புரிய நினைந்து தனக்கு உதவிப்படைகளும், துணைச்சேவகளும், அனுப்பும்படி தனக்குவேண்டிய திருநெல்வேலி, கொங்கு நாடுகளிலுள்ள அதிபதிகளை வேண்ட, அவர்களும், போதுமான படைகளும் படைவீரர்களையும் அனுப்பினன். இஃதறிந்த இலங்கை மன்னன் தனது இலங்கை தண்டநாயகனுக்கு உதவிக்காகப் போர்த்திறமையில் வல்ல "ஜகத்விஜயன்" என்பவனையும் யுதத சன்னதப்படுத்தியனுப்ப, அவனும் உரியகாலத்தில் வந்துசேர்ந்து பெருமபோர் நிகழ்த்தினர். இரணடாமுறையும குலசேகரன் நன்ருகத் தோற்கடிககப்பட்டு தொண்டமான் காட்டில்சென்று மறைந்துகொண்டனன். இவ்விரண்டாம் வெற்றி மதுரையில் வெகு பிரசித்தமாக்கப்பட்டது. வீரபாண்டியனே ஸ்திரமான அரசனுய் சிம்மாசனத்து வீற்றிருநதனன். ஆயின், தேசத்தில் குழபபமும கலவரமுமாயிருந்தன. இஃதுணர்ந்த இலஙகை தண்டநாயகன் திருப்பத்தூர்சென்று அங்குள்ள கலகக்காரர்களை எதிர்த்து அடக்கியும், பொன்னமார் பதியிலுள்ள குலசேகரனது அரண்மனையை அழித்தும், கலகமும் குழப்படும் உண்டாகாதவாறு தக்கபடி ஏற்பாடு செய்தனன். வீரபாண்டியனும நிரந்தர அரசனுகவே யிருந்து அரசுபுரிந்து வந்தனன்.

இவ்வண்ணம் நேரிட்டதும் குலசேகரன் தொண்டைமானிடம் தஞ்சம் புகுந்து ஒத்தாசையை வேண்டினன். அந்த ஸமயத்தில்தான் சோழமன்னனுக்கும் குலசேகரன் அவரது சைன்னியத்தின் உதவியைவேண்டி மனுசெய்துகொண்டது. அந்தப்படி இரண்டாவது ராஜாதிராஜன் சோழமன்னன் தமது பன்னிரண்டாம் ஆணடில் குலசேகரனுக்கு தமது சைநநியததை அனுப்பியதுமன்னியில் அதில் முதன்மைபெற்ற அதிகாரிக்கு வரி நீககி பூமியும தானம் செய்துளன். இதின் விவரம மாயவரம் தாலூகா திருக்கடையூரிலுள்ள கோயில் சிலாசாஸனத்தில் தெரிவிக்கப்பட்டுளது.

இங்ஙனம் தொண்டமான் காட்டில் ஒளிந்து பின் அவன் நாட்டையடைந்து அவன் ஆதரவை எதிர்பார்த்து யாதொருபயனும் அடையாத குலசேகரன் மெள்ள சோழ

மன்னன் உதவிபெற அவன் நாடுசார்ந்து தனது கருத்தை வெளியிட்டனன். சோழன் அவனது ஆபத்திற்கு வருந்தி உதவிபுரிவதாக வாக்களித்ததுமன்றி, பல்லவ அதிபதி யொருவன் அபிமானத்தையும் குலசேகரன் அடையும்படி உதவிபுரிந்தனன். இவ்விதம் சோழ பல்லவர்களின் ஆதரவு பெற்ற குலசேகரன் படைதிரட்டி மூன்றுமுறை வீரபாண் டியனை எதிர்த்தும் ஜயம் பெற்றானில்லை. இங்ஙனம் மும்முறையும் தோல்வியுற்றது கண்ட இலங்கை தண்டநாயகர்களிருவரும் பகைவனால் வீரபாண்டியனுக்கு யாதோர் இடையூறும் நேராதென்றெண்ணி அவனிடம் விடைபெற்று சிங்கள சைந்நியங்களுடன் தங்கள் இலங்கை சென்றனர்.

இவ்வாறு பராக்கிரமபாகு பாண்டிநாடு வந்து ஜயம்பெற்றதை ஞாபகார்த்தமாக ராமேசுரம் இராமநாதசுவாமி கோயில் கர்ப்பகிருகத்தின் மதில் சுவர் அடிமுதல் நுனிவரை யும் தனது இலங்கையிருந்தே கருங்கல் கொண்டுவரச்செய்து கட்டிவைத்ததாக அறியப் படுகிறது. அக்கருப்பக்கிருகமே இன்றும் அழியாது விளங்கிக்கொண்டிருக்கிறது. இது வன்றி "சுஹாபரணம்" என்னும் நாணயமும், இம்மன்னனது பிம்பத்துடன் பாண்டிய நாட்டில் வழங்கப்பட்டதாகவும், பண்டுவிஜயகம்(?) எனப்படும் கிராமத்தையும் நிர்மாணஞ் செய்து அதைப் பிராம்மணர்களுக்குத் தானம் செய்ததாகவும் தெரிகிறது.

இலங்கை பராக்கிரம பாகுவின் பாண்டிநாட்டுச் சண்டையில் சேதப்பட்ட பிர தான இடங்கள் தஞ்சாவூர் ஜில்லா பட்டுக்கோட்டைத் தாலூகா 'மணமேல்குடி' அதன் சமீபமுள்ள 'மஞ்சகுடி, தொண்டி, தேவிபட்டணம், மானமதுரை, நெட்டூர், ஸ்ரீவில்லிப் புத்தூர், வேலங்குடி, திருப்பத்தூர், விக்கிரமமங்கலம்' முதலியன.

தென்னிந்தியா சரித்திர சம்பந்தமான விஷயம் சில சரித்திர சம்பந்தமன்றி சிலா சாஸனங்களாலும் உறுதிப்படுகின்றன. காஞ்சீபுரம் தாலூகா ஆரம்பாக்கம் கோயிலி லுள்ள அடியிற்கண்ட சாஸனத்தில் பாண்டிநாட்டில் ஏற்பட்ட கலகமும், அதன் நிமித் தம் ராஜாதிராஜ தேவமன்னர் சுவாமியிடம் 28நாள் பிரார்த்தித்ததும், தனது தளகர்த்தன் பல்லவராயனை அனுப்பி தேசத்தில் கலகம் நடக்காதபடி பாதுகாக்கச்செய்த செய்தியும் விளக்கமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இஃதன்றி அக்காலத்தில் வங்காளதேசத்தி லுள்ள கௌட நாட்டிலிருந்து இத்தென்னிந்தியா விஜயம் செய்திருந்த "உமாபதிதேவர்" எனப்படும் ஞானசிவ தேவரை அரசன் இப்பாண்டிநாட்டுக் கலகம் அடங்கவேண்டிய ஜபம் செய்யச்சொல்ல, அம்மகான் அப்படியே ஜபம்செய்ய கலகம் அடங்கிவிட்டதாக வும், அது நிமித்தம் ஆரம்பாக்கம் (ஆல்பாக்கம்) கிராமத்தில் பிராம்மணர்களுக்குப் பல தானம் செய்தவிஷயம் விளக்கமாகிறது.

தேவாரப்பாடல்கள்.

திருஞானஸம்பந்தர் பாடியது :—

மூன்றும் திருமுறை—பண்—காந்தாரபஞ்சமம்.

அலைவளர்தண்மதியோடயலேயடக்கியுமை
முலைவளர்பாகமுயங்கவல்லமுதல்வன்முனி
யிலைவளர்தாழைகள்விம்முகானலிராமேச்சரந்
தலைவளர்கோலநன்மாலையன்றானிருந்தாட்சியே. 1

தேவியைவவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
வேவியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சர
மேவியசிந்தையினார்கடம்மேல்வினைவீடுமே. 2

மானனநோக்கிவைதேகிதன்னையொருமாயைபாற்
கானதில்வவ்வியகாரரக்கன்னுயிர்செற்றவ
னீனமில்லாப்புகழண்ணல்செய்தவிராமேச்சர
ஞானமுநன்பொருளாகிநின்றதொருநன்மையே 3

உரையுணராதவன்சாமமென்னுமுறவேட்கையான்
வரைபொருதோளிறச்செற்றவில்லிமகிழ்ந்தேத்திய
விரைமருவுங்கடலோதமல்குமிராமேச்சரத்
தரையரவாடநின்றாடல்பேணுமம்மானல்லனே. 4

ஊறுடைவெண்டலைகையிலேந்திப்பலவூர்தொறும்
வீறுடைமங்கையரையம்பெய்யவிறலார்ந்ததோ
ரேறுடைவெல்கொடியெந்தைமேயவிராமேச்சரம்
பேறுடையான்பெயரேத்துமாந்தர்பிணிபேருமே. 5

அணையலைசூழ்கடலன்றடைத்துவழிசெய்தவன்
பணையிலங்கும்முடிபத்திறுத்தபழிபோக்கிய
வினையிலியென்றுமிருந்தகோயிலிராமேச்சரந்
துணையிலிதூமலர்ப்பாதமேத்தத்துயர்நீங்குமே. 6

சனிபுதன்ஞாயிறுவெள்ளிதிங்கட்பலதீயன
முனிவன்செய்துகந்தானைவென்றவ்வினைமூடிட
வினியருணல்கிடென்றண்ணல்செய்தவிராமேச்சரம்
பனிமதிசூடிநின்றாடவல்லபரமேட்டியே. 7

பெருவரையன்றெடுத்தேந்தினான்றன்பெயர்சாய்கெட
வருவரையாலடர்த்தன்றுநல்கியயன்மாலெனு

யிருவருநாடிநின்றேத்துகோயிலிராமேச்சரத்
தொருவனுமேபலவாகிநின்றதொருவண்ணமே. 8,9

சாக்கியர்வன்சமண்கையர்மெய்யிற்றடுமாற்றத்தார்
வாக்கியலும்முரைபற்றுவிட்டுமதிலொண்மையா
லேக்கியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சா
மாக்கியசெல்வனையேத்திவாழ்மின்னருளாகவே. 10

பகலவன்மீதியங்காமைக்காத்தபதியோன்றனை
யிகலழிவித்தவனேத்துகோயிலிராமேச்சரம்
புகலியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்புந்தியா
லகலிடமெங்குநின்றேத்தவல்லார்க்கில்லையல்லலே. 11

மூன்றாம் திருமுறை—பண்—பழம்பஞ்சரம்.

திரிதருமாமணிநாகமாடத்திளைத்தொருதீயழல்வாய்
நரிகதிக்கவெரியேந்தியாடுநலமேதெரிந்துணர்வா
ரெரிகதிர்முத்தமிலங்குகானவிராமேச்சரமேய
விரிகதிர்வெண்பிறைமல்குசென்னிவிமலர்செயுஞ்செயலே. 1

பொறிகிளர்பாம்பரையார்த்தயலேபுரிவோடுமைபாடத்
தெறிகிளரப்பெயர்ந்தெல்லியாடுநதிறமேதெரிநதுணர்வா
ரெறிகிளர்வெண்டிரைவந்துபேருமிராமேச்சரமேய
மறிகிளர்மான்மழுப்புல்குகையெம்மணாளர்செயுஞ்செயலே. 2

அலைவளர்தண்புனல்வார்சடைமேலடக்கியொருபாக
மலைவளர்காதலிபாடவாடிமயக்காவருமாட்சி
யிலைவளர்தாழைமுகிழ்விரியுமிராமேச்சரமேயார்
தலைவளர்கோலநன்மாலைசூடுந்தலைவர்செயுஞ்செயலே. 3

மாதெனநேரிழையேர்தடங்கண்மலையான்மகள்பாடத்
தேதெரியங்கையிலேந்தியாடுந்திலமேதெரிந்துணர்வா
ரேதமிலார்தொழுதேத்திவாழ்த்துமிராமேச்சரமேயார்
போதுவெண்டிங்கள்பைங்கொன்றைசூடும்புனிதர்செயுஞ்செயலே 4

சூலமோடொண்மழுநின்றிலங்கச்சுடுகாடிடமாகக்
கோலநன்மாதுடன்பாடவாடுங்குணமேகுறித்துணர்வா
ரேலநறும்பொழில்வண்டுபாடுமிராமேச்சரமேய
நீலமார்கண்டமுடையவெங்கணிமலர்செயுஞ்செயலே. 5

கணைபிணைவெஞ்சிலைகையிலேந்திக்காமனைக்காய்ந்தவர்தா
மிணைபிணைநோக்கிநல்லாளோடாடுமியல்பினராகினல்ல
விணைமலர்மேலனம்வைகுகானவிராமேச்சரமேயா
ரணைபிணைபுல்குகாந்தைசூடுமடிகள்செயுஞ்செயலே. 6

நீரினர்புன்சடைபின்புதாழநெடுவெண்மதிசூடி
யூரினர்துஞ்சிருள்பாடியாடுமுவகைதெரிந்துணர்வா
ரேரினர்பைம்பொழில்வண்டுபாடுமிராமேசசரமேய
காரினர்கொன்றைவெண்டிங்கள்சூடுங்கடவுள்செயுஞ்செயலே. 7

பொன்றிகழ்சுண்ணவெண்ணீறுபூசிப்புலித்தோலுடையாக
மின்றிகழ்சோதியர்பாடலாடன்மிக்கார்வருமாட்சி
யென்றுநல்லோர்கள்பரவியேத்துமிராமேச்சரமேயார்
குன்றினலன்றரக்கன்றடந்தோளடர்த்தார்கொளுங்கொள்கையே. 8

கோவலனான்முகனோக்கொணாதகுழகனழகாய
மேவலனொள்ளெரியேந்திபாடுமிமையோரிறைமெய்ம்மை
யேவலனார்புகழ்ந்தேத்திவாழ்த்துமிராமேச்சரமேய
சேவலவெல்கொடியேந்துகொள்கையெம்மிறைவர்செயுஞ்செயலே. 9

பின்னொடுமுன்னிடுதட்டைசாத்திப்பிரட்டேதிரிவாரும்
பொன்னெடுஞ்சீவரப்போர்வையார்கள்புறங்கூறல்கேளாதே
யின்னெடுஞ்சோலைவண்டியாழ்முரலுமிராமேச்சரமேய
பன்னெடுவெண்டலைகொண்டுழலும்பரமர்செயுஞ்செயலே. 10

தேவியைவவ்வியதென்னிலங்கையரையன்றிறல்வாட்டி
யேவியல்வெஞ்சிலையண்ணனண்ணுமிராமேச்சரத்தாரை
காவியன்ஞானசம்பந்தனல்லமொழியானவின்றேத்தும்
பாவியன்மாலைவல்லாரவர்தம்வினையாயினபற்றறுமே. 11

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியது :—

நான்காம் திருமுறை—திருநேரிசை.

பாசமுங்கழிக்ககில்லாவரக்கரைப்படுத்துத்தக்க
வாசமிக்கலர்கள்கொண்டுமதியினான்மால்செய்கோயில்
நேசமிக்கன்பினாலேநினைமினீர்நின்றுநாளுந்
தேசமிக்கானிருந்ததிருவிராமேச்சுரமே. 1

முற்றினநாள்களென்றுமுடிப்பதேகாரணமா
யுற்றவன்போர்களாலேயுணர்விலாவரக்கர்தம்மைச்
செற்றமால்செய்தகோயிறிருவிரமேச்சுரத்தைப்
பற்றிநீபரவுநெஞ்சேபடர்சடையீசன்பாலே. 2

கடலிடைமலைகடம்மாலடைத்துமால்கருமமுற்றித்
திடலிடைச்செய்தகோயிற்றிருவிராமேச்சுரத்தைத்
தொடலிடைவைத்துநாவிற்சுழல்கின்றேன்றூய்மையின்றி
யுடலிடைநின்றும்போராவைவராட்டுண்டுநானே. 3

குன்றுபோற்றோளுடையகுணமிலாவரக்கர்தம்மைக்
கொன்றுபோராழியம்மால்வேட்கையாற்செய்தகோயில்
னன்றுபோல்னெஞ்சமேநீநன்மையையறிதியாயிற்
சென்றுநீதொழுதுய்கண்டாய்திருவிராமேச்சுரமே. 4

வீரமிக்கெயிறுகாட்டிவிண்ணுறநீண்டரக்கன்
கூரமிக்கவனைச்சென்றுகொன்றுடன்கடற்படுத்துத்
தீரமிக்கானிருந்ததிருவிராமேச்சுரத்தைக்
கோரமிக்கார்தவத்தாற்கூடுவார்குறிப்புளாரே. 5

ஆர்வலநம்மின்மிக்காரென்றவவ்வரக்கர்கூடிப்
போர்வலஞ்செய்துமிக்குப்பொருதவர்தம்மைவீட்டித்
தேர்வலஞ்செற்றமால்செய்திருவிராமேச்சுரத்தைச்
சேர்மடநெஞ்சமேநீசெஞ்சடையெந்தைபாலே. 6


வாக்கினுலின்புரைத்துவாழ்கிலார்தம்மையெல்லாம்
போக்கினுற்புடைத்தவர்களுயிர்தனையுண்டுமால்தான்
றேக்குநீர்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தை
நோக்கினுல்வணங்குவார்க்குநோய்வினைநணுகுமன்றே. 7

பலவுநாடீமைசெய்துபார்தன்மேற்குழுமிவந்து
கொலைவிலார்கொடியராயவரக்கரைக்கொன்றுவீழ்த்த
சிலையினுன்செய்தகோயிற்றிருவிராமேச்சுரத்தைத்
தலையினுல்வணங்குவார்கள்தாழ்வராந்தவமதாமே. 8

கோடிமாதவங்கள்செய்துகுன்றினுர்தம்மையெல்லாம்
வீடவேசக்கரத்தாலெறிந்துபின்னன்புகொண்டு
தேடிமால்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தை
நாடிவாழ்நெஞ்சமேநீநன்னெறியாகுமன்றே. 9

வன்கண்ணர்வாளரக்கர்வாழ்வினையொன்றறியார்
புன்கண்ணராகிநின்றுபோர்கள்செய்தாரைமாட்டிச்
செங்கண்மால்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தைத்
தங்கணுலெய்தவல்லார்தாழ்வராந்தலைவன்பாலே. 10

வரைகளொத்தேயுயர்ந்தமணிமுடியரக்கர்கோனை
விரையமுற்றவொடுக்கிமீண்டுமால்செய்தகோயில்
றிரைகள்முத்தால்வணங்குந்திருவிராமேச்சுரத்தை
யுரைகள்பத்தாலுரைப்பாருள்குவாரன்பினுலே. 11



உத்தரகோசமங்கை கோயில் கோபுரம்.

உத்தரகோசமங்கை.

உத்தரகோசமங்கை எனப்படும் க்ஷேத்திரம் ராமனாதபுரத்திற்கு மேற்கில் சுமார் எட்டுமைல் தூரத்திலுள்ளது. இவ்விடம் கோயிலில் ஸ்ரீ நடராஜ மூர்த்தி கற்சிலையில் அமைக்கப்பட்டுள்ள பெருமைபற்றி இவ்விடத்திற்கு ஆதிசிதம்பரம் எனவும் பெயருண்டு.

மாணிக்கவாசகர் பாடியது.


மாணிக்கவாசக சுவாமிகள் ஆவுடையார் கோவிலில் (திருப்பெருந்துறை) ஈசுவானிடம் உபதேசம் பெற்றதும் பகவான் அந்தர்த்தானமான ஏக்கத்தினால் பலவிடங்கள் சென்று கடைசியில் இவ்விடம் வந்து தங்கி ஆறுதலடைந்தனர். இவர் பாடிய திருவாசகப்பாடல்களை கடைசியில் பதிப்பித்திருக்கிறோம்.

கைலாஸ பாவனை.

ஸ்ரீ நடராஜமூர்த்தி மண்டபத்தின் மேற்கில் கைலாஸ மலைபோல ஒரு உயர்ந்த மேடை ஏற்படுத்தப்பட்டுளது. இது வெளிப்பிராகாரத்தின் வடமேற்கு மூலையிலுள்ளது. இதில் பார்வதி, பரமேசுவரன், ஸ்ரீ மாணிக்கவாசகர் இவர்களது பிம்பங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

பலர் பூஜித்துளது.

இவ்விடம் மூர்த்தியை பிருகுமஹரிஷி, சாண்டில்லிய ரிஷி, கங்காதேவி, அக்னி இவர்களும் பூஜித்து பெருமை யடைந்துளர்.



திருப்புல்லாணி (தர்ப்பசயனம்) கோயில் கோபுரம்.

தர்ப்பசயனம்.

இந்த க்ஷேத்திரமானது ராமநாதபுரம் ரெயில்வேஸ்டேஷனிலிருந்து எழுமைல் தூரத்தில் இருக்கிறது. இவ்விடத்தில்தான் ஸ்ரீராமரானவர் மூன்றுநாள் தர்ப்பத்தின்பேரில் சயநித்துக்கொண்டு ஸமுத்திராஜனை தியானம்செய்து அழைத்தது. அவ்வரசன் வாராமையால் அவன்பேரில் கோபங்கொண்டு தனதுபாணத்தால் ஸமுத்திரத்தை வற்ற அடிக்க ஆரம்பித்தது இந்தவிடம்தான். உடனே ஸமுத்திராஜன் பயந்து, நடுநடுங்கி, ஓடோடியும்வந்து தான்செய்த குற்றத்தை க்ஷமித்தருளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அவனை அனுக்ரஹித்த இடம் இதுதான். இந்த தர்ப்பசயநத்தைத்தான் திருப்புல்லாணிஎன்று சொல்வார்கள். இந்தக்ஷேத்ரத்துக்கு புல்லாரண்யக்ஷேத்ரம் என்று பெயர். இங்கு ஹேமதீர்த்தம்என்றும் சக்ரதீர்த்தமென்றும் இரண்டு தீர்த்தங்கள் இருக்கின்றன. சக்ரதீர்த்தத்தின்மஹிமை எற்கனவே சொல்லியிருக்கிறோம். ஸ்தல விருக்ஷம் அச்வத்தம். ஸ்வாமிபெயர் ஜகன்னாதன். கிழக்கே திருமுக மண்டலம். நாச்சியார்பெயர் கல்யாணவல்லி. ராமேசுவரயாத்திரை செய்பவர்கள் இங்குவந்து தர்சனம்செய்துகொண்டுதான் ராமேசுவரம் செல்லவேண்டும்.

———

ஆழ்வாராதிகள் பாடிய பாடல்கள்.

திருமங்கையாழ்வார் பாடியது:—பெரிய திருமொழி.

கலிநிலைத்துறை. (சங்கராபரணராகம் - ரூபகதாளம்.)

¶ தன்னைநைவிக்கிலேன் வல்வினையேன்தொழுதும்எழு
பொன்னைநைவிக்கும்அப்பூஞ்செருந்தி மணநீழல்வாய்
என்னைநைவித்து எழில்கொண்டகன்றபெருமானிடம்
புன்னைமுத்தம்பொழில்சூழ்ந்து அழகாயபுல்லாணியே. 1

உருகிநெஞ்சே! நினைந்து இங்குஇருந்தென் ? தொழுதும்எழு
முருகுவண்டுண்மலர்க்கைதையின் நீழலின்முன்னொருநாள்
பெருகுகாதன்மை என்னுள்ளமெய்தப்பிரிந்தானிடம்
பொருதுமுந்நீர்க்கரைக்கே மணியுந்துபுல்லாணியே. 2

ஏதுசெய்தால்மறக்கேன் ? மனமே! தொழுதும் எழு
தாதுமல்குதடம்சூழ்பொழில் தாழ்வர்தொடர்ந்து * பின்
பேதைநின்னைப்பிரியேன் இனிஎன்றுஅகன்றானிடம்
போதுநாளும்கமழும் பொழில்சூழ்ந்தபுல்லாணியே. 3

கொங்குண்வண்டேகரியாகவந்தான் கொடியேற்கு * முன்
நங்களீசன் நமக்கேபணித்தமொழிசெய்திலன்
மங்கைநல்லாய்! தொழுதும்எழுபோய்அவன்மன்னுமூர்
பொங்குமுந்நீர்க்கரைக்கே மணியுந்துபுல்லாணியே 4

உணரில்உள்ளம்சுடுமால் வினையேன்தொழுதும்எழு
துணரிஞாழல்நறும்போது நம்சூழ்குழல்பெய்து * பின்
தணரில்ஆவிதளருமென அன்புதந்தானிடம்
புணரியோதம்பணிலம் மணியுந்துபுல்லாணியே. 5

எள்கிநெஞ்சே! நினைந்திங்கிருந்தென் ? தொழுதும்எழு
வள்ளல்மாயன்மணிவண்ணன்எம்மான் மருவுமிடம்
கள்ளவிழும்மலர்க்காவியும் தூமடல்கைதையும்
புள்ளும்அள்ளற்பழனங்களும்சூழ்ந்த புல்லாணியே. 6

பரவிநெஞ்சே! தொழுதும்எழு போய்அவன்பாலமாய்
இரவும்நாளும் இனிக்கண்துயிலாதிருந்துஎன்பயன் ?
விரவிமுத்தம் நெடுவெண்மணல்மேற்கொண்டு * வெண்திரை
புரவியென்னப்புதம்செய்து வந்துந்துபுல்லாணியே. 7

அலமும்ஆழிப்படையும் உடையார்நமக்குஅன்பராய்
சலமதாகித்தகவொன்றிலர் நாம்தொழுதும்எழு
உலவுகால்நற்கருயோங்கு தண்பைம்பொழிலூடு * இசை
புலவுகானல் களிவண்டினம்பாடுபுல்லாணியே 8

ஓதிநாமங்குளித்துஉச்சிதன்னால் ஒளிமாமலர்
பாதம்நாளும்பணிவோம் நமக்கேநலமாதலின்
ஆதுதாரானெனிலும்தரும் அன்றியும்அன்பராய்
போதும்மாதே! தொழுதும் அவன்மன்னுபுல்லாணியே. 9

¶ இலங்குமுத்தும்பவளக்கொழுந்தும் எழில்தாமரை
புலங்கள்முற்றும்பொழில்சூழ்ந்து அழகாயபுல்லாணிமேல்
கலங்கலில்லாப்புகழான் கலியனொலி மாலை
வலங்கொள்தொண்டர்க்குஇடமாவது பாடில்வைகுந்தமே. 10

திருமங்கையாழ்வார் பாடியது:—பெரிய திருமொழி.

தரவு கொச்சகக்கலிப்பா (காம்போதிராகம் அடாதாளம்.)

¶ காவார்மடல்பெண்ணை அன்றிலரிகுரலும்
ஏவாயினூடியங்கும் எஃகின்கொடிதாலோ!
பூவார்மணம்கமழும் புல்லாணிகைதொழுதேன்
பாவாய்! இதுநமக்கு ஓர்பான்மையேயாகாதே. 1

முன்னம்குறளுருவாய் மூவடிமண்கொண்டளந்த
மன்னன்சரிதைக்கே மாலாகிப்பொன்பயந்தேன்
பொன்னங்கழிக்கானல் புள்ளினங்காள்! புல்லாணி
அன்னமாய் நூல்பயந்தாற்கு ஆங்கு இதனைச்செப்புமினே. 2

வவ்வித்துழாயதன்மேல் சென்றதனிநெஞ்சம்
செவ்வியறியாது நிற்குங்கொல்? நித்திலங்கள்
பவ்வத்திரையுலவு புல்லாணிகைதொழுதேன்
தெய்வச்சிலையார்க்கு என்சிந்தைநோய்செப்புமினே. 3

பரிய இரணியனது ஆகம் அணியுகிரால்
அரியுருவாய்க்கீண்டான் அருள்தந்தவா! நமக்கு
பொருதிரைகள்போந்துலவு புல்லாணிகைதொழுதேன்
அரிமலர்க்கண்நீர்ததும்ப அந்துகிலும்நில்லாவே. 4

வில்லால் இலங்கைமலங்கச் சரம்துரந்த
வல்லாளன்பின்போன நெஞ்சம்வருமளவும்
எல்லாருமஎன்தன்னை ஏசிலும்பேசிடினும்
புல்லாணியெம்பெருமான் பொய்கேட்டிருந்தேனே. 5

சுழன்றிலங்குவெங்கதிரோன் தேரோடும்போய்மறைந்தான்
அழன்றுகொடிதாகி அஞ்சுடரில்தானடுமால்
செழுந்தடம்பூஞ்சோலைசூழ் புல்லாணிகைதொழுதேன்
இழந்திருந்தேன் என்தன் எழில்நிறமும்சங்குமே. 6

கனையாரிடிகுரலின் கார்மணியின் நாவாடல்
தினையேனும்நில்லாது தீயிற்கொடிதாலோ
புனையார்மணிமாடப் புல்லாணிகைதொழுதேன்
வினையேன்மேல்வேலையும்வெந்தழலேவீசுமே. 7

தாம்புடைக்கைவேழம் வெருவமருப்பொசித்த
பாம்பினணையான் அருள்தந்தவா! நமக்கு
பூஞ்செருந்திபொன்சொரியும் புல்லாணிகைதொழுதேன்
தேம்பலிளம்பிறையும் என்தனக்கோர்வெந்தழலே 8

வேதமும் வேள்வியும் விண்ணும்இருசுடரும்
ஆதியுமானான் அருள்தந்தவா ! நமக்கு
போதலரும்புன்னைசூழ் புல்லாணிகைதொழுதேன்
ஓதமும்நானும் உறங்காதிருந்தேனே. 9

¶ பொன்னலரும் புன்னைசூழ் புல்லாணியம்மானை
மின்னிடையார்வேட்கைநோய்கூர இருந்ததனை
கன்னவிலும் திண்தோள் கலியனொலிவல்லார்
மன்னவராய்மண்ணாண்டு † வானாடுமுன்னுவரே. 10

திருவாசகப்பாடல்கள்.

மாணிக்கவாசகஸ்வாமிகள் உத்தரகோசமங்கையிலருளிச் செய்தது.
கட்டளைக்கலித்துறை.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்றோ
லுடையவ னேமன்னு முத்தரகோசமங்கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரானென்னைத் தாங்கிக்கொள்ளே. 1

கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண் டாய்நின் விழுத்தொழும்பி
னுள்ளேன் புறமல்லே னுத்தரகோசமங் கைக்கரசே
கள்ளே னொழியவுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே. 2

காருறு கண்ணிய ரைம்புல னாற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவா
ரூருறைவாய்மன்னு முத்தரகோசமங்கைக்கரசே
வாருறு பூண்முலையாள் பங்கவென்னை வளர்ப்பவனே. 3

வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவு நீங்கி யிப்பால்
மிளிர்கின்ற வென்னை விடுதிகண் டாய் வெண்மதிக் கொழுந்தொன்
றொளிர்கின்ற நீண்முடி யுத்தரகோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின்னும்மன்ன தோற்றச் செழுஞ்சுடரே. 4

செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதிகண் டாய் வெறிவாயறுகா
லுழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே. 5

மறுத்தனன் யானுன் னருளறி யாமையி லென்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினையின்றொகுதி

பொறுத்தெனை யாண்டுகொ ளுத்தர கோசமங் கைக்கரசே
பொறுப்பான் றேபெரியோர் சிறுநாய்கடம் பொய்யினையே. 6

பொய்யவ னேனைப் பொருளென வாண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண் டாய்விடமுண்மிடற்று
மையவ னேமன்னு முத்தரகோசமங் கைக்கரசே
செய்யவனேசிவ னேசிறியேன் பவந் தீர்ப்பவனே. 7

தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரு ளென்கொளென்று
வேர்க்கின்ற வென்னை விடுதிகண்டாய் விரவார்வெருவ
வார்க்கின்ற தார்விடை யுத்தரகோசமங்கைக் கரசே
யீர்க்கின்ற வஞ்சொடச் சம்வினையேனை யிருதலையே. 8

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல னேந்திப் பொலிபவனே. 9

பொலிகின்ற நின்றாள் புகுதப்பெற் றாக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற வென்னை விடுதி கண்டாயளி தேர்விளரி
யொலிநின்ற பூம்பொழி லுத்தரகோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலையா லெரித்தாய்புர மாறுபட்டே. 10

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்பயானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
யூறுபட் டேமன்னு முத்தரகோச மங்கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன் மேனிநெடுந் தகையே. 11

நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யானைம்புலன்கள் கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண்டாய் விரவார்வெருவ
வடுந்தகை வேல்வல்ல வுத்தரகோசமங் கைக்கரசே
கடுந்தகை யேனுண் ணுந்தெண்ணீ ரமுதப் பெருங் கடலே. 12

கடலினு ளாய்நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய்விட லில்லடியா
ருடலில மேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேயமுதேயென்மது வெள்ளமே. 13

வெள்ளத்து ளாவற்றி யாங்குன் னருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண் டாய்விரும் பும்மடியா
ருள்ளத்துள் ளாய்மன்னு முத்தரகோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய் களியாத களியெனக்கே. 14

களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் கலந்தருளா
வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்மெய்ச்சுடருக்கெல்லா
மொளிவந்த பூங்கழ லுத்தரகோசமங் கைக்கரசே
யெளிவந்த வெந்தைபி ரானென்னையா ளுடையென் னப்பனே. 15

என்னையப் பாவஞ்சலென்பவ ரின்றிநின்றெய்த் தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண்டா யுவமிக்கின் மெய்யே
யுன்னையொப் பாய்மன்னுமுத் தரகோசமங் கைக்கரசே
யன்னையொப் பாயெனக்கத்தனொப் பாயென் னரும்பொருளே. 16

பொருளே தமியேன் புகலிட மேநின் புகழிகழ்வார்
வெருளே யெனைவிட் டிடுதிகண் டாய்மெய்ம்மை யார்விழுங்கு,
மருளே யணிபொழி லுத்தர கோசமங் கைக்கரசே
யிருளே வெளியே யிகபரமாகி யிருந்தவனே. 17

இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொளொற்றிவை யென்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண்டாய்மிக்க நஞ்சமுதா
வருந்தின னேமன்னு முத்தரகோசமங் கைக்கரசே
மருந்தின னேபிறவிப்பிணிப்பட்டு மடங்கினர்க்கே. 18

மடங்கவென் று வல்வினைக் காட்டைநின் மன்னருட் டீக்கொளுவும்
விடங்கவென் றன்னை விடுதிகண்டாயென் பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொளுத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக் கொம்பினையே. 19

கொம்பரில் லாக்கொடி போலல மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்ணுகில்லா
வும்பருள் ளாய்மன்னு முத்தரகோசமங் கைக்கரசே
யம்பரமேநில னேயனல் காலொடப் பானவனே 20

ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னாலலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலையும் மமுதத்தையுமொத்
தூனையு மென்பினை யும்முருக்காநின்ற வொண்மையனே. 21

ஒண்மைய னேதிரு நீற்றையுத் தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண்டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென் றுஞ் சேயாய்பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மையனே தொன்மையாண்மை யனேயலிப் பெற்றியனே. 22

பெற்றதுகொண்டு பிழையே பெருக்கிச் சுருக்கு மன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடிலோ கெடுவேன்

மற்றடி யேன்றன்னைத் தாங்குந ரில்லையென் வாழ்முதலே,
யுற்றடி யேன்மிகத் தேறிநின்றே னெனக் குள்ளவனே. 23

உள்ளனவேநிற்க வில்லன செய்யுமை யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண் டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலனின்கட் போதலொட்டா
மெள்ளன வேமொய்க்கு நெய்க்குடந்தன்னை யெறும்பெனவே 24

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க
வுறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பதமேயடி யார்பெயராத பெருமையனே. 25

பெருநீ றறச்சிறு மீன்றுவண்டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மையேனை விடுதிகண்டாய் வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுண் மலைச்சிறு தோணிவடிவின் வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடைவானக் கொழுமணியே. 26

கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச் சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண்டாய்மெய்ம் முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்கொண் டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண் டாய்நின் புலன்கழலே. 27

புலன்கடி கைப்பிக்க யானுந் திகைத்திங் கொர்பொய்ந் நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண்டாய்விண்ணு மண்ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்நஞ்சமுதுசெய் தாய்கரு ணாகரனே
துலங்கு கின்றேனடி யேனுடை யாயென் றொழுகுலமே. 28

குலங்களைந் தாய்களைந் தாயென்னைக் குற்றங் கொற்றச்சிலையாம்
விலங்கலெந் தாய்விட் டிடுதிகண் டாய்பொன்னின் மின்னுகொன்றை
யலங்கலந்தாமரை மேனியப் பாவொப்பி லாதவனே
மலங்களைந் தாற்சுழல் வன்றயி ரிற்பொரு மத்துறவே. 29

மத்துறு தண்டயி ரிற்புலன் றீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போதுமிலைந்து குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுட னாரச்செஞ் சாந்தணி சச்சையனே. 30

சச்சைய னேமிக்க தண்புனல் விண்கா னிலநெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளியாய் கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் படவரவக்
கச்சைய னேகடந் தாய்தடந்தாள வடற்கரியே. 31

அடற்கரிபோலைம் புலன்களுக் கஞ்சி யழிந்தவென்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண்டாய் விழுத்தொண்டர்க் கல்லாற்
றொடற்கரி யாய் சுடர் மாமணியேசுடு தீச்சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமுதாக்குங் கறைக்கண்டனே. 32

கண்டது செய்து கருணைமட் டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக்கூவித் தென்னைக்
கொண்டே னெந்தாய்களையாய் களையாய குதுகுதுப்பே. 33

குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்துநின் குறிப்பில
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரையார்ந் தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின் மனங்கனிவித்
தெதிர்வதெப்போது பயில்விக் கயிலைப் பரம்பரனே. 34

பரம்பர னேநின் பழவடி யாரொடு மென்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்மென் முயற்கறையி
னரும் பரனேர்வைத் தணிந்தாய் பிறவியை வாயரவம்
பொரும்பெரு மான்வினையேன்மன மஞ்சிப் பொதும்புறவே. 35

பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன் றீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்திற்றாம் பயின் றுமதந் முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை வானத்தடலரைசே. 36

அரைசே யறியாச் சிறியேன் பிழைக்கஞ்ச லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண் டாய்வெண்ண கைக்கருங்கட்
டிரைசேர் மடந்தைமணந்த திருப்பொற் பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை தான்வந் தடர்வனவே. 37

அடற்புல னானிற் பிரிந்தஞ்சி யஞ்சொனல் லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண்டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டரசே தொழும்பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்றனி நீக்குந் தனித்துணையே. 38

தனித்துணை நீநிற்க யான்றருக் கித்தலை யானடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ் முதலே யெனக்கெய்ப்பில் வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்றுய ராக்கையின் றிண்வலையே. 39

வலைத்தலை மானன்னநோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண் மதியினொற்றைக்

கலைத்தலையாய் கருணாகரனே கயிலாயமென்னு
மலைத்தலை வாமலை யாண்மணவாளவெண் வாழ் முதலே. 40

முதலைச்செவ் வாச்சியர் வேட்கைவெந்நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண் டாய்விடக்கூன் மிடைந்த
சிதலைச்செய்காயம் பொறேன் சிவனேமுறை யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங் காவென் சிவகதியே. 41

கதியடி யேற்குன் கழறந் தருளவு மூன் கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண் டலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்கவஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே. 42

மன்னவ னேயொன்று மாறறியாச்சிறியேன் மகிழ்ச்சி
மின்னவ னேவிட்டி டுதிகண் டாய்மிக்கவேத மெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி யாத்தொழும்பர்
முன்ன வனே பின்னுமானவனே யிம் முழுதையுமே. 43

முழுதயில் வேற்கண்ணியரென்னு மூரித் தழன்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின்வெறி மலர்த்தா
டொழுதுசெல் வானத் தொழும்பரிற் கூட்டிடு சொற்றெம் பிரான்
பழுதுசெய்வேனை விடே லுடையா யுன்னைப் பாடுவனே. 44

பாடிற்றி லேன்பணி யேன்மணி நீயொளித் தாய்க்குப் பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்டாய் வியந்தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத்தானெவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுருகேனின் றுழைத்தனனே. 45

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்தீயி னொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின்வேலை நஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலிமானிடன் றேய்மதியன்
பழைதரு மாபா னென்றென் றறைவன் பழிப்பினையே. 46

பழிப்பினின் பாதப் பழந்தொழும்பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதி கண்டாய் வெண்மணிப் பணிலங்
கொழித்துமந்தாரமந் தாகினிநுந் தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு தாரவனே 47

தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழலாப்பூண்
வீரவென் றன்னை விடுதிகண் டாய்விடி லென்னை மிக்கா
ராரடி யானென்னி னுத்தர கோசமங்கைக் கரசின்
சீரடி யாரடி யானென்று நின்னைச்சிரிப்பிப்பனே. 48

சிரிப்பிப்பன் சீறும்பிழைப்பைத் தொழும்பையு மீசற் கென்று
விரிப்பிப்பனென்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியி
னுரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ் சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சனென்னையு மாளுடைப் பிச்சனென் றேசுவனே 49

ஏசினும் யானுன்னை யேத்தினு மென்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம்பவள வெற்பிற்
றேசுடையா யென்னை யாளுடையாய் சிற்றுயிர்க் கிறங்கிக்
காய்சினவாலமுண் டாயமுதுண்ணக் கடையவனே. 50

ஓர் குறிப்பு.

இந்த ஸஞ்சிகையில் விஸ்தரித்துச் சொல்லியிருக்கிறபடி ஸ்ரீராமரால் ராமேசுவரத்தில் பிரதிஷ்டைசெய்து பூஜிக்கப்பட்ட லிங்கத்தை தன் வால்வலிமையால் பெயர்க்க முயன்ற அபசாரத்தினால் தனக்குஏற்பட்ட பாபத்தைப் போக்கிக்கொள்ள கருதி ஹனுமாரானவர் வைத்தீச்வரன் கோயிலுக்கு மேற்கில் 6 மைல்தூரத்திலுள்ள தலைஞாயர், கருப்பறியலூர், மேலக்காழி, ஆதித்யபுரம், யூதிகாவனம் எனப்பல பெயருள்ள கன்மகாசபுரத்தை அணுகி அங்குள்ள மூலலிங்கத்தைப் பூஜித்து அக்கோயிலின் ஈசானபாகத்தில் தான் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்தனரென்றும் இக்காரணம்பற்றி இக்கோயிலுக்கு "குருக்குக்கா" எனப் பெயர்வந்ததென்றும் மேற்படி கருப்பறியலூர் ஸ்தலபுராணததால் வெளிவருகிறது. அந்தஸ்தலத்தைப்பற்றி செல்லும்பொழுது இவ்விஷயத்தை விஸ்தரிப்போம்.

தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.



8

திருக்கழுக்குன்றம்.

மஹாபலிபுரம்.


தமிழ் புத்தகங்கள்.


	ரூ.	அ.	ப.
தேன் இந்தியா க்ஷேத்திரங்கள்:			
1. ஸ்ரீரங்கம் ...	0	10	0
2. சிதம்பரம் ...	1	0	0
3. திருவானைக்காவல், திருச்சினுப்பள்ளி, உய்யக்கொண்டான் திருமலை	0	10	0
4. கரூர், நெரூர், கங்கைகொண்ட சோழபுரம், அன்பில் ...	0	10	0
5 & 6. மதுரை ...	1	8	0
7. ராமேசுவரம், உத்தரகோசமங்			
8. திருக்கழுக்குன்றம், மஹாபலிபுரம் ...	0	12	0
கை, திருப்புல்லாணி ...	0	10	0
திருவானைக்காபுராணம் ...	2	0	0
கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் ...	1	8	0
ஸ்ரீ சங்கரபகவத்பாதர் சரித்திரம் ...	1	0	0
ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்தசிவாபிநவநரஸிம்ஹபாரதீஸ்வாமிகள் திவ்யசரித்திரம் ...	3	0	0
ஸ்ரீமத்பகவத்கீதாரஹஸ்யம் பாலகங்காதரதிலகர் இயற்றியது முதற்பாகம் ...	1	4	0
பகவத்கீதை வெண்பா ஷட்கம்–1 ...	0	6	0
ஷட்கம்–2 ...	0	6	0
ஷட்கம்–3 ...	0	6	0
தேவீ கீர்த்தனைகள் 1-ம் பாகம் ...	0	3	0
ஷை 2-ம் பாகம் ...	0	2	0
ஸத்குருஸ்துதி ...	0	2	0
ஹரிஸ்துதி ...	0	2	0
ஸுப்ரமண்யஸ்வாமி ஸ்தோத்ரங்கள்	0	5	0
முருகன் கீர்த்தனைகள் ...	0	2	0
சிருங்கேரி ஸ்வாமிகள் கொடுமுடியில் செய்த உபன்யாஸம் ...	0	2	0
ஷை திருவநந்தபுரத்தில் செய்த உபந்யாஸம் மூன்று பாகங்கள் ...	0	8	0
ஸ்ரீராமாயண ஸாரஸங்கிரகம். ...	0	2	0
சுண்ணும்பு, சாந்து, சிமெண்டு, காங்கிரீட் தளவரிசை இவைகளைப்பற்றிய நூல் ...	0	4	0
சித்ததரன் ...	0	2	0
காங்கிரஸ் மஹாஸபை ...	0	4	0
தேவபோகம் ...	1	0	0
நாற்பது லக்ஷம் ரூபாய் ...	0	3	0
தாதாவின் தந்திரம் ...	0	2	0
ஓர் இரவின் ஸம்பவங்கள் ...	0	6	0
ஹேமந்தகுமாரி ..	0	2	0
ஹென்றி பெஸ்டலேஷி ...	0	2	0
ஹிரண்மயி ...	0	2	0
கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறைநூல்	1	0	0
இந்தியாவும் சுய ஆட்சியும் ...	[illegible]	8	0
இந்திரா ...	0	2	0

	ரூ.	அ.	ப.
கொடியாலம் வாசுதேவ அய்யங்கார்	0	2	0
காவடிச்சிந்து ...	0	2	0
லஜ்ஜாவதி ..	0	2	0
மாலதீ ...	0	3	0
பெருமுடிச்சோழன் ...	0	6	0
ஸதாசிவேந்திர ஸரஸ்வதி ...	0	2	0
அன்பின் வலிமை ...	0	10	0
பிருதுலை ...	0	8	0
இராதாராணி ...	0	2	0
ஸத்குரு கீதை ...	0	8	0
வீரமாதேவன் ...	0	4	0
வித்யாரண்ய நகரம் ...	0	8	0
வியாபாரநீதி ...	0	8	0
ஸ்ரீ வாணீ விலாஸினி தனிச்சஞ்சிகை	0	8	0
,, இரட்டைச் சஞ்சிகை 1க்கு	1	0	0
,, 6 நம்பர்கள் அடங்கிய பயிண்டு செய்த வால்யம் ஒன்றுக்கு ...	3	4	0
குணசீல ஸ்தலபுராணம் ...	0	8	0
ஹனுமான்சிங் ...	0	12	0
சர்கா ...	0	8	0
சுந்தரி ...	1	0	0
திருமுருகாற்றுப்படை ...	0	12	0
பத்மினி ...	0	3	0
ரகுநாதன் ...	0	12	0
குணசீலதிருத்தேர் திருப்பணி அகவல் ...	0	2	0
விவேகசந்திரிகை ...	0	8	0
வஸந்தஸமுத்ரம் ...	0	12	0
ஜினேந்திரன் ...	1	8	0
பொன்னுசாமித் தேவர் கொலை ...	0	14	0
ஸ்ரீ வாமன சரித்திரம் ...	0	2	0
மூன்று வைரங்கள் ...	0	6	0
தாக்ஷாயிணி ...	0	6	0
கலாசுந்தரி ...	0	12	0
மதுசூதனன் ..	0	8	0
சிவகுமாரன் ...	1	0	0
நற்குலதெய்வம் ...	0	8	0
மதனமனோஹரி ...	0	8	0
நவநீதரம்பை ...	1	0	0
கோமளவல்லி ...	0	8	0
காமேந்திரன் ஞானலோசனி ...	1	0	0
கஜபதி ...	3	10	0
துயராழன்கதை ...	0	12	0
பூர்ன வல்லிகதை ...	0	6	0
கோமளம் காஞ்சியாத்திரை ...	0	8	0
சாரசநேத்ரி ...	0	12	0
காட்ரோஜன் ...	0	3	0
திலோத்தமா ...	0	8	0
மாதவி ...	0	10	0



வீரபத்திரஸ்வாமி, திருக்கழுக்குன்றம்.






திருக்கழுக்குன்றம் மலையும் கிராமமும். ஸர் சார்ல்ஸ் டாட்ஹண்டரால் பிரியத்துடன் கொடுக்கப்பட்ட பழயகாலைய சித்திரத்திலிருந்து எடுத்தபடம்.

திருக்கழுக்குன்றம்.

இப் புண்ணிய க்ஷேத்திரம் 'பக்ஷிதீர்த்தம்' என்ற பெயரும் வாய்ந்துளது. இது செங்கல்பட்டுக்குத் தென்கிழக்கில் ஒன்பது மைல் தூரத்திலும் ஸமுத்திரக்கரை யோரமாயுள்ள 'மாமல்லபுரம்' என்றும் 'மஹாபலிபுரம்' என்றும் சொல்லப்படும் இடத்திற்கு பதது மைல் மேற்கேயும் உள்ளது. ஸ்காந்த புராணததில் இநத க்ஷேத்ரமானது மஹோததி (வங்காளக்குடாக்கடல்) க்கு ஒரு யோஜனை தூரம் (10 மைல்) மேற்கேயுளதென்றும் க்ஷீரநதி (பாலார்) க்கு அரை யோஜனை தூரம் வடக்கே உளதென்றும், இது ஐந்து சதுரயோஜனை விஸ்தீர்ணமென்றும், இதன் நடுவில்தான் வேதகிரீசுவரர் மலையிருக்கிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இம்மலையானது ஈசுவரனால் தக்ஷிணதிக்குக்கு அனுப்பப்பட்ட கைலாஸ பர்வதத்தின் மூன்று சிகரங்களுள் ஒன்ருதலால் இதற்கு "தக்ஷிண கைலாஸம்" என்று பெயர்.


இது தென் இந்தியாவில் முக்கியமான குன்று. இம்மாதிரிதான் ஸ்ரீகாளஹஸ்தி, ஸ்ரீ சைலம் இவ்விரண்டிடங்களும்.



காமதேனுவாஹன உத்ஸவம்.

இந்த ஸ்தலத்திற்குத் திருக்கழுக்குன்ற மென்ற பெயர் வந்ததற்குக் காரணம் இரண்டு கழுகுகள் இங்குள்ள கடவுளைப் பூஜித்துவருவதாக ஏற்பட்டுள்ள ஐதிஹ்யமே. இவ்விரண்டு கழுகுகளும் வெளுப்பாகவும் மூக்கில் சற்று மஞ்சள் நிறமுடையவைகளாக


வும் காணப்படுகின்றன. இவைகளின் யௌவனவனப்பும் கம்பீரத் தோற்றமும், அமைதியும் இவைகளை இவைகளின் இனத்திலிருந்தும் எளிதில் பிரித்துக் காண்பிக்கின்றன.



அதிகார நந்திவாஹன உத்ஸவம்.

இப்பறவைகள் இப்பொழுதும் மத்தியானம் பன்னிரண்டு மணி சுமாருக்கு இக்குன்றின்மேலுள்ள கோயிலுக்கு வந்து அங்குள்ள பண்டாரம் அளிக்கும் உணவை உண்டு கர்ப்பகிருஹத்தை வலம்வந்து செல்லுகின்றன. வழியில் இவைகள் திருக்கழுக்குன்றைப் போன்ற மஹாதேவமலையென்ற இன்னொரு குன்றில் தங்கிப் போவதாகக் கூறுகின்றனர்.


இந்த மஹாதேவமலை வட ஆற்காடு ஜில்லாவில் குடியாத்தம் என்னும் ஊருக்கு எட்டு மைல் தூரத்தில் இருக்கிறது.



நந்தி தீர்த்தக்குளமும் கிழக்கு கோபுரவாசலும்.

சிலவருஷங்களுக்கு முன் இப்பறவைகள் ஸம்பந்தமாய் ஒரு அத்புத ஸம்பவம் ஏற்பட்டது. அதாவது: 1921ஹு ஜுன்மீ 17வ காலமே ஸுமார் 9மணிக்கு இரண்டு வெள்ளை கழுகுகள் மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோயிலிலுள்ள பொத்தாமரை குளத்தில் ஸ்நானம் செய்துவிட்டு அதன் படியில் இரண்டுமணி ஸாவகாசம் தங்கியிருந்தன. 10½ மணி ஸுமாருக்கு அவைகளை போடோ பிடித்தார்கள். பிறகு அவைகள் பொத்தாம ரையை பிரதக்ஷிணமாகப் பறந்து சென்று விபூதிப் பிள்ளையார் கோயிலுக்கு ஸமீபமா


யுள்ள மண்டபத்தில் சற்று தங்கிவிட்டுப் போய்விட்டன. உடனே மதுரை தேவஸ்தானத்து அதிகாரிகள் அந்தக் கழுகுகள் வழக்கமாய் திருக்கழுக்குன்றத்திற்கு வருகிற கழு



அம்மன் கோயிலும் மலையின் காக்ஷியும்

குகள் என்று அங்குள்ளவர்கள் சொன்னதால் அவைகளின் போடோவை திருக்கழுக்குன்றம் தேவஸ்தான அதிகாரிகளுக்கு அனுப்பி அவைகள் அங்கு வழக்கமாய் வருகிற கழுகுகள் தானுவென்றும் அந்த ஜூன்மீ 17உ யன்று மத்தியானம் வழக்கம்போல் அவை திருக்கழுக்குன்றத்திற்கு வந்தனவாவென்றும் எழுதிக் கேட்டார்கள். அந்தப் படத்தைப் பார்த்ததுமே திருக்கழுக்குன்றம் தேவஸ்தான அதிகாரிகள் அப்பறவைகள் அக்கோயிலுக்கு வழக்கமாய் தினம் வருகின்றவைகள் தாமென்றும், அங்குள்ளவர்கள் எல்லோரும்

அப்படத்தை எளிதில் அடையாளம் கண்டுபிடித்து விட்டார்களென்றும், அந்த 17வ யன்றும் அவைகள் மத்தியானம் அங்கு வந்திருந்தனவென்றும் தெரிவித்தார்கள்.



கோயிலுக்குள்ளிருக்கும் விநாயகாலயத்தின் விமானம்.

கிருத, த்ரேதா, த்வாபர, கலி ஆகிய நான்கு யுகங்களிலும் நான்கு ஜோடி கழுகுகள் இத்திருக்கழுக்குன்றத்திலுள்ள ஈசுவரனைப் பூஜைசெய்து முக்தியடைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

கிருத யுகத்தில் சால்மலி யென்னும் தேசத்தில் வசித்த விருத்தசிரவணாஸ் என்னும் மஹாப்பிராமணனுடைய தபோ மஹிமையால் சண்டன் பிரசண்டன் என்று இரண்டு கழுகுகள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. அவைகளுக்குப் பக்ஷிக்கூட்டத்தின் தலைமையை கொ


டுப்பதாக அப்பிராமணன் சொல்லியும் அதை அவைகள் லக்ஷயம் செய்யாமல் இந்த க்ஷேத்ரத்துக்கு வந்து ஈசுவரனைப் பூஜைசெய்து வந்தன. அவைகளின் பக்திக்கு ஈடு பட்டு ஈசுவரனும் அவைகளை தமது கணங்களுள் பிரமுகர்களாகச் செய்துகொண்டார்.



வேதகிரிக்கு ஸமீபத்திலுள்ள காக்கைக்குன்று.

அடுத்த யுகமான த்ரேதாயுகத்தில் ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஜடாயு ஸம்பாதி என்னும் இரண்டு கழுகுகளும் இங்கு பூஜை செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு கழுகுகளும் எது வேகமாகப் பறக்கிறது என்று போட்டிபோட்டுக் கொண்டு ஸூர்யனை நோக்கி அதிவேகமாய்ப் பறந்து செல்லும்பொழுது ஹம்ஸமஹரிஷியானவர் இவைகளின் வேகத்தைப்பார்த்து ஸூர்யபகவானுக்கு எங்கு ஏதாவது அபா


யம் நேர்ந்துவிடுமோ வென்று பயந்து ஸம்பாதியின் இறகுகள் எறிந்து மலயபர்வதத்தில் விழும்படியாகவும் ஜடாயுவை விந்திய பர்வதத்தில் விழும்படியாகவும் சபித்தார். இச் சாபத்திலிருந்தும் விமோசனத்தைத் தேடிக்கொண்டு இவ்விரண்டு கழுகுகளும் இந்த



திருக்கழுக்குன்றம் மலைமேலுள்ள கோயில்.

க்ஷேத்ரத்தையடைந்து மார்க்கண்டேய மஹரிஷியின் வார்த்தைக்கிணங்கி இங்குள்ள ஈசுவரனைப் பூஜித்தன. ஈசுவரனும் அவைகளுக்கு முன் பிரஸன்னராகி ஸ்ரீராமாவதாரத்தின் பொழுது அவைகளுக்கு சாபவிமோசனம் ஏற்படுமென்று அனுக்ரஹித்து மறைந்தார்.


பிறகு துவாபரயுகத்தில் சம்புகுப்தன் மஹாகுப்தன் என்னும் இரண்டு ஸகோதரர்கள் இந்த க்ஷேத்ரத்தில் தபஸ் செய்தார்கள். அவர்களுள் ஒருவன் சிறந்த சிவபக்தனாகவும் மற்றொருவன் தேவீபக்தனாகவும் இருந்தார்கள். இவர்களுள் எந்த தெய்வம் உயர்ந்தது



கோயிலுக்குள்ளிருக்கும் நந்தி தீர்த்தக்குளமும் மலைக்கோயிலும்.

என்று விவாதம் ஏற்பட்டுவிட்டது. கடைசியில் ஈசுவரனையே இவ்விவாதத்தைத் தீர்க்க வேணுமாய்க் கேட்டுக்கொண்டார்கள். அவர் தாமும் சக்தியும் ஒன்றேதானென்றும் பேதமில்லை யென்றும் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அதனால் ஈசுவரன் அவர்களை கழு


காகப் போகும்படி சபித்தார். கழுகு சரீரத்தோடேயே வெகுகாலம் ஈசுவரனைப் பூஜித்துவிட்டுக் கடைசியாக இங்குள்ள இந்திர தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து நிஜரூபத்தை யடைந்தார்கள்.



கோயிலுக்குள்ளிருக்கும் ஊஞ்சல்மண்டபம்.

இக்கலியுகத்திலோ வெனின் இரண்டு சகோதரர்களான மஹர்ஷிகள் பூஷா என்றும் விதாதா என்றும் பெயருள்ளவர்கள் ஸம்ஸாரத்தில் வைராக்யமடைந்து காட்டுக்குச் சென்று அங்கு மோக்ஷத்தையடைய விரும்பி தபஸ்செய்தார்கள். அவர்களுக்கு ஈசுவரன் பிரத்யக்ஷமானதும் உடனே தங்களுக்கு மோக்ஷமளிக்கும்படி மன்றாடினார்கள்.


அவர்கள் முக்தியடைய இன்னும் பக்குவமாகவில்லையென்றும் இன்னுமொரு ஜன்மம் எடுத்தாக வேண்டுமென்றும ஈசுவரன் சொன்னார். ஆனால் அவர்கள் அவ்வார்த்தையைக் கேளாமல் அதில் அதிருப்திகொண்டவர்களாய் ஈசுவரனை நிர்ப்பந்தித்தார்கள். ஈசுவர



பிரம்மோத்ஸவம் மூன்றாவது திருநாள்.

னும் அவர்களை தக்ஷணமே கழுகுஜன்மமடையும்படிக்கும் பரதகண்டத்திலுள்ள புண்ய க்ஷேத்ரங்களில் ஸஞ்சாரம் செய்யும்படிக்கும் ஆக்ஞாபித்துச் சென்றுவிட்டார். அம்மஹரிஷிகள்தான் இப்பொழுது கழுகுரூபமாய் திருக்கழுக்குன்றத்துக்கு பிரதிதினமும் வருகிறார்கள்.

இவ்விரண்டு கழுகுகளும் சிவாபராததத்தால் சபிக்கப்பட்டுக் கழுகு உருவம்பெற்ற இரண்டு ரிஷிகள் எனப்புராணக்கதை கூறுகின்றது. இக் கலியுக முடிவில் அவைகள் திரும்பவும் முந்திய உருவம் பெற்று முக்தி பெறுமாம்.



கதலி வாஹனம்.

இத்திருக்கழுக்குன்றத்துக்கு 'வேதகிரி' என்ற இன்னொரு பெயரும் உண்டு. நான்கு வேதங்களும் நான்கு குன்றுகளாக ஏற்பட்டு அவைகளின் மீதுள்ள கோயிலில் சிவபிரான் கோயில்கொண்டிருப்பதாக ஒரு ஐதிஹ்யம் ஏற்பட்டுள்ளது.

ஒருக்கால் தேவேந்திரன் கடவுளை இங்கு பூஜித்ததாகவும், அதுமுதல் பன்னிரண்டு வருஷத்திற் கொருமுறை இங்கு வந்து அப்பூஜையை இடிரூபமாக நடத்தி வருவதாகக் கூறுகின்றனர்.


இப் புண்ணியகிரி சுமார் 500 அடி உயரமுள்ளது. இந்த கிரியைப் பிரதக்ஷிணம் வந்தால் வியாதிகள் நீங்கி தேஹ ஆரோக்கியம் ஏற்படுவதுடன் புண்ணியமும் உண்டெனக் கூறுவர்.



கோயிலுக்குள்ளிருக்கும் ஸந்நிதிகளும் மலைக்கோயிலும்.

ருத்திரகோடி க்ஷேத்திரம்.

ருத்திர கணங்கள் அசுரர்களை ஒருக்கால் கொல்ல நேர்ந்த பாவத்தைப் போக்கடித்ததிலிருந்து இவ்விடத்திற்கு "ருத்திரகோடி" யென்ற இன்னொரு பெயரும் இடப்பட்டதாம். இது ஸம்பந்தமாய் ஏற்பட்ட கோயில் சங்க தீர்த்தத்தின் ஸமீபத்தில் அதன் தென் கிழக்கில் இருந்து வருகிறது.



ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமி வள்ளிதேவஸேனையுடன்.


ஆதிநாராயணபுரம்

தவிரவும் இதற்கு "ஆதிநாராயணபுரம்" என்ற புராணப் பெயரும் உண்டு. ஒரு தடவை ஸ்ரீமந் நாராயணமூர்த்தி இங்கு தபசு செய்திருந்த காரணங் கொண்டு அப்பெயரை இட்டனராம்.

பக்ஷி தீர்த்தம்.

இந்த மலையிலுள்ள கோயிலுக்கு எழுபதடிக்குக் கீழ் நாற்பதடி நீளம் இருபதடி அகலம் நாற்பதடி ஆழமுள்ள ஓர் பிளப்பு அல்லது இடைவெளி ஒரு பாறையில் இருக்கிறது. இதில் வருஷம் முழுவதும் தண்ணீர் இருந்துகொண்டேயிருக்கும். இந்த தீர்த்தத்திற்குத் தான் "பக்ஷி தீர்த்தம்" என்ற பெயர் இடப்பட்டிருக்கிறது. இப்பெயரினால் தான் இம் மலைக்கும், ஊருக்கும்கூட "பக்ஷி தீர்த்தம்" என்ற காரணப்பெயர் வந்ததெனக் கூறலாம்.

இந்தத் தீர்த்தத்தைப் பக்ஷி தீர்த்தமெனக் கூறுவானேன் எனில், ஒருக்கால் கழுகுகள் அங்குள்ள ஓர் கல்லைத் தங்கள் மூக்கினால் கொத்த அவ்விடத்திலிருந்து ஜலம் கசிந்து வந்ததாம். அந்நீரை கங்கை நீரெனக் கூறுவார்கள். இந்த ஸம்பவத்தால் தான் இந்த தீர்த்தத்திற்குப் "பக்ஷி தீர்த்தம்" என்ற பெயர் வந்ததாம்.



சங்கதீர்த்தக்குளமும், காக்கைக்குன்றும்.

மாணிக்கவாசகர் இங்கு தான் ஈசன் அருளால் ஞானோதயம் பெற்றாரெனவும் சொல்லப்படுகின்றது.


சங்க தீர்த்தம்.

ஒருக்கால் மார்க்கண்டேயர் சிவனுக்கு இங்குள்ள குளத்தின்கரையில் அபிஷேகம் செய்து கொண்டிருக்கையில் சங்கம் வேண்டியிருந்ததால் அக்குளத்தில் தேடிப்பார்க்க அகப்படாததால் தனது தபோ மகிமையால் அதிலிருந்து ஒரு சங்கை உத்பத்தி செய்வித்து அதுமுதல் மேற்கூறிய ஸம்பவத்தின் அறிகுறியாகப் பன்னிரண்டு வருஷங்களுக்கொருதரம் அத் தீர்த்தத்தில் ஒரு சங்கம் உத்பத்தியாகும்படியும் அருளிச்சென்றனர். அவ்வாறே அங்கு அனேகம் சங்கங்கள் ஜனிக்க எடுக்கப்பட்டு சிதம்பரம், மதுரை முதலிய க்ஷேத்திரங்களுக்குக் கூட அனுப்பப்பட்டன.



சங்கதீர்த்தக்குளத்திலிருந்து எடுத்த சங்கு.

இப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து வியாதி நீங்கினவர்கள் பலருளர்.



ரிஷி கோபுரம் என்று சொல்லப்பட்ட இரண்டாவது கிழக்கு கோபுரம்.

கீழ்க் கோயில்

கோயிலுக்குள் தென் மேற்கில் வண்டுவனப்பிள்ளையார் ஸந்நிதி ஒன்றுண்டு. கதலிக் காட்டில் (வாழைத் தோட்டம்) ஓரிடத்தைத் தோண்டுகையில் அகப்பட்ட இந்த விநாயக விக்கிரஹத்தை அது அகப்பட்ட இடத்திலேயே ஸ்தாபித்ததிலிருந்து அவருக்கு அப் பெயர் இடப்பட்டதாம். இந்த ஸ்தலத்திற்கு ஏற்பட்ட விருக்ஷம் வாழை. பிரத்தியக்ஷ வேதகிரீசுவரர் கோயிலுக்குக் கிழக்கில் இருபக்கங்களிலும் அழகிய கால்களால் தாங்கப்பட்டுள்ள அழகியமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுளது. கல் தூண்களில் அழகிய குதிரை




ருத்ரன்கோயிலின் கிழக்குக் கோபுரம்.

கள் செதுக்கப்பட்டிருக்கக் காணலாம். இது தெற்கு நோக்கியிருப்பதுடன் அம்மன் திரிபுரசுந்தரி நவாத்திரி தினங்களில் இங்கு தான் அலங்காரம் செய்யப்படுவது. இந்த மண்டபத்தின் வடகோடிக் கருகில் ஓர் அறையில் நடராஜ விக்ரஹம் ஒன்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.

ஸூரகுரு விருத்தாந்தம்.

இந்தக் கோயிலை ஸ்தாபித்தவரது சரித்திரம் விசேஷ பெருமையுடையது. மூன்



திருக்கழுக்குன்றம் கிராமத்தின் காக்ஷி.


ளம்பன்றி ரூபமாக ஓர் அரக்கன் காட்டுப் பிராணிகளை ஹதம் செய்துகொண்டு திரிந்ததைக் கண்டு கோபமூண்ட மார்க்கண்டேயர் அவனை நித்திய முள்ளம்பன்றியாக விருக்கக் கடவதென்று சபிக்க அவன் பயந்து மன்றாடிப் பிரார்த்தத்தின் பேரில் அவர் மனமிரங்கி மஹாபலிபுர மன்னவன் சுரகுரு வெண்பவனால் கொல்லுண்டு முன் உருவத்தை யடைவாய் எனச் சாபவிமோசன மார்க்கம் ஏற்படுத்தினாராம்.

இந்த சுரகுரு என்பவன் சோழராஜாக்களது வம்சத்தைச் சேர்ந்தவன். உத்தம சோழ பரம்பரையிலுதித்தவன். இவனது ராஜதானி மஹாபலிபுரமாக விருந்தது. இதுகாறும் இது சரித்திர கர்த்தாக்களுக்குத் தெரியாமலிருந்திருக்கிறது. முதலாவது குலோத்துங்கன் (கி. பி. 1070-1118) காலத்தில் கலிங்க தேசத்தை ஜயித்த பெருமை கொண்டாட "துங்கலிங்கத்துப் பரணி"யில் அடியில் கண்ட விவரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது:—

"சுரகுருவின் தூதாகி யமன் பாற்செல்வோன் துணித்துவைத்த சிரமன்று நின்ற பேயைச் சிரமரிய அதற்குறவா யொளித்தும் போந்த சில பேயைத் திருவுள்ளத் தறிதியன்றே."

இந்த சுரகுரு மஹாபலிபுரத்தில் அரசாண்டு கொண்டிருக்கையில் திருக்கழுக்குன்றத்து ஜனங்கள் அவனிடம் சென்று காட்டு மிருகங்களால் தங்களுக்கு நேரிட்டு வரும் தீங்குகளை எடுத்துக் கூறி அவைகளை வேட்டையாடிக் கொல்லுமாறு வேண்டினர்.


தனது மந்திரி ஹிரண்யனுடனும் அனேகம் யானை, குதிரை, ஒட்டகம் முதலியவைகளுடனும் வேட்டையாடச்சென்று சுரகுரு மேற்கூறிய முள்ளம்பன்றியைக் கண்டு அதன்மீது அஸ்திரம் பிரயோகிக்க அது இறந்து மானிட ரூபத்தை அடைந்தது. இது கோயில் சுவரில் காட்டப்பட் டிருக்கிறது.



சங்கதீர்த்தக்குளமும், திருக்கழுக்குன்றம் மலையும்.

இந்த வேட்டையில் சுரகுரு தவறிப்போய் ஓர் பசுவைக் கொன்றுவிட கோஹத்தி தோஷம் இவரைப்பிடித்துக்கொண்டது. தனது முன்னோர் ஒருவர் திருவாரூரில் செய்ததுபோல தேர்க்காலில் விழுந்து இறக்கத் தீர்மானித்தபொழுது ஒருபசு அவர் முன் தோன்றிப் பிறகு ஓர் யுவதியாக மாறித் தான் திலோத்தமை என்ற தேவதாசி என்றும், இந்திரனது தூண்டுதலால் பசு உருவமெடுத்து நந்தி தீர்த்தத்தினருகில் தபசு செய்து கொண்டிருந்த நந்தியினது தவத்தைக் கெடுக்க முயன்றதால் சபிக்கப்பட்டு அன்று அவனது கிருபையால் முன் உருப் பெற்றதையும் கூறினள். அவள் மறைந்தபின்னர் வியாகுலத்துடன் கூடிய இவரும் தனது நாயும் மந்திரியும் இங்குள்ள "ஸம்பாதி தீர்த்தம்" என்ற புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ததால் குஷ்டரோகம் நீங்கியதைக் கண்டு அதிசயித்தார்.

பிறகு அரசனும் மந்திரியும் மஹாபலிபுரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கையில்




திருக்கழுக்குன்றம் மலைக்கோயில்.



மலையின் மேற்குப்பக்கத்திய காக்ஷி.

தங்களை எதிர்த்த கழுகுகளைத் தாங்கள் யாதும் செய்ய முடியாமல் போனதைக் கண்டு ஆராய்ச்சி செய்து பார்க்குங்கால் தனக்கு "கோஹத்தி" தோடனே யென வறிந்தார்.

பிறகு அப் பறவைகளால் போதிக்கப்பட்டு அவரும் அவரது மனைவி சுகுண வல்லியுமாக நந்தி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கரையேறுகையில் அவரிடமிருந்த பாபங்கள் ஒரு காக்கையாக மாறி வேதகிரீசுவரர் கோயிலுக்குத் தென் மேற்கில் மலை உருவமாக விழும்படி நேர்ந்ததாம். இதற்கு தற்காலம் "காக்கைக்குன்று" என்று பெயர். இதில் செடி, கொடி முதலியன முளைப்பதில்லை. இதனுல் பாபம் நீங்கிப் பரிசுத்



திருக்கழுக்குன்றம் மலைக்கோயில் மற்றொருகாக்ஷி.

தாகி அக் கோயிலைக்கட்டி முடித்து பிராமணர்களுக்கு மலையடிவாரத்தில் அக்கிரஹாரமும் கட்டிவைத்தனர். பிறகு இவர் வெகுகாலம் இந்த ஸ்தலத்திலே தங்கி காலமடைந்ததாகவும் அவரது ராணியும் உடன்கட்டை ஏறினதாகவும் தெரியவருகிறது. அப்படி அவர் அரண்மனை இருந்த இடம் தற்காலம் கொத்திமங்கலத்திற்கு சமீபத்திலிருந்திருக்கலாமென்று தோற்றுகிறது. "சாகுரு நாடகம்" என்னும் நாடகத்தில் இவ்வாசனால் இக்கோயில் கட்டப்பட்ட ஸம்பவங்கள் முழுதும் நடித்துக் காட்டப்பட்டிருக்கக் காணலாம்.



பன்றியின் சரீரத்திலிருந்து ஒரு அசுரனும், பசுவின் சரீரத்திலிருந்து ஒரு ஸ்திரீயும் வெளிவருதல்.



சாகுரு அரசன்.

சிலாசாஸனம்.

இந்த வேதகிரீசுவரர் கோயில் சுவர்கள் ஒன்றில் ராஜகேஸரிவர்மன் என்ற சோழராஜன், பல்லவ ராஜாக்கள் விட்டிருந்த மானிய சாஸனத்தைப் புதுப்பித்த விஷயம் வரையப்பட்டுள்ளது.

மேற்கூறிய சுவரில் இன்னொரு இடத்தில் ராஷ்டிரகூட அரசர்கள் ஒருவரது காலத்தில் இக்கோயிலில் ஓர் மண்டபம் அமைத்து அதில் நீர், நெருப்பு முதலியன கொண்டுவந்து கொடுக்கவும் சாத்தன் என்பவன் ஒருவனால் மானியம் விடப்பட்ட விஷயம் கூறப்பட்டுளது.




ஸூரகுருவின் ரதம்.

இன்னும் அடியில் கண்ட முக்கிய சாஸனங்களும் இருந்து வருகின்றன :—

திருக்கழுக்குன்றத்தில் "பெரியபுராண"த்தில் குறிப்பிடும் நாயன்மார்களில் ஒருவரான நமிநந்தியடிகளுக்கு மடம் ஏற்பட்டிருந்த விஷயம் அடியில்கண்ட சாஸனத்தால் ("தென் இந்திய சாஸனங்கள்" 3-ம் புத்தகம் 165-ம்பக்கம்) வெளிவரும்:—

"ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்சூழ்ந்த புணரி அகழ்சூழ்ந்த புவியில் பொன்நேமி அளவுந்தன்நேமி நடப்ப விளங்கு ஜயமகளிளங் கொப்பருவத்துச் சக்கர கொட்டத்து விக்கிரமத் தொழிலால் புது மணம் புணர்ந்து மதுவரையிட்டம் வயிராகரத்து வாரி அயில் முனைக் கொந்தள வரைசர் தந்தளமரிய வாளுறை கழித்து தோள்வலி காட்டிப் பொர்ப் பரி நடத்திக் கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகை சூடி தென் திசை தெமருகமலப் பூமகள் பொதுமையும் பொன்றி ஆடையும் நன்னிலப்பாவையும் தனிமையும் தவிர்த்து புனிதரு திருமணி மகுடம் முறைமையில் சூடி, தன்னடியிரண்டுந் தடமுடியாகத் தொன்னிலவேந்தர் சூட முன்னை மநுவாறு பெருகக் கலியாறு வறப்புச் செங்கோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை யிருநில விளாகம் மெங்கணுந் தனது திருநில வெண்ணிலாத் திகழ ஒரு தனிமெருவிற் புலி விளையாட ஆழ்கடல் தீவாந்தரத்து பூபாலர் திறை விடுதந்த கலஞ்சொரிகளிறு முறை நிற்ப விலங்கிய தென்னவன் கருந்தலைப் பருந்தலைத்திட தன் பொன்னகர் புறத்திடை கிடப்ப இன்நாள் பிற்குலப் பிறைபோல் நிற்பிழை என்னும் சொல்லெதிர் கொடிற்றல்லது தன் கைவில்லெதிர் கொடா வேழகுலத் தாசு அளத்தியிலிட்ட களிற்றின திட்ட முட்பட வேழ்பரியும்



ஸூரகுருவின் பாபம் ஒரு காக்கைரூபமாக அவன் சரீரத்திலிருந்து வெளிவருகிறது.




ஸூரகுருவின் யானைப்பட்டாளம்.

கெட்ட தன் மானமும் கூறின் வீரமுங் கிடப்ப எறின மலைகளு முதுகு நெளிப்ப இழிந்த னதிகளுஞ் சுழன்றுடைந் தொட விழுந்தகடல்களுந் தலை விரித் தலமாக் குடதிசைக்காடு உகந்ததானுந் தாதையும் பன்னுளிட்ட பலபல முதுகும் பயத்தெதிர்மாறிய ஜயப் பெருந திருவும் பழியுகந்து குடுத்தபுகழின் செல்வியும் வாளாமொண் கண் மடந்தையரீட்டமு மீளாது குடுத்த வெங்கரி நிரையுங் கங்கமண்டலமுஞ் சிங்கணமெனனும் பாணியிரண்டும் ஒரு விசை கைக் கொண் டண்டிய புகழொடு பாண்டி மண்டலமுங் கொள்ளத் தடைத்து வேழ் பரித்தலங்களும் பொரு பரித்தலங்களுந் தந்தா வாரியுமுமுடைத்தாய்ப் பரந்து வடதிசை தென்கடல் பாய்வது போலத் தன்பெருஞ்சேனையையேவப் பஞ்சதரைவரும் பொருத் போர்க்களத் தஞ்சி வெருநெளித்தோடி அரணைனப்புக்க கடாரத் துடைத்து ஞட்டடிப் படுத்து மற்றவர் தம்மை வனசர ராக்கிக் கொற்ற வெஞ்சுரம் பற்றி கொற்ற விஜயஸ்தம்ப மெழில் பெற நிறுத்தி முத்தின் சலாபமும் முத்தமிட் பொதியலும் மத்த வெம்பரி மய்யச் சய்யமுங் கன்நியுங் கைக் கொண்டருளித் தென்னாட்டெல்லைகாட்டிக் குடமலை நாட்டுள்ள சாவேறெல்லாத் தனி விசும் பெற எறிய துனமருகுலத் தலைவரைக் குறுகுலர் குலையக் கோட்டாறுட்பட நெறி தொறும் நிலைகளிட்டருளி அப்புலத் தலங்கமுங் கங்கமண்டலங் கைப்படுத்தருளி திறை கொளாமுந் திருப்புயத்



ஸூரகுருவின் ஒட்டகைப்பட்டாளம்.



புகார் சொல்லுவதற்காக அரண்மனை வாசலில் இருக்கும்
மணியை ஒரு பசு அடித்தல்.

தலங்கமும் போல் வீரமுந் தியாகமும் விளங்கப் பார் தொழச் சிவனிடத்துமையெனத் தியாகவல்லி அவனி முழுதுடை யாளுடனிருப்ப அவளுடன்கங்கை வீற்றிருந்தென மங்கையர் திலகம் ஏழிசை வல்லவி ஏழுலக முடையாள் வாழிரும் பொன்னிந் திருப்ப ஊழியு மவனி முழுதுடையாளொடும் வீரஸிம்ஹாஸனத்து வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரிபன்மரான சக்காவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு நாற்பத்திரண்டாவது ஜயங் கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க் கோட்டத்துக் குமிழி நாட்டு வாணவ மஹாசதுர் வெதிமங்கலத்து மஹாஸபையோம் நிலவிலையாவணக் கையெழுத்து களத்தூர்க் கொட்டத்து தனியூர் நாட்டு உலகளந்த சோழபுரமான செம்பியந் திருக்கழுக்குன்றத்து உடையார் திருக்கழுக்குன்றமுடைய மஹாதேவர் கோயிலில் ஆதிதாஸர் சண்டேச்வா தேவற்கு நாங்கள் மடப்புறமாக விற்றுக் குடுத்தநிலமாவது எங்களூர் மேல் பிடாகை கீரைப்பாக்கம் காடு கொளா.........டு வெட்டிக் கட்டை பறித்துத் திருத்திக்கொள்வதாகக் குடுத்த நிலத்துக்குக் கீழ்பார்க் கெல்லையு மொடகத் தெல்லை யுறவும் தென்பாற் கெல்லை தாழைவேட்டெல்லை யுறவும் மெற்பார்க் தெல்லை ஊரகம் பாக்கத் கெல்லை உறவும் வடபாற்கெல்லை தண்டுறை எல்லை உறவும் நா.........வு பட்ட நீர் நிலமும் புஞ்சை நிலமு மேனோக்கின மாமுங் கீணோக்கின கிணறும் இவ்வூர் மடைவிளாகத்திருக்கும் நமநந்தி அடிகள் மடத்துக்கு மடப்புறமாக.

தேவாரப்பாடல்கள்

திருஞானஸம்பந்தர் பாடியது:—

முதல் திருமுறை—பண்—குறிஞ்சி.

தோடுடையானொருகாதிற்றூயகுழைதாழ
வேடுடையான் றலைகலனா விரந்துண்ணு
நாடுடையானள்ளிருளேம நடமாடுங்
காடுடையான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 1

கேணவல்லான் கேழல் வெண் கொம்பு குறளாமை
பூணவல்லான் புரிசடை மேலோர் புனல் கொன்றை
பேணவல்லான் பெண்மகடன்னை யொருபாகங்
காணவல்லா நன்காதல் செய்கோயில் கழுக்குன்றே. 2

தேனகத்தார் வண்டது வுண்டதிகழ் கொன்றை
தானகத்தார் தண்மதி சூடித்தலை மேலோர்
வானகத்தார் வையகத்தார்கடொழுதேத்துங்
கானகத்தான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 3

துணையல் செய்தான் றூயவண்டியாழ்செய் சுடர்க்கொன்றை
பிணையல் செய்தான் பெண்ணினல்லாளை யொருபாக
மிணையல் செய்யா விலங்கெயின் மூன்று மெரியுண்ணக்
கணையல் செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 4


பையுடைய பாம்பொடு நீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறை சூடிவிரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணன் மறிசேர்ந்த
கையுடையான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 5

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ் சிறுத்தொண்ட
ருள்ளமெல்லா முள்கிநின்றாங்கேயுடனாடுங்
கள்ளம் வல்லான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 6

ஆதல் செய்தானரக்கர்தங்கோனை யருவரையி
னோதல்செய்தா னொடிவரையின் கண்விரலூன்றிப்
பேர்தல் செய்தான் பெண்மகடன்னோடொருபாகங்
காதல் செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 7

இடந்த பெம்மானேனமதாயு மனமாயுந்
தொடர்ந்த பெம்மான் றூமதிசூடி வரையார்தம்


மடந்தைபெம்மான் வார்கழலோச் சிக்காலனைக்
கடந்த பெம்மான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 8



தேய நின்றான் திரிபுரங் கங்கை சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாஞ்
சாய நின்றான் வன் சமண் குண்டர் சாக்கியர்
காயநின்றான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 9

கண்ணுதலான் காதல் செய்கோயில் கழுக்குன்றை
நண்ணிய சீர்ஞான சம்பந்தன் றமிழ் மாலை

பண்ணியல் பாற்பாடிய பத்து மிவை வல்லார்
புண்ணியராய் விண்ணவ ரோடும் புகுவாரே. 10



திருக்கழுக்குன்றம் கிராமத்தில் மலை இருக்கும் இடத்தைக் குறிக்கும் இடம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியது:—

ஆறும்திருமுறை—திருத்தாண்டகம்.

மூவிலை வேற்கை யானை மூர்த்தி தன்னை முதுபிணக்கா டுடை யானை முதலானானை
ஆவினி லைந்துகந்தானை அமரர்கோனை ஆலால முண்டுகந்த ஐயன் றன்னைப்
பூவினின்மேனான்முகனு மாலும் போற்றப் புணர்வரிய பெருமானைப் புனிதன் றன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் றன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே.

பல்லோடு தலை சடைமே லுடையான் றன்னைப் பாய்புலித் தோ லுடையானைப் பகவன் றன்னைச்
சொல்லோடு பொருளனைத்து மானுன்றன்னைச் சுடருருவி லென்பறுக் கோலத் தானை
அல்லாதகாலனை முன் னடர்த்தான் றன்னை ஆலின்கீ ழிருந்தானை அமுதானானைக்
கல்லாடை புனைந்தருளுங் கபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேனானே.

சுந்திரமூர்த்தி சுவாமிகள் பாடியது:—

ஏழாந்திருமுறை—பண்—நண்டபாஷை.

கொன்றுசெய்த கொடுமையாற் பல சொல்லவே
நின்றபாவம் வினைகடாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின்றேவர் பிரானிடங்
கன்றி னேடு பிடிசூழ்தண் கழுக்குன்றமே. 1

இறங்கிச்சென்று தொழுமினின்னிசைபாடவே
பிறங்கு கொன்றைச் சடையனெங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகணித்திலங்கொண்டிழி
கறங்கு வெள்ளை யருவித்தண் கழுக்குன்றமே. 2

நீளநின்று தொழுமினித்தலு நீதியா
லாளுநம்ம வினைகளல்கிய ழிந்திடத்
தோளுமெட்டுமுடைய மாமணிச்சோதியான்
காளகண்ட னுறையுந்தண் கழுக்குன்றமே. 3

வெளிறு தீரத்தொழுமின்வெண் பொடியாடியை
முளிறிலங்கு மழுவாளன் முந்தி யுறைவிடம்
பிளிறு தீரப்பெருங்கைப்பெய்ம்மத மூன்றுடைக்
களிறினேடு பிடிசூழ்தண் கழுக்குன்றமே. 4

புலைகடீரத் தொழுமின் புன்சடைப்புண்ணிய
னிலைகொள் சூலப்படைய னெந்தை பிரானிட
முலைகளுண்டு தழுவிக்குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும் புறவிற்றண் கழுக்குன்றமே. 5

மடமுடைய வடியார்தம் மனத்தேயுற
விடமுடைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமுடைய வரவன்றான் பயிலும் மிடங்
கடமுடைய புறவிற்றண் கழுக்குன்றமே. 6

ஊனமில்லா வடியார் தம்மனத்தேயுற
ஞானமூர்த்தி நட்டமாடி நவிலும் மிடங்

தேனும் வண்டுமதுவுண்டின்னிசைபாடியே
கானமஞ்ஞை யுறையுந் தண் கழுக்குன்றமே 7
அந்தமில்லாவடியார் தம்மனத்தேயுற
வந்துநாளும் வணங்கி மாலொடுநான்முகன்
சிந்தைசெய்த மலர்கணித்தலுஞ் சேரவே
சந்தநாறும் புறவிற்றண் கழுக்குன்றமே. 8

பிழைகடீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள்காதன் குழகன்றனுறையுமிட
மழைகள் சாலக்கலித்து நீடுயர் வேயவை 9
டிழைகொண் முத்தஞ்சொரியுந் தண் கழுக்குன்றமே

பல்லில் வெள்ளைத்தலையன்றான் பயிலுமிடங்
கல்லில் வெள்ளை யருவித்தண் கழுக்குன்றினை
மல்லின்மல் குதிர டோளான் வனப்பினாற் 10
சொல்லல் சொல்லித் தொழுவாரைத் தொழுமின்களே.

திருவாசகப்பாடல்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியது:—

கட்டளை கலித்துறை.

பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோர் இன்பமே வருந்துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கிலாததோர் வித்து மேல்விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத்திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. 1

பிட்டுநேர்பட மண்சுமந்த பெரும் துறைப்பெரும் பித்தனே!
சட்டநேர்பட வந்திலாத சழக்கனேனுனைச் சார்ந்திலேன்,
சிட்டனே ! சிவலோகனே ! சிறுநாயிருங் கடையானவெம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 2

மலங்கினேன் கண்ணினீரைமாற்றி மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேன் இனிமேல் விளைவதறிந்திலேன்
இலங்குகின்ற நின்சேவடிகள் இரண்டும் வைப்பிடமின்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 3

பூணொணாததோர் அன்புபூண்டு பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணொணாததோர் நாணம் எய்தி நடுக்கடலுள் அழுந்திநான்

பேணொணாத பெருந்துறைப் பெருந்தோணிபற்றி உகைத்தலும்
காணொணாத்திருக்கோலம் நீவந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 4

கோலமேனிவராகமே! குணமாம் பெருந்துறைக் கொண்டலே!
சீலமேதுமறிந்திலாத என் சிந்தைவைத்த சிகாமணி!
ஞாலமேகரியாக நானுனை நச்சிநச்சிட வந்திடும்
காலமேஉனை ஓதநீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. 5


பேதமில்லதோர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே!
எதமேபல பேச நீ எனை எதிலார் முனமென்செய்தாய்?
சாதல் சாதல் பொல்லாமை யற்ற தனிச்சரண் சரணாம் எனக்கு
ஆதலாலுனை ஓதநீவந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 6

இயக்கிமார் அறுபத்துநால்வரை எண் குணஞ்செய்த ஈசனே!
மயக்கமாயதோர் மும்மலம்பழ வல்வினைக்குளழுந்தவும்,
துயக்கறுத்தெனை ஆண்டுகொண்டு நின்றாய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார் முனே வந்துகாட்டினாய் கழுக்குன்றிலே. 7

பட்டினத்தடிகள் பாடியது.

காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம்
நீடோய்கழுக்குன்றிலீசா வுயிர்துணை நின்பதமே.






மஹாபலிபுரம் பொதுக்காக்ஷி.

மஹாபலிபுரம்.

மஹாபலிபுரம், மாவலிபுரம், மஹாமலைபுரம் மாமல்லபுரம், கடன் மல்லை என்று பற்பலவிதமாகக் கூறப்படும் இந்த க்ஷேத்திரம் செங்கல்பட்டுக்குச்சுமார் இருபது மையில் தென்கிழக்கில் ஸமுத்திரக்கரையில் உள்ளது. ஐரோப்பியர்களுக்கு 'ஏழுகோவில்' ஊர் என்றால் நன்கு புறியும். இந்த ஸ்தலமும் முக்கியமாய் விஷ்ணுவின் தச அவதாரங்களில் ஒன்றாகிய வாராஹ அவதாரத்திற்குப் பெயர்போனதாகக்கூறுவார்கள். திராவிடர்களது சிற்பசாமர்த்திய அறிகுறியாக இங்குள்ள ரதங்கள் ஏற்பட்டிருக்கின்றன வெனக் கூறில் பொருந்தும்.


இங்குள்ள கரைக்கோவில்ஒன்று நீங்கலாக மற்ற ரதங்கள் எல்லாம் அந்தமணல் வெளியிலிருந்த பாறையைக்குடைந்து ஏற்படுத்தப்பட்டவைகளே ஒழிய வேறில்லை.

இவ்விடத்தியகோவிலில் வாராஹப்பெருமாள் ஆதிசேஷன் என்ற' பாம்பின்மீது வலது காலும், வலது தொடையில் பூதேவியுமாகநிற்பது விசேஷமாகக் கொள்ளப்படல் வேண்டுமெனக்கூறுவார்கள். ஏனெனில் இங்கு ஓர் அரக்கனால் திருடிக்கொண்டுபோய்க்



மஹாபலிபுரத்தில் பழய தீபஸ்தம்பம் இருந்த குன்று.

கடலில் ஒளித்து வைக்கப்பட்ட பூமாதேவியை மஹாவிஷ்ணு வாராஹ அவதாரமெடுத்துச் சென்று திரும்பக்கொண்டுவந்த விஷயம் காட்டப் பட்டிருக்கிறது. பூதேவியைத்தாங்கி நிற்கும் ஆதிசேஷன் கொஞ்சம் கொஞ்சமாய் ஸமுத்திரத்தினின்றும் கிளம்புவது காட்டப் பட்டிருப்பதைக் காணலாம்.



மஹாபலிபுரத்தில் அர்ஜுனன் தபஸ் செதுக்கப்பட்ட பாறை.

இங்துள்ளகுகைகளில் புராண ஸந்தர்ப்பங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஓரிடத்தில் மஹிஷாஸுரமர்த்தனி என்னும் அம்மன் தனது பரிவாரங்களோடு ராக்ஷஸர்களை நாசப்படுத்திக் கொண்டிருத்தல் காட்டப்பட்டிருக்கிறது.



மஹிஷாஸுரமர்த்தனி செதுக்கப்பட்ட பாறை.

இந்தஸ்தலம் பிரக்யாதிபெற்றதற்கு ஏற்பட்டுள்ள காரணங்களில் விஷ்ணுபக்தரான பூதத்தாழ்வார் ஜனித்த ஜனனபூமியிதென்பது ஒன்றெனக்கூறுவார்கள்.

இங்குள்ள பாக்கிரதங்களிற் சிலபாண்டவாள் பெயர்கொண்டு ஏற்பட்டிருக்கக் காணலாம்.

அர்ச்சுனரதம் 100அடி நீளமும் 50அடி உயரமும் வாய்ந்துள்ளது. இங்கு அர்ச்சுனன் ஒற்றைக்காலில்நின்றுகொண்டு பாசுபதாஸ்திரம் பெறத் தபசுசெய்வதும் பரமசிவன் அவனது தவத்தினால் மஹிழ்ச்சியடைந்து அவனுக்குக்கொடுக்க மேற்கூறிய அஸ்திரம் வைத்துக்கொண்டிருப்பதும் காட்டப்பட்டிருக்கிறது.

இன்னொருஇடத்தில் மஹாபலிசக்கிரவர்த்தியின் ஸதஸ்ஸு கூடியிருத்தல் காட்டப்பட்டுளது. இந்தசபை வாமனவதாரமெடுத்து மூன்றடி பூமி யாசித்து மண்ணுலகையும் விண்ணுலகையும் ஈரடிகளாக அளந்துகொண்டு மூன்றும்அடியை பலிசக்கிரவர்த்தியின் தலைமீதுவைத்துப் பாதாளவுலகிற்கு அவனை அனுப்ப, அவன் அதற்காசனாகி, வீரர்களையும், ராஜாக்களையும், காட்டுமிருகங்களிற் சிலவற்றையும் ஸபைகூட்டிவைத்திருப்பது காட்டப்பட்டிருக்கிறது. இதேபாறையில் ஓர் விதானத்தின்கீழ் வாஸுகியென்ற பாம்பு காட்டப்பட்டிருக்கிறது.

கிருஷ்ணரதத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவான் இடதுகையால் மலையைத் தாங்கிக்கொண்டு இந்திரனது செயலால் ஏற்பட்ட பெரிய மழையினால் கெடுதிவாராது பசுக்களைக்காப்



மஹாபலிபுரத்தில் அர்ஜுனன் தபஸ் செதுக்கப்பட்ட இன்னொரு பாறை.

பதும், அவருக்கருகில் பசுக்கள் ஆதரித்துப் பால்கறக்கப்படுவதும், ஒருஎருது பயத்துடன் நிற்பதும், காட்டப்பட்டிருக்கின்றன.

ஊருக்குத்தெற்கில் பஞ்சபாண்டவாள் ரதமென்ற ஐந்து ரதங்களிருக்கின்றன. வடகோடியிலுள்ளது துரௌபதி ரதமெனக்கூறப்படும். இங்கு காட்டப்பட்ட துரௌபதியின் சிலையுருவம் லக்ஷ்மியினது உருவம்போலிருக்கிறது. தவிர மேற்கிலுள்ள யானை, சிங்கம், நந்தி இவைகளின் உருவஅமைப்பும் பார்க்கவருகிறவர்களுக்கு வியப்பை விளைவிக்குமாறு ஏற்பட்டிருக்கக்காணலாம்.

பீமனது ரதத்தைச்சுற்றிக் கற்கால் மண்டபம் அமைக்கப்பட்டிருத்தலும் காணப்படும். தவிர பலிச்சக்ரவர்த்தியின் மகன் பாணாசுரன் ஆயிரம் கைகளுடன் கூடிய பெரிய அசுரனைக் காட்டப்பட்டிருக்கின்றான்.


கிருஷ்ணபகவான் குமாரன் அநிருத்தன் பாணாசுரனது மகள்மீது மோகங்கொண்டதனால் அவ்வசுரனால் சிறையாக்கப்பட்டான். தனதுமகனது உதவிக்குச் சென்ற கிருஷ்ணபகவானுக்கும், தனது பக்தனது உதவிக்காகவந்த சிவனுக்கும் சண்டைநேர இறுதியில் பாணாசுரன் தோற்கடிக்கப்பட்டு இரண்டுகைகள் தவிர பாக்கிகைகளை இழந்து சாகுமளவும் கிருஷ்ணனுக்கு கீழ்ப்படிந்திருந்ததாகக் கூறியுள்ள ஓர் புராணக்கதையும் உளது.

இந்த ஸ்தலத்தைக்குறித்து புராணக்கதை பின்வருமாறு. இது பிம்மாண்டபுராணத்தில் எட்டு அத்தியாயமுள்ளது.




மஹாபலிபுரத்தில் கோவர்த்தனோத்தாரம் செதுக்கப்பட்ட பாறை.

முன்னொருகாலத்தில் புண்டரீகன் என்று பெயருள்ள தர்மிஷ்டனுனவும் ஈசுவரபக்தியுள்ளவனுமான பிராமணன் ஒருவனிருந்தான். அவன் இப்புண்ய பூமியிலுள்ள பற்பல க்ஷேத்ரங்களுக்குச் சென்று அங்கங்குள்ள ஈசுவரனை புஷ்பாதிகளால் அர்ச்சித்துப் பூஜித்து வந்தான். இவ்விதம் க்ஷேத்ராடனம் செய்து வரும் நாளில் திருவிடவேந்தியென்னுமிடத்திற்கு வந்து அங்கு லக்ஷ்மீதேவியை இடது மடியில் வைத்துக்கொண்டு வராஹரூபம்தரித்துக்கொண்டிருக்கும் மஹாவிஷ்ணுவை தர்சித்துப் பூஜை செய்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு அடர்ந்தகாடுகள் வழியே செல்லும்பொழுது நல்ல சகுனங்களாவதைக்கண்டு தனக்கு நல்ல காலம் கிட்டியதென்று ஸந்தோஷித்தான். சற்றுதூரம் சென்றதும் மிகவும் அழகிய ஒருதடாகத்தையும் அது முழுமையும் மிகப்பெரிதானவையும் அதிகவாஸனையுள்ளவையுமான தாமரைப்புஷ்பங்கள் அடர்ந்து மலர்ந்திருப்பதைக்கண்டு வியந்து மிக்க சந்தோஷத்துடன் அப்புஷ்பங்களை ஒன்றுவிடாமல் கொணர்ந்து ஈசுவரனுக்கு அர்ச்சித்துப் பூஜை செய்து தன்யனுகவேண்டுமென்று கருதி அக்குளத்திலிறங்கி புஷ்பங்களை யெல்லாம் பறிக்க ஆரம்பித்தான். ஸாக்ஷாத் பகவானும் இவனுடைய பக்தியிலீடுபட்டு அசரீரவாணியாக இவனை அப்புஷ்பங்களைப்பறித்து க்ஷீராப்திக்குக்கொண்டு வந்து அங்கு சேஷசாயியான ஸ்ரீமந்நாராயணனுக்கு அர்ச்சிக்கும்படி ஆக்ஞாபித்தார். இக்குரலைக்கேட்ட புண்டரீகரிஷியும் அதிகஸந்தோஷமடைந்து மிக உத்ஸாகத்துடன் ஒரு புஷ்பம் விடாமல் பறித்து வந்தார். அச்சமயத்தில் அக்குளத்தில் அவருக்குஸமீபத்தில் ஒரு பெரியமுதலையா



மஹாபலிபுரம் மலையிலிருக்கும் குகை.

னது நாக்கில் காயம்பட்டு மூர்ச்சைபோய்க்கிடந்ததைக்கண்டார். அதைக்கண்டு மிகவும் அநுதாபப்பட்டு கருணையுடன் அதைநோக்கினார். அக்கருணைகடாக்ஷத்தாலேயே அம்முதலை ஆசுவாஸமடைந்து மூர்ச்சைதெளிந்து அவரை நமஸ்கரித்து பின்வருமாறு அவரை நோக்கிக்கூறிற்று—"எனக்கு மோக்ஷத்தையளித்த ஓ ரிஷியே, நான் ஒரு சாபவசத்தால் இம்முதலை ஜன்மத்தையடைந்தேன். இப்போழுது தங்களுடைய கருணைகடாக்ஷத்தால் எனக்கு அந்தசாபம் நீங்கிற்று. நான் இதற்குமுன்மல்லவரம் மஹாராஜாவாக விருந்து நீதி நெறிதவறாமல் ராஜ்யபாரம் செய்து வந்தேன்—இப்பொழுதும் என்பிள்ளை தான் அங்கே ராஜ்யபாரம் செய்து கொண்டு அங்குள்ள வாராஹப்பெருமாளைப்பூஜை செய்து வருகிறான். அந்தமல்லபுரமானது இங்கிருந்து ஒருகுரோசம் தெற்கேயிருக்கிறது. அது இந்திரனுடைய ஸ்வர்க்கலோகத்துக்குச்சமானமாயுள்ளது. இரண்டுயோஜனை நீளமும் அரையோஜனை அகலமுமுள்ளது. அங்குள்ளவர்களெல்லாம் மஹா தர்மிஷ்டர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள். அந்த மல்லவரத்துக்கு ஹரிப்பிரியன் என்கிற நான் அரசனாக விருந்தேன். இப்பொழுது என்குமாரன் ஸதாநந்தனென்பவன் அதற்கு அரசனாக விருக்கிறான். அங்குள்ள பூவாராஹப்பெருமாளுடைய விருத்தாந்தத்தைச்சொல்லுகிறேன். என்னுடைய முன்னோர்கள் வம்சத்தில் ஹரிசேகரசக்ரவர்த்தியென்று ஒருவர் அரசனாக விருந்தார். அவரும் அவருடையதாயாரும் சிறந்தவிஷ்ணுபக்தர்களாதலால் பிரதிதினமும் தவறாமல் ஒருயோஜனை தூரத்திலுள்ள திருவடவேந்திக்ஷேத்திரத்திற்குச்சென்று அங்குள்ள பூவாராஹப்பெருமாளை ஸேவித்துவிட்டுத்திரும்பி தனது ஊர் வந்துசேர்ந்து அங்கு 4000 பிராமணர்களையுபசரித்து போஜனம் செய்விப்பது அவர்களுக்கு வழக்கமாயிருந்தது. இவரது பக்தியையும் சிரத்தையையும் கண்டு வாராஹப்பெருமாள் மனமகிழ்ந்து தனதுபக்தனாகிய இவரைபி



மஹாபலிபுரம் பஞ்சபாண்டவர் ரதங்கள்.

ரதிதினமும் நல்ல வெய்யலில் திருவிடவேந்திக்கு நடக்கவைப்பது ஸரியல்லவென்று கருதி மிகக்கருணையுடன் தான் ஒரு கிழட்டு ஸ்ரீவைஷ்ணவப்பிராமணன் உருவெடுத்துக்கொண்டு தனது பத்னியாகிய லக்ஷ்மீதேவியை ஒருசிறுபெண்ணாகச்செய்து தனது கையில் அவளைப் பிடித்துக்கொண்டு தடியூன்றியவண்ணம் தள்ளாடிநடந்துகொண்டு ஹரிசேகாமஹாராஜாவின் அரண்மனைக்கு வந்துசேர்ந்தார். மஹாராஜாவும் அவருடையதாயாரும் இந்தக்கிழட்டு பிராமணனைக்கண்டு மிகஸந்தோஷத்துடன் அவரை வரவேற்று உபசரித்துவிட்டு தாங்கள் வழக்கம்போல் திருவிடவேந்திக்குப்போகப் புறப்பட்டார்கள்.

அச்சமயம் கிழட்டுவேஷம் தரித்திருந்த ஈசுவரனானவர் அவ்வரசனை நோக்கித் தான் அதிக விருத்தாப்பிய தசையிலிருப்பதால் வெகுதூரம் நடந்துவந்ததால் களைத்து மிகப்பசியால் வருந்துவதாகவும் தன்னுடன் வந்திருக்கும் சிறுபெண்ணும் வழிநடக்க முடியாமல் பசியால் மூர்ச்சித்ததாயும் தங்களுக்கு ஏதாவது ஆகாரம் கொடுத்துவிட்டு அப்புறம் தான் வேறுகார்யம் பார்க்கவேணுமென்றும் சொன்னார். அரசன் தான் நியமமாய் பிரதிதினமும் பூவராஹப்பெருமாளை தர்சனம் செய்துவந்தபிறகு தான் பிராமணஸந்தர்ப்பணம் செய்துவைப்பது வழக்கமென்றும் அவ்விரதத்துக்கு பங்கமில்லாமல் அன்றும் போய்வர அனுமதி கொடுக்கவேண்டுமென்று என்னசொல்லியும் அக்கிழவர் கேட்கவில்லை. தங்களிருவருக்கும் அன்னமளிக்காமல் சென்றால் அரசன் திரும்பிவருவதற்குள் தங்கள் பிராணன் போய்விடுமென்றார்கள். உடனே அவ்வரசன் தர்மஸங்கடத்திலகப்பட்டவனாய் மனதால் பூவராஹப்பெருமாளை தியானித்துக்கொண்டு அவ்விருவர்களையும் அரண்மனைக்குள்ளழைத்துச்சென்று ரத்னங்களிழைத்த ஆஸனங்களில் உட்காரவைத்து தங்கப்பாத்திரங்களில் அவர்களுக்கு பற்பலவிதமான உணவுகளையளித்தான். அவர்கள் சாப்பிட உட்கார்ந்ததும் அரசனானவன் தன் கண்களை மூடிக்கொண்டு பூவராஹப்பெருமாளையே தியானித்துக்கொண்டு அவர்களை நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிபத்தனாய்க் கண்களை விழித்தான். உடனே அக்கிழவரும் அச்சிறுபெண்ணும் உட்கார்ந்திருந்தவிடத்தில் தனது ஸ்வாமியாகிய பூவராஹப்பெருமாளும் அவரது தேவியாரும் இருக்கக் கண்டான். உடனே ஆநந்தபரவசனாகி திரும்பத்திரும்ப ஈசுவரனை நமஸ்கரித்து மஹா யோகிகளுக்குக்கூட கிட்டாத பாக்யம் தனக்கு ஈசுவராநுக்ரஹத்தால் கிடைத்ததைக்

குறித்து ஸந்தோஷஸாகரத்தில் மூழ்கினவனாய் மெய்மறந்து நின்றான். இவ்வாறு ஸ்வா
மியும் அம்பாளும் கிழவாகவும் சிறுபெண்ணாகவும் ரூபமெடுத்துக்கொண்டு அரண்மனை
யில் சாப்பிட உட்கார்ந்த அதேதருணத்தில் வெளியில் ஸந்தர்ப்பணைக்காகக் கூடியிருந்த
ஆயிரக்கணக்கான பிராமணர்களுக்கெல்லாம் விருந்துசாப்பாடு சாப்பிட்டமாதிரியான
திருப்தி உண்டாய்விட்டது. ஒன்றும் சாப்பிடாமலிருந்தபோதிலும் வயறுநிரம்ப சாப்
பிட்டமாதிரியான உணர்ச்சி யேற்பட்டுவிட்டது. இதைக்கண்டு ஆச்சர்யப்பட்டு அவர்கள்
அரசனிடம் தெரிவிப்பதற்காக அரண்மனை சென்றார்கள். அங்கு அரண்மனைக்குள்
சென்றதும் தர்பார்மண்டபத்திலுள்ள ஸிம்ஹாஸனத்தில் ஸாக்ஷாத் பூவாஹப்பெரு
மாளும் லக்ஷ்மீதேவியும் வீற்றிருக்கக்கண்டார்கள். உடனே அதிகஸந்தோஷத்துடன்
வேதங்களால் ஈசுவரனைஸ்தோத்திரம்செய்து நமஸ்கரித்து எப்பொழுதும் அவ்வாறே
அவ்விடத்திலிருந்து தங்களுக்கு தர்சனம்கொடுத்து தங்களை கிருதார்த்தர்களாகச் செய்ய
வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஈசுவரனும் அதற்கிணங்கி பிர்ம்மாவால் செய்யப்
படப்போகும் அசுவமேதயாகத்தின்பொழுது தனக்கும் தன்தேவிக்கும் ஒருரதம் அங்கி
ருந்து சுமார் ஐந்துயோஜனை தூரமுள்ள ஹஸ்திகிரிக்கு வருமென்றும் அதற்காகத்தான்
மேற்குநோக்கி உட்காருவதாகவும் சொல்லி அவ்வாறே அமர்ந்திருந்தார். இதுதான் மல்
லவாத்தில் பூவாஹஸ்வாமி வந்ததற்குக்காரணம்.

இந்த ஹரிசேகரமகாராஜாவுக்குப்பிறகு அவனுடைய ஸந்ததியார்கள் அநேகர்கள்
ராஜ்யபாரம்செய்தார்கள். பிறகு என்தகப்பனார் ஹரிநந்தன மஹாராஜாவானவர் வெருகா
லம்அரசாண்டார். அவருக்குப்பிறகு நான் நீதிநெறிதவறாமல் அரசாண்ட நாளில் ஒருஸம
யம் விஷ்ணுபக்தனாகிய ஒருபிராமணன் தனக்கு தினம் ஆகாரம்கொடுக்கவேணுமாய் யாசி
த்தான். நான் கர்வத்தால் அதை கவனியாமல் உதாஸீனம்செய்துவிட்டேன். அந்த பிராம
ணன் முதலையாகப்போகும்படி என்னை சபித்துவிட்டான். உடனே நானும் என்னுடைய
ஸ்ரீ வைஷ்ணவப் பிரஜைகளும் அவனை நமஸ்கரித்து சாபவிமோசனத்திற்குக் காலம் குறிப்
பிடச்சொல்லி பிரார்த்தித்தோம். மிகச்சிறந்த விஷ்ணுபக்தன் ஒருவன் ஒருஸமயம் உன்னை
கருணையுடன் கடாக்ஷிப்பான். அப்பொழுதுஉனக்கு மோக்ஷம்உண்டாகும் என்று அவன்
சொன்னான். அச்சமயம் இப்பொழுது எனக்குக் கிட்டிவிட்டது. என்றுசொல்லி அந்
தமுதலை புண்டரீக ரிஷியை நமஸ்கரித்துவிட்டு முதலைஜன்மத்தை விட்டு நீங்கி மோக்ஷத்
தையடைந்தது.

அந்த புண்டரீகரிஷியும் அக்குளத்திலுள்ள தாமரைப்புஷ்பங்களையெல்லாம் ஒன்று
விடாமல் கொணர்ந்து சிலவற்றை மாலையாகக்கட்டி எல்லாவற்றையும் குடலையில் போட்டு
தனது தலையில் தூக்கிக்கொண்டு ஆகாயவாணி சொன்னபடி க்ஷீரஸமுத்திரத்தைநோக்கிச்
செல்லப் புறப்பட்டார். சிறிதுதூரம் கிழக்கே சென்றதும் அங்கு தென்பட்ட லவணஸமுத்
திரத்தைக்கண்டு இதை யெவ்விதம் கடந்து க்ஷீரஸமுத்திரத்திற்குச் செல்வதென்று மய
ங்கி ஒன்றும் தோன்றாதவராய் நின்றார். பிறகு ஆகாசவாக்கை நினைத்து வேறுவழி யில்
லாதவராய்; அப் புஷ்பக்கூடையை ஒருபுரமாக வைத்துவிட்டு அச்சமுத்திரக்கரையில் உட்
கார்ந்து அங்கு ஜலம் மீளவும் ஸமுத்திரத்திற் சேரா வண்ணம் மணலால் ஒரு அணைபோட்

டுத் தனது இருகரங்களாலும் ஸமுத்திரஜலத்தை யள்ளியள்ளி அவ்வணைக்கப்பால் வீசியெறிந்தார். இவ்வாறு ஒருவருஷகாலம் ஓயாமல்செய்தும்ஜலம் கொஞ்சமேனும் குறையாமலிருந்ததைக்கண்டு ஏக்கத்துடன் இதற்குள்ளாக தான் கொணர்ந்துவந்த புஷ்பங்கள் வாடிவிட்டனவோ வென்று அச்சங்கொண்டு அவைகளைப்போய்ப்பார்த்தார். அவைகள் வாடாமல் அப்பொழுதுதான் பறித்தவைபோல் காணப்பட்டனவாதலால் ஈசுவர அனுக்ரஹம் தனக்கு இருப்பதாக உத்ஸாகத்துடன் மறுபடியும் ஸமுத்திரஜலத்தை முன்போலவே கைகளால் இறைக்க வாரம்பித்தார். இவரது பக்தியின் உறுதியைக்கண்டு மகிழ்ந்து பகவான் அவரை அனுக்ரஹிக்கவேண்டி க்ஷீரஸமுத்திரத்திலிருந்து ஒரு கிழவுருக்கொண்டு அந்த ரிஷி யிருந்தவிடம் வந்துசேர்ந்தார். அந்த ரிஷியும் தான்செய்துகொண்டிருந்த வேலையால் சிரமமடைந்து நிமிர்ந்து பார்த்தஸமயத்தில் ஒரு கிழவர் தன்னைக்கண்டு மந்தஹாஸம் செய்துகொண்டு நிற்பதைப்பார்த்து அவர் தன்வேலையைப்பார்த்துத் தன்னைப் பரிஹாஸம் செய்வதாகக்கருதினர். ஆனால் அக்கிழப்பிராமணரோவெனில் தடியை யூன்றிக்கொண்டே அவருக்கு ஸமீபத்தில் நெருங்கி மிகப் பிரியத்துடன் அவருடைய யோகக்ஷேமத்தை விசாரித்தார். அவர் பதிலொன்றும் சொல்லாமலிருந்ததும் எதற்காக அவ்வளவு வியஸனத்துடனிருப்பதென்றுகேட்டார். பக்கத்திலிருந்த தாமரைப் புஷ்பக் கூடையையும் பார்த்து எதற்காக அப்புஷ்பங்கள் அங்கு கொண்டுவரப்பட்டனவென்றும் கேட்டார். அதற்கு அந்த ரிஷியானவர் எதற்காக அவர் இந்தகேள்வியெல்லாம் கேட்கவேண்டுமென்றும் அவர் மிகவும் தள்ளாமையான கிழவராதலால் அவரால் தனக்கு ஒருவித ஒத்தாசையும் செய்யமுடியாதென்றும் அவர் பேசாமல் வந்தவழியைப்பார்த்துக்கொண்டு போகலாமென்றும் சொன்னர். அவ்வார்த்தையைக்கேளாமல் அக்கிழவரும் அவரை மிகவும் வற்புறுத்தவே புண்டரீகரிஷியும் அவரை நிமிர்ந்துபார்த்து வணங்கி தனது வரலாறு முழுமையையும் அவரிடம் தெரிவித்து தான் க்ஷீராப்தினாதனை யடைந்து அவரை அந்தத்தாமரை மலர்களால் பூஜிப்பதற்காகக் கடலை வற்றடிப்பதாகச் சொன்னர். இதைக்கேட்டதும் பகவானனவர் அவருடைய பக்தியைசோதிக்கவேண்டி அவரைக்கண்டு சிரித்து இதென்ன பைத்தியக்காரயோசனை, ஈசுவரன் எங்கேபார்த்தாலும் இருக்கவில்லையா, ஸமுத்திரத்தை யெங்கேயாவது வற்றடிக்கமுடியுமா, நிஷ்பிரயோஜனமான இந்தக்கார்யத்தில் யத்னப்பட்டு உயிரிழப்பதைக்காட்டிலும் வேறு நல்லக்ஷேத்ரங்களிலுள்ள பகவானை அத்தாமரைப் புஷ்பங்களாலர்ச்சித்தாலும் பலனுண்டு. புஷ்பங்களும் வாடிப்போகாமல் பிரயோஜனப்படும் என்ருர். உடனே அந்த ரிஷியானவர் அக்கிழவரால் தன் உறுதியை ஒருநாளும் மாற்றமுடியாதென்றும் அப்புஷ்பங்கள் வாடாதவரையில் தன்னுயிர் நிற்குமென்றும், க்ஷீராப்தினாதனை அப்புஷ்பங்களால் பூஜைசெய்யாமல் தான் ஜீவிக்கமுடியாதென்றும் சொல்லி மீளவும் தன்கார்யத்தைக் கவனிக்கவாரம்பித்தார். இவ்வார்த்தைகளைக்கேட்ட பகவானனவர் மிகவும் ஸந்தோஷமடைந்து அவருக்கு அநுக்ரஹம் செய்யக்கருதி அவரைநோக்கி "நீசெய்யும் கார்யத்தை நான்செய்கிறேன். நீ எங்கேயாவது சென்று எனக்குக்கொஞ்சம் ஆஹாரம் கொண்டுவா. நான் கிழவனாதலாலும் வெகுதூரம் நடந்துவந்தேனாதலாலும் மிகப்பசியால் வருந்துகிறேன்" என்று சொல்லித் தனது மேல்வேஷ்டியை இடுப்பில்கட்டி ஸமுத்திரத்திலிறங்கி தனது இருகரங்களாலும்

ஜலத்தையெடுத்து எறிந்தார். அந்தக்ஷணத்திலேயே ஸமுத்திர ஜலம் அதிகமாகவற்றி ஒரு குரோசதூரத்துக்கப்பால் நகர்ந்துவிட்டது. இதைக்கண்ட புண்டரீகரிஷி மிகவாச்சர்யமடைந்து ஓடோடியும் பக்கத்திலுள்ள மல்லபுரம்சென்று அங்கு ஒரு நல்லபிராமணர் வீட்டிலிருந்து மதுரமான ஆஹாரங்களை யெடுத்துக்கொண்டு அக்கிழவருக்குக்கொடுப்பதற்காகத்திரும்பி அதிவேகமாக வந்தார். இங்கு வந்துபார்த்தால் ஸமுத்திரம் வெகுதூரம் போயிருக்கிறது. கிழவரைக்காணோம். அவருக்குப்பதிலாக கரையில் மணல்மேட்டில் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு சயனித்துக்கொண்டிருக்கிறார். உடனே புண்டரீகரிஷியும் தான் கொண்டுவந்த ஆஹாரத்தையெல்லாம் கீழேவைத்துவிட்டு பகவானை நமஸ்கரித்து ஸ்தோத்திரம்செய்து தாமரை புஷ்பமாலையை அவருக்கு சாத்தி உதிரிபுஷ்பங்களால் அர்ச்சித்துப் பூஜித்து அந்த ஆஹாரங்களை நிவேதனம்செய்து ஆநந்தபாவசராய் நின்றார். பகவானும் அவருக்கு வேண்டிய வரனைக்கேட்கும்படி சொல்ல அந்த ரிஷியானவர் பகவான் எப்பொழுதும் அந்த விடத்திலேயே இருந்துகொண்டு தனக்கு தர்சனம் கொடுத்தமாதிரி எல்லோருக்கும் தர்சனம்கொடுத்து எல்லாப்பிராணிகளையும் கடைத்தேற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தார். பகவானும் அப்படியே ஆகட்டுமென்று அருளிச்செய்தார். உடனே லக்ஷ்மீதேவியும் மற்றுமுள்ள எல்லாதேவர்களும் அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தார்கள். அங்கு பகவான் மணல்மேட்டில் படுத்துக்கொண்டிருந்ததால் அவருக்கு ஸ்தல சயனப்பெருமாள் என்று பெயரிட்டு எல்லோரும் ஸ்தோத்தரித்தார்கள். இந்தச் செய்திகளையெல்லாம் கேள்விப்பட்ட மல்லபுரத்து அரசனான ஸதானந்தனன் தனது பரிவாரங்களுடன் அவ்விடம் வந்து பகவானை ஸேவித்து புண்டரீகரிஷியையும் வணங்கினான். அந்தரிஷியும் அவ்வாசனுக்குத் தான் குளத்தில் தாமரை புஷ்பம் பறித்தபொழுது அவ்வாசனின் தகப்பனான ஹரிப்பிரியன் முதலை ரூபமாக வந்ததையும் அவருக்கும் தனக்கும் நடந்த ஸம்பாஷணைகளையும் கடைசியில் அவர் முக்தியடைந்ததையும் ஸவிஸ்தாரமாகச்சொன்னார். இதைக்கேட்ட அவ்வாசனும் ஜனங்களும் மிகவும் திருப்தியடைந்து அக்குளத்துக்கு புண்டரீகதீர்த்தமென்று பெயரிட்டு அவரை வணங்கினார்கள். பகவானும் அப்புண்டரீகதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து ஸமீபத்திலுள்ள தன்னை பூஜிப்பவர்களுக்கு மோக்ஷமளிப்பதாய்ச்சொல்லி அங்கு வந்திருந்தவர்களையெல்லாம் அநுக்ரஹித்தார்.

சிலாசாஸனம்.

அடியில் விவரிக்கப்பட்டதும் "தென் இந்தியன் சாஸனங்கள்" என்று வெளியிடப்பட்ட முதல் புஸ்தகத்தில் 64, 65 பக்கங்களிலுமுள்ள இராஜராஜ சோழமஹாராஜன் 25-ம் ஆக்ஷியில் ஏற்பட்ட சாஸனத்திலிருந்து இவ்விடத்திலுள்ள சிவன் கோயிலுக்கு ஜலசயனம் என்றுபெயர் ஏற்பட்டிருந்ததுமன்னியில் மாமல்லபுரம் அந்தக்காலத்தில் ஆமூர் கோட்டத்தை சேர்ந்த ஆமூர் நாட்டிலிருந்ததும் தெரியவருகிறது; இந்த ராஜா ஜயித்த நாடுகளின் விவரமும் இதில் தெரியவருகிறது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலம் செல்வியுந்தனக்கேயுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கைநாடுங் கங்கபாடியு நுளம்பபாடி

யுஞ்டிகைபாடியுங் குடமலை ஞாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும் இரட்டபாடி ஏழரையிலக்கமுந்திண் டிறல் வென்றித் தண்டாற்கொண்ட தன் னெழில் வளரூழியுளெல்லா யாண்டு ஞொழுதக விளங்கும் யாண்டே செழியரை தேசு கொள் ஸ்ரீ கோ ராஜராஜ ராஜகெஸரிவர்மரான ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு இருபத் தைஞ்சாவது ஆமூர்க்கோட்டம் வகைசெய்கின்ற புதுக்குடையான் ஏகதீரன் ஐயம்பதின் மன்நகர மாமல்லபுரத்து ஜலஶயனதேவர் தெற்கில் திருநந்தாவனத்தே இருக்க இன் நகரத்து நகரத்தோமும் பெரிளமை யொமும் எம்மிலிசைந்து செய்த வ்யவஸ்தையாவது எம்மூர் நீர்நிலமும் வெண்ணிலமும் தோட்டநிலமும் கொல்லைநிலமும் இறைநிலமாமச் செப்பெறபட்டதும் நூறுமனைக்கீழ் நால் கூறாக அடைப்பதாகவும் இப்பரிசு அடைச்சு நாலு கூறிட்ட ஒருகூறு இந்நகரத்து கடும்பிடுகுசெரிச் சங்கரப்பாடியார்க்கு இருபத் தைஞ்சு மனைக்கு கூறுவதாகவும் நின்ற மூன்றுகூறும் எழுபத்தைஞ்சு மனைக்கீழ் கூறுவ தாகவும் கூறிட்ட பரிசெ மனையும் நிலமும் விற்கவும் ஒற்றிவைக்கவும் ஸ்ரீதனஞ் செய்ய பெறுவதாகவும் நிலமும் மனையும் கூறடைத்த பரிசெ ரக்ஷணஞ்செய்து குடுப்பதா கவும் முன்புள்ள ரக்ஷணஞ்சாங்கம் கிழிவதாகவும் கூறடைத்த நிலங்களில் நின்ற பல்லு ருவில் பழமரங்கள் அவ்வவ கூறுடையானே பெறுவானாகவும் மஞ்சிக்கத்தில் நின்றன நூறுமனைக்குங் கூறுவதாகவும் நிலமின்றியே பதினாறு வயஸின்மேல் வியாபாரஞ்செய்தி ருப்பாரை அரைக்கழஞ்சு பொன்னும் கூலிக்குச் செய்திருப்பாரை அரைக்கால பொன் னும் ஏருடையராய் வரிசைக்கு முவாரைக்கால்ப் பொன்னும் ஆண்டுவரைக்கொள்வதா கவும் இப்பரிசு அன்றென்றுரைமேல் வேறு இருபத்தைங்கழஞ்சு பொன் தண்டங் கொள் வதாகவும் இப்பரிசு எம்மிலிசைந்து வ்யவஸ்தை செய்தோம் நகரத்தோமும் பேரிளமை யோமும் இப்பரிசு நகரத்தாரும் பேரிளமை யாருஞ்சொல்ல எழுதினேன் இன்னகரத்து கரணத்தான் திருவடிகள் மணிகண்டனான் திருவெளரை முவாயிரத்து எழுநூற்றுவ னேன் இவை என்னெழுத்து".

இவ்விடத்தில் மூன்று கோயில்கள் இராஜ ராஜதேவர் 26வது ஆக்ஷியில் இருந்த தாக அடியில் கண்ட சாஸனத்தால் தெரியவரும;—(இது தென்இந்தியன் சாஸனங்கள் 1வது புத்தகம் 67, 68 பக்கங்களிலுள்ளது).

" ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச்செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை ஞாடுங் கங்கபாடியும் நுளம்ப பாடியுந்டிகைபாடியுங் குடமலை ஞாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிகை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமுந்திண் டிறல் வென்றித்தாண்டாற்க்கொண்ட தன் னெழில் வளரூழியுள்ளெல்லா யாண்டு ஞொழுதக விளங்கும் யாண்டேசெழியரை தெசுகொள் ஸ்ரீகொராஜராஜராஜகெஸரிவர்மரான ஸ்ரீராஜராஜராஜ தேவற்கு யாண்டு இருபத்தாறுவது ஆமூர்க்கோட்டத்தாமூர் நாட்டு நகர மாமல்லபுரத்து நகரத் தோமும் பேரிளமையொமும் இந்நகரத்து ஜலஶயனத்து க்ஷத்ரியஸிம்ஹபல்லவேஶ்வரத்து தேவரும் இராஜஸிம்ஹபல்லவேஶ்வரத்து தேவரும் பள்ளிகொண்டருளிய தேவரும் உடைய ஹட்டாரத்து பொன்னில் இத்தளிகளில் பதிபஞ்சாயதி-ப...ட்டைசு தேவகன்

மிகள் ப...நாங்கள் கொண்டு கடவபொன் பத்தொன்பதின் கழைஞ்சு இத்தேவர்களுக்குத்தி—..னமாக உடையார் ஸ்ரீர.....வர் திருநாமத்தில் ஸ்ரீ.....தேவன் என்று இக்கொட்டம் வகைசெய்கின்ற புதுக்குடையான் ஏகதீரன் ஐம்பதின்.....ஞவானஞ் செய்விக.....நிலத்துக்கு கிழ்பாற்கெல்லை ஸ௨ ஊ கரை வழி பாவி........யில் மெட்டுக்கும் .....ன்பாற்கெல்லை இத.....பொகு பெருவழிக் [கு]........ல்பாற்கெல்லை........ம்குரங்கன்........க்கு கிழக்கு.....இன்நகர........ள்ளத்து..........ளத்து.....த்துக்கும... .....லையு........நாலாயி........சுகுழியி........பொன்........எரியும்..........அகப்பட்ட........வதிமாக........கவும் இப......... கழைஞ்சு........லம்விற்று.......... மமுச்செ..............பெரி..............ல்ல..............த்த..............கற.........மு ....வித்த...............ம்வித.............ற்றுக.............யெ...........'

பூதத்தாழ்வார் சரித்திரம்

பூதத்தாழ்வார் தொண்டைநாட்டில் கீழ்சமுத்திரக்கரையிலுள்ள கடல்மல்லை என்னும் மஹாபலிபுரத்தில் ஐப்பசிமாத அவிட்டநக்ஷத்திரத்தில் அயோநிஜராய் ஒரு குருக்கத்தி மலரில் அவதரித்தார். இவர் மஹாவிஷ்ணுவை பலவாறுக ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்.

ஆழ்வாராதிகள் பாடிய பாடல்கள்.

பூதத்தாழ்வார்பாடியது:—இரண்டாந் திருவந்தாதி

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும் தண்பொருப்புவேலை தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே 70
ஏவல்ல எந்தைக்குடம்.

திருமங்கை ஆழ்வார் பாடியது:—

பெரியதிருமொழி.—2-ம்பத்து.—5-ம்திருமொழி.

பாராயதுஉண்டுமிழ்ந்த பவளத்தூணைப் படுகடலிலமுதத்தைப் பரிவாய்கீண்ட
சீரானை எம்மானைத் தொண்டர்தங்கள் சிந்தையுள்ளேமுளைத்தெழுந்த தீங்கரும்பினை
போரானைக் கொம்பொசித்த போரேற்றினைப் புணர்மருத மிறநடந்த பொற்குன்றினை
காரானை யிடர்கடிந்த கற்பகத்தைக் கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே. 1

பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப் பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றுமோதி
மாண்டு அவத்தம்போகாதேவம்மினெந்தை என்வணங்கப்படுவானை கணங்களேத்தும்
நீண்டவத்தைக்கருமுகிலை எம்மான்தன்னை நின்றவூர் நித்திலத்தை, தொத்தார்சோலை
காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித்தானைக் கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே.2

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறா யுலகுய்யநின்றானை அன்றுபேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக்கன்று மேய்த்து விளையாடவல்லானை, வரைமீகானில்
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக்கோயில் தவநெறிக்கோர் பெருநெறியை, வையம்காக்கும்
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 3

பேய்த்தாயை முலையுண்டபிள்ளைதன்னைப் பிணைமருப்பிற் கருங்களிற்றை, பிணைமான்நோக்கின்
ஆய்த்தாயர் தயிர்வெண்ணெ யமர்ந்தகோவை அந்தணர்தமமுதத்தை, குரவைமுன்னே
கோத்தானை குடமாடு கூத்தன்தன்னைக் கோகுலங்கள் தளராமல் குன்றமேந்திக்
காத்தானை எம்மானைக் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 4

பாய்ந்தானைத் திரிசகடம் பாறிவீழப் பாலகனாயாலிலையிற் பள்ளியின்ப
மேய்ந்தானை இலங்கொளிசேர் மணிக்குன்றன்ன ஈரிரண்டுமால் வரைத்தோளெம்மான்தன்னை
தோய்ந்தானை நிலமகள்தோள் தூதிற்சென்றப் பொய்யறைவாய்ப் புகப்பெய்தமல்லர் மங்கக்
காய்ந்தானை எம்மானைக்கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 5

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள்மேவிக்கிளர் பொறிய மறிதிரியஅதனின்பின்னே
படர்ந்தானை படுமதத்தகளிற்றின் கொம்புபறித்தானைப் பாரிடத்தை எயிறுகீற
இடந்தானை வளைமருப்பினேனமாகி, இருநிலனும் பெருவிசும்பு மெய்தாவண்ணம்
கடந்தானை எம்மானைக் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 6

பேணாதவலியரக்கர் மெலியஅன்று பெருவரைத்தோளிறநெரித்து, அன்றவுணர்கோனை
பூணாகம் பிளவெடுத்த போர்வல்லோனைப் பொருகடலுள் துயிலமர்ந்த புள்ளூர்தியை
ஊணாகப்பேய் முலைநஞ்சுஉண்டான்தன்னை உள்ளுவாருள்ளத்தே யுறைகின்றானை
காணாது திரிதருவேன் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 7

பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்தானைப் பிறையெயிற்றன்றடலரியாய்ப் பெருகினானை
தண்ணார்ந்த வார்புனல்சூழ் மெய்யமென்னும் தடவரைமேல்கிடந்தானை, பணங்கள்மேவி
எண்ணானை எண்ணிறந்த புகழினானையிலங்கொளிசேரரவிந்தம்போன்று நீண்ட
கண்ணானை கண்ணாரக்கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 8

தொண்டாயார் தாம்பரவுமடியினானைப் படிகடந்த தாளாளற்காளாயுய்தல்
விண்டானை தென்னிலங்கை யரக்கர் வேந்தைவிலங்குண்ண வலங்கை வாய்ச்சரங்களாண்டு
பண்டாய வேதங்கள்நான்கும் ஐந்துவேள்விகளுங் கேள்வியோடங்கமாறும்
கண்டானை தொண்டனேன் கண்டுகொண்டேன் கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 9

படநாகத்தணைக்கிடந்தன் றவுணர்கோனைப்படவெகுண்டு மருதிடைபோய், பழனவேலி
தடமார்ந்த கடல்மல்லைத் தலசயனத்துத் தாமரைக்கண் துயிலமர்ந்த தலைவன்தன்னை
கடமாருங் கருங்களிறுவல்லான் வெல்போர்க்கலிகன்றி யொலிசெய்தவின்பப்பாடல்
திடமாக இவையைந்துமைந்தும்வல்லார் தீவினையை முதலரியவல்லார் தாமே. 10

பெரியதிருமொழி.—2-ம்பத்து.—6-ம் திருமொழி

நண்ணாத வாளவுணரிடைப்புக்கு வானவரைப்
பெண்ணாகி அமுதூட்டும் பெருமானார் மருவினிய
தண்ணார்ந்தகடல்மல்லைத் தலசயனத் துறைவாரை
எண்ணாதேயிருப்பாரை இறைப்பொழுது மெண்ணோமே. 1

பார்வண்ணமடமங்கை பனிநன்மாமலர்க்கிழத்தி
நீர்வண்ணன்மார்வத்தி லிருக்கையை முன்நினைந்து, அவனூர்
கார்வண்ணமுதுமுந்நீர்க் கடல்மல்லைத் தலசயனம்
ஆரெண்ணும் நெஞ்சுடையார் அவரெம்மை ஆள்வாரே. 2

ஏனத்தினுருவாகி நிலமங்கையெழில்கொண்டான்
வானத்திலவர் முறையால் மகிழ்ந்தேத்தி வலங்கொள்ள
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத்துறைகின்ற
ஞானத்தினொளியுருவை நினைவாரென் நாயகரே. 3

விண்டாரை வென்று ஆவிவிலங்குண்ண மெல்லியலார்
கொண்டாடுமல்லகலமழலேர வெஞ்சமத்துக்
கண்டாரை கடல்மல்லைத் தலசயனத்துஉறைவாரை
கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமே. 4

பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்
விச்சைக்கிறையென்னு மவ்விறையைப் பணியாதே
கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்
நச்சித்தொழுவாரை நச்சுஎன்தன் நல்நெஞ்சே! 5

புலங்கொள் நிதிக் குவையோடு புழைக்கைம்மாகளிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்களியங்கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்
வலங்கொள் மனத்தாரவரை வலங்கொள்ளென் மடநெஞ்சே! 6

பஞ்சிச்சிறுகூழை யுருவாகி மருவாத
வஞ்சப்பெண் நஞ்சுண்டஅண்ணல், முன் நண்ணாத
கஞ்சைக் கடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்
நெஞ்சில் தொழுவாரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே! 7

செழுநீர் மலர்க்கமலம் திரையுந்துவன்பகட்டால்
உழுநீர் வயலுழவருழப் பின்முன் பிழைத்தெழுந்த
கழுநீர் கடிகமழும் கடல்மல்லைத் தலசயனம்
தொழுநீர் மனத்தவரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே! 8

பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு
இணங்கு திருச்சக்கரத்தெம் பெருமானார்க்கு இடம் விசும்பில்
கணங்களியங்கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்
வணங்கும் மனத்தா ரவரை வணங்குஎன்தன் மடநெஞ்சே! 9

கடிகமழும் நெடுமறுகில் கடல்மல்லைத் தலசயனத்து
அடிகளடியேநினையு மடியவர்கள் தம்அடியான்
வடிகொள்நெடு வேல்வலவன் கலிகன்றி யொலிவல்லார்
முடிகொள்நெடு மன்னவர்தம் முதல்வர்முதலாவாரே! 10

பெரிய திருமொழி.—3-ம் பத்து.—5-ம் திருமொழி.

சங்குதங்கு தடங்கடல் கடல்மல்லையுள்கிடந்தாய்! அருள்புரிந்து
இங்கென்னுள் புகுந்தா யினிப்போயினாலறையோ!

கொங்கு செண்பகமல்லிகை மலர்புல்கி இன்னிள வண்டுபோய் இளந்
தெங்கின் தாதளையும் திருவாலியம்மானே! 8

பெரிய திருமொழி.—7-ம் பத்து.—1-ம் திருமொழி.

புள்வாய் பிளந்த புனிதாவென்றழைக்க
உள்ளேநின் றென்னுள்ளங் குளிருமொருவா!
கள்வா! கடல்மல்லைக் கிடந்தகரும்பே!
வள்ளா லுன்னை எங்ஙனம் நான்மறக்கேனே! 4

திருக்குறுந்தாண்டகம்.

பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனை திரிதந்துண்ணும்
முண்டியான் சாபம்தீர்த்த வொருவனூர் உலகமேத்தும்
கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று
மண்டினார் உய்யலல்லால் மற்றையார்க்குய்யலாமே? 19

திருநெடுந்தாண்டகம்.

வங்கத்தால் மாமணிவந்துந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி யூராய்! பேராய்!
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவைஇடப்பால்கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையினுச்சியாய்! பவளவண்ணா!
எங்குற்றாய்? எம்பெருமானுன்னைநாடி
ஏழையேனிங்ஙனமே யுழிதருகேனே. 9

சிறிய திருமடல்.

காரார்குடந்தை கடிகை கடல்மல்லை
ஏரார் பொழில் சூழிடவெந்தை நீர்மலை 73

பெரிய திருமடல்

மன்னும் கடல்மல்லை மாயவனை வானவர்தம்
சென்னி மணிச்சுடரைத் தண்கால் திறல்வலியை 120

	ரூ.	அ.	ப.		ரூ.	அ.	ப
விக்டோரியா மெய்கீர்த்தி …	0	12	0	செல்வராஜன் …	0	12	0
மாணிக்கவாசகர் …	0	10	0	கமலசுந்தரி …	0	4	0
கமலபவனம் …	0	10	0	சந்திரஹாஸன் ..	0	3	0
காதலா கருணையா …	0	14	0	பவழக்கொடி …	0	8	0
பாதாளவாஸி …	0	6	0	காயற்கண்ணி …	0	12	0
சந்திரகுப்தன் …	0	8	0	ராஜாத்தி …	0	12	0
மங்கம்மாள் …	1	8	0	சிறுமணிச்சுடர் …	0	1	0
ஞானசுந்தரன் …	0	12	0	அர்ஜுன ஸங்யாஸி …	0	12	0
கமலநாதன் …	1	8	0	கதாகதம்பம் …	0	2	0
அமிர்த ஸஞ்சீவினி …	1	2	0	குசேல வெண்பா …	0	8	0
மதுராம்பாள் …	0	12	0	பகீரதன் …	0	1	0
வஜ்ரலேகை …	1	4	0	பாலவிநோதினி …	0	2	0
தயாபரஸுந்தரி …	0	12	0	ஔவையார் …	0	12	0
மீனலோசனி …	0	6	0	ஸாவித்திரி சரித்திரம் …	0	4	0
தீனதயாளு …	0	12	0	ஜியார்ஜ்மன்னன் சரித்திரம் …	0	1	6
பாய்பரமானந்தன் …	1	0	0	வள்ளியம்மை சரித்திரம் …	0	8	0
ஸோமசுந்தரன் …	1	0	0	பாலகங்காசர தலகர் …	0	4	0
யமகாதகன் …	0	8	0	திரிலோகமோஹனாங்கி …	1	0	0
அமரநாதன் …	1	4	0	ஆர்ய சரித்திரம் …	0	8	0
குணஸுந்தரன் …	1	4	0	ராமனும் ஸீதையும் …	0	1	6
கோமளம் குமரியானது …	0	12	0	ஜீவகன் …	1	0	0
குலசேகரன் …	1	0	0	ஸுபோத பாரிஜாதம் …	5	0	0
நாகபூஷணம் …	0	12	0	தனபாலன் …	2	0	0
பீமராவ் …	0	10	0	கற்பசுந்தரி …	2	12	0
விஷதாரி ..	1	4	0	சுந்தர்சிங் …	1	4	0
தாரா …	0	10	0	ஆயிரம் தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி	1	0	0
பாத்திரமறிந்து பிச்சையெடு …	0	1	0	பாலசுந்தரம் …	1	0	0
ராஜராஜேச்வரி …	1	8	0	அம்பலவாணன் …	1	4	0
கல்பலதா …	1	4	0	ருக்மணி …	1	0	0
கோமளா …	0	12	0	சரோஜனீ …	2	0	0
சித்ரரேகை …	1	8	0	அஞ்சனாவதி …	1	4	0
மாயாவதி …	0	8	0	லலிதாதேவி …	0	12	0
விக்ரமோர்வசீயம் …	0	8	0	நீலோத்பலவிசாலாக்ஷி …	1	8	0
ராஜபுத்ர வீரன் …	0	8	0	ஜெயசாந்தகாந்தா …	1	0	0
அழகு சுந்தரி …	0	8	0	திருக்கழுக்குன்றத்துக்கொலை …	1	8	0
உத்தரராமாயண கதைகள் …	0	4	0	கோஹினூர் …	0	9	0
மரகதவல்லி …	0	6	0	பவானந்தர் …	0	8	0
சத்ருஜித் …	0	12	0	ஞானானந்தன் …	0	11	0
ஆஸ்திகோபாக்யானம் …	0	5	0	கோவிந்தன் …	0	10	0
சிறுத்தொண்டர் …	0	8	0	மதனசிங்கர் …	1	4	0
ஸ்ரீமதி …	0	2	0	மாணிக்கவல்லி …	1	0	0
வீரவல்லி …	0	12	0	இரட்டைப்புலவர் சரிதம் …	0	6	0
பாயிரவிருத்தி …	1	0	0	அண்டப்புளுகன் …	0	8	0
மனோன்மணி …	0	12	0	மர்ம்மமுகி …	0	12	0
மனோன்மணி கதை …	0	8	0	ரதிமதனன் …	0	12	0

ஆஸ்திகமநோஜ்ஜீவினீ. காலடி அத்வைத ஸபையிலிருந்து சிருங்கேரி மடத்தாரால் வெளியிடப்படும் ஓர் மாதஸஞ்சிகை. பிரதி ஸஞ்சிகையிலும் ஸம்ஸ்கிருதம், தமிழ் இரண்டு பாஷைகளிலும் வியாஸங்கள் வெளிவரும்.

வருஷ சந்தா ரூ. 6 12 0
தனி ஸஞ்சிகை ரூ. 0 9 0

மானேஜர்,

ஸ்ரீ வாணீ விலாஸ புத்தகசாலை,

ஸ்ரீரங்கம்.



ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.



தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.



9 & 10

திருப்பதி.

(கீழ திருப்பதி)

தமிழ் புத்தகங்கள்.

தேன் இந்தியா க்ஷேத்திரங்கள்.

(முதற் புத்தகம்).

	ரூ.	அ.	ப.
1. ஸ்ரீரங்கம் ...	0	10	0
2. சிதம்பரம் ...	1	0	0
3. திருவானைக்காவல், திருச்சினாப்பள்ளி, உய்யக்கொண்டான் திருமலை	0	10	0
4. கரூர், நெரூர், கங்கைகொண்ட சோழபுரம், அன்பில் ...	0	10	0
5 & 6. மதுரை ...	1	8	0
7. ராமேசுவரம், உத்தரகோசமங்கை, திருப்புல்லாணி ...	0	10	0
8. திருக்கழுக்குன்றம், மஹாபலிபுரம் ...	0	12	0
9. கீழத் திருப்பதி ...	1	0	0


(இரண்டாம் புத்தகம்)


	ரூ.	அ.	ப.
1. திருப்பேரூர் (மேலச்சிதம்பரம்)	1	0	0
திருவானைக்காபுராணம் ...	2	0	0
கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் ...	1	8	0
ஸ்ரீ சங்கரபகவத்பாதர் சரித்திரம் ...	1	0	0
ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்தசிவாபிநவநரஸிம்ஹபாரதீஸ்வாமிகள் திவ்யசரித்திரம் ...	3	0	0
ஸ்ரீமத்பகவத்கீதாரஹஸ்யம் பாலகங்காதாதிலகர் இயற்றியது முதற் பாகம் ...	1	4	0
பகவத்கீதை வெண்பா ஷட்கம்–1 ...	0	6	0
ஷட்கம்–2 ...	0	6	0
ஷட்கம்–3 ...	0	6	0
தேவீ கீர்த்தனைகள் 1-ம் பாகம் ...	0	3	0
௸ 2-ம் பாகம் ...	0	2	0
ஸத்குருஸ்துதி ...	0	2	0
ஹரிஸ்துதி ...	0	2	0
ஸுப்ரமண்யஸ்வாமி ஸ்தோத்ரங்கள்	0	5	0
முருகன் கீர்த்தனைகள் ...	0	2	0
அறச்சிறப்பு ...	0	2	0
கல்வியும், செல்வமும் ...	0	2	0
சிருங்கேரி ஸ்வாமிகள் கொடுமுடியல் செய்த உபன்யாஸம் ...	0	2	0
௸ திருவநந்தபுரத்தில் செய்த உபந்யாஸம் மூன்று பாகங்கள் ...	0	8	0
ஸ்ரீராமாயண ஸாரஸங்கிரகம். ...	0	2	0
சுண்ணாம்பு, சாந்து, சிமெண்டு, காங்கிரீட் தளவரிசை இவைகளைப்பற்றிய நூல் ...	0	4	0
சித்தாதரன் ...	0	2	0
காங்கிரஸ் மஹாஸபை ...	0	4	0
தேவபோகம் ...	1	0	0
நாற்பது லக்ஷம் ரூபாய் ...	0	3	0
தாதாவின் தந்திரம் ...	0	2	0
ஓர் இரவின் ஸம்பவங்கள் ...	0	6	0

	ரூ.	அ.	ப.
ஹேமந்தகுமாரி ...	0	2	0
ஹென்றி பெஸ்டலேஸி ...	0	2	0
ஹிரண்மயி ...	0	2	0
கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறைநூல்	1	0	0
இந்தியாவும்சுயஆட்சியும் ...	1	8	0
இந்திரா ...	0	2	0
கொடியாலம் வாசுதேவ அய்யங்கார்	0	2	0
காவடிச்சிந்து ...	0	2	0
லஜ்ஜாவதி ..	0	2	0
மாலதீ ...	0	3	0
பெருமுடிச்சோழன் ...	0	6	0
ஸதாசிவேந்திர ஸரஸ்வதி ...	0	2	0
அன்பின் வலிமை ...	0	10	0
பிருதுலை ...	0	8	0
இராதாராணி ...	0	2	0
ஸத்குரு கீதை ...	0	8	0
வீரமாதேவன் ...	0	4	0
வித்யாரண்ய நகாம் ...	0	8	0
வியாபாரநீதி ...	0	8	0
ஸ்ரீ வாணீ விலாஸினி தனிச்சஞ்சிகை	0	8	0
„ இரட்டைச் சஞ்சிகை 1க்கு	1	0	0
„ 6 நம்பர்கள் அடங்கிய பயிண்டு செய்த வால்யம் ஒன்றுக்கு ...	3	4	0
ஹனுமான்சிங் ...	0	12	0
சர்கா ...	0	8	0
சுந்தரி ...	1	0	0
பத்மினி ...	0	3	0
ரகுநாதன் ...	0	12	0
குணசீலதிருத்தேர் திருப்பணி அகவல் ...	0	2	0
விவேகசந்திரிகை ...	0	8	0
வஸந்தஸமுத்ரம் ...	0	12	0
ஜினேந்திரன் ...	1	8	0
பொன்னுசாமித் தேவர் கொலை ...	0	14	0
கலாசுந்தரி ...	0	12	0
மதுசூதனன் ..	0	8	0
சிவகுமரன் ...	1	0	0
நற்குலதெய்வம் ...	0	8	0
மதனமனோஹரி ...	0	8	0
நவநீதரம்பை ...	1	0	0
சோமளவல்லி ...	0	8	0
காமேந்திரன் ஞானலோசனி ...	1	0	0
கஜபதி ...	3	10	0
துயராளன்கதை ...	0	12	0
பூர்ன வல்லிகதை ...	0	6	0
கோமளம் காஞ்சியாத்திரை ...	0	8	0
சாரசநேத்ரி ...	0	12	0
காட்டுராஜன் ...	0	3	0
திலோத்தமா ...	0	8	0
மாதவி ...	0	10	0
பவானந்தர் ...	0	8	0



திருப்பதி மலைமேலுள்ள தெப்பக்குளம்.





திருப்பதி மலையடிவாரம். முதல் இரண்டு கோபுரமும் வலது பக்கத்தில் உயரத்தில் காலி கோபுரமும் தெரிவதை கவனிக்கவும்.

திருப்பதி

(கீழத் திருப்பதி)

கலியுகத்தில் கண்ணின் முன் விளங்கும் தெய்வம் என்று தேசங்கள்தோறும் பிரஸித்தி பெற்று விளங்கும் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளுக்கு வாஸஸ்தானமாகிய எழுமலை (திருமலை) க்ஷேத்திரத்துக்குத் திருப்பதியே முக்கிய நகரமாகும். ஆயிரம் வருஷங்களுக்கு முன்னரே காஞ்சீ நகரத்தைப் பரிபாலனம் செய்துவந்த ஆதிகால பல்லவராஜாக்கள் தமது காஞ்சிமண்டலமென்னும் தொண்டைமண்டலத்தை (துண்டீர மண்டலத்தை) ஆமூர் கோட்டம், இளங்காடு கோட்டம், ஈக்காடு கோட்டம், ஈதூர் கோட்டம், ஊற்றுக்காடு கோட்டம், எயில் கோட்டம், கடிகை கோட்டம், காலியூர்



யாத்திரைக்காரர்கள் டோலியிலும் கால் நடையாகவும் மலையேறுதல்.

கோட்டம், களத்தூர் கோட்டம், குன்றபத்திர கோட்டம், சிறுகரை கோட்டம், செங்காடு கோட்டம், செந்திருக்கை (சந்திரிகை) கோட்டம், செம்பூர் கோட்டம், தாமல் கோட்டம், படுவூர் கோட்டம், பல்குன்றம் கோட்டம், புழல் கோட்டம், புலியூர் கோட்டம், பையூர் கோட்டம், மணவூர் கோட்டம், வெண்குன்றக் கோட்டம், வேங்கடக் கோட்டம், வேலூர் கோட்டம் என்று இவ்விதமாய் 24 கோட்டமாக (ஜில்லாக்களாக) வகுக்கும் ஸமயத்தில், இந்த ஏழு மலைகளில் ஒன்றாகிய வேங்கடகிரிக்கு வேங்கடக் கோட்டமென்று பெயரிட்டு வழங்கி வந்தார்கள். ஆகையால் அக்காலம் முதல் இந்த திருப்பதி நகரமும் இதன் அருகிலுள்ள காளஹஸ்தி முதலிய சில முக்கிய க்ஷேத்ரங்களும் பல நகரங்களும் அந்த வேங்கடக்கோட்டத்தைச் சேர்ந்ததாகவே ஏற்படுகின்றன.

பூர்வகால திருப்பதியின் இருப்பிடம்.

இப்படிப்பட்ட திருப்பதியை ஆயிரம் வருஷங்களுக்கு முன்னரே இந்தத் திருவேங்கடமலையின் கிழக்குப்பக்க சார்பில் ஸ்ரீகபிலேசுவரரின் தடாகத்தின் தென்புறத்தில் ஓர் பெரிய ஸமபூமியில் பூர்வீக மன்னர்களும், பெரியோர்களும் நிர்மிக்கவே, அதில் அனேக புண்யபுருஷர்களும் கல்விமான்களும், மற்றுமுள்ளவர்களும் வந்து கூடி ஸுகமாய் நெடுநாள் வாழ்ந்துவந்தார்கள்.

திருமலை என்னும் மேலத் திருப்பதியில் ஆதிகாலமுதல் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி என்னும் இந்நான்கு மாதங்களில் ஆதிசேஷனுடைய விஷமுள்ள மூச்சுக்காற்று போல் மிகவும் கொடுமையான பெருங்காற்று இடைவிடாமல் சீறிச்சீறி வீசுவதை நாம் இப்போதும் கண்டுவருகிறோம். ஆகையால் அத்தகைய பெருங்காற்றானது அக்காலத்திய திருப்பதியின்மீது மோதவே அங்கு வஸிக்கும் ஜனங்களில் பலர் விஷக்காற்று-ஜ்வரத்தை யடைந்து பெரும்பாலும் உயிரிழந்தார்கள். நமது பாரதபூமியாகிய இந்தியாவுக்கு கிழக்கு ஸமுத்திரமாகிய மஹோததியின் கரையிலுள்ள மலைத்தொடர் ஆதிசேஷனது உருவமென்றும் அதின்எழுதலையே இத்திருமலையென்றும், மத்தியஸ்தானம் அஹோபிலம்

என்றும், வாலின்பாகமே ஸ்ரீசைலமென்றும் இம்மூன்று இடங்களும் புண்யஸ்தலங்களென்றும் ஏற்படுகிறது. இதன் கருத்தை முன்னிட்டே இப்பொழுதும் இந்தத் திருமலையில் ஆதிசேஷன் முகமண்டலத்திலிருந்து காற்று வீசுகிறதென்பார்கள்.




காலிகோபுரம் திருப்பதி.

இவ்விடத்திற்குத் தற்காலம் அச்சுதராயபுரமெனப்பெயர். இங்கு இப்பொழுது ஒரு பாழடைந்த கோயில்மட்டும் காணப்படுவதுடன் சில தடாகமும், வீடுகளுமிருந்த சின்னங்களையும் பார்க்கலாம். சில காரணத்தினால் அங்குள்ள ஜனங்கள் இதைவிட்டு வேறிடம் செல்லும்படி நேரிட்டபடியால் இந்த ஸ்தலம் காலியாய்விட்டது. மேலும் இதை நிர்மித்த அச்சுதராய மன்னன் இந்த சேஷாத்திரியில் முடிசூட்டப்பட்டதும் அவர் திருமலையேறி ஸ்ரீவெங்கடாசலபதிசுவாமிக்குப் பலதானம் செய்ததும் "அச்சுதராயாப்யுதயம்" கிரந்தத்தில் தெரிவிக்கப்பட்டுளது.

இக்காலத்திய திருப்பதியின் இருப்பிடம்.

இவ்விதமாய் அங்கு நேரிட்ட விபத்தைக்கண்டு ஆற்றா மனமுடைய சில பெரியோர்கள் மிகவும் தீர்க்கமாய் ஆலோசனைசெய்து, இந்த திருப்பதியானது இந்த சேஷகிரியின் சார்பில் இவ்வளவு நெருக்கத்தில் இருப்பது தக்கதல்ல. அதனாலல்லவோ இவ்விதமாய் காற்றுக்காலத்தில் பிராணிகளுக்கு தீங்கு நேரிடுகிறது, ஆகையால் இத்திருப்பதி நகரை இவ்விடத்திலிருந்து இன்னும் சற்றுதூரம் தெற்குப்பாகத்தில் நிர்மிப்பதே நலமென்று தீர்மானித்தார்கள். அவ்வித ஆலோசனையை யுக்தமென்று கருதிய நமது பூர்வாராஜாக்கள் அவ்விடத்திலிருக்கும் (கபிலேச்வாரின் தடாகக் கரையிலிருக்கும்) திருப்பதியைக் காலிசெய்துவிட்டு அவ்விடத்திற்குத் தெற்கே சற்றேறக்குறைய இரண்டு மைல் தூரத்தில் உள்ளதொரு முல்லைபூமியில் அந்நகரைப் புதிப்பிக்க முயன்றார்கள்.

அப்படி நகர நிர்மாணம் செய்வதிலும் சேஷகிரி அதாவது ஸர்ப்ப மலையிலிருந்து இந்த அடிவாரநகரத்திற்கும் பரவிவரும் விஷக்காற்றுப் பட்டு அதனால் ஜ்வரம் ஜனங்களுக்கு நேரிடுவதைத் தடுப்பதற்காக நகரத்தை கருட ஸ்வரூபம் பெற்றதாய் அமைக்கவேண்



திருப்பதி மலைமேலுள்ள கோவிலின் பொதுக்காக்ஷி.

டுமென்று தீர்மானித்து நமது சிற்பசாஸ்திர முறைப்படி அம்மாதிரியே கருடன் இறகுகளை விரித்துக்கொண்டு ஆகாயத்தில் பறக்கும்பொழுது அக்கருடனுடைய உருவ நிழல் பூமியில் எப்படி காணப்படுமோ, அம்மாதிரி உருவத்தை உடையதாய்த் திருப்பதியை ஸ்தாபித்தார்கள். சில காலம் செல்வதற்குள்ளாகவே இப்பொழுது விளங்கும் திருப்பதி நகரமானது சதுரச்ராகாரமாய் கிழக்கு முகமுடையதாயும், நடுபாகத்தில் ஒரு தேவாலயத்தைக் கவர்ந்துகொண்டிருப்பதாயும், அவ்வாலயத்தின் முன்புறத்தில் பெரியதொரு ஸந்நிதி வீதியை யுடையதாயும், கோயிலைச் சுற்றிலும் மாடவீதி யென்னும் மடவிளாகத் தெருவுகளை யுடையதாயும், புக்கைகள் என்னும் அநேக சிறிய நடைவாபிகளை யுடையதாயும், சுமார் கி. பி. ஏழாவது நூற்றூண்டின் முடிவில் புதிப்பிக்கப்பட்டதென்று தெரியவருகிறது.

பார்த்தஸாரதி மூர்த்தியின் கருணை

இது மாத்திரமல்ல, அவ்விதமாய் பிராம்மணோத்தமர்களின் வீடுகளுடன் கூடியதாய் அமைக்கப்பட்ட இந்தத் திருப்பதி நகரமானது, நமது பூர்வ ராஜாக்களின் உதவியினால் நகரத்தைச் சுற்றிலும் பல தடாகங்களையும், நடைவாபிகளையும், நந்தவனங்களையும் அடையப்பெற்று விளங்கும் தருணத்தில் சாலிவாஹனசக்கிரவர்த்தியின் எட்டாவது நூற்றூண்டில் இந்த திருப்பதியிலுள்ள தேவாலயத்தில் ஸ்ரீபார்த்தஸாரதி என்னும் விஷ்ணு மூர்த்தியை சாஸ்திர முறைப்படி பெரியோர்கள் பிரதிஷ்டை செய்து பூஜித்து வரலாயினர். ஆயினும் அவ்வித விஷ்ணு மூர்த்தியின் சிலாரூபமாகிய மூலவிக்ரஹத்தின் திருமேனியின் அடிவயிறு பாகத்தில் ஓர் தவளை வஸிப்பதாய்க் கண்டுகொண்ட பெரியோர்கள் அது




திருச்சானூர் கோவிலிலுள்ள மண்டபம்.

யளிக்காமல் அந்த பார்த்தஸார
முதல் அம்மூலமூர்த்திக்குப் பூஜை முதலிய உபசாரங்களை
தியின் உத்ஸவ மூர்த்தியையே முக்யதேவதையாகப் பாராட்டிக்கொண்டு, அம்மூர்த்திக்கே
திருவிழா முதலியவைகளைக் காலந்தோறும் கைவிடாமல் நடத்தி வந்து அம் மூர்த்தியின்
கருணையால் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

திருப்பதி ஜனங்கள் எல்லோரும் அவ்வுத்
இவ் வண்ணமாய் பூர்வ காலத்திலுள்ள
ஸவ மூர்த்திக்கு ஸகல வைபவங்களையும் நடத்திக்கொண்டபோதிலும், தங்களுடைய
தேவாலயத்தில் ஒரு சிறந்த மூலமூர்த்திக்கு இவ்வித அபாயம் வந்து விட்டதே, இதற்கு
என் செய்வோம்; எவ்வாறு மறுபடியும் அம்மூலமூர்த்தியை பிரதிஷ்டை செய்வோம் என்
னும் சிந்தையானது அவர்களது மனதைவிட்டு நீங்கவே யில்லை.

இராமானுஜரின் பிறப்பு

இப்படி யிருக்கையில் சாலிவாஹன மஹாராஜாவினுடைய பத்தாவது நூற்றூண்
டின் ஆரம்பத்திலேயே காஞ்சி நகரத்தின் அருகில் விளங்கும் ஸ்ரீபெரும்பூதூரில் ஆஸுரி
கேசவரென்னும் பிராம்மணோத்தமருக்கு ராமானுஜாசாரியார் புத்திரராய் அவதரித்தார்.
அவருக்கு பாலியப் பெயர் இளையாழ்வா ரென்பதே பிரஸித்தமாயிருந்தது. இவரது விக்ர
ஹம் ஜீவ களைகளுடன் இப்பொழுதும் ஸ்ரீ பெரும்பூதூர் கோயிலில் விளங்கிவருவதைக்
காணலாம். ராமானுஜாசார்யர் என்னும் அவ் விளையாழ்வார் தனது பால்ய வயதிலேயே
காஞ்சீபுரத்தை யடைந்து, அங்குள்ள யாதவப்ரகாசர் முதலான பெரிய பண்டிதர்களிடத்
தில் ஸகல சாஸ்திரங்களையும் வெகு விரைவில் கற்கலானார். அவர் இவ்வாறு இருபது வய
துக்குள் கல்விகளைக் கற்றுத் தேறியபிறகு சாஸ்திர முறைப்படி இல்லற வாழ்க்கையில்



திருப்பதிமலை கோவிலின் பிராகாரம்.

கொஞ்சகாலம் அமர்ந்திருந்தார். பிறகு அவர் தமது ஸத்குருவினிடமிருந்து ஸன்யாஸத்தைப் பெற்று, பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரியராய் விளங்கியபொழுது ஏராளமான சிஷ்யர்கள் அவரிடம் வந்து கூடினர். அத்தகைமையுடன் விளங்கும் ராமானுஜாசாரியர் அச்சிஷ்யர்களுக்கு ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியின் பரதத்துவத்தை விளக்கும் பொருட்டு பகவத்கீதைக்கும் ப்ரம்ம ஸூத்ரத்துக்கும் வியாக்யானம் செய்து அக்கருத்தை அவர்களுக்கு நன்ருய் உபதேசித்து விசிஷ்டாத்வைதமென்னும் ஒரு ஸித்தாந்தத்தை உலகில் பரவச் செய்து அநேக விஷ்ணு க்ஷேத்திரங்களும் சிறக்கும்படி செய்யத் தொடங்கினர்.

தில்லையில் சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் கலகம்

அத்தருணத்தில் தில்லை என்னும் சிதம்பர க்ஷேத்திரத்தில் சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் தந் தமது தெய்வவிஷயமாய் கலகம் உண்டாயிற்று. அவ்வித கலகத்தை அடக்கக்கருதிய அக்காலத்திய சோழராஜனொருவன் குலோத்துங்க சோழதேவன் (2 ஆவது ?) அவ்விரு கக்ஷியாரின் வழக்கை விசாரித்து ஒருவாறு தேறுதலடைந்து சிவக்ஷேத்ரமாகியசிதம்பரஸ்தலத்தில் விஷ்ணுமூர்த்தி விளங்குவதை நாம் அங்கீகரிக்கவில்லை யென்று தீர்மானஞ்செய்துவிட்டான். அதனுல் அவ்விஷயத்தைத் தெரிந்துகொண்ட ராமானுஜாசாரியர் நெடுநாளாய் ஆழ்வார்களால் புகழப்பெற்ற அவ்விஷ்ணு மூர்த்தியை சைவர்கள் மறைத்துவிடுவதை நாம் நலமென்று கருதுவது ஓர் ஆசிரியனுக்கு அழகல்ல; அவ்விடம் சென்று அவர்களுடன் வாதப்போர் புரிவதும் ஸுலபமான காரியமன்று. ஆகையால் அநாதிகாலமாய் விளங்கிச் சிறந்தோங்கிய தில்லை கோவிந்தராஜப் பெருமாளை எதாவது மற்ருேரிடத்தில் ஸ்தாபிப்பதே உலகோர்களுக்கும் நமக்கும் நலமென்று கருதினர்.

தில்லை கோவிந்தராஜர் இவ்விடம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய "திருச்சிற்றம்பலக்கோவை"யிலிருந்தும், குலசேகர ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் பாடிய பிரபந்தத்திலிருந்தும் அவர்களது காலத்தில் கோவிந்தராஜப்பெருமாள் தில்லையில் பள்ளிகொண்டிருந்தது ஏற்படுகிறது.

புரங்கடந்தானடி காண்பான் புவி
விண்டு புக்கறியா
திரங்கிடேன் றுயென் றிரப்பத்தன்
னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தானென் று காட்ட
மற்றுங்கதுங் காட்டிடென்று
வரங்கடந்தான் தில்லை அம்பல முன்றி
லம் மாயவனே
(திருச்சிற்றம்பலக்கோவை)
செங்தெளிர்வாய் மலர்நகைசேர்
செழுந்தண் சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னு
ளந்தணர் ளொருமூவா யிரவ ரேத்த
வணிமணியா சனத்தமர்ந்த வம்மான்
றுனே
பைம் பொன்னுமுத்தும் மணியுங்
கொணர்ந்து படைமன்னவர் பல்
லவர்கோன் பணிந்த




திருப்பதி கோயிலிலுள்ள ஓர் மண்டபம்.

செம்பொன் மணிமாடங்கள்சூழ்ந்த தில்லைத்திருச்சித்ர கூடஞ்சென்றுசேர்மின்களே
ஒருமா கடலுட் கிடந்தானுவந்து கவைநாவரவினணைப் பள்ளியின் மேல்
திருமால் திருமங்கை யோடாடு தில்லைத் திருச்சித்ரகூடம்
மூவாயிரநான் மறையாளர் நாளும் முறையால் வணங்கவ்வணங்காய சோதித்
தேவாதி தேவன் திகிழ் கின்ற தில்லைத் திருச்சித்ரகூடம்

மேலும் ஒரு பல்லவ மன்னர் இப்பெருமாளுக்கு ஏராளமான திரவியம் சமர்ப்பித்ததும் மூவாயிர தீக்ஷிதர்கள் சுவாமியை பூஜித்ததும் விளங்குகிறது. இவர்கள் காலத்திற்குப்பின்வரே அடியில்கண்ட "குலோத்துங்கசோழநுலா", "ராஜராஜநுலா" இவைகளிலிருந்து ஸ்ரீ நடராஜர் கோயிலுக்குப் பலதிருப்பணிகள் செய்து பிராகாரமதிலும் கட்டிவைத்த இரண்டாவது குலோத்துங்கன், இரண்டாவது ராஜராஜன் இவர்கள் காலத்தில் அவர்களது வெருப்பினுல் இந்த விஷ்ணுமூர்த்தி எடுபட்டு கடலில் எறியப்பட்டது விளங்குகிறது. இதுதவிர இந்த விவாம் "தக்கயாகப்பரணி" யாலும் வெளியாகிறது.

புவனி முழுதுடைய பொற்றெடியுந் தானும்
அவனி சுரர் சுருதி யார்ப்ப—நவநிதிதோய்ந்
தேத்தற் கருங் கடவு ளெல்லையிலா னந்தக்
கூத்தைக் களிகூரக்கும்பிட்டுப்—போற்றினமேற்
றில்லைத் திருமன்றின் முன்றிற்—சிறு தெய்வத்
தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து.........[குலோத்துங்கநுலா]




கோவிந்தராஜப் பெருமாள்கோயில், திருப்பதி.

அம்பொற் குடைச்சகணுயிரத்
தொன்பதாம் வருஷத்துத் தென்
பால் சென்னி குலோத்துங்கன்
சித்திரகூடச் செங்கண்மால்
தன்னை அலையெறி நாள்தான் [ராமானுஜார்ய திவ்யசரிதம]

குட்டத்திருமகுடஞ் சூட்டியபின்—ஞட்டு
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பணைத்து
முன்னிற் கடல்களில் மூழ்குவித்த—சென்னி
திருமகன் சீராஜ ராஜன்.........[ராஜராஜநுலா]

முன்றிற் கிடந்த கருங்கடல் போய் முன்னைக்கடல் புகப்பின்னைத்தில்லை
மன்றுக் கிடங்கண்ட கொண்டல் பெற்ற மாகதமேருவை வாழ்த்துவனே

பின்னர் ராமானுஜர் காலத்தில் தற்காலமுள்ள கோவிந்தராஜர் சந்நிதி ஏற்பட்டது "பிரபந்நாமிர்த" த்திலிருந்து தெரியவருகிறது. இக்கிரந்தம் ராமாய மஹாராஜா விஜயநகரத்தில் ராஜ்யபாரம் வஹிக்கையில் சந்திரகிரி போனகாலத்தில் கடிகாசலத்தில் (சோளிங்கபுரம்) வித்வத்வம் வஹித்த மஹாசாரியாரெனப்படும் தொட்டாசாரியர் இக்கோவிந்தராஜர் சந்நிதியை மருபடியும் ஏற்படுத்த முயன்று அந்தப்படி செய்வித்தனராம்.



திருப்பதி மலைக்கோயிலைச் சேர்ந்த தெப்பக்குளம்.

श्रीरामदेवरायाख्यः कृष्णरायादनन्तरम् ।
शशास राज्यं धर्मेण गुरुभक्तिपरायणः ॥

स भूपतिर्महातेजा ययौ चन्द्रगिरिं प्रति ।
गुरुं ताराख्यमादाय रामरायाभिधस्तदा ॥

तस्मिन्काले महाचार्यः सर्वशास्त्रविदां वरः ।
अवर्तताप्रतिद्वन्द्वो वाधूलो घटिकाचले ॥

किलीकृतं चित्रकूटं क्रिमिकण्टेन यत्पुरा ।
तत्प्रतिष्ठापितं सम्यक् तदा मेने महागुरुः ॥


रामरायसहायेन महाचार्यो महायशाः ।
दुर्जयानपि निर्जित्य शैवान् शास्त्रविदुत्तमः ॥

स सम्यक् स्थापयामास गोविन्दं चित्रकूटके ॥

गोविन्दराजो भगवान् महाचार्यप्रतिष्ठितः ।
महोच्छ्र्यश्चित्रकूटे ह्यद्यापि परिदृश्यते ॥

கர்ப்பக்கிருஹத்திற்குக் கல்திரை

அப்பொழுதே திருப்பதியிலுள்ள பெரியோர்கள் மனக்கருத்தும், செய்கையும் ராமானுஜரின் மனதில் படிந்தது. அதனால் மிகவும் மனக்களிப்படைந்த ராமானுஜர் திருப்



திருச்சானூர் கோயிலின் கோபுரவாசல்.

பதி மஹாஜனங்களையும் தமது சிஷ்ய கோடிகளையும் ஸகாயமாக வைத்துக்கொண்டு சிதம்பரத்தின் வடதிக்கிலுள்ள மற்றுஞ் சில ராஜாக்களின் பேருதவியினால், தில்லையில் விளங்கிய அந்த கோவிந்தராஜனையே திருப்பதியில் ஸ்தாபிப்பதாக ஸங்கல்பஞ் செய்துகொண்டு தமது பரிவாரத்துடன் திருப்பதிக்கு வந்தார். அப்பொழுது அங்குள்ள ஸத்புருஷர்களினால் கொண்டாடப்பட்ட ராமானுஜர் திருப்பதிக் கோயிலுக்குள் பிரவேசித்து, அதில் தோற்றும் ஸ்ரீபார்த்தஸாரதியின் சிலாரூபமான மூலமூர்த்தியை தரிசித்தார். சற்றுநேரம் ஆலோசித்து, இப்படிப்பட்ட திவ்யமூர்த்தியின் உடம்பினுட்புறத்தில் ஓர்வித தோஷமேற்பட்டபோதிலும் இம்மூர்த்தியை இந்த ஸ்தானத்திலிருந்து வெளிப்படுத்தக் கூடாது. இம்மூர்த்தியின் கர்ப்பக்ருஹத்தைக் கல்திரை (கல்லால் மறைப்புச் சுவர்) சாத்தி மூடிவிடவேண்டும் என்று தீர்மானித்தார். அவரது உத்தரவைச் சிரசில்கொண்ட பெரியோர்களும் அம்மாதிரியே செய்தார்கள். ஆகையால் அன்றுமுதல் இன்றுவரையில் இந்த திருப்பதியில் ஸந்நிதிவீதி கோபுரம், இரண்டாவது கோபுரம், மூன்றாவது கோபுரம் முதலியவைகளுக்கு நேர் கிழக்காக விளங்கும் இந்த ஸ்ரீ பார்த்தஸாரதியின் கர்ப்ப கிருஹமானது கல்லினால் மூடப்பட்டிருக்கிறது.

கோவிந்தராஜரை ஆவாஹனம் செய்தல்.

ராமானுஜர் இவ்விதமாய் அந்த பார்த்தஸாரதி மூர்த்தியின் மூலவிக்ரஹத்தை மாத்திரம் கல்லினால் மூடி மறையும்படி ஏற்பாடு செய்துவிட்டு, அந்த ஸ்தலத்தை அணைத்துக்கொண்டால் போலவே தோற்றும்படியாய் அதற்கு வடக்கில் அதுபோலவே அளவு தோற்றங்களை உடையதாயும், திருவுண்ணாழிகை ப்ரதக்ஷிணம் என்னும் உட்ப்ரதக்ஷிண அங்கணத்தை அடைந்ததாயும், கிழக்கு முகமாய் விளங்குவதாயுமுள்ள மற்றொரு கர்ப்பக்ருஹத்தை வெகு சீக்கிரத்தில் கட்டி முடித்து வைத்து அந்த கர்ப்பக்ருஹத்தின் உச்சியில் கோடிசூரியப் பிரகாசமாய் விளங்கும் ஐந்து சிகரங்களையும் ஸ்தாபித்த பிறகு, தமது மந்திர

சக்தியின் மஹிமையினால் அதுவரையில் நில்லை என்னும் சிதம்பரத்தில் விளங்கி வந்த அந்த கோவிந்தராஜ மூர்த்தியை தாம் நிர்மித்த புதிய கர்ப்பக்ருஹத்தில் ஆவாஹனம செய்தார்.

கும்பாபிஷேகம்.


திருப்பதியில் இவ்விதமாய் ராமானுஜர் கோவிந்தராஜ மூர்த்தியைத் தெற்குத்திக்கில் சிரசை உடையவராயும் அந்த சிரசின் கீழ் உலகோர்களுக்கெல்லாம் தினந்தோறும் படியளக்க வல்லதாய்த் தோற்றும் ஒரு மரக்காலை அணைத்துக் கொண்டவராயும், வடக்கு திக்கில் பாதங்களை நீட்டியவராயும், பாதத்தருகில் மது, கைடபர் முதலியவர்களால் துதிக்கப்பெற்றவராயும் தனது உந்தியின்நடுவில் சதுர்முகனைக் குளிர நோக்கிக்கொண்டும் தனது கடாக்ஷத்தை விரும்பிவரும் பக்தர்களை வாருங்களென்று கூப்பிடுகிறவர்போல் எதிர் முகமாய் விளங்கும் வண்ணமாய் சயனமூர்த்தியாக ஸ்தாபித்த பொழுது, அந்த சுப ஸமயத்தில் வேத சாஸ்திர ஆகமங்களைக் கற்ற பெரியோர்கள் அந்த ராமானுஜரை முன்னிட்டுக்கொண்டு அந்த கோவிந்தராஜமூர்த்திக்குச் சாஸ்திர முறைப்படி கும்பாபிஷேகம எனும் ஸம்பிரோக்ஷண முறையை நடத்தி வைத்தார்கள்.



திருப்பதி மலையிலுள்ள கோயிலின் முதல் கோபுர வாசல்.

இராமானுஜரின் அத்புதச் செயல்கள்.

மேலும் அச்சமயத்திலேயே ராமானுஜர் மற்றொரு அத்புத காரியம் செய்துவைத்தார். அதாவது பழைய பார்த்தஸாரதி மூலமூர்த்திக்கு உத்ஸவ மூர்த்தியாயும், அன்றுவரையிலும் அக்கோயிலுக்கு க்ஷேத்ராதிபதியாய் விளங்கியும் பற்பல திருவிழாக்களை உகந்தவராயும் விளங்கும் பார்த்தஸாரதியின் உத்ஸவமூர்த்தியையே இந்தப் புதிய கோவிந்தராஜனுக்கு உத்ஸவ மூர்த்தியாக ஏற்படுத்தினர். இது மாத்திரமல்ல; ராமானுஜர் இவ்விதமாய் சிதம்பர கோவிந்தராஜனை திருப்பதியின் ஆலயத்தில் ஆவாஹனம் செய்து வைத்தும் பார்த்தஸாரதியின் உத்ஸவ மூர்த்தியையே அவருக்கு உத்ஸவ மூர்த்தியாக ஏற்படுத்தியும்



திருப்பதி கோயிலிலுள்ள ஓர் மண்டபம்.

தேவகிரியைப் பரிபாலனஞ்செய்து வந்த யாதவராஜாக்களின் பேருதவியினால் அனேக கிராமங்களை ஸர்வ மான்யமாகப் பெற்று அந்த கிராமங்களின் வருமானத்தைக்கொண்டு திருப்பதி கோவிந்தராஜனுக்கு வைகாசி மாஸ பூர்வபக்ஷத்தில் பிரமமோத்ஸவத்தையும் வெகு சிறப்பாய் நடத்திவைக்கத்தொடங்கினார்.

மனோரதங்கள் நிறைவேற ஏற்பாடு.

இதுவுமன்றி இந்தத் திருப்பதி கோவிந்தராஜனை தரிசிப்பதற்காக வரும் பக்தர்களும், வட திருவேங்கட மென்னும் ஏழுமலையில் விளங்கும் ஸ்ரீவேங்கடேசப் பெருமாளை தரிசிப்பதற்காக வந்து கூடும் பக்தர்களும் இந்தத் திருப்பதி கோவிந்தராஜனுடைய நாமதேயத்தையே "கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!" என்று மும்முறை பக்தியுடன் உச்சரிப்பார்களாகில் அப்பொழுதே அவர்களின் மனோரதங்கள் நிறைவேறக் கடவது என்றும் ராமானுஜர் ஏற்பாடு செய்தார். இது காரணம்பற்றியே இப்பொழுதும் திருப்பதிக்கு வரும் ஜனங்கள் யாவரும் வேங்கடாசலபதியை தியானித்து மஞ்சள் வஸ்திரங்களை அணிந்துகொண்டு தமது வீடுகளிலிருந்து புறப்படும் பொழுதும் இந்த கோவிந்தராஜாவின் கோபுரத்தை நோக்கும்பொழுதும், மற்றும் பல ஸமயங்களிலும் "கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!" என்று பக்தியுடன் கதறுவதை நாம் தினந்தோறும் காண்கிறோம்.

ஆசாரியார்களுக்குத் தனித்தனி ஆலயங்கள்.

ஆகையால் இவ்விதமாய் ஸகல ஜனங்களுக்கும் நன்மையை விளைவிக்கக் கருதிய ராமானுஜர் திருப்பதியில் தில்லை கோவிந்தராஜனை பிரதிஷ்டை செய்ததுமன்றியில், அநேக பக்தர்களின் திரவிய ஸஹாயத்தைக் கொண்டு ஸ்ரீ கோவிந்தராஜாவின் தேவியாகிய ஸ்ரீ புண்டரீகவல்லித் தாயாரின் ஆலயத்தையும், கலியாண மண்டபத்தையும், த்வஜஸ்தம்பம், முற்கோபுரம் முதலிய பல திருப்பணிகளையும் நிறைவேற்றிவைத்த பிறகு ராமானுஜர்

தமக்கு பூர்வாசாரியர்களாகிய திருமலைநம்பி, குலசேகர ஆழ்வார், நம்மாழ்வார், திருமங்கை யாழ்வார் முதலான பெரியோர்களுக்கும் தனித்தனியாய் ஆலயங்களைக் கட்டிவைத்தும், அவைகளில் ஆழ்வார்களின் மாத திருநக்ஷத்திர உத்ஸவக் கொண்டாட்டத்தையும் வருஷத்துக்கொருமுறையும் மார்கழி மாஸத்தில் அத்யயனோத்ஸவச் சிறப்பையும் நடத்தும்படியும் ஏற்பாடு செய்வித்தனர். அத்தகைய உத்ஸவங்கள் இப்பொழுதும் நடைபெற்று விளங்குவதைக் காணலாம்.



திருப்பதி கோயிலிலுள்ள ஓர் மண்டபம்

ஆழ்வார் தீர்த்தம்.

இவ்வண்ணமாய் ராமானுஜர் திருப்பதி கோவிந்தராஜனுடைய ஆலயத்தில் ஆழ்வார்களின் விக்ரஹங்களை ஸ்தாபித்து அவ்வாழ்வார்களையும் கோவிந்தராஜனையும் தினந்தோறும் தரிசித்துக்கொண்டு அவ்வூரிலேயே சில காலம் தங்கியிருந்து தமது ஆசாரியரான திருமலைநம்பியிடமிருந்து தாம் உபதேசம் பெற்ற ராமாயணத்தின் மேன்மையைத் தமது சிஷர்களுக்கு எடுத்துக் கூறிக்கொண்டிருந்தார். ஒருஸமயத்தில் அந்த ராமானுஜர் இவ்வண்ணம் அத்திருப்பதி நகருக்கு சுமார் 2மைல் தூரத்தில் வடக்கில் மலையின்சார்பில் விளங்கும் கபிலேச்வரரின் எதிரிலுள்ள புண்யதீர்த்தத்துக்கு(கபிலதீர்த்தத்துக்கு)ஆழ்வார் தீர்த்தமென்று வேறு பெயரிட்டு அதன் கரையில் நம்மாழ்வாரின் கோயிலையும் முகமண்டபத்துடன் கூடியதாய்க் கட்டும்படி ஏற்பாடு செய்தார். (இக்கோயில் இப்பொழுது ஜீர்ணமடைந்துளது). இவ்விஷயமும் அவ்வாழ்வார் கோயிலின் முன்பக்கத்தில் வரையப்பட்ட சிலாசாஸனத்தில் "ஆழ்வாருடை விமானமும் மாளிகையும் மண்டபமும்" என்று தொடங்கிய சாஸன வாக்யங்களினால் 'வான் எடுத்த கையழகியாரான பல்லவராயர்' என்பவன் செய்த திருப்பணி விஷயமும் நன்கு காணப்படுகிறது.

திருவேங்கடநாத யாதவராய மஹாராஜன் திருப்பணி

இவ்விதமாய் ராமானுஜரால் திருப்பதி க்ஷேத்திரத்துக்கு ஏற்பட்ட மஹிமையான



விஜய நகரத்தரசராகிய கிருஷ்ணதேவராயரும் அவருடைய இரண்டு மனைவிகளும்.

து தேசங்கள்தோறும் பரவிவரும்பொழுது, தேவகிரி என்னும் நகரத்தைப் பரிபாலனம் செய்துவந்த திருவேங்கடநாத யாதவராயன் என்னும் சக்ரவர்த்தியானவன் தனது பரிவாரங்களுடன் இந்த திருப்பதிக்கு வந்து, ஸ்ரீ கோவிந்தராஜனை நமஸ்கரித்து ஆனந்தக்கண்ணீர் பரப்பி தனது தகப்பனாகிய யாதவ நாராயணன் பேரால் இந்த கோவிந்தராஜனுக்குத் தினந்தோறும் உதயகாலத்தில் ஒரு பூஜை நடத்தி வரும்படி ஏற்பாடு செய்தான். அதுமுதல் வெகுநாள் வரையில் அவ்விதமாய் திருப்பதி கோவிந்தராஜனுக்கு 'யாதவ நாராயணன் ஸந்தி' என்று ஓர் உதயகாலச் சிறப்பு நடந்து வந்தது.

மேலும் இப்படிப்பட்ட சிறப்பை ஏற்படுத்திய திருவேங்கடநாத யாதவராய சக்ரவர்த்தியானவன் ஸ்ரீ கோவிந்தராஜனுடைய முதல் ப்ராகாரத்தின் தென்புறத்தில் இருபத்தெட்டு சித்திரக் கற்கம்பங்களையுடையதாயும், கிழக்கு முகமாயும், அதன் நடுவில் கண்ணாடி அறை மண்டபமென்று கூறப்படும் ஒரு சிறிய மண்டப விமானத்துடன் கூடியதாயும் விளங்கும் கலியாண மண்டபத்தை வெகு அழகாய்க் கட்டிமுடித்தான்.

பிறகு அவ்வரசன் மேல் திருப்பதி என்னும் திருமலைக்குச் சென்று, அங்கு விளங்கும் வேங்கடேசப்பெருமாளையும் நமஸ்கரித்து, அவருடைய ஸ்ரீபாத கமலத்தில் அளவற்ற பக்தியினால் திருப்பதி என்னும் கிராமத்தை ஸர்வமான்யமாக வேங்கடாசலபதியின் பூஜைமுதலான நித்தியப்படிச்செலவு வகைக்குச் ஸமர்ப்பித்ததுமன்றி அந்த வேங்கடாசலபதியின் முதல் ப்ராகாரத்தின் தென்புறத்திலும், தான் திருப்பதியில் நிர்மித்தது போலவே மிகவும் அழகு வாய்ந்ததாய் ஒரு கலியாணமண்டபத்தைக் கட்டிவைத்தான். அன்று முதல் இந்நாள்வரைக்கும் அவ்வித கலியாண மண்டபமிரண்டிலும் ஸ்ரீ கோவிந்தராஜனுக்கும், மலையப்பனுக்கும் கலியாண உத்ஸவம், அத்யயன உத்ஸவம் முதலானவை நடந்து வருகின்றன.

வீரநரசிங்க யாதவராயன் தர்மம்

ஸ்ரீ கோவிந்தராஜனுடைய ஆலயத்தின் முதல் ப்ராகாரத்தின் வடக்குச் சுவரில் வரையப்பட்ட சிலாலிகிதத்தில் கூறியபடியே ஏராள திரவியத்தைச் செலவுசெய்து கலி




ஸ்ரீ ராமாநுஜாசாரியார்.

யான மண்டபங்களை நிர்மித்ததும் திருப்பதியை ஸர்வமான்யமாகவும் அளித்த திருவேங்கடநாத யாதவராஜன் காலஞ்செல்லும் தருணத்தில் அவனது ராஜ்யத்தைத் துருக்கர் பலவாறு பீடிக்கத்தொடங்கினர்கள். அத்தகைய காரணத்தினல் அந்த திருவேங்கடநாத யாதவராஜனுக்குப் பிறகு அவனது ஸிம்மாஸனத்திலேறிய வீரநரசிங்கயாதவராயனென்னும் மிகவும் புகழ்பெற்ற ஓரரசன் தனக்கும் தமது பூர்வீகர்களுக்கும் தலைநகராய்விளங்கிய தேவகிரியைத் தான் காலிசெய்து அக்கொடிய துருக்கர்களுக்கு அந்நகரை ஸ்வாதீனமாகச் செய்துவிட்டுக் கலியாணபுரம், ஸ்ரீரங்கப்பட்டணம் முதலான சிறந்த நகரங்களைத் தனக்குத் தலைமைப்பட்டணமாக வைத்துக்கொண்டு மிகவும் மேன்மையாய் மேல்நாட்டை ஆண்டுவரலானன்.

பிரம்மோத்ஸவம்.

இவ்விதமாய் மிகவும் சிறப்புடன் ராஜ்யபாரம் செய்யும் அந்த வீரநரசிங்க யாதவ



திருப்பதி மலையிலுள்ள கோயிலின் உட்புறத்தில் இருக்கும் பிராகாரம்.

ராயனென்பவன் காஞ்சி நகரில் விளங்கிய கோப்பெருஞ்சிங்கனென்னும் பல்லவராஜனை வென்று அவனது நாட்டையும் ஸ்வாதீனம் செய்துகொண்டு பிறகு மூன்றாவது ராஜராஜ சோழனுடைய உதவியினாலும், தனது சிறந்த சேனாபதியாகிய இம்மடி ராகுத்தராய சிங்கயதண்ணாயக்கன் என்பவனுடைய சாதுர்யத்தினாலும் அந்த துருக்கர்களின் தொந்தரவு நமது தென் தேசத்தின்மேல் பாயாதபடி மிகவும் ஜாக்கிரதையுடன் அந்த துருக்கர்களை மேற்கு திக்கிலேயே தகைந்து வந்தான்.

இவ்வண்ணமாய் நமது தென்னாட்டுக்கு நேரிட்ட துருக்கர் பயத்தை ஒழித்து, நன்மையை விளக்கிய அந்த வீரசிங்க யாதவராஜன் ஒரு ஸமயத்தில் தனது அரண்மனை குடும்ப பரிவாரத்துடன் திருப்பதிக்கு வந்து, அவ்விடத்தில் வைகாசி மாதத்தில் ராமானுஜர் ஏற்படுத்திய மாதிரியே ஸ்ரீ கோவிந்தராஜனுக்கு நடைபெறும் வைகாசி பிரம்மோத்ஸவச் சிறப்பைக் கண்டு பரமானந்த மடைந்தான். அத்தருணத்தில் அந்த யாதவராஜனுடைய பட்ட மஹிஷியான யாதவ நாச்சி என்பவள் மிக்க ஆச்சரியத்தையும், பூர்ண பக்தியையுமடைந்து, அது முதற்கொண்டு அந்த வைகாசி உத்ஸவம்போலவே ஸ்ரீ கோவிந்தராஜனுக்கு ஆனிமாதத்திலும் ஒரு பிரம்மோத்ஸவம் தனது பெயரால் நடைபெறவேண்டுமென்று ஏற்பாடு செய்து அவ்வித சிலவுக்காக திருப்பதிக்கு அருகிலுள்ள பயிண்டிப்பள்ளி என்னும் கிராமத்தின் பாதிபாகத்தை ஸர்வமான்யமாக அளித்தாள். (அப்பொழுது ஆரம்பித்த அந்த ஆனித்திருநாளானது அநேக வருஷ காலம் வரையில் நடைபெற்று வந்ததுபோலும்.)

படிகாவல் கோபுரம்.

யாதவராயர் பட்டமஹிஷியானவள் இவ்வாறு தனது பெயராலே புதியதாய்

ஒரு ஆனித் திருநாளை நடத்திவைக்கத் தொடங்கியபொழுது அந்த யாதவராஜனும் தனது பெயரால் ஸ்ரீ கோவிந்தராஜனது த்வஜஸ்தம்பத்துக்குக் கிழக்கில் முதல் கோபுரத்தை வெகு அழகாய்க் கட்டிவைத்ததுமன்றி அந்த கோபுரத்துக்குக் கிழக்கில் வெளிபாகத்தில் வடக்கு முகமாய் ராமானுஜருடைய ஆலயத்தையும் ஒரு சுற்றுப்ரதக்ஷிணத்துடன் கூடியதாயும் முன் மண்டபத்தை கவர்ந்ததாயும் நிர்மித்து வைத்தான்.



திருப்பதி மலைக்கோபுரமும், த்வஜஸ்தம்பமும்.

இது மாத்திரமல்ல; அந்த வீரநரசிங்க யாதவராஜன் சிலகாலம் சென்ற பிறகு ஸ்ரீ கோவிந்தராஜனுடைய ஆலயத்தின் கிழக்கு பாகத்தில் விளங்கும் புண்டரீகவல்லித்தாயாரின் கோயிலுக்கும் கிழக்கில் மூன்று நிலைகளையுடையதாய் முககோபுரம் ஒன்றை நிர்மித்து அந்த கோபுரத்தின் உள்பாகத்தில் வடமேற்கு பார்சத்தில் ஸ்ரீ ஸுதர்சன ஆழ்வானையும் ப்ரதிஷ்டை செய்வித்து அந்த முககோபுரத்துக்கு ஸுதர்சன கோபுரம் என்று பெயரையும் அளித்தான். அத்தகைய ஸுதர்சன கோபுரமானது இப்பொழுது படிகாவல் கோபுரம் என்று வழங்கப்பட்டு வருகிறது.

நரஸிம்ம ஸ்வாமி கோயில்.

மேலும் வீரநரசிங்க யாதவராஜன் சுமார் கி. பி. 1150 வருஷகாலத்தில் தனது பாட்டனாராகிய வீரநரசிங்க யாதவராயன் என்பவன் திருப்பதி நகரத்தின் மேற்பாகத்தில் சிறந்ததொரு முல்லை பூமியில் வெட்டி வைத்த "நரஸிம்ம தீர்த்த"மென்னும் தடாகத்தின் கரையில் ஈசானிய பாகத்தில் மிகவும் உன்னதமாய் விளங்கும் சிலாரூபஸுதர்சன மூர்த்தியையும் ஸ்தாபித்து, அக்குளக்கரையில் தனது பாட்டன் கட்டிய நரஸிம்ம ஸ்வாமியின் கோயிலையும் ஜீர்ணோத்தாரணம் செய்து வைத்தான். அக்கோயில் தற்காலம் ஜீர்ணமாகிவிட்டது. ஆகிலும் அத்தடாகக்கரையில் விளங்கும் அந்த ஸுதர்சன மூர்த்தி மாத்ரம் இப்பொழுது இருந்து வருகிறது.

ஸ்ரீ வேங்கடேசனுக்குக் கனகாபிஷேகம்.



திருப்பதி மலைக்கோயிலின் பிராகாரம்.

இவ்வண்ணமாய் திருப்பதி, திருவண்ணாமலை, காளஹஸ்தி, திருச்சுகனூர் முதலான புண்ய க்ஷேத்திரங்களில் ஸ்ரீ வீரநரசிங்க யாதவராஜாவும் அவனது பட்டமஹிஷியும் பற்பல தர்ம கைங்கரியங்களை ஏற்படுத்திக் கொண்டு தமது வாழ்நாளின் முடிவில் காளஹஸ்தியில் ஓர் அரண்மனையையும் அமைத்துக்கொண்டு அங்கு சிலகாலம் தங்கியிருந்து அங்குள்ள அல்லுந்திரக்காளத்தி தேவன், மனுமஸித்தரஸன் முதலானவர்களுடன் தமது குமாரர் குமாரத்திகளுக்கு விவாஹ ஸம்பந்தங்களை நடத்தி வைத்து கடைசியில் வீரநரசிங்கயாதவராஜன் என்பவன் மதுரையில் சக்ரவர்த்தியாய் விளங்கிய (முதலாவது) ஜடாவர்மன் ஸுந்தர பாண்டியனுடன் விச்வாஸராயிருந்து ஸுமார் கி. பி. 1260-வது வருஷத்தில் தென்னாட்டிலுள்ள ஸகல பூபாலர்களையும் தனக்குள் சிற்றரசர்களாக அடக்கி வைத்து தான் சக்ரவர்த்தி என்னும் பதவியையும் "மால்ய தந்தி" என்னும் பிருதுகளையும் பெற்று ஏழுமலை என்னும் திருவேங்கடத்தில் விளங்கும் வெங்கடேசப் பெருமாளுக்கு கனகாபிஷேகமும் செய்துவைத்தான் என்பது வெங்கடாசலபதியின் முற்கோபுரத்தின் வலதுபக்கத்தில் வரையப்பட்டிருக்கும் சிலாசாஸனத்தினாலும், காளஹஸ்தி ஆலயத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டுகளாலும் விளங்குகிறது.

ஸ்ரீ ரங்கநாத யாதவராயன் கைங்கர்யம்.

திருப்பதிக்கும் அதின் அருகிலுள்ள மற்றும் பல க்ஷேத்ரங்களுக்கும் இவ்விதமாய் நன்மையைப் புகட்டிய வீரநரசிங்கயாதவராஜனுடைய காலத்துக்குப் பிறகு அவனது ஸிம்மாஸனத்தில் ஏறிய ஸ்ரீரங்கநாத யாதவராயன் என்பவனும் தமது பூர்வீகர்கள் போலவே அநேக புண்ய க்ஷேத்ரங்களில் அளவற்ற நற்காரியங்களைச் செய்தவனாயிருந்தாலும், இந்த திருப்பதியில் அவ்வரசன் ஸ்ரீ கோவிந்தராஜாவின் முதல் ப்ராகாரத்தில் ஆண்டாள் என்னும் சூடிக்கொடுத்த நாச்சியாருக்கு கிழக்கு முகமுடையதாய் ஒரு சிறு கோயிலை தனியாய்க் கட்டிவைத்ததுமன்றி, திருப்பதி அதன் அருகிலுள்ள அவிலாலி முதலான தேவதான கிராமங்களில் ஜலாதாரத்தை ஏராளமாய் ஏற்படுத்தி தேவதான நிலங்களில் விசேஷ பலன்களைஉண்டு பண்ணினான்.

மேலும் இந்த யாதவராஜன் செய்ததுபோலவே, இவனது ராஜ்யத்தில் ஒரு பெரிய அதிகாரியாயிருந்த பரமேச்வர மங்கலமுடையான் என்பவனும் இந்த திருப்பதி கோவி

ந்தராஜனுக்கும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளுக்கும் அநேக புஷ்பத் தோட்டங்களையும் துளஸி வனங்களையும் ஏற்படுத்தி பற்பல உத்ஸவங்களையும் சிறப்பித்து நடத்தும்படி திரவியமளித்தான்.

விஜய நகர ராஜ்ய ஸம்பந்தம்.

இவ்விதமாய் திருப்பதிக்கு யாதவ ராஜாக்களின் காலத்தில் விசேஷ நன்மையுண்டானபடியினால் அக்காலம் முதல் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூட்டம் கூட்டமாய் திருப்பதிக்குச் செல்ல ஆரம்பிக்கும் தருணத்தில் அந்த யாதவ ராஜாக்களின் ராஜ்யபார அதிகாரம் மாறி வேறு ஒருவிதமாய் புதிய ராஜாங்கம் ஏற்பட்டது. அவ்வித புதிய ராஜாங்கம் விஜய நகர ராஜாங்கம். நமது தமிழ் நாட்டின் புண்ணியத்தினாலல்லவா அந்த விஜய நகர ராஜாக்கள் பூமியில் ஜனனம் செய்தார்கள்; அந்த விஜயநகர ராஜாக்களினால் நாம் அடைந்திருக்கும் பெரிய மேன்மைகள் அநேகம்.

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட அத்வைத ஸித்தாந்த சாஸ்திரங்களை உலகில் பரவச் செய்தவரான வித்யாரண்ய ஸ்வாமிகள்தான் சுமார் கி. பி. 1330 வருஷத்தில் நல்லதோர் சுபமுஹூர்த்தத்தில் அந்த விஜயநகரக் கோட்டையை சிற்ப சாஸ்திர முறைப்படி நிர்மாணம் செய்வதற்குத் தகுந்த யுக்திகளை புக்காராய மஹாராயனுக்கு அறிவித்தார். அந்த புக்காராயனும் அவனது ஐந்து தம்பிகளும் அதுபோலவே மிகவும் அழகாயும், பகைவரால் அழிக்க முடியாததாயும் விசால கடைத்தெருவுகளையும் பெரிய ராஜவீதிகளையும் விட்டலப் பெருமாளின் ஆலயத்தையும் அநேக தடாகங்களையும் உடையதாயும் சிறந்த அரண்மனையை உட்கொண்டதாகவும் விஜய நகரமென்னும் சிறந்த பட்டணத்தை விரைவில் கட்டிமுடித்து, அதைத் தமக்குத் தலை நகரமாகச் செய்துகொண்டு பத்து வருஷ காலங்களுக்குள் பாமினி (Bamini) ராஜ்யமென்னும் ஐதராபாத் இலாகா பூமியையும், களிங்க தேசத்தில் விளங்கும் பூரி முதலான சிறந்த பூமிகளையும், மைஸூர் ராஜ்யத்தி லுள்ள ஸ்ரீரங்கப் பட்டணம் முதலான நகரங்களையும் காஞ்சி மண்டலம், நடுமண்டலம், சோழராஜ்ய மண்டலம், பாண்டியராஜ்ய மண்டலம், கோள தேசம், கொச்சி தேசம், கொங்குதேசம், துளுவ தேசம் முதலான அநேக தேசங்களையும் தமக்கு ஸ்வாதீனமாகச் செய்துமுடித்த பிறகு, அந்த புக்காராயன் இந்த வித்யாரண்ய ஸ்வாமிகளின் மூலமாய் அநாதிகாலமாய் உரை (வியாக்யானம்) இல்லாமலிருந்த நமது நான்கு வேதங்களுக்கும் உரை எழுதி வைத்தனர். இவ்விதமாய் அற்பஞானமுள்ள நமக்கு வேதங்களின் கருத்தை எளிதில் விளக்க அந்த வித்யாரண்ய ஸ்வாமிகளும் அதற்குக் காரணமாய் விளங்கிய அந்த புக்காராயனும் இருந்தார்கள்.

புக்காராயனும் அவனது குமாரனான குமாரகம்பணனும் விஜய நகரத்தில் அரசுபுரியும்பொழுது அவ்வரசர்கள் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் முதலான பாஷைகளில் தேர்ச்சியடைந்த கவிகளை நூற்றுக்கணக்காகத் தமது சபைக்கு வரவழைத்து அவர்களுக்குச் சிறந்த பரிசு அளித்து, அந்த கவிகள் மூலமாயும் பல சாஸ்திரார்த்தங்களை நமக்கு எளிதில் வெளியிட்டிருக்கிறார்கள். நமது தக்ஷிண தேசத்தில் விளங்கும் நூற்றுக்கணக்கான கோயி

ல்களை அழித்து இடித்துக் கொள்ளை கொண்டும், அக்கிரஹாரங்களைக் கொளுத்தியும், பாலர்களையும் மாதர்களையும் ஹிம்ஸித்தும் யமன்போல் வந்த மாலிக்கபர் (Malik Kafar) என்னும் துருக்கன் ஏவிய துருக்கர் சேனையை வதைசெய்து அத்துருக்கரின் கொழுப்பை அடக்கி நமது தென் தேசத்தைப் பூர்வம் போல ஸுகமாய் வாழும்படி துருக்கர் பயத்தை நீக்கியது அந்த விஜயநகர ராஜாக்களே.

இவ்விதமாய் அந்த விஜயநகர ராஜாக்கள் நமது தேசத்தை மேன்மேலும் சுகமாய் வாழும்படி செய்துவரும் சமயத்தில், ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்கள் சிலர் தமிழ் நாட்டின் கண் அங்கங்கு அவதரித்தார்கள். அவர்களில் வேதாந்த தேசிகன், பிள்ளை லோகாசாரியர், முல்லை திருவேங்கட ஜீயர், வானமாமலை ஜீயர், மணவாள மஹாமுனிகள், (ஸ்ரீ அகோபிலமடம்) ஆதிவண் சடகோப ஜீயர், எம்பெருமானர் ஜீயர், கொல்விகாவல தாஸர், எரும்பி அப்பா, நடாதூர் ஆழ்வான், வட திருவேங்கட ஜீயர் முதலானவர்களே மிகவும் பிரஸித்திபெற்றவர்கள். இவ்வித ஆசாரியர்கள் காஞ்சீ, ஸ்ரீரங்கம், ஸ்ரீ முஷ்ணம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் அவதரித்துத் தமது பால்ய வயதிலேயே தமது சூட்சும புத்தியின் மேன்மையினால் சகல சாஸ்திரங்களையும் நன்ருய் கற்றறிந்து காஞ்சி நகருக்குச் சமீபத்திலுள்ள ஸ்ரீ பெரும்பதூரில் அவதரித்த ராமானுஜர் ஏற்படுத்திய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் சாரத்தையும், ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பாத பத்ம பக்திமார்க்கத்தையும் உலகில் பாவச் செய்தார்கள்.

விஷ்ணு பக்தர்கள்.

இந்த வேதாந்த தேசிகன், மணவாள மஹாமுனி, ஆதி வண்சடகோபஜீயர் முதலானவர்கள் எவ்விதமாய் அங்கங்கு நற்குலத்தில் உதித்து விஷ்ணு பக்தியின் மார்க்கத்தை ஸ்தாபித்தார்களோ, இவர்கள் போலவே காஞ்சீபுரம் கோடி கன்யகாதானம் தாதாசாரியார், திருப்பதி தோழப்பய்யங்கார், கந்தாடை அப்பாவய்யங்கார், பிரதிவாதி பயங்காம் அண்ணன், பாவஸ்து ஆசாரியார்; வீரவல்லி ஆசாரியார் முதலான சில க்ருஹஸ்த ஆசாரியர்களும் அங்கங்கு அவதரித்து வேதாந்த தேசிகன் மணவாள மஹாமுனிகள் முதலியவர்கள் இயற்றிய நூல்கள் போலவே தாமும் சில சாஸ்திரங்களை எழுதி தமது பாதத்தில் வந்தடைந்த சிஷர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் விஷ்ணு பக்தியை நன்ருய் அறிவித்தார்கள்.

ராமானுஜரின் ஸித்தாந்தம்.

இவ்வித காரணத்தினுல்தான் (விஜயநகர ராஜாக்கள் நமது தென் இந்தியாவில் நிலை பெற்றிருந்ததால்) வைஷ்ணவ மதமும் பிரபலமாய் பாவ ஆரம்பித்தது. ஆகையால் இவ்வண்ணமாய் சில வருஷ காலங்களுக்குள் வேதாந்த தேசிகனுடைய சிஷ்ய வர்க்கங்களினுலும், மணவாள மாமுனிகள் சிஷ்யவர்க்கங்களினுலும், திருப்பதி தோழப்பய்யங்கார், கந்தாடை அய்யங்கார், பிரதிவாதி பயங்காம் அண்ணன், காஞ்சீபுரம் தாதாசாரியர் முதலிய சில ஆசாரிய புருஷர்களின் சிஷ்ய வர்க்கத்தினுலும், இவ்வுலகில் நான்கு திசைகளிலும்

ராமாநுஜருடைய சித்தாந்தமும் ஸ்ரீ மஹாவிஷ்ணு பாதபக்தியும் விரைவாய் பரவிப்படஆரம்பித்தது.

ஆசாரிய புருஷர்கள்.

அத்தருணத்தில், திருப்பதியிலும் மேல் திருப்பதி என்னும் திருமலையிலும் கோயில் காரியங்களை ஆராய்வதற்கும், பகவானுக்குப் பூஜை நைவேத்யம் உத்ஸவங்கள், வேத பாராயணம், கோஷ்டி விநியோகம், ப்ராம்மண போஜன சத்திரம் முதலான உத்தமகாரியங்களை நடத்துவதற்கும் ஏழு ஆசாரிய புருஷர்கள் அங்கு வந்து சேர்ந்தும், நிலை பெற்றும் இக்காரியங்களைச் சாஸ்திர முறைப்படி நடத்திவரலானார்கள். ஆகையால், அக்காலம் முதல் நாளது வரையில் அந்த ஏழு ஆசாரிய புருஷர்களின் வம்சத்தில் ஜனித்தவர்களுக்கு திருமலை திருப்பதி தேவாலயங்களிலும் இதைச் சார்ந்த கோயில்களிலும் கோஷ்டி விநியோக ஸமயத்தில் முதல் தீர்த்தம், பரிவட்டம், மாலை ப்ரசாதமரியாதை முதலானவைகள் தேவஸ்தான காரியதரிசிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்விதமாய் திருமலை திருப்பதியின் தேவாலயத்தில் முதன்மையாய் மரியாதை பெறும் அவ்வாசாரிய புருஷர்களின் பெயர் முதலியவாவன :—

1. பெரிய ஜீயர்:—இவர் தென்கலை ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். இவருக்கு திருப்பதியிலும் திருமலைமீதும் மடம் இருக்கிறது (இவருடைய மற்ற விபரத்தை திருமலை ஸஞ்சிகையில் காண்க).

1 (ஏ). சின்ன ஜீயர்:—இவரும் தென்கலை ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்.

2. தோழப்பாசார்:—இவர் வடகலை ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்.

3-6. அனந்தாம் பிள்ளை, கந்தாடை அய்யங்கார், ப்ரதிவாதி பயங்கரம் அய்யங்கார் ப்ரவஸ்து அய்யங்கார், இந்நால்வரும் தென்கலை ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

7. தர்மபுரி அய்யங்கார்—இவர் வடகலை ஸம்பிரதாயத்தை உடையவர்.

8. வீரவல்லி அய்யங்கார்—இவர் தென்கலை ஸம்பிரதாயத்தை அணைந்தவர்.

பகவானுக்குப் பல திருப்பணி.

இவ்விதமாய் ஸந்நியாசியாகிய பெரிய ஜீயர் நீங்கலாக இந்த ஏழு கிருஹஸ்த ஆசாரிய புருஷர்கள் யாவரும் இந்தத் திருப்பதி திருமலையில் நிலைபெற்று ஆழ்வார்கள் இயற்றிய "நாலாயிரப் பிரபந்த" த்தையும், வடமொழி "வேதத்தை"யும், திருமலை திருப்பதியில் பகவானுக்கு எதிரில் தினந்தோறும் படித்துக்கொண்டு விஷ்ணுபக்தியையும், ராமாநுஜரின் கருத்தையும் வெளிப்படுத்திக்கொண்டு மிகவும் பரிசுத்தர்களாய் விளங்கிய தருணத்தில், விஜயநகரத்தை ஆண்டுவந்த புக்கராயன், குமார கம்பணன், தேவாராயன் முதலானவர்கள் திருப்பதிக்கு வரும் ஸமயத்தில் அந்த ஆசாரிய புருஷர்களைப் பணிந்து, அவர்களுக்குத் தக்க மரியாதை செய்து பகவானுக்கு பற்பல திருப்பணிகளைச் செய்துவிட்டுப்போனார்கள்.

கிராமங்களின் சுவாதீனம்.

இதுபோலவே மற்றொரு ஸமயத்தில் விஜயநகரத்தை ஆண்டு வந்த பிந்நரஸிம்ம ராயன், ஸாளுவ நரஸிம்மராயன், ஸாளுவ பர்வத ராயன் இவர்களும் இவர்களுக்குப் பின்பு தக்ஷிணதேச சக்ரவர்த்தியாகிய கிருஷ்ணராய மஹாராயரும், அச்சுதராயரும், வெங்கடபதி ராயரும் இவர்களுடைய சேனைபதிகளும் மந்திரிமார்களும் சுற்றத்தாரும் இந்தத் திருப்பதியில் வசித்த அவ்வேழு ஆசாரிய புருஷர்களையே தமக்கு குலகுருவாக ஏற்படுத்திக்கொண்டு, அவர்களுக்கு அநேக கிராமங்களையும் ஸர்வமானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் அக்காலம் முதல் நாளதுவரையில் திருப்பதியிலுள்ள ஆசாரிய புருஷர்களுக்கு அந்த கிராமங்கள் ஸ்வாதீனத்திலிருந்து வருகின்றன.

உத்ஸவங்கள்.

திருப்பதியில் இவ்விதமாய் விஜயநகர ராஜாக்களின் உதவியினாலும், அவர்களின் மந்திரி ஸேனாபதி முதலானோர்களின் உதவியினாலும் சிறந்த உபகாரத்தையும் மேன்மையையுமடைந்த அக்காலத்திய ஆசாரிய புருஷர்கள் யாவரும், தமது சிஷ்யரான விஜயநகர ராஜாக்கள் திருப்பதிக்கு வரும்பொழுது அவர்களுக்கு நேரில் பற்பல விஷயங்களைக்கூறி எடுத்துக்காட்டி திருப்பதியில் ஸ்ரீ கோவிந்தராஜன், ஸ்ரீ ராமன், பொய்கை, பூதம், பேயாழ்வார், உடையவர், நாதமுனி ஆழ்வார் முதலானோர்களுக்கும், திருமலை வேங்கடாசலபதிக்கும் அநேக மண்டபங்களையும், தடாகங்களையும், கோபுரங்களையும், கட்டும்படி ஏற்பாடு செய்தார்கள்.

அதுபோலவே அவ்வரசர்களும், அவர்களின் சேனைபதிகளும், அமைச்சர்களும் திருப்பதியில் நடத்திவைத்த உத்ஸவங்களிலும் திருப்பணிகளிலும் சிலவைகளாவன:—

விஜயநகர சக்ரவர்த்தியாகிய கிருஷ்ண தேவராயருக்கு முன் 43 வருஷகாலம் மிகவும் மேன்மையுடன் ராஜ்யபாரம் செய்து உலகமெங்கும் பிரஸித்திபெற்ற ஸாளுவ நரஸிம்மராயன் என்பவன், திருப்பதியிலிருக்கும் கந்தாடை ராமானுஜய்யங்காரை குருவாக அடைந்து அவரது விருப்பப்படி திருப்பதியிலும், மேல் திருப்பதி என்னும் திருமலையிலும் ராமானுஜ கூடம் கட்டி வைத்து, அதற்கு தமது ஆசாரியரையே மேல் விசாரணைக்கு ஏற்படுத்தி, அவ்வித ராமானுஜ கூடத்தில் தினந்தோறும் நூற்றுக்கணக்காக பிராம்மணர்களை புஜிக்கும்படி கட்டளை செய்து அதற்காக குண்டிப்பூண்டி முதலான பல கிராமங்களை ஸர்வமானியமாக அளித்தான்.

கந்தாடை மாதவய்யங்காருக்கும் கோயில் அதிகாரிகளுக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது.

அதாவது ராமானுஜ கூடம் பரிபாலிக்கவிட்டிருந்த மானியத்திலிருந்து அந்த கைங்கரியத்தை நீக்கி வருஷம் மூன்று தடவை கோவிந்த ராஜனுக்கு நிவேதனம் செய்விப்பது. சாளுவ நரசிங்கய்ய தேவன் திருமலையில் நடக்கும் மாதிரியே கோவிந்தராஜனுக்கும் பூஜை

நடத்தப்படவேண்டுமென்றும் கந்தாள ராமானுஜய்யா ராமானுஜ கூடத்தில் உள்ளூர் வெளியூர் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு பிரசாதம் கொடுக்கும்படி மேன்பார்வையிடவேண்டுமென்றும் தீர்மானம் செய்தார்.

கோடைத் திருநாள்.

சாளுவ நரஸிம்மராயனால் இந்த திருப்பதிக்கு மற்றும் பலவிதமாய் நன்மை நேரிட்ட ஸமயத்தில் அவனிடத்தில் கிருஷ்ணதேவராயருக்குத் தமயனாகிய வீரநரசிங்க ராயனிடத்திலும் சிறந்த சேனாதிபதிகளாய் அமர்ந்தும் ராஜேந்திர சோழர் சதுர்வேதி மங்கலமென்றும் உத்திரமேரூர்ச் சீமைக்கு அதிகாரிகளாயும் (கவர்னர்களாயும்) இருந்த அப்பா பிள்ளை என்பவனும், மன்னர் பிள்ளை என்பவனும், இந்த திருப்பதிக்கு வந்து கோவிந்தப் பெருமாளை தர்சித்த பிறகு, அவருடைய சன்னதி வீதிக்குக் கிழக்கில் விளங்கும் கோவிந்த புஷ்கரணியைச் சீர்திருத்தி அதன் நடுவில் நீராழி மண்டபத்தை வெகு அழகாய் கட்டி வைத்து வருஷந்தோறும் ஆனி ஆடி மாதமாகிய க்ரீஷ்மகாலத்தில் பகவானுக்கு க்ரீஷ்ம உற்சவத்தை நடத்தவேண்டுமென்று ஆகமசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் முறைப்படியே, அந்த மண்டபத்தில் ஆனிமாதத்தில் கோவிந்த ராஜனுக்கு இருபது நாள் கோடைத் திருநாளை நடத்தும்படி ஏற்பாடு செய்து அதற்கு வேண்டிய நைவேத்யச் செலவு வகைகளுக்காக ஏராளமான திரவியத்தையும் சமர்பித்தார்கள்.

பற்பல கட்டடங்கள்.

இவ்விதமாய் அக்காலத்தில் திருப்பதியில் நடந்தேறி வரும் திருப்பணி மேன்மையைக்கண்டு வியப்படைந்த சாளுவ ராஜாக்களில் சிலராகிய பெரிய மல்லய தேவராஜனும், சிறு மல்லைய தேவராஜனும், சாளுவ கொப்பய்ய ராஜனும், சாளுவ ராமச்சந்திர ராஜனும் மற்றுமுள்ளாரும் தமது சொந்த திரவியங்களினாலும், தமது பிரதான அதிகாரியாகிய சாளுவ நரசிம்மராயன் தமக்குப் பல தடவைகளில் பரிசாக அளித்த திரவியங்களினாலும் இந்த திருப்பதி கோவிந்த ராஜனின் முதல் பிராகாரத்தின் முதல் வாசப்படிக்கு முன் புறத்தில் பலவித சித்ர வேலைகளினால் அழகு வாய்ந்ததாய் ஒரு முகமண்டபத்தை நிர்மாணித்து அதற்குச் சித்திரகூட மண்டபம் என்றும், தில்லைக்குவாய்த்தான் மண்டபம் என்றும் பெயரை வைத்து, அம்மண்டபத்தில் ஸ்ரீகோவிந்தராஜன் யுகாதி, கார்த்திகை, கிருஷ்ண ஜயந்தி முதலான உற்சவ சமயங்களில் வந்து வீற்றிருந்து அநேகவித நைவேத்ய படி வகைகளைக் கடாக்ஷிக்குமாறு அளவற்ற திரவியங்களையும் அதற்கு மூலதனமாக அளித்தார்கள்.

இதுமாத்திரமல்ல. அந்த சாளுவ பெரிய மல்லய தேவமஹாராஜன் முதலான சாளுவ சிற்றரசர்களும், அவரது தோழர்களும் சேனைத்தலைவரும் அவரது சுற்றத்தாரும் நாளடைவில் இந்த கோவிந்தராஜனுடைய கோயிலுக்கு மிகவும் உன்னதமான சுற்றுப் பிராகார மதில்களும் அக்கோயிலுக்குள் ஒரு பக்கத்தில் திருமலை நம்பியின் சன்னதியும், குலசேகர ஆழ்வார், மதுரகவி ஆழ்வார் இவர்களின் சன்னதியையும், மற்றொரு பக்கத்தில் திருமடப்பள்ளியையும், வாஹன மண்டபத்தையும் சந்தன மண்டபம், பொக்கிஷ மண்ட

பம், யாகசாலை மண்டபம் இவை முதலான அநேக கட்டடங்களை எல்லாம் கட்டி வைத்து, அவைகளின் உபயோகத்துக்குத் தக்கவாறு அநேக கிராமங்களையும் சர்வமான்ய மாக அளித்தார்கள்.

கிருஷ்ணராயர் கோனேரி.

இவ்விதமாய் சில வருஷங்கள் செல்வதற்குள்ளாகவே மிகவும் பராக்கிரமசாலி யான கிருஷ்ணதேவ ராயர் விஜய நகரத்தில் ஸிம்மாஸனத்தில் ஏறி, தம்து புத்தி பலத்தி னாலும் சேனைத் தலைவரின் யுக்திகளாலும், கொண்டவீடு, உதயகிரி, வினிகொண்டை முத லிய கோட்டைத் துர்க்கங்களைக் கைப்பற்றி ஜயலட்சுமியுடன் காளஹஸ்தி மார்க்கமாய் இந்த திருப்பதிக்கு வந்து பகவானை தரிசித்துக் கோவிந்தபுஷ்காணியை அழகிய கற்படி களால் செய்து அதற்கு அதுமுதல் கிருஷ்ணராயர் கோனேரி என்று பெயரிட்டார். அப்பெயர் இப்பொழுதும் வழங்கப்பட்டு வருகிறது.

லக்ஷ்மீதேவி மண்டபம்.

அந்த கிருஷ்ணதேவ ராயருடன் இந்த திருப்பதிக்கு வந்த சாளுவதிம்மரசர் என் பவன் தான் மிகவும் பண்டிதனும் விஜயநகர ராஜ்யத்துக்குப் பிரதம மந்திரியாயுமிருந்த படியால் பற்பல ஸமயங்களில் கிருஷ்ணதேவ ராயரால் தனக்குக் கொடுக்கப்பட்ட வெகுமான திரவியங்களை எல்லாம் இத்திருப்பதியிலேயே பகவானுக்கு அநேகவித திருப்பணி செய்யவேண்டுமென்று தீர்மானித்து அவ்வித திரவியத்தைக்கொண்டே ஸ்ரீ கோவிந்தராஜனுடைய முதல் கோபுரத்தின் (படிகாவல் கோபுரத்தின்) முன்புறத்தில் தெற் குச் சிறகில் மிகவும் உன்னதமாயும் அழகாயும் விளங்கும் ஓர் மண்டபத்தைக் கட்டி வைத்து, அந்த மண்டபத்துக்குத் தனது தேவியின் பெயரை அளித்தான். அதனால் அதுமுதல் நாளது தேதி வரையில் “லக்ஷ்மீதேவி மண்டபம்” என்று பெயர் வழங்கும் அம்மண்டபத்தில் ஸ்ரீ கோவிந்தராஜனுக்கும், அவருடைய உபய நாச்சியாருக்கும் வருஷந் தோறும் மார்கழி மாதத்தில் நடக்கும் அத்யயனோத்ஸவம் இருபது நாள்களிலும், மாதப் பிறப்பு, அமாவாஸை, பௌர்ணமை, ஏகாதசி முதலான சில விசேஷ நாள்களிலும் இற ங்கி பற்பல நைவேத்யங்களை கண்டருளும் வண்ணம் கிராமங்களை மானியமாக ஸமர்ப் பித்தான்.

இவ்விதமாய் கிருஷ்ண தேவராயருடைய முதல் மந்திரியாகிய ஸாளுவ திம்மா சர் என்பவன் திருப்பணி செய்வதைக்கண்டு, அவரது தம்பியாகிய ஸாளுவ கோவிந்தன் என்பவன் தனது கைங்கரியமாய் கோவிந்தராஜனுக்கு சிற்சில உத்ஸவங்களைப் புதியதாய் ஏற்படுத்தியதுமன்றி கோவிந்த புஷ்காணி என்னும் கிருஷ்ணராயர் கோனேரியின் கரை யில் ஸ்ரீ கோபால கிருஷ்ணனுக்கு ஒருபுதிய ஆலயத்தையும் கட்டிவைத்து, அக்கரையின் நான்கு பக்கங்களிலும் வேதம்வல்ல பிராம்மணோத்தமர்களின் வீடுகளைக்கட்டி அவர்களு க்கு தானம் செய்து அவர்களின் ஜீவனத்துக்காக அநேக கிராமங்களையும் ஸர்வமானியமாக அளித்தான்.

துவாரபால பிரதிஷ்டை.

அதற்குப் பிறகு ஸதாசிவதேவ மஹாராயர் விஜயநகர ராஜதானியில் தக்ஷிண தேச சக்ரவர்த்தியாய் விளங்கிய ஸமயத்தில் நந்தியால நரஸிம்ம ராஜாவின் குமாரனுகிய நாரப்ப ராஜனென்னும் பிரஸித்தி பெற்ற சேனைத்தலைவன் இந்த திருப்பதிக்கு வந்து பக வானைத் தரிசித்து இந்த கோவிந்தராஜனுடைய முகமண்டபத்தின் முதல் த்வாரத்தின ருகில் இருபுறத்திலும் ஜயன், விஜயன் என்னும் த்வாரபாலகரை ப்ரதிஷ்டைசெய்து வைத்தும் அவர்களுக்கு எதிரில் கருடாழ்வாரின் சிறுகோயிலையும் வெகு அழகாய்க்கட்டி வைத்தும் அவர்களுக்கு தினந்தோறும் பூஜை நைவேத்யவகைகளுக்காக பல்லிபட்டு என்னும் கிராமத்தையும் தேவதானமாக விட்டான்.

தர்மஞ் செய்தான்.

பிறகு ஸாளுவ நரஸிம்மராயனுடைய ராஜ்யத்தை மிகவும் மேன்மையுடன் விளங் கச் செய்தவனுகிய ஆரவீடு புக்கராஜாவின் வம்சத்தில் பிறந்த கொண்டு ராஜா என்பவன் இந்த திருப்பதிக்கு வந்து பகவானை நமஸ்கரித்து தனது மனோரதங்களை நிறைவேற்றிய பிறகு இந்த கோவிந்தராஜனுடைய ஆலயத்தின் வடக்கில் ராமாநுஜன் வீதி என்னும் வடக்கு மாடவீதியில் மிகவும் விசாலமான முகமண்டபத்துடன்கூடியதான மற்றொரு ராமாநுஜகூடத்தை புதிதாய் தனதுபெயரால் ஏற்படுத்தி தினந்தோறும் அந்த ராமாநுஜ கூடத்தில் நூற்றுக்கணக்காக பிராமணர்கள் அறுசுவையுடன்கூடிய போஜனவகைகளை புஜிக்கும்படி ஏற்பாடு செய்து அதற்காக தக்கோலம், தாயனூர், மலையனூர் அத்தியூர் முத லான பத்து கிராமங்களை மூலப்பொருளாக விட்டு அந்த கிராமங்களில் விளைந்த வருமா னத்தைக்கொண்டு கணக்கற்றதாய் பிராம்மணபோஜனமும் சனிவாரங்களில் அவர்களுக்கு எண்ணெயும் கொடுத்து இவ்வித தர்மத்தை செய்துவைக்கலானுன்.

அப்பொழுது ஆரவீட்டு ராமராஜன் என்பவனும் தன்னுடைய மேன்மைக்காக இந்த திருப்பதியில் விளங்கும் கோவிந்தராஜன் தினந்தோறும் 200 பொங்கல் தளிகை நிவேதனம் அடைய ஏற்பாடு செய்து, அவ்விதம் நிவேதனமான பொங்கல் பிரஸாதத்தை தினந்தோறும் கோயிலில் வந்து கூடும் தேசாந்திரிகளுக்கு வினியோகம் பண்ணும்படியும் திட்டம் செய்து, அந்த செலவுக்காக சிங்கபல்லி, வளகொளி, யாராளச்சேரி என்னும் மூன்று கிராமங்களை கோவிந்தராஜனுக்கு இனுமாக ஸமர்ப்பித்தான்.

திருப்பதியில் இவ்விதமாய் ஸ்ரீகோவிந்தராஜாவின் ஆலயத்தையும் மற்றுமுள்ள சுற்றுக்கோயில்களையும் அழகிய கற்பாறைகளினுல் மிகவும் உறுதியாய் வெகு காலம்வரை யில் அழியாமல் நிலைபெற்றிருக்கும்படி கட்டவேண்டுமென்னும் உத்தேசத்துடன் ராஜ ராஜன் முதலிய சோழராஜாக்களினுல் இந்த தேசத்தில் திருப்பணி பண்டாரஸபையார் ஸ்தாபிக்கப்பட்டார்களாம். ஆகையால் அவ்வண்ணமாய் தேவாலயத்தின் திருப்பணி செய்பவர், அந்தந்த ஸமயத்தில் ராஜாக்கள், மந்திரிகள், ஸேனைத்தலைவர்கள் முதலியவர் களால் திருப்பணிவேலைக்காகக் கொடுக்கப்பட்ட திரவியங்களை தாங்கள் அடைந்து, தங்

கள் மூலமாய் அவர்களின் கோரிக்கைப்படி மண்டபம், மதிள், தடாகம், கோபுரம் முதலிய வைகளை நமது சில்பசாஸ்திரமுறைப்படி கட்டிவைத்துக் கொண்டுவந்தார்கள்.

சோழராஜாக்களின்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித ஏற்பாடுமுறையானது யாதவராஜாக்கள் காலத்திலும், அவர்களுக்குப்பிறகு விஜயநகர ராஜாக்களாகிய புக்கா யர், வீரகம்பணாயர், ஹரிஹரராயர், தேவராய மஹாராயர், மல்லிகார்ஜுனராயர், சாளுவ நரஸிம்மராயர் இம்மடிநரசிங்கராயர், வீரநரசிங்கராயர், கிருஷ்ணராய தேவ மஹா ராயர், அச்சுதராயர், சதாசிவராயர், வேங்கடபதிராயர், ஸ்ரீரங்கராயர் இவர்களின் காலத்தி லும் (சுமார் 200 வருஷ காலத்தில்) மற்ற நகரங்களிலும் புண்ணிய க்ஷேத்திரங்களிலும் தேவாலயத் திருப்பணி நடந்து வந்தது போலவே இந்த திருப்பதி க்ஷேத்திரத்திலும் பழையமுறைமாறுதபடி கோயில் திருப்பணி மேன்மேலும் நடந்தேறியபடியால் இந்த திருப்பதி கோவிந்தராஜாவின் ஆலயமானது மிகவும் பெரியதாயும் உயர்ந்த மதிள் என் னும் பிராகாரச்சுவற்றை உடையதாயும், அதற்குள்புறத்திலும் வெளியிலும் ஊஞ்சல் மண்டபம், வாகன மண்டபம், கார்த்திகை மண்டபம் முதலான பலவித மண்டபங்களை உடையதாயும் விளங்கலாயிற்று. இதுபோலவே இந்த திருப்பதியில் ஆங்காங்கு நம்மாழ் வார் சன்னதி, நாதமுனி ஆழ்வார்கோயில், வரதராஜப்பெருமாள் கோயில், லக்ஷ்மீநாரா யணப்பெருமாள், ஹநுமான் ஸன்னதி முதலியவைகள் முன் மண்டபங்களைஉடையதாயும் நிர்மாணிக்கப்படலாயிற்று.

அது போலவே ஊருக்கு வெளியில் பாடிய வேட்டை மண்டபம், சித்ராபௌர் ணமி மண்டபம் முதலியவைகளும் நடுநிலங்களிலும் ஏரிக்கரையிலும் கட்டலாயிற்று. இது மாத்திரம் அல்ல ; இந்த திருப்பதியின் ஸன்னதி வீதியில் ஸ்ரீ அஹோபில ஜீயரின் மடமும், அதற்கு எதிரில் சின்ன ஜீயருடைய மடமும், வடக்கு வீதியில் பெரியஜீயரின் மடமும், மத்வமடமும் ஏற்படுத்தலாயிற்று.

விசேஷ திருப்பணி.

இவ்வண்ணமாய் திருப்பதியில் திருப்பணி பண்டாரத்தார் என்னும் ஆலயப்பணி செய்பவர்கள் யானைகட்டு மண்டபம் தண்ணீர்ப்பந்தல் மண்டபம் முதலான பலவித திருப் பணி கைங்கரியங்களைச் செய்துவரும் சமயத்தில் மட்லி ராஜவம்சத்தில் அவதரித்த குமார அனந்தராஜா என்பவர் இந்த திருப்பதிக்கு வந்து பகவானைத்தரிசித்தபிறகு சாலிவாஹன வருஷம் 1,550 (கி. பி. 1,628)ல் ஸ்ரீ கோவிந்தராஜனுக்குப் பொன் யானைவாஹனத்தையும், பொன்குதிரை வாஹனத்தையும் அளித்தார்.

இது போலவே மேல் திருப்பதி என்னும் திருமலையில் விளங்கும் ஸ்ரீநிவாஸப்பெரு மானுக்குப் பொன் யானைவாஹனத்தையும் பொன் குதிரைவாஹனத்தையும் அளித்தது தவிர ஸர்வ பூபாலவாஹனமென்னும் விமானத்தையும் அளித்து, வேங்கடாசலபதியின் திருவடிக்கீழ் பாதபீடத்தைப்பொன் தகட்டினால் அலங்கரித்தார். இதுவுமன்றி வேங்க டேச பெருமாளுக்கு நவரத்தினங்கள் இழைத்த கிரீடத்தையும் பூஜாபாத்ரமாகிய வட் டில், உத்தரணி, தளிகைத்தட்டு, கும்பம், குடம் முதலியவைகளையும் தங்கத்தினாலும்

வெள்ளியினுலும் செய்து சமர்ப்பித்தார். இதுமாத்திரமல்ல; மேல்திருப்பதிஎன்னும் வெங்கடாசலத்தில் ஒரு நந்தவனத்தில் மண்டபத்தையும் கட்டிமுடித்துத் திருப்பதியின் மலையடிவாசம் முதல் பகவானுடைய சன்னிதானம் போய் சேருமளவிலுள்ள (சுமார் ஏழு மைல் நீளமுள்ள) மலை மார்க்கத்தை மேடுபள்ளங்களைக்கூடியவரையில், சமமாக்கி அங்கங்கு அழகிய கற்படிகளையும், கட்டி வைத்து நடுவழியில் பலவிடங்களில் தண்ணீர்ப்பந்தல் மண்டபங்களையும் கட்டிமுடித்து பிறகு இந்த திருப்பதி மலையடிவாசத்தின் ஆரம்பத்தில் மிகவும் பெரியதாய் ஒருகோபுரத்தைப் பதினெரு நிலைகளுடன் கூடியதாயும் நிர்மித்து வைத்தார். இம்மாதிரியாய் கட்டப்பட்ட முதல் கோபுரத்துக்குக் கொஞ்சம் மேல்புரத்தில் மற்ருெரு சிறிய கோபுரத்தையும் கட்டி முடித்து அந்த மலையின் உச்சியிலும் மற்ருெரு கோபுரத்தையும் நிர்மித்தார். இந்த முதல்மலையின் உச்சிகோபுரத்துக்கு இப்பொழுது "காலிகோபுரம்" எனப்பெயர் வழங்கி வருவதையும் யாவருமறிவார்கள். இவ்விதமாய் திருப்பதியின் முதல்மலையில் பெரியதாய் மூன்று கோபுரங்களைக்கட்டிவைத்த, மேற்படி மட்லி குமார அநந்தராஜா என்பவரே மற்ருெரு சமயத்தில் திருப்பதிக்குவந்து அதன் வடக்கில் உள்ள கபிலதீர்த்தத்தின் கரையில் காசிமுதல் ராமேச்வரம் செல்லும் பிராம்மணர்களுக்கு அன்ன வஸ்திரத்தையும் ஏற்படுத்தி கடைசியாய் திருப்பதியை நோக்கும் தருணத்தில், ஸ்ரீ கோவிந்தராஜனுடைய ஸன்னதிவீதியில் நடுபாகத்தில் ஸ்ரீ அகோபிலமடத்துக்கு ஸமீபத்தில் ஏழு நிலைகளுடன்கூடியதாய் மிகவும் அழகுவாய்ந்த மற்ருெருகோபுரத்தையும் கட்டிவைத்து, அக்கோபுரத்திலும் மற்றைய கோபுரங்களிலும் ஸ்ரீ வேங்கடாசலபதியின் உருவத்தையும், தனது தாய் தந்தையாரின் உருவச்சிலை பிம்பங்களையும், நிர்மாணித்துத் தனதுபெயரையும் அவர்களின் பெயரையும், அவர்கள் எக்காலமும் வேங்கடாசலபதியை நமஸ்கரித்துவரும் முறையையும் தமிழ் தெலுங்குபாஷைகளில் சிலாசாஸனமாக எழுதி வைத்தனர்.

மட்லிகுமார அனந்த ராஜா அவர்கள் மற்ற க்ஷேத்ரங்களில் செய்த தர்மங்கள்.

நமது தென் இந்தியாவில் மிகவும் விசேஷமாய் விளங்கிய விஜயநகரசக்ரவர்த்தியான கிருஷ்ணதேவராயரிடத்தில் சில நாட்டின் அதிபதிகளாயும், யுத்தசமயத்தில் சேனைத்தலைவர்களாயுமிருந்த மட்லி ராஜாக்கள் தமது ராஜாக்கள் அளித்த திரவியத்தினுலும், தமது சொந்த திரவியத்தினுலும், இந்நாட்டிலுள்ள சிவ க்ஷேத்ரங்களிலும் விஷ்ணு க்ஷேத்ரங்களிலும் பலவித திருப்பணி செய்து ஜைன-பௌத்தமதங்களைக்கண்டித்து, சைவ வைஷ்ணவ மதத்தை நிலைநாட்டி வைத்தார்கள் என்பதற்கு அடையாளமாக விளங்குகிறவர் மட்லி அனந்தராஜா என்பவர். மட்லி என்னுமிடம கடப்பைஜில்லாவில் ராயசோட்டிக்கு வடகிழக்கில் 5-மைல் தூரத்தில் மாண்டவ்யாநதியின் கரையிலுள்ளது. அவ்விடமிருந்த கோட்டை இப்பொழுது ஜீர்ணமாயுள்ளது. இவ்விடம் அதிகாரிகள் விஜயநகர சமஸ்தானத்தார் காலத்தில் இந்த கடப்பைஜில்லா கீழ்பாகத்தில் பிரபலர்களாயிருந்தனர்கள். இப்படி அவர்கள் அதிகாரம் செலுத்தினது 18-ம் நூற்ருண்டின் முடிவுவரையெனச் சொல்லலாம். இவ்வரசர் திருப்பதியிலும், திருமலையிலும் விசேஷ தர்மங்களைச் செய்தபிறகு திருப்பதிக்கு அருகிலுள்ள ஸ்ரீகாளஹஸ்திக்குச்சென்று ஸ்ரீகாளஹஸ்தீச்வருக்குப்பொன்

னால் மயில் வாஹனத்தையும், மோஹன (பல்லக்கு) வாஹனத்தையும் செய்து அளித்தார்.

16-கால் மண்டபத்தை நிர்மீத்தல்.

கடப்பை ஜில்லாவின் சமீபத்திலுள்ள ஒண்டிமிட்டா என்னும் க்ஷேத்திரத்தில் விளங்கும் ஸ்ரீ ராமபிரானுக்கு நான்கு ப்ராகாரங்களையும் வெளிப்ரதட்சண மண்டபத்தையும் வெகு உன்னதமான இரண்டு கோபுரங்களையும கட்டிவைத்தார்.

நெலந்தலூரில் விளங்கும் பரமேசுவருக்கு ஆலயத்தைக்கட்டிவைத்து அதற்கு நான்கு திக்குகளிலும் மிகவும் உன்னதமான நான்கு கோபுரங்களையும் நிர்மித்து, ஊருக்கு வெளியில் அவ்வீசனுக்குத் தினந்தோறும் புஷ்பம் சமர்ப்பிக்கும்படி ஒரு நந்தவனத்தையும் வைத்தார். திருவள்ளூரில் விளங்கும் ஸ்ரீவீராகவப்பெருமாளுக்கு வசந்தஉற்சவம் செய்வதற்காக ஒரு மண்டபத்தையும், அவரது கோயிலின் முன்கோபுரத்தைச் சீர்திருத்தியும், அதற்கு எதிரில் பதினாறுகால் மண்டபத்தையும் நிர்மித்தார்.

உதயகிரியில் விளங்கும் ரங்கநாதருக்கு பாடிய வேட்டைமண்டபத்தைக் கட்டிவைத்ததுமன்றி, நந்தவனமொன்றையும் நிர்மித்துவைத்து அவருடைய தினப்படி பூஜைக்கு சில பூமிகளையும் இனமாகவிட்டார்.

மதில் சுவர்.

கடப்பையின் அருகிலுள்ள ஸித்தவடத்தில் விளங்கும் சென்னகேசவப்பெருமாளுக்கு ஆலயத்தைக் கட்டிவைத்து அதற்கு உன்னதமான மதிற்சுவர்களையும் உயர்ந்த கோபுரத்தையும் கட்டிமுடித்து அவ்வூரிலேயே சிறந்துவிளங்கும் பரமேசனுக்குப் பொன் விருஷபவாஹனத்தையும் அளித்தார்.

மேலும் இந்த மட்லி அனந்தராஜா என்பவர் சோமசிலா க்ஷேத்ரத்தில் பிரகாசிக்கும் சந்திரமௌலீச்வாருடைய ஆலயத்தின் முன்புறத்தில் உன்னதமான கோபுரத்தை நிர்மித்தார்.

புஷ்பகிரியில் பரமேச்வரனுடைய ஆலயத்தையும் ஜீர்ணோத்தாரணம் செய்து, அதற்கு மிகவும் உயர்ந்த மதிற்சுவரையும் எடுப்பித்து முகத்வார கோபுரத்தையும் நிர்மித்து வருஷந்தோறும் அவ்வீசனுக்குத்திருவிழா நடக்கும்படிக்கும் முதல் அளித்து ஏற்பாடு செய்துவைத்தார்.

கடப்பையில் விளங்கும் மஹாவிஷ்ணுவின் ஆலயத்தையும் ஜீர்ணோத்தாரணம் செய்துவைத்து அங்கு ஒரு கோபுரத்தையும் நிர்மித்துத் தடாகப்ரதிஷ்டையையும் செய்துவைத்தார்.

ஸ்ரீ அகோபிலத்திலும், ராசிபுரம் க்ஷேத்திரத்திலும் கோயில்கொண்டிருக்கும் பகவானுடைய மண்டபங்கள், பிராகாரங்கள் இவைகளை எல்லாம் புதிப்பித்து அந்த ராசிபுரத்

தில் விளங்கும் வீரபத்ர ஸ்வாமியின் கோபுரத்தில் விளங்கும் பலவித பிரதிமைகளுக்கு நானுவித வர்ணமிட்டு அழகாய் தோன்றும்படி செய்துவைத்தார்.

ஸ்ரீ அகோபில மலைமுதல் திருவள்ளூர் வரையில் உள்ள பூமிக்கு அதிகாரியாய் விளங்கிய இந்த மட்லி அனந்தராஜா என்பவர் சிவபக்தியையும் விஷ்ணுபக்தியையும் ஆபரணமாக அணிந்துகொண்டு தனது நாட்டின்கண் விளங்கும் சிவ க்ஷேத்ரங்களிலும் விஷ்ணு க்ஷேத்ரங்களிலும் இவ்வித திருப்பணிகளை எல்லாம் இந்த ஒரு அரசரே செய்திருப்பதிலிருந்து இவர் மிகவும் பக்திசிரத்தையுடையவரென்பதும் இவர் செய்வித்த திருப்பதி கோபுரம் முதலான கட்டடங்கள் யாவும் இப்பொழுதும் அழகாய் அங்கங்கு விளங்கிவருகிறது. ஆதலால் இவர் செய்த தருமங்களுக்கு நாம் மதிப்பு இடமுடியாது.

இந்த திருப்பதியில் சோழ-யாதவ-ராஜாக்களின் காலத்தில் தொடங்கப்பட்ட ஆலயத்திருப்பணி வேலையானது நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்துவந்து இந்த மட்லி ராஜாவின் பேருதவியினுல் மிகவும் மேன்மையை அடைந்தவுடனே நமது தென்தேசத்தில் ஈஸ்டு இந்தியா கம்பேனியாரின் (East India Company) அதிகாரம் பரவத்தொடங்கியபடியால் அதுமுதல் தீவ்ரமான திருப்பணிவேலை எங்கும் நின்றுவிட்டது.

ஸ்ரீ கோவிந்தராஜப்பெருமாளின் உத்ஸவங்கள்.

இந்த திருப்பதியில் விளங்கும் ஸ்ரீ கோவிந்தராஜனுக்கும் மற்றுமுள்ள மூர்த்திகளுக்கும் விஜயநகர ராஜாக்களின் தர்மங்களினுல் சிற்சில உத்ஸவங்கள் அக்காலம்முதல் நாளது வரையில் நடந்துவருகின்றன. அவைகளில் ஸ்ரீ கோவிந்தராஜனுக்கு சித்திரை மாஸத்தில் சித்திராபெளர்ணமி உத்ஸவமும், புக்க உத்ஸவமும், வைகாசிமாஸத்தில் ஸ்ரீ கோவிந்தராஜாவின் பிரம்மஉத்ஸவமும், கோவிந்தராஜனுக்கு ஆனிமாஸத்தின் கடைசிதேதியில் ஆனிவரை ஆஸ்தான உத்ஸவமும் ஆடிமாதத்தில் கோவிந்தராஜாவின் ஆலயத்தில் விளங்கும் ஆண்டாளுக்கு திருவாடிப்பூர உத்ஸவமும், ஆவணிமாஸத்தில் கோவிந்தராஜாவுக்கும் கிருஷ்ணனுக்கும் ஸ்ரீ ஜயந்தி உறியடிக்கொண்டாட்ட உத்ஸவமும், புரட்டாசி மாஸத்தில் கோவிந்தராஜனுக்கு விஜயதசமி தினத்தில் வன்னிமா பாடிய வேட்டை உத்ஸவமும், ஐப்பசி மாஸத்தில் தீபாவளி தினத்தில் கோவிந்தராஜனுக்கு சிறந்தொரு தீபாவளி ஆஸ்தான உத்ஸவமும், கார்த்திகை மாஸத்தில் கோவிந்தராஜனுக்கு கிருத்திகாதீப உத்ஸவமும், மார்கழி மாஸத்தில் ஆண்டாளுக்கு மார்கழி நீராட்ட உத்ஸவமும், தை மாஸத்தில் ஸ்ரீகோவிந்தராஜனுக்கு அத்யயனேத்ஸவ திருநாளும், மாசிமாதத்தில் கோவிந்தராஜனுக்கு மாசி மகத்து (கூபசந்திர பேட்டை) உத்ஸவமும், பங்குனிமாஸத்தில் ஸ்ரீகோவிந்தராஜனுக்கு யுகாதிஉத்ஸவமும் பங்குனி உத்திர உத்ஸவமும், விசேஷமாய் நடக்கத்தொடங்கி நாளது வரையில் கொஞ்சம் ஏறக்குறைய முறைப்படி நடந்து வருகின்றன. ஆகிலும் தேசகால அதிகார ஸெளகரியங்களின் இயற்கைப் பான்மையினுல் விசேஷ உத்ஸவங்களாகிய பவித்ரோத்ஸவம் கல்யாணேத்ஸவம், கோடைத்திருநாள், வஸந்

தோத்ஸவம் முதலிய சிற்சில திருநாள்கள் இந்த கோவிந்தராஜாவின் ஆலயத்தில் நின்று போய்விட்டன.

இம்மாதிரியே இந்த கோவிந்தராஜாவின் ஆலயத்துக்குள்ளும், வெளிப்புறத்திலும், ஸன்னதி வீதி முதலிய இடங்களிலும் குடிகொண்டு விளங்கும் ஆழ்வார்களுக்கும், சில வைஷ்ணவ ஆசார்யர்களுக்கும் வருஷத்துக்கு ஒரு முறை நடந்தேறிவரும் உத்ஸவங்களாவன:—சித்திரை மாஸத்தில் ஸ்ரீகோவிந்தராஜாவின் ஆலயத்துக்குள் ஒரு தனிக்கோயிலை அடைந்திருக்கும் ராமானுஜருக்கு சித்திரை திருவாதிரை நக்ஷத்திரம் சாத்துமுறை ஆக நடக்கும்படி ராமானுஜர் உத்ஸவம் நடக்கிறது. இது போலவே வைகாசி மாஸத்தில் கோவிந்தராஜாவின் வடக்கு மாடவீதியில் விளங்கும் பாடசாலை நம்மாழ்வார் கோயிலிலுள்ள நம்மாழ்வாருக்கு வைகாசி விசாகம் சாத்துமுறையாகும்படி ஒரு உத்ஸவம் நடக்கிறது. இதுபோலவே ஆனிமாஸத்தில் கோவிந்தராஜாவின் தென்னண்டை மாடவீதியிலிருக்கும் பெரியாழ்வார் கோயில் பெரியாழ்வாருக்கு ஆனி ஸ்வாதி நக்ஷத்ரம் சாத்துமுறையாகும்படி ஒரு உத்ஸவமும், அக்கோயிலிலேயே ஆடி மாஸத்தில் பிரதிவாதி பயங்கரம் அண்ணு ஸ்வாமிகளின் உத்ஸவமும், ஐப்பசி மாஸத்தில் கோவிந்தராஜாவின் கோயிலுக்குள் தனிக்கோயிலையடைந்திருக்கும் ராமானுஜரின் ஆசாரியராகிய திருமலை நம்பி ஆசாரியருக்கு ஐப்பசி அனுஷ நக்ஷத்திரம் சாத்துமுறையாக ஒரு உத்ஸவமும், மேற்படி மாஸத்திலேயே கோவிந்தராஜாவின் ஸன்னதி வீதியிலிருக்கும் அஹோபிலமடம் பிரதம ஆசாரியரான ஆதிவண் சடகோபஸ்வாமிகளுக்கு ஐப்பசி கேட்டை நக்ஷத்கிரம் சாத்துமுறையாக ஒரு உத்ஸவமும் மேற்படி மாஸத்திலேயே மேற்படி வீதியில் விளங்கும் மணவாள மஹாமுனிகள் ஸ்வாமிகளுக்கு ஐப்பசி மூலநக்ஷத்திரம் சாத்துமுறையாக ஒரு உத்ஸவமும், மேற்படி மாஸத்திலேயே மேற்படி வீதியில் கோயில்கொண்டிருக்கும் வேதாந்த தேசிகர் ஸ்வாமிகளுக்கு ஐப்பசி திருவோணம் சாத்துமுறையாக ஒரு உத்ஸவமும் கார்த்திகை மாஸத்தில் ஸ்ரீ கோவிந்தராஜாவின் கோயிலுக்குள் விளங்கும் திருமங்கையாழ்வார்க்கு கார்த்திகைமாஸ கிருத்திகை நக்ஷத்திரம் சாத்துமுறையாக ஒரு உத்ஸவமும், மாசி மாசத்தில் திருப்பதி பேரிசெட்டி வீதியில் விளங்கும் ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோயிலிலுள்ள திருக்கச்சி நம்பி ஸ்வாமிகளுக்கு (ராமானுஜரின் ஆசாரியரில் ஒருவராகிய இவருக்கு) ஒரு உத்ஸவமும் நடந்து வருகிறது.

இது போலவே சங்கராசார்ய ஸ்வாமிகளின், உத்ஸவம் மடம் விஷயம், திருப்பதி ராமன் கோவில் அத்யாயத்தில் விவரிக்கப்படும்.

மேல் திருப்பதி என்னும் திருமலையில் ராமானுஜர் ஒருவருக்கு மாத்திரம் கோயில் உண்டு மற்ற ஆழ்வார்களுக்கும் ஆசாரியர்களுக்கும் அங்கு கோயில் இல்லாதபடியால் பொய்கை, பூதம் முதலான ஆழ்வார்களுக்கு இந்த திருப்பதியில் ஒவ்வொருவருககும் தனித்தனி கோயில்களிருந்தபோதிலும் வருஷத்துக்கொருமுறை பத்து நாள் உத்ஸவம் அவர்களுக்கு நடப்பதில்லை. அந்த அந்த ஆழ்வார்களின் மாஸ திருநக்ஷத்திரங்கள் மாத்திரம் தான் நடந்துவருகின்றன.

யாத்திரைக்காரர்களுக்கு கீழ் திருப்பதியில் ஸ்தல வசதி.

இந்த திருப்பதிக்கு வடமொழியில் ஸ்ரீபுரம் என்றும், ஸ்ரீபதிபுரமென்றும், கோவிந்தராஜபட்டணமென்றும் பலவிதப் பெயர்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், தமிழ் பாஷையிலும், தெலுங்கு முதலான மற்ற பாஷைகளிலும் திருப்பதி என்னும் பெயரே மிகவும் பிரஸித்தமாய் வழங்கிவருகிறது. இந்த திருப்பதி நகரமானது சென்னை ராஜதானியைச் சேர்ந்த சித்தூர் ஜில்லாவின் கிழக்கில் ரேணுகுண்டா ஜங்ஷனிலிருந்து பிரியும் ஒரு சிறு கிளையில், அந்த ஜங்கிஷனுக்கு 6-மைல் மேற்கில் நிலை பெற்றிருக்கிறது. திருமலையில் விளங்கும் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளை தர்சிக்கவேண்டி வருகிற யாத்திரைக்காரர்கள் யாவரும் இந்தத் திருப்பதி நகரத்துக்கு வந்தே தீரவேண்டும்.

திருப்பதியில் ஸ்ரீ மஹந்து அவர்களின் ஆதீனமும் தர்மமும்.

1838-ம் வருஷத்தில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்து, இங்குள்ள சிவ-விஷ்ணு தேவாலயங்களை நோக்கிய சில கிறிஸ்துவப் பாதிரிமார்களின் பிரேரேபணைப்படி (ஏவுதலினால்) இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு சட்ட தீர்மானத்தை வெளியிட்டார்கள். அதாவது:—‘இன்று முதல் இவ்விந்தியாவில் விளங்கும் சிவாலயங்களையும் விஷ்னு ஆலயங்களையும் புத்தர் ஜைனர்களின் கோயில்களையும், துருக்கரின் மசூதியையும் அந்தந்த மதஸ்த்தர்களே ஸ்வாதீனம் செய்துகொண்டு அவைகளுக்குரிய தர்மசொத்துக்களையும் முறைப்படி தர்மவழியில் செலவழிக்கக்கடவர்கள். ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் மூலமாய் நமக்குக்கிடைத்து நாம் பார்வையிட்டுக்கொண்டு வந்த ஏற்பாட்டை இன்று நாம் ரத்துசெய்து விட்டோம் என்று இப்படி ஓர்வித ஏற்பாட்டை வெளியிட்டு பிரசுரித்த தருணத்தில் ஸ்ரீரங்கம், சிதம்பரம், காஞ்சி முதலான க்ஷேத்திரங்களில் விளங்கும் அந்தந்த தேவாலயங்களை அவ்வவ்வூரிலுள்ளவர்கள் தமக்குரிய தஸ்தாவேஜிகளினாலும், சாக்ஷி, பாத்யம் முதலிய அத்தாட்சிகளினாலும், இந்தியா கவர்ண்மெண்டாரின் சம்மதத்தினாலும் ஸ்வாதீனம்செய்துகொண்டு, இப்பொழுதும் முறைப்படி மேற்படி தேவாலயங்களைப் பரிபாலித்து வருகிறார்கள்.

அத்தருணத்தில் (1839-ம் வருஷத்தில்) இந்த திருப்பதி-திருமலையில் விளங்கும் இரண்டு கோயில்களின் சொத்துக்களையும் தர்மகர்த்தாப்பதவியையும் அங்கீகாரம் செய்பவர்கள்யார்? என்று கவர்ன்மெண்டார் வினவியபொழுது, இந்த திருப்பதிக்கு சமீபத்திலுள்ள காளஹஸ்தி ராஜா அவர்களும், வெங்கடகிரி ராஜா அவர்களும், கார்வேட் நகர் ராஜா அவர்களும், மற்றுமுள்ள சில ஜமீன்தார்களும், திருமலை வெங்கடாஜலபதியின் தேவாலய தர்மகர்த்தா பதவியை நாங்கள் ஏற்றுக்கொள்ள பயப்படுகிறோமென்று மறுதளித்துவிட்டார்கள். அதுபோலவே இத்திருப்பதியில் வசிக்கும் சில ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றுமுள்ளாரும் பயந்தார்கள்.

இப்படியிருக்கும் தருணத்தில் ஸேவாதாஸ் மஹந்து என்பவர்தான் அந்த தர்மகர்த்தப் பதவியை வகிப்பதாக முன்வந்தார். அதைக்கேட்ட கவர்ன்மெண்டார் மிகவும் ஸந்தோஷமடைந்து ஷெ ஸேவாதாஸ் மஹந்து அவர்களுக்கு ஸ்ரீ வேங்கடாஜலபதி

யின் தேவாலயத்தையும், அதிலுள்ள வாஹனங்கள், நவரத்னமிழைத்த ஆபரணங்கள், ரொக்கப்பணங்கள் முதலியவைகளையும், அந்த ஆலயத்தைச்சுற்றிலும் 10-மைல் பூமியையும், திருப்பதியிலிருந்து திருமலைக்குப்போகும் வழியையும், வழியிலுள்ள தர்மதடாகங்களையும்; திருப்பதி கோவிந்தராஜன் தேவாலயத்தையும் மற்றுமுள்ள சில கோயில்களையும் ஸ்வாதீனம் செய்துவிட்டு நீங்களே தங்களுடைய சிஷ்யபரம்பரையாய் இந்த ஆலயத்தின் தர்மபரிபாலனம்செய்து வரக்கடவீர் என்று உத்திரவுசெய்து, மேற்படி மஹந்துவுக்கு ஸ்வாதீனம்செய்த தஸ்தாவேஜியுமளித்துவிட்டார்கள்.

ஸேவாதாஸ் மஹந்துஜீ அவர்கள் சுமார் 400 வருஷகாலங்களுக்குமுன் விஜயநகர சக்ரவர்த்தியாகிய சாளுவ நரஸிம்மன் கிருஷ்ணதேவராயர் இவர்களின் பேருதவியினால் இந்த திருப்பதியில் வடகலை அஹோபிலமடம் ஏற்பட்டதுபோலவும் தென்கலை பெரிய ஜீயர் மடம் மிகவும் உறுதி யெய்ததுபோலவும் மத்வவ்யாசராயர்மடம் ஏற்பட்டது போலவும் அக்காலத்தில் அயோத்தியினருகிலிருந்து இந்த திருப்பதி திருமலை க்ஷேத்ரத்துக்கு ஹத்தீராம் தாஸ் என்பவர் ஒருவர் வந்து நிலைபெற்று அவ்வரசர்களின் ஸஹாயத்தினாலும் தமது சிஷ்யர்களாயும் தம்முடன் இவ்விடத்துக்கு வந்த சில வைராகி பிராமணர்களின் உதவியினாலும் இந்த திருப்பதியில் ஒரு மடத்தையும் திருமலைமேல் ஒரு மடத்தையும் நிர்மித்துக்கொண்டும்; திருமலையில் பாபநாசதீர்த்தத்துக்கு போகும் வழியில் தாம் யோகம்செய்வதற்காக ஒரு பர்ணசாலை (ஆச்ரமம்)யை ஏற்படுத்திக்கொண்டும் தினந்தோறும் ஸ்ரீ வேங்கடாஜலபதிக்குத் துளசி, புஷ்பம், சந்தனம் இவைகளை ஸமர்பித்துவந்தார்.

ஹத்தீராம தாஸர்.

இவ்விதமாய் திருமலையிலும் திருப்பதியிலும் தனக்கு மடத்தை ஏற்படுத்திக்கொண்டு பகவானுக்கு அந்த ஹத்தீராம் தாஸர் என்பவர் கைங்கரியம் செய்துவரும் தருணத்தில் அவருடைய பக்தியின் மேன்மையைக்கண்டுகளித்த வேங்கடேசப்பெருமாள் ஒருநாள் இரவில் அந்த ஹத்தீராமதாஸர் தூங்கிக்கொண்டிருக்கையில் அவரது கனவில்தோன்றி அவரை எழுப்பி சற்றுநேரம் அவருடன் சில குளிர்ந்த மொழிகளையும் வேதாந்தத் தத்வங்களையும் கூறியபிறகு உல்லாசத்திற்காக அவருடன் பகவான் கொஞ்சநேரம் பாச்சிகை ஆட்டம்ஆடிவிட்டு அன்றிரவிலேயே மறைந்துவிட்டார்! இவ்விதம் வரையப்பட்டுள்ள வர்ணப்படம் கீழ்திருப்பதி மஹந்து அவர்களின் மடத்திலுள்ளது மன்னியில் திருமலையின் பேரில் த்வஜஸ்தம்பத்தினருகிலுள்ள முதல் கோபுரத்தின் வலது பக்கத்தில் கல்லில் வரையப்பட்டிருப்பதையும் காணலாம். இவ்வண்ணம் நடந்தபிறகு கண்விழிப்பை அடைந்த ஹத்தீராமதாஸர் என்பவர் மிகவும் ஆச்சரியப்பட்டு ஆனந்தக்கண்ணீர் பரப்பி இன்றிரவில் நமது கண்களுக்குப்புலப்பட்டு நம்முடன் பேசி பாச்சிகையாடியவர் இந்த வேங்கடாஜலபதியே என்று களிக்கூத்தாடி மேன்மேலும் பணிந்து நமஸ்கரித்து மறுநாள் காலையில் ஸ்நானம் ஜபம் முதலியவைகளை விரைவாய் முடித்துக்கொண்டு கோயிலுக்குள் சென்று அங்கு விளங்கும் பரஞ்ஜோதியான ஸ்ரீனிவாஸக்கடவுளை நமஸ்கரித்து துதித்து நிற்கையில் பகவான் ஒரு அர்சகர் மூலமாய் ஆவேசங்கொண்டு தோன்றி "ஓ ராமதாஸரே! உமது பக்திக்கு நான் மெச்சுகிறேன் உமது கீர்த்தி இவ்வுலகில் விளங்கக்கடவது" என்று

அருள்செய்தார். இவ்விதமாய் ஏழுமலை நாதனுடைய அருளை பெற்ற ஹத்திராமதாஸர் மேன்மேலும் பகவானுக்கு சில கைங்கரியங்களை பண்ணிக்கொண்டிருந்து திருமலையிலேயே சமாதியை அடைந்தார். ஆகையால் அந்த ஹத்திராம தாஸருடைய சிஷ்யரான மற்றொரு வைராகி பிராமணோத்தமர் அவரது ஸிம்மாசனத்தைப் பெற்றும், தன்னை அணுகிய வடதேச சிஷர்களுக்கு ராமாயணம் கீதார்த்தம் முதலியவைகளை வெளியிட்டுக்கொண்டும் வேங்கடேசப்பெருமானுக்குப் பற்பல பணிவிடைகளை செய்துக்கொண்டும் இருந்து அந்த மடத்துக்கு "ஹத்திராம் மடம்" என்று பெயரிட்டார்.

மஹந்துக்கள்.

அதுமுதல் அந்த ஹத்தீராமதாஸ் மடத்தின் ஸிம்மாஸனத்திலேறிய வடதேசப் பிராமணோத்தமர்க்கு மஹந்து என்று பெயர் வழங்கலாயிற்று. அந்த மஹந்து என்பவர்கள் யாவரும் வடதேசத்திலிருந்தே இந்த திருமலை திருப்பதிக்கு வந்து தங்கி அம்மடத்தில் நிலைபெற்று ஜீவகாலம் முழுமையும் பிரம்மசாரிகளாகவே யிருந்து கழித்து வருகிறார்கள். மேலும் இந்த திருப்பதி மஹந்துக்கள் நமது தென்தேச ஸந்நியாசிகளைப்போல் காஷாய ஆடையை அணிந்துகொள்ளாமல் அந்த பிரம்மசரியத்துக்குத் தக்கதான ஓர் வெண்மை வஸ்திரத்தை உடையாக அங்கீகரித்துத் தமது குருவினிடம் தங்கியிருந்து விஷ்ணுபக்தியை நன்றாய் உணர்வார்கள். இவர்கள் வைஷ்ணவமதத்தைச் சார்ந்தவர்களாயிருந்தாலும் இவர்களுக்குச் சற்றேனும் சிவத்வேஷம் கிடையாது. இதுபோலவே இந்த மஹந்துக்கள் தமது நெற்றியில் தென்கலை திருமணை தரித்தவர்களாயிருந்தாலும் இவர்களுக்கு வடகலை துவேஷம் கிடையாது. பெரும்பாலும் எல்லா மஹந்துக்களும் ஏகாதசியில் உபவாஸமிருப்பார்கள். தினந்தோறும் விடியற்காலையில் ஸ்நானம் செய்து ஜபங்களை முடித்தவுடனே பிறப்பிடமாகிய வடதேசத்தின் ஆசாரமுறைப்படி ஒரு விஷ்ணு மந்திரத்தை தமது மடத்தின் ஒருபக்கத்தில் அமைத்துக்கொண்டு அங்குபோய் நமஸ்கரித்து கீதை படித்தபிறகுதான் வெளியில் வந்து மற்ற காரியங்களைக் கவனிப்பார்கள்.

பிரசித்திபெற்ற மடம்.

இம்முறையே மஹந்துக்களுக்கும் அவரது சிஷர்களுக்கும் ஜன்மவ்ரதமெனப்படுமேறது. இவ்வண்ணமாய் ஸ்ரீவேங்கடாசலபதியின் பாதஸேவையை உத்தேசித்து வடதேசத்திலிருந்து இந்த திருப்பதிக்கு வந்துசேர்ந்தவர்களில் மடத்துக்கு அதிபதியாய் ஸிம்மாஸனமேறியவர் ஒருவருக்கே ஸ்ரீ மஹந்து என்று பெயர் அவரது சிஷர்களுக்கு பாவாஜி என்று பெயர். இந்தமாதிரியாய் இந்த திருமலை திருப்பதியில் ஹத்தீராமதாஸ் மடம், புக்கமடம், உத்தவதாஸ் மடம், காலிகோபுரபாவாஜிமடம் என்று பல மடங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் அவைகளில் ஹத்தீராமதாஸ்மடமே உலகில் எங்கும் பிரஸித்தி பெற்றது.

ஸேவாதாஸ் மஹந்து அவர்கள் செய்த கைங்கரியச்சிறப்பு.

ஆகையால் அந்த ஹத்தீராம்தாஸ் மடத்தில் அது தொடங்கியகாலம்முதல் இந்த முறைப்படி ஒருவர் மஹந்துவாயும் அவரது சிஷர்கள் பலர் பாவாஜிகளாயும் வரும்

தருணத்தில் ஸேவாதாஸ் மஹந்து என்பவர் தனது குருவினுல் அளிக்கப்பட்ட மஹந்து பதவியை அடைந்து பகவானுக்கு தொண்டுசெய்து வருங்காலத்தில் 1840-வருஷத்தில் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களால் தன்னிடம் ஒப்பிக்கப்பட்ட தேவாலயப்பொருள் கள் யாவையும் தான் ஒப்புக்கொண்டு தனக்குள் பேஷ்கார் என்னும் ஒரு உதவி உத்யோ கஸ்தரையும் மற்றும் பல குமாஸ்தாக்களேயும் ஏற்படுத்திக்கொண்டு திருமலே திருப்பதி தேவஸ்தானத்துக்கு தானே விசாரணகர்த் (தர்மகர்த்தா என்று உலகில் தனது மேன் மையைத் தெரிவித்தார்) இவ்விதமாய் கடவுளின் கருணேயினுல் திருமலே திருப்பதி தேவ ஸ்தானத்துக்கு விசாரணே கர்த்தாவாய் அமர்ந்த அந்த ஸேவாதாஸ் என்பவர் 1841-வது வருஷம்முதல் தினந்தோறும் வெங்கடாசலபதியின் உண்டியில் வந்துசேரும் திரவியங் களே எல்லாம் ஸரியாய் எடுத்து அவ்வித பொருளே கொண்டு ஸ்ரீவேங்கடேசப்பெருமா ளின் பிரபை என்னும் மகரதோரணத்தை சுமார் 1000 வராகனிடை பொன் வைத்து புதுப்பித்தார். இதுமாத்திரமல்ல ஸ்ரீ உத்ஸவமூர்த்திக்கும் உபயநாச்சிமாருக்கும் நெடு நாளாய் கிலமாயிருந்த திருவாபரணங்களேயும் வட்டில் படிகம் தூபக்கால், தண்டு முதலி யவைகளேயும் பொன்னினுலும் வெள்ளியினுலும் புதுப்பித்தார். மேலும் திருமலேமேல் மடப்பள்ளியையும் திருப்பதியில் மடப்பள்ளியையும் பழுதுபார்த்ததுமல்லாமல் திருமலே மேல் ஸ்வாமிபுஷ்கரணியின் கற்படிகளே மேடுபள்ளமில்லாமல் சரிப்படுத்தி புஷ்கரணி திருப் பணி செய்துவைத்து திருமலே முதலான கோயில்களில் காலந்தோறும் நடக்கக்கூடிய உத் ஸவம் முதலியவைகளே சிறப்பாக நடத்திவைத்து 12 வருடகாலம்வரை மஹந்து பட்டத் திலிருந்து பிறகு சமாதியையடைந்தார்.

தர்மதாஸ் மஹந்து அவர்கள் செய்த கைங்கரியச்சிறப்பு.

ஸேவாதாஸ் மஹந்துவின் காலத்துக்குப்பிறகு அவரது ஸிம்மாஸனத்தை யடை ந்த தர்மதாஸ் மஹந்து என்பவர் திருமலே திருப்பதி தேவஸ்தானம் விசாரணகர்த்தாவாய் பரிபாலனம் செய்யும் தருணத்தில் திருமலேமேல் வெங்கடேசப்பெருமாள் ஆலயத்தின் முதல்கோபுரத்தையும் இரண்டாவது கோபுரத்தையும் ரிபேர் செய்து அவைகளுக்கு வர் ணம் இட்டு பொற்சிகரமும் வைத்து, பிறகு திருப்பதியில் ஸ்ரீராமனுடைய கோயிலின் சுற்று மதிலேயும் மடப்பள்ளியையும் ஜீர்ணோத்தாரணம் செய்ததுமன்றி திருச்சானூரில் ஸ்ரீ அலர்மேல்மங்கைத்தாயாரின் ஆலயம் முழுவதையும் புதியதாய் கட்டியதுபோல் அவ் வளவு நன்ருய் பழுது பார்த்துவைத்தார். இதுவுமன்றி அங்கங்கு விளங்கும் மூலமூர்த்தி யினுடையவும் உத்ஸவமூர்த்தியினுடையவும் ஆபரணங்களேயும் வாஹனங்களேயும் பொன் தகடுபூசி சிறப்பிக்கச் செய்தார். பற்பல உத்ஸவங்களேயும் மற்றும் பலவித கைங்கரியங் களேயும் முறைப்படி நடத்திவைத்து பத்துவருஷகாலம்வரையில் மஹந்து பட்டத்திலிருந் தபிறகு சமாதியை அடைந்தார்.

பகவான்தாஸ் மஹந்து அவர்கள் செய்த கைங்கரியச்சிறப்பு.

தர்மதாஸ மஹந்துவின் காலத்துக்குப்பிறகு பகவான் தாஸ் என்பவர் தமது பூர் வீகர் போல் திருமலே திருப்பதியில் விளங்கும் தேவாலயங்களின் விசாரணே கர்த்தப்பதவி

யை அடைந்தபிறகு திருமலைமேல் பகவானுடைய ஆலயத்தின் எதிரில் முதல்கோபுரத்துக்கு அருகில் கிலமாயிருந்த த்வஜஸ்தம்பத்தைப் பொன் தகடுபோட்டு பிரதிஷ்டைசெய்து பிறகு திருப்பதியில் ராமபிரானுடைய ஆலயத்திலும் அம்மாதிரியே பொன் த்வஜஸ்தம்பத்தையும் ஸ்தாபித்து வைத்தார். இதுவுமன்றி பலவித உற்சவங்களையும் சிறப்பித்து 11 வருஷகாலம் வரையில் மஹந்து பட்டத்திலிருந்தார்.

ராமகிசோரதாஸ் அவர்கள் செய்த கைங்கரியச்சிறப்பு.

பகவான்தாஸ் மஹந்துவின் காலத்துக்குப்பிறகு மஹபீர்தாஸ் (மஹா பைரவதாஸ்) இரண்டுவருஷம் பட்டதிலமர்ந்திருந்து திடீரென்று புண்யலோகம் சென்றார். அவருக்குப் பிறகு ராமகிசோரதாஸ் மஹந்து என்பவர் வழக்கம்போல் பட்டத்தை வஹித்துப் பகவானுக்குப் பலவிதமாய் உற்சவங்களை நடத்திக்கொண்டுவந்தார். இவர் காலநாகரீகத்தன்மையை நன்றாய் ஆலோசித்து பகவானுடைய பொருளைக்கொண்டே தேவஸ்தானத்துக்குச் சொந்தமாய் ஒரு ஆங்கில பள்ளிக்கூடத்தையும் ஒரு ஸம்ஸ்கிருத பாடசாலையையும் ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானித்து அவ்வண்ணமே திருப்பதி ராஜவீதியின் மேற்கு பாகத்தில் சிறந்த கட்டடத்தை கட்டி முடித்து அதில் அந்த ஆங்கில கலாசாலையை அமர்த்தினர். மற்றொரு கட்டடத்தில் ஸம்ஸ்கிருத பாடசாலையையும் ஸ்தாபித்து அதில் வடமொழி கற்கும் மாணாக்கர்களுக்குத் தினந்தோறும் போஜனமும் தேவஸ்தானகச்சேரியிலிருந்தே நடந்துவரும்படி ஏற்பாடுசெய்து திருமலையிலும் தமது மடத்தையும் நன்றாய்க்கட்டிமுடித்து வானுலகடைந்தார். இவர்களது சமாதி திருமலையிலுள்ள மடத்திற்குள் இருக்கின்றன.

ஸ்ரீ மஹந்து பிரயாகதாஸ் அவர்கள் செய்துவரும் கைங்கரியச்சிறப்பு.

அந்த ராமகிசோரதாஸ் மஹந்துவின் காலத்துக்குப்பிறகு ஸ்ரீ பிரயாகதாஸ் மஹந்து என்பவர் திருப்பதியில் முறைப்படி பட்டத்தைப்பெற்று தேவஸ்தானகாரியங்களை நோக்கி வர ஆரம்பித்தபொழுது இவர் சிறு பிராயத்திலிருந்தவராயினும் தீர்க்காலோசனை செய்து லக்ஷக்கணக்கான ரூபாய்களைக்கொடுத்து ஸ்ரீ வேங்கடேசப்பெருமானுக்குச் சொந்தமாய் 500, 600 கிராமங்கள் கொண்ட இரண்டு தாலூகா பூமியை விலைக்குவாங்கினர். பிறகு திருமலையில் ஸ்வாமியின் புஷ்காணிக்கு மேற்க்குக்கரையில் வெகுநாளாய்க் கிலமாய்க்கிடக்கும் ஸ்ரீ வாராஹப்பெருமாளின் கோயிலை லக்ஷக்கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்து ஜீர்ணோத்தாரணம் செய்து ப்ரதிஷ்டையும் செய்துவைத்தார். இதுமாத்திரமல்ல. மேற்படி திருமலையில் ஸ்வாமிபுஷ்காணியில் நடுவில் விளங்கிவந்த நீராழிமண்டபத்தையும் புதிப்பித்துத் திருப்பதியில் ஸ்ரீ வேங்கடேசப்பெருமானின் தேவஸ்தானகச்சேரி கட்டடத்தையும் கஜானாவையும் கட்டிமுடித்து, திருச்சானூரிலும் திருப்பதியிலும் அனேக கட்டடங்களை கட்டிவைத்து, இந்த திருப்பதிக்கு தேசாந்தரிகளாய்வரும் ஸ்மார்த்தர்கள் மாத்வர்கள் வடகலையார் தென்கலையார் இந்நான்குஜாதி பிராம்மணர்களுக்குமாத்திரம் போஜனமும் அளிக்கும்படி தேவஸ்தான கச்சேரியில் புதிதாய் ஏற்பாடுசெய்திருக்கி

ஞர். இதுபோல் மற்றும் பலவிதத் திருப்பணிகளையும் தர்மங்களையும் திருவாபரணங்கள் பழுதுபார்ப்பதையும் செய்துவருகிறார்.

திருமலை-திருப்பதி தேவாலயம்.

நமது தென்னிந்திய தேவாலயங்களுக்குள் இந்த திருமலை திருப்பதி தேவாலயமே ஆதிகாலமுதல் மிகவும் செல்வப்பெருக்கையுடையது. இதுகாரணம்பற்றியே ஸேவாதாஸ் மஹந்து காலம்தொடங்கி இதுவரையில் இவ்வூரில் பற்பல தர்மவிஷயங்கள் நடந்து வருவதாலும் மேற்படி வேங்கடாசலபதியின் திருவடிக்கு காணிக்கை ஸமர்பிக்கும்பொருட்டு நாள்தோறும் நானாதேசங்களிலிருந்து ஆயிரக்கணக்காக பக்தர்கள்வந்து கூடுகிறபடியால் அவர்கள் சிலநாள் தங்கியிருப்பதற்கு அனுகூலமாய் அமைக்கப்பட்டிருக்கும் சில விடுதிகளுண்டு.

தேவஸ்தான கட்டடம்.

இந்த திருப்பதியானது 1886-ம் வருஷத்தில் முனிசிபல் டவுனாக ஆயிற்று. அப்பொழுது காளஹஸ்தியிலிருந்து ரேணிகுண்டா மார்க்கமாய் இவ்வூருக்கு வரும் ரஸ்தாவும், சித்தாரிலிருந்து இவ்வூருக்குவரும் ரஸ்தாவும், கார்வேட்நகர், நகரி, காஞ்சி இவ்விடத்திருந்து திருச்சானூர் வழியாய் வரும் ரஸ்தாவும் கொஞ்சம் சீர்திருத்தப்பட்டது. ஆகையால் இம்மூன்று ரஸ்தாமார்க்கமாயும், ரேணிகுண்டா, காட்பாடி ஜங்ஷன்வழியாய் ரயில் வண்டி மார்க்கமாயும் இந்த திருப்பதிக்கு வரும் ஜனங்கள் யாவரும் (இனாமாய் வாடகையில்லாமல்) தங்கி வசிப்பதற்காக திருப்பதி ராமஸ்வாமி கோயிலுக்கு எதிரில் தேவஸ்தான (புஷ்ப தோட்ட) கட்டடம் ஏற்பட்டிருக்கிறது. இதில் பிராம்மணர்களுக்கும் மற்றும் பிராமணரல்லாதாருக்கும் தனித்தனியாய் வசிப்பதற்கு சிறிய அறைகள் இருக்கின்றன. ஆகிலும் பிராமணர்களுக்கு மாத்திரம் சமையல் அறைகள் கொடுக்கப்படும். மற்ற ஜாதியார் இந்த கட்டடத்தில் சமைக்கலாகாது.

இது தவிர மைசூர் மகாராஜா அவர்களின் தர்மசத்திரமானது திருப்பதி காந்தி வீதி (பூர்வப்பெயர் ராஜவீதி; பெரியவீதி) யில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் பிராம்மணர் முதலியவர்கள் தங்கியிருக்கலாம். இதுபோலவே திருப்பதி கொத்தவீதியில் (புதுத் தெருவில்) கோமுட்டிகள் என்னும் வைச்யர்களுக்கு மாத்திரம் தர்மசத்திரம் கட்டப்பட்டிருக்கிறது. இதுபோலவே ஸௌராஷ்டிரப் பிராம்மணர்களுக்காகவும், மற்றுமுள்ள பிராம்மணர்களுக்காகவும் திருப்பதி ராமஸ்வாமி கோயில் ஸன்னதி வீதியில், ஒரு தர்ம சத்திரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கொத்தப்பள்ளி ராமாசார் சத்திரத்திலும் பிராம்மணர்கள் இரங்குவதுண்டு. இவைகள் தவிர, வடதேசத்திலிருந்துவரும் க்ஷத்திரியர், வைசியர், பைராகிகள் முதலான யாத்திரைக்காரர்கள் பெரும்பாலும் தங்குவதற்காகவே தேவஸ்தானத்தைச் சேர்ந்த தர்மசாலை என்னும் சத்திரம் மேற்படி காந்திவீதியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. வடகலை பிராம்மணர்கள் அகோபிலமடத்திலும் தென்கலைப்பிராமணர்கள் பெரியஜீயர்மடத்திலும் தங்கியிருப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த கட்டடங்கள் எல்லாம் கூடியவரையில் அழகாயும் சௌகரியமுள்ள

தாயும் பந்தோபஸ்து உள்ளதாயுமே இருக்கின்றன. இவ்வித கட்டடங்களில் தங்குவதற்கு இஷ்டப்படாதவர்கள் கொஞ்சம் வாடகை கொடுப்பார்களாகில் அவர்களுக்கு அங்கங்கு தனிவீடுகளையும் மற்றுமுள்ள சௌகரியங்களுமுண்டு.

துளசிமாலை சந்தனக்கல் இவைகளின் பூர்வ விருத்தாந்தம்.

இந்த திருமலை திருப்பதிக்கு யாத்திரையாக வருகிற பிராம்மணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்ரர் என்னும் நான்கு ஜாதியாரும் இந்த திருப்பதி கடைத்தெருவில் சுவல்ப விலைக்கு கிடைக்கக்கூடியதான ஒரு துளசிமணிமாலையையும் ஒரு சந்தனக்கல்லையும் ஒரு ஒரு பிரம்பு தடியையுமாவது கட்டாயம் வாங்கிக்கொண்டு தமது ஊர் போய்ச்சேரவேண்டும் என்று ஒரு பழயவழக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இதற்கு அத்தாட்சியாக ஒரு பூர்வவிருத்தாந்தம் வழங்கிவருகிறது. அதாவது 'பூர்வகாலத்தில் ஒரு சமயத்தில் நமது தட்சிணதேசத்து ஜனங்கள் யாவரும் வியாதியினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவ்வித துன்பத்தைக்கண்டு மனவருத்தமடைந்த வேங்கடரமணஸ்வாமியானவர் தான் ஒரு கிழவன்போல் ரூபமெடுத்துக்கொண்டு தனது கழுத்தில் துளசிமணிமாலையை அணிந்துகொண்டு தனது வலதுகையில் ஒரு பிரம்புத்தடியை ஊன்றிக்கொண்டும் இடதுகையில் மருந்த தேய்க்கக்கூடியதான ஒரு சிறு சந்தனக்கல்லை வைத்துக்கொண்டும் முதலில் இவ்வூரிலும் பிறகு இந்நாட்டிலுள்ள மற்ற ஊர்களிலும் வீதிவீதியாய் சுற்றினேக்கிவறலானார். அவ்விதமாய் அங்கங்கு திரியும் அக்கிழவரின் தோற்றத்தையும் மேன்மையையும் பார்த்து ஆச்சரியமடைந்த பூர்வகாலப்பெரியோர்கள் யாவரும் அவரைப்பாரத்தவுடனே நமஸ்கரித்து இக்கிழவர் வேங்கடாஜலபதியோ! கோவிந்தராஜனே! நாதா ரக்ஷிக்கவேண்டுமென்று துதிசெய்யத்தொடங்கினார்கள். அப்பொழுதே அந்த கிழவர் மறைந்துவிட்டார்! அவர் ஸஞ்சரித்த வீதிகளில் வசித்த ஜனங்களின் வியாதியானது மறுதினமே தானகவே தணிந்துவிட்டது! இவ்வண்ணமாய் எவ்விதமருந்தையும் உட்கொள்ளாமலே அவர்களுக்கு வியாதி தணிந்துவருவதையும் அவ்விதமாய் கிழவர்போல் தோன்றிய பான்மையையும் கண்டு வியப்படைந்த பெரியோர்கள் அதுமுதல் அந்த கிழவரின் மார்பில்தொங்கிய துளஸி மணி மாலையைப்போல் மற்றொரு மாலை செய்து தாங்கள் தயாரித்து அணிந்துவாலாயினர். இதுபோலவே தமது கையில் ஒரு தடியையும் பற்றிக்கொண்டு சற்றுநேரம் உலாவத்தொடங்கினார்கள். மருந்து அளிப்பதற்கு பதிலாக ஒரு சந்தனக்கல்லையும் தமது வீடுகளில் ஸ்தாபிக்கலாயினர்.' ஆகையால் இவ்விதமாய் பூர்வகாலத்தில் நமது பெரியோர்கள் செய்த நன்னடக்கையை நாம் இப்பொழுதும் கைக்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடனேயே அதுமுதல்கொண்டு நாளதுவரையில் இந்த திருப்பதிக்கு வருகிற தொண்டர்கள் யாவரும் துளசிமணிமாலையையும், தடியையும் சந்தனக்கல்லையும் இந்த க்ஷேத்ரத்தில் வாங்கிக்கொண்டுபோகிற வழக்கம் ஏற்படலாயிற்று.

மரப்பாச்சியின் விசேஷம்.

இதுபோலவே இந்த திருப்பதிக்கு வருகிற சுமங்கிலி ஸ்திரீகள் யாவரும்

வேங்கடேச்வாரின் உருவம்போல செய்யப்பட்ட மாப்பாச்சிகளையும், அவருடைய திவ்ய மஹிஷியாகிய அலர்மேல்மங்கை (அம்மன்) உருவம்போல் தயாரிக்கப்பட்ட மாப்பாச்சிகளையும் இவ்வூரிலிருந்து தமது ஊர்களுக்கு வாங்கிக்கொண்டுபோகிற வழக்கம் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. அதற்கு காரணம் யாதெனில், முன்பு ஒரு ஸமயத்தில் ஸுமங்கலிமாதர்கள் யாவருக்கும் விசேஷ நன்மையை உண்டுபண்ண வேண்டுமென்று நினைத்து ஒரு வெள்ளிக்கிழமையின் அந்திநேரத்தில் ஸ்ரீ வேங்கடேச்வாரின் பத்தினியாகிய அலர்மேல் மங்கை (திருச்சானூர் பத்மாவதி அம்மன்) இந்த தேசத்திலுள்ள வீடுகளில் அங்குள்ள மாதர்கள் திருவிளக்கு (ஸந்தியா தீபம்) ஏற்றும்பொழுது, ஒவ்வொருவீட்டின் வாசலின் முற்புறத்திலும் ஒரேகாலத்தில் ஒரு சுமங்கிலிமாது அவ்வீட்டை நோக்கி வருவதுபோல் ரூபமெடுத்து விளங்கினாள். மறுநாட்காலையில் அவ்வித ஆச்சரியத்தைப்பற்றிப் பேசிய மாதர்கள் யாவரும் இப்படி ஒரேகாலத்தில் எல்லாவீடுகளிலும் அந்திநேரத்தில் தோன்றியவள் நமது தெய்வத்தாயாகவே இருக்கவேணுமென்று நினைத்து, அதுமுதல் ஒவ்வொரு ஸுமங்கிலி மாதரும், கன்னிகைகளும் தமது தமது வீட்டில் மேற்படி அம்பாளின் உருவத்தைச் செம்மரத்தினால் செய்து மாடம் (பிறை) முதலிய விடங்களில் வைத்து அந்த நேரத்தில் புஷ்பங்களினாலும் குங்குமம், சந்தனம் முதலியவைகளினாலும் பூஜித்துவரலாயினர். இந்தக்காரணத்தினாலேயே இப்பொழுதும் இந்த திருப்பதி க்ஷேத்ரத்தில் வந்துகூடும் ஸகலஜாதி ஸுமங்கலிமாதரும், கன்யரும் மேற்படி அலர்மேல் மங்கைத்தாயாரின் உருவம் வாய்ந்த மாப்பாச்சியை வாங்கிக்கொண்டுபோய் வீடுகளில் வைத்துப் பூஜித்தும், அச்வத்த பிரதக்ஷணம் முதலான சுபகாலங்களில் ஸுமங்கலிகளுக்கு தானமாக அளித்தும், நவாாத்திரி பொம்மை கொலுவு காலங்களில் பிரதான அம்மனாகவும் வைத்துத் தொழுதுவருகிற வழக்கமும் ஏற்படலாயிற்று.

திருப்பதி கோவிந்தராஜனை தரிசிக்கவேண்டிய முறை திட்டம்.

இந்த திருப்பதியை வந்து அடைவதற்கு முன்னமே வெகுதூரத்திலிருந்து இவ்வூரின் வடக்கு பாகத்தில் மிகவும் உன்னதமாயும் சுமார் 10-மைல் நீளமுள்ளதாயும் விளங்குகிற (திருப்பதி மலைத்தொடரும், காலி கோபுரம்)முதலியவை நமது கண்களுக்குப் புலப்படும். நாம், அப்பொழுது மலையே திருவுடம்பாயும் இந்த திருப்பதி வேங்கடமலையே பகவானுடைய அவயவங்களாயும் பற்பல தேவதாஸ்வரூபமாயும் விளங்குகின்றன என்று பெரியோர் கூறியிருப்பதுபோலவே, அம்மலையைநோக்கி பக்தியுடன் கைகூப்பி நமஸ்கரித்து கோவிந்தநாம ஸங்கீர்த்தனத்தையும் ஸ்ரீ வேங்கடேசஸ்வாமியின் நாமஸ்மரணத்தையும் செய்யவேண்டும். பிறகு திருப்பதியின் அருகில் செல்லும்போது ஸ்ரீ கோவிந்தாாஜனுடைய கோபுரமும் கண்களுக்கு அழகாய்த்தோற்றி நமக்குப் பக்தியை அதிகமாக்கும். அப்பொழுதும் நாம் ஆநந்தத்துடன் கோவிந்தநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு நமது சௌகரியத்துக்குத் தக்கவாறு பழம் தேங்காய் முதலியவைகளை எடுத்துக்கொண்டு காலையில் 9 மணிக்கும் மாலையில் 7 மணிக்கும் திருப்பதி கோவிந்தாாஜபகவானை தரிசிப்பதற்காகத் தொண்டர்கள் போகலாம். அவ்விதமாய்ப்போகும் பக்தர்கள் யாவரும் அவரது கோயில் முன்புறத்திலிருக்கும் புக்கை என்னும் ஒரு சிறிய நடைவாவியில் தமது கைகால்

களை அலம்பிக்கொண்டு ஆசமனம் செய்த பிறகே முதல்கோபுரவாயிலுக்குள் நுழைந்து போகவேண்டும். பிறகு அந்த கோவிந்தராஜனுடைய ஆலயத்துக்குள் விளங்கும் புண்டரீகவல்லித்தாயார் கோயில் (அம்மன்ஸன்னதி) ஆண்டாள் ஸன்னதி, ராமானுஜர்கோயில், திருமலைநம்பி, கிருஷ்ணன் கோயில் முதலிய இடங்களில் யாத்திரைக்காரர்கள் தமது சக்திக்கு ஏற்றவாறு கற்பூர ஆர்த்தி, பழம், கற்கண்டு, தேங்காய் இவைகளை நைவேத்யம் செய்துகொண்டு தரிசனம் செய்யவேண்டும்.

சில ஏற்பாடுகள்.

இப்படியிருந்தபோதிலும் ஸ்ரீ கோவிந்தராஜனை தரிசிக்கவேண்டிய விஷயத்தில் மாத்திரம் தேவஸ்தான அதிகாரிகள் சில ஏற்பாடுகள் விதித்திருக்கிறார்கள். அவையாவன:—ஸ்ரீ கோவிந்தராஜாவின் முகமண்டபத்தில் கச்சேரிசெய்துகொண்டிருக்கும் மணியகாரரிடத்தில் 2 அணா செலுத்தி மஹந்து முத்திரையுள்ள சீட்டுப்பெற்றுக்கொண்டால்தான் அந்த கோவிந்தராஜாவின் ஸன்னதிக்குள்ளிருக்கும் அர்ச்சகர் தேங்காய் உடைத்து பகவானுக்கு நிவேதனம் செய்து கொடுப்பார்கள். இதுபோலவே 1 ரூபாய் செலுத்தி சீட்டு பெற்றுக்கொண்டால்தான், ஸ்ரீ கோவிந்தமூர்த்திக்குக் கற்பூர ஆரத்தி செய்துவைப்பார்கள். 7 ரூபாய் செலுத்தி டிக்கட்டுபெற்றுகொண்டால்தான் ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்வார்கள். ஆகையால் இவ்விதமாய் நாம் சீட்டுக்குச்செலுத்தியபணம்தான் பகவானுடைய கச்சேரி கஜானாவைச்சேரும் என்று ஆலய அதிகாரிகள் ஏற்பாடு விதித்திருக்கிறார்கள். எவ்விதபணமும் செலுத்த சக்தியில்லாத ஏழைஜனங்களுக்கு இனாமாகவே பகவானுடைய தரிசனமும், தீர்த்தம், சடகோபம் வகைகளும் கொடுக்கும்படியும் ஸ்ரீ மஹந்து ஏற்பாடுசெய்திருப்பதையும் ஏழைகள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கருடசேர்வை.

மேலும் வேங்கடாசலபதிக்குப் பிரார்த்தனையாக வேண்டிக்கொண்ட பக்தர்கள் அங்கு 21 ரூபாய் செலுத்தி கருடசேர்வை உற்சவம் செய்துவைப்பதுபோலவே இந்த திருப்பதி கோவிந்தராஜ மூர்த்தியினிடத்தில் கருடசேர்வை பண்ணிவைப்பதாக பிரார்த்தனை செய்துகொண்ட பக்தர்களும் மணியக்காரரிடம் 21 ரூபாய் செலுத்தி சீட்டு பெற்றுக்கொண்டால் அன்றையதினமே சாயங்காலத்தில் ஸ்ரீ கோவிந்தராஜஉற்சவமூர்த்தியைப் பொன் அல்லது வெள்ளி கருடவாஹனத்தின்மேல் எழுந்தருளப்பண்ணிவைத்து யானைகள், குதிரைகள், கொடி, குடை, சாமரம் முதலிய தேவாலய பரிச்சின்ன பிருதுகளுடன் நான்கு பெரிய வீதியிலும் கருட உற்சவம் நடத்தி வைப்பார்கள். மேலும் அவ்விதமாய் கோவிந்தமூர்த்திக்கு உற்சவம் நடைபெறும்போழுது அந்த உற்சவத்துக்காக பணம் கட்டிய பக்தர் கையில் ஒரு வெள்ளித்தடியையும் அளித்து அந்த உற்சவம் முடிந்து பகவான் மறுபடியும் வாஹனமண்டபத்தில் இறங்கும்பொழுது அந்தத்தடியை கொடுத்துவிட்டு ஸ்ரீ பகவானுடைய சடகோபம் மாலை முதலியவைகளை உபயம்செய்த பக்தர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இதுபோலவே ஸ்ரீ கோவிந்தராஜ மூர்த்திக்குச் சக்கரைப்பொங்கல், ததியோன்னம், புளியோதரை, தோசை, வடை முதலிய தளிகைகளை நிவேதனம் செய்து வைக்கவேண்டுமென்று விரும்பும் பக்தர்கள் அந்த மணியக்காரரின் கச்சேரியில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை அங்கு செலுத்தினால் அம்மாதிரியே அவைகளையும் நடத்திவைப்பார்கள்.

ராமஸ்வாமிகோயில்.

திருப்பதி ராமஸ்வாமிகோயிலானது கோவிந்தராஜனுடைய கோயிலுக்கு வடதிக்கில் மேற்குமுகமாய் ஒரு சிறிய கோபுரத்தை யுடையதாயும், நான்கு பக்கங்களிலும் பெரிய ப்ராகார மதில்ச்சுவரை யுடையதாயும் விளங்குகிறது. மேலும் இந்த ராமஸ்வாமி கோயிலுக்கு முன்புறத்தில் இரு சார்பிலும் வீடுகளையுடைய ஸன்னதிவீதி ஒன்றும், அவ்வீதியின் முடிவில் கிழக்குமுகமாயுள்ள ஆஞ்சநேயரின் சிறிய கோயிலொன்றும் கோயிலின் மூன்று பக்கங்களிலும் வடக்குமாடவீதி, கிழக்குமாடவீதி, தெற்குமாடவீதி, என்னும் மூன்று தெருவுகளும், ஆஞ்சநேயரின் கோயிலின் பின்புறத்தில் "ராமச்சந்திர குண்டம்" என்னும் ஒரு சிறிய தடாகமும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

காரணங்கள்.

இந்த திருப்பதியில் ஸ்ரீ ராமபிரானுக்கு ஆதிகாலத்தில் கோயில் நிர்மாணிக்கப்பட்டதற்கு பல காரணங்கள் தெருவிக்கப்படுகின்றன:—

ஸ்ரீ வேங்கடாஜலபதிக்கு உறைவிடமாகிய ஏழுமலைக்குள் அஞ்சனகிரிஎன்பது மிகவும் ப்ரஸித்திபெற்றது. முன்பு ஒரு ஸமயத்தில் அந்த அஞ்ஜனமலையின் தாழ்வரையில் வாயுதேவனுக்கு தேவியான அஞ்சனாதேவிஎன்பவள் பகவானைக்குறித்து வெகுநாள் தவம் செய்தபடியால் அம்மலைக்கு அதுமுதற்கொண்டு "அஞ்சனகிரி" என்று பெயர் வழங்கலாயிற்று. இவ்விதமாய் அவ்வஞ்சனாதேவியானவள் நெடுநாள் தவஞ் செய்து அதனால் பகவானுடைய மனதை களிக்கச்செய்து அவரது அருளையடைந்தபடியால் ஹநுமானென்னும் ஒரு ஸத்குமாரனைப் பெற்றாள். அக்குமாரனும் நாளடைவில் வளர்ந்துவருகையில் ஒருநாள் அந்த அஞ்சனாதேவியானவள் தமது குமாரனாகிய ஹநுமானை நோக்கி "ஓ ஆஞ்ஜனேய! என் கண்மணியே! இன்னும் அனேக வருஷகாலம் சென்றபிறகு இந்த அஞ்ஜநகிரியின் தாழ்வரைமுதல் வடக்கில் ரிசியமூகபர்யந்தம் வரையிலும் கிழக்கு திக்கில் மஹோததி என்னும் கடலையளவாயுள்ளதுமான தண்டகாரண்யமென்னும் கடினபூமியில் சில ராக்ஷஸர்கள் கூட்டம் கூட்டமாய் வந்துசேர்ந்து அநேக புண்ய புருஷர்களையும் மஹரிஷிகளையும் ஹிம்ஸிக்கப்போகிறார்கள். அவ்வித ராக்ஷதரை அழிக்கும்பொருட்டும், தர்மத்தை உலகில் நிலைநாட்டி வைக்கும்பொருட்டும் ஸ்ரீலக்ஷ்மீபதியானவர் ஸ்ரீராமனாக அவதாரம் செய்து இந்த தண்டகாரண்யத்தை யணுகி அவ்வரக்கர்களை எல்லாம் அழித்தபிறகு தென்முகமாய் கிஷ்கிந்தை என்னும் நகரை நோக்கி வரப்போகிறார். அத்தருணத்தில் நீ சிறந்த பக்தியுடன் அந்த ராமபிரானுடைய எதிரில் சென்று வணங்குவாயாகில் நீயே இவ்வுலகில் சிறந்தோங்குவாய். மேலும் நீ இவ்வஞ்ஜனகிரியின் தாழ்வரையினருகில் அந்த ராமபிரானுக்கு சிறந்ததோர் ஆலயத்தையும் நீ செய்துவைத்து அவரை தினந்தோறும் பூஜித்து

வருவாயாகில் அதுவே எனது மனக்களிப்பை உண்டுபண்ணும்" என்றுரைத்து ஆசி கூறினள்; ஆகையால் அந்த ஹநுமானும் தனதுதாயின் உபதேச மொழிப்படியே அந்த ராமபிரானுக்கு பக்தியுடன் தொண்டுசெய்து அவருக்கு இலங்கைநகரில் ஜயத்தை யுண்டுபண்ணிவைத்து அயோத்திமாநகரில் ராமசந்திரனுடைய பட்டாபிஷேக மகோற்சவச் சிறப்பையும் அநுபவித்து பிறகு இந்த அஞ்ஜனகிரியினருகில் விளங்கும் இந்த புண்யபூமியில் ராமசந்திரனுக்கு ஆலயநிர்மாணம் செய்துவைத்தனராம்.

மற்றொரு காரணம்.

முன்பு ஒரு ஸமயத்தில் ஜனமேஜய மகாராஜன் தனது மந்திரி பரிவாரங்களுடன் திருமலைக்கு வந்து ஸ்ரீவேங்கடாஜலபதியின் பாதாரவிந்தத்தை நமஸ்கரித்து ஆன்மாவுக்கு நற்கதியை யூட்டியபிறகு தமது நகரத்துக்கு திரும்பலானார். அவ்விதமாய் அவ்வரசன் சேஷகிரியின் உச்சியிலிருந்து இறங்கும்பொழுது வேங்கடகிரியின் சிகரத்திலிருந்து கீழ் பாகத்தில் தாழ்ந்தபூமியை நோக்கலானார். அந்ததருணத்தில் கிஷ்கிந்தை (பம்பைப் பொய்கை, பம்பாஸரஸ்) முதலிய புண்யபூமிகள் தோன்றலாயின. அவ்வித தோற்றத்தைக் கண்டு பரமானந்தமடைந்த அவ்வரசன் இந்த பூமியிலல்லவா முன்பு இராமபிரான் சுக்கிரீவனை தோழனாக்கிக்கொண்டார்; இந்த பூமியிலல்லவா வாலியின் வதமும் நேரிட்டது. இந்த ப்ரதேசத்திலல்லவா மதுவனம் அழிக்கப்பட்டது. என்று இவ்வண்ணமாய் ஸ்ரீராமனுடைய திவ்யசரித்திரங்களின் மேன்மை யானது அவ்வரசனுடைய மனதில் தோற்றவே அத்தருணத்திலேயே ஜனமேஜயராஜன் இந்த புண்யஸ்தலத்தில் ஸ்ரீ ராமனுக்கு இவ்வாலயத்தை நிர்மாணம்செய்துவைத்தும் அவருக்கு பற்பல திருவிழாக்களையும் நானாவித உபசாரங்களையும் நடத்திவைத்தும் அவரது ஸன்னதியினருகிலேயே சிலகாலம் வசித்திருந்தார். ஆகையால் அதுமுதல் இந்த திருப்பதி ராமஸ்வாமிகோயில் விளங்கலாயிற்று.

உத்ஸவங்களுக்குத் திரவியம்.

இந்த திருப்பதியில் ராமாநுஜர் சிலகாலம் தங்கியிருந்து தனது குருவாகிய திருமலைநம்பியினிடமிருந்து இராமாயண உபதேசத்தைப் பெற்றபடியால் அதுமுதல் ஸ்ரீராமனிடத்தில் விசேஷ பக்தியை யடைந்து, அந்த ராமபிரானை தனக்கு பூஜாதேவதையாக ஏற்படுத்திக்கொண்டதுமன்றி இத்திருப்பதியின் வடபாகத்தில் ஸ்ரீ ராமனுக்கு ஒரு புதிய கோயில் கட்டிவைக்கவேண்டுமென்று ஸங்கல்பம் செய்துகொண்டார்; அக்காலத்திலேயே கல்யாணபுரியிலிருந்து யாதவராய மஹாராஜன் திருப்பதியை யணுகி இங்கு விளங்கும் ராமாநுஜரைப் பணிந்து அவரது பாதத்தில் விசேஷ பக்தியைப்பூட்டி, ராமாநுஜ யாதவராயன் என்று தனக்கு அதுமுதல் நாமதேயத்தை பெருகச்செய்ததுமன்றி அந்த ராமாநுஜரின் மனக்கருத்து போலவே இந்த திருப்பதியில் ஸ்ரீராமபிரானுக்கு கர்ப்பக்கிருஹம், திருவுண்ணாழிகைப்பிரதக்ஷிணம் என்னும் உள்பிராகாரம், முகமண்டபம், ஆஸ்தானமண்டபம், இரண்டாவது ப்ராகாரம், மடப்பள்ளி, அதற்குவெளியில் மூன்றாவது பிராகாரம், கோபுரம், முதலியவைகளுடன் கூடியதாய் இந்த ஆலயத்தை நிர்மித்ததுமன்றி, நித்யபடி பூஜைகளுக்கும் ஸ்ரீராமநவமி முதலிய உத்ஸவச் சிறப்புகளுக்கும் அளவற்ற திரவியமளித்தாராம்.

சாஸனம் விளங்கல்.

ஆகையால் இவ்விதமாய் திருப்பதியில் இந்த யாதவராஜன், ராமானுஜர் இவர்களின் காலம்முதல் இந்த ராமஸ்வாமியின் ஆலயம் மிகவும் சிறப்புள்ளதாய் ஏற்பட்டபடியால் அக்காலம் முதல் (சாலிவாகன சகாப்தம் 12-வது நூற்றாண்டுமுதல்) இத்திருப்பதியில் வரையப்பட்ட சிலாசாசனங்களில் இந்த ராமசந்திரனுடைய வைபவங்களும் சிறப்பும் காணப்படுகின்றன.

ஆகிலும் அவ்வித கோயிலின் முகமண்டபமும், இரண்டாவது ப்ராகார மதிள்சுவரும், மூன்றாவது ப்ராகார மதிள் சுவரும் நாளடைவில், கிலமாகிவிடவே சுமார் கி. பி. 854வது வருடத்தில் அவைகளை பழுதுபார்த்து புதிய கற்களைக்கொண்டு ப்ராகாரங்கள் புதுப்பிக்கப்பட்டன. அக்காலத்திலே அந்த மதிள்களில் வரையப்பட்ட கல்வெட்டுகள் முழுமையும் நாசம் செய்யப்பட்டன. அவ்விதமிருந்தபோதிலும் அச்சுதராயனுடைய காலத்தில் வரையப்பட்ட இரண்டு மூன்று சிலாசாஸனங்கள்மாத்திரம் இந்த ராமஸ்வாமி கோயிலின் முன்கோபுரத்தில் விளங்குகின்றன.

உற்சவச் சிறப்புகள்.

இவ்வண்ணமாய் இந்த ராமஸ்வாமியின் ஆலயத்தில் நமது பூர்வ ராஜாக்களின் பெருதவியினால் நித்ய உத்ஸவம், பக்ஷஉத்ஸவம், மாஸ உத்ஸவம், பவித்ரோத்ஸவம், வஸந்தோத்ஸவம், ஸம்வத்ஸரோத்ஸ்வம் முதலான பலவித திருவிழாக்கள் மிகவும் சிறப்புடன் நடந்தேறி வந்ததாய் அனேக தஸ்தாவேஜிகளினால் ஏற்பட்டபோதிலும் ஏதோ ஒரு கால தேச ஸௌகரியங்களைக்கொண்டு பூர்வகாலத்தில் நடந்த அவ்வித உத்ஸவங்கள் எல்லாம் இப்பொழுது நடைபெறுவதில்லை. ஆகிலும் ஆதி மஹந்து அவர்களின் ஏற்பாடு முறையை அனுஸரித்து இப்பொழுது நடைபெறும் உத்ஸவங்கள் யாதெனில்—

1. ஸ்ரீ ராமபிரானுக்கு பங்குனிமாஸத்தில் 9 நாளில் நிறைவேறக்கூடியதாய் ஒரு ப்ரம்மோத்ஸவமானது கொடிஏற்றத்துடனும் இரண்டு வேளையிலும் பற்பல வாஹநங்களுடனும் ரதோத்ஸவம், தீர்த்தவாரி முதலிய விசேஷ போகங்களுடனும் கூடியதாய் நடத்திவரப்படுகிறது.

பிறகு மேற்படி ராமசந்திரனுக்கும் ஸீதாதேவியம்மனுக்கும், லக்ஷ்மணனுக்கும் ஸ்ரீ ராமநவமி தினத்தில் பகலில் ஒரு உத்ஸவமும், அன்றிரவில் ஸ்ரீ ராமபிரானுக்கும் லங்கா விஜயத்தை அறிவிக்கக்கூடியதாய் ஹநுமந்தவாஹன உத்ஸவமும் பிறகு கோயிலுக்குள் ராமாயண பட்டாபிஷேக படனமும் நிறைவேற்றிவரப்படுகிறது.

2. சித்திரைமாஸத்தில் ஸ்ரீ ராமபிரானுக்கும் லக்ஷ்மணன் ஸீதாதேவிக்கும் திருச்சகனூர் (திருச்சானூரில்) விளங்கும் பத்ம ஸரஸ்ஸில் (தடாகத்தில்) ஒருநாளிரவில் தெப்ப உத்ஸவம் நடக்கிறது.

3. ஆனிமாதத்தின் கடைசிதினத்தில் ராமபிரானுக்கு ஆனிவரை ஆஸ்தான உத்ஸவச்சிறப்பும், ஐப்பிசி மாதத்தில் தீபாவளி பண்டிகை தினத்தில் தீபாவளி ஆஸ்தான உத்ஸ

வமும், 5. கார்த்திகைமாஸத்தில் கிருத்திகாதீப உத்ஸவமும், 6. மார்கழிமாதம் முப்பது நாளிலும் தனுர்மாஸ உத்ஸவச்சிறப்பும், இன்றைக்கும் அங்குவிளங்கும் ராமானுஜருக்கும் அத்யயனேத்ஸவமும், 7. மாசிமகத்துநாளில் ஸ்ரீ ராமபிரான் திருப்பதியினருகிலுள்ள "கூபசந்திரபேட்டை" என்னும் ஊரில் விஜயம் செய்யுமாறு ஓர்வித உத்ஸவமும் நடத்தப் படுகிறது.

இவைகள் தவிர ஒவ்வொரு சனிக்கிழமையிலும் ஸ்ரீராமபிரானுக்கு மாடவீதி உத்ஸவமும், ராமபிரானுக்கு ஜந்மநக்ஷத்ரமாகிய ஒவ்வொரு புனர்வஸு நக்ஷத்திரத்திலும் விசேஷ உத்ஸவமும் நிறைவேற்றப்படுகிறது.

பிரார்த்தனைகளை நிறைவேற்றல்.

இவ்வண்ணமாய் ராமசந்திரனுக்கு சில முக்ய உத்ஸவங்கள் மாத்திரம் நடத்தப் பட்டபோதிலும் திருமலை திருப்பதிக்கு யாத்திரையாக வந்து கூடும் பக்தர்கள் யாவரும் இந்த ராமமூர்த்தியை தர்சனம் செய்துகொண்டே போகவேண்டும். மேலும் இந்த ராம பிரானுடைய ஸன்னதி வீதியிலேயே அர்ச்சகர் என்னும் தீக்ஷிதர்கள் தமது வீடுகளை யடைந்திருக்கிறபடியால் திருமலையிலும் கோவிந்தராஜனது கோயிலிலும் இந்த ராமபிரானுடைய ஆலயத்திலும் அர்ச்சக மிராசைப்பெற்று அதற்காக இனும் கிராமங்களை அடைந்திருக்கிற இந்த அர்ச்சகர்களின் சொந்த செலவுக்காகவே இந்த பட்டாபிராமனுடைய கோயிலை தேவஸ்தான அதிகாரிகள் விட்டிருக்கிறபடியால் இந்த ராமமூர்த்தியை தரிசிப்பதற்காக அந்த அர்சகர்களின் ஏஜெண்டுகள்மூலமாய் பகவானுடைய ஸகலவித ஸேவைகளையும் பக்தர்களடையலாம். தேங்காய் பழம் நைவேத்யவிதங்கள் அபிஷேகவிதங்கள் இவைகளையும் அர்சகர்களின் ஏஜெண்டுகள் மூலமாய் பக்தர்கள் அளித்து பகவானுக்கு ஸமர்ப்பித்து மேன்மையடையலாம். கோவிந்தராஜனது கோயிலில் ஏற்பட்டிருப்பது போலவே யாத்திரைக்காரர்கள் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தால் அவைகளுக்குத் தக்கவாறு இந்த கோயில் மணியக்காரரிடம் பணம் செலுத்தி பிரார்த்தனைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

மடாலயம்.

இம்மாதிரியாய் ஆதிகாலம்முதல் ஆசாரியர்களாலும் நானுதேச பக்தர்களினாலும் கொண்டாடப்பட்டுவரும் இந்த ராமஸ்வாமியின் கோயிலின் ஸன்னதிவீதியில் பெரும்பாலும் அர்ச்சகர்களின் வீடுகளும் ஸௌராஷ்ட்ரப் பிராமணர்களின் தர்மஸத்திரமும் நிலை பெற்றிருக்கின்றன. இதுபோலவே இந்த ராமஸ்வாமி கோயிலின் வட மாடவீதியில் சாலி கோபுரம், மஹந்து அவர்களின் முக்கிய மடமும், அதன் ஸமீபத்திலேயே உலகமெங்கும் புகழ்பெற்ற ஸ்ரீசங்காராசாரிய ஸ்வாமிகளின் மடமும் விளங்குகிறது. இத்தகைய சங்கராசார்ய ஸ்வாமிகளின் மடம் இங்கு தோன்றியதற்கு பூர்வ விருத்தாந்தமுமுளது.

ஸ்ரீ ஆதி சங்கராசார்ய ஸ்வாமிகள் நூற்றுக்கணக்கான தமது சிஷ்ய வர்க்கங்களுடன் கங்கா யாத்திரையாய் சென்று நைமிசம் ஹரித்துவாரம் ஹ்ருஷீகேசம் என்னும்

புண்ய ஸ்தலங்களை யணுகி அங்கு பதரிகாச்ரமத்தில் சிலகாலம் தங்கியிருந்து யோகாப்யாஸத்தை முறைப்படி நிறைவேற்றி நர நாராயண மூர்த்திகளை புநப்ப்ரதிஷ்டை செய்து வைத்து பிறகு காசிமார்க்கமாய் திரும்பிவந்து அஹோபிலத்தையடைந்து அங்கு லக்ஷ்மீ நரஸிம்ம மூர்த்தியையும் தர்சித்து ஸ்தோத்திரம்செய்து அவ்விடத்திலிருந்து திருமலை க்ஷேத்ரத்துக்கு வந்தார். அச்சமயத்தில் பல்லவராஜாக்களின் வேண்டுகோளின்படி ஸ்ரீ வேங்கடாஜலபதியை ஐந்துவருஷகாலம் வரையில் நேராகத் தாமே பூஜித்து பக்தர்களின் மீது வேங்கடேசனுடைய கருணையைப் பாயச்செய்து அங்கிருந்து தெற்குதிக்கு நோக்கும் பொழுது ஆசார்யஸ்வாமிகளின் கனவில் கையில் வில்லேந்திய ஓர் வீரபுருஷன் தோற்றலானர்! அதைக்கண்டு மனக்களிப்பையடைந்த ஆசார்யஸ்வாமிகளும் இப்படி தோற்றியது ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியாகவே யிருக்கவேண்டுமென்று நினைத்து அவ்விடத்திலிருந்து இந்தஸ்தலத்திற்குவந்து ஸீதாமனோஹரனை நமஸ்காரம் செய்தபிறகு சோழ தேசத்துக்குச் செல்லலானர். ஆகையால் அக்காலம்முதல் இந்த ராமஸ்வாமி கோயிலின் வடக்கு மாடவீதியில் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் மடம் ஏற்படலாயிற்று.

சங்கரர் வரலாறு.

ஒரு ஸமயத்தில் ஸ்ரீ ஆதி சங்கராசாரியஸ்வாமிகள் தமது சிஷ்யர்களுக்கு கங்கைக் கரையில் வால்மீகி இராமாயணத்தின் தத்வப் பொருள்களை உணர்வித்துக்கொண்டிருக்கும் தருணத்தில் ஒருநாள் அந்தி நேரத்தில் ஸீதாபிராட்டியையும் லக்ஷ்மணனையும் இருபுறத்திலும் அமைத்துக்கொண்டு அவர்களின் நடுவில் நீலமேகம்போல்விளங்கும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை கங்கைக்கரையில் கண்டு களித்தார். பிறகு ஆசார்யஸ்வாமிகள் அவ்வந்தி நேரத்துக்குறிய அனுஷ்டானங்களை நிறைவேற்றியபிறகு அவ்வித தோற்றத்தின் பெருமையை தமது சிஷ்யர்களில் சிலருக்கு எடுத்துரைத்தார். அவர்களுமதைக்கேட்டு ஆனந்தக்கண்ணீர் பரப்பி தமது ஆசார்யர் கூறும் மெய்ப்பொருளை செவியாரக்கேட்பதற்காக பரம்பொருளாகிய ராமனே அவ்வண்ணம் தோற்றலாயினர் என்று தாமும் அவரை ஏற்றவாறு துதித்து தமது குருவின் பாதாரவிந்தத்தைப் போற்றினர்கள். இவ்வண்ணமாய் ஆசாரியஸ்வாமிகளும் அவரது சிஷ்ய வர்க்கங்களும் அந்த கங்காதீரத்திலிருந்து தமது காரியங்களை நிறைவேற்றிக்கொண்டு நாளடைவில் தெற்குதிசையை நோக்கிக்கொண்டுவருகையில் அவர்களெல்லோரும் துங்கபத்திரா நதியைத்தாண்டினவுடனே அவர்களின் கண் தோற்றத்துக்கு முன் கங்கைக்கரையில் தோன்றியதுபோலவே ஸ்ரீ ராமமூர்த்தியின் உருவம் மறுபடியும் காணலாயிற்று! அவர்கள் எல்லோரும் அவ்வித காக்ஷியினல் கவரப்பட்டமனமுள்ளவர்களாய் இந்த ஏழுமலைகளிலொன்ருகிய வ்ருஷபகிரியினருகில் நடந்து வரும்பொழுது அவ்வித ராமதர்சனக்காக்ஷி கண்களுக்குப்புலப்படாமல் மறைந்துவிட்டது! அதைக்கண்டு வியப்படைந்த ஆசார்யஸ்வாமிகள் இவ்விடத்திலேயே ஸ்ரீ ராமபிரான் வீற்றிருக்கவேண்டும் என்று நினைத்து ஆராய்ந்துவருகையில் இந்த ராமஸ்வாமி கோயிலின் விமான சிகரக்காந்தியானது கோடி ஸூர்யப்பிரகாசத்தை யடைந்ததாய் அவர்களின் எதிரில் தோன்றிற்று! அதுமுதல் ஆசாரியஸ்வாமிகள் இந்த திருப்பதியிலேயே ஒருவருஷகாலம் வரையில் தங்கியிருந்து மறுபடியும் ராமாவதாரம் முதல்

பட்டாபிஷேகமகோத்ஸவம் வரையிலுள்ள ராமாயணார்த்ததத்துவத்தை பலருக்கும் உப தேசித்தபிறகு காஞ்சீ காமகோடி பீடத்தினருகில் சென்றனாம். அக்காலம் முதல் அவ் வாச்சாரியஸ்வாமிகள் வஸித்த ஸ்தலத்தில் சங்காசார்யமடமேற்பட்டு விளங்குகிற தென்பார்கள்.

கும்பாபிஷேகம்.

இவ்விதமாய் வெகுநாளாய் இவ்விடத்தில் ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமிகளின் மடம் ஏற்பட்டிருப்பதனால் அம்மடத்தின் பூஜை, ப்ராம்மண போஜனம் முதலான செலவுகளுக் காக விஜயநகர மன்னர்கள் பல கிராமங்களை ஆதாரப்பொருளாக தர்மத்துக்கு அளித்தார் கள். அவ்வித ஸொத்துக்கள் யாவும் நாளடைவில் பிறருக்கே ஸ்வாதீனமாய்விட்டபடி யால் மேற்படி மடமானது மிகவும் ஏழ்மைதசையிலிருந்தது. அதைக்கண்டு ஆற்று மன முடைய இக்காலத்திய திருப்பதிவாஸிகள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து கொஞ்சம் திரவி யம் சேகரித்து 1925-ம் வருஷத்தில் இந்த சங்காசார்ய ஸ்வாமிமடத்தில் ஆசார்யஸ் வாமிகளின் விக்ரஹமூர்த்தியை ப்ரதிஷ்டைசெய்து அதற்குறிய கும்பாபிஷேகம் முதலிய வைகளையும் வேதசாஸ்த்திர முறைப்படி நடத்திவைத்து அது முதல் அம்மடத்தில் சங்கர ஜயந்தி தினக்கொண்டாட்ட மகோத்ஸவமும் நடக்கவேண்டும் என்று தீர்மானித்து அதற்குரிய காரியங்களைச்செய்து நடத்திவருகிறார்கள்.

தேர் வீதி.

இந்த ராமஸ்வாமி கோயிலின் தெற்கு மாடவீதியில் ஸ்ரீ ராமனுடைய கங்கைகொ ண்டான் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. பங்குனிமாதத்தில் ராமஸ்வாமிகோ யில் பிரம்மோத்ஸவ ஸமயத்தில் பகலிலும் இரவிலும் வாஹனங்களின்மீது வரும் ஸ்ரீராம பிரானுக்கு இந்த கங்கை கொண்டான் மண்டபத்தில் நைவேத்யப்படி வகைகள் மண்ட கப்படி நடத்தப்படுகிறது. இதுபோலவே இந்த ராமபிரானுக்கு சனிவாரங்கள்தோறும் நடைபெறும் சனிக்கிழமை உத்ஸவ மண்டகப்படியானது இங்குள்ள தேவஸ்தான புஷ்ப தோட்ட கட்டடத்தின் முற்றமண்டபத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த தெற் குமாடவீதியிலேயே ராமபிரானுடைய தேர் நிலைபெற்றிருக்கிறபடியால் இதையே சிலர் ‘தேர்வீதி’ யென்றும் கூறுவார்கள். ஆகையால் இப்படிப்பட்ட ராமபிரானுடைய ரதமா னது இங்கு விவரிக்கப்பட்ட இந்நான்கு வீதிகளின் வழியில் பிரம்மோத்ஸவ ஸமயத்தில் நடத்தப்பட்டுவருகிறது.

இவ்விதமாய் திருப்பதி ராமஸ்வாமியின் கோயிலுக்குள் சிறந்த உத்ஸவங்கள் நடைபெறும் ஸமயங்களில் ஸ்ரீ கோவிந்தராஜன் ஸன்னதிக்காக ஏற்பட்டிருக்கும் பெரிய ஜீயர், சின்ன ஜீயர், அவர்களின் பிரதிநிதியாகிய ஏகாங்கி வைஷ்ணவர்கள், மற்றுமுள்ள வடகலை தென்கலை ஸ்ரீ வைஷ்ணவஆசார்ய புருஷர்கள், ஸ்ரீ மஹந்துஜீ அவர்களின் சிஷ்ய ரில் ஒருவர் ஆகிய இவ்வனைவர்களும் வந்த பிறகே ஒவ்வொரு ஆஸ்தான வினியோகச்சிறப் பும், மண்டகப்படி வகையும், வேதபாராயண ப்ரபந்த படனமும் அவர்களுக்கு தக்கவாறு மறியாதைகளும் நடக்கும்படியே ஏற்பாடுமுறை அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வண்ணம் மகிமைவாய்ந்த திருப்பதியின் கண் கோயில்கொண்டு விளங்கும் ஸ்ரீராமபிரானை ப்ரதக்ஷிணம் செய்வதும், அவருக்கு எதிரில் நெய்தீபம் வைப்பதும், பலவித நைவேத்யம் செய்துவைப்பதும், அவரது ஸந்நிதானத்தில் ராமாயண படனம்செய்வதும் தொண்டர்களின் மேன்மைக்குக் காரணமாகும் என்பதை நமது பாதகண்டத்திலுள்ள நான்கு வர்னத்தார் யாவருமறிவார்கள்.

கபிலேசுவரர் கோயில்.

திருப்பதிக்கு வடக்கில் இரண்டுமைல்தூரத்தில் மலைச்சாரில் 'கபில தீர்த்தம்' என்னும் புண்யதடாகம் ஒன்றும், அதற்கு எதிரில் கிழக்கு திக்கில் ஸ்ரீ கபிலேச்வர ஸ்வாமியின் கோயிலும் விளங்குகிறது. ஸ்ரீ வேங்கடாஜலபதியின் பாதஸேவையை நோக்கி வரும் தொண்டர்கள் யாவரும் இந்த கபிலதீர்த்தத்தில் நியமத்துடன் ஸ்நானம் செய்து ஸ்ரீ கபிலேச்வர மூர்த்தியை தர்சித்த பிறகே ஏழுமலையின்மேல் ஏறிச்செல்லவேண்டும் என்று சில புராணங்களில் கூறப்பட்டிருக்கிறபடியால், பூர்வகாலத்தில் புண்யபுருஷர்களாக வந்து தோன்றிய காஞ்சிப் பல்லவராஜாக்களும் சில சோழ வம்ச சக்ரவர்த்தியான ராஜேந்திரசோழனும் ஸுமார் 1000 வருஷங்களுக்கு முன்னமே இந்த கபிலேச்வாரின் ஆலயத்தின் கர்ப்பக்கிருகத்தை சீர்திருத்தி, அதற்கு எதிரில் முகமண்டபத்தையும் சிறந்த கற்பாறைகளினால் கட்டி மலையின் சாரில் தோன்றும் ஒரு சிறிய குகையின முற்பாகத்தில் நிர்மித்தார்கள்.

விசேஷ தர்மகாரியம்.

சில காலஞ் சென்ற பிறகு யாதவராஜாக்கள் இராஜ்யபாரம் செய்துவரும் தருணத்தில், அந்த முகமண்டபத்துக்கு எதிரில் பூர்வாங்கணமும் மற்றும்சில திருப்பணிவேலைகளும் நடந்தேறியதாய் தெரியவருகிறது. ஆகிலும் விஜயநகர மன்னர்களின் அரசு காலத்தில் மேன்மேலும் ஓங்கி வளரவேண்டியதான இந்த கபிலேச்வரரின் கோயிலானது திருப்பதியிலுள்ள சில வைஷ்ணவர்களின் தூண்டுதலினால் விஜயநகர மன்னர்களும், அவரது ஸேனாதிபதிகளும், மந்திரிமார்களும் மற்றுமுள்ளோரும் இந்த கபிலேச்வரரின் ஆலயத்துக்கு தனங்களையும் கிராமங்கள் முதலியவற்றையும் அளிக்காமல், அவ்வைஷ்ணவர்களின் கோரிக்கைப்படியே ஸ்ரீ கோவிந்தராஜனுக்கும் ஸ்ரீ வேங்கடாசலபதிக்குமே விசேஷமாய் தர்மகாரியங்களை செய்து வரலானார்களாம்.

சிலாசாஸனம் கூறுவது.

ஆகிலும் விஜயநகர மன்னர்களுள் ஒருவராகிய ஸதாசிவராய மஹாராயன் அரசுபுரியும் தருணத்தில் இந்த கபிலமூர்த்தியின் ஆலயமானது இடைவிடாத மழையின் தோற்றத்தால் மிகவும் சின்னபின்னப்பட்டதைக்கண்டு அந்த மஹாராயனும் அவனுடைய விச்வாஸத்தையடைந்த சில பெரியோர்களும் அப்பொழுதே கபிலேச்வரரின் ஆலயத்தை பூர்வமுறைப்படி புதிப்பித்து பூஜை நைவேத்யம் முதலியவைகளுக்கு மூலாதாரப்பொருளை யளித்து சிறப்புடன் விளங்கும்படி செய்தார்கள் என்று அங்குள்ள ஒரு சிலாசாஸனத்தினால் ஏற்படுகிறது.

ரூபத்தை நாட்டிவைத்தல்.

மேலும் இந்த விஜயநகர ஸதாசிவ மஹாராயனுக்கு முன் ஸிம்மாஸனத்தில் விளங்கிய அச்சுதராய மஹாராயன் என்பவன் தனது பட்டமஹிஷியான வரதாஜீ தேவியுடனும் தனது குமாரனுன இளவரசு வேங்கடபதிராயனுடனும் மற்றுமுள்ள அரண்மனைப்புரோகிதர் முதலிய பரிவாரங்களுடனும் இந்த திருப்பதிக்கு வந்திருந்தபொழுது அக்காலத்திலுமுள்ள சில வைஷ்ணவர்களின் ஏவுதலினுல் அந்த அச்சுதராய மஹாராயன் இந்த கபிலேச்வாருக்கு முன்புறத்தில் விளங்குகிற கபில தீர்த்தமென்னும் புண்ய தடாகத்தின் பெயரை மாற்றி, அதற்கு "ஆழ்வார் தீர்த்தம்" என்று வேறொரு புதுப்பெயர் வைத்து, அத்தகைய தடாகத்தின் நான்கு திக்குகளிலும் (ஈசான்யமூலை, ஆக்னேய மூலை, நைருதிமூலை, வாயுமூலை என்னும் நான்கு திக்கு மூலைகளிலும்) வைஷ்ணவ மதத்தைப் பாதுகாக்க வல்லவராகிய ஸ்ரீ ஸுதர்சனமூர்த்தியின் ரூபத்தை நாட்டிவைத்து அவ்வித கற்பாறையில் தமிழ், தெலுங்கு, கன்னடம் என்னும் மூன்று பாஷைகளில் தான் இவ்விதம் இங்கு நடத்திய காரியத்தை சிலாசாஸன ரூபமாய் வெளியிட்டுளர்.

இவ்விதமாய் கபில தீர்த்தத்துக்கு ஆழ்வார் தீர்த்தமென்று வேறு பெயரிட்டு அந்த தடாகத்துக்கு வைஷ்ணவச் சிறப்பை யூட்டியபோதிலும் வேங்கடாசல மகாத்மியம் என்னும் ஸம்ஸ்கிருத புராணத்தில் கூறியபடியே கபில தீர்த்தமென்னும் பெயரே இன்னும் வழங்கி வருகிறது.

நம்மாழ்வார் கோயில்.

அச்சுதராயனுடைய காலத்துக்கு முன்னமே வைஷ்ணவர் இந்த கபில தீர்த்தத்தின் தெற்கு கரையில் நம்மாழ்வாரின் கோயில் ஒன்று விளங்குகிறது என்றும் அக்கோயிலின் சில சாஸன முறைப்படி வான் எடுத்தகையமுயிபாரான பல்லவராயன் காலம் முதற்கொண்டே அந்த நம்மாழ்வார் கோயிலில் வைஷ்ணவ மதச்சிறப்புகள் வளர்ந்திருந்தன. இத்தகைய காரணத்தினுலும் அச்சுதராய மஹாராயன் இந்த கபிலதீர்த்தத்துக்கு ஆழ்வார் தீர்த்தம் (நம்மாழ்வார் தீர்த்தம்) என்று பெயரிட்டு கல்வெட்டு நாட்டி அதை ஸ்திரமாகச் செய்தபடியாலும் இது கபிலதீர்த்தமன்று; இது ஆழ்வார் தீர்த்தமே. இங்கு கபிலேச்வாருக்கு கோயில் மாத்திரம்தான் உண்டு புண்ய (குளம்) தடாகம் அவருக்கு கிடையாது என்றும் வழங்கிவருகிறது.

விசேஷ சிறப்பு.

இவ்வண்ணமாய் இந்த கபிலதீர்த்தத்தை சைவர்களும் ஸ்மார்த்தர்களும் தங்களுடைய புண்யதீர்த்தமென்றும், வைஷ்ணவர்களும் மாத்வர்களும் தங்களுடைய புண்ய தீர்த்தம் என்றும் வழங்கி வரும் ஏற்பாடானது ஸ்ரீ கபிலேச்வாரின் கோயிலிலும், ஸ்ரீ கோவிந்தராஜனுடைய கோயிலிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அச்சுதராயனது சிலாசாஸன ஆதாரத்தினுலும், முன்னுள்ள நம்மாழ்வார்கோயிலின் ஆதாரத்தினுலும் வைஷ்ணவ தீர்த்தமென்று பாராட்டி வருகிறபடியால் அந்த அச்சுதராயன் காலம்முதல் இந்த கபிலதீர்த்தத்துக்கு திருப்பதி கோவிந்தராஜனுடைய (வைகாசி) பிரம்மோத்ஸவத்தின்

தீர்த்தவாரி தினத்தில் (விஷ்ணுகோவிலின் ஆகம முறைப்படி) ஸ்ரீ சக்ரத்தாழ்வார் வந்து தீர்த்தம் கொடுத்து வருகிறார். இதுபோலவே கார்த்திகை பௌர்ணமியிலும் மகர சங்கிராந்தி தினத்திலும் இந்த கபில தீர்த்தத்தில் கோவிந்தராஜாவின் (கோயில்)ஸுதர்சனமூர்த்திவந்து வீற்றிருந்து தீர்த்தமளிக்கிறார். இதற்கு வைஷ்ணவர்கள் ஆழ்வார்தீர்த்த முக்கோடி யென்னும் திருமலை திருப்பதி தேவஸ்தான பஞ்சாங்கத்திலும் பிரசுரித்து வருகிறார்கள். மேலும் ஆவணி அவிட்டம் என்னும் யஜுஷ் உபாகர்மதினத்தில் திருப்பதி கோவிந்தராஜன் இந்த கபிலதீர்த்தத்துக்கு எழுந்தருளி வேதாத்யனமுறையை திருப்பதி தோழப்பாசாரியார் என்னும் ஆசாரிய புருஷர்கள் மூலமாய் நடத்திவைக்கிறார். இந்த திருப்பதியில் இது ஒரு விசேஷச்சிறப்பு. மற்றேவ்விடத்திலும் அவ்வாறு நடைபெறுவதில்லை. இதுபோலவே திருப்பதி கோவிந்தராஜன் கோயிலில் தைமாதத்தில் அத்யயனோத்ஸவம் 20 நாளில் முடிந்தபிறகு மறுதினத்தில் அக்கோயிலில் விளங்கும் பொய்கையாழ்வார், நம்மாழ்வார் முதலான பனிரண்டு ஆழ்வார்களும் இந்த கபிலதீர்த்தமென்னும் ஆழ்வார்தீர்த்தத்திற்கு எழுந்தருளி அவபிருதஸ்னான பலத்தை தொண்டர்களுக்கு அளித்து வருகிறார்கள்.

நைமிசாரணிய முனிவர்களுக்கு எடுத்துரைத்த வேங்கடாசல மஹாத்மிய புராண வசனப்படி சைவர்கள் இதை கபிலதீர்த்தமென்றே வழங்கிக்கொண்டு இதில் மார்கழிமாஸத்தில் ஸ்ரீ கபிலேச்வர மூர்த்திக்கு மூன்றுநாள் தெப்ப உத்ஸவத்தை நடத்திவருவது மன்றி இந்த கபிலதீர்த்தத்தின் கிழக்கு பாகமாகிய கபிலேச்வாருடைய முன்பாகத்திலேயே யாத்திரைக்காரர்கள் ஸ்நானம்செய்வதே சிறந்ததாகுமென்று உபதேசித்து வருகிறார்கள். இந்த கபிலேச்வரரின் கோயிலை திருமலை திருப்பதிகோயிலுடன் ஸம்பந்தித்ததாகவே அபிமானித்து அதுமுதல் இக்கோயிலுக்கும் தம்முடைய வேலைக்காரர்களாகிய குருக்கள் மணியக்காரர், கணக்குப்பிள்ளை, சேவகர், முதலியவர்களை அமர்த்தி, அவர்கள் மூலமாய் இவ்வீசனுடைய தினப்பூசை, நித்யதீபம், நைவேத்யம், தெப்ப உத்ஸவப், ஆருத்ரா தர்சன உத்ஸவம், விநாயக சதுர்த்தி உத்ஸவம் முதலியவைகளை திருமலை திருப்பதி தேவஸ்தான மூலப்பொருளைக்கொண்டே நடத்தி வருகிறார்கள்.

கபிலேச்வர மூர்த்தியின் மேன்மை.

இந்த கபிலேச்வர ஸ்வாமியின் சிறப்பை விளக்கிய புராணம் ஒன்று இருபது அத்யாயங்களுடன் கூடியதாய் சில வருஷங்களுக்கு முன் இத்திருப்பதியில் சிலரிடத்திலிருந்ததென்றும், இப்பொழுது 50, 60, வருஷகாலமாய் அவ்வித புராணம் எவரிடத்திலும் காணப்படவில்லை என்றும் ஏற்படுகிறது. ஆகிலும் இந்த க்ஷேத்ரத்தைப்பற்றிய புராணமாவது.

முன்பு ஒரு ஸமயத்தில் த்வாபரயுகத்தின் ஆரம்பத்தில் கபிலமாமுனிவர் கேதாரம், இமாலயம் முதலான புண்யபூமியில் நெடுநாள் தவஞ்செய்த பிறகு பூமிப்ரதக்ஷணம் செய்துகொண்டு தென் திசையை நோக்கிசென்று ராமேச்வரத்தில் விளங்கும் பரஞ்ஜோதியை தரிசித்தார். அங்கிருந்து கோகர்ணக்ஷேத்ரத்தில் ஜ்வலிக்கும் பரமேச்வரனைப் பணி

ந்து துதி செய்துகொண்டு நிற்கையில் அங்கு ஓர் ஆகாயவாணி தோன்றி 'ஓ கபில மகாமுனிவரே! நீர் இதுவரையில் ஆங்காங்கு புண்யக்ஷேத்ரங்களில் பயின்ற பலங்கள் யாவும் உமது சிஷ்யர்களுக்கும் மற்றுமுள்ளோர்களுக்கும் நற்கதியை உண்டுபண்ணின. இது முதல் நீர் வேங்கடகிரியின் தாழ்வறையில் தவஞ்செய்வீராகில் அங்கு ஓர் அற்புத லிங்கமூர்த்தி காணப்படுவார். அவரை நீர் தரிசித்தால் அதுவே உமது முக்திக்கு ஸாதனமாகும்' என்று கூறியது.

தவம் செய்தல்.

இவ்வண்ணமாய் அங்கு தோன்றிய ஆகாய வாணியால் ஏவப்பட்ட கபிலமாமுனிவர் மிகவும் மனக்களிப்படைந்து அந்த கோகர்ண க்ஷேத்திரத்திலிருந்து வெகு விரைவாய் கிழக்குதிசையை நாடி அனேக வனங்களையும் மலைகளையும் தாண்டிய பிறகு ஸுவர்ணமுகி என்னும் நதியின் தீரத்தில் விளங்கும் ஏழுமலைகள் அவரது கண்களுக்கு புலப்பட்டன. அப்பொழுதே கபிலமாமுனிவர் அவ்வேழுமலைகளையும் பிரதக்ஷிணம் செய்துக்கொண்டு அந்த ஸுவர்ணமுகியில் நீராடிய பிறகு அந்த விருஷபகிரியின் ஆக்னேய பாகத்தில் தமக்கு ஒரு பர்ணசாலையையும் ஹோமகுண்டத்தையும் அமைத்துக்கொண்டு தவம் செய்யஆரம்பித்தார். அம்முனிவர் முதலில் மூன்று வருஷகாலம் செல்லுமளவும் அஷ்டாங்க யோகம் செய்தார். பிறகு அதன் குண்டத்தில் ஹோமங்களை சாஸ்திரமுறைப்படி செய்தார். பிறகு பரமேச்வரனை மனதில் த்யானித்துக்கொண்டு கைகளை ஆகாயத்தில் நீட்டிக்கொண்டும் ஒருகாலினல் பூமியை பற்றிக்கொண்டும், வாயுவையே உணவாகக்கொண்டு மிகவும் கடினமான தவம் செய்யலானர். இவ்வண்ணமாய் அக்கபிலமாமுனிவர் நெடுநாள் தவம் செய்து வந்தார்.

அத்தருணத்தில் இந்த கபிலமுனிவரையும் மற்றுமுள்ள தொண்டர்களையும் பாபராசியிலிருந்து ரக்ஷிக்கவேண்டுமென்று ஸங்கல்பஞ்செய்துகொண்ட கைலாஸபதியானவர் பாதாளலோகத்தில் ஒரு லிங்கரூபியாய் தோன்றி அங்கிருந்து பூமியை பிளந்துகொண்டு அக்கபில முனிவரின் எதிரில் விளங்கி "ஓ கபிலமுனிவரே! இவ்வளவு தீர்க்ககாலம் நீர் நம்மைக்குறித்து தவம்செய்ததைக்கண்டு நான் களிப்படைந்தேன். இதுமுதல் நீர்கல்பகாலம் வரையில் நமது லிங்கமூர்த்தியின் எதிரிலேயே தங்கி வஸிப்பீர். நமது லிங்கரூபமும் இது முதல் உமதுபேரிலேயே கபிலலிங்கமென்றே விளங்கும்படி யான் ஸங்கல்பித்தேன். இது போலவே உமது எதிரில் விளங்கும் இந்த தடாகமும் உம்முடைய பெயரினலேயே கபில தீர்த்தமென்றே விளங்கக் கடவது, அன்றியும் நீர் நம்மிடத்தில் விசேஷ பக்தியைப்புரிந்து என்னைக்குறித்து தவம் செய்து இவ்வண்ணம் எவ்வித நன்மையை யடைந்தீரோ; இம்மாதிரியாகவே உமக்காக இங்குதோன்றிய நமது லிங்க ஸ்வரூபியை பூஜித்து தரிசிப்பவர்களும் மேன்மையடையும்படியும் நான் அருள்புரிந்தேன்" என்று இவ்வாறு உரைத்து கோடிசூரியப்பிரகாசமுள்ள லிங்கஸ்வரூபியாய் தோன்றினர். ஆகையால் அதுமுதல் கபிலலிங்கமூர்த்தி, 'கபில தீர்த்தம்' என்னும் இவ்விதப் புண்யப்பெயர் உலகில் பரவலாயிற்று.

பூர்வகாலத்தில் வஸிஷ்டமாமுனிவரின் ஆச்ரமத்தில் தேவேந்திரனுடைய உத்திரவினால் அனேக வருஷகாலம் வரையில் நிலைபெற்று தங்கியிருந்த காமதேனுவானது அம்முனிவர் செய்த பற்பல யாககாரியங்களுக்கு உதவியாய் நின்று விளங்கி பிறகு அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு தேவலோகம் செல்லவேண்டும் என்று நினைத்தது. அவ்வண்ணமாய் அந்த காமதேனுவானது ஸ்வர்க்கலோகம் போக நினைத்தபொழுது அதன் மனதில் சிற்சில தத்துவங்கள் விளங்கலாயின. ஆனால் இமயம்முதல் ராமேச்வரம் வரையில் விளங்கும் அனேக புண்யக்ஷேத்ரங்களில் நுழைந்து அங்குள்ள புண்யதீர்த்தத்தில் நீராடி அங்கு தோன்றும் கைலாஸலிங்கமூர்த்திகளை தரிசித்தும், துதித்தும் பணிந்தும், பிரதக்ஷிணம் செய்தும் தனது ஆத்மாவுக்கு பலவாறும் மேன்மையை வளர்த்துக்கொண்டு இந்த வ்ருஷப மலையின் தெற்கு திக்கில் ஒரு யோஜனை தூரத்தில் விளங்கும் ஸுவர்ணமுகி நதியினருகில் வந்தது. அப்பொழுது அந்த காமதெனுவின் வலது பக்கத்தில் தும்புரு மஹரிஷியும் நாரத மஹரிஷியும் சற்றுநேரம் தோன்றி ஒன்றும் விளம்பாமல் மௌனமாய் ஆகாயமார்க்கமாகவே சென்றுவிட்டார்கள்.

பிறகு சற்றுநேரத்துக்குள் அந்த காமதேனுவின் முன்பக்கத்தில் நந்திகேசனும் மார்க்கண்டேய முனிவரும் மற்றும் சில புண்ய புருஷர்களும் தோன்றி அந்த தேவலோகப்பசுவின் கழுத்தில் சிறந்ததொரு புஷ்பமாலையை போட்டு அதை ப்ரதக்ஷிணம் செய்துவிட்டுப் போகலாயினர்கள்; அச்சமயத்திலேயே ஆகாயத்திலும் நான்கு திசையிலும் அனேக சுப சகுனங்கள் விளங்கலாயிற்று. இவ்விதமாய் அங்கு தோன்றிய நற்சாக்ஷிகளையும் சுப சகுனங்களையும் கண்டு களித்த காமதேனுவானது அந்தஸ்வர்ணமுகி நதியில் ஸ்நானம் செய்து வடதிசை நோக்கி வருகையில் ஆகாயத்தை யளாவிய சிகர முடிகளுடன் கூடிய வ்ருஷபகிரி (ஏழுமலைகளில் ஒன்று) யும் அதன் சார்பில் ஓர் தெய்வதடாகமும் சில முனிவர்களின் ஆசிரமமென்னும் பர்ணசாலைகளும் விளங்கக்கண்டு தாம் அவ்விடத்திலேயே சிலகாலம் தங்கி பரமேச மூர்த்தியைத்யானம் செய்வதே உத்தமமான காரியமாகும் என்று நினைத்து அவ்வாறே அப்பொய்கையில் விடியற்காலையில் நீராடி அப்பொய்கையை 108 தடவை ப்ரதக்ஷிணம் செய்து பிறகு அக்கரையின் ஓர் பாகத்தில் தங்கி சூரியன் நடுஆகாயத்தை யணுகும் வரையில் பரமசிவத்தை தியானம் செய்யலாயிற்று.

இவ்வண்ணமாய் அங்கு காமதேனுவென்னும் தேவப்பசு செய்துவரும் தியானப் பெருக்கினால் உருகிக் கரைந்த மனமுடையவரான உமாபதியானவர் பாதாளலோகத்திலிருந்து பூமியைப்பிளந்துகொண்டு அந்த காமதேனுவின் முன்னிலையில் லிங்கமூர்த்தியாய் தோன்றலானார். அவ்வாறு தனது எதிரில் பாதாளத்திலிருந்து விரைவாய் பூமியைப் பிளந்துகொண்டு தோன்றிய லிங்கமூர்த்தியைக்கண்டு தனது தியான யோகம் நிறைவேறிற்று. ஆன்மாவுக்கு நற்கதி கிடைத்தது. இனி யொரு குறைவுமில்லை என்று நினைத்த காமதேனுவானது அந்த லிங்கமூர்த்தியின் சரீரவெப்பமும் வேகமும் தணியுமாறு தேவாமிருதத்துக்கு ஒப்பாகிய தனது க்ஷீரத்தினால் (பாலினால்) முதலில் அபிஷேகம் செய்ய ஆரம்பித்தது. இம்மாதிரி சிலாரூபங்கள் கருப்பக்கிருஹத்தின் வெளியில் இடப்புற

முள்ளது. பிறகு வலம்செய்து துதித்து நிற்கையில் அப்பொழுது கபிலமுனிவர் முதலான பலரிஷிகளும் தேவேந்திரன் முதலான திக்குபாலர்களும் மற்றுமுள்ள தேவர்களும் கூட்டம் கூட்டமாய் வந்துதோன்றி அவ்விசனை நமஸ்கரித்து அந்த கபிலதீர்த்தம் கங்காதீர்த்தம் முதலிய புண்யதீர்த்தங்களில் சிறந்ததொரு தேவாபிஷேகத்தையும் செய்தார்கள். அத்தருணத்தில் இந்திரனும் ஸகலதீர்த்தங்களுக்கதிபதியாகிய வருணனும் ஒன்றுசேர்ந்து யோசனைசெய்து விச்வகர்மாவை ஏவி அவனது சில்பத்திறமையினால் அம்மலைச்சார்பில் சிறந்ததான ஒருநகரத்தையும் நிர்மாணம் செய்துவைத்து அந்நகரில் அந்த கபிலலிங்கமென்னும் காமதேனு லிங்கமூர்த்திக்கு அன்னபிஷேகத்தையும் பற்பலதிருவிழாக்களையும் நடத்திவைத்தார்கள்.

இவ்விதமாய் திருப்பதியின் வடக்குதிக்கில் வ்ருஷபமலையின் சார்பில் மேற்குமுகமாய் கபிலமுனிவருக்காகவும் காமதேனுவுக்காகவும் கபிலேச்வர லிங்கமூர்த்தியும் அவரது இடதுபக்கத்தில் அந்த லிங்கமூர்த்தியின்மீது காமதேனு க்ஷீராபிஷேகம் செய்வதுபோல் உருவமும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த கபிலேச்வரமூர்த்திக்கு இவைபோல் அளவற்ற மேன்மைகள் அமைந்திருப்பதினால் இந்த திருமலை திருப்பதிக்கு யாத்திரையாக வரும் பக்தர்கள் யாவரும் கபிலதீர்த்தத்தில் ஸங்கல்பஞ்செய்துகொண்டு நீராடி பிறகு கபிலேச்வரமூர்த்தியை தரிசித்தபிறகே திருமலை என்னும் மேல்திருப்பதிக்கு போகவேண்டும் என்னும் அநுஷ்டானத்தை எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டும்.

ஆதலால் பக்தர்களின் மேன்மைக்காக இவ்வாறு திருப்பதியில் விளங்கும் ஸ்ரீகபிலேச்வரமூர்த்தியின் ஸன்னிதானத்தில் யாத்திரைக்காரர்களில் சிலர் தமது முடியையும் தமது குடும்பத்தாரின் முடியையும் பிரார்த்தனையாக அளிக்கும்வழக்கம் நெடுநாளாய் ஏற்பட்டுவருகிறது. அதாவது திருமலை வெங்கடாசலபதியின் ஸன்னிதானத்தில் தமது தலைமயிரை எடுத்துவிடுவதாய் பிரார்த்தனை செய்துகொண்டவர்களில் சிலர் இந்த கபிலேச்வரரின் ஸன்னதியிலேயே அந்த தலைமயிரை நீக்கி மொட்டையடித்துக்கொள்வது என்பது. இவ்விதமாய் சிலயாத்திரைக்காரர்கள் இங்கு கபிலதீர்த்தக்கரையில் தமது தலையை மொட்டையடித்துக்கொண்டு அப்புண்ணிய தீர்த்த ஸ்நானம் செய்து ருத்ராக்ஷமாலை, துளஸிமணி மாலை, பத்மமாலை (கமலக்காய் தாழ்வடம்), ஸ்படிகமாலை, பட்டுஸரமாலை முதலியவைகளை தமது கழுத்தில் தரித்துக்கொண்டு மேற்படி கபிலேச்வரமூர்த்தியை தரிசித்துவிட்டு மேல்திருப்பதியென்னும் திருமலைக்குப் போகவேண்டும் என்னும் ஏற்பாடு இப்பொழுதும் சிறப்புடன் நடைபெற்றுவருகிறது.

மேலும் திருப்பதிக்கு வரும் பக்தர்கள் மேற்படி கபிலேசமூர்த்திக்கு அபிஷேகம் செய்து வைக்கலாம், கர்ப்பூர ஆரத்தியை நடத்திவைக்கலாம். சில நைவேத்திய விஷயங்களையும் செய்து வைக்கலாம். அதற்காக ஏற்பட்டிருக்கும் தொகையை இக் கபிலேச்வரர் கோயில் மணியகாரரிடத்தில் செலுத்துவர்களாகில் அந்த தினத்திலேயே அவைகளை எல்லாம் கபிலேச்வாருக்கு முறைப்படி நடத்திவைக்குமாறு ஏற்பாடுகளை தேவஸ்தான விசாரணைத்தலைவர் விதிக்கிறார்.

திருச்சானூர்.

திருச்சானூர், திருச்சுகனூர், அலர்மேல்மங்காபுரம், சுகபுரி என்னும் பல பெயர்களால் வழங்கப்பட்டு வருமிடம் சுவர்ணமுகிரி (சுவர்ணமுகி) நதியின் வடகரையில் கார்வேட் நகர ராஜாவின் இலாகாவைச்சேர்ந்தும், திருப்பதி ரயில்வே ஸ்டேஷனுக்கு தென் கிழக்கு மூலையில் மூன்று மைல்தூரத்தில் நிலைபெற்றிருக்கிறது. இதுபோலவே திருச்சானூருக்கு ரேணுகுண்டா ரயில்வே ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கு முகமாய் மூன்று மைல் தூரம் உள்ளதாய் ஒரு பாதையும் பூடி என்னும் (ரயில்வெ ஸ்டேஷன்) கிராமத்திலிருந்து வடமேற்கு முகமாய் ஐந்து மைல் தூரமுள்ள மற்றொரு பாதையும் வந்து கூடுகிறது.

இவ்வித மார்க்கங்களுடன் கூடிய திருச்சானூருக்கு கிழக்குமுகமாயுள்ள கோயிலும், அக்கோயிலின் ஸமீபத்திலேயே வாயுதிக்கில் பத்மஸரக்கோனேரி என்னும் ஒரு புண்ய தடாகமும் நிலைபெற்று விளங்குகிறது. இந்த பத்மதடாகத்தைச்சுற்றிலும் நான்கு புறத்திலும் வீடுகளுமிருக்கின்றன. இவ்விடம் தெப்ப உத்ஸவம் வெகு நேர்த்தியானது.

பூர்வகால தேவாலயங்கள்.

கி. பி. ஆறாவது ஏழாவது நூற்றாண்டில் காஞ்சி நகரத்தை ராஜதானியாக அமைத்துக்கொண்டு மிகவும் சிறப்புடன் ராஜ்யபாரம் செய்துவந்த புத்தவர்மன், நந்திவர்மன், பரமேச்வரவர்மன் முதலான பல்லவராஜாக்கள் நமது தென்னிந்தியாவை பூபரிமாணம் (நிலங்களின் ஸர்வே-காரியங்களை) செய்தபிறகு, பூமியைப் பல மண்டலங்கள் (மாகாணங்கள்) ஆகவும், அதற்குள் அடங்கிய கோட்டங்கள் (ஜில்லாக்கள்) ஆகவும், அதற்குட்பட்ட நாடுகள் (தாலுக்காக்கள்) ஆகவும், இவ்வண்ணமாய் பற்பல பிரிவுகளாக வகுத்து அவ்வித தேசங்களிலும், நாடுகளிலும், நகரங்களிலும் ஊர்களிலும் உள்ள நிலங்களின் ஜலப்பாச்சலுக்கு ஆதாரமாகிய ஊற்றுக்கால்களையும், கசக்கால்வாய்களையும், ஏரி, தடாகம் முதலியவற்றையும் நிர்மித்தார்கள். அதற்குப்பிறகு ஆங்காங்கு கல்விச் சாலைகளையும், வைத்தியசாலைகளையும், நியாயஸபைகளையும் ஏற்படுத்தினார்கள்.

நியாயஸபை.

அவ்வித நியாயஸபைகள் ஒவ்வொரு கோட்டங்கள் தோறும் (ஜில்லாக்கள் தோறும்) நிலைபெற்று வரும்பொழுது மேல் திருப்பதி யென்னும் திருவேங்கடக் கொட்டத்துக்கு ஸ்தாபிக்கவேண்டிய நியாயஸபையை முதலில் இந்த திருச்சுகனூரிலேயே ஏற்படுத்தி, அந்த ஸபைக்கு வேதங்களையும், தர்மசாஸ்திரங்களையுமுணர்ந்த பிராம்மணோத்தமர்களையே மேற்படி ஸபையின் தலைவர்களாகவும், நியாய ஆராய்ச்சி சொல்பவர்களாகவும் நியமித்தார்கள். இவ்விதமாய் ஆதிகாலத்தில் இந்த திருச்சுகனூரில் பல்லவராஜாக்களி

னுல் ஸ்தாபிக்கப்பட்ட ஸபையை அந்த பல்லவராஜாக்களின் பிறகு ராஜ்யபாரம் வகித்த பிந்திய சோழ ராஜாக்களும், பாண்டிய ராஜாக்களும், யாதவராஜாக்களும் அவர்களுக்குப் பிறகு விஜயநகர ராஜாக்களும் இவ்விதமாய் சுமார் 700 வருஷகாலம் வரையில் தம் தமது முறைப்படி பாதுகாத்துவந்தார்கள் என்னும் விஷயங்கள் யாவும் சிலாசாஸனங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

அழகியபெருமாள் கோவில்.

இந்த திருச்சுகனூரில் பல்லவ ராஜாக்களின் காலத்தில் மஹாஸபை என்னும் ஜில்லா கச்சேரி ஏற்பட்ட ஸமயத்திலேயே அவ்வூரில் திருவிளங்கோயில் பெருமாள் ஸன்னதி என்று ஒரு விஷ்ணு கோயிலும் பராசரேச்வரன் ஸன்னதி யென்று ஒரு சிவாலயமும் நதிநாதன் கோயிலென்று மற்றொரு சிவாலயமும் நிர்மிக்கப்பட்டதாய் தெரியவருகிறது. இவைகளுள் முதலில் கூறிய விஷ்ணு ஆலயமும் கடைசியாகிய நதிநாதன் கோயிலும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னமே பாழடைந்து காணாமல்போய்விட்டது. ஆகையால் சிலகாலஞ்சென்றபிறகு யாதவராஜாக்களின் மந்திரிகளில் ஒருவனாகிய பொக்காரன் பாண்டியதரையன் என்பவன் பாழடைந்த அவ்விஷ்ணு ஆலயத்துக்கு பதிலாக அழகியபெருமாள் ஸன்னதி என்று வேறொரு கோயிலை நிர்மித்துவைத்து அந்த பகவானுக்கு நித்ய பூஜை முதலிய சிறப்புக்கும் பங்குனி மாஸத்தில் நடக்கக்கூடியதாய் ஒரு திருவிழாவின் சிறப்புக்கும் மூலாதாரப்பொருளாக அநேக கிராமங்களையும் ஸர்வமானியமாக அளித்து ரக்ஷித்து வரலானுன். இவ்வண்ணம் திருச்சானூரில் ஏற்பட்ட அழகியபெருமாள்கோயிலானது பின்பு தோன்றிய அரசர்களாலும் பெரியோர்களாலும் ஆதரிக்கப்பட்டதாய் ஸுந்தரராஜப்பெருமாள் கோயிலென்று வழங்கப்பட்டதாய் இப்பொழுதும் விளங்கிவருகிறது.

இவ்வண்ணமாய் திருச்சானூர் கோயிலுக்குள் தென்பாகத்தில் கிழக்குமுகமாய் அழகியபெருமாளென்னும் ஸுந்தரராஜப்பெருமாளின் ஆலயம் ஏற்பட்டதுபோல் அதற்கு வடக்கில் அதுபோலவே ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமியின் ஆலயம் ஒன்று நிலைபெற்று விளங்குகிறது. இங்கு இவ்விதமாய் கிருஷ்ணஸ்வாமிக்கு ஆலயம் ஏற்பட்டதற்கு காரணத்தை ஒருவாறு சில பெரியோர்கள் கூறுவதாவது:—

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமீ ஆலயம்.

முன்பு பஞ்சபாண்டவர்களின் வேண்டுகோளின்படி ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியானவர் அவர்கள் வசித்துவந்த ஒவ்வொரு அரண்யங்களிலும் வந்து தோன்றி அவர்களது விருந்தை உட்கொண்டு ஆசி கூறியபிறகு அவர்களுக்கும் அவ்விடத்திலிருக்கும் ரிஷிகள் முதலானவர்களுக்கும் பரதத்வம் தோற்றுமாறு சிற்சில இதிஹாஸங்கள் உபதேசித்து வரலானுர். அவ்வண்ணமாய் ஸ்ரீ கிருஷ்ணபிரான் அருள்செய்து வருகையில், இந்த திருச்சானூரில் விளங்கிவரும் பத்மஸரஸ் என்னும் புண்ய தீர்த்தத்தின் கரையில் நெடுநாளாய் தவம் செய்துக்கொண்டிருந்த ஸ்ரீ ஸூத முனிவருக்கும் அவரது சிஷ்யர்களுக்கும்

ப்ரத்யக்ஷமாய் தோன்றி அவர்களுக்கு தனது பரமாத்மஸ்வரூபத்தைக் காண்பித்து சில தத்வங்களையும் உபதேசித்துச்சென்றார். ஆதலால் இங்கு பத்மஸரஸ்கரையில் முன்பு வந்து தோன்றிய கிருஷ்ணபரமாத்மாவின் திருமேனியை ஆராதிக்கவேண்டுமென்று கருதிய பூர்வீகர்கள் இந்த திருச்சானூர் கோவில் கிருஷ்ணஸ்வாமியின் ஆலயத்தையும் நிர்மித்தார்களாம். இது திருவல்லிக்கேணி பார்த்தஸாரதி கோயிலிலுள்ளமாதிரியே அமையப்பட்டுளது.

பத்மாவதி அம்மன்.

இந்த திருச்சானூரில் பூர்வகாலம் தொடங்கி இவ்விதமாய் ஸுந்தரராஜப்பெருமாளின் ஆலயமும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஆலயமும் ஏற்பட்டிருப்பது போலவே மேற்படி கிருஷ்ணன் ஆலயத்தின் வடக்கில் முன்போல் கிழக்கு முகமாயும் விசாலமான முகமண்டபமென்னும் ஆஸ்தானமண்டபத்துடன் கூடியதாயும் அதற்குள்புறத்தில் திருவுண்ணாழிகை ப்ரதக்ஷணம் என்னும் கர்ப்பக்கிருஹப்ரதக்ஷணத்துடன் கூடியதாய் ஸ்ரீ பத்மாவதி அம்மனுடைய ஆலயம் விளங்கிவருவதையும் நாம் கண்டு பணிந்து களித்து வருகிறோம்.

அரண்மனை வளர்ப்பு.

ஸ்ரீ வேங்கடாசல மகாத்மியத்தில் திருப்பதியில் விளங்கும் ஸ்ரீ வேங்கடாசலபதியின் மகிமையைப்பற்றியும், அவருக்கு திவ்ய பத்னியாகிய இந்த அலர்மேல் மங்கைத் தாயின் மேன்மையைப்பற்றியும், மிகவும் விவரமாய் கூறப்பட்டிருக்கின்றன; பத்மாவதி அம்மன் என்னும் இந்த அலர்மேல்மங்கைத்தாயானவள் ஜனக ராஜனுக்கு ஸீதை புத்திரியாய் தோன்றியது போலவும், ருக்ம ராஜனுக்கு ருக்மணி புத்ரியாய் விளங்கியது போலவும், முன்பு ஒரு ஸமயத்தில் ஆகாச ராஜனுக்கு புத்ரியாய் உதித்து பாலக்ரீடைகளை எல்லாம் அனுபவித்த பிறகு, தான் லக்ஷ்மீ அம்சமாகையால் ஸ்ரீநிலயனென்னும் வெங்கடாசலபதியையே இடைவிடாமல் மனதில் த்யானம் செய்துகொண்டிருந்து பிறகு வேங்கடாசலமூர்த்தியுடன் விவாஹத்தை நடத்திக்கொண்டாள். ஆகையால் அந்த பத்மாவதீ என்னும் நமது லோகமாதா முதலில் இந்த பத்மஸரஸ் என்னும் குளத்தின்கண் ஆவிர்ப்பாவம்செய்து பிறகு ஆகாச ராஜனுடைய அரண்மனையில் வளர்ந்தாள்.

பூஜை நடைபெறல்.

இவ்வாறு பத்மஸரஸ்ஸில் தாமரை மலரில் லோகமாதா உதித்தபடியால் அவருக்கு பத்மாவதீ என்றும் அலர்மேல் மங்கை என்றும் பெயர் உண்டாயிற்று. ஆகாசராஜனது அரண்மனையில் வஸித்தபடியால் ஆகாச ராஜன் புத்திரி என்று நாமதேயம் ஏற்பட்டது. ஸ்ரீனிவாஸனுக்கு தேவியாய் விளங்கியபடியால் வேங்கடேச மஹிஷீ என்று இவ்வண்ணம் பலவித நாமதேயங்கள் உண்டாகி பக்தர்களின் க்ஷேமத்தை வளர்க்க ஆரம்பித்தன. ஆகையால் இந்த அலர்மேல்மங்கைத்தாயானவள் இந்த திருச்சானூரில் அரண்மனை அமைத்துக்கொண்டு விளங்கிய அந்த ஆகாசராஜனுக்கு புத்ரியாய் தோன்றி வகுளமாலிகை முதலான தோழிகளுடன் சேர்ந்து விளையாடிய திவ்ய சரித்திரத்தை பக்தர்கள்

எல்லோருக்கும் தெரிவிக்கவேண்டும் என்னும் கருத்துடனே பூர்வகால பெரியோர்கள் இந்த திருச்சானூர் கோயிலில் பத்மாவதி அம்மனுக்குத் தனியாய் சிறந்ததொரு ஆலயத்தையும் நிர்மித்து பூஜித்து வாலாயினர்.

மங்காபுர மகிமை.

இந்த பத்மாவதி அம்மனுக்கு ஆதிகாலத்தில் இந்த திருச்சானூரில் ஆலயம் ஏற்படவில்லை. இந்த திருச்சானூருக்கும் திருப்பதிக்கும் மேற்குதிக்கிலுள்ள மங்காபுரம் என்னும் கிராமத்தில் ஒரு தனிக்கோயில் ஏற்பட்டிருந்தது. ஆகையாலல்லவா அவ்வூருக்கு இவ்வம்மன் பேராலேயே மங்காபுரம்என்னும் நாமதேயம் ஏற்படுத்தலாயிற்று. ஆகையால் இந்த பத்மாவதியம்மன் மிகவும் அழகுவாய்ந்த அந்த மங்காபுரம் கோயிலில் வெகுகாலம் வரையில் பூஜை உத்ஸவம் முதலியவைகளை அடைந்திருந்தாள். பிறகு முன்னொருஸமயத்தில் நமது தக்ஷிணதேசத்தின் மேல் துருக்கர்களின் பயம் நேர்ந்தபொழுது அந்த துருக்கர்களின் வழியில் காணப்பட்ட இந்த மங்காபுரக் கோயிலானது அவர்களால் அழிக்கப்பட்ட குறிகளை நாம் இப்பொழுதும் காண்கிறோம். ஆகிலும் அவ்விதமாய் அக்கோயில் துருக்கர்களின் கைக்கு ஸ்வாதினமாவதற்கு முன்னமே மேற்படி பத்மாவதி அம்மனுடைய உத்ஸவவிக்ரஹத்தை நமது பெரியோர்கள் ரஹஸ்யமான ஓரிடத்தில் ஒளித்து வைத்திருந்து சிலகாலஞ் சென்றபிறகு துருக்கர் பயம் நீங்கியபின் அந்த உத்ஸவமூர்த்தி அம்மனை இந்த திருச்சானூரின் ஆலயத்தில் ப்ரதிஷ்டைசெய்து முறைப்படி பூஜித்து வாலானார்கள் என்று தெரிகிறது.

சிற்ப வேலை சிறப்பு.

திருப்பதிக்கு மேற்குதிக்கில் ஆறுமைல் தூரத்திலிருக்கும் அந்த மங்காபுரத்திலும் இந்த அம்மனுக்கு ஒரு தனிக்கோயில் ஏற்பட்டிருந்தது. ஆகிலும் அந்தமங்காபுரம் கோயிலும் அந்த அம்மனும் அந்த கொடிய துருக்கர்களின் கையில் அகப்பட்டு நாசத்தையடைந்துவிட்டன. அதுமுதல் அவ்வூரில் மேற்படி அம்மனுக்கு இன்னும் கோயில் ஏற்படவேயில்லை. பாழடைந்த கோயில் மாத்திரம் காணப்படுகிறது. அவ்வித ஸம்பவத்துக்கு முன்னமே இந்த திருச்சானூரில் மேற்படி அம்மனது ஆலயமானது பல்லவராஜாக்களினால் நிர்மிக்கப்பட்டுள்ளது. அதற்குறிய சிற்பவேலை திறமைகளும் நன்கு காணப்படுகின்றன.

பூர்வீகரின் மேன்மை.

இந்த பத்மாவதி அம்மனுடைய ஆலயமானது இந்த திருச்சானூரில் வெகுநாளாய் விளங்கிவருவதை கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டின் சிலாசாஸனங்களில் வெளியிட்டிருப்பதனாலும், அதற்கு முன்பு (அநேக ஆயிர வஷ்ரகாலங்களுக்கு முன்னமே) மேற்படி அம்மனுடைய திவ்ய சரித்திரத்தைப்பற்றி புராணங்களில் ஸ்ரீ வியாஸமாமுனிவர் விசேஷமாய் எடுத்துக்கூறியிருப்பதனாலும், திருச்சானூரின் கோயில் இந்த அம்மனுடைய ஸன்னிதான ஆலயமே உலகமெங்கும் ப்ரஸித்திபெறலாயிற்று. இதுகார

ணம்பற்றியே முன்னுள்ள பெரியோர்களில் சிலர் அலர்மேல் மங்கை விஷயமான ஸ்துதிகளை காவிய ரூபமாய் வெளியிட்டிருக்கிறார்கள். மற்றும் சிலர் பலவித கைங்கரியங்களையும், திருப்பணிகளையும், திருவிழாக்களையும் நடத்திவைத்திருக்கிறார்கள். இதுபோலவே வேங்கடாசல மகாத்மியத்தில் மேற்படி பத்மஸரஸ் என்னும் தடாகத்தின் மேன்மையையும், அதிலும் ஸுவர்ணமுகி நதியிலும் ஸ்நானம்செய்து நற்பதவியடைந்த சில பக்தர்களின் புகழ்ச்சியையும், மேற்படி குளத்தின் கரையிலும் நதியின் கரையிலும் தவம்செய்து ஸித்தியடைந்த பூர்வீகரின் மேன்மையையும் ஸூத மஹரிஷி வெளியிட்டிருக்கிறார்.

ஆதலால் அவ்வித மேன்மைவாய்ந்த அலர்மேல் மங்கைத்தாயின் விவாஹமானது இந்த திருச்சானூரில் முன்பு நடந்தேறியபடியால் அதுபோலவே இவ்வூரில் இந்த அம்மனுக்கு பூர்வகாலம் முதல் பெரியோர்கள் தனியாய் திருவிழாக்கள் நடத்திவரலாயினர்.

உத்ஸவம்.

திருச்சானூரில் அழகிய பெருமாள் என்னும் ஸுந்தரராஜப் பெருமாளுக்கு வருஷந்தோறும் பங்குனிமாதத்தில் ஒரு பிரம்மோத்ஸவம் மாத்திரம் இப்பொழுது நடைபெற்றுவருகிறதே தவிர பூர்வகாலத்தில் நமது ராஜாக்களினாலும் பெரியோர்களாலும் நடத்தப்பட்டு வந்த திருவிழாக்கள் யாவும் நின்றுவிட்டன. இதுபோலவே ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கும் விசேஷ உத்ஸவங்கள் யாவும் நடைபெறவில்லை.

வெள்ளிக்கிழமை அபிஷேகமுறை.

ஆகிலும் முன்பு விவரிக்கப்பட்ட காரணங்களினால் திருச்சானூர் கோயிலில் மிகவும் பிரஸித்திபெற்ற அலர்மேல் மங்கை அம்மனுக்கு சிற்சில விசேஷ உத்ஸவங்கள் இப்பொழுதும் விசேஷமாய் நடைபெற்று வருகின்றன.

மேல்திருப்பதி என்னும் திருமலையில் பூர்வயுகங்களில் வைகுண்டலோகத்திலிருந்து அர்ச்சாரூபியாய் (பிம்பரூபியாய்) ஆவிர்ப்பவித்து விளங்கிவருகிற ஸ்ரீ வேங்கடாசலபதியின் வலது மார்பில் பத்மாவதி என்னும் அலர்மேல் மங்கைத்தாய் (ஸ்ரீ மஹாலக்ஷ்மி) நிலைபெற்றுவிளங்குவதால் அந்த பத்மாவதி அம்மனுக்கும் அந்த ஸ்ரீனிவாஸ மூர்த்திக்கும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மத்தியான காலத்தில் புனுகு சட்ட தைலத்தினாலும், பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, சுகந்த சந்தனம், சுத்த தீர்த்தம் முதலியவைகளினாலும் அபிஷேகமானது வெகு காலமாக நடந்துவருகிறது. அவ்வித அபிஷேகமுறையானது திருச்சானூரில் விளங்கும் இந்த அம்மனுக்கும் அந்த வெள்ளிக்கிழமைகளிலேயே அதேஸமயத்தில் நடைபெற்றுவருகிறது. இவ்வித அபிஷேகச்சிறப்புக்காக பூர்வகாலத்தில் விஜயநகர மன்னர்கள் அநேக கிராமங்களை ஸர்வமானியமாக அளித்தார்கள். இப்பொழுது அவைகள் எல்லாம் தேவஸ்தானத்துக்குச் சொந்தமாகாமல் பிறருக்கு ஸுவாதீனமாகிவிட்டபோதிலும் அம்பாளின் தேவஸ்தான விசாரணைத் தலைவர் வெள்ளிக்கிழமைகள்தோறும் இவ்வபிஷேகத்தை முறைப்படி குறைவின்றி நடத்திவருகிறார்.

வெள்ளியன்று உத்ஸவம்.

அலர்மேல் மங்கைத்தாய் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் காலையில் பூஜை நைவேத்யங்களை அங்கீகாரம் செய்துகொண்டபிறகு கோயிலுக்கு தென்பக்கத்திலிருக்கும் சுக்ரவாரத்தோட்டம் என்னும் ஒரு நந்தவனத்தின் நடுவில் கல்மண்டபத்துக்குப் போய் வீற்றிருந்து அபிஷேகம்செய்துகொண்டு அந்த மண்டபத்திலும் சில நைவேத்யங்களையும் நிவேதனமாகக்கொண்டு அங்கு வந்து கூடும் ஸுமங்கலி ஸ்திரீகளுக்கும் மற்றுமுள்ளோருக்கும் மஞ்சக்காப்பு அபிஷேக தீர்த்தம் முதலியவைகளை பரிசாரகர்களின் மூலமாய் அளித்து பக்தர்களனைவரையும் கடாக்ஷித்து பிறகு ஸாயங்கால வேளையில் அந்த தோட்டத்திலிருந்து கிராமப்பிரதக்ஷிணமாய் வீதிகளில் வந்த பிறகு தனது கோபுரவாசலில் ஊஞ்சல் உத்ஸவத்தையும் அடையப்பெற்று, இரவில் தனது ஸன்னிதானத்துக்குப்போய் விளங்குகிறாள். ஆகையால் வெள்ளிக்கிழமைகள் தோறும் திருச்சானூரில் பத்மாவதி அம்மனுக்கு இவ்வாறு நடந்துவரும் அபிஷேகமுறையையும் மற்றுமுள்ள வைபவங்களையும் ஸுமங்கலி ஸ்திரீகள் வெள்ளிக்கிழமைகளில் தரிசிப்பது மிகவும் உத்தமமென்று அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. ஆகையால் இந்த திருமலை திருப்பதிக்கு யாத்திரையாக வருகிற ஸுமங்கலிகளும் மற்றுமுள்ளவர்களும் வெள்ளிக்கிழமை தினத்தில் திருச்சானூரில் விளங்கும் இந்த பத்மாவதி அம்மனை அவசியம் தரிசித்துப்போக வேண்டும்.

தீர்த்த விசேஷம்.

மேல்திருப்பதி என்னும் திருமலையில் ஸ்ரீ வேங்கடேசமூர்த்திக்கு வருஷம் தோறும் புரட்டாசி மாஸத்தில் ச்ரவண (திருவோண) நக்ஷத்திரத்தில் தீர்த்தவாரி நடக்கும்படி அந்த திருவோண நக்ஷத்திரத்துக்கு முன்பு ஒன்பதாவது நாளில் துவக்கமாகி எவ்வாறு பிரம்மோத்ஸவம் அநாதிகாலமாய் நடந்துவருகிறதோ அவ்வாறே திருச்சானூரில் விளங்கும் இந்த அலர்மேல் மங்கைத்தாயாருக்கும் அவ்வித பிரம்மோத்ஸவம் அநாதிகாலமாய் நடத்தப்பட்டுவருகிறது. ஆனால் இந்த அம்மனுடைய பிரம்மோத்ஸவமானது ஒவ்வொரு வருஷமும் கார்த்திகைமாஸத்தில் சுக்லபக்ஷ பஞ்சமியில் முடிவுபெறவேண்டியதாய் அதற்குமுன் ஒன்பதாவது தினத்தில் ஆரம்பிக்கப்படுகிறது; ஆகிலும் கார்த்திகை மாஸம் சுக்லபக்ஷ பஞ்சமி திதியில் கட்டாயம் திருவோணநக்ஷத்திரம் சேர்ந்தே வருகிறது என்னும் காரணத்தை முன்னிட்டும் இந்த அம்மனுடைய உத்ஸவத்துக்கு பஞ்சமி தீர்த்த உத்ஸவம் என்றே பிரஸித்தி ஏற்படலாயிற்று.

எங்கும் பிரஸித்தி.

இவ்விதமாய் வெங்கடேசப் பெருமாளின் தீர்த்தவாரி தினத்துக்கும், அலர்மேல் மங்கைத்தாயாரின் தீர்த்தவாரிதினத்துக்கும் மாஸவித்யாஸம் ஏற்பட்டிருந்தபோதிலும் நக்ஷத்ர வித்யாஸம் கிடையாது (இவ்விரண்டு இடத்திலும் திருவோண நக்ஷத்ரத்திலேயே தீர்த்தவாரி என்று பொருள்). இதுபோலவே திருமலை-வேங்கடேசப்பெருமானுக்கு பிர

ம்மோத்ஸவத்தில் நடத்தக்கூடிய வாகன வகைராக்களும் தேர் முதலியவைகளும் இந்த திருச்சானூர் அம்மனுடைய பஞ்சமி தீர்த்த உத்ஸவத்திலும் நடத்திக் காண்பிக்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்வித வைபவங்களுடன் திருச்சானூர் அம்மனுக்கு ஒவ்வொரு வருஷத்திலும் கார்த்திகை மாஸத்தில் நடக்கும் பஞ்சமிதீர்த்த தினமானது நமது தென்னிந்தியா முழுமையிலும் கும்பகோணம் மஹாமகம்போல் மிகவும் பிரஸித்திபெற்று விளங்குகிறது.

சுகமுனி தடாகம்.

திருச்சானூரில் விளங்கும் பத்மஸரஸ் என்னும் புண்ய தடாகத்துக்கு சுகசரகம் என்றும் சுகமுனிவரின் தடாகமென்றும் பலவித நாமதேயங்களுண்டு. த்வாபரயுகத்தில் சுகமுனிவர் சிஷ்யர்களுடன் கூடி இவ்வூருக்கு வந்து இவ்வனத்தில் தங்கியிருந்தபடியால் இவ்வூருக்கு அவர்பேரால் சுகனூர் என்றும் திருச்சுகனூர் என்றும் ஆதிகாலம் முதல் இவ்விதப்பெயர் வழங்கலாயிற்று. இதுபோல் சுகமுனிவர் இந்த திருச்சானூர் குளக்கரையில் ஆச்ரமமமைத்துக்கொண்டு தவம் செய்து வந்தபடியால் அதற்கு சுக தடாகமென்றும், சுகமுனி தீர்த்தமென்றும் நாமதேயமேற்பட்டது. ஆகையால் ஆதிகாலம் தொடங்கி சுகமுனிவரின் அருளைப்பெற்று விளங்கும் இந்த திருச்சானூர் பத்மஸரக்கோனேரி தடாகத்தில் கார்த்திகை மாஸத்தில் விஷ்ணு நக்ஷத்ரமாகிய திருவோண நக்ஷத்திரத்தில் மத்யான காலத்தில் ஸ்நானம் செய்வோர்களுக்கு ஸகல பாபங்களும் நீங்கும். ஸ்ரீமஹாவிஷ்ணு மூர்த்தியின் ஸாயுஜ்யம் கிடைக்கும். இவ்வுலகில் வாழுநாளில் அளவற்ற செல்வமும் மேன்மைகளும் உண்டாகும்.

பெரும் பயன்.

மேலும், ஒவ்வொரு வருஷத்திலும் ஐப்பசி மாஸத்தில் நதிகளுள் சிறந்ததாகிய கங்கை, யமுனை, ஸிந்து, நர்மதை முதலான நதி தேவதைகள் எல்லோரும் காவேரிநதியுடன் சேர்ந்து தன்னிடத்தில் ஸ்நானம் செய்வோர்களுக்கு ஸகலவித மேன்மைகளையும் அளித்தபிறகு தமது இருப்பிடமாகிய வடதேசம் செல்லும்பொழுது இந்த திருச்சானூர் புண்யதடாகத்திலும் இதற்கு அருகிலுள்ள ஸுவர்ணமுகிநதியிலும் அந்த நதி தேவதைகள் யாவரும் கார்த்திகைமாதத்தில் சிலநாள் தங்கி ஸாந்நித்யம் செய்து போகிறார்களென்று மற்றொரு புராணத்தில் ஸுவர்ணமுகி மகாத்மியத்தில் கூறப்பட்டிருப்பதால் கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷம் பஞ்சமி திதியில் திருச்சானூரில் விளங்கும் இந்த பத்மப்பொய்கையில் (சுகதடாகத்தில்) ஸ்நானம் செய்தால் அவர்களுக்கு ஸகலவித இஷ்டங்களும் நிறைவேறும் என்பது வெளியாகிறது.

விசேஷ சக்தி.

அதாவது ஒவ்வொரு ஸம்வத்ஸரத்திலும் சூரியன் வ்ருச்சிகராசியில் விளங்கும்பொழுது சுக்லபக்ஷ பஞ்சமி திதியில் இந்த திருச்சானூரில் விளங்கும் புண்யதடாகத்தில்

ஸௌமங்கிலிஸ்திரீகள் ஸ்நானம் செய்வார்களாகில் அவர்களுக்கு புத்திர உற்பத்தி உண்டாகும். அந்த ஸ்திரீகளுக்கு பேய் பிசாசு முதலிய காற்றுப்பயங்களிருந்தால் அவைகளும் விலகிப்போகுமென்று இவ்விதமான நம்பிக்கைக் கொள்கையானது இவ்வூரில் அநாதிகாலமாய் தொடர்ந்துவருகிறபடியால் மேற்படி கார்த்திகைமாத பஞ்சமி தீர்த்தத்திற்கு திருச்சானூர் குளத்தில் ஸ்நானம் செய்வதற்காக நமது இந்தியஜாதி ஜனங்கள் பெரும்பாலும் இந்த திருச்சானூருக்கு வருகிறார்கள். ஆகையால் இந்த பஞ்சமி தீர்த்த ஸ்நானமானது முக்கியமாய் ஸௌமங்கலிகளுக்கும் மற்றுமுள்ள புருஷர்களுக்கும் ஸகலவிருப்பங்களையும் அளிக்கும் என்பதில் ஸந்தேகமே கிடையாது. இதுகாரணம்பற்றி இந்த தடாகத்தின் கீழ்கரையில் சூரியனுக்கு ஒரு விசேஷ ஸந்நிதி யேற்பட்டுளது. இதிலுள்ள ஆதித்ய மூர்த்தி வெகு அழகாய் அமைக்கப்பட்டுளது.

மண்டபத்தில் வீற்றிருத்தல்.

இவ்வண்ணமாய் இந்த பஞ்சமீதீர்த்தத்தின் மகிமையை பூர்வகாலப்பெரியோர்கள் நமக்கு வெளியிட்டதுமன்றி இந்த பஞ்சமீ தினத்தின் மத்யானஸமயத்தில் அம்பாளின் ஸாந்நித்யமும் அந்த குளக்கரையில் தோன்றுமாறு 9 நாள் உத்ஸவத்தை நடத்திவரலானார்கள். இப்படிப்பட்ட மகிமைவாய்ந்த பஞ்சமி தினமானது மேற்படி பத்மாவதி அம்மனுடைய ஒன்பதாவது திருநாளில் வருகிறது. அன்றையதினத்தின் விடியற்காலையிலேயே அம்மன் காலபூஜை நைவேத்யம் முதலியவைகளை அடைந்தபிறகு பல்லக்கில் வீற்றிருந்து அம்மன் ஊர்ப்ரதக்ஷிணமாய் வந்து கோயிலில் த்வஜஸ்தம்பத்துக்கு எதிரிலுள்ள ஆஸ்தானமண்டபத்திலிறங்கி சூர்ணபிஷேகம் என்னும் கந்தப்பொடியினால் ஒரு விசேஷாபிஷேகத்தையு மங்கீகரித்து, மறுபடியும் வீதி வலம்செய்து கடைசியாய் மேற்படி பத்மஸரஸ் என்னும் புண்யதடாகத்தின் கரையிலுள்ள ஓர் மண்டபத்தில் வீற்றிருப்பாள்.

கலியுகத்திலும் சுபங்கள்.

அத்தருணத்தில் அம்மனுக்கு நாதனாகிய ஸ்ரீ வேங்கடாசலபதியின் கோயிலிலிருந்து அவர் (வெங்கடரமணமூர்த்தி) நிவேதனம் செய்து அனுப்பிய அப்பப்படி, மஞ்சள் காப்பு முதலான ப்ரஸாதங்களை திருமலையிலிருந்து திருப்பதிக்குக் கொண்டுவந்து அங்கிருந்து வேதகோஷத்துடன் யானை குதிரை முதலான பரிச்சின்னங்களுடனும் மங்களவாத்யத்துடனும் இந்த திருச்சானூருக்கு கொண்டுவருவார்கள். அவ்வாறு கொண்டுவந்த (திருமலை) படிவகைகளை பத்மாவதி அம்மனுக்கு, அர்ச்சகர்கள் நைவேத்யம் செய்தபிறகு அவ்வம்மனுக்கு புருஷஸூக்த பூர்வகமாய் அபிஷேகம்செய்ய ஆரம்பிப்பார்கள். அவ்வாறு அபிஷேகம் முடிந்தபிறகு ஸ்ரீஸுதர்சன மூர்த்தியானவர் அந்த பத்மஸரஸ் தீர்த்தத்தில் நடுப்பகல் நேரத்தில் புண்யதீர்த்தஸமயம் இதுவே என்று அறிவிப்பதுபோல் அதில் முதலில் தான் நீராடுவார். அவ்வாறு ஸுதர்சனமென்னும் சக்ரத்தாழ்வார் ஸ்நானம் செய்யுந்தருணத்திலேயே ஜீயர்களும் ஆசார்யபுருஷர்களும் ஸகல பக்தர்களும் ஸௌமங்கலிகளும் மற்றுமுள்ளோரும் புண்ய ஸ்நானம் செய்து அம்மனை தரிசிப்பார்கள். இப்படிச் செய்வதனால் இக்கலியுகத்திலும் நல்ல சுபங்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன.

மூலஸ்தானம்.

இவ்விதமாய் வைகாநஸ பாஞ்சாத்ர ஆகம முறைப்படி சக்ரத்தாழ்வார் புண்ணிய தீர்த்தம் கொடுத்தவாறே பத்மாவதி அம்மன் வேதகோஷத்துடன் தமது கோயிலுக்குப் போய் மற்றொரு நைவேத்யம் சாத்துமுறை முதலான தேவாலயக்கோட்பாடுகளையும் அங்கீகாரம்செய்து, ராத்திரி மறுபடியும் மத்தாப்பு, தீவட்டி பாணவேடிக்கைக்காக்ஷி முதலிய பரிவார ஸம்பிரமங்களுடன் ஊர்வலம்வந்து த்வஜஸ்தம்பத்தில் 8 தினங்களுக்குமுன் ஏறிய கொடியை மேற்படி அர்ச்சகர்மூலமாய் இறக்கிவிட்டு தனது மூலஸ்தானத்தில் நிலை பெற்று விளங்குவாள். இத்தகைய பஞ்சமீதீர்த்த பிரம்மோத்ஸவமானது திருச்சானூர் யோகீமல்லவாம் முதலான பலகிராமங்கள் கார்வேட்நகர் ராஜாவின் இலாகாவைச் சேர்ந் திருப்பதால் கார்வேட்நகர் ராஜா அவர்கள் வெகு விமரிசையாய் நடத்திவருகிறார்கள்.

அர்ச்சனை ஏற்பாடு.

மேல் திருப்பதி கோயிலிலும் கீழ் திருப்பதி கோயிலிலும் பகவானை தரிசிப்பதற்கு திருமலை திருப்பதி தேவஸ்தான ஆதீன அதிகாரிகள் எவ்வித ஏற்பாடு செய்திருக்கிறார்களோ அதுபோலவே இந்த திருச்சானூர் அம்மனை தரிசிக்கவேண்டிய முறைகளுக்கும் சிலஏற்பாடுகளை விதித்திருக்கிறார்கள்.

இந்த அம்மனை ஸேவிப்பதற்காக வந்து கூடும் பக்தர்கள் மேற்படி அம்மன் கோயில் மண்டபத்தின் கச்சேரியில் மணியகாரரிடம் 5 ரூபாய் செலுத்துவாராகில் அவர்களது கோத்திரத்தையும், நாமதேயத்தையும் சொல்லி அர்ச்சகர்கள் மூலமாய் அம்மனுடைய பாதாரவிந்தத்தில் ஸஹஸ்ரநாமார்ச்சனை (1008 துளசி அர்ச்சனை) யை செய்துவைப்பார்கள். இவ்வித அர்ச்சனையை வெள்ளிக்கிழமைகளிலும் திங்கட்கிழமைகளிலும் நடத்திவைப்பது மிகவும் உத்தமம் என்று இவ்விரண்டு தினங்களிலும் செய்து வைக்கிறார்கள்.

மூலப்பொருள்.

இதுபோலவே மனியகாரரிடத்தில் 8 அணா செலுத்தினால் 108 துளசி அர்ச்சனை முறையை நடத்தி வைப்பார்கள். நாலணா செலுத்தினால் கர்ப்பூரஹார்த்தி (மங்கள ஆர்த்தி) செய்து வைப்பார்கள். அன்றியும் பிரார்த்தனைசெய்துகொண்டவர்களும் மற்றுமுள்ளோரும் 21 ரூபாய் செலுத்தினால் அம்மனை மாலைநேரத்தில் கருடவாஹனத்தின்மீது வீற்றிருக்கச்செய்தும் சிறந்த ஆபரண அலங்காரம்செய்தும் ஊர்ப்ரதக்ஷிணமாய் ஒரு உத்ஸவத்தையும் நடத்தமுடியும். இம்மாதிரியே 21 ரூபாய் செலுத்தினால் அம்மனுக்கு யானைவாஹன உத்ஸவத்தையும் நடத்திவைப்பார்கள். இவ்வித ஏற்பாட்டை இந்த அம்மன்கோயிலுக்குமாத்திரம் விதித்திருக்கிறார்கள். இக்கோயிலிலுள்ள கிருஷ்ணஸ்வாமி ஸன்னதிக்கும் சுந்தரராஜப்பெருமாள் ஸன்னதிக்கும் வேறுவிதமாய் நடத்திவருகிறார்கள். திருமலை திருப்பதிக்கு யாத்திரையாகவரும் தொண்டர்கள் யாவரும் இந்த திருச்சானூருக்கு வந்து இந்த கட்டணங்களை செலுத்தி தினந்தோறும் காலை 8 மணிமுதல் 12 மணி வரையிலும் மாலை 6 மணி முதல் 9 மணி வரையிலும் மேற்படி அம்மனை தர்சனம் செய்ய

லாம். இவ்வாறு பணம்கட்ட சக்தியில்லாத ஏழைகள் அனைவருக்கும் இனமாக தர்சனம் செய்துவைக்கும்படியும் ஏற்பாடு இந்தக் கோயில்களில் நடந்துவருகிறது. ஆகையால் நமது பாரதவாஸிகள் யாவரும் எவ்விதத்திலாவது இந்த அலர்மேல்மங்கைத்தாயாரின் தர்சனத்தை அடைவதே அவர்களுடைய குடும்பக்ஷேமத்துக்கு மூலப்பொருளாகும்.

கல்யாணங்கள் நடத்தவேண்டிய முறை.

ஸீதாதேவியானவள் ஜனக மகாராஜனுடைய அரண்மனையில் வளர்ந்ததுபோல முன்பு அலர்மேல்மங்கைத்தாயானவள் ஆகாசராஜனுடைய அரண்மனையில் அவனது புத்ரிபோல் பாவனைசெய்துகொண்டு வளர்ந்துவந்தபோதிலும் தான் லக்ஷ்மியின் அம்சமானபடியால் இடைவிடாமல் வேங்கடாசலத்தின் உச்சியில் விளங்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவையே தன் மனதில் தியானம் செய்துகொண்டிருந்து கடைசியாய் நல்லதொரு சுப முகூர்த்தத்தில் ஸப்தரிஷிகளும், இந்திரன் முதலிய தேவர்களும், பிராம்மணோத்தமர்களும், பிரம்மா, ஸநகர் ஸநந்தனர் முதலான நித்யஸூரிகளும் நிறைந்துவிளங்கும் ஸபையில் இந்த திருச்சானூரில் முன்பு திருவேங்கடமுடையான் என்னும் வேங்கடேசப்பெருமானை விவாகம்செய்துகொண்டு விளங்கினுளாம்.

இங்குதான் முதலில் இவ்வித வைபவத்தை யுணர்ந்துகொண்ட நமது தக்ஷிணதேச பெரியோர்கள் யாவரும் பூர்வகாலம் முதல்கொண்டே இந்த திருச்சானூரில் தமது பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் விவாஹத்தைநடத்திவரலானார்கள். அவ்வித வழக்கமானது இந்த திருச்சானூரில்தான் முதல்முதலாக ஏற்பட்டபடியால் இந்த வழக்கத்தையே மற்றுமுள்ள சில க்ஷேத்ரங்களிலும் பிறகு சில பெரியோர்கள் நடத்திவரலாயினர். ஆகிலும் இந்த திருச்சானூரில் விவாஹத்தைமாத்திரம் நடத்தலாமே தவிர அக்ஷராப்பியாஸம் உபநயனம் முதலானவைகளை வெளியூர் பக்தர்கள் வந்து நடத்தக்கூடாது. அவ்வாறு நடத்தினும் அதற்குறிய நற்பலனில்லையென்றே தெரியவருகிறது. இந்த பத்மாவதி அம்மனுடைய ஸந்நிதானத்தினுல் சிறந்துவிளங்கும் இந்த திருச்சானூரில் வதூவரர்களுக்கு (கலியாணப்பெண் கலியாணப்பிள்ளை) இவர்களுக்கு விவாஹத்தை வெளியூர் பக்தர்கள் நடத்துவதிலும் சிலகாரணங்கள் கவனிக்கத்தக்கவையாயிருக்கின்றன.

காரணங்கள். (1) நமது தக்ஷிணதேசத்திலிருக்கும் எல்லா ஜாதியர்களும் யாராயினும் தமது பெண்கள் பிள்ளைகளுக்கு ப்ரார்த்தனை செய்துகொண்டால் அப்பொழுது அவர்கள் இந்த திருச்சானூரிலேயே வந்து மேற்படியார்களின் விவாஹத்தை நடத்திவைக்க வேண்டும். (2) அவ்விதமாய் பிரார்த்தனையில்லாதவர்களும் தமது ஊரில் தமது க்ரஹங்களில் விவாஹத்தை நடத்துவதைக்காட்டிலும் இந்த அம்பாளின் வாஸஸ்தானமாகிய இந்த திருச்சானூரிலேயே தமது குடும்பத்தாரின் விவாஹத்தை நடத்துவது நன்மைக்கு இடமாகும் என்று பூர்ண நம்பிக்கையுடன் தமது ஊரிலிருந்து புறப்பட்டு இந்த திருச்சானூருக்குவந்து அவ்வாறே நடத்தி அம்பாளின் அருளைப் பெறவேண்டும். ஆகையால் இவ்வண்ணமான அநேக காரணங்களினுல் நமது தக்ஷிண தேசத்திலுள்ள பிராம்மணர்களும் மற்றும் சிலரும் இந்த திருச்சானூருக்கு வந்து ஸாங்கமாய் ஐந்துநாள்வரையில்

மேற்படி விவாஹத்தை நடத்தவேண்டுமேதவிர ஒருதினத்திலே வ்ரதம், விவாஹம், ப்ரவேசஹோமம், சேஷஹோமம், பாலிகை கொட்டுதல் முதலியவைகளை நடத்துவது தர்ம சாஸ்திர முறைக்கு விரோதமாகும் என்பதை தெரிந்துணர்ந்தவர்கள் சிலர் இப்பொழுதும் தமது குமாரர் குமாரத்திகளுக்கு இந்த திருச்சானூரில் ஐந்துநாள் விவாஹத்தையே நடத்திவருகிறார்கள்.

ஆகிலும் தேசகால ஸௌகரியங்களை முன்னிட்டுக்கொண்டு இந்த திருச்சானூரில் அம்பாளின் ஸந்நிதானத்தில் விவாஹத்தை நடத்தியபோதிலும் குறைவு இன்றி தம்பதிகளுக்கு மங்களங்களுமுண்டாகும் என்னும் மற்றுஞ்சில பெரியோர்களின் கொள்கையும் நெடுநாளாய் ஏற்பட்டிருப்பதால் இவ்வாறு ஒருதினத்திலேயே விவாஹம் நடத்துவதும் இக்கலிகாலத்துக்கு யுக்தமென்று நடத்திவரப்படுகிறது.

மங்களப்பெருக்கு.

இந்த திருச்சானூருக்குவந்து விவாஹத்தை நடத்துகிறவர்களும் விவாஹத்தை நடத்திக்கொள்ளும் தம்பதிகளும் மஞ்சவேஷ்டியுடன் முதலில் திருச்சானூர் அம்பாளை தரிசித்து பிறகு ஏழுமலையின்மேலேறி அங்குவிளங்கும் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாளைத் தரிசித்து தமது இருப்பிடம்போகவேண்டும். இவ்விதமாய் அம்பாளையும் பகவானையும் தம்பதிகள் தரிசிப்பார்களாகில் அவர்களின்மீது பகவானுடைய கருணைபெருகும். அது மூலமாய் அவர்களுக்கு சிறந்த நன்மைகளுண்டாகும் என்றே பெரியோர்களும் மஹரிஷிகளும் கூறியிருக்கிறார்கள்.

வெளியூரிலிருந்து இந்த திருச்சானூருக்கு வந்து சுருக்கமாகிய காலத்தில் விவாஹத்தை யடைந்த தம்பதிகளும் அவர்களது சுற்றத்தாரும் இவ்வாறு அம்பாளையும் பகவானையும் தரிசித்து அந்த புண்யதடாகத்தை பிரதக்ஷிணம் செய்தால் காரியலோபம் என்பதே கிடையாது. க்ஷேத்திரமகிமையே மேலாகும். ஈச்வரகடாக்ஷமே இக்கலியுகத்தோர்களுக்கு அமிர்தத்துக்கொப்பாகும். அலர்மேல்மங்கைத்தாயாரின் பாதாரவிந்த பக்தியே மங்களத்தைப்பெருக்கும்.

இவ்வித மங்களங்களுக்கு இருப்பிடமாகிய திருச்சானூரில் நமது தக்ஷிணதேசத்தார் விவாஹத்தை நடத்துவதற்கு ஸ்தலஸௌகரியம்உண்டு. திருச்சானூர் ஸன்னதி வீதியில் திருமலைதிருப்பதி பெரியஜீயர் என்னும் வைஷ்ணவ ஆசாரியரின் மடமிருக்கிறது. இதில் அநேகமாய் வைஷ்ணவர்கள் மாத்திரம் விவாஹத்தை நடத்தலாம். இந்த மடத்தில் அவ்வாறு வைஷ்ணவர்கள் விவாஹத்தைநடத்துவதற்கும் இந்தமடத்தின் அதிகாரி ஜீயருடைய அனுமதியை பெறவேண்டும். தவிர திருச்சானூர் குளத்தின் தென்கரையில் மத்வ ஸித்தாந்த ஸ்தாபகராகிய உத்தராதி ஸ்வாமிகளின் மடமும், குளத்தின் மேற்குக் கரையில் திருப்பதி மஹந்து அவர்களின் மடமும் இருக்கிறது. இம்மடங்களில் அந்தந்த மடாதிபதிகள் தங்கியிராதகாலத்தில் அம்மடாதிபதிகளின் அனுமதியினால் அவைகளில் விவாஹமுகூர்த்தத்தை நடத்தலாம்.

அலர்மேல்மங்கையம்மன் கல்யாணநிமித்தம் ஆதிசங்கரர் யந்திரஸ்தாபனம் செய்த விவரம்.

திருப்பதி தமிழ்நாட்டிற்கு வடஎல்லையாயிருந்தது மன்னியில் அது நீர்வளமுள்ள பலதேசங்களுக்கு முக்கிய நகரமாயுமிருந்துவந்தது. அதை வியத்ராஜனென்பவன் தமது பட்டமஹிஷி தாராதேவியுடன் ஆண்டுவரும்காலத்தில், ராஜ்யத்தில் ஸுகமே மேலிட்டிருந்தாலும், இவர்களுக்கு குழந்தையில்லாக்குறை அதிகமாயிருந்தது. இதுவிஷயமாய் ராஜதம்பதிகள் கவலையுடன் பகவானைப்பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். கடைசியாக ஒரு பெண்குழந்தையை அடைந்தார்கள். அக்குழந்தை ராஜாவுக்கு மாத்தியான்னிகஸ்நானம் செய்ய தாமரை ஓடைக்குச்சென்றகாலத்தில் திடீரென தெய்விகமாய், தாம் முன்னிரவில் ஸ்வப்னம்கண்டபடி கிடைத்ததால் அது லக்ஷ்மி அம்சமாய் வெகு பெருமையுடன் விளங்கிற்று. இக்குழந்தையின் ஜாதகத்தைப்பார்த்த எல்லா ஜோஸியர்களும், விஷ்ணுமூர்த்தியே மனுஷ்யனாய்த் தோன்றி அவளை விவாஹம் செய்து கொள்ளுவாரென்று சொல்லுவதைக்கண்டு ராஜாவும் வெகு திருப்தியடைந்திருந்தார். தாமரைபுஷ்பத்திலிருந்து தோன்றியதின் காரணமாக அக்குழந்தைக்கு பத்மாவதி அதாவது அலர்மேல் மங்கை எனப் பெயரிடப்பட்டது.

மற்றைய மனுஷ்ய குழந்தைகளைப்போலில்லாமல் அதிபால்யத்திலேயே இப்பத்மாவதி தெய்வபக்தியில் ஈடுபட்டு எப்பொழுதும் பகவானை ஸ்தோத்திரம்செய்துகொண்டிருந்தாள். கல்வியில் அதிக பாண்டித்யம் அடைந்திருந்தாள். ஒருஸமயம் பத்மாவதி தனது தோழிகளுடன் விளையாடிக்கொண்டிருக்கையில் திருமலையில் பிரகாசிக்கும் ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் ஒரு குதிரையின்பேரில் மனுஷ்யனாக அவ்விடம்தோன்றி, பத்மாவதி தன்னை அடையும்படி அவளை மோஹிக்கச்செய்தார். இப்படிச்செய்து அவர் திடீரென மறைந்தார். அதன்பின்னர், பத்மாவதி அதேகவலையாய் அந்த புருஷனையே நினைத்துக்கொண்டு ஏக்கமடைந்தனள். இதைக்கவனித்த ராஜதம்பதிகள் பல வைத்தியர்கள், மாந்திரீகர்களை அழைத்து பார்த்தும் பத்மாவதியின் நிலைமை அப்படியேயிருந்தது. இதேஸமயத்தில் திருமலையில் ஸ்ரீ வேங்கடேசனை தினப்படி தரிசனம் செய்துவரும் பிருந்தை என்பவள் பகவான் கவலையுடனிருப்பதைக்கண்டு அதுகாரணம் தெரிந்துகொள்ள ஆவலுடையவளாயிருந்தாள். பகவானும் அவளது பக்திக்கு அணுகி அவளிடம் தான் இம்மலைஸமீபத்திலுள்ள வியத்ராஜனின் புத்ரியாகியபத்மாவதியை அவள் தோட்டத்தில் ஸகிகளுடன் விளையாடுகையில் கண்ட விருத்தாந்தத்தையும் அவள் தன்னை அடையவேண்டி கவலையுடனிருப்பதினால் தானும் சீக்கிரம் அக்காரியத்தை முடிவுபெற வைக்கவேண்டி ஆவலுடனிருப்பதாகத் தெரிவித்ததும் பிருந்தை இது ஸம்பந்தமாய் தான் தேவையான காரியங்களைச் செய்வதாகவும், பகவான் மனுஷ்ய ரூபத்துடன் பத்மாவதியை கல்யாணம்செய்துகொள்ளும் விசேஷத்தை தானும் கண்குளிரப்பார்த்து ஆனந்திக்க அவாவுள்ளவளாகவும் சொன்னாள். இவ்விதம் தீர்மானமானதும் பகவான் குறத்திவேஷம்பூண்டு விராஜாமன்னன் அரண்மனைக்குப் போனார்.

அவ்வூரிலுள்ளவர்களுக்கு குறிசொன்னதிலிருந்து ஜனங்கள் ஆச்சரியமடைந்தார்கள். இந்த விருத்தாந்தத்தைக்கேட்ட ராஜாவும், அந்தக்குறத்தியை அழைத்து குறிகேட்க முயன்ருர். குறத்திவேஷம்பூண்ட பகவானும் அரசனது குழந்தையின் கையைப்பார்த்து இவளுக்கு யாதொரு வியாதியுமில்லே, சங்கா தோஷமுமில்லே இவள் ஒருதினம் ஸந்தித்த புருஷன்மீது மோஹங்கொண்டிருக்கிருள். அப்புருஷனே மணந்தாலொழிய இவளது விசாரம் நீங்காதென்று சொன்னதும் ராஜா அக்குறத்தியை அது நிறைவேறும் மார்க்கத்தைக்கேட்டார். அதற்கு அக்குறத்தி திருமலேயில் பிரகாசிக்கும் பகவானே மனுஷ்யரூபமாய் இந்த லீலே செய்ததாகவும் அடுத்ததினம் பகவானது பக்தர்களில் ஒருத்தியாகிய பிருந்தை என்பவளே இதுவிஷயமாய் அவரிடம்வந்து சேருவாளென்றும், இத்திருக்கல்யாணம் சீக்கிரம் முடிவுபெறுமென்றும் தெரிவித்து பீதாம்பரமொன்றை வெகுமதியாகப்பெற்று, வெளிப்போவதாக பாவித்து பகவான் அந்தர்த்தானமானர்.

மறுதினம் பிருந்தை அரண்மனேயை யடைந்து, அவரது மகளே பகவான் வரித்திருப்பதாகச்சொல்லி, ராஜாவிடமிருந்து அதற்கு அனுமதி பெற்ருள். இதைப்போய் மலேயிலுள்ள பகவானிடம் சொன்னதும் அவரும் திருப்தியடைந்து தமது கல்யாணச் செலவிற்கு பணம்வேண்டி குபேரனிடம் கடன் வாங்க உத்தேசித்தார். அந்தப்படி செய்யவேண்டி, குபேரனிடம் போய் தான் அடியில்கண்ட விவரங்கள் எழுதப்பட்ட ஒரு ஓலேயை குபேரனிடம் கொடுத்தார்.

> "பரிதாபி வருஷம் வைகாசி மாஸம் 9 ம் தேதி வியத்ராஜன் குமாரி பத்மாவதியை கல்யாணம்செய்துகொள்வதற்காக குபேரனிடமிருந்து நான் வாங்கினது 68 கோடி ராம நாணயம். இந்த 68 கோடியையும் தேவதைகளின் ஆயிரம் வருஷத்திற்குள் வட்டியும்முதலுமாக திருப்பித்தருகிறேன்."

குபேரனும் உடனே 68 கோடி நாணயங்களேக்கொடுக்க பகவான் அதை எடுத்துக்கொண்டு வியத்ராஜன் அரண்மனேசென்று பத்மாவதியை வெகு விமரிசையுடன் சுபமுகூர்த்தத்தில் பாணிக்ரஹணம் செய்துகொண்டார். பின்னர் குபேரனிடம் பெற்றுக்கொண்ட இந்த 68 கோடி நாணயங்களேத்திருப்பவேண்டியே ஆதிசங்கரர் திருமலே தரிசனம்செய்யப்போன காலத்தில் அவரது ஸ்வப்னத்தில் தோன்றி, தமது ஸந்நிதானத்தில் தனகர்ஷண யந்திரத்தைஸ்தாபனம்செய்து, அதன்மேல் ஏற்படுத்தப்படும் உண்டியில் தினப்படி ஜனங்கள் ஏராளமான திரவியத்தைப் போட்டு இக்கடன் தீர்க்க ஆக்ஞாபித்தனர். இதன் பெருமையை தினப்படி நாம் இப்பொழுதும் திருமலேயில் காணுகிறோம்.

ஆழ்வாராதிகள் பாடிய பாடல்கள்.

திருமங்கையாழ்வார் பாடியது:—

பெரியதிருமொழி.—1-ம் பத்து.—8-ஆம் திருமொழி.

(யமுனுகல்யாணிராகம்—திரிபுடைதாளம்.)

¶ கொங்கலர்ந்தமலர்க்குருந்தம்ஒசித்த கோவலன் எம்பிரான்
சங்குதங்குதடங்கடல் துயில்கொண்டதாமரைக்கண்ணினன்
பொங்குபுள்ளினை வாய்பிளந்த புராணர் தம்மிடம் ❋ பொங்குநீர்ச்
செங்கயல்திளைக்கும்சுனைத் திருவேங்கடம் அடைநெஞ்சமே! 1

¶ பள்ளியாவது பாற்கடல்அரங்கம் இரங்கவன் பேய்முலை
பிள்ளையாய்உயிருண்டஎந்தை பிரானவன் பெருகுமிடம்
வெள்ளியான்கரியான் மணிநிறவண்ணனென்றெண்ணி ❋ நாள்தொறும்
தெள்ளியார்வணங்கும்மலைத் திருவேங்கடம் அடைநெஞ்சமே! 2

நின்றமாமருது இற்றுவீழ நடந்தநின்மலன்நேமியான்
என்றும் வானவர்கைதொழும் இணைத்தாமரையடி யெம்பிரான்
கன்றிமாரி பொழிந்திடக் கடிதாநிரைக்குஇடர்நீக்குவான்
சென்றுகுன்றமெடுத்தவன் திருவேங்கடம் அடைநெஞ்சமே! 3

¶ பார்த்தற்காய்அன்றுபாரதம்கைசெய்திட்டு வென்ற பரஞ்சுடர்
கோத்து அங்கு ஆயர்தம்பாடியில் குரவைபிணைந்தஎம்கோவலன்
ஏத்துவார்தம்மனத்துள்ளான் இடவெந்தைமேவியஎம்பிரான்
தீர்த்தநீர்த்தடஞ்சோலைசூழ் திருவேங்கடம் அடைநெஞ்சமே! 4

வண்கையான் அவுணர்க்கு நாயகன் வேள்வியில்சென்று, மாணியாய்
மண்கையால்இரந்தான் மராமரமேழும்எய்தவலத்தினன்
எண்கையான் இமயத்துள்ளான் இருஞ்சோலைமேவியஎம்பிரான்
திண்கைம்மாதுயர்தீர்த்தவன் திருவேங்கடம் அடைநெஞ்சமே! 5

எண்திசைகளும்ஏழுலகமும்வாங்கிப் பொன்வயிற்றில்பெய்து
பண்டுஓராலிலைப்பள்ளிகொண்டவன் பால்மதிக்குஇடர்தீர்த்தவன்
ஒண்திறலவுணனுரத்துகிர்வைத்தவன் ஒள்ளெயிற்றொடு
திண்திறலரியாயவன் திருவேங்கடம்அடைநெஞ்சமே! 6

பாரும்நீர்எரிகாற்றினோடு ஆகாசமும்இவையாயினன்
பேரும் ஆயிரம்பேசநின்ற பிறப்பிலிபெருகுமிடம்
காரும்வார்பனிநீள்விசும்பிடைச் சோருமாமுகில்தோய்தர
சேரும்வார்பொழில்சூழ் எழில்திருவேங்கடம்அடைநெஞ்சமே! 7

அம்பரம் அனல்கால்நிலம் சலமாகிநின்ற அமரர்கோன்
வம்புலாமலர்மேல் மலிமடமங்கைதன்கொழுநனவன்
கொம்பினன்னஇடைமடக்குறமாதர் நீளிதணந்தொறும்
செம்புனம்மவைகாவல்கொள் திருவேங்கடம்அடைநெஞ்சமே! 8

பேசுமின் திருநாமம்எட்டெழுத்தும் சொல்லிநின்று, பின்னரும்
பேசுவார்தமைஉய்யவாங்கிப் பிறப்பறுக்கும்பிரானிடம்
வாசமாமலர்நாறுவார்பொழில் சூழ்தரும்உலகுக்கெலாம்
தேசமாய்த்திகழும்மலைத் திருவேங்கடம்அடைநெஞ்சமே! 9

¶ செங்கயல்திளைக்கும்சுனைத் திருவேங்கடத்துஉறைசெல்வனை
மங்கையர்தலைவன்கலிகன்றி வண்தமிழ்ச்செஞ்சொல்மாலைகள்
சங்கையின்றித்தரித்துஉரைக்கவல்லார்கள் தஞ்சமதாகவே
வங்கமாகடல்வையம்காவலராகி வானுலகாள்வரே. 10

பெரியதிருமொழி.—1-ம் பத்து.—9-ஆம் திருமொழி.

(முகாரிராகம்—அடதாளம்.)

¶ தாயே தந்தைஎன்றும் தாரமேகிளைமக்களென்றும்
நோயேபட்டொழிந்தேன் நுன்னைக்காண்பதோராசையினால்
வேயேய்பூம்பொழில்சூழ் விரையார் திருவேங்கடவா!
நாயேன்வந்துஅடைந்தேன் நல்கி ஆளென்னைக்கொண்டருளே. 1

மானேய்கண்மடவார் மயக்கில்பட்டு * மாநிலத்து
நானேநானாவிதநரகம்புகும் பாவம்செய்தேன்
தேனேய்பூம்பொழில்சூழ் திருவேங்கடமாமலை * என்
ஆனாய்! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 2

கொன்றேன்பல்லுயிரைக் குறிக்கோளொன்றிலாமையினால்
என்றேனும்இரந்தார்க்கு இனிதாகஉரைத்தறியேன்
குன்றேய்மேகமதிர் குளிர்மாமலை வேங்கடவா!
அன்றேவந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 3

குலந்தானெத்தனையும் பிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன்
நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறம்செய்துமிலேன்
நிலந்தோய் நீள்முகில்சேர் நெறியார்திருவேங்கடவா!
அலந்தேன்வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 4

எப்பாவம்பலவும் இவையேசெய்து இளைத்தொழிந்தேன்
துப்பா! நின்னடியே தொடர்ந்தேத்தவும்கிற்கின்றிலேன்
செப்பார்திண்வரைசூழ் திருவேங்கடமாமலை * என்
அப்பா! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 5

மண்ணாய்நீர்எரிகால் மஞ்சுலாவும்ஆகாசமுமாம்
புண்ணாராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந்துஎய்த்தொழிந்தேன்
விண்ணார்நீள்சிகர விரையார் திருவேங்கடவா!
அண்ணா! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே 6

தெரியேன்பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்
பெரியேனாயினபின் பிறர்க்கேயுழைத்து ஏழையானேன்
கரிசேர்பூம்பொழில்சூழ் கனமாமலைவேங்கடவா!
அரியே! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 7

நொற்றேன்பல்பிறவி நுன்னைக்காண்பதோராசையினால்
ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றனன் எம்பெருமான்!
கோல்தேன்பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ்வேங்கடவா!
ஆற்றேன்வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 8

பற்றேல் ஒன்றுமிலேன் பாவமேசெய்து பாவியானேன்
மற்றேலொன்றறியேன் மாயனே! எங்கள் மாதவனே!
கல்தேன்பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா!
அற்றேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 9

¶ கண்ணாய்ஏழுலகுக்குஉயிராய எங்கார்வண்ணனை
விண்ணோர்தாம்பரவும் பொழில்வேங்கடவேதியனை
திண்ணார்மாடங்கள்சூழ் திருமங்கையர்கோன்கலியன்
பண்ணார்பாடல்பத்தும் பயில்வார்க்குஇல்லைபாவங்களே. 10

பெரியதிருமொழி.—1-ம் பத்து.—10-ம் திருமொழி.

¶ கண்ணார்கடல்சூழ் இலங்கைக்குஇறைவன்தன்
திண்ணாகம்பிளக்கச் சரம்செலஉய்த்தாய்!
விண்ணோர்தொழும் வேங்கடமாமலைமேய
அண்ணா! அடியேனிடரைக் களையாயே. 1

இலங்கைப்பதிக்கு அன்றுஇறையாய * அரக்கர்
குலம்கெட்டுஅவர்மாளக் கொடிப்புள்திரித்தாய்!
விலங்கல்குடுமித் திருவேங்கடம்மேய
அலங்கல்துளபமுடியாய்! அருளாயே. 2

நீரார்கடலும் நிலனும்முழுதுண்டு
ஏராலமிளந்தளிர்மேல் துயில்எந்தாய்!
சீரார்திருவேங்கட மாமலைமேய
ஆராவமுதே! அடியேற்குஅருளாயே. 3

உண்டாய்உறிமேல் நறுநெய்அமுதாக
கொண்டாய்குறளாய் நிலம்ஈரடியாலே
விண்தோய்சிகரத் திருவேங்கடம்மேய
அண்டா! அடியேனுக்கு அருள்புரியாயே. 4

தூணாய்அதனூடு அரியாய்வந்துதோன்றி
பேணாஅவுணனுடலம் பிளந்திட்டாய்!

சேணார் திருவேங்கட மாமலைமேய
கோணாகணையாய் ! குறிக்கொள்எனைநீயே. 5

மன்னா இம்மனிசப்பிறவியைநீக்கி
தன்னாக்கித் தன் இன்னருள்செய்யும்தலைவன்
மின்னார்முகில்சேர் திருவேங்கடம்மேய
என்னானைஎன்னப்பன் என்னெஞ்சிலுளானே 6

மானேய்மடநோக்கிதிறத்து எதிர்வந்த
ஆனேழ்விடைசெற்ற அணிவரைத்தோளா !
தேனே ! திருவேங்கடமாமலைமேய
கோனே ! என்மனம் குடிகொண்டிருந்தாயே. 7

சேயன்அணியன் எனசிந்தையுள்நின்ற
மாயன் * மணிவாளொளி வெண்தரளங்கள்
வேய்விண்டுஉதிர் வேங்கடமாமலைமேய
ஆயனடியல்லது மற்றறியேனே. 8

வந்தாய்என்மனம்புகுந்தாய் மன்னிநின்றாய் !
நந்தாதகொழுஞ்சுடரே ! எங்கள்நம்பீ !
சிந்தாமணியே ! திருவேங்கடம்மேய
எந்தாய் ! * இனியான்உன்னை என்றும்விடேனே. 9

¶ வில்லார்மலி வேங்கடமாமலைமேய
மல்லார்திரள்தோள் மணிவண்ணனம்மானை
கல்லார்திரள்தோள் கலியன்சொன்னமாலை
வல்லாரவர் வானவராகுவர்தாமே. 10

பெரியதிருமொழி.—2-ம் பத்து.—1-ஆம் திருமொழி.

¶ வானவர்தங்கள்சிந்தைபோல என்நெஞ்சமே! இனிதுவந்து * மாதவ
மானவர்தங்கள்சிந்தை அமர்ந்துறைகின்றஎந்தை
கானவரிடுகாரகில்புகை ஓங்குவேங்கடம் மேவி * மாண்குற
ளான அந்தணற்கு இன்று அடிமைத்தொழில்பூண்டாயே. 1

உறவுசுற்றமென்றொன்றிலா ஒருவன்உகந்தவர்தம்மை * மண்மிசைப்
பிறவியேகெடுப்பான் அதுகண்டுஎன்நெஞ்சமென்பாய் !
குறவர்மாதர்களோடு வண்டுகுறிஞ்சிமருளிசைபாடும்வேங்கடத்து
அறவனாயகற்கு இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே. 2

இண்டையாயினகொண்டு தொண்டர்களேத்துவாருறவோடும் * வானிடைக்
கொண்டுபோயிடவும் அதுகண்டு என்நெஞ்சமென்பாய் !
வண்டுவாழ்வடவேங்கடமலை கோயில்கொண்டதனோடும் * மீமிசை
அண்டமாண்டிருப்பாற்கு அடிமைத்தொழில் பூண்டாயே. 3

பாவியாதுசெய்தாய்என்நெஞ்சமே! பண்டுதொண்டுசெய்தாரை * மண்மிசை
மேவிஆட்கொண்டுபோய் விசும்பேறவைக்குமெந்தை
கோவிநாயகன்கொண்டலுந்துயர் வேங்கடமலையாண்டு * வானவர்
ஆவியாயிருப்பார்க்கு அடிமைத்தொழில்பூண்டாயே. 4

பொங்குபோதியும்பிண்டியும்முடைப் புத்தர்நோன்பியர்பள்ளியுள்ளுறை
தங்கள்தேவரும்தாங்களுமேயாக என்நெஞ்சமென்பாய்!
எங்கும்வானவர்தானவர்நிறைந்தேத்தும் வேங்கடம்மேவிநின்றருள்
அங்கணாயகற்கு இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே. 5

துவரியாடையர்மட்டையர் சமண்தொண்டர்கள்மண்டியுண்டுபின்னரும்
தமரும்தாங்களுமேதடிக்க என்நெஞ்சமென்பாய்!
கவரிமாக்கணம்சேரும் வேங்கடம்கோயில்கொண்டகண்ணார்விசும்பிடை
அமரநாயகற்கு இன்று அடிமைத்தொழில்பூண்டாயே. 6

தருக்கினால்சமண்செய்து சோறுதண்தயிரினால் திரளை * மிடற்றிடை
நெருக்குவாரலக்கணது கண்டு என்நெஞ்சமென்பாய்!
மருட்கள்வண்டுகள்பாடும் வேங்கடம் கோயில்கொண்டதனோடும் * வானிடை
அருக்கன்மேவிநிற்பார்க்கு அடிமைத்தொழில்பூண்டாயே. 7

சேயன்அணியன்சிறியன் பெரியனென்பதும் சிலர்பேசக்கேட்டிருந்
தே * என்நெஞ்சமென்பாய்! எனக்கு ஒன்றுசொல்லாதே
வேய்கள்நின்றுவெண்முத்தமேசொரி வேங்கடமலைகோயில்மேவிய
ஆயர்நாயகற்கு இன்று அடிமைத்தொழில்பூண்டாயே. 8

கூடியாடியுரைத்ததேஉரைத்தாய் என்நெஞ்சமென்பாய்! துணிந்துகேள்
பாடியாடிப்பலரும்பணிந்தேத்திக் காண்கிலர்
ஆடுதாமரையோனும்ஈசனும் அமரர்கோனும் நின்றேத்தும் * வேங்கடத்து
ஆடுகூத்தனுக்கு இன்று அடிமைத்தொழில்பூண்டாயே. 9

¶ மின்னுமாமுகில்மேவு தண்திருவேங்கடமலைகோயில்மேவிய
அன்னமாய்நிகழ்ந்தஅமரர்பெருமானை
கன்னிமாமதிள்மங்கையர்கலிகன்றி இன்தமிழாலுரைத்த இம்
மன்னுபாடல்வல்லார்க்கு இடமாகும்வானுலகே. 10

பெரியதிருமொழி.—4-ம் பத்து.—3-ம் திருமொழி.

அன்றியவாணனாயிரம்தோளும் துணிய அன்று ஆழிதொட்டானை
மின்திகழ்குடுமிவேங்கடமலைமேல் மேவியவேதநல்விளக்கை
தென்திசைத்திலதமனையவர்நாங்கைச் செம்பொன்செய்கோயிலினுள்ளே
மன்றதுபொலியமகிழ்ந்துநின்றானை வணங்கிநான்வாழ்ந்தொழிந்தேனே. 8

பெரியதிருமொழி.—4-ம் பத்து.—7-ம் திருமொழி.

¶ வேடார்திருவேங்கடம்மேயவிளக்கே!
நாடார்புகழ் வேதியர்மன்னியநாங்கூர்

சேடார்பொழில்சூழ்திருவெள்ளக்குளத்தாய் !
பாடாவருவேன் வினையாயினபாற்றே. 5

பெரியதிருமொழி.—5-ம் பத்து.—3-ம் திருமொழி.

வாம்பரியுகமன்னர்தம்உயிர்செக ஐவர்கட்குஅரசளித்த
காம்பினார்திருவேங்கடப்பொருப்ப ! நின்காதலைஅருள்எனக்கு
மாம்பொழில்தளிர்கோதியமடக்குயில் வாயது துவர்ப்பெய்த
தீம்பலங்கனித்தேனது நுகர் திருவெள்ளறைநின்றானே ! 4

பெரியதிருமொழி.—5-ம் பத்து.—5-ம் திருமொழி.

¶ வெருவாதாள் வாய்வெருவி வேங்கடமே ! வேங்கடமே ! என்கின்றாளால்
மருவாளால்என்குடங்கால் வாள்நெடுங்கண் துயில்மறந்தாள் * வண்டார்கொண்ட
உருவாளன்வானவர்தமுயிராளன் ஒலிதிரைநீர்ப்பௌவம்கொண்ட
திருவாளன் * என்மகளைச்செய்தனகள் எங்ஙனம்நான்சிந்திக்கேனே? 1

பெரியதிருமொழி.—5-ம் பத்து.—6-ம திருமொழி.

சிந்தனையைத்தவநெறியைத் திருமாலை * பிரியாது
வந்துஎன்மனத்துஇருந்த வடமலையை * வரிவண்டார்
கொந்தணைந்தபொழிற்கோவல் உலகளப்பான்அடிநிமிர்த்த
அந்தணனை * யான்கண்டது அணிநீர்த்தென்னரங்கத்தே. 7

பெரியதிருமொழி.—6-ம் பத்து.—8-ம திருமொழி.

¶ மான்கொண்டதோல்மார்வின் மாணியாய் * மாவலிமண்
தான்கொண்டு தாளாலளந்தபெருமானை
தேன்கொண்டசாரல் திருவேங்கடத்தானை
நான்சென்றுநாடி நறையூரில்கண்டேனே. 1

பெரியதிருமொழி.—7-ம் பத்து.—3-ம் திருமொழி.

ஆங்குவெந்நரகத்துஅழுந்தும்போது அஞ்சேலென்று அடியேனை அங்கேவந்து
தாங்கு * தாமரையன்னபொன்னாரடி எம்பிரானை உம்பர்க்கணியாய்நின்ற
வேங்கடத்தரியைப்பரிகீறியை வெண்ணெயுண்டுஉரலினிடையாப்புண்ட
தீங்கரும்பினை * தேனைநன்பாலினையன்றி என்மனம்சிந்தைசெய்யாதே. 5

பெரியதிருமொழி.—7-ம் பத்து.—10-ம் திருமொழி.

எங்களுக்குஅருள்செய்கின்றஈசனை வாசவார்குழலாள்மலைமங்கைதன்
பங்கனை * பங்கில்வைத்துகந்தான்தன்னைப் பான்மையைப்பனிமாமதியம்தவழ்
மங்குலைச்சுடரைவடமாமலை யுச்சியை நச்சிநாம்வணங்கப்படும்
கங்குலை * பகலைச்சென்றுநாடிக் கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. 3

பெரியதிருமொழி.—8-ம பத்து.—2-ம் திருமொழி.

¶ அருவிசோர்வேங்கடம் நீர்மலையென்றுவாய்
வெருவினாள் * மெய்யம்வினவியிருக்கின்றாள்
பெருகுசீர்க் கண்ணபுரமென்றபேசினாள்
உருகினாள் * உள்மெலிந்தாள் இதுஎன்கோலோ? 3

பெரியதிருமொழி.—9-ம் பத்து.—7-ம் திருமொழி.

பண்ணுலாமென்மொழிப்பாவைமார் பணைமுலையணைதும்நாமென்று
எண்ணுவாரெண்ணமதொழித்து நீபிழைத்துயக்கருதினையேல்
விண்ணுளார்விண்ணின்மீதியன்ற வேங்கடத்துளார் * வளங்கொள்முந்நீர்
வண்ணனார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே ! 4

பெரியதிருமொழி.—9-ம் பத்து.—10-ம் திருமொழி.

¶வலம்புரியாழியனை வரையார்திரள்தோளன்தன்னை
புலம்புரிநூலவனைப் பொழில்வேங்கடவேதியனை
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலைநின்ற
நலந்திகழ்நாரணனை நணுகுங்கொல்? என்நன்னுதலே. 9

பெரியதிருமொழி.—10-ம் பத்து.—1-ம் திருமொழி.

¶ பொன்னைமாமணியை அணியார்ந்ததோர்
மின்னை * வேங்கடத்துஉச்சியில் கண்டுபோய்
என்னையாளுடைஈசனை எம்பிரான்
தன்னை * யாம்சென்றுகாண்டும் தண்காவிலே. 5

பெரியதிருமொழி.—10-ம் பத்து.—10-ம் திருமொழி.

¶ சொல்லாய் பைங்கிளியே! சுடராழி வலனுயர்த்த
மல்லார்தோள் வடவேங்கடவனை சொல்லாய் பைங்கிளியே! 2

பெரியதிருமொழி.—11-ம் பத்து.—3-ம் திருமொழி.

கண்ணன் மனத்துள்ளேநிற்கவும் * கைவளைகள்
என்னோகழன்ற? இவைஎன்னமாயங்கள்?
பெண்ணானோம் பெண்மையோம்நிற்க * அவன்மேய
அண்ணல்மலையும் அரங்கமும்பாடோமே. 7

பெரியதிருமொழி.—11-ம் பத்து.—5-ம் திருமொழி.

¶ கள்ளத்தால்மாவலியை மூவடிமண்கொண்டளந்தான்
வெள்ளத்தான்வேங்கடத்தான் என்பால்காணேடீ!
வெள்ளத்தான் வேங்கடத்தானேலும் * கலிகன்றி
உள்ளத்தினுள்ளே உளன்கண்டாய்சாழலே! 10

திருக்குறுந்தாண்டகம்.

இம்மையைமறுமைதன்னை எமக்குவீடாகிநின்ற
மெய்ம்மையைவிரிந்தசோலை வியன்திருவரங்கம்மேய
செம்மையைக்கருமைதன்னைத் திருமலையொருமையானை
தன்மையைநினைவார் என்தன் தலைமிசைமன்னுவாரே. 7

திருநெடுந்தாண்டகம்.

¶ நீரகத்தாய் நெடுவரையினுச்சிமேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்தகச்சி
ஊரகத்தாய்! * ஒண்துறைநீர்வெஃகாவுள்ளாய்!
உள்ளுவாருள்ளத்தாய்! * உலகமேத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா
காமருபூங்காவிரியின்தென்பால்மன்னு
பேரகத்தாய்! * பேராதுஎன்னெஞ்சினுள்ளாய்!
பெருமான்! உன்திருவடியே பேணினேனே 8

வங்கத்தால்மாமணிவந்துந்துமுந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சியூராய்! பேராய்!
கொங்கத்தார்வளங்கொன்றையலங்கல்மார்வன்
குலவரையன்மடப்பாவைஇடப்பால்கொண்டான்
பங்கத்தாய்! * பாற்கடலாய்! பாரின்மேலாய்!
பனிவரையினுச்சியாய்! பவளவண்ணா!
எங்குற்றாய்? எம்பெருமான்! உன்னைநாடி
ஏழையேன் இங்ஙனமேஉழிதருகேனே. 9

¶ கன்றுமேய்த்துஇனிதுகந்தகாளாய்! என்றும்
கடிபொழில்சூழ்கணபுரத்துஎன்கனியே! என்றும்
மன்றமரக்கூத்தாடிமகிழ்ந்தாய்! என்றும்
வடதிருவேங்கடம்மேயமைந்தா! என்றும்
வென்றசுரர்குலங்களைந்தவேந்தே! என்றும்
விரிபொழில்சூழ்திருநறையூர்நின்றாய்! என்றும்
துன்றுகுழல்கருநிறத்துஎன்துணையே! என்றும்
துணைமுலைமேல் துளிசோரச்சோர்கின்றாளே. 16

¶ மின்னுமாமழைதவழும்மேகவண்ணா!
விண்ணவர்தம்பெருமானே! அருளாயென்று
அன்னமாய்முனிவரோடு அமரரேத்த
அருமறையைவெளிப்படுத்த அம்மான்தன்னை
மன்னுமாமணிமாடமங்கைவேந்தன்
மானவேல்பரகாலன்கலியன்சொன்ன

பன்னியநூல்தமிழ்மாலைவல்லார் தொல்லைப்
பழவினையைமுதலரியவல்லார்தாமே 30

குலசேகராழ்வார் பாடியது:—

பெருமாள்திருமொழி.—4-ம் திருமொழி.

¶ ஊனேறுசெல்வத்துஉடற்பிறவியான்வேண்டேன்
ஆனேறேழ்வென்றான் அடிமைத்திறமல்லால்
கூனேறுசங்கமிடத்தான் தன் வேங்கடத்து
கோனேரிவாழும் குருகாய்ப்பிறப்பேனே. 1

ஆனாதசெல்வத்து அரம்பையர்கள்தற்சூழ
வானாளும்செல்வமும் மண்ணரசும்யான்வேண்டேன்
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடச்சுனையில்
மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே. 2

பின்னிட்டசடையானும் பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப்புகலரிய வைகுந்தநீள்வாசல்
மின்வட்டச்சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும்
பொன்வட்டில்பிடித்து உடனேபுகப்பெறுவேனாவேனே, 3

ஒண்பவளவேலையுலவு தண்பாற்கடலுள்
கண்துயிலும்மாயோன் கழலிணைகள் காண்பதற்கு
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்து
செண்பகமாய்நிற்கும் திருவுடையேனாவேனே. 4

கம்பமதயானைக் கழுத்தகத்தின்மேலிருந்து
இன்பமரும்செல்வமும் இவ்வரசும்யான்வேண்டேன்
எம்பெருமானீசன் எழில்வேங்கடமலைமேல்
தம்பகமாய்நிற்கும் தவமுடையேனாவேனே, 5

மின்னனையநுண்ணிடையார் உருப்பசியும்மேனகையும்
அன்னவர்தம்பாடலொடும் ஆடலவை ஆதரியேன்
தென்னவெனவண்டினங்கள் பண்பாடும்வேங்கடத்துள்
அன்னனையபொற்குவடாம் அருந்தவத்தேனாவேனே 6

வானாளுமாமதிபோல் வெண்குடைக்கீழ் * மன்னவர்தம்
கோனாகிவீற்றிருந்து கொண்டாடும்செல்வறியேன்
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல்
கானாறாய்ப்பாயும் கருத்துடையேனாவேனே. 7

பிறையேறுசடையானும் பிரமனும் இந்திரனும்
முறையாயபெருவேள்விக் குறைமுடிப்பான்மறையானான்
வெறியார்தண்சோலைத் திருவேங்கடமலைமேல்
நெறியாய்க்கிடக்கும் நிலையுடையேனாவேனே. 8

¶ செடியாயவல்வினைகள் தீர்க்கும்திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும்வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்து உன்பவளவாய்காண்பேனே. 9

உம்பருலகாண்டு ஒருகுடைக்கீழ் * உருப்பசிதன்
அம்பொற்கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம்பவளவாயான் திருவேங்கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே. 10

¶ மன்னியதண்சாரல் வடவேங்கடத்தான் தன்
பொன்னியலும்சேவடிகள்காண்பான் புரிந்திறைஞ்சி
கொன்னவிலும்கூர்வேல் குலசேகரன்சொன்ன
பன்னியநூல்தமிழ்வல்லார் பாங்காயபத்தர்களே. 11

திருமழிசையாழ்வார் பாடியது:—திருச்சந்தவிருத்தம்.

¶ செழும்கொழும்பெரும்பனி பொழிந்திட * உயர்ந்தவேய்
விழுந்தலர்ந்தெழுந்து விண்புடைக்கும்வேங்கடத்துள்நின்று
எழுந்திருந்துதேன்பொருந்து பூம்பொழில்தழைக்கொழுஞ்
செழுந்தடங்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே? 40

கடைந்துபாற்கடல்கிடந்து காலநேமியைக்கடிந்து
உடைந்தவாலிதன் தனக்கு உதவவந்து இராமனாய்
மிடைந்தஏழ்மரங்களும் அடங்கவெய்து * வேங்கடம்
அடைந்தமாலபாதமே அடைந்துநாளும்உய்ம்மினோ. 81

குறிப்பெனக்குக் கோட்டியூர்மேயானையேத்த
குறிப்பெனக்கு நன்மைபயக்க *—வெறுப்பனோ?
வேங்கடத்துமேயானை மெய்வினைநோய்எய்தாமல்
தான்கடத்தும்தன்மையான் தாள். 84

அழைப்பன் திருவேங்கடத்தானைக்காண
இழைப்பன் திருக்கூடல்கூட * மழைப்பே
ரருவி மணி வரன்றிவந்திழிய * யானை
வெருவியரவொடுங்கும்வெற்பு. 39

வைப்பன்மணிவிளக்கா மாமதியை * மாலுக்கென்று
எப்பொழுதும் கைநீட்டும்யானையை *—எப்பாடும்
வேடுவளைக்கக் குறவர்வில்லெடுக்கும்வேங்கடமே
நாடுவளைத் தாடுமேல்நன்று 46

நன்மணிவண்ணனூர் ஆளியும்கோளரியும்
பொன்மணியும்முத்தமும் பூமாவும் *—பன்மணிநீ

ரோடு பொருதருளும்கானமும்வானரமும்
வேடுமுடைவேங்கடம். 47

வேங்கடமே விண்ணோர்தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய்தீர்ப்பதுவும்*—வேங்கடமே
தானவரைவீழத் தன்னாழிப்படைதொட்டு
வானவரைக்காப்பான்மலை. 48

வீற்றிருந்து விண்ணாளவேண்டுவார் * வேங்கடத்தான்
பால்திருந்தவைத்தாரே பல்மலர்கள் *—மேல்திருந்தி
வாழ்வார் வருமதிபார்த்து அன்பினராய் * மற்றவர்க்கே
தாழ்வாயிருப்பார் தமர். 90

திருப்பாணாழ்வார் பாடியது:—

மந்திபாய் வடவேங்கடமாமலை*வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான்
அந்திபோல்நிறத்தாடையும் அதன் மேலயனைப்படைத்ததோரெழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. 3

ஆண்டாள் பாடியது—

நாச்சியார் திருமொழி—1-ம் திருமொழி.

¶ தையொருதிங்களும் தரைவிளக்கித்
தண்மண்டலமிட்டுமாசிமுன்னாள்
ஐயநுண்மணற்கொண்டுதெருவணிந்து
அழகினுக்கலங்கரித்து அனங்கதேவா!
உய்யவுமாங்கொலோவென்றுசொல்லி
உன்னையும் உம்பியையும்தொழுதேன்
வெய்யதோர்தழலுமிழ்சக்கரக்கை
வேங்கடவற்குஎன்னைவிதிக்கிற்றியே. 1

மத்தநன்னறுமலர்முருக்கமலர்கொண்டு
முப்போதும்உன்னடிவணங்கி
தத்துவமிலியென்றுநெஞ்செரிந்து
வாசகத்தழித்துஉன்னைவைதிடாமே
கொத்தலர்பூங்கணைதொடுத்துக்கொண்டு
கோவிந்தனென்பதோர்பேரெழுதி
வித்தகன்வேங்கடவாணனென்னும்
விளக்கினில்புகஎன்னைவிதிக்கிற்றியே. 3

நாச்சியார் திருமொழி.—4-ம் திருமொழி.

¶ காட்டில்வேங்கடம் கண்ணபுரநகர்
வாட்டமின்றி மகிழ்ந்துறைவாமனன்
ஓட்டராவந்து என்கைப்பற்றித் * தன்னொடும்
கூட்டுமாகில் நீகூடிடுகூடலே !

நாச்சியார்திருமொழி—௮-ம் திருமொழி.

தரவுகொச்சகக்கலிப்பா.

¶ விண்ணீலமேலாப்பு விரித்தார்போல் மேகங்காள்!
தெண்ணீர்பாய்வேங்கடத்து என் திருமாலும்போந்தானே?
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச்சோர்வேனை
பெண்ணீர்மையீடழிக்கும்இது தமக்குஓர்பெருமையே. 1

மாமுத்தநிதிசொரியும் மாமுகில்காள் ! * வேங்கடத்துச்
சாமந்நிறங்கொண்ட தாடாளன்வார்த்தையென்னே !
காமத்தீயுள்புகுந்து கதுவப்பட்டு, இடைக்கங்குல்
ஏமத்தோர்தென்றலுக்கு இங்கிலக்காய்நானிருப்பேனே. 2

ஒளிவண்ணம்வளைசிந்தை உறக்கத்தோடுஇவையெல்லாம்
எளிமையால்இட்டென்னை ஈடழியப்போயினவால்
குளிரருவிவேங்கடத்து என்கோவிந்தன்குணம்பாடி
அளியத்தமேகங்காள் ! ஆவிகாத்திருப்பேனே. 3

மின்னாகத்தெழுகின்ற மேகங்காள் ! * வேங்கடத்துத்
தன்னாகத்திருமங்கை தங்கியசீர்மார்வர்க்கு
என்னாகத்திளங்கொங்கை விரும்பித்தாம்நாள்தோறும்
பொன்னாகம்புல்குதற்கு என்புரிவுடைமைசெப்புமினே. 4

வான்கொண்டுகிளர்ந்தெழுந்த மாமுகில்காள் ! * வேங்கடத்துத்
தேன்கொண்டமலர்சிதறத் திரண்டேறிப்பொழிவீர்காள் !
ஊன்கொண்டவள்ளுகிரால் இரணியனைஉடலிடந்தான்
தான்கொண்டசரிவளைகள் தருமாகில்சாற்றுமினே. 5

சலங்கொண்டுகிளர்ந்தெழுந்த தண்முகில்காள் * மாவலியை
நிலங்கொண்டான்வேங்கடத்தே நிரந்தேறிப்பொழிவீர்காள் !
உலங்குண்டவிளங்கனிபோல் உள்மெலியப்புகுந்து* என்னை
நலங்கொண்டநாரணற்கு என்நடலைநோய்செப்புமினே. 6

¶ சங்கமாகடல்கடைந்தான் தண்முகில்காள் ! * வேங்கடத்துச்
செங்கண்மால்சேவடிக்கீழ் அடிவீழ்ச்சிவிண்ணப்பம்
கொங்கைமேல்குங்குமத்தின் குழம்பழியப்புகுந்து * ஒருநாள்
தங்குமேல் என்னாவிதங்குமென்றுஉரையீரே. 7

கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள் ! வேங்கடத்துப்
போர்காலத்தெழுந்தருளிப் பொருதவனார்பேர்சொல்லி

நீர்காலத்து எருக்கினம்பழவிலைபோல்வீழ்வேனை
வார்காலத்தொருநாள் தம்வாசகம்தந்தருளாரே. 8

¶ மதயானைபோலெழுந்த மாமுகில்காள் ! * வேங்கடத்தைப்
பதியாகவாழ்வீர்காள் ! பாம்பணையான்வார்த்தைஎன்னே !
கதியென்றும்தானாவான் கருதாது * ஓர்பெண்கொடியை
வதைசெய்தானென்னும்சொல் வையகத்தார்மதியாரே. 9

¶ நாகத்தினணையானை நன்னுதலாள்நயந்துஉரைசெய்
மேகத்தைவேங்கடக்கோன் விடுதூதில்விண்ணப்பம்
போகத்தில்வழுவாத புதுவையர்கோன்கோதைதமிழ்
ஆகத்துவைத்துரைப்பாரவர் அடியாராகுவரே. 10

நாச்சியார்திருமொழி.—10 திருமொழி

பாடும்குயில்காள் ! ஈதென்னபாடல் ? *நல்வேங்கட
நாடர்நமக்குஒருவாழ்வுதந்தால் வந்துபாடுமின்
ஆடும்கருளக்கொடியுடையார் வந்துஅருள்செய்து
கூடுவாராயிடில் கூவிநும்பாட்டுக்கள்கேட்டுமே. 5

மழையே மழையே ! மண்புறம்பூசி உள்ளாய்நின்று
மெழுகூற்றினாற்போல் ஊற்றுநல்வேங்கடத்துள்நின்ற
அழகப்பிரானார்தம்மை என்னெஞ்சத்தகப்படத்
தழுவிநின்று * என்னைத் ததைத்துக்கொண்டு ஊற்றவும்வல்லையே ? 8

பெரியாழ்வார் பாடியது:—

1-ம் பத்து. 4-ம் திருமொழி.

சுற்றும்ஒளிவட்டம் சூழ்ந்துசோதிபரந்தெங்கும்
எத்தனைசெய்யினும் என்மகன்முகம்நேரொவ்வாய்
வித்தகன்வேங்கடவாணன் உன்னைவிளிக்கின்ற
கைத்தலம்நோவாமே அம்புலீ! கடிதோடிவா. 3

1-ம் பத்து. 8-ம் திருமொழி.

என்னிதுமாயம்? என்னப்பன் அறிந்திலன்
முன்னையவண்ணமேகொண்டு அளவாயென்ன
மன்னுநமுசியை வானில்சுழற்றிய
மின்னுமுடியனே ! அச்சோவச்சோ
வேங்கடவாணனே ! அச்சோவச்சோ. 8

2-ம பத்து. 6-ம் திருமொழி.

தென்னிலங்கைமன்னன் சிரம்தோள்துணிசெய்து
மின்னிலங்குபூண் விபீடணநம்பிக்கு
என்னிலங்குநாமத்தளவும் அரசென்ற

மின்னலங்காரற்கு ஓர்கோல்கொண்டுவா.
வேங்கடவாணற்கு ஓர்கோல்கொண்டுவா. 9

2-ம் பத்து. 9-ம் திருமொழி.

போதர்கண்டாய்இங்கே போதர்கண்டாய்
போதரேனென்னாதே போதர்கண்டாய்
ஏதேனும்சொல்லி அசலகத்தார்
ஏதேனும்பேசநான் கேட்கமாட்டேன்
கோதுகலமுடைக்குட்டனேயோ!
குன்றெடுத்தாய்! குடமாடுகூத்தா!
வேதப்பொருளே! என்வேங்கடவா!
வித்தகனே! இங்கேபோதராயே. 6

3-ம் பத்து 3-ம் திருமொழி.

கடியார்பொழிலணிவேங்கடவா! கரும்போரேறே! * நீயுகக்கும்
குடையும்செருப்பும் குழலும்தருவிக்கக்கொள்ளாதேபோனாய்மாலே!
கடியவெங்கானிடைக்கன்றின்பின்போன சிறுகுட்டச்செங்கமல
அடியும்வெதும்பி*உன்கண்கள்சிவந்தாய் அசைந்திட்டாய்நீஎம்பிரான் 4

5 பத்து 4-ம் திருமொழி.

¶ சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்!* உலகு
தன்னைவாழநின்றநம்பீ! தாமோதரா! சதிரா!
என்னையும்என்னுடைமையையும் உன்சக்கரப்பொறியொற்றிக்கொண்டு
நின்னருளேபுரிந்திருந்தேன் இனிஎன்திருக்குறிப்பே?

நம்மாழ்வார் பாடியது :—

திருவாய்மொழி 3-ம் பத்து.

¶ ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி
வழுவிலா அடிமைசெய்யவேண்டும்நாம்
தெழிகுரலருவித் திருவேங்கடத்து
எழில்கொள்சோதி எந்தைதந்தைதந்தைக்கே. 1

எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்
முந்தை * வானவர் வானவர்கோனொடும்
சிந்துபூமகிழும் திருவேங்கடத்து
அந்தமில்புகழ்க் காரெழிலண்ணலே. 2

அண்ணல்மாயன் அணிகொள்செந்தாமரைக்
கண்ணன் * செங்கனிவாய்க் கருமாணிக்கம்
தெண்ணிறைச்சுனைநீர்த் திருவேங்கடத்து
எண்ணில்தொல்புகழ் வானவர்ஈசனே. 3

ஈசன்வானவர்க்கென்பன் என்றால் * அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு ?
நீசனேன் நிறைவொன்றுமிலேன் * என்கண்
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே. 4

சோதியாகி எல்லாவுலகும்தொழும்
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ ?
வேதியர் முழுவேதத்தமுதத்தை
தீதில்சீர்த் திருவேங்கடத்தானையே. 5

வேங்கடங்கள் மெய்மேல்வினை முற்றவும்
தாங்கள்தங்கட்கு நல்லனவேசெய்வார்
வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன
லாம்கடமை * அதுசுமந்தார்கட்கே. 6

சுமந்துமாமலர் நீர்சுடர் தூபம்கொண்டு
அமர்ந்துவானவர் வானவர்கோனொடும்
நமன்றெழும் திருவேங்கடம்நங்கட்கு
சமன்கொள்வீடுதரும் தடங்குன்றமே. 7

¶ குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன்
அன்றுஞாலம் அளந்தபிரான் * பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை
ஒன்றுமேதொழ நம்வினை ஓயுமே. 8

ஓயும்மூப்புப் பிறப்புஇறப்புப்பிணி
வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்து
ஆயன் * நாள்மலராம் அடித்தாமரை
வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கே. 9

வைத்தநாள்வரை எல்லைகுறுகிச்சென்று
எய்த்திளைப்பதன்முன்னம் அடைமினோ
பைத்தபாம்பணையான் திருவேங்கடம்
மொய்த்தசோலை மொய்பூந்தடம்தாழ்வரே. 10

¶ தாள்பரப்பி மண்தாவியஈசனை
நீள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொல்
கேழிலாயிரத்து*இப்பத்தும்வல்லவர்
வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம்புகழவே. 11

¶ ஒழிவிலாக்காலம் உடனாகிமன்னி
வழுவிலா ஆட்செய்ய மாலுக்கு*—எழுசிகர
வேங்கடத்துப்பாரித்த மிக்கநலம்சேர்மாறன்
பூங்கழலை நெஞ்சே! புகழ். 23

6-ம் பத்து. 10-ம் திருவாய்மொழி.

¶ உலகமுண்டபெருவாயா! உலப்பில்கீர்த்தியம்மானே!
நிலவும்சுடர்சூழொளிமூர்த்தி! நெடியாய்! அடியேனாருயிரே!
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே!
குலதொல்லடியேன்உன்பாதம் கூடுமாறுகூறாயே. 1

கூறாய்நீறாய்நிலனாகிக் கொடுவல்லசுரர்குலமெல்லாம்
சீறாஎறியும்திருநேமிவலவா! தெய்வக்கோமானே!
சேறார்சுனைத்தாமரைசெந்தீமலரும் திருவேங்கடத்தானே!
ஆறாவன்பிலடியேன் உன்னடிசேர்வண்ணம் அருளாயே. 2

வண்ணமருள்கொள்அணிமேகவண்ணா! மாயவம்மானே!
எண்ணம்புகுந்துதித்திக்கும்அமுதே! இமையோரதிபதியே!
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்தானே!
அண்ணலே! உன்னடிசேர அடியேற்குஆவாவென்னாயே. 3

ஆவா! என்னாதுஉலகத்தையலைக்கும் அசுரர்வாணாள்மேல்
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையா! திருமாமகள்கேள்வா!
தேவா! * சுரர்கள்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே!
பூவார்கழல்கள்அருவினையேன் பொருந்துமாறுபுணராயே 4

புணராநின்றமரமேழ் அன்றெய்தஒருவில்வலவாவோ!
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோனமுதல்வாவோ!
திணரார்மேகமெனக்களிறுசேரும் திருவேங்கடத்தானே!
திணரார்சார்ங்கத்துஉன்பாதம் சேர்வதடியேனெந்நாளே? 5

எந்நாளே?நாம்மண்ணளந்த இணைத்தாமரைகள்காண்பதற்கென்று
எந்நாளும்நின்றுஇமையோர்களேத்தி இறைஞ்சிஇனமினமாய்
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே!
மெய்ந்நானெய்திஎந்நாள் உன்னடிக்கண்அடியேன்மேவுவதே? 6

அடியேன்மேவியமர்கின்றஅமுதே! இமையோரதிபதியே!
கொடியாவடுபுள்ளுடையானே! கோலக்கனிவாய்ப்பெருமானே!
செடியார்வினைகள்தீர்மருந்தே! திருவேங்கடத்தெம்பெருமானே!
நொடியார்பொழுதும்உன்பாதம் காணநோலாதாற்றேனே.

நோலாதாற்றேன்உன்பாதம் காணவென்றுநுண்ணுணர்வின்
நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனும்இந்திரனும்
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்பும் திருவேங்கடத்தானே!
மாலாய்மயக்கிஅடியேன்பால் வந்தாய்போலேவாராயே. 8

வந்தாய்போலேவாராதாய் வாராதாய்போல்வருவானே!
செந்தாமரைக்கண்செங்கனிவாய் நால்தோளமுதே! எனதுயிரே!
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய் திருவேங்கடத்தானே!
அந்தோ! அடியேன்உன்பாதம் அகலகில்லேன் இறையுமே. 9

¶ அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா!
நிகரில்புகழாய்! உலகம்மூன்றுடையாய்! என்னையாள்வானே!
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே!
புகலொன்றில்லாஅடியேன் உன்னடிக்கீழ்அமர்ந்துபுகுந்தேனே. 10

¶ அடிக்கீழமர்ந்துபுகுந்து அடியீர்! வாழ்மினென்றென்றருள்கொடுக்கும்
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன்
முடிப்பான்சொன்ன ஆயிரத்துத் திருவேங்கடத்துக்கிவைபத்தும்
பிடித்தார்பிடித்தார்வீற்றிருந்து பெரியவானுள்நிலாவுவரே. 11

¶ உலகுய்யமால்நின்ற உயர்வேங்கடத்தே
அலர்மகளைமுன்னிட்டு அவன்தன்—மலரடியே
வன்சரணாய்ச்சேர்ந்த மகிழ்மாறன் தாளிணையே
உன்சரணாய் நெஞ்சமே! உள். 60

7-ம் பத்து 4-ம் திருவாய்மொழி.

¶ ஆழியெழச் சங்கும்வில்லுமெழ * திசை
வாழியெழத் தண்டும்வாளுமெழ * அண்டம்
மோழையெழ முடிப்பாதமெழ * அப்பன்
ஊழியெழ உலகம்கொண்டவாறே 1

ஆறுமலைக்கு எதிர்ந்தோடுமொலி * அர
வூறுசுலாய் மலைதேய்க்குமொலி * கடல்
மாறுசுழன்று அழைக்கின்றவொலி * அப்பன்
சாறுபட அமுதம்கொண்டநான்றே. 2

நான்றில ஏழ்மண்ணும்தானத்தவே * பின்னும்
நான்றில ஏழ்மலைதானத்தவே * பின்னும்
நான்றில ஏழ்கடல்தானத்தவே * அப்பன்
ஊன்றியிடந்து எயிற்றில்கொண்டநாளே. 3

நாளுமெழ நிலநீருமெழ * விண்ணும்
கோளுமெழ எரிகாலுமெழ * மலை
தாளுமெழச் சுடர்தானுமெழ * அப்பன்
ஊளியெழ உலகமுண்டவூணே. 4

ஊணுடைமல்லர் ததைந்தவொலி * மன்னர்
ஆணுடைச்சேனை நடுங்குமொலி * விண்ணுள்
ஏணுடைத்தேவர் வெளிப்பட்டவொலி * அப்பன்
காணுடைப்பாரதம் கையறைப்போழ்தே. 5

போழ்து மெலிந்த புன்செக்கரில் * வான்திசை
சூழுமெழுந்து உதிரப்புனலா * மலை
கீழ்துபிளந்த சிங்கமொத்ததால் * அப்பன்
ஆழ்துயர்செய்து அசுரரைக்கொல்லுமாறே. 6

மாறுநிரைத்து இரைக்கும்சரங்கள் * இன
நூறுபிணம் மலைபோல்புரள * கடல்
ஆறுமடுத்து உதிரப்புனலா * அப்பன்
நீறுபட இலங்கைசெற்றநேரே. 7

நேர்சரிந்தான் கொடிக்கோழிகொண்டான் * பின்னும்
நேர்சரிந்தான் எறியும் அனலோன் * பின்னும்
நேர்சரிந்தான் முக்கண்மூர்த்திகண்டீர் * அப்பன்
நேர்சரிவாணன் திண்தோள்கொண்டவன்றே. 8

அன்றுமண்நீரெரிகால் விண்மலைமுதல்
அன்றுசுடர்இரண்டுபிறவும் * பின்னும்
அன்று மழையுயிர்தேவும்மற்றும் * அப்பன்
அன்றுமுதல் உலகம்செய்ததுமே. 9

மேய்நிரைகீழ்புக மாபுரள * சுனை
வாய்நிறைநீர் பிளிறிச்சொரிய * இன
ஆநிரைபாடி அங்கேயொடுங்க * அப்பன்
தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே. 10

¶ குன்றமெடுத்தபிரான் அடியாரொடும்
ஒன்றிநின்ற சடகோபனுரைசெயல்
நன்றிபுனைந்த ஓராயிரத்துள் இவை
வென்றிதரும்பத்தும் மேவிக்கற்பார்க்கே. 11

ஆழிவண்ணன் தன்விசயமானவை முற்றும்காட்டி
வாழிதனுவென்று மகிழ்ந்துநிற்க *— ஊழிலவை
தன்னை இன்றுபோல்கண்டு தானுரைத்தமாறன்சொல்
பன்னுவரே நல்லதுகற்பார்.

8-ம் பத்து 2-ம் திருவாய்மொழி.

¶ நங்கள்வரிவளையாயங்காளோ! நம்முடையேதலர்முன்புநாணி
நுங்கட்குயானொன்றுரைக்கும்மாற்றம் நோக்குகின்றேன்எங்கும்காணமாட்டேன்
சங்கம்சரிந்தனசாயிழந்தேன் தடமுலைபொன்னிறமாய்த்தளர்ந்தேன்
வெங்கண்பறவையின்பாகன்எங்கோன் வேங்கடவாணனைவேண்டிச்சென்றே,

9-ம் பத்து 3-ம் திருவாய்மொழி.

இன்றிப்போக இருவினையும்கெடுத்து
ஒன்றியாக்கைபுகாமை உய்யக்கொள்வான்
நின்றவேங்கடம் நீள்நிலத்துஉள்ளது
சென்றுதேவர்கள் கைதொழுவார்களே. 8

1.ம் பத்து 8-ம் திருவாய்மொழி.

கண்ணாவான் என்றும் மண்ணோர்விண்ணோர்க்கு
தண்ணார்வேங்கட விண்ணோர்வெற்பனே. 3

2-ம் பத்து 6-ம திருவாய்மொழி.

எந்தாய்! தண்திருவேங்கடத்துள்நின்றாய்! இலங்கைசெற்றாய்! * மராமரம்
பைந்தாளேழுருவ ஒருவாளிகோத்தவில்லா!
கொந்தார்தண்ணந்துழாயினாய்! அமுதே! உன்னை என்னுள்ளேகுழைத்தஎம்
மைந்தா! * வானேரே! இனிஎங்குப்போகின்றதே?
போகின்றகாலங்கள்போயகாலங்கள் போகுகாலங்கள் * தாய்தந்தையுயி
ராகின்றாய்! உன்னைநான்அடைந்தேன்விடுவேனோ?
பாகின்றதொல்புகழ்மூவுலகுக்கும் நாதனே? பரமா! * தண்வேங்கடம்
மேய்கின்றாய்! தண்துழாய்விரைநாறுகண்ணியனே! 10

,, 7-ம் திருவாய்மொழி.

பற்பநாபன் உயர்வறவுயரும்பெருந்திறலோன்
எற்பரன்என்னையாக்கிக்கொண்டு எனக்கேதன்னைத்தந்த
கற்பகம் * என்அமுதம்கார்முகில்போலும் வேங்கடநல்
வெற்பன் * விசும்போர்பிரான் எந்தைதாமோதரனே. 11

3-ம் பத்து 5-ம திருவாய்மொழி.

வார்புனலந்தணருவி வடதிருவேங்கடத்தெந்தை
பேர்பலசொல்லிப்பிதற்றிப் பித்தரென்றேபிறர்கூற
ஊர்பலபுக்கும்புகாதும் உலோகர்சிரிக்கநின்றாடி
ஆர்வம்பெருகிக்குனிப்பார் அமரர்தொழப்படுவாரே. 8

,, 9-ம் திருவாய்மொழி.

¶ சொன்னால்விரோதமிது ஆகிலும்சொல்லுவன்கேண்மினோ
என்னாவிலின்கவி யானொருவர்க்கும்கொடுக்கிலேன்
தென்னாதெனாவென்று வண்டுமுரல்திருவேங்கடத்து
என்னானைஎன்னப்பன் எம்பெருமான்உளனாகவே. 1

4-ம் பத்து 5-ம் திருவாய்மொழி.

¶ மாரிமாறாததண்ணம்மலை வேங்கடத்தண்ணலை
வாரிமாறாதபைம்பூம்பொழில்சூழ் குருகூர்நகர்
காரிமாறன்சடகோபன் சொல்லாயிரத்துஇப்பத்தால் 11
வேரிமாறாதபூமேலிருப்பாள் வினைதீர்க்குமே.

5-ம் பத்து 6-ம் திருவாய்மொழி.

காண்கின்றநிலமெல்லாம்யானேயென்னும்
காண்கின்றவிசும்பெல்லாம்யானேயென்னும்

காண்கின்றவெர்தியெல்லாம்யானேயென்னும்
    காண்கின்றஇக்காற்றெல்லாம்யானேயென்னும்
காண்கின்றகடலெல்லாம்யானேயென்னும்
    காண்கின்றகடல்வண்ணனேறக்கொலோ ?
காண்கின்றஉலகத்தீர்க்குஎன்சொல்லுகேன் ?
    காண்கின்றஎன்காரிகைசெய்கின்றவே. 3

6-ம் பத்து 6-ம் திருவாய்மொழி.

¶ கட்டெழில்சோலை நல்வேங்கடவாணனை
கட்டெழில்தென்குருகூர்ச் சடகோபன்சொல்
கட்டெழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர்
கட்டெழில்வானவர் போகமுண்பாரே. 11

,, 9-ம் திருவாய்மொழி.

விண்மீதிருப்பாய் ! மலைமேல்நிற்பாய் ! கடற்சேர்ப்பாய் !
மண்மீதுழல்வாய் ! இவற்றுளெங்குமறைந்துறைவாய் !
எண்மீதியன்றபுறவண்டத்தாய் ! எனதாவி
உள்மீதாடி உருக்காட்டாதேஒளிப்பாயோ ? 5

10-ம் பத்து 5-ம் திருவாய்மொழி.

¶ மேயான்வேங்கடம் காயாமலர்வண்ணன்
பேயார்முலையுண்ட வாயான்மாதவனே. 6

,, 7-ம் திருவாய்மொழி.

¶ திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலேஎன்தலையே
திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமேஎனதுடலே
அருமாமாயத்துஎனதுயிரே மனமேவாக்கேகருமமே
ஒருமாநொடியும்பிரியான் என்னூழிமுதல்வன் ஒருவனே. 8

இயற்பா திருவிருத்தம்.

மாயோன் வடதிருவேங்கடநாட * வல்லிக்கொடிகாள் !
நோயோஉரைக்கிலும் கேட்கின்றிலீர்உரையீர் * நுமது
வாயோ ? அதுவன்றிவல்வினையேனும்கிளியுமெள்கும்
ஆயோ ? அமெந்தொண்டையோ ? * அறையோ ! இதறிவரிதே. 10

கயலோ நுமகண்கள் ? என்று களிறுவினவிநிற்றீர்
அயலோரறியிலும் ஈதென்னவார்த்தை ? கடல்கவர்த்த
புயலோடுலாங்கொண்டல்வண்ணன்புனவேங்கடத்தெம்மொடும்
பயலோவிலீர் * கொல்லைகாக்கின்றநாளும்பலபலவே. 15

இசைமின்கள்தூதென்று இசைத்தால்இசையிலம் * என்தலைமேல்
அசைமின்களென்றால் அசையுங்கொலாம் ? * அம்பொன்மாமணிகள்

திசைமின்மிளிரும் திருவேங்கடத்துவந்தாள்சிமய
மிசைமின்மிளிரியபோவான் * வழிக்கொண்டமேகங்களே ! 31

ஒண்ணுதல்மாமை யொளிபயவாமை * விரைந்துநந்தேர்
நண்ணுதல்வேண்டும் வலவ ! கடாகின்று * தேன்நவின்ற
விண்முதல்நாயகன்நீள்முடிவெண்முத்தவாசிகைத்தாய்
மண்முதல்சேர்வுற்று * அருவிசெய்யாநிற்கும்மாமலைக்கே. 50

¶ முலையோ முழுமுற்றும்போந்தில * மொய்பூங்குழல்குறிய
கலையோஅரையில்லை நாவோகுழறும் * கடல்மண்ணெல்லாம்
விலையோவெனமிளிரும்கண் இவள்பரமே ? பெருமான்
மலையோ * திருவேங்கடமென்று கற்கின்றவாசகமே. 60

காவியும்நீலமும்வேலும்கயலும் பலபலவென்று
ஆவியின்தன்மை அளவல்லபாரிப்பு * அசுரைச்செற்ற
மாவியம்புள்வல்லமாதவன்கோவிந்தன்வேங்கடம்சேர்
தூவியம்பேடையன்னாள் * கண்களாயதுணைமலரே. 67

உறுகின்றகன்மங்கள் மேலனஓர்ப்பிலராய் * இவளைப்
பெறுகின்றதாயார்மெய்ந்நொந்துபெறார்கொல் ? *துழாய்குழல்வாய்த்
துறுகின்றிலர்தொல்லைவேங்கடமாட்டவும்சூழ்கின்றிலர்
இறுகின்றதால்இவளாகம் * மெல்லாவியெரிகொள்ளவே. 81

போய்கையாழ்வார் பாடியது :—

இயற்பா—முதல் திருவந்தாதி.

எழுவார்விடைகொள்வார் ஈன்துழாயானை
வழுவாவகைநினைந்து வைகல்—தொழுவார்
வினைச்சுடரைநந்துவிக்கும் வேங்கடமே * வானோர்
மனச்சுடரைத் தூண்டும்மலை. 26

பெருவில்பகழிக் குறவர்கைச்செந்தீ
வெருவிப்புனம்துறந்தவேழம் *—இருவிசும்பில்
மீன்வீழக் கண்டு அஞ்சும்வேங்கடமே * மேலசுரர்
கோன்வீழக்கண்டுகந்தான்குன்று. 40

உணர்வாரார்உன்பெருமை ? ஊழிதோறூழி
உணர்வாரார் உன்னுருவந்தன்னை ? *—உணர்வாரார் ?
விண்ணகத்தாய் ! மண்ணகத்தாய் ! வேங்கடத்தாய் ! * நால்வேதப்
பண்ணகத்தாய் ! நீகிடந்தபால். 68

வழிநின்று நின்னைத்தொழுவார் * வழுவா
மொழிநின்ற மூர்த்தியரேயாவர் *—பழுதொன்றும்
வாராதவண்ணமே விண்கொடுக்கும் * மண்ணளந்த
சீரான் திருவேங்கடம். 76

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் * அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் *—நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர். 77

படையாரும் வாட்கண்ணார் பாரசிகான் * பைம்பூந்
தொடையலோடு ஏந்தியதூபம் *— இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே * மேலொருநாள்
மான்மாய எய்தான் வரை. 82

¶ உளன் கண்டாய் நன்னெஞ்சே ! உத்தமனென்றும்
உளன் கண்டாய் * உள்ளுவாருள்ளத்து — உளன் கண்டாய்
வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்துமேயானும்
உள்ளத்தினுள்ளானென்றுஓர். 99

பூதத்தாழ்வார் பாடியது :—

இயற்பா—இரண்டாம் திருவந்தாதி.

சென்றது இலங்கைமேல் செவ்வேதன் சீற்றத்தால்
கொன்றது இராவணனைக் கூறுங்கால் *— நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் வேங்கடமே * விண்ணவர்தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து. 25

மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான் * மற்றும்
நினைப்பரிய நீளரங்கத்துள்ளான் *— எனைப்பலரும்
தேவாதிதேவனெனப்படுவான் * முன்னொருநாள்
மாவாய்பிளந்தமகன். 28

துணிந்தது சிந்தை துழாயலங்கல் * அங்கம்
அணிந்தவன்பேர் உள்ளத்துப்பல்கால் *— பணிந்ததுவும்
வேய்பிறங்குசாரல் விறல்வேங்கடவனையே
வாய்திறங்கள் சொல்லும்வகை. 33

உளதென்றிறுமாவார் உண்டில்லையென்று
தளர்தலதனருகுஞ்சாரார் *—அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர்முடிதோயும்
பாதத்தான் பாதம்பயின்று. 45

பயின்றது அரங்கம் திருக்கோட்டி * பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே * பன்னாள்—பயின்றது
அணிதிகழும்சோலை அணிநீர்மலையே
மணிதிகழும்வண்தடக்கைமால். 46

நெறியார்குழற்கற்றை முன்னின்றுபின்தாழ்ந்து
அறியாதிளங்கிரியென்றெண்ணி *—பிரியாது

பூங்கொடிக்கள்வைகும் பொருபுனற்குன்றென்னும்
வேங்கடமே யாம்விரும்பும்வெற்பு. 53

போதறிந்துவானரங்கள் பூஞ்சுனைபுக்கு * ஆங்கலர்ந்த
போதரிந்துகொண்டேத்தும் * போதுஉள்ளம் !—போது
மணிவேங்கடவன் மலரடிக்கேசெல்ல
அணிவேங்கடவன்பேராய்ந்து. 72

பெருகுமதவேழம் மாப்பிடிக்குமுன்னின்று
இருகணிளமூங்கில்வாங்கி *—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம்கண்டீர்
வான்கலந்தவண்ணன்வரை. 75

பேயாழ்வார் பாடியது :—

இயற்பா—மூன்றும் திருவந்தாதி.

மாற்பால்மனங்சுழிப்ப மங்கையர்தோள்கைவிட்டு
நூற்பால்மனம்வைக்கநொய்விதாம் *—நாற்பால
வேதத்தான்வேங்கடத்தான் விண்ணோர்முடிதோயும்
பாதத்தான்பாதம்பணிந்து. 14

சிறந்தஎன்சிந்தையும் செங்கணரவும்
நிறைந்த சீர்நீள்கச்சியுள்ளும் *—உறைந்ததுவும்
வேங்கடமும்வெஃகாவும் வேளுக்கைப்பாடியுமே
தாம்கடவார்தண்துழாயார் 26

சேர்ந்ததிருமால் கடல்குடந்தைவேங்கடம்
நேர்ந்தஎன்சிந்தை நிறை விசும்பு *—வாய்ந்த
மறைபாடகம்அனந்தன் வண்துழாய்க்கண்ணி
இறைபாடியாயஇவை. 30

பாற்கடலும்வேங்கடமும் பாம்பும்பனிவிசும்பும்
நூற்கடலும்நுண்ணூலதாமரைமேல் *—பாற்பட்
டிருந்தார்மனமும் இடமாகக்கொண்டான்
குருந்தொசித்தகோபாலகன். 32

இறையாய்நிலனாகி எண்திசையும்தானாய்
மறையாய்மறைப்பொருளாய்வானாய் *—பிறைவாய்ந்த
வெள்ளத்தருவி விளங்கொலிநீர்வேங்கடத்தான்
உள்ளத்தினுள்ளேஉளன். 39

உளன்கண்டாய்நல்நெஞ்சே ! உத்தமனென்றும்
உளன்கண்டாய் * உள்ளுவாருள்ளத்து—உளன்கண்டாய்
விண்ணெடுங்கக்கோடுயரும் வீங்கருவிவேங்கடத்தான்
மண்ணெடுங்கத்தானளந்தமன் 40

புரிந்துமதவேழம் மாப்பிடியோடூடி
திரிந்துசினத்தால்பொருது *—விரிந்தசீர்
வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே * மேலொருநாள்
மண்கோட்டுக்கொண்டான்மலை. 45

தெளிந்தசிலாதலத்தின் மேலிருந்தமந்தி
அளிந்தகடுவனையேநோக்கி *—விளங்கிய
வெண்மதியம் தாவென்னும்வேங்கடமே * மேலோருநாள்
மண்மதியில்கொண்டுகந்தான்வாழ்வு. 58

¶ பண்டெல்லாம்வேங்கடம் பாற்கடல்வைகுந்தம்
கொண்டங்குறைவார்க்குக்கோயில்போல் *—வண்டு
வளங்கிளரும்நீள்சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் தன்விண்ணகர். 61

தாழ்சடையும்நீள்முடியும் ஒண்மழுவும்சக்கரமும்
சூழரவும்பொன்னாணும் தோன்றுமால் *—சூழும்
திரண்டருவிபாயும் திருமலைமேலெந்தைக்கு
இரண்டுருவுமொன்றா இசைந்து. 63

பார்த்தகடுவன் சுனைநீர்நிழல்கண்டு
பேர்த்தோர்கடுவனெனப்பேர்ந்து *—கார்த்த
களங்கனிக்குக் கைநீட்டும்வேங்கடமே * மேல்நாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான்வெற்பு. 68

இடம்வலமேழ்பூண்டஇரவித்தேரோட்டி
வடமுகவேங்கடத்துமன்னும் *—குடம்நயந்த
கூத்தனாய்நின்றான் குரைகழலேகூறுவதே
நாத்தன்னாலுள்ளநலம். 73

சார்ந்தகடுதேய்ப்பத் தடாவியகோட்டுச்சிவாய்
ஊர்ந்தியங்கும் வெண்மதியீனொண்முயலை *—சேர்ந்து
சினவேங்கைபார்க்கும் திருமலையே * ஆயன்
புனவேங்கைநாறும்பொருப்பு. 75

முடிந்தபொழுதில் குறவாணர் * ஏனம்
படிந்துழுசால் பைந்தினைகள்வித்த *—தடிந்தெழுந்த
வேய்ங்கழைபோய் விண்திறக்கும்வேங்கடமே * மேலொருநாள்
தீங்குழல்வாய்வைத்தான்சிலம்பு. 89

திருமழிசைப்பிரான் பாடியது :—

இயற்பா நான்முகன்திருவந்தாதி.

வெற்பென்று வேங்கடம்பாடினேன் * வீடாக்கி
நிற்கின்றேன் நின்றுநினைக்கின்றேன் *—கற்கின்ற
நூல்வலையில்பட்டிருந்த நூலாட்டிகேள்வனார்
கால்வலையில்பட்டிருந்தேன் காண். 40

	ரூ.	அ.	ப.
விக்டோரியா மெய்கீர்த்தி ...	0	12	0
கமலபவனம் ...	0	10	0
காதலா கருணையா ...	0	14	0
பாதாளவாவி ...	0	6	0
சந்திரகுப்தன் ...	0	8	0
மங்கம்மாள் ...	1	8	0
ஞானசுந்தரன் ...	0	12	0
கமலநாதன் ...	1	8	0
அமிர்த ஸஞ்சீவினி ...	1	2	0
மதுராம்பாள் ...	0	12	0
வஜ்ரலேகை ...	1	4	0
தயாபரஸுந்தரி ...	0	12	0
மீனலோசனி ...	0	6	0
தீனதயாளு ...	0	12	0
பாய்பரமானந்தன் ...	1	0	0
ஸோமசுந்தரன் ...	1	0	0
யமகாதகன் ...	0	8	0
அமரநாதன் ...	1	4	0
குணஸுந்தரன் ...	1	4	0
கோமளம் குமரியானது ...	0	12	0
குலசேகரன் ...	1	0	0
நாகபூஷணம் ...	0	12	0
பீமராவ் ...	0	10	0
விஷதாரி ...	1	4	0
தாரா ...	0	10	0
ராஜராஜேச்வரி ...	1	8	0
கல்பலதா ...	1	4	0
கோமளா ...	0	12	0
சித்ரரேகை ...	1	8	0
மாயாவதி ...	0	8	0
விக்ரமோர்வசீயம் ...	0	8	0
ராஜபுத்ர வீரன் ...	0	8	0
அழகு சுந்தரி ...	0	8	0
உத்தரராமாயண கதைகள் ...	0	4	0
மரகதவல்லி ...	0	6	0
சத்ருஜித் ...	0	12	0
ஆஸ்திகோபாக்யானம் ...	0	5	0
சிறுத்தொண்டர் ...	0	8	0
வீரவல்லி ...	0	12	0
பாயிரவிருத்தி ...	1	0	0
மனோன்மணி ...	0	12	0
இரட்டைப்புலவர் சரிதம் ...	0	6	0
அண்டப்புளுகன் ...	0	8	0
மர்ம்மமுகி ...	0	12	0
ரதிமதனன் ...	0	12	0
ஞானானந்தன் ...	0	11	0
கோவிந்தன் ...	0	10	0
மதனசிங்கர் ...	1	4	0
மாணிக்கவல்லி ...	1	0	0
மனோன்மணி கதை ...	0	8	0

	ரூ.	அ.	ப.
செல்வராஜன் ...	0	12	0
கமலசுந்தரி ..	0	4	0
சந்திரஹாஸன் ..	0	3	0
பவழக்கொடி ...	0	8	0
காயற்கண்ணி ...	0	12	0
ராஜாத்தி ...	0	12	0
சிறுமணிச்சுடர் ...	0	1	0
அர்ஜுன ஸந்யாஸி ...	0	12	0
கதாகதம்பம் ...	0	2	0
குசேல வெண்பா ...	0	8	0
பகீரதன் ...	0	1	0
பாலவிநோதினி ...	0	2	0
ஸாவித்திரி சரித்திரம் ...	0	4	0
ஜியார்ஜ்மன்னன் சரித்திரம் ...	0	1	6
பாலகங்காதர திலகர் ...	0	4	0
திரிலோகமோஹனாங்கி ...	1	0	0
ஆர்ய சரித்திரம் ...	0	8	0
ஜீவகன் ...	1	0	0
ஸுபோத பாரிஜாதம் ...	5	0	0
தனபாலன் ...	2	0	0
கற்பகசுந்தரி ...	2	12	0
சுந்தர்சிங் ...	1	4	0
ஆயிரம் தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி	1	0	0
பாலசுந்தரம் ...	1	0	0
அம்பலவாணன் ...	1	4	0
ருக்மணி ...	1	0	0
சரோஜனீ ...	2	0	0
அஞ்சனாவதி ...	1	4	0
லலிதாம்தவி ...	0	12	0
நீலோத்பலவிசாலாக்ஷி ...	1	8	0
ஜெயசாந்தகாந்தா ...	1	0	0
திருக்கழுக்குன்றத்துக்கொலை ...	1	8	0
கோஹினூர் ...	0	9	0

வடுவூர். துரைசாமி அய்யங்கார் நாவல்கள்.

	ரூ.	அ.	ப.
மதனகல்யாணி 3 Pts. ...	4	8	0
காளிங்கராயன் கோட்டை 2 Pts....	4	0	0
சௌந்தரகோகிலம் 3Pts. ...	6	0	0
திவான் லொடபட சிங் பகதூர் ...	0	12	0
பவளத்தீவு ...	1	8	0
கனகாம்புஜம் 2 Pts. ...	5	8	0
கும்பகோணம் வக்கீல் 2 Pts. ...	3	0	0
திகம்பரசாமியார் பால்யலீலை 2 Pts...	5	0	0
பூர்ணசந்திரோதயம் 4 Pts. ...	7	8	0
மேனகா 2 Pts. ...	3	0	0
விலாஸவதி 2 Pts. ...	3	0	0
வித்யாஸாகரம் ...	1	0	0
வஸந்தகோகிலம் ...	1	0	0
மாயசுந்தரி ...	0	12	0

மானேஜர்,

ஸ்ரீ வாணீ விலாஸ புத்தகசாலை, ஸ்ரீரங்கம்.



ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.

